மணவை முஸ்தபா

கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி

மணவை பப்ளிகேஷன்

26

கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி

வளர்தமிழ்ச் செல்வர்
மணவை முஸ்தபா

விலை ரூ.185/-

வெளியீடு:
மணவை பப்ளிகேஷன்,
AE-103, அண்ணா நகர்,
சென்னை - 600 040.

தொகுப்புத் துணைவர்கள்:

இரா. நடராசன்

ராம்குமார்

க. சந்தானம்

வல்லுநர்:

மு. சிவலிங்கம்,

விரிவுரையாளர்,

(கணினித்துறை)

மண்டலத் தொலைத் தொடர்புப்

பயிற்சி மையம்

KANINI
KALAICHOL
KALANJIYA
AGARAATHI

(COMPUTER ENCYCLOPAEDIC TAMIL TECHNICAL DICTIONARY)

ValarTamil Selvar
MANAVAI MUSTAFA

Price Rs. 185/-

Published By
MANAVAI PUBLICATION
AE 103, ANNANAGAR
CHENNAI - 600 040

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	KANINI KALAICHOL KALANJIYA AGARAATHI (COMPUTER ENCYCLOPAEDIC TAMIL TECHNICAL DICTIONARY)
Author	:	MANAVAI MUSTAFA
Copyright holder	:	Author
Language	:	Tamil
Paper used	:	16 kg JK Maplitho
Size of the book	:	Demy Octovo
Printing points used	:	10 points
No. pages	:	736 pages
Binding	:	Paper back
Price	:	Rs. 185/-
Type Setting	:	Shri Surakshaa Computers D-129 First Main Road Annanagar East, Chennai -600 102.
Printer	:	CREATIVE OFFSET 57, Kumarappa Street Nungambakkam, Chennai - 600 034.
Publisher	:	Manavai Publication AE 103, Annanagar Chennai - 600 040

முன்னுரை

கணினித் துறையின் விரிவான, வலுவான வளர்ச்சி உலகளாவிய முறையில், மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் தன் செல்வாக்கை அழுந்தப் பதித்து வருகிறது. கணினியின் துணையின்றி அரையங்குல வாழ்வைக்கூட நம்மால் நகர்த்த முடியா நிலை விரைந்து உருவாகி வருவதை நன்கு உணர முடிகிறது. எனவே, இன்றைய - நாளைய கல்விமுறை கணினியை அடிப்படையாகக் கொண்டு அமைவது தவிர்க்க முடியாததொன்றாகும் எனில் அஃது மிகையன்று.

கணினிக் கல்வி 'தமிழ் வழி' அமைய வேண்டுமெனில் அதற்கு உந்து சக்தியாயமைய கணினிக் கலைச் சொல்லாக்கப் பணி உடனடியாக நடைபெற்றாக வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

பதினைந்து ஆண்டுகட்கு முன்பு 'கணினி' சிறப்பிதழாக யுனெஸ்கோ கூரியர் திங்களிதழ் வெளிவந்தது. அவ்விதழ் தயாரிப்பின்போது ஐம்பதுக்கு மேற்பட்ட புத்தம் புதிய கணினிக் கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கி வெளியிட வேண்டிய கட்டாயச் சூழல். தக்கவர்களின் துணையோடு அவற்றை உருவாக்கிப் பயன்படுத்தினேன். வாசகர்களிடம் மிகச் சிறந்த வரவேற்புக் கிடைத்தது. கணினி கலைச் சொல்லாக்கப் பணியை மேலும் தொடர வேண்டும் என்ற வேட்கை என்னுள் அழுத்தம் பெற்றது. அதன்பின் நான் வெளியிட்ட 'மருத்துவ, அறிவியல், தொழில் நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி' நூலில் கணிசமான எண்ணிக்கையில் கணினித் தமிழ்க் கலைச் சொற்களை இடம்பெறச் செய்தேன். எட்டாண்டுகளுக்கு முன் கணினித் தொழில் நுட்பவியலின் எதிர்காலம் குறித்து, உலகளாவிய ஆய்வுக் கட்டுரைகளை 'யுனெஸ்கோ கூரியர்' இதழில் வெளியிட்டபோது, கணினித் தொழில் நுட்ப வளர்ச்சி, இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் அதன் வளர்ச்சி எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் - இருக்க வேண்டும் என்பதை முனைப்புடன் சிந்திக்கத் தொடங்கியபோதுதான், மலரவிருக்கும் பொற்காலத் தமிழகத்திற்கு மிகப் பெரும் உந்து விசையாக கணினிக் கல்வியும், அதைத் தொடர்ந்து கணினித் தமிழும் அமைவது ஒருவகைக் காலக் கட்டாயம் என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது.

கணினித் தமிழ் நூல்கள் நூற்றுக்கணக்கில் எழுதிக் குவிக்கப்பட வேண்டிய அவசிய, அவசரத் தேவை. அத்தேவையை நிறைவு செய்ய விழையும் திறனாளர்களுக்குத் தமிழகத்தில் பஞ்சமில்லை. பொருளறியும், தமிழறிவும், எழுத்தாற்றலும் மிக்கவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால், அவர்கட்கு இருக்கும் பெருந்தடை கலைச்சொற்கள். மொழியியலறிவும் பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியும் இலக்கணப் புலமையும் இருந்தாலொழிய புதுப்புது கலைச்

சொற்களை உருவாக்கவியலாது. மேலும் அதற்கென அளவுக்கதிகமான பொறுமையும் இடையறா முயற்சியும் கடும் உழைப்பும் இருந்தால் மட்டுமே இப்பணியைச் செவ்வனே செய்ய முடியும். இக்கடும் பணியை மேற்கொண்டு நூல் எழுத பெரும்பாலான அறிவியல் நூலாசிரியர்கள் தயாரில்லை.

தமிழ்க் கலைச் சொல்லாக்கப் பணியில் குறிப்பாக அறிவியல் தமிழ்க் கலைச் சொல்லாக்கப் பணியில் எப்போதும் எனக்குத் தணியா தாகம் உண்டு. காரணம் தமிழில் "எதெல்லாம் இல்லையோ அதெல்லாம் தமிழுக்கு வரவேண்டும். காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப தமிழுக்கு எதெல்லாம் இன்றியமையாத் தேவையோ அவற்றையெல்லாம் தமிழில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். எதையெல்லாம் தமிழால் முடியாது எனக் கூறப்படுகிறதோ அதையெல்லாம் தமிழால் முடியும் என்பதைச் சொல்லால் அல்லாமல் செயலால் எண்பிக்க வேண்டும்" என்ற முக்கோணக் கொள்கையை உயிர் மூச்சாகக் கொண்டு, கடந்த நாற்பதாண்டுகளாக இலட்சியப் பயணம் மேற்கொண்டு வரும் நான், விரைந்து வளர்ந்து வரும் கணினித் துறை வளர்ச்சிக்கேதுவாக, கணினிக் கலைச் சொல்லாக்கப் பணியில் முழுமூச்சாக ஈடுபடலானேன்.

தமிழில் கணினிக் கலைச் சொற்களைத் தந்தால் நூலெழுதுவோர் சொல்லாக்கப் பணிக்கென நேரத்தைச் செலவிடாது நிரல் நிரையாகத் தங்கள் கணினித் தமிழ் நூல்களை எழுதலாமே. செங்கல் முதலான கட்டிடச் சாமான்கள் இருந்தால் கட்டிடம் எளிதாகவும் விரைவாகவும் கட்டி முடிக்கப்படுவது இயல்புதானே.

இக்கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதிப் பணி செவ்வனே முடிந்திருக்கிறதென்றால் அப்பெருமை முழுமையும் தமிழையே சாரும். தமிழால் இயலவில்லை எனில் இப்பணி நிறைவேறியிருக்கவே முடியாது. ஆனால் தமிழ் இயல்பிலேயே அறிவியல் மொழியாக - அறிவியலைச் சொல்லுவதற்கென்றே உருவான மொழியாக அமைந்திருக்கிறது என்பது நான் கடந்த அரை நூற்றாண்டாக கண்டுணர்ந்து, தெளிந்துள்ள உணமையாகும். தமிழின் முழு ஆற்றலை வெளிப்படுத்தும் முயற்சி மட்டுமே எங்களுடையது. தமிழைப் புகழத் தெரிந்த அளவுக்கு அதன் ஆற்றலை அறிந்துணர நாம் முற்பட்டதில்லை என்பது ஒரு கசப்பான உண்மை.

என் முயற்சி இனிது நிறைவேற துணை நின்ற நண்பர்களையெல்லாம் இச்சமயத்தில் மிகுந்த நன்றியுணர் வோடு நினைவுகூர்கின்றேன். என் தமிழ் வளர்ச்சித் தொடர்பான முயற்சிகளுக்கெல்லாம் எப்போதும் பின் துணையாயிருப்பதில் பெருமகிழ்ச்சி கொள்பவர் திரு இரா. நடராசன் அவர்கள். என் கல்லூரி வகுப்புத் தோழரும் கூட. அவரது ஒத்துழைப்புக்கும் உதவிக்கும் நான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்

பட்டுள்ளேன். அதே போன்று அருமை நண்பர் திரு ராம்குமார் அவர்களும் எனக்கு எல்லா வகையிலும் உற்ற துணையா யமைந்திருப்பவர். கணினிக் கல்வியறிவு மிக்க இவர் சில கணினி நூல்களையும் தமிழில் எழுதிய நூலாசிரியரும் ஆவார். அவரது ஒத்துழைப்பு எனக்குத் தோன்றாத் துணையாக அமைந்ததை நன்றியுணர்வோடு நினைத்துப் பார்க்கிறேன். இதழாளர் திரு க. சந்தானம் அவர்களின் உதவிக்கும் ஒத்துழைப்புக்கும் நான் நன்றி கூறுவதில் பெருமகிழ்வடை கிறேன். கணினித் துறை வல்லுநர் என்ற முறையில் நூல் முழுமையும் ஆழ்ந்து படித்து அவ்வப்போது ஆலோசனை கூறியதோடு நூல் முழுமையும் எழுத்தெண்ணி ஆய்வு செய்து, அருமையான ஆய்வுரை வழங்கிய தொலைத் தகவல் தொடர்புத் துறை, மண்டல கணினி பயிற்சி மைய விரிவுரையாளர் திரு மு. சிவலிங்கம் அவர்கள் காட்டிய ஆர்வத்திற்கும் ஒத்துழைப்பிற்கும் என் இதய நன்றி உரித்தாகும்.

இந்நூலுக்கு மிகச் சிறந்த 'சிறப்புரை'யை வழங்கிய தமிழினக் காவலர், முத்தமிழறிஞர், மூதறிஞர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என் மீதும் என் பணி மீதும் காட்டிவரும் ஆர்வமும் அக்கறையும் எனக்குக் கிடைத்துள்ள பெரும் பேறாகும். என் முயற்சிக்குத் துணை நிற்க வேண்டும் என்ற உந்துதலால் நூல் முழுமையும் பார்வையிட்டு அருமையான சிறப்புரை வழங்கிச் சிறப்பித்த டாக்டர் கலைஞர் அவர்கட்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்றே தெரியவில்லை. சின்னஞ்சிறு வயதில் தந்தைப் பெரியாரால் உணர்வு ஊட்டப்பட்டு, அண்ணாவின் அறிவாற்றல்மிக்க எழுத்தாலும் பேச்சாலும் எழுச்சி பெற்ற எனக்கு, அன்றும் இன்றும் எதையும் தாங்கும் இதயமாக கடும் உழைப்புக்கும் முயற்சிக்கும் ஆக்கபூர்வமாக சிந்திப்பதற்கும் வழிகாட்டியாய் இருப்பவர் டாக்டர் கலைஞர் அவர்களே என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. எனக்கு மனச்சோர்வு தலைதூக்கும்போதெல்லாம் அவர்கள் செயல் வேகம் எனக்கு வேக முடுக்கியாயமைந்து விடும். வரலாற்று நாயகரான அவரது பவள விழா நினைவாக இந்நூலை வெளியிட விரும்பினேன். பவள விழா ஆண்டிற்குள் வெளி வருவதில் எனக்கு மட்டிலா மகிழ்ச்சி ஏற்படுகிறது. இனமானப் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கள் தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் பல்லாண்டுகளாக என்னை வழி நடத்தும் பெருந்தகையாவார். நான் எந்தவொரு தமிழ்ப் பணியை மேற்கொள்ளும் முன்பாக அவரிடம் விளக்கிக் கூறி ஆலோசனை பெற்ற பின்பே அப்பணியை முழுமூச்சுடன் மேற்கொள்வது என் வழக்கம். அவர்களும் அவ்வப்போது தக்க ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி என்னை ஆக்கபூர்வமாக வழிநடத்திச் செல்வது வழக்கம். அவர்களும் பல்வேறு பணிகளுக்கிடையே வழக்கம்போல் நூலை ஆழ்ந்து படித்து, மிகச் சிறப்பானதொரு அணிந்துரையை வழங்கி நூலுக்கு அணி செய்திருக்கிறார். என் தமிழ்ப் பணி மீது

எப்போதுமே நாட்டமிகுந்த தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை மற்றும் இந்து அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு மு. தமிழ்க்குடிமகனார் அவர்கள் சிறப்புமிகு வாழ்த்துரை வழங்கியமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகுக. என் மீதும் என் பணி மீதும் மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பவர் அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் அ. கலாநிதி அவர்கள். அவர்கள் நான் பணியாற்றும் தென்மொழிகள் புத்தக நிறுவனத்தின் தலைவருமாவார். பல்வேறு பணி நெருக்கடிகளுக்கு இடையேயும் சிறப்பானதொரு கருத்துரையை வழங்கிச் சிறப்பித்த அவர்கட்கு என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். என் முயற்சிகளை அவ்வப்போது ஊக்குவிக்கும் அறிஞர் பெருந்தகைகளான டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்களும் டாக்டர் மு. ஆனந்த கிருஷ்ணன் அவர்களும் டாக்டர் இரா. மா. வாசகம் அவர்களும் இந்நூலுக்கு சிறப்பான பாராட்டுரைகளை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். அவர்கட்கு நான் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு அரசின் நல்கைபெற்று இந்நூல் வெளிவரப் பேரார்வம் காட்டிய தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கட்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூற்பணி முடியும்வரை எனக்கு எல்லா வகை உதவி, ஒத்துழைப்பு நல்கி, சோர்வடையும்போதெல்லாம் தெம்பூட்டி உற்சாகப் படுத்திய என் துணைவியார் சித்தை சௌதா அவர்கட்கு நன்றி செலுத்த மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இந்நூல் அச்சுப் பதிவம் தயாரிப்பில், சுரக்ஷா கம்ப்யூட்டர் நிறுவனர் திரு கி. நரசிம்மன் அவர்கள் காட்டிய ஆர்வமும் ஒத்துழைப்பும் பாராட்டத்தக்கதாகும். இந்நூலை அழகான முறையில் அச்சிட்ட கிரியேட்டிவ் ஆஃப்செட் அச்சகத்தார்க்கு என் நன்றி உரித்தாகும்.

ஆயிரம் ஆண்டுகட்கு ஒருமுறை பூக்கும் தமிழ்ப் பொற்காலத்தின் தலைவாயிலில் நிற்கும் தமிழினத்தை - தமிழகத்தை அறிவாற்றலோடு வழிநடத்தும் வரலாற்று நாயகர், தமிழ்ப் பொற்காலச் சிற்பி டாக்டர் கலைஞர், கணினிக்கு அளித்து வரும் பேராதரவும், ஆரம்பப் பள்ளி முதல் தமிழைப் பயிற்சி மொழியாக்கும் அரசின் முனைப்புத் திட்டமும் எல்லா வகையிலும் தமிழ் வளர்ச்சிக்கு மாபெரும் வேக முடுக்கியாக அமைந்து வருவது கண்கூடு. இத்தகு இனிய சூழலில் வெளிவரும் இந்நூலை, எனது முந்தைய நூல்களை ஏற்று, ஆதரித்து ஊக்குவித்த தமிழுலகம், இம்முயற்சியையும் ஏற்று ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதுமே உண்டு.

சென்னை - 40 அன்பன்

25 - 11 - 1999 **மணவை முஸ்தபா**

சிறப்புரை

"*யுனெஸ்கோ கூரியர்*" *தமிழ்ப் பதிப்பின் நிர்வாக ஆசிரியர் திரு மணவை முஸ்தபா அவர்கள், "கணினிக் கலைச் சொல் களஞ்சிய அகராதி" எனும் நூலை உருவாக்கியுள்ளமை கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.*

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி உலகை இன்று ஒரு குக்கிராம நிலைக்குச் சுருக்கிவிட்டதெனில், அது மிகையன்று. இதன் பயனாகக் கணினியின் செல்வாக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து வருகிறது; அடுத்த நூற்றாண்டின் விஞ்ஞான மேன்மைக்கு அடித்தளமாகவும் அமைந்துள்ளது கணினி. எனவே, கணினி அறிவாற்றலை வளர்த்துக் கொண்டு, தகவல் தொழில்நுட்பத்தில் வல்லமை பெற்று, உலகில் மற்ற நாடுகளைவிட மற்ற சமுதாயங்களைவிடத் தமிழ்ச் சமுதாயம் முன்னேற்றம் எய்திட வேண்டும் என்பதற்காகத் தகவல் தொழில்நுட்பத்தைத் தமிழகத்தில் வளர்ப்பதிலும், கணினிக் கல்வியைப் பரப்புவதிலும் தமிழக அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டுவருகிறது. 1999ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் "உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு" சென்னையில் நடத்தப்பட்டு, அதன் தொடர் பணியாகத் "தரப்படுத்தப்பட்ட தமிழ் விசைப் பலகை" (Standardised Tamil Key-Board) *"தமிழ் வரிவடிவக் குறியீடுகள்"* (Tamil Glyph Codes) *ஆகியவை உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் மென் பொருள்கள் தயாரிக்கப்படவும் ஊக்கமளிக்கப்பட்டுள்ளது. உலகின் பல பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்கள் தமிழ் மொழியை இணையத்தின் வழியே பயில்வதற்குக் களமமைக்கும் முயற்சியாக "உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம்"* (Tamil Virtual University) *தோற்றுவிக்கப்படவும் ஆவன செய்யப்படுகிறது. மேலும், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி கற்பிக்கப்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

இந்நிலையில் தமிழில், அறிவியல் கலைச் சொற்களை உருவாக்குவதில் பேரார்வம் கொண்டு, "அறிவியல் கலைச் சொல் களஞ்சியம்", "மருத்துவ அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி", "மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்" போன்ற நூல்களை ஏற்கனவே வெளியிட்டுள்ள திரு.மணவை முஸ்தபா கணினி, இணையம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆங்கிலக் கலைச் சொற்களைத் தொகுத்து, அவற்றிற்கு ஏற்ற சொற்களைத் தமிழில் படைத்து, உரிய விளக்கங்களையும் வழங்கி, "கணினிக் கலைச் சொல் களஞ்சிய அகராதி" எனும் அருமையான நூலைத் தமது கடுமையான உழைப்பின் மூலம் உருவாக்கியுள்ளார். இக்காலகட்டத்தில் இது வரவேற்கத்தக்க, மிகுந்த பயனுள்ள பணியாகும். தகவல் தொழில் நுட்பத் துறையில் ஈடுபாடு கொண்டுள்ள வல்லுநர்களும், தமிழறிஞர் பெருமக்களும் இந்நூலைப் பயன்படுத்தி இந்நூலில் இடம்பெற்றுள்ள கலைச் சொற்கள் மேலும் செப்பமடைந்திடத் துணை புரிந்திடின் கணினித் தமிழ்க் கலை உலகில் புகழ்பெறும்.

அன்புள்ள,



சென்னை - 9
18 - 10 - 1999

மு. கருணாநிதி

அணிந்துரை

திரு மணவை முஸ்தபா அவர்கள் அறிவியல் தமிழ் வளர்ச்சியைத் தமது வாழ்க்கை நோக்கமாக உள்ளங்கொண்டு, இதுகாறும் அரிய பல அறிவியல் நூல்களைத் தமிழில் படைத்துள்ளார். அதன் வழியே 'கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி' என்னும் இந்நூலையும் திட்டமிட்டு இயற்றியுள்ளார். இது ஓர் அரிய பணியாகும்.

வளர்ந்து வரும் இக்கணினி உலகில் பலர் ஆங்கிலத்தில் சொல்லகராதிகளை வெளியிட்டு வரும் இத்தருணத்தில், தமிழுக்கு ஆக்கம் சேர்க்க தமிழில் ஒரு கணினிச் சொல்லகராதி தயாரிக்க விழைந்து, அதனை ஒரு கலைக் களஞ்சியமாக விரிவுபடுத்தி எல்லோருக்கும் பொருள் விளங்கும் வகையில் உரிய விளக்கமுடன் சிறப்பாக உருவாக்கி இருப்பது போற்றத்தக்கது. இந்நூற்றாண்டில் அறிவியலைத் தமிழில் கொண்டுவரும் பணியில் இது சிகரமாகத் திகழ்கிறது. தமிழில் கணினிக்கல்வி பயில்வோருக்கு இது துணைவனாகவும், தமிழில் கணினி நூல்கள் வெளிவர இது ஓர் அடித்தளமாகவும் அமையும் என்பதை எண்ணி இந்நூலாசிரியரைக் கணினித் தமிழ் ஆக்கத்துக்கு வித்திட்டவர் எனலாம்.

சாதாரணமாகக் கணினி செயற்பாட்டு உள்ளீடுகளை Hardware, Software என இரு கூறுகளாகப் பிரிப்பார்கள். Hardware என்பதனை 'வன்பொருள்' என்றும் 'உருப்பொருள், இயங்கு பொருள்' எனவும் குறிப்பிட்டுள்ளார். Software என்பதனை 'மென்பொருள்' என்றும் 'கணினிச் செயல்முறை' என்றும் குறிப்பதுடன் 'வன்பொருள் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவது' என்று அதன் செயல்பாட்டையும் தெரிவித்துள்ளார். அத்துடன் நில்லாமல் Hardware என்னும் சொல்லுடன் இணைந்து பயன்பாட்டில் உள்ள Hardware Configuration போன்ற 12 இணைச் சொற்களுக்கும் மொழி பெயர்ப்புடன் விளக்கமும் தந்திருப்பது இந்நூலின் சிறப்பாகும்.

இதில் 'Memory' என்பதற்கு 'நினைவகம்' 'நினைவுப் பதிப்பான்' என்று சொற்பொருள் தந்து, அதனை விளக்கி 'ஏராளமான தகவல்களைச் சேமிக்கும் திறன் கொண்ட கணினி யின் சேமிப்பு வசதிகள்' என்றும் தெளிவுபடுத்தியுள்ளார். 'Multimedia' என்ற சொல்லுக்குப் 'பல் ஊடகம்' என்று மொழி பெயர்ப்புச் செய்து 'ஒன்றுக்கு மேற்பட்ட படிவத்தில் தகவலைப் பரப்புதல்' என்று அதன் தன்மையை விளக்கி, 'சொற்கள், ஒலி, வரைகலை, உயிர்ப்பட வரைகலை, முழுநீள ஒளிக்காட்சி' என்று அதன் செயல்வகையை விரித்துக் கூறி இருப்பது பாராட்டுக்குரியதாகும். 'Monitor' என்பதற்கு 'திரையகம், செய்தி அறிவிப்பான்' என்று நல்ல தமிழ் சொற்களைப் பயன்படுத்தியுள்ளது எண்ணி மகிழத்தக்கது.

இந்நூலினால் கணினிக்கல்வியில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழாக்கம் செய்வதில், ஏற்கலாகும் தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுத்துத் தந்து, இடை யிடையே இலக்கிய வழக்குத் தமிழ்ச் சொற்களையும், செம்மையாக உரிய இடத்தில் பயன்படுத்தியுள்ளதுடன் ஒரு சில இடங்களில் ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் கைக்கொண்டு பயன்படுத்தி உள்ளார். இதனால் ஆசிரியர் பலவித கோணங்களில் சொற்பொருளை விளக்கிட முயற்சித்து இருப்பதும், நடைமுறை பயன்பாட்டைக் குறிக்கொண்டு இருப்பதும் தெளிவாகிறது.

இவ்வரிய நூலில் கணினி உலகில் பயன்படுத்தும் அனைத்துச் சொற்களையும் அகரவரிசையில் இணைப்பதற் கென்று இதன் ஆசிரியர் அமெரிக்கா முதலான வெளி நாடுகளில் சில மாதங்கள் தங்கி இருந்து அங்குப் பயன்படுத்தப் படும் சொற்களையும் ஆய்ந்து, தொகுத்து உரிய பொருள் விளக்கமுடன் இடம்பெறத் செய்துள்ளதைக் காண்போர் ஆசிரியரின் இமாலய முயற்சியைப் பாராட்டாமலிரார்.

கடந்த 32 ஆண்டுகளாக உலகந்தழுவிய யுனெஸ்கோ அமைப்பின் வெளியீடான 'கூரியர்' தமிழ்ப் பதிப்பின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுத் திறம்படச் செயலாற்றி வரும்

திரு மணவை முஸ்தபா அவர்கள் 'அறிவியல் கலைச்சொல் களஞ்சியம்' என்ற அரிய நூலையும், அதன் தொடர்ச்சியாக 'மருத்துவ, அறிவியல், தொழில்நுட்பக் கலைச் சொல் களஞ்சிய அகராதி' என்னும் பயன்மிகு நூலையும், 'மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்' என்னும் பாராட்டுக்குரிய நூலையும் வழங்கிய பெருமைக்குரியவர். இன்று இக்காலத்தின் இன்றியமையாத தேவையாகும் இந்நூலை இயற்றித் தந்ததன் மூலம் அவரை **'அறிவியல் களஞ்சியச் செம்மல்'** என்று பாராட்டுவது பொருத்தமாகும்.

அறிவியல் தமிழுக்கு ஆக்கம் செய்யும் தொண்டில் ஈடுபட்டுப் பலதுறை கலைச் சொல் களஞ்சியங்களைத் தொடர்ந்து இயற்றித் தந்து தமிழுலகுக்குப் பெருமை சேர்க்கும் அருமை நண்பர் முஸ்தபா அவர்களின் பணியைப் பாராட்டுவதுடன், கணினிக் கல்வித் துறையில் விளையும் விரைந்த வளர்ச்சியினால் உருவாகும் பற்பல புதிய ஆங்கிலச் சொற்களையும் அவ்வப்போது தமிழில் தெளிவிக்கும் முறையில், உரிய இணைப்புகளை ஆண்டுதோறும் வெளியிட வேண்டும் என்னும் என் விழைவையும் தெரிவித்துக் கொள்கிறேன். திரு மணவை முஸ்தபா அவர்களின் அறிவியல் தமிழ்த் தொண்டு, காலத்தை வெல்லும் ஆற்றலைத் தமிழுக்குத் தருவதுடன், காலத்தால் அழியாத செல்வமும் ஆகும். அவர் பணி சிறக்கவும் பல்லாண்டு நலமுடன் வாழவும் என் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை - 9
29- 10 - 1999

அன்பன்
க. அன்பழகன்

வாழ்த்துரை

திரு மணவை முஸ்தபா அவர்கள் சிறந்த சிந்தனையாளர். எத்தனையோ பேர் இலக்கியங்களைப் படித்தும், இலக்கியங்களைப் படைத்தும் தமிழ் வளர்ச்சிக்குத் துணை செய்கின்றனர். ஆனால், நம்முடைய மணவை முஸ்தபாவுக்கு அறிவியல் தமிழில் உள்ள ஆர்வமும் அக்கறையுமே அதிகம். எனவேதான் அறிவியல் வகையில் சிந்திப்பதைத் தன் வாழ்நாள் பயிற்சியாகக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அந்தச் சிந்தனைகளை நல்ல தமிழில் வடித்து, அதன் வாயிலாகத் தமிழ் மக்களின் அறிவியல் வேட்கைக்குத் தேவையான தீனியைத் தருவதில் முன்னின்று செயல்படுகிறார். அதிலும் கணினி தொடர்பான சொற்களைத் தொகுத்து, ஓர் அகராதி வெளியிடுவதும், அந்த அகராதியில்கூட, பிறமொழிச் சொல் கலவாத நிலையில் நல்ல தமிழ்ச் சொற்களையே அமைத் திருப்பதும் அவருடைய மொழி ஆர்வத்திற்கும் திறமைக்கும் சான்றாகும். அந்த வகையில் அவரை எவ்வளவு பாராட் டினாலும் தகும். 'Bus'-ஐ, "பஸ்" என்று அப்படியே சொல்லலா மென்று சொல்லுகின்ற வீம்புக்கூட்டத்தினிடையில் இவர் ஒரு வேறுபட்ட மனிதராகவே விளங்குகிறார். அப்படிச் சொல்லச் சொல்லுகின்றவர்கள் எதைச் சொல்லச் சொல்கிறார்கள் என்ற தெளிவு அவர்களிடத்திலேயே இல்லை. 'Bus' என்பதும் "பஸ்" தான். சீழ்நீர் என்பதைக் குறிக்கும் 'Pus' என்பதும் "பஸ்" தான். இதைப்பற்றியெல்லாம் இவர்கள் கவலைப்பட மாட்டார்கள்.

தமிழைக் கேலி செய்துவிட்டால், தாங்கள் இந்த நாட்டில் தலையாய பணி செய்துவிட்டதாகக் கருதும் போக்கினர் பலருக்கிடையில் மிக நுட்பமான அறிவியல் சொற்களைக்கூட அழகிய தமிழில் வடித்துத் தந்துள்ள திரு. மணவை முஸ்தபா பாராட்டுக்குரியவர். இப்பணி மேலும் தொடரட்டும்; அறிவியல் தமிழுக்கு ஆக்கம் கிடைக்கட்டும் என்று வாழ்த்துகிறேன்.

சென்னை - 9
25- 10 - 1999

அன்புடன்
மு. தமிழ்க்குடிமகன்

முகவுரை

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் விந்தைகளில் தலையாயதாக மலர்ந்திருப்பது கணினியாகும். பரந்து விரிந்த உலகைக் கையடக்க உலகமாக மாற்றியமைத்த பெருமை கணினியையே சாரும். உலகிலுள்ள அனைத்து அறிவியல் துறைகளும் கணினியைச் சார்ந்து வளரவேண்டிய இன்றியமையாச் சூழ்நிலை; ஒருவகைக் காலக் கட்டாயம்கூட.

இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கும்போது கணினியின் அரவணைப்போடு பெருமிதமாக நுழையும் இனிய வாய்ப்பை தமிழ்நாடு அரசும், ஆய்வுலகமும் உருவாக்கிக் கொண்டுள்ளது. கணினி பற்றிய விழிப்புணர்வு இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் வியக்கத்தக்க அளவில் உருவாகி வருகிறது. அதற்குத் தமிழ்நாடு அரசும் கல்வித் துறையும் பெரும் காரணங்களாக அமைந்து வருகின்றன வெனலாம். இத்துறை வளர்ச்சியில் முதல்வர் டாக்டர் -கலைஞர் அவர்கள் காட்டிவரும் ஆர்வம் போற்றத்தக்கதாகும்.

கணினிக் கல்வி வளர்ச்சியில் மிகப் பெரும் பங்கை அளித்துவரும் அண்ணாப் பல்கலைக் கழகம், கணினித் தமிழ் வளர்ச்சியிலும் தன் பங்களிப்பை வழங்கத் தவறவில்லை. தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு இணைந்து 1994ஆம் ஆண்டில் 'தமிழும் கணிப்பொறியும்' என்ற கருத்தரங்கை இரு நாட்கள் நடத்தியது. எதிர்காலத்தில் கணினி பற்றிய நூல்கள் தமிழில் எழுதுவதற்கு ஏதுவாக தமிழில் கணினிக் கலைச் சொல் அகராதி ஒன்றைத் தயாரிக்க குழுவொன்றை 1999ஆம் ஆண்டில் அமைத்தது. அக்குழுவின் தயாரிப்பு ''கணிப்பொறிக் கலைச் சொல் அகராதி'' என்ற பெயரில் டிசம்பர் 1998 இல் சிறு நூலாக வெளி வந்தது. இஃது கணினி ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு நேர்த் தமிழ்க் கலைச் சொல்லைத் தருவதாகும்.

ஆனால் ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு நேர் தமிழ்க் கலைச் சொல்லும் சொல் விளக்கமும் பொருள் விளக்கமும் தரவல்ல முழுமையான கணினி அகராதி தமிழில் இல்லையே என்ற ஏக்கத்தை அறவே போக்கும் வகையில் வளர்தமிழ்ச் செல்வர் திரு மணவை முஸ்தபா அவர்கள் 'கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி' என்ற பெயரில் மிகப் பெரும் நூலை வெளியிட்டுள்ளார். இஃது தமிழில் மட்டுமல்லாது இந்திய மொழிகளிலேயே விரிவான தகவல் விளக்கங்களோடு வெளிவந்துள்ள, பெரும் அளவிலான அகராதி நூல் இது

ஒன்றே என்பது நமக்கெல்லாம் பெருமையும் பெருமிதமும் தரும் செய்தியாகும்.

இந்நூல் அகராதிப் போக்கையும் கலைக் களஞ்சிய அமைப்பையும் ஒருசேரக் கொண்டுள்ள 'களஞ்சிய அகராதி' எனும் புது வடிவைப் பெற்ற புதுவகைப் படைப்பாகும். எடுத்துக்காட்டுகளும் படங்களும் பட விளக்கங்களும் நூலுக்கு மேலும் வலுவையும் வனப்பையும் ஊட்டுவனவாயுள்ளன.

இதே முறையில் இதற்கு முன் நான்கு கலைச் சொல் களஞ்சிய அகராதிகளைத் தமிழுலகிற்கு தந்து, அறிவியல் தமிழ்ப் பணியில் தனி முத்திரை பதித்துள்ள அறிவியல் தமிழறிஞர் திரு மணவை முஸ்தபா, இப்போது வெளியிட்டுள்ள "கணினிக் கலைச் சொல் களஞ்சிய அகராதி" மூலம் ஒருவகையில் தனி வரலாறு படைத்துள்ளார் என்றே கூற வேண்டும். இந்நூல் தயாரிப்புக்காக அவர் செலவிட்டுள்ள ஏழாண்டு காலக் கடும் உழைப்பு 'காலப் போக்குக்கேற்ப உருவாகும் எத்தகைய அறிவியல் வளர்ச்சித் தேவைகளையும் நிறைவு செய்யவல்ல ஆற்றல் மிகு அறிவியல் மொழியே தமிழ்' என்பதை எல்லாவகையிலும் மெய்ப்பித்து வருவதை நன்றியுணர்வோடு தமிழுலகம் கண்டு மகிழ்கிறது.

எவ்வளவு நிட்ப, நுட்பமுடைய அறிவியல் செய்தியாயினும் அதனைப் பழகு தமிழில் இலக்கிய நயத்தோடு சொல்லவியலும் என்பதை இந்நூல் நெடுகிலும் காண முடிகிறது. சொற் செட்டும், பொருட்செறிவுமிக்க இனிய, எளிய நடை இப்புத்துலக அறிவியல் துறையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள பெருந்துணை புரிகிறதெனலாம்.

தமிழில் கணினி பற்றிய நூல் எழுத முனைவோருக்கும் தமிழில் கணினி கற்பிக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் தமிழ் வழி கணினி கற்க முயலும் தமிழார்வலர்களுக்கும் இந்நூல் அருங் கொடையாயமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நூலாசிரியரின் அருந்தமிழ் அறிவியல் பணியை தமிழுலகோடு சேர்ந்து நானும் பாராட்டி மகிழ்கிறேன்.

சென்னை - 25
20 . 10 . 1999

டாக்டர் அ. கலாநிதி
துணைவேந்தர்,
அண்ணா பல்கலைக் கழகம்

கருத்துரை

"உலக உயிர்களில் கருவிகளை உருவாக்கும் ஆற்றல் பெற்றவன் மனிதன் மட்டுமே", என்று கூறினார் ஆல்ஃபெரெட் வாலஸ் (Alfred Wallace) என்ற அறிவியல் அறிஞர். பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை உருவாக்கியதில் டார்வினுக்கு உள்ள பங்கு இவருக்கும் உண்டு. மனித வளர்ச்சியின் வரலாற்றைச் சற்று ஆழமாக ஆய்வோமானால், மனித சமுதாயத்தின் ஒவ்வொரு முன்னேற்றத்துக்கும் ஒரு கருவி காரணமாய் அமைந்திருக்கிறது என்பது புலனாகும்.

ஏறத்தாழ 8000 ஆண்டுகட்கு முன் அடையாளம் தெரியாத ஒரு மேதை கண்டுபிடித்த கலப்பைதான் வேளாண்மை நாகரிகத்தை உருவாக்கியது. பதினான்காவது நூற்றாண்டு வரை, அறிவுத் துறைகளில், ஆய்வுகளில் கீழை நாடுகள் முன்னணியில் இருந்தன. மேலை நாட்டினர், உயர்கல்வி பெற எகிப்து, பாலஸ்தீனம் போன்ற கிழக்கு நாடுகட்கு வந்து கொண்டிருந்தனர். பதினைந்தாவது நூற்றாண்டில் குட்டன்பர்க் (Gutenberg) அச்சுயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அதன் பின்னர் அப்பொழுது நம்மை முந்தத் தொடங்கிய மேல் நாட்டினர் தொடர்ந்து முன்னணியில் நிற்கின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் உருவாக்கப்பட்ட நீராவியந்திரம் தொழிற் புரட்சியைத் தோற்றுவித்தது. இந்த நூற்றாண்டின் மையப் பகுதியில் உருவான கணினி (Computer) இந்த நூற்றாண்டின் மாபெரும் புரட்சிகட்குத் துணை நின்று, கல்வியுகத்தை (Age of Knowledge) உருவாக்கி இருக்கிறது.

நாகரிக காலம் தொடங்கி, மனிதன் எண்ணற்ற கருவிகளைப் படைத்திருக்கிறான் எனினும் கணினி இவை அனைத்திலும் அடிப்படையில் வேறானது: தனித்தன்மை வாய்ந்தது. மற்ற கருவிகள் மனிதனின் தசை வலியின், ஐம்புலன்களின் ஆற்றலைப் பெருக்க உதவின. ஆனால் அவன் தனது சிந்தனையின் அடிப்படையில் செய்யும் பணிகளை,

2

விரிவுபடுத்தும், விரைவுபடுத்தும் ஆற்றல் அவற்றிற்கில்லை. சிந்தனையின் அடிப்படையில் மனிதன் மேற்கொள்ளும் பணிகளுக்கு மாபெரும் துணையாக நிற்கும் திறன், எண்ணற்ற பணிகளை அவன் வகுத்த பாதையில் தானே மேற்கொள்ளும் திறன் கொண்டது கணினி. கருவிகளில் இதன் தன்மையும் வேறு; தரமும் வேறு. இன்று கணினியைப் பயன்படுத்தாத வாழ்க்கைத் துறைகள் எவையுமே இல்லை என்னும் அளவிற்கு அது அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி, விசுவரூபம் எடுத்து நிற்கிறது.

அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியின் எந்த ஒரு கூறுபாட்டின் பயனும் மக்களைச் சேர வேண்டுமானால் அது பற்றிய கல்வி அறிவு மக்களை எட்ட வேண்டும். மக்கள் மொழியில் இல்லாத ஒன்று சமுதாயத்தில் பரவலாக இடம் பெற இயலாது. இன்று மேலை நாடுகளில் கணினிக் கல்வி ஆரம்பப் பள்ளி வகுப்பு வரை எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. தமிழக அரசு இப்பணியில் முன்னோடியாக விளங்குகிறது. இந்தப் பயணம் வெற்றி பெறுவதற்குச் சிறியதும், பெரியதுமாகப் பல நூல்கள் கணினி பற்றி வெளிவர வேண்டும்.

அறிவியல் துறைகளில் நூல்கள் எனப்படும் கட்டடத் திற்கு, அது சிறியதாயினும் பெரியதாயினும், செங்கல்லாக, கதவாக, பலகணியாகப் பயன்படுவன (Building Blocks) கலைச் சொற்கள். இந்த அடிப்படை உறுப்புகளை வைத்துதான் எந்த மாளிகையும் உருவாக வேண்டும். அந்த உறுப்புகளை உருவாக் கிக் கொடுக்கும் பணியைத்தான் நண்பர் மணவை முஸ்தபா 'கணினிக் கலைச் சொல் களஞ்சிய அகராதி' என்ற இந்த நூல் மூலம் நிறைவேற்றியிருக்கிறார்.

கணிப்பொறித் துறையில் ஆங்காங்கு சிறு, சிறு கலைச் சொல் தொகுப்புகள் வந்திருக்கின்றன. இந்த நூல் அவற்றி னின்றும் கணிசமாக வேறுபட்டது. இந்த அளவிற்கு முழுமை யான தொகுப்பு நானறிந்தவரை இதுவரை வரவில்லை. இரண்டாவதாக இது கணிப்பொறிச் சொற்களின் பொருள், அச்சொல் குறிக்கும் பொருள் பற்றிய விளக்கம் இரண்டின் இணைப்பு. இதன் ஒரு கூறுபாடு கணினி அகராதி: இன்னொரு

கூறுபாடு கணினியின் உறுப்புகள், அம்சங்கள், செயல்பாடுகள் பற்றிய விளக்கம் அதாவது அகராதி - களஞ்சியம் இவற்றின் தொகுப்பு. இந்த ஏற்பாட்டினால், நூலின் பயன் பன்மடங்கு அதிகரிக்கிறது.

நண்பர் மணவை முஸ்தபா கணிப்பொறித் துறையினர் அல்லர். அவரது கல்லூரிப் படிப்புத் துறை வேறு. இந்த நூலை அவர் என்னிடம் தந்தபொழுது நான் சற்று வியந்தேன். அவருடைய பின்னணியில் இப்படி ஒரு நூலை எவ்வாறு எழுத முடிந்தது என நான் வினவியபொழுது இதற்காக உட்கார்ந்து இரவும் பகலுமாகப் படித்துத் தன்னை அணியமாக்கிக் கொண்டு இப் பணியைத் துவங்கியதாகக் கூறினார். என் மனத்திற்குப் பட்ட அளவில் கலைச் சொல்லாக்கப் பணியில் அவருக்குத் துணை நிற்கும் வலுவான பின்னணி ஒன்று உண்டு. அது அவர் 32 ஆண்டுகளாகத் தொடர்ந்து UNESCO நிறுவனம் முப்பது மொழிகளில் நடத்தும் COURIER என்ற திங்கள் இதழின் ஆசிரியராக இருப்பதுதான்.

கூரியர் இதழ், மாதம் ஒரு பதிப்பு. கல்வியுலகில், பண்டைக்காலம் தொட்டு நாளை மலர இருக்கும் நூற்றாண்டு வரை என்னென்ன தலைப்புகள் இடம் பெற முடியுமோ அத்தனை தலைப்புகளையும் இந்த இதழ் தாங்கி வந்திருக்கிறது. அதில் ஆங்கிலத்தில் வரும் கட்டுரைகளை, கால் நூற்றாண்டுக்கும் அதிகமாகத் தமிழில் மொழிபெயர்த்துத் தொடர்ந்து, தொய்வின்றி, உருவிலும் கருவிலும் சிறப்பாக வெளியிட்டு வருகிறார். இது ஓர் இமாலயப் பயிற்சி. விலை கொடுத்துப் பெற முடியாத அறிவுலக அனுபவம். அதன் ஒளி தான் அவருக்குக் கலைச்சொல் உலகின் நெடுஞ்சாலை மட்டுமன்றி, சந்து, பொந்துகளில் நுழையவும் கரடு, முரடான பாதைகளில் தடைகளைத் தாண்டவும் துணை செய்திருக்கிறது.

கலைச் சொல்லாக்கம் கூட்டல், கழித்தல் போன்று வரையறுக்கப்பட்ட வழியைக் கொண்டதல்ல. பல உத்திகள் தேவைப்படும் பணி. 1985இல் 'அறிவியல் தமிழ்' என்ற தலைப்பில் நான் எழுதிய நூலில் கலைச் சொல்லாக்கப் பணியின் பரிமாணங்கள் பற்றியும் சில உத்திகள் பற்றியும்

விவரித்திருக்கிறேன். நண்பர் மணவை முஸ்தபா இந்தப் பிரச்சினையை முப்பதாண்டுகட்கும் மேலாகச் சந்தித்திருக் கிறார். தேவைக்கேற்ப அவ்வப்பொழுது தீர்வு கண்டிருக்கிறார். அந்த நீண்ட அனுபவத்தின் தொகுப்பு, அவருக்கு இந்தப் பணியில் கை கொடுத்திருக்கிறது.

இயன்ற அளவில் தமிழ்ச் சொற்களைக் கண்டிருக்கிறார். ஆனால் எல்லாவற்றிற்கும் தமிழ்ச் சொல் என்ற அணுகுமுறை யை அவர் பின்பற்றவில்லை. உலக வழக்கை ஏற்று, ஆங்காங்கு ஒலி பெயர்த்திருக்கிறார். தேவைக்கேற்ப, இயல்வது, இயலாதது தெளிந்து, புதிய சொற்கள் படைப்பதையோ, மொழிபெயர்ப்பதையோ, ஒலிபெயர்ப்பதையோ பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவதையோ மேற்கொண்டிருக்கிறார். இறுக்கமான அணுகு முறையைத் (Rigid Approach) தவிர்த்து, எடுத்த பணிக்குப் பழுது வராத இளக்கத்தைக் (Flexibility) கடைப் பிடித்திருக்கிறார். தமிழறிவும், அறிவியல் அணுகு முறையும் இணைந்து துணை செய்திருக்கின்றன.

பரவலாகவும், மிகவும் விரைவாகவும் வளர்ந்து வரும் முக்கியமான ஓர் அறிவுத் துறையில், தமிழ் மொழியில் இன்றி யமையாது தேவைப்படுகின்ற, கற்போர், கற்பிப்போர், கணிப் பொறி பற்றி எழுதுவோர், கணிப்பொறியைக் கையாள்வோர் அனைவருக்கும் பயன்படுகின்ற ஒரு தரவு நூல் தொகுப்பைத் தந்திருக்கிறார் திரு மணவை முஸ்தபா. தமிழ் மொழிக்குக் காலத்தால் செய்துள்ள பணி சிறிதன்று, பெரிதும் கூட. நண்பர் மணவை முஸ்தபா அவர்கட்குத் தமிழகம் தவறாது நன்றி கூறும்.எனது மனம் நிறைந்த வாழ்த்துகள்.

சென்னை - 41
25 - 10 1999

வா. செ. குழந்தைசாமி
தலைவர்
தமிழ் இணையப் பல்கலைக் கழக
உயர்நிலை ஆய்வுக் குழு

பாராட்டுரை

15ஆம் நூற்றாண்டில் அச்சு இயந்திரம் தோன்றியபோது ஐரோப்பிய நாடுகளில் வழக்கிலிருந்த பல மொழிகள் அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியதால் வழக்கொழிந்து போயின. அதேபோல் 20ஆம் நூற்றாண்டில் உலகெங்கிலும் வேகமாகப் பரவிவரும் கணினியைப் பயன்படுத்திக் கொள்ளாத மொழிகள் பின்தங்கிவிடக் கூடிய நிலை உருவாகியுள்ளது. ரோமன் எழுத்துகளை அடிப்படை யாகக் கொண்ட மொழிகள் கணினியில் எளிதாகவும் வேகமாகவும் பயன்படுத்தப்பட்ட பிறகு சீன, ஜப்பானிய, கொரிய, அரேபிய மொழிகள் இன்று பெரும் அளவுக்கு ஒருமித்த வகையில் செயல்பட்டு வருகின்றன.

கணினியிலும் இணையத்திலும் தமிழை எளிதாகப் பயன்படுத்த வேண்டி ஒருமிக்கப்பட்ட குறிக்கோடுகள் இந்த ஆண்டு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஊக்குவிப்பால் உலக அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் ஆங்கில மொழியின் அடிப்படையிலேயே வளர்ந்துவிட்ட கணினி உலகம் பல்லாயிரக்கணக்கான புதிய சொற்களையும், சொற்றொடர்களையும், குறுஞ்சொற்களையும் உருவாக்கியுள்ளது. கணினியில் தமிழ் ஈடுபட்டாலும் அது முழுமையாகச் செயல்படுவதற்கு மிகவும் இன்றியமையாதது கணியத் தமிழ் அகராதி ஆகும்.

ஒரு சிலர் கணியத் தமிழ் அகராதிகளை உருவாக்க முயன்று சில நூறு சொற்களை மட்டும் திருப்திகரமாக மொழி பெயர்ப்பதில் வெற்றி கண்டனர். கணினித் தொடர்புடைய ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்துவதில் ஏற்படும் சொல்லாக்கச் சிக்கல்களும், பொருட்சிதைவும், புதிய சொற்களை உருவாக்குவதில் உள்ள சிரமங்களும் கருதி பலரும் இம்முயற்சியில் ஈடுபடத் தயங்கினர். இந்நிலைமையில்

திரு மணவை முஸ்தபா அவர்கள் சுமார் 12 ஆயிரம் கணிப்பொறி சார்ந்த ஆங்கிலச் சொற்களை தமிழாக்கம் செய்திருப்பது மிகவும் பாராட்டுக்குரிய பெரும் முயற்சி. இச்சொற்களைத் தமிழாக்கம் செய்ததுடன் மட்டுமன்றி அவற்றின் பொருளை உணரும் வகையில் அழகிய சுருக்கமான விளக்கத்தையும் அளித்திருப்பது இச்சொற்களைப் பயன்படுத்த முனைவோருக்கு அரிய துணையாக அமையும்.

திரு மணவை முஸ்தபா அவர்கள் இதுவரை பல்வேறு அறிவியல் துறைகள் சார்ந்த 5 களஞ்சிய அகராதிகளை உருவாக்கியுள்ளார். அவரது தனிப்பட்ட ஆர்வத்தாலும் அயராத உழைப்பாலும் பெருமுயற்சியாலும் பல்துறை அறிஞர்களுடனான தொடர்பாலும் அவர் நிகழ்த்தியுள்ள இச்சாதனை அவரால் மட்டுமே செய்யக்கூடிய ஒன்று. கணினி சார்ந்த பல தமிழ் நூல்கள், பயிற்சிக் கையேடுகள் போன்றவை உருவாக இருக்கும் இக்கால கட்டத்தில் இந்தக் "கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி" பேருதவியாக வெளிவந்துள்ளது. பத்து ஆண்டுகளுக்குள் தமிழகத்தில் அனைவருக்கும் கணினி அறிவு கிட்டியிருக்க வேண்டும் என்ற தமிழக அரசின் முயற்சி வெற்றி காண இந்த அகராதி பெரிதும் உதவும். இந்த அரிய நூலை நமக்குத் தந்த திரு மணவை முஸ்தபா அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுகள்

சென்னை - 5
27- 10 - 1999

மு. ஆனந்தகிருஷ்ணன்
துணைத் தலைவர்
தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

வாழ்த்துரை

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் பயன்பாட்டுக்கும் ஓர் இணையற்ற எடுத்துக்காட்டாக விளங்குவது கணினி. நாளும் மாற்றங்கள் காணும் தகவல் தொடர்பு நுட்பங்களும் கணினி நுட்பங்களும் இணைந்து செயல்படும் தகவல் பெருவழிப்பாதைகள் தோன்றிவரும் வேளை இது. உலகளாவிய இணையம், வரும் நூற்றாண்டின் தகவல் தொடர்பு, வணிகம், கல்வி, பொழுதுபோக்கு ஆகிய துறைகளில் மாபெரும் மாற்றங்களைக் கொண்டுவரவுள்ளது. வளர்ந்து வரும் இந்தத் தொழில் நுட்பம் மாணவர்கள் முதல் மக்கள் அனைவரையும் தமிழ்மொழியில் சென்றடைய வேண்டும். அத்தகைய குறிக்கோளோடு தமிழறிஞரும், அறிவியல் ஆர்வலருமான உயர்திரு மணவை முஸ்தபா அவர்கள் ஆக்கியுள்ள 'கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி' ஓர் அரும் படைப்பு ஆகும்.

வேகமான வளர்ச்சிகாணும் இத்துறைசார்ந்த ஆயிரக்கணக் கான ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களைக் கொடுப்பதுமட்டுமல்லாமல், சிறு குறிப்புகளும், விளக்கங்களும், வேண்டும் இடங்களில் படங்களுடன் இந்நூலாசிரியர் கொடுத்துள்ளார். இது இவரது ஏழாண்டுகால இடைவிடாத முயற்சிகளின் பயனாக வெளிவருகின்றது. வளர்ந்து வரும் எந்தத் தொழில்நுட்பத்தை யும் தெளிவாக எடுத்துச்சொல்லும் திறன் தமிழுக்கு உண்டு என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளதோடன்றி அதைச் செம்மையாகச் செயல்படுத்தியும் காட்டியுள்ளார் திரு மணவை முஸ்தபா அவர்கள். அவர் யுனெஸ்கோ கூரியர் தமிழ்ப் பதிப்பின் ஆசிரியராகப் பல்லாண்டுகளாகப் பணியாற்றி வருபவர். ஏற்கனவே பல்வேறு அறிவியல் தொழில் நுட்பத் துறைகளுக்கான கலைச் சொற்களையும் அகராதி விளக்க நூல்களையும் படைத்த அவரது அனுபவம் இக்கணினி சார்ந்த நூலைப் படைக்க நன்கு பயன்பட்டுள்ளது. தாய்மொழியாம் தமிழை முறையாகப் பயின்று ஆர்வத்தோடு அறிவியல் சார்ந்த நூல்களைப் படைப்பவர் இந்நூலாசிரியர். நான்காம் தமிழாம்

அறிவியல் தமிழைக் கணினி பற்றிய கலைச்சொல் அகராதிக் கலைக்களஞ்சியம் வழி வளம் பெறச் செய்கின்றார்.

இருபத்தோராம் நூற்றாண்டிலே இந்திய நாடு தகவல் தொழில் நுட்பத்துறையில் சிறப்பான இடம் பெற்றிட, பெரும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அம்முயற்சிகளிலே தமிழகம் ஒரு முன்னோடியாக விளங்குகின்றது. பட்டிதொட்டியெல்லாம் இன்டர்நெட்டை எடுத்துச் செல்லவும், பள்ளிகள், கல்லூரிகளில் பயில்வோர் கணினிப் பயிற்சி பெறவும், பல்லாயிரக்கணக்கான வல்லுநர்கள் இத்துறைக்கான படைப்புகளை உருவாக்கி உலகத்து நாடுகளுக்கெல்லாம் பணிக்களமாக விளங்கவும் தமிழ்நாடு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இந்த நூல் அம்முயற்சிகள் வெற்றிபெற உறுதுணையாக விளங்கும் என்பது திண்ணம். இந்நூல் எல்லா நூல்நிலையங்களிலும் இருக்க வேண்டும். இளைய தலைமுறையினர் இதனைப் பயன்படுத்தி அவர்களுடைய புதுமையான படைப்புகளை நல்ல தமிழிலே தரவேண்டும். நூலாசிரியர் பல இடங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட தமிழ்க் கலைச்சொற்களை ஆங்கிலச் சொல்லுக்குக் கொடுத்துள்ளார். அவர் விரும்புவதெல்லாம் அவற்றில் சிறப்பான ஒன்று காலப்போக்கில் தக்க கலைச்சொல்லாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட ஆவன செய்யுங்கள் என்பதுதான். நாளும் வளர்ந்து வரும் இத்துறையில் புதிய புதிய கலைச் சொற்களைப் படைக்க வேண்டிய தேவையும் இருப்பதால் இப்பணி என்றும் தொடரவேண்டும். அதில் பலரும் பங்கேற்க வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

திரு மணவை முஸ்தபா அவர்களின் தமிழ்ப்பணி போற்றுதற்குரியது. அவர் படைத்துள்ள இந்நூல் உலகளாவிய தமிழ் இணையத்தில் இடம்பெற வேண்டும். தமிழ் மொழி கணினித்துறையோடு இணைந்து தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் முன்னிடம் பெறவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இரா. மா.வாசகம்
தலைவர்
தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல்
நிறுவனம் (TANITEC)

கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி

ஓர் ஆய்வு

தீயின் கண்டுபிடிப்பு திருப்புமுனை ஆனது. சக்கரம் சரித்திரத்தை மாற்றியது. மின்சாரம் வாழ்க்கையை எளிமை ஆக்கியது. கணினியின் கண்டுபிடிப்போ அகில உலகத்தையும் ஒரு கையகலச் சிப்புக்குள் அடக்கி விட்டது. நவீன சமுதாயத்தை அடையாளம் காட்டும் ஒரு கருவியாய் கணினி விளங்குகிறது. மனித வாழ்வின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாய் பிணைந்து விட்டது. மக்களின் அன்றாட நடைமுறைகள் ஒவ்வொன்றிலும் கணினியின் ஆதிக்கம் தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது.

இத்தகைய காலகட்டத்தில்தான், அறிவியல் தமிழ் அறிஞர், வளர்தமிழ்ச் செல்வர் மணவை முஸ்தபா அவர்களின் 'கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி' நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. கணினி என்பது மெத்தப் படித்தவர்களின் சொத்தாக மட்டும் இருந்துவிடக்கூடாது. கணினிக் கல்வி பெருநகரங்களில் வாழ்வோரின் பெருமிதமாய் நின்றுவிடக் கூடாது. தமிழ் நாட்டின் சிற்றூரில் தமிழ்வழியாய்க் கல்வி கற்கும் மாணவனுக்குக் கணினி அறிவியல் அந்நியமாகிவிடக் கூடாது என்கிற ஆவேசத்தோடு இக் கலைச் சொல் களஞ்சிய அகராதியை திரு மணவையார் எழுதி வெளியிட்டுள்ளார். நவீன அறிவியலில் நாம் எவர்க்கும் சளைத்தவர்கள் இல்லை. ஆங்கிலத்தின் மூலமாகத்தான் கணினி அறிவைப் பெறமுடியும் என்கிற மாயை உடைத்தெறியப் படவேண்டும். கணினித் துறை சார்ந்த அனைத்து நுணுக்கங்களையும் எளிய தமிழில் எடுத்துக் கூறமுடியும் என்கிற சவாலுக்குச் சாட்சியம் கூறுகிறது இந்த நூல்.

கணினியின் வரலாற்றையும் அதன் இன்றைய தாக்கப் பரப்பையும், பயன்பாட்டுத் தளங்களையும் விரிவாகத் தெரிந்து கொண்டால்தான், திரு மணவை முஸ்தபா அவர்களுடைய முயற்சியின் ஆக்கத்தையும், ஆற்றியுள்ள பங்களிப்பின் தாக்கத்தையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

கணினியின் வளர்ச்சிப் படிகள்

தொடக்க காலத்தில் கணினிகள் பல்கலைக் கழகங் களிலும் ஆய்வுக் கூடங்களிலும் ஆய்வுப் பொருளாகவே இருந்து வந்தன. 1951இல் தான் கணினி விற்பனைக்கு வந்தது. ரேடிங்டன் நிறுவனம் யுனிவாக்-I கணினியை அமெரிக்க அரசுக்கு விற்றது.

மிகப் பெரிய கட்டிடத்தில் நிறுவப்பட்ட அக்கணினி மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குப் பயன்படுத்தப்பட்டது.

அதன்பிறகு பரவலாக விற்பனைக்கு வந்த கணினிகளும் பல நூறுபேர் ஒரே நேரத்தில் பணியாற்றக் கூடிய பெருமுகக் கணினிகள் (Main Frames) ஆகும். இவற்றை மிகப்பெரிய வணிக நிறுவனங்களே வாங்கிப் பயன்படுத்த முடிந்தன. அடுத்து, நடுத்தர நிறுவனங்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் அதைவிடச் சிறிய (Mini) கணினிகள் விற்பனைக்கு வந்தன. 1971ஆம் ஆண்டில் நுண்செயலி (Micro processor) கண்டுபிடிக்கப் பட்டபின், கணினியின் வளர்ச்சிப் படியில் திடீர்த் தாவல் ஏற்பட்டது.

1977ஆம் ஆண்டில் விலைகுறைந்த மிகச் சிறிய (Micro) ஆப்பிள்-II கணினிகள் பெருமளவில் விற்பனைக்கு வந்தன. நிறுவனங்கள் மட்டுமே கணினியை நிறுவமுடியும் என்ற நிலைமாறி, தனியார் ஒருவர் தன் சொந்தப் பயன்பாட்டுக்காக ஒரு கணினியை வாங்க முடிந்தது. எனவே அக்கணினி சொந்தக் கணினி (Personal Computer-PC) என்றழைக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டில் மிக எளிதாகப் பயன்படுத்தக் கூடிய சொந்தக் கணினிகளை ஐபிஎம் நிறுவனம் விற்பனைக்குக் கொண்டுவந்த பின் உலகெங்கிலும் கணினியின் பயன்பாடு பெருமளவு அதிகரித்தது. நுண்செயலி மற்றும் நினைவகச் சிப்புகளின் உற்பத்தியில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றம், காட்சித் திரை, விசைப் பலகை, அச்சுப்பொறி போன்ற துணைச் சாதன உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி, மனிதனின் அன்றாடப் பணிகளை எளிமைப்படுத்தும் ஏராளமான மென்பொருள் தொகுப்புகளின் உருவாக்கம் காரணமாக, கணினித் துறையில் அதிகமாகப் பரிச்சயம் இல்லாதவர்களும் கணினியில் பணியாற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

நிறுவனங்கள் தத்தம் அலுவலகங்களில் பயன்படுத்தி வந்த தனித்த கணினிகளை நன்றாகப் பிணைத்து, கணினிப் பிணையங்கள் (Computer Networks) உருவாக்கப்பட்டன. ஒரே அலுவலகத்தில் (Local Area), ஒரு பெருநகரில் (Metro Area) மற்றும் நாடு முழுவதிலுமுள்ள (Wide Area) கிளைகளிலுள்ள கணினிகளை ஒருங்கிணைத்துப் பிணையங்கள் உருவாயின. தகவல் மற்றும் மூலாதாரங்களைப் பகிர்ந்து கொள்வது இதன்மூலம் சாத்தியமானது. அரசுத் துறையினர், பல்கலைக் கழகங்கள், பொதுநூலகங்கள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், வங்கிகள் மற்றும் ஏனைய வணிக நிறுவனங்கள் தத்தம் செயல்பாடுகளுக்காக உருவாக்கிய குறும்பரப்பு/விரிபரப்புப் பிணையங்கள் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டன.

ஒவ்வொரு நாட்டில் இவ்வாறு உருவாக்கப்பட்ட முதுகெலும்புப் பிணையங்கள் (Back Bone Network) ஒருங்கிணைக்கப்பட்டு இணையம் (Internet) உருவானது. உலகின் எந்த மூலையிலிருந்தும் வேறெந்த மூலையில் குவித்து வைக்கப்பட்டுள்ள தகவல் களஞ்சியத்தை ஒரு நொடியில் பெற வழியேற்பட்டது.

கணினியின் பயன்பாடுகள்

கடையில் வாங்கும் பொருளுக்கு பில் போடுவது தொடங்கி செவ்வாய்க் கிரகத்தில் ஆளில்லாத வாகனத்தை பூமியிலிருந்தே இயக்குவதுவரை கணினியின் பயன்பாடுகள் விரிவடைந்துள்ளன:

★ நூலகங்களில் புத்தகப் பரிமாற்றம், வங்கிகளில் வரை வோலை, காசோலை வழங்கல், பேருந்து, ரயில், விமானப் பயணத்துக்கு முன்பதிவு செய்தல்-இன்னும் இதுபோன்ற பணிகள் கணினி மூலம் நிறைவேற்றப் படுகின்றன.

★ ஓர் அலுவலகத்தின் ஆவணத் தயாரிப்புக்கு மட்டுமின்றி, நிதிநிர்வாகம், தகவல் பரிமாற்றம் போன்ற அனைத்துப் பணிகளுக்கும் கணினி பயன்படுகிறது.

★ பெரிய தொழிலகங்களில் மூலப் பொருள் கொள்முதல் தொடங்கி, பொருள் வடிவமைப்பு, உற்பத்தி, கையிருப்பு, விற்பனை, விற்று வரவு, வாடிக்கையாளர் சேவை - போன்ற அனைத்து வணிக நடவடிக்கைகளும் கணினி மூலமே நடைபெறுகின்றன.

★ ஒரு புத்தக வெளியீட்டுக்கான அனைத்துப் பணிகளையும், மேசைமேல் உள்ள ஒரு கணினி (Desk Top Publishing) மூலம் செய்து முடித்து விட முடிகிறது.

★ மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் பணிகளில் பல்லூடகக் கணினிகளில் (Multimedia Computers) பங்கு கணிசமானது.

★ வங்கியில் நாமாகப் பணம் எடுத்துக் கொள்ள முடியும். சாலைகளில் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த, பெரிய ஆலைகளில் எந்திரங்களைக் கண்காணிக்க, நாடு முழுவதிலுமுள்ள தொலைபேசித் தொடர்பகங்களை இயக்க, வானிலையை ஆய்வு செய்து முன்னெச்சரிக்கை செய்ய - கணினிகளே உதவுகின்றன.

★ மருத்துவத் துறையில் நோயறிதல் பணியில் மட்டுமின்றி, மனித மூளையிலும் இதயத்திலும் சிக்கலான அறுவைச் சிகிச்சைகளைக்கூட கணினியின் உதவியுடன் எளிதாகச் செய்ய முடிகிறது. சீறிப் பாய்ந்து வரும் எதிரியின் ஏவு கணையைக் கூட கணினியின் உதவியுடன், கண்சிமிட்டும் நேரத்தில் கண்டறிந்து அழித்துவிட முடியும்.

எல்லா விந்தைகளுக்கும் அப்பால் 'இன்டர்நெட்' எனப் படும் இணையம் உலகம் அனைத்தையும் ஒரு கிராமமாய் (Global Village) ஆக்கிவிட்டது. தொழிற்புரட்சிக்கு அடுத்த படியாகத் தகவல் புரட்சி (Information Revolution) இணையத்தின் மூலமாய் இன்று உலகைக் குலுக்கிக் கொண்டிருக்கிறது. மனிதன் காலையில் எழுந்து இரவில் உறங்கப் போகும்வரை அனைத்துப் பணிகளையும் இணையம் மூலமே நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. செய்தித்தாள் படித்தல், உறவினர்க்குக் கடிதம் அனுப்புதல், அறிஞர்களுடன் கலந்துரையாடல்/கருத்துப் பரிமாற்றம், நண்பர்களுடன் அரட்டை, இசை/சினிமாப் பொழுதுபோக்கு, விளையாட்டு, நூலகப் படிப்பு, தொலைபேசி உரையாடல், ரயில்/விமானப் பயண முன்பதிவு, கடையிலுள்ள பொருள்களைப் பார்வை யிட்டு தேர்வு செய்து பணம் செலுத்தி அனுப்பி வைக்க ஆணை தருதல், பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெறுதல், ... - இத்தனை பணிகளையும் வீட்டிலிருந்தபடியே ஒரு கணினியின் மூலம் இணையத்தில் இணைத்துக் கொண்டு செய்து முடிக்க முடியும். வேறென்ன வேண்டும்?

கணினிக் கல்வியின் இன்றியமையாமை

கணினியின் ஆதிக்கம் பரவப் பரவ கணினி அறிவியலைக் கற்றுத் தேர்வதும் கட்டாயமாகிவிட்டது.

ஒவ்வொரு எந்திரத்திலும் அதற்கே உரிய பாகங்கள் இருக்கின்றன. ஆனால் ஸ்க்ரூ டிரைவர் என்று சொல்லப்படும் திருப்புளி எந்த எந்திரத்தின் பாகமும் அல்ல. ஆனால் திருப்புளி இல்லாமல் எந்த எந்திரத்தையும் கையாள முடியாது. எந்தவொரு எந்திரத்தையும் கழற்ற, பழுதுபார்க்க, இணைக்க, பராமரிக்க திருப்புளி ஒரு கருவியாகப் பயன்படுகிறது. கணியைத் திருப்புளிக்கு ஒப்பிடலாம். தொடக்க காலத்தில் குறிப்பிட்ட எந்திரத்தின் பாகம்போல் விளங்கிய கணினி இன்றைக்கு அனைத்து எந்திரங்களையும் கையாளவல்ல திருப்புளியாய் ஆகிவிட்டது.

ஆம். ஒரு காலத்தில் பல்கலைக் கழகங்களில் ஒரு பாட மாக மட்டுமே இருந்துவந்த கணினி அறிவியல் நாளடைவில்

தொழில்நுட்ப அறிவியலின் ஒரு துறையாக வளர்ச்சி பெற்று, இன்றைக்கு எந்தவொரு அறிவியல் துறையையும் அணுகி ஆய்வுசெய்ய உதவும் ஒரு கருவியாகப் பரிணமித்துள்ளது. எந்த அறிவியல் பாடத்தைக் கற்பவராயினும், எந்தத் தொழில் நுட்பத் துறையில் பயில்பவராயினும் கணினி அறிவியலையும் கற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயத் தேவையாகி விட்டது.

தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம்

தமிழ்நாட்டின் சின்னஞ்சிற்றூர்களில் - மூலை முடுக்கு களில் - எல்லாம் கணினி கற்றுத் தரும் பயிற்சி மையங்கள் ஏராளமாய்ப் பெருகிவிட்டன. மாணவர்கள் மட்டுமின்றி சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் கணினியில் பயிற்சி பெற ஆர்வம் காட்டுகின்றனர். கணினியை இயக்கத் தெரிந் தாலே நல்ல வேலை கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மென்பொருள் உருவாக்கத்தில் உலகிலேயே இந்தியா முன்னணி இடம் வகிக்கிறது. அதில் தமிழ்நாட்டு இளைஞர் களின் பங்கு கணிசமானது. உலகின் அனைத்து முன்னணிக் கணினி நிறுவனங்களிலும் தமிழ்நாட்டு இளைஞர்கள் முக்கிய பதவிகளில் இருக்கின்றனர். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் கணினி அறிவியலைத் தேர்வுசெய்து விரும்பிப் படிக்கின்றனர்.

பத்திரிகைகளில், வானொலியில், தொலைக்காட்சியில் நாள்தோறும் கணினித்துறை சார்பான செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் கணினி விழிப்புணர்வு தமிழ்நாட்டில் அதிகமாகவே உள்ளது.

அச்சுத் துறையில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ். அதுபோலவே இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ்தான். தமிழுக்கென்றே தமிழில் 13,000 இணையத் தளங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்திய மொழி களிலேயே கணினிக்கென்று தனியாகப் பத்திரிகை வெளிவந்தது தமிழ்மொழியில்தான். கணினி அறிவியல் தொடர்பான ஏராளமான புத்தகங்களும் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ளன.

கணினித் திரைகளில் தமிழ்மொழி உலாவந்து கொண் டிருக்கிறது. உரைத் தொகுப்பான்கள் (Text Editor), சொல் செயலிகள் (Word Processor), தகவல்தள மேலாண்மை (Data Base Management), இ-மெயில் (E-Mail), இணைய உலாவி (Browser), கணக்கியல் தொகுப்புகள் (Account Packages), குழந்தைகள், மாணவர்கட்குப் பயன்படும் பாடங்கள், வெளி

நாட்டில் வாழும் மக்கள் தமிழ் கற்றுக் கொள்ள உதவும் தொகுப்பு, பல்லூடக விளையாட்டுகள் (Multimedia Games) - இன்னும் இவைபோன்ற மென்பொருள் தொகுப்புகள் தமிழ் மொழியிலேயே வெளிவந்து கொண்டிருக்கின்றன. இப்படிப் பட்ட காலகட்டத்தில்தான் நான்காம் தமிழாகிய அறிவியல் தமிழின் ஓர் அங்கமான 'கணினித் தமிழ்' செழுமைபெற்று வளரத் துடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் கணினி அறிவியல் வளர்ந்த வேகத்தில் கணினித் தமிழ் வளரவில்லை என்றே கூற வேண்டும்.

பேச்சுத் தமிழில் நெல்லைத் தமிழ், கோவைத் தமிழ், சென்னைத் தமிழ் என்றெல்லாம் வழங்கப்படுவதுபோல கணியத் தமிழும் ஊருக்கு ஒரு வடிவம், நாட்டுக்கு ஒரு வடிவம் என ஆகிவிடுமோ என அஞ்சவேண்டியுள்ளது. அறிவியல் என்பது அனைத்துலகுக்கும் பொதுவானது. அதுபோலக் கணியத் தமிழும் தமிழ்பேசும் சமுதாயம் எங்கும் ஒன்றுபோல் பயன்படுத்தப்பட வேண்டும். கணினித் தமிழ்ச் சொல்லாக்கம் தரப்படுத்தப்பட்டு, கணினித் துறைக்கான கலைச்சொல் களஞ்சியம் தொகுக்கப் பட்டு வெளியிடப்பட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். ஆனால் அதற்கான திசைவழியில் அரசோ, பல்கலைக் கழகங்களோ, தமிழ்ச் சங்க அமைப்புகளோ போதுமான முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளவில்லை என்றே கூறவேண்டும். இப்படிப்பட்ட காலகட்டத்தில், ஒரு தனியாளாய் நின்று, இம்மாபெரும் கடமையைத் தோளில் சுமந்து, தொலைநோக்குப் பார்வையோடு, திரு மணவை முஸ்தபா அவர்கள் உருவாக்கி வெளியிட்டுள்ள இக்கலைச் சொல் களஞ்சிய அகராதியின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் தமிழக அரசின் முன்முயற்சிகள்

தகவல் தொழில்நுட்பத் துறையில் சாதனைகள் புரிய இந்தியாவில் ஒவ்வொரு மாநிலமும் முன்முயற்சி எடுத்து வருகின்றன. தமிழ்நாடும் வேறெந்த மாநிலத்துக்கும் சளைத்ததில்லை என்பதைக் காட்டும் வகையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறார்கள்.

★ தகவல் தொழில்நுட்பத் துறை அமைக்கப்பட்டு, ஓர் ஐஏஎஸ் அதிகாரி துணைச் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

★ சிங்கப்பூரில் நடைபெற்ற 'தமிழ்நெட்-97' மாநாட்டைத் தொடர்ந்து, தமிழ் நாட்டில் சென்னையில் 'தமிழ்நெட்-99' மாநாட்டினை தமிழக அரசு கூட்டியது. உலகெங்கிலு மிருந்து கணினித் தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டனர். தமிழ் விசைப் பலகையைத் தரப்படுத்துதல் (Standardisation of Tamil Key Board), தமிழில் வரிவடிவக் குறியீடுகளை (Tamil Glyph Codes) ஒழுங்குபடுத்துதல் ஆகியவை முக்கிய நோக்கமாகக் கொண்டு விவாதிக்கப்பட்டது. மேற்கண்ட பணிகளுக்காக ஓர் உயர்நிலைக் கமிட்டி அமைக்கப்பட்டு 100 நாட்களுக்குள் இறுதி முடிவுகள் அறிவிக்கப்படுமென முடிவெடுக்கப் பட்டது.

★ இறுதியாக்கப்பட்ட 'தமிழ் 99' என்னும் தமிழ் விசைப் பலகையும், ஒற்றைமொழி (Monolingual), இரட்டை மொழி (Bi-lingual), அமைப்புக்கான வரிவடிவக் குறியீடுகளும் தமிழக அரசின் சார்பில் ஜூன் 13ஆம் தேதி வெளியிடப் பட்டன. 'தமிழ் 99' விசைப் பலகைக்கு ஒத்திசைவான தமிழ் மென்பொருள்களையே தமிழக அரசு வாங்குமென ஆணை பிறப்பிக்கப்பட்டது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் அரசுகளுக்கும் தமிழ்நாடு அரசின் இந்தப் பரிந்துரை அனுப்பிவைக்கப்பட்டது.

★ தமிழ் மென்பொருள் உருவாக்கும் நிறுவனங்களுக்குத் தகுதி அடிப்படையில் மானியம் வழங்க முடிவெடுக் கப்பட்டுள்ளது.

★ வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ்மொழியைக் கற்றுப் பயன்பெற தமிழ் இணையப் (மெய்நிகர்) பல்கலைக் கழகம் (Tamil Virtual University) உருவாக்கி டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்களின் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

★ மாவட்ட நிர்வாகம் முழுமையையும் கணினி மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், முன்னோடி முயற்சியாக திருவாரூர் மாவட்டத்தில் வருவாய்த் துறை, பத்திரப் பதிவு போன்ற முக்கிய துறைகள் முற்றிலும் கணினி மயமாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ இணையத்தில் கொட்டிக் கிடக்கும் தகவல் களஞ்சியத்தை தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதி மக்களும் பெற்றுப்' பயனடையும் வகையில் சமுதாய இணைய மையங்களை (Community Internet Centres) அரசு அமைக்க உள்ளது.

★ 2000ஆம் ஆண்டு முதல் ஆயிரத்துக்கு மேற்பட்ட அரசு பள்ளிகளில் கணினி அறிவியல் கட்டாயப் பாடமாகக் கற்றுத் தரப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டின் சிற்றூர்களில் படிக்கும் மாணவர்கள் கணினி அறிவியல் நுட்பங்களை தாய்மொழியாகிய தமிழ்மொழியிலேயே கற்க இருக்கின்றனர்.

இந்தக் காரணத்தினால், கணினித் தமிழ்ச் சொல்லகராதி யின் தேவை முன்னெப்போதையும்விட இப்போது அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இத் தேவையை முன்கூட்டியே எதிர்பார்த்த அறிவியல் தமிழ் அறிஞர் திரு மணவை முஸ்தபா அவர்கள் மேற்கொண்ட முயற்சி, இதுவரை இருந்து வந்துள்ள வெற்றிடத்தை நிரப்பச் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட மிகச் சரியான நடவடிக்கை என்பதில் ஐயமில்லை.

மணவையாரின் அறிவியல் தமிழ்ப்பணி

அறிவியல் தமிழ்ப் பணிக்காகத் தம் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்டவர் திரு மணவை முஸ்தபா அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிப்பை முடித்ததுமே, சேலம் அரசுக் கல்லூரியில் ஆசிரியர் பணிக்கான ஆணையைப் பெற்றார். தம் பேராசிரியர்களிடம் வாழ்த்துப் பெற சிதம்பரம் சென்றார். அங்கு நடைபெற்ற "பயிற்சி மொழி தமிழா? ஆங்கிலமா?" என்ற கருத்தரங்கு இவர் வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைந்தது. "அனைத்து அறிவியல் துறைகளும் ஆங்கிலத்திலேயே உள்ளன. அவற்றை தமிழில் கற்பது முடியாத செயல். பயிற்சிமொழி தமிழ் என்பது கானல் நீர்" என்று ஒரு பேராசிரியர் குறிப்பிட்டார். வெகுண்டெழுந்த மணவையார், "தமிழால் முடியும். சொல்வதோடு நில்லாமல் செயல்மூலம் தமிழால் முடியும் என்பதை நிறுவிக் காட்டுவேன். இன்று முதல் இதுவே என் வாழ்வின் ஒரே இலட்சியம். அறிவியல் தமிழுக்காக என் வாழ்வையே அர்பணித்துக் கொள்கிறேன்" என்று முழங்கியதோடு மட்டுமின்றி, கையிலிருந்த ஆசிரியர் பணிக்கான ஆணையை அங்கேயே கிழித்துப் போட்டார். அன்று முதல் அறிவியல் தமிழ் ஒன்றை மட்டுமே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இன்றுவரை அந்தப் பாதையிலேயே நடைபோட்டு வருகிறார்.

தென்மொழிகள் புத்தக டிரஸ்டில் தமிழ்ப் பதிப்பாசிரிய ராகப் பணியில் சேர்ந்து, மொழிபெயர்ப்புப் பணியை தன் முழுநேரப் பணியாக மேற்கொண்டார். 1967ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் 'கூரியர்' தமிழ்ப் பதிப்பு ஆசிரியராகப் பொறுப்பேற்று கடந்த 32 ஆண்டுகளாக அப்பணியை செவ்வனே நிறைவேற்றி வருகிறார். உலகிலுள்ள முப்பது

மொழி ஆசிரியர்களில் பணிமூப்பு ஆசிரியர் (Seniormost Editor) என்ற சிறப்புத் தகுதியும் பெற்றுள்ளார். 30 மொழிகளில் 40 இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் கூரியர் இதழின் தமிழ்ப் பதிப்பு தகுதியின் அடிப்படையில் நான்காவது இடம் வகிக்கிறது. சமுதாயம், கலை, பண்பாடு, அறிவியல் துறை சார்ந்த ஆங்கிலக் கட்டுரைகளை சொற்செறிவு, பொருட் செறிவு குன்றாமல் மொழிபெயர்த்து 'கூரியர்' இதழில் வழங்கி வருகிறார்.

ஒவ்வொரு அறிவியல் துறையிலும் புதிய புதிய கலைச் சொற்களை உருவாக்க வேண்டும் என்பதே இவரின் குறிக்கோள். இக் குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு, 'அறிவியல் கலைச்சொல் களஞ்சியம்' என்ற தலைப்பில் இரண்டு தொகுதிகளை வெளியிட்டார். இந்நூல்களில் ஐம்பத்து நான்கு அறிவியல், தொழில்நுட்பப் பிரிவுகளுக்குரிய கலைச் சொற் களையும் பொருள் விளக்கத்தையும் உருவாக்கி வழங்கியுள்ளார். அடுத்து பட விளக்கங்களோடு, 'மருத்துவ, அறிவியல், தொழில்நுட்ப கலைச் சொல் களஞ்சிய அகராதி' என்னும் நூலை வெளியிட்டார். இந்நூலில் ஒவ்வொரு கலைச் சொல்லின் வாயிலாகவும் அறிவியல் தகவல்களைச் செய்தித் துணுக்கு களாகத் தந்துள்ளார். இந்த வகையில் தமிழில் மட்டுமல்லாது இந்திய மொழிகளிலேயே முதலாவது வெளிவந்த முதல் நூல்கள் இவையெனில் மிகையாகாது.

அறிவியல் கற்றவர்கள் தமிழறிஞர்களாக விளங்கு கிறார்கள். தமிழ் கற்றவர்கள் அறிவியல் அறிஞர்களாக விளங்க முடியாதா? இக்கேள்விக்குத் தக்க பதிலாகத் தன்னையே மாற்றிக் கொண்டவர் திரு. மணவையார். கடந்த நாற்பதாண்டுகளாக அறிவியல் துறைகள் பலவற்றையும் கற்றறிந்த அறிவியல் அறிஞராகத் திகழ்கிறார். இவர் வெளியிட்ட 'மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம்' இவரின் மருத்துவ அறிவைப் பறை சாற்றும். மருத்துவத் துறையின் பதினைந்து உட்பிரிவுகளுக்கான கலைச் சொற்களையும் பொருள் விளக்கங்களையும் படங்களை யும் தாங்கி வெளிவந்த இந்த நூல் அரசின் பரிசையும் பாராட்டையும் பெற்றதோடு மக்களின் பெரும் வரவேற்பையும் பெற்றது.

இந்த நூற்றாண்டின் இணையற்ற அறிவியல் துறையாய் வளர்ந்து நிற்கும் கணினித் துறைக்கான கலைச்சொல் களஞ்சியத்தை உருவாக்க வேண்டும் என்பதும் இவரது வேட்கையாக இருந்து வந்தது. தொலைநோக்குப் பார்வையுடன் ஐந்தாறு ஆண்டுகட்கு முன்பே இதற்கான பணியைத் தொடங்கிவிட்டார். இதற்காக, கணினி அறிவியலையும் கற்கத் தயங்கவில்லை. இவர் அண்மையில் அமெரிக்கா, கனடாவுக்கு

3

பயணம் மேற்கொண்டபோது அப்பயணத்தை கணினி கலைச்சொல் களஞ்சியத்தை செம்மையாக உருவாக்கும் பணிக்காகவே அப்பயணத்தின் பெரும்பாலான நாட்களைச் செலவிட்டார்.

திரு மணவையாரின் கலைச்சொல் களஞ்சியங்கள் அனைத்திலும் ஒரு சிறப்புக் கூறு உண்டு. அகர வரிசையில் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தரும்போது அது 'அகராதி' ஆகிறது. அத்தோடு நில்லாமல், உடன் சொல்விளக்கத்தையும் பொருள் விளக்கத்தையும் விரிவாகத் தருவதால் அது கலைக்களஞ்சியமாகப் பரிணமிக்கிறது. ஆங்காங்கே தேவையான இடங்களில் படங்களும் இடம் பெற்றிருப்பது இன்னொரு சிறப்புக் கூறாகும்.

வயதில் சிறியவனாக இருந்தபோதிலும், தொலைத் தொடர்புத் துறையில் என்னுடைய இருபத்தைந்து ஆண்டு காலப் பணியையும், கணினித் துறையில் பன்னிரண்டு ஆண்டு கால பட்டறிவையும், கணியத்தமிழ் எழுத்துத் துறையில் ஆறாண்டு காலப் பயிற்சியையும், கணினித் துறை ஆசிரியராக ஐந்தாண்டு காலச் சேவையையும் கருத்தில் கொண்டு, என்னை அழைத்து, இந்தக் கணினிக் கலைச் சொல் களஞ்சிய அகராதியை ஆய்வு செய்யும் பணியை மதிப்பிற்குரிய அறிஞர் பெருந்தகை திரு மணவையார் அவர்கள் ஒப்படைத்தபோது நான் பூரித்துப் போனேன். பெருமகிழ்ச்சியுடன் அப்பணியை ஏற்றுக் கொண்டேன்.

இந்தக் கலைச் சொல் களஞ்சியத்தை முதல் சொல்லி லிருந்து கடைசிச் சொல்வரை ஒவ்வொரு சொல்லையும் அதன் விளக்கங்களோடு ஆழ்ந்து படித்தேன். இந்நூலில் நான் கண்ட சில பொதுவான சொல்லாக்கக் கோட்பாடுகளையும், குறிப்பான சில சிறப்புக் கூறுகளையும் இங்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மொழியாக்கக் கோட்பாடுகள்

✱ ஓர் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான பல்வேறு தமிழ்ச் சொற்களைத் தருதல்.

Data - தகவல், தரவு, விவரம், செய்திக் குறிப்பு.

Key - விசை, திறவு, விரற்கட்டை, குமிழ், சாவி.

Pixel - படக்கூறு, படப்புள்ளி, படத்துணுக்கு.

இதைப் பற்றி திரு மணவையார் கூறும்போது, 'புதிய அறிவியல் துறைக்கு முதன் முதலாகக் கலைச் சொல்லாக்கம் செய்யும்போது, இதுபோல ஒத்த சொற்கள் பலவற்றைத்

தருவதனால், வருங்காலச் சமுதாயம் பொருத்தமான ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ளட்டுமே' என்று திறந்த மனத்துடன் கூறுவார்.

* கூடுமானவரை புழக்கத்தில் உள்ள நல்ல தமிழ்ச் சொற்களையே எடுத்தாள்கிறார். வடமொழிச் சொற்களைத் தவிர்க்கிறார்.

Jaggies - பிசிறுகள்

Pad - திண்டு

Glare Filter - கூசொளி வடிகட்டி

* இருக்கின்ற சொற்களிலேயே தேடிக் கொண்டிராமல் பொருத்தமான வேர்ச் சொற்களைத் தேர்வு செய்து விகுதி சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்கியுள்ளார்.

Quantum - துளியம்

Terminal - முனையம்

Bit - துண்மி

Robot - எந்திரன்

* சில ஆங்கிலச் சொற்களுக்கு ஒற்றைத் தமிழ்ச் சொல்லாய் மொழிபெயர்க்காமல், இருவேறு சொற்களை இணைத்து காரணப் பெயராய் ஒரு புதிய சொல்லைப் படைக்கிறார்.

Antenna - அலைவாங்கி

Virus - நச்சு நிரல்

Audio - கேட்பொலி

* ஆங்கிலச் சொற்களை அப்படியே நேரடியாக மொழி பெயர்ப்பது வேடிக்கையாக அமைந்துவிடும். மலையிலிருந்து கொட்டும் நீரை ஆங்கிலத்தில் 'Water Falls' என்று கூறினர். தமிழில் 'நீர்விழ்ச்சி' என மொழிபெயர்த்தனர். 'அருவி' என்ற அழகான தமிழ்ச் சொல் இருப்பது அவர்களுக்குத் தெரியாது போலும். இப்படிப்பட்டவர்கள் Ladies Finger-ஐ 'பெண்களின் விரல்' என்றுதான் மொழி பெயர்ப்பார்கள். திரு மணவை யாரைப் பொறுத்தவரை ஆங்கிலச் சொல் என்ன காரணத்திற்காக அமைந்திருந்த போதிலும், இடம் பொருள் ஏவல் அறிந்து, காரண காரிய முறையில் மொழியாக்கம் (மொழிபெயர்ப்பு அல்ல) செய்திருப்பது பாராட்டுதற்குரியது.

Handset - ஒலியுறுப்பு

Cold Fault - உடன்தெரியும் பிழை

Greet - விளங்கா மொழி

Female connector - துளை இணைப்பி

Gun - வீச்சுப் பொறி

ஒரு சொல் தனியாக வரும்போதும், சொல் தொடருடன் இணைந்து வரும்போதும், எவ்விதப் பிசிறும் இல்லாமல் எல்லாவகையான சொல்/தொடர் அமைப்புகளிலும் அதே சொல் இடம் பெறும் வகையில் சொல்லாக்கம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

Input - உள்ளீடு

Inputting - உள்ளிடுதல்

Input Data - உள்ளீட்டுத் தகவல்

Input Unit - உள்ளீட்டகம்

* முக்கியமான பல சொற்களுக்கு விரிவான விளக்கங்கள் அளித்திருப்பதைப் பார்க்க முடிகிறது. இதன்மூலம், ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை அறிந்து கொள்வதோடு, கணினியின் குறிப்பிட்ட செயலுறுப்பையோ/ செயல்பாட்டையோ/ பயன்பாட்டையோ முழுமையாக அறிந்து கொள்ளும் வாய்ப்பும் நமக்குக் கிட்டுகிறது. எடுத்துக்காட்டாக, 'Compilation' என்ற சொல்லுக்கு 'தொகுத்தல்' என்ற பொதுப் பொருளையும், 'மொழி மாற்றல்' என்ற சிறப்புப் பொருளையும் குறிப்பிடுகிறார். அதனைத் தொடர்ந்து, அச்சொல்லை விளக்குகிறார். 'செயலகத்தில் நேரடியாக இயக்கப்படுவதற்காக உயர்நிலை மொழிகளில் எழுதப்பட்ட ஆணைத் தொடர்களை எந்திரமொழி ஆணைகளாக மொழிபெயர்த்துத் தரும் இரு முக்கிய முறைகளில் ஒன்று. இயக்கத்திற்கு முன்பே முழு ஆணைத் தொடர்மொழி மொழிபெயர்க்கப்பட வேண்டும். ஆணைமாற்றி (Interpreter)க்கு மாறானது. ஆணைமாற்றி முறையில் ஒவ்வொரு ஆணையும் அது செயல்படுத்தப்படும் போது மட்டுமே மாற்றப்படுகிறது'. இந்த விளக்கத்தின் மூலம் 'Compilation' என்ற சொல் கணினித் துறையில் குறிக்கும் பொருளை சரியாக அறிந்து கொள்வதோடு Interpretation என்னும் இன்னொரு செயல்முறை பற்றியும் புரிந்து கொள்ள முடிகிறது.

தலைப்பெழுத்துச் சுருக்கமாய் அமையும் பெயர்ச் சொற்களை அப்படியே ஒலிபெயர்ப்பாகத் தந்துவிடுகிறார்.

PERT Chart - பெர்ட் வரைபடம்

PET Computer - பெட் கணினி

* ஒரு சொல்லுக்குரிய விளக்கத்தை அளிக்கும்போது, விளக்கத்தில் இடம்பெறும் சில புதிய தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லையும் அடைப்புக் குறிக்குள் தந்துவிடுகிறார்.

Click - சொடுக்கு

சுட்டுக் கருவி (மவுஸ்) பொத்தானை அழுத்தும் முறை.

Client - வாடிக்கையாளர்

முறைமை ஆய்வுக்காக (System analysis) ஒப்பந்தம் செய்யப்படும் தனிநபர் அல்லது ஒரு நிறுவனம்.

✱ நிறுவனப் பெயர்கள், மென்பொருள் தொகுப்புகளின் பெயர்கள், விற்பனைப் பொருள்களின் பெயர்கள், அளவீடுகள் மற்றும் பல சிறப்புப் பெயர்களை மொழிபெயர்க்காமல் அப்படியே ஒலிபெயர்ப்பாகத் தருகிறார்.

Modula - 2 - மாடுலா 2

MacPaint - மாக்பெயின்ட்

Fairchild - ஃபேர்சைல்ட்

Javlin Plus - ஜேவ்லின் பிளஸ்

Easy Writer - ஈஸி ரைட்டர்

Gauss - காஸ்

Hentry - ஹென்றி

Hertz - ஹெர்ட்ஸ்

இவ்வாறு மொழியாக்கத்தில் தனக்கென சில கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு அவற்றின் அடிப்படையில் இக்கலைச் சொல் களஞ்சிய அகராதியை உருவாக்கியுள்ளார். இவை தவிர இந்நூல் முழுவதும், ஆங்காங்கே விரவிக் கிடக்கும் சிறப்புக்கூறுகளையும், சிறப்பு உத்திகளையும் சுட்டிக்காட்டுவது என் கடமையாகும்.

மொழியாக்கச் சிறப்புக் கூறுகள்

அகரவரிசையில் சொற்களின் பொருளைக் கூறும் நூலை 'அகராதி' என்கிறோம். ஒவ்வொரு சொல்லின் விளக்கத்தையும் விரிவாகத் தரும்போது 'கலைச்சொல் களஞ்சியம்' என்கிறோம். சொல்லின் பொருள், விளக்கம் இவற்றோடு நில்லாமல் சில எடுத்துக்காட்டுகளையும் கூறி விளக்குவதை என்னவென்பது? ஒரு பாட நூலைப் படிப்படி போன்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, Hexadecimal Notation என்பதை பதினாறிலக்கக் குறிமானம் என்று பொருள்கூறி, இதில் 0 முதல் 9 வரையிலான இலக்கங்கள் A,B,C,D,E,F என்ற எழுத்துகள் பயன்படுத்தப்படுகின்றன என்று குறிப்பிட்டுவிட்டு, A60B என்ற ஹெக்ஸா எண்ணை 42507 என்ற டெசிமல் எண்ணாக மாற்றும் முறையையும் விளக்கியுள்ளார். அதே போல் Factorial என்ற சொல்லை விளக்கும்போது 4!- ன் மதிப்பைக் கண்டறிவது எப்படி எனவும் விளக்கப்பட்டுள்ளது.

Line surge என்ற சொல்லுக்கு மின்சார வெள்ளம், மின்தொடர் எழுச்சி என்று பொருள் கூறி, திடீரென்று உயர்ந்த வோல்ட் மின்சாரம் பாயும் நிலை என்ற விளக்கம் கூறி, உயர்வோல்ட் மின்சாரம் திடீரென்று குறுகிய காலத்திற்குப் பாய்வதால், தவறான பதிவு, தவறான செயல்பாடு, தகவல்கள் இழத்தல், சில சமயங்களில் கணினியில் மிகவும் நுண்ணிய இணைப்புகள், தகவல் உள்ளீட்டு முனையங்கள், தகவல் பரிமாற்றச் சாதனங்களின் அழிவு முதலியன ஏற்படுவது உண்டு என்று அதன் விளைவுகளைக் கூறி, திடீரென்று மின்சார டிரான்ஸ்பார்மர்களை இயக்குதல், பிற துணைக் கருவிகளை இயக்குதல் மற்றும் பிற காரணங்களால் ஏற்படுவதுண்டு என்று அதன் காரணங்களையும் எடுத்துக் கூறுவதுடன் நில்லாமல், உயர்வோல்ட் மின்சாரம் திடீரென்று பாய்வதைத் தடுக்கும் சாதனங்களால் கருவிகளைப் பாதுகாக்கலாம் என்று பாதுகாப்பு வழிமுறையையும் கூறுவதைப் பார்க்கும்போது அகராதி, கலைக் களஞ்சியம் என்கிற வரம்புகளையும் உடைத்தெறிந்து ஒரு புதிய பரிமாணத்தையே எட்டிவிடுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

நாகரிகமற்ற முறையில் கணினியைப் பயன்படுத்துவதை Geek என்று கூறுகிறார்கள். அதனை 'கற்றுக்குட்டித்தனம்' என்று நாகரிகமான முறையில் மொழிபெயர்த்துள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது. Eavesdropping என்பதை 'ஒற்றுக் கேட்டல்' என்கிறார். Hacker-களைக் 'குறும்பர்' எனச் செல்லமாகக் குறிப்பிடுகிறார். Paddle என்பதைத் துடுப்பு, மத்து என மொழிபெயர்க்கிறார். Menu Item என்பதைப் 'பட்டி உருப்படி' என்கிறார். Packet என்பதைப் பொதிவு, பொட்டலம் என்று குறிப்பிடுகிறார். Pattern என்பதை தோரணி, தினுசு என்கிறார். இவ்வாறு, தமிழ்பேசும் மக்களிடையே பேச்சு வழக்கில் பயன்படுத்தக் கூடிய பொருள் பொதிந்த பொருத்தமான தமிழ்ச் சொற்களை மொழியாக்கமாகக் கொடுத்திருக்கும் பாங்கு திரு. மணவையாருக்கே உரிய தனித்தன்மை என்றே கூற வேண்டும்.

அதேவேளை, பழந்தமிழ் இலக்கியங்களில் பயன் படுத்தப்பட்டுள்ள தூய்மையான இலக்கியச் சொற்களையும் தோண்டியெடுத்துப் புத்துயிரூட்டி நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

Jargon - குழூஉச் சொல்
Slug - பருங்குழை
Finesse - நயநுட்பம்
Host - ஓம்புநர், புரவலர்
Malfunction - பிறழ்வினை

திரு மணவையாரின் இந்த நயநுட்பத்தை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. Disk என்பதற்கு வட்டு, மின்காந்தத் தட்டு என்று பொருள் கூறப்பட்டுள்ள போதிலும் பின்வரும் இடங்களில் எல்லாம் வட்டு என்ற சொல்லையே எடுத்தாள்கிறார். 'தட்டு' என்பது ஓரங்களைத் தட்டிச் செய்வது. Plate என்பதையும் தட்டு என்றே சொல்கிறோம். தட்டு வட்டமாகவும் இருக்கலாம், வேறு வடிவங்களிலும் இருக்கலாம். வட்டமாக இருப்பது 'வட்டு' வட்டெறிதல், வட்டாடல் என்று சங்க இலக்கியத்தில் படிக்கிறோம். வட்டமான தட்டுக்கு 'வட்டில்' என்ற சொல் வழக்காற்றில் உள்ளது. 'வட்டில் சுமந்து மருங்கசைய' என்ற பாட்டிலும் 'வக்கணையாய்ச் சோறாக்கி வட்டிலிலே போடலையே" என்று நாட்டுப்புறப்பாட்டிலும் கேட்டிருக்கிறோம். ஆக, Disk என்ற சொல்லுக்கு 'வட்டு' என்ற பொருத்தமான சொல்லையே திரு மணவையார் பயன்படுத்தியுள்ளார்.

Flexible என்பதன் பேச்சுவழக்குச் சொல் Floppy என்பதாகும். எனவே Floppy Disk 'நெகிழ்வட்டு' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மெல்லியதாக இருப்பதாலும் Hard Disk என்பதற்கு மாறாக இருப்பதாலும் 'மென்வட்டு ' என்றும் குறிக்கலாம். செருகி எடுத்துப் பயன்படுத்துவதால் 'செருகு வட்டு' என்ற மூன்று சொற்களையுமே தந்து நம்மைத் திக்குமுக்காட வைக்கிறார் திரு மணவையார் அவர்கள். Hard Disk என்பது பிரிக்க முடியாதவாறு தனிப் பொதியுறையில் நிரந்தர மாய்ப் பிணைக்கப்பட்டுள்ளதால் அதனை 'நிலைவட்டு' என மொழியாக்கம் செய்துள்ளதும் முற்றிலும் பொருத்தமே.

இவ்வாறு, திரு மணவையாரின் மொழியாக்கச் சிறப்புக் கூறுகளைப் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டே போகலாம். 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே' என்று பழம்பெருமை மட்டுமே பேசிக் காலம் கழிக்காமல் நல்ல தமிழை - நல்ல அறிவியல் தமிழை - புத்தம் புதுத் தமிழைப்பற்றி - எந்த நேரமும் சிந்தித்துச் செயலாற்றிவரும் திரு மணவையாரைப் போல் இன்னொரு தமிழறிஞரைச் காண முடியுமா என்பதே சந்தேகத்துக்குரிய கேள்வி. அரசும், பல்கலைக் கழகங்களும், வல்லுநர் குழுவும் செய்யவேண்டிய ஒரு பணியைத் தனியொருவராய் நின்று சாதித்துள்ள திரு மணவையார்

அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆங்கில மொழியில் கணினித் துறைக்கென எத்தனையோ அகராதிகளும், சொற்களஞ்சியங்களும் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், இந்திய மொழிகளில் இதுவே முதலாவது நூலாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தமிழ்நெட் - 99 மாநாட்டின் தொடர்ச்சியாக கணித்தமிழ்ச் சொல்லாக்கத்துக்கென ஓர் உட்குழு அமைக்கப்பட்டது. தமிழ் மென்பொருள் உற்பத்தியாளர்களும் கணினித் தமிழறிஞர்களும் கலந்து கொண்ட இக்குழுக் கூட்டங்களில் தமிழ்ச் சொல் செயலி (Word Processor) களில் பயன்படுத்தக் கூடிய சொற்களைப் பற்றி விவாதங்கள் நடைபெற்றன. நூற்றுக்கு மேற்பட்ட சொற்கள் இறுதி செய்யப்பட்டு இணையத்திலும் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன. ஒட்டுமொத்தக் கணினி அறிவியலுக்கான சொல்லாக்க முயற்சிகள் தொடர வேண்டுமென முடிவெடுக்கப் பட்டது.

தமிழ்நெட்-99 மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை மேலெடுத்துச் செல்லும் முகமாக, வரும் 2000ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இலங்கையின் தலைநகர் கொழும்புவில் 'தமிழ் இணையம் 2000' மாநாடு கூட இருக்கிறது. அம் மாநாட்டில் விவாதிக்கப்பட இருக்கும் முக்கிய குறிக்கோள் களில் கணித் தமிழ்ச் சொல்லகராதியை உருவாக்கும் பணியும் ஒன்று என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற முயற்சி களுக்கு திரு மணவையாரின் இக் கலைச்சொல் களஞ்சிய அகராதி முன்னோடியாக இருந்து வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை. இணையத்தில் தமிழ் தகவல் தளங்களை நிறுவி யுள்ள அறிஞர்கள், நிறுவனங்கள் இச்சொல்லகராதி முழுமை யையும் இணையத் தளத்தில் இருத்தி உலகெங்கிலுமுள்ள கணித் தமிழறிஞர்களுக்கு ஒரு சொடுக்கில் கிடைக்கும் வண்ணம் செய்ய வேண்டும் என்பது என்னுடைய தனிப்பட்ட கோரிக்கை. தமிழ்நாடு அரசும் இதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அரசின் தலையீடு இருக்குமெனில் கணித் தமிழ்ச் சொல்லாக்கத்தைத் தரப்படுத்தும் பணி எளிதில் விரைவில் நிறைவேற வாய்ப்புண்டு. அதற்கு இந்நூல் அடிப்படையாய் அமையும்.

சென்னை-80, இவ்வண்
25-9-1999

மு. சிவலிங்கம்

காணிக்கை

இந்நூலை,

அறிவியல் தமிழ்ப் பணியாற்ற
என்னை இடையறாது ஊக்குவித்து,
தமிழமுதூட்டி, வளப்படுத்திய
என் பேராசிரியப் பெருமக்கள்
பல்கலைச் செல்வர்
பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி
சுந்தரனார், மொழிஞாயிறு
ஞா. தேவநேயப் பாவாணர்,
மகாவித்துவான் ச. தண்டபாணி
தேசிகர், என் தமிழ்ப் பணி
உலகளாவியதாக அமைய
முனைந்து வழிகாட்டிய
மறைத்திரு சேவியர்
தனி நாயக அடிகளார் ஆகியோரின்
இனிய நினைவுக்கு
இந்நூலைக்
காணிக்கையாக்குகிறேன்.

மணவை முஸ்தபா
ஆசிரியன்

A

AAAI : ஏஏஏஐ : அமெரிக்க செயற்கை நுண்ணறிவுச் சங்கம் என்பதைக் குறிக்கும் American Association for Artificial Intelligence என்பதன் குறும் பெயர். செயற்கை நுண்ணறிவை மேம்படுத்துவதற்கான தொழில்துறை அமைப்பு.

abacus : மணிச் சட்டம் : மணிகள் வரிசையாகக் கோக்கப்பட்ட கம்பிகள் பொருத்தப்பட்ட, எளிய கணக்குகளைச் செய்யப் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவி. இப்போதும் பல கீழ்த்திசை நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

abbreviated address : சுருங்கிய முகவரி முறை : முழு முகவரியைப் பயன்படுத்தும் முறையிலிருந்து மாறுபட்டது. இதில் முகவரியின் ஒரு பகுதி மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. இவ்வாறு குறுக்கப்பட்ட குறியீடு காரணமாக விரைவாக தகவல்களைக் கையாள இயலுகிறது.

ABC : ஏபிசி : 'Atanasoff-Berry Computer' எனப்படும் முதல் இலக்கவியல் கணினியின் குறும் பெயர். இதனை 1939இல் ஜான் அடனசோஃபும் அவரது உதவியாளர் கிளிப் போர்டு பெர்ரியும் உருவாக்கினர்.

abend : இயல்பற்ற முடிவு: இயல்புக்கு மாறான, முடித்தலுக்கு உரிய குறும் பெயர். பூஜ்யத்தினால் வகுத் தல் அல்லது ஓர் எண்ணோடு ஓர் எழுத்தைக் கூட்ட முயற்சித்தல் காரணமாக ஏற்படும் பிழையால், கட்டளைத் தொகுப்பு ஒன்றின் செயற்பாட்டை முன்கூட்டியே முடித்தல்.

abnormal terminations : இயல்பற்ற நிறுத்தம் : பூஜ்யத்தால் வகுத்தல், எண் அளவு மீறல் போன்ற பிழையின் விளைவாக ஒரு ஆணைத் தொடர் நிறுத்தப்படுதல்.

abort : கைவிடல் ; முறித்தல் : ஒரு முறை பிறழ்ந்த செயல், அல்லது தவறு நிகழும்பொழுது, ஒரு கட்டளைத் தொகுப்பை முடிவுக்குக் கொண்டு வரும் முறை.

abscissa : இடையச்சுத் தூரம் : ஒரு புள்ளியிலிருந்து நிலையச்சுக்குள்ள தூரம். ஒரு வரைபடம் புள்ளிவிவர அட்டவணையின் எக்ஸ் (x) அச்சு (y) அச்சுக்கோட்டுக்கு மாறுபட்டதாகும்.

absolute address : நேரடி முகவரி; தனி முகவரி; சரியான முகவரி; துல்லிய முகவரி; நிரந்தர முகவரி : நினைவுப் பகுதியின் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு நிரந்தரமாக வழங்கப்படும் முகவரி. 0000, 0001, 0002, 0003 ஆகிய முகவரிகள் கணினியின் நினைவிடத்தின் முதல் நான்கு இடங்களுக்கு ஒதுக்கப்படலாம். எந்திர முகவரி என்றும் அழைக்கப்படும்.

absolute coding : நேரடிக் குறியீட்டு முறை;தனிக் குறிமுறை : எந்திரக் கட்டளைகளையும் நிரந்தர முகவரிகளையும் பயன்படுத்தும் குறியீட்டு முறை. வேற்று வடிவத்துக்கு மாற்றாமல் நேரடியாக கணினியால் செயல் படுத்தப்படும். இம்முறை அடையாளக் குறியீட்டு முறையிலிருந்து மாறுபட்டது.

absolute coordinates : நேர் ஒருங்கிணைப்புகள் : ஒரு மைய அச்சின் தொடர்பாகக் குறியிடப்படும் ஒருங்கிணைப்புகள். சார்பு ஒருங்கிணைப்பு முறையின்படி முந்தைய ஒருங்கிணைப்புகளை ஒட்டி வருவதற்கு மாறானது.

absolute disk sectors : நேர் வட்டுப் பகுதி : ஒரு குறிப்பிட்ட எண்ணிடத்தில் உள்ள வட்டுப் பகுதி.

absolute movement : நிரந்தரப் பெயர்ச்சி : *தனி நுகர்வு திரையில் உள்ள ஒரு வடிவை ஒரு குறிப்பிட்ட எக்ஸ் - ஒய் ஒருங்கிணை அச்சுகளின் படி ஒரு புதிய இடத்துக்கு மாற்றுதல். இது சார்நிலைப் பெயர்ச்சியிலிருந்து மாறு பட்டது.*

absolute value : நேர் அளவு : *கூட்டல் அல்லது கழித்தல் குறியீடு இல்லாத எண் அளவு.*

absolute vector : நேர் அளவுச் சரம் : *கணினி வரைகலை முறையில் நேர் ஒருங்கிணைப்புகளுடன் வடிவமைக் கப்பட்ட ஒரு அளவுச் சரம்.*

abstract : சுருக்கம்; பொழிப்பு : *ஒரு ஆவணத்தினைப் பற்றிய சுருக்கமான விளக்கம்.*

AC : ஏசி : *மாற்று மின்விசையைக் குறிக்கும்* Alternating Current *என்பதன் குறும் பெயர். இவ்வகை மின்சாரமே இல்லம், பள்ளிகள், வணிக அமைப்புகளில் பயன்படுத்தப்படு கிறது.*

ACC : ஏசிசி : *ஆஸ்திரேலிய கணினி மாநாடு என்பதைக் குறிக்கும்* Australian Computer Conference *என்பதன் குறும்பெயர். ஆஸ்திரேலிய கணினிச் சங்கத்தின் ஆண்டு மாநாடு.*

accelerator : முடுக்கி; வேகப்படுத்தி: *ஒரு பணியை விரைவுபடுத்தும் முக்கிய இணைப்பு.*

acceptance test : ஏற்புச் சோதனை : *புதிய கணினி முறைமை ஒன்றின் திறன்களையும் செயல்பாட்டையும் விளக்குவதற்கான சோதனை. கணினி முறைமை செயலொழுங்கு நிலையில் உள்ளது என்பதை நுகர்வோர்க்கு உணர்த்த உற்பத்தியாளரால் பெரும்பாலும் இச்சோதனை நிகழ்த்தப்படு கிறது.*

access : அணுகல் : *விரும்பும் தகவலைக் கண்டறிய பொதுவாக தகவல்களைப் பெறுதல்.*

access arm : அணுகு கை; பெறுநிலைக் கரம் : *காந்த வட்டுக் கோப்பு சேமிப்பு அலகில் படித்தல் மற்றும் எழுதுதலுக்கான பொறியமைவை குறிப்பிட்ட நிலையால் பொருத்த உதவும் எந்திர உறுப்பு.*



அணுகு கை (Access arm)

access code : அணுகுக் குறியீடு : *ஒரு கணினி முறைமையில் இயக்குவோரைக் குறிக்கும் எழுத்துகள் அல்லது எண்களின் குழு.*

access control : அணுகுக் கட்டுப்பாடு : *அணுகுக் குறியீட்டைப் பயன்படுத்தும் செயல்முறை. இதன் மூலம் ஒரு கணினியை அங்கீகரிக்கப்பட்டவர் மட்டுமே பயன்படுத்தும் வகையில் கட்டுப்படுத்தப்படுகிறது.*

access control register : அணுகுக் கட்டுப்பாட்டுப் பதிவு : செயல்பட்டுக் கொண்டிருக்கும் இயக்கத்துக்கு தகவல் அணுகலைக் கொடுக்கும் எந்திரப் பதிவு.

access light : அணுகு ஒளி : கணினி ஒரு வட்டில் எழுதும் போதோ அல்லது படிக்கும் போதோ கணினி முகப்பில் ஒளியின் மூலம் சமிக்ஞை அளிப்பது. வட்டு இயக்கியில் கூட இது சில சமயம் இருக்கலாம்.

access limits : அணுகு எல்லைகள் : பாதுகாக்கப்பட்ட தகவல் கோப்புகளின் தொகுதியைப் படிக்கவோ, பயன்படுத்தவோ அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை.

access mechanism : அணுகு பொறியமைவு: காந்த வட்டுச் சேமிப்பக அலகில் படித்தல் மற்றும் எழுதுதல் முனையை உரிய தடத்தில் நிறுத்தும் உறுப்பு.

access method : அணுகு முறை : சேமிப்பு மற்றும் உள்ளீட்டு/வெளியீட்டுப் பொறிகளுக்கு இடையில் தகவல் பரிமாற்றத்துக்கு இயக்குவோர் பயன்படுத்தக் கூடிய பராமரிப்பு உத்திகளில் ஏதாவது ஒன்று.

access monitoring : அணுகு மேற்பார்வை : சரியான அனுமதிச் சொல்லைக் கொடுப்பதற்கு ஒரு சில வாய்ப்புகளை மட்டுமே கொடுக்கும் அணுகுக் கட்டுபாட்டு முறை.

access permission : அணுகல் அனுமதி : அணுகுவதற்கு முந்தைய பாதுகாப்பு விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்பட்டு ஒரு ஆணைத் தொடரை இயக்க அனுமதித்தல்.

access protocol : அணுகு வரைமுறை: தடங்களில் சமிக்ஞைகளை அனுப்புவதற்கு ஒரு கட்டமைப்பில் உள்ள சாதனங்கள் பயன்படுத்தும் போக்குவரத்து விதிகள். எதைப் பயன்படுத்தினாலும், ஒரு நேரத்தில் ஓர் இடத்திலிருந்து மட்டுமே அனுப்பப்பட வேண்டும். இல்லையேல், தகவல் தவறாகும் அல்லது தொலைந்து போகும்.

access speed : அணுகு வேகம் : முதன்மை அல்லது துணை நினைவகத்திலிருந்து தகவல்கள் கேட்கப்பட்டதிலிருந்து அவை எடுக்கப்பட்டு, பயன்படுத்த ஆகும் நேரம்.

access time : அணுகு நேரம் : சேமிப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட தகவலைக் கண்டறிந்து, வெளியீட்டுக்கு வழங்குவதற்கான நேரம் அல்லது தகவல் ஒன்றைச் சேமிப்பு இடத்தைக் கண்டறிந்து வழங்குவதற்கான நேரம்.

access vector : அணுகு ஆரம் : தேவையான தகவல்களைக் கண்டுபிடிக்க உதவும் ஒரு தகவல்.

accessory : துணையுறுப்பு: ஃபிளாப்பி எனும் நெகிழ்வட்டு இயக்கி, அச்சுப் பொறி போன்ற ஒரு வெளிப்புறச் சாதனம்.

account number : கணக்கு எண் : ஒரு கணினி மையத்தில் கணினி பயன்படுத்தும் ஒருவருக்கோ அல்லது பலருக்கோ அளிக்கப்படும் எண். அந்த எண் பாதுகாப்பு மற்றும் கட்டணம் கணக்கிடும் நோக்கத்துக்காகப் பயன்படும். அனுமதி சொற்களையும் (Passwords) கணக்கு எண்களாகப் பயன்படுத்தலாம் அல்லது அனுமதிச் சொற்களுடன் கணக்கு எண்ணும் தரப்படலாம்.

accounting information system : கணக்கிடும் தகவல் அமைப்பு : ஒரு நிறுவனத்தின் பண ஓட்டம் போன்ற வணிகப் புழக்கங்களைப் பதிவு

செய்து, நிதி அறிக்கைகளை அளிக்கும் தகவல் அமைப்பு. திட்டமிடல், வணிக இயக்கங்கள் மற்றும் சட்ட முறையான, வரலாற்று பதிவுகளை வைத்திருப்பதற்கும் தேவையான தகவலை இது வழங்குகிறது.

accounting machine : கணக்குப் பொறி : துளையிட்ட அட்டைகளையோ காந்தப்பட்டித் தகடுகளையோ பயன்படுத்தி விலைப் பட்டியல்கள் தயாரித்து, கணிப்புகளைச் செய்யும் தொடக்க கால அலுவலக எந்திரங்கள்.

accounting systems : கணக்கிடும் அமைப்புகள் : நிதி சார்ந்த தகவல்களை அளவிட, விளக்க, ஆராய மற்றும் பரப்ப முடிவெடுப்பவர்களை அனுமதிக்கும் கணினி அமைப்புகள்.

accumulator : தொகுப்பி; திரட்டகம் : தொடர் கணக்கீடு அல்லது நடவடிக்கைகளின்போது சேமிப்பிடமாகப் பயன்படும் பதிவு. இங்கு கணக்கு அல்லது தருக்கச் செயல் முறையின் விளைவுகள் தற்காலிகமாகச் சேமிக்கப்படுகின்றன.

accuracy : துல்லியம்.

accurate : துல்லியமான.

ACD : ஏசிடி : Automatic Call Distributor என்பதன் சுருக்கம். வரிசைமுறை அமைப்பில் பயன்படுவது.

ACF : ஏசிஎஃப் : Advanced Communication Facility என்பதன் சுருக்கம்.

ACH : ஏசிஎச் : Association for Computers and the Humanities என்பதன் குறும் பெயர். மொழி, இலக்கியம், வரலாறு, மானிடவியல், சமூகவியல் இவற்றில் கணினி ஆய்வுகளையும் மற்றும் கலை, இசை, நடனம் ஆகியவற்றைப் படைக்கவும் கற்கவும் கணினியைப் பயன்படுத்துபவரை ஊக்குவிக்கும் பன்னாட்டுச் சங்கம்.

ACI : ஏசிஐ : Automatic Car Identification என்பதன் குறும்பெயர். தானியக்க முறையில் ரயில் பெட்டிகளைஅறிதலைக் குறிக்கும். இரயில் பாதை நிறுவனங்கள் இரயில் பெட்டிகளை அறிவதற்குப் பயன்படுத்தும் தானியக்க முறை.

ACIA : ஏசிஐஏ : Asynchronous Communications Interface Adapter என்பதன் குறும் பெயர். செய்தித் தகவல் தொடர்பு இடை முகங்களில் பயன்படுத்தப்படும் ஒரு ஒருங்கிணைந்த மின்சுற்றுச் சிப்பு.

ACK : ஏசிகே; ஏற்பு அறிவிப்பு : Acknowledge என்பதன் குறும்பெயர். தகவல் தொகுப்பு ஒன்று சரியாகப் பெறப்பட்டுள்ளது என்பதை, அதனை அனுப்பிய முனையத்துக்கு, பெற்ற முனையம் திருப்பி அனுப்புவது. இதற்கு எதிர்மறையான குறும் பெயர் என்ஏகே (NAK).

acknowledge : ஒப்பு; ஏற்பு : ஒரு பணி முடிந்துவிட்டது என்பதையும், அடுத்த பணிக்கு வன்பொருள் தயார் என்பதையும் குறிப்பிடும் உள்ளீடு/வெளியீடு சமிக்ஞை.

acknowledge character : ஒப்பு எழுத்து : அனுப்பப்பட்ட தகவல் சரியாகப் பெறப்பட்டது என்பதைக் குறிப்பிடும் தகவல் தொடர்பு கட்டுப் பாட்டு எழுத்து.

acknowledgement : ஒப்பம் : தகவல் பெறும் சாதனத்திலிருந்து அனுப்பும் சாதனத்திற்கு ஒப்ப எழுத்தை அனுப்புதல்.

ACM : ஏசிஎம்:கணினி எந்திரங்களுக்கான சங்கம் : Association for computing Machinery என்பதன் குறும்பெயர்.

கணினி வல்லுநர்களுக்கான தொழில் திறனையும் தகுதியையும் வளர்க்கப் பாடுபடும் உலகின் மிகப் பெரிய கல்வி மற்றும் அறிவியல் சங்கம். 1947இல் உருவாக்கப்பட்டது. அவ்வப்போது மாணவர்கள் கல்வி யாளர்கள் தொழில் செய்வோர் இடையே நடைபெறும் விவாதங் களைக் கொண்ட மதிப்பு மிக்க இதழ் களை வெளியிட்டும் எண்ணற்ற கருத்தரங்குகளை நடத்தியும் தொழில் நுட்பத் திறனுக்காகப் புகழ் பெற்றது.

ACMST : ஏசிஎம்எஸ்டி : Association for Computers in Mathematics and Science Teaching என்பதன் முன்னெழுத்துக் குறும்பெயர். கணிதம் மற்றும் அறிவியல் கல்வியில் கணினிகள் சங்கம். இது கல்வியில் கணினியைப் பயன்படுத்துவதில் ஆர்வம் கொண்டுள்ள கல்லூரி மற்றும் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான தொழில் முறை அமைப்பு.

acoustic coupler : ஒலி இணைப்பி; ஒலி இணைப்புச் சாதனம் : ரப்பர் கோப்பைகள் வழியாக தொலைபேசியின் கைக்கொள் பகுதியுடன் இணைக்கப்படும் மோடெம். இது கணினி தரும் சமிக்ஞைகளை தொலைபேசியின் வாய்பேசி உணரக் கூடிய ஓசையாக மாற்றுகிறது. தொலை பேசி ஓசைகளை கணினி படிக்கக் கூடிய மின்சார சமிக்ஞைகளாக மாற்றுகிறது. இவை ஒலி மோடெம் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை எந்த வகை தொலைபேசியுடனும் இணையக் கூடியவை. நேரடி இணைப்பு மோடெம்களை ஒரு தொலைபேசி அமைப்புடன் இணைக்கத் தொகுப்பியல் தொலைபேசி இணைப்புத் தேவை. ஒரு விநாடிக்கு 1,200 துண்மி என்பது இதன் தகவல் பரிமாற்ற வேகம்.

acoustic delay line : ஒலி அடிப் படையின் தாமதத் தடம்.

acoustic memory : ஒலி நினைவகம் : தொடர்ச்சியாக ஒரு சமிக்ஞையை மீண்டும் மீண்டும் உருவாக்குவதன் மூலம் தகவலைச் சேமிக்கும் இடம்.

acoustic modem : ஒலி அதிர் விணக்க நீக்கி; ஒலி மோடெம் : இரும சமிக் ஞைகளை ஒலி அலை வரிசைகளாக மாற்றுவதன் மூலம் தகவல்களை அனுப்பிப் பெறுகிறது.

acoustic sound enclosure : ஒலித் தடுப்பு உறை : ஓர் அச்சுப் பொறி அல்லது பிற எந்திரங்களில் பொருத்தி ஓசையை மட்டுப்படுத்தும் சாதனம்.

ACPA : ஏசிபிஏ : கணினி ஆணைத் தொகுப்பு பகுப்பாய்வாளர் சங்கம் எனப் பொருள்படும். Association of Computer Programmer and Analysts என்பதன் குறும்பெயர். கணினித் தொழிலில் ஈடுபட்டிருப்போரது பன்னாட்டுச் சங்கம். தொழில் நுணுக்கப் பிரச்சினைகளில் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு இடமளிக்கிறது. மற்றும் தொழில் நுணுக்கத் திறனை வளர்த்துக் கொள்ள கருத்தரங்குகள், கருத்துப் பட்டறைகள், மாநாடுகள் மூலம் வாய்ப்பளிக்கிறது. தேசிய அளவிலும் பகுதி அளவிலும் தகவல்கள் நிறைந்த துறைசார் வெளியீடுகளை வழங்குகிறது. மற்றப் பிரிவுகளைச் சேர்ந்த தொழில் நுணுக்கத் திறனாளருடன் கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கிறது.

action : செயல் : குறிப்பிட்ட சூழலில் வெளியாகும் செயற்பாடு.

action entry : செயல் பதிவு.

action oriented management report : செயல்சார்ந்த மேலாண்மை குறிப்புரை : சிறப்புக் கவனம் தேவைப்படுகின்ற

அசாதாரண சூழ்நிலைகள் குறித்து நிர்வாகத்தினை விழிப்படையச் செய்யும் ஒரு சிறப்புக் குறிப்புரை.

action statement : செயல் அறிக்கை : சில செயல்களை மேற் கொள்ளும் படி கணினிக்குத் தரப்படும் அறிக்கை.

action stub : செயலிடம்.

activation : இயக்கல் : ஒரு செயல் முறையை இயங்கச் செய்தல்.

activation record : இயக்கப் பதிவு : இயங்க வைத்தல் தொடர்பான தகவலைக் கொண்ட உள்ளமைப்பு தகவல் அமைப்பு முறை.

activation stack : இயக்க இருப்பு : நிகழ்வு இயக்கி உட்பட அனைத்து இயக்கிகளுக்குமான ஒரு உட்பகுதி தகவல் அமைப்பு.

active cell : செயற்படும் சிற்றிடம்; இயங்கு கலன் : மின்னணுவியல் விரிதாளில், தளப் பரப்பில் சுட்டியினால் உணர்த்தப்படும் கட்டம்.

active data dictionary : இயங்கும் தகவல் அகராதி : ஒரு நிறுவனத்தின் தகவல் தளத்தை அணுகுவதற்கு டிபிஎம்எஸ்ஸை பயன்படுத்துபவர்கள் மற்றும் பயன்பாடு ஆணைத் தொடர்கள் அணுகும்போது தர தகவல் பொருள் வரையறைகளை தானாகவே செயற்படுத்தும் தகவல் அகராதி.

active device : இயங்கு உறுப்பு: மின்னோட்டம் மின்னழுத்தம் பெருக்குதல் போன்ற செயல் திறனுடைய மும்முனையம் போன்ற ஒரு மின்னணுச் சாதனம்.

active element : இயங்கு பொருள்: சமிக்ஞையில் இயங்கும் ஒரு மின்னணு மின்சுற்று.

active file : நடப்புக் கோப்பு; பயன்படும் கோப்பு : தற்பொழுது பயன்படுத்தப்படும் கோப்பு.

active partition : இயங்கும் பாகம் : வன்பொருளில் மின்சக்தி வந்தவுடன் பயன்படுத்தப்படும் இயக்கு முறையைக் கொண்ட ஒரு கணினி மொழி. நிலைவட்டின் பகுதி.

active programme : நடப்பு ஆணைத் தொடர் : நடப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் ஆணைத் தொடர்.

active star : இயங்கும் நட்சத்திரம்: வெளியிலுள்ள முனைகள் ஒரு தனி மைய முனையுடன் இணையும் ஒரு இணைய கட்டமைப்பு முறை.

active window : இயங்கும் சாளரம் : மைக்ரோ சாஃப்ட் விண்டோஸ் தொகுப்பில் இயங்கும் திறந்த சாளரம்.

activity : நடவடிக்கை; செயற்பாடு: பணியின் பகுதிகளில் ஒரு நடவடிக்கை.

activity ratio : செயல் விகிதம் : கோப்பு ஒன்று கையாளப்படும் பொழுது நடவடிக்கைகளுக்கு ஆட்படும் ஆவணங்களுக்கும் கோப்பில் உள்ள ஆவணங்களுக்கும் இடையிலான விகிதம்.

actual argument : மெய்த் தொகை : ஒரு துணை ஆணைத் தொடரை அழைக்கும் சொற்றொடர், தொகைப் பட்டியலில் அனுப்பப் படும் மெய்த் தொகை.

actual decimal point : உண்மை பதின்மப் புள்ளி : ஓர் உள்ளீட்டுத் தகவல் பொருளில் சேர்க்கப்படும் உண்மையாக இடம் பெறும் பதின்மப் புள்ளி.

actuate : உந்திவிடு.

actuator : செயல் ஊக்கி தொகுப்பி: காந்த வட்டில் விருப்பப்படும் இடத்துக்கு படித்தல், எழுதுதல், முனையை நகர்த்தும் இயக்கப் பொறியமைப்பு.



செயல் ஊக்கித் தொகுப்பி (Actuater)

ACU : ஏசியு : தன்னியக்கத் தொலைபேசி அழைப்புப் பிரிவு எனப் பொருள்படும் Automatic Calling Unit என்பதன் குறும்பெயர். இது தொலைபேசி இணைப்பில் அழைப்புகளை வணிக எந்திரம் ஒன்று அனுப்ப அனுமதிக்கிறது.

ada : அடா : ஒரு கணினி மொழி. அமெரிக்க இராணுவத்துறை உருவாக்கிய உயர்திறன் ஆணைத் தொகை மொழி. உலகின் முதலாவது பெண் ஆணைத் தொகை வரைவாளரான அடா அகஸ்டா லவ்லேஸ் நினைவாக 'அடா' எனப் பெயரிடப் பட்டது.

Ada Lovelace : அடா லவ்லேஸ் : சார்லஸ் பாபேஜுடன் பணியாற்றிய பெண். அப்பெண் பைரன் பிரபுவின்மகள்; கணிதவியலார். உலகின் முதல் ஆணைத் தொடர் வரைவாளர் என்ற பெருமையை இவர் பெறுகிறார்.

ADAPSO : ஏடாப்சோ : Association of Data Processing Service Organization என்பதன் குறும்பெயர். தகவல் கையாளும் சேவை நிறுவனச் சங்கங்களின் கூட்டமைப்பின் பெயர். இந்த அமைப்பு ஆண்டுக்கொரு முறை உறுப்பினர்களின் பெயர்களை அகர வரிசையில் தொகுப்பாக வெளியிடுகிறது.

adapter boards : பொருத்துப் பலகைகள்; இயைபுப் பலகைகள் : அச்சிடப்பட்ட மின் இணைப்புப் பலகைகள். இவை ஒரு முறைமைப் பலகையைச் சுற்று உள்ளீட்டு, வெளியீட்டுக் கருவிகளுடன் இணைக்கிறது அல்லது ஒரு முறைமையுடன் சிறப்பான பணிகளைச் சேர்க்கிறது.

adapter cards : பொருத்து அட்டைகள்; இயைபு அட்டைகள் : இயைபுப் பலகைகளுக்கான மாற்றுப் பெயர்.

adapter ROM : நினைவகம் ஏற்பி; இயைபு நினைவகம் : ஏற்புச் சாதனத்தைக் கட்டுப்படுத்தும் குறியீட்டைக் கொண்ட ஏற்பு நினைவகம். இது கணினி அமைப்பின் இயக்கத் திறனை அதிகரிக்கும். பல நிலை வட்டு இயக்கிகளில் ஏற்பு ரோம்கள் உள்ளன. எஸ்சிஎஸ்ஐ ஹோஸ்டு ஏற்பு கூடுதல் நினைவகம், வெளிப்

புறச்சாதனங்கள் அல்லது கூடுதல் வரிசை அல்லது இணைத்துறை ஆகியவைகள் ஏற்புச் சாதனங்களில் அடங்கும்.

adapter : ஏற்பி; இயைபி;பொருத்தி: பல்வேறு கருவிகளுக்கிடையே இயைபை அனுமதிக்கும் கருவிப் பகுதி.



பொருத்தி
(Adapter)

adaptive routing : இயைபு வழியமைப்பு : மாற்று வழியமைப்புக்கு மாறானது. இதில் ஒரு கூட்டமைப்பு மேலாண்மை, அமைப்புக் கட்டத்தில் உள்ள ஒவ்வொரு கம்பியின் போக்குவரத்தைக் கண்காணித்து எந்த வழித்தடத்தினைப் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்யப்படும்.

adaptive system : இயைபு அமைப்பு; தகவமைப்பு முறைமை: கற்கும் திறன், அதன் நிலையை மாற்றிக் கொள்ளுதல் அல்லது ஒரு தூண்டலுக்கு எதிர்வினையாற்றல் போன்றவற்றைக் காட்டும் கணினி அமைப்பு. அதன் சூழ்நிலையின் மாற்றங்களுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் கணினி அமைப்பு.

A-D converter : அளவியல் - எண்ணியல் மாற்றி. அலைவுமுறைத் தகவலை இலக்கமுறைத் தகவலாக மாற்றும் சாதனம்.

addend : கூட்டெண் : இரண்டு எண்களைக் கூட்டும்போது முதல் எண் கூட்டெண் என்றழைக்கப்படும்.

adder : கூட்டி : இரண்டு இரும எண்களைக் கூட்டப் பயன்படும் மின்னுறுப்பு.

adder unit : கூட்டி அலகு : இரண்டு பல இலக்க இரும எண்களை ஏற்று அவற்றைக் கூட்டும் திறனுள்ள ஒரு மின்னணுச் சாதனம்.

add-in : கூடுதல் இணைப்பு : கணினியில் ஏற்கெனவே பொருத்தப்பட்ட அச்சிடப்பட்ட இணைப்புப் பலகையில் பொருத்தப்படக் கூடிய மின்னணு உறுப்பு. நுண் கணினியில் உள்ள காலியறைகளில் பொருத்தப்படக் கூடிய நினைவுச் சிப்புகள் ஓர் உதாரணம்.

adding wheel : கூட்டல் சக்கரம் : பற்கள் உள்ள பல்லிணை (கியர்). இது எந்திரவியல் முறையில் கூட்டல் நடவடிக்கையை அனுமதிக்கிறது. பாஸ்கல் கணக்கிடு பொறியில் பயன்படுத்தப்படுகிறது.

addition : கூட்டல் : இரண்டு மதிப்புகளைக் கூட்டுதல்.

addition record : கூட்டிய ஏடு : கோப்பு ஒன்றினைக் கையாளும் பொழுது புதிய ஏட்டை உருவாக்குவதால் கிடைக்கும் ஆவணம்.

add-on : திறனேற்றி : கணினி அமைவு ஒன்றுடன் அதன் கட்டமைவு அல்லது செயல் திறனை மேம்படுத்த, அதன் சேமிப்புத் திறனை அதிகரிக்கப் பொருத்தப்படும் துணைக் கருவி அல்லது கருவி.

add time : கூட்டல் நேரம் : ஒரு கூட்டலைச் செய்யக் கணினிக்குத்

தேவைப்படும் நேரம். இதில் சேமிப்பிலிருந்து தகவல்களைப் பெறுவதற்கும் மீண்டும் அதனை சேமிப்பகத்துக்கு அனுப்புவதற்கும் தேவைப்படும் நேரம் அடங்காது.

address : முகவெண்: சேமிப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் குறிப்பிடுகிற அடையாள எண் அல்லது பெயர்.

address bus : முகவெண் தடம் : முகவரித் தகவலை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு எடுத்துச் செல்லும் மின் தடம்.

address decoder : முகவெண் விரிப்பி; முகவரிக் கொணரி : எழுத்துக் குறியீட்டில் தரப்படும் முகவெண்ணை விரித்துப் பெற உதவும் இணைப்பு.

address format : முகவெண் அமைப்பு: முகவெண்ணைக் குறிப்பிடும் முறை.

addressing : முகவெண்ணிடல் : (1) குறிப்பிட்ட உத்திகள் மூலம் தேவையான தகவல்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணல். (2) தகவல் அனுப்பும் கணினி மற்றொரு குறிப்பிட்ட முனையத்துக்கான தகவல் தன்னிடம் இருப்பதைக் குறிப்பிடும் தகவல் தொடர்பு கட்டுப்பாட்டு முறை.

address management : முகவெண் மேலாண்மை : முகவரி எண்களைக் கொண்ட தகவல் தளம் அமைக்க உதவும் மென்பொருள்.

address mapping : முகவெண் காணல் : ஒரு விவர சேமிப்பு இருப்பிடத்தின் சரியான முகவரி எண்ணைக் கண்டுபிடித்தல்.

address mode : முகவெண் முறை : ஒரு ஆணை, நினைவகத்தை எவ்வாறு தொடர்பு கொள்கிறது என்பதற்கான முறை. மறைமுக முகவெண் வேறொரு முகவெண்ணைக் குறிப்பிடுகிறது. செயலாக்கம் செய்யும் போது உண்மையான, முழு முகவெண்களைக் கண்டுபிடிக்க, தேவையான தகவல்களின் இருப்பிடம் காணப்படும்.

addressable cursor : முகவெண் சுட்டு; முகவரி எண் அடையாள அம்பு: திரையில் உள்ள எந்த வரிசை அல்லது பத்தியையும் நகர்த்தக் கூடிய வகையில் ஆணைத் தொடர் அமைக்கப் பட்ட திரைச் சுட்டு.

address modification : முகவெண் திருத்தம்; முகவெண் மாற்றம் : கணினி ஒன்றினால் ஒரு குறிப்பிட்ட வழியில் முகவெண்ணை மாற்றுவதற்கான நடவடிக்கை.

address register : முகவெண் பதிவேடு : தற்பொழுது நிறைவேற்றப் படும் ஆணையின் முகவெண் உள்ள பதிவு.

address space : முகவெண் களம்; முகவெண் தொகுதி: கணினி ஒன்றைப் பயன்படுத்துவோருக்குக் கிடைக்கக் கூடிய முகவெண்களின் முழுத் தொகுப்பு.

address translation : முகவெண் பெயர்ப்பு; முகவெண் மாற்றம் : உள் நினைவில் கோக்கப் பட வேண்டிய, அல்லது வேறிடத்துக்கு மாற்றப்பட வேண்டிய முகவெண்ணுக்கு ஏற்கெனவே நினைவில் உள்ள தகவலின் அல்லது ஆணையின் முகவெண்ணை மாற்றும் நடைமுறை.

adjacent matrix : அண்டை அணி; அருகு எழுத்துரு.

ad hoc inquiries : தற்காலிக வேண்டுகோள்கள் : தனிப்பட்ட, பட்டியலிடப்படாத, சூழ்நிலைக்கேற்ற தகவல் வேண்டுகோள்கள்.

ad hoc query : தற்காலிக வினா ; தற்காலிகத் தேடல் : கோப்பில் எந்த இடத்திலாவது இருக்கும் தகவலை திரும்பப் பெறுவதற்கான திறன்.

add-subtract time : கூட்டு - கழிப்பு நேரம்: இரண்டு எண்களைக் கூட்டவும், கழிக்கவும் எடுத்துக் கொள்ளப்படும் நேரம்.

administrative data processing : நிர்வாகத் தகவல்கள் செயலாக்கம் : நிர்வாகம் அல்லது நிறுவனம் ஒன்றின் ஆணை தொடர்பான தகவல்களைச் செய்முறைப்படுத்தும் துறையாகும்.

ADP : ஏடிபி : Automatic data processing என்பதன் குறும்பெயர். தானியக்க முறையில் தகவல்களைச் செய்முறைப்படுத்தும் பணி நிகழ்கிறது.

advanced BASIC : மேம்பட்ட பேசிக் மொழி : துவக்க 'பேசிக்' ஆணைத் தொடரை விட மேம்படுத்தப்பட்ட வகையில் அதனைச் செய்முறைப் படுத்துதல்.

AEDS : ஏஇடிஎஸ் : Association for Educational Data System கல்வித் தகவல் முறைமைகளுக்கான சங்கத்தின் குறும்பெயர். கல்வியின் எல்லா நிலைகளிலும் ஆசிரியர் மற்றும் தகவல் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சேவை செய்யும் லாப நோக்கமற்ற தனியார் நிறுவனம். நவீனக் கல்விக்கும் நவீனத் தொழில் நுணுக்கத்திற்கும் இடையிலான உறவைப் பற்றிய கருத்துகளை தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ள ஒரு அரங்கத்தை வழங்குகிறது. ஆண்டுக்கொருமுறை மாநாடு, தேசிய, வட்டார, உள்ளூர் பயிலரங்குகளை நடத்துகிறது. மேனிலைப் பள்ளி மாணவர்களுக்காகக் கணினி செயல் முறைப் போட்டியொன்றை நடத்துகிறது. காலாண்டு அறிக்கை சஞ்சிகை ஆகியவைகளை வெளியிடுகிறது.

AFCET : ஏஎஃப்சிஇடி : Association Francaise pour la Cybernetique Economique et Technique என்பதன் குறும்பெயர்.

AFIPS : ஏஎஃப்ஐபிஎஸ் : American Federation of Information Process Societies என்பதன் குறும்பெயர். தகவல்களைக் கையாளும் சங்கங்களின் அமெரிக்கக் கூட்டமைப்பின் குறும் பெயர்.

AI : ஏஐ : Artificial Intelligence என்பதன் குறும்பெயர். செயற்கை நுண்ணறிவு. இது கணினி அறிவியலின் ஒரு கிளையாகும். அது மனிதர்களைப் போல கணினிகளைச் சிந்திக்கவைக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது. இந்நோக்கங்களுக்காக மனிதப் பகுப்பாய்வு குறித்து பெருக ஆய்வுகள் நடந்துள்ளன.

aiken, Howard Hathaway : (1900-1973) அய்க்கன் ஹோவர்ட் ஹாத்வாய் : *(1900-1973) 1937-க்கும் 1944-க்கும்* இடைப்பட்ட காலத்தில் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் தானியங்கு தொடர்முறைக் கட்டுப்பாட்டு கணக்கிடுவான் எனும் முதல் மின்னியந்திரக் கணினியை உருவாக்கி வடிவமைத்த வல்லுநர்கள் குழுவின் தலைவர்.

aircraft simulator : வானூர்தி மாதிரியமைப்பு : வானூர்தி விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கும் கணினி கட்டுப்பாட்டுச் சாதனம். நவீன ஜெட் வானூர்தி விமானி அறையில் உள்ள கருவிகள் அனைத்தும் இதில் இருக்கும். உண்மையான விமானத்தில் இருப்பது போன்ற சூழ்நிலையை உருவாக்கி மனம் வியக்கும்

வரைகலைகள் உருவாக்கப்படும். உண்மையான விமானத்தில் போன்றே இவற்றிலும் பயிலலாம்.

airline reservation system : வானூர்தி முன்பதிவு முறைமை : நேரடிப் பயன்பாட்டு அணுகல் கணினித் தொடர்பு முறை. இம்முறையில், வானூர்திகளின் இருக்கைகள் நிலை, வானூர்தி பறக்கும் நேர வரிசைகள், மற்றும் வானூர்திப் பணிகளை நடத்தத் தேவையான தகவல்கள், அந்நேரம் வரையிலான தகவல் கோப்புகளைப் பராமரித்தல், கோரல்களுக்கு விநாடிகளுக்கு குறைவான நேரத்தில் பதிலளித்தல், முதன்மைக் கணினியிலிருந்து தொலை தூரத்தில் உள்ள பயணச்சீட்டு முகவர்களின் கேள்விகளுக்கு உடனடியாகப் பதிலளித்தல் ஆகியவற்றுக்கு கணினி பயன்படுத்தப்படுகிறது.

AISP : ஏஐஎஸ்பி : தகவல் அமைவுத் தொழில் நுட்பவியலாளர் சங்கம் எனப் பொருள்படும். Association of Information Systems Professionals என்பதன் குறும்பெயர். தகவல் அமைவுகளின் எல்லா அம்சங்களுடன் தொடர்புடைய தொழில் நுட்பவியலாளர் சங்கம். 1972இல் உருவாக்கப்பட்டது. இதன் கிளைகள் உலகெங்கும் உள்ளன.

AL : தொகுப்பு மொழி.

alert box : எச்சரிக்கும் பெட்டி : ஒரு திரைக்காட்சி சிறிய பலகணி போன்று

எச்சரிக்கும் பெட்டி
(Alert box)

இருக்கும். பயனாளரின் அடுத்த இயக்கம் தவறானதாக இருந்தால் இது எச்சரிக்கும். சுட்டுப் பொறி (மவுஸ்) பொத்தானை அழுத்தியோ அல்லது விசை மூலம் ஆணை கொடுத்தோ இதற்குப் பதில் தரப்படும்.

alert messages : எச்சரிக்கைச் செய்திகள் : செய்யப்படும் இயக்கம் தவறானது அல்லது இயலாதது என்பதை உணர்த்தும் செய்திகள்.

algebra : அல்ஜீப்ரா ; இயற்கணிதம் : ஒரு வகைக் கணிதம். இதில் எழுத்துகள் எண்ணிக்கை அலகுகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எண் கணித விதிகளின்படி இம்முறை கையாளப்படுகிறது.

algebra of logic : தருக்க முறை அல்ஜீப்ரா ; தருக்க முறை இயற்கணிதம் : இதில் தருக்க முறை உறவுகள் இயற்கணித அல்ஜீப்ரா சூத்திரங்களாக வெளியிடப்படுகின்றன. ஜார்ஜ் பூலே இதனை அறிமுகப்படுத்தினார்.

ALGOL : அல்கோல் : அல்கோரித்மிக் மொழி என்பதன் குறும்பெயர். பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான கணித முறைகளைச் செய்யப் பயன்படும் சர்வதேச உயர்நிலை கணினி மொழி.

algorithm : கணிமுறை ; நெறிமுறை: ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடைமுறை அல்லது முழுமையாக வரையறுக்கப்பட்ட குழப்பமற்ற விதிகள்.

algorithmic language : கணி முறை மொழி; நெறிமுறை மொழி : அல்கோரிதம்களை வெளியிட வடிவமைக்கப்பட்ட மொழி.

alias : மாற்றுப் பெயர்; மறு பெயர்; புனை பெயர் :ஒரு ஆணைத் தொகை

மற்றும் ஆணையைக் குறிப்பிட பயனாளர் வழங்கும் பெயர்.

ஏற்பற்ற தோற்ற மாறுபாடு (Aliasing)

aliasing : ஏற்பற்ற தோற்ற மாறுபாடு : *கணினி உருவாக்கிய படிமங்களில் ஏற்படக்கூடிய விரும்பத்தகாத தோற்ற மாறுபாடுகள். இத்தோற்ற மாறுபாடுகளில் பொதுவான விளைவு படிமத்தின் எல்லைகளில் தோன்றும் ஒழுங்கற்ற கோடுகளாகும்.*

aligning disk : இயைவு வட்டு.

aligning edge : ஒழுங்கமை விளிம்பு : *வடிவத்தின் முன் விளிம்புடன் இணைந்து ஓர் ஆவணத்தை நிலைப்படுத்தி கருவி மூலம் நுண்ணாய்வு செய்ய உதவும் ஒப்பு விளிம்பு.*

alignment : இயைவு நிலை : *கருவியின் எந்திர அமைவிற்கு எந்திரம் முறையாக இயங்கப் பிழை பொறுத்தல் நிலைகளைச் சரி செய்தல்.*

allocation : ஒதுக்கீடு : *ஆணைகள் தகவல்களுக்காக கணினி சேமிப்பகப் பகுதிகளை ஒதுக்கீடு செய்யும் முறை. சில சமயங்களில் ஆணைத் தொகை வகுப்போர் அதனைச் செய்கிறார்கள். துணைத் தொகை ஒன்றினால் தானியக்க முறையிலும் அதனைச் செய்வதுண்டு.*

all points addressable : அனைத்துப் புள்ளி முகவெண்ணிடல் : *ஒரு ஆணைத் தொடரில் திரையில் உள்ள ஒவ்வொரு படப் புள்ளியையும் தனித் தனியாக முகவெண்ணிடக் கூடிய ஒரு வரைகலை முறை.*

ALOHA : அலோஹா : *செயற்கைக் கோள் தகவல் தொடர்புகளில் ஒரு முறை வடிவாய் அமெரிக்காவில் முதன் முதலில் பயன்படுத்தப் பட்டது.*

alphabetical order : அகர வரிசை: *ஆங்கிலத்தில் ஏ முதல் இசட் வரை.*

alphabetic : எழுத்துக் கோவை : *எழுத்துகள் மற்றும் சிறப்புக் குறியீடுகளைக் கொண்ட தகவல்கள்.*

alphabetic string : எழுத்துக் கோவை; எழுத்துச் சரம்: *எழுத்துகளின் தொகுதிகளைக் கொண்ட ஒரு கோவை.*

alpha channel : எழுத்து வழித் தடம் : *32 துண்மி வண்ணக் கணினி அமைப்பில் கூடுதல் 8 துண்மி தகவல் வழித் தடத்தைக் குறிக்கும் ஆப்பிள் கணினிச் சொல். இது படப் புள்ளிகளின் தெளிவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பல ஒளிக்காட்சி மாற்றங்களுக்கு வழி வகுக்கிறது.*

alpha micro systems : எழுத்து நுண் அமைப்புகள் : *ஓர் உயர்முனை நுண் கணினி. சிறு கணினி என்றும் வகைப்படுத்தலாம்.*

alphamosaic : எழுத்துக் கோலம்: *மிகக் குறைந்த தெளிவு கொண்ட காட்சி தொழில் நுட்பம். அஸ்கியின் மேல் பகுதியைக் கொண்ட அடிப்படை வரைகலை எழுத்துகளை மட்டும் பயன்படுத்துவது.*

alphanumeric : எழுத்து எண்: *எழுத்தும் எண்ணும் கொண்ட வரைவுருக்களுக்கான பொதுச் சொல் எழுத்துகள். (A) முதல் (Z) இசட் வரை கணினி எண் இலக்கங்கள், சிறப்புக் குறியீட்டுப் படிவங்கள்.*

alphanumeric characters : எழுத்து எண் வரையுருக்கள்: தகவல் செய லாக்க இயக்கங்களில் பயன்படுத்தப் படும் எழுத்துகள், எண்கள் மற்றும் சிறப்புக் குறியீடுகள்.

alphanumeric code : எழுத்துச் சரம்: A முதல் Z வரையுள்ள எழுத்துகள் மற்றும் 0 முதல் 9 வரையுள்ள எண் கள் இவற்றில் சிலவற்றைக் கொண்ட தொகுதி.

alphanumeric display terminal: எழுத்தெண் காட்சி முனையம் : கணினி முறைமையில் எழுத்தெண் தகவல்களைப் பதிவதற்கும் திரை யில் காட்டுவதற்குமான கருவி.

alphanumeric sort : எழுத்தெண் வரிசை யாக்கம் : ஒரு பட்டியலை எழுத்து வரி சையில் அல்லது எண்ணேறு முகத் தில் அல்லது இரண்டு வகையிலும் ஆக்கும் கணினிச் செயல் முறை.

alpha testing : முதல் கட்டச் சோதனை: பீட்டா ஆய்வுக்கு உட்படுத்தும் முன் னால் சொந்த நிறுவன ஊழியர் ஒரு வர் மூலம் புதிய பொருள் அல்லது பணித் தொகுப்பு ஒன்றை ஆய்வு செய்தல்.

altair : அல்டேர் (முதல் குறுங் கணினி): 1974ஆம் ஆண்டின் முதலா வது குறுங் கணினி எஸ்-100 தகவல் வழி மூலம் கணினிக்குள் உள்ளே அச்சிடப்பட்ட இணைப்புப் பலகை கள் இணைக்கப்பட்டிருக்கும். அல்டேர் 8800 - தொகுப்பு வடிவில் விற்பனைக்கு வழங்கப்பட்ட முதலா வது குறுங் கணினி ஆகும்.



ஆல்டேர் 8800 - முதல் குறுங்கணினி

alternate routing : மாற்று வழிய மைப்பு : இரண்டு முனைகளுக்கிடை யில் ஒரு வழித் தடத்தில் வழக்க மாகச் செல்லும் தகவலை, கட்ட மைப்பில் அதிகச் சுமை ஏறியதால் வேறு ஒரு வழித் தடத்தில் செலுத் தும் கணினி அமைப்பு.

alternate sector : மாற்றுப் பிரிவு : காந்த வட்டில் ஒரு பிரிவு சோதனையின் போது மோசமானது என்று கண்டு பிடிக்கப்பட்டால் வேறு பிரிவைப் பயன்படுத்துவது.

alternate track : மாற்று வழித் தடம் : நேர் அணுகு சேமிப்பகத்தின் குறை பாடுள்ள வழித் தடத்திற்கு மாறான வழித் தடம்.

alternating current : (AC) மாறு மின்னோட்டம் : ஒரு விநாடிக்கு 50 அல்லது 60 முறை தனது ஓட்டத் திசையை எதிர் எதிராக மாற்றிக் கொள்ளும் மின்சாரம். நேர் மின்சாரத் துக்கு மாறானது.

alternator : மாற்றி :

ALU : கணித தருக்க முறை அலகு : கணித தருக்கவியல் (Arithmetic Logic Unit) பகுதியின் குறும் பெயர். மையச் செயலகத்தின் (CPU) ஒரு பிரிவாகும். இங்கு கணித மற்றும் தருக்கச் செயல்கள் நிகழ்கின்றன.

ambient conditions : சூழல் நிலைமை: ஒளி, வெப்பம், ஈரப்பதம் போன்ற சுற்றுச்சூழல் நிலைகள்.

ambient temperature : சூழல் வெப்பம்: ஒரு கருவியைச் சூழ்ந்துள்ள வெப்ப நிலை.

Amdahl Gene : அம்தால் ஜெனி : முன்பு ஐபிஎம் கணினிகள் பல வற்றை உருவாக்கிய இவர் ஐபிஎம் கணினி-360 வரிசை முறைமையை உருவாக்கியதன் மூலம் கணினிக் கட்டமைப்பில் புரட்சியை 1964இல் நிகழ்த்தினார். இந்தக் கணினியில் ஒருங்கிணைந்த இணைப்புகள் முதலில் பயன்படுத்தப்பட்டன. அவர் பின் அம்தால் வாரியத்துக்காகப் பல கணினிகளை வடிவமைத்தார்.

American Federation of Information Processing Societies (AFIPS) : அமெரிக்க தகவல் கையாளும் சங்கங்களின் கூட்டமைப்பு : கணினி, அறிவியல் மற்றும் தகவல் கையாளும் நிறுவனங்களின் பிரதிநிதித்துவ அமைப்பு. உலகின் மிகப் பெரிய கணினி மாநாடகிய வருடாந்திர தேசிய கணினி மாநாடுகளை சார்பாளராக நடத்துதல், அரசின் கல்வி, ஆய்வு நடவடிக்கைகள், தர நிலைகள், நடைமுறைகள், கணினி வரலாற்றியல் தொடர்பான குழுப் பணிகளை நிறைவேற்றுதல் உள்பட பல நடவடிக்கைகள் இதன் பணிகளாகும். தகவல் கையாளுதலுக்கான பன்னாட்டுக் கூட்டமைப்பில் அமெரிக்கப் பிரதிநிதியாகவும் உள்ளது.

American National Standards Institute (ANSI) : அமெரிக்க தேசிய தர நிறுவனம் : அமெரிக்காவில் சுய தர நிலைகளுக்கான தேசிய ஒப்புதல் நிறுவனமாகவும் ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும் இவ்வமைப்பு செயல்படுகிறது.

American Society for Information Science (ASIS) : தகவல் அறிவியல் சங்கம் : தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்த உழைக்கும் நூலகர்கள், தகவல் வல்லுநர்கள், அறிவியலாருக்கு அரங்கம் ஒன்றை வழங்கும் தொழில் முறை அமைப்பு இது. இதன் உறுப்பினர்கள் பெரும்பாலும் கற்றவர்கள், செயல்முறை நிர்வாகிகள், மேலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், தகவல் துறை தொழில் நுணுக்க வல்லுநர்கள், அறிவியலார். இவர்கள் அமைவு ஆய்வு, வடிவமைப்பு ஆகிய துறைகளில் பணி புரிகிறார்கள். தகவல் தொடர்பு திட்டங்களை, சேவைகளை நிர்வகிக்கிறார்கள். தகவல் தொடர்பு சந்தை, தகவல் திட்ட சேவைகள், தகவல் தொடர்பு

அடிப்படைகள் ஆகியவற்றில் தேடுதல், தயாரிப்பு ஆய்வு ஆகியவற்றை மேற்கொள்கிறார்கள்.

American Standard Code for Information : அமெரிக்கத் தகவல் பரிமாற்றத் திட்டக் குறியீடு : தகவலுக்கான அமெரிக்கத் தரக் குறியீடு.

American Statistical Association (ASA): அமெரிக்க புள்ளியியல் சங்கம் : புள்ளி விவர இயலை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட பன்னாட்டு அமைப்பு. 1983இல் உருவாக்கப்பட்டது. முடிவுகளை மேற்கொள்வதற்கும், முன் அறிவிப்புச் செய்வதற்கும் கையாளப்படும் உத்திகளின் தரத்தை உறுதி செய்ய ஆய்வு மற்றும் பயன்பாட்டில் புள்ளி விவரங்களின் தரத்தை பேணுகிறது. தொழில் முறை அறிவைப் பரிமாறுதல், வளர்ச்சிகளை அறிவித்தல் மூலம் மாணவர்களை வணிகத்துக்கும் தொழில் துறைக்கும் தயார் செய்கிறது.

amiga : அமிகா : பிரபலமான குறுங் கணினி அமைவு. காமடோர் இன்டர் நேஷனல் நிறுவனத்தின் தயாரிப்பு.



அமிகா (Amiga)

ampere : ஆம்பியர்; மின்னோட்ட அலகு : மின்சாரத்தின் அடிப்படை எஸ்ஐ அலகு.

amplifier : பெருக்கி : உள்ளீட்டு மின் குறிப்பின் மின்னழுத்தம், மின்னோட்டம், மின்னாற்றலைப் பெருக்குவது.

analog : ஒத்திசை வடிவிலான; ஒத்திசை இயல்; ஒத்திசை முறை; ஒத்திசைவிலான : தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கும் ஒத்திசைவுகளால் குறிப்பது. இலக்கவியலுக்கு மாறானது.

analog channel : ஒத்திசைவான வழித்தடம்: மாறும் மின் சமிக்ஞைகளை தொடர்ச்சியாக அனுப்ப அல்லது பெற பயன்படும் ஒரு தகவல் தொடர்புத் தடம்.

analog circuit : ஒத்திசைவான மின் சுற்று : வெளியீடானது தொடர்ச்சியான உள்ளீட்டின் பணியாக உள்ள மின்சுற்று. இலக்கவியல் மின் சுற்றின் தனித்தனி மதிப்புகளுக்கு மாறான நிலை.

analog computer : ஒத்திசைக் கணினி: மாறும் வெப்ப நிலை அழுத்தம் போன்ற தொடர்ந்து மாறும் நிலைகளை அளந்து இயற்பியல் அளவுகளாகக் காட்டும் கணினி. இலக்கவியல் கணினி மற்றும் கலப்பினக் கணினி முறைமைக்கு மாறானது.

analog data : ஒத்திசைத் தகவல்: இம்முறையில் தகவலுக்கும் அளவுகளுக்கும் இடையில் உள்ள உறவு துல்லியமாக உணர்த்தப் படுகிறது. தொலைபேசி வழியாகச் செல்லும் மின் சமிக்ஞைகள் அலைவியல்

தகவலாகும். இவை ஒலிகளுக்கான துல்லியமான பிரதிநிதித்துவமாகும். இலக்கப் புள்ளி தகவல்களுக்கு இது எதிரானது.

analog reasoning : ஒத்திசை வடிவப் பகுப்பாய்வு : முறைமை ஒன்றின் மாதிரி வடிவு ஒன்றை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் முறைமை குறித்த முடிவுகளை எடுத்தல்.

analog model : ஒத்திசை வடிவு : நிலவும் சூழலுக்கு ஏற்ற இயற்பியல் ஒற்றுமையை வெளிப்படுத்தும் மாதிரி வடிவு.

analog representation : ஒத்திசைவான பிரதிநிதித்துவம் : தனிப்பட்ட மதிப்பீடுகள் அற்ற பிரதிநிதித்தும். ஆனால் தொடர்ந்து மாறக் கூடியது.

analog signal : ஒத்திசைவான சமிக்ஞை : மனிதக் குரல் போல தொடர்ந்து அலை வடிவில் மாறிச் செல்லும் சமிக்ஞை.

analog to digital converter (A-D converter) : ஒத்திசைவிலிருந்து இலக்கவியலுக்கு மாற்றி (ஏ-டி மாற்றி) : தொடர்ச்சியான அளவியல் சமிக்ஞைகளை தனித்தனியான எண்களாக மாற்றக்கூடிய மின்னுறுப்பு. எண்களை அளவியல் மதிப்புகளாக மாற்றும் உறுப்புக்கு எதிரானது.

analog transmission : ஒத்திசை பரப்பி: தகவல்களை தொடர்ச்சியான அலை வடிவ முறையில் பரப்புதல்.

analyst : பகுப்பாய்வாளர் : பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பதற்கான உத்திகளை உருவாக்குகிற, அதனை வரையறை செய்கிற திறனுள்ள நபர். குறிப்பாக கணினி ஒன்றில் தீர்வுக்கான உத்திகளை வகுப்பவர்.

analyst/programmer : பகுப்பாய்வாளர் / செயல் நிரலாளர்.

analytical engine : பகுப்பாய்வுக் கருவி; பகுப்பாய்வுப் பொறி : கணிதப் பிரச்சினைகளைத் தீர்க்க 1800களின் மத்தியில் பிரிட்டன் கணிதவியலாளரான சார்லஸ் பாபேஜ் என்பவர் கண்டுபிடித்த கருவி. நவீன எண் இலக்கவியல் கணினியின் முன்னோடி.

analytical graphics : பகுப்பாய்வு வரைகலை : பாரம்பரிய வரி வரைபடங்கள், மற்றும் பட்டை வரை படங்களைக் கொண்டு தகவல்களை ஆராய்தல், விரிவுத்தாள், தகவல் தளம் அல்லது சொல் செயலாக்க ஆணைத் தொடரில் அமைக்கப்பட்டுள்ள வரைகலை.

ancestral file : முந்தையக் கோப்பு : கோப்பில் உள்ள தகவல் தொலைந்து போகும் அல்லது சிதைந்து போகும் என்ற எச்சரிக்கையினால் முந்தைய கோப்பு பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. ஒரு கோப்பின் மூன்று பிரதிகள் வைக்கப்பட வேண்டும். தாத்தா, பெற்றோர், குழந்தை, சமீபத்தையதைப் பயன்படுத்துவது குழந்தைக் கோப்பாகும். குழந்தைக்குச் சேதமானால் அப்பா கோப்பையும், அதுவும் சேதமானால் தாத்தா கோப்பையும் தேடி எடுத்து பயன்படுத்தலாம்.

AND : பிணைப்பி : தருக்கவியல் பிணைப்பி மற்றும் 'பி' என்ற சொற்றொடரில் உள்ளதுபோல இதன் பொருள், 'ஏ' யும் 'பி' யும் ஒரே நேரத்தில் உண்மையாக இருந்தால் மட்டுமே சொற்றொடர் உண்மையானதாக அமையும் என்பதாகும். இதனை 'தருக்கவியல்' பெருக்கி என்றும் கூறலாம்.

AND gate : பிணைப்பு வாயில் : 1. இருமச் சுற்றிணைப்பு. இதில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேல்

உள்ளீடுகள் இருக்கும். அவற்றின் வெளியீடு ஒருமையாக இருக்கும். இதில் எல்லா உள்ளீடும் தருக்கம் ஒன்று என்றால் வெளியீடு தருக்கம் 1 ஆகும். உள்ளீடுகளில் ஏதாவது ஒன்று தருக்கம் பூஜ்யமாக இருந்தால் வெளியீடு பூஜ்யமாக அமையும். 2. கணினி ஒன்றின் வாயில் மின்னிணைப்பு ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளீட்டு முனையங்களைக் கொண்டது. எல்லா உள்ளீடுகளுக்கும் ஒரே நேரத்தில் துடிப்பு வழங்கப்படாவிட்டால் வெளியீட்டுச் சமிக்ஞை எதுவும் உருவாகாது.

AND operation : இணைப்புச் செயல்: இரண்டு வாக்கியங்கள், உண்மை மதிப்புகள் போன்றவைகளை இணைக்கும் இணைப்பு. இவற்றில் வெளியீடு 'உண்மை' என்று வர வேண்டுமென்றால் உண்மையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் வெளியீடு 'பொய்' ஆகிவிடும்.

android : ஆண் மனிந்திரம் : மனிதர்களைப் போன்ற ஆண் தானியங்கு எந்திரம்.

angstrom : ஆங்ஸ்ட்ராம்; ஒளி அலை நீளளவை : நீட்டலளவை அலகு : 2.5 சென்டி மீட்டரில் 1/25 கோடி. சிப்பு - ஒன்றில் உள்ள மின்னணுவியல் கருவிகளில் உள்ள பாகங்களை அளக்கப் பயன்படுபவை.

ANI : அனி : Automatic Number Identification, என்பதன் சுருக்கம். தொலைபேசி அமைப்புகளின் ஒரு தன்மை. அழைப்பவரின் எண்ணை கணினி அமைப்பின் மூலம் பெறுபவருக்கு அனுப்பி, அழைப்பவரை அடையாளம் காண உதவுவது.

animated graphics : இயங்கு வரைகலை : இயங்கும் வரைபடங்கள் அல்லது கருத்துப் படங்கள். காந்த வட்டுகளில் வரை படங்கள் ஒளிக்காட்சி தோற்றங்குறைந்த இடத்தையே எடுத்துக் கொள்ளும்.

animation : இயக்கப்படுத்தல் : நிகழ்வு ஒன்றின் தொடர் வரிசைப் படங்களை மிக விரைவாக வெளிப்படுத்துவதன் மூலம் இயங்குவது போன்ற தோற்றத்தை உருவாக்குதல். இவ்வுத்தி கணினி உருவாக்கும் திரைப் படங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

anion : எதிர்மின்மம் : மின்னூட்டத் திரவத்தில், நேர்மின் முனையை நோக்கி நகர்கிற ஓர் எதிர் அயனி (மின்மயத்தூள்).

anisotropic : திசை மாறுபாட்டுப் பண்பு : அளவுக்கும் திசைக்குமேற்ப மாறும் அனுப்பு வேகம் போன்ற பண்புகளைக் குறிப்பிடுகிறது.

annotation : குறிப்புரை : சேர்க்கப் பட்ட விளக்கக் குறிப்பு.

annotation symbol : குறிப்புக் குறியீடு; விளக்கக் குறியீடு: தொடர் வரைபடம் ஒன்றில் செய்திகள் மற்றும் குறிப்புகளைச் சேர்க்கப் பயன்படுத்தப்படும் குறியீடு. மற்ற தொடர் வரைபடம் துண்டுக் கோடுகள் மூலம் இணைக்கப்பட்டிருக்கும்.

anomaly : முரண் : இயல்புக்கு மாறானது.

ANSI : அன்சி: அமெரிக்கத் தேசிய தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் எனப் பொருள்படும் American National Standards Institute நிறுவனத்தின் குறும் பெயர்.

ANSI character set : 'அன்சி' எழுத்தெண் குறியீட்டுத் தொகுதி: எழுத்து எண் மற்றும் சிறப்புக் குறியீடுகளைக் குறிப்பிடும் குறியீட்டுத் தொகுதி.

ANSI-COBOL : அன்சி-கோபால் : *1974இல் அமெரிக்க தேசிய தர நிறுவனம் தரப்படுத்திய கோபால் கணினி மொழிப்பதிப்பு.*

ANSI terminal : அன்சி முனையம் : *தரமான அன்சி மொழியில் உள்ள ஆணைகளைப் பின்பற்றும் காட்சி முனையம்.*

answer mode : விடை நிலை : *மற்றொரு மோடெம் ஒன்றிலிருந்து வரும் அழைப்பை மோடெம் ஒன்று ஏற்கும் திறன் நிலை .*

answer / originate : விடையளி / தொடக்கு .

answer tone : விடை ஒலி : *மோடெம் பதில் கொடுத்துவிட்டது என்பதை அழைத்தவருக்குக் கூறும் ஒலிக் குறிப்பு.*

answering machine : விடையளிக்கும் பொறி; விடைப்பொறி : *வரும் செய்திகளைச் சேகரிப்பது. முற்பதிவு செய்திகளை அழைத்தவருக்கு அனுப்பி, பதில் அளிக்க வேண்டியவர் இல்லாத குறையைத் தீர்க்கும் பொறி.*

antenna : மின்காந்த அலை வாங்கி.

anthropomorphism : மனிதப் பண்பேற்றல் : *கணினிகள் மற்றும் கணினிகளால் கட்டுப்படுத்தப்படும் விசைக் கருவிகளைக் குறிப்பதற்கான உருவக முறை. இதில் அவை மனிதர்கள் போன்று கருதப்படுகின்றன.*

antistatic mat : நிலை மின்சார எதிர்ப்புப் பாய்: *நிலை மின்சாரத்தினால் ஏற்படும் அதிர்ச்சிகளைத் தடுக்க ஒரு சாதனத்தின் முன்னால் வைக்கப்படும் தரைப்பாய். மனிதர்கள் அலகைக் கையாளும்போது ஏற்படும் அதிர்ச்சியால் தகவல்கள் அழிந்து போகாமல் இது காப்பாற்றும்.*

anti-aliasing : மாற்று நீக்கி : *திரையில் காட்டும் வடிவம் ஒன்றின் விளிம்புகளும் கோடுகளும் பிசிறற்றதாக தோன்றக் கையாளப்படும் வடிகட்டும் உத்தி.*

மாற்று நீக்கி (Anti-aliasing)

antivirus programme : நச்சு ஆணை எதிர்ப்புச் செயல் முறை : *நச்சாணைகளைக் கண்டுபிடித்து வெளியேற்றும் செயல் முறை.*

aperture card : துளை அட்டை : *நுண் படச்சுருள் பொருத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட திறப்புள்ள, துளை அட்டை.*

API : ஏபிஐ : **Applications Programming Interface** *என்பதன் சுருக்கம்.*

APL : ஏபிஎல் : A Programming Language *எனும் கணினி மொழிக்கான குறும்பெயர். கணித முறையில் அமைக்கப்பட்ட செயல்முறைப்படுத்தும் மொழி, கணக்குகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் பிரபலமானது. ஏபிஎல் தன்னுடைய எளிய முறை இயக்கங்கள் மூலம் புத்திசாலித்தனமான கணக்கிடு கருவி ஒன்றின் பணிகளைச் செய்கிறது.*

app code : ஏபிபி குறியீடு : *பயன்பாட்டுக் குறியீடு. தகவல்களை செயலாக்கம் செய்யும் ஒரு ஆணைத் தொடரில் உள்ள ஆணைகள்.*

append : இணை ; கூட்டு : தகவல் களைத் தொகுப்பு ஒன்றுடன் மேலும் புதிய ஆவணங்களைச் சேர்த்தல் அல்லது எழுத்துத் தொடரின் இறுதி யில் அல்லது பட்டியலின் இறுதியில் சேர்த்தல்.

Apple : ஆப்பிள் : நுண் கணினி வரிசையொன்றின் விற்பனைப் பெயர். இவற்றைத் தயாரிக்கும் நிறுவனம் ஆப்பிள் கணினி நிறுவனம் ஆகும்.

Apple computers : ஆப்பிள் கணினி கள் : தனிநபர், கல்வி, வணிகம் மற் றும் மேசைக் கணினி வழி நூல் பதிப்பகப் பயன்பாடுகளில் அதிகம் பயன் படும் நுண்கணினிகள்.

Apple information technology division: ஆப்பிள் தகவல் தொழில் நுட்பப் பிரிவு : கணினி ஆலோசனை மற்றும் பயிற்சி நிறுவனம்.

Apple key : ஆப்பிள் விசை : கட்டளை விசையின் பழைய பெயர்

Apple menu : ஆப்பிள் பட்டியல் : மெக்கின்டோஷ் திரையின் இடது பக்க மேல் பகுதியில் உள்ள பட்டியல்.

Apple printer : ஆப்பிள் அச்சுப் பொறி: கணினி வெளியீட்டின் அச்சுப் பிரதி யைப் பெற பயன்படுத்தும் சாதனம். அச்சுப்பொறியானது அழுத்த முறை அல்லது அழுத்தம் அல்லாத முறை யினதாக இருக்கலாம். ஆப்பிள் லேசர் அச்சுப் பொறிகள் பிரபலமாக வும் உயர்தர வெளியீட்டை அளிப்ப தாகவும் இருக்கின்றன.

Apple scanner : ஆப்பிள் வருடி : 34 செ.மீ X 21 - 25 செ.மீ. அளவுள்ள உருவங்கள் ஒரு அங்குலத்துக்கு 300 புள்ளிகள் என்ற அளவில் வருடி மெக்கின்டோஷுக்கு மாற்றுகிறது.

Appleshare : ஆப்பிள் ஷேர் : ஆப்பிள் நிறுவனத்திலிருந்து உருவான பி.சிக் கான மென் பொருள்.

Apple Soft BASIC : ஆப்பிள் மென் பேசிக் : ஆப்பிள் ஐஐசி மற்றும் ஐஐஇ கணினிகளில் பயன்படுத்தப்படும் விரிவுபடுத்தப்பட்ட அடிப்படை ஆணைத் தொகுப்புகளை உருவாக் கப் பயன்படுத்தப்படும் மொழி. பதின்ம எண்களைக் கையாளும் திறன் கொண்டது. ஆப்பிள் மென் பேசிக் கில் ஆணைத் தொகுப்புகளை உருவாக்கவும் நிறைவேற்றவும் கணினியிலேயே உள்கட்டமைப்பாக உருவாக்கப்பட்ட ஆணை மாற்றி.

applet : ஆப்லெட் : பயன்பாட்டு ஆணைத் தொடர் போன்ற சிறிய பயன்பாடு. ஜாவா மொழியில் உருவாக்கப்படும் சிறு சிறு செயற் கூறுகள் இவ்வாறு அழைக்கப்படு கின்றன.

application controller : பயன் கருவிக் கட்டுப்படுத்தி : கணினி ஒரு துணைக் கருவியைக் கட்டுப்படுத்த உதவும் சாதனத்திற்குப் பொதுவான பெயர்.

application control : பயன்பாட்டுக் கட்டுப்பாடு : கணினி பயன்பாடு - உற் பத்திப் பயன்பாடுகளில் துல்லிய மாக, சரியான நேரத்தில், தகவல்கள் செயலாக்கப்படுவதை உறுதி செய்ய, கணக்குத்துறை மற்றும் கணினித் துறை தொழிலில் ஈடுபட்டுள்ளவர் கள் பரிந்துரைக்கும் கட்டுப்பாடு.

application developer : பயன்பாடு உரு வாக்குபவர் : வணிகப் பயன்பாட்டை உருவாக்கி அமைப்பு ஆய்வாளர் மற்றும் பயன்பாட்டு ஆணைத் தொட ராளர் பணிகளைச் செய்யும் ஒரு நபர்.

application development system: பயன்பாட்டு உருவாக்க அமைப்பு :

உருவாக்குதல், மேம்படுத்தல் மற்றும் பயன்பாட்டு ஆணைத் தொடர்கள் இயக்க அனுமதிக்கும் ஆணைத் தொடர் மொழி மற்றும் அதன் தொடர்பான பயன்பாடுகள். விசாரணை மொழிகள், அறிக்கை தயாரிப்புக் கருவிகள் உள்ளிட்ட டிபிஎம்எஸ்-ஐ இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

application generator : பயன்பாட்டு உருவாக்கி : பிரச்சினையின் விவரங்களிலிருந்து பயன்பாட்டு ஆணைத் தொடரை உருவாக்கும் மென் பொருள். உயர்நிலை கணினி மொழியைவிட ஒன்று அல்லது மேற்பட்ட உயர்நிலையில் உள்ளது. இருப்பினும், ஆணைத் தொடர் அமைப்பவர் சிக்கலான பணிகளை விவரிக்கக் கணித, மொழியமைப்பு விளக்கங்களை அமைத்துத் தர வேண்டும்.

application notes : பயன்பாட்டுக் குறிப்புகள் : வழக்கமான உதவிக் குறிப்பு கையேடுகளுடன் விளக்கங்கள் மற்றும் பரிந்துரைகளைச் சேர்த்து விற்பனையாளர் கொடுப்பது.

application-oriented language : பயன்பாடுசார் மொழி; பயன் நோக்கு மொழி : ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஆணைத் தொகுப்பு மொழி. இதன் கட்டளைகள் கணினியைப் பயன்படுத்துவோர் கையாளும் சொற்களைக் கொண்டிருக்கும் அல்லது அவற்றை ஒத்திருக்கும்.

application package : பயன்பாட்டுத் தொகுப்பு : ஒரு குறிப்பிட்ட பயன் பாட்டுக்காக வடிவமைக்கப்பட்ட கணினி சுற்றுச் செயல் அல்லது சுற்றுச் செயலின் தொகுப்பு. தொழில் துறைக்காக அல்லது குறிப்பிட்ட நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட மென்பொருள் தொகுப்பு. சிறப்பு அல்லது பொதுநோக்கப் பணிகளுக் காக எழுதப்பட்ட கணினி ஆணைத் தொடர்கள். சிலவற்றில் ஒரே ஒரு பணி மட்டுமே இருக்கும். மற்ற வற்றில் பல பணிகள் இருக்கலாம்.

application portfolio : பயன்பாட்டு மதிப்பீடு : ஒரு திட்டமிடும் கருவி. இப்போதுள்ள மற்றும் திட்டமிட்டு வரும் தகவல் அமைப்புகளின் பயன் பாடுகளை அவை உண்டாக்கும் வருமானம், அவற்றை ஏற்படுத்தும் செலவு ஆகியவை பெரிய வணிகப் பணிகளுக்கு உதவுமா என்று மதிப்பிடுதல்.

application processor : பயன்பாட்டுச் செயல்முறைப்படுத்தி : கட்டுப்பாட்டுப் பணிகள் அல்லாமல் தகவல் களை செயலாக்கம் செய்யும் கணினி.

application programme : பயன்பாட்டு ஆணைத் தொடர் : சொல் செயலாக்க விலைப்பட்டியலிடல், இருப்பு கட்டுப்பாடு போன்ற பணிகளைச் செய்ய எழுதப்படும் மென்பொருள்.

applications programmer : பயன்பாட்டுக்கான ஆணைகளின் தொகுப்பாளர் : முறைமை வகுப்போரைப் போன்றல் லாது குறிப்பிட்ட செயல்பாட்டுக் கான ஆணைகளின் தொகுப்பை உருவாக்குகிறவர்.

applications programming : பயன் பாட்டுக்கான ஆணைத் தொகுப்பைத் தயாரித்தல் : குறிப்பான பிரச்சினை களுக்குத் தீர்வுகளைக் காணப் பயன் படுத்துவதற்கு உரிய ஆணைகளின் தொகுப்பைத் தயாரித்தல். இது முறைமை ஆணைகளின் தொகுப் பைத் தயாரித்தலுக்கு எதிரானது.

applications programms : பயன் பாட்டு ஆணைகளின் தொகுப்பு.

applications software : பயன்பாட்டு மென்பொருள் : பயன்படு ஆணைகள் தொகுப்பு என்பதைக் காண்க.

application specific programms : பயன் பாடு சார்ந்த ஆணைத் தொடர்கள் : வணிக அறிவியல், பொறியியல் மற்றும் பிற துறைகளில் உள்ள இறுதிப் பயனாளரின் குறிப்பிட்ட பயன்பாடு களுக்கு உதவும் பயன்பாட்டு மென் பொருள் தொகுப்பு.

applied mathematics : பயன்பாட்டுக் கணிதம் : எந்திரவியல், இயற்பியல், அல்லது கணினி அறிவியலில் நடை முறைப் பயன்பாட்டுக்குப் பயன் படுத்தப்படும் கணிதம்.

apprentice : பயிற்சியாளர்.

approximation : தோராயம் : துல்லிய மான எண் அல்ல; ஆனால் குறிப் பிட்ட பதின்ம இடத்திற்குள் முழுமையாக்கப்பட்டது.

APT : ஏபிட்டி : எண்முறை பொறிக் கட்டுப்பாட்டு மொழி. Automatic Programmed Tool எனப் பொருள் படும் சொற்றொடரின் குறும்பெயர். எண்ணியல் கட்டுப்பாட்டு நட வடிக்கைகளில் பயன்படுத்தப்படும் ஆணைகள் குழுவை உருவாக்கும் முறைமை. இது ஆணைகள் குழு வின் கட்டுப்பாட்டில் இயங்கும் எந்திர நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்படுகிறது. புள்ளிகள், கோடுகள், வட்டங்கள், சமப் பரப்புகள், கூம்பு வடிவத் தளங்கள் மற்றும் ஜியோமிதி பரப்புகளை வரையறை செய்யப் பயன்படுத்தப் படுகிறது.

arbitration : ஒரு நிலைக் காரணி : நினைவகம் அல்லது வெளிப்புறச் சாதனங்கள் போன்றவற்றை ஒன்று க்கு மேற்பட்ட ஆணைத் தொடருக் கோ அல்லது பயன்படுத்துபவர் களுக்கோ அளிக்கும் எந்திரப் பகுதிக்கு ஏற்ற விதிகளின் தொகுதி.

arcade game : விதானத் தொகுதி விளையாட்டு : கணினி விளையாட்டுகள் நாணயத்தால் இயக்கப்படும் கருவி களால் பிரபலமாக்கப்பட்டவை. இக் கருவிகள் உயர்திறன் கொண்ட வண்ண வரைவுருக்கள் உயர்வேகச் சித்திர இயக்கம், ஒலி வழங்குதல் ஆகிய திறன்களைக் கொண்டவை. பெரும்பாலும் விளையாட்டுக் குச்சி களினால் திரையில் உள்ள வடிவம் கட்டுப்படுத்தப்படுகிறது. விளை யாட்டுகளின் விதிப்படி கணினி மதிப்புப் புள்ளிகளை அளிக்கிறது.

architecture : வடிவமைப்பு : கணினி யின் உள் இயக்க நட வடிக்கைகளின் வடிவமைப்பு. நினைவக ஆணைப் பகுதி மற்றும் உள்ளீட்டு, வெளி யீட்டு அமைப்புகள் கொண்டது.

archival : நீண்ட கால கரம் : தகவல் ஒன்றை நீண்ட காலம் சேமிப்பது தொடர்பானது.

archival store : ஆவண இருப்பகம்; நீள் சேகரம்; நெடுஞ் சேகரம் : அடிக்கடி பயன்படுத்தாமல் பின் தேவைக்கு ஆதாரமாக வைக்கப்பட்டிருக்கும் கோப்புகள்.

archive : சேமிப்பகம் : 1. துணை சேமிப்பு ஊடகத்தில் வட்டு அல்லது நாடாவில் ஆணைகள் குழு மற்றும் தகவல்களை பிரதி செய்தல். 2. எதிர்பார்க்கப்படும் நீண்ட காலப் பயன்பாட்டுக்காகத் தகவல்களைச் சேமித்தல்.

archive attribute : ஆவண இயல்பு : கோப்புகளை வகைப்படுத்தும் இயல்பு நிலை. சில படிகள் மற்றும் பின்னாதரவு ஆணைத் தொடர்களில் இந்த நிலையைச் சோதிக்க முடியும்.

archive bit : ஆவணக் காப்பகக் குறி : ஒரு கோப்பு ஆவணக் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ள உதவும் ஒரு செய்திக் குறிப்பு.

arcnet : ஆர்க்நெட் : ஒரு கணினி கட்டமைப்புத் திட்டம்.

area search : பகுதி தேடல் : பெரும் எண்ணிக்கையிலான ஆவணத் தொகுதிகளில் குறிப்பிட்ட ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பரிசீலித்தல்.

argument : மதிப்புரு: இணைப்பு மாறி.

argument in programming : ஆணைத் தொடரில் விவாதங்கள் : ஆணைத் தொடர்கள், துணைச் சுற்றுகள் மற்றும் பணிகளுக்கிடையில் அனுப்பப் படும் ஒருமதிப்பு. தகவல் அல்லது குறியீடுகளைக் கொண்டுள்ள விவா தங்கள் தனி வகைகள் அல்லது மாறி கள் ஒரு பயனாளருக்காக சரிசெய்ய விவாதத்தைப் பயன்படுத்தும்போது, அது ஒரு 'அளவு கோல்' என்று சொல்வதுண்டு.

arithmetic : எண்கணிதம் : *1. கணிதவிய லின் ஒரு பகுதி - உடனிலை முழு எண்கள் மற்றும் பூஜ்யம் ஆகியவற் றின் ஆய்வு தொடர்பானது. 2. கூட் டல், கழித்தல், பெருக்கல் மற்றும் வகுத்தல் சம்பந்தப்பட்ட நடவடிக் கைகள் தொடர்பானது. அல்லது இப் பணிகளைச் செய்யும் கணினி திடக் கருவியின் ஒரு பகுதி தொடர்பானது.*

arithmetic coding : கணிதக் குறியீட மைத்தல் : *புள்ளிவிவர முறை தகவல் களை சுருக்கும் முறை. தகவல் சரங் களை 0 முதல் 9 வரை உள்ள தனி பதின்ம எண்ணாக மாற்றுவது.*

arithmetic expression : கணக்கீட்டுக் கோவை; எண் கணிதக் கோவை : *ஒன்று அல்லது கூடுதலான எண்கள், மாறிகள், செயல்கள், குறியீடுகள் அல்லது இவை இணைந்த கோவை. கணக்கீட்டின் விளைவாக ஒரு தனி மதிப்பைக் குறிப்பிடுவது.*

arithmetic instruction : கணித ஆணை : *கணித இயக்கத்தைச் செய்யு மாறு கணினிக்குச் சொல்கிறது.*

arithmetic logic unit : கணித தருக்க வியல் அலகு : *மைய தயாரிப்பு அலகின் அடிப்படை அம்சம். அங்கு கணித மற்றும் தருக்கவியல் நட வடிக்கைகள் நிறைவேற்றப்படு கின்றன.*

arithmetic operation : கணிதவியல் நடவடிக்கை; எண் கணித வினை : *எண்ணியல் அளவுகளின் பல்வேறு நடவடிக்கைகள். இவற்றில் அடிப் படை நடவடிக்கைகளான கூட்டல் அல்லது கழித்தல், பெருக்கல், வகுத்தல், தொகுத்தல் கூறுபடுத்து தல் மற்றும் வேர்களை பிரித்தெடுத் தல் ஆகியவையும் அடங்கும்.*

arithmetic operator : கணிதக் குறியீடு : *ஒரு கணக்கீட்டைச் செய்ய கணினிக்கு கூறும் குறியீடு. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், தொகுத்தல் போன்ற செயல்களைக் குறிப்பிடும் செய்குறிகள்.*

arithmetic overflow : கணித மிகை ஓட்டம் : *அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தை மீறி வெளியே வரும் கணக்கீட்டின் விளைவு.*

arithmetic register : கணிதப் பதிவகம்: *கணித மற்றும் அளவை இயக்கங் களைச் செய்வதற்கென்றே ஒதுக்கப் பட்ட பதிவகம்.*

arithmetic shift : கணிதவியல் பெயர்ச்சி : *ஓர் எண்ணிக்கையினை அடிப்படை எண் ஒன்றினால் பெருக் கல் அல்லது வகுத்தல். எடுத்துக்*

காட்டு: 13ஐ 10ஆல் இருமுறை பெருக்கியதால் கிடைப்பது 1,300 ஆகும். இதில் 13 என்ற எண் இரு இடங்களில் இடப்புறப் பெயர்ச்சி அடைகிறது.

arithmetic underflow : கணிதக் குறைவோட்டம் : சரியாகக் கூறமுடியாத அளவுக்குச் சிறிய எண்ணாக வரும் கணக்கீடு.

arithmetic unit : எண்ணியல் அலகு ; கணக்கிடும் பகுதி.

ARPANET : 'அர்பாநெட்' மேம்பட்ட ஆய்வுத்திட்ட ஏஜென்சி இணையம் எனப் பொருள்படும் Advanced Research Projects Agency Network என்பதன் குறும்பெயர். இது பாதுகாப்புத் துறை இடங்கள், ஆய்வு மையங்கள் மற்றும் கணினி அறிவுக் கூடங்களை இணைக்கிறது. இதன் நோக்கம் கணினி விவரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், மிகவும் நம்பிக்கையான, சிக்கனமான இலக்கத் தகவல் தொடர்பை உருவாக்குதல்.

ARQ : ஏஆர்கியூ : தானியக்க முறையில் மீண்டும் அளிப்பதற்கான வேண்டுகோள். Automatic Repeat reQuest என்பதன் குறும்பெயர். தகவல் வழங்கப்படுவதை கண்காணிக்கும் பணி.

arrangement : ஏற்பாடு : வரிசை ஒழுங்கு : பொருள் பட்டியல்: சொற்களின் வரிசையொழுங்கு அல்லது ஒரு அமைவில் உள்ள தகவல் வகைகள்.

array : வரிசை அணி : 1. தொடர்புடைய பொருள் எண் வகைகளின் வரிசை.

array element : வரிசைப் பொருள் : வரிசையில் உள்ள ஒரு கூறு.

array index number : வரிசை அடையாள எண் : ஒரு வரிசையில் உள்ள குறிப்பிட்ட பொருளை அடையாளம் காட்டும் எண்.

array iterator : வரிசை இயக்கி : ஒரு வரிசையில் உள்ள ஒவ்வொரு பொருளிலும் புகுந்து இயக்கத்தைச் செய்யும் ஒரு பணி.

array processor : வரிசைச் செயலி : எழுத்துரு (matrix) கணக்குகளை சாதாரணக் கணினிகளைவிட விரைவாகக் செய்யக் கூடியது.

array reference : வரிசைக் குறிப்பு : எந்த வரிசையிலும் அணுகக் கூடிய சிறப்புத் தகவல் மதிப்பு.

artline : வரைகலை ஆணைத் தொடர்: ஐபிஎம் சார்பு நுண் கணினிகளில் பயன்படுத்துவதற்கு ஏற்ற விளக்க முறை வரைகலை ஆணைத் தொடர். அளவெடுக்கக்கூடிய எழுத்துகள், முப்பரிமாணச் சாயல்கள், ஒரு உருவத்தை வேறொன்றாக மாற்றும் பணி போன்ற பல அம்சங்கள் இதில் உள்ளன.

artwork : வரைகலை வேலை : வரி ஓவியங்கள் போன்ற வரைகலை வேலைகளைச் செய்தல்.

arrival rate : வருகை வீதம் : குறிப்பிட்ட அளவு நேரத்தில் தகவல் தொடர்பு சாதனத்தில் எத்தனை தகவல்கள் அல்லது எழுத்துகள் வருகின்றன எனும் வீதம்.

artificial inteligence (AI.) : செயற்கை நுண்ணறிவு : ஒரு எந்திரம் எவ்வளவு அறிவுத் திறனுடன் இருக்க முடியும் என்பதை விளக்கும் கணினி அறிவியலின் ஒரு பிரிவு. பகுத்தறிதல், கற்றல் போன்ற மனித அறிவுத் திறனோடு தொடர்புடைய செயல்களைச் செய்யும் கருவி ஒன்றின் திறனோடு தொடர்புடையது.

artificial language : செயற்கை மொழி: வரையறை செய்யப்பட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்ட மொழி - இவ்விதிகள் அதன் பயன்பாட்டுக்கு முன் உருவாக்கப்பட்டதாகும். இது இயற்கையான மொழிக்கு வேறு பட்டதாகும்.

ARTSPEAK : பேச்சுக் கலை: அனுபவ மற்ற பயனாளர் கணினி வரைவுகளை வரைகருவியில் உருவாக்க உதவுவது.

ASA : ஏஎஸ்ஏ : அமெரிக்க புள்ளி யியல் சங்கம் எனப் பொருள்படும் American Statistical Association என்பதன் குறும்பெயர்.

ASCC : ஏஎஸ்சிசி : Automatic Sequence Controlled Calculator தானியக்கத் தொடர் செயல் கணக்கிடுவான் என்ப தைக் குறிக்கும் Association for Systems Management என்பதன் குறும் பெயர். இது ஹார்வர்டு பல்கலைகழ கத்தில் ஹோவர்டு அய்க்கன் ஆணைப்படி உருவாக்கப்பட்டது. 1944இல் நிறைவு செய்யப்பட்டது. காகித நாடா ஒன்றில் சேமிக்கப்பட்ட ஆணைகளைப் பயன்படுத்துவது. 'ஹார்வர்டு மார்க்' என்றும் அழைக் கப்பட்டது.

ascender : ஏற்றி : கீழ்வரிசை எழுத்து களின் ஒரு பகுதி எழுத்தின் முக்கிய பகுதிக்கு மேலே நீளுதல்.

ASIC : ஏஎஸ்ஐசி(அசிக்) : Application Specific Integrated Circuit என்பதன் குறும்பெயர். ஒரு குறிப்பிட்ட பயன் பாட்டுக்காக உருவாக்கப்பட்ட சிப்பு. மற்ற சிப்புகளைவிட இதை விரைவாக உருவாக்கலாம். மாற்றங் களையும் எளிதாகச் செய்யலாம்.

ASCII : அஸ்கி: அமெரிக்கத் தகவல் பரிமாற்றத் திட்டக் குறியீடு : தகவல் பரிமாற்றத்துக்கான அமெரிக்கக் குறி யீட்டுக்கான American Standard Code for Information Interchange என்பதன் குறும்பெயர். ஏழு துண்மியுள்ள இந்தக் குறியீடு பல்வேறு வகையான சாதனங்களுக்கிடையே தகவல் பரி மாற்றத்துக்கு உதவுகிறது.

ASIS : ஏஎஸ்ஐஎஸ்; அசிஸ் : தகவல் அறிவியலுக்கான அமெரிக்க சங்கம் என்பதைக் குறிக்கும் American Society for Information Science என்பதன் குறும் பெயர்.

ASM : ஏஎஸ்எம் : அமைவு மேலாண்மை சங்கம் என்பதைக் குறிக்கும் Association for Systems Management என்பதன் குறும்பெயர்.

aspect card : ஆவண எண் அட்டை : தகவல் பெறும் அமைவில் உள்ள ஆவணங்களின் எண்கள் அடங்கிய அட்டை.

aspect ratio : வடிவ விகிதம் : ஒரு கணினி வரைபடத்தில் காட்சித்திரை அல்லது படவரம்பின் உயரத்துக்கும், அகலத்துக்கும் உள்ள விகிதம்.

ASR : ஏஎஸ்ஆர் : தானியக்க முறை யில் செய்தி அனுப்புதல் மற்றும் பெறுதலுக்கான Automatic Send/Receive என்பதன் குறும்பெயர்.

assemble : இணை ; தொகு : கணினி ஆணைத் தொகுப்பு ஒன்றுக்காக தக வல்களை சேகரித்து, பொருட்படுத்தி ஒருங்கிணைத்தல். தகவல்களை கணினி மொழிக்கு மாற்றி, அதனை கணினி பின்பற்றுவதற்காக இறுதி ஆணைத் தொகுப்புக்குள் இணைத் தல்.

assembler : இணைப்பி; தொகுப்பி : இது ஒரு மொழி பெயர்ப்பி. கணினி யைக் கையாளும் ஒருவர் தயாரித்த எந்திர மொழியில் இல்லாத ஆணை களை ஏற்று, அதனை கணினி பயன்

படுத்தக் கூடிய எந்திர மொழி வடிவத்துக்கு மாற்றுவது.

assembler directive : தொகுப்பு ஆணை : தொகுப்பு மொழி ஆணைத் தொகுப்பில் ஒரு தொகுப்பானுக்குத் தரப்படும் அறிவிக்கை.

assembling : தொகுத்தல் : ஒரு குறியீட்டு ஆதார மொழி ஆணைத் தொகுப்பை ஒன்றின் பின் ஒன்றாக எந்திர மொழியாக ஒரு கணினியில் மாற்றும் தன்னியக்க நடைமுறை.

assembly : தொகுப்பு; சேர்ப்பு : ஒருங்கிணைந்த மின்சுற்றை கம்பிகளால் இணைத்து ஒரு அமைப்புக்குள் கொண்டு வரும் செயல்.

assembly language : தொகுப்பு மொழி; கூட்டு மொழி: இலக்கக் குறியீட்டு ஆணைகளுக்குப் பதிலாகப் பெயர் குறிப்புகளைப் பயன்படுத்தி, பயனாளர் ஒருவர், ஆணைத் தொகுப்பை எழுதும் கணினி மொழி.

assembly listing : தொகுப்புப் பட்டியல்: தொகுப்பி ஒன்றினால் தயாரிக்கப்பட்ட அச்சுத் தயாரிப்பு.

assignment statement : மதிப்பிருத்தல் கட்டளை: ஒரு மாறியில் (variable) ஒரு குறிப்பிட்ட மதிப்பினை இருத்தப் பயன்படும் கட்டளை.

assembly unit : சேர்ப்பு அலகு : ஆணைத் தொடர் குறியீட்டில் நகரும் அலகு. எந்த மாற்றமும் செய்யாமல் பல்வேறு ஆணைத் தொடர்களில் அதை ஒருங்கிணைக்கலாம்.

assertion : உறுதிப்படுத்துதல் : மதிப்பீட்டை உண்மையாக்கும் ஒரு பூலியன் வாக்கியம்.

assign : குறிப்பிடு; குறித்தளி .

Association for Systems Management (ASM) : ஏஎஸ்எம் அமைவு மேலாண்மை மற்றும் தகவல் செயலாக்கத் துறையில் விரைவாக ஏற்படும் வளர்ச்சி மாற்றம் ஆகியவற்றை உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபடும் பன்னாட்டுச் சங்கம். 1947இல் இச்சங்கம் உருவாக்கப்பட்டது. அது ஐந்து தொழில் நுணுக்கப் பகுதிகளைக் கொண்டது. தகவல் பரிமாற்றம் தகவல் செயலாக்க மேலாண்மை, தகவல் அமைவு, அமைப்புக்குத் திட்டமிடல் மற்றும் எழுத்து மூலமான தகவல் பரிமாற்றம். உறுப்பினர்கள் இப்பிரிவுகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்.

associative array: இணைப்பு வரிசை: கணினி பெர்ல் மொழியில் ஒரு தகவல் வகை.

associative computer: சார்புக் கணினி: சார்பு நினைவகத்தைக் கொண்ட கணினி.

associative dimensioning : சார்புப் பரிமாணம் அமைத்தல் : பரிமாணப் பொருள்களில் பயனாளர் செய்யும் மாற்றங்களுக்கேற்ப ஆணைத் தொடரானது தானாகவே பரிமாணப் பொருள்களில் மாற்றம் செய்து கொள்ளும் செயல்முறை.

associative memory: சார்பு நினைவகம் : ஒரு சேமிப்புச் சாதனம். இதன் சேமிப்பு இருப்பிடங்களை அவற்றின் உள்ளடக்கங்களைக் கொண்டே அடையாளம் காண முடிகிறது.

associative storage : சார்பு சேமிப்பு : இதன் நினைவிடங்கள் அதன் உள்ளடக்கத்தினால் அறியப்படுகின்றன. (இது பெரும்பாலான கணினி சேமிப்புகளில் பெயர் அல்லது எண்ணால் நினைவிடத்தைக் குறிப்பிடுவதற்கு மாறானது). உள்ளடக்க முகவரி

நினைவகம் என்றும் தேடல் நினைவகம் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

astable: நிலையற்ற : மின்னணு மின் சுற்றுகளில் மாறிக் கொண்டிருக்கும் நிலை ஒரு நிலையில் இருந்து தொடர்ச்சியாக வேறொரு நிலைக்கு மாறிக் கொண்டே இருத்தல். மின்னணுக் கடிகாரங்களில் பயன்படுத்தப்படும் நேரம் அமைக்கும் மின்னணுச் சாதனம் கணினி கடிகாரத்துக்கும் இதுவே அடிப்படை.

asterisk : உடுக்குறி : பல கணினி மொழிகளில் பெருக்கல் இயக்கியைக் குறிப்பிடும் குறியீடு.

astronomy : வானவியல் : நட்சத்திரங்கள், கோள்கள்பற்றி மின்னணுத் தகவல் தொடர்பு முறையில் ஆராயும் அறிவியல்.

asymmetric modem : மாறுபட்ட மோடெம் : இருபுற தகவல் பரிமாற்றம் செய்யும் மோடெம். வெவ்வேறு திசைகளில் வெவ்வேறு வேகத்தில் தகவல்களை அனுப்பக் கூடியது. சான்றாக ஒப்புதல்கள் ஒரு திசையில் மெதுவாக அனுப்பப்படும். ஆனால் தகவல் அதிக வேகத்தில் வேறொரு திசையில் அனுப்பப்படும்.

asymmetric multiprocessing: மாறுபட்ட பல்முனைச் செயல்பாடு : ஒரு மையச் செயலமைப்பு குறிப்பிட்ட பணிக்கு மட்டும் என்று ஒதுக்கப்பட்டுள்ள பல்முனை செயலாக்க வடிவமைப்பு.

asymmetric system : ஒழுங்கற்ற அமைப்பு : பெரிய பாகங்கள் அல்லது தன்மைகள் வெவ்வேறாக உள்ள கணினி அமைப்பு. ஒளிக்காட்சி நெருக்குதலில், தகவல்களை நெருக்குவதற்கு அதிகக் கருவிகள் தேவைப்படுகின்ற அமைவு.

asynchronous : நேரச்சீரிலி : ஒரு வகை தகவல் தொடர்புடன் சம்பந்தப்பட்டது. எழுத்துகள் அனுப்பப்படும் பொழுது ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையே மாறுபடும் நேர இடைவெளி கொண்டது.

asynchronous device : நேரச்சீரற்ற சாதனம் : தகவல் தொடர்பு கொள்ளும் கணினி அமைப்புக்கு வெவ்வேறு இடைவெளிகளில் சமிக்ஞைகளை அனுப்பிடும் சாதனம்.

asynchronous computer : நேரச்சீரற்ற கணினி : முன் செயல் நிறைவடைந்தால் உருவாக்கப்படும் சமிக்ஞையைத் தொடர்ந்து அல்லது செயலாக்கத்துக்குச் சாதனம் கிடைக்கும் பொழுது அடுத்த செயல் தொடரும் கணினி. நேர்ச்சீர்க் கணினிக்கு இது மாறானது.

asynchronous input : நேரச்சீரிலா உள்ளீடு : கணினியின் நேரச்சீரிலா உள்ளீட்டுத் தகவல்.

asynchronous mode : நேரச்சீரிலா முறை : ஒரு செயல் முடிந்த பிறகே அடுத்ததைத் துவங்க அனுமதிக்கும் முறையில் செயலாற்றும் கணினி. ஒரே நேரச்சீர்க் கணினியில் உள்ளது போல் ஒரு செயலைச் செய்ய அடுத்த நேரத் துவக்கம் வரை காத்திருக்க வேண்டியதில்லை.

asynchronous protocol : நேரச் சீரிலி நெறிமுறை : நேரச்சீரிலா முறையில் தகவல் அனுப்புவதைக் கட்டுப்படுத்தும் தகவல் தொடர்பு நெறி முறை.

asynchronous transmission : நேரச் சீரிலா அனுப்புகை : ஒவ்வொரு எழுத்தும் தனித் தன்னிறைவு அலகாக அமைந்து தனக்கென ஆரம்ப, முடிவு துண்மிகளைக் கொண்டதாக தகவல்களை அனுப்பும் முறை. ஒவ்

வொரு எழுத்துக்கும் இடையில் உள்ள இடைவெளி வெவ்வேறாக இருக்கும். கணினிக்கும், மோடெத் துக்கும் இடையில் இத்தகைய தக வல் அனுப்பும் முறையே உள்ளது. ஒரு மோடெம் வேறொன்றுக்குத் தக வல்களை அனுப்பும் போது நேரச் சீர் மையைக் கடைப்பிடிக்கலாம்.

Atanasoff-Berry Computer (ABC) : அடனாசோஃப்-பெர்ரி கணினி : முதல் மின்னணு கணினி. டாக்டர் ஜான் வின்சென்ட் அடனாசோஃப் மற்றும் கிளிஃபோர்டு பெர்ரி ஆகியோரால் உருவாக்கப்பட்டது. தகவல் சேமிப்பு மற்றும் கணிப்பு களுக்கு வெற்றிடக் குழாய்களைப் பயன்படுத்தியது,

Atanasoff John V : அடனாசோஃப் ஜான் வி : 1939இல் தன் உதவியாளர் கிளிப்ஃபோர்டு பெர்ரி உதவியுடன் முதல் மின்னணுவியல் இலக்கக் கணினியைக் கண்டுபிடித்தவர். கணிதப் பிரச்சினைகளுக்குக் கணினி யில் தீர்வு காண்பதில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார்.

Atari : அட்டாரி : தனியார் கணினிகள் மற்றும் இணைப்புச் சாதனங்கள் வரி சையில் பிரபலமானது. கம்பெனி துவக்கத்திலிருந்தே அமெரிக்க நிறு வனமாக உள்ளது.

atlas: அட்லாஸ் : டிரான்சிஸ்டர்களை வைத்து உருவாக்கப்பட்ட இரண் டாம் தலைமுறை கணினிகளில் பிரபலமானது.

ATM: ஏடிஎம் : தன்னியக்கப் பணப் பொறுப்பு எந்திரம் எனப் பொருள் படும். Automatic Teller Machine என்பதன் குறும்பெயர்.

atom: ஆட்டோம் : தகவல் அமைப்பு களை உருவாக்குவதற்கான அடிப் படை அலகு. கோப்பில் உள்ள ஒரு ஏடு போன்றது. அதில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்கள் இருக்கலாம்.

autoflow : முன்னோட்டம் : ஒரு பக்கத் திலிருந்து அடுத்த பக்கத்திற்குப் போதல் அல்லது வரைகலை உருவத் தைச் சுற்றி வரிகளைப் பொருத்துதல்.

autofont : தன்னியல்பு எழுத்துரு : தானே பயிற்சியளிக்கும் ஒசிஆர். பல தரப்பட்ட ஆவணங்களை விரைவாக வும் துல்லியமாகவும் படிக்க வசதி யான பல்வேறு வகையான எழுத் தமைப்புகளுக்கேற்ப இது தன்னை சரிசெய்து கொள்கிறது.

atomic operation : அணுச்செயல் : மேலும் சிறிய செயல்களாகப் பகுக்க முடியாத செயல்.

atomic indivisible : பகுக்க இயலா அணுத்தன்மையுள்ள : ஒரு அணுச் செயல் அணுத்தன்மை என்றால் ஒரு செயலை முழுவதுமாகச் செய்ய வேண்டும் அல்லது செய்யாமல் இருக்க வேண்டும். சான்றாக, எந்திரக் கோளாறின் காரணமாக, ஒரு பரிமாற்றம் முடிவது தடைபடு மானால், கணினி அமைப்பு அந்தப் பரிமாற்றம் ஆரம்பத்தில் இருந்த நிலைக்கு மீண்டும் சென்று விடும்.

atomicity : அணுத்தன்மை : எதையும் எந்த அளவுக்குப் பகுக்கலாம் என்ப தைக் கூறுவது.

attach : இணை : கணினி ஒன்றின் திறனைக் கூட்ட புறச் சாதனம் ஒன்றைச் சேர்த்தல்.

attached processor: இணைக்கப்பட்ட செயலி : வேலைகளைச் செய்வதில் உதவுவதற்காக ஒரு தலைமை கணினியுடன் இணைக்கப்பட்ட செயலி. பல் செயலாக்கச் சூழ்நிலை யில், தலைமை செயலக அமை

வுடன் சேர்க்கப்பட்ட கூடுதல் மையச் செயலகம். தலைமைச் செயல் அமைவுடன் சேர்ந்து செயல் பட்டு கணினி அமைப்பின் மென் பொருள் மற்றும் வெளிப்புறச் சாதனங்களைப் பகிர்ந்து கொள்கிறது.

attention key : கவன விசை : கணினி முனையத்தில் உள்ள ஒரு பணி விசை. அப்போது செய்து கொண் டிருக்கிற வேலையில் தடையிடு மாறு, கணினிக்கு இது சமிக்ஞை அளிக்கும்.

attenuation : தேய்தல் : சமிக்ஞை ஒன்றின் அளவு அது கட்டுப்பாட்டு அமைவு வழியாகச் செல்லும் பொழுது குறைதல்.

attrib : அட்ரிப் : டாஸ் ஆணைகளில் ஒன்று. ஒரு கோப்பின் ஏற்பியை மாற்றுவது.

attribute : ஏற்பி : 1.மாறி ஒன்றைக் கணினி கையாளும் முறை. 2. தகவல் மாதிரி ஒன்றின் இனங்காட்டும் பண்பு. தகவல் அமைவு ஒன்றின் அடிப்படை அலகு அமைப்பு. 3. ஒரு கருவி ஒன்றின் பண்பு.

attribute byte : ஏற்பி எண்துண்மி ; ஏற்பி எட்டியல் : வட்டுக் கோப்பில் உள்ள சேமிக்கப்பட்ட தகவலைக் குறிப்பது. அக்கோப்பில் உள்ள ஏற்பிகளை இது குறிப்பிடுகிறது.

audio: கேட்பொலி : மனிதரால் கேட்கக் கூடிய ஒலி.

audio board : கேட்பொலி அட்டை : தனிநபர் கணினி விரிவாக்க அட்டை. ஒலியை உருவாக்கி வெளியில் உள்ள சிறிய ஒலிபெருக்கிகளுக்காக அதைப் பெரிதாக்கித் தருகிறது. ஒலி அட்டை (sound card) என்றே பெரிதும் அழைக்கப்படும்.

audio data : கேட்பொலி தகவல் : ஒலியை இலக்கமாக்கியபின் வெளிப்படும் தகவல்.

audio device : கேட்பொலிக் கருவி : ஒலியை ஏற்கும் அல்லது உருவாக் கும் கணினிக் கருவி.

audio input : ஒலி உள்ளீடு : ஒரு கணினியில் தகவலை உள்ளீடு செய்ய ஒலியைப் பயன்படுத்துவது.

audio response output: ஒலி பதில் தரும் வெளியீடு : ஒலியாக அல்லது பேசும் மொழியாக கணினியின் வெளியீடு.

audio response unit : கேட்பொலி ஒலி தரும் பகுதி : பேசும் சொல்லாக வெளியீடு தருகின்ற கணினியின் வெளியீட்டுச் சாதனம்.

audio signal : ஒலி சமிக்ஞை : ஒலி அலைகளைப் பெரிதாக்கி மின் வடிவில் தருவது.

audio sphere : ஒலிப்புலம் : மாய மெய்த் தோற்றச் சூழ்நிலையில் பயன் படுத்துபவரின் இருப்பிடம் மற்றும் ஒலி தோன்றுமிடத்திற்கேற்ப ஒலியை முப்பரிமாண முறையில் குறிப்பிடும் அமைப்பு.

audio output : ஒலி வெளியீடு : மனிதக் குரல் போன்ற ஒலிச் சமிக் ஞைகளை உருவாக்கக்கூடிய ஒலிப் படைப்பிகளினால் உருவாக்கப் படும் கணினி வெளியீடு.

audio response device : ஒலி எதிர் வினைக் கருவி : பேசப்படும் குரல் போன்ற எதிர்விளைவை உருவாக் கும் வெளியீட்டுக் கருவி. ஒலி வெளி யீடு என்பதைப் பார்க்கவும்.

audiotex : ஆடியோடெக்ஸ் : தொலை பேசி தகவலை அனுப்பவும் பெற வும் அனுமதிக்கும் ஒலி முறையில் பதில் தரும் பயன்பாடு, குரல் வேண்டுகோள்களுக்கேற்ப, பயன்

படுத்துபவர்கள் விசையை அழுத்தியோ அல்லது கேள்விகளுக்குப்பதில் கூறியோ தங்களது வழியை பல வாய்ப்புகளுக்கிடையில் தேர்ந்தெடுப்பார்கள். நிதி தொடர்பான தகவல்களை அறியவும் பொருள்கள் வாங்க ஆணை தரவும் பயன்படுகிறது. தகவல் தளங்களை மாற்ற வசதியாக இடைப்பரிமாற்ற அமைப்புகளில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

audiovisual : ஒலி ஒளி : நாடாப்பேழைகளுடன் தொடர்புடையது. இவை தகவலை ஒலி மூலமும் ஒளியின் மூலமும் பதிவு செய்கின்றன.

audit : தணிக்கை : கணினி இயக்கங்களின் திறனை முடிவு செய்ய, அமைப்புகள், ஆணைத் தொடரமைத்தல் மற்றும் தகவல் மைய நடை முறைகளைச் சோதித்தல்.

audit software : தணிக்கை மென்பொருள் : தகவல் தளங்களிலிருந்து மாதிரிகளை எடுப்பது மற்றும் உறுதி செய்யும் கடிதங்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவது போன்ற பல தணிக்கைப் பணிகளைச் செய்யும் சிறப்பு ஆணைத் தொடர்கள்.

audit trail: தணிக்கைச் சோதனை: தணிக்கைத் தடம்: ஊடகங்களைக் ,கொண்டு தகவல் செயலாக்கத்தின் அனைத்து நிலைகளையும் தேடுதல். மூல ஆவணத்தில் அது இடம் பெறுவதில் துவங்கி இறுதி ஆவணமாக வெளிவரும் வரை அனைத்துச் சோதனைகளும் செய்யப்படும்.

authentication : அங்கீகாரமளித்தல் : ஒரு சிறு தகவல் சரிதானா என்பதைச் சோதித்துப் பார்க்கும் செயல்முறை.

authenticity : நம்பகப்பண்பு : தகவல் ஒன்றின் நம்பகத் தன்மை.

author : ஆசிரியர் : கணினி வழிக் கற்றலுக்குப் பாடப்பொருளை உருவாக்குபவர்.

authoring system : ஆசிரிய அமைவு : ஆசிரிய மொழி ஒன்றினை செயல்படுத்தும் திறன் கொண்ட கணினி அமைவு.

authoring system standard : அமைப்பு தரத்தை எழுதுதல் : எழுதும் ஆணைத் தொடரைச் செயல்படுத்தும் திறனுள்ள கணினி அமைப்பு. கற்றுக் கொள்ளவும், சிபிடி ஆணைத் தொடர் அமைக்கவும் அனுமதிக்கும் மென்பொருள்.

authoring tool: எழுதித்தரும் கருவி : பல் ஊடகப் பொருளை உருவாக்க உதவும் ஆணைத் தொடர். பல் ஊடகம் வழங்குதற்குரிய தேவையான சூழ்நிலையையும் அது உருவாக்கித் தரும்.

authorization :ஏற்பளித்தல்; அங்கீகாரம் அளித்தல் : செயலாக்கம் நடைபெறுவதற்கு முன்பு குறிப்பிட்ட அனுமதி பெறவேண்டிய கணினி அமைப்பின்கட்டுப்பாட்டுத்தன்மை.

authorization code :ஏற்புக் குறியீடு; அங்கீகாரக் குறியீடு : கணினி அமைப்பை அணுக அனுமதிக்கும் நுழைவுச் சொல் அல்லது அடையாள எண்.

authorization distribution list : ஏற்பளிக்கப்பட்ட விநியோகப் பட்டியல்; அங்கீகரிக்கப்பட்ட விநியோகப் பட்டியல் : குறிப்பிட்ட அறிக்கைகளின் அங்கீகரிக்கப்பட்ட பயனாளரின் பட்டியல். தகுதி பெறுபவர்களுக்கு மட்டுமே பிரதிகள் விநியோகிக்குமாறு கட்டுப்படுத்த உதவுகிறது.

authorization programme: ஏற்கப்பட்ட ஆணைத் தொடர்; அங்கீகரிக்கப்பட்ட ஆணைத் தொடர் : ஒரு கணினி

அமைப்பின் தகுதி அல்லது அடிப் படை இயக்கத்தை மாற்றக்கூடிய ஒரு கணினி செயல்முறை.

author language :ஆசிரிய மொழி : கணினி வழி கற்பித்தலுக்கான கட்டளை ஆணைத் தொகுப்புகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும் கணினி மொழி.

authors :ஆசிரியர்கள் : கணினி வழிக் கற்றலுக்கான பாட முறைமைகளை வடிவமைப்போர்.

auto answer :தானியக்கப் பதில் : கணினிகளிலிருந்து வரும் தொலை பேசி அழைப்புகளுக்கு தானியக்க முறையில் பதிலளிக்கும் மோடெம் ஒன்றிலிருந்து மற்றொரு கணினிக்கு தகவல்களை அனுப்பக் கூடியது.

auto attendent : தானியங்கி உதவிப் பொறி : மனிதர்கள் இயக்குவதற்கு மாற்றாகக் குரலை சேமித்து அனுப்பி வைக்கும் அமைப்பு. அழைப்பவர் களைக் குரல் அஞ்சல் பெட்டிகளுக்கு அனுப்பி வைப்பது.

auto bypass : தானே ஒதுங்கிப் போதல் : கட்டமைப்பில் உள்ள ஒரு குறிப்பிட்ட முனையமோ அல்லது பிற சாதனமோ பழுதானால், அதை நீக்கி மாற்று வழியில் போகும் திறன். இதனால் மற்ற சாதனங்கள் தொடர்ந்து இயங்க முடியும்.

auto chart : தானியக்கப் பட்டியல் ; தானியக்க வரைவு :

auto dial : தானியக்க எண் சுழற்றி; தானியக்க அழைப்பி : தொலைபேசி இணைப்புடன் பொருந்தக் கூடிய மோடெம். ஒரு தொலைபேசி எண்ணைச் சுழற்றி மோடெமும் தகவல் தொடர்பு மென்பொருளும் முறையான தகவல் தொடர்பு நடைமுறைகளை நிறைவேற்றக் கூடியவை. அதனால் கணினிகளுக் கிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும்.

AUTODIN :ஆட்டோடின் : தானியக்க இலக்க இணையம் எனப் பொருள் படும் AUTOmatic DIgital Network என்பதன் குறும்பெயர். ராணுவ தகவல் தொடர்பு முறையில் தகவல் களைக் கையாளும் பகுதி.

auto indexing : தானியக்கப் பட்டிய லிடல் : முறைமைப் பட்டியலிடுதல். கூடுதல் தகவல்களை, தரப்பட்டுள்ள முகவரிகளில் ஏதாவது ஒன்றில் கூடுதல் இணைப்பைச் சேர்த்தல்.

auto-load: தானியக்க ஏற்றி : சில கணினி விசைப் பலகைகளில் உள்ள விசை - கணினியை செயலுக்குத் தூண்டுவது. முக்கியமாக இயக்க முறைமையை கணினியில் உள் சேமிப்புப் பகுதியில் சேர்த்து கணினி அமைப்பை இயக்கத் தொடங்குகிறது.

automata : தானியக்கக் கொள்கை : இயக்கக் கோட்பாடுகள், தானியக் கக் கருவிகளைப் பயன்படுத்துதல் பற்றிய கல்வியுடன் தொடர்புடைய கொள்கை.

automated data processing : தானி யக்கத் தகவல் செயலாக்கம் : குறைந்த பட்ச மனித முயற்சி மற்றும் இடை யீட்டுடன், தகவல்கள் கையாளப் படும். பெரும்பாலும் தானே ஒழுங்குபடுத்திக்கொள்கிற முறை.

automated flowchart : தானியக்கத் தொடர் பட்டியல் : கணினி கட்டுப் பாட்டில் உள்ள அச்சிடு கருவி அல் லது வரை கருவியினால் வரையப் படும் தொடர் பட்டியல்.

automated office : தானியக்க அலுவல கம் : அலுவலகச் சூழலில் கணினிகள்

அலுவலக மின்னணுக் கருவிகள் மற்றும் தொலைத் தகவல் தொடர்புத் தொழில் நுணுக்கம் ஆகியவை இணைவதன் விளைவு. மின்னணுவியல் அலுவலகம் என்பதைப் பார்க்கவும்.

automatic : தானியங்கி : சில குறிப்பிட்ட சூழல்களில் மனித இயக்குவோரின் இடையீடு இல்லாமல் இயங்குகிற நடைமுறை அல்லது கருவி தொடர்பானது.

automatic abstract: தானியங்கிச் சுருக்கம் : ஒரு ஆவணத்தில் இருந்து முக்கிய சொற்களை ஆணைத் தொடரே சுருக்கிக் கொள்கிறது.

automatic carriage: தானியக்க ஏற்றி: தட்டச்சுப் பொறி அல்லது அச்சிடு கருவி ஒன்றுக்கான கட்டுப்பாட்டுப் பொறியமைவு. அது தானே காகிதம் நகர்த்தல், சொற்களுக்கு இடைவெளி தருதல், வரி தாள் காகிதத்தை வெளியேற்றுதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிறது.

automatic check : தானியக்கத் தடை; தானியக்கச் சரிபார்ப்பு: தானியக்கத் தடை உள்ளமைப்புச் செய்யப்பட்டது.

automatic coding : தானியங்கிக் குறியீடமைத்தல்: தானியக்கக் குறிமுறையாக்கம் தொகுப்பி போன்ற ஒரு ஆணைத் தொடரைப் பயன்படுத்தி சங்கேதக் குறியீட்டிலிருந்து எந்திரக் குறியீட்டை உருவாக்குதல்.

automatic computer : தானியங்கு கணினி: ஒரு குறிப்பிட்ட வேலையை செயல்படுத்தும் கணினி. ஆணைத் தொகுப்பை மாற்றுதல் தவிர வேறு மனிதக் குறுக்கீடு இல்லாமல் செயல்படுத்தவல்லது.

Automatic controller : தானியங்கு கட்டுப்பாட்டுப் பொறி : உணர் சாதனம் மூலம் வரும் சமிக்ஞைகளை ஏற்றுக் கொண்டு, ஒழுங்குபடுத்தி, தகவல்களை ஒப்பிட்டு தேவையான திருத்தங்களைச் செய்யும் திறனுள்ள ஒரு கருவி அல்லது சாதனம்.

automatic data processing : தானியங்குத் தகவல் செயலாக்கம் : தகவல்களின் மீது எந்திரங்களைப் பயன்படுத்தி தொடர் இயக்கங்களைச் செய்வது.

automatic error correction : தானியக்கப் பிழைதிருத்தம் : தகவல் அனுப்புதலில் ஏற்படக்கூடிய அல்லது அமைப் பிலேயே ஏற்படக்கூடிய தவறுகளைக் கண்டுபிடித்து சரி செய்யும் உத்தி.

automatic feature negotiation : தானியங்கு ஏற்புத் தன்மை : எதிர் முனையில் உள்ள மோடெத்தின் வேகம், பிழை கட்டுப்பாடு மற்றும் தகவல் சுருக்குதல் முறைக்கேற்பத் தன்னை சரிசெய்து கொள்ளும் மோடெத்தின் திறன்.

automatic hyphenation : தானியங்கி ஒட்டுக்குறியமைத்தல் : சொற்களின் இடையில் தானாகவே சிறுகோடு அமைக்கும் தன்மை. சொல் செயலி மற்றும் பக்க வடிவமைப்பு ஆணைத் தொடர்களில் அதிகம் காணப்படுவது.

automatic loader : தானியக்க ஏற்றி : வன்பொருள் செயல்பட துவக்கும் ஆணைத் தொகுப்பு.

automatic message switching : தானியக்கச் செய்தி அனுப்புதல்.

automatic pagination : தானியங்கி பக்கமமைத்தல் : செய்தி வரிகளைப் பக்கவாரியாகத் தானாகவே பிரிக்கும் தன்மை. சொல் செயலி மற்றும் பக்க

வடிவமைப்பு ஆணைத் தொடர்களில் காணப்படுவது.

automatic programming : தானியக்க ஆணைத் தொகுப்பு முறை : 1. ஆணைத்தொகுப்பு ஒன்றைத் தயாரிப்பதில் சில நிலைப் பணிகளைச் செய்யக் கணினி ஒன்றைப் பயன்படுத்தும் முறை. 2. எந்திர மொழிக் கணினி ஆணைத்தொகுப்பு ஒன்றை ஆணைத் தொகுப்பின் குறியீட்டுத் தொகுப்பின் வழிகாட்டுதலின் பேரில் தயாரித்தல்.

automatic quality control : தானியக்க தரக் கட்டுப்பாடு : செயலாக்கப்படும் பொருளின் தரத்தை, ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட தர அடிப்படையில் சோதித்து; நிர்ணயிக்கப்பட்ட தரத்துக்கும் குறைவாக இருக்குமானால், சரி செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான உத்தி.

automatic recovery programme : தானே மீளும் ஆணைத் தொடர் : வன்பொருள் செயலிழத்தலின்போது கட்டுப்பாட்டை ஏற்றுக்கொண்டு கணினியை இயங்க வைக்கும் ஒரு ஆணைத் தொடர்.

automatic reformating : தானாக மீண்டும் வடிவமைத்தல் : சொல் செயலியில் மாற்றங்களை ஏற்று வரிகளைத் தானாகச் சரிசெய்து கொள்ளல்.

automatic scrolling : தானாக ஊடுருவல் : ஒரு நீண்ட ஆவணம் கணித் திரையில் கீழ்மேலாக அல்லது மேல் கீழாக உருண்டு செல்லல்.

automatic shutdown : தானியக்க பணி நிறுத்தம் : ஒழுங்கு முறைப்படி இணையம் (Network) ஒன்றை அல்லது கணினியின் செயல்பாட்டை முழுமையாக ஒழுங்கான முறையில் நிறுத்துவதற்கான மென்பொருள் ஒன்றின் திறன்.

automatic tag reader : தானியங்கிப் படிப்பான் : வட்டமான ஒட்டைகள் உடைய துளையிட்ட அட்டைகளைப் படித்தறியும் ஒரு சாதனம்.

automatic teller machine (ATM) : தானியங்கிப் பணப் பொறுப்பு எந்திரம் : வங்கி ஒன்றின் முனையம். அது வாடிக்கையாளருக்கு 24 மணி நேர வைப்பு மற்றும் திரும்பப் பெறும் சேவைகளை வழங்குகிறது. வங்கிக் கணினியுடன் இணைக்கப்பட்ட சிறப்பு நோக்கமுடைய கருவி. தானியக்கக் கருவியை வாடிக்கையாளர் இயக்க ஒரு பிளாஸ்டிக் அடையாள அட்டையைச் செருகி, சிறப்பு அனுமதிக் குறியீட்டைக் குறிப்பிடுகிறார். முறைமையுடன் எண்ணியக்க விசை அட்டை மற்றும் வரி வடிவ வெளிப்பாடு மூலம் தொடர்பு கொள்கிறார்.

automation : தானியக்கமுறை; தானியங்கி : 1. நடைமுறை ஒன்றை தன்னியக்க முறையில் செயல்படுத்துதல். 2. கருவி அல்லது நடை முறை அல்லது முறைமையினை மனித நோக்கு, முயற்சி அல்லது முடிவுக்கு மாற்றாக, பொறியமைவு அல்லது மின்னணுவியல் கருவி மூலம் தன்னியக்க முறையில் கட்டுப்படுத்தும் செயல்.

automonitor : தானியக்க கண்காணிப்பி : 1. கணினி நடவடிக்கைகளின் கணினிப் பதிவேடு. 2. கணினி ஒன்றின் செயல்பாட்டு நடைமுறைகளை பதிவு செய்யும் கணினி ஆணைத் தொகுப்பு.

autopilot : தானியக்க விமானி : விமானம் ஒன்றை அல்லது விண்வெளிக் கலத்தைப் பறக்கச் செய்ய உதவும் கருவி.

autopolling : தானியக்கச் சோதனை: தன்னியக்க பதிவு முறை. இம்முறையில் கணினி இணையம் ஒன்றின் முனையங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில், தகவல்களை அனுப்பத் தயார் நிலையில் உள்ளனவா என்பதை அறிய சோதிக்கப்படுகின்றன. கணினி இணையம் ஒன்றில் வன் பொருளும் மென் பொருளும் இணைந்து இச்சோதனையை மேற்கொள்கின்றன.

auto resume : தானே தொடர்தல் : கணினியில் ஒரு இடத்தில் நிறுத்திவிட்டுப் பின்னர் தொடர்ந்து அனுமதிக்கும் தன்மை. பயன்பாடுகளை இரண்டாவது தடவை மேலேற்றத் தேவையில்லை. நினைவு விவரங்கள் வட்டில் சேமிக்கப்பட்டோ அல்லது மின்சார பேட்ரியில் தயார் நிலையில் வைக்கப்பட்டோ இருக்கும். மடிக் கணினி மற்றும் நோட்டுப் புத்தகக் கணினிகளில் இத்தன்மை பெரும்பாலும் காணப்படும்.

auto - redial : தானியக்க இணைப்பு சுழற்றி : அழைக்கப்பட்ட தொலைபேசி கிடைக்கும்வரை மீண்டும் எண் சுழற்றுவதற்கான மோடெம் ஒன்றின் சாதனம்.

auto - repeat : தானே திரும்பச் செயல்: சில விசைப் பலகைகளின் பண்புப்படி சில விசைகளை அழுத்தினால் அவற்றின் செயல்கள் தானியக்க முறையில் மீண்டும் செய்யப்படுகின்றன.

auto-restart : தானியக்க மறு துவக்கம் : கருவி பழுதுபட்டாலோ மின்சாரம் தடைப்பட்டாலோ மீண்டும் சீராகும் பொழுது பணிகளைத் தொடரத் தயார் நிலையை அடைவதற்கான நடவடிக்கைகளைத் தானியக்க முறையில் நிறைவேற்றுவதற்கான கணினி ஒன்றின் திறன்.

autosave : தானியங்கிச் சேமிப்பு : பயனாளர் தலையிடாமல் தொடர்ச்சியான இடைவெளிகளில் தகவல்களை வட்டில் சேமித்தல்.

autoscore : தானியக்கக் கோடிடல் : வார்த்தைச் செயலாக்க முறையில், எழுதப்பட்ட பகுதியில் அடிக் கோடிடுவதற்கான ஆணை.

autosizing : தானே அளவமைத்தல் : ஒரு அமைப்பிலிருந்து வேறு ஒன்றுக்கு மாறும்போது அதே செவ்வக உருவத்தோற்றத்தை வைத்துக் கொள்ளும் முகப்பின் திறன்.

auto-start : தானே துவக்குதல் : சில வணிக நுண் கணினிகளில் ரோம் நினைவகத்தில் சேமிக்கப்பட்டுள்ள ஒரு குறியீடு, கணினியை இயக்கியவுடன் இது செயலாக்க அமைவை மேலேற்றி பயன்பாட்டுத் தொகுதியை எந்திரத்தில் அனுப்பி, உடனே செயல்படத் தயாராக்கும். இவ்வசதியை விளக்கும் சொல் Turnkey.

autostart routine : தானே துவக்கும் நிரல் : கணினியில் அமைக்கப்பட்ட ஆணைகள் கணினியை இயக்கத் துவங்கியவுடன் அவைகளும் செயல்படத் துவங்கும். கணினி நினைவகத்தைச் சோதித்தல் போன்ற கண்டறி சோதனைகளை நடத்தி இயக்க அமைப்பை ஏற்றி கட்டுப்பாட்டை அதற்குக் கொடுக்கும்.

available list : கிடைக்கும் பட்டியல் : ஒதுக்கப்படாத பகுதிகளின் பட்டியல் என்றும் அறியப்படும்.

available point : கிடைக்கும் இடம் : கணினி முகப்பில் திரையில் உள்ள ஒரு இடம்.

Availability : கிடைப்பு நிலை : குறிப்பிட்ட செயலுக்கான மணி நேரத்துக்கும், வன் பொருளின் சரியான

இயக்க நேரத்துக்கும் உள்ள விகிதம். இதனை செயலாக்க விகிதம் என்று பெரும்பாலும் கூறுவதுண்டு.

available time : கிடைக்கும் நேரம் : கணினி ஒன்று பயன்படுத்துவதற்கு கிடைக்கும் நேரம்.

average : சராசரி : புள்ளி விவர அல்லது எண்ணிலக்கச் சராசரி.

average latency : சராசரி உள்ளுறை சுணக்கம் : நேரடி அணுகு சேமிப்புச் சாதனத்தில் முழு சுழற்சியில் பாதியில் பதிவுப் பரப்பில் சுற்றிவர ஆகும் நேரம்.

avionics : வான் மின்னணுவியல் : விமானங்கள் மற்றும் விண்கலங்களில் பயன்படும் மின்னணுக் கருவியமைப்புகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கருவி.

auxiliary equipment : துணைச் சாதனம் : மையச் செயலாக்க அலகின் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாத கருவி.

auxiliary function : துணைச் செயல் : தன்னியக்க எந்திரக் கருவிக் கட்டுப்பாட்டில், செயல்படு கருவி ஒன்றின் வேகக் கட்டுப்பாடு அல்லது எந்திரத்தின் வெட்டுக் கருவியின் கட்டுப்பாடு நீங்கலாக பிற செயல்கள். எண்ணெயிடல், கருவியைக் குளிர்வித்தல் முதலியன மாதிரித் துணைச் செயல்களாகும்.

auxiliary memory : துணை நினைவகம்.

auxiliary operation : துணைச் செயல்பாடு : மையச் செயலாக்க அலகின் கட்டுப்பாட்டில் இல்லாத கருவியினால் செய்யப்படும் செயல்பாடு.

auxiliary storage : துணைசேமிப்பகம் : கணினியின் முக்கிய சேமிப்பகத்துக்குத் துணையாக அமையும் சேமிப்பகம். மின்காந்த வட்டுகள் மின்காந்த நாடாக்கள் போன்றவை துணை சேமிப்பகங்கள். இது உள் சேமிப்பகத்திலிருந்து மாறுபட்டது.

average search length : சராசரித் தேடு நீளம்: ஒரு குறிப்பிட்ட முகவரியைக் கண்டுபிடிக்க சராசரியாகத் தேவைப்படும் நேரம் அல்லது செயல்களின் எண்ணிக்கை.

AWC : ஏடபிள்யூசி : கணினியைக் கையாளும் பெண்களுக்கான சங்கம் : Association for women in computing என்பதன் குறும்பெயர். கணினித் தொழிலில் ஈடுபட்டிருப்போரைக் கொண்ட சங்கம். கணினித் தொழிலில் பெண்களுக்கான தொழில் திறனை வளர்த்தல்; கணினித் தொழிலில் ஈடுபட்டிருப்போரிடையே தகவல் தொடர்பை ஊக்குவித்தல் இதன் முக்கிய நோக்கமாகும்.

awk : ஏடபிள்யுகே : Aho weinberger Kernighan என்பதன் சுருக்கம். அஹோ, வெயின்பர்கர், கெர்னிகன் ஆகியோர் 1977இல் உருவாக்கிய யூனிக்ஸ் ஆணைத் தொடர்.

axes : அச்சுகள் : ஒரு இரட்டைப் பரிமாண ஒருங்கிணைப்பு முறைமையில் செங்குத்து (Y) மற்றும் படுக்கைக் குறியீடு (X)களாகப் பயன்படுத்தப்படும் கோடுகள்.

axons : ஆக்சன்கள் : மனித மூளையில் ஒரு நரம்பணுவிலிருந்து இன்னொரு நரம்பணுவுக்கு இந்த நரம்புகள் மூலம் வெளியீடுகள் அனுப்பப்படும்.

azimuth : அஸிமத் : ஒரு ஆதாரப் பகுதியில் இருந்து கடிகாரப் போக்கில் செல்லும் கோணத்தை அளக்கும் கருவி. வழித்தடத்தில் உள்ள படி / எழுது முனைகளின் சரியான அமைப்பை இது சோதிக்கும்.

B

B : பி : 'பைட்' (byte) அல்லது 'பாட்' (baud) என்பதன் சுருக்கப் பெயர். இருப்பகத்தைக் குறிப்பிடும் இடங்களில் பைட் (எட்டியல்) என்றும் தகவல் தொடர்புகளில் குறிப்பிடும் போது 'பாட்' (செய்தி வேகம்) என்றும் உணர்த்தும் கேபி (KB) - 1000 எட்டியல்கள் அல்லது பாட் (தொழில் நுட்ப அடிப்படையின்படி 1கே (1K) என்பது 1024 எட்டியல்களைக் குறிக்கும்).

Babbage, Charles : பாபேஜ், சார்லஸ் : (1792 - 1871) ஆங்கிலேய கணிதவியலாளர் - கண்டுபிடிப்பாளர். 20 பதின்மப் புள்ளிகள் வரை மடக்கை எண் (லாகர்தம்) மூலம் கணக்கிடக் கூடிய ஒரு வேறுபாட்டு எந்திரத்தை வடிவமைத்தவர். இலக்கமுறை கணிப் பொறிக்கு முன்னோடியாக விளங் கும் 'பகுப்பு' எந்திரத்தையும் உரு வாக்கியவர். பாபேஜ் காலத்தில் அவரது எந்திரங்களை வெற்றிகரமாக உருவாக்குவதற்கு வேண்டிய பொறியியல் தொழில் நுட்பங்கள் முன்னேறியவையாக இல்லை.

babble : பிறழ்வு : ஒரு அமைப்பின் பெருமளவு வழித்தடங்களில் ஏற்படும் குறுக்கீட்டுப் பேச்சு.

backdrop : பின்னணி : பின்னணித் தோற்றம். சிடி-ஐ-யில் மற்ற தோற்றங்கள் தெளிவாகத் தெரியும்போது பின்னணி தோற்றப் பகுதியும் முழுவதும் தெரியும்.

back-end case : பின்முனை எழுத்து : ஆணைத் தொடர் குறியீடுகளை உரு வாக்கும் எழுத்துக் கருவிகள்.

back end processor : பின்னணிச் செயலகம் : தகவல் தள எந்திரம் (Data base machine) போன்றது. பெரிய செயலகத்திற்கும் நேரடி - அணுகு சேமிப்புச் சாதனங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல் தளங்களுக்கும் இடைமுகமாகப் பணியாற்றும் கணினி.

backfilling : பின்புற நிரப்புதல் : 8086 / 88 மற்றும் 286 பி.சிக்களின் வழக்கமான நினைவகத்திற்குப் பதிலாக இஎம்எஸ் நினைவகத்தை ஒதுக்குவது. மூல தாய்ப்பலகை அட்டை சிப்புகள் செயலிழக்கின்றன. இஎம்எஸ் சிப்புகளுக்குக் கீழ் நினைவு முகவரிகள் இடப்படுகின்றன. பின்புற நிரப்புதலின் மூலம் டெஸ்க்வியூ போன்ற பல்பணி ஆணைத் தொடர்கள் இயங்கவும், விரிவாக்கப்பட்ட நினைவகத்தில் ஒரே நேரத்தில் கூடுதல் ஆணைத் தொடர்களை அமைக்கவும் முடியும்.

background : பின் புலம்; பின்னணி : 1. பன்முகக் கட்டளையிடலில் குறைந்த முன்னுரிமையுள்ள ஆணைத் தொடர் செயல்படுத்தும் சூழல். 2. காட்சித் திரையில் காட்டப்பட உருக்களோ வரைபட முன்புலங் களோ இல்லாத திரைப்பகுதி.

background colour : பின்னணி வண்ணம்; பின்புல நிறம் : காட்சித் திரையின் பின்னணி நிறம். காட்சித் திரையை காலி செய்த பிறகு இந்த நிறத்துக்குத் திரை திரும்பும்.

background ink : பின்புல மை : அதிகம் பிரதிபலிக்கும் மை, ஸ்கேனர் கண்டுபிடிக்க முடியாத வகையில் படிவத்தின் பகுதிகளை இது அச்சிடும்.

background job : பின்னணிப் பணி.

background noise : பின்னணி இரைச்சல் : கம்பியிலோ, வழித்தடத்திலோ அல்லது மின்சுற்றிலோ வந்து சேரும் தொடர்பில்லாத, தேவையற்ற சமிக்ஞைகள்.

background operation : பின்புல இயக்கம் : ஒரு ஆணைத் தொடர் ஓடிக் கொண்டிருக்கும்போது ஏற்படும் துணைச் செயலாக்கம். ஒரு ஆணைத் தொடர் தொகுப்பதற்கான பணியைச் செய்யும்போது, அச்சுப் பொறிக்கும் தகவல் அனுப்பலாம். குறுக்கிடுதல்களைப் பயன்படுத்தி பின்னணி இயக்கம் நடைபெறலாம்.

background processing :பின்னணி செயலாக்கம் : முன்புறத்தில் ஒரு ஆணைத் தொடர் செயல்படும்போது பின்னணியில் அதே நேரத்தில் வேறொரு ஆணைத் தொடர் இயக்கப்படுவது.

background programme :பின்புல ஆணைத் தொடர் : பல ஆணைத் தொடர்களை ஒரே சமயத்தில் செயல்படுத்தும் கணினி அமைப்புகளில் உயர் முன்னுரிமை உள்ள ஆணைத் தொடர்களைச் செயல்படுத்தத் தேவையில்லாதபோது செயல்படுத்தப்படும் ஆணைத் தொடர். முன்புல ஆணைத் தொடருக்கு மாறானது.

background reflectance :பின்னணி பிரதிபலிப்பு : ஒரு எழுத் தைச் சுற்றி ஏற்படும் பிரதிபலிப்பை அளக் கும் ஓசிஆர்.

backing storage : தாங்கும் இருப்பகம் : பின்னர் பயன்படுத்துவதற்காக வட்டுகள் அல்லது நாடாக்களில் வைக்கப்பட்டிருக்கும் துணை நிலை நினைவகம்.

backing store : பின்தாங்கும் இருப்பகம் : கணினியின் முதன்மை நினைவகத்திற்கு பின்பலமாக இருந்து தாங்குகின்ற நினைவகம். துணை இருப்பகம் என்று அதிகமாக அழைக்கப்படுகிறது.

backing-up :பின் ஆதரவு : மூலம் சேதமாகவோ அல்லது தொலைந்து போகவோ செய்யுமானாலும் உள்ளடக்கங்களை இழக்காமல் தடுப்பதற்காக பின் ஆதரவு படிகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

backlash : பின் விளைவு : இயந்திர முறை செயல்பாட்டின்போது, தாங்குவதன் விளைவாக இரண்டு பல் சக்கரங்களைப் போன்ற சேர்ந்தியங்கும் பகுதிகளின் செயல்.

backline : பின் பகுதி : ஒரு அமைப் பின் அட்டைகளில் மின்சுற்றுகள் மற்றும் எந்திரப் பகுதிகள் இணைக்கப்படுவதுண்டு. இதில் முதன்மை மின்சுற்று அட்டைகள் பொருத்தப் படும். தாய்ப்பலகை என்றும் அமைப் புப் பலகை என்றும் அழைப்பர்.

backlit : பின்னொளி : திரையின் பின் பக்கத்திலிருந்து ஒளி வருகின்ற எல்சிடி திரை. இதனால் பின்னணி பிரகாசமாகவும் எழுத்துகள் தெளிவாகவும் இருக்கும்.

back panel : பின் அட்டை : கணினி பெட்டியில் வெளிப்புறச் சாதனங்களை கணினியுடன் இணைபதற்காக



பின் அட்டை (Back panel)

பல துளைகளுடன் கூடிய பின் புறப்பகுதி.

back slash : பின் சாய்வுக்கோடு : விசைப் பலகையில் உள்ள ஒரு சிறப்புக் குறியீடு.

backspace : பின்னிடம் : அடையாள அம்பை இடதுபுறமாக ஒரு இடத்திற்கு நகர்த்துகின்ற விசைப் பலகையின் செயல்பாடு. ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்டதை கணினியில் பதிவதற்குமுன் மாற்றம் செய்ய அனுமதிக்கிறது.

backspace key : பின்னிட விசை (விரற் கட்டை).

backspace tape : பின் இட நாடா : ஒரு காந்த நாடாவை அது ஆரம்பித்த இடத்திற்கோ அல்லது பதிவேட்டிற்கோ திருப்பி அனுப்பும் செயல்பாடு.

backtracking : பின்தேடல் : ஒரு பட்டியலை தலைகீழாகத் தேடும் செயல் முறை.

backup : பின் ஆதரவு; பின்படி; ஆதார நகல்; மறுபடி : *1.* வழக்கமாகப் பயன்படுத்தப்படும் செயல் முறைகள் அல்லது கருவிகளில் அதிக சுமை ஏற்றப்பட்டோ அல்லது பழுதடைந்தோ போகும் வேளையில் பயன்படுத்துவதற்காக, கிடைக்கக்கூடிய மாற்றுக் கருவிகள் அல்லது செயல் முறைகள் பற்றியது. 2. மூலம் தொலைந்து போகக்கூடும் என்பதற்காக ஆணைத் தொடர் அல்லது தகவலுக்கு ஒரு பிரதி எடுத்தல்.

backup copy : பின் ஆதரவுப் பிரதி; பக்க ஆதரவுப் படி : மூலத் தகவல் தொகுப்பு அல்லது கோப்பு அழிந்து போகுமானால் பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ள கோப்பு அல்லது தகவல் தொகுப்பின் பிரதி.

backup disk : பாதுகாப்பு வட்டு : முக்கிய கோப்புகளின் பிரதி நகல்களை வைத்துக் கொள்ளப் பயன்படும் வட்டு. அதிக அடர்த்தி உள்ள நெகிழ் வட்டுகளும், வெளியே எடுக்கக் கூடிய வட்டுப் பெட்டிகளும் பாதுகாப்பு வட்டுகளாகப் பயன்பட வல்லவை.

backup files : பாதுகாப்புக் கோப்புகள்; பக்க ஆதரவு கோப்புகள் : மூலை கோப்புகள் சேதமாகி அல்லது அழிந்து போனால், பயன்படுத்தக் கூடிய கோப்புகளின் பிரதிகள்.

backup power : பாதுகாப்பு மின்சக்தி : மின்சாரம் நின்று போகுமானால் பயன்படுத்தக்கூடிய கூடுதல் மின்சார ஆதாரம்.

backup procedures : பாதுகாப்பு நடைமுறைகள் : பாதுகாப்பு அளிப்பதற்காக மாற்று நாடாக்கள் அல்லது காந்த வட்டுகளில் தகவல்கள் மற்றும் ஆணைத் தொடர்களை நகல் எடுப்பதற்கான நடைமுறைகள்.

backup programmer : துணை ஆணைத் தொடர் எழுதுபவர் : தலைமை ஆணைத் தொடர் எழுதுபவருக்கு உதவியாளராக இருக்கும் ஒரு ஆணைத் தொடர் எழுதுபவர்.

backup & recovery : பாதுகாப்பும் திரும்பப் பெறலும் : வன் பொருள் அல்லது மென் பொருள் பழுது ஏற்படும்போது இழந்து போன தகவல்களை மீண்டும் பெறக்கூடிய மனிதனாலான, எந்திரத்தினாலான நடைமுறைகளின் இணைப்பு. தகவல் தள வழிகளில் மாற்று ஏற்பாடும், அமைப்புப் பாதுகாப்பும் கணினி இயக்கங்களின் போக்கைக் கண்காணித்து பாதுகாத்து, திரும்பப் பெற உதவும்.

Backus, John : பேக்கஸ், ஜான் : 1957இல் ஐபிஎம் நிறுவனத்தில் பணி

யாற்றிய இவர், கணித, அறிவியல் மற்றும் பொறியியல் கணக்கீடுகளில் ஃபோர்ட்ரான் (Fortran) என்னும் ஒரு உயர்நிலைக் கணினி மொழியை உருவாக்கினார்.

Backus Normal Form (BNF) : பேக்கஸ் வழமை வடிவம் (பிஎன்எஃப்) : ஆணைத் தொடர் மொழிகளின் தொடரமைப்பை விளக்குவதற்கான குறியீடு.

backward - chaining : பின்னோக்கி சங்கிலியிடல் : தேவைப்படும் இலக்கிலிருந்து ஏற்கனவே தெரிந்த உண்மைகளை நோக்கிச் செல்லும் இலக்கு நோக்கிய காரண முறை.

backward compatible : பின்னோக்கிய தகவமைவு : கீழ்நோக்கிய தகவமைவு போன்றது.

backward read : பின்புறமாகப் படி : சில காந்த நாடா அமைப்புகளில் உள்ள வசதி. இதில் காந்த நாடா அலகுகள் தலைகீழாக நகர்ந்து கொண்டே, கணினி பின் இருப்பகத்திற்குள் தகவல்களை மாற்றித் தரும்.

badge reader : பட்டை படிப் பொறி : கடன் அட்டைகள் அல்லது சிறப்புக் குறியீட்டுப் பட்டைகளைப் படிக்கக் கூடிய முனையம்.

bad sector : குறையுடை பகுதி : வட்டில் உள்ள குறை காரணமாக சரியாகப் படிக்கவோ அல்லது எழுதவோ முடியாத வட்டின் ஒரு பகுதி.

BAK : பாக் : வேர்ட்ஸ்டார் சொல் செயலாக்க ஆணைத் தொடரில் கோப்பு உருவாக்கும் பழைய பதிப்பின் கோப்பு பெயர் நீட்டம்.

Baldwin, Frank Stephen : பால்ட்வின், ஃப்ராங்க் ஸ்டீஃபன் : பின்னோக்கி வரக்கூடிய நான்கு செயல்முறைகளையுடைய முதல் கணிப்பியை இவர் 1875இல் அமெரிக்காவில் கண்டுபிடித்தார்.

ball printer : பந்து அச்சுப்பொறி : மீண்டும் மாற்றக்கூடிய பந்து வடிவ அச்சு முனை உள்ள அச்சுப்பொறி. அச்சுப் பந்தினை மாற்றுவதன் மூலம் அச்சு எழுத்துகளை மாற்ற முடியும்.

ballistic gain : செலுத்து வினை ஆதாயம் : உருள் பந்து அல்லது சுட்டுப் பொறி தன்மை. கை வேகத்தை ஒட்டி சுட்டுக்குறி பயணம் செய்யும். பந்து வேகமாக ஓடினால், அடையாள அம்பும் அதைவிட அதிக தூரம் நகரும்.

balloon help : பலூன் உதவி : குறிப்பிட்ட பொருளின் மீது அடையாள அம்புவாகிய சுட்டுவான் தோன்றினால், கார்ட்டூன் பாணியில் திரையில் காட்டப்படும் உரையாடல் பெட்டி. மெக்கின்டோஷில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது.

band : பட்டை : தொலைத் தகவல் தொடர்பில் தொடர்ச்சியான அலை வரிசைகள், பட்டை அச்சுப் பொறியால் அச்சிடும் சாதனம்.

band pass filter : அலைக்கற்றை அனுப்பும் வடிகட்டி : மின்னணுச் சாதனம் அதன் வழியாக ஒரு குறிப் பிட்ட அலை வரிசையை மட்டும் செல்ல அனுமதித்து மற்றவற்றைத் தடுக்கும்.

band printer : வரிப்பட்டை அச்சுப் பொறி : எழுத்துகளின் தொகுதியை எடுத்துச் செல்வதற்கு இரும்பு வரிப் பட்டை அல்லது பாலியுரேத்தேன் பெல்ட்டைப் பயன்படுத்துகின்ற அழுத்தும் அச்சுச் சாதனம். ஒரு நிமிடத்திற்கு 300 முதல் 2,000 வரிகள் வரையிலான வேகத்தில் அச்சிடுவதுடன் பல கார்பன் பிரதிகளையும் இதனால் தரமுடியும்.

bandwidth : அலைக்கற்றை அகலம் : செய்தித் தகவல் தொடர்புகளில்

அதிக அலைவரிசைக்கும், குறைந்த அலை வரிசைக்கும் உள்ள வேறு பாடு. ஒரு நிமிடத்திற்கு இத்தனை துண்மிகள் அல்லது பாட்கள் (bauds) என்ற அளவை முறையில் ஒரு தகவல் தொடர்பு வழித்தடத்தைக் குறிப்பிடுவது.

bank : வங்கி : *1.* தகவல் தொடர்பு களில், இரண்டு குறிப்பிட்ட எல்லை களுக்கிடையிலான அலைவரிசை களின் பரப்பு. 2. செயல்பாட்டின் பரப்பு அல்லது தன்மை. 3. வட்டு அல்லது உருளை போன்ற இருமுக சாதனத்தில் வட்டமான பதிவு செய் யும் வழித்தடங்களின் தொகுதி.

banked memory : சேமிக்கப்பட்ட நினை வகம் : வழக்கமான 64கே ராம் நினை வகத்தை அதிகப்படுத்தும் முறை. முகவரியிடலில் ஏற்படும் குழப் பத்தைத் தவிர்க்க 8 துண்மி நுண் செய லகங்களில் இருந்து மேலும் பெரிய அளவுள்ளவற்றுக்கு பொதுவாக 1 மிமிகு எட்டியல் உள்ளவற்றுக்கு முகவரியிடுவது. 64கே -வுக்கு மேல் உள்ள அட்டைகளை தேவைப்படும் போது மட்டும் மென்பொருள் கட்டுப் பாட்டின் மூலம் துவங்கப்படும்.

banking software : வங்கியியல் கணினிச் செயல்முறை.

banking through telephone : தொலை பேசி வழி வங்கிச் செயல்பாடு.

bank switching : வங்கி மாற்றம் : மின் னணு மின்சுற்றுகளை ஏற்படுத்துதல், நிறுத்துதல். மற்ற அலகுகள் நிறுத்தப் படும்போது ஒன்று மட்டும் செயல் படும். தேவையுள்ள முறையில் எல்லா மின்சுற்றுகளையும் முகவரி யிடுவதையோ; இயக்கப்படுவதை யோ தடுக்கும் கணினி அமைப்பின் வடிவமைப்பு.

bar chart : பட்டை வரைபடம் : வணிக வரைபடத் தொகுப்புகளில் பரவ லாகப் பயன்படும் வரைபடம். கால அட்டவணையைக் காட்டுவதற்குப் பயன்படுவது.

bar code : பட்டைக் குறியீடு; பட்டைக் கோடு; பட்டை வரி : வருடியினால் படிப்பதற்காக ஒட்டுச் சீட்டில் பயன் படுத்தப்படும் குறியீடு. சில்லறை விற்பனைப் பொருள்களை அடை யாளம் காண பட்டைக் குறியீடுகள் பயன்படுகின்றன. நூல் நிலையங் களில் உள்ள புத்தகங்களையும் இரயில் வண்டி பெட்டிகளிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

bar-code reader : பட்டைக் குறியீடு படிப்புப் பொறி; பட்டைக் கோடு படிப் பான்; பட்டை படிப்பான்; பட்டைக் குறி யீட்டுப் படிப்பான் : பிரதிபலிக்கும் ஒளியின் மூலம் பட்டைக் குறியீடு களைப் படிக்கும் ஒரு ஒளிப்பட மின் சக்தி வருடி.

bar-code scanner : பட்டைக் குறியீடு வருடி : இணையான பட்டைகளின் வடிவத்தில் பதிவு செய்யப்பட்ட எழுத்துகளைக் கொண்ட பொருள் களின் தகவலைப் படிக்கக்கூடிய ஒளிச் சாதனம். இருப்பு வைப்பதற் காகவோ அல்லது செயலாக்கத்திற் காகவோ எழுத்துகள் இலக்க சமிக் ஞைகளாக மாற்றப்படுகின்றன.

bar code wand : பட்டைக் குறி யீட்டுக் கோடு.

bare board : வெற்று அட்டை; வெறும் பலகை : எந்த ஒரு மின்னணுச் சாதன மும் இல்லாத அச்சிட்ட மின்சுற்று அட்டை.

bar printer : அட்டை அச்சகம் : வரியின் குறுக்கே அடுத்தடுத்து நிற்க வைக்கப் பட்ட பல பட்டைகளைப் பயன் படுத்தி அழுத்தி அச்சிடும் சாதனம்.

barrel distortion : உருளைச் சிதைவு : பக்கவாட்டில் வெளியேறக் கூடிய திரைக்காட்சிச் சிதைவு.

barrel printer : உருளை அச்சுப் பொறி : Drum Printer-க்கு வேறொரு பெயர்.

base : ஆதாரம் ; தளம்: 1. எண் முறை யின் ஒரு மூலம். 2. எமிட்டரிலிருந்து வெளியேற்றப்பட்ட சிறுபான்மை கடத்திகளைப் பெறுகின்ற, இணைப்பு மின்மக் கடத்தியைப் பெறுமிடத் திற்கும் எமிட்டருக்கும் இடையே உள்ள பகுதி. 3. அச்சிட்ட மின்சுற்று அட்டையில் அச்சிட்ட அமைப்பைத் தாங்கும் பகுதி.

base address : ஆதார முகவரி; அடிப் படை முகவரி; அடி முகவரி : ஒரு குறிப் பிட்ட இருப்பிடத்தின் முழு முக வரியை உருவாக்க துணை முகவரி யுடன் சேரும் குறிப்பிட்ட முகவரி.

base alignment : அடிப்பகுதி அடுக்கு தல் : அடிக்கோடுகளில் பலவித அள வுகளில் எழுத்து வடிவங்களை அடுக்குதல்.

baseband : அடிப்படைக் கற்றை; தாழ் அலைவெண் : தாழ் அலை வெண் வழித்தடத்தில் முழு பட்டை அகலமும் பயன்படுத்தப்பட்டு டிடிஎம்மை இடையில் செருகி பல்தொகுதி தகவல்களை ஒரே நேரத்தில் அனுப்ப முடியும்.

baseband networking : தாழ் அலை வெண் இணையம் : அனுப்பும் சாதனத் தில் இலக்கமுறை சமிக்ஞையை நேரடியாக வைக்கும் தகவல் தொடர்பு முறை.

baseband transmission : தாழ் அலை வெண் பரப்புதல் : கோயச்சியல் குழாய் மூலமாக குறைந்த தூரத்துக்கு குறைந்த அலைவரிசையில் சமிக் ஞைகளை அனுப்பும் முறை.

base case disk : அடிப்பெட்டி வட்டு : சிடிl-இல் பேஸ் கேஸ் அமைப்பில் இயங்கக்கூடிய வட்டு.

base case system : அடித்தட்டு அமைப்பு : சிடிl முழு அமைப்பு அளவுகளில் குறைந்த அளவே பயன் படுத்துதல்.

base class : அடிப்படை இனக்குழு : பொருள் சார்ந்த ஆணைத் தொடர் களில், இனக்குழு அமைப்பில் பொதுவான அமைப்பு. பெரும்பா லான பயன்பாடுகளில் இவை உண்டு. பல மொழிகள் பழங்கால அடிப்படை இனக்குழுவை வரை யறுக்கின்றன. இவை எல்லா இனக் குழுக்களுக்கும் இறுதி உயர் இனக் குழுவாக அமைகின்றன.

base/displacement : அடிப்படை / இடமாற்றம் : நினைவகத்தின் எந்த இடத்தில் இருந்து ஆணைத் தொடர் களை இயக்கும் தொழில் நுட்பம். எந்திர மொழி ஆணைத் தொடர் களில் உள்ள முகவரிகள் ஆரம்பத்தில் இருந்ததை நோக்கி இடம் மாறிய முகவரிகள். ஆணைத் தொடர் இயக் கப்படும்போது மாறிய முகவரியை வன்பொருளானது அடிப்படை முக வரிக்கு அளித்து முழு முகவரியைப் பெற்றுத் தரும்.

base point : அடிப்படை எழுத்து வடி வம் ;அடிப்படைப் புள்ளி : எண் முறை யின் ஆரம்ப நிலை. வேறொன்றும் குறிப்பிடவில்லையென்றால் அச் சடிக்கப் பயன்படும் எழுத்து வடிவம்.

baseline : அடிப்படைக்கோடு : சிறிய எழுத்தின் அடிப்பகுதிகள் வரிசைப் படுத்தப்படும் குறுக்கு வட்டக் கோடு.

baseline document : ஆதார ஆவ ணம் : தகவல் செயலாக்க அமைப்

பில் ஒரு தகவலை மாற்றம் செய்வதற்குத் தேவைப்படும் ஒரு குறிப்புதவி ஆவணம்.

base memory : அடிப்படை நினைவகம் : ஒரு பிசி-யில் இயங்கும் டாஸ் ஆணைத் தொடர்களுக்குக் கிடைக்கும் முதல் 640 கிலோ எட்டியல் (பைட்) நினைவகம். பிசி-யின் நினைவகப் படம்.

base name : அடிப்படைப் பெயர் : புள்ளியால் பிரிக்கப்படுவதற்கு இடது புறம் உள்ள கோப்புப் பெயரின் பகுதி. எட்டு எழுத்துகள் வரை நீளம் இருக்கும். ஆரம்பப் பெயர் அல்லது ஒரு கோப்பின் முதல் பெயராகவும் இருக்கும்.

base register : அடிப்படைப் பதிவகம்: தொடர்பு முகவரியை முழு முகவரியாக மாற்றும் பட்டியல் பதிவகம்.

BASIC : ஒரு கணினி மொழி பேசிக் (தொடக்கநிலை பல்திறன் குறியீட்டுப் பரிமாற்ற மொழி : Beginners All Purpose Symbolic Instruction Code என்னும் நீண்ட பெயரின் ஒவ்வொரு சொல்லின் முதல் எழுத்துகளின் சுருக்கப் பெயர். கற்பதற்கும் பயன்படுத்துவதற்கும் எளிமையான ஒரு கணினி ஆணைத் தொடர் மொழி. மிகக் குறைவான ஆணைகளும் எளிய சொற்றொடர் வடிவங்களும் உடையது. டார்ட் மவுத் கல்லூரியில் ஜான் கெம்னி மற்றும் தாமஸ் குர்ட்ஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்டது. சொந்தக் கணினியிலும் வணிக, தொழில் துறை, நுண்கணினிகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

basic contents : அடிப்படை உள்ளடக்கங்கள் :

basic FORTRAN : அடிப்படை ஃபோர்ட்ரான் : ஃபோர்ட்ரான் ஆணைத்தொடர் மொழியில் அமெரிக்காவில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு பிரிவுகளில் ஒன்று.

BASIC in ROM : ரோமில் பேசிக் : பயன்படுத்துவோருக்கு எப்போதும் கிடைக்கும் வகையில் படிக்க மட்டும் நினைவகத்தில் சேமித்து வைத்துள்ள பேசிக் மொழி பெயர்ப்பி.

Basic Input Output System (BIOS) : பேசிக் உள்ளீடு / வெளியீடு அமைப்பு : வட்டு இயக்கி தொடர்பானது தவிர மற்ற உள்ளீடு / வெளியீடு பணிகளைக் கட்டுப்படுத்தும் செய்லாக்க அமைப்பின் பகுதி.

bat file (Batchfile) : பேட் கோப்பு : ஒன்றையடுத்து ஒன்றாக இயக்கப் பட்டு வரும் டாஸ் அல்லது ஓஎஸ்/2 கட்டளைகளின் தொகுதியைக் கொண்ட கோப்பு.

Basic linkage : அடிப்படை இணைப்பு: ஓர் ஆணைத் தொகுதியின் சிறு செயல்கூறு அல்லது ஒரு ஆணைத் தொகுதி அல்லது ஒரு கணினி முறைமை - இவற்றில் ஒன்றில் அடிக்கடி பயன்படுத்தப்படும் ஓர் இணைப்பு முறை. ஒவ்வொரு முறையும் இவ்விணைப்பு ஒரே மாதிரியான விதிமுறைகளையே பின்பற்றும்.

BASIC PLUS : பேசிக் பிளஸ் : பேசிக் மொழியை நீட்டித்தல். தகவலைக் கையாளுதல் போன்ற சக்திமிக்க செயல் திறன்கள் சேர்க்கப்பட்ட பேசிக் மொழி.

batch : தொகுதி : 1. ஒரு கணினியில் செயலாக்கத்திற்காக ஒரே தொகுதியாகக் கருதப்படும் ஆணைத் தொடர்கள் அல்லது பதிவுகளின் குழு. 2. தொகுதி முறை செயலாக்கத்தைப் பயன்படுத்துதல்.

batch control : தொகுப்புக் கட்டுப்பாடு : தகவலின் சரியான தன்மையை உறுதி செய்ய கட்டுப்பாடுகளின் தொகுப்பைப் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தினை இது குறிப்பிடுகிறது.

batch control document : தொகுப்புக் கட்டுப்பாடு ஆவணம் : உள்ளீடு தகவல் தொகுதியைக் கொண்ட கட்டுப்பாட்டு ஆவணம். இதில் கட்டு எண், தொகுப்பு தேதி, ஆவணங்களின் எண்ணிக்கை, உள்ளீடு தகவலின் கட்டுப்பாட்டு மொத்த எண்ணிக்கைகள் போன்ற தகவல் இருக்கும்.

batch file : தொகுப்புக் கோப்பு : வரிசையாக இயக்கப்படும் கட்டளைகளின் பட்டியலைக் கொண்ட டாஸ் கட்டளைகள் செயல்படுத்தப்படும். ஒரு குறிப்பிட்ட (திரும்பச் செய்யும்) பணியை நிறைவேற்ற அடிக்கடி விசைகள் அடிப்பதைத் தவிர்க்க தொகுப்புக் கோப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

batch job : தொகுப்பு வேலை.

batch processing : தொகுதிச் செயலாக்கம்; தொகுப்பு முறை : 1. செய்யப்படவேண்டிய ஆணைத் தொடர்களை குறியீடு செய்து தொகுத்து குழுக்கள் அல்லது தொகுதிகளாகச் செயலாக்கத்திற்கு தயார் செய்யும் முறை. பயனாளர் ஒரு கணினி மையத்திற்கு வேலையைக் கொடுத்தால் அங்கு ஆணைத் தொகுதியாக்கப்பட்டு செயல்படுத் தப்பட்டபின் திருப்பி அளக்கப்படுகிறது. பயனாளருக்கு எந்திரத்துடன் நேரடி தொடர்பு இல்லை. 2. நீண்ட காலமாக சேர்க்கப்பட்டு வந்த ஒரு தகவல் தொகுதியையோ அல்லது சம்பளப் பட்டியல், விலைப் பட்டியல் தயாரித்தல் போன்று அடிக்கடி செய்யும் பணிகளையோ செயலாக்கப்படுத்தல்.

batch programme : தொகுப்பு ஆணைத் தொடர் : உரையாடல் முறையில் ஆணைத் தொடர் பிரித்தல் அல்லது அறிக்கை பட்டியலிடல் போன்றவை.

batch session : தொகுப்பு நேரம் : ஒரு முழு கோப்பையுமே புதுப்பித்தல் அல்லது அனுப்புதல். ஆரம்பம் முதல் கடைசிவரை தடையின்றி நடைபெறுவது. Interactive session-க்கு எதிர்ச் சொல்.

batch stream : தொகுப்பு ஓட்டம் : கணினியில் செயல்படுத்தக்கூடிய தொகுப்பு ஆணைத் தொடர்களின் திரட்டு.

batch total : தொகுதி முழுமை ; தொகுதிக் கூட்டல் : ஒரு பதிவேடுகளின் தொகுதியில் உள்ள வகையுருக் கூட்டங்களின் கூட்டுத் தொகை. தொகுதியுடன் தொடர்புடைய வேலைகளின் துல்லியத்தைச் சோதிக்கப் பயன்படுத்தப்படுவது.

Batten system : பேட்டன் அமைப்பு : டபிள்யு. இ. பேட்டன் கண்டுபிடித்த பட்டியலிடும் முறை. தனி இயல்புகளை ஒருங்கிணைத்து குறிப்பிட்ட ஆவணங்களை அடையாளம் கண்டறியப் பயன்படுவது. பீக்-ஏ-பூ என்றும் சிலசமயம் அழைக்கப்படுகிறது. அட்டைகளின் மேல் அட்டைகளை வைத்து துளைகளை ஒப்பிட்டு துளைகளின் ஒற்றுமையைச் சோதித்தறிவதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

battery backup : மின்கல பின்னாதரவு; மாற்று மின்கல அடுக்கு: மின் தடங்களின்போது மாறி வரும் தகவலை கணினி இழந்து விடக்கூடாது என்பதற்காக ஏற்படுத்தப்படும் துணை மின்சக்தி.

baud : செய்தி வேகம் : தகவல் அனுப்பப்படும் வேகத்தைக் கண்டறியும் அலகு.

Baudot code : பாடாட் குறியீடு : ஒரு எழுத்தை ஐந்து துண்மிகள் மூலம் குறிப்பிட்டு தகவல்களை அனுப்பும் ஒரு குறியீட்டு முறை. பல தொலை அச்சு அமைப்புகளில் வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது. பன்னாட்டு தந்தி முறை குறியீட்டு எண் என்றும் அழைக்கப்படுகிறது. 1950இல் இந்த குறியீட்டு முறையே பன்னாட்டுத் தந்தித் தொடர்புக்கான தர நிர்ணயங்களில் ஒன்றாக ஆகிவிட்டது.

Baudot Emile : பாடாட் எமிலி : பாடாட் குறியீட்டு முறையை 1880-இல் கண்டுபிடித்த தந்தி முறையில் அச்சிடுதலில் முன்னோடி.

baud rate : செய்தியனுப்பும் வேக விகிதம் : தகவல் அனுப்புதலின் வேகத்தின் அளவுமுறை. ஒரு நொடிக்கு இத்தனை துண்மிகளுக்குச் சமம் என்பதைக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு எழுத்துக்கும் 8 துண்மி தேவைப்படுகிறது. ஃபிரெஞ்சுக் கண்டுபிடிப்பாளரான ஜே.எம்.இ. பாட் என்பவரின் பெயர் இடப்பட்டது.

Baum.l.Frank : பாம் எல். ஃப்ராங்க் : எந்திரங்களை ஒரு நன்மை தரும் சக்தியாகக் கருதி இந்த நூற்றாண்டின் நன்னம்பிக்கையில் பங்கேற்றவர். அவரது புகழ் பெற்ற ஓஇஸட் வரிசை நூல்களில் வரும் டிக்டாக் என்பவன் கடிகாரம் போன்று வேலை செய்யும் பித்தளை மனிதன். சொல்லி வைத்ததை எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் செய்யக் கூடியவன்.

bat : வளைவு : மின்னணு சாதனங்களைப் பொருத்தக்கூடிய அலமாரி அல்லது அடுக்கு. கருவிகளின் வளைவு என்றும் அழைக்கப்படுகிறது.

BCD : பிசிடி : Binary Coded Decimal என்பதன் சுருக்கப் பெயர்.

BCS : பிசிஎஸ் : இங்கிலாந்தின் கணிப்பொறி சங்கம் எனப்படும் தொழில் முறை சங்கம். British Computer Society என்ற பெயரின் குறும்பெயர்.

BDOS : பிடிஓஎஸ் : Basic Disk Operating system என்பதன் குறும்பெயர். சில செய் முறை அமைப்புகளில் ஒரு குறிப்பிட்ட வட்டு இயக்கிக்கு ஏற்ப சரிப்படுத்தும் அந்த அமைப்பின் பகுதி.

beacon : பீகன் : ஒரு கட்டமைப்பில், ஒரு முனையில் இருந்து அனுப்பப்படும், கட்டமைப்புச் சிக்கல் பற்றிய அபூர்வ செய்தி.

beaconing : பீகனிங் : ஒரு வளாக பிணையமாகிய லேனில் (Lan) தவறான நிலைகளை சமிக்ஞை மூலம் அனுப்புதல்.

bead : பீட்கள் : ஆணைத் தொடரின் ஒரு சிறிய துணை நடைமுறை. பல பீட்கள் ஒன்று சேர்ந்தால் 'நூல்' (த்ரெட்) எனப்படும். கோஆக்சியல் கம்பியில் இன்சுலேட்டரைச் சுற்றியுள்ள உள்கம்பி. தகவல் தள ஆவணத்தில் தேவையின்றி முன்னால் செல்வது.

beam penetration CRT : பீம் உட்செலுத்தும் சி ஆர் டி : நிறத்தை உருவாக்கும் நெறியக் காட்சித் திரை அமைப்பு. சிகப்பு மற்றும் பச்சை கந்தகம் பூசப்பட்ட திரையில் செலுத்தப்படும் மின்னணு ஒளிக்கற்றை.

bebugging : பிழை ஏற்படுத்துதல் : ஒரு ஆணைத் தொடரில் தெரிந்த பிழைகளையே ஏற்படுத்தி, மாணவ ஆணைத் தொடர் எழுதுபவர்களின்

பிழை நீக்கும் விகிதத்தை சோதிப்பதற்கான பன்னாட்டு முறை.

beenet : பீனெட் : ஒரு லேன் (Lan). இதில் தகவல் அனுப்புதல் வேகம் ஒரு நொடிக்கு ஒரு மீமிகு எட்டியல்.

beep : பீப் ; விளி : ஒரு கணினியின் ஒலி பெருக்கி ஏற்படுத்தும் ஓசை. சில கணினி ஒலிபெருக்கிகளில் ஒரு ஓசையை ஏற்படுத்துவதற்காக சில ஆணைத் தொடர் மொழிகளில் உள்ள ஒரு ஆணை.

beginning of tape marker : நாடா காட்டியின் ஆரம்பம் : காந்த நாடாவின் ஒரு புள்ளியைக் காட்டும் அடையாளம். அங்கிருந்துதான் பெரும்பாலும் தகவல் துவங்கும்.

behaviour : நடத்தை : நோக்கம் சார்ந்த ஆணைத் தொடரில் ஒரு பொருள் எவ்வாறு வினையாற்றுகிறது, எதிர்வினையாற்றுகிறது என்பதை அதன் நிலைமாற்றங்கள் மற்றும் செய்தி அனுப்புதலின் மூலம் அறியலாம்.

Bell 103 : பெல் 103 : 300 செய்தி வேகம் (Baud) மோடம்களின் தர நிருணயம்.

Bell 212A : பெல் 212ஏ : 12கேபி செய்தி வேக மோடெம்களின் தர நிருணயம்.

Bell laboratories : பெல் ஆய்வகங்கள்: ஏ ட்டி அண்டு ட்டி நிறுவனத்தின் ஆராய்ச்சி மையம். உலகப் புகழ் பெற்றது. பல கணினி வன்பொருள் மென்பொருள் கோட்பாடுகள் மற்றும் ஆணைத் தொடர்கள் பெல் ஆய்வகங்களில் உருவாக்கப்பட்டன.

bells and whistles : மணிகளும் சீட்டிகளும் : வரைபடத் தொகுப்பு, வண்ணக் காட்சித் திரைகள், ஓசை மற்றும் பிற வெளிப்புற உறுப்புகள் உள்ளிட்ட ஒரு கணினி அமைப்பில் சில அல்லது கூடுதலான அம்சங்களை விருப்பம்போல் விளக்குவது.

belt - bed plotter : வார்ப்பட்டை வரைவி : காகிதத்தைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்க தொடர் பெல்ட்டைப் பயன்படுத்தும் எழுது கோல் வரைவி.

BEMA : பிஈஎம்ஏ : Business Equipment Manufacturer's Association என்பதன் குறும்பெயர்.

benchmark : திறன் மதிப்பு; தரஅளவு; மதிப்பீடு செய்தல்: ஒரு கணினியின் செயல் திறனை மதிப்பீடு செய்ய ஒரு ஆணைத் தொடரைப் பயன்படுத்துவது போன்ற அளவீடுகளைச் செய்வதைக் குறிப்பிடும் சொல். பொருள்களை ஒப்பீடு செய்ய உதவும் ஒரு தர நிருணயம்.

bench mark programme : தர நிருணய ஆணைத்தொடர்; மதிப்பீட்டு ஆணைத் தொடர்: ஒரு கணினியின் திறன் மற்றும் பிற அளவைகளை மதிப்பிடும் ஆணைத் தொடர்.

benchmark problem : திறன் மதிப்பீட்டுச் சிக்கல் : இலக்கவியல் கணினிகளின் செயல் திறனை ஒப்பிட்டு, மதிப்பீடு செய்ய வடிவமைக்கப்பட்ட சிக்கல்.

benchmark test : திறன் மதிப்பீட்டுச் சோதனை : முழு செயல் வேகத் திறமையை ஒப்பிடுவதற்காக பல்வேறு கணினிகளில் இயக்கப்படும் ஒரு கணினி ஆணைத் தொடர். குறிப்பிட்ட பயன்பாட்டு சூழ்நிலையில் கணினிக் கருவியின் செயல் திறனை அளக்கப் பயன்படுத்தப்படும் சோதனை.

Bernoulli cartridges : பெர்னவுலி பேழைகள் : நிலைவட்டளடு மற்றும்

நெகிழ்வட்டு கலந்த ஒரு சேமிப்பகச் சாதனம்.

Berr Clifford : பெர்ரி கிளிஃபோர்டு : 1939இல் ஜான் அடனசாஃபுடன் சேர்ந்து ஏபிசி எனப்படும் முதல் மின்னணு இலக்கவியல் கணினியைக் கண்டுபிடித்தவர்.

beta testing : பீட்டா சோதனையிடல் : பொது மக்களுக்கு வெளியிடுவதற்கு முன்பு வன்பொருள், மென்பொருள்களை தேர்ந்தெடுத்த சிலரிடம் கொடுத்துப் பயன்படுத்தச் செய்து அதில் ஏற்படும் பிழைகளைக் கண்டறிதல்.

beta test site : பீட்டா சோதனை செய்யுமிடம் : புதிதாக உருவாக்கப்பட்ட கணினி அமைப்பை சாதாரண இயக்கச் சூழ்நிலையில் பல மாதங் களுக்குச் சோதனை செய்யும் ஒரு வித செயலாக்க மையம் அல்லது ஒரு கிளை அலுவலகம் அல்லது பிரிவு. முறையாக வெளியிடப்படும் முன்பு ஏராளமான பேர்களுக்குக் கொடுத்து பீட்டா சோதனை செய்யப்படும் மென்பொருள்.

bezier : பெஸியர் : அல்கோரிதத்தில் உருவாக்கப்படும் ஒருவகை வளைவு. ஃபிரெஞ்சு கணித மேதை பியரே பெஸியரின் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. ஏராளமான வடிவங்களை வரையறுக்க பெஸியர் வளைவுகளுக்கு ஒரு சில புள்ளிகளே போதுமானது. ஓவிய ஆணைத் தொடர்களுக்கு உகந்தது.

bias : சாய்வு மதிப்புகளின் தொகுதியின் சராசரியிலிருந்து ஒரு குறிப்பிட்ட மதிப்பு விலகிச் செல்லும் அளவு.

bibliography : நூல் விவரத் தொகுதி : 1. ஆவணங்களின் விவரங்களைக் கூறும் பட்டி. 2. விவர நூல் பட்டியல். 3. ஒரு தலைப்பு அல்லது ஆசிரியர் தொடர்பான ஆவணங்களின் பட்டியல். 4. பட்டி அல்லது பட்டியலைத் தொகுக்கும் செயல்முறை.

bigas : பைகாஸ் : Business International Country Assessment Service என்பதன் குறும்பெயர்.

bidirectional : இரு திசையில் : ஒரு கம்பியில் தகவல் இரு திசைகளிலும் போகலாம். இரண்டு திசையிலும் ஒவ்வொரு செலுத்தி/வாங்கி (Transceivers)களும் வாங்கி வெளியிடும். பொதுவாக இரு திசை இணைப்புத் தொகுதிகள் பேருந்துகள் நிலையிலோ அல்லது திறந்த கலெக்டர், டிரான்சிஸ்டர், டிரான்சிஸ்டர் தருக்க முறையில் அமைந்திருக்கும் அளவைகளாகவோ இருக்கும்.

bidirectional bus : இருதிசை மின் இணைப்புத் தொகுதி : ஒரே மின் இணைப்புப் பாதை இருதிசைகளிலும் தகவல் மாற்றப்படுதல்.

bidirectional printer : இருதிசை அச்சுப் பொறி : அச்சிடும் தலை திரும்பி வருவதன் தாமதத்தைத் தவிர்க்க இடது புறத்திலிருந்து வலப்புறமாகவும், வலதுபுறத்திலிருந்து இடப்புறமாகவும் அச்சிடும் அச்சுப் பொறி.

biform : இரு வடிவம் : எழுத்து வடிவ இயலில், சிறிய எழுத்து மற்றும் சிறிய தலைப்பெழுத்துகளைச் சேர்த்து உருவாக்கும் சிறிய எழுத்து அகரவரிசை.

bifurcation : இரண்டாகப் பிரித்தல்; இரு கூறாக்கல் : இரண்டு, இரண்டாக மட்டும் வெளியீடு வருகின்ற சூழ்நிலை. 1 அல்லது 0, உண்மை அல்லது பொய், இயக்கு அல்லது நிறுத்து போன்றவை.

Big Blue : பிக்புளூ : ஐபிஎம் நிறுவனத்தின் இன்னொரு பெயர். ஒரு வேறுபாடான நீல வண்ணத்தை அதன் கணினிகள் மற்றும் பிற கருவிகளில் அந்த நிறுவனம் பயன்படுத்துவதால் இப்பெயர் ஏற்பட்டது.

billion : பில்லியன் : ஓராயிரம் மில்லியன்: நூறுகோடி.

bin : கூடை : வெற்றுக் காகிதம் அல்லது முன்பே அச்சடிக்கப்பட்ட படிவங்களைப் படித்துக் கொள்ள அச்சுப் பொறியில் உள்ள ஒரு தட்டு. முடிந்த வேலையை வாங்கிக் கொள்வதற்கும் கூடை பயன்படுத்தப்படலாம். நிலைவட்டில் பலவகைப் பொருளுக்கான பட்டியல் செயலாக்க அமைப்பு மற்றும் சேவை ஆணைத் தொடர்கள் இதில் இடம் பெறும்.

BINAC : பினாக் : Binary Automatic Computer என்ற கணினியின் குறும் பெயர். 1949ஆம் ஆண்டு எக்கார்த் மாக்லி நிறுவனம் உருவாக்கியது.

binaries : இரும எண்கள்; ஈரிலக்க முறை : எந்திர மொழியில் இயங்கக் கூடிய ஆணைத் தொடர்கள்.

binary : இருமை : 2-ஐ அடிப்படையாகக் கொண்ட எண்முறை அல்லது ஒரு தன்மை அல்லது பொருள் தேர்ந்தெடுத்தல் உள்ளடக்கியது. இரண்டு வாய்ப்புகள் மட்டுமே உள்ள ஒரு சூழ்நிலை.

binary arithmetic : இருமக் கணக்கு; ஈரிலக்கக் கணக்கு : 1. பதின்ம எண் முறைக்குச் சமமான கணக்கீட்டு முறை. ஆனால், இதில் 0,1 ஆகிய இரண்டு இலக்கங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. 2. ஒரே நேரத்தில் இரண்டு மதிப்புகளை மட்டுமே வைத்து எல்லா கணக்குகளும் செய்யப்படுவதைக் குறித்தல்.

binary card : இரும எண் அட்டை : தரமான துளை அட்டை 0 அல்லது 1 -ஐக் குறிப்பிட 12 வரிசைகளில் 80 பத்திகளில் 960 துளை யிடும் இடங்களைக் கொண்டது.

binary code : இருமக் குறியீடு; ஈரிலக்கக் குறியீடு : எந்தத் தகவலையும் துண்மிகள் 0 அல்லது 1இன் மூலமே குறியீடு செய்யும் குறியீட்டு முறை 8ASCII மற்றும் EBCDIC போன்ற இரண்டு முறைகளில் இவை பயன்படுத்தப்படுகின்றன. 0 என்றால் நிறுத்து. 1 என்பது இயக்கு.

binary coded character : இருமக் குறியீட்டு எழுத்து : எண் குறியீட்டு முறையில் ஒன்று. இதில் பதின்ம இலக்கங்கள், எழுத்துகள், சிறப்புக் குறியீடுகள் ஆகியவை, ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட, தொடர்ச்சியான இருமை இலக்கங்களினால் குறிப்பிடப்படும் எழுத்து-எண் கொண்ட குறிகளைக் குறிப்பிடுகிறது.

binary coded decimal; (BCD) : இருமக் குறியீட்டுப் பதின்மம் ; பிசிடி : ஒரு வகையான கணினி குறியீட்டு முறை. இதில் ஒவ்வொரு பதின்ம இலக்கமும் 1-க்கள் 0-க்கள் கொண்ட நான்கு இலக்கத் தொகுதியால் குறிப்பிடப் படுகின்றன.

binary coded decimal inter change code : இருமக் குறியிட்டு பதின்ம மாற்றக் குறியீடு : 64 எழுத்து மாற்ற வசதி கொண்ட 6 துண்மி உள்ளீட்டுக் குறிப்பீடு.

binary coded decimal number : இருமக் குறியீட்டு பதின்ம எண் : நான்கு எண்களைக் கொண்ட தொடர்ச்சியான இரும எண் தொகுதிகள். பதின்ம எண்ணில் குறிப்பிடப் படும் மதிப்புக்குச் சமமானது என்று

7	5	2	1	3
0111	0101	0010	0001	0011

இருமக் குறியீட்டு பதின்ம எண்
(Bimary coded decimal number)

குறிப்பிட முடியாது. ஆனால் பதின் மான எண்ணுக்கு ஒவ்வொன்றுக்கும் இரும முறை எண் உண்டு. எடுத்துக் காட்டாக 264-க்கு இரும எண் 0010 0110 0100.

binary coded octal : இருமக் குறியீட்டு எட்டிலக்கம் : 3 துண்மிகள் தொகுதி யில் எட்டிலக்க அல்லது எண்ம இலக்கங்களைச் சேமித்தல்.

binary compatible : இரும ஏற்பமைவு; இரும தகவமைவு : ஒன்று போலவே இரும வடிவத்தில் உள்ள எந்த ஒரு தகவல் வன்பொருள் அல்லது மென் பொருள் அமைப்பையும் குறிப்பிடு கிறது.

binary counter : இருமக் கணக்ககம் : ஒவ்வொரு உள்ளீட்டுத் துடிப்புடனும் 1 ஈரிலக்கம் சேர்க்கும் கணக்ககம்.

binary device : இருமச் சாதனம் : 1. நிறுத்துதல் அல்லது இயக்குதல் என்று இயங்கும் மின்சார பொத்தா னைப் போன்ற இரண்டு நிலைகளில் பதிவு செய்யும் சாதனம். 2. கணினி அறிவியலில், இரும வடிவில் பதிவு செய்யும் சாதனம் அல்லது அவ்வாறு குறியீடு செய்யப்பட்டதைப் படிக் கும் சாதனம்.

binary digit : இரும இலக்கம் : 'பிட்' துண்மி என்று சுருக்கப் பெயர் அளிக்கப்பட்ட 0 அல்லது 1 என்ற எண்களில் ஏதாவது ஒன்று.

binary encoding : இருமக் குறியீட மைத்தல் : எந்த ஒரு மொழியிலும் எழுத்துத் தொகுதியை இரும வடி வத்தில் குறிப்பிடுதல்.

binary field : இருமப் புலம் : இரும எண்களை மட்டும் கொண்டுள்ள புலம். கணக் கீடுகளுக்காக இரும எண் களை சேமிப்பதையோ அல்லது சொற்றொடர், வரைகலை உருவங்கள், குரல், ஒளிக்காட்சி போன்ற எத்தகைய தகவலையும் வைத்துக் கொள்ளும் திறனுள்ள புலமாகவோ இருக்கலாம்.

binary file : இருமக் கோப்பு: எந்திரக் குறியீட்டில் இருமக் குறியீடுகள் கொண்ட கோப்பு.

binary format : இரும உருவமைவு; இரும வடிவம் : பிசிடி வடிவத்திற்கு மாறாக முழுமையும் இரும வடிவத் தில் சேமிக்கப்பட்டுள்ள எண்கள். தகவல், உரை, படங்கள், வரை கலை, குரல், ஒளிக்காட்சி போன்ற இருமக் குறியீட்டு வடிவத்தில் சேமிக்கப்படும் தகவல் விவரங்களை இழக்காமல் எந்த கோப்பையும் அனுப்பக் கூடிய கோப்பு மாற்றல் குறியீடு.

binary fraction : இரும பின்னங்கள் : ஒவ்வொரு இரும இலக்கம் அதற்கு வலதுபுறம் வரும் இலக்கத்தைப் போல இரண்டு மடங்கு மதிப்பு கொண்டது. பதின்மப் புள்ளிக்கு முன்போ அல்லது பின்போ இருமக் குறியீட்டு பதின்மமாக வந்தாலும் அதே மதிப்பையே கொண்டிருக்கும். சான்றாக 11-11 என்பது இருமத்தில் 2+1+0.5+0.25 அதாவது பதின்மான எண்ணில் 3.75

binary notation : இரும எண்முறை : இருமக் குறிமானம் 2-ஐ அடிப்படை

யாகக் கொண்டு எழுதப்பட்ட எண் முறை.

binary number : இரும எண் : ஒவ்வொரு இலக்கத்திற்கும் 2ஐ அடிப் படையாகக் கொண்ட ஒரு மதிப்பு அளிக்கப்படுகிறது. 0, 1 ஆகிய இரண்டு இலக்கங்களே பயன் படுத்தப்படுகின்றன.

binary number system : இரும எண் முறை : 2-ஐ அடிப்படையாகக் கொண்ட எண்முறை.

binary number system or code : இரும எண்முறை அல்லது குறியீடு : 0 மற்றும் 1 ஆகிய இரண்டு இலக்கங்களை மட்டும் பயன்படுத்தி எண்களை எழுதும் முறை.

binary point : இருமப் புள்ளி : கலவையான இரும எண்ணில் முழு எண்ணிலிருந்து அதன் பதின்மப் பகுதியை பிரிக்கும் புள்ளி. 110.011 என்ற இரும எண்ணில் இரண்டு 0-க்களுக்கு இடையில் இருமப் புள்ளி உள்ளது.

binary relation : இரும உறவு : இரண்டு தொகுதிகளுக்கு இடையே உள்ள உறவு.

binary search : இரும தேடல் : ஒவ்வொன்றையும் இரண்டு பகுதி களாகப் பிரித்து, அதில் தேவையான ஒன்றைத் தேர்ந்தெடுத்து, மற் றொன்றை ஒதுக்கும் முறை. பல தகவல்தளங்களில் இந்த முறையில் தேடுகிறார்கள்.

binary sequence : இரும வரிசை : தொடர்ச்சியான இரும இலக்கங்கள்.

binary system : இரும முறை: 0 மற்றும் 1 ஆகிய 2 இலக்கங்களை மட்டுமே பயன்படுத்தும் எண் முறை.

binary-to-decimal conversion : இருமயிலிருந்து பதின்மத்துக்கு மாற்றல் : 2-ன் அடிப்படையில் எழுதப்பட்ட எண்ணை 10-ன் அடிப் படையில் மாற்றி அதற்குச் சமமான இலக்கத்தை எழுதுதல்.

binary-to-gray code conversion : இருமையிலிருந்து கிரே குறியீடுக்கு மாற்றுதல் : இடது புறத்திலிருந்து வலப்புறமாக படிக்கும் விதியைப் பயன்படுத்தி இருமக் குறியீட்டுக்குச் சமமான கிரே குறியீட்டினைக் கொண்டு வரமுடியும்.

binary-to-hexadecimal conversion : இருமயெண்ணிலிருந்து பதினா றெண் அடிப்படைக்கு மாற்றுதல் : 2-ன் அடிப்படையில் எழுதப்பட்ட எண்ணிலிருந்து 16-ன் அடிப்படை யில் எழுதப்பட்ட எண்ணுக்கு மாற்றுதல்.

binary-to-octal conversion : இரும யெண்ணிலிருந்து எண்மைக்கு மாற்றுதல் : 2-ஐ அடிப்படையாகக் கொண்ட எண்ணிலிருந்து 8-ஐ அடிப் படையாகக் கொண்ட எண்ணிற்குச் சமமானதை எழுதுதல்.

binary tree : இரும மரம் : எந்த ஒரு மரத்தையும் இடது, வலது துணை மரங்களாகப் பிரித்தல். ஒவ்வொரு முறையிலும் ஒரு பெற்றோர் மற்றும் இரண்டுக்கு மேற்படாத குழந்தைகள் உள்ள தகவல் அமைப்பு.

binary variables : இரும மாறிகள் : இரண்டு மதிப்புகளில் ஒன்றை உண்மை அல்லது பொய், 1 அல்ல 0 ஏற்கும் மாறி.

bind : கட்டு : 1. எந்திர முகவரியை அளவை அல்லது குறியீடு அல்லது முகவரிக்குக் கொடுத்தல். 2. ஒரு மாறி அல்லது அளவுகோலுக்கு ஒரு வகை மதிப்பை அளித்தல். 3. தொகுதிகளை ஒன்றாக இணைத்தல்.

binding time : சேர்க்கும் நேரம் : ஒரு தொகுப்பு அடையாள எண் அல்லது முகவரியை எந்திர மொழி வடிவத்தில் மாற்றும் நிலை.

biochip : உயிர் சிப்பு : உயிருள்ள பொருள்களை நுண் சிப்புகளாக மாற்ற கணினி தொழிலின் முயற்சி. இப்போதைய சிலிக்கான் சிப்புகளில் இருந்து 500 மடங்கு அதன் அளவு குறையும் என்று சில மதிப்பீடுகள் சொல்கின்றன. ஆனால், இதை செய்ய 80 ஆண்டுகள் ஆகும் என்று அறிவியலார் சிலர் கூறுகின்றனர்.

biocomputer : உயிர்க் கணினி : உயிர்ச் சிப்புகளில் தனது மையச் செயலகம் அல்லது நினைவகத்தைச் சேர்த்து வைக்கும் கணினி.

biological neuron : உயிரியல் நரம்பகம் : 0.01 மி.மீ. நீளமுள்ள உயிரியல் நரம்பு அறை.

biomechanics : உயிர் எந்திரவியல் : இயக்கத்தின் உயிர்க்கூறு கொள்கைகளை ஆய்தல். விளையாட்டு வீரர்கள் மற்றும் பந்தயக் குதிரைகளின் இயக்கத்தை மாதிரியாகக் கொண்டும் உயிர் எந்திரவியல் பயன்பாடுகள் செய்யப்படுகின்றன.

biometrics : உயிரளவை : தனித்தனி உடல் அமைப்புகளை அளக்கும் அறிவியல். சில பாதுகாப்பு முறைகள் மற்றும் தடய அறிவியல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படுகிறது.

bionics : உயிரியம் : உயிர் அமைப்புகளை ஆராய்ந்து அவற்றின் தன்மைகளையும், செயல்பாடுகளையும் மின்னணு மற்றும் எந்திர வன்பொருளுடன் தொடர்புபடுத்தல்.

BIOS : பயோஸ் : அடிப்படை உள்ளீடு -வெளியீடு அமைப்பு எனப் பொருள்படும் Basic Input/Output System என்பதன் குறும்பெயர். ஒரு குறிப்பிட்ட கணினிக்கு இசையுமாறு மாற்றப்படும் அமைப்பின் பகுதி.

bipolar : இரு துருவ : சிலிக்கான் படிமங்களிலிருந்து ஒருங்கிணைந்த மின்சுற்றுகளை உருவாக்கும் மிகவும் பிரபலமான அடிப்படை முறை. 'இரு துருவ' என்றால் இரண்டு துருவங்களை உடையது என்று பொருள். இதற்கு முந்தைய மோஸ்ஃபீல்டுக்கு மாறானது. மோஸ்ஃபீல்டில் ஒரே துருவம் தான் உண்டு. இதில் ஒரே திசையில்தான் மின்சாரம் பாயும். இரு துருவ டிரான் சிஸ்டர்களில் இரண்டு திசைகளிலும் உள்ள முகப்புகளை நோக்கி மின்சாரம் பாயும். ஒரு துருவம் என்பதற்கு மாறானது.

bios chip : பயோஸ் சிப்பு : உயிரியில் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் உருவாகும் புதிய வகை மின்னணு கணினிச் சிப்பு.

BIOS data area : பயாஸ் தகவல் பகுதி: 00404: 0000-வில் துவங்கும் நினைவகத்தின் பகுதி. இங்குதான் பயாஸ் நிலை பற்றிய தகவலையும் விசைப் பலகையின் இடைநிலை நினைவகத்தையும் வைத்திருக்கிறது.

bipolar transmission : இரு துருவ செய்தி அனுப்புகை : பாசிட்டிவ் மற்றும் நெகட்டிவ் சமிக்ஞைகளாக மாற்றி மாற்றி அனுப்பும் இலக்க முறை செய்தி அனுப்பும் தொழில் நுட்பம். இரு துருவங்களிலும் மாறும்.

biquinary code : பிக்குனரி பதின் குறியீடு ; இருமக் குறிமுறை துண்மி மதிப்புள்ள குறியீடு. பதின்ம எண்களைக் குறிப்பிடுவது. பிழை திருத்தத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. பதின்ம எண் 5-0ஐக் குறி இரு துண்மிகள். மற்ற 5 துண்மிகளும் பதின்ம

எண் 0-வை 4-ன் மூலம் குறிப்பிடு கின்றன.

birefringence : இரட்டை பதின்ம அலை வீச்சு : ஒரு படிகத்தைப் பயன் படுத்தி ஒளியை இரண்டு அலை வரிசைகளில் பிரித்து இரண்டு வெவ் வேறு வேகங்களில் ஒன்றுக் கொன்று செங்கோணத்தில் போதல். எல்சிடி காட்சித் திரையில் நிறத்தை வடிகட்டி அனுப்ப இது பயன்படுகிறது.

bisam : பைசாம் : Basic Indexed Sequential Access Method என்பதன் முதலெழுத்துக் குறும்பெயர்.

bistable : இருநிலை : 1 அல்லது 0, இயங்கும் அல்லது நிறுத்தும். இவை இரண்டு நிலைகளில் ஒன்றை மட் டும் ஏற்கும் வன்பொருள் சாதனம்.

bistable device : இரட்டை நிலைச் சாதனம் : நிறுத்துதல் அல்லது இயங்கு தல் ஆகிய இரண்டு நிலைகள் மட்டுமே உள்ள சாதனம்.

bi-state : இருநிலை : இரண்டு நிலை கள் மட்டும் இருக்கும்போது அவற் றில் ஒன்றை மட்டுமே எடுத்துக் கொள் ளும் கணினி உறுப்புகளின் நிலை.

bit : துண்மி ; இரு நிலைத் துணுக்கு; செய்தித் துணுக்கு: இரும இலக்கம்: 1. இரும இலக்கம். இரும எண் முறையில் 1 அல்லது 0-வைக் குறிக் கும் ஒரு எண். 2. ஒரு கணினியாலும் அதன் துணைக் கருவிகளாலும் புரிந்து கொள்ளக் கூடிய தகவலின் மிகச் சிறிய அலகு. 3. பல துண்மிகள் சேர்ந்தே ஒரு எட்டியல் அல்லது ஒரு கணினி சொல் உருவாகிறது.

bit control : துண்மிக் கட்டுப்பாடு : வரிசையான தகவலை அனுப்பும் முறை. இதில் ஒவ்வொரு துண்மியும் ஒரு தனிப் பொருள் கொண்டது. ஒவ்வொரு எழுத்துக்கு முன்னும் பின்னும் ஆரம்பிக்கவும், நிறுத்தவு மான துண்மிகள் இருக்கும்.

bit density : துண்மி அடர்த்தி : ஒரு குறிப்பிட்ட நீள அலகிலோ அல்லது காந்த நாடாவின் பரப்பளவிலோ அல்லது வட்டிலோ பதிவு செய்யப் பட்டுள்ள துண்மிகளை அளப்பது.

bit field : துண்மி புலம் : ஒரு எட்டி யலையோ சொல்லையோ துண்மி களாகப் பார்க்கும்போது, பல துணுக் குகள் ஒன்று சேர்ந்து ஒரு தகவலின் பகுதியைத் தருகிறது. சான்றாக, 0 - 3 துண்மிகள் ஒரு துண்மி புலத்தில் உள்ள எழுத்துகளின் முன்னணி நிறத்தைக் குறிப்பிடுகின்றன.

bit flipping : துண்மி மாற்றுதல் : 0-ஐ 1 ஆகவும் 1-ஐ 0 ஆகவும் மாற்றும் செயல். சான்றாக, வரைகலை ஆணைத் தொடரில் கறுப்பு - வெள்ளை துண்மி வரைந்த உருவத்தை மாற்ற அதனை துண்மி களை மாற்றிப் பெறலாம்.

bit image : துண்மித் தோற்றம் : ஒரு கணினியின் நினைவகத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ள துண்மிகளின் கூட்டம். ஒரு செவ்வக மேட்ரிக்ஸ் போல வரிசைப்படுத்தப்பட்டது. கணினியின் காட்சித் திரை பயனாள ருக்குத் தெரிகின்ற ஒரு துண்மித் தோற்றம் எனலாம்.

bit level device : துண்மி நிலை சாதனம் : வட்டு இயக்கி போன்ற ஒரு சாதனம். இது தகவல் துண்மிகள் அல்லது தகவல் கட்டங்களை உள்ளீடு/ வெளியீடு செய்யும் Pulse Level Device -க்கு எதிர்ச் சொல்.

bit manipulation : துண்மியைக் கை யாளல் : துண்மிகளை நிறுத்தியோ இயக்கியோ செயலாற்றச் செய்தல். துண்மிமாற்றுதல் என்றும் சில சமயம் சொல்லப்படுவதுண்டு.

bit map : துண்மி நிலைப்பிடம் : *1. கணினியில் வரைபடங்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இருப்பிடப் பகுதி. தொடர்ந்து காட்சித் திரைக்கு படத்தை அனுப்பி வருவது. 2. துண்மிகளின் வரிசை நின்றோ இயங்கியோ செயல்படுவதை ஒட்டி பிற பொருள்களின் வரிசை மாற்றம் அடைதல்.*

bit map font : துண்மி எழுத்துரு : *துண்மி முறையினைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் அச்செழுத்து. பொதுவாக இதை அளவு மாற்றவோ சுழற்றவோ முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவு முறையில் உள்ள எழுத்துகளின் தொகுதி. ஒவ்வொரு எழுத்தும் தனித்தனி முறையிலான புள்ளிகளை உடையது. துண்மி மூலம் உருவான திரை அல்லது அச்சுப் பொறியின் அச்செழுத்துகள் புள்ளிக் கணக்குகளாலான எழுத்துகளைக் கொண்டிருக்கும்.*

bit mapped display : துண்மிப் படமாக்கியக் காட்சி : *திரையில் உள்ள ஒவ்வொரு படப் புள்ளியும் ராமில் உள்ள ஒரு நினைவகப் பகுதியுடன் தொடர்புபடுத்தும் காட்சித் திரை.*

bit-mapped graphics : துண்மமாக்கிய வரைகலை : *திரையில் உள்ள படப் புள்ளிகளுக்கும் நினைவகத்தில் உள்ள துண்மிகளுக்கும் இடையே ஒன்றுக்கொன்றான தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் திரையில் உருவங்களை உண்டாக்கும் முறை. வண்ண வரைகலைகளில், சிவப்பு, பச்சை மற்றும் நீலநிற படப்புள்ளிகளை துண்மி நிலப்பட முறையில் உருவாக்க மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட துண்மிகள் தேவைப்படும். சில ஸ்கேனர்களிலும் ஓவிய ஆணைத் தொடர்களிலும் துண்மி நில வரைகலைகள் உருவாக்கப்படுகின்றன.*

bit mapped screen : துண்மி படமாக்கிய திரை : *கணினியின் ராமில் ஒவ்வொரு நினைவக இடத்திற்கும் தொடர்புள்ள புள்ளிகளைக் கொண்ட காட்சித் திரை. ஒவ்வொரு புள்ளியுடன் தொடர்புள்ள நினைவக இருப்பிடத்தை ஒட்டி புள்ளிகளை இயக்கவோ, நிறுத்தவோ செய்ய முடியும்.*

bit mapping : துண்மி படமாக்கல் : *துண்மிகளின் புள்ளிகள் குழுக்களைப் பயன்படுத்தி அகர வரிசை எழுத்து அல்லது வரைகலை உருவத்தை உருவாக்குதல்.*

bit mask : துண்மி மூடி : *ஒரு பதிவகம் மற்றும் மாறியின் உள்ளடக்கத்தை சோதனை செய்யப் பயன்படுத்தப்படும் துண்மிகளின் தொகுதி.*

bit matrix: துண்மி அணி: *இருபரிமாண அணி இதன் உறுப்புகளாக இரும இலக்கங்களாகிய 0 அல்லது 2 மட்டும் வரும்.*

bit operations : துண்மி செயல்பாடுகள் : *தகவலுக்குள் குறிப்பிட்ட துண்மிகளை மட்டும் படிக்கும் அல்லது மாற்றும் ஆணைத் தொடர் செயல்பாடுகள்.*

bit oriented protocol : துண்மி சார்ந்த நெறிமுறை : *தகவல் துண்மிகளின் தனித்தனி குழுக்களைப் பிரிக்கப் பயன்படும் துண்மி அமைப்பு.*

bit parallel : துண்மி இணை : *பல துண்மிகளை ஒரே சமயத்தில் அனுப்புதல். ஒவ்வொரு துண்மியும் கம்பித் தொகுதியில் உள்ள ஒவ்வொரு கம்பி வழியாகச் செல்லும்.*

bit pattern : துண்மி அமைப்பு : *குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ஒரு*

தொகுதி துண்மி சேர்ந்து இரும எண் ஆதல். இரு எண் இலக்கங்களின் குறிப்பிட்ட வடிவமைப்பு.

bit plane : துண்மி தளம் : ஈஜிஏ-வில் வீடியோ தாங்கி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு துண்மி தளமும் 0 - 3 ஆகக் குறிக்கப் படுகிறது. 16 நிறமுறையில், நான்கு தளங்களை இணையாகப் பிரித்து குறிப்பிட்ட நினைவக முகவரியில் நான்கு பட்டியல்களாகக் காணப்படு கின்றன. சில சமயங்களில் தளங் களை வரிசையாகச் சங்கிலியிட்டு ஒன்று அல்லது இரண்டு தளங்கள் இணைக்கப்படுவதுண்டு.

bit rate : துண்மி வீதம் : தகவல் தொடர்பாலோ அல்லது வழித் தடங் களிலோ இலக்கங்கள் அல்லது துடிப்புகள் தோன்றும் விகிதம்.

bit serial : துண்மி தொடர் : ஒரு வழியில் ஒன்றன்பின் ஒன்றாக துண்மிகளை அனுப்புதல்.

bit slice processor : துண்மி-துண்டு செயலகம் : ஒரு தனி சிப்புவில் 2, 4 அல்லது 8 துண்மி துண்டுகள் தனித் தனியாக இயங்குமாறு உள்ள செயல கம், பலவித சொல் அளவுகள் உள்ள வாறு நுண் செயலகங்களை அமைத் தல். அமைப்பின் பிற உறுப்புகளைச் சேர்த்தவுடன் நுண் கணினியில் 8, 12, 16, 24 அல்லது 32 துண்மி கிடைக்கக் கூடிய முறை.

bit specifications : துண்மி வரையறை கள் : ஒரே நேரத்தில் மையச் செய லகம் கணிப்பீடு செய்யும் அளவான கணினியில் உள்சொல் அல்லது பதி வகத்தின் அளவு. தகவல் பரிமாற்றப் பாதை, நினைவகத்திலிருந்து மைய செயலகத்துக்கோ அல்லது வெளிப் புறச் சாதனங்களுக்கோ தகவல்களை அனுப்பும் அளவு.

bit stream: துண்மி ஓட்டம்; துண்மி வரிசை: எழுத்துத் தொகுதிகளாகப் பிரிக்காமல் தகவல் தொடர்புக் கம்பி வழியாக வரிசையாக அனுப்பப் படும் துண்மி தொடர்.

bit stuffing : துண்மி சேர்த்தல் : ஒரு குறிப்பிட்ட தோற்றத்தை முழுமைப் படுத்த அனுப்பப்பட்ட செய்தியுடன் துண்மிகளைச் சேர்த்தல். கட்டுப் பாடு குறியீடுகளாகத் தவறாகக் கரு தப்படுவதைத் தடுக்க தகவல் துண்மி களின் அமைப்பைப் பிரித்தல்.

bit test : துண்மி சோதனை : ஒரு குறிப் பிட்ட துண்மியின் அடையாளம் ஒன்று அல்லது பூஜ்யமா, இயக்கமா, நிறுத்தமா என்று கண் டறிய உதவும் ஆணைத் தொடர் சோதனை முறை.

bits per second : ஒரு நொடிக்கு துண்மி கள் : ஒரு நொடிக்கு இத்தனை துண்மி கள் என்ற வகையில் தகவல் துண்மி கள் அனுப்பப்படும் விகிதத்தை அளிக்கும் முறை. பிபிஎஸ் (bps) என்று சுருக்கி அழைக்கப்படும் இதை பாட் விகித அளவுடனும் மாற் றிப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்த இரண்டின் அனுப்பு தல் விகிதம் சமமாக இருக்க வேண் டிய அவசியமே இல்லை.

bit transfer rate : துண்மி பரிமாற்ற வேகம் : 1. ஒரு குறிப்பிட்ட நேர அல கில் இடமாற்றம் செய்யப்பட்ட துண்மிகளின் எண்ணிக்கை. 2. ஒரு நொடிக்கு இத்தனை துண்மி என்றே பொதுவாகக் குறிப்பிடப்படும்.

bit twiddler : துண்மி ஆர்வலர் : 1. கணினி நேசர். 2. கணினியோடு பணி யாற்றுவதில் மகிழ்ச்சி அடைபவர்.

BL : பிஎல் : Blank and Empty Space in text என்பதன் குறும்பெயர்.

black box : கறுப்புப் பெட்டி : எதிர் பார்க்கப்படும் முறையில் உள்ளீடு

சமிக்ஞைகளை மாற்றுகின்ற ஒரு மின்னணு அல்லது எந்திர சாதனம். ஆனால், இதன் உள்ளே எவ்வாறு செயல்படுகிறது என்பது அதைப் பயன்படுத்துகின்றவருக்குப் பெரும் பாலும் மர்மமாகவே இருக்கும்.

black box approach : கறுப்புப் பெட்டி அணுகுமுறை : ஒரு கணினி அமைப் பின் தகவல் மாற்றும் செயல்முறை பற்றிய தொழில் நுட்ப தகவல்களை ஆராய்வதற்குப் பதிலாக, எல்லை கள், இடைமுகங்கள், உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகளைப்பற்றி ஆராய்வது.

blackout : இருட்டடிப்பு : மின்சக்தி ஓட்டம் நின்றுபோதல்.

blank : காலியிடம்; வெற்றிடம் : 1. எழுத்து எதுவும் பதியப்படாத, ஆவணத்தின் ஒரு பகுதி. 2. மின்னணு விரிதாளில் ஒரு அறை அல்லது அறை வரிசைகளில் உள்ளவற்றை அழிக்கக் கூடிய ஒரு கட்டளை. 3. ஒரு எழுத்துத் தகவல் சேர்க்கக்கூடிய காலி இடம்.

blank character : வெற்றிட எழுத்து : 1. வெளியீட்டுச் சாதனத்தில் ஒரு எழுத்து இடவெளியை உருவாக்கக் கூடிய ஒரு குறியீடு. 2. பொதுவாக b என்று இதைக் குறிப்பிடுவார்கள்.

blanking : வெற்றிடமாக்கல் : காட்சித் திரையில் ஒரு எழுத்து இருந்த போதி லும், அந்த இடத்தை வெற்றிடமாக ஆக்கி அந்த எழுத்தை இடாமலிருத்தல்.

blank squash : வெற்றிட நீக்கம் : தகவல் பொருள்களுக்கிடையில் வெற்றிடங்களை நீக்குதல். சான்றாக, City + ", " + STATE என்று Austin TX என்று வருவதைவிட AUSTIN, TX என்று வந்து வெற்றிடம் நீக்கப் பட்டிருக்கும்.

bleed : சொட்டுதல் : டிடிபி மற்றும் வணிக அச்சில் பயன்படுத்தப்படும் சொல். பக்கத்தின் இறுதிப் பகுதியில் இருந்து வெளியே போவதைக் குறிப் பிடுகிறது.

blind search : கண்மூடித் தேடல் : ஒரு முறையான திட்டமின்றித் தேடல். அதிக நேரம் எடுக்கும் தேடல். இதில் எல்லா வாய்ப்புகளும் முயற்சிக்கப் படும். ஆனால் புத்திசாலித்தனம் இருக்காது.

blinking : இமைத்தல் : வடிவமைப் பவரின் கவனத்தைக் கவர திரையில் தோன்றித் தோன்றி மறையும் ஒரு வரைபடத் தோற்றம்.

blip : திரைத் தோற்றம் : ஒளிக்காட்சி திரையில் உள்ள ஒரு சிறிய பிரகாச மான தோற்றம். பொதுவாக இது ஒரு ரேடார் திரையாக இருக்கும்.

blip mark : திரைத் தோற்றக் குறியீடு : நுண் திரைப்படம் போன்ற ஒரு ஊட கத்தில் காணப்படும் கோடு அல்லது புள்ளி. இதை ஒளி முறையில் கண்ட றிய முடியும். நேரம் அறிய அல்லது எண்ணுவதற்குப் பயன்படுத்தப் படும்.

block : தொகுதி; இணைப்பு; தொகுப்பு; ஒருங்கிணைப்பு; தொகுப் புத் தொகை : 1. உள்ளீடு / வெளியீடு சாதனத்தில் ஒரே அலகாகக் கருதப்படும் எழுத்து கள், இலக்கங்கள் அல்லது சொற் களின் தொகுதி. எடுத்துக்காட்டாக, ஒரு காந்தவட்டில் இரண்டு இடைப் பட்ட கட்டத்தின் இடைவெளிக்கு இடையில் பதிவு செய்யப்பட்ட தகவல்களைக் கூறலாம். 2. ஒரு தனி பதிவேடாகக் கருதப்படும் ஒரு பதிவேட்டின் தொகுதி.

block compaction : கட்டம் அமைத் தல் : நினைவகம் அமைத்தலில் ஒரு செயல்முறை.

block device : கட்ட அமைப்புச் சாதனம் : ஒரு நேரத்தில் தகவல் எட்டியல்களின் தொகுதியை வட்டு போன்ற ஒன்றுக்கு அனுப்பும் வெளிப்புறச் சாதனம்.

block diagram : கட்ட வரைபடம்; பகுதிவாரி வரைபடம் : தகவல்களை செயலாக்கம் செய்யப்படுகின்ற அளவை வரிசை குறிப்பிடும் வரை பட வடிவம்.

blocked process : தடுக்கப்பட்ட செயல்முறை : தேவையான வசதிகள் கிடைக்காமல் போதல் அல்லது முன்னதாகவே தடுக்கப்படுவதால் செய்யப்பட முடியாத கணிப்பு செயல் முறை.

blocked records : தொகுக்கப்பட்ட பதிவேடுகள் : இரண்டு அல்லது மேற்பட்ட அளவைக் கோப்புகளில் உள்ள ஏடுகளை ஒரே குழுவாக்கி ஒற்றை ஏடாக மாற்றி அமைத்தல்.

block gap : தொகுதி இடைவெளி : பதிவேடுகளுக்கு இடையிலுள்ள இடைவெளி.

block graphics : தொகுதி வரைகலை: தொகுதி வரைகலை எழுத்துகள், அஸ்கி எழுத்துகளைப் பயன் படுத்தி உருவாக்கப்படும் வரைகலை உருவங்கள். இந்த எழுத்துகளை சாதாரண எழுத்துகளைப் போலவே கணினி கையாள்வதால் துண்மி மேப் வரைகலைகளைவிட தொகுதி வரைகலைகளை கணினி வேகமாகக் காட்ட முடியும். அவற்றை அனுப்புவதும் விரைவாக நடக்கும்.

block header : தொகுதித் தலைப்பு : ஒரு நினைவக தொகுதியையோ மற்றும் அதன் உள்ளடக்கங்களையோ குறிப்பிடும் தகவல்களின் சிறு பதிவேடு.

blocking . தொகுத்தல்; தொகுதியாகக் குறியிடல் : திரட்டல் தொகுதி என்று அழைக்கப்படும் ஒரு தொடர்ச்சியான சேமிப்பு அலகாக குறிப்பிட்ட அளவில் பதிவேடுகளைத் தொகுக்கும் செயல். கணினியின் உள்ளீடு, வெளியீடு செயல்முறைகளின் திறனை அதிகரிக்க இவ்வாறு செய்வதுண்டு. சொல் செயலாக்கத்தில், பனுவலின் ஒரு பகுதி தொகுதியாக ஒதுக்கப்படுவதுண்டு.

bloking factor : தொகுக்கும் காரணி : ஒரு வட்டு அல்லது காந்தநாடாவில் உண்மையாக இருக்கும் பதிவேட்டின் படி உள்ள அளவைப் பதிவேடுகளின் எண்ணிக்கை.

blocking object : தொகுக்கும் பொருள்: பொருள் சார்ந்த ஆணைத் தொடர்களில், பல்வகைக் கட்டுப்பாட்டு இழைகளுக்கு உறுதியளிக்கும் அமைப்பு கொண்ட இயங்காத பொருள்.

block length : தொகுதி நீளம் : ஒரு தொகுதியின் அளவை அளப்பது. பொதுவாக பதிவு, சொற்கள், எழுத்துகள் அல்லது எட்டியல்கள் என்ற அலகுகளில் குறிப்பிடப்படும்.

block list : தொகுதிப் பட்டியல் : ஒரு கோப்பின் அச்சுத் திணிப்பு. மீண்டும் மாற்றியமைப்பதை குறைவாகச் செய்து, பதிவுகளும், புலங்களும் அச்சிடப்படுகின்றன.

block move : தொகுதியாக நகர்த்தல் : 1. ஒரு பனுவலின் தொகுதியை ஒரு ஆவணம் அல்லது கோப்பில் இருந்து வேறொரு ஆவணம் அல்லது கோப்புக்கு மாற்றுதல். 2. சொல் செயலிகளில் ஒரு பனுவலின் தொகுதியை அடையாளம் கண்டு ஒரு கோப்பின் எந்த பகுதியில் வேண்டுமானாலும் நகர்த்தும் வசதி.

block sort : தொகுதியாகப் பிரித்தல் : ஒரு கோப்பினை தொகுதி தொகுதி யாகப் பிரிக்கும் தொழில் நுட்பம். கோப்பு தொடர்பான குழுக்களாகப் பிரிக்கத் தொழில் நுட்பம் பயன் படும்.

block structure : தொகுதி அமைப்பு : தொடர்புடைய அறிவிப்புகள், தொடர்கள் ஆகியவற்றை ஒன்றாகத் தொகுப்பதற்கான ஆணைத் தொட ரின் கோட்பாடு.

block transfer : தொகுதி மாற்றம் : சேமிப்பகத்தின் ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு தகவல் தொகுதி முழுவதையும் மாற்றுதல்.

blocks world : தொகுதிகள் உலகம்; தொகுதிகள் சூழல் : எந்திர மனிதனி யல் மற்றும் இயற்கை மொழிகள் பற்றிய ஆராய்ச்சியில் செயற்கையாக உருவாக்கப்பட்ட தொகுதிகளின் சூழல்.

blow : ஊது உப்பல்: துண்மிகளின் மென் கம்பிகளை ஊதி ப்ராம் PROM சிப்புகளில் தகவல் அல்லது குறியீடு களை எழுதுதல். 1 துண்மி தனித்து விட ப்படும்.

blowup : தடுத்து நிறுத்து; மிகை உப்பல் : ஒரு பிழை காரணமாகவோ, தன்னால் கையாள முடியாத தகவல் களைப் பெற்ற சூழ்நிலையிலோ ஒரு ஆணைத் தொடர் திடீரென்று நின்று விடுதல்.

blue ribbon problem : நீலநாடா பிரச்சினை : முதல் முயற்சியிலேயே சரியாக இயங்கும் கணினி ஆணைத் தொடர். பிழை நீக்க வேண்டிய அவசியமில்லை.

blue ribbon programme : நீல நாடா ஆணைத்தொடர் : முதல் முயற்சியி லேயே மிகச் சரியாக இயங்கி பிழை நீக்கம் செய்யப்பட வேண்டிய தேவையில்லாத ஆணைத்தொடர்.

BMMC : பிஎம்எம்சி : Basic Monthly Maintenance Charge என்பதன் குறும் பெயர்.

BNC : பிஎன்சி : கூட்டு அச்சு கம்பியில் இணைப்புக்காகப் பயன்படுத்தப்படு



பி என் சி இணைப்பி (BNC - Connector)

வது. ஒரு உருளை போல தோன்றும் இந்த பிளக்கின் இரு எதிர்ப் புறங் களும் இரு சிறிய கம்பிகள் இருக் கும். பிளக்கை நுழைத்தவுடன், சாக் கெட்டை இயக்கினால் பிளக்கில் உள்ள கம்பிகள் இறுக்கம் அடை கின்றன.

BNF : பிஎன்எஃப் : Backus Normal Form என்பதன் குறும்பெயர்.

board : அட்டை : அச்சிடப்பட்ட மின் சுற்று அட்டை என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுவது. ஒரு தட்டையான, மெல்லிய, செவ்வக வடிவமுள்ள, கணினியின் ஒரு உறுப்பு. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அச் சிடப்பட்ட மின்சுற்று அடுக்கு களைக் கொண்ட வெளிப்புற உறுப்பு. இதில் சிப்புகள் மற்றும் பிற மின்னணு உறுப்புகள் இணைக்கப் படுகின்றன.

board computer : அட்டை கணினி : ஒரு தனி மின்சுற்று அட்டையில்

எல்லா மின்னணு பாகங்களும் அமைக்கப்பட்டுள்ள ஒரு கணினி.

board exchange warranty : அட்டை மாற்றக்கூடிய வாரன்ட் : முதல் அட்டையில் பழுது ஏற்பட்டால் அதற்குப் பதிலாக புதிய ஒன்றை மாற்றித் தருவதற்கு வாடிக்கையாளருக்கு அளிக்கப்படும் உறுதி.

board level : அட்டை நிலை: மரப் பலகையில் அல்லாது அச்சிட்ட மின்சுற்று அட்டையில் ஏற்றப்படும் மின்சுற்றுச் சாதனங்கள்.

body works : உடல் இயக்கம் : மனித உடல் அமைப்பை ஆராய்வதற்காக உருவாக்கப்பட்ட கல்வி மென்பொருள்.

BOF : பிஓஎஃப் : Beginning of File என்பதன் குறும்பெயர். முதன் முதலாகத் திறக்கும்போது உள்ள கோப்பின் நிலை. கோப்பு காட்டியை மீண்டும் அமைக்கும் ஆணை அல்லது கட்டளை.

boilerplate : கொதிகலன் தகடு; கொதி தட்டு : பல்வேறு ஆவணங்களில் சொல்லுக்குச் சொல் மீண்டும் பயன்படுத்தப்படுகின்ற பனுவலின் பகுதி.

boilerplate document : கொதிகலன் தகட்டு ஆவணம் : சில தரமான பத்திகளில் தகவலைக் கொண்டு தேர்ந்தெடுத்த பத்திகளை ஒன்றாக இணைத்து ஏற்படுத்தப்படும் ஆவணம்.

bold declaration : தடித்த எழுத்தமைத்தல் : அச்சிட்ட பக்கத்தில் சொற்கள் தடிமனாக அமைய அச்சுக் கட்டுப்பாட்டு எழுத்துகளை சொல் செயலக ஆவணத்தில் சேர்த்தமைத்தல்.

boldface bomb : தடித்தமுகக் குண்டு: Abend, and Crash போன்றது. ஆணைத் தொடர்களை அழிக்கும் வைரசின் ஒரு அம்சம்.

boldface font : தடித்த அச்செழுத்து : வழக்கமான எழுத்துகளைவிட கறுப்பாகவும் கனமானதாகவும் உள்ள எழுத்துகளின் தொகுதி. தடித்த அச்செழுத்தில் எல்லா எழுத்துகளும் தடித்ததாக இருக்கும்.

boldfacing : தடித்த எழுத்து அச்சு; தடிப்பாக்கம் : சில அச்சுப் பொறிகளிலும் சொல் செயலாக்க அமைப்புகளிலும் உள்ள ஒரு தன்மை. கொட்டை எழுத்து அச்சு போன்ற தோற்றத்தைத் தருவது. நிழல் அச்சு முறை மூலம் கொட்டை எழுத்து அச்சு போன்ற தோற்றம் பல அச்சுப் பொறிகளில் தரப்படுகின்றது.

bold printing : தடித்த அச்சு : சுற்றிலும் உள்ள எழுத்துகளைவிட அழுத்தமாக சில எழுத்துகளை உருவாக்கும் திறன். நிழல் அச்சு அல்லது பலமாக அடித்தல் மூலம் சில அச்சுப் பொறிகள் தடித்த எழுத்துகளை உருவாக்குகின்றன.

Bollee, Leon : போலி, லியோன் : திரும்பத் திரும்ப கூட்டுவதற்குப் பதிலாக நேரடியாக பெருக்கலைச் செய்யும் முதல் எந்திரத்தை 1886இல் வெற்றிகரமாக வடிமைத்த ஒரு ஃபிரெஞ்சுக்காரர்.

bomb : வெடி : 1. ஒரு ஆணைத் தொடரின் மகத்தான தோல்வி. 2. ஒரு அமைப்பைத் தடுக்கக் கூடிய ஒரு ஆணைத் தொடரை எழுதி ஒரு அமைப்பை வேண்டுமென்றே நாசம் செய்தல்.

boolean algebra : பூலியன் குறிக் கணக்கு : குறிக்கணக்கில் உள்ளது போன்ற குறியீட்டு அளவையின் பிரிவு. எண் தொடர்களைப்பற்றிக்

குறிப்பிடுவதற்குப் பதிலாக காரண காரிய உறவுகளைப்பற்றி ஆராய்வது. மின்னணு கணினி தொடர் பொத் தானிடுதல் போன்ற துறைகளில் வெளியே தெரியாமல் இருந்த துறை. மின்னணு கணினியின் காரண - காரிய வடிவமைப்பில் ஒரு முக்கிய பிரிவாக உருவாகி உள்ளது. ஜார்ஜ் பூலேவுக்காக இவ்வாறு பெயரிடப் பட்டது.

boolean data : பூலியன் தகவல் : ஆமாம்/ இல்லை அல்லது உண்மை / பொய் தகவல்.

boolean equations : பூலியன் சமன் பாடுகள் : செட் கொள்கை இயக்கங் கள், யூனியன் போன்றவற்றைப் பயன்படுத்துதல்.

boolean expression : பூலியன் சொற் றொடர்; தொனி பாவக் குறிகள்; பூலி யன் கோவை : பூலியன் இயக்கிகளின் மூலம் உண்மை அல்லது பொய் என்ற இரண்டில் ஒன்றை குறிக்கும் சொற்றொடர்.

boolean logic : பூலியன் தருக்கம் : 19ஆம் நூற்றாண்டின் நடுவில் ஜார்ஜ் பூலே என்ற ஆங்கிலக் கணிதமேதை உருவாக்கிய தருக்கக் கணிதம். அதன் விதிகளும், இயக்கங்களும் எண் களுக்குப் பதிலாக தர்க்கப் பணி களை ஆற்றுகின்றன. AND, OR, NOT ஆகியவையே பூலியன் இயக்கத்தின் அடிப்படைகள்.

Boolean operator : பூலியன் இயக்கி : அளவை இயக்கி இதன் இயக்கங்கள் மற்றும் முடிவுகள் இரண்டு மதிப்பு களில் ஒன்றாகவே அமையும்.

boolean search : பூலியன் தேடல் : குறிப்பிட்ட தகவல்களைத் தேடல். பூலியன் இயக்கிகளான AND, OR, NOT ஆகியவைகளைப் பயன்படுத்தி எந்த ஒரு நிலையையும் தேட முடியும்.

boolean variable : பூலியன் மாறி; பூலியன் மாறுவகை : உண்மை அல் லது பொய் என்ற இரண்டு மதிப்பு களை மட்டுமே கொண்டுள்ள ஆணைத்தொடர் மாறி.

Boole, George 1815 - 1864 : பூலே, ஜார்ஜ் : 1815-1864 : ஆங்கில அள வையியல் மற்றும் கணிதவியல் அறிஞர். 1847இல் அளவையியலை கணித முறையில் ஆய்வது என்று ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டார். 1851இல் அளவை அமைப்பைப் பற்றிய முதிர்ச்சி மிக்க சிந்தனை விதி களின் ஆய்வு என்ற அறிக்கை ஒன் றினை வெளியிட்டார். இதில் அள வையியல் பற்றிய கணித கொள்கை கள் உருவாக்கப்பட்டன.

bookman : புக்மேன் : ஒருவகையான அச்செழுத்து. ஐடிசி நிறுவனம் உரு வாக்கிய ஒரு அச்செழுத்து வகை.

boot : ஏற்று; இயக்கு: Bootstrap என் பதில் இருந்து எடுக்கப்பட்ட சொல். கணினியின் இருப்பகச் சாதனத்தின் மூலம் ஆணைகளைப் படித்து ஒரு கணினியின் நினைவகத்திற்கு அனுப் புவது அல்லது மீண்டும் கணினி யைத் துவங்குவது. ஏற்கனவே கணினி இயங்கிக் கொண்டிருக்கும் போது அதனை இயக்கும் முறையை முதன்மை நினைவகத்திற்கு அனுப்பு வது. சூடான ஏற்றுதல் இல்லை யென்றால் ஆறிப்போன ஏற்றுதல்.

boot Disk : ஏற்று வட்டு : வட்டு இயக் கக் கணினிகளைத் துவக்கும் போது துவக்கும் பதிவு என்றும் அழைக் கப்படுவதுண்டு - வட்டில் சேமிக்கப் படுகிறது. வட்டு இயக்க அமைப் பைப் பயன்படுத்தும் ஒரு கணினி யானது ஏற்றும் பதிவகத்தை அனு

காமல் பயன்படுத்தப்பட முடியாது. ஏற்றும் வட்டு வட்டாகவோ அல்லது நிலைவட்டின் ஒரு பகுதியாகவோ இருக்கலாம்.

boot drive : ஏற்றும் வட்டியக்கி : இயக்க அமைப்பு அமைந்துள்ள வட்டு இயக்கி.

boot record : ஏற்றும் பதிவேடு : கணினியைத் துவக்குவதற்கு வேண்டிய இன்றியமையாதவற்றைக் கூறும் செயலாக்க அமைப்பு பகுதி. ஏற்றும் தகவலைச் சேமித்துவைக் கும் இரண்டாம் நிலை சேமிப் பகத்தின் பகுதி.

boot Rom : ஏற்றும் ரோம் : சேவை யகத்திலோ அல்லது பிற தொலை தூர நிலையத்திலோ வேலை நிலை யம் இயங்க அனுமதிக்கும் நினை வகச் சிப்பு. booting எக்கித் தள்ளல்; boot sector புதைமதி வட்டக்கூறு; boot strap முன்னோடி.

bootstrapping : தொடக்கம் : பூட்ஸ்ட் ராப் என்னும் சிறிய அரிச்சுவடி ஆணைத் தொடரைப் பயன்படுத்தி வேறொரு ஆணைத் தொடரை ஏற்றி, ஒரு கணினியைத் துவக்குதல்.

boot tape : ஏற்றும் நாடா : பல கணினி களில் ஏற்றும் செயல்முறையை நாடா வில், பொதுவாக கேசட்டில் சேமிப் பார்கள். நாடா இயக்க முறையைப் பயன்படுத்தும் கணினியை ஏற்றும் நாடா அடங்கியுள்ள, நாடா இயக்கி இல்லாமல் பயன்படுத்த முடியாது.

boot virus : ஏற்றும் (கிருமி) வைரஸ் : ஃபிளாப்பி எனும் நெகிழ்தட்டில் ஏற் றும் பகுதியில் எழுதப்பட்ட வை ரஸ். அத்தகைய நெகிழ்வட்டை ஏற் றும்போது அது கணினி அமைப்பை பிடித்துக் கொள்கிறது. சான்றாக, மைக்கேல் ஏஞ்சலோ வைரசானது அது பிடித்துள்ள வட்டை ஏற்றினால் மைக்கேல் ஏஞ்சலோ பிறந்த நாளான மார்ச் 6ஆம் நாள் அன்று அது ஏற்றப் பட்ட கணினியில் உள்ள தகவல் களை அழித்துவிடும்.

boot/booting : ஏற்று/ஏற்றுதல் : கணினியைத் துவக்கு என்பதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் தனி மொழிச் சொல். நாம் கணினியின் பொத்தானை இயக்கியவுடன், ஏற் றும் பகுதியிலிருந்து ஆணை வந்து கணினி இயங்குகிறது. அந்த உற் பத்தியாளரே ரோமில் (ROM) சிறிய ஆணைத்தொடராக அமைத்திருப் பார். இவ்வாறாக Boot என்றால் கணினியைத் துவக்கு என்பது பொருள்.

bootable disk : ஏற்றக்கூடிய வட்டு : இயக்க அமைப்பைக் கொண்டுள்ள வட்டு. பொதுவாக இது நெகிழ் வட் டின் இயக்கியில் ஏற்றக்கூடிய நெகிழ் வட்டு இல்லையென்றால், நிலை வட்டிலிருந்து எடுத்துத் துவக்கும் ஆணை ஏற்றப்படும்.

bootstrap : ஏற்றும் வசதி; முன்னோடி: கணினியில் பெரிய ஆணைத்தொடர் நுழைக்க அனுமதிக்கும் வசதி.

bootstrap loader : முன்னோடி ஏற்றி : ஏற்றுப் பதிவேட்டின் முதல் பகுதி. இந்தத் தொழில் நுட்பத்தின்படி ஒரு ஆணைத் தொடரின் முதல் சில ஆணைகளின் மூலம் மீதமுள்ளவற் றையும் உள்ளீட்டுச் சாதனத்தி லிருந்து கணினியில் கொண்டு வர முடியும்.

BOP : பிஓபி : Bit-Oriented Protocol என்பதன் குறும்பெயர்.

border : எல்லை : திரையின் மீது இயங்கும் சாளரத்தில் விண்டோஸ், பயனாளரின் பணியிடத்தைச் சுற்றி யுள்ள விளிம்பு. ஒரு ஆவணம் அல் லது வரைகலையைச் சுற்றி தெரியக்

கூடிய எல்லைக்கோடு செல்லும் அச்சில், ஒரு பக்கம் அல்லது ஓவியத்தில் ஒன்று அல்லது மேற்பட்ட விளிம்புகளில் காணப்படும் கோடு அல்லது அமைப்பு.

bore : போர் : ஒரு நெகிழ்வட்டு அல்லது காந்த நாடா சுருணை போன்றவற்றின் துளையின் குறுக்களவு.

Borland C++ : போர்லேண்ட் சி++ : டாஸ் மற்றும் சாளர பயன்பாடுகளுக்காக போர்லாண்ட் நிறுவனம் உருவாக்கிய அன்சி சி மற்றும் சி++ தொகுப்பு நுண்மென் பொருள் சாளர சி-யில் எழுதப்பட்ட விண்டோஸ் ஆணைத் தொடர்கள் மற்றும் டர்போ சி-யை ஏற்பதுடன் பிழை நீக்கவும் செய்யும்.

Borland (Borland int'l) : போர்லாண்ட் : 1983இல் பிலிப் கான் உருவாக்கிய முன்னணி பி சி மென்பொருள் நிறுவனம். அதனுடைய டர்போ பாஸ்கல் கல்வி நிலையங்களிலிருந்து வெளிவந்து வணிகப் பொருளானது டர் போ சி தொழில்துறை தர அளவுகோலானது. டர்போ பாஸ்கல் மற்றும் போர்லண்ட் சி++ மூலம் சாளர பொருள் சார்ந்த ஆணைத் தொடரும் உருவாகிறது.

borrow : கடன் வாங்கு : கணித முறையில் கழித்தல் செய்யும்போதும் குறைந்த வரிசை இலக்கத்தினை உயர்த்தி அடுத்த உயர் வரிசை இலக்கத்திலிருந்து ஒன்று கழிக்கப்படுகிறது.

BOT : பாட் : Beginning Of Tape என்பதன் குறும் பெயர். ஒரு காந்த நாடாவில் பதிவு செய்வதை எந்த இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதைக் குறிக்கும் குறியீடு.

bottom up technique : கீழிருந்து மேல் செல்லும் தொழில் நுட்பம்.

bound : கட்டுப்பட்ட : செயலகம் அல்லது உள்ளீடு / வெளியீடு போன்ற கணினியின் எந்தப் பகுதியின் செயல்முறையாவது, கட்டுப்பட்டதாக இருத்தல். வேகமாகச் செயல்படுவதைக் கணினியின் எந்த பாகம் தடை செய்கிறது என்பதைக் குறிப்பிடுவது.

boundary : எல்லை : ஒரு கோப்பு போன்றவற்றில், நினைவகத்தில் வரையறுக்கப்பட்ட இடைவெளி. சான்றாக, ஆணைத்தொடர்கள் 16 எட்டியல் எல்லைகளுக்குள் நினைவகத்தில் வைக்கப்படும் அத்தகைய முழு நினைவு முகவரியை எப்போதும் 16ஆல் வகுக்க முடியும்.

boundary fill : எல்லை நிரப்பி : ஒரு பகுதியை நிறத்தால் நிரப்பும் செயல்முறை. எல்லை மதிப்பு உள்ள படப்புள்ளிகளால் எல்லையமைக்கப்பட்ட அனைத்துப் படப்புள்ளிகளையும் புதிய மதிப்பு (நிறம்)களால் நிரப்புதல்.

box drawing characters : பெட்டி வரையும் குறிகள் : நீட்டிக்கப் பட்ட அஸ்கியில் உள்ள பெட்டிகளை வரையப் பயன்படுத்தப்படும் குறிகளின் தொகுதி.

bpi : பிபிஐ : bit per inch என்பதன் சுருக்கம். bytes per inch என்பதற்கு BPI என்று குறும்பெயர் தரப்படுகிறது.

bps : பிபிஎஸ் : bits per Second மற்றும் bytes per Second என்பதன் குறும் பெயர், bps என்பதாகும்.

brain-damaged : மூளை - பாதிக்கப்பட்ட : மோசமாக நடக்கும் அல்லது அழிக்கும் முறையில் செயல்படும் ஆணைத் தொடரைக் குறிப்பிடும் பதம்.

brain-wave interface : மூளை - அலை பரிமாற்றம் : மனிதனின் எண்ணங் களை அறிந்து அதற்கேற்ப கணினி செயலாற்றும் திறன் உடைய மென் பொருள் மற்றும் வன்பொருள்.

branch : பிரிதல் : 1. சில நிபந் தனைகளின் அடிப்படையில் கட்டுப்பாட்டின் ஓட்டம் ஒன்று அல்லது பல பாதைகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுத்தல். 2. ஒரு ஆணைத் தொடர் வரிசையில் இருந்து மற்றொரு ஆணைத் தொடர் வரிசைக்குக் கட்டுப்பாட்டினை மாற்றக் கூடிய ஆணை.

branching : பிரித்தல்.

branching Statement : கிளைத்தல்; கிளைபிரி கட்டளை.

branch Instruction : கிளைபிரிப்பு ஆணை : இரண்டில் ஒரு ஆணைத் தொடர் பாதையைத் தேர்ந்தெடுப் பதற்குக் கணினிக்கு உதவும் ஆணை. ஆணைத் தொடரை இயக்கும்போது கணினியால் முடிவு செய்யப்படும் சூழ்நிலைக்கேற்ப பிரிந்து போதல் செயல்படுத்தப்படும்.

branchpoint : பிரியும் இடம் : ஒரு ஆணைத் தொடரில் பிரிந்து போத லைத் தேர்ந்தெடுக்க வேண்டிய இடம்.

breadth-first search : அகல - முதல் தேடல் : மரவடிவ தகவல் அமைப்பை அலசும் ஒரு முறை. இம்முறையில் ஒரு நிலையில் உள்ள எல்லா முனை களையும் தேடிய பின் அடுத்த நிலை யில் தேடுவது. இதன் மூலம் இரண்டு புள்ளிகளுக்கிடையிலான சுருக்க மான பாதையை முதலில் கண்டு பிடிக்க முடியும்.

breadboard : சோதனைப் பலகை; பிரெட்போர்ட் : ஒரு செயல்முறை சாதனம் அல்லது ஒரு அமைப்பின்



சோதனைப் பலகை (Breadboard)

சோதனை முறையிலான அல்லது தற்காலிகமான மாதிரி அமைப்பு.

Break : நிறுத்து : ஒரு ஆணைத்தொடர் செயல்படுவதைத் தடுப்பதற்கான ஆணை. Control Break என்பதற்கு ஒப்புமை உடையதல்ல.

break code : நிறுத்தக் குறியீடு : விசை யினை முதல் முதலில் அழுத்தும் போது வெளியிடப்படும் ஸ்கேன் குறியீடு.

break detect : நிறுத்தம் கண்டு பிடிப்பு : நீள் வரிசை அளவை 0-க் களை கண்டுபிடிக்கும், தகவல் தொடர் ஏற்பியின் திறன்.

break key : நிறுத்தும் விசை : கணினி செய்து கொண்டிருக்கும் வேலையை நிறுத்துவதற்கான விசை. சில கணினி களில் காணப்படும்.

breakpoint : நிறுத்துமிடம் : ஒரு கட்டுப்பாட்டு ஆணை மூலமாகவோ அல்லது கையால் இயக்குவது மூலமாகவோ ஒரு ஆணைத் தொடரை நிறுத்தக் கூடிய ஒரு இடம்.

சோதனை செய்தல் அல்லது பிழை நீக்க ஆணைத்தொடர்களில் பொது வாக பயன்படுத்தப்படுகிறது.

break signal : நிறுத்த சமிக்ஞை : தொகுதி கோப்பு செயல்படுவதை நிறுத்தவோ அல்லது ஆணைத் தொடரை நிறுத்தவோ அல்லது செய் தித் தகவல் தொடர்பு நிகழ்வை நிறுத் தவோ பயன்படுத்தப்படும் சிறப்பு எழுத்து அல்லது எழுத்துகளின் தொகுதி.

bridge : இணைப்பான் : பல செய்தித் தகவல் தொடர்பு இணைப்புகளை ஒன்றாக இணைத்து ஒரு பல்முனை மின் சுற்றினை உருவாக்கும் சாதனம்.

bridgesware : இணைப்புப் பொருள் : ஒருவகைக் கணினிக்கு எழுதப்பட்ட ஆணைகளை வேறு வகையான கணினி புரிந்து கொள்வதற்கு மொழி பெயர்ப்பு செய்யும் ஆணைத் தொடர் கள்.

briefcase computer : கைப்பெட்டி கணினி : ஒரு கைப்பெட்டி (Briefcase) யின் உள்ளே பொருத்தக்கூடிய, எடுத்துச் செல்லும் கணினி.

brightness : ஒளிமயம் : *1.* கணினி வரைபடங்களில் ஒளி இருத்தல் அல் லது குறைத்தல் (வெண்மை, பழுப்பு, கருமை ஆகிய நிறங்களில் மாறக் கூடியது). *2.* சில சிஆர்டி முகப்பு களில் திரையில் காட்டப்படுவதை மாறுபடுத்திக் காட்டுதல் - குறிப்பாக சில பகுதிகளை மட்டும் தெளிவாகக் காட்டுதல்.

broadband : அகலக்கற்றை : குரல் நிலைதகவல் தொடர்புக்குத் தேவைப் படுவதைவிட அதிக அலை வரிசை களில் செய்தித் தகவல் தொடர்பு களை அனுப்புதல். நுண் அலை ஒளி யிழை (fiber optics), லேசர் கதிர்கள் மற்றும் செயற்கைக் கோள் போன்ற வைகளில் அகலக்கற்றை தகவல் தொடர்பு வழித்தடங்கள் செயல்படு கின்றன. ஐம்பது இலட்சம் செய்தி வேகம் (baud) வரை இதன் மூலம் தக வல்களை அனுப்ப முடியும். Narrow-band உடன் ஒப்பிட்டு பார்க்கவும்.

broadband transmission : அகன்ற கற்றை அனுப்பும் முறை : அனுப்பும் ஊடகத்தை பல வழித்தடங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் தகவல் மின்சுற்றுகளை அனுப்பும் முறை.

broadcast : ஒலிபரப்பு : ஒரே நேரத் தில் பல இடங்களுக்குத் தகவலை அனுப்புவது.

BROM : ப்ரோம் : Bipolar Read Only Memory என்பதன் குறும் பெயர்.

bromide : ஒளியுணர் தாள் : ஒளி உண ரும் தாள். டைப்செட்டில் பயன் படுவது.

Brooklyn bridge : புரூக்ளின் பாலம் : ஐந்தாம் தலைமுறை கணினி அமைப் புகளில் உள்ள பி.சி. கோப்பு மாற்ற ஆணைத் தொடர். தகவல்களை லேப் டாப்பாகிய மடி கணினி, டெஸ்க் டாப்பாகிய மேசை கணினிக்கும் இடையில் மாற்றுகிறது.

brownout : பழுப்பு வெளியேறல் : வழக்கத்தைவிடக் குறைவாக மின் சக்தி குறையும்போது 'புரவுன்அவுட்' ஏற்படுகிறது. மின்சக்தியின் தேவை, அதன் உற்பத்தியைவிட 50 ஹெர்ட்ஸ் அதிகரிக்கும்போது இந்நிலை ஏற் படுகிறது. இதனால் கணினியின் இயக்கம் பாதிக்கப்படுகிறது.

browse : தேடு : தகவல்தள ஆவணங் களைத் தேடுவதற்கும், சொல் செய லகம் போன்றவற்றில் திரையில் செய்திகளை தொகுப்பதற்கும் பயன் படும் (டிபேஸ்) ஆணைத் தொடர்

கட்டளை. தேடு கட்டளைகளின் மூலம் செங்குத்தாக புலம் வாரியாக வும், கிடைமட்டமாக வரிசையாக வும் அல்லது திரை முழுவதும் தேடு வதற்கு முடியும். பொருள் சார்ந்த ஆணைத் தொடர் மொழிகளிலும் தேடுவதற்குப் பயன்படும்.

browser : மேலோடி : ஆணைத் தொடர் மொழி அளிக்கின்ற கருவி வரிசை முறையைப் பார்க்க, ஆணைத் தொடர் அமைப்பவருக்கு அனுமதி அளித்து பொருள் - சார்ந்த மொழிகளில் குறியீட்டை திருத்த உதவும்.

browser/web browser : மேலோடி/ வலை மேலோடி : வலையில் ஆவணங்களைத் தேடிப் பெறவும், ஆவணத்திலிருந்து ஆவணத்திற்கு இணைப்புப் பின் தொடரவும் அனு மதிக்கும் மென்பொருள் ஆணைத் தொடர். இணையத்தில் பயன் படுவது.

browsing : உலாவுதல்; நோட்டமிடல்: தேவையில்லாமல் கணினி பட்டியல் களிலோ அல்லது கோப்புகளிலோ சுவையான செய்தி கிடைக்காதா என்று தேடுதல்.

brush : தூரிகை : கணினி வரைபடங் களில் ஜாய்ஸ்டிக், பேடில் அல்லது அதைப்போன்ற உள்ளீட்டுச் சாதனங் களின் மூலம் காட்சித் திரையின் எந்தப் பகுதியிலும் நகர்த்தக் கூடிய வண்ணம் தரும் சாதனம்.

brute-force technique : முரட்டு விசை தொழில் நுட்பம்.

BSAM (Bee Sam) : பி.சாம் : Basic Sequential Access Method என்பதன் குறும்பெயர்.

BSC : பிஎஸ்சி : Binary Synchronous Communication என்பதன் குறும் பெயர். தகவல் அனுப்புவதற்குப் பயன்படும் ஒரு செயல் முறை.

BSN :பிஎஸ்என் : Business Subscriber Network என்பதன் குறும் பெயர்.

b-spline :பி-ஸ்ப்ளைன் : கணினி வரைகலையின் தொடர்ச்சியை உறுதி செய்யும் கணித வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் வளைவு.

BTAM: பிடாம்: Basic Telecommunication Access Method என்பதன் குறும் பெயர். தொலை தூர சாதனங் களுடன் படித்து எழுதி தொடர்பு கொள்ள அனுமதிக்கும் ஒரு அணுகு முறை.

B-tree : பி.மரம் : Balanced Tree என்ப தன் குறும்பெயர். தகவல் தொகுப்பு களின் தகவல் இருக்கும் இடத்தைக் காட்ட ஏற்பாடு செய்யும் ஒரு வழி. இதன் மூலம் எந்த ஒரு குறிப்பிட்ட பதிவையும் உடனடியாகத் திரும்பப் பெற முடியும்.

btrieve : பிட்ரீவ் : நாவல் (Novell) நிறு வனத்தின் தகவல்தள மேலாண்மை அமைப்பு. இயக்க அமைப்பு அளிக் கப்படுகிறது.

bubble : குமிழ் : குமிழ் வரைபடத்தில் ஒரு குறியீடு அல்லது குமிழ் நினை வகத்தில் துண்மி.

bubble chart : குமிழ் வரைபடம் : குமிழ் போன்ற குறியீடுகளை அதி கம் பயன்படுத்தி தகவல் ஓட்ட வரை படங்களை உருவாக்கும் வரைபடம்.

bubble memory : குமிழ் நினைவகம் : காந்தப் புள்ளிகளாக தகவலை சேமித்து வைக்கும்முறை. ஒரு மெல் லிய, மின்கடத்தாப் பொருளால் ஆன படலத்தின் (film) மீது குமிழ்கள் நிற்கின்றன. அழியாத இருப்பகத் திறனை இது அளிக்கிறது.

bubble jet : குமிழ் ஜெட் : கேனனின் இங்க் ஜெட் அச்சுப்பொறி தொழில் நுட்பம். லேசர் அச்சுப் பொறியினை விட மலிவானது.



குமிழ் ஜெட் அச்சடிப்பி (Bubble Jet Printer)

bubble sort : குமிழ் அடுக்கு ; குமிழி வரிசையாக்கம்.

bucket : வாளி : கூட்டாக அழைக்கப் படும் பதிவேடுகளின் குழுவைச் சேமித்து வைக்க இருப்பகத்தில் இருக்கும் குறிப்பிட்ட பகுதி. வன் பொருள் தொடர்பானதாக இருக்க லாம் அல்லது 'தற்சார்பு முகவரி வாக்கம்' (hasing) மூலம் முடிவு செய்யக் கூடியதாக இருக்கலாம்.

buddy system : மொட்டு அமைப்பு : நினைவகத்தை நிர்வகிக்கும் முறை. இதன் அளவுகள் 2-ன் மடங்காக இருக்கும்.

budget forcasting model : நிதி நிலை முன்மதிப்பீட்டு மாதிரி : தரமான கணக் கீட்டுச் செயல்பாடுகளைப் பயன் படுத்தி தனித்தனி துறையிலிருந்து அளிக்கக்கூடிய நிதிநிலைத் தகவல் களைத் தொகுப்பதற்குப் பயன்படக் கூடிய மாதிரி. பண ஓட்டம், ஒரு பங்குக்கான வருமானம் மற்றும் பிற நிதித் துறை விகிதாச்சாரங்களை முன்னறிவிப்புச் செய்யும் திறன்களையும் இதில் உள்ள டக்கலாம். இதன் விளைவாக நிதி நிலைக்கு ஏற்றவாறு செயல்பாடு அமைப்பு விரி தாள் பணித்தொகுப்புகளில் இத்தகைய மாதிரிகள் பொது வாக சேர்க்கப்படும்.

buffer : தாங்கி; இடையகம்; நினைவறை;இடைநிலை நினை வகம் : பல்வேறுபட்ட இயக்க வேகத் தினைச் சரி செய்யவோ அல்லது சம நிலைப்படுத் தவோ பயன்படுகின்ற தற்கா லிக இருப்பிடப் பகுதி. மெது வாக உள்ளீடு செய்கின்ற சாதனமான முகப்பு விசைப் பலகையுடன் அதி வேகமாக இயங்குகின்ற கணினியின் முதன் மைப்பகுதியுடனும் இணைப்பதற் குப் பயன்படுத்தலாம்.

buffered computer : இடைத் தடுப்பு உள்ள கணினி : ஒரே நேரத்தில் உள் ளீடு / வெளியீடு மற்றும் செயலாக்க நடைமுறைகள் அளிக்கின்ற கணினி.

buffering : தாங்குதல் : தகவல் தொடர்பு பாதையில் தகவல்களை அனுப்புவதைத் தாமதப்படுத்து வதோ அல்லது தற்காலிகமாக சேமித்து வைப்பதோ செய்யப் படுவது.

buffer flush : கூடுதல் வெளியேற் றல் : நினைவகத்திலிருந்து வட்டுக் குத் தகவலை மாற்றுதல்.

buffer memory : கூடுதல் நினைவகம்; இடைநிலை நினைவகம் : உள்ளீடு அல்லது வெளியீட்டை வைத்துக்

கொள்ளப் பயன்படுத்தப்படும் தற்காலிக நினைவகம். இதனால் மையச் செயலகம் வேறு பணிகளில் ஈடுபட முடிகிறது.

buffer pool : கூடுதல் தொகுப்பு : கூடுதல் இருப்பிடங்களுக்காக நினைவகத்தில் ஒதுக்கப்பட்ட பகுதி.

bug : பிழை தவறு : ஒரு கணினியின் ஆணைத் தொடரிலோ அல்லது அதன் அமைப்பிலோ, அதன் வன்பொருள் பகுதியிலோ ஏற்படும் ஒரு தவறு. Debug என்றால் பிழைகளை நீக்கி கோளாறுகளை சரிசெய்வதாகும்.

bulk storage : மொத்த இருப்பகம் : அதிக அளவில் தகவல்களைச் சேமிப்பது. பொதுவாக, நீண்டகால தேவைக்காக இவ்வாறு செய்யப்படும்.

bullet-in font : உள்ளமைந்த எழுத்தச்சு: அச்சுப் பொறியின் ரோமில் (ROM) நிரந்தரமாகக் குறியீடு இடப்பட்ட அச்செழுத்துகள்.

bullet : பொட்டு : ஒரு பட்டியலில் உள்ள வகைகளைத் துவங்கப் பயன்படுத்தப்படும் பொட்டுப் போன்ற அடையாளம்.

bulletin board : அறிவிப்புப் பலகை; தகவல் பலகை : கணினியைப் பயன்படுத்துபவர்கள் செய்திகளையோ அல்லது ஆணைத் தொடர்களையோ மற்றவர்களுக்காக அனுப்ப அனுமதிக்கும் கணினி முறைமை. மின்னணு அறிவிப்புப் பலகை என்றும் அழைக்கப்படுவதுண்டு.

bulletin board service : அறிக்கைப் பலகை சேவை : ஒரு வணிக தகவல் செய்தித் தொடர்பு கட்டமைப்பு. இதில் சந்தாதாரர்கள் செய்திகளை அனுப்பலாம்; மென்பொருள் ஆலோசனை பெறலாம்; ஆணைத் தொடர்களை ஏற்றிப் பெறலாம் இன்னும் பலவற்றைச் செய்யலாம். BBS என்று சுருக்கி அழைக்கப்படுகிறது. Bulletin Board System என்றும் சொல்லப்படுகிறது.

bump mapping : பம்ப் மேப்பிங் : கணினி வரைகலையில் ஒரு தொழில் நுட்பம்.

bundle : கட்டு ; உள்ளிணைந்த : மென்பொருள் துணைப் பொருள்கள் மற்றும் சேவைகளை ஒரு கணினி விலையின் பகுதியாகச் சேர்ப்பது.

bundled : உள்ளிணைக்கப்பட்ட : கணினி பொருட்கள் மற்றும் சேவைகள் முழுவதையும் ஒரே விலைக்கு சேர்த்துத் தருகின்ற ஒரு கணினி உற்பத்தியாளரைக் குறிப்பது.

bundled software : உள்ளிணைந்த மென்பொருள் : கணினி அமைப்பின் மொத்த விலையில் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்ட மென்பொருள்.

bundled / unbundled : உள்ளிணைந்த /பிரிக்கப்பட்ட : ஒரு விலைக்கு அளிக்கப்படும் வன்பொருள் / மென்பொருளின் மொத்தப் பொதிவுத் தொகுதிகள் பிரிக்கப்பட்ட அமைப்புகளில் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி விலைகள் உண்டு.

bundling : உள்ளிணைத்தல்; உடன் சேர்த்தல் : கணினி அமைப்பின் விலையிலேயே மென்பொருள், பராமரிப்பு, பயிற்சி மற்றும் பிற பொருள்கள் அல்லது சேவைகளைச் சேர்த்தல்.

bunny suit : பன்னி உடை : சிப்பு தயாரிக்கும் இடங்களில் மனித நுண்ணுயிரிகள் தொற்றாமல் தடுக்க தூய்மையான அறையில் பாதுகாப்பு ஆடை அணிதல்.

bureau : அலுவலகம் : தகவல் செயலாக்கச் சேவைகளை வேறொரு நிறுவனத்திற்கு அளிக்கும் நிறுவனம்.

burn : எரித்தல் : மிக அதிக மின்சக்தி அல்லது வெப்பத்திற்கு உள்ளாக்கி மின்சுற்றை அழித்தல்.

burn-in : உள்ளெரித்தல் : உயர்த்தப்பட்ட வெப்பநிலையில் அடுப்பில் மின்சுற்றுகளை இயக்குவதன் மூலம் மின்சுற்றுகள் மற்றும் பாகங்களைச் சோதனை செய்யும் முறை. கணினி பாகங்களை தொடர்ச்சியாக ஒரு வாரத்திற்கு 50 டிகிரி செல்ஷியஸ் வெப்ப நிலையில் இயக்குவது ஒரு சராசரியான சோதனை. இதன்மூலம் பலவீனமான மின்சுற்றுகள் எரிந்து போய் சோதனைகளைத் தாங்கும் பாகங்கள் மட்டும் மிஞ்சும்.

burning : எரித்தல் : படிக்க மட்டுமான நினைவகத்தில் (Rom) ஆணைத் தொடர் பதித்தல்.

Burroughs adding machine : பரோவின் கூட்டல் எந்திரம் : 1884இல் வில்லியம் பரோஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட முதல் வணிக முறையிலான கூட்டும், பட்டியலிடும் எந்திரம், வகைப் பலகை மற்றும் அதன் தொழில் நுட்பம் இன்னும் கைகளால் இயங்கும் சில எந்திரங்களில் அப்படியே மாறாமல் உள்ளது.

Burroughs Corporation : பரோஸ் நிறுவனம் : கணினிக் கருவிகளை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நிறுவனம்.

Burroughs William Seward (1857-1898): பரோஸ் வில்லியம் சீவார்ட் (1857-1898) : முதல் வணிக முறையிலான கூட்டல் எந்திரத்தைக் கண்டுபிடித்தவர். இன்றைய பரோஸ் கார்ப்பரேஷன் அந்த எந்திரத்திலிருந்து தான் துவங்கியது.

burst : வெடித்த : 1. கணினி செயல்பாடுகளில், தொடர்ச்சியான காகிதத்தில் இருந்து தனித் தாள்களைப் பிரித்தல். 2. தகவல் அனுப்புதலில் ஒரே அலகாகக் கணக்கிடப்படும் சமிக்ஞைகளின் தொடர்ச்சி.

burster : வெடிப்பி : பல பக்கங்கள் உள்ள கணினி அச்சு வெளியீட்டினைப் பிரிக்கும் ஒரு எந்திர சாதனம். நகல்களைப் பிரித்து கார்பன் தாள்களை எடுக்கிறது.

burst errors : வெடித்த பிழைகள் : தகவல் தொடர்புகளின்போது மிக நெருக்கத்தில் (வெடிப்பில்) ஏற்படும் தொடர் பிழைகள் நடைமுறையில் பெரும்பாலான பிழைகள் நெருக்கத்தில் (வெடிப்பில்) தான் ஏற்படுகின்றன.

burst mode : வெடிக்கும் முறை : தடை செய்ய முடியாத முறையில் தகவல்களைப் படிக்கும் அல்லது எழுதும் முறை.

burst mode transfer : வெடிப்பு முறை மாற்றல் : குறுவட்டு (CD-Rom)விலிருந்து தகவல் மாற்றல். சராசரி தகவல் மாற்றல் விகிதமான 150 கிலோ எட்டியல்/ நொடி / (முறை 1) அல்லது 171 கிலோ எட்டியல்கள்/ நொடி (முறை 2) ஆகியவற்றை விட பல மடங்கு பெரியது. (SCSI) தொகுதியைவிட அதிக வேகத்தை இது எடுக்க முடியும்.

bursting : வெடித்தல் : தொடர்ச்சியான படிவ காகிதத்தைத் தனித் தாள்களாகப் பிரிக்கும் செயல்முறை.

bus : மின் இணைப்புத் தொகுதி : தகவல் மற்றும் மின் சமிக்ஞைகளை மாற்றுவதற்கான பாதை அல்லது வழித்தடம்.

bus bridge : மின் இணைப்புத் தொகுதிப் பாலம் : இரண்டு மின் இணைப்புப் தொகுதிகளை ஒன்றாக இணைக்கும் சாதனம்.

bus card : மின் இணைப்புத் தொகுதி அட்டை : விரிவாக்க அட்டை. இது கணினியின் விரிவாக்க மின் இணைப்புத் தொகுதியில் பொருத்தப்படுவது.

bus common : பொது மின் இணைப் புத் தொகுதி : வன்பொருள் சாதனங்களுக்கோ கணினியின் உள்பாகங்களுக்கோ அல்லது தகவல் தொடர்பு கட்டமைப்பில் நிலைகளுக்கிடையிலோ செயல்படும் வழித்தடம். ஒரு கணினியில் மின் இணைப்புத் தொகுதி அமைப்பு பயன்படுமானால், அதன் செயலகங்கள், நினைவகம், வெளிப்புற அலகுகள் ஆகிய அனைத்தும் மின் இணைப்புத் தொகுதியில் ஒன்றோடொன்று இணைக்கப்படுகின்றன. மின் இணைப்புத் தொகுதியில் இரண்டு வழித் தடங்கள் உள்ளன. ஒன்று தகவல் இருக்கும் இடத்தைக் கண்டறியவும், மற்றொன்று தகவலை மாற்றவும் செய்கிறது. கட்டமைப்பில் உள்ள அனைத்து உறுப்புகளும் மின் இணைப்புத் தொகுதியில் இணைக்கப்படும்.

bus extender : மின் இணைப்புத் தொகுதி விரிவாக்கம் : சோதனைக்காக சுற்றிலும் உள்ள அட்டைகளுக்கு வெளியே ஒரு அச்சிட்ட மின்சுற்று அட்டையைத் தள்ளும் அட்டை. அது முதலில் ஒரு விரிவாக்க இடத்தில் பொருத்தி பின்னர் மின் இணைப்புத் தொகுதி விரிவாக்கியில் சேர்க்கிறது. இதில் பல விரிவாக்க இடங்கள் மட்டும் இருக்கலாம் அல்லது அவற்றில் மின்சக்தி அளிக்கும் வசதியும் இருக்கலாம்.

bush button : அழுத்து பித்தான்.

Bush, Vannevar (1890-1974) : புஷ், வான்னேவர் : மின்தடங்களினால் ஏற்படும் கணித சமன்பாட்டு வேறுபாடுகளைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டபோது, 1930ஆம் ஆண்டு பல்வேறு சிக்கல்களைத் தீர்க்கக் கூடிய முதல் தானியங்கிக் கணினியை உருவாக்கினார். மாறுபாட்டு ஆய்வன் Differential Analyzer என்று அழைக்கப்பட்ட கணினி, இன்றைய ஒப்புமை கணினிகளுக்கெல்லாம் முன்னோடியானது. 100 டன் எடையுள்ள இக் கணினியில் பல்லாயிரக் கணக்கான வெற்றிடக் குழல்கள் பயன்பட்டன.

business applications : வணிகப் பயன்பாடுகள் : சம்பளப்பட்டி, வர வேண்டிய, கொடுக்க வேண்டிய பணம் பற்றிய கணக்குகள், இருப்பு கணக்கெடுத்தல் போன்ற அன்றாட கணக்கீட்டு நடைமுறைகளுக்குப் பயன்படும் கணினி ஆணைத் தொகுப்புகள் அறிவியல் பயன்பாடுகளுக்கு மாறானது.

business data processing : வணிகத் தகவல் செயலாக்கம் : சம்பளப்பட்டி, பட்டியலிடல், கணக்கெடுத்தல் போன்ற வணிக நோக்கங்களுக்காக நடைபெறும் தகவல் செயலாக்கம்.

Business Equipment Manufacturers Association (BEMA) : பீமா : Business Equipment Manufacturers Association என்பதன் குறும்பெயர். கணினி கருவிகள் மற்றும் அலுவலக எந்திரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களைக் கொண்ட சங்கம். பயன்பாட்டாளர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவும், பொது நலனுக்காக தகவலைப் பயன்படுத்தவும், கணினி மற்றும் தகவல் செயலாக்கக் கருவிகளுக்கான தர நிர்ணயங்களை உருவாக்க

வும் வழிகாட்டுவதே இதன் நோக்கங்கள். ஒரு வாராந்தர செய்தி மடலும், ஒரு ஆண்டு அறிக்கையும், வெளியிடுகின்றது.

business graphics : வணிக வரைகலைவியல் : 1. பை (Pie) வரைபடங்கள், நீள்கட்ட வரைபடங்கள், பிரிவு படங்கள், மற்றும் பிற புலனாகும் முறைகளில் வணிகச் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களின் விற்பனைக்கும் விலைக்கும் உள்ள வேறுபாடு. துறைவாரி விற்பனை, உற்பத்திப் பொருள் செயல்பாட்டின் ஒப்பீடு, இருப்பு விலைகள் போன்ற துறைகளில் அளித்தல். 2. தகவல்களை பார்த்துத் தெரிந்து கொள்ளும் வண்ணம் காட்டக்கூடிய பயன்பாட்டு ஆணைத் தொகுப்புகளை உருவாக்குதல்.

business machines : வணிக எந்திரங்கள் : வணிக செயல்பாடுகளுடன் தொடர்புள்ள கணினிகள், சொல் செயலாக்க எந்திரங்கள், முகப்புகள் மற்றும் பிற மின்னணு, எந்திரக் கருவிகள்.

business - oriented programming language : வணிகம் சார்ந்த ஆணைத் தொடர் மொழி : வணிகப் பயன்பாடுகளில் அதிக தகவல் கோப்புகளைக் கையாளக் கூடியதாக உருவாக்கப் பட்ட மொழி.

business programming : வணிக ஆணைத்தொடர் அமைத்தல் : கணினி தீர்வுக்காக வணிகப் பிரச்சினைகளுக்குக் குறியீடு இடப்படும் கணினி ஆணைத்தொடர் அமைக்கும் பிரிவு. பொதுவாக குறைந்த கணக்கீடுகளே இடம் பெற்றாலும் ஏராளமான தகவல் உள்ளீடு வெளியீடுகளைக் கொண்ட கோப்புகளைக் கையாளக் கூடியது.

business software : வணிக மென்பொருள் : மின்னணு விரிதாள், தகவல்தள மேலாண்மை அமைப்புகள், வணிக வரைபட சம்பளப்பட்டி ஆணைத் தொடர்கள் மற்றும் கணக்கீட்டு ஆணைத்தொடர்கள் போன்ற வணிக பயன்பாடுகளுக்காகவென்றே குறிப்பிட்டு உருவாக்கப்பட்ட பணித் தொகுப்புகள்.

bus mouse : மின் இணைப்புத் தொகுதி; சுட்டுக் கருவி : வரிசைத் துறையில் (Port) பொருந்துவதற்குப் பதிலாக விரிவாக்க அட்டையில் பொருந்தும் மின் இணைப்புத் தொகுதி சுட்டுக் கருவி.

bus network : இணைப்புத் தொகுதி பிணையம் : மின் இணைப்புத் தொகுதி அல்லது ஒரு பொது விநியோக வழித்தடத்தினைப் பயன்படுத்தி அனைத்து நிலையங்கள் அல்லது கணினிச் சாதனங்கள் தகவல் தொடர்பு கொள்ளும் அமைப்பு.



இணைப்புத் தொகுதி பிணையம் (Bus network)

bus system : மின் இணைப்புத் தொகுதி அமைப்பு : கணினி உள்ளே தகவல்கள் போவதற்கு வகை செய்யும் பாதைகளின் கட்டமைப்பு. மின் இணைப்புத் தொகுதி, கட்டுப்பாட்டு மின் இணைப்புத் தொகுதி முகவரியுடன் இணைப்புத் தொகுதி, ஆகியவை கணினியில் முக்கிய மின் இணைப்புத் தொகுதிகளாக அடையாளம் காணப்படுகின்றன.

bus toplogy : மின் இணைப்புத் தொகுதி அமைப்பியல் : மின்னணு கட்டமைப்பு கட்டுமானத்தை விளக்குவது.

business computer : வணிகக் கணினி: வணிகப் பயன்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் கணினி.

business data processing : வணிக தகவல் செயலாக்கம் : சம்பளப்பட்டி, வரிசைப்படுத்தல் மற்றும் கணக்கிடுதல் போன்ற வணிக நோக்கங்களுக்கான தகவல் செயலாக்கம்.

business information processing : வணிக தகவல் செயலாக்கம் : வணிகச் சூழ்நிலையில் தகவல் செயலாக்கம் மற்றும் பரிமாற்றத்தை விளக்கும் ஒரு பொதுச்சொல். விலைப்பட்டியல் தயாரித்தல் அல்லது விமான டிக்கட்டுகள் போன்ற பயண முன் பதிவுகள், காசோலை ரத்து, சம்பளப் பட்டி வெளியீடு போன்றவை எடுத்துக்காட்டுகள்.

business oriented programming language : வணிகம் சார்ந்த ஆணைத் தொடர் மொழிகள் : வணிகப் பயன்பாடுகளுக்காக பேரளவு தகவல் கோப்புகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு மொழி.

Button : பொத்தான் : சுட்டுக் கருவியினால் கிளிக் செய்தால் திரையில் ஒரு இடத்தில் ஒரு செயலைத் துவக்கவோ அல்லது நிறுத்தம் செய்யவோ அதிகம் பயன்படுத்தப்படுவது.



பொத்தான்கள்
(Buttons)

bypass : மாற்றுவழி : ஒரு மின்சுற்றில் ஒன்று அல்லது பல பொருள்களைச் சுற்றிச் செல்லும் இணைவழி.

bypass capacitor : மாற்றுவழி தாங்கி : மின்சக்தி வழங்குதலின்போது ஏற்படும் மின்சார இரைச்சலைக் குறைக்க உதவும் தாங்கி.

Byron Lady Ada Augusta : பைரன் அடா அகஸ்டா சீமாட்டி : லவ்லேஸ் பெருமகள் என்று அழைக்கப்படுபவர். புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் பைரன் பிரபுவின் மகளே செல்வி பைரன். சார்லஸ் பாபேஜிடம் அவர் நெருங்கிப் பணியாற்றி, அவரது பகுப்பு எந்திரத்திற்கு ஒரு விளக்க ஆணைத் தொடரை கொடுத்தார். உலகின் முதல் ஆணைத் தொடராளர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர். அடா என்னும் ஆணைத்தொடர் மொழி அவரது நினைவாக பெயரிடப்பட்டது.

byte : பைட் ; எட்டியல் ; எண் துண்மி : 1. கணினியில் ஒரு தனி அலகாக செயல்படும் அடுத்தடுத்துள்ள இரும இலக்கங்களின் தொகுதி. மிக அதிகமாகக் காணப்படும் எண் துண்மியில் எட்டு இரும இலக்கங்கள் இருக்கும். 2. ஒரு தனி எழுத்தைக் குறியீடு

செய்யப் பயன்படுத்தப்படும் இரும இலக்க தொகுதி. 3. சில சமயம் B என்றும் சுருக்கமாக அழைக்கப் படுகிறது.

byte machine : எட்டியல் எந்திரம் : மாறும் எட்டியல் Byte துண்மி (Bit) நீளங்களுக்கு நேரடியாக அணுகி இயங்கக் கூடிய ஒரு கணினி.

byte order : எட்டியல் வரிசை : ஏஐஎக்ஸ் விரிவு எக்ஸ் பலகணியில் துண்மிக்கு வரையறை அல்லது பிக்ஸ் மேப் தகவலுக்காக பணியா ளார் வரையறுக்கும் எட்டியல் களின் வரிசை.

bytes per inch (BPI) : பிபிஐ : Byter Per Inch என்பதன் குறும் பெயர். ஒரு அங்குல காந்த நாடாவில் கொள்ளக் கூடிய எட்டியல்களின் எண்ணிக்கை. (தகவல்) அடர்த்தியைப் பதிவு செய் யும் பொதுவான அளவுகோல்.

byte specifications : எட்டியல் வரை யறைகள் : வன்பொருள் பற்றிய வரை யறைகள். எண் துண்மிகளில் செய் யப்படுகின்றன. சான்றாக 80 மீமிகு எட்டியல் வட்டு 8 கோடி எழுத்து களை அடக்குகிறது. ஒரு மீமிகு எட்டியல் நினைவகம் 18 லட்சம் எழுத்துகளை சேமிக்கிறது. குறைந்த துல்லிய வரைகலை கோப்பில் 8,000 எட்டியல்கள் மட்டுமே அடங்கும். ஆனால், மேற்பட்ட எட்டியல்கள் ஒவ்வொரு படத்திற்கும் ஏற்கப்படு கிறது.

byte string : எட்டியல் சரம் : ஸ்கேன் செய்த ஆவணத்திலிருந்து இலக்க மயமாக்கப்பட்ட வடிவம்.

bytemode : எட்டியல் முறை : மையச் செயலகத்திற்கும் வேறு வெளிப்புறச் சாதனத்திற்கும் தகவல் மாற்றலைக் குறிப்பிடுவது. இம்முறையில் ஒரு நேரத்தில் ஒரு தனி எட்டியல் மாற்றப் படுகிறது.

byte oriented protocol : எட்டியல் சார்ந்த விதிமுறைகள் : தகவல் தொடர்பு விதிமுறை. இதில் கட்டுப் பாட்டுக் குறியீடுகள் முழுவதும் எட்டியல்களாகவே இருக்கும். ஐபிஎம் மற்றும் பிற விற்பனையாளர் கள் பயன்படுத்தும் பைசிங்க்ரனஸ் விதிமுறைகளும் இதற்கு எடுத்துக் காட்டுகள்.

C

C : சி : ஒரு கணினி மொழி- நுண் கணினிகளில் பயன்படுத்த வடி வமைக்கப்பட்ட ஒரு ஆணைத் தொடர் மொழியின் முழுப் பெயர். பயன்படுத்த எளிமையாகவும், மிக வும் திறன்மிக்கதாகவும் தொகுப்பு களை உருவாக்கவும் உள்ள மென் பொருள். கீழ் நிலை எந்திரக் கட்டுப் பாடும், உயர் நிலை சொல் தொடர் களையும் இணைத்து உருவாக்கப் பட்ட மொழி.

cable : கம்பி வடம் : ஒரு அமைப்பின் இரண்டு பகுதிகளை ஒன்றாக இணைக்கப் பயன்படும் கம்பிகளின் கற்றை அல்லது மின்சாரக் கம்பிகள். மின் சக்தி அல்லது மின்சமிக்ஞை களைக் கொண்டுசெல்கிறது.

cable connector : கம்பி வடம் இணைப்பி : ஒரு கணினியையும், வெளிப்புற உறுப்புகளையும் இணைக் கும் இணைப்புக் குழாய்களுக்குப் பயன் படுத்தப்படும் ஆண் / பெண் செருகி (Plug).

cabletext : கம்பி வட உரை : கூட் டச்சுக் கம்பி வழியாக ஒளிக்காட்சி வரை அனுப்புதல்.

cache : கேஷி : தற்காலிக இருப்பக மாகப் பயன்படும் ஒரு சிறிய அதிவேக நினைவகம்.

cache controller : கேஷி கட்டுப் படுத்தி : கேஷி நினைவகத்திற்கு படி / எழுது இயக்கங்களைக் கட்டுப் படுத்தும் மின்னணு மின்சுற்று. கட்டுப்பாட்டு பொறியானது இன் டெல் 82385 போன்ற ஒரு சிப்பு வாகவோ அல்லது தனிச் சாதன மாகவோ இருக்கலாம்.

cache memory : விரைவு நினைவகம்; அவசரத்தேவை நினைவகம் : தக வலைத் தற்காலிகமாக சேமித்து வைப்பதற்கான சிறிய அதிவேக நினைவகம். மெதுவாக இயங்கும் பெரு நினைவகத்திற்கும், வேகமான மையச் செயலக அலகுக்கும் இடை யில் வழக்கமாகப் பயன்படுத்தப்படு வது. விரைவு அட்டை (scratch pad) என்றும் அழைக்கப்படுகிறது.

caching : கேஷிங் : விரைவு அணுக லுக்காக கேஷி நினைவகத்தில் தகவல் களை வைத்திருத்தல்.

CAD : காட் : Computer - Aided Design என்பதன் குறும்பெயர். கணினி வழி வடிவமைப்பு.

CADAM : கேடம் : Computer - Graphics Augmented Design and Manufacturing என்பதன் குறும்பெயர். கணினி வரைபடங்களைக் குறிப்பது.

CAD/CAM : கேட்/கேம் : கணினி வழி வடிவமைப்பு/கணினி உதவும் உற் பத்தி எனப் பொருள்படும். Computer-Aided Design / Computer - Aided Manu-facturing என்பதன் குறும்பெயர்.

CADD : கேட் : Computer Aided Design and Drafting என்பதன் குறும்பெயர். அளவு அமைத்தல், சொல் நுழைவு உள்ளிட்ட, வடிவமைப்புக்கான கூடு தல் வசதிகள் கொண்ட காட் அமைப்பு கள்.

CADD centre : கேட் மையம்.

CAE : சிஏஇ : Computer - Aided Engi-neering என்பதன் குறும்பெயர். கணினி உதவிடும் பொறியியல் அடிப்படை பிழை திருத்தத்திற்கான வடிவமைப்பை அலசுகிறது அல்லது உற்பத்தி செய்யப்படக்கூடியதுதானா என்பதன் செயல்பாட்டையும், பொரு ளாதாரத்தையும் ஆய்வு செய்து தருகிறது. கேட்/கேம் வடிவமைப்பு தகவல் தளத்தில் இருந்து எடுக்கப் பட்ட தகவலைப் பயன்படுத்தி ஒரு

பகுதி, உற்பத்திப்பொருள் அல்லது வடிவமைப்பில் உள்ள அமைப்பினை ஆராயவும் பல்வேறு சூழ்நிலைகளில் அதன் செயல்திறனை மாதிரியாகச் செய்து காட்டவும் பயன்படுகிறது.

CAGE : பெட்டி : அச்சிட்ட மின்சுற்று அட்டைகள் ஏற்றப்படும் ஒரு பெட்டி.

CAI : கேய் : Computer-Assisted Instruction என்பதன் குறும்பெயர். கணிப்பொறி உதவியுடன் கற்றுத் தரல் என்பதாகும்.

CAL : கால் : Computer Augmented Learning என்பதன் குறும்பெயர். கணினி வலுப்படுத்திய கற்றுத்தரல் என்பதாகும்.

calculated Field : கணக்கிடப்படும் புலம் : பிற புலங்களைக் கணக்கிட்டு பெறப்பட்ட எண் அல்லது தகவல் புலம். பயனாளரால் கணக்கிடப்படும் புலத்தில் தகவல்களை நுழைக்க முடியாது.

calculating : கணக்கிடல் : மதிப்பீடு செய்தல் : சில எண் வகையிலான உண்மைகளைச் சுருக்கி, புதிய தகவலை ஏற்படுத்தல் அல்லது புதிதாக உருவாக்குதல்.

calculations : கணக்கீடுகள் : தகவல்களின் மீது கணித செயல்முறைகள்.

calculator : கணிப்பி : கணக்கீடுகளைச் செயல்படுத்தப் பயன்படுத்தப்படும் எந்திரக் கணித அல்லது மின்னணு எந்திரம். கணினிகளிலிருந்து மாறுபட்ட கணிப்பிகளுக்கு அடிக்கடி மனிதத்தலையீடு தேவைப்படும்.

calculator mode : கணிப்பி நிலை.

calibration : மதிப்பாராய்தல் : அளவீடு செய்தல் : ஒரு கட்டுப்பாட்டுக் குமிழ் கைப்பிடியில் (knob) ஏற்படுத்தப்பட்டுள்ள, நிர்ணயிக்கப்பட்ட சரியான மதிப்பினையோ அல்லது ஒரு மீட்டரில் ஒவ்வொரு அளவை எண்ணிக்கையில், சரியான மதிப்பை நிர்ணயிக்கப்பட்ட தரத்தையோ ஒத்திட்டுப் பார்த்து அல்லது அளந்து முடிவு செய்யும் செயல்முறை.

call : அழைப்பு : 1. ஒரு குறிப்பிட்ட மூடிய துணைச் செயல்பாட்டுக்குக் கட்டுப்பாட்டை மாற்றுவது. 2. தகவல் தொடர்பில், அழைக்கும் நபர் செய்யும் செயல், அல்லது ஒரு அழைப்பினைச் செய்வதற்கு தேவையான செயல்பாடுகள் அல்லது இரு நிலையங்களுக்கும் இடையிலே உள்ள இணைப்புகளை மிகத் திறமையாகப் பயன்படுத்துவது.

call by reference : குறிப்பு மூலம் அழைத்தல் : ஆணைத் தொடர் அமைத்தலில், துணை வாலாயமாகப் பயன்படுத்தப்படும் மாறிகளின் நினைவக முகவரிகளையே அளவுகோல்களாக துணை வாலாய முறைக்கு (Subroutine) அனுப்பும் அழைப்பு.

call by value : மதிப்பு மூலம் அழைத்தல் : ஆணைத் தொடர் அமைப்பதில் பயன்படுத்தப்படுவது. துணை வாலாயசெயல் முறைகளில் பயன்படுத்தப்படும் அளவுகோல்களின் உண்மை தகவல்களை அவற்றுக்கு அனுப்பும் அழைப்பு.

calligraphic graphics : எழுத்து வனப்பு வரைபடங்கள் ; வரிவடிவ வரைவியல்: ஒரு ஒழுங்கில்லாத வகையில் ஒழுங்கில்லாத திசைகளை நோக்கி இழுக்கப்பட்ட கோடுகளைக் கொண்டு ஒரு உருவத்தை அமைத்தல். இதற்கு அதிகச் செலவாகும் மின்னணு தேவைப்படுகிறது. ஆனால், இடஞ்சார்ந்த ஒழுங்களவு கொண்ட இதே

போன்ற வரைபடங்களைக் கொண்டதுதான் "கம்பி உருவ" மாதிரிகள். ஆரம்ப காலத்தில் கணினி வரைபடங்களுக்குச் சமமானதாக இவை கருதப்பட்டன.

call instruction : அழைப்பு ஆணை : ஆணைகளின் புதிய வரிசையை இயக்குவதை திசை மாற்றிய பிறகு, ஆணைத் தொடரின் ஆரம்ப வரிசைக்குத் திரும்பி வருவதை அனுமதிக்கும் ஆணை.

callback PPD : மீண்டும் அழைக்கும் பிபிடி : வருகின்ற அழைப்புகளைக் கண்காணிக்கும் ஒரு சாதனம்.

called routine : அழைக்கப்பட்ட துணை வாலாயமுறை : ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்றும் ஒரு ஆணைத் தொடர். இதை ஒரு அழைப்பு அல்லது ஆணைத் தொடரின் பிரிந்து போகும் ஆணையின் மூலம் அணுக முடியும்.

calling programme : அழைக்கும் ஆணைத்தொடர் : வேறொரு ஆணைத் தொடரைத் துவங்கி வைக்கும் ஆணைத் தொடர்.

calling sequence : அழைக்கும் வரிசை: கொடுக்கப்பட்ட ஒரு துணைச் செயல்பாட்டை அழைப்பதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் குறிப்பிட்ட ஆணைத் தொகுதிகள்.

Calloc : சிஅலாக் : 'சி' மொழியில் உள்ள ஒரு பணி. எம்அலாக், (malloc) ரிஅலாக் (realloc) போன்றது.

CAM : கேம் : கணினி உதவிடும் உற்பத்தி எனப் பொருள்படும் Computer-Aided Manufacturing என்பதன் குறும்பெயர்.

cambridge ring : கேம்ப்ரிட்ஜ் வளையம் : இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வடிவமைத்த அதிவேக வளாக இணையம் (LAN).

camera-ready artwork : ஒளிப்படக் கருவிக்குத் தயாரான கலை வேலை : வணிக அச்சகப் பகுதியில் ஒளிப்படம் எடுக்கத் தயாராக உள்ள அச்சிடும் பொருள். ஒரு முறை ஒளிப்படம் எடுத்தபின் அச்சுத் தகட்டினைச் செய்யத் தயாராக உள்ளது.

Canadian Information Processing Society; CIPS : கனடாவின் தகவல் செயலாக்கச் சங்கம்; சிப்ஸ் : தகவல் செயலாக்கத் துறையில் பொதுவான ஆர்வமுள்ள கனடாக்காரர்களை ஒன்று திரட்ட ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. தங்களது வாழ்க்கையை கணினி தகவல் செயலாக்கத் துறைகளில் அமைத்துக் கொண்டுள்ள 400-க்கும் மேற்பட்ட அறிவியலாளர்கள், வணிகர்களை உறுப்பினர்களாகக் கொண்டது.

cancel : ரத்து ; விடு ; நீக்கு : அப்போது தட்டச்சு செய்த வரியை நீக்குவதற்கான விசைப் பலகைச் செயல்பாடு.

candidates : வேட்பாளர்கள் : ஒரு திட்டத்தின் ஆரம்ப வடிவமைப்பு நிலையில் வழங்கப்படும் மாற்றுத் திட்டங்கள்.

canned programme : அடைக்கப்பட்ட ஆணைத் தொடர் : ஒரு சிக்கலுக்கு நிலையான தீர்வை வழங்கும் ஆணைத் தொடர் தொகுதி. கணினி உற்பத்தியாளர்கள் மற்றும் மென்பொருள் உருவாக்குபவர்கள் பயன்படுத்தத் தயாரான நிலையில் பயனாளருக்கு அளிக்கும் இந்த ஆணைத் தொடர்களை தனிநபர்களும், பல வணிக நிறுவனங்களும் பயன்படுத்த ஏற்றதாக உள்ளது. Custom Software - க்கு எதிர்ச் சொல்.

canned routine : அடைக்கப்பட்ட வாலாய செயல்முறை : ஒரு குறிப்பிட்ட கணினியில் பயன்படுத்துவதற்காக முன்னதாக எழுதப்பட்ட ஆணைத் தொடர். ஒரு குறிப்பிட்ட செயலாக்கப் பணியைச் செய்யும் துணை வாலாய செயல் முறை (சப்ரொட்டீன்).

canned software : அடைக்கப்பட்ட மென்பொருள் : உடனே பயன்படுத்தத் தயாரான நிலையில் பயன்படுத்துவோருக்கோ அல்லது வேறொரு விற்பனையாளருக்கோ கணினி உற்பத்தியாளர்கள் தயாரித்த ஆணைத் தொடர்கள். பல வணிகர்கள் மற்றும் தனி நபர்கள் பயன்படுத்தும் அளவுக்குப் பொதுவானது. Custom Software - க்கு மாறானது.

canon engine : கேனன் எந்திரம் : கேனன் ஒளிப்பட நகலெடுக்கும் கருவியில் பயன்படும் உள் எந்திர அமைப்பு. பல லேசர் அச்சுப் பொறிகளில் பயன்படுத்தப்படுகிறது.

canonical synthesis : விதிமுறை பகுப்பாய்வு : மீண்டும் வரும் விவரப் பொருள்கள் இல்லாமல் ஒரு தகவல் தள மாதிரியை வடிவமைக்கும் செயல் முறை. விதிமுறை முன் மாதிரி அல்லது திட்டமானது எத்தகைய வன்பொருள் அல்லது மென்பொருளாக இருந்தாலும் தகவல் செயலாக்கம் செய்யும்.

CAP : கேப் : Computer - Aided Publishing என்பதன் குறும்பெயர்.

capability list : திறன் பட்டியல் : ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்படும் விவரக் குறிப்புப் பட்டியலை வரிசைப்படுத்துதல்.

capacitance : தாங்கும் திறன் : மின் சக்தியைச் சேமிக்கும் திறனின் அளவு. Farad என்பதை அடிப்படை அளவு கோலாகக் கொண்டது.

capacitor : தாங்கி; மின்னுறைக் கலன்கள் : நிலையான மின்சக்தியை சேமிக்கும் மின் சாதனம். முறையாகக் கிளப்பி விட்டால் மின்சக்தியை வெளியிடும். கணினி இருப்பகத்தில் துண்மிகளை எழுதும் முறையும், படிக்கும்முறையும் இதுதான்.



மின்னுறைக் கலன்கள் (Capacitor)

capacitor storage : தாங்கி சேமிப்பகம்; மின்னுறைகலன் சேமிப்பகம் : ஒரு பொருளின்தாங்கும் பொருட்களைப் பயன்படுத்தி தகவல்களை சேமிக்கும் ஒரு சேமிப்புச் சாதனம்.

capacity : திறன் : கொள்திறன் ஒரு சேமிப்பகச் சாதனத்தில் எத்தனை வகையான தகவல்களைச் சேமித்து வைக்க முடியும் என்பது கணினிச்

சொற்கள், எட்டியல் எழுத்துகள் போன்ற பல வகைகளில் கூறப் படுகிறது.

capacity management : திறன் நிர் வாகம் : தகவல் செயலாக்கப் பணி களின் அளவு, வன்பொருள் - மென் பொருள், பயன்பாடு மற்றும் பிற கணினி அமைப்புத் தேவைகளைக் கட்டுப்படுத்தி, வருவதுரைக்கும் திட்டமிடல் மற்றும் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தல்.

cap height : தலைப்பெழுத்து உயரம் : கீழ் வரியிலிருந்து தலைப்பெழுத் தின் உயரம்.

caps : தலைப்பெழுத்துகள் ; தலைப் பெழுத்துகள் அல்லது மேல் எழுத்து கள் : All caps என்றால் எல்லா எழுத்து களும் தலைப்பெழுத்துகளாக வேண் டும். initial caps என்றால் ஒவ்வொரு முக்கிய சொல்லிலும் முதல் எழுத்து தலைப்பெழுத்தாக்கப்பட வேண்டும்.

capstan : கேப்ஸ்டன்; இழுவிசைப் பொறி : ஒரு நிலையான வேகத்தில் பதிவு செய்யும் முனையை, நாடா



இழுவிசைப் பொறி (Capstan)

வின் குறுக்காக இழுக்கும் காந்த நாடா இயக்கியின் சுழலும் சாதனம்.

caps lock key : தலைப்பெழுத்து பூட்டு விசை : கணினி விசைப் பலகையில் உள்ள ஒரு விசை எழுத்துகளில் கொட்டை எழுத்தை மட்டும் அணுக அனுமதிக்கும் விசை. "மாற்றி விசை" யுடன் இதை ஒப்பிடுக. இது எழுத்துகள் மட்டுமல்லாது இரண்டா வது பணியையும் அனுமதிக்கும் தலைப்பெழுத்து பூட்டப்பட்டபின் 'மாற்று' (Shift) விசையை அழுத் தினால் சில கணினிகளில் மீண்டும் பழைய நிலையே வந்துவிடும்.

capture : பதிவு செய் : கணினியிலோ அல்லது ஏதாவது ஒரு வடிவிலோ தகவல்களைப் பதிவு செய்தல்.

CAR (Computer-Assisted Retrieval) : கார் : Computer Assisted Retrieval என்ப தன் குறும்பெயர். காகிதம் மற்றும் நுண் வடிவத்தில் சேமிக்கப்படும் பாகங்கள், ஆவணங்கள் அல்லது பதிவுகளைத் தேடிக் கண்டுபிடிக்க கணினி பயன்படுத்தும் ஏற்பாடு. கணினியானது அந்தப் பொருள் எங் கிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்த பின், கணினியைப் பயன்படுத்துபவர் தனது கைகளால் அதை எடுத்துக் கொள்வார். LISPஇல் பயன்படுவது.

carbon ribbon : படிவுத்தாள் பட்டை : நன்றாகத் தெரியக்கூடிய துல்லிய மான எழுத்துகளை உருவாக்கித் தரும், அச்சுப் பொறிகளில் பயன் படுத்தப்படும், படிவுத்தாள் இழை பட்டை.

card : அட்டை : (1) அச்சிடப்பட்ட மின்சுற்று அட்டை. (2) 18.7 செ.மீ -க்கு 8.3 செ.மீ அளவுகளில் செங்குத் தான வரிசையில் துளைகளைப் பதிவு செய்வதன் மூலம் தகவல்களைக் குறிப்பிடும் ஒரு சேமிப்பு ஊடகம்.

card code : அட்டைக் குறியீடு : ஒரு துளையிடப்பட்ட அட்டையில்

எழுத்துகளைக் குறிப்பிடும் துளையிட்ட ஓட்டைகளின் கூட்டமைப்புகள்.

card cage : அட்டைப் பெட்டி : அச்சிடப் பட்ட மின்சுற்று அட்டைகளைப் பொருத்துகின்ற கணினியின் உள்ளே இருக்கும் ஒரு பெட்டி.



அட்டை (Card)
துளையிட்ட அட்டை (மேலே)
அச்சிட்ட மின்சுற்று அட்டை (கீழே)

card column : அட்டைப் பத்தி : ஒரு துளையிட்ட அட்டையில் துளையிடும் இடங்களின் செங்குத்தான வரிகளில் ஒன்று.

card deck : அட்டைத் தொகுதி : துளையிட்ட அட்டைகளின் ஒரு தொகுதி.

card face : அட்டை முகம் : ஒரு துளையிட்ட அட்டையின் அச்சிடப்பட்ட பக்கம்.

card feed : அட்டை இயக்கி : துளையிட்ட அட்டைகளை எந்திரத்தில் ஒவ்வொன்றாக நகர்த்தும் சாதனம்.

card field : அட்டைப் புலம் : ஒரு தகவல் அலகுக்கு அளிக்கப்படும் தொடர்ச்சியான துளையிட்ட அட்டைகள்; குறிப்பிட்ட எண்.

card frame : அட்டைச் சட்டம் : ஒரு கணினி அமைப்பின் மின்சுற்று அட்டைகளை ஒரு இடத்தில் வைத்துப் பிடிக்கும் ஒரு பகுதி.

card hopper : அட்டை தள்ளும் சாதனம் : துளையிட்ட அட்டைகளை வைத்துக் கொண்டு அட்டையைக் கையாளும் கருவியின் நகர்த்தும் இயக்கத்திற்குக் கொடுக்கின்ற சாதனம்.

card image : அட்டை உருவம் : ஒரு அட்டையில் துளையிடப்பட்ட, சேமிக்கப்பட்டுள்ள பொருள்.

cardinal number : கார்டினல் எண் : ஒரு தொகுதியில் எத்தனை வகையறாக்கள் உள்ளன என்பதைக் குறிப்பிடும் எண். சான்றாக, "21" என்ற எண்ணில் 10 எழுத்துகள் என்றால் 21 கார்டினல் 10 ஆர்டினல் ஆகும்.

cardinaiity : கார்டினல் தன்மை : ஒரு வகுப்பானது எத்தனை முறை வரலாம், வகுப்பு உறவுகளை எத்தனை தடவை பயன்படுத்தலாம் என்ற பொருள் சார்ந்த ஆணைத் தொடரமைப்பில் பயன்படுவது.

card punch : அட்டை துளை யிடும் கருவி : கணினியின் நினைவகத்தில் இருந்து தகவலைப் பெற்று, அதை அட்டைகளில் துளையிட்டுத் தரும் வெளியீட்டுச் சாதனம்.

card reader : அட்டை படிப் பொறி; அட்டைபடிப்பி: அட்டைகளில்துளை யிடப்பட்ட தகவலைப் படித்து, அதை கணினியின் நினைவகத்திற்கு மாற்றும் உள்ளீட்டுச் சாதனம்.

card reproducer : அட்டை மறு தயாரிப் புப் பொறி : ஒரு அட்டையைப் போன்றே வேறொரு அட்டையில் துளையிட்டுத் தரும் சாதனம்.

card row : அட்டை வரிசை : ஒருதுளை யிட்ட அட்டையின் துளையிடும் நிலையில் உள்ள கிடைமட்ட வரிசை களில் ஒன்று.

card sorting : அட்டை பிரித்தல் ; அட்டை வரிசைப்படுத்தல் : தனிப் பட்ட அட்டைகளில் போடப்பட் டுள்ள துளைகளுக்கேற்ப துளை யிட்ட அட்டைகளைப் பிரித்து வைத்தல்.

card stacker : அட்டை அடுக்கி : துளை யிட்ட அட்டை தகவல் செயலாக்க எந்திரத்தைக் கடந்த பின் அட்டை களைச் சேர்த்து வைக்கும் கொள் கலம்.

card-to-disk converter : அட்டையி லிருந்து வட்டுக்கு மாற்றும் பொறி : துளையிட்ட அட்டைகளிலிருந்து வட்டு சேமிப்பகத்துக்கு தகவல் களை நேரடியாக மாற்றித் தரும் சாதனம்.

card-to-tape converter : அட்டையி லிருந்து நாடாவுக்கு மாற்றும் பொறி : துளையிட்ட அட்டைகளிலிருந்து காந்த அல்லது காகித நாடாவுக்கு தகவல்களை நேரடியாக மாற்றும் சாதனம்.

card verification : அட்டை சோதித் தல்; அட்டை சரிபார்ப்பு : விசைத் துளையிடலின்துல்லியத்தை சோதிக் கும் செயல்முறை. அதே தகவல் மூலத்தைப் படித்துச் சோதிக்கும் பொறியின் விசைகளை அழுத்தி, முதலில் துளையிட்டதை இரண்டா வதாக ஒருவர் சோதிப்பார். ஏற் கனவே துளையிடப்பட்ட அட்டை களின் துளையை விசையை அழுத்தி, சோதித்து அவை சரியாக இல்லை யென்றால் பிழை என்பதைக் காட்டும்.

caret : கேரட் ; முகடு : 1. ஒரு எண் ணின் மூலமானது எந்த இடத்தில் இருக்கிறது என்பதைக் காட்டும் குறியீடு. 2. எங்கே செய்தியை நுழைக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட திரையில் அடையாளச் சுட்டியாகப் பயன்படுத்தப்படும் அல்லது அடையலாம்.

carpal tunnel syndrome : கார்பல் சுரங் கப்பாதை உணர்வு : மணிக்கட் டைச் சுற்றிலும் உள்ள திசுக்களில், சுருங் கினாலோ அல்லது தழும்பு ஏற்பட் டாலோ முக்கிய நரம்பு சுருக்கப்படு தல். இது கைகளுக்கு பெரும் சேதம் ஏற்படுத்தக் கூடியது.

carriage : நகர்த்தி ; ஏந்தி : ஒரு தட் டச்சுப் பொறி அல்லது அச்சுப் பொறி யில் இடங்களை நகர்த்தவோ அல் லது காகிதப் படிவங்களை வெளி யேற்றவோ செய்யும் கட்டுப்பாட்டு எந்திர அமைப்பு.

carriage control key : நகர்த்தி கட்டுப் பாட்டு விசை : அச்சுப் பொறியின் நகர்த்தியை ஆரம்பத்திலோ அல்லது அது இருக்க வேண்டிய இடத்திலோ மீண்டும் கொண்டு வரும் பொத்தான்.

carriage control tape : நகர்த்தி கட்டுப் பாட்டு நாடா : ஒரு வரி அச்சுப் பொறி யில் வரி நகர்த்துதலைக் கட்டுப்படுத் தும் தகவலைத் துளையிட்டுள்ள நாடா.

carriage return (CR) : நகர்த்தியைக் கொண்டுவரல் : *எழுத்து அச்சிடும் பொறியில் இடது மூலையில் அடுத்த எழுத்தை அச்சிடச் செய்யும் செயல் முறை.*

carrier : தாங்கி ; *சமிக்ஞை அனுப்பப் படுவதற்கு ஒரு எல்லை அல்லது உறையாக அமைந்து ஏ.சி. மின்சாரம் இயங்குவது. ஒரு கம்பி அல்லது குழாய் மூலம் ஒரே நேரத்தில் பல சமிக்ஞைகளை இது கொண்டு செல்ல முடியும். சான்றாக ஒரே தாங்கியில் குரல், தகவல் அல்லது ஒளிக்காட்சி சமிக்ஞைகள் ஒரே நேரத்தில் பயணம் செய்ய முடியும். ஏனென்றால், ஒவ்வொன்றும் மாறு பட்ட இடைவெளிகளில் செல் பவை.*

carrier based : தாங்கி சார்ந்த : *அனுப் பப்படும் தகவல்களை வைத்துக் கொண்டிருப்பதற்கு ஒரு நிலையான அலைவரிசையை (தாங்கியை) உருவாக்கி அனுப்பும் அமைப்பு.*

carrier frequence : ஊர்தி அலை வெண் : *இரும எண் (பைனரி) தக வலைக் குறியீடு செய்ய ஏற்றவாறு அமைக்க, தகவல் தொடர்புச் சாதனங்களின் இடையே பரிமாறப் படும் இடைவிடாத சமிக்ஞை.*

carrier signal : தாங்கி சமிக்ஞை : *செய்தித் தகவல் தொடர்புகளில் தக வல் சமிக்ஞைகளை மாற்றி அனுப்பு வதற்காக ஊடகத்தில் ஏற்படுத்தப் படும் சமிக்ஞை.*

carrier working : தாங்கி செயலாற் றுதல் : *வீச்சு மாறுவதன் மூலம் ஒரு பேச்சை அதன் ஆரம்ப ஒலி அலை வரிசையிலிருந்து (300 முதல் 3,400) ஹெர்ட்ஸ்) உயர் ''தாங்கி'' அலை வரிசைக்கு மாற்ற முடியும். உலகின் பெரும்பாலான தொலைதூர தொலை பேசி அமைப்புகள் 12 அலைவரிசை குழுவையே பயன்படுத்துகின்றன. 12 குரல் அலைவரிசைகளாக மாற்றப் பட்டு 48 கிலோஹெர்ட்ஸ் அலைக் கற்றையில் அடங்குகின்றது. இவை 60-108 கிலோஹெர்ட்ஸ் வரை செயல் படுபவை.*

carry : அடுத்து வரும் எண் ; தொகு எண் ; எடுத்துச் செல் எண் : *1. ஒரு பத்தியில் உள்ள இரண்டு இலக்கங் களின் கூட்டல் தொகை அடிப்படை எண்ணைவிடப் பெரியதாகவோ அல்லது சமமாகவோ இருக்கும் போது ஏற்படும் சிறப்பு நிலையைக் கொண்டுவரும் செயல்முறை. 2. கொண்டு செல்லும் இலக்கம் அல்லது அடுத்த உயர்பத்திக்குச் சேர்க்கப்படும் இலக்கம்.*

carry digit : தொகு எண் இலக்கம் : *கூட்டலின்போது ஒரு பத்தியி லிருந்து அடுத்ததற்குக் கொண்டு செல்லப்படும் இலக்கம். பதின்மான 'டெனரி' முறையில் 5 + 7-ஐக் கூட் டும்போது கூட்டுத் தொகை 2 ஆகவும் கொண்டு செல்லும் இலக் கம் 1 ஆகவும் வரும். இரும எண் முறையில் 1+1+0+1-க்கு கூட்டுத் தொகை 1 கொண்டு செல்லும் தொகை 1.*

carry flag : தொகு எண் கொடி : *மையச் செயலகத்தின் கொடி பதிவகத்தில் உள்ள துண்மிகளில் ஒன்று. பிழை நிலையைக் குறிப்பிட டாஸ் (DOS) பணிகளில் பயன்படுத்தப்படுகிறது.*

carry register : தொகு எண் பதிவகம் ; எடுத்துச் செல் பதிவகம் : *சுழற்சி அல்லது கொண்டு செல்லும் செயல் பாட்டின்போது சேர்ப்பியில் விரி வாகச் செயல்படும் ஒரு துண்மியின் பதிவு. இணைப்புப் பதிவகம் என்றும் அழைக்கப்படும்.*

cartesian coordinate system : கார்டீசியன் ஒருங்கிணைப்பு அமைப்பு ; கார்டீசியன் ஆயமுறை: ஃபிரெஞ்சு கணிதவியலார் ரெனி டெஸ்கார்ட் கார்டீசியன் பெயரில் ஏற்படுத்தப் பட்ட அமைப்பு. இதன்படி தளத்தில் உள்ள ஒரு புள்ளியின் தூரம் இரண்டு நேர் கோடுகளில் இருந்து கணக்கிடப் படுகிறது, அச்சுகள் என்று அழைக் கப்படுகின்றன. ஒரு அச்சிற்கான தூரமானது மற்றொரு அச்சிற்கு இணையாகக் கணக்கிடப்படுகிறது. புள்ளியுடன் தொடர்புள்ள இந்த எண்கள் அந்த புள்ளியின் ஒருங்கி ணைப்புகள் எனப்படும். இது செவ்வக ஒருங்கிணைப்பு அமைப்பு என்றும் அழைக்கப்படுகிறது.

cartridge : நாடா பேழை; பேழை; பொதியுறை : ரோமில் நிரந்தரமாகச் சேமிக்கப்படும் மென் பொருளைக் கொண்டுள்ள தனிப்பேழை வசதி யான, நீண்ட காலம் வரக்கூடிய, பயன்படுத்த எளிதான, ஓசையற்ற, அழிக்க முடியாத இயக்கப் பெட்டி யைக் கணினியில் கட்டப்பட்டுள்ள ஒரு சிறப்பு இடத்தில் நுழைக்கப் படும் பேழை. வட்டிலோ, நாடா விலோ படி எடுக்க முடியாது. solid state cartridge என்றும் Rom Cartridge என்றும் அழைக்கப்படுகிறது.

cartridge disk unit : நாடா பேழை வட்டு சாதனம் : சேமிப்பகச் சாதனம். இதில் இரு வகை வட்டுகள் உள் ளன. ஒன்று நிலையாக நிற்பது. மற் றொன்று மீண்டும் பயன்படுத்தப் படுவது.

cartridge font : பொதியுறை நாடா எழுத்துரு : அச்சுப் பொறியில் நேரடி யாகப் பொருந்தும் பொதியுறை நாடாவில் உள்ள ஒரு எழுத்துரு. லேசர் அச்சுப் பொறிகளில் இவை அதிகமாக பயன்படுத்தப்படு கின்றன. எச்.பி லேசர் ஜெட் குடும்பம் போன்றவற்றில் பயன் படுத்தப்பட்டாலும் சில புள்ளி வரிசை அச்சுப் பொறிகளிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

cartridge tape : பொதியுறை நாடா : இது 8 மி.மீ அகலமுள்ள ஒரு காந்த நாடா. 12x12 செ.மீ அளவுள்ள குழைம (பிளாஸ்டிக்) உறையில் வைக்கப்பட்டுள்ளது. முதன்மை பொறியமைவுக் கணினிகளில் இவை அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. இவை தொடர் அணுகுமுறை அடக்க தகவல் சேமிப்பகத்தை அளிக்கின் றன. 2000 மீமிகு எட்டியல் (மெகா பைட்) சேமிப்பகம்வரை அவை களுக்குக் கிடைக்கிறது. தனிமுறைக் கணினிகளில் 60-100 மீமிகு எட்டியல் (Mega byte) அளவில் திறனுடை யவைகளாக அவை உள்ளன.

CAS : சிஏஎஸ் : Communication Application Specification என்பதன் குறும் பெயர். 1980இல் அறிமுகப்படுத்தப் பட்ட இன்டல் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தின் விதிமுறைகள்.

cascaded carry : தொடர்ந்து செல்லும் தொகு எண் : மொத்தத் தொகையில், கொண்டு செல்லும் எண்ணைச் சேர்க்கும் முறை.

cascade connection : தொடர் இணைப்பு : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒரே மாதிரியானதுணைச் சாதனங்களை ஒன்றோடொன்று இணைத்தல். ஒன்றின் வெளியீடு அடுத்ததன் உள்ளீட்டுடன் இணைக் கப்படும்.

cascade control : தொடர் கட்டுப் பாடு : கட்டுப்பாட்டுச் சாதனங்கள் சங்கிலியைப் போன்று இணைக்கப் பட்டுள்ள தானியங்கி கட்டுப்பாட்டு அமைப்பு ஒவ்வொன்றும் அடுத்த

தற்குக் கொடுப்பதுடன் அடுத்த நிலையை ஒழுங்குபடுத்தும்.

cascade sort : தொடர் அடுக்கி : வெளிப்புற நாடா கொண்டு வரிசைப் படுத்தும் ஒரு முறை.

cascading menu : தொடரும் பட்டியல்: ஒரு பட்டியலிலிருந்து கொண்டு அடுத்த பட்டியலைத் துவக்கல். இத்தகைய பட்டியலில் இதை அடுத்து வலது அம்புக்குறி இருக்கும்.

case : கேஸ் : 1. சி, டிபேஸ், க்ளிப்பர் போன்றவற்றில் ஆணைத் தொடர்களை எழுதுவதில் பயன்படும் ஒதுக்கப்பட்ட சொல். 2. தகவல் அமைப்பினை உருவாக்கும் எல்லா நிலைகளிலும் பயன்படும் மென்பொருள் வழக்கமான தொழில் நுட்பங்களை உருவாக்க தானியங்கி முறைகளைப் பயன்படுத்துகிறது. எல்லாவற்றுக்கும் பொருந்தும் ஒரு மொழியை உருவாக்குவதே இதன் இறுதி இலக்கு.

case sensitive : எழுத்தின் தன்மை உணர்த்தல் : தலைப்பெழுத்து, கீழெழுத்துகளை வேறுபடுத்துவது. இத்தகைய மொழியில் தலைப்பெழுத்து "A" வுக்கும் கீழெழுத்து "a"க்கும் உள்ள வேறுபாட்டை கணினி கண்டறியும்.

cashless society : பணமிலாச் சமுதாயம் : வாங்குபவரின் வங்கிக் கணக்கிலிருந்து கொடுப்பவரின் வங்கிக் கணக்குக்கு உடனடியாகப் பணத்தைச் செலுத்துவதன் மூலம் வாங்கும் பரிமாற்றத்தை முடிக்கும் கணினி அமைப்பு. ரொக்கமாக எதுவும் மாற்றப்படுவதில்லை. சம்பளக் காசோலைக்குப் பதிலாகவும், சரக்குகள் மற்றும் சேவைகளுக்கும் இவ்வாறு பணமாற்றம் செய்யப்படுகிறது.

cassette : நாடாப் பெட்டி; ஒளிச்சுருள்; ஒளிப்பேழை : தகவல் சேமிப்புக்குப் பயன்படும் காந்த நாடாவைக் கொண்டுள்ள சிறிய பெட்டி.

cassette drive : ஒளிநாடா இயக்கி.

cassette interface : நாடாப் பெட்டி பரிமாற்றச் சாதனம்; நாடாப் பெட்டி இடை முகப்பு : ஒரு கணினிக்கும் ஒரு காந்த நாடாப் பதிவுப் பெட்டிக்கும் இடையில் தகவல் பரிமாற்றங்களைக் கட்டுப்படுத்தப் பயன்படும் மின்சுற்று.

cassette recorder : நாடாப் பெட்டி பதிவகம் : நாடாப் பெட்டிகளைப் பயன்படுத்தி இலக்க முறை தகவல்களைப் பதிவு செய்து சேமிக்கவும், பின்னர் ஒருமுறை இந்த தகவல்களைக் கணினியின் உள் இருப்பகத்தில் ஏற்றவும் வடிவமைக்கப்பட்ட சாதனம். நுண் கணினிகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

cassette tape : நாடாப் பெட்டியின் நாடா : ஏறக்குறைய 1/3 செ.மீ. அகலமுள்ள காந்த நாடா. சிறிய பிளாஸ்டிக் பெட்டியில் வைக்கப்பட்டிருப்பது. நாடாப் பெட்டியில் உள்ள நாடாவை அதன் பதிவாகப் படிக்கிறது.

casting : வார்ப்புரு : ஆணைத் தொடர் அமைத்தலில், ஒரு தகவலின் வகையை இன்னொன்றாக மாற்றுதல்.

CAT : கேட் : Computer Assisted Training and Computerised Axial Tomography என்பதன் குறும்பெயர். கணினி உதவிடும் பயிற்சி மற்று கணினிமய அச்சு ஊடுகதிர் உள்தளப் படமுறை Tomography என்பதன் சுருக்கம்.

catalog : பட்டி ; அடைவு: ஒவ்வொரு வகையாக விவரித்து வரிசையாகச் சேர்த்து வைப்பது. ஆணைத் தொடர்கள் அல்லது ஒரு வட்டில் சேமிக்கப்

பட்டுள்ள தகவல்களின் பட்டியலை வரிசைப்படுத்துதல். ஒரு வட்டைப் பட்டியமைப்பது என்றால் ஒரு வட்டில் உள்ள அனைத்துக் கோப்புகளின் பட்டியலையும் அச்சிட்டுத் தருமாறு கணினியைக் கேட்பதாகும்.

cathode ray tube (CRT) : எதிர் மின்வாய் கதிர்க் குழாய் : தகவலைக் காட்டக் கூடிய திரை உள்ள மின்னணுக் குழாய்.

CAT scan : கேட் ஸ்கேன் : Computer Assisted Tomography Scaning என்பதன் குறும் பெயர். மருத்துவ ஆய்வு மற்றும் நோயறிதல்களில் பயன்படுவது.

cathode : எதிர்மின்வாய் : மின்னணுவியல் சொல். மின்னணுக்களை மறிநிலை Negative சக்தியுள்ள எதிர் மின்வாயிலிருந்து நேர் நிலை (positive) சக்தியுள்ள நேர்மின்வாய்க்கு மாற்றும் சாதனம்.

CAU : காவ் : Controlled Access Unit என்பதன் குறும்பெயர். அடையாள வளைய பிணையங்களுக்காக ஐபிஎம் உருவாக்கிய தானறி குவிப்பான் (Intelligent Hub) ஐபிஎம்.-மின் குறுகிப் பரவிய இணையம். மேலாண்மை மென்பொருள் வழியாக பழுதான முனைகளை 'ஹப்' (Hub) அடையாளம் காட்டும்.

CBASIC : சிபேசிக் : 8080, 8085 மற்றும் இஸட்80 நுண் செயலகக் கணினிகளுக்குப் பிரபலமான மொழி.

CBBS : சிபிபிஎஸ் : Computerized Bulletin Board Service என்பதன் குறும்பெயர். கணினிமய செய்தி அறிக்கை சேவை என்பதன் சுருக்கப் பெயர்.

CBEMA : சிபிஇஎம்ஏ : Computer and Business Equipment Manufacturers Association என்பதன் குறும்பெயர். கணினி மற்றும் வணிகக் கருவி உற்பத்தியாளர்களின் சங்கம் என்பதன் சுருக்கம்.

CBI :சிபிஐ : Charles Babbage Institute என்பதன் குறும்பெயர்.

CBL : சிபிஎல் : Computer Based Learning என்பதன் குறும்பெயர்.

CCD : சிசிடி : Charge Coupled Device : என்பதன் குறும்பெயர். சக்தி இணைந்த சாதனம் என்பது இதன் சுருக்கப் பெயர்.

CCFT : சிசிஎஃப்டி : Cold Cathode Fluorescent Tube என்பதன் குறும் பெயர். பின்புற ஒளி வரும் திரையில் ஒளி உண்டாகும் வகைகளில் ஒன்று. மற்ற பின்புற ஒளிகளைவிட அதிக எடையுடனும், அதிக மின்சாரம் வாங்குவதாகவும் இது உள்ளது.

C^3L : சி^{3}எல் : Complementary Constant Current Logic என்பதன் குறும்பெயர்.

CCITT : சிசிஐடிடி : Consultative Committee International Telegraph and Telephone என்பதன் குறும்பெயர். பன்னாட்டுத் தந்தி மற்றும் தொலைபேசி ஆலோசனைக் குழு என்பது இதன் சுருக்கப் பெயர். உலகளாவிய தர நிர்ணயங்களை தகவல் தொடர்புத் துறையில் உருவாக்குவதற்காக ஐக்கிய நாடுகள் பேரவை உருவாக்கியுள்ள ஒரு நிறுவனம்.

CCP : சிசிபி : Certification in Computer Programming என்பதன் குறும்பெயர். கணினி ஆணைத் தொடர் சான்றிதழ் என்பது இதன் சுருக்கப் பெயர். அமெரிக்கா, கனடா மற்றும் பல பன்னாட்டு இடங்களில் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் ஆண்டுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. ஆணைத் தொடர் அறிவையும், வணிக, அறிவியல் மற்றும் சிறப்பு

ஆணைத் தொடர்கள் அமைப்பு, திறன் குறித்து பொதுத் தேர்வு நடத் தப்படுகிறது. தகவல், கோப்பு அமைப்பு, ஆணைத் தொடர் மொழி, தொழில் நுட்பம், வன்பொருள் - மென்பொருள்களுக்கிடையே பரி மாற்றம், மக்களுடன் பரிமாற்றம் போன்ற துறைகளில் அறிவு வலி யுறுத்தப்படுகிறது.

CDC : சிடிசி : Call directing code என்பதன் குறும் பெயர். ஒரு செய்தி அல்லது ஆணையை தானாகவே வழி நடத்திச் செல்லும் மூன்று அல்லது இரண்டு எழுத்துகளைக் கொண்ட ஒரு குறியீடு.

C DOT : சி-டாட் : Centre for Develop ment of Telematics (Telecommuni cat- ions) என்பதன் குறும்பெயர்.

C-Drive - சி - இயக்கி : கணினியின் உள்ளே நிலையாகப் பொருத்தப் பட்டுள்ள தகவல் சேமிப்பு வட்டு, எப்போதும் 'சி' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது

CE : சிஇ : வாடிக்கையாளர் பொறி யாளர் எனப் பொருள்படும். Custo mer Engineer என்பதன் குறும்பெயர்.

cell : அறை; சிற்றம்; சிற்றறை : 1. ஒரு எழுத்து, ஒரு எட்டியல் அல்லது ஒரு சொல் போன்ற தகவலின் ஒரு அலகை மட்டும் சேமிக்குமிடம். 2. ஒரு மின்னணு விரிதாளின் அடிப் படை வடிவத்தை ஏற்படுத்தும் ஒரு தொகுப்பு அல்லது அச்சு வார்ப் புருவில் (matrix) உள்ள தனி ஒருங்கி ணைப்பு இடம்.

cell address : அறை முகவெண் : விரிதாள் செயல்முறையில் அறை யின் பத்தி அல்லது வரிசையை ஒருங் கிணைப்பவை.

cell animation : அறை உயிர்ப் படம் : ஒரு உயிர்ப்பட தொழில் நுட்பம். இதில் ஒரு ஓவியம் பின்னணியில் நிலையாக இருக்கும். உயிர்ப்பட உரு வங்கள் ஓவியத்தின் மீது நகரும் போது அவை இயல்பாக நகர்வது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகிறது. 'சிற்றறை உயிர்ப் படவியல் முறை ஆணைத் தொடர் கள் கிடைக்கின்றன.

cell array : சிற்றறை வரிசை : GKSஇல் அடிப்படை வெளியீடுகளில் ஒன்று. சிறிய பாலிகன் வரிசை முறையை அமைத்து ஒவ்வொன்றுக்கும் தனி நிறம் தருகிறது.

cell contents : சிற்றறை உட்பொருள் கள் : ஒரு விரிதாள் சிற்றறையில் உள்ள முகப்புச் சீட்டு, மதிப்பு, வாய்பாடு அல்லது பணிகள்.

cellular phone : செல்லிடப் பேசி; செல்பேசி; கைத்தொலைபேசி :

cellular radio : செல்லிட வானொலி : முழு நிலைப் பரப்பையும் அதிக சக்தியுள்ள நிலையான வானொலி நிலையங்களாக அமைப்பதற்குப் பதிலாகப் பிரித்து சேவை அளிப்பது. ஒருசில கிலோ மீட்டர்கள் மட்டுமே கேட்பதாக அவை இருக்கும். நட மாடும் தொலைபேசியின் தேவை அதிகரிப்பதால் சிற்றறை (செல்) அமைப்பின் மூலம் நிலையை ஈடு கட்டலாம். பல இயங்கும் சேவை கள், செல்லுக்குள் கொண்டு வரப் பட்டு செல்லின் அளவு குறைக்கப் படுகிறது. ஒவ்வொரு செல்லுக்கும் தனி பல்லிணைப்பு அலைவரிசை ஒலிபரப்பி - வாங்கி ஆகியவை அமைக்கப்படுகின்றன. ஒலிபரப்பி கட்டு குறைவான மின்சக்தியே தேவைப் படுகிறது. இதனால் வானொலி அலை வரிசைக் கற்றை (பாண்டு)களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி சில

நூறு பேர்களுக்குப் பதிலாக பல்லாயி ரவர் பயன் பெறமுடியும்.

center : மையம் : தட்டச்சு செய்யப் படும் தகவலை வரியின் மையத்தில் இடம் பெறச் செய்யும் விசைப் பலகையின் பணி.

centering cone : மையப்படுத்தும் கூம்பு : 5.25 நெகிழ் வட்டை (ஃபிளாப்பி) இயக்கி அச்சாணியில் ஏற்றப் பயன்படுத்தும் சிறிய செயற் கை இழை அல்லது உலோகக் கூம்பு. இயக்கியின் கதவை மூடியவுடன், இது வட்டின் மையக் குழியில் நுழைக்கப்படுகிறது.

centi : சென்டி : நூறாவது என்பதைக் குறிக்கும் மெட்ரிக் அளவை முன் சொல். நூறு என்பதைக் குறிக்கும் ஹெக்டோவுடன் வேறுபடுத்திப் பார்க்க.

central spindle : மையச் சுழல் தண்டு.

central processing : மையச் செயல் பாடு.

central processing unit : மையச் செயலக அலகு.

centi second : சென்டி நொடி : ஒரு நொடியில் நூறில் ஒரு பங்கு

central information file : மைய தகவல் கோப்பு : முக்கிய தகவல் சேமிப்பு அமைப்பு.

central tendency : மையப் போக்கு : எதிர்பார்க்கப்பட்ட மதிப்புகளுக்கு ஏற்றதாக தகவல்கள் அமையக் கூடிய வாய்ப்பு.

central terminal : மைய முனையம் : கணினிக்கும் தொலைதூர முனையத் துக்கும் இடையே தகவல் தொடர்பு கொள்வதற்கு இடைப்பட்ட ஊடக மாகப் பயன்படும் வன்பொருள் தாங்கி.

centralized data processing : மையப் படுத்தப்பட்ட தகவல் செயலாக்கம் : ஒரு நிறுவனம் தன்னுடைய கணினி கருவிகளையெல்லாம் ஒரே இடத் தில் வைத்திருக்கும் கோட்பாடு. கள அலுவலகச் செயல்பாடுகள் தகவல் செயலாக்கத்திற்கு இல்லாத நிலை.

centralized design : மையப்படுத்தப் பட்ட வடிவமைப்பு : ஒரு நிறுவனத் தின் தகவல் செயலாக்க வசதிகளை, ஒரு தனி தகவல் செயலாக்கத் துறை யே வழங்கும் தகவல் அமைப்பு.

centralized network configuration : மையப்படுத்தப்பட்ட இணைய வடிவம் : ஒரு மைய கணினியின் தொடர்புடன் பெரும்பாலான பணி களைச் செய்யும் ஏற்பாடுள்ள கணினி இணையம். நட்சத்திர இணையம் என்றும் அழைக்கப்படுகிறது.

centralized processing : மையப்படுத் தப்பட்ட செயலகம் : ஒரு தனி, மைய இடத்திலிருந்து ஒன்று அல்லது மேற் பட்ட கணினிகளைச் செயலாக்கம் செய்தல். இதன் பொருள் என்ன வென்றால் தகவல் மையத்துடன் நிறுவனத்தின் அனைத்து முனையங் களையும் இணைத்து செயல்பட வைக்கப்படுகிறது என்பதே.

centred text : மையப்படுத்திய சொல் லமைப்பு : சொல்லமைவுகளை ஒரு வரியின் மையத்தில் அமைத்தல். ஒரு பக்கத்தில் இடது ஓரம் அல்லது வலது ஓரத்தில் இல்லாமல் மையத் தில் இடம் பெறும் சொல் அல்லது சொற்றொடர்.

central site : மையத் தளம் : பரவலாக் கப்பட்ட செயலாக்க அமைப்பில் முக்கிய கருவிகள் உள்ள இடம்.

Centre for Development of Advanced Computing : உயர் கணிப்பு மேம் பாட்டு மையம் : மைய அரசு நிறுவனம்.

centronics interface : இடை இணைப்பு : கணினிகளையும் அச்சுப் பொறிகளையும் இணைக்கும் புகழ் பெற்ற ஒரே நேர பரிமாற்ற அமைப்பு. கணினிகளுக்கும் அச்சுப் பொறிகளுக்கும் இடையில் தகவல் தொடர்புக்கு ஒரே நேரத்தில் சேர்ந்தி யங்கும் திட்டத்தைச் செயல்படுத் திய அச்சுப்பொறி உற்பத்தி நிறுவனம் சென்டிரானிக்ஸ்.

CCP : சிசிபி : Certificate in Computer Programming என்பதன் குறும்பெயர். இது கணினி ஆணைத் தொடர் சான் றிதழ் எனப் பொருள்படும்.

certification : சான்றிதழ் அளித்தல் : 1. ஒரு மென்பொருள் அதன் செயல் திறன் எண்பிக்கப்பட்ட பிறகு ஏற்றுக் கொள்ளல். 2. ஒருவர் குறிப்பிட்ட அளவு தொழில் முறையிலான தகுதியை அடைந்துவிட்டார் என்று கடுமையான தேர்விற்குப் பிறகு அவருக்கு அங்கீகாரம் அளித்தல்.

chad : காகிதத் துண்டு : சேமிப்புச் சாதனத்தில் துளையிடப்பட்டவுடன் தனியாக விழும் நாடா அல்லது தொடர் எழுது பொருளில் துளை யிட்டவுடன் வெளியே விழும் துண்டுக் காகிதம்.

chain : சங்கிலி : 1. சுட்டுக் கருவிகள் பதிவேடுகளை இணைத்தல். கடைசி பதிவேட்டுக்கும் முதல் பதிவேட் டுக்கும் இதன் மூலம் இணைப்பு ஏற் படுத்தப்படும். 2. வரிசையாகச் செய்ய வேண்டிய செயல் முறைகள்.

chaining : சங்கிலியிடல் : பதிவேடு கள், ஆணைத் தொடர்கள் மற்றும் இயக்கங்களின் தொடரை இணைக் கும் செயல்முறை. கணினியின் முதன்மை நினைவகத்தை விடப் பெரிதான ஆணைத் தொடர்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து செயல் படுத்துதல்.

chained file(s) : இணைக்கப்பட்ட கோப்புகள் : ஒவ்வொரு பிரிவு தகவல் கட்டமும் அடுத்த ஒன்றுக்கு அழைத் துச் செல்லும் கோப்பு பாயின்டர் எனப்படும் சுட்டுகளைப் பயன் படுத்தி தகவல் கட்டங்களை இணைத்துள்ள தகவல் கோப்பு.

chained files :-சங்கிலியிடப்பட்ட கோப்புகள் : சுட்டுக் கருவிகள் மூலம் தொடராக இணைக்கப்பட்ட தகவல் கோப்புகள்.

chained list : சங்கிலியிடப்பட்ட பட்டியல் : ஒவ்வொன்றும் அடுத்து வருவதைக் குறிப்பிடும் பட்டியல். சேமிக்கப்பட்ட அதே வரிசையி லேயே அதைத் திரும்பப் பெற வேண்டிய தேவையில்லை.

chain field : சங்கிலிப் புலம் : சேமிப்புச் சாதனத்தில் அடுத்ததாக சேர்க்கப் படாவிட்டாலும் ஆரம்பப் பதிவேட் டுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு பதிவேட்டில் உள்ள புலத்தின் வரை யறை.

chaining : சங்கிலியிடல் : 1. ஆணைத் தொடர்கள், செயல் முறைகள் அல் லது பதிவேடுகளை வரிசையாக இணைக்கும் முறை. 2. முதன்மை நினைவகத்தினைவிடப் பெரியதாக ஆணைத் தொடர்களை நிறைவேற்ற அனுமதிக்கும் முறை. இதில் பல சிறிய பணிக்கூறுகளாக (modules) உருவாக்கப்பட்டு அவை கணினியில் ஏற்றப்பட்டு வரிசையாக செயல் படுத்தப்படும்.

chaining (data chaining) : சங்கிலி யிடல் (தகவல் இணைப்பு) : தகவல் தொகுதிகளை வரிசைப்படுத்துதல். அடுத்த தகவல் தொகுதி முகவெண்

ஆணையின் கடைசிப் பகுதியை எடுத்துக் கொள்வது.

chaining search : சங்கிலி முறைத் தேடல் : பதிவேட்டில் உள்ள முக வெண்களைப் பயன்படுத்தி, ஒரு கோப்பில் உள்ள தகவல் தேடும் நுட்பம். இதில் சங்கிலி முறையில் ஒவ்வொரு பதிவேடும் அடுத்த பதி வேட்டுடன் இணைக்கப்படும்.

chaining printer : சங்கிலி அச்சுப் பொறி : அச்சிடும் இடங்களில் செங் குத்தாகச் சுற்றும் சங்கிலியில் எழுத்து களை அமைத்துள்ள அச்சுப் பொறி. அச்சுச் சங்கிலியில் அமைக்கப் பட்டுள்ள எழுத்துகளின் மீது ஒரு அச்சு சுத்தி அடிப்பதன் மூலம் காகி தத்தில் அச்சிடுகிறது.

chamfer : சாம்ஃபெர் : இரண்டு சந்திக்கும் கோடுகளுக்கு இடையில் சமன்படுத்தப்பட்ட விளிம்பு.

change agent : மாற்ற உதவியாளர் : ஒரு நிறுவனத்தின் மாற்றத்திற்கு எதிர்ப்பு ஏற்படின் அதைச் சமாளிக் கும் முறைமை ஆய்வாளர் (System Analyst).

channel capacity : இணைவழி ஆற்றல் : ஒரு தகவல் ஊடகத்தில் ஒரே நேரத் தில் சாத்தியமாகும் தகவல் வழித் தடங்கள்.

change directory command : கோப்பக மாற்று ஆணை: டாஸ், யூனிக்ஸ் முறைகளில் செயல்படும் கட்டளை.

change dump : மாற்றத் திணிப்பு : முன்பு பதிவு செய்த நிகழ்வினை அடுத்து ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய நினைவகத்தின் அனைத்து தன்மை களையும் வெளியிடல்.

change file : மாற்றக் கோப்பு : மாற்றப் பட்ட தகவல் கோப்பு. தலைமைக் கோப்பைப் புதுப்பிக்கப் பயன்படும் செயல் பரிமாற்றக் கோப்பு.

channel : இணைப்பு; வழி; தடம்; அலைவரிசை : 1. இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட முனை களை இணைக்கும் மின்சார அல்லது மின்னணு தகவல் அனுப்பும் பாதை. 2. துணைச் சாதனங்களை கணினி யுடன் இணைக்கும் தகவல் பரப்பும் பாதை

channel adapter : வழி ஏற்பி : பல் வேறு வன்பொருள் சாதனங்களின் வழிகளிடையே தகவல் தொடர் பினை ஏற்படுத்தும் சாதனம்.

channel command : இணைப்புக் கட்டளை : ஒரு உள்ளீடு/வெளியீடு இணைப்புச் செயல்படுத்தும் ஆணை.

channel map : இணைப்பு அமைபடம்: மிடி (midi) இணைப்புச் செய்திகளுக் குச் சேரவேண்டிய இணைப்புகள், வெளியீட்டுச் சாதனங்கள் மற்றும் ஒட்டு அமைபடங்களைக் குறிப்பிடு கிறது.

channel programme : இணைப்பு ஆணைத் தொடர் : ஒரு அதிவேக வெளிப்புற செயல்படுத்தும் ஆணை களின் தொகுதி. உள்ளீடு/வெளியீடு இயக்கத்தைத் துவக்கும் ஆணைத் தொடரின் ஆணை. இணைப்பு ஆணைத் தொடரைத் தனியாக இணைப்பு செயல்படுத்தும். மற்ற இயக்கங்கள் அதே வேளையில் கணினியால் செய்யப்படும்.

character : எழுத்து வகை; வரி வடிவம் : கணினி சாதனத்தில் சேமித்து, செய லாக்கப்படும் ஏதாவது ஒரு குறியீட் டெண், நிறுத்தக் குறியீடு அல்லது வெற்றிடம்.

character cell : எழுத்துச் சிற்றறை : காட்சித் திரை அல்லது அச்சுப் பொறி

யில் ஒரு தனி எழுத்தை அமைக்கப் பயன்படும் புள்ளிகளின் அமைப்பு 8 x 16 எழுத்துச் சிற்றறையில் 16 குறுக்குவிட்ட வரிசைகள் இருக்கும். ஒவ்வொரு வரிசையிலும் 8 புள்ளி கள். இப்புள்ளிகளின் இணைப்பின் மூலமே எழுத்து உருவாகிறது.

character checking : எழுத்துச் சோத னையிடல் : எல்லா எழுத்துகளையும் ஒரு குழு அல்லது புலமாகச் சோதித்து ஒவ்வொரு எழுத்தையும் சரிபார்த்தல்.

character code : எழுத்துக் குறியீடு : எழுத்துத் தொகுதி ஒன்றைக் குறிப் பிடும் ஒரு எண் குறியீடு.

character data : எழுத்துத் தகவல் : அகர வரிசை எண் தகவல் அல்லது சொல்.

character density : எழுத்து அடர்த்தி : சேமிக்கும் தகவல்களின் அடர்த்தி. ஒரு செ.மீ அல்லது ச. அங்குலத்திற்கு எத்தனை எழுத்துகள் என்பதைக் குறிப்பிடுகிறது.

character device : எழுத்துச் சாதனம் : ஒரு நேரத்தில் ஒரு எழுத்து என்ற அளவில் தகவல்களை அனுப்பிப் பெறும் சாதனம்.

character field : எழுத்துப் புலம் : அகர வரிசை மற்றும் எண் எழுத்துகளைக் கொண்டிருக்கும் தகவல் புலம். Numeric field-க்கு எதிர்ச் சொல்.

character fill : எழுத்து நிரப்பு : இடங் களை நிரப்பப் பயன்படும் வெற் றிடம் போன்ற தகவல் அல்லாத எழுத்து.

character generator : எழுத்து உரு வாக்கி : ஒரு திரை அல்லது அச்சுப் பொறியில் எண் அல்லது எழுத்து களை ஏற்படுத்தும் மின்சுற்று.

character graphics : எழுத்து வரை கலை : அகர வரிசை எழுத்துகளைப் போல வரைகலையை உருவாக்க சிறப்பு சமிக்ஞைகளை ஒன்றாகக் கோர்த்தல். சான்றாக, தொடரும் எழுத்து வரைகலையினைப் பயன் படுத்தி படிவங்கள், வரைபடம் மற்றும் எளிய வரைகலைகள் அச் சிடப்படுகின்றன. அஸ்கி (ASCII) எழுத்துகளின் பகுதியாக இவை அமைகின்றன.

character machine : எழுத்து எந்திரம் : எட்டியல் எந்திரத்தைக் குறிப்பிடு கிறது.

character mode : எழுத்து முறை.

character-at-a-time printers : ஒரு நேரத்தில் ஒரு எழுத்து அச்சுப் பொறிகள் : தொடர் அச்சுப் பொறிகள் என்று அழைக்கப்படும். ஒரு நேரத் தில் ஒரு எழுத்தினை மட்டுமே அச்சி டும் அச்சுப் பொறிகள்.

characterstic : எழுத்து சார்ந்த.

charactaristice : பண்பியல்புகள்.

character map : எழுத்து அமைப்புப் படம் : காட்சித் திரையில் உள்ள கட் டங்களின் தொகுதி. இதில் உள்ள ஒவ் வொரு கட்டமும் ஒரு எழுத்து, எண் நிறுத்தக் குறியீடு அல்லது சிறப்பு எழுத்தைக் குறிப்பிடுகிறது.

character pitch : எழுத்துரு இடை வெளி: ஒரு வரியில் ஒரு அங்குலத் திற்கு இத்தனை எழுத்து என்று குறிப்பிடுவது.

character pattarn : எழுத்துத் தோரணி.

character reader : எழுத்து படிப்பொறி.

charactor set : எழுத்துரு இட அமைவு.

characters per second : ஒரு நொடிக்கு இத்தனை எழுத்துகள் : குறைந்த வேக தொடர் அச்சுப் பொறிகளின் வெளி

யீட்டை அளக்கும் அலகு. CPS என்று சுருக்கிக் கூறப்படுகின்றது.

character string : எழுத்துச் சரம் : அகர வரிசை மற்றும் எண்களைக் கொண்ட எழுத்துகளின் சரம்.

character terminal : எழுத்து முனையம் : வரைகலை திறனில்லாத காட்சித் திரை.

charactor type field : எழுத்து வகைப் புலம் .

character template : எழுத்துப் பலகை. மின்னணு ஒளிக்கற்றை காட்சித் திரையில் எண்ணெழுத்துகளாக மாற்றித் தரும் ஒரு சாதனம்.

charactron : கேரக்ட்ரான் : திரையில் அகர வரிசை எண் எழுத்துகளையும், சிறப்பு எழுத்துகளையும் காட்டும் சிறப்பு வகை கத்தோட் கதிர்க் குழாய்.

charge : ஏற்று : ஒரு பொருளில் உள்ள சமநிலைப்படுத்தப்படாத மின்சக்தியின் அளவு.

charge back systems : சார்ஜ் பேக் அமைப்புகள் : இறுதிப் பயனாளர் துறைகளுக்கு செலவுகளை ஒதுக்கீடு செய்யும் முறை. பயன்படுத்திய தகவல் அமைப்பு மூலாதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் செலவின் மதிப்பீடு செய்யப்படுகிறது.

charge card : மின்னூட்ட அட்டை : 286 பி.சி. வகைகளை உற்பத்தி செய்யும் ஆல் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் வன்பொருள் நினைவக மேலாளர். 286 சிப்புவை வெளியே எடுத்து மின்னூட்ட அட்டையில் பொருத்தி அதை துளையில் பொருத் தலாம்.

CCD : சிசிடி : Charge Coupled Device என்பதன் குறும்பெயர். சக்தி இணைந்த சாதனம். சேமிக்கப்பட்ட தகவல் குறிப்பிட்ட இடத்தில் நிற்காமல் சுழன்று கொண்டே இருக்கும் அரைக்கடத்தி நினைவகச் சாதனம்.

Charles Babbage Institute : சார்லஸ் பாபேஜ் இன்ஸ்டிடியூட் : வரலாற்றுக் கண்ணோட்டத்தில் தகவல் புரட்சியை ஆராய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனம். தகவலின் வரலாறு மற்றும் தொன்மைப் பொருள்கள் பற்றிய ஆராய்ச்சிகளுக்கான மைய நிறுவனமாகத் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட அமைப்பு.

chart : வரைப்படம் ; விளக்கப் படம் : பட்டை வரைபடம் போன்ற அளவிடக்கூடிய தகவலை எளிதில் காணும் வண்ணம் குறிப்பிடல். செங்குத்தான அல்லது கிடைமட்டமான கோடுகளாகவோ அல்லது வட்டப் படம், போன்ற முறையில் தகவலை சிறு சிறு துண்டுகளாகப் பிரித்து படமாக அமைத்துக் காட்டுதல்.

chart of accounts : கணக்குகளின் வரைபடம் : பொது பேரேடு கணக்கீட்டு அமைப்பில் குறிப்பிட்ட தலைப்புகள் அல்லது கணக்குகளின் எண்ணிக்கை.

chart recorder : வரைபட பதிவி : பதிவேடு வைக்கும் சாதனம். பேனாவை வலது அல்லது இடது புறமாகத் திருப்பி அடியிலிருக்கும் காகிதத்தில் வரைபடங்கள் வரைவது.

chartchassis : வரைபட அடிக்கட்டகம் : உலோகச் சட்டம் இதன் மீது கம்பியிழுத்தல், துளைகள் மற்றும் பிற மின்னணு தொகுப்புகளைப் பொருத்த முடியும்.

chassis : அடிக் கட்டகம்; அடிப்பகுதி: ஒரு மின்னணு சாதனத்திற்கான கம்பிகளை இணைக்கும் வசதி அமைக்கப் பட்டுள்ள உலோக உருவம்.

chat mode (Internet) : உரையாடும் முறை (இணையம்) : தகவல் தொடர்பு முறை பயன்படுத்துபவர்கள் இதில் செய்திகளை ஒருவருக்கொருவர் தட்டச்சு செய்து பெறலாம். ஒவ்வொரு விசையை அழுத்தியவுடன் அது அனுப்பப் பட்டுவிடும்.

check bit : சோதனைத் துண்மி ; சரி பார்ப்புத் துண்மி: சமநிலைத் துண்மி போன்ற இரும எண் சோதனை இலக்கம்.

check box : தேர்வு செய் / பெட்டி : தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்புக்கு



தற்போதைய நிலையைக் காட்டும் முறை. இதில் அடுத்துள்ள சிறிய பெட்டியில் எக்ஸ் அல்லது சோதனைக் குறியீடு சமிக்ஞையைக் காட்டினால் அதைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதை உணர்த்தும்.

check character : சோதனை எழுத்து : ஒரு தகவல்களின் தொகுதி இறுதியில் சேர்க்கப்படும் எழுத்து. சோதனை செய்யப்படும்போது இதைப் பயன்படுத்துகிறோம்.

check digits : சோதனை இலக்கங்கள்: எண் வடிவ தகவல் அலகைத் தகவலாக அனுப்பும்போது அதனுடன் சேர்க்கப்படும் ஒன்று அல்லது இரண்டு இலக்கங்கள். தகவல் எழுதும் போதோ அல்லது அனுப்பும் போதோ ஏதாவது தவறு ஏற்பட்டால் பிழை என்பதற்கான அடையாளம் தோன்றும்.

check indication : சோதனை குறிப்பிடு தல் : ஒரு பதிவகத்தில் 1 அல்லது 0 துணுக்கை அமைத்து அது பிழை ஏற் பட்டதா இல்லையா என்று குறிப் பிடச் செய்தல்.

check indicator : சோதனை காட்டி : ஒரு சாதனத்தில் ஒலி அல்லது ஒளி மூலம் அதன் இயக்கத்தில் பிழை அல்லது கோளாறு ஏற்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுதல்.

check plot : சோதனை வரைவி : இறுதி வெளியீட்டை அளிப்பதற்கு முன் ஒளிச் சோதனை மற்றும் திருத்துவதற்காக ஒளிக் காட்சிச் சாதனம் தானாக உருவாக்கும் ஒரு வரைவு.

check point : சோதனை இடம் : கையால் இயக்கும்போதோ அல்லது கட்டுப்பாட்டுச் செயல்முறையிலோ ஒரு ஆணைத் தொடரினைத் தடுத்து நிறுத்தும் குறிப்பிட்ட இடம். பிழை தீர்க்கும் ஆணைத் தொடர்களில் உதவுவதற்காக பெரும்பாலும் பயன்படுத்தப் படும்.

check pointing recovery : நிறுத்தி நிலையெடுத்தல்.

checkpoint / restart : சோதனையிடல் / மீண்டும் துவக்கல் : கணினி அமைப்பின் கோளாறிலிருந்து வெளியே

வரும்முறை. கணினி நினைவகத்தில் உள்ள ஒரு பகுதி மேலும் பதிவு செய்யப்படும் போது அங்கங்கே வைக்கப்படும் புள்ளி. கணினியில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால், கடைசி சோதனையிடத்திலிருந்து மீண்டும் துவக்கலாம். கடைசி சோதனையிடத்திற்குப் பிறகு நுழைக் கப்பட்டவை எல்லாம் தொலைந்து போய்விடும்.

check problem : சோதனைச் சிக்கல் : ஒரு கணினி அல்லது கணினி ஆணைத்தொடர் சரிவர இயங்கு கிறதா என்பதை முடிவு செய்வதற் காக செயற்கையாக உருவாக்கப் பட்ட சிக்கல்.

check sum : சோதனை கூட்டல் எண் : சோதனைக்காகப் பயன்படுத்தப்படு கின்ற துண்மிகள் அல்லது இலக்கங் களின் கூட்டல் தொகை. தானாக ஏற்படுத்தப்படும் விதிகளின்படி கூட்டல் நடைபெறுகிறது. தகவல் சரியாக இருக்கிறதா என்பதை சோதிக்கப் பயன்படுகிறது.

chemical collissions : வேதி மோதல் கள் : பிபிசி அக்கார்ன் அல்லது இந்திய எஸ்சிஎல் யூனிக் கார்ன் -க்கான ஒரு கல்வி மென் பொருள். வரைகலை முறையில் வேதி கலவை களில் ஏற்படும் எதிர்வினைகளின் பல்வேறு தன்மைகளை இது கூறும்.

chicklet keyboard : சிக்லட் விசைப் பலகை : விரைவாகத் தட்டச்சு செய்ய முடியாத அளவில் சிறிய, சதுர விசை கள் உள்ள விசைப் பலகை.

chief information officer : தலைமை தகவல் அலுவலர் : நீண்ட கால தகவல் திட்டமிடல் மற்றும் உத்தியில் கவனம் செலுத்தி ஒரு நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்பப் பணிகள் அனைத்தையும் மேற்பார்வையிடும் ஒரு மூத்த நிர்வாகப் பதவி.

chief programmer : தலைமை ஆணைத் தொடராளர் : ஒரு ஆணைத் தொடர் குழுவுக்குத் தலைவராக நியமிக்கப் பட்டவர். திட்டம் முழுவதும் வெற்றிகரமாக முடிக்கப்பட வேண் டும் என்பதற்காக முழுப் பொறுப் பையும் ஏற்றிருப்பவர்.

chief programmer team : தலைமை ஆணைத்தொடராளரின் குழு : கணினி ஆணைத்தொடர் எழுதுவதற்காக ஏற் படுத்தப்பட்ட ஒரு அமைப்பு. ஒரு தலைமை ஆணைத் தொடராளர், ஒரு மாற்று ஆணைத் தொடராளர், ஒரு ஆணைத்தொடர் நூலகர் / செயலா ளர் உள்ளிட்ட குழுவின் தலை மையை ஒரு தொழில் நுட்ப ஆணைத் தொடராளர் ஏற்றிருப்பார். தேவைப்பட்டால், இரண்டு அல்லது மூன்று கூடுதல் உறுப்பினர்கள் சேர்க் கப்படலாம் அல்லது வல்லுநர்கள் ஆலோசனை பெறலாம். ஆணைத் தொடர் எழுதுவதை ஒரு தனியார் கலையாகக் கருதாமல் அதை ஒரு பொறியியல் தொழிலாக மாற்று வதும், திறமைமிக்க படைப்பாளி தன் படைப்புத் திறனில் கவனம் செலுத்தி ஊக்கம் அளிப்பதும் இதில் முக்கிய கோட்பாடுகளாகும்.

child : குழந்தை ;சிறு பதிவேடு: ஏற் கனவே இருக்கும் பெற்றோர் ஏடு ஒன்று அல்லது இரண்டுக்கு மேற் பட்ட பதிவேடுகளின் உள்ளடக்கங் களைச் சார்ந்து உருவாக்கப்படும் தகவல் பதிவேடு.

child process : குழந்தைச் செயல் முறை; சிறு ஆணைத்தொடர் : வேறொரு ஆணைத்தொடரின் (பெற் றோர்) கட்டுப்பாட்டில் இருக்கும் போதே இயங்கும் ஒரு ஆணைத் தொடர்.

child programme : சோதனை ஆணைத் தொடர் : ஒரு ஆணைத் தொடரின் உள்ளேயே இயக்கப்பட்டு, அதன் இயக்கம் தீர்ந்தவுடன் தனியாக செயல்படும் ஒரு ஆணைத் தொடர். முதன்மை ஆணைத் தொடரினால் அழைக்கப்பட்டு நினைவகத்தில் ஏற்றப்படும் இரண்டாம் நிலை அல்லது துணை ஆணைத்தொடர்.

child record : சேய்ப் பதிவகம்; கீழ் நிலைப் பதிவு : வரிசைக்கிரம தகவல்கள் அமைப்பில் இரண்டு அடுத்தடுத்த நிலையிலுள்ள பதிவேடுகளில் கீழ்நிலைத் தகவல்.

chip : சிப்பு : சிப்பு ஏராளமான மின்னணுச் சுற்றுக்களைக் கொண்டுள்ள ஒரு சிறிய சாதனம். ஒருங்கிணைக்

கப்பட்ட மின்சுற்றுகள் வடிவத்தில் மின்னணு பாகங்கள் மெல்லிய சிலிக்கான் தகட்டின் மீது வைக்கப்படுகின்றன. கணினியை உருவாக்குபவை சிப்புகளே. கணக்கிடல், நினைவகம், கட்டுப்பாடு போன்ற பல் வேறு பணிகளை அவை செய்கின்றன.

chip carrier : சிப்பு கொண்டு செல்லும் பகுதி : சிப்பு செய்வதற்கு ஈயம் போன்ற உலோகத்தில் அதன் அச்சை ஏற்றுதல். எல்லா திசைகளிலும் இணைப்பிகள் உள்ள சிப்புப் பொதிவுகள்.

chip family : சிப்புக் குடும்பம் : தொடர்புடைய சிப்புகளின் குழு. முதலாவது சிப்புவிலிருந்து ஒவ்வொரு சிப்பும் உருவாக்கப்படுகிறது.

chips : சிப்புகள்; சில்லுகள், சிம்புகள்.

chip select : சிப்புத் தேர்வு : சிப்புப் பெட்டியிலிருந்து வெளியே வரும் முனை. சிப்புவிற்கோ அல்லது சிப்புவிலிருந்தோ தகவல்களை எழுதுவதையும், படிப்பதையும் இது செயலற்றதாக்கும்.

chip set : சிப்புத் தொகுதி : ஒரு பணியைச் செய்வதற்காக சேர்ந்து இயங்க வடிவமைக்கப்பட்டுள்ள சிப்புகளின் குழு.

choice : தேர்வு : ஒரு டாஸ் (DOS) தொகுதிக் கோப்பு ஆணை. அது பயன்படுத்துபவரிடமிருந்து விசையடிக்கப்படுவதற்குகாத்திருக்கிறது. ஆணையின் உள்ளேயே ஏற்றுக் கொள்கிற விசைகளின் பட்டியல் குறிப்பிடப்படுகிறது.

choose : தேர்ந்தெடு : சாளரத்தில் (விண்டோஸ்) ஒரு செயலைச் செய்வதற்குச் சுட்டி அல்லது விசைப் பலகையை தேர்ந்தெடுப்பது. பட்டியலில் உள்ளபடி கட்டளைகளைத் தேர்ந்தெடுத்து பணிகள் செய்யப்படுகின்றன. பயன்பாடுகளைத் துவக்க 'ஐக்கான்' (icons)களைத் தேர்ந்தெடுக்கலாம்.

chooser : தேர்பவர் : மெக்கின்டோஷ் மேசை துணைப்பொருள், அச்சுப் பொறி ஃபைல் சர்வர் அல்லது கட்டமைப்பு மோடெம் போன்றவைகளைத் தேர்ந்தெடுக்க அனுமதிப்பது.

chop : நீக்கு; வெட்டு : தேவைப் படாத தகவலை வெளியேற்றுதல்.

chroma : நிறமி : வண்ணங்களை ஏற்படுத்த உதவும் நீர்மம, நிழல், சாயல் போன்றவை.

chromaticity : நிறப்பொலிமை : வண்ணத்தின் தூய்மை மற்றும் மீதூன்றும் அலைநீளம் இவற்றை அளக்க முடியும் என்பதுடன் பிரகாசம் எவ்வளவாயினும் அதன் நீர்மை மற்றும் சாயலுக்கு ஏற்றதாக அமையும்.

chrominnance : நிறப் பொலிவு : வண்ணத்தைக் கட்டுப்படுத்தும் ஒளிக் காட்சி சமிக்ஞையின் பகுதிகள்.

chunking : தொகுத்தல் : இரும எண் முகவரிகளை பதினாறிலக்கத்துக்கு மாற்றும் முறை. 0011 1100 என்ற இரும எண்ணை பதினாறிலக்க எண் முறையில் 3C என்று மாற்றலாம்.

chunking along : தொகுத்துச்செல்லல்: நீண்ட நேரம் செல்லும், நம்பிக்கை மிக்க ஆணைத்தொடரின் செயல்பாட்டைக் குறிப்பிடும் குழுச் சொல்.

CICS : சிஐசிஎஸ் : Customer Information Control System என்பதன் குறும் பெயர். தொலைவிலிருந்து செயலாக்கம் புரியும் முனையங்களில் அதிகம் பயன்படுவது.

CIM : சிஐஎம் : Computer Input Microfilm: என்பதன் குறும்பெயர்.

cipher : சைஃபர்; சுழி : கணினி பாதுகாப்பாகத் தகவலைக் குறிப்பிட உதவும் இரகசிய முறை.

CIPS : சிஐபிஎஸ் : Canadian Information Processing Society என்பதன் குறும் பெயர்.

circle : வட்டம் : ஒளிக்காட்சி முகப்பில் வட்டங்களை வரைவதற்கான பேசிக் / ஜியூபேசிக்கில் உள்ள ஒரு கட்டளை.

circuit : மின்சுற்று; மின் இணைப்பு : 1. மின்னணுக்களைக் கட்டுப்பாடான முறையில் செலுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பாதை. 2. மின் சக்தி செல்லக்கூடிய கடத்திகள் மற்றும் அது தொடர்பான மின் சாதனங்களின் அமைப்பு. 3. இரண்டு அல்லது கூடுதல் இடங்களிடையே ஏற்படும் தகவல் தொடர்பு இணைப்பு.

circuit analyzer : மின்சுற்று ஆய்வுப் பொறி : ஒரு மின்னணு மின் சுற்று செல்லத்தக்கதா என்று சோதித் துக் கூறும் சாதனம்.

circuit board : மின்சுற்று அட்டை : தொடர்ச்சியான நுண் சிப்புகளையும், பல்வேறு மின்னணுச் சாதனங்களையும் ஏற்றிப் பொருத்தக் கூடிய அட்டை. அட்டையின் மேற்பரப்பில் மின்சுற்று அமைப்புகள் அச்சிடப்படுகின்றன. printed circuit board என்றும் அழைக்கப்படுகிறது.



மின்சுற்று அட்டை (Circuit board)

circuit breaker : மின்சுற்று உடைப்பி : அதிக மின்னோட்டம் ஏற்படுவதை உணர்ந்து மின்சுற்றைத் துண்டிக்கும் பாதுகாப்புச் சாதனம். ஃப்யூஸ் போல்

அல்லாது, இதை மீண்டும் சரிசெய்ய முடியும்.

circuit capacity : மின்சுற்றுத் திறன் : ஒரே நேரத்தில் ஒரு மின்சுற்று கையாளக்கூடிய வழித்தடங்களின் எண்ணிக்கை.

circuit elements : மின்சுற்று வழிக் கூறுகள்; மின் இணைப்புக் கூறுகள்.

circuitry : மின்சுற்றுத் தொகுதி : அமைப்புகளுக்கு உள்ளேயும், இடையிலும் ஏற்படும் இணைப்புகளை விவரிக்கும் மின்சுற்றுகளின் தொகுதி.

circuit switching : மின்சுற்று இணைப் பமைத்தல் : ஒரு மின்சுற்றின் அகலப் பாதையை, இணைப்பு நிறுத்தப் படும் வரை செயல்படுத்தும், தகவல் தொடர்பு கட்டமைப்பின் இரண்டு முனைகளுக்கிடையிலான இணைப்பு.

circular list : வட்டப் பட்டியல்; சுழல் பட்டி: தொடுக்கப்பட்ட பட்டியல். பெரும் பாலும் ஒன்றன்பின் ஒன்றாய் தொடுப்பது. இதில் கடைசி உறுப்புக்கும் முதல் உறுப்புக்கும் இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக் கும். Ring (வளையம்) என்றும் அழைக்கப்படுகிறது.

circular queue : வட்ட வரிசை : தகவல் களை ஒரு முனையில் நுழைத்து மற்றொன்றில் எடுக்கின்ற ஒரு வகை தகவல் தாங்கி. தாங்கியின் இருபுறமும் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும். காட்டிகள் இரண்டும் நடப்பின் 'முன்' பகுதியையும், 'பின்' பகுதியையும் கவனித்துக் கொண்டே இருக்கும்.

circular reference (CIR) : வட்டக் குறிப்பு : தகவல்தாளில் தன்னுடைய முகவரியையே வாய்பாட்டின் பகுதியாகப் பயன்படுத்தும் திறனுடைய, சிற்றறையில் பொருத்தப்பட்டுள்ள வாய்பாடு. சான்றாக சிற்றறை IV25 - இன் வாய்பாடு @sum (IV12:IV25) என்று படிக்கப்படும். இது தன்னைத் தானே தொடர்ந்து கூட்டிக் கொண்டு மிகப்பெரிய எண்ணை உருவாக்கும்.

circular shift : வட்டமான மாற்று ; ஒரு முனையிலிருந்து வெளியேற்றப் படும் துண்மிகள் அல்லது எழுத்து கள் பதிவேட்டின் எதிர்முனையில் சென்று சேரும்படியான இட மாற்றும் செயல்முறை. End around shift என்றும் சொல்லப்படுகிறது.

circulations : சுழற்சிகள்.

CISC architecture : சிஸ்க் கட்டுமானம் : Complex Instruction Set Computing Architecture என்பதன் குறும்பெயர்.

CIU : சிஐயு : Computer Interface Unit : என்பதன் குறும்பெயர்.

cladding : மூடுதல் ; ஒளி இழைகளில், ஒளி இழை சாதனத்தின் இரண்டாவது அடுக்கு ஒளி அலையை அந்த சாதனத்தின் மையப் பகுதிக்கு அனுப்பும் முறை.

clamping ring : பிடிக்கும் வளையம் : வளையத்திற்குள் நெகிழ் வட்டைத் தள்ளி விடும் 5.25" நெகிழ் வட்டு இயக்கி மையக் கூம்பின் ஒரு பகுதியாகவே இது இருக்கும்.

clarion : கிளாரியன் : கிளாரியன் மென்பொருள் கார்ப்பரேஷனின் பி:சி. பயன்பாட்டு வளர்ச்சி ஆணைத் தொடர். Professional Development என்பதே முக்கிய தயாரிப்பு. இதில் பாஸ்கல் போன்ற ஆணைத்தொடர் மொழியும், டிபிஎம்எஸ் மற்றும் புரோட்டோ டைப்பிங் ஜெனரேட்டரும் அடக்கம். Personal Developer என்பது ஆணைத்தொடராளர் அல்லாதவர்களுக்கு.

Claris CAD : கிளாரிஸ் கேட் : கிளாரிஸ் கார்ப்பரேஷனிடமிருந்து மெக்கின் டோஷுக்காக உருவான முழுத் தன்மையுள்ள இருபரிமாண CAD ஆணைத் தொடர். பயன்படுத்து வதற்கு எளிது. CAD மூலம் எளிதாகக் கற்கும் பாதையைக் கூறுகிறது.

class : வகுப்பு ; கிளாஸ் : Computer Literacy And School Studies Project என் பதன் குறும்பெயர். இந்திய அரசின் NCERT நடத்திய திட்டம். பொருள் சார்ந்த ஆணைத் தொடரில், ஒரே தன்மைகளைக் கொண்ட பொருள் களை வரையறுப்பது. ஒரு வகுப்பு உறுப்பினர் என்பவர் அந்த வகுப்பின் ஒரு எடுத்துக்காட்டு.

class category : வகுப்புப் பிரிவு : பொருள் சார்ந்த ஆணைத் தொடர் களில், வகுப்புகளின் தொகுப்பு. சில வகுப்புகள் மற்றவற்றுக்கு தெரியும். மற்றவை மறைக்கப்பட்டிருக்கும்.

class diagram : வகுப்பு பொருள் வரை படம் : நோக்கம் சார்ந்த வடிவமைப் பில் எண்முறையில் ஒரு பகுதி. வகுப்புகள் இருப்பதும் கணினி அமைப்பின் வடிவமைப்பில் அவை களின் உறவு முறையையும் காட்டு வன. ஒரு அமைப்பின்வகுப்பினுடைய அனைத்து அல்லது ஒரு பகுதியை வகுப்பு வரைபடம் காட்டும்.

classify : வகைப்படுத்தும் : தகவல் களை வகை வாரியாகப் பிரித்தல் அல்லது ஒத்த தன்மைகளை உடைய னவற்றை ஒரே வகையில் சேர்த்தல்.

class library : வகுப்பு நூலகம் : மூன்றாவது நபர்கள் கொடுக்கின்ற பொருள் சார்ந்த ஆணைத் தொடர் வகுப்புகள்.

class structure : வகுப்பு அமைப்பு : ஒரு அமைப்பின் வரிசை முறை. செங் குத்துக் கோடுகள் வகுப்புகளையும், ஆரங்கள் வகுப்புகளுக்குள் உள்ள உறவு முறைகளையும் காட்டும் வரை படம். வகுப்பு வரைபடத் தொகுதி யின் மூலம் ஒரு கணினி அமைப்பின் வகுப்பு வரைபடத்தைக் குறிப்பிட லாம்.

class variable : வகுப்பு மாறி : வகுப்பு நிலையின் ஒரு பகுதியை வைத்துக் கொண்டிருப்பது. கூட்டாக, ஒரு வகுப்பின் வகுப்பு மாறிகள் அதன் வடிவமைப்பை உண்டாக்குகின்றன. அதே வகுப்பின் அனைத்துப் பொருள் களையும் வகுப்பு மாறி பங்கிட்டுக் கொள்கிறது.

classifications : வகைப்படுத்துதல் கள் : கணினிகளை மூன்று வகை களாகப் பிரிக்கலாம். இலக்கமுறை, ஒப்புமை மற்றும் உயரினம்.

Claud P. Shannon : கிளாட் பி . ஷானான் : அமெரிக்காவின் எம்ஐடி யில் படித்த பட்டதாரி மாணவன். இணைப்பி (ஸ்விட்சிங்) மின் சுற்று களின் முதல் தலைமுறையை விவ ரிக்க பூலியன் அளவை இயற்கணிதத் தைப் பயன்படுத்தியவர்.

clean room : தூய்மையான அறை : கணினிக் கருவியை உற்பத்தி செய் யப் பயன்படும் பகுதி. இதில் நுழை வதற்குக் கட்டுப்பாடு, சுகாதாரத்திற் குத் தனிக்கவனம், சிறப்பு குளுகுளு வசதி, காற்று தூய்மைப்படுத்தும் அமைப்பு போன்றவை அமைந் திருக்கும்.

clear : விலக்கு ; அழி ; துடை : காட்சித் திரையில் உள்ளவற்றை வெளியேற் றும் விசைப் பலகையின் பணி.

clearing : விலக்கல் ; அழித்தல்; நீக்கு தல் : பதிவகம், சேமிப்பிடம், அல்லது சேமிப்பு அலகுகளில் உள்ள தகவலை

வெளியேற்றி பூஜ்யங்கள் அல்லது வெற்றிடங்களால் நிரப்புதல்.

clear memory : காலியான நினைவகம் : குறிப்பிலா அணுகு நினைவகம் (RAM) மற்றும் வன்பொருள் பதிவகங்கள் அனைத்தையும் பூஜ்யம் அல்லது வெற்றிட நிலைக்கு மீண்டும் அமைத்தல். கணினியை 'ரிபூட்' செய்தால் நினைவகம் காலி செய்யப்படலாம் அல்லது இல்லாமல் போகலாம். ஆனால், கணினியை நிறுத்தி மீண்டும் துவக்கினால் நினைவகம் நிச்சயமாக காலியாகும்.

clear to sends : க்ளியர் டு செண்ட்ஸ் : RS-232-C. என்னும் துறையில் (PORT) பயன்படுத்தப்படும் தரங்களில் ஒன்று.

clicking : சொடுக்குதல் : சுட்டியின் (Mouse) மேல் பொத்தானை அழுத்துதலைக் குறிப்பிடும் ஒரு சொல்.

click : சொடுக்கு : சுட்டுக் கருவி (மெளஸ்) பொத்தானை அழுத்தும் முறை.

client : வாடிக்கையாளர் : பொருள் சார்ந்த ஆணைத் தொடரமைப்பில் வரும்போது வேறு ஒன்றினை இயக்கியோ அல்லது அதன் நிலையைக் குறிப்பிட்டோ பயன்படுத்துவது. முறைமை ஆய்வுக்காக (system analysis) ஒப்பந்தம் செய்யப்படும் தனிநபர் அல்லது ஒரு நிறுவனம்.

client application : வாடிக்கையாளர் பயன்பாட்டுத் தொகுப்பு.

client computer : பிணையத்தில் இணைக்கப்பட்டுள்ள கிளைக் கணினி.

client/server : வாடிக்கையாளர் / வழங்குபவர் : கேட்கும் எந்திரம் வாடிக்கையாளராகவும், கொடுக்கும் எந்திரம் வழங்குபவராகவும் உள்ள கட்டுமான அமைப்பு. வாடிக்கையாளரை பயன்பாட்டுச் செயல் முறையைச் செய்ய, வழங்குபவர் தகவல் தளத்தை வைத்திருந்து தேவையான தகவல்களை வழங்கும். ஒன்று மற்றொன்றிலிருந்து தகவல்களைக் கேட்டுப்பெறலாம். எக்ஸ் விண்டோசில் வாடிக்கையாளர் மென்பொருளாகவும் வழங்குபவர் காட்சித் திரையாகவும் அமையும்.

client / server protocol : வாடிக்கையாளர் / வழங்குபவர் நெறி முறை : ஒரு கட்டமைப்பில் ஒரு பணி நிலையத்திற்கும் (வாடிக்கையாளர்) வழங்குபவருக்கும் இடையே வேண்டுகோள்களுக்கான அமைப்பை வழங்கும் தகவல் தொடர்பு நெறிமுறை. ஓஎஸ்ஐ (OSI) மாடலில் 7-ஐ இது குறிக்கும்.

client-server system : வாடிக்கையாளர் ஏவலர் பொறியமைவு.

clik art : கிளிக் கலை : கணினியால் உருவாக்கப்படும் ஆவணங்களில் பயன்படுத்துவதற்கும் எடுத்துக்கொள்வதற்கும் தயாராக உள்ள ஓவியங்கள் மற்றும் படங்களின் பட்டியல்.

CLIP : க்ளிப்: Coded Language Information Processing என்பதன் குறும்பெயர். ஊடு கதிர்களை X-Ray யில் சேர்ப்பதற்கு கதிரியக்க மருத்துவர்கள் பயன்படுத்தும் ஒரு திட்டம்.

clip art : கிளிப் கலை : வெட்டிப் பயன்படுத்தக் கூடிய வரைகலை. வரைகலை மென்பொருள் பயன்பாடாக அளிக்கப்படுவது. இதில் கணினி உருவாக்கும் கலைப் பொருட்கள் உள்ளன. சான்றாக, உருவங்கள், அறிவிப்புப் படங்கள், விலங்குகள், கருத்துப் படங்கள் போன்றவை. கிளிப் கலையிலிருந்து ஒன்றை எடுத்து பின்னர் பயன்படுத்துவதற்காக நகல் எடுக்கலாம்.

clipboard : பிடிப்புப் பலகை : ஒரு கோப்பிலிருந்து மற்றொரு கோப்புக்கு மாற்றி அனுப்பப்படும் தகவல்களைச் சேமித்து வைப்பதற்காக வென்றே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கணினியின் நினைவகத்தில் உள்ள பகுதி.

clipper : கிளிப்பர் : 'கம்ப்யூட்டர் அசோசியேட்ஸ்' சின் பயன்பாட்டு வளர்ச்சி அமைப்பு. முதலில் தகவல் தள ஆணைத்தொடர் (dbase) தொகுப்பியாக இருந்து, பின்னர் தனித்து இயங்கும் பல சிறப்புத்தன்மைகள் உள்ள பயன்பாட்டுத் தொகுப்புகளை உருவாக்கும் பணித்தளமாக உருவெடுத்தது. நான்டுக்கட் கார்ப்பரேஷன் இதை உருவாக்கியது.

clipping : செதுக்குதல் ; சீரமைத்தல் ; பிடித்தல் : காட்சித் திரை எல்லைகளின் வெளிப்பகுதியில் உள்ள படத்தின் பகுதிகளை நீக்குதல். scissoring என்றும் அழைக்கப்படும்.

clipping level : கிளிப்பிங் அளவு : தன்னுடைய காந்தத் தன்மைகளைக் காத்து உள்ளடக்கங்களை வைத்துக் கொள்ளும் வட்டின் திறன். அதிக தரமுள்ள அளவு என்பது 65-70%; குறைந்த அளவு என்பது 55%-க்குக் கீழே.

clipping path : கிளிப்பிங் பாதை : ஒரு ஆவணத்தின் ஒரு பகுதியை மறைக்கப் பயன்படும் ஒரு வளைவு அல்லது பாலிகான் ஆவணத்தை அச்சிடும் போது கிளிப்பிங் பாதையின் உள்ளே என்ன இருக்கிறதோ அது மட்டுமே அச்சாகும்.

clobber : மெழுகுதல் : ஒரு கோப்பில் உள்ள நல்ல தகவலின் மேற்பகுதியில் புதிய தகவலை எழுதியோ அல்லது ஒரு கோப்பில் உள்ளவற்றை எப்படியாவது சேதப்படுத்தியோ அதைப் பயனற்றதாக்குதல். ஒரு கோப்பை ஒழித்துவிடல்.

clock : கடிகாரம் : மின் துடிப்பு : 1. ஒரே நேரக் கட்டுப்பாட்டில் இயங்கும் கணினியின் அனைத்துச் செயல்பாடுகளின் நேரத்தைக் கட்டுப்படுத்த உதவும் தொடர்ச்சியான அடிப்படை சமிக்ஞையை உருவாக்கும் காலம் காட்டும் சாதனம். 2. உண்மையான நேரம் அல்லது அதன் மதிப்பீட்டில் சிலவற்றின் மாற்றத்தைப் பதிவு செய்யும் சாதனம். இதன் செயல்பாடு கணினி ஆணைத் தொடருடன் இணைக்கப்பட்டிருக்கும்.

clock frequency : கடிகார அலை வெண்.

clocking : கடிகாரமாக்கல் : தகவல் தொடர்புச் சாதனம் அனுப்புகின்ற, பெறுகின்ற வேலையை ஒரே கால முறைப்படி ஒழுங்குபடுத்தப் பயன்படும் தொழில்நுட்பம். அதிக வேகத்தில் குறிப்பிட்ட நேரப்படி அனுப்புவதற்கு உதவுகிறது.

clock input : கடிகார உள்ளீடு : ஒரு கட்டிடக் கட்டத்தின் மேலுள்ள உள்ளீட்டு முனையம். நேரக்கட்டுப்பாடு கடிகார சமிக்ஞையைப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படுவது.

clock pulse : கடிகாரத் துடிப்பு : ஒரு கடிகாரம் தருகின்ற ஒரே கால இடைவெளியிலான சமிக்ஞை.

clock pulse circuit : கடிகாரத் துடிப்பு மின்சுற்று : ஒரே நேரத்தில் செயல்களை ஆற்றும் இலக்கவியல் கணினியில் இயக்கங்களுக்கு உதவுவதற்காக சரியான இடைவெளியில் நேரத் துடிப்புகளை உருவாக்கும் மின்சுற்று.

clock rate : கடிகார விகிதம் : ஒரு கடிகாரத்திலிருந்து துடிப்புகள் வெளியிடப்படும் நேர விகிதம்.

clock speed : கடிகார வேகம் : கணினியின் உட்பகுதி இதயத் துடிப்பு. ஒரு குவார்ட்ஸ் படிகத்தில் உருவாக்கப்படும் நிலையான அசைவுகளை கடிகார மின்சுற்று பயன்படுத்திக் கொண்டு மையச் செயலகத்திற்கு தொடர்துடிப்புகளை அனுப்புகிறது. வேகமான கடிகாரத் துடிப்பு உள் செயலாக்கத்தை வேகப்படுத்தும். சான்றாக, ஒரே செயலகம் 20 மெகா ஹெர்ட்சில் ஓடும்போது 10 மெகா ஹெர்ட்சில் ஓடுவதைவிட இரண்டு பங்கு வேகமாகச் செயல்படும்.

clock track : கடிகாரப் பாதை : காலத்தைக் குறிப்பதற்கான சமிக்ஞைகளைப் பதிவு செய்து வைத்திருக்கிற பாதை.

clockwise : கடிகார ஓட்டத்தில் : இடது புறத்திலிருந்து வலது புறத்திற்கு நகர்தல்.

clone : போலி : ஒன்றின் நகல் அல்லது சரியான பிரதியாக இருக்கும் ஒரு பொருள் அல்லது கருத்து என்று உயிரியலுக்கு அப்பாற்பட்ட துறைகளை கூறலாம்.

close : மூடு : டிபேஸ், கிளிப்பர் போன்றவற்றில் முன்பே திறந்த கோப்பை மூடுவதற்கான கட்டளை. செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது வெளியேறி எல்லா திறந்த கோப்புகளையும் மூடுவதற்குப் பல மென்பொருள் பயன்பாடுகளில் உள்ள ஒரு கட்டளை. ஒரு கோப்பை சரிவர மூடத் தவறினால் தகவல் சிதைந்தோ அல்லது தொலைந்தோ போகும்.

closed architecture : மூடிய கட்டுமான அமைப்பு : கணினியில் கட்டுமான அமைப்பு அதன் தொழில் நுட்ப புள்ளிவிவரங்களை பொது மக்களுக்குத் தெரிவிக்காமல் இருப்பது.

close file : மூடப்பட்ட கோப்பு : படிக்கவோ, எழுதவோ அணுக முடியாத கோப்பு.

close loop : மூடிய மாற்றுப் பாதை : முழுமையான வட்டமைப்பிலுள்ள மாற்றுப் பாதை.

closed shop : மூடிய அங்காடி : தகவல் செயலாக்க மையத்தை தொழில் முறையில் இயக்குபவர்களைக் கொண்டு இயக்குவது. ஆணைத் தொடர்களையும் தகவல்களையும் ஏவலாளர்கள் கொண்டு வருவார்கள் அல்லது தொலைபேசிக் கம்பிகளின் வழியாக அனுப்புவார்கள். இதன் மூலம் கணினி அறைக்குள் பயனாளர்கள் மிகவும் திறமையாக செயல்பட முடிகிறது.

closed subroutine : மூடிய துணை நிலாயச் செயல்முறை : அழைக்கும் செயல் முறைகள் ஒன்று அல்லது பலவற்றுடன் இணைக்கப்பட்டு ஓரிடத்தில் வைக்கப்பட்டுள்ள துணைச் செயல் முறை.

closed system : மூடிய அமைப்பு : அந்நிய முனையங்கள் அல்லது சாதனங்களுடன் இணைவதை ஏற்றுக் கொள்ளாத கணினி அமைப்பு.

cluster : தொகுதி : ஒரு கன்ட்ரோலர் மூலமாக பெரிய கணினி ஒன்றுடன் இணைக்கப்பட்டுள்ளகணினி முனையங்களின் ஒரு குழு. வட்டு பிரிவுகளில் (2 முதல் 16 வரை) ஒரே அலகாகக் கருதப்படுபவை. 30 கோப்பானது வட்டில் 2,048 எட்டியல் உள்ளதாக இருக்கலாம். ஆனால், வட்டு தொகுதியில் 512 எட்டியல் பிரிவுகள் இருக்கும்.

cluster controller : தொகுப்பு கட்டுப்பாட்டுச் சாதனம் : குறைந்த வேக சாதனங்கள் பலவற்றிலிருந்து தகவல்களைத் திரட்டும் அடிப்படைச் செய

லகம். பின்னர் தொகுக்கப்பட்ட தகவல்களை ஒரு தனித் தகவல் தொடர்புச் சாதனம் மூலம் அனுப்புகிறது.

clustered devices : தொகுக்கப்பட்ட சாதனம் : ஒரு பொதுக் கட்டுப்பாட்டுக் கருவியுடன் இணைக்கப்பட்ட முனையங்களின் குழு.

clustering : தொகுத்தல் : ஒத்த தன்மைகள் உள்ளவற்றை குழுவாக்குதல்.

CMI : சிஎம்ஐ : Computer Managed Instruction என்பதன் குறும்பெயர்.

CML : சிஎம்எல் : Current Mode Logic என்பதன் குறும்பெயர்.

CMOS : சிமாஸ் : Complementary Metal Oxide Semiconductor என்பதன் குறும்பெயர்.

CMU : சிஎம்யு : Carmegie Mellon University என்பதன் குறும்பெயர். இந் நிறுவனம் ஒரு எந்திரன் (எந்திர மனிதன்) ஆராய்ச்சி மையமாகவும், ஒரு முக்கிய கணினி மையமாகவும் செயல் படுகிறது.

coaxial cable : இணை அச்சுக் கம்பி வடம் : அதிகவேகத்தில் தகவல்களை



இணை அச்சுக் கம்பிவடம்
(Coaxial cable)

அனுப்ப உதவும் சிறப்பு வகை தகவல் தொடர்புக் கம்பி, பொதுவாக, தொலைதூர / கட்டமைப்புகளில் பயன்படுத்தப்படுவது.

COBOL : கோபால் : Common Business Oriented Language என்பதன் குறும்பெயர். பொது வணிகச் சார்பு மொழி என்பது சுருக்கப் பெயர். ஒரு உயர் நிலைக் கணினி வழி. வணிகத் துறை பயன்பாடுகளுக்காக என்றே உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு கோபால் ஆணைத்தொடர்களும் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(1) Identification Division.

(2) Environment Division.

(3) Data Division.

(4) Procedure Division.

அமெரிக்க இராணுவத்துறைக்காக 1959ஆம் ஆண்டு கோபால் மொழி உருவாக்கப்பட்டது.

CODASYL : கோடாசில் : Conference On DAta SYstem and Languages என்பதன் குறும்பெயர். அமெரிக்க மைய அரசு ஏற்படுத்திய தொழில்துறை கமிட்டி, கணினித் துறையில் தர நிர்ணயங்களை உருவாக்கிட அமைக்கப்பட்ட இக் குழுவின் மூலம்தான் கோபால் மொழியும் சிக்கலான தகவல் தளங்கள் பலவும் உருவாயின.

Code : குறியீடு : 1. தகவல்களை எவ்வாறு குறிப்பிட வேண்டும் என்பதை விளக்கும் விதிகளின் தொகுதி. 2. தகவல்களை ஒரு குறியீட்டிலிருந்து வேறொன்றுக்கு மாற்றுவதற்கான விதிகள். 3. ஒரு ஆணைத்தொடர் அல்லது செயல் முறையை எழுதுவது, குறியீடு அமைத்தல் போன்றது.

code conversion : குறியீடு மாற்றல் : ஒரு குறியீட்டிலிருந்து எழுத்துகள், துண்மி தொகுதிகளை அதே பொருளுள்ள எழுத்துகளைக் கொண்ட வேறு ஒரு குறியீட்டுக்கு மாற்றுதல்.

coded decimal number : குறியிடப்பட்ட பதின்ம எண் : குறியிடப்பட்ட பதின்ம எண்ணில் உள்ள ஒரு குறிப்

பிட்ட எண்ணைப் பிரதிபலிக்கும் தொடர்ச்சியான எழுத்துகளைக் கொண்ட எண்.

code level : குறியீட்டு நிலை : ஒரு குறிப்பிட்ட எழுத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் துண்மிகள்.

code number : குறியீட்டெண்.

code page : குறியீட்டுப் பக்கம் : டாஸ் (DOS)3.3 மற்றும் அதன் உயர் பிரிவுகளில் வருவது, பல்வேறு அந்நிய மொழி எழுத்துகளுக்கான விசைப் பலகைகளை அமைக்க உதவும் பட்டியல்.

coder : குறியீடு அமைப்பவர் : கணினி மொழியில் ஒரு சிக்கலையோ அல்லது சிக்கலின் ஒரு பகுதியையோ எடுத்துரைப்பவர். பிறரது வடிவமைப்பையே எடுத்துப் பயன்படுத்திக் கொண்டு தானாக எந்த உழைப்பையும் செய்யாத ஒரு கணினி ஆணைத் தொடரமைப்பவரை ஏளனமாகக் குறிப்பிடவும் இச்சொல் பயன்படுத்தப்படுவதுண்டு.

code segment : குறியீட்டுப் பிரிவு : அடையாள மதிப்புடைய நினைவகத்தின் பிரிவைக் குறிப்பிடுகிறது. ஒரு ஆணைத் தொடர் பயன்படுத்தும் குறியீட்டை வைத்துக் கொண்டிருக்கும் நினைவகத்தின் பிரிவு.

code set : குறியீட்டுத் தொகுதி : ஒரு குறியீடு வரையறுத்துக் கொடுக்கும் பதிலிகளின் முழுத்தொகுதி. ஒரு தொலைபேசி எண்ணில் 9625 8485) முதல் மூன்று எண்கள் (ஆறு இலக்க எண்ணாயின் முதல் இரண்டு எண்கள்), குறிப்பிட்ட தொலைபேசி நிலையத்தைக் குறிக்கும் குறியீட்டுத் தொகுதி ஆகும்.

coded number : குறியிடப்பட்ட எண் : ஒரு பொருளின் பதிவேட்டு எண். ஒரு நிறுவனத்தின் குறிப்பிட்ட கணினி அமைப்பிற்கு ஏற்றாற் போல் இதனை அமைக்கலாம் அல்லது குறியிடலாம். எடையுள்ள சோதனை இலக்க முறைகள் அல்லது சோதனை இலக்கங்களின் மூலம் குறியிடப் பட்ட எண்கள் செல்லத்தக்கவையா என்று சோதிக்கலாம்.

coder-decoder (codec) : கோடர்-டிகோடர் (கோடெக்) : தகவல் தொடர்புகளில் பயன்படுத்தப்படும் ஒரு தனிச்சிப்பு. அலைவு முறைத் தகவலை இலக்கு முறையாகவும் இலக்கு முறையை அலைவு முறையாகவும் மாற்ற இவை பயன்படுகின்றன.

code in binary : இருநிலைக் குறியீடுகள்.

code view : குறியீட்டுப் பார்வை : நுண்மென்கலம் (Microsoft) மற்றும் குறியீட்டுப் பார்வை (code view) ஏற்புடைய தொகுப்பிகளுக்கு எழுதப் பட்ட ஆணைத் தொடர்களுக்கான நுண் மென்கலம் பிழை நீக்கி, பிற நவீன பிழை நீக்கிகளைப்போல, மூல மற்றும் நோக்க ஆணைத் தொடர்களை இது இணைக்கிறது. ஆணைத் தொடர் இயக்கப்படும் போது மூலக்குறியீட்டின் வழியாக ஆணைத்தொடர்அமைப்பவர் செல்ல இதுவழி வகுக்கிறது.

coding : குறியீடுகள்; குறியீடு அமைத்தல் : 1. குறிப்பிட்ட இயக்கத்தைச் செய்வதற்காக ஆணைகளின் பட்டியலை எழுதுவது. 2. ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கு கணினிக்கு அளிக்கப்படும் ஆணைப் பட்டியல்.

coding form : குறியீட்டு வடிவம் : ஒரு கணினிக்கு ஆணைத்தொடர் அமைப்பதற்கான ஆணைகள் எழுதும் வடிவம். ஒவ்வொரு ஆணைத் தொடர் மொழிக்கும் ஒரு குறிப்பிட்ட குறி

யீட்டு வடிவம் உண்டு. குறியீட்டுத் தாள் என்றும் அழைக்கப்படும்.

coercion : வலிந்த மாற்றம்; கட்டாயப் படுத்தல் : ஆணைத்தொடர் மொழி வெளிப்பாடுகளில், ஒருவகை தகவலிலிருந்து வேறொன்றுக்குத் தானாகவே மாற்றிக் கொள்ளுதல்.

COGO : கோகோ : Coordinate Geometry, என்பதன் குறும்பெயர். வடிவக் கணக்கு (Geometry) சிக்கல்களைத் தீர்க்க உதவும் ஒரு ஆணைத்தொடர் மொழி. சிவில் பொறியாளர்களால் அதிகம் பயன்படுத்தப்படுவது.

cognitive styles : புலப்பாட்டு முறைகள் : பிரச்சினைகளை எதிர்கொண்டு மக்கள் தகவலை எவ்வாறு கையாள்கிறார்கள் என்பதன் அடிப்படை அமைப்புகள்.

cognitive theory : புலப்பாட்டுக் கொள்கை : பிரச்சினைகளை எதிர் கொண்டு தகவலை எவ்வாறு கையாள்கிறார்கள் என்பதற்கான கொள்கைகள்.

coherence : தொடர் இசைவு : ராஸ்டர் ஸ்கேன் காட்சி தொழில் நுட்பத்தில் ஒரு குறிப்பிட்ட படப்புள்ளியின் மதிப்பே அதனை அடுத்து வரும் படப்புள்ளியிலும் இருக்கும் என்ற அனுமானம்.

cohesion : ஏட்டிணைவு : ஒரு பொதுவான பணியை ஒரு கூறு (மாடுல்) எவ்வாறு செய்கிறது என்பதற்கான அளவு. ஒரு ஆணைத்தொடர் மாடுலின் உள் பலத்தின் அளவு.

coils : சுருள்கள்; சுருணைகள்.

coincidence error : தற்செயலான பிழை : பல ஒருங்கிணைப்பிகளை (integrators) இணைக்கும்போது கால வேறுபாட்டில் ஏற்படும் பிழை.

colmar : கோல்மார் : நமக்குக் கிடைத்துள்ள முதல் எந்திரக் கணிப்பியான அரித்மோ மீட்டரின் வேறு பெயர்.

cold boot : புதிய ஏற்றல் : கணினியைத் துவக்கி அதில் இயக்கமுறை அமைப்பை ஏற்றும் செயல்.

cold fault : உடன் தெரியும் பிழை : கணினி எந்திரத்தைத் துவக்கிய உடனே தெரிகின்ற பிழை.

cold start : புதிய துவக்கம் : ஒரு அமைப்பில் பெருந்தவறு ஏற்பட்டு, அதில் ஏற்கனவே சேமிக்கப்பட்டவை பயனற்றுப்போன பின் மீண்டும் துவங்குதல். தவறு ஏற்பட்டபின் கணினியை மீண்டும் சாதாரணமாகத் துவங்கினால் அதில் உள்ள தகவல்களும், ஆணைத் தொடர்களும் நினைவகத்திலிருந்து அழிந்து போயிருக்கும். இதில் மீண்டும் ஆணைத் தொடரையும், தகவல்களையும் ஏற்றியே துவக்க வேண்டும்.

collate : அடுக்கு ; சேர் : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வரிசைப் படுத்தப்பட்ட தகவல் தொகுப்புகளை ஒன்று சேர்த்து ஒரே வரிசையில் உள்ள தொகுதியாக மாற்றுதல்.

collating sort : சேர்க்கும் முறை : தகவல்களைத் தொடர்ச்சியாக ஒன்று சேர்த்து ஒரே வரிசையாக உருவாகும் வரை சேர்க்கும் முறை.

collation sequence : சேர்க்கும் வரிசை : ஆரம்பம் முதல் கடைசிவரை பொருள்களை வரிசைப்படுத்தும்போது கணினி பயன்படுத்தும் வரிசை முறை. எழுத்துகளுக்கு அகர வரிசையும், எண்களுக்கு எண்வரிசையுமாக இந்த வரிசைமுறை பொதுவாக அமையும். பெரிய எழுத்து, சிறிய எழுத்து, எண் - எழுத்துக் கலப்பு, நிறுத்தக் குறியீடுகள் போன்றவை இதில் இணையும்போது வரிசை

முறை சிக்கலாகிவிடுகிறது. ஏனென்றால், பூஜ்யங்கள் மற்றும் பிற காரணிகளைப்போல எண்களின் நீளம் அதே அளவில் இருப்பதில்லை.

collator : சேர்ப்பி : அட்டைகள் அல்லது பிற ஆவணங்களின் தொகுதிகளை ஒரே வரிசையில் சேர்த்துத் தரும் எந்திரம்.

collection : தொகுப்பு : பல்வேறு இடங்களிலிருந்து தகவல்களைப் பெற்று அவற்றை ஒரே இடத்தில் தொகுப்பது.

collision : மோதல் : இரண்டு விசைப் பலகை இயக்கங்கள் ஒரே நேரத்தில் ஆணையிடப்படும்போது ஒரே முக வரியில் விசைகள் மோதிக் கொள்வதன் விளைவு. கணினியின் இயக்க முறையில் எந்த இயக்கத்தை செயல்படுத்துவது என்று ஆணைத் தொடரில் குறிப்பிடப்படும்.

collision detection : மோதலைக் கண்டுபிடித்தல்; மோதல் உணர்தல் : 1. கணினி வரைபடமுறைகளில் குறிப் பாக, ஆர்க்கேட் வகை விளையாட்டு களில், இரண்டு பொருள்கள் எப் போது மோதிக் கொள்ளும் என்பதை முடிவு செய்யவேண்டும். மோத லைக் கண்டுபிடிப்பதற்குப் பல ஆணைத்தொடர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தலாம். 2. பல்முனை அணுகு கட்டமைப்பில் ஒரே நேரத்தில் இரண்டு கணினிகள் தகவல் அனுப்புவதைத் தடை செய்யும் செயல்.

colour bits : நிறத் துண்மிகள் : நிறத்தைக் குறிப்பிடும் ஒவ்வொரு படப்புள்ளியுடனும் இணைக்கப்படும் துண்மிகளின் எண்ணிக்கை. 16 நிறங்களுக்கு 4 துண்மிகள் பயன்படுத்தப் படுகின்றன. 256 நிறங்களுக்கு 8 துண்மிகள்.

colour burst signal : நிறம் வெடிக்கும் சமிக்ஞை : நிறம் பற்றிய தகவலை அளிக்கும் ஒளிக்காட்சி வெளியீட்டில் உள்ள சமிக்ஞை. நிறம் வெடிக்கும் சமிக்ஞையை நிறுத்துவதனால் கறுப்பு வெள்ளை திரைகளில் படங்களின் தரம் கூடும்.

colour camera : வண்ண ஒளிப்படக் கருவி : ராஸ்டர் ஸ்கேன் காட்சி சாதனங்களில் தகவல்களைப் பதிவு செய்யப் பயன்படுத்தும் வெளியீட்டுச் சாதனம்.

colour code : நிறக் குறியீடு : காட்சித் திரையில் தெரிகின்ற 16 நிறங்களுள் ஒன்றைக் குறிப்பிடும் 0 முதல் 15 வரையுள்ள எண்களில் ஒன்று. ஐபிஎம் கூடுதல் திறனுடைய நிற முகப்புடன் சேர்க்கப்பட்ட EGA வில் 64 நிறக்குறியீடுகள் (0-63) இருக்கலாம்.

colour coding : நிறம் குறியிடல் : பல்வகையான பதிவேடுகளைப் பயன்படுத்தி நிறங்களை அடையாளம் காணும் செயல்முறை.

colour genie (EACA) : கலர் ஜீனி : 8Z-80செயலகம் சார்ந்த நுண் கணினி 16K குறிப்பிலா அணுகு நினைவகம் (RAM) உடையது. 32K வரை விரிவாக்கிக் கொள்ளலாம்.

colour graphics : வண்ண வரைகலை முறை : நிறங்களைப் பயன்படுத்தி ஓவியங்களை வரைதல், வரைபடங்களை உருவாக்குதல் போன்றவற்றைச் செய்யும் கணினி அமைப்பு.

colour map : வண்ண அமைபடம் : சில குறிப்பிட்ட துண்மிகளைக் கொண்டு அதிக வேலை வாங்குவதற்காக, கணினி வரைபட முறையிலுள்ள ஒரு திட்டம்.

colour cycling : நிற சுழற்சியமைத்தல் : கணினி வரைகலைகளில், பொருள்

களை நகர்த்துவதற்குப் பதிலாக, தொடர்ச்சியாக நிறங்களை மாற்று வதன் மூலம் உயிர்ப்படத்தினைப் போல் அமைக்கும் தொழில் நுட்பம்.

colour keying : வண்ணவிசை அமைத்தல் : ஒரு ஒளிக்காட்சி (வீடியோ) தோற்றத்தை ஒன்றன் மீது ஒன்றாக மேலே அழுத்தும் தொழில் நுட்பம். சான்றாக, கடலில் ஒரு காரை மிதக்க விட வேண்டுமென்றால், நீல நிறப் பின்னணியில் காரின் தோற்றத்தை வைப்பது. கார் மற்றும் கடலின் உருவத்தை ஒன்றாகக் ஸ்கேன் செய்து காரைக் கடலில் மிதப்பது போல் செய்தல்.

colour model : நிற மாதிரி : வரைகலைகளிலும், டி.டி.பியிலும் நிறத்தைக் குறிப்பிடும் முறை. இதில் நிறங்கள் பான்டுன் (Pantone) முறையில் குறிப்பிடப்படுகிறது. கணினியில் பல முறைகளில் நிறங்களைக் குறிப்பிடலாம். RGB (சிகப்பு, பச்சை, நீலம்) CMY (சியான், மெஜந்தா, மஞ்சள்) மற்றும் HSB (Hue, Saturation, brightness) என்பன.

colour monitor : வண்ணக் கணினித் திரை : நிறத்தில் வரைகலை உருவங்களையோ அல்லது சொற்களையோ அமைக்க ஏற்பி அல்லது ஒளிக்காட்சி (Video) அட்டையும் சேர்ந்தியங்க வடிவமைக்கப்பட்ட கணினி திரைக் காட்சி. நிற முகப்பின் திரையில் உள் பக்கமாக நான்கு நிறக் கலவைகள் சிகப்பு, பச்சை, நீலம், உள்ளன. நிறக் கலவை எரியத்தை (பாஸ்பரை) ஒளியூட்டி நிறத்தை அளிப்பதற்கு மூன்று நிறங்களைக் கொண்ட மின்னணு பீச்சிகள் உள்ளன.

colour printer : வண்ண அச்சுப் பொறி : பல நிறங்களில் செய்தி, வரைபடங்கள், வரிப்படங்கள், கலைப் படைப்புகள் ஆகியவற்றை உருவாக்கும் வெளியீட்டுச் சாதனம்.

colour resolution : நிறத் தொகுப்பு : ஒரு கணினி அமைப்பு உருவாக்கக் கூடிய பல்வகை நிறங்களின் எண்ணிக்கை. இதன் மதிப்புகளை துண்மிகளில் கொடுப்பார்கள்.

colour saturation : நிற உச்சம் : ஒரு நிறத்தில் உள்ள ஒளியின் அளவு. மேலும் உச்சத்திற்குச் சென்றால், மேலும் அதிக நிறத்தைப் பெறலாம்.

colour separation : நிறம் பிரிப்பு : நிறங்களில் அச்சிடுதலுக்கான 'நெகட்டிவ்' (Plate) மற்றும் அச்செழுத்துத் தட்டுகளைச் செய்ய நிறங்களால் படங்களைப் பிரித்தல். முழுநிறம் வேண்டுமென்றால் நான்கு வகையாகப் பிரிக்க வேண்டும். சியான், மெஜந்தா, மஞ்சள், கறுப்பு (CMYK).

colour television principles : வண்ணத் தொலைக்காட்சி கொள்கைகள் : எதிர் மின்வாய் (Cathode) கதிர்க் குழாயில் நிறம் பெறுமிடத்தில் ஒவ்வொரு அடிப்படை நிறத்துக்கும் ஒன்றாக மூன்று மின்னணு பீச்சிகள் உள்ளன. ஒவ்வொரு நிறத்தினையும் காட்டும் போது மின்னணு பீச்சிட நிறம் எரியும். மனிதக் கண்கள் இவற்றை ஒன்று சேர்த்துப் பார்க்கின்றன. மூன்று நிறங்களும் ஓரிடத்தில் அடுத்தடுத்து வந்தால் வெள்ளை நிறம் தெரியும்.

colossus : கொலாசஸ் : ஜெர்மானிய குறியீடுகளைப் பிரித்தறிய 1943இல் உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கக் கணினி.

colour terminals : வண்ண முனையங்கள்.

column : பத்தி ; நிரை ; நெடு வரிசை : 1. ஒரு வரியில் ஒரே வரிசையாக

உள்ள செங்குத்தான உறுப்புகள். 2. ஒரு துளையிட்ட அட்டையில் செங்குத்தான வரிகளில் உள்ள துளையிடும் இடங்கள். 3. ஒரு கணினி சொல்லில் தகவல் இருக்கும் இடம். 4. மின்னணு விரிதாளில் அகலப் பகுதி. வரிசைகளுடன் சேர்ந்து பத்திகள் விவரத்தினை, கணக்கீடுகளை உருவாக்க உதவுகிறது.

column move : பத்தி நகர்த்தல் : விவரத் தாளில் பத்தி அல்லது பனுவல் ஆவணத்தில் எழுத்துகளை செவ்வகக் கட்டமாக மாற்றி வேறிடத்தில் வைத்தல்.

column split : பத்தி பிரித்தல் : துளையிடும் அட்டையில் 11வது அல்லது 12-வது வரிசை தொடர்பான துடிப்புகளைக் குறிப்பிட எண் துளைகளைப் பத்தி வாரியாக தனித்தனியாகப் போட்டு அட்டையைத் துளையிடும் போது படிக்க அல்லது எழுதும் போது கிடைக்கச் செய்வது.

column - binary : பத்தி - இரும எண் : துளையிட்ட அட்டையின் ஒவ்வொரு பத்தியிலும் குறிப்பிடப் படும் பத்தி எண்

COM : காம் : Computer Output Micro Film என்பதன் குறும்பெயர். மைக்ரோசாஃப்டின் Component Object Model என்னும் புதிய தொழில் நுட்பத்தையும் குறிக்கிறது.

combinational circuit : இணைப்பு மின் சுற்று : கணினியின் பல்வேறு அளவை இயக்கங்களைச் செய்ய மின்சுற்று அமைக்க உதவும் ஒன்றோடொன்று இணையும் வாயில்களின் வரிசை முறை அமைப்பு.

combination logic : ஒன்று சேரும் அளவை : உள்ளீட்டின் தற்போதைய நிலையைக் கொண்டே வெளியீட்டின் நிலையை முடிவு செய்யும் மின் சுற்று ஏற்பாடு. நினைவகப் பகுதிகளைப் பயன்படுத்தும் இலக்க முறை அமைப்பு.

combinatorial explosion : இணைவு வெடிப்பு : கணினி தீர்க்க வேண்டிய சிக்கலின் அளவு மிக அதிகமாகி விட்டபோது ஏற்படும் நிலை. பெரிய கணினிகளிலும் இந்நிலை ஏற்படலாம்.

combinatorics : இணைவியல் : இணைப்புகள் மாற்றங்கள் மூலம் எத்தனை வழிகளில் ஒன்றைச் செய்ய முடியும் என்பதை எண்ணும் முறைகளை ஆராய்தல்.

COMDEX : காம்டெக்ஸ் : Communications and Data Processing Exposition என்பதன் குறும்பெயர். அமெரிக்காவிலும் பிற இடங்களிலும் நடைபெறும் மிகப்பெரிய கணினி பொருட்காட்சி.

comic book : நகைச்சுவை நூல் : 1985 -இல் முதல் முறையாக கணினி மூலமான நகைச்சுவை நூல் முறை உருவாக்கப்பட்டது. ஷாட்டர் (Shatter) என்னும் முதல் கணினி நகைச்சுவை நூலை உருவாக்கியவர் மெக்கின் டோஷ் நுண் கணினியை கருவியாகப் பயன்படுத்தினார்.

COMIT : காமிட் : சர செயலாக்க மொழிகளில் ஒன்று.

comma delimited : வரையறுக்கப்பட்ட காற்புள்ளி : தகவல் புலங்களை காற்புள்ளியால் தனியாகப் பிரிக்கும் பதிவேடு அமைப்பு. இதில் பொது வாக எழுத்துத் தகவல்கள் மேற்கோள் குறியீடுகளுடன் தரப்பட்டிருக்கும்.

command : கட்டளை : 1. கட்டுப்பாடு சமிக்ஞை. 2. ஒரு கணித அல்லது அளவை இயக்கி. 3. ஒரு கணினி ஆணை. 4. கட்டளை.

command line : கட்டளைக் கோடு : செயற்பாட்டு முறைமையினால் (Operating System) கட்டளை செயல் படுத்தச் செய்யப்படும் நுழைவு. டாஸ் பிராம்ப்டினால் துவங்கும் கோடுபோன்று கணினியை இயக் கியதும் காட்சித் திரையில் தோன் றும் ஒரு கோடு.

command chained memory : கட்டளை இணைந்த நினைவகம் : மாறும் சேமிப்பக ஒதுக்கீட்டில் பயன் படுத்தப்படும் நுட்பம்.

command driven software : கட்டளை யால் இயங்கும் மென் பொருள் : முனையத்தைப் பயன்படுத்து வோருக்குப் பட்டியல்கள் (Menus) மூலம் வழிகாட்ட எந்த முயற்சியும் செய்யாத ஆணைத் தொடர்கள். அதற்குப் பதிலாக, கட்டளையால் இயங்கும் மென்தொடரில் கணினி யை இயக்குபவர் எத்தகைய கட்ட ளை உள்ளது என்றும், அவற்றில் எது பொருத்தமானது என்றும் அறிந்து கொண்டிருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

command file : கட்டளைக் கோப்பு; ஆணைக் கோப்பு.

command key : கட்டளைவிசை : குறிப் பிட்ட பணிகளைச் செய்ய பயன் படுத்தும் விசைப் பலகையில் உள்ள ஒரு விசை.

command language : கட்டளை மொழி : ஒரு செயற்பாட்டு முறை மைக்கு ஆணைகளைக் கொடுக்கும் மொழி.

command line parameters : கட்டளை வரி உள்ளீடுகள் : ஒரு கட்டளையில் சேர்க்கப்படும் கூடுதல் தகவல். டாஸ் அல்லது யூனிக்ஸில் பிராம்ப்டி லிருந்து ஓர் ஆணைத்தொடரை இயக்கக் கட்டளை தரும்போது, அந்த ஆணை தரப்பு உள்ளீட்டுத் தகவல்கள்.

command mode : கட்டளை முறை : செயல்படுத்தப்படுவதற்கான கட்ட ளைகளை கணினியை ஏற்றுக் கொள் ளச் செய்யும் இயக்கமுறை.

command processing : கட்டளை செயலாக்கம் : கணினி ஆணைகளைப் படித்தல், ஆராய்தல் மற்றும் செயல் படுத்தல்.

command processor : கட்டளைச்செய லாக்கம் : ஒரு செயற்பாட்டு முறை மையின் மிக எளிமையான கட்டளை களை அறிந்து கொள்ளப் பயன்படும் ஒரு பொதுவான கட்டளைக் கோப்பு.

command queuing : கட்டளை வரிசை யமைத்தல் : பல கட்டளைகளைச் சேமித்து அவற்றை ஒவ்வொன்றாகச் செயல்படுத்தும் திறன்.

command set : கட்டளைத் தொகுதி : ஆணைத்தொகை (Instruction set) போன்றது.

command statement : கட்டளைக் கூற்று; ஆணை அறிக்கை.

command shell : கட்டளை ஷெல் : கட்டளைச் செயலகம் (command processor) போன்றது.

command tree : கட்டளை மரம் : தலை மைக் கட்டளைப் பட்டியலுக்கும் தொடர்புடைய துணைப் பட்டியல் களுக்கும் உள்ள அனைத்து வாய்ப்பு களையும் கூறும் ஒரு வரிசை முறை வரைபடம்.

command.com : கமாண்ட்.காம் : டாஸ் (DOS) செயற்பாட்டு முறைமையின் கீழ் உள் கட்டளைச் செயலகக் கோப்பு.

command driven : கட்டளை இயக்கம் : தட்டச்சு செய்த சொற்றொடர்களாகக்

கட்டளைகளை ஏற்றுக் கொள்ளும் ஆணைத்தொடர். பொதுவாக, இதைக் கற்றுக் கொள்வது அரிது. ஆயினும், பட்டியல் செலுத்தும் ஆணைத் தொடரைவிட அதிக நெகிழ்வுத் தன்மையைத் தரும்.

command interpreter : ஆணை மொழி பெயர்ப்பி.

Comman lisp : காமன் லிஸ்ப் : லிஸ்ப் (LISP) மொழியின் கிழக்குக் கடற் கரையோர பேச்சு மொழியின் அங்கீகரிக்கப்பட்ட பதிப்பு.

comments : குறிப்புகள் : கணினி ஆணைத்தொடரில் உள்ள கணினி மொழி சொற்றொடர்களுக்கு இடை யே அங்கங்கே சேர்க்கக்கூடிய ஆங் கில உரைநடை. ஆணைத் தொடரின் செயல்களை மனிதர்களுக்கு விளக் கப் பயன்படுத்தப்படுகிறது. கணினி விளக்க நூல்களில் சரியாக எழுதப் பட்ட குறிப்புகள் மிகவும் பயனுள் ளவை. ஆணைத் தொடரின் உள் ளேயே இவை அமைவதால் எதிர் காலத்தில் பயன்படுத்துவோர்களுக்கு ஆணைத் தொடர்களைப் புரிந்து கொள்ளவும், மாற்றவும் மிகவும் உதவியாக இவை அமைகின்றன.

comment statements : விளக்க அறிக்கைகள்.

common area : பொது இடம் : தலைமை நினைவகத்தில் ஒதுக்கப் பட்டுள்ள ஒரு இடம். ஒரே ஆணைத் தொடரின் பல பகுதிகள் இதைப் பயன்படுத்திக் கொள்ளும்.

Common Carriers : காமன் கேரியர்ஸ் : பொது மக்களின் பயன்பாட்டுக்காக தொலைபேசி, தந்தி மற்றும் பிற தகவல் தொடர்பு வசதிகளை ஏற் படுத்தித் தரும் அரசு வழிகாட்டலில் இயங்கும் தனியார் நிறுவனம்.

commission : தரகுத் தொகை.

commondore international inc : கமாண்டோர் இன்டர்நேஷனல் இன்க் : வீட்டுப் பயன்பாட்டிற்காக நுண் கணினி அமைப்புகளை உற்பத்தி செய்வதில் சிறப்பிடம் பெறும் நிறு வனம். கமாண்டோர் பெட்விக் மற் றும் கம்மோடோர் 64 ஆகியவை மிக வும் புகழ் பெற்றவை. பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. கம்மோ-டோர் 128 மற்றும் அமிகா உள்ளிட்ட பெரிய நுண் கணினி அமைப்புகளை இந்த நிறுவனம் உற்பத்தி செய்கிறது.

common storage : பொது சேமிப்பகம் : எல்லா ஆணைத் தொடர்களும் அணுகக்கூடிய தகவல் அல்லது அளவுகோல்களை வைத்துக் கொண் டிருக்கும் நினைவகத்தின் பகுதி.

communicating : தகவல் தொடர்பு கொள்ளல் : பயன்படுத்தும் இடம் ஒன்றுக்கு தகவலை அனுப்பும் செயல்முறை.

communication : தகவல் தொடர்பு : 1. ஒரு இடத்திலிருந்து (மூலம்) வேறொரு இடத்துக்கு (பெறுபவர்) தகவல் செல்லுதல். 2. அனுப்புதல் அல்லது தெரியப்படுத்தல். 3. பொது வாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சமிக் ஞைகளின் தொகுதியைப் பயன் படுத்த தனிநபர்களுக்கிடையே தகவல் மாற்றிக் கொள்ளும் செயல்முறை.

communicating word processors : தகவல் தொடர்பளிக்கும் சொல் செயலி கள் : மின்னணு அஞ்சலை அனுப்பப் பயன்படுத்தப்படும் சொல் செயலி களின் கட்டமைப்பு.

communication channel : தகவல் தொடர்பு வழித்தடம் : தகவல்களை அனுப்புதல் அல்லது பெறுவதற்காக ஒரு இடம் அல்லது சாதனத்தினை

வேறொன்றுடன் இணைக்கும் பருப் பொருள் வழி. தகவல் தொடர்பு வழித்தடங்களாக கோயாக்சியல் கேபிள், ஒளிவ நுண் இழைகள், நுண்ணலை சமிக்ஞைகள், தொலை பேசிக் கம்பிகள் மற்றும் செயற்கைக் கோள் தகவல் தொடர்புகள் ஆகியவை பயன்படுகின்றன.

communication line : தகவல் தொடர்பு கம்பி : தொலைபேசிக் கம்பி அல்லது கோயாக்சியல் கேபிள். நுண்ணலை இணைப்பு போன்று தகவல்களை அனுப்புவதற்கேற்ற கம்பி.

communication software : தொடர் பியல் மென்பொருள்.

communication statellite : தகவல் தொடர்பு செயற்கைக் கோள் : தரை நிலையம் இரண்டு அல்லது மேற் பட்டவற்றிலிருந்து செயற்கைக் கோளுக்கும் இடையில் தகவல் தொடர்பு கொள்ள உதவும் செயற் கைக் கோள்.

communications controller : தகவல் தொடர்பு கட்டுப்பாட்டமைவு : கணினி யுடன் பல தகவல் தொடர்புக் கம்பி களை இணைக்கும் வெளிப் புறக் கட்டுப்பாட்டுச் சாதனம். அனுப்பு தல், பெறுதல் மற்றும் செய்தி குறியீடமைத்தல், குறியீட விழ்த்தல் நடவடிக்கைகளை இது செய்கிறது.

communication control unit : தகவல் தொடர்புக் கட்டுப்பாட்டுச் சாதனம் : பல் நோக்குக் கணினியிலிருந்தோ அல்லது கணினிக்கோ செய்தித் தகவல் தொடர்பு ஓட்டத்தை மட்டும் கையாள வேண்டிய ஒரே வேலை யைச் செய்கின்ற ஒரு சிறிய கணினி.

communications interrupt : தகவல் தொடர்புக் குறுக்கீடு : தொடர் ஏற்பி மூலம் வரும் வன்பொருள் குறுக்கீடு வரிசைக்கோட்டில் வேறொன்றை அனுப்பும்போது ஒரு எழுத்து குறுக்கே வருதல்.

communications link : தகவல் தொடர்பு இணைப்பு : இரண்டு கணினி சாதனங்களுக்கிடையில் தகவலை அனுப்பும் முறை.

communications network : தகவல் தொடர்பு இணையம் : முனையங் களையும் கணினிகளையும் இணைக் கும் தகவல் தொடர்பு வழித் தடங் கள். வன்பொருள்கள் இணைப்பு களுக்கு ஆதரவாக இருக்கும் மென் பொருள் அனுப்புதலை சமாளிக்கும்.

communications processor : தகவல் தொடர்புச் செயலகம் : கணினி அமைப்புக்கும் தகவல் தொடர்பு கட்டமைப்புகளுக்கும் இடையே தகவல் பரிமாற்றலுக்கான பாதை அமைத்துத் தரும் கணினி.

communications programme : தகவல் தொடர்பு ஆணைத்தொடர் : மோடெம் மூலமாக தகவல் தொடர்பு கொள்ள கணினிகளை அனுமதிக்கும் ஆணைத் தொடர். தகவல் தொடர்பு கொள் வதற்கும், தகவலைப் பெறுவதற்கும் தானியங்கி முறைகளாகிய தானி யங்கி பதில் அளித்தல், தானே டயல் செய்தல், வேறொரு கணினியை டயல் செய்தல் போன்றவற்றை சில தகவல் தொடர்பு ஆணைத் தொடர் கள் செய்யவில்லை. தொலை தூர கணினியில் ஆளில்லாமலே தொடர்பு கொள்ளவும் சில ஆணைத் தொடர்கள் திறனுடையவை.

communications protocol : தகவல் தொடர்பு நெறிமுறைகள் : சாதனங் களுக்கிடையே பிழை திருத்துவதற் கான தகவல் தொடர்பு விதிகளின் தொகுதி. அனுப்பப்பட்ட தகவல்கள் அழிந்து போகாமல் இருக்கவும் உதவுகிறது.

communications server : தகவல் தொடர்பு அளிப்பவர் : உள்ளூர் பகுதி இணையங்களை அகன்ற பரப்பு அல்லது தொலைத் தகவல் தொடர்பு இணையங்களுடன் இணைக்கும் சாதனம்.

communications system : தகவல் தொடர்பு அமைப்பு : அனுப்புகின்ற வரின் பருப்பொருள் வழித்தடங்கள் மற்றும் செய்தித் தகவல் தொடர்பு பெறுபவர்களையும் கொண்ட அமைப்பு.

compact disk : குறுவட்டு.

குறுவட்டு (Compact disk)

compact disk read only memory (CDROM) : படிக்க மட்டுமான தகவல் களைப் பதியும் குறுவட்டு.

compaction : நெருக்கம் : சேமிப் பதற்கு இடம் தருவதற்காக தகவல் அமைப்பு முறைகளை மூட்டை கட்டும் முறை.

comparative sort : ஒப்பீட்டு முறை : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விவரங்களை ஒப்பிடும் முறை.

comparator : ஒப்பீட்டுப் பொறி : மாற்றப்பட்ட தகவல்களின் துல்லி யத்தைச் சோதனை செய்ய இரண்டா வது முறையும் மாற்றம் செய்து இரண்டுக்குமிடயில் உள்ள வேறு பாட்டைக் குறிப்பிடும் சாதனம்.

compare : ஒப்பிடு : ஒன்றின் மதி வியை சோதித்து பூஜ்யத்துடனான அதன் உறவை முடிவு செய்தல் அல் லது இரண்டு பொருள்களை சோதித் தல். ஒப்பீட்டு அளவை முடிவு செய்யவோ அல்லது அடையாளம் காணும் நோக்கத்துடனோ இது செய்யப்படும்.

comparison : ஒப்பீடு : இரண்டு எண் களை அவற்றின் அடையாளத்துக் காக ஒப்பிடுதல் அல்லது இரண்டு எழுத்துகளை அவற்றின் அளவின் ஒப்புமைக்காக ஒப்பிடுதல் அல்லது அகரவரிசைப்படுத்துதல் மற்றும் இரண்டு எண்களின் சமிக்ஞைகளை ஒப்பிடுதல் ஆகியவை பொது வடி வங்களை ஒப்பிடும் செயலாகும்.

compart : கம்பார்ட் : Computer Art என்பதன் குறும்பெயர்.

compatibility : தகவுடைமை ; ஏற்பு டைமை : *1.* ஒரு கணினிக்காக எழுதப் பட்ட ஆணைத் தொடர், வேறு ஒரு மாறுபட்ட மாதிரியில் உருவான கணினியில் செயல்பட அனுமதிக் கும் சில கணினிகளின் தன்மை. 2. கணினியும், அச்சுப் பொறியும் போன்று பல்வேறு சாதனங்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்யும் திறன்.

compatible : ஏற்புடைய : இரண்டு சாத னங்கள் அல்லது அமைப்புகளுக் கிடையே சேர்ந்து பணியாற்றும் அள வைக் குறிப்பிடுகிறது. ஒரு அமைப் பின் பகுதி ஒன்று வேறொரு அமைப் பின் பருப்பொருள் மற்றும் செயல் படு தன்மைகளுடன் முழுமையாக ஏற்புடையதென்றால், எந்த மாற்றமும்

செய்யாமல் அதை வேறொரு அமைப் புடன் சேர்த்துக் கொள்ளலாம்.

compatible software : ஏற்புடைமென் பொருள் : எந்தவித மாற்றம் செய்யா மல் பல்வகை கணினிகளில் ஓடக் கூடிய ஆணைத்தொடர்கள்.

compilation : தொகுத்தல் ; மொழி மாற்றல் : செயலகத்தில் நேரடியாக இயக்கப்படுவதற்காக உயர்நிலை மொழிகளில் எழுதப்பட்ட ஆணைத் தொடர்களை எந்திர மொழி ஆணை களாக மொழி பெயர்த்துத் தரும் இரு முக்கிய முறைகளில் ஒன்று. இயக்கத் திற்கு முன்பே முழு ஆணைத்தொடர் மொழிபெயர்க்கப்படவேண்டும். ஆணை மாற்றிக்கு (interpretation)-க்கு மாறானது. ஆணை மாற்றி முறையில் ஒவ்வொரு ஆணையும் அது செயல் படுத்தப்படும்போது மட்டுமே மாற்றப்படுகிறது.

compilation process : தொகுப்புச் செயல்முறை.

compilation time : தொகுப்பு நேரம் : மூலமொழிஆணைத்தொடரைநோக்க ஆணைத் தொடர் (இயக்க மொழி) மொழிபெயர்க்கும் (தொகுக்கும்) நேரம்.

compile : தொகு : ஃபோர்ட்ரான், கோபால், அல்லது பாஸ்கல் போன்ற உயர்நிலை ஆணைத்தொடர் மொழி யில் எழுதப்பட்ட ஆணைத்தொடரி லிருந்து எந்திர மொழி ஆணைத் தொடர் அல்லது சமிக்ஞை குறியீட் டில் ஆணைத்தொடர் தயாரித்தல்.

compile and go : தொகுத்துப் போ : ஒரே தொடர்ச்சியான ஓட்டத்தில் ஆணைத்தொடர் ஏற்றல் மற்றும் இயக்க நிலை தொகுப்பினைச் செய் யும் செயல் நுட்பம். ஒரே தடவை பயன்படுத்துவதற்காக ஆணைத் தொடரைத் தொகுக்கும்போது மிகவும் பயனுள்ளது.

compile time : தொகுப்பு நேரம் : ஒரு ஆணைத்தொடரைத் தொகுக்க ஆகும் நேரம். மூலமொழியிலிருந்து எந்திர மொழிக்கு மொழி பெயர்க்க ஆகும் நேரம். இணைப்பு தொகுக்கும் நேரமும் இதில் சேர்த்துக் கொள்ளப் படும்.

compiler : தொகுப்பு; தொகுப்பி; மொழிமாற்று ஆணைத்தொடர் : உயர் நிலை மொழி சொற்றொடர்களை கணினி வன்பொருளை நேரடியாக செயல்படுத்தும்நோக்கத்துடன்மொழி பெயர்க்கும் கணினி ஆணைத் தொடர். இயக்கப்படுவதற்கு முன்பே முழு ஆணைத்தொடரையும் மொழி பெயர்க்கிறது.

compiler-compiler : தொகுப்பி-தொகுப்பி : Meta Compiler போன்றது.

compiler language : தொகுப்பி மொழி : மொழிச் சொற்றொடர்களை நோக்க மொழிக்கு மொழி பெயர்த்துத் தருவ தற்கு தொகுப்பியைப் பயன்படுத் தும் மூலமொழி.

compiler programme : தொகுப்பி ஆணைத்தொடர்.

compiler time : தொகுக்கும் நேரம் : ஒரு ஆணைத்தொடரைத் தொகுக்க எடுத்துக் கொள்ளும் நேரம். மூலக் குறியீட்டிலிருந்து நோக்கக் குறி யீட்டுக்கு மொழிபெயர்க்க மொழி பெயர்ப்பி (தொகுப்பி)க்காக ஆணைத் தொடர் ஒன்று செயலாக்கம் செய்ய எடுத்துக் கொள்ளும் நேரம் தொகுக் கும் நேரம் என்று அழைக்கப்படு கிறது.

compile-time error : தொகுப்பு-நேரப் பிழை : மூலக் குறியீட்டைத் தொகுக் கும்போது ஏற்படும் பிழை.

complex : கலவை : கலவைப் பொருள்களைச் சேமிப்பதற்காக சில கணினி மொழிகளில் உள்ள தகவல் வகை.

Complex Instruction Set Computer (CISC) : சிஸ்க். Complex Instruction Set Computer என்பதன் குறும்பெயர். நுண் ஆணைத்தொடர் அமைத் தலைப் பயன்படுத்தும் வடிவ அமைப்பினைச் சார்ந்த கணினி.

compiling : தொகுத்தல்.

complement : நிரப்பு எண் ; சேர்ப்பு எண் ; எதிர் பார்த்தல் : ஒரு குறிப்பிட்ட எண்ணின் எதிர்மறையை உருவகிக் கும் எண். கடைசி முக்கிய இலக்கத் திற்கு ஒற்றுமையுடையதாக 10-ன் சேர்ப்பெண் மற்றும் 2-ன் சேர்ப் பெண் போன்று ஆதார எண்ணி லிருந்து எண்ணின் ஒவ்வொரு இலக்கத்தையும் கழிப்பதால் வரும் எண். Radix Complement என்று அழைக்கப் படுகிறது.

complement notation : நிரப்பு முறை.

complementary MOS (CMOS) : நிரப்பு உலோக ஆக்சைடு குறை கடத்தி எனும் பொருள்படும் Metallic Oxide Semiconductor (MOS) (Complementary Mos) என்பதன் குறும்பெயர். மாசை விட வேகமாக வேலை செய்கின்ற, ஏறக்குறைய மின்சக்தியைப் பயன் படுத்தாமலே இயங்கும் உலோக ஆக்சைடு. அரைக் கடத்தி சிப்புகளை செய்யும்முறை. LSI-ஐ விடச் சிறந்த தல்ல. ஆனால் பேட்டரியிலிருந்து சக்தி வருகின்ற மின்னணு கைக் கடி காரங்கள் மற்றும் கடிகாரங்களில் பயன்படுத்தப்படுகிறது.

completeness check : முழுமைச் சோதனை : புலங்கள் எல்லாம் சரி யாக இருக்கிறது என்றும் முழுப் பதிவுகளும் சோதிக்கப்பட்டது என்றும் உறுதி செய்வது.

component : கணினி அமைப்புச் சாதனம் : ஒரு கணினி அமைப்பில் அடிப்படை உறுப்பு, மூலக உறுப்பு; ஒரு பயன்பாட்டின் பகுதி.

composite : கலவை : அனைத்து மூன்று அடிப்படை ஒளிக்காட்சி (வீடியோ) நிற சமிக்ஞைகளும் (சிவப்பு, பச்சை, நீலம்) கலந்துள்ள ஒளிக்காட்சி சமிக்ஞை வகை. சில கணினி காட்சித்திரைகளில் உள்ள உருவங்களின் கூர்மையைக் கட்டுப் படுத்துகிறது. எலெக்ட்ரான் பீச்சு கருவியைப் பயன்படுத்தி மூன்று அடிப்படை நிறங்களை உருவாக்கும் தொலைக்காட்சிகளிலும் பயன்படுத் தப்படுகிறது.

COM port : காம் போர்ட் : பிற வெளிப் புற சாதனங்களுடன் தகவல் தொடர்பு கொள்வதற்காக பி.சி.யில் பொருந்தும் ஒரு தொடர் வெளியீட்டு துறை.

காம்போர்ட் (Comport)

composite card : கலவை அட்டை : பலநோக்கு தகவல் அட்டை அல்லது பல்வேறு பயன்பாடுகளைச் செய லாக்கம் செய்ய தேவைப்படும் தகவல்களைக் கொண்ட அட்டை.

composite symbol : கலவைக் குறி யீடு : ஒரு எழுத்துக்கு மேற்பட்ட தைக் கொண்ட சமிக்ஞை < > என்ற குறியீட்டில் சமமானதல்ல என்பதைக் குறிப்பிடச் சில மென்பொருள் அமைப் புகளில் இருப்பதைப் போன்ற கலவைக் குறியீடு.

composition : எழுத்துக்கோப்பு : எழுத்துகளின் அளவுகள், முறைகள் மற்றும் ஒரு பக்கத்தில் அவற்றின் அமைப்புகளைத் தேர்ந்தெடுத்தல்.

composite video : கலவை ஒளிக் காட்சி; கலப்பு ஒளிக்காட்சி; கலந்த ஒளிக்காட்சி : ஒரு தனி ஒளிக் காட்சி சமிக்ஞையாக குறியீடு செய்யப் பட்டு பிரகாசம், நிறக்கூறு வடிவில் தோன்றும் ஒரு கணினியின் வண்ணக் காட்சித் திரையில் தோன்றும் நிற வெளிப்பாடு. நிறக் கட்டுப்பாடு சமிக்ஞை ஒரு தகவல் தொடராக மூன்று நிறங்களில் (சிகப்பு, பச்சை, நீலம்) குறியீடு செய்யப்படுகிறது. கலவை காட்சித் திரைகள் எனப் படும் சிக்கனமான வண்ண காட்சித் திரைகள் கலவை ஒளிக்காட்சியைப் பயன்படுத்தி தொலைக்காட்சி பெட் டியை விட ஓரளவு சிறந்த படத்தை அளிக்கும். ஆனால் RGB காட்சித் திரை போன்ற உயர்தரத்தில் அளிக்க இயலாது.

compound document : கூட்டு ஆவணம் : சொற்கள் மற்றும் வரை கலை ஆகிய இரண்டும் உள்ள சொற் கோப்பு. கூட்டு ஆவணங்களில் குரல் மற்றும் ஒளிக்காட்சியும் இடம் பெறும்.

compound statement : கூட்டுச் சொற் றொடர் : தனியாகப் பயன்படுத்தக் கூடிய இரண்டு அல்லது கூடுதல் ஆணைகளைக் கொண்டுள்ள தனி ஆணை.

compress : சுருக்கு : இடத்தை சேமிக்க தகவல்களைச் சுருக்குதல். தகவல்களைச் சுருக்க, செயல்பாட்டு ஆணையின் பயனீட்டுக் கோப்புப் பெயருடன் A-Z பின்னிணைப்பு சேர்க்கப்படுகிறது. Uncompress என்ற பயன்பாடு கோப்புகளை விரிவாக்கி பழையபடியே தரும்.

compressed file : சுருக்கப்பட்ட கோப்பு : வழக்கமானதைவிட குறை வான சேமிப்பு இடத்தை எடுத்துக் கொள்ளும் வகையில் சேமிக்கப் படும் கோப்பு.

compression ratio : சுருக்குதல் விகிதம்: சுருக்கப்பட்ட தகவல்களை அளப்பது. சான்றாக, அதன் மூல அள வின் கால்பங்காக சுருக்கினால் அதை 4:1, 25%, 75% என்று குறிப்பிடலாம்.

compressor : செறிவி; சுருக்கி : மிக வும் வலுவானதும் மிகவும் பல வீன மானதுமான அனுப்பும் சமிக்ஞை களின் எல்லையைச் சுருக்கும் சாதனம். தகவல்களைச் சுருக்கும் ஆணைத்தொடர் அல்லது நடை முறை ஒழுங்கு.

CompuServe : கம்ப்யூசர்வ் : தனிநபர் கள் மற்றும் வணிகத் துறையினர் பயன்படுத்தும் பெரிய தகவல் சேவை கட்டமைப்பு. புதிய செய்திக் கட்டுரைகள், பங்குச் சந்தை அறிக் கைகள், மின் அஞ்சல், கல்வி ஆணைத்தொடர்கள், ஆணைத் தொடர் உதவிச்சாதனங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளது. பொது தொலை பேசி அமைப்பு மூலம் தனி முறைக் கணினி வைத்திருப்போர் கணிச் சேவை 'கம்ப்யூசர்வ்' யுடன் தொடர்பு கொள்ளலாம்.

computability : கணக்கிடும் தன்மை : கணக்கு முறையில் சிக்கல்களைத் தீர்க்கும் பொருள்.

computation : கணக்கிடல் : கணக்கிடு வதன் விளைவு.

compute bound : கணக்கிடும் வரை யறை : மையச் செயலகத்தின் வேகத் தினால் கட்டுப்படுத்தப்பட்ட கணினி அமைப்பின் ஒரு ஆணைத்தொட ரைக் குறிப்பிடுவது. கட்டுப்படுத்

தும் செயல்முறை அல்லது செயலக வரையறை என்பதைப் போன்றது. உள்ளீடு:வெளியீடு வரையறை என்பதற்கு மாறானது.

computer anxiety : கணினி பதட்டம் : கணினிகள் பற்றிய அச்சம்.

computer : கணினி; கணிப்பொறி : தகவல்களை ஏற்றுக் கொண்டு குறிப் பிட்ட செயல்முறை (கணித அல்லது அளவை முறை)யிலான அந்த தகவல்களின் மீது செய்து இச்செயல் முறைகளின் முடிவைத் தருவதன் மூலம் சிக்கல்களைத் தீர்க்கும் அல்லது தகவல்களைக் கையாளும் திறனுடைய சாதனம்.

Computer Aided Design /CAD : சிஆர்டி ; கணினி உதவிடும் வடி வமைப்பு : Computer Aided Design என் பதன் குறும்பெயர். கணினி உத விடும் வடிவமைப்பு காட்சி முறை யும் ஒளிப்பேனா அல்லது பலகையின் மூலம் ஒரு கணினிக்கும், ஒரு வடி வமைப்பவருக்கும் இடையில் ஏற் படும் நேரடியான, உண்மை நேர் தகவல் தொடர்பினைக் கொண்ட செயல்முறை.

Computer-Aided Design and Drafting (CADD): கணினி உதவிடும் வடி வமைப்பு மற்றும் படம் வரைதல் : Computer -Aided Design and Drafting என் பதன் குறும்பெயர். ஓவியங்களை உருவாக்குவது, படம் வரைதல். விருப்பங்களை வரிசைப்படுத்தும் வடிவமைப்பு.

Computer Aided Design/Computer aided manufacturing CAD/CAM : கணினி காட்/காம்;கணினி உதவிடும் வடிவமைப்பு / உற்பத்தி முறை : Computer Aided Design /Computer Aided Manufacturing என்பதன் குறும்பெயர். வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி முறை செயல்பாடுகளைத் தானி யங்கி முறையில் செய்யும் முயற்சி. வேகமாக வளரும் கணினி வரைபட முறை. தற்போது கையெழுத்துக் கலைவரைபட முறையையே முக் கிய ஆதாரமாக கொண்டுள்ளது. என் றாலும் ராஸ்டர் வரைபட முறையை உள்ளடக்கி ஆட்டோ பகுதிகள், கட்டுமானம் மற்றும் ஒருங்கிணைந்த மின்சுற்றுகள் போன்ற பரவலான பயன்பாடுகளைச் செய்வதற்கு கிளை விட்டுள்ளது.

computer-aided engineering : கணினி - உதவிடும் பொறியியல் : கணினி - உதவிடும் வடிவமைப்பு முறை களைப் பயன்படுத்தி உருவாக்கப் படும் உற்பத்தி வடிவமைப்புகளின் மாதிரிகளை போலியாக உருவாக்க, ஆராய, மதிப்பீடு செய்ய கணினி களைப் பயன்படுத்துதல்.

Computer Aided Factory Management : CAFM; சிஏஎஃப்எம்; கணினி உதவிடும் தொழிற்சாலை மேலாண்மை : Computer Aided Factory Management என் பதன் குறும்பெயர். உற்பத்தி முறை களையும், உற்பத்தித் தொழிற்சாலை யின் இயக்கத்தையும் தானியங்கி யாக செய்வதற்கு கணினிகளைப் பயன்படுத்துதல். Factory Automation என்றும் அழைக்கப்படுகிறது. உதிரி பாகங்களைக் கணக்கெடுத்தல். வழங்கு மையங்களின் தேவைக் கேற்ப புதிய பொருள்களுக்கு ஆணை யிடுதல் போன்றவற்றில் துல்லிய மான கணக்கு வைத்திருக்க கணினி மூலம் செயல்படும் உற்பத்தி மேலாண்மை அமைப்பு.

Computer Aided Manufacturing : CAM : காம்; கணினி உதவிடும் உற்பத்தி முறை : Computer Aided Manu- facturing என்பதன் குறும்பெயர். உற்பத்தித் துறையைச் சேர்ந்த மேலாண்மை,

கட்டுப்பாடு, செயல் முறை ஆகிய வற்றுக்கு கணினி தொழில் நுட்பத் தைப் பயன்படுத்துதல்.

Computer Aided Materials Delivery : கணினி உதவிடும் பொருள் விநியோ கம் : கணினி இயக்கத்தில் நகர்த்திப் பட்டைகளையும், எந்திரன் (எந்திர மனித) வண்டிகளையும் பயன்படுத் தித் தொழிற்சாலையிலிருந்து பொருள் களையும் உதிரி பாகங்களையும் நகர்த்துதல். இதன் மூலம் உற்பத்தித் திறன் அதிகரித்து நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயல்பாடு கூடுகிறது.

Computer Aided Materials Selection : கணினி உதவிடும் பொருள் தேர்வு : ஒரு புதிய பொருள் அல்லது உதிரி பாகத்தை உருவாக்க எந்தெந்த பொருள்களைப் பயன்படுத்தலாம் என்பதை முடிவு செய்ய கணினி யைப் பயன்படுத்துதல்.

Computer-Aided Planning ; CAP : கணினி - உதவிடும் திட்டமிடல்: Computer - Aided Plannjng என்பதன் குறும் பெயர். திட்டமிடல் செயல் முறைக்கு உதவ மென்பொருள்களை கருவிகளாகப் பயன்படுத்துதல்.

Computer - Aided Software Engineering : CASE: கணினி உதவிடும் மென்பொருள் பொறியியல் : Computer-Aided Software Engineering என் பதன் குறும்பெயர். மென் பொருள் வளர்ச்சி அல்லது ஆணைத் தொடர மைத்தல் உள்ளிட்ட தகவல் அமைப்பு வளர்ச்சியில் பல்வேறு நிலைகளைத் தானியங்கியாகச் செய் யவும், செய்துகாட்டும் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவது.

computer application : கணினி பயன் பாடு : இறுதியாகப் பயன்படுத்துபவர் ஒரு குறிப்பிட்ட வேலைக்கோ அல்லது ஒன்றைச் சாதிக்கவோ, ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்க் கவோ கணினியைப் பயன்படுத்து வது. சான்றாக, பொதுவான வணிகக் கணினி பயன்பாடுகளில் விற்பனை ஆணை செயலாக்கம், கணக் கெடுப்பு, சம்பளப்பட்டி போன் றவை அடங்கும்.

computer architecture : கணினி கட்டு மான அமைப்பு : கணினி அமைப்பின் வன்பொருளின் பருப்பொருள் அமைப்பையும், மற்ற வன்பொருள் களுடன் அவற்றுக்குள்ள உறவையும் பற்றி ஆராயும் கணினி பற்றிய ஆய்வு.

computer art : கணினி கலை : ஓவியர் களுக்கான கணினி கருவியைப் பயன் படுத்தி ஓவியர்கள் உருவாக்கிய வடிவம். வண்ணம் பூசும் தூரிகை, கரிபென்சில் அல்லது மனதின் ஒரு விரிவாக்கம் என்பதாக கணினியைக் கருதலாம். ஓவியர் அழகான உருவங் களைக் கனவு கண்டு கணினியைப் பயன்படுத்தி அவற்றை உயிரோட்ட முள்ளனவாகக் கொண்டு வரலாம். காட்சி வரைபட முறைகளிலும், அச்சுப்பொறிகள், இலக்கமுறை வரைவிகள், படியெடுக்கும் சாதனங் கள் போன்றவற்றால் கணினி கலை பொருட்களைக் கொண்டு வரலாம்.

computer artist : கணினி ஓவியர் : கலைப் பொருளை உருவாக்கக் கணினிகளைப் பயன்படுத்துபவர்.

computer assisted diagnosis : கணினி உதவிடும் நோயறிமுறை : வேகமாக வும், துல்லியமாகவும் நோயறிவதற் கும் மருத்துவர்களின் நேரத்தைச் மிச்சப்படுத்தவும் கணினியை ஒரு கருவியாகப் பயன்படுத்துதல். மருத் துவ/தகவல்களைப் படித்து வழக்க மாக உள்ளதிலிருந்து மாறுபாடு களை மதிப்பீடு செய்து நோய் என்ன

வென்று அறிந்து கொள்ள கணினி யைப் பயன்படுத்துதல்.

Computer Assisted Instruction (CAI) : கணினி உதவிடும் கல்வி : Computer Assisted Instruction என்பதன் குறும் பெயர். கணினி கட்டுப்பாட்டில் ஆணைத்தொடர் அமைக்கப்பட்ட பாடங்களை மாணவர்களுக்குக் கொடுத்து ஒருவரது கல்விக்கு கணினி களைப் பயன்படுத்துதல். வரிசைப் படுத்தலும் பொருள்களும் சேர்ந்து அவர்களது படிப்பின் முன்னேற்றத் திற்கு அவரவரது தேவை மற்றும் திறனுக்கேற்ப மாற்றமடையும்.

Computer Augmented Learning (CAL) : கணினி மேம்படுத்தும் கல்வி (கால்): Computer Augmented Learning என்பதன் குறும்பெயர். கற்பித்தலுக் கும், சிக்கல் தீர்ப்பதற்கும் உதவிட போலி ஆணைத்தொடர்களைப் பயன்படுத்துவது போன்று கணினி அமைப்பைப் பயன்படுத்த வழக்க மான கல்விமுறையை மேம்படுத் தலோ, துணைபுரியவோ செய்தல். Computer Assisted Instruction என்பதும் இதுவும் ஒன்றல்ல.

computer awareness : கணினி விழிப் புணர்வு : கணினி என்றால் என்ன என் றும், அது எவ்வாறு செயல்படுகிறது என்றும் சமுதாயத்திற்கு கணினியின் பங்கும் பயனும் பற்றி புரிந்து கொள் வதையே பொதுவாக இவ்வாறு சொல்வர்.

Computer Based Consultant (CBC): கணினி சார்ந்த ஆலோசகர் : Computer Based Consultant என்பதன் குறும் பெயர். 1970ஆரம்பத்தில் வடிவமைக் கப்பட்ட, மின்னியந்திரக் கருவி யினைப் பழுதுபார்க்க உதவுவதற் காக உருவாக்கப்பட்ட அறிவு சார்ந்த அமைப்பு.

computer based information system : கணினி சார்ந்த தகவல் அமைப்பு : தனது தகவல் செயலாக்க நடவடிக் கைகளுக்கு கணினியின் வன் பொருள் மற்றும் மென்பொருளைப் பயன்படுத்தும் தகவல் அமைப்பு.

Computer Based Learning (CBL) : கணினி அடிப்படையிலான கல்வி (சிபிஎல்): Computer Based Learning என்பதன் குறும் பெயர். கல்வியியல் கணினியின் அனைத்து தற்போதைய வடிவங்களையும் உள்ளடக்கிய சொல்.

computer binder : கணினி ஒட்டி : அச்சுப் பொறிகள் உருவாக்குகின்ற அச்சு வெளியீடுகளைப் பாதுகாக்க வும், வைத்துக் கொள்ளவும் உரு வாக்கப்பட்டுள்ள ஒட்டி.

computer bulletin board : கணினி அறிவிப்புப் பலகை : ஒரு செய்தித் தாளின் விளம்பரப் பிரிவின் மின் னணுப் பதிப்பு போன்ற ஒரு கணினி அறிவிப்புப் பலகை.

computer bureau : கணினி அலுவல கம் : பல பயன்படுத்துவோர்களுக்கு தன்னுடைய கணினியின் நேரத்தை விற்கும் நிறுவனம்.

computer camp : கணினி முகாம் : கோடை வாரங்களில் நடத்தப்படும் முகாம். இதில் பங்கு கொள்பவர்கள் நீச்சலடிப்பது, காரோட்டுவதுடன் நுண் கணினிகளைப் பயன்படுத்த வும் கற்றுக் கொள்வார்கள்.

computer center : கணினி மையம் : கணினி, அதன் துணைப் பொருள் மூலமாகவும், அதன் பணியாளர் அளிக்கும் சேவைகள் மூலமாகவும் பல தரப்பட்ட பயனாளர்களுக்கு கணினி சேவைகளை வழங்கும் வசதி.

computer center director : கணினி மைய இயக்குநர் : ஒரு கணினி மையத்தின் பணியாளர்களை இயக்கும் தனி நபர்.

computer chess : கணினி சதுரங்கம் : சதுரங்க விளையாட்டை ஆடும் கணினி ஆணைத்தொடர். 1970 முதல் ஏசிஎம் வடஅமெரிக்க கணினி சதுரங்க சாம்பியன் ஷிப்புகள் முன்னேற்றத்திற்கு ஒரு கிரியா ஊக்கியாகவும் செயற்கை நுண்ணறிவு ஆய்வு என்னும் மிகவும் ஆர்வமிக்க வரலாற்றுப் பதிவேடாகவும் விளங்குகிறது. கடந்த 20 ஆண்டுகளில், மன்ற ஆட்டக்காரர்கள் நிலையிலிருந்து உலகின் மிகச் சிறந்த வரிசையில் ஆணைத் தொடர்கள் முன்னேறி உள்ளன.

computer circuits : கணினி மின்சுற்றுகள் : வாயில் மின்சுற்றுகள், சேமிப்பு மின்சுற்றுகள், துவக்கும் மின்சுற்றுகள், தலைகீழாக்கும் மின்சுற்றுகள், மின்சக்தி பெருக்கும் மின்சுற்றுகள் போன்றவை இலக்க முறை கணினிகளில் பயன்படுத்தப்படும் மின் சுற்றுகள்.

computer circuitry : கணினிச் சுற்றுவரி.

computer classifications : கணினி வகைப்படுத்தல்கள் : கணினிகளை இலக்கமுறை, ஒப்புமை என்று இரண்டு பெரும் பிரிவுகளில் கணினிகள் அடங்குகின்றன. இலக்கமுறை மற்றும் ஒப்புமை கணினிகளை ஒன்றாக இணைத்து உயரினம் என்று சொல்லப்படும் மூன்றாவது வகையும் உண்டு. மிகப்பெரிய சூப்பர் கணினிகள் முதல் நுண்ணிய நுண் கணினிகள் வரை கணினிகளின் அளவு, விலை, திறன் மாறுபடுகிறது.

computer code : கணினிக் குறியீடு : ஒரு குறிப்பிட்ட கணினிக்கான எந்திரக் குறியீடு.

computer conferencing : கணினி மாநாட்டமைப்பு : ஒரு கட்டமைப்பில் பங்கு கொண்டுள்ள பலவற்றுக்கிடையேயான தகவல் தொடர்பு. மனிதர்களின் உண்மையான சந்திப்புக்கும், தொலைபேசி மாநாட்டமைப்புக்கும் ஒரு மாற்று ஏற்பாடாக தொலைத் தகவல் தொடர்புகள் வழியாக பலதரப்பட்டவர்கள் தங்களுக்குள் செய்திகளையும், தகவலையும் பரிமாறிக் கொள்வது விளங்குகிறது.

computer crime : கணினி குற்றம் : கணினி அமைப்பை தவறாகப் பயன்படுத்துவதற்கெதிரான பன்னாட்டுச் சட்டம். சிறிய ஏமாற்றுத் திட்டங்களிலிருந்து வன்முறைக் குற்றங்கள் வரை கணினியின் குற்றங்களின் தன்மை இருக்கும். அனுமதியற்ற செயல்களைச் செய்ய கணினியைப் பயன்படுத்துதல். சட்டமுறையாக இன்னும் சரிவர வரையறுக்கப் படவில்லை.

computer design : கணினி வடிவமைப்பு : ஒரு கணினி பற்றிய கருத்து, திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு விளக்கங்களை உருவாக்குதல்.

computer designer : கணினி வடிவமைப்பாளர் : ஒரு கணினியின் மின்னணு அமைப்பினை வடிவமைப்பவர்.

computer disease : கணினி நோய் : நிறுவனப் பொருளையோ அல்லது கணினிகளின் நினைவகத்தையோ தடுத்து எல்லா ஆணைத்தொடர்களும் வீணாகுமாறு செய்வது.

computer drawing : கணினி ஓவியம் : கணினி வெளியீட்டுச் சாதனம் உரு

வாக்கிய ஒரு குறிப்பிட்ட உருவம். பொதுவாக இதை வரைகலை அச்சுப் பொறி அல்லது வரைவி (பிளாட்டர்) இதை வரையும்.

computer enclosure : கணினி மூடல் : கணினியின் மின்சுற்று அட்டைகளையும், மின்சக்தி வழங்கலையும் பாதுகாக்க அமைக்கப்படும் பெட்டி அல்லது வீடமைப்பு.

computer engineering : கணினி பொறியியல் : கணினி வன்பொருள் அமைப்புகளின் வடிவமைப்பினை உள்ளடக்கிய அறிவுப்புலம். பல கல்லூரிகள் அல்லது பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பாக நடத்தப்படுகிறது.

computerese : கணினிய : கணினிகள் மற்றும் தகவல் சார்ந்த அமைப்புகளுடன் பணியாற்றும் மனிதர்களின் குழூஉச் சொற்கள் மற்றும் பிற சிறப்புச் சொற்கள்.

computer ethics : கணினி அறவியல்; கணினி ஒழுக்கம் : கணினி வல்லுநர்கள் மற்றும் பயன்படுத்துபவர்களின் சட்ட, தொழில் சார்ந்த, சமூக, ஒழுக்கமுறைப் பொறுப்புகளைக் கட்டுப்படுத்தும் கொள்கைகளின் அமைப்பு.

computer flicks : கணினி படங்கள் : கணினி தயாரிக்கும் திரைப்படங்கள்.

computer floor : கணினி தரை : ஒரு பொய்த்தரை. உண்மையான தரை அளவிலிருந்து 25-30 செமீ-க்கும் மேலாக இருக்கும். கணினி தரைதான் கணினி இருப்பிடத்தில் வசதியாகக் கம்பிகள் போடவும், தடையில்லாமல் இயங்கும் சூழ்நிலையையும் உருவாக்கும்.

computer game : கணினி விளையாட்டு : விளையாடுபவரின் உடற்செய்கைகளை உள்ளீட்டுத் தகவலாகக் கொண்டுள்ள உரையாடல் வகை மென்பொருள் அல்லது நிறுவனப் பொருள். இதன் வெளியீடு உரையாடல் முறையிலான வரைபட முறை காட்சியாக இருக்கும்.

computer generations : கணினி தலைமுறைகள் : ஐந்து வேறுபட்ட கால இடைவெளிகளில் மின்னணு கணினிகள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொன்றும் அதன் உள்ளீட்டுப் பொருளைப் பொறுத்தவை. வெவ்வேறு தொழில் நுட்பத்தைச் சார்ந்து உருவானவை. கணிப்பின் வரலாற்று முன்னேற்றத்தின் முக்கிய நிலைகள்.

computer graphicist : கணினி வரைகலைஞர் : கணினி வரைகலை அமைப்புகளைப் பயன்படுத்தும் வல்லுநர். படங்கள் அல்லது ஓவியங்கள் தோன்றுவதைக் குறிப்பிடும் பொதுச் சொல். எழுத்துகள் மற்றும் எண்களைப் பயன்படுத்துவதிலிருந்து வேறுபட்டதே வரைகலை.

Computer-Integrated Manufacturing : CIM : சிஐஎம் கணினி - ஒருங்கிணைப்பு உற்பத்தி முறை : Computer Integrated Manufacturing என்பதன் குறும்பெயர். தொழிற்சாலை தானியங்கி மயமாதலில் கணினியைப் பயன்படுத்துவதன் இலக்குகள் எளிமைப்படுத்துதல், தானியங்கி மற்றும் உற்பத்தி செயல்முறைகளையும் பிற உற்பத்தித் தன்மைகளையும் ஒருங்குபடுத்துதலாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒட்டுமொத்தக் கோட்பாடு.

computer independent language : கணினி சாராத மொழி : பேசிக், கோபால், ஃபோர்ட்ரன், பாஸ்கல், பிஎல்/1 போன்ற மொழிகளைப் பொருத்தமான தொகுப்பிகளுடன்

எந்தக் கணினியிலும் பயன்படுத்த லாம். அத்தகைய பயன்பாட்டுக்கு வடிவமைக்கப்பட்ட உயர்நிலை மொழி.

Computer Industry : கணினித் தொழில்: கணினி வன்பொருள், மென் பொருள் மற்றும் கணினி தொடர்பான பணிகளை அளிக்கும் நிறுவனங்கள், வணிகர்களைக் கொண்ட தொழில்.

computer information system : CIS : கணினி தகவல் அமைப்பு (சிஐஎஸ்) : Computer Information System என்பதன் குறும்பெயர். வன்பொருள், மென் பொருள், தகவல், மக்கள் மற்றும் ஆதரவு அமைப்புகளை ஒருங் கிணைத்து செயலாக்கம், சேமிப்பு, உள்ளீடு மற்றும் வெளியீடு ஆகி யவைகளை உள்ளிட்டு ஒருங்கி ணைந்த தொடர்பணிகளைச் செய்தல்.

Computer Input Microfilm : CIM : (சிஐஎம்) கணினி உள்ளீடு நுண் திரைப்படம் : நுண் திரைப்படம் அல் லது நுண் அட்டையின் உள்ளடக்கங் களை நேரடியாகக் கணினிக்குள் சேர்ப் பதற்காகப் பயன்படுத்தப்படும் உள் ளீட்டைக் கொண்ட தொழில் நுட்பம்.

Computer Integrated Manufacturing : CIM : (சிஐஎம்) கணினி ஒருங்கி ணைந்த உற்பத்திமுறை ; Computer Integrated Manufacturing என்பதன் குறும்பெயர். முழுவதும் தானியங்கி யாகச் செயல்படும் தொழிற்சாலை பற்றிய கோட்பாடு. இதில் காட்காம் அமைப்பு அனைத்து உற்பத்தி செயல் முறைகளையும் கட்டுப்படுத்தி ஒருங் கிணைக்கிறது. சிம் மூலம் உற்பத்தி வடிவமைப்பாளர்களும், பொறியாளர் களும் பயன்படுத்தும் அதே தகவல் தளத்தையே கணக்காய்வாளர்களும், மேற்பார்வையாளர்களும், பட்டிய லிடுபவர்களும், உற்பத்தி திட்டமிடு பவர்களும் பயன்படுத்துவார்கள்.

Computer Interface Unit : CIU : (சிஐயு) கணினி இணைப்பு அலகு : Computer Interface Unit என்பதன் குறும்பெயர். கணினியுடன் வெளிப் புறச் சாதனங்களை இணைப்பதற்குப் பயன்படும் சாதனம்.

Computerized Axial Tomography : CAT : (கேட்)கணினி மய ஆக்சியல் டோமோக்ராபி : Computerized Axial Tomography என்பதன் குறும்பெயர். கணினி கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடுகதிர் (எக்ஸ்ரே) தொழில் நுட்பம். இது ஒரு இடத்தில் படத்தை குறிப்பிட்ட உருவத்தின் வழியாக ஆழத்தில் காட்டும். அப் படத்தின் விவரங்களைக் கொண்டு வரவும், மாறும் திசைகளில் உருவத்தின் மூலம் செல்லும் ஊடுகதிர் களைப் பதிவு செய்தல் மற்றும் உரு வத்தின் அமைப்பைப் போன்ற ஒரு தோற்றத் தினை உருவாக்குதல் ஆகியவற்றைச் செய்வதற்கு கணினி பயன்படுகிறது.

computerization : கணினி மயமாதல் : 1. இதற்கு முன்பு வேறு முறைகளில் செய்த செயலை கணினியைப் பயன் படுத்திச் செய்தல். 2. பரவலாக ஏற்றுக் கொண்டு கணினியைப் பயன் படுத்தி சமுதாயத்தின் உண்மையான தோற்றத்தை மாற்றுதல்.

computerized database : கணினி மய தகவல் தளம் : ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகள், சார்ந்திருக்கின்ற, துல்லியத்துக்கும், கிடைத்தலுக்கும், நம்பிக்கைக்கும் உரியதான கணினி யாக்கப்பட்ட கோப்புகள்.

computerized game playing : கணினி மய ஆட்டம் ஆடுதல் : கணினிகளை நுண்கணினிகள், சிறு கணினிகள், பெருமுகக் கணினிகள் பலதரப்பட்ட விளையாட்டுகளை ஆடுவதற்கு ஆணைத்தொடரமைத்து, பொழுது

போக்கிற்காகப் பயன்படுத்துதல். டிக்-டாக் டோ, பேக்மேன், பிரேக் அவுட், ஸ்டார் ரைடர்ஸ், ஸ்பேஸ் வார், பிளாக் ஜாக், ஹேங்மேன், செஸ், செசர்ஸ், போன்ற பல விளை யாட்டுகளை ஆட கணினி பயன் படுத்தப்படுகிறது.

computerized games : கணனி மய விளையாட்டுகள் : பலவகையான புகழ்பெற்ற பொழுது போக்கு விளையாட்டுகளை விளையாட கணினிகளைப் பொழுதுபோக்குக் காக பயன்படுத்துவது.

computerized jargon : கணினி குழூஉச் சொல் : கணினி அறிவிய லுடன் தொடர்புள்ள தொழில்நுட்பச் சொற்கள்.

computerized mail : கணினிமய அஞ்சல் : கணினி கருவி மூலமாக வணிக அமைப்புகளுக்கும், வீடு களுக்கும் மின்னணு வடிவத்தில் அஞ்சல் அளிக்கும் தொழில்நுட்பம்.

computerized numerical control : கணினி மய எண் கட்டுப்பாடு

computer kit : கணினி கருவிப் பெட்டி : கருவிப்பெட்டி வடிவில் நுண் கணினி, கணினி கருவிப் பெட்டியை வாங்குபவர்கள், மாதிரி விமானத்தையோ அல்லது ஸ்டீ ரியோ ஒலி அமைப்பையோ உருவாக் குவது போல், நுண்கணியை உரு வாக்க முடியும். பள்ளிகளில் கணினி வடிவமைப்பு சொல்லித் தருவதற் கும், கணினி பொழுது போக்கினை பழக்கமாகக் கொண்டவர்களுக்கும் கணினி கருவிப்பெட்டி புகழ்பெற்று விளங்குகிறது.

computer leasing company : கணினியை வாடகைக்குத் தரும் நிறு வனம் : கணினி உற்பத்தியாளரிட மிருந்து வாங்கிய கணினிக் கருவியை வாடகைக்கு விடுவதில் சிறப்பாக ஈடுபட்டுள்ள நிறுவனம்.

computer letter : கணினி எழுத்து : ஒரு சொல் செயலாக்க அமைப்பு உரு வாக்கும் தனிப்பட்ட எழுத்து வடி வம் அல்லது ஒரு தனி எழுத்து வடிவ ஆணைத்தொடர்.

computer literacy : கணினி எழுத் தறிவு : சிக்கல்களைத் தீர்க்க கணினி களைப் பயன்படுத்துவது என்ற பொது அறிவும், வன்பொருள் மற் றும் மென்பொருளின் செயல்பாடு பற்றிய பொது விழிப்புணர்வும், கணினிகளால் ஏற்படும் சமுதாய மாற்றங்கள் பற்றிப் புரிந்து கொள்ளு தலும் சேர்ந்து கணினி சார்ந்த சமு தாயத்தில் வாழ்வது பற்றிய புரிந்து கொள்ளுதல்களையும், அறிவுக் கருவிகளையும் உருவாக்கி உள்ளது. தொழில்நுட்ப அறிவு கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. கணினி சூழ்நிலையில் ஒரு பயனாளராக இயல்பாக செயல்படமுடிவதே கணினி எழுத்தறிவு பெற்றிருப்ப தாகும்.

Computer Managed Instruction : CML : (சிஎம்ஐ) : Computer Managed Instruction என்பதன் குறும்பெயர். பதிவேடு காக்கும் மேலாளராகவும், கற்றுத் தருவதை வரையறுப்பவராக வும் கணினியைப் பயன்படுத்தி கல்விக்காக கணினிகளைப் பயன் படுத்தல்.

computer museum : கணினி கண் காட்சி : அமெரிக்காவில் மசாசூ செட் சின் போஸ்டனில் உள்ள கணினி வரலாறு உரைக்கும் ஆவணக் காப் பகம். இதில் பல ஆரம்ப கால கணினி அமைப்புகளும், கணினி முன்னோடிகளின் ஒலிநாடா குறிப் புக்கொண்ட தொகுப்பும் உள்ளது.

computer music : கணினி இசை : இசை அமைத்தல், அல்லது ஒலி ஏற்படுத்துதலில் ஏதாவது ஒரு நிலையில் கணினிக் கருவியைப் பயன்படுத்துதல்.

computer network : கணினி கட்டமைப்பு; கணினி இணையம் : ஒன்றோடொன்று இணைப்பு ஏற்படுத்திக் கொண்டுள்ள இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட கணினி அமைப்புகள், முனையங்கள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகளைக் கொண்ட வளாகம்.

computernik : கணினியாா் : கணினிகளைப் பயன்படுத்துவதில் அதிக நேரத்தைச் செலவழிக்கும் ஒரு நபர்.

computer numeric control : கணினி எண்முறைக் கட்டுப்பாடு : ஒரு எந்திரத்தைக் கட்டுப்படுத்த காட்/காம் மூலம் உருவாக்கப்பட்ட எண் கட்டுப்பாட்டு ஆணைகளைச் சேமிக்க கணினியைப் பயன்படுத்தும் ஒரு எந்திரக் கருவி; கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பம்.

computer on a chip : ஒரு சிப்பின் மீது கணினி : ஒரு ஒருங்கிணைந்த மின் சுற்று சிப்புவின் மீது அமைக்கப்படும் முழு நுண் கணினி.

computer operations : கணினி செயல்முறைகள் : தகவல்களை அன் ாட முறையில் திரட்டுதல், உற்பத்தி செய்தல், விநியோகித்தல், பராமரித்தல் ஆகியவற்றைச் செய்யும் கணினியின் பகுதி.

computer operations manager : கணினி செயல்முறை மேலாளா் : ஒரு நிறுவனத்தில் கணினி செயல்பாடுகளை மேற்பார்வை செய்யும் நபர். பணியாளர்களை நியமித்தல் கணினி செய்யவேண்டிய வேலைகளை முடிவு செய்தல் ஆகியவற்றைச் செய்யப் பொறுப்பேற்று இருப்பவர்.

computer organisation : கணினி ஒருங்கிணைப்பு : பின்வரும் துறைகளைக் கையாளும் கணினி அறிவியல் பிரிவு. கணினி சிபியு ஒருங்கிணைப்பு ஆணைகள், முகவரியமைக்கும் முறைகள், சேமித்த ஆணைத் தொடர் கோட்பாடு, ஆணைத்தொடர் இயக்கம், உள்ளீடு/வெளியீடு ஒருங்கிணைப்பு, கைகுலுக்குதல், நினைவகம், மாய நினைவகம், நுண் செயலகங்கள் போன்றவற்றின் செயல்படும் கூட்டங்கள்.

Computer Output Microfilm : COM : கணினி வெளியீடு நுண்திரைப் படம் : நுண் திரைப்படம் அல்லது நுண் அட்டைகளின் மீது கணினி வெளியீடுகளைப் பதிவு செய்யும் தொழில்நுட்பம். நேர்முக வெளியீடுகளான நுண்திரைப்படத்திலிருந்தும், ஆணை முக வெளியீடுகளை காந்த நாடாவிலிருந்தும் இந்த நுட்பப்படி பதியலாம்.

computer phobia : கணினி அச்சம் : கணினி பயன்பாடு, குறிப்பாக எந்திரன் மற்றும் தானியங்கிச் சாதனங்களின் பயன்பாடு குறித்து உளவியல் சார்ந்த அச்சம்.

computer process control system : கணினி செயல்முறைக் கட்டுப்பாடு அமைப்பு : லாப நோக்கில் உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்ய மேற்கொள்ளப்படும் செயல்முறையையும் அதன் மாற்றங்களையும் கட்டுப்படுத்தும் செயல்முறையைக் கண்காணிக்கும் சென்சார்களுடன் இணைக்கப்பட்டுள்ள கணினியைப் பயன்படுத்தும் அமைப்பு.

computer processing cycle : கணினி செயலாக்கச் சுழற்சி : *1.* ஒரு சிக்கலைத்

தீர்க்க கணினியைப் பயன்படுத்து வதில் உள்ள நிலைகள், பேசிக் அல்லது போர்ட்ரான் போன்ற ஆணைத் தொடர் மொழியில் ஆணைத்தொடர் எழுதுவது. ஆணைத்தொடரை கணினியில் உள்ளீடு செய்து தொகுத்து, ஆணைத்தொடரைச் செயலாக்குவது. 2. அடிப்படைச் செயலாக்கச் சுழற்சியில் உள்ளீடும் / வெளியீடும்.

computer programme : கணினி ஆணைத்தொடர் : ஒரு தகவல் செயலாக்கப் பணிக்குத் தேவையான தொடர்ச் செயல்களை முறையாக எடுத்துரைப்பது. கணினியால் செயலாக்கம் செய்யத்தக்க வகையில் எண் தகவல்களை ஆணைத்தொடர் அமைப்பாளர் உருவாக்குவார். ஒரு குறிப்பிட்ட செயல்முறை அல்லது பணியைச் செய்யுமாறு தொடர் ஆணைகளையும், சொற்றொடர்களையும் அமைத்தல்.

computer programmer : கணினி ஆணைத்தொடர் அமைப்பவர் : ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யுமாறு கணினிக்கு ஆணையிடும் ஆணைத் தொடர்களையும், ஆணைகளையும் வடிவமைத்து, எழுதி சோதித்துத் தருவதை வேலையாகக் கொண்டுள்ளவர்.

computer revolution : கணினிப் புரட்சி.

computer science : கணினி அறிவியல் : கணினிகளை வடிவமைத்து பயன்படுத்துவது பற்றிய அனைத்து வேலைகளையும் உள்ளடக்கிய அறிவுப் புலம். பல கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பட்டப் படிப்பாக அளிக்கப்படுகிறது.

computer security : கணினிப் பாதுகாப்பு : அனுமதியில்லாமல் பயன்படுத்துவதையும், தவறாகப் பயன்படுத்துவதையும் தடுத்து கணினி மூலாதாரங்களைப் பாதுகாப்பது. தற்செயலான அல்லது வேண்டுமென்றே ஏற்படும் சேதம், மாற்றம், வெளியிடல் போன்றவற்றிலிருந்து தகவல்களைப் பாதுகாப்பது.

computer select : கணினித் தேர்வு : கணினி நூலகத்திலிருந்து சிடிரோம் சேவை. இது முழுச்செய்திக் கட்டுரைகளும், சுருக்கங்களும் 250-க்கும் மேற்பட்ட கணினி தொடர்பான பருவ இதழ்களிலிருந்து வழங்குகிறது.

computer services : கணினிப் பணிகள் : தகவல் செயலாக்கம், (காலப் பங்கீடு, தொகுதி செயலாக்கம், மென்பொருள் வளர்ச்சி மற்றும் ஆலோசனைப் பணிகள்.

computer services company : கணினிப் பணிகள் நிறுவனம் : பிற தனிநபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் கணினி சேவைகளை அளிக்கும் நிறுவனம்.

computer simulation : கணினி போலச் செய்தல் : உண்மையான அல்லது கற்பனையான அமைப்பைக் குறிப்பிடுதல்; கணினி ஆணைத் தொடரில் இருந்து உருவாக்கப்படுவது.

computer specialist : கணினி வல்லுநர் : ஒரு தனிப்பட்ட ஒப்பந்தக்காரராகவோ அல்லது ஆலோசகராகவோ கணினியைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு கணினி சேவைகளை அளிக்கும் ஒரு ஆணைத் தொடர் அமைப்பவர் அல்லது அமைப்பை ஆராய்பவர் போன்ற ஒரு தனி நபர்.

computer store : கணினி கடை : ஒரு முழு கணினி அமைப்பையோ அல்லது சில உதிரிப்பாகங்களையோ வாடிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கக்

கூடிய சில்லரைக்கடை. இந்தக் கடைகளில் மென்பொருள் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களும் கிடைக்கும். பெரிய கணினி கடையில் பல வகையான நுண் கணினி அமைப்புகள் கிடைக்கும்.

computer system : கணினி அமைப்பு; கணினி முறைமை : கணினி வன்பொருள், மென்பொருள் மற்றும் தகவல்களை பயனுள்ள தகவலாக செயலாக்கம் செய்யும் மனிதர்களை உள்ளடக்கிய அமைப்பு.

computer terminal : கணினி முனையம் : கணினியுடன் தொலைத் தகவல் தொடர்பு இணைப்புகள் ஏற்படுத்தும் உள்ளீட்டு வெளியீட்டுச் சாதனம். அதனிடம் மையச் செயலகம் இருந்தால் அது ஒரு அறிவாளி முனையம் என்றும், இல்லையென்றால் ஊமை முனையம் என்றும் அழைக்கப்படுகிறது.

Computer Tomographic : CT : (சிடி) கணினி ஊடுகதிர் உள்தளப்படம் : என்பதன் குறும்பெயர்

computer town : கணினி நகரம் : கணினி எழுத்தறிவையும், சிறிய கணினிகளைப் பொதுமக்கள் அணுகுவதையும் ஊக்குவிக்கும் கலிபோர்னியா நிறுவனம்.

computer type setting : கணினி எழுத்தச்சு அமைப்பு : உள்ளீட்டு ஊடகத்தைச் செயலாக்கம் செய்து இருபுற ஓரம் அமைத்து, ஹைபன் வடிவமைத்து வெளியீட்டு ஊடகத்தை ஏற்படுத்தும் சிறப்பு நோக்கக் கணினியைப் பயன்படுத்துதல்.

computer user : கணினி பயனாளர் : ஒரு கணினி அமைப்பையோ அல்லது அதன் வெளியீட்டையோ பயன்படுத்தும் ஒரு நபர்.

computer users group : கணினி பயனாளர் குழு : ஒரு கணினி அல்லது ஒரு குறிப்பிட்ட கணினி உற்பத்தியாளரின் ஒரு வகைக் கணினிகளில் ஆணைத் தொடர்களை உருவாக்கி தங்களது அறிவினை பங்கிட்டுக் கொள்ளும் உறுப்பினர்களைக் கொண்ட குழு. பெரும்பாலான குழுக்கள் கூட்டங்களை நடத்தியும், வணிகக் கருவிகளைப் பரிமாற்றங்கள் செய்தும், ஆணைத்தொடர்களைப் பங்கிட்டும், தகவலை பரிமாற செய்தி அறிக்கைகளை விநியோகித்தும் செயல்படுபவர்கள்.

computer utility : கணினி பயன்பாடு : கணினி திறனைப் பயன்படுத்தும் சேவை. நேரப்பங்கீட்டு கணினி அமைப்பையே இது பொதுவாகக் குறிக்கும். பயனாளருக்கு ஆணைத் தொடரும், தகவல்களும் கிடைக்கும். மையச் செயலகத்தில் உள்ள ஒருவரது சொந்த ஆணைத் தொடர்களையோ அல்லது வேறிடத்திலிருந்து பெற்று கணினியில் ஏற்றியோ பயன்படுத்தலாம். சேவையில் உள்ள சில தகவல்களையும், ஆணைத்தொடர்களையும் அனைவரும் பயன்படுத்தலாம். பிறவற்றில் உரிமை இருப்பதால் அணுகுவதற்குத் தடை உள்ளது. விவர தகவல் தொடர்புகளின்துணை அமைப்புகள் மூலம் கணினி பயன்பாட்டை அணுக முடியும்.

computer vendor : கணினி விற்பவர் : கணினி கருவிகளை உற்பத்தி செய்வது, விற்பது அல்லது பணிகளை அளிப்பதில் ஈடுபட்டுள்ள நிறுவனம்.

computer virus : கணினி நச்சு நிரல் (வைரஸ்) : வேறொரு ஆணைத் தொடர் அல்லது தகவலுடன் தன்னை இணைத்துக்கொள்ளும்

ஆணைத்தொடர். ஒரு நச்சுநிரலின் (வைரஸ்) சாதாரண நோக்கம் கணினி அமைப்பைப் பீடித்துக்கொண்டு தகவல் செயலாக்கத்தைத் தடுப்ப தாகும். பீடித்த ஆணைத்தொடர் இயக்கப்பட்டவுடன் பீடித்த மென் பொருள் தேடி அது பரவி இதற்கு முன்பு "தூய்மை"யாக இருந்த மென் பொருளுடன் தன்னை இணைத்துக் கொள்ளும்.

computer vision : கணினிப் பார்வை : பார்த்தல், புரிந்து கொள்ளல் ஆகிய வசதிகளை கணினி பெற உதவும் அறிவியல்.

computer word : கணினிச் சொல் : ஒரு தனி முகவெண்ணிடக்கூடிய சேமிப்பு இடத்தில் இடம்பெற்று, கணினி யால் தனி சாதனமாகக் கருதப்படும் துண்மிகள், எட்டியல் எழுத்துகளின் தொடர்.

Computer Interface Unit : CIU : (சிஐயு) கணினியின் இடைப்பரிமாற்றச் சாதனம் : வெளிப்புறச் சாதனத்துடன் கணினியை இணைக்கப் பயன்படும் கருவி.

computing : கணித்தல் : தகவல்களை செயலாக்கம் செய்ய கணினியைப் பயன்படுத்தும் செயல். பயன்படுத்து வோர் விரும்புவதை கணினியைச் செய்யுமாறு செய்கின்ற கலை அல்லது அறிவியல்.

computing devices : கணிக்கும் சாதனம்; கணிப்புக் கருவி.

COM recorder : காம் பதிவான் : கணினி வெளியீட்டை ஒளிப்பட உணர்வு திரைப்படத்தில் நுண் வடிவில் பதிவு செய்யும் சாதனம்.

comsat : காம்சாட் : Communication Satellite என்பதன் குறும்பெயர்.

concatenate : சேர்த்தல் : இரண்டு அல்லது மேற்பட்ட எழுத்துச் சரங் களை ஒரே எழுத்துச் சரமாகச் சேர்த் தல் அல்லது காட்சித்திரையில் ஒரு வரியை அடுத்தவரியில் சேர்த்தல். Decatenate - சுடு மாறானது.

concatenated data set : சேர்த்த தகவல் தொகுதி : தருக்க முறையில் தகவல் தொகுதியைத் திரட்டுதல்.

concatenated key : சேர்க்கப்பட்ட விசை : ஒரு பதிவேட்டை அடை யாளம் காட்ட ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்களை ஒன்றாகச் சேர்த்தல்.

concatenated operator : தொடர் வரிசைப்படுத்தலை இயக்குபவர் : ஒரு ஆணைத்தொடர் மொழியில் உள்ள குறியீடு.

concatenation concentrator : தொடர் வரிசைப்படுத்தலில் கருத்தூன்றல் : ஒரு மிகுவேக சாதனத்தின் பல குறை வேக சாதனங்கள் பயன்படுத்த அனு மதிக்கும் சாதனம். குறைந்த வேக முள்ள கணினிகளில் இருந்து வரும் தகவலை ஏற்றுக் கொண்டு அதிக வேகமுள்ள கணினிக்குத் தரும் ஒரு சிறப்பு நோக்கக் கணினி.

concentrator : ஒன்றுபடுத்தி; மையப் படுத்தி : ஒரு தனியான அதிவேக தக வல் தொடர்புக் கம்பியினைப் பயன் படுத்தி எண்வேக சாதனங்களை மெதுவாகச் செலுத்தும் சாதனம். பல் பயன்கள் அமைப்பு என்றும் அழைக் கப்படுகிறது.

conceptual tool : கோட்பாட்டுக் கருவி : பொருள்களுக்குப் பதிலாக எண்ணங்களுடன் பணியாற்றும் கருவி.

concordance : சொல் தொகுதி விளக் கப் பட்டியல் : ஒரு ஆவணத்தில் உள்ள சொற்கள், தொடர்களின் வரிசைப் பட்டியல். குறிப்பிட்ட சொற்களும்

தொடர்களும் எங்கே உள்ளன என்பதைக் குறிப்பிடுகிறது.

concurrent : ஒரே நேரத்தில் : ஒரு குறிப்பிட்ட நேர இடைவெளிக்குள் இரண்டு அல்லது கூடுதல் நிகழ்ச்சிகள் அல்லது நடவடிக்கைகள் நடைபெறுவது பற்றியது.

concurrent access : உடனிகழ்வு அணுகல்.

concurrent processing : ஒரே நேரத்தில் செயலாக்கம் : ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் இரண்டு அல்லது மேற்பட்ட தகவல் செயலாக்கப் பணிகளைச் செய்தல்.

concurrent programme execution : ஒரே நேரத்தில் ஆணைத்தொடர் செயல்படுத்தல் : ஒரே நேரத்தில் இரண்டு அல்லது பல ஆணைத் தொடர்களை செயல்படுத்தல்.

concurrent programming : ஒரே நேர ஆணைத்தொடர் அமைத்தல் : பல பணிகளை ஒரே குறிப்பிடும் ஆணைத் தொடர்களை உருவாக்குதல்.

concurrency : ஒரே நேரத்தில் ஏற்றுக் கொள்ளல் : பொருள் முன் மாதிரியின் அடிப்படைத்தன்மைகளில் ஒன்று. பொருள் சார்ந்த ஆணைத்தொடர் அமைத்தலில் இயங்காத பொருள் ஒன்றிலிருந்து இயங்கும் பொருளை வேறுபடுத்துதல்.

concurrency control : ஒரே நேர இயக்கக் கட்டுப்பாடு : டிபிஎம்எஸ் ஸில் தகவல் தளத்திற்கு ஒரே நேர அணுகலை நிர்வகித்தல். ஒரே பதிவேட்டை ஒரே நேரத்தில் இரண்டு பயனாளர்கள் திருத்துவதைத் தடுக்கிறது. பரிமாற்றங்கள் மாற்று ஏற்பாட்டுக்கும், மீண்டும் பெறுவதற்கும் வரிசைப் படுத்துவது தொடர்பானது.

concurrent language : ஒரே சமயத்தில் (இயங்கும்) மொழி : பல்வேறு பொருள்களை ஒரே நேரத்தில் இயக்குவதற்கு உதவும் மொழி. இணைக்கட்டுமான அமைப்பு வன் பொருள்களிலேயே இது அதிகம் ஏற்படும்.

concurrent object : ஒரே நேரத்திய பொருள் : கட்டுப்பாட்டின் பல இயக்கங்களுக்கும் ஈடு கொடுக்கும் ஒரு பொருள்.

concurrent operation : ஒரே நேரத்திய இயக்கம் : நேரப்பங்கீட்டுக்கு அடிப்படையாக ஒரு குறிப்பிட்ட நேர இடைவெளியில் இரண்டு அல்லது மேற்பட்ட ஆணைத்தொடர்களை ஒரே நேரத்தில் இயக்குதல்.

condensed : சுருக்கப்பட்ட : தரமான எழுத்துகளின் அகலத்தில் ஏறக்குறைய 60% மட்டுமே அகலமுடைய அச்சு. சுருக்கப்பட்ட பைகாவில் 2.5 செ.மீ-க்கு 16 எழுத்துகள் மட்டுமே இருக்கும்.

condensed print : சுருக்கப்பட்ட அச்சு : வழக்கமான எழுத்துகளை விட (செங்குத்தாகவோ அல்லது குறுக்குவாட்டிலோ) சிறியதாக உள்ள அச்சிட்ட எழுத்துகள்.

condition : நிபந்தனை; சூழ்நிலை : 1. குறிப்பிட்ட சூழ்நிலைகள். 2. இருக்கும் நிலைமை.

condition code : நிபந்தனைக் குறியீடு : ஆணைகளைச் செயல்படுத்துவது தொடர்பான கொண்டுசெல், கடன்வாங்கு, நிரம்பி வழி போன்ற சில ஆணைத்தொடர் நிபந்தனைகள்.

conditional branching : நிபந்தனைப்படி கிளை பிரிதல் : குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் வேறு வேறு ஆணைத் தொடர்களை செயல்

படுத்த வைக்கும் கட்டளை அமைப்பு.

conditioinal expression : நிபந்தனைக் கோவை.

conditional jump : நிபந்தனை தாண்டு ஆணை : குறிப்பிட்ட விதிமுறைகள் பொருந்தி வருமானால் "தாண்டு தல்" ஏற்படுத்தும் ஆணை.

conditional paging : நிபந்தனை பக்க மிடல் : வரிகளின் ஒரு குறிப்பிட்ட பகுதி. ஒரு பக்கத்தின் மீதமுள்ள இடத்துடன் முழுமையாகப் பொருந் தாவிட்டால் அடுத்த பக்கத்துக்கு மாற்றும் சொல்செயலாக்க அம்சம்.

conditional statement : நிபந்தனைச் சொற்றொடர் : ஒரு சொல்முறையில் குறிப்பிட்ட நிபந்தனை நிறைவேற் றப்பட்டால் மட்டுமே செயல்படுத் தப்படுகின்ற சொற்றொடர்.

conditional transfer : நிபந்தனை மாற்றம் : பின்பற்றப்படுகின்ற ஆணை களின் வரிசையிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்துகின்ற ஆணை. இயக்கத் தின் விளைவைப் பொறுத்து, ஒரு பதிவு அல்லது ஒரு சுட்டியின் ஏற்பாடுகளில் மாற்றம் அடைதல்.

condition entry : நிபந்தனை நுழைவு : முடிவு பட்டியலின் நான்கு பிரிவு களில் ஒன்று. நிபந்தனைக்குப்பின் அனைத்துக் கேள்விகளுக்கும் விடை யளிக்கிறது.

conditioning : நிபந்தனையிடல் : ஒரு குரல் ஒலிக்கற்றை அனுப்புக் கம்பி யில் தகவல் அனுப்புதல் தன்மை களை முன்னேற்றமடையச் செய்தல். கம்பி பெரிதாக்கிகள் தன்மைகளை, பெரிதாக்கு முறையில் திருத்துதல் மூலம் இது செய்யப்படுகிறது.

condition stub : நிபந்தனைப்பொதிவு: முடிவு பட்டியலின் நான்கு பிரிவு களில் ஒன்று. ஒரு செயல் தொட ரினை முடிவு செய்ய கவனிக்கப்பட வேண்டிய அனைத்து, காரணிகளை யும் (மாற்றுகளையும்) விவரிக்கிறது.

conductor : கடத்தி : மின்சக்தியை எடுத்துச் செல்லும் பொருள். Insulator - க்கு எதிர்ச்சொல்

condensed type : சுருக்கப்பட்ட அச் செழுத்து : ஒரு அங்குல வரிசையில் அதிக எழுத்துகள் பொருந்தும் வண்ணம் அகலத்தில் சுருக்கப்பட்ட அச்செழுத்து.

conditional : நிலைசார்ந்த.

conditional parameters : கட்டுப் பாட்டு உருபுகள்.

conditional replace : நிபந்தனை மாற் றீடு : ஒரு சொல் செயலாக்கப் பணி. ஒரு குறியிட்ட பொருளைக் காணும் ஒவ்வொரு தடவையும் அதை மாற்ற வேண்டுமா என்று அது கேட்கும்.

condition code : நிபந்தனைக் குறி யீடு : கொண்டு செல், கடன் வாங்கு, பொங்கிவழி போன்ற குறிப்பிட்ட ஆணைத்தொடர் நிலைகளின் குழு வைக் குறிப்பிடுகிறது.

condition portion : நிபந்தனைப் பகுதி.

conducting : மின் கடத்தல்.

conducting state : மின்கடத்தும் நிலை.

CONDUIT : காண்ட்விட் : கல்வி-மென் தொடரினை வெளியிடுபவர். சோதனை பொட்டலத் தொகுதிகளை யும் ஆய்ந்து, கல்வி அளிக்கும் கணினி ஆணைத் தொடர்களையும், தொடர்பான அச்சிடப்பட்ட பொருள் களையும் விநியோகிக்கிறது.

conference : மாநாடு : தொலைபேசி மூலம் ஒரு மாநாடு அமைத்தல்.

conference tree : மாநாட்டு மரம் : தலைப்புகள் மற்றும் பயனாளர்

குறிப்புகளுடன் அமைக்கப்பட்ட ஒரு வகையான செய்தி அறிக்கை. அதன் ஒவ்வொரு கிளையும் ஒரு பெரிய தலைப்பு. கிளை நீள்வதற் கேற்ப அதைப் பயன்படுத்துவோர் மேலும் விரிவாக்கலாம்.

confidentiality : அந்தரங்கத் தன்மை : தனிப்பட்ட அல்லது இரகசிய தகவலை அனுமதியில்லாமல் அணுகாமல் இருப்பதற்கான பாதுகாப்பின் தரம்.

configure : சேர்த்தல் ; செயல்படத் தயார் செய்தல் : சில குறிப்பிட்ட வன்பொருளையோ அல்லது மென் பொருளையோ ஒன்று சேர்த்து ஒரு அமைப்பாக்குதல். அதன் ஒவ்வொரு பகுதிகளும்சரிசெய்யப்பட்டு மொத்தமாக ஒன்றாக இயங்கச் செய்தல். பிற மென்பொருள் அல்லது வன்பொருளோடு ஒத்திசைவாய் இயங்கும் வண்ணம் ஒரு மென்பொருள் அல்லது வன்பொருளைத் தயார் செய்தல்.

configuration : சேர்க்கப்பட்டது : ஒரு அமைப்பாக இயங்கும் வகையில் ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தி சேர்க்கப்பட்ட எந்திரங்கள் மற்றும் ஆணைத்தொடர் அமைக்கப் பட்டவை. தகவல் செயலாக்க அமைப்பு அல்லது வன்பொருளில் உள்ள பொருள்களின் வடிவமைப்பு அல்லது வரைபடம்.

configuration file : (கணினி) அமைப் புக் கோப்பு : ஏற்றும் செயல்முறையின்போது மட்டுமே பெரும்பாலும் படிக்கும் ஒரு சிறப்புக் கோப்பு. கணினியின் மூலாதாரங்களை, குறிப்பாக நினைவகத்தை எவ்வாறு ஒருங்கமைத்து பிரிக்கப்பட்டுள்ளது என்பதை வரையறுப்பது.

configuration management : சேர்த்தல் மேலாண்மை : ஒரு உற்பத்திப் பொருளின் உற்பத்திக்காலம் முழுமையும் மற்றும் இயக்க வாழ்நாள் முழுமைக்குமாக கணக்கெடுத்து, கட்டுப் படுத்தி, திட்டமிட்டு வடிவமைத்தல்

configure : உருவாக்கு.

conjuct : இணை : ஒரு இணைப்பின் பல துணைச் சிக்கல்களில் அல்லது நிலைகளில் ஒன்று.

connected graph : இணைந்த வரை படம் : ஒரு வரைபடத்தின் தனி முனையிலிருந்து தொடர்ச்சியான விளிம்புகள் வழியாக வேறு ஏதாவது ஒரு முனைக்கு நகர்த்தி உருவாக்கப் படும் வரைபடமுறை.

connecting cable : இணைப்புக் குழாய் : இரண்டு கருவிகளுக்கிடையில் மின் துடிப்புகளை மாற்ற உதவும் குழாய்.

connection : இணைப்பு.

connector : இணைப்பி : *1.* இரண்டு குழாய்களுக்கும் அல்லது ஒரு குழாய்க்கும் வேறொரு பொருள் அல்லது இணைப்புக்கும் இடையில் மின்சார அல்லது எந்திர சந்திப்பை ஏற்படுத்தும் ஒரு பொருத்து சாதனம். 2. மின்சார குழாய்க்கும், கம்பி இறுதிகளுக்கும் விரைவான இணைப்புகள் அல்லது பிரிப்புகளை அளிக்கும் சாதனம்.

connector symbol : இணைப்புக் குறியீடு : ஓட்டத்தின் விளக்குக் கோட்டில் சந்திப்புப் பகுதியைக் குறிப்பிடும் ஒரு வரைபடக் குறியீடு. சில அடையாளப்படுத்திகளைக் கொண்டதாக ஒரே பக்கத்தில் ஓடும் கோடுகளின் பிரிந்துபோன பாணிகளை இணைக்கும் சிறிய வட்டம்.

ஒரு ஓடுபடத்தின் பல்வேறு பக்கங்களின் ஓட்டத்தினை இணைக்கும் ஒரு ஐங்கோண வடிவம்.

connect node : இணைப்பு முறை : கணினி உதவிடும் வடிவமைப்பில் வரிகள் அல்லது சொற்பகுதிக்கான இணைப்பு முனை.

connect time : இணைப்பு நேரம் : ஒரு கணினி அமைப்புடன் முனையத்தில் உள்ள ஒருவர் எவ்வளவு நேரம் இணைப்பு வைத்திருந்தார் என்பதைக் குறிப்பிடுவது.

connection : இணைப்பு : ஒரு குழாய் அடிக் கட்டகம் அல்லது ஒரு பகுதியுடன் இணைப்பு ஏற்படுத்தும் மின்சார அல்லது எந்திர இணைப்பு வழங்கும் பொருத்து சாதனம்.

connection machine : இணைப்பு எந்திரம் : திங்கிங் மெஷின் கார்ப்பரேசன் உருவாக்கிய இணைச் செயலாக்கக் கணினிகளின் குடும்பம். 4,096 முதல் 65,536 செயலகங்கள் இடம் பெற்றிருந்தன. ஹைபர்கியூப் அல்லது பிற அமைப்புகளில் அவைகளை அமைக்க முடியும். சமிக்ஞை செயலாக்கம், போலி நிகழ்வு, தகவல் தளங்களில் விவரங்களைப் பெறல் போன்ற பயன்பாடுகளுக்கு இவை பயன்படுகின்றன. முன்முனையாக வேக்ஸ் (VAX) அல்லது பிற கணினிகள் தேவைப்படுகின்றன.

connection less : இணைப்பற்ற : நேரடி இணைப்பு அல்லது முனைகளுக்கிடையேயான முறையான இணைப்பு தேவைப்படாமல் ஒவ்வொரு பாக்கெட்டிலும், மூல மற்றும் சேரும் முகவரிகளைச் சேர்த்தல்.

connection-oriented : இணைப்பு-சார்ந்த : செய்தி அனுப்புவதற்கு நேரடி இணைப்புகள் அல்லது கூட்டு ஏற்பாடு தேவைப்படுவது. connection less -க்கு எதிர்ச்சொல்

connectivity : இணைவுத்தன்மை : ஒரு தொலைத்தகவல் தொடர்பு கட்டமைப்பில் வன்பொருள், மென்பொருள் மற்றும் தகவல் தளம் ஆகியவை ஒன்றாக இணைக்கப்படும் தன்மை.

consecutive : தொடர்ச்சியான : எந்த வித பிற நிகழ்ச்சிகளின் தடையுமின்றி தொடர்ச்சியாக இரண்டு ஒரே மாதிரியான நிகழ்வுகள் ஏற்படுவது.

consight : கன்சைட் : ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் உருவாக்கிப் பயன்படுத்திய கணினி கட்டுப்பாட்டில் இயங்கும் எந்திர பார்வை அமைப்பு.

consistent check : நம்பகச் சோதனை : குறிப்பிட்ட உள்ளீட்டுத் தகவல் ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப உள்ளது என்ற நம்பகத்தன்மையைச் சோதித்தல். ஒரே மாதிரியான தகவல் பொருள்கள் அவற்றின் மதிப்பு, வடிவம் ஆகியவற்றில் நம்பகமாக உள்ளதா என்று கட்டுப்படுத்தும் முறை.

console : கட்டுப்பாட்டு முனையம் : ஒரு அமைப்புடன் மனிதர்கள் தகவல் தொடர்பு கொள்ள அனுமதிக்கும் கணினி அமைப்பின் அந்தப் பகுதி.

console operator : முனையம் இயக்குபவர் : கணினி இயக்குபவர் போன்றது.

console typewriter : முனையத் தட்டச்சுப் பொறி : கணினியுடன் நேர்முக இணைப்புள்ள தட்டச்சுப் பொறி. இது எந்திரத்திற்கும் கணினியை இயக்குபவருக்கும் இடையில் தகவல் தொடர்பினை அனுமதிக்கிறது.

consortium : பேரமைப்பு : அவசர நிலை காலத்தில் பயன்படுத்துவதற்காக முழுமையான கணினி வசதியைத் தாங்கி நிற்கும் ஒரு கூட்டு முயற்சி.

constant : மாறிலி; நிலைமதிப்பு : கணினி செயல்படும்போது மாறாமல் இருக்கும் எண். Literal என்று அழைக்கப்படுகிறது. Variable என்பதற்கு மாறானது.

constants : மாறிலிகள்.

constraint : நிபந்தனை: ஒரு சிக்கலுக்கான தீர்வுகளை கட்டுப்படுத்தும் நிபந்தனை.

constructor : கட்டமைப்பவர், ஆக்குநர் : பொருள் சார்ந்த ஆணைத் தொடரில், ஒரு பொருளை உருவாக்கி அதன் நிலையைத் துவக்கும் இயக்கம்.

consultant : ஆலோசகர் : வணிக தகவல் செயலாக்கம், கல்வி, இராணுவ அமைப்பு அல்லது நல வாழ்வு போன்ற சில பயன்பாட்டு சூழ்நிலைகளில் கணினிகளைப் பயன்படுத்துவதில் வல்லுநர். ஒரு குறிப்பிட்ட சிக்கலை பரிசீலித்து தீர்ப்பதற்கு உதவுகின்றவர்.

consumable : நுகரக்கூடிய நுகர் பொருட்கள் : வன் பொருள் துணைக் கருவி. அச்சுப் பொறி நாடாக்கள், மை, காகிதம் போன்று தொடர்ச்சியாக வாங்க வேண்டிய பொருள்கள்.

cont : கோண்ட் : பேசிக் மொழியில் ஒரு ஆணை. தற்காலிகமாக நின்று போன ஆணைத்தொடரை தொடரப் பயன்படுத்தப்படுவது.

contact : தொடர்பு : மின்சாரம் செல்ல அனுமதிக்கும் இணைப்புக்காக தொடர்புள்ள உலோக சுருளைத் தொடும் பொத்தான் அல்லது சாக்கெட்டில் உள்ள உலோகச் சுருள். அரிப்பைத் தடுப்பதற்காக விலை மதிப்புள்ள உலோகங்களின் மூலம் தொடர்புகொள்ளப்படலாம்.

container class : பெட்டி வகுப்பு : பிற பொருள்களை ஒன்று சேர்ப்பதற்கான வேலைகளைச் செய்யும் ஒரு வகுப்பு. பொருள் சார்ந்த ஆணைத் தொடரில் வருவது.

contension : கன்டென்ஷன் : தகவல் தொடர்பு மற்றும் கணினி கட்டமைப்புகளில் பயன்படுத்தப்படும் ஒரு சொல். இரண்டு சாதனங்கள் அனுப்பும் ஒரே பாதையில் ஒரே நேரத்தில் பயன்படுத்தும் சூழ்நிலையை விளக்குவது. அமைப்பு விதிமுறைகளால் நெறிப்படுத்தப்படுவது.

content : உள்ளடக்கம் : ஒரு குறிப்பிட்ட சேமிப்பு இடத்தில் உள்ள முகவரியிடக்கூடிய அனைத்து தகவல்களையும் இது குறிப்பிடுகிறது.

content addressable memory : உள்ளடக்க முகவரியிடும் நினைவகம் : துணை இருப்பகத்தைப் போன்றது.

contention : பூசல் நிலை : பன்முனை தகவல் தொடர்பு வழித் தடங்களில் இரண்டு அல்லது மேற்பட்ட இடங்கள் ஒரே நேரத்தில் அணுக முயலும் போது ஏற்படும் நிலை. ஒரே நேரத்தில் இரண்டு செயலகங்கள் ஒரே சாதனத்தைக் கட்டுப்படுத்த முயலும் போது ஏற்படுவது.

contention resolution : கொள்கை நிலைத்தீர்வு : இரண்டு சாதனங்களும் ஒன்றை அணுகும்போது எதற்கு இணைப்பு தரப்படுகிறது என்பதைத் தீர்க்கும் செயல்முறை.

contents directory : உள்ளடக்கப் பட்டியல் : ஒரு உட்புற சேமிப்பகத்தில் குறிப்பிட்ட பகுதியில் நடைபெறும் வழக்கச் செயலைக் குறிப்பிடும் தொடர்வரிசைகள்.

context : சூழல் : வல்லுநர் அமைப் பின் உரிமைப்பகுதி பகுக்கக் கூடிய பல்வேறு சிக்கல் பகுதிகள்.

context diagram : சூழ்நிலை வரை படம் : மிக உயர்நிலை ஆணை ஓட்ட வரைபடம். ஒரு கணினி அமைப்பின் எல்லைகளை வரையறை செய்கிறது. தனி செயல்முறையையும், தகவல் உள்ளீடுகள், வெளியீடுகள் போன்ற வைகளைக் காட்டுகிறது.

context sensitive : சூழ்நிலை துடிப் பான : ஒரு ஆணைத்தொடரை எழுப் பும் வழி. ஒரு விசையைத் தொடுவது அல்லது சுட்டியைக் கிளிக் செய்வது போன்றவற்றால் உதவி கிடைக்கும்.

context sensitive help : சூழ்நிலை துடிப்பு உதவி : உதவி கேட்கும் நேரத் தில் ஆணைத்தொடரின் நிலை அல் லது முறை என்ன என்பது பற்றிய குறிப்பிட்ட தகவல் வழங்கும் உதவி திரைகள்.

context sensitive help key : சூழ்நிலை உணர் உதவு விசை : பல விசைப் பலகைகளில் உள்ள ஒரு முக்கிய விசை. விசைப்பலகையில் உள்ள இந்த விசையைஅழுத்தும்போது குறிப் பிட்ட சிக்கலைத் தீர்க்க உதவும் 'உதவி' காட்சித் திரையில் தானாகத் தோன்றும்.

context sensitive language : சூழ் நிலை உணர் மொழி : சூழ்நிலை துடிப்பு இலக்கணம் உருவாக்கிய ஏதாவது ஒரு மொழி.

context tree : சூழ்நிலை மரம் : வரிசைக் கிரமமான வடிவமைப்பு களில் வரிசைப்படுத்தப்படும் சூழ் நிலை.

contextual search : சூழ்நிலைத் தேடல் : அவற்றில் உள்ள சொல் பகுதி யின் அடிப்படையில் பதிவேடுகள் அல்லது ஆவணங்களைத் தேடுவது. விசைப்புலம் அல்லது கோப்பின் பெயர் மீது தேடுவதற்கு எதிரானது.

contingency plan : எதிர்பாரா நிலைத் திட்டம் : அவசர நிலைகள் அல்லது சேதங்கள் ஏற்படும் பொழுது கணினி தகவல் அமைப்பினை மீட்டுக் கொண்டு வருவதற்கான திட்டம்.

continuation card : தொடர்ச்சி அட்டை : முந்தைய துளையிட்ட அட்டையில் தொடங்கப்பட்ட தக வலைக்கொண்ட துளையிட்ட அட்டை.

continue : தொடர்க : முன்பே வரை யறுக்கப்பட்ட வரையறைகளுடன் பொருந்தும் பதிவேடுகளைத் தேடு வதைத் தொடர்வதற்கான டிபேசின் கட்டளை.

continuing path control : தொடர் பாதைக் கட்டுப் பாடு: எந்திரன் இயங்கு நுட்பத்தில் பயன்படுத் தப்படும் சொல். தேவை யான வளைவுப் பாதை வழியாக எந்திரனை நகர்த்திச் செல்வது.

continuity : தொடர்நிலை.

continuity check : தொடர்ச்சி சோதனை : ஆரம்பம் முதல் இறுதி வரை உள்ள பாதை சமிக்ஞைகளை அனுப்புவதற்கு சரியாக இருக்கிறது என்பதை முடிவு சொல்ல ஒரு கம்பி, வழித்தடம் அல்லது மின்சுற்று ஒன்றை சோதனை செய்தல்.

continuous : அண்மை : அடுத்தது அல்லது அடுத்ததாக இருப்பது.

continuous carrier : தொடர் தூக்கி : தகவல் தொடர்புகளில் கம்பியில் தகவல்கள் அனுப்பப்படாவிட்டா லும் செல்கின்ற தூக்கி அலைவரிசை.

continuous data structure : அண்மை தகவல்கட்டமைப்பு.

continuous-feed paper : தொடர்ந்து வழங்கும் காகிதம் : பக்கங்களுக்கிடையில் துளையிடப்பட்டு ஒவ்வொரு பக்கத்திலும் கிழிக்கக்கூடிய வகையில் அரை அங்குல துளைகள் உள்ள காகிதம்.

continuous forms : தொடர் படிவங்கள் : அச்சுப்பொறிகளில் தானாகவே அனுப்புவதற்கேற்ப வெளிப்புற விளிம்புகளில் சிறிய துளைகள் உள்ள விசிறி மடிப்பு தாள் அல்லது சுருள் தாள். வெற்றுத்தாளாக இருக்கலாம். அல்லது சோதனைகள், விலைப் பட்டியல்கள், வரி படிவங்கள் போன்ற முன்பாகவே அச்சிடப்பட்ட படிவங்களாக இருக்கலாம்.

continuous-form paper : தொடர் படிவ காகிதம் : தொடர் எழுது பொருள் என்றும் அழைக்கப்படுகிறது. அச்சுப் பொறியில் டிராக்டர் மூலம் அளிக்கப்படுகிற துளையிடப்பட்ட நூற்றுக் கணக்கான தாள்களைக் கொண்டது. முன்னதாகவே துளையிடப்பட்டு அச்சடிப்புக்குப் பின்னர் தனித்தனியாகப் பிரிக்கக்கூடிய தாள்கள். ஒரு பிரபல அச்சு ஊடகமாகிய இதை ஒருமுறை ஒன்று சேர்த்தால் காகிதத் தொகுதி முழுவதையும் கணினி அச்சுப் பொறியில் ஏற்ற முடியும். தனியாக எடுக்கக்கூடிய (முன்துளையிடப்பட்ட) ஒரு பகுதியில் ஸ்ப்ராக்கெட் துளையைப் பயன்படுத்தித் தொடர் காகிதத்தாள் அனுப்பப் படும்.



தொடர் படிவ காகிதம்
(Continuous-form paper)

continuous graphics : ஒட்டிக் கொள்ளும் வரைகலை : ஒன்றையொன்று தொட்டுக்கொள்ளும் சில எழுத்துகள் கொண்ட வரைபடங்கள்

continuous processing : தொடர் செயலாக்கம் : ஒரு அமைப்பில் அவை நிகழ்கின்ற வரிசையிலோ அல்லது நிகழ்ந்த உடனேயோ உள்ளீடு செய்யப்படும் நடவடிக்கைகள்.

continuous scrolling : தொடர் நகர்த்தல் : செய்திகளை வரி வரியாக விண்டோவின் மூலம் முன்னாகவோ பின்னாகவோ நகர்த்தல்.

continuous speech recognition : தொடர் பேச்சு அறிதல் : பேச்சு ஏற்பிக்கு ஒரு அணுகு முறை. சாதாரண இடைவெளிகளில் சராசரியான உரையாடல்களில் நடைபெறும் பேச்சை இது புரிந்து கொள்ளும்.

continuous tone : தொடர் நீழல் : ஒரு அச்சுப்பொறியிலிருந்து வெளிவரும் புள்ளிகள். அச்சிடலுக்குத் திரை செய்யப்படாத ஒளிப்படம்.

continuous tone image : தொடர் கூட்டுத் தோற்றம் : பல்வகையான வண்ணக் கூட்டுகள் அல்லது சாம்பல் நிறக் கூட்டுகளைக் கொண்டதாக உள்ள தனித்தனிப்பகுதிகளை ஒன்றாக இணைப்பதன் மூலம் உருவாக்கப்படும் வண்ணத்தோற்றம் அல்லது கருப்பு வெள்ளைத் தோற்றம்.

contour analysis : படவேறுபாட்டு ஆய்வு : ஒ.சி.ஆர் முறையில் ஒரு

ஒளிப்புள்ளியைப் பயன்படுத்தி எழுத்தின் வெளிப்புற விளிம்புகளில் நகர்ந்து செல்வதன் மூலம் ஒரு எழுத்தின் தோற்றத்தைக் கண்டறிய உதவும் தொழில்நுட்பம்.

contouring : படவேறுபாடமைத்தல் : கணினி வரைபட முறைமைகளில் ஒரு உருவம், பொருள் அல்லது அடர்த்திப்பொருளின் வெளிப்புற தோற்றத்தை உருவாக்குதல்.



படவேறுபாடமைத்தல்
(Contouring)

contrast : மாறுபாடு : ஓ.சி.ஆர் முறையில் ஒரு ஆவணத்தின் அச்சிடப்பட்ட பொருள் அல்லது அது அச்சிடப்பட்ட பின்னணியைக் குறிக்கக் காட்டப்படும் வண்ண அல்லது நிழல் தோற்றத்தின் வேறுபாடுகள்.

contrast enhancement : மாறுபாடு அதிகரித்தல் : வெளிச்சம் அல்லது இருட்டினை அதிகரித்தல். உண்மையான இலக்கவியல் செயலாக்கமானது அது வருடும் பொருளின் நேர் கோடல்லாதவற்றைக் கண்டுபிடிப்பதைப் பொறுத்திருக்கிறது. கண்டுபிடிப்பதன் தன்மையை அறிந்தால் சரியான மாறுபாடுகளை மீண்டும் அறிமுகப்படுத்தலாம். மாறுபாடுகள் விரும்பும் வண்ணம் அதிகரிக்கப் படலாம்.

control : கட்டுப்பாடு : குறிப்பிட்ட சூழ்நிலைகள் ஏற்படும்போதோ அல்லது ஆணைகளின்படி செயல்படுதல், விளக்குதலின்போதோ தேவைப்படும் இயக்கங்களைச் செய்யும் செயல்.

control block : கட்டுப்பாட்டுப் பகுதி : ஒரு செயலாக்க அமைப்பைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான குறிப்பிட்ட வகையான தகவல். அதன் பிறபகுதிகளுக்கு அனுப் பப்படுகின்ற சேமிப்பகத்தின் பகுதி

control break : கட்டுப்பாட்டு நிறுத்தம் : கட்டுப்பாட்டுப் புலத்தில் உள்ள மதிப்புகளின் மாற்றத்தின் விளைவாக ஒரு ஆணைத் தொடர் செயலாக்கத்தில் சில சிறப்புச் செயலாக்க நிகழ்வுகள் ஏற்படும் இடம்.

control bus : கட்டுப்பாட்டு மின் இணைப்புப் பாதை : ஒரு கணினியில், மையச் செயலகத்தில் கட்டுப்பாட்டுப் பதிவகத்திலிருந்து நினைவகத்தை இணைக்கும் பாதை.

control cards : கட்டுப்பாட்டு அட்டைகள் : உரு வாக்கி போன்ற செய லாக்க அமைப்பு, ஒரு பொது வழக்கச் செயலைக் குறிப்பாகப் பயன்படுத்தும் போது, தேவைப்படும் உள்ளீட்டுத் தகவல்களைக் கொண்டுள்ள துளையிட்ட அட்டை. எடுத்துக்காட்டு: ஒரு குறிப்பிட்ட ஆணைத் தொடரை ஏற்றி இயக்குமாறு ஆணையிடும் தொடர் அட்டைகளில் ஒன்று.

control character : கட்டுப்பாட்டு எழுத்து : ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை

யில் கட்டுப்பாட்டு இலக்கத்தை நிறுத்துதல் அல்லது மாற்றம் செய் தலை ஆரம்பித்து வைக்கும் எழுத்து.

control circuits : கட்டுப்பாட்டு மின் சுற்றுகள் : கணினியின் ஆணைத் தொடரின் ஆணைகளை விளக்கி தேவையான இயக்கங்களை செய்ய வைக்கும் மின்சுற்றுகள்.

control clerk : கட்டுப்பாட்டு எழுத் தர் : தகவல் செயலாக்க இயக்கங் களை கட்டுப்படுத்துவது தொடர் பான பணிகளைச் செய்யப் பொறுப் பேற்றுள்ளவர்.

control console : கட்டுப்பாட்டு முனை யம் : முனையத்தை இயக்குபவர் அல் லது சேவை பொறியாளருக்கும் கணி னிக்கும் இடையில் தகவல் தொடர்பு கொள்ளப் பயன்படும் கணினி அமைப்பின் பகுதி.

control data : கட்டுப்பாட்டுத் தகவல் : வேறொரு தகவல் மதிப்பையோ அல்லது துணைச் செயல்பாட்டை யோ அல்லது ஒரு கோப்பு நடவடிக் கையையோ அடையாளம் காண தேர்ந்தெடுக்க, செயல்படுத்த அல்லது மாற்றியமைக்கப் பயன் படுத்தப்படும் ஒன்று அல்லது மேற் பட்ட கட்டுப்பாட்டு தகவல் வகைகள்.

control data corporation : கட்டுப் பாட்டுத் தகவல் அமைப்பு : மீக் (சூப்பர்) கணினிகள் உள்ளிட்ட கணினிக் கருவிகளைப் பெருமளவு உற்பத்தி செய்யும் நிறுவனம்.

control field : கட்டுப்பாட்டுப் புலம் : தகவல் பதிவேட்டில் உள்ள ஒரு புலம். அதே பதிவேட்டில் உள்ள புலங்களை அடையாளம் கண்டு, வகைப்படுத்த பயன்படுவது.

control instruction register : கட்டுப் பாட்டு ஆணை பதிவகம் : ஒரு சிறப்பு தற்காலிக சேமிப்பு இடம். கட்டுப் பாட்டு அலகு செயல்படுத்துகின்ற எந்திர ஆணைகள் இதில் இடம் பெறும்.

control key : கட்டுப்பாட்டு விசை : கணினி விசைப் பலகையில் உள்ள சிறப்புச் செயல்விசை. கணினியை ஒரு பணியைச் செய்யுமாறு ஆணை யிடுவதற்கு வேறொரு விசையுடன் இந்த விசையைச் சேர்த்து ஒரே நேரத் தில் அழுத்தினால் ஒரு ஆணையை நுழைக்க முடியும்.

control listing : கட்டுப்பாடு பட்டிய லிடல் : ஒரு குறிப்பிட்ட சமயத்தில் நடைபெறும் ஒவ்வொரு வணிகப் பரிமாற்றத்தையும் விவரிக்கும் விரி வான அறிக்கை.

control logo : கட்டுப்பாட்டுச் சின்னம் : எந்திரன்கள் (ரோபோக்கள்) இயக் கும் சாதனங்களுக்குப் பயன்படுத்தப் படும் ஒரு லோக்மைரன் சின்னம்.

control mechanism : கட்டுப்பாடு எந்திர நுட்பம்.

control memory: கட்டுப்பாட்டு நினை வகம் : கணினியின் உள் இயக்கத்திற் காக ஆணைகளைச் சேமிக்கப் பயன் படும் கட்டுப்பாட்டு அலகின் நினைவகம்.

control menu : கட்டுப்பாட்டுப் பட்டி யல் : விண்டோக்களைக் கையாளும் கட்டளைகளைக் கொண்ட பட்டி. பயன்பாட்டுப் பிம்பங்கள் மற்றும் உரையாடல் பெட்டிகளில் கட்டுப் பாட்டு பட்டி இருக்கும். கட்டுப் பாட்டு பட்டியைத் திறக்க வேண்டு மென்றால் விண்டோவின் தலைப் புக் கட்டத்தின் இடது பக்கம் உள்ள கட்டுப்பாட்டு பட்டிப் பெட்டியை பயன்படுத்த வேண்டும்.

control menu box : கட்டுப்பாட்டு பட்டி பெட்டி : விண்டோவுக்கான கட்டுப் பாட்டு பட்டியைத் திறக்கும். தலைப் புப் பட்டையில் இடது பக்கத் திலேயே இது எப்போதும் இருக்கும்.

controlled variable : கட்டுப்படுத்தப் பட்ட மாறி : ஒரு ஆணைத்தொடர் மொழியில் உரையாடல் முறை அமைப்பில் ஒரு குறிப்பிட்ட மதிப்பு களின் தொகுதி தொடர்பான மாறி.

controller : கட்டுப்பாட்டுப் பொறி : ஒரு வெளிப்புற உறுப்பை இயக்கு வதற்கு கணினிக்குத் தேவைப்படும் சாதனம்.

control logic : கட்டுப்பாட்டுத் தருக்கம்; கட்டுப்பாட்டு அளவை : ஒரு கணினி யின் செயலாக்க பணிகளைச் செயல் படுத்தும் வரிசை முறை.

control panel : கட்டுப்பாட்டுப் பலகை: 1. மனிதக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள கணினி கட்டுப்பாட்டு முகவு. 2. அலகு பதிவு சாதனங்களின் இயக்கங்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் நீள் கம்பிகளைப் பொருத்தும் அட்டை.

control programme : கட்டுப்பாட்டு ஆணைத்தொடர் : கணினி மற்றும் அதன் மூலாதாரங்களை முழுவது மாக மேலாண்மை செய்வதற்குப் பொறுப்பான செயலாக்க அமைப் பின் ஆணைத்தொடர்.

control punch : கட்டுப்பாட்டு துளை : ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைச் செய்யுமாறு எந்திரத்தை ஆணை யிடும் ஒரு குறிப்பிட்ட குறியீட்டைக் கொண்ட அட்டை.

controls : கட்டுப்பாடுகள் : செயலாக் கத் தொழில் நுட்பங்கள் அல்லது தகவல்களின் துல்லியம், பாதுகாப்பு, நம்பகத்தன்மை அல்லது முழு மையை உறுதி செய்யும் முறைகள்.

control section : கட்டுப்பாட்டு பிரிவு : ஆணைத்தொடரின் ஆணைகளின் படி கணினியின் இயக்கத்தை வழி நடத்தும் மையச் செயலக சாதனத் தின் பகுதி.

control sequence : கட்டுப்பாட்டு வரிசை : ஒரு நேரத்தில் ஒன்று மட்டும் என்ற வரிசையில் ஆணை களை இலக்க முறை கணினிக்கு தேர்ந்தெடுப்பதற்கான வழக்கமான முறை.

control signal : கட்டுப்பாட்டு சமிக்ஞை : எந்திரங்களையும், செயல் முறைகளையும், தானியங்கி முறை யில் கட்டுப்படுத்த கணினி உருவாக் கும் சமிக்ஞை.

control statement : கட்டுப்பாட்டுக் கட்டளை : ஒரு ஆணைத் தொடரில் வேறொரு பகுதிக்கு கட்டுப் பாட்டை மாற்றுவதற்கான கட்டளை அமைப்புகளை வரிசை முறையில் செயற்படுத்துவதை நிறுத்தும் இயக்கம்.

control station : கட்டுப்பாட்டு நிலை யம் : முகவரியிடல், வாக்களித்தல், தேர்ந்தெடுத்தல், திரும்பப் பெறல் போன்ற கட்டுப்பாட்டு நடைமுறை களை மேற்பார்வை செய்யும் கட்டமைப்பு நிலையம். கொள்கை நிலைஅல்லது பிற வழக்கத்துக்கு மாறான சூழ்நிலைகள் ஏற்படும் போது ஒழுங்கினை ஏற்படுத்தப் பொறுப்பானது.

control structures : கட்டுப்பாட்டு கட்டளை அமைப்புகள் : சொற்றொ டர் ஆணைகளை வரிசை முறையில் செயல்படுத்துவதிலிருந்து விலகிச் செல்வதைக் குறிப்பிடும் ஆணைத் தொடர் மொழியில் உள்ள ஒரு வசதி.

control store : கட்டுப்பாட்டுக் கிடங்கு : நுண் ஆணைத்தொடர்

கட்டுமான அமைப்பில் நுண் ஆணை களை சேமிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு, அதிவேக சாதனம்.

control string : கட்டுப்பாட்டுச் சரம் : வன்பொருளைக்கட்டுப்படுத்துகின்ற எழுத்துகளின் தொடர் வரிசை. அச்சுப் பொறிகளுக்கும், மோடெம் களுக்கும் அனுப்பப்படுகின்ற தகவல் களின் உள்ளேயே கட்டுப்பாட்டுச் சரங்கள் சேர்க்கப்பட்டிருக்கும். தம் தகுதியைக் குறிப்பிடும் சிறப்பு எழுத்திலிருந்து அவை துவங்கும்.

control technology : கட்டுப்பாட்டு தொழில்நுட்பம் : வெளிப்புறச் சாத னங்களைக் கட்டுப்படுத்துவதற்காக கணினிகளையும் நுண் மின்னணுக் கருவிகளையும் பயன்படுத்துவது. தானியங்கி அமைப்புகளில் இதை அதிகம் காணலாம்.

control total : கட்டுப்பாட்டு முழுமை : உள்ளீடு, செயலாக்க தகவல் அல்லது வெளியீட்டு தகவல் ஆகியவற்றின் துல்லியத்தைச் சோதிக்கப் பயன் படும் எண் தகவல் களங்களைத் தொகுத்தல்.

control unit : கட்டுப்பாட்டுச் சாதனம்: கணினியின் முழு அமைப்பும் செயல் படுவதை படிப்படியாக ஆணை யிடும் மையச் செயலக சாதனத்தின் பகுதி. கட்டுப்பாட்டு பிரிவு என்றும் அழைக்கப்படும்.

control variable : கட்டுப்பாட்டு மாறி: திரும்பத் திரும்பச் செயல்படுத்தப் படும் ஒரு செயல்முறையின் போது பின்தொடர்ந்து செல்லும் ஒரு மாறி. ஒவ்வொரு முறை செயல்படும் போதும் அதன் மதிப்பு கூடுகிறது. அல்லது குறைகிறது. ஒரு நிலை யெண் அல்லது பிற மாறிகளுடன் ஒப்பிடப்பட்டு செயல் முறை அல்லது கணினியின் இறுதி அறியப் படுகிறது

control words : கட்டுப்பாட்டுச் சொற் கள் : ஆணைத்தொடரின் சிறப்புப் பொருள் உள்ள ஒதுக்கப்பட்ட எழுத்து வரிசை.

controller : கட்டுப்பாட்டுப் பொறி : வட்டுபோன்ற ஒரு கணினியின் வெளிப்புறச் சாதனத்தின் இயக்கத் தைக் கட்டுப்படுத்தும் ஒரு மின்னணு மின்சுற்று அல்லது சாதனம்.

controls : கட்டுப்பாடுகள் : ஒரு கணினியின் செயலாக்கப் பணிகள் செயல்படும் வரிசைமுறை.

control signals : கட்டுப்பாட்டு சமிக்ஞைகள்.

convention : மரபு : ஒரு குறிப்பிட்ட ஆணைத்தொடர் அல்லது அமைப்பு களுக்காக ஏற்படுத்தப்பட்ட கணினி ஆணைத்தொடரின் திறமான, ஏற்கப் பட்ட நடைமுறைகள் மற்றும் சுருக்கங்கள், குறியீடுகள் மற்றும் அவற்றின் பொருள்கள். பல்வேறு ஆணைத்தொடர்களை ஒன்றிணைக் கும் ஆணைத்தொடர் நடைமுறை விதிகள்.

conventional memory : மரபு நினை வகம் : பி.சி. யின் நினைவகத்தில் முதல் (மெகா பைட்டில்) மீமிகு எட்டியல் முதல் 640-கேயை மட்டும் இது குறிப்பிடலாம். மீதி மேல் நிலை நினைவகப்பகுதியென்று அழைக்கப் படும். வழக்கமான நினைவகத்தில் 640 கிலோ எட்டியல் வரை நினைவுத் திறன்.

conversational : உரையாடல் முறை : பயனாளருடன் உரையாடல் நடத்த அனுமதிக்கும் ஆணைத்தொடர் அல்லது அமைப்பு. அவர் கொடுக்

கும் உள்ளீட்டை வாங்கிக்கொண்டு அவரது போக்கில் செயல்பட அது இசைந்து கொடுக்கிறது.

conversational interaction : உரையாடல் பரிமாற்றம் : பயனாளருக்கும் எந்திரத்துக்கும் இடையில் உரையாடல் முறையில் நடைபெறும் பரிமாற்றம்.

conversational language : உரையாடல் முறை மொழி : கணினிக்கும் அதனைப் பயன்படுத்துபவருக்கும் இடையில் தகவல் தொடர்பு ஏற்பட வசதியாக ஏறக்குறைய ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தும் ஆணைத்தொடர் மொழி. பேசிக் ஒரு உரையாடல் மொழி.

conversational mode : உரையாடல் முறை : கணினிக்கும் அதனைப் பயன்படுத்துபவருக்கும் இடையில் உரையாடல் நடைபெற உதவும் இயக்க முறை. இதில் அதற்குக் கிடைக்கும் உள்ளீட்டினைப்பெற்று அதற்கேற்ப கேள்விகள் அல்லது குறிப்புகளை கணினி திருப்பி அளிக்கும்.

conversational operation : உரையாடல் முறை இயக்கம் : ஒரு நேரத்தில் ஒரு எழுத்து என்ற முறையில் தகவல் பயணம் செய்யும் கணினியில் ஒளிக் காட்சித்திரை முகப்புக்கும், கணினிக்கும் இடையில் தகவல் அனுப்பப் படுதல்.

conventional programming : மரபு வழியில் ஆணைத்தொடர் அமைத்தல்: ஒரு நடைமுறை மொழியைப் பயன்படுத்துவது.

convergence : சங்கமம் : ஏற்கனவே தனித்தனியாக இருக்கும் தொழில் நுட்பங்களை ஒன்று சேர்த்தல். ஒரு சிஆர்டி படப்புள்ளியில் சிகப்பு, பச்சை, மற்றும் நீல மின்னணு ஒளிக் கதிர்கள் ஒன்று சேர்தல்.

conversational remote job entry : உரையாடல் முறை தொலை வேலை நுழைத்தல்.

conversion : மாற்றல்; மொழி மாற்றம் : 1. ஒரு வகையான கணினியின் மொழியிலிருந்து வேறு ஒன்றுக்கு அல்லது துளையிட்ட அட்டைகளிலிருந்து காந்தத் தட்டுக்கு என்பது போன்று ஒரு வகையிலிருந்து வேறு ஒரு வகைக்கு தகவலை அனுப்பும் செயல்முறை. 2. ஒருவகையான செயலாக்க முறையிலிருந்து வேறொன்றுக்கு அல்லது ஒரு கருவியிலிருந்து வேறொன்றுக்கு மாற்றுதல். 3. ஒரு வகையான எண்முறையிலிருந்து வேறொன்றுக்கு மாற்றல்.

conversion table : மாற்றப்பட்டியல் : இருவகையான எண் முறைகளில் உள்ள எண்களை ஒப்பிடும் பட்டியல்.

convert : மாற்று : ஒரு எண் அடிப்படையிலிருந்து வேறொரு எண் அடிப்படைக்குத் தகவலை மாற்றுதல். 2. நெகிழ் வட்டிலிருந்து காந்த வட்டுக்கு என்பது போன்று ஒரு வகையான இருப்பிடத்திலிருந்து வேறொன்றுக்கு மாற்றுதல்.

converter : மாற்றி : 1. ஒரு வகையான ஊடகத்திலிருந்து வேறு வகையான ஊடகத்திற்குத் தகவலை மாற்றும் சாதனம். துளையிட்ட அட்டைகளிலிருந்து தகவலைப்பெற்று காந்த வட்டுகளில் பதிவு செய்வதைப் போன்றது.

2. 'அனலாக்' முறையிலிருந்து இலக்க முறைக்கு என்பது போல் ஒரு வடிவத்தில் உள்ள தகவலை வேறு ஒரு வடிவத்திற்கு மாற்றுதல்

பதின்மம்	இருமை	பதினாறின் எண்முறை	எண்ம எண்முறை
0	00000	0	0
1	00001	1	1
2	00010	2	2
3	00011	3	3
4	00100	4	4
5	00101	5	5
6	00110	6	6
7	00111	7	7
8	01000	8	10
9	01001	9	11
10	01010	A	12
11	01011	B	13
12	01100	C	14
13	01101	D	15
14	01110	E	16
15	01111	F	17
16	10000	16	20

(conversion table) : மாற்றல் பட்டியல்

cookbook : பயனர் கையேடு : *ஒரு ஆணைத்தொடரை எவ்வாறு நிறுவி பயன்படுத்துவது என்பதை படிப்படியாக விவரிக்கும் ஆவணம்.*

coolants : குளிர்விப்பான்கள்.

cooling fan : குளிரூட்டும் காற்றாடி : *மின்சுற்று அட்டைகளும், ஐ.சி-க்களும் குளிர்ச்சியாக இருக்குமாறு வைத்துக்கொள்ளும் ஒரு சிறிய காற்றாடி.*

cooperative processing : கூட்டுறவு செயலாக்கம் : *முதன்மைச் சட்டகம் மற்றும் பி.சி. போன்ற இரண்டு அல்லது மேற்பட்ட கணினிகள் ஒரு வேலையைப் பங்கிட்டுக் கொள்ளல். அதிகத் திறனுக்காக வேலையைப் பகுத்துக் கொள்ளல்.*

co-operative work : கூடிப் பணியாற்றல் ; கூடிச் செயல்படல்.

coordinate : ஒருங்கிணை : *கார்ட்டீசிய ஒருங்கிணைப்பு அமைவின் ஒரு இடத்தைக் குறிப்பிடும் தொடர்புள்ள தகவல் மதிப்புகளின் ஒரு வரிசைக் கிரம தொகுதி. மின்னணு தகவல் தாளில், இரண்டு எண்கள் மற்றும் எழுத்துகள் சங்கமித்து ஒரு சிற்றறையின் பத்தி அல்லது வரிசையை அடையாளம் காணல். கர்சர், பாய்ன்ட்டர் ஆகியவற்றைச் சரிப்படுத்தும் ஏதாவது இரண்டு எண்கள்.*

coordinate dimensioning : ஒருங்கிணைந்த பரிணாமம் : *பரிணாமம் அமைத்தல். இதில் புள்ளிகள் ஒரு குறிப்பிட்ட பரிணாமத்தினை வரையறுக்கும். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து போவது ஒரு வரையறுக்கப்பட்ட அச்சை ஒட்டி அளிக்கப்படும்.*

coordinate indexing : ஒருங்கிணைந்த பட்டியலிடல் : *1. தனி ஆவணங்களை விரித்துரைத்தல் மூலம் பட்டியலிடும் முறை. சமமான நிலையில் உள்ள விரித்துரைப்புகளால் இது செய்யப்படுவதால் நூலகத்தில் ஒன்று அல்லது மேற்பட்ட வரைவு மூலம் தேடமுடியும். 2. தனிப்பட்ட சொற்களை ஒன்று சேர்க்கும் முறையில் சொற்களுக்குக்கிடையேயான தொடர்பைக் காட்டும் பட்டியலிடல் தொழில்நுட்பம்.*

coordinate paper : ஒருங்கிணைந்த தாள் : *இலக்கமுறை வரைவானால் உருவாக்கப்படும் படங்கள், வரைபடங்களுக்குப் பயன்படுத்தப்படும் வரைபடமுறை காகிதம்.*

coordinates : ஒருங்கிணைப்பிகள் : 1. கார்ட்டீசியன் ஒருங்கிணைப்பு அமைப்பில் ஒரு இடத்தைக் குறிப் பிடும் முழுமையான அல்லது தொடர் தகவல் மதிப்புகளின் வரிசைப்படுத்தப்பட்ட தொகுதி. 2. ஒரு மின்னணு விரிதாளில் ஒரு அறை யின் பத்தி, வரிசை ஆகிய இரண்டை யும் தனித்த முறையில் அடையாளம் காணும் இரண்டு எழுத்துகள் எண்கள் சேருமிடம். 3. அம்புக்குறி அல்லது சுட்டியைத் திரையில் நிலைப்படுத் தப்பயன்படும் இரண்டு எண்கள்.

copy : படி, பிரதி, நகல், படி எடு, பிரதி எடு, நகலெடு.

copy buster : காப்பி பஸ்டர் : மென் பொருள் ஆணைத்தொடரில் நகல் பாதுகாப்புத் திட்டங்களை ஒதுக்கிச் செல்லும் ஆணைத்தொடர். சாதா ரண, பாதுகாப்பற்ற பிரதிகள் எடுக்க அனுமதிப்பது.

co-processor : இணைச் செயலகம் : மையச் செயலக சாதனத்தை ஓய்வாக வைத்திருக்க, நேரம் எடுக்கும் பணி களைச் செய்யும் இணைச் செயலகம். அதன் விளைவாக ஒட்டு மொத்த அமைப்பின் செயல்வேகம் அதிகரிக் கிறது. வேறொரு மையச் செயலகத் துடன் சேர்ந்து செயலாற்றி மொத்த அமைப்பின் கணிப்பு சக்தியைக் கூட்டுவது. அறிவார்ந்த முனையமும் இணைச் செயலகமாக செயலாற்று கிறது.

copy : நகல் : மூல நகல் மாறாமல் வேறொரு இடத்தில் தகவலை மறு உற்பத்தி செய்வது. முடிவில் பருப் பொருள் வடிவம் மூலத்திலிருந்து மாறலாம். சான்றாக, ஒரு வட்டில் உள்ள தகவல்கள் மற்றும் ஆணைத் தொடர்களைப் பிரதி எடுப்பது.

copy command : படியெடுப்பு ஆணை.

copy fit : நகல் பொருத்தி : கிடைத் துள்ள இடத்தில் செய்தியைப் பொருத்துதல்.

copy holder : நகல் பிடிப்பொறி : விசைப்பலகையில் தட்டச்சு செய்யும் போது படிக்க வசதியாக காகிதத் தினை பிடித்துக்கொண்டிருக்கும் சாத னம். முதுகு, தோள்வலி, கழுத்து, கண் தொல்லையைக் குறைக்க உதவுவதே இதன் நோக்கம்.

copying machine : நகலெடுக்கும் எந் திரம் : எழுதப்பட்ட அச்சிடப்பட்ட பொருளின் நகலைத் தரும் மின்னணு எந்திரம். நிலைமின் ஒளிப்பட வியலின் பிரிவான xerography தொழில்நுட்பத்தைப் பயன்படுத்து வது. புலனாகின்ற அகச்சிவப்பு, அல்ட்ரா வயலட் கதிர்கள், நிலை மின்சக்தி மாறும் தன்மை போன்ற வற்றின் உதவியால் ஒளிகடத்தும் இன்சுலேட்டிவ் ஊடகத்தில் நகல் எடுக்கப்படுகிறது.

copy programme : நகல் ஆணைத் தொடர் : ஒன்று அல்லது மேற்பட்ட கோப்புகளை வேறொரு வட்டுக்கு நகலெடுக்க வடிவமைக்கப்பட்ட ஆணைத்தொடர். ஒரு கணினி ஆணைத்தொடரின் நகல் பாது காப்புச் சாதனத்தை சுற்றிச்செல்லும் ஒரு ஆணைத்தொடர்.

copy protection : நகல் பாதுகாப்பு : தங் களது ஆணைத்தொடர்களை யாரும் நகல் எடுத்துவிடக்கூடாது என்பதற் காக மென்பொருள் உருவாக்குபவர் கள் பயன்படுத்தும் முறைகள். மென் பொருளை சட்டத்திற்குப் புறம்பாக நகல் எடுப்பதற்கு எதிராகப் பாது காப்பதற்காக, பெரும்பாலான உற் பத்தியாளர்கள் நகல் பாதுகாப்பு வாலாயம்களை தங்களது ஆணைத் தொடர்களில் சேர்த்திருப்பார்கள்.

நகல் பாதுகாப்பு நுட்பங்கள் உயர் நுட்பம் வாய்ந்தவை. ஆனால் பல நகல் பாதுகாப்பு நுட்பங்களைச் சமாளிக்கும் வணிக ஆணைத்தொடர் களும் உள்ளன.

copyright : எழுத்துரிமை : ஒருவரு டைய படைப்புக்கு சட்டமுறையான பாதுகாப்பு தருவது. கணினி மென் பொருளுக்கும் இது பொருந்தும்.

copyrighted software : உரிமைபெற்ற மென்பொருள் : பணம் செலவாகின்ற மென்பொருள். மென்பொருளை உருவாக்குகின்றவரின் அனுமதி யின்றி நகல் எடுக்கக்கூடாது.

cordless video transmitter : கம்பி யில்லாத ஒளிபரப்பி : 60 மீட்டர் குறுக் களவுக்குள் எத்தனை தொலைக் காட்சிப் பெட்டிகள் இருந்தாலும் அத்தனைக்கும் ஒலிஒளி சமிக்ஞை களை அளிக்கும் மின்னணுக் கருவி.

core : உள்மையம் : காந்தப்படுத்தப் படக்கூடிய பேரைட் மையத்தைக் கொண்ட தலைமை நினைவகம்.

core memory : மைய நினைவகம்; உள்மைய நினைவு : பெரைட் வளை யங்களாலான டாரைடுகளால் உரு வாக்கப்படும் காந்த நினைவகம். இதை ஒரு திசையில் காந்தப் படுத்தினால் இரும எண் 1-ம் வேறு திசையில் காந்தப்படுத்தினால் 0-வும் வரும். 1940இல் ஜே. மிர் பாரஸ்டர் மற்றும் டாக்டர் அன்வாஸ் ஆகி யோர் இதை உருவாக்கினார்கள். மின்சாரம் இல்லாமலேயே இது இயங்கும் என்பதால் இராணுவம், விண்கலங்கள் ஆகியவற்றில் இன் னும் இது பயன்படுத்தப்படுகிறது.

core storage : மையச் சேமிப்பகம் : காந்தமையங்களைப் பயன்படுத்தும் சேமிப்புச் சாதனம். ஒரு வரிசையாக கம்பிகளின் மூலம் இது தொகுக்கப் படுகிறது.

core system : மைய அமைப்பு : கணினி வரைகலைக்காக முதலில் உருவாக்கிய தர நிர்ணயம். சிகார்ப் நிறுவனம் உருவாக்கியது. கணினி களுக்கிடையே ஆணைத்தொடர் களை மாற்றி அனுப்ப முடிவதும், பார்க்கும் வரைகலையும் மாதிரியாக் கும் வரைகலையும் தனிமைப்படுத் தப்படுவதும் இதன் நோக்கங்கள். அன்சி அங்கீகரித்த GKS தர நிர்ணயம் இதன் அனைத்து தன்மைகளையும் ஏற்றுள்ளது.

corner cut : மூலை வெட்டு : துளை யிட்ட அட்டையின் மூலை வெட்டு. தொடர்புடைய அட்டைகளின் குழுக் களை கண்டுபிடிக்க உதவுகிறது.

coroutine : இணை வாலாயம் : உள் ளீட்டுத் தொகுதி ஒன்றை வெளி யீட்டு தொகுதியாக மாற்ற உதவும் ஆணைகள்.

corporate model : நிறுவன மாதிரி : ஒரு நிறுவனத்தின் கணக்கீட்டு நடை முறைகள் மற்றும் நிதிக்கொள்கை வழிகாட்டிகளை போலி நிகழ்வாகக் கணிதமுறையில் குறிப்பிடுவது. சில குறிப்பிட்ட அனுமானங்களின் கீழ் ஏற்படும் நிதி விவகார முடிவுகளை மதிப்பீடு செய்து மாற்றுத் திட்டங் களை உருவாக்குதல். நீண்டகால மதிப்பீடுகளை இத்தகைய மாதிரி களைப் பயன்படுத்தி மதிப்பிடுவார் கள். சமநிலை செயலாக்கிகளைப் பயன்படுத்துவதே சிறந்தது என்றா லும் விரிதாள்களும் அடிக்கடி பயன் படுத்தப்படுகின்றன.

correspondence quality printing : கடிதத் தொடர்பு தர அச்சு : டாட் மாட்ரிக்ஸ் அச்சுப் பொறிகளின்

அச்சுத்தரம். முதலில் விட்ட இடை வெளியை நிரப்ப இரண்டாவது முறை அச்சடிப்பது, NLQ எனப்படும் Near letter Quality என்பதும் இதுவும் ஒன்றே.

corrective maintenance : சரிசெய்யும் பராமரிப்பு : தவறுகள் ஏற்பட்ட பிறகு அவற்றைக் கண்டுபிடித்து சரி செய்தல், தற்காப்பு பராமரிப்புக்கு மாறானது.

corrupt : பழுதடைதல்.

corrupted file : பாழ்பட்ட கோப்பு : துண்மிகளை மீண்டும் வரிசைப் படுத்தும் வகையில் மாற்றமடைந்த தகவல் அல்லது ஆணைத்தொடர் கோப்பு. படிக்கமுடியாத வகையில் வீணாகிப்போனது.

correspondence quality : கடிதப் போக்குவரத்துத் தரம் : டெய்சி வீல் மற்றும் சில டாட்மாட்ரிக்ஸ் அச்சுப் பொறிகளால் கிடைக்கும் உயர்தர அச்சு. டாட் மாட்ரிக்ஸ் அச்சுப்பொறியில் கிடைக்கும் தெளிவான படத்தின் மூலம் எழுத்துகளை உருவாக்கப்பயன்படும் புள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால் அச்சின் தரம் கூடுகிறது.

corruption : பாழாதல் : வன்பொருள் அல்லது மென்பொருள் கோளாறின் காரணமாக தகவல் அல்லது ஆணைத் தொடரை மாற்றுதல்

cosmos : காஸ்மோஸ் : நோர்ஸ்க் டேட்டா நார்வே உருவாக்கிய ஒரு தகவல் தொடர்பு பேக்கேஜ். உள்ளூர் இணையம் அல்லது விரிபரப்பு இணையம் மூலம் விநியோகிக்கப் பட்ட தகவல் செயலாக்கங்களுக் கான மூலாதாரங்களை, பங்கிட்டுக் கொள்வதில் சிறந்த தீர்வளிப்பது.

cost/benefit analysis : விலை செலவு லாபம் ஆய்வு : ஒரு புதிய தகவல் அமைப்பின் செலவுகள் மற்றும் ஆதாயங்களைக் கண்டுரைக்கும் ஒரு ஆய்வு. வளர்ச்சிக்குத் தேவையான ஆட்கள் மற்றும் எந்திரச் செலவுகள் மட்டுமல்லாது கணினி அமைப்பை ஓட்டுவதும் செலவுகளில் அடங்கும். பழையதை ஒப்பிடும்போது புதிய கணினி அமைப்பை இயக்குவதில் ஏற்படும் எந்திர மற்றும் மனித மூலாதாரங்களின் சேமிப்பும் இதில் அடங்கும். கூடுதல் வாடிக்கையாளர் சேவை, ஊழியர் உறவுகள் போன்ற அளவிடமுடியாத பலன்களும் இதில் அடங்கும்.

cost analysis : செலவு ஆய்வு : ஒரு அமைப்பின் ஒட்டுமொத்தச் செலவை முடிவு செய்து ஒரு புதிய வடிவமைப்புக்கு எதிர்பார்க்கப் படும் செலவு காரணிகளை ஒப்பிடும் நுட்பம்.

cost effectiveness : செலவின் விளைவு : லாபங்கள் மற்றும் அவற்றை அடைய உதவும் மூலாதா ரங்களுக்கான உறவின் செயல்முறை அல்லது அமைப்பின் விளைவு. தொடர்பானசெலவுகளைவிட பெறப் பட்ட லாபங்கள் அதிகரித்தால் செலவு குறைவு என்று கருதப்படும்.

costing : செலவுக் கணக்கிடல் : ஒரு திட்டம், வேலை அல்லது பணிக்கு ஆகும் செலவுகளைக் கண்டறியும் முறை.

cottage key people : குடிசைவிசை நபர் கள் : தங்கள் வீடுகளில் அமர்ந்து பணி யாற்றி, தொலைத்தகவல் தொடர்பு கள், வட்டுகள் அல்லது பிற வழி களில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்பவர்கள்

coulomb : கௌலாம்ப் : மின்சக்தி ஏற்கும் அடிப்படை எஸ்.ஐ அலகு

6.25 x 10^{18} எலெக்ட்ரான்கள் சேர்ந்து 1 கௌலாம்ப் மின்சக்தி ஏற்கிறது.

count : எண்ணிக்கை : ஒரு நிகழ்வு எத்தனை தடவை நடைபெறுகிறது என்பதில் அடுத்தடுத்த கூடுதல் அல்லது குறைவதின் ஒட்டுமொத்த எண்ணிக்கை.

counter : எண்ணுமிடம் : ஒரு நிகழ்வு எத்தனை முறை நடைபெறுகிறது என்பதைக் குறிப்பிடும் பதிவகம் அல்லது கணினி சேமிப்பகத்தின் இருப்பிடம் போன்ற ஒரு சாதனம்.

counter clerk : கணக்கெழுத்தர்; கணக்கிடு எழுத்தர்.

counter clockwise : கடிகார ஓட்டத் திற்கெதிரான : வலது புறத்திலிருந்து இடது புறமாக நகர்த்தல்.

counting devices : கணிக்கும் சாதனம்.

counting loop : எண்ணும் சுருக்கப் பாதை : ஒரே செயலை ஒரு குறிப் பிட்ட தடவைகள் திரும்பத்திரும்ப செய்யவேண்டும் என்பதைக் குறிப் பிடும் ஆணைத்தொடர் சுருக்கப் பாதை.

country : கன்ட்ரி : எழுத்துத்தொகுதி யை அமைப்பதற்காக கணினியை இயக்குவதன் ஆரம்ப நேரத்தில் செயல்படுத்தப்படும் டாஸ் ஆணை.

country-sys : கன்ட்ரி-சிஸ் : கன்ட்ரி கட்டளை இயக்கப்படும்போது பயன் படுத்தப்படும் டாஸ் முறைமைக் கோப்பு.

coupling : இடையிணைப்பு : அமைப்பு களுக்கிடையிலோ அல்லது அமைப் பின் உறுப்புகளுக்கிடையிலோ ஏற் படும் செயல்பரிமாற்றங்கள்.

courier : கூரியர் : தட்டச்சிலிருந்து வருகின்ற ஒரே இடைவெளி உள்ள எழுத்தச்சு.

courseware : கல்விப்பொருள் : கல் விப் பயன்பாடுகளுக்கென்று எழுதப் பட்ட கணினி ஆணைத் தொடர் களுக்குத் தரப்பட்ட பெயர். வேதி யியல், வரலாறு, கணிதம், ஸ்பானிஷ் சொல்லித் தருதல் அல்லது கல்வித் திறனை சொல்லித் தரல் போன்றவை இதில் அடங்கும்.

covariance : இணை மாறுபாடு : இரண்டு தற்செயல் மாறிகளின் கூட்டு மாறுபாடுகளின் அளவுகள்.

cpi : சிபிஐ : characters per inch என்பதன் குறும்பெயர்.

CPM : சிபிஎம். : Critical Path Method என்பதன் குறும்பெயர்.

CP/M : சிபி/எம் : Control Programme for Micro computer என்பதன் குறும் பெயர். நுண்கணினிகளுக்குப் பரவ லாக பயன்படுத்தப்பட்ட ஒரு செய லாக்க அமைப்பு. ஒரு வட்டின் மீதுள்ள ஆணைத்தொடர்களின் தொகுப்பாகிய சிபி/எம் கணினி அமைப்புடன் இணைந்துள்ள சாதனங்களுக்குத் தகவல் மாற்றவும், ஆணைத் தொடர்களைச் செயல் படுத்தவும், கோப்புகளை வசதியாக கையாளவும் ஆணைகளை அளிக் கிறது.

CP/M compatible : சிபி/எம் ஏற் புடைய : சிபிஎம் செயலாக்க ஆணைத் தொகையுடன் சேர்ந்து செயல்பட ஏற்றதாக வடிவமைக்கப்பட்ட மென் பொருளைக் குறிப்பிடுகிறது

CPS : சிபிஎஸ் : Conversation Programming System என்பதன் குறும்பெயர். இது ஒரு கணினி அமைப்பு. இதில் உள்ளீடு, வெளியீடுகளை தொலை விலுள்ள ஒரு முனையம் கையாள் கிறது. நேரப்பங்கீட்டினைக் கடைப் பிடிப்பதால், உடனடி பதிலாகத் தோன்றுவதை பயன்படுத்துபவர்

பெற முடியும். ஆணைத்தொடர் மொழியின் துணைத்தொகுதியான ஐபிஎம்மால் உருவாக்கப்பட்டது.

CPU : சிபியு : Central Processing Unit என்பதன் குறும்பெயர்.

CPU time : சிபியு நேரம் : ஆணைத் தொடரின் ஆணைகளைச் செயல் படுத்துவதற்காக மையச் செயலக அலகு எடுத்துக்கொள்ளும் நேரம்.

crash : வீழ்ச்சி : மென்பொருள் தவறு அல்லது வன்பொருள் செயல் கோளாறினால் கணினி அமைப்பு இயங்காமல் நின்று போவது.

cray : கிரே : கிரே ரிசர்ச் நிறுவனம் உருவாக்கிய மீக் (சூப்பர்) கணினி களின் வரிசை. கிரே-1 ஒரு நொடியில் 80 கோடி ஆணைகளைச் செயல் படுத்தும். பத்து இலட்சம் எழுத்து களை சேமித்து வைக்கும். கிரே-2 ஒரு நொடியில் ஒரு பில்லியன் இயக்கங் களைச் செய்யும்.

Cray Seymour : கிரே செய்மோர் : 1980 -இல் முதல் சூப்பர் கணினியான கிரே 1-ஐயும் பின்னர் ஐந்து ஆண்டு கள் கழித்து கிரே-2 மீக் கணினியை யும் வடிவமைத்து அறிமுகப்படுத் தியவர்.

CRC : சிஆர்சி : Cycle Redundancy Check என்பதன் குறும்பெயர். தகவல் களை அனுப்புவதில் ஏற்படும் பிழை களைச் சோதிக்க இந்த முறை கடை பிடிக்கப்படுகிறது.

create : உருவாக்கு : 1. இருக்கின்ற கோப்பை மாற்றுவதற்குப் பதிலாக புதிய கோப்பை வட்டின் மீது உருவாக்குதல். 2. புலப்பெயர், நீளம், புலவகை போன்றவற்றைக் குறிப் பிடும் தகவல் தளப் பதிவேட்டுக் காக புலங்களை வரையறுத்தல்.

creative designer : படைப்புத் திறனுடன் வடிவமைப்பவர் : மேசை மேல் பதிப்புத் துறையில்(டிடிபி) பக் கத்தினை வெளியமைப்பு செய்து வடிவமைக்கும் நபர்.

credit card : பணப்பொறுப்பு அட்டை.

creeping : ஊர்தல் : செய்திக்கம்பி நகர்வது போல திரையின் குறுக்காக சொற்கள் நகர்ந்து செல்லல்.

cricket presents : கிரிக்கெட் வழங் கும் : கம்ப்யூட்டர் அசோசி யேட்ஸ் நிறுவனத்தின் மெக்கின்டோஷுக் கான டி.டி.பி ஆணைத்தொடர். திரைப்பட பதிவுகள், துண்டறிக்கை கள், ஒட்டுமொத்த செலவு போன்ற வெளியீடுகளை உருவாக்குவதற் கான திறனை இது அளிக்கிறது.

cricket stylist : கிரிக்கெட் ஸ்டை லிஸ்ட் : ஆப்பிள் மெக்கின்டோஷ் கணினிக்கான புகழ்பெற்ற நோக்கம் சார்ந்த படம் வரையும் கணினி. கோடுகள் செவ்வகம் மற்றும் நீள் வட்டம் கருவிகளைப் பயன்படுத்தி கிரிக்கெட் ஸ்டைலிஸ்ட் மூலம் ஓவியங்களை உருவாக்கும்.

crippleware : தடுக்கும்பொருள் : சில கட்டுப்பாடுகளுடன் உருவாக்கப் படும் செயல்விளக்க மென்பொருள். சான்றாக, 50 பதிவேடுகளை மட்டும் நுழைக்க அனுமதிக்கும் டேட்டா பேஸ் பேக்கேஜை குறிப்பிடலாம்.

criteria range : வரன்முறை எல்லை : பதிவேடுகளைத் தேர்வு செய்வதில் நிபந்தனைகள்.

critical error handler : ஆபத்தான பிழை கையாள்பவர் : டாஸ் குறுக் கீட்டு ஆணைகளில் ஒன்று. சாதனத் தில் முக்கிய பிழை ஏற்பட்டால் இதைப் பயன்படுத்துவர். பிழையி லிருந்து மீண்டெழும் வாலாயத்தை இதற்குப் பதிலாக பயன்படுத்தலாம்.

critical error : முக்கியப் பிழை : ஒரு ஆணைத்தொடர்மேலும் தொடர்ந்து செல்வதைத் தடுக்கும் சாதனத்தில் ஏற்படும் பிழை.

critical path : முக்கிய பாதை : ஒரு பெரிய திட்டத்தை ஒழுங்குபடுத்தப் பட்ட தொடர்பகுதிகளாகப் பிரிக் கும் முறை. முந்தைய இயக்கத்தை ஒட்டியே ஒவ்வொரு நிலையும் அமையும். கால அளவுகளைப் பற்றிய மதிப்பீடுகளைச் செய்ய முடி யும். கணினிகளுடன் மட்டுமே தொடர் புள்ளது என்று சொல்ல முடியாவிட்டாலும் முக்கிய பாதை ஆய்வுமுறை ஏராளமான கணக்கீடு களைக் கொண்டது. கணினி மூலமே இதை அதிகம் செய்ய முடியும்.

critical path method (CPM) : முக்கியப் பாதை முறை சிபிஎம். : திட்டம் நிறை வேற்றப்படுவதற்குத் தேவையான ஒவ்வொரு முக்கிய அடிகளையும் ஆராய்ந்து முடிவு செய்வதை உள் ளடக்கிய பேரளவு நீண்டகாலத் திட்டங்களைக் கட்டுப்படுத்தும் மேலாண்மை தொழில்நுட்பம்.

CRJE : சிஆர்ஜேஇ : Conversational Remote Job Entry என்பதன் குறும் பெயர். உரையாடல் முறை தொலை தூர வேலை நுழைவு என்னும் உரை யாடல் முறை மொழியைப் பயன் படுத்தி தொலைதூரத்தில் உள்ள முனையத்தில் பணியாற்றும் ஒருவர் தன்னுடைய வேலையை மைய இடம் ஒன்றுக்கு அனுப்ப, தொலை தூர மைய நிலையத்தில் அதை செய லாக்கம் செய்தல்.

critical region : முக்கிய மண்டலம் : ஒரே நேரத்தில் (பல் செயலாக்க முறையில்) ஒன்றுக்கு மேற்பட்ட செயல்முறையில் இயக்க முடியாத ஆணைகளின் தொகுப்பு.

critical success factors : முக்கிய வெற்றிக் காரணிகள் : அவர்களது முயற்சியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக நிர்வாகிகள் கருதும் சிறிய எண்ணிக்கையிலான முக்கிய காரணிகள். இவற்றில் வெற்றி பெற் றால் அவர்களது இலக்குகளை அடைவதுடன் நிறுவனத்தின் வெற் றிக்கும் உறுதியளிக்கலாம்.

CROM : க்ராம் : Control Rom என்பதன் குறும்பெயர். பெரும்பாலான மைய செயலகச் சிப்புகளுடன் ஒருங் கிணைந்த பகுதி. மையச் செயலக சிறு ஆணைகளை ஒரு வரிசையாகச் சேர்ந்த கூட்டு மெருகு ஆணைகளாக மாற்றி சேமிக்கும் இடம். கணினி யைப் பயன்படுத்துவோருக்கு கூட்டி யின் மூலம் கிடைக்கும் பெருக்கு அல்லது பிரி போன்றவை பெரு ஆணைகளில் அடங்கும்.

crop : க்ராப் : கணினி வரைகலையில் ஒரு படத்தின் சில பகுதிகளை வெட்டுதல்.

crop marks : க்ராப் அடையாளங்கள் : வடிவத்தை விரும்பும் அளவில் வெட்டுவதற்குப் பயன்படுகின்ற, காகிதத்தில் உள்ள அச்சிடப்பட்ட கோடுகள்.

cross assembler : குறுக்குச் சேர்ப்பி : வேறு ஒரு கணினிக்காக ஆணை களை மொழிபெயர்ப்பதற்கு ஒரு கணினியில் இயங்கும் சேர்ப்பி.

cross check : குறுக்குச் சோதனை : இரண்டு மாறுபட்ட முறைகளின் மூலம் கணிப்பினை சோதனை செய்தல்.

cross compiler : குறுக்குத் தொகுப்பி: குறிப்பிட்டு தொகுப்பதற்காக வடி வமைக்கப்பட்டது அல்லாத வேறு ஒரு எந்திரத்தில் செயல்படும் தொகுப்பி

cross compiling/assembling : குறுக்குத் தொகுப்பு/சேர்ப்பி : சிறு கணினி, பேரளவு கணினி அல்லது நேரப் பங்கீட்டு சேவையைப் பயன் படுத்தி நுண் கணினிகளில் பின்னர் பயன்படுத்துவதற்காக ஆணைத் தொடர்களை எழுதி பிழை திருத்தல்

cross footing check : குறுக்குச் சேர்ப்பி சோதனை : குறுக்காக சேர்த்து அல்லது கழித்து பூஜ்யமாக்கி முடிவு களைக் காணும் முறை.

cross hairs : குறுக்கு முடிகள் : ஒரு உள் ளீட்டுச் சாதனத்தில் ஒன்று செங்குத் தாகவும், ஒன்று கிடைமட்டமாகவும் உள்ள இரண்டு குறுக்கு வெட்டுக் கோடுகள். இவற்றின் குறுக்கு வெட்டு அடையாளமானது வரைபட மறை அமைப்பில் கர்சரின் இடத்தைக் குறிப்பிடுகிறது.

cross tabulate : குறுக்குப் பட்டியலிடு : தகவல்களை ஆய்ந்து தொகுத்தல், சான்றாக, ஒரு தகவல் தள கோப்பில் உள்ள தகவல்களைத் தொகுத்து, விரி தாள் கூட்டல்களில் சேர்ப்பது.

cross word puzzles : குறுக்கெழுத்துப் புதிர்கள் : கம்மோடோர் -64 வீட்டுக் கணினியில் பயன்படுத்துவதற்கான மென்பொருள்.

cross functional information systems: குறுக்குச் செயல்பாடு தகவல் அமைப்பு கள் : வணிகச் செயலாற்றமும் தகவல் அமைப்புகளில் ஒருங்கிணைந்த இணைப்புகளான தகவல் அமைப்பு கள், இதன் மூலம் ஒரு நிறுவனத்தின், பிற செயல்படும் உறவுகளின் தகவலைப் பங்கிட்டுக் கொள்ள முடியும்.

cross hatch : குறுக்குக் கோடு : ஒரு ஓவியத்தின் பகுதிகளைச் குறுக்கு வளைவு முறையில் பிரித்து, ஒவ் வொரு பகுதியையும் வேறு படுத்திக் காட்டுதல்.

crosshatching : குறுக்குக் கோடிடல்: கணினி வரைபடமுறையில், வண் ணம் அளிக்கப்படும் பகுதியில் ஒரே அமைப்பில் குறுக்குக் கோடுகள் அல்லது உருவங்களை அமைத்து வரைவதுபோல் சில பகுதிகளை நிரப்புதல்.

cross reference dictionary : குறுக்குக் குறிப்பு அகராதி : ஒரு குறிப்பிட்ட அடையாளம் உள்ள சேர்ப்பி ஆணைத்தொடரின் எல்லா குறிப்பு களையும் அடையாளம் காண் கின்ற அச்சிட்ட பட்டியல். பல அமைப்புகளில், ஒரு மூல ஆணைத் தொடரை சேர்த்து விட்டபிறகு இந்த பட்டியல் தரப்படுகிறது.

cross talk : குறுக்குப் பேச்சு : ஒரு மின் சுற்றிலிருந்து அருகிலுள்ள வேறொரு மின் சுற்று மீது ஏற்படும் தேவையற்ற மின்தாக்கம். அனுப் பும் மின்சுற்றை தொல்லை தரும் மின் சுற்று என்றும், பெற்ற மின் சுற்றை தொல்லைப்படும் மின் சுற்று என்றும் சொல்வர். குறுக் கீடாக ஒரு மின்சுற்றிலிருந்து வேறொரு மின் சுற்றுக்கு சமிக்ஞை சென்று சேர்தல்.

crowbar : கடப்பாரை : அதிக வோல்ட் டேஜ் கூடுவதன் அபாயத் திலிருந்து ஒரு கணினி அமைப் பைப் பாதுகாக்கும் மின்சுற்று.

CRT : சிஆர்டி : Cathode Ray Tube என்பதன் குறும்பெயர். எதிர் முனைக் கதிர்க்குழல்.

CRT plot : சிஆர்டி பிளாட் : கத்தோட் கதிர்க் குழாயின் திரையில் காட்டப் படும் கணினி உருவாக்கிய ஓவியம் அல்லது வரைபடம்.

CRT terminal : சிஆர்டி முனையம் : 1. காட்சித்திரை சாதனம். கணினியுடன் தகவல்தொடர்பு கொள்ள ஒரு இயக்கு பவரால் பயன்படுத்தப்படும் விசைப் பலகையுடன் கூடிய காட்டும் சாதனம். ஒரு செய்தி அல்லது சொற் றொடர் பகுதியை இயக்குபவர் விசைப்பலகையில் தட்டச்சு செய்த தும் திரையில் எழுத்துகள் காட்டப் படும்.

crunch : நொறுக்கு : கணினி நபர் களால் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் அல்லாத சொல். வழக்கமான கணினிச்செயல்பாடுகளைச் செய்து எண்களைச் செயலாக்கம் செய்யும் கணினியின் திறனை இது குறிப்பிடு கிறது. கணினிகள் ஏராளமான எண் களை செயலாக்கம் செய்து அல்லது நொறுக்கித் தள்ளிவிடும் திறனுடையது.

cryoelectronic storage : குறைவெப்ப மின்னணு சேமிப்பகம் : மிகக்குறை வான வெப்பநிலையில் மீக் கடத்தி களாக விளங்கும் பொருள்களைக் கொண்ட சேமிப்பகம்.

cryogenics : குறைவெப்ப நுட்ப வியல் : பூஜ்யத்துக்கு அருகில் உள்ள வெப்பநிலையில் செயல்படும் பொருள்களைப் பயன்படுத்தி செய்யப் படும் சாதனங்களைப் பற்றிய ஆய் வும் பயன்பாடும்.

cryosar : மீக்குளிர் நிலை மாற்றி : மிகக் குறைந்த வெப்பநிலையில் இயங் கும் இரண்டு அரைக்கடத்தி முனையச் சாதனங்கள்.

cryotran : க்ரையோட்ரான் : கணினி மின்சுற்றுகளில் அதிகமாகப் பயன் படுத்தப்படும் மீக் கடத்தும் திறனை அடிப்படையாகக் கொண்ட மின் சாரம் கட்டுப்படுத்தும் சாதனம்.

cryptanalysis : மறையீட்டுப் பகுப் பாய்வு ; இரகசிய எழுத்தாய்வு : இரக சியக் குறியீடு அமைக்கப் பயன் படுத்தப்பட்ட விசை பற்றிய ஆரம்ப அறிவு இல்லாமல் இரகசியக் குறியீட்டு செய்தியை வழக்கமான சொற்றொடர் செய்தியாக மாற்றும் இயக்கம்.

cryptographic techniques : இரகசியக் குறியீட்டு தொழில்நுட்பம்; மறை யீட்டு நுட்பம் : ஒவ்வொரு எழுத்து அல்லது எழுத்துத் தொகுதிகளுக்குப் பதிலாக வேறு வகையான குறியீடு களைக் கொடுத்து தகவல்களை மறைக்கும் முறை.

cryptography : இரகசியக்குறியீட் டியல்; மறையீட்டியல் : இரகசியக் குறியீடுகளை எழுதும் பல்வேறு முறைகளில் ஒன்று. கணினி களையே அதிகம் சார்ந்திருக்க வேண் டியதாக சமுதாயம் ஆகிவிட்டதால், கணினி அமைப்புகள் மற்றும் கட்ட மைப்புகள் மூலம் சேமிக்கப்பட்டு, செயலாக்கப் பட்டு அனுப்பப்படும் ஏராளமான தகவல்களைப் பாது காக்க வேண்டியது அவசியம். பாது காப்பைப் பெற இரகசியக் குறியீடு அமைப்பது ஒரு வழி. தந்திக்கம்பிகள், செயற்கைக் கோள்கள், நுண்ணலை அமைப்புகள் போன்ற அணுகக் கூடிய தகவல் தொடர்புக் கட்ட மைப்புகளில் அனுப்பப்படும் தகவலைப் பாதுகாக்க இதுவே நடை முறைக்கு ஏற்றவழி.

crystal : படிகம் : அதற்கு சக்தி வழங் கப்படும்போது ஒரு குறிப்பிட்ட இடை வெளியில் சுழலும் படிகக் கல். இந்தச் சுழற்சிகள் கணினி அமைப்பில் உள்ள கடிகாரத்திற்கு நேரத்தைத் துல்லியமாக அளிக்க உதவுகின்றன.

crystallin : படிகம் : படிகத்தின் திட நிலை. Neumatic - ன் எதிர்ச்சொல்.

CT : சிடி : Computer Tomographic என்பதன் குறும்பெயர்.

CTRL : சிடிஆர்எல் : Control என்பதன் குறும்பெயர்.

CUBE : க்யூப் : Cooperating User of Burroughs Equipment என்பதிலிருந்து பெறப்பட்ட சுருக்கப்பெயர். பரோ கணினிகளைப் பயன்படுத்துபவர் களின் அதிகாரப்பூர்வ அமைப்பு.

cue : க்யூ : Computer Using Educators என்பதன் குறும்பெயர். கலிபோர் னியா மாநிலத்தில் உள்ள ஆசிரியர் கள் அனைவருக்கும் கணினி கல்வியை வழங்கும் ஒரு நிறுவனம்.

current : மின்சக்தி : ஒரு கடத்தியின் மூலம் மின்னணுக்கள் செல்வது. இதன் ஓட்டத்தை ஆம்பியர் முறை யில் அளக்கிறார்கள். ஒரு ஆம்பியர் என்பது ஒரு நொடிக்கு 6.25 x10^8 மின்னணுக்கள் என்பதாகும்

current awareness system : நடப்பு உணரும் அமைப்பு; நடப்பு செயல் நிலை அமைப்பு : தேர்ந்தெடுக்கப் பட்ட தகவலின் வகைகள் கிடைத்த வுடன் ஒரு மையக்கோப்பு அல்லது நூலகம் மூலம் ஒரு பயனாளருக்கு குறிப்பிட்ட கால இடை வெளியில் அறிவித்துக் கொண்டிருப்பது.

current block : நடப்புக் கட்டம் : கட்ட கோப்பு அணுகுமுறையில் தற் போது அணுகப்படும் கோப்பில் உள்ள தகவல்களில் பதிவேட்டுக் கட்டம்.

current cell : நடப்பு சிற்றறை : தகவல் தாளில் நடப்பில் கிடைக்கக் கூடிய சிற்றறை.

current directory : நடப்பு கோப்பகம் : கணினி அமைப்பு நடப்பில் பயன் படுத்தி வரும் வட்டு தகவல் பட் டியல். வேறாகச் செல்லவில்லை யென்றால், வட்டு கோப்பிற்கு வரும் ஆணைகள் நடப்பு தகவல் கோப் பகத்தையே குறிப்பிடும்.

current drive : நடப்பு இயக்கி : கணினி அமைப்பால் நடப்பில் பயன் படுத்தப் படும் வட்டு இயக்கி

current location counter : நடப்பு இருப் பிட எண்ணுமிடம் : ஒரு ஆணைக்கோ அல்லது ஒரு நிலை யெண்ணுக்கோ கொடுக்கப்படும் முகவரியினை முடிவு செய்ய ஒரு சேர்ப்பி வைத் திருக்கும் எண்ணு மிடம்.

current loop : நடப்புச் சுற்றுப்பாதை : மின் சமிக்ஞைகள் இருப்பது அல்லது இல்லாதிருப்பதை ஒட்டி துண்மி களை அனுப்பும் தொடர் தகவல் தொடர்பு வகை.

current mode logic : நடப்பு முறை தருக்கம் / சிஎம்எல் : தன்னுடைய வடிவமைப்பில் மாறுபட்டு பெரி தாக்கி மின்சுற்றின் தன்மைகளைப் பயன்படுத்தும் தருக்க மின்சுற்று.

current page box : நடப்பு பக்கப் பெட்டி : டிடிபி ஆணைத்தொடர் களில், நடப்பில் வேலை செய்கின்ற பக்கத்தினைக் காட்டுகின்ற பகுதி.

current pulses : மின்னோட்டத் துடிப்புகள்.

current positions : தற்போதைய இடம்.

current record number : நடப்பு பதிவேட்டு எண் : கோப்பு அணுகலில் கோப்பு கட்டுப்பாடு கட்ட முறை மூலம், தகவல்களை 128 கட்டங் களாக ஒழுங்குபடுத்தப்படுகின்றன. நடப்புப் பதிவேடு எண் நடப்பு கட்டத்தில் இருக்கும். சான்றாக, தற்செயல் பதிவேடு 128-ன் நடப்பு பதிவேடு எண் 0 ஏனெனில் கட்டம் 1-ன் முதல் பதிவேடு எண் 1. கடைசி பதிவேட்டின் எண் 127. 1இல் துவங்கினால் கடைசிப்பதிவேடு 129.

cursive scanning : கர்சிவ் வருடல் : ஒளிக் காட்சி முனையங்களுடன் பயன்படுத்தப்படும் வருடும் தொழில் நுட்பம். ஓவியன் ஒரு உருவத்தை வரைவது போல திரையை நோக்கி அனுப்பப்படும் எலெக்ட்ரான்கள் ஒரு நேரத்தில் ஒரு கோடு என்ற முறையில் படங்களின் வெளிப்புறக் கோடுகளைப் போடும்.

cursor : இடஞ்சுட்டி ; அடையாள அம்பு : 1. அடுத்த எழுத்து திரையில் எங்கே தோன்றும் என்பதைக் காட்ட மினுமினுக்கும், நகரும், வழுக்கும் குறியீடு. 2. ஒளிக் காட்சி முனைப்பில் திருத்த வேண்டிய ஒரு எழுத்தையோ அல் லது நுழைக்க வேண்டிய தகவல் களின் இடத்தையோ குறிப்பிடும் இடம் உணர்த்தி.

cursor control : சுட்டிக் கட்டுப்பாடு : திரையில் எந்த இடத்துக்கும் ஒளிக் காட்சி உணர்த்தும் குறியீட்டை நகர்த்தும் திறன்.

cursor control keys : சுட்டி கட்டுப் பாட்டு விசைகள் : காட்சித் திரையில் கர்சரை நிலைநிறுத்த உதவும் விசைப் பலகையின் விசைகள். சுற்று (காம்பஸ்) வடிவில் அமைக்கப்பட் டால் பயன்படுத்த எளிதாக இருக்கு.

cursor tracking : சுட்டி இயக்குதல் : கணினியுடன் இணைந்துள்ள ஸ்டை லஸ் அல்லது டிஜிட்டை நகர்த்து வதன் மூலம் காட்சித் திரையில் சுட்டியை நிலை நிறுத்துவது

curve fitting : வளைவு பொருத்துதல்; வளைக்கோட்டுப் பொருத்தம் : தகவல் புள்ளிகளின் தொகுதியைக் குறிப்பிட ஒரு சூத்திரத்தைக் கண்ட றிய உதவும் கணிதத் தொழில் நுட்பம். ஒரு புள்ளியில் பொருந்தும் கோடுகளில் சிறந்தது என்பதைக் கண்டுபிடித்து அமைப்பதற்கு இந்த சூத்திரம் பயன்படுகிறது.

customer engineer : வாடிக்கையாளர் பொறியாளர் : கணினியைப் பழுது பார்க்கும் அல்லது கணினியில் தடுப் புப் பராமரிப்பினைச் செய்யும் அல்லது உள்ளீடு/வெளியீடு போன்ற சாதனங்களைப் பராமரிக்கும் நபர். Field Engineer என்றும் அழைக்கப் படுவார்.

customic : வாடிக்கையாக்கிய : ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளரின் வடி வமைப்பு மற்றும் அளவுக்கேற்ப உற்பத்திசெய்யப்படும் ஒருங் கிணைந்த மின்சுற்று (ஐ.சி).

customize : வாடிக்கையாக்கல் : பொது நோக்க மென்பொருள் அல்லது வன் பொருள் ஒன்றின் செயல்திறனைக் காட்டுதல் அல்லது மாற்றுதல். குறிப் பிட்ட பயனாளரின் தேவைக்குப் பொருத்தமாக இது செய்யப்படு கிறது.

customized form letters : வாடிக்கை யாக்கப்பட்ட வடிவ எழுத்துகள் : சிறப்பு வடிவ எழுத்து ஆணைத் தொடர்களிலும் சொல் செயலாக்க அமைப்புகளிலும் உருவாக்கப்பட்ட தனிப்பட்டவருக்கேற்ற வடிவ எழுத்துகள்.

custom software : வாடிக்கை மென் பொருள் : ஒரு வணிகம் அல்லது நிறுவனத்தின் தேவைக்கேற்ப உரு வாக்கப்பட்ட ஆணைத்தொடர்கள். canned software என்பதற்கு மாறானது.

cut : வெட்டு : ஒரு ஆவணத்திலிருந்து வரைபடமுறைகள் அல்லது சொற் றொடர் பகுதிகளை நீக்கும் செயல்.

cut and paste : வெட்டி ஒட்டு : சில வரைபடமுறை அமைப்புகளிலும்,

சொல் செயலாக்க அமைப்புகளிலும் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத் திற்குச் சொற்றொடர் பகுதிகளை நகர்த்தப் பயன்படுத்தும் முறை. வெட்டி ஒட்டும் படிகளுக்கு இடையி லுள்ள பிற இயக்கங்களைச் செய்ய வும் இத்தகைய அமைப்புகள் அனு மதிக்கின்றன.

cut form : வெட்டு வடிவம்; நறுக்குப் படிவம் : ஓசிஆர் (OCR) சாதனங்களில் பயன்படுத்துகின்ற பயன்பாட்டு விலைப்பட்டியல் போன்ற தகவல் நுழைவு படிவம்.

CUT mode : கட் மோட் : Control Unit Terminal Mode என்பதன் குறும்பெயர். 3270 முனையத்தின் ஒருமுறை பெரு முகக்கணினியுடன் சேர அனுமதிக் கும் முறை. நுண்கணினி முதல் பெரு முக மென்பொருள் இந்த முறை யைப் பின்பற்றி பெருமுகக் கணினி யுடன் தொடர்பு கொள்வது.

cutout : வெட்டியெடு : வண்ண தூரிகை ஆணைத்தொடரில் கத்தரி மற்றும் எடுக்கும் கருவியைப் பயன் படுத்தி தேர்ந்தெடுக்கும் பரப்பு.

cutter path : வெட்டும் பாதை : கணினி உதவிடும் உற்பத்தி அமைப்பில் கட்டுப்படுத்தப்படுகின்ற வெட்டுக் கருவியின் இயக்கத்தை விவரிக்கும் வரி.

cyan : சியான் ; மயில் நீலம் : வண்ண வரைபட முறைகளில் விடிடி (VDT) களின் மீது அடிக்கடி பயன்படுத்தப் படும் நீல வண்ணம்.

cyber : சைபர் : கன்ட்ரோல் டேட்டா கார்ப்பரேஷன் உற்பத்தி செய்த பெரு முக மற்றும் மீக் கணினிகளின் வரிசை.

cybernetic system : தன்னாள்வியல் அமைப்பு : சுய கண்காணிப்பு மற்றும் சுயக் கட்டுப்பாட்டுத் திறனை அடைய கட்டுப்பாடு மற்றும் திரும்பப் பெறும் பகுதிகளைப் பயன்படுத்தும் அமைப்பு.

cyberphobia : சைபர்போபியா : கணினிகளைக் கண்டு அஞ்சுதல்.

cyberbunk : சைபர் பங்க் : எதிர்கால குற்றவாளிகளைப் பற்றியது. கணினி வங்கிகளை உடைத்துச் செல்லும் ஏமாற்றுக்காரர்கள். இவர்கள் அதிக தொழில்நுட்ப அறிவுக் கூர்மையைச் சார்ந்தே அவர்கள் வாழ்கிறார்கள். நியூரோமான்சர் மற்றும் ஷாக்வேவ் ரைடர் போன்ற அறிவியல் புதினங் களில் இருந்து தோன்றியது.

cyberspace : சைபர்ஸ்பேஸ் : நியூரோ மான்சர் என்னும் புதினத்தில் வில்லியம் கிப்சன் உருவாக்கிய சொல் இணையப் பண்பாட்டை இது குறிப்பிடுகிறது.

cyborg : சைபோர்க் : மின்னணு மற்றும் மின்னியந்திர ரோபோவின் உறுப்பினை வைத்திருக்கும் மனிதர்.

cycle : சுழற்சி : கணினி சேமிப்பகம் தொடர்பானது. ஒரு கணினி அல்லது அதன் சேமிப்பக சாதனத்தில் இருந்தோ, அதற்கோ தகவலை மாற் றல் செய்யும்போது ஏற்படும் தொடர் நிகழ்வுகள். ஒரு முகவரியைக் குறிப்பிட்டு, அதன் தகவலை வெளி யேற்றி அடுத்ததைத் தேடத் தயாராக இருத்தல்.

cycles per second : ஒரு நொடிக்கு சுழற்சி : ஒரு நொடியில் எத்தனை தடவைகள் ஒரு நிகழ்வு அல்லது நிகழ்வுகளின் தொகுதி திரும்பச் செய்யப்படுகிறது என்பது. பார்க்க: ஹெர்ட்ஸ்.

Cyclic Redundance Check (CRC) : சுழற்சி திரும்பவரல் சோதனை :

வட்டுச்சாதனங்களில் பிழை சோதிக்கும் முறை. தகவல்களைச் சேமிக்கும் போது சிஆர்சி மதிப்பு மீண்டும் கணிப்பிடப்படுகிறது. இரண்டு மதிப்புகளும் சமமாக இருந்தால், அந்த தகவல் பிழையற்றது என்று கருதப்படுகிறது.

circle stealing : சுழற்சி திருடல் : உள் ளீட்டு வெளியீட்டு மின் இணைப்புத் தொகுதியின் கணினி கட்டுப் பாட்டைத் தற்காலிகமாகச் செய லிழக்கச் செய்ய வெளிப்புறச் சாதனம் ஒன்றை அனுமதிக்கும் தொழில் நுட்பம். இதன் மூலம் கணினியில் உள்நினைவகத்தை அணுக அந்தச் சாதனம் அனுமதிக் கிறது.

cycle time : சுழற்சிநேரம் : 1. தொடர் செயலின் ஆரம்பத்தில் இருந்து சேமிப்பக இருப்பிடத்திற்குப் போய்ச் சேரும் வரை இடை வெளி யின் குறைந்தபட்ச நேரம். 2. ஒரு பதிவுத் தொகுதியில் தகவலை மாற்ற தேவைப்படும் நேரம்.

cyclic code : சுழற்சிக் குறியீடு : gray code போன்றது.

cyclic shift : சுழற்சி மாற்றம் ; சுழல் நுகர்வு : ஒரு முனையில் விலக்கப் படும் எண் மறு முனையில் சுழற்சி போன்று சேர்ந்து கொள்ளும் மாற்றம். ஒரு பதிவகத்தில் 23456789 என்னும் எட்டு இலக்கங்கள் இருக்கு மானால் இரண்டு பத்திகளில் இடது புறமாக சுழற்சி மாற்றம் செய்தால் மாற்றப்பட்ட பதிவுளின் உள்ளடக் கம் 45678923 என்று மாறும்.

cycolor : சைகாலர் : மீட் இமேஜிங் கின் அச்சிடும் செயல் முறை. ஒளிப் படங்களைப் போல முழு டோனல் உருவங்களை இவை அச்சிடும்.

cylinder : உருளை : ஒவ்வொரு வட்டின் பரப்பிலும் ஒரே இடத்தில் தங்குகின்ற அனைத்துத் தடங்களின் மொத்தம். பல வரைவி வட்டுகளில், ஒவ்வொரு மேற்பரப்பிலும் அதே தடத்தில் உள்ள தடங்களின் மொத்தம்

cylinder addressing : உருளை முகவரியிடல் : ஒவ்வொன்றுக்கும் ஒரு உருளை எண், மேற்பரப்பு எண் மற்றும் பதிவேடு கூட்டல் எண் ஆகியவற்றைக் கொடுத்து வட்டு பதிவேடுகளைத் தேடும் முறை.

cylinder method : உருளை முறை : படி / எழுது முனைகளை இயக்கு வதன் மூலம் நடப்பில் பயன்படுத்தப்படு கின்ற வழித்தடத்திற்கு மேலும் கீழும் உள்ள தகவல்களைப் பெற லாம் என்ற கோட்பாடு அல்லது முறை. அணுகு சாதனத்தில் கூடுதல் இயக்கம் இல்லாமலேயே அதிக அளவு தகவல் அணுக அனுமதிக் கிறது.

cylinder skew : உருளை ஸ்கியூ : முந்தைய உருளையின் கடைசி தடத் தின் துவக்கத்தில் இருக்கும் ஆஃப் செட் இடைவெளி ஒரு சிலிண்டரில் இருந்து மற்றொன்றுக்கு மாற உதவுவது.

cypher : மறையீடாக்கம் : இரகசியக் குறியீட்டியலின் ஒரு வடிவம். சில விசையின் அடிப்படையில் தகவலை இடையிலேயே மாற்றி எடுக்க முயன்றாலும் எவருக்கும் புரியாத ஒன்றாகத் தோன்றும் முறை.

D

D : பதினாறிலக்க எண்மான முறையில் 14 ஆவது இலக்கம்.

DA : நேரடித் தொடர்பு, நேரணுகல் : Direct Access என்பதன் குறும்பெயர்.

DA converter : இலக்க ஒத்திசை மொழிமாற்றி; இலக்கத்திலிருந்து ஒத்த சொல்லுக்கு உருமாற்றி.

DAA : டிஏஏ : 'தகவல் அணுகு வரிசை முறை' என்று பொருள்படும் "Data Access Arrangement" என்பதன் குறும்பெயர்.

DAC : டிஏசி : 'இலக்கத்திலிருந்து ஒத்த சொல்லுக்கு உருமாற்றி' என்று பொருள்படும் "Digital-to-Analog (D/A) Converter" என்பதன் குறும்பெயர்.

DAD : டிஏடி : 'தகவல் தள நடவடிக்கை வரைபடம்' என்று பொருள்படும் Database Action Diagram என்பதன் குறும்பெயர். ஒரு தகவல் தளத்தில் ஆதாரத்தில் தகவல் மீது நடைபெறும் செயலாக்கத்தைக் குறிக்கும் ஆவணமாக்கம்.

daemon : தேமான் : சைத்தானின் ஏவலாட்களில் ஒருவன். நேரப் பகிர்வை ஆதரிக்கும் UNIX என்ற செயற்பாட்டுப் பொறியமைவையும் குறிக்கும். இது, பொறியமைவில் நிகழ்வுகள் நிகழ்வதற்கும், அதற்குப் பதிலாகக் காத்துக் கொண்டிருக்கும் ஏவலாள் போன்ற ஒரு செய்முறையாகும். HTTP, NCSA httpd, CERN httpd, lpd, ftpd ஆகியவை இதில் அடங்கும். "Daemon" என்பதை "Demon" என்றும் உச்சரிப்பர். ஆனால் தொழில் நுட்ப வல்லுநர்கள் "Daemon" என்ற உச்சரிப்பையே விரும்புகின்றனர்.

daisy chain : தளமட்ட சங்கிலி : ஒயர்கள் தொகுப்பு ஒன்றின் வழியாக சமிக்ஞைகளை அனுப்பும் குறிப்பிட்ட முறை. ஒயர்கள் தொகுப்பில் கருவிகள் எந்த இடத்தில் அமைந்திருக்கிறதோ அதைப்பொறுத்து கருவிகளுக்கான முன்னுரிமைகளை அம் முறை அனுமதிப்பதாக உள்ளது.

daisy chain interrupt : தளமட்டச் சங்கிலி இடைத்தடுப்பு : தனியொரு தடம் நெடுகிலும் மையச்செய்முறை அலகுடன் புறநிலைச்சாதனங்கள் இணைக்கப்பட்டுள்ள ஓர் இடைத் தடுப்பு பொறியமைவு.

daisy wheel : தளமட்டச் சக்கரம் : டெய்சி சக்கர அச்சிடு கருவியில்



தளமட்டச் சக்கரம் (Daisy wheel)

தளமட்டச் சக்கரத்தின் ஒரு பகுதி தெளிவான விபரம் தெரிவதற்காகப் பெரிதாக்கிக் காட்டப்பட்டுள்ளது.

உள்ள அச்சிடு சாதனம். நடுவில் குறுக்குக் கம்பியில் எழுத்துகள் புடைப்பு முறையில் அமைக்கப் பட்டிருக்கும். டெய்சி என்பது ஒரு மலர். அந்த மலரின் இதழ்களை ஒத்திருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது.

daisy wheel printer : தளமட்டச் சக்கர அச்சுப் பொறி; தளமட்ட அச்சு எந்திரச் சக்கரம் : அச்சிடு கருவி. இதில் ஓரத்தில் அச்சிடப்பட்ட எழுத்துகளைக் கொண்ட உலோக அல்லது பிளாஸ்டிக் தகடு பயன்படுத்தப்படுகிறது. அந்தத் தட்டு தேவையான எழுத்து சுத்தி ஒன்றின் முன்னே வரும்வரை சுழற்றப்படுகிறது. சுத்தி அந்த எழுத்தினை மை நாடா ஒன்றின் மீது தட்டுகிறது. பிரபலமான தரமான அச்சிடு கருவி தனிப்பட்ட கணினிகளில் பயன்படுத்தப்படுகிறது.

DAL (Data Access Language) : டிஏஎல் : 'தகவல் அணுகு மொழி' என்று பொருள்படும் "Data Access Language" என்பதன் குறும்பெயர். 'ஆப்பிள்' (Apple) கணினியிலுள்ள தகவல் தள இடைமுகப்பு. இது, ஆதாரத் தகவல் 'Mac' என்ற நுண் கணினிகளில் அல்லது 'ஆப்பிள்' அல்லாத கணினிகளில் அணுகுவதற்கு அனுமதிக்கிறது.

damping : தளர்வூட்டுதல் : தேவைப்படாத அல்லது மிகையான ஊசலாட்டங்களைத் தவிர்ப்பதன் மூலம் ஒரு மின்னணு அல்லது எந்திரச் சாதனத்தை நிலைப்படுத்துவதற்கான உத்தி.

dark bulb : கருங்குமிழ் : ஒருவகையான கத்தோட் கதிர்க் குழாய், நிறுத்தப்பட்டதும் ஏறத்தாழ கறுப்பு நிறத்தை அடைந்து விடுகிறது. அது ஒளிக் காட்சிகளுக்கு சிறந்த பின்புலமாகி விடுகிறது.

darkness : இருட்டு.

darlington circuit : டார்லிங்டன் சுற்று வழி : இரண்டு மின்மப் பெருக்கிகளை (Transistor) ஒன்றாக இணைத்துப் பயன்படுத்துகிற மின்பெருக்கச் சுற்றுவழி.

dart : டார்ட் : கணிப்பொறியமைவில் ஏற்படும் தவறுகளை வாடிக்கையாளரின் இடத்திலேயே கண்டுபிடிப்பதற்காக ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக் கழகமும், பன்னாட்டு வணிக எந்திரக்கழகமும் (IBM) சேர்ந்து வகுத்துள்ள ஒரு கூட்டுத் திட்டம்.

DASD : டிஏஎஸ்டி : நேரடித் தொடர்பு சேமிப்புச் சாதனங்களுக்கான 'Direct Access Storage Device' என்பதன் குறும்பெயர்.

DAT : டாட் : இயங்குநிலை ஆணை மொழி மாற்று என்று பொருள்படும். 'Dynamic Address Translation என்பதன் குறும்பெயர்.

data : தகவல்; தரவு ; செய்திக்குறிப்பு ; விவரம் : முறைப்படுத்தப்பட்ட வடிவில் வழங்கப்படும் உண்மைகள் அல்லது கருதுகோள்கள். மனிதர்கள் அல்லது தானியக்க முறையில் தொடர்பு கொள்ளல், கருத்துக்கூறல் அல்லது வகைப்படுத்துதலுக்கு பொருத்தமானதாகும். வகைப்படுத்தப்படாத தகவல்கள் (உ-ம்) விரிப்புகளுக்கான டாலர்.விலை, வழங்கப்பட்ட கட்டட அனுமதிகள். வரலாற்றுக் காலம் தொட்டு 'டேட்டா' என்பது பன்மைப் பெயர் ஆகும். டேட்டம் என்பது ஒருமைப் பெயர் ஆகும். இந்த வேறுபாடு தகவல் முறைப்படுத்தும் தொழில் நுணுக்கத்தில் பொதுவாகப் புறக்கணிக்கப் படுகிறது.

data abstraction : தகவல் உருவாக்கம் : பொருள் சார்ந்த செயல் முறைப்

படுத்தலில், பயனாளர் வரையறுத்த தகவல் வகைகளை உருவாக்குதல். இவை, சொந்தமான தவல்களை யும், செய்முறையையும் கொண் டிருக்கும்.

date acquisition : தகவல் ஈட்டல் ; புள்ளிவிவரம் பெறல், தகவல் பெறல்: தொலை தூரத் தலங்களிலிருந்து தகவல்களை மத்திய கணினி அமைப்பு ஒன்றினால் பெறுதலா கும். புற உணர்விகளிலிருந்து தகவல் களைச் சேகரித்தலாகும்.

data administration : தகவல் தள மேலாளர் மேலாண்மை ; தகவல் மேலாளர் மேலாண்மை : தகவல் தளத் தின் தொழில்நுட்ப வடிவமைப்பும் மேலாளர் மேலாண்மையும் தகவல் நிருவாகம் எனப்படும். இதில், ஓர் அமைவனத்தின் தகவல் தொடர்பு களின் பகுப்பாய்வு, வகைப்பாடு, பராமரிப்பு ஆகியவை அடங்கும். தகவல் உருமாதிரிகள், தகவல் விவர ஏடுகள் ஆகியவற்றை உருவாக்கு வதும் இதில் சேரும். இவை தகவல் தள வடிவமைப்புக்கு மூலப் பொருள்களாக அமையும். தகவல் களை ஓர் அமைவனத்தின் ஒட்டு மொத்த மேலாண்மைக்கு தகவல் நிருவாகப் பணிகள் உதவுகின்றன.

database administration : தகவல் தள நிருவாகம் : ஓர் அமைவனத்தின் தகவல் அகராதியைத் தயாரித்துப் பேணி வருதல், தகவல் தளத்தின் செயல் முறையை வடிவமைத்துக் கண் காணித்து வருதல், தகவல் தளப் பயன்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் தர அளவுகளைச் செயற்படுத்துதல் முதலிய பல பணிகள் இதில் அடங்கும்.

data aggregate : தகவல் தொகுதி : ஆவணம் ஒன்றிற்குள் உள்ள தகவல் வகைகளின் தொகுப்பு. பெயர் ஒன்று தரப்பட்டு தொகுப்பு என்று குறிப் பிடப்படுகிறது.

data analysis package : தகவல்தளப் பகுப்பாய்வுத் தொகுதி; தகவல் பகுப் பாய்வுத் தொகுதி : குறிப்பிட்ட ஒரு சில முடிவுகளைப் பெறுவதற்காகக் கட்டமைப்புக்கும், தகவல்களைச் சீரமைப்பதற்கும் பயன்படும் ஒரு மெல்லினச் சாதனம். ஒரு மின்னணு வியல் அகல் தட்டுச் செய்முறை இதற்கு எடுத்துக்காட்டு.

Data area : தகவல் பகுதி.

data bank : தகவல் வங்கி : *1.* தகவல் நூலகங்களின் ஒருங்கிணைந்த தொகுப்பு ஆகும். 2. நெருக்கமில் லாத தொகுப்பு எனும் நிலையில் தகவல் அடிப்படை என்று கூறப்படு கிறது.

data base : தகவல் தளம் : தகவல் மேலாண்மைப் பொறியமைவினால் உருவாக்கப்பட்டு, மேலாண்மை செய் யப்படும் ஒன்றுக்கொன்று தொடர் புடைய கோப்புகளின் தொகுதி. மின்னணுவியல் முறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களின் தொகுப்பு. தருக்க முறையில் தொடர் புடைய பதிவேடுகளின் அல்லது கோப்புகளின் ஒரு தொகுப்பு. ஒரு தகவல் தளம், பல்வேறு பயன்பாடு களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

database administrator : தகவல் தள நிருவாகி : தகவல் தளத்தின் இயற் பியல் வடிவமைப்புக்கும், மேலாண் மைக்கும், அதன் பொறியமைவின் மதிப்பீட்டுக்கும், தேர்வுக்கும், செயற்பாட்டுக்கும் பொறுப்பாக இருப்பவர். சிறிய அமைவனங் களில், தகவல் தள நிருவாகி, நிருவாகி இருவரின் பணியும் ஒன்றுதான். ஆனால், இரு பொறுப்புகளும் தனித்

தனியே மேலாண்மை செய்யப்படும் போது தகவல் தள நிருவாகியின் பணி அதிகம் தொழில் நுட்பம் சார்ந்ததாக இருக்கும்.

database analyst : தகவல் தள பகுப்பாய்வாளர் : வடிவமைப்பு மற்றும் தகவல் அடிப்படைச் சூழலில் தகவல் அமைப்பை அமல்படுத்துதலில் முக்கிய நபர் ஆவார்.

database definition language : தகவல் தள வரையறை மொழி : ஒரு தகவலை உருவாக்கி, சேமித்து வைத்து, மேலாண்மை செய்வதற்கு தகவல் நிருவாகி பயன்படுத்தும் ஒரு மொழி.

database driver : தகவல்தள இயக்கி : ஒரு தகவல் தளத்தை அணுகுகிற மெல்லின வாலாயம். இது, ஒரு குறிப்பிட்ட தகவல் தளத்தை அணுகுவதற்கு ஒரு தொகுப்பாணை அனுமதிக்கிறது.

database environment : தகவல்தளச் சூழல் : பயன்படுத்துவோர், தகவல் மற்றும் தகவல் தளத்தை அமல்படுத்துவதால் விளையும் சுற்றுச் சூழல்.

database machine : தகவல்தள எந்திரம் : தகவல் தளத்தை அணுகுவதற்காகத் தனிவகையில் வடிவமைக்கப்பட்ட கணினிப் பொறி. இது முதன்மைக் கணினிப்பொறியுடன் அதிவேக வழி வாயிலாக இணைக்கப்பட்டிருக்கும். இது விரைவான வட்டு தேடுதலுக்காக பன்முகச் செய்முறைப்படுத்திகளைப் பயன்படுத்துகிறது.

database management : தகவல்தள நிர்வாகம், தகவல்தள மேலாண்மை : கோப்பு ஒன்றில் ஆவணங்களின் வடிவில் தகவல் வகைகளை சேமித்தல், நாளது தேதிக்கு மேம்படுத்துதல், மீண்டும் பெறல். தொலைதூர அமைப்புகளின் மூலம் பல பயனாளர் பலரும் பொதுவான தகவல் வங்கிகளைப் பயன்படுத்த முடியும்.

database management approach : தகவல்தள மேலாண்மை அணுகுமுறை : தகவல்களைச் சேமித்தல், செய்முறைப்படுத்துதல் பற்றிய அணுகுமுறை. இதில், தனித் தனிக் கோப்புகள் ஒரே தொகுதியாக ஒருங்கிணைக்கப்பட்டு, அல்லது தகவல் தள பதிவுகளாக்கப்பட்டு, செய்முறைப்படுத்துவதற்காகவும், தகவல் மீட்புக்காகவும் பயனாளருக்குக் கிடைக்குமாறு செய்யப்படுகின்றன.

database management system : (DBMS) : தகவல்தள மேலாண்மை முறைமை : ஒரு கணினி மயமாக்கப்பட்ட தகவல் தள கோப்பு ஒன்றை உருவாக்கவும் கோப்பில் புதிய தகவல்களைச் சேர்க்கவும், கோப்பில் உள்ள தகவல்களை மாற்றவும், கோப்பிற்குள்ளேயே தகவல்களை வகைப்படுத்தவும், கோப்பில் தகவல்களைத் தேடவும், மற்றும் பிறவற்றுக்கும் இடமளிக்கிற, வகைப்படுத்துகிற வன்பொருள் மற்றும் மென்பொருள்களின் தொகுப்பாகும். கோப்பு நிர்வாகியுடன் ஒப்பிடவும்.

database manager : தகவல்தள மேலாளர் : தகவல்களை கணினியில் ஏற்ற, திரட்ட, வகைப்படுத்த, தகவலைப்பெற பயன்படுத்த ஒருவரை அனுமதிக்கும் ஆணைத் தொகுப்பு.

database packages : தகவல்தள தொகுப்புகள்.

database query language : தகவல்தள வினவு மொழி : ஒரு தகவல் தளத் தொகுதியின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக அமைந்துள்ள ஓர் ஆணை

அல்லது செயல்முறைப்படுத்தும் மொழி. இந்த மொழி, தகவல் தளத்திலிருந்து தகவல்களை வரவழைத்துக் கையாள்வதற்குப் பயனாளரை அனுமதிக்கிறது.

database server : தகவல் தள ஏவலா் : ஓர் உள்ளகப் பகுதி இணையத்தில் (Local Area Network) தகவல் தளத்தைச் சேமித்து வைப்பதற்கும், மீட்பதற்குமான கணினி. இது, கோப்பு ஏவலர் (File Server) என்பதிலிருந்து வேறுபட்டது. இது பலவகைக் கோப்புகளையும் செயல் முறைகளையும், பகிர்ந்து பயன்படுத்துவதற்காகச் சேமித்து வைக்கிறது.

database specialist : தகவல் தள வல்லுநா் : தகவல் தளங்களுடன் பணிபுரிவோர்.

data bus : தகவல் தடம்; தகவல் பாட்டை : தகவல் விவரங்களைக் கடத்துகிற ஒயர்களின் தொகுப்பு முறை. தகவல்களைப் பரிமாற, அது மத்திய முறைப்படுத்தும் அலகின் சேமிப்பையும் கணினியின் எல்லா உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு கருவிகளையும் இணைக்கிறது.

data byte : தகவல் எட்டியல் : எட்டியல் - துண்மி இரட்டை இலக்க எண்-தகவல் கணினியின் ஒரு எழுத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அது கணிதவியல் அல்லது தருக்கவியல் நடைமுறைகளிலோ, நினைவக சேமிப்பிலோ பயன்படுத்தப்படுகிறது.

data capturing : தகவலைக் கவா்தல் : கணினி கையாளுவதற்காக தகவல்களை சேகரித்தல் அல்லது தொகுத்தல், பணியை வகைப்படுத்தலில் முதல் நடவடிக்கையாகும். இதனை தகவல் சேகரிப்பு என்றும் கூறுவார்கள்.

data card : தகவல் அட்டை : துளையிடப்பட்ட அட்டை ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்களைக் கொண்டது.

data carrier : தகவல் ஏந்தி : எந்திரத்தில் படிக்கக் கூடிய தகவல்களை இருத்திவைத்துக் கொள்ளக்கூடிய ஒரு வட்டு, நாடா போன்ற ஓர் ஊடகம்.

data carrier store : தகவல் ஊர்திச் சேமிப்பி : கணிப்பொறியின் புற நிலைச் சாதனமாக உள்ள நிரந்தரச் சேமிப்புச் சாதனம். எடுத்துக்காட்டு : நெகிழ் வட்டுகள் (Floppy disks).

data cartridge : தகவல் பொதியுறை : காந்த நாடா அடங்கியுள்ள, அப்புறப் படுத்தத்தக்க சேமிப்புத் தகவமைவு.

data catalog : தகவல் விவரப்பட்டி ; தகவல் பட்டியல் : ஓர் அமைவனம் பயன்படுத்தும் தகவல் கூறுகள் அனைத்தின் முழுப் பெயரையும் கொண்ட ஒழுங்கு முறைப்படுத்திய பட்டியல்.

data cell : தகவல் அறை : நேரடித் தொடர்பை ஏற்கும் மின்காந்த சேமிப்புக் கருவி. ஐபிஎம் நிறுவனம் உருவாக்கியது. இக்கருவி மின்காந்தப் பட்டியலில் அறைகளில் பதிவு செய்யப்பட்ட தகவல்களைக் கையாளுகிறது.

data center : தகவல் மையம் : கணிப்பொறியமைவுகளும், அதன் தொடர்புடைய சாதனங்களும் வைக்கப்பட்டிருக்கும் துறை. தகவல் நூலகம் இந்த மையத்தின் ஒரு பகுதியாகும். தகவலும் பதிவுத் துறையும், பொறியமைவு செயல்முறைப்படுத்தும் துறையும் இந்த மையத்தின் கீழ் வரும். இதிலுள்ள கட்டுப்பாட்டுப் பிரிவு, பல்வேறு பயன்பாட்டுத் துறைகளிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெற்று வெளியிடுகிறது.

data chaining : தகவல் சங்கிலி இணைப்பு : தகவல் வகைகளை இணைப்பதற்கான ஒரு செய்முறை. ஒவ்வொரு தகவல் இனத்திலும், அடுத்த இனத்தின் அமைவிடம் அடங்கியிருக்கும்.

data channel : தகவல் வழி : தகவல் தடம் : இரு புள்ளிகள் அல்லது கருவி களுக்கிடையிலான தகவல் தொடர்பு இணைப்பு.

data checks : தகவல் சோதனைகள் : தகவல்களைச் செய்முறைப்படுத்து வதற்கு முன்பு அதில் செல்லுபடியா காத தகவல்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக நடத் தப்படும் பல்வேறு சோதனைகள்.

data clerk : தகவல் எழுத்தர் : கணினி ஒன்றில் எழுத்தர் பணிகளைச் செய் யும் ஒருவர்.

data collection : தகவல் திரட்டு ; தகவல் தொகுப்பு : 1.தகவல்களை வகைப் படுத்தும் முறைமை ஒன்றில் சேர்க்க ஆதாரத் தகவல்களைச் சேகரித்தல். தகவல்களைச் சிறைப்பிடித்தல் என்றும் கூறுவார்கள். 2. ஒன்றுக்கு மேற்பட்ட மையங்களில் இருந்து ஒரு மையப்பகுதிக்கு தகவல்களைக் கொண்டுவந்து சேர்த்தல்.

data command : தகவல் ஆணை : ஓர் இடைவெளியைத் தொடர்ந்து எழுத்துகள் வரும் அமைப்புடைய ஓர் ஆணை. இது, சொல் செய் முறைப்படுத்தும் செயல்முறை களின் சில பழைய வகைகளில் பயன்படுத்தப்படுகிறது.

data communications : தகவல் தொடர்புகள் : குறியீடாக்கிய தகவல் களைக் குறிப்பிட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி அனுப்புதல். இதற்கு, உள்ளூர் அனுப்பீட்டுமுறை எதுவும் அல்லது நிலம், ஆகாயம் அல்லது கடல்வழியான தொலைத்தொடர்பு முறை எதுவும் பயன்படுத்தப் படுகிறது.

data communication equipment : தகவல் தொடர்புக் கருவி : ஒன்றி லிருந்து மற்றொன்றுக்கு தகவல் களைக் கடத்துவதுடன் தொடர் புடைய துணைக் கருவி. எடுத்துக் காட்டு: மோடெம்கள், தொலை தூர முனையங்கள் மற்றும் தகவல் தொடர்பை வகை செய்யும் கருவி கள், உள்ளீட்டு, வெளியீட்டு வழிகள்.

data communications package : தகவல் செய்தித் தொடர்புத் தொகுதி : செய்தித் தொடர்புக் கம்பிகளின் வழி யாகத் தகவல்களை அனுப்புவதற் கும், பெறுவதற்கும் பயன்படுத்து வோரை அனுமதிக்கும் மென் பொருள்.

data communications system : தகவல் தொடர்பு அமைப்பு : கணினி கள், இணையங்கள் மற்றும் தகவல் தொடர்பு இணைப்புகளைக் கொண்ட அமைப்பு முறை.

data compatibility : தகவல் ஒத் தியல்பு : ஒருவர் மற்றொருவரின் தகவல் வட்டுகளிலிருந்து படிக்கவும் எழுதவும், ஒருவர் மற்றவரின் தகவல் கோப்புகளைப் பயன்படுத்தவும் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற் பட்ட கணினிகளின் திறம்பாடு, அவை, ஒரே செயல்முறைகளை இயக்க முடியாவிட்டாலும் கூட இவ்வாறு செய்யலாம்.

data compression : தகவல் இறுக்கம் : வெற்றுக் களங்களைத் தவிர்த்து, தேவையற்ற இடைவெளிகளையும் தேவையற்ற தகவல்களையும் தவிர்த்து ஆவணங்களின் அளவை யும் நீளத்தையும் குறைத்தல்.

data concentration : தகவல்களைத் திண்மைப்படுத்தல் : 1. பல குறைவான நடுத்தர வேகங்கொண்ட வழிகளிலிருந்து ஒரு இடைப்பட்ட மையத்தில் தகவல்களைச் சேகரித்தல். 2. ஒரு தகவலின் இறுதியில் மற்றொரு தகவலைச் சேர்த்து ஒரு நீண்ட தகவல் வகையை உருவாக்குதல்.

data contamination : தகவல் மாசுபடுதல் : தகவல்களைத் தன்னையறியாமல் அல்லது தீயநோக்குடன் வேண்டுமென்றே சீரழித்தல்.

data control : தகவல் கட்டுப்பாடு : ஆதார ஆவணங்களிலிருந்து, எந்திரம் படிக்கக்கூடிய தகவல்களைத் தயாரிப்பதன் மூலம், பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதைக் கட்டுப்படுத்தும் செய்முறை.

data control department : தகவல் கட்டுப்பாட்டுத் துறை : ஒரு கணிப்பொறியின் தொகுதிச் செய்முறைப் படுத்தும் செயற்பாடுகளில் உள்ளிடுவதற்காகத் தகவல்களைச் சேகரிப்பதற்கும், முடிவுற்ற அறிக்கைகளை வழங்குவதற்கும் பொறுப்பான செயற்பணி.

data control section : தகவல் கட்டுப்பாட்டுப் பிரிவு : வகைப்படுத்துதல், உள்ளிடு தகவல்களைச் சேகரித்தல் மற்றும் கணினியைப் பயன்படுத்துவோருக்கு வெளியீடுகளை வழங்குதல் ஆகியவற்றில் தரக்கட்டுப்பாட்டை ஏற்பதற்குப் பொறுப்பான நிறுவனம் அல்லது குழு.

data conversion : தகவல் மாற்றம்; தகவல் வடிவ மாற்றம் : தகவல் வடிவம் ஒன்றினை மற்றொரு வடிவத்துக்கு மாற்றுதல் அதாவது துளையிடப்பட்ட அட்டை ஒன்றிலிருந்து மின்காந்த வட்டு அல்லது நாடா ஒன்றுக்கு மாற்றுதல்.

data cycle : தகவல் சுழற்சி : தகவல்களை உள்ளிடுதல், செய்முறைப்படுத்துதல், வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் வரிசை முறை.

data definition : தகவல் வரையறை ; தகவல் விளக்கம் : அறிக்கை ஒன்றுக்கான ஆணைத் தொகுப்புகளை வரையறுக்கும் பொழுது, அதில் அளவு, வகை, களம் ஆகியவற்றின் தன்மை, இடம்பெற்றிருக்க வேண்டும்.

data definition statement : தகவல் வரையறை அறிக்கை : ஒரு கோப்பு பற்றிய தகவல்களை அளிக்கும் ஒரு பணிக்கட்டுப்பாட்டு மொழி அறிக்கை.

data definition language : தகவல் விளக்க மொழி : தகவல் அடிப்படை நிர்வாகி ஒருவர், தகவல் அடிப் படைச் சூழலில், தகவலை உருவாக்கவும், சேமிக்கவும், பராமரிக்கவும் கையாளும் மொழி. இதனை, தகவல் வரையறை மொழி என்றும் கூறுவார்கள்.

data description language: DDL : தகவல் விவரிப்பு மொழி (டிடிஎல்) : தகவல் அடிப்படைச் சூழலில், தகவல் அடிப்படை நிர்வாக முறையில், தகவல் விவரணையில் சேமிக்கப்பட வேண்டும், பராமரிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடும் மொழி. இதனை தகவல் விளக்க மொழி என்றும் அழைப்பதுண்டு.

data description library : தகவல் விவரிப்பு நூலகம் : ஒரு தகவல் ஆதார மேலாண்மைப் பொறியமைவில், பல்வேறுவகைத் தகவல் குறிப்புகளிடையிலான இடைத் தொடர்புகளுடன் சேர்த்துச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பல்வேறுவகைத் தகவல்கள், விவரங்களின் ஒரு பதிவேடு.

data dictionary : தகவல் அகரமுதலி; தகவல் அகராதி : ஒரு தகவல் அடிப் படை நிர்வாக முறையில் பயன்படுத் தப்படும் கோப்புகள், களங்கள் மற் றும் மாறக்கூடியவற்றை உள்ளடக் கியது. தகவல் அகரமுதலி, பயன் படுத்துவோருக்கு எவற்றுடன் தாங் கள் வேலை செய்ய வேண்டியுள்ளது என்பதையும், அவை எவ்வாறு வரை யறை செய்யப்பட்டுள்ளது என்பதை யும் நினைவுபடுத்த உதவுகிறது. குறிப்பாக பெரிய எண்ணிக்கையி லான இணைக்கப்பட்ட நடைமுறை களை அல்லது ஆணைத் தொகுப்பு களை தகவல் அடிப்படையில் பகிர்ந்து கொள்ளும் பொழுது, எழு தும் பொழுது உதவியாக உள்ளது.

data descriptor : தகவல் விவரிப்பி : ஓர் இணைப்புமொழிச் செயல் முறை யில், முதன்மை நினைவுப் பதிப்பி யில் நிலையான அல்லது காப்பிடச் சேமிப்பு அமைவிடங்களை வரை யறுத்துக் கூறுவதற்குப் பயன்படுத் தப்படும் ஒரு செயல் முறைப் படுத்தும் அறிக்கை.

data design : தகவல் வடிவமைப்பு : ஒரு தகவல் பொறியமைவினால் பயன்படுத்தக் கருதப்படும் தகவல் தளம் மற்றும் கோப்புகளின் தருக்க முறைக் கட்டமைப்பின் வடி வமைப்பு. இது, ஆக்கக்கூறுகளின் விரிவான விவரிப்புகள், தொடர்பு கள், தகவல் கூறுகள், கோப்புகள் மற்றும் தகவல் தளத்திற்கான ஒருங் கிணைப்பு விதிமுறைகள் ஆகிய வற்றை அளிக்கிறது.

data diddling : தகவல் மாற்றியமைத் தல் : தகவல்களை மாற்றும் உத்தி : கணினிக் கோப்பு ஒன்றிற்குள் சேர்க் கும் முன்பு அதனை எளிதில் பெற முடியாதபடி தகவல்களை மாற்றும் உத்தி.

data dump : தகவல் சேமிப்பு : தொல்லை நீக்கும் அம்சம். அச் சடிப்பி, தகவல் சேமிப்புத் தகவமை வாக இருக்கும்போது, அது பெறும் ஒவ்வொரு குறியீடும் பதினாறி லக்கக் குறிமானத்தில் அச்சிடப்படு கிறது. இதனைப் பதினாறிலக்கச் சேமிப்பு என்றும் கூறுவர்.

data directory : தகவல் அடைவு; தகவல் அட்டவணை: தகவலின் பெயர் களை அல்லது கண்டறியும் அம்சங் களை அவற்றின் விளைவுகளுடன் ஒழுங்குமுறையில் தொகுத்தல். இதன் மூலம் அந்த அம்சங்களைக் கண்டறிய முடியும்.

data directory / data dictionary : தகவல் அடைவு/தகவல் அகர முதலி: தகவல் அம்சங்களை ஒழுங்கு முறைப் படுத்துதல். இம்முறையில் தகவல் அட்டவணை, தகவல் பொருளு ணர்த்தும் அட்டவணை, தகவல் அகர முதலி முதலியவற்றின் பண்புகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தக வல்களின் அம்சங்களை விவரிப்ப தோடு அவற்றின் இடத்தையும் கண்டறிய முடியும்.

data division : தகவல் பகுதி ; தகவல் பிரிவு : கோபால் ஆணைத் தொகுப் பின் நான்கு முக்கிய பகுதிகளில் மூன்றாவது பகுதி.

data editing : தகவல் சீரமைப்பு : தகவல் உள்ளீட்டில் பிழைகளை, தவறுகளை, முரண்களைக் கண்டறி வதற்கான உத்தி. எடுத்துக்காட்டாக சோதனைகளைக் கூற வேண்டும். விரிவெல்லைச் சோதனை, காரிய சாத்தியமா என்பதற்கான சோதனை, தகவல்கள், எழுத்து, எண்ணியல் முறையில் தேவைப்படும் வகையில் முறையாக உள்ளதா என்பதற்கான சோதனைகள்.

data element : தகவல் உறுப்பு ; தகவல் கூறு : ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தகவல் வகைகளின் இணைப் பாகும். அவை ஒரு அலகு அல்லது சிறு தகவலைக் குறிப்பிடுகிறது. அத்தகவல் ஒரு தொழிலாளியின் சமூகப் பாதுகாப்பு எண், அல்லது சம்பளப் பட்டியலைப் பற்றிய தகவல் அடிப்படையாக அமைய லாம்.

data encryption : தகவல் குறியீட்டு முறை; தகவல் குறியீட்டாக்கம் ; முன்பே தீர்மானிக்கப்பட்ட திட்டப் படி கலந்திருக்கும் மிக முக்கியமான தகவல்களைப் பெறுவதற்கான குறி யீட்டுமுறை.

data encryption standard : தகவல் குறியீட்டு முறை தரவரைவு ; தகவல் முறைக் குறியீட்டுச் செந்தரம் : ஐபிஎம் உருவாக்கிய தகவல் பாதுகாப்பு முறை, தேசிய தரங்கள் நிறுவனம் ஏற்றுக்கொண்டது. இம் முறையில் ஒரு தனிக் குறியீட்டுத் தகவல்களை சேமிப்பிலிருந்து பெற உதவுகிறது.

data entry : தகவல் உள்ளீடு. தகவல் சேர்ப்பு : 1. தகவல்களை கணினி ஒன்றில் சேர்ப்பதற்கு ஏற்ற வகையில் மாற்றும் முறை. அதாவது முனையம் ஒன்றிலிருந்து மின்காந்த வட்டு அல்லது நாடா அல்லது துளையிடும் அட்டைகளுக்கு விசைகள் மூலம் அனுப்புதல். 2. கணினி முறை ஒன்றில் நேரடியாகத் தகவல்களை ஏற்றும் முறை.

data entry device : தகவல் பதிவுச் சாதனம் : கணினி ஏற்றுக் கொள்ளும் வகையில் தகவல்களை செலுத்தப் பயன்படுத்தப்படும் சாதனம்.

data entry operator : தகவல் உள்ளீட்டாளர்; தகவல் பதிவு ஆள்; குறிப்புப் பதிவாளர் : விசைப் பலகைச் சாதனத்தைக் கணினி ஒன்றில், தகவல்களை பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில் பயன்படுத்துகிறவர். அவர் பெரும்பாலும் கணினியை இயக்கும் குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பார். கணினி முறையில் தகவல்களைப் பதிவு செய்யும் பொறுப்பு அவருடையது.

data entry programme : தகவல் பதிவுச் செயல் முறை : விசைப் பலகையிலிருந்து அல்லது பிற உட்பாட்டுச் சாதனத்திலிருந்து தகவல்களைப் பெற்று, அவற்றைக் கணினியில் சேமித்து வைக்கிற பயன்பாட்டுச் செயல்முறை. இது, நாளது நிலைக் குக் கொணர்தல், வினவுதல், செய்தி யறிவித்தல் ஆகியவற்றைச் செய்திடும் ஒரு பயன்பாட்டின் ஒரு பகுதி யாக இருக்கலாம். இந்தச் செயல் முறை, தகவல் தளத்தில் தகவலை நிலைபெறச் செய்கிறது. உட்பாட்டுப் பிழைகள் அனைத்தை யும் சோதனை செய்கிறது.

data entry specialist : தகவல் பதிவு வல்லுநர் : கணினி ஒன்று வகைப் படுத்துவதற்குத் தகவல்களை வழங்குவதற்குப் பொறுப்பான நபர்.

data export : தகவல் ஏற்றுமதி : எழுதப்பட்ட தளங்களை ஒரு தகவல் அடிப்படையிலிருந்து மற்றொரு ஆணைத்தொகுப்பில் பயன்படுத்தக் கூடிய வகையில் மாற்றுவதற்கான திறன். கடிதங்கள், அறிக்கைகள், விரி நிலைத்தாள்கள் ஆகியவற்றை உரு வாக்குவதற்கான தொகுப்புச் சொற் களை வகைப்படுத்துவது தகவல் இறக்குமதிக்கு எதிர்நிலையானது.

data facts : தகவல் மெய்ம்மை : தக வல்களுக்கான மூலச் செய்திகள்.

data field : தகவல் களம்; தகவல்

புலம்; தகவல்களை வகைப்படுத்தும் வடிவத்தில் ஒரு உயர் பகுதி அல்லது அடுத்தடுத்த உயர்பகுதிகள் அல்லது குறிப்பிட்ட தகவல் அம்சத்தைப் பதிவு செய்வதற்கான துளையிடப் பட்ட அட்டை. 2. தகவல் ஆவணம் ஒன்றின் பகுதி.

data field masking : தகவல் மறைப்பு; தகவல்களுக்கு மூடியிடல் : தகவல் களங்களை தனித்து இருத்த, பிரிக்க, தேதிகளைக் குறிப்பிட சாய் வெட்டுக்கோடுகள் அல்லது கிடைக் கோடுகள் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நாள், மாதம், ஆண்டு இவற்றைத் தனியாகப் பிரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. 07/12/86. தொலைபேசி எண்களைக் குறிப்பிட பிறை அடைப்புக்குறிகள், கிடைக்கோடுகள் பயன்படுத்தப்படுகின்றன. (999) 999-9999. இதே போன்ற குறியீடுகள் பகுதி எண்களைக் குறிக்கவோ, எழுத்துக் கோவையின் பரப்புத்திறனை மேம்படுத்தவோ கையாளப்படுகின்றன. இத்தகைய மூடிகளை கணினியால் செருக இயலும். அவற்றை இயக்குவோர் தானாகச் சேர்க்கவேண்டியதில்லை. தேதிக்கான பகுதியில் 071286 என்ற எண்களை மட்டும் பதிவு செய்தால் போதும். கணினி ஆணைத்தொகுப்பு சாய்கோடுகளைத் தானாகச் சேர்த்துவிடும். இம்முறை தகவல் பதிவை எளிதாக்குகிறது. பணிகளைத் தரப்படுத்துகிறது. சில ஆணைத்தொடர்கள் மூடி இடும் பணியை முறையாகச் செய்கின்றன.

data file : தகவல் கோப்பு : தொடர்புடைய தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட முறையில் வகைப் படுத்தப்படுகின்றன. இதனை உரைக் கோப்பு என்றும் கூறுவார்கள்.

data file processing : தகவல் கோப்புச் செயலாக்கம்; தகவல் கோப்பு வகைப் படுத்துதல் : தேதிக்கோப்புகள் நடைமுறைத் தகவல்களைப் பிரதிபலிக்கிற வகையில் ஆவணங்களைச் சேகரித்தல், மாற்றுதல், நீக்குதல் மூலம் நாளது தேதிக்கு இணங்க மேம்படுத்துதல்.

data flow : தகவல் பாய்வு; தகவல் ஒழுகை : பதின்ம முறை தொடர்பான வேர்ச்சொல் அல்லது தகவல்களின் கிடைநிலையை அடிப்படையாகக் கொண்டு இப் பணிகளைச் செய்யும் எந்திரங்கள்.

data flow analysis : தகவல் பாய்வுப் பகுப்பாய்வு : செய்முறைப்படுத்தும் நடவடிக்கைகளிடையே தகவல்களின் ஓட்டம் பற்றிய ஆய்வு.

data flow diagram : தகவல் பாய்வு வரைபடம் : ஒரு முறைமை வழியாக தகவல்களின் பாய்வை பிரதிநிதித்துவப்படுத்தும் முறைமையைப் பகுப்பாய்வு செய்ய உதவுகிற வரைபட ஆய்வு முறைமை மற்றும் வரைபடக் கருவி.

data fork : செய்திக் கவைமுனை : தகவல்களைக் கொண்ட ஒரு மெக்கின்டோஷ் கோப்பின் பகுதி. எடுத்துக் காட்டு : ஒரு மிகை அட்டை அடுக்கில், வாசகம், வரைகலை, மிகைப் பேச்சுப் படிகள் ஆகியவை தகவல் கவை முனையில் அமைந்திருக்கின்றன. சேமக்கலங்கள், ஒலிக் கட்டுப்பாட்டுத் தகவல்கள், புறச் செயறபணிகள் ஆகியவை ஆதாரக் கவைமுனையில் அமைந்திருக்கின்றன.

data formatting statements : தகவல் வடிவாக்கக் கட்டளைகள் : தகவலைப் படிக்கிறபோது அல்லது வெளிப் படுத்துகிறபோது, தகவலின் வடி

வத்தைவரையறுக்கிற செயல்முறைப் படுத்தும் மொழிகளின் கட்டளைத் தொடர்கள்.

data gathering : தகவல் சேகரிப்பு : உள் அல்லது வெளி ஆதாரங்களிலிருந்து தகவல்களைச் சேகரிக்கும் பணி.

data general corporation : தகவல் பொதுக் கார்ப்பரேஷன் : குறுங்கணினி களைப் பெருமளவில் தயாரிக்கும் நிறுவனம்.

data glove : தகவல் கையுறை : ஒரு கணினியில் பயனாளர் ஒருவரின் கைகள், விரல்களின் நிலையைத் தெரிவிப்பதற்கு விபிஎல் ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்துள்ள ஒரு கையுறை.

Data collection form : தகவல் திரட்டுப் படிவம்.

datagram : தகவல் செய்தி : இணைய (Internet) ஆதாரம், சேரிட முகவரிகள், செய்திக்குறிப்புகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கிற அனுப்பீட்டுக் கட்டுப்பாட்டு நெறிமுறை/ இணைய நெறிமுறை (TCP/IP) செய்தி அலகு.

data hierarchy : தகவல் படிநிலை : தகவல்களை ஒழுங்கான வரிசை முறையில் தொகுதிகளாகவும், உட்தொகுதிகளாகவும் கட்டமைப்புச் செய்தல்.

data import : தகவல் இறக்குமதி : மற்றொரு ஆணைத்தொகுப்பில் உருவாக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தும் (படிக்கும்) திறன். ஒருங்கிணைந்த மென்பொருள் பயன்பாட்டில் இது முக்கியமானது. ஏனெனில் அதில் ஒரு ஆணைத்தொகுப்பில் சேகரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட தகவல்களைப் பல ஆணைத் தொகுப்புகள் பயன்படுத்துகின்றன. தகவல் ஏற்றுமதிக்கு எதிர் நிலையானது.

data independence : தகவல் சார்பின்மை ; தகவல் சுயேட்சை : பயன்பாட்டில் பெரும் மாறுபாடு இல்லாமல் மாற்றக்கூடிய, சேமிப்பு அமைப்பு மற்றும் பெறுதல் நடைமுறையைக் கொண்ட தகவல் முறைமை ஒன்றின் நிலை.

data integrity : தகவல் ஒருங்கிணைவு; தகவல் ஒழுங்கமைவு : கண்டு பிடிக்கப்படாத தவறுகளின் விகிதத்தை அடிப்படையாகக் கொண்ட பணி அலகு.

data interchange format : தகவல் பரிமாற்ற வடிவம் : மென்பொருள் உருவாக்குவோர் மத்தியிலான தர நிலை. அது ஒரு ஆணைத்தொகுப்பின் தகவல்களை மற்றொரு ஆணைத் தொகுப்பு பெற அனுமதிக்கிறது.

data item : தகவல் வகை; தகவல் உருப்படி; : ஒரு மதிப்பீட்டை குறிக்கப் பயன்படுத்தப்படும் தகவல் வகை. பெயரிடப்பட்ட தகவலின் மிகச் சிறிய அலகு.

data leakage : தகவல் கசிவு : கணினி ஒன்றிலிருந்து திருட்டுத்தனமாக தகவல்களை அகற்றுதல்.

data librarian : தகவல் நூலகர் : தகவல் ஆதாரங்களான வட்டுகள், நாடாக்கள் மற்றும் நடைமுறைக் குறிப்புகளை அட்டவணைப்படுத்தி பொறுப்பாகப் பராமரிப்பவர். அவற்றின் பயன்பாட்டையும் கண்காணிப்பவர். வழக்கமாக நூலகர் அல்லது காப்பாளர் என்றழைக்கப்படுகிறார்.

data line : தகவல் பாதை : ஒரு கணினியினுள் அல்லது செய்தித் தொடர்புப் பாதையினுள் தகவல்களைக் கொண்டுசெல்கிற தனித்தனி மின்சுற்று வழி அல்லது பாதை.

data line monitor : தகவல் பாதைத் திரையகம் : செய்தித் தொடர்புகளில், ஒரு செய்தித்தொடர்புப் பாதையில் குறியீடுகளையும், நேரத்தையும் பகுப்பாய்வு செய்கிற ஒரு வாசகக் கருவி. இது, செய்தி அனுப்புவதற்குத் தேவையான மென்பொருள்கள், வன்பொருள்கள் அனைத்தையும் குறிக்கும்.

data link : தகவல் இணைப்பு : செய்தி ஒன்றைத் தகவல் வடிவில் அனுப்ப அனுமதிக்கும் கருவி.

data link escape : தகவல் தொடர்புப் போக்கு வழி : அடுத்துவரும் எழுத்து, தகவல் இல்லை என்பதையும், ஒருகட்டுப்பாட்டுக் குறியீடு என்பதையும் குறிக்கின்ற செய்தித் தொடர்புக் கட்டுப்பாட்டு எழுத்து.

data logging : தகவலாக்கம் ; தகவல் பதிவு : ஒரு கணினிக்குரிய தக்வல்களை ஓர் எந்திரம் தானாகவே சேகரிப்பதைக் குறிக்கும் சொல். எடுத்துக்காட்டாக, ஒரு நுண்செய் முறைப்படுத்தியினால் கட்டுப்படுத்தப்படும் ஒரு மைய வெப்பமூட்டும் பொறியமைவு, கட்டிடம் எங்குமுள்ள பல்வேறு அறைகளிலுள்ள வெப்ப உணர்விகளிலிருந்து வரும் தகவல்களை திரும்பத் திரும்பப் பதிவு செய்கிறது. இந்தத் தகவல்கள் வெப்பமூட்டுவதைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

data management : தகவல் நிர்வாகம்; தகவல் மேலாண்மை : கவன் பொருள் அமல்படுத்துதல், தகவல் சேமிப்பு மரபுகள், உள்ளீட்டு மற்றும் வெளியீட்டுச் சாதனங்களை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுக்கு இடமளிக்கிற ஒரு முறைமையின் பணிகளைக் கூட்டாகக் குறிக்கும் ஒரு பொதுச்சொல். 2. தகவல்களை முறைப்படுத்துதல், அட்டவணைப் படுத்துதல், இருக்குமிடம் அறிதல், பெறுதல், சேமித்தல், மற்றும் பராமரித்தல் ஆகிய பெரும் பணிகளைக் கொண்ட இயக்க முறைமை ஒன்றின் முக்கியப் பணிகள்.

data management system : தகவல் மேலாண்மை அமைப்பு ; தகவல் நிர்வாக முறைமை : *1.* தகவல் முறைமைகளுக்குத் தேவைப்படும் தகவல்களைச் சேகரிக்க, முறைப்படுத்த, பராமரிக்கத் தேவைப்படும் ஆணைத் தொகுப்பு, நடைமுறைகளை வழங்கும் முறைமை. 2. நிறுவனம் ஒன்றிற்குத் தகவல் சேமிப்பு ஒன்றினை ஏற்படுத்தவும் பராமரிக்கவும், தகவல் உள்ளிடுகிற, ஒருங்கிணைக்கிற பொறுப்பினை வழங்கும் முறைமை.

data manipulation : தகவல்களில் திருத்தம் : மொழி ஆணைகள் மூலம் தகவல் அடிப்படை அல்லது தகவல் கோப்பு ஒன்றுடன் தகவல்களைச் சேர்த்தல், நீக்குதல், திருத்தியமைத்தல், பெறுதல் ஆகிய பணிகளைச் செய்யும் நடைமுறை.

data manipulation language, DML : தகவல் பராமரிப்பு மொழி; தகவல்களைத் திருத்தும் மொழி : ஆங்கில மொழி ஆணைகளைப் பயன்படுத்தி, கணினி ஒன்றின் தகவல் சேமிப்பு ஒன்றினை அணுகுதல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகியவற்றுக்குப் பயனாளர் ஒருவரை அனுமதிக்கும் மொழி.

data matrix : தகவல் படிமம் ; தகவல் அச்சுவார்ப்புரு : தகவல்களை நிரல்-நிறைகளில் காட்டும் முறை.

data model : தகவல் படிமம்.

data modelling : தகவல் உருமாதிரி : தகவல் கூறுகளிடையிலான தொடர்புகளை அடையாளங் கண்டு, தகவல்

உருமாதிரிகளை உருவாக்குவதற் கான ஒரு செய்முறை. ஒரு தகவல் உருமாதிரிக்கான வடிவமைப்பு நெறி முறைகளை அடையாளங் காணல்.

data module : தகவல் தகவமைவு : முத்திரையிட்ட, அப்புறப்படுத்தத் தக்க வட்டுத்தொகுதியை குறிக்கும் சொல்.

data medium : தகவல் ஊடகம் : பொருள் ஒன்றில் அல்லது அதன் மீது தகவல்களைப் பிரதிபலிக்கும் குறிப் பான இயற்பியல் மாறுதல்களுக்கு இடமளிக்கும் பொருள். எடுத்துக் காட்டு: காந்தவட்டு அல்லது காந்த நாடா.

data model : தகவல் மாதிரி; தகவல் படிமம்: தகவல் வடிவங்களை அல் லது அவ்வடிவங்கள் மீதான நட வடிக்கைகளை விளக்குகிற முறை யான மொழி. இதனை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, தகவல் விவரணை மொழி; இரண்டு, தகவல் திருத்த மொழி.

data movement time : தகவல் இயக்க நேரம்; தகவல் இடப்பெயர்வு நேரம் : ஒன்றை இடமாற்ற எடுத்துக் கொள் ளப்படும் நேரம் அல்லது ஒரு வட்டு ஒன்றின் வழியில் படிக்கும் அல்லது எழுதும் தலைப்பகுதி முறையாகப் பொருத்தப்பட்டதும் எடுத்துக் கொள்ளும் நேரம்.

data name : தகவல் பெயர் : மாறக் கூடியதன் பெயர், தகவல் மதிப்பீடு ஒன்றைக் காட்டக்கூடியது. எடுத்துக் காட்டு 3.14159 -க்கு pi என்று குறிப் பிடப்படுகிறது.

data network : தகவல் இணையம் : தகவல்களை அனுப்புகிற செய்தித் தொடர்பு இணையம்.

data organization : தகவல் அமைப் பாக்கம் : தகவல்களை அவற்றின் மூல வடிவத்திலிருந்து எந்திரம் உணர்ந் தறியக் கூடிய வடிவத்திற்கு மாற்று தல்.

data origination : தகவல் தோற்றம் : தகவலை அதன் ஆதி வடிவிலிருந்து எந்திரம் உணரக் கூடிய வடிவத்துக்கு மாற்றுதல்.

data packet : தகவல் சிப்பம் : தகவல் வரிசைகளை திறன்மிகு சிப்பங் களாக அனுப்புவதற்கான வழிகள். தவறுகளைக் களைவதற்கான நெறி முறைகளைக் கொண்டதாக அமை யும்.

data pen : தகவல் பேனா : பட்டை கள், முகப்புச் சீட்டுகள் ஆகியவற் றில் காந்தமுறையில் குறியீடாகப் பதிவு செய்யப்பட்ட தகவல்களைப் படிப்பதற்கான, கையினால் இயக்கக் கூடிய, ஒரு காந்த நுண்ணாய்வுச் சாதனம்.

data phone : AT&T நிறுவனத்தின் வணிக இலச்சினை. பெல் முறைமை யில் உருவாக்கப்பட்டு வழங்கப் பட்ட தகவல் தொகுப்புகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. இவை தொலைபேசி இணைப்பு மூலம் தகவல்களை அனுப்பவும் பெறவும் பயன்படுத்தப்படுகிறது.

data planning : தகவல் திட்டமிடல் : தகவல் ஆதார மேலாண்மையில் கவனம் செலுத்தும் ஒரு கூட்டுத் திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வுப் பணி. நிறுவனத்தின் தகவல் ஆதாரத் திற்காக ஓர் ஒட்டுமொத்தத் தகவல் கொள்கையினை வகுப்பதையும், தகவல் கட்டமைப்பை உருவாக்கு வதையும் இது உள்ளடக்கும்.

data point : தகவல் முனை; தகவல் புள்ளி : வரைபட அட்டவணையிடும்

நோக்கத்துக்காகப் பயன்படுத்தப் படும் எண் மதிப்பீடு. ஒரு எளிமையான நோட்டு வரைபடத்தில் நேரத்தை எக்ஸ் அச்சில் குறிப்பிடலாம். தூரத்தை ஒய் அச்சில் குறிப்பிடலாம். இரண்டும் வெட்டிக் கொள்ளும் இடம் தகவல் மையம் ஆகும்.

data preparation : தகவல் தயாரிப்பு : தகவல்களை வடிவமைப்பில் திரட்டி, கணினி ஒன்றில் உள்ளிடுவதற்கு உரிய வடிவத்தில் சேமித்தல்.

data preparation device : தகவல் தயாரிப்புக் கருவி : கணினி ஒன்றினால் வாசிக்கக்கூடியதாக ஊடகம் ஒன்றில் அல்லது வடிவத்தில் தகவல்களைச் சேகரித்து மாற்றும் கருவி.

datapro : டேட்டாபுரோ : கணினி ஒன்றின் வன்பொருள் மற்றும் மென்பொருள் சாதனங்கள் தொடர்பான ஆழ்ந்த விவரங்களை வழங்குகிற ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்.

data processing : தகவல் அலசல் ; தகவல் ஆய்வு ; தகவல் தயாரிப்பு : 1. ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவு செய்ய தகவலில் செய்யப்படும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பணிகள். 2. கணினி மையம் ஒன்றின் அனைத்துப் பணிகள். 3. தகவல் தயாரிப்பு கருவியின் பணிகள். 4. பயனாளருக்குப் பயனுள்ள தகவல்களை வழங்க தகவல்களில் செய்யப்படும் பணிகள்.

data processing centre : தகவல் தயாரிப்பு மையம் : தகவல்களைப் பெறவும் மனிதர்களின் ஆணைகளுக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்தவும் பின்னர் அதன் முடிவுகளையும் வழங்கத் தேவையான கருவிகளைக் கொண்ட கணினி மையம். தகவல் தயாரிப்பு மையம் போன்றது. இதனை நடவடிக்கை மையம் என்றும் கூறுவதுண்டு.

data processing curriculum : தகவல் தயாரிப்புக் கல்வி : பள்ளி அல்லது கல்லூரி ஒன்று வழக்கமாக வழங்கும் கல்வி வகுப்பு. இக்கல்வி பயன்படு ஆணைத்தொகுப்புகளைக் கையாளவும், முறைமை ஆய்வாளராகப் பணிபுரியவும், உள்ளீடு நிலையிலான பணிகளைச் செய்யவும் மாணவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனம்.

data processing cycle : தகவல் தயாரிப்புச் சுழல் ; தகவல் செயலாக்கச் சுழல் ; உள்ளீடு, தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவை அடங்கிய ஒருங்கிணைந்த பணிகள்.

data processing management : தகவல் தயாரிப்பு நிர்வாகம் : தகவல் தயாரிப்புப் பணி, அதில் ஈடுபடுவோர், அதற்கான கருவிகளை நிர்வகித்தல், இந்நிர்வாகத்தில் திட்டமிடல், கட்டுப்பாடு, செயல்பாடு ஆகியன. ஏற்கப்பட்ட கோட்பாடுகள் பின்பற்றப்படுவதில் மற்ற நிர்வாகங்களுக்குத் தேவைப்படும் திறனே இதற்கும் தேவைப்படுகிறது.

data manager : தகவல் செயலாக்க மேலாளர்.

data processing system : தகவல் தயாரிப்பு முறைமை; தகவல் செயலாக்க அமைப்பு; தகவல் தயாரிப்பு இணைப்பு, வன்பொருள் 'மென்' பொருள், உழைப்பவர், தகவல்களை ஏற்றல், திட்டப்படி அதனைத் தயாரித்தல், மற்றும் விரும்பும் முடிவுகளைத் தயாரிப்பதற்கான நடைமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பு.

data processing technology : தகவல் தயாரிப்பு தொழில் நுணுக்கம் ; தகவல் செயலாக்கத் தொழில் நுட்பம் :

தகவல்களைக் கையாளுவதற்கான அறிவியல்.

data processor : தகவல் தயாரிப்புக் கருவி : தகவல்களின் மீதான செயல் பாட்டை ஆற்றக் கூடிய கருவி. எடுத்துக்காட்டாக மேசைக்கணக்கிடு கருவி அல்லது எண்ணியல் கணினி.

data propagator : தகவல் பரப்பி : DB2 மற்றும் IMS/ESA DB தகவல் தளங் களிடையே ஒரு நிலைப்பாட்டினை ஏற்படுத்துகிற IBM மொழி. IMS தகவல் தளத்தில் தகவல் மாற்றப் படுகிறபோது, அது தானாகவே DB2 தகவல் தளத்திற்கு மாற்றப்படுகிறது.

data protection : தகவல் பாதுகாப்பு : தகவல்களின் அழிவு, மாற்றம் அல் லது வெளிப்படலுக்கு வகை செய் யக்கூடிய, விரும்பியோ, விரும்பா மலோ இடம் பெறும் செயல்களி லிருந்து தகவல்களைப் பாதுகாப் பதற்கான நடவடிக்கைகள்.

data protection act : தகவல் பாது காப்புச் சட்டம் : இது நாடாளுமன்றத் தால் இயற்றப்படும் ஒரு சட்டம். மக்கள் பற்றிய கணினி சார்ந்த சொந்தத் தகவல்களை வைத்திருக் கும் அமைவனங்கள், வணிக நிறுவ னங்கள், நிலையங்கள் அனைத்தும் அந்த உண்மையைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். தங்களைப் பற் றிய கோப்புகளைப் பார்வையிடு வதற்குத் தனிமனிதர்களுக்கு உரிமை யுண்டு. காவல் மற்றும் மருத்துவத் துறை பதிவேடுகளுக்கு இதிலிருந்து விலக்கு உண்டு. தவறான தகவல் களைக் கொண்ட ஒரு பதிவேட் டினை மாற்றும்படி ஆணையிடப் படலாம்.

data purification : தகவல் தூய்மை யாக்கம் : தகவல்களின் செல்லும் தன்மையை உறுதிப்படுத்தும் செய் முறை.

data rate : தகவல் வேக வீதம் : தகவல் கள் அனுப்பப்படும் வேக வீதம். செய்தி வேகம் மூலம் அளவிடுவர். ஒரு விநாடிக்கு இத்தனை துண்மிகள் என்று கணக்கிடப்படும்.

data record : தகவல் ஆவணம் : ஒரு குறிப்பிட்ட பொருள் தொடர்பான பல்வேறு கூறுகளைப் பற்றிய தகவல் தொகுப்பு, தகவல் கோப்பு ஒன்றின் பகுதி.

data reduction : தகவல் இறுக்கம்; தகவல் குறைப்பு : வகை செய்யப் படாத தகவல்களை பயனுள்ளதாக வும் இறுக்கமானதாகவும் எளிமை யானதாகவும் மாற்றும் நடைமுறை. இம்முறையில் ஈடுகட்டல், அள விடல், நெருடல், நீக்குதல், இறுக்கு தல், சீர்செய்தல், வகைப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகின்றன.

date resource management : தகவல் ஆதார மேலாண்மை : ஓர் அமைவனத் தின் தகவல் ஆதாரங்களை மேலாண்மை செய்யும் பணிகள் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் தகவல் பொறியமைவுகள், தொழில் நுட்பம், நிருவாகச் சாதனங்கள் ஆகியவற்றை மேலாண்மை செய் யும் நடவடிக்கை: தகவல் தள நிரு வாகம், தகவல் நிருவாகம், தகவல் திட்டமிடல் ஆகியவை இதன் மூன்று முக்கிய அமைப்புகள்.

data scope : தகவல் காட்டி : தகவல் காட்சித் திரையைக் கண்காணிக்க உதவும் சிறப்பு காட்சியகக் கருவி. அனுப்பப்படும் தகவல்களின் உள்ள டக்கத்தை அது காட்டுகிறது.

data security : தகவல் பாதுகாப்பு : தற் செயலாகவோ, வேண்டுமென்றோ

தகவல்கள் அழிந்துவிடாமலும், வெளிப்படுத்துதல், திருத்தம் ஆகிய வற்றுக்கு ஆட்படாமலும் பாதுகாத் தல். கணினிப் பாதுகாப்பு, வட்டு நூலகம், பதிவு நாடா நூலகம் ஆகிய வற்றையும் காண்க.

data segment : தகவல் கூறு : கணிப் பொறியானது எந்தத் தகவல் குறிப்பு களின் அடிப்படையில் செயற்படு கிறதோ அந்தத் தகவல்களைச் சேமித்து வைக்கிற கணினி நினைவுப் பகுதி.

data set : தகவல் தொகுப்பு ; தகவல் தொகுதி : 1. தகவல் தொடர்பு வழி ஒன்றின் மூலமாக அனுப்பக்கூடிய வடிவத்துக்கு தகவல்களை அனுப் பும் கருவி. அடுத்த முனையில் அதே போன்ற மற்றொரு கருவி தகவல் களை அதன் பழைய வடிவத்துக்கு மாற்றுகின்றது. அதனால் கணினி அல்லது பிற எந்திரங்களுக்கு அந்தத் தகவல்கள் ஏற்புடையவை ஆகின் றன. 2. தொடர்புடைய தகவல் வகை களின் தொகுப்பு, குறிப்பாக தொடர் புடைய ஆவணங்களின் தொகுப்பு, கோப்பு எனப்படும்.

data set control block : தகவல் தொகுதிக் கட்டுப்பாட்டுப் பகுதி : ஒரு வட்டில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒரு தகவல் தொகுதியின்அல்லது தொகுதிகளின் பெயர். சுருக்க விவ ரிப்பு, அமைவிடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிற பகுதி.

data set label (DSL) : தகவல் தொகுதி முகப்புச்சீட்டு (டிஎஸ்எல்) : தகவல் தொகுதியை அடையாளம் காண் பதற்கு அதன் பெயர், வடிவளவு, எழுதப்/படிக்க வசதிகள், சேமிப் பகத்தில் அதன் அமைவிட எல்லை கள் போன்ற விவரங்களைக் கொண் டுள்ள முகப்புச் சீட்டு.

data sharing : தகவல் பகிர்வு : கணினி ஒன்றின் தயாரிப்புத் திறன் அல்லது பல முனைகளில் உள்ள கணினி பயன்படுத்துவோர் ஒரு முனையில் உள்ள தகவல்களைப் பெறுவதற் கான திறன்.

data sheet : தகவல் தாள் : உள்ளீட்டு மதிப்பீடுகளைத்தட்டச்சு செய்வதற்கு வசதியான ஒரு வடிவில் பதிவு செய் வதற்கு உதவும் சிறப்புப் படிவம்.

data signal : தகவல் குறிப்பு : ஒரு வரியில் அல்லது வழியில் செல்லும் பருநிலைத் தகவல் (துடிப்புகள் அல்லது அதிர்வுகள் அல்லது மின் விசை அல்லது ஒளி).

data sink : தகவல் சேமிப்புக் கலன் : தகவல்களை அனுப்பும் கருவி ஒன் றின் வழியாக அனுப்பப்படும் சமிக் ஞைகளை ஏற்கக்கூடிய பதிவுக் கருவி அல்லது எதிர்காலப் பயன் பாட்டுக்காக சேமிக்கும் கருவி.

data source : தகவல் ஆதாரம் : தகவல் அனுப்பு கருவி ஒன்றுக்காக குறியீடு களை உருவாக்கும் திறன் உள்ள கருவி.

data storage device : தகவல் தேக்கக் கருவி; தகவல் சேமிப்புக் கருவி : ஆயிரக்கணக்கான அல்லது பல இலட்சக்கணக்கான எழுத்துகளை சேமிப்பதற்கான கருவி, மின்காந்த வட்டு, நாடா, கொள்கலன் அல்லது அட்டை.

data storage techniques : தகவல் தேக்க நுட்பங்கள்; தகவல் சேமிப்பு உத்திகள் : தகவல் கோப்புகளை சேமிக்க, ஆணைத்தொகுப்பு ஒன்றில் கையாளப்படும் உத்திகள்.

data stream : தகவல் ஓடை : ஒற்றை உள்ளீட்டு/வெளியீட்டுச் செயல் மூலம் தகவல் வழி ஒன்றின் மூலமாக

அனுப்பப்படும் தொடர் வரிசைத் தகவல்.

data structure : தகவல் அமைப்பு ; தகவல் கட்டமைவு : தகவல் அடிப் படை ஒன்றின் கோப்புகளுக்கிடை யிலான உறவு வடிவம் மற்றும் ஒவ் வொரு கோப்பிலும் உள்ள தகவல் வகைகளுக்கிடையிலான உறவு.

data switch : தகவல் விசை : ஒரு தொடரை இன்னொரு தொடருக்கு அனுப்புகிற விசைப்பெட்டி. எடுத்துக் காட்டு : பன்முக அச்சடிப்பிகளை ஒரு கணினியுடன் இணைக்க அல் லது பன்முகக் கணினிகளை ஒரே அச்சடிப்பியுடன் இணைக்க இது பயன்படுகிறது. இதனைக் கையா லோ, தானியங்கு விசையினாலோ செய்யலாம்.

data tablet : தகவல் பலகை : வரைபட வெளியீட்டு விசைகளுக்கான கை யால் இயக்கும் உள்ளீட்டுக் கருவி.

data terminal : தகவல் முனையம் : கணினி முறைமை ஒன்றில் தகவல் தொடர்பு இணைப்பில் தகவல்களை உள்ளிட அல்லது பெற உதவும் முனையம்.

data terminal equipment : தகவல் முனையச் சாதனங்கள் : ஒரு முனை யத்திலிருந்து தகவலை அனுப்பு வதற்கு உதவுவதற்குத் தேவையான சாதனம். எடுத்துக்காட்டு : தகவல் வட்டு, தகவல் ஆதாரம்.

data terminator : தகவல் முடி வுறுத்தி : உட்பாட்டுத் தகவல்கள் முடி வுற்று விட்டன என்பதைக் குறித்துக் காட்டும் ஒரு தனிவகைத் தகவல் சாதனம். இதனைக் காவல் சாதனம் (Sentinal) அல்லது மோப்பச் சாதனம் (Trailer) என்றும் கூறுவர்.

data transfer : தகவல் மாற்றம் : கணி அமைவுக்குள் தகவல்களை இட மாற்றம் செய்தல். செய்தித் தொடர்பு இணையத்தின் மூலம் இந்த மாற்றம் செய்யப்படுகிறது. தகவல்கள் ஆதாரத்தில் தானாக அழிக்கப்படுவ தில்லை என்பதால், இட மாற்றம் என்பது உண்மையில் ஒரு படி யெடுப்பு பணியேயாகும்.

data transfer operations : தகவல் செலுத்துச் செயல் முறைகள் ; தகவல் அனுப்புகைச் செயல்கள் : தகவல் தொடர்பு வழியிலோ அல்லது கணினி ஒன்றின் சேமிப்புப் பகுதி யிலோ, ஓரிடத்தில் உள்ளதை பிரதி செய்து மற்றொரு இடத்திற்கு மாற்றுதல்.

data transparency : தகவல் மறைப் பின்மை : தகவல்கள் எந்த அமை விடத்தில் இருந்தாலும் அல்லது அது எதற்குப் பயன்படுவதாக இருந்தா லும், அதனை எளிதில் அணுகுவதற் கான திறம்பாடு.

data transfer rate : தகவல் செலுத்து வீதம் : தகவல் அனுப்புகை வீதம் : கணினியின் முக்கிய நினைவிடத்தி லிருந்து வட்டுக்கு அல்லது ஒரு கணினியின் நினைவிடத்திலிருந்து மற்றொரு கணினியின் நினைவிடத் துக்குத் தகவல்களை அனுப்பும் வேக வீதம்.

data transmission : தகவல் அனுப் புகை; தகவல் செலுத்துகை : முறைமை ஒன்றின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு, தகவல்களை அனுப்புதல்.

data transmission channels : தகவல் அனுப்பீட்டு வழிகள் : தகவல் அனுப் பீட்டு வழிகள் அல்லது 'பெருவழி கள்' என்பவை, ஓர் அமைவிடத்தி லிருந்து இன்னோர் அமைவிடத்திற் குத் தகவல்களைக் கொண்டு செல்

லப் பயன்படுகின்றன. இவை குறும அலைநீளம், அகல அலை நீளம், குரல் அலை நீளம் என மூன்று வகைப்படும்.

data type : தகவல் வகை ; தகவல் மாதிரி.

data validation : தகவல் கள வரை யறை : தகவல் களங்கள் விரும்பப் படும் பண்புகளுக்கேற்ப அமை வதை உறுதி செய்ய மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகள். பொருத்த மற்ற எழுத்துகள் அல்லது குறிப் பிடப்பட்ட நீளம், அல்லது மதிப்பீடு கள் ஆகியவற்றின் அடிப்படையில் தகவல், களங்கள் சோதனையிடப் படலாம்.

data value : தகவல் மதிப்பளவுகள் ; தகவல் மதிப்பீடு : தகவல் வகை களின் பிரதிநிதியாகப் பயன்படும் குறியீடு களின் தொடர்.

data verification : தகவல் சரிபார்த் தல் : தகவல் ஆதாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் தகவல்கள் சரி யான வகையைச் சார்ந்ததா, சரியான நீளமுடையதா என்பனவற்றைச் சரி பார்த்தல் இன்றியமையாதது. எடுத் துக்காட்டாக, ஒரு சம்பளப் பட்டியல் தகவல் ஆதாரத்தில் ஒரு பணியாள ரின் முகவரி அஞ்சல் குறியீடு முக் கியமாகப் பதிவாகியிருக்கவேண் டும். அஞ்சல் குறியீடு இலக்கங்களில் அமைந்திருக்கிறதா, ஆறு இலக்கங் களைக் கொண்டிருக்கிறதா (இந்திய அஞ்சல் குறியீடுகள் ஆறு இலக்கங் கள் கொண்டவை) என்பதைத் தக வல் ஆதாரம் சரிபார்த்தல் வேண்டும்.

data word : தகவல் சொல் : ஒழுங்க மைக்கப்பட்ட, குறிப்பிட்ட எழுத் துகளின் தொகுப்பு. பொதுவாக முன்பே வரையறுக்கப்பட்ட எண், கணினியின் இணைப்புகளில் சேமிக் கப்பட்டு, தகவலின் அடிப்படை அலகாக வேறிடத்துக்கு மாற்றப்படு கிறது.

data word size : தகவல் சொல் நீளம்.

date field : தேதிப்புலம் ; தேதிவகைப் புலம்.

date math : தேதிக் கணக்கு : தேதி களைக் கொண்டு செய்யப்படும் கணிப்புகள். எடுத்துக்காட்டு : ஜனவரி 30 + 5 = பிப்ரவரி 4.

datum : தகவல் உருப்படி : கணினிச் சொல் போன்ற தகவலின் ஒரு அலகு.

daughter board : மகள் பலகை : தாய்ப் பலகையுடன் பொருத்தப்படும் இணைப்புப் பலகை.

DB : டிபி : 'டெசிபல்' (Decibal) என்பதன் குறும்பெயர். ஒரு செய்தித் தொடர்புக் கம்பியில் அனுப்பீட்டு இழப்பீடுகளை மடக்கை முறையில் அளவிடுவதற்கான அலகு.

DB/DC (Data Base / Data Communications) : டிபி/டிசி (தகவல் தளம் / தகவல் தொடர்புகள் : தகவல் தளப் பணிகளையும், தகவல் தொடர்புப் பணிகளையும் ஆற்றுகிற மென் பொருள்களைக் குறிக்கும் சொல்.

DB2 : டிபி2 (தகவல் தளம்-2) : ஒரு பெரிய முதன்மைப் பொறியமை வில் இயங்குகிற ஐபிஎம்(IBM) முதன் மைப் பொறியமைவிலிருந்து உரு வான தகவல் தள மேலாண்மைப் பொறியமைவு (DBMS). இது, ஐபிஎம் -இன் பெருந்தகவல் தள விளை பொருளாகியுள்ள முழுமையான டிபிஎம்எஸ் பொறியமைவு. இது கட்டமைவு வினவு மொழி (SQL) இடைமுகப்பு.

DB-25-connector : டிபி-25 இணைப்பி : 25 செருகிகளை அல்லது 25 செருகு

இடங்களைக் கொண்ட இணைப்பி, பெரும்பாலும் ஆர்எஸ்-232 சி முக விடை இணைப்பில் பயன்படுத்தப் படுகிறது.

D.base file : தகவல் தளக்கோப்பு.

D.base programme : தகவல் தளச் செயல்முறை.

DBMS : டிபிஎம்எஸ் : Database Management System என்பதன் குறும் பெயர். இதற்குத் தகவல்தள நிர்வாக முறைமை என்பது பொருளாகும்.

DC : டிசி : *1. தகவல் மாற்றம்* (Data Convertor). *2. வடிவமாற்றம்* (Design Change). *3. எண்ணியல் கணினி* (Digital Computer). *4. நேர்மின்* (Direct Current).*5. நேர்வட்டம்* (Direct Circle). *6. பட வெளியீட்டு விசைப்பலகை* (Display Console). ஆகியவற்றின் குறும்பெயர்.

DCTL : டிசிடிஎல் : DIrect Coupled Transister Logic என்பதன் குறும்பெயர். நேரடி இணைப்பு மின்மப் பெருக்கி (டிரான்சிஸ்டர்) தருக்க முறை என்பது இதன் பொருள்.

DDD : டிடிடி : நேரடித் தொலைவு அழைப்பு Direct Distance Dialling என்பதன் குறும்பெயர். நேரடித் தொலைதூர அழைப்பு என்பதாகும். தொலைபேசி இயக்குபவரின் உதவி யில்லாமல் இவ்வசதியைப் பயன் படுத்தி வெகுதொலைவில் உள்ள தொலைபேசியுடன் தொடர்பு கொள்ள இயலும். தகவல் தொலைத் தொடர்புக்கும் இவ்வசதி பயன்படு கிறது.

DDL : டிடிஎல் ; தகவல் விவரிப்பு மொழி : Data Definition Language என்பதன் குறும்பெயர். தகவல் அடிப்படை ஒன்றில் தகவல் வடிவங் களை வெளியிடுவதற்கான மொழி.

dead halt : முழு நிறுத்தம் : இச்சூழ் நிலையில் நிறுத்தப்பட்ட மையத் துக்கு முறைமையினால் திரும்ப வர முடிவதில்லை.

dead letter box : சேராக் கடிதப் பெட்டி : செய்திகளின் நடைமுறைக் கான முறைமைகளில் வழங்கமுடி யாத செய்திகளைக் கைப்பற்றுவதற் கான கோப்பு.

dead lock : முட்டுக்கட்டை ; முடக்க நிலை ; தேக்க நிலை : ஆதாரம் ஒன்றி லிருந்து தகவல்களைப் பெறுவதற்கு இடையூறாக இருக்கும், தீர்வு காணப் படாத முட்டுக்கட்டை.

deallocation : விடுவிப்பு : இனிமே லும் தேவைப்படாத ஆதாரம் ஒன்றை ஆணை ஒன்றின் ஆதாரத்தி லிருந்து விடுவித்தல். ஒதுக்கீடு என் பதற்கு எதிர்நிலையானது.

deadly embrace : தேக்கநிலை மேவல் : ஒரு செய்முறையில் இரு ஆக்கக்கூறுகள் ஒன்றின் பதிலை ஒன்று எதிர்பார்த்து ஒரு தேக்கம் ஏற் பட்டிருக்கும் நிலை. எடுத்துக் காட்டு: ஓர் இணையத்தில், ஒரு பயனாளர் 'A' என்ற கோப்பில் பணி புரிந்து கொண்டு, 'B' என்ற கோப் பினை எதிர் பார்த்துக்கொண்டிருக் கிறார். ஆனால், மற்றொரு பயனாளர் 'B' கோப்பில் பணியாற்றிக் கொண்டு 'A' கோப்பை எதிர் பார்க்கிறார் என்றால் இருவரும் ஒருவரையொரு வர் எதிர்பார்க்கின்றனர். இதனால், இருவர் பணியும் தேங்கி நிற்கிறது.

d-BASE : தகவல்தள ஆணைத் தொகுப்பு. ஆஸ்டன்டேட் (Ashton Tate) என்ற நிறுவனம் உருவாக்கிய தொகுப்பு.

debit card : பற்று அட்டை : கடை ஒன்றில் பொருள்களை வாங்கும் ஒருவர், பொருள்களுக்கான விலை

யைச் செலுத்தப் பயன்படுத்தும் வங்கி ஒன்றின் அட்டை. (கடைக் காரரும் அந்தக் குறிப்பிட்ட வங்கி யில் கணக்கு வைத்திருப்பார்).

deblock : ஆவணப்பிரிப்பு : ஒரு தொகுதியிலிருந்து ஆவணங்களைப் பிரித்தெடுத்தல்.

deblocking : தொகுப்பிலிருந்து பகுத்தல் : ஒரு தொகுப்பு அல்லது தருக்கவியல் ஆவணங்களின் குழு ஒன்றிலிருந்து தருக்கவியல் ஆவணம் ஒன்றைப் பிரித்தெடுத்தல்.

debounce : மறுபதிவு தவிர்ப்பு : கண்டு பிடிக்கப்படுவதைத் தவிர்க்க ஒரு விசை அல்லது இணைப்புக்குமிழ் அழிவு தரும் வகையில் மூடப்படு வதைத் தவிர்த்தல். ஒரு மின்குமிழின் இணைப்புகள் தடைப்பட கால அவகாசம் அளிப்பது ஒரு வகை வழியாகும்.

debug : தவறு நீக்குதல்;தவறு நீக்கி ; பிழை நீக்கி : ஆணைத் தொகுப்பு ஒன்றில் பிழைகள் அனைத்தையும் கண்டுபிடித்தல், இருக்குமிடத்தை உறுதி செய்தல், மற்றும் அவற்றை நீக்குதல். கணினியின் பிழையான இயக்கத்தைச் சீர் செய்தல்.

debugger : தவறு கண்டறி சாதனம்; பிழை நீக்கி : ஒரு செயல்முறையி லுள்ள தவற்றைக் கண்டறிய உதவு கிற மென்சாதனம். இது, ஒரு குறிப் பிட்ட அறிக்கையில் செயல் முறை யை நிறுத்தவும், ஒரே சமயத்தில் அதன் வழியே ஓர் அறிக்கையைச் செலுத்தவும் பொறியமைவுத் தகவல் களையும், செயல்முறை மாறி மதிப் புருக்களையும் பார்க்க அனுமதிக் கிறது. நவீன தவறு கண்டறி சாதனங் கள் ஆதார மற்றும் இலக்குக் குறியீடு களை இணைக்கிறது. இதனால், செயல்முறைப்படுத்துபவர், அறி வுறுத்தங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும்போதே ஆதாரச் செயல்முறையை வகுக்க முடிகிறது.

debugging : பிழைநீக்கம் ; தவறு போக்கல் : தவறு கண்டறிதல்.

debugging aids : பிழை நீக்க உதவி கள் : கணினியின் வழக்கமான சோதனை நடவடிக்கைகள்.

DEC : டிஇசி : Digital Equipment Corporation என்பதன் குறும்பெயர். எண் ணியல் துணைக்கருவி அமைவன மாகும்.

decatenate : தொடர் பிரித்தல் : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதி களாகப் பிரித்தல். சேர்த்தலுக்கு எதிர்நிலையானது.

decay : சிதைவு : குறியீடு அல்லது மின்னேற்றத்தின் வலிமை குறைதல்.

decay time: சரிசெய்யும் நேரம்.

deceleration time: ஒடுக்க நேரம்.

decending sort : இறங்குமுக வரிசைப் படுத்தல் : தகவல்களை மேலிருந்து கீழாக இறங்குமுக வரிசையில் வகைப்படுத்தல்.

decentralized computer system : மையமிலா கணினி பொறியமைவு: கணினியும், சேமிப்புச் சாதனங்களும் ஒரே அமைவிடத்தில் அமைந்து, கணினியை அணுகும் சாதனங்கள் வேறிடங்களில் அமைந்திருக்கிற பொறியமைவு.

decentralized processing : மைய மற்று செயல்முறைப்படுத்துதல் : வெவ்வேறு அமைவிடங்களில் அமைந்துள்ள கணினியமைவுகள், கணினியமைவுகளிடையே தகவல் களை அனுப்பலாமென்றாலும், இது அன்றாடச் செய்தித் தொடர்புகளைக் கட்டுப்படுத்துகிறது. இது பகிர்

மானச் செய்முறைப்படுத்துதல், மையச் செய்முறைப்படுத்துதல் ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது.

decibel : டெசிபல் : ஒரு குறியீட்டின் குரல் முனைப்பினை அல்லது வலிமையினை அளவிடும் அலகு. மனிதர்கள் 10 டிபி முதல் 140 டிபி வரையிலான குரல் முனைப்பினைக் கேட்க முடிகிறது. சந்தடி மிகுந்த ஒரு தொழிற்சாலையில் 90 டிபி ஓசை எழுகிறது. இடிமுழக்கத்தில் 110 டிபி ஓசை உண்டாகிறது. 120 டிபி அளவுக்கு மேற்பட்ட ஓசையினால் காதுவலி உண்டாகும்.

decimal : பதின்மம் ; தசமம் ; பதின்மானம் : பதின்மக் குறிமானத்தில் பயன்படுத்தப்படும் 0 முதல் 9 வரையிலான இலக்கம். பதின்மக் குறிமானத்தைக் (ஆதாரம் 10) கையாளும்போது, '0' முதல் '9' வரையிலான (பத்துக்கு ஒன்று குறைவு) இலக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோன்று '6' -ஐ ஆதாரமாகக் கொண்ட குறிமானத்தில் '0' முதல் '5' முதல் வரையிலான (ஆறைவிட ஒன்று குறைந்த) எண்களையும், ஈரிலக்கக் குறிமானத்தில் (ஆதாரம் 1) 0 முதல் 1 வரை மட்டும் பயன்படுத்துகிறோம்.

decimal numbering : பதின்ம இலக்கமிடல் : எண்ணுவதற்கு அடிப்படையாக ஒரு 10 இலக்கச் சுழற்சியைப் பயன்படுத்துகிற எண்மானமுறை. இதில் பயன்படுத்தப்படும் இலக்கங்கள் 0 1 2 3 4 5 6 7 8 9.

decimal code : பதின்மக் குறியீடு ; தசமக் குறியீடு : தனியாக வேறொரு எண்முறைமையில் பதின்ம எண்களைக் குறிப்பிடும் முறை.

decimal digit : பதின்ம இலக்கம் ; தசம இலக்கம் : பதின்ம எண் முறைமையில் உள்ள ஒரு எண். பதின்மமுறையின் அடிப்படை எண் 10. கீழ்க் காணும் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. 0,1,2,3,4,5,6,7,8 மற்றும் 9.

decimal number : பதின்ம எண் ; தசம எண் : பொதுவாக ஒற்றை இலக்கத்துக்கு மேற்பட்ட எண், அதன் அளவு 10-ஐ அடிப்படையாகக் கொண்ட எண்களால் குறிக்கப்படுகிறது.

decimal point : பதின்மப் புள்ளி ; தசமப் புள்ளி : பதின்மப்புள்ளி என்பது எண்ணும் பதின்ம எண்களும் கலந்த ஒன்றில் முழு எண்களை பதின்ம எண்களிலிருந்து பிரிக்கிறது. 741.12 என்ற பதின்ம எண்ணில் உள்ள பதின்மப் புள்ளி 741-ஐயும் 12-ஐயும் பிரிக்கிறது.

decimal system : பதின்ம முறை ; தசம முறை : அடிப்படை 10 எனக் கொள்ளும் எண் முறைமையாகும்.

decimal to binary conversion : பதின்ம-இருமமுறை-மாற்றம்;பதின்ம முறைமையிலிருந்து இரட்டைஇலக்க எண்களாக மாற்றுதல் : பதின்ம முறைமையில் எழுதப்பட்ட எண்களை இருமமுறைக்குச் சமமான எண்களாக மாற்றுதல்.

$$44_{10} = 1 \times 2^5 + 0 \times 2^4 + 1 \times 2^3 + 1 \times 2^2 + 0 \times 2^1 + 02^0 = 101100_2.$$

decimal to hexadecimal conversion : பதின்ம முறையிலிருந்து பதினாறெண் முறைக்கு மாற்றுதல் : 10-ஐ அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு எண்ணை 16-ஐ அடிப்படையாகக் கொண்ட எண் முறைமையில் எழுதுதல்.

decimal to octal conversion : பதின்ம-எண்ம முறை மாற்றம்; பதின்ம முறையிலிருந்து எட்டை அடிப்படையாகக் கொண்ட முறைக்கு மாற்றுதல் : பத்தை அடிப்படையாகக் கொண்ட

பதின்ம முறையில் எழுதப்பட்ட எண் ஒன்றை எட்டை அடிப்படையாகக் கொண்ட முறையில் சமமான எண்ணுக்கு மாற்றுதல்.

decision box : தீர்வுப் பேழை : தொடர் வரிசை வரை படங்களில் பயன்படுத் தப்படும் சாய்சதுர வடிவக் குறியீடு. இது, ஒரு முடிவு தேவைப்படும் போது செயல் முறையில் ஒரு புள்ளியைச் சுட்டிக் காட்டுகிறது.



decision : தீர்வு : நினைவகத்தில் உள்ள தகவல்களுக்கிடையிலும், பதிவேட்டில் உள்ள தகவல்களுக்கிடையிலும் ஒரு வகையான உறவு முறை உள்ளது என்பதைத் தீர்மானிக்கும் கணினிச் செயல். மாற்றுவழிகளுக்கு மாற்றுவதற்கான செயல், எதிர்கால நடவடிக்கையை உறுதி செய்தல்.

decision instruction : முடிவறி கட்டளை; முடிவு காணும் கட்டளை.

decision instruction : முடிவு காணும் கட்டளை : ஆணைத் தொகுப்பில் உள்ள ஒரு பகுதியைத் தேர்வு செய்வதைப் பாதிக்கும் கட்டளை. எடுத்துக் காட்டு. நிபந்தனைத் தாவல் ஆணை.

decision making : தீர்வு செய்தல் : பல விருப்பத் தேர்வுகளிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்தல். மனிதனும் எந்திரமும் எடுக்கும் முடிவுகளில் முறையான சமநிலை இருப்பது பொறியமைவின் வடிவமைப்பில் முக்கியமான அங்கமாகும். செயல் முறைப்படுத்தும் நோக்கில் இருவழிகளில் முடிவெடுக்கப்படுகிறது. இது, என்றும் மாறாத விதிகள் மற்றும் நிபந்தனைகளின் தொகுதி. இன்னொன்று, கண்டுணர்வு முறை. இதில், விதிகள் அவ்வப்போது நிலைமைக்கேற்ப மாறுதலடையும். கண்டுணர்வு முறை, செயற்கை நுண்ணறிவு, (AI) பொறியமைவுகளில் பயன்படுத்தப்படுகிறது.

decision making process : முடிவெடுக்கும் செய்முறை : ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைப் போக்கினைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்படும் அறிவுத்திறன், வடிவமைப்பு, தேர்வு நடவடிக்கைச் செய்முறை.

decision structure : தீர்மான அமைப்பு: தேர்வு அமைப்பு போன்றது.

decision support : தீர்மான உதவி.

decision support system (DSS) : தீர்மானிக்க உதவும் பொறியமைவு (டிஎஸ்எஸ்) : மற்றப்பொறியமைவுகளிலிருந்து இன்றியமையாத தகவல்களை எடுத்துக்கொண்டு, கட்டமைவற்ற முடிவுகளை எடுப்பதற்கு அந்தத் தகவல்களைப் பயன்படுத்த மேலாளர்களுக்கு உதவுகிற ஒரு மேலாண்மைத் தகவல் பொறியமைவுப் பிரிவினைக் குறிக்கும் ஒரு பொதுவான சொல்.

decision symbol : முடிவுக் குறியீடு ; முடிவு காண் குறியீடு : ஒரு தேர்வினைச் செய்வதற்குத் தருக்கமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரு செய்முறையினைக் குறிக்கப் பயன்படுத்தப்படும். இணைகர வடிவம் உள்ளீடு வெளியீடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. சாய்சதுர வடிவத் தொடர் வரிசை வரைபடக் குறியீடு.

decision table : முடிவுகாண் அட்டவணை : சிக்கல் ஒன்றை விளக்கும்

பொழுது தோன்றும் அனைத்து நிலைமைகளையும் அவற்றுக்கான நடவடிக்கைகளையும் வரிசைப்படுத்தும் அட்டவணை. சில நேரத்தில் நடவடிக்கை ஒழுங்குமுறைப் பட்டியலுக்குப்பதிலாகப் பயன்படுத்தப் படுகிறது.

decision theory : முடிவுகாண் கோட்பாடு : ஒன்றுக்கு மேற்பட்ட பல இயலக் கூடிய மாற்றுகளிடையே ஒன்றைத் தேர்வு செய்யும் முறையை விவரிக்கவும், அதனை அறிவுபூர்வமானதாக ஆக்கவும் உருவாக்கப் பட்ட உத்திகள் மற்றும் கொள்கைகளின் விரிவான வரிசை.

decision tree : முடிவுகாண் மரம் : எந்தவொரு சூழ்நிலையிலும் உள்ள மாற்றுகளை கூறும் படவிளக்கம்.

deck : தொகுப்பு : துளையிடப்பட்ட அட்டைகளின் தொகுப்பு.

declaration : அறிவிக்கை : செயல் முறையிலும் அதன்வகையிலும் பயன்படுத்தப்படவிருக்கும் மாறியல் மதிப்புருக்களின் (variable) மென் சாதனம் / தொகுப்பி / மொழி பெயர்ப்பி போன்றவற்றை செயல் முறைப்படுத்துபவர், அறிவிக்கை செய்ய வேண்டியிருக்குமிடத்து, சில செயல்முறைப்படுத்தும் மொழிகளில் பயன்படுத்தப்படும் உத்தி.

declaration statement : அறிவிப்பு அறிக்கை : ஆணைத் தொகுப்பின் மற்ற கூறுகளின் தன்மையை விளக்கும் ஆணைத் தொகுப்பு ஒன்றின் பகுதி அல்லது வன்பொருள் ஒன்றின் சில பகுதிகளை சிறப்பான பயன் பாட்டுக்காக ஒதுக்கும் ஆணைத் தொகுப்புப் பகுதி.

declaration time : நிறுத்த நேரம் : நாடா ஒன்றிலிருந்து தகவல் ஒன்றின் கடைப்பகுதியை படித்த அல்லது பதிவு செய்த பிறகு அதனை நிறுத்தத் தேவையான நேரம்.

declarative knowledge : அறிவிப்பு அறிவு : பொருள்கள் பற்றியும், நிகழ்வுகள் குறித்தும், அவை ஒன்றுக் கொன்று எவ்வாறு தொடர்புடையன என்பது பற்றியும் உண்மைகளை அறிந்து கொள்வதன் மூலம் கற்றுக் கொள்ளுதல்.

declarative language : அறிவிப்பு மொழி : ஒரு பணியைச் செய்து முடிப் பதற்குக் கணினிக்குத் தேவைப் படும் துல்லியமான நடைமுறையைக் குறித்துரைப்பதிலிருந்து செயல் வரைவாளரை விடுவிக்கும் ஒரு செயல் வரைவு மொழி. பதிலாக, செயல்முறைப்படுத்துபவர், தான் என்ன செய்ய விரும்புகிறார் என்பதைச் செயல்வரைவுக்குத் தெரிவிக் கிறார்.

decode : குறி மொழி மாற்றம் ; குறி முறை நீக்கம் : குறியீடுகளினால் கூறப் பட்ட தகவல் ஒன்றை மொழி மாற்றம் செய்தல் அல்லது உறுதி செய்தல், Encode என்ற சொல்லுக்கு எதிர்நிலை யானது.

decoder : குறி மொழி மாற்றி ; குறி முறை நீக்கி ; பொருள் உணர்த்தும் சாதனம் : 1. பொருளுணர்த்தும் சாதனம். 2. தரப்படும் உள்ளீட்டுச் சமிக்ஞைகளுக்கு ஏற்ப ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெளியீட்டு வழிகளைத் தேர்வு செய்யும் விசைகளின் அடித்தளப் பலகை.

decollate : தாள் பிரித்தல் : தொடர் படிவங்களின் பிரதிகளை வரிசையாகச் சேர்த்து அவற்றுக்கிடையிலான கரித்தாள்களை அகற்றுதல்.

decompiler : பிரிப்பி : எந்திர மொழியை ஓர் உயர்நிலை ஆதார மொழியாக மாற்றுகிற செயல்முறை.

இதன் மூலம் கிடைக்கும் குறியீடு புரிந்துகொள்வதற்குக் கடினமான தாக இருக்கக்கூடும். ஏனென்றால், மாறி மதிப்புருக்களும், வாலாயங் களும் பொதுவாக A0001, A0002 போன்ற பெயர்களில் இருக்கும்.

decompress : தளர்த்துதல் : திரட்சி யாக்கம் செய்த தகவல்களை அது முதலிலிருந்த வடிவளவுக்கு மீண் டும் தளர்த்திக்கொண்டுவருதல்.

decrement : குறைவு ; கீழிறக்கு ; குறைப்பு : மதிப்பீடு அல்லது மாறக் கூடிய ஒன்று குறைக்கப்பட்டிருக்கும் அளவு. Increment என்பதற்கு எதிர் நிலையானது.

decryption : குறியீடுமாற்றம் : குறியீடு களினால் தரப்பட்ட செய்தி ஒன்றி லிருந்து பொருளுள்ள ஆதி செய்தியை உருவாக்குதல் அல்லது தெளிவான உரைப்படுத்துதல். குறி யீட்டுக்கு நிலையானது.

DECUS : எண்ணிலக்க கருவிக் கணினி: Digital Eqipment Computer Users Society என்பதன் குறும்பெயர். எண்ணிலக்க கருவிக் கணினியைப் பயன்படுத்துவோர் குழு, அக்குழு வின் நோக்கம் எண்ணிலக்க கருவிக் கணினி தொடர்பான கருத்துகளை யும் தகவல்களையும் பரிமாறிக் கொள்வதாகும்.

dedicated : தனிப் பயனான ; ஒதுக்கப் பட்ட : தொகுப்பாணைக் கருவிகள் தொடர்பான அல்லது சிறப்பான பயன்பாட்டுக்காகத் தயாரிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட நடைமுறை கள்.

dedicated channel : ஒருநோக்க வழி : ஒரே நோக்கத்திற்காகப் பயன்படுத் தப்படும் கணினி வழி அல்லது செய்தித் தொடர்பு வழி.

dedicated chip : தனிப்பயன் சிப்பு ; ஒரு நோக்கச் சிப்பு : ஒரு பணியை மட்டுமே செய்கிற ஒரு சிப்பு. எடுத்துக்காட்டு : நினைவுப்பதிப் பான் சிப்பு.

dedicated computer : தனிப்பயன் கணினி ; ஒதுக்கப்பட்ட கணினி : ஒரு குறிப்பிட்ட பணிக்காக ஒதுக்கப் பட்ட கணினி. வடிவத்தில் மட்டும் இந்த ஒதுக்கீடு இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சிறப்புப் பயன் கணினியுடன் ஒப்பிடவும்.

dedicated device : தனிப்பயன் கருவி ; ஒதுக்கப்பட்ட கருவி : ஒரு குறிப் பிட்ட வேலைக்கென வடிவமைக்கப்பட்ட கருவி. மற்ற பணிகளுக்காக அதில் ஆணையிட முடியாது.

dedicated lines : தனிப்பயன் தொலை பேசி இணைப்புகள் ; ஒதுக்கீடு செய் யப்பட்ட தொலைபேசி இணைப்புகள் : தனிப்பட்ட ஒருவருக்கோ, ஒரு குழு வினருக்கோ தொலைத் தகவல் தொடர்புக்காக தனிப்பட்ட முறை யில் குத்தகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொலைபேசி இணைப்புகள். இத்தகைய இணைப் புகளுக்கு ஒரு குறிப்பிட்ட கட்டணம் செலுத்தப்படுகிறது. பொதுவான இணைப்புகளுக்கு ஒரு நிமிடத்திற்கு என்று கணக்கிட்டுக் கட்டணம் வசூ லிப்பது போல் கட்டணம் வசூலிக் கப்படுவதில்லை.

dedicated service : அர்ப்பணிப்புப் பணி ; ஒரு நோக்கப்பணி : மற்றப் பயன்படுத்துவோர் அல்லது அமை வனங்கள் பகிர்ந்து கொள்ளாத பணி.

dedicated system : தனிப் பயன் முறைமை ; ஒதுக்கப்பட்ட முறைமை: ஒரே ஒரு பணிக்காக ஒதுக்கப்பட்ட கணினியைஅடிப்படையாகக்கொண்ட கருவி. எடுத்துக்காட்டு : சொற்களை

வகைப்படுத்துதல். மற்ற பணிகளை விட எதற்காக வடிவமைக்கப்பட்டதோ அதற்காக அதனைப் பயன்படுத்துவது எளிது. பொதுவான நோக்கங்களுக்கான முறைமைகள் அதிகமாக வளைந்து கொடுக்கக்கூடியவை.

dedicated word processor : தனிப் பயன் சொல் தொகுப்பி ; ஒதுக்கப்பட்ட சொல் வகை செய்கருவி : இக்கருவியின் வன்பொருள், சொற்களை வகை செய்வதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இதன் விசைகள் சிறப்பான பணிகளுக்கு ஒதுக்கப்பட்டு, ஆணைகள் அதன் மேல் குறிப்பிடப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாகச் சொற்களை நீக்கு, வாக்கியத்தை நீக்கு, அல்லது இடையில் சேர் என்று குறிப்பிடப்பட்டிக்கும்.

de facto standard : நடைமுறைத் தர அளவு : போட்டியில்லாமல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், தர நிர்ணய அமைவனங்களினால் அதிகார முறையில் தரநிலை வாய்ந்ததாக அறிவிக்கப்படாத ஒரு செயல்முறைப்படுத்தும் மொழி, பொருள், வடிவமைப்பு அல்லது செயல்முறை.

de jure standard : சட்டமுறைத் தர அளவு : அமெரிக்கத் தேசியத் தரநிருணய நிறுவனம் (ANSI) போன்ற தர நிருணய நிறுவனங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்காடியில் விற்பனையிலுள்ள தர அளவுகள்.

default : முன்னிருப்பு ; கொடா நிலை: முன்னரே தீர்மானித்து வைக்கப்பட்டது, தொடக்க நிலையில் முன் குறித்து, பயனாளரின் தலையீடு இன்றி தன்னியல்பாய் இருப்பது. ஆணைத் தொகுப்பு அல்லது பயனாளரினால் குறிப்பான விருப்பம் எதுவும் தரப்படாத நிலையில் முறைமை அல்லது மொழிமாற்றுவோரினால் தானாக மேற்கொள்ளப்படும் அனுமானம்.

default data : முன்னிருப்புத் தகவல் குறிப்பு ; தன்னியல்பான தகவல் : விசைப்பலகை சாவிப்பதிவு அழுத்தங்களைக் குறைத்து, கணினி பயன்படுத்துபவரின் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்கு மென்பொருளால் தானாகவே அளிக்கப்படும் மதிப்புருக்கள். எனினும், தேவைப்படுமானால் தன்னியல்பான தகவல்களுக்குப் பதிலாகப் புதிய மதிப்புருக்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

default directory : முன்னிருப்பு விவரக் குறிப்பேடு : ஒரு வட்டு விவரக் குறிப்பேடு. இதில், வெளிப்படையான விவரக்குறிப்பேட்டுக் குறிப்பீடு இருந்தாலன்றி, கணினி பொதுவாகச் செயல்பாடுகளை நிறைவேற்றுகிறது.

default drive : முன்குறித்த வட்டியக்கி : பயன்படுத்துவோரினால் குறிப்பான இயக்கி எண் தரப்படா விட்டால் முறைமை ஒதுக்கித்தரும் வட்டு இயக்கி.

default font : முன்குறித்த எழுத்து முகப்பு : பயனாளரினால் வேறெதுவும் குறித்துரைக்கப்பட்டிராவிடில், அச்சடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அச்செழுத்து முகப்பு மற்றும் வடிவளவு.

default setting : தன்னியல்பு அடைவு : பயன்படுத்துபவர் வேறுவகையில் குறித்துரைத்தாலன்றி, ஒரு செயல்முறையினால் தானாகவே பயன்படுத்தப்படும் அடைவு.

default value : முன்னிருப்பு மதிப்பீடு : தயாரிப்பாளரால் ஒரு கருவி அல்லது ஆணைத் தொகுப்புக்கு தரப்படும் மதிப்பு. பொதுவாக ஆணைத்

தொகுப்பு ஒன்றில் தொடக்க நிலையில் உள்ள பொதுவான பாதுகாப்பான மதிப்பு.

deferred address : தாமத முகவரி ; ஒத்திவைக்கப்பட்ட முகவரி ; மறைமுக முகவரி.

deferred entry : தாமதப் பதிவு : தனக்குக் கட்டுப்பாட்டை மாற்றிய செயல் முறையிலிருந்து காலத்தாழ்வாக வெளியேறியதன் காரணமாக ஒரு துணை வாலாயத்தில் செய்யப்படும் பதிவு.

deferred exit : தாமத வெளியேற்றம் ; ஒத்திவைக்கப்பட்ட வெளியேற்றம் : முன்னரே தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் அல்லாமல், ஒருங்கிணைவில்லா ஒரு நிகழ்ச்சியினால் தீர்மானிக்கப்படும் ஒரு நேரத்தில் வாலாயக் கட்டுப்பாடு மாற்றப்படல்.

definition : பிரச்சினை ஒன்றுக்கான வரையறை : தருக்கங்களை பதின்ம வடிவுகளாகவும், பட்டியல்களாகவும் மற்றும் ஆணைத்தொகுப்பு விளக்கங்களாகவும் தொகுத்தல். அவை பிரச்சினையை தெளிவாக விளக்குகின்றன, வரையறை செய்கின்றன.

defrag : நெருங்கமை : அடுத்தடுத்த அமைவிடங்களில் வட்டுக் கோப்புகளில் தகவல்களைச் சேமித்து வைக்கும் நோக்கமுடைய DOS ஆணை.

defragmentation : நெருங்கமைத்தல் : ஒவ்வொரு கோப்பின் அனைத்துப் பகுதிகளும் அடுத்தடுத்த கூறுகளில் எழுதப்படுமாறு, அனைத்துக் கோப்புகளையும் ஒரு நிலை வட்டில் மறுபடியும் எழுதுதல்.

degausser : காந்தப் புல நீக்கி ; அழிப்பி : மின்காந்த வகையில் வட்டுகளிலும் நாடாக்களிலும் பதிவு செய்யப்பட்ட தகவல்களை அழிக்க உதவும் கருவி. இதனை பேரழிப்பி என்றும் கூறுவர்.

degradation : தரங்குறைதல் ; தரமிழத்தல் : முறைமை தொடர்ந்து இயங்கினாலும், அதன் சேவை குறைந்த அளவிலேயே அமையும். முறையான கருவிப் பராமரிப்பு கிடைக்காத நிலை மற்றும் அன்றாடத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கணினி ஆணைத் தொகுப்புகள் பராமரிக்கப்படாதிருத்தல் ஆகியவை இரண்டு முக்கிய காரணங்களாகும்.

deinstall : நீக்கல் : இயக்கப் பயன்பாட்டிலிருந்து ஆணைத் தொகுப்பு ஒன்றையோ, வன்பொருளையோ நீக்குதல்.

dejagging : பிசிரற்ற வரைவு : பிசிரற்ற கோடுகளை, எழுத்துகளை, பல கோண வடிவங்களை வரையப் பயன்படுத்தப்படும் கணினி வரைபட உத்தி.

delay circuit : காலந்தாழ்த்தும் இணைப்பு : சமிக்ஞைகளை வழங்கும் பொழுது இடைவெளியை வேண்டுமென்றே அதிகமாக்கும் மின்னணுவியல் இணைப்பு.

delay line storage : காலந்தாழ்ந்து வரும் வரிச்சேமிப்பகம் : காலந்தாழ்ந்து வரும் வரியைக் கொண்ட சேமிப்பகம். அதில் தகவலை மீண்டும் உருவாக்கி இணைப்பதற்கான வசதி உண்டு. ஆதிக் கணினிகளில் பயன்படுத்தப்பட்டது.

delete : நீக்கு ; நீக்குதல் ; அழித்தல் : களம் அல்லது கோப்பு ஒன்றின் ஆவணத்திலிருந்து நீக்குதல் அல்லது அழித்தல் அல்லது போக்குதல். 2. தகவல்களைப் போக்கும் முறை.

deletion record : நீக்கும் ஆவணம் : அடிப்படைக் கோப்பு ஒன்றில் உள்ள

ஆவணம் ஒன்றுக்குப் பதிலாக அமை யும் புதிய ஆவணம்.

delimit : எல்லையிடு ; வரம்பிடல் : ஒன்றின் வரம்புகளைத் தீர்மானித்தல். குறிப்பிட்ட மாறக்கூடிய ஒன்றின் உயர்ந்தபட்ச, குறைந்தபட்ச வரம்பு களைத் தீர்மானித்தலைப் போன்றது.

delimiter : வரம்புக்குறி ; வரம்பு காட்டி ; எல்லைக்குறியீடு : சிறப்பு வடி வம். எடுத்துக்காட்டாக பட்டியல் ஒன்றில் மாறக்கூடிய பெயர்கள் அல்லது பொருள்களைப் பிரிக்கப் பயன்படுத்தப்படும். அல்லது தகவல் வகைகளைப் பிரிப்பது போல ஒரு தொடர் வடிவங்களை மற்றொன்றி லிருந்து பிரிக்கப் பயன்படும் கால் புள்ளி அல்லது இடைவெளி.

delivery : வழங்குதல் ; பட்டுவாடா : ஆணைத் தொகுப்பை உருவாக்கும் பணி வட்டத்தில் இறுதிச்செயல். இதில், உண்மையான தகவல்களைக் கையாளப் பயனாளருக்கு ஆணைத் தொகுப்பு அல்லது முறைமை வழங்குகிறது.

Dell computer corporation : டெல் கணினிக் கழகம் : IBM ஒத்தியல்பு நுண்கணினிகளைத் தயாரிக்கும் ஓர் அமைவனம். இதனை 1984இல் மைக்கேல் டெல் என்பவர் டெக்சாஸ் மாநிலத்திலுள்ள (அமெரிக்கா) ஆஸ் டின் நகரில் நிறுவினார். 'லேப்டாப்' (Laptop) முதல் உயர் முனை எந்திரங் கள்வரைப் பல்வேறு வகை நுண் கணினிகளை இது தயாரிக்கிறது.

delta modulation : 'டெல்டா' அதிர் விணக்கம் : குரல் அலைகளின் மாதி-ரியை எடுத்து, அவற்றை இலக்கக் குறியீடாக மாற்றுவதற்கான உத்தி.

deltree : அகற்றாணை : ஒரு விவரக் குறிப்பேட்டில் அனைத்துக்கோப்பு களையும் அகற்றிவிட்டு, துணை விவரக் குறிப்பேடுகளையும் அகற்று கிற ஓர் உயர்நுட்ப DOS ஆணை.

demagnetization : காந்த நீக்கி : காந்த வட்டு அல்லது நாடாக்களில் சேமிக் கப்பட்ட தகவல்களை அழிக்கும் செயல்.

demand paging : பக்கமேற்றல் கோரிக்கை : நிகழ்சேமிப்பு முறைமை களில், புறப்பக்கச் சேமிப்பகத்தி லிருந்து உண்மையான சேமிப்பகத் திற்கு அப்பணியை நிறைவேற்றப் படும் நேரத்தில் மாற்றுதல்.

demand report : கோரல் அறிக்கை ; வேண்டிய அறிக்கை : கோரிக்கையின் பேரில் மட்டுமே வழங்கப்படும் அறிக்கை. எதிர்பார்க்கப்படாத கேள்விகளுக்கான விடையாக வழங்க, மிக முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படையான முடிவுகளை மேற் கொள்ள இது பயன்படுத்தப்படு கிறது.

demo : செயல் விளக்க செய்முறை : விளம்பரம், விற்பனை நோக்கங் களுக்காக ஒரு பயன்பாட்டுச் செயல் முறையில் சில செயற்பணிகளை எடுத்துக்காட்டுவதற்காக வடி வமைக்கப்பட்டுள்ள ஒரு செயல் விளக்கச் செய்முறை.

demodulation : மீளப்பெறல் : தகவல் தொடர்பில் எடுத்துச்செல்லும் அலை வரிசையில் அனுப்பப்பட்ட ஆதிக் குறியீட்டை மீண்டும் பெறும் நடை முறை. தகவல் தொகுப்புகளில், தக வல் தொடர்புச் சமிக்ஞைகள், கணினி முனையச் சமிக்ஞைகளுடன் இணையச்செய்யப் பயன்படுத்தப் படுகின்றன. Modulation என்பதன் இணைப் பகுதியாகும்.

demodulate : அதிர்விணக்க நீக்கம் : ஒத்தியல்புடைய சைகைகளை இலக் கங்களாக மாற்றுவதற்கான செய்

முறை. ஊர்தியிலிருந்து தகவல் சைகைகளை வடிகட்டுதல்.

demodulator : மீளப்பெறும் கருவி : தகவல் தொடர்பு இணைப்பு ஒன்றின் வழியாக அனுப்பப்படும் சமிக்ஞை களை பெறும் கருவி. அது, அச்சமிக் ஞைகளை மின் துடிப்புகளாக அல் லது துண்மிகளாக மாற்றி, தகவல் தயாரிப்பு எந்திரங்களுக்கு அவற்றை உள்ளீடாகத் தரும். Modulator என்பதற்கு மாறானது.

demount : இணைப்பைக் கழற்றுதல் : கருவி ஒன்றிலிருந்து எழுத அல்லது படிக்கக்கூடிய காந்த சேமிப்பு ஊட கத்தை நீக்குதல். இது வட்டு இயக்கி ஒன்றிலிருந்து வட்டுத் தொகுப்பு ஒன்றை நீக்குதல் போன்றது.

demultiplexer : ஒருங்கிணைக்கி ; பல இணைப்புக் கருவி : ஒருங்கிணைத்து அனுப்பப்பட்ட மின்காந்த அல்லது இலக்க வடிவிலான தகவல் தொகுப் பிலிருந்து ஒவ்வொரு தகவலையும் தனித் தனியாகப் பிரித்தெடுக்கும் சாதனம்.

Multiplexer (பல்பயன் இணைப்பு) என்பதற்கு எதிரானது.

denary : பதின்மான முறை : பத்திலக்க பதின்ம எண்மான முறை.

denary notation : பதின்மக் குறிமானம் : பதின்மங்களைப் பயன்படுத்தி நாம் எண்ணுகிற வழக்கமான எண்மான முறை.

dendrite : மர இழை : மனித மூளை யிலுள்ள அடிப்படைச் சேமச்சிற்றம். இது, மரத்தடங்கள் (Dendrites) எனப் படும் மரவடிவ இழைகளின் கட்ட மைப்பைக் கொண்டது.

denominator : விகுதி.

dense binary code : செறிவு இரும எண் குறியீடு : எல்லா சாத்தியமான இரும எண் (இரட்டை இலக்க) நிலைகளை யும் பயன்படுத்தக்கூடிய குறியீடு.

dense list : செறிவுப் பட்டியல், அடர் பட்டி : எல்லாச் சிற்றங்களும் இயன் றளவு நிரப்பப்பட்டிருக்கிற ஒரு பட்டியல்.

density : திண்மை ; அடர்த்தி ; செறிவு : ஒரு குறிப்பிட்ட பருண்மையான இடத்தில் சேமிக்கக்கூடிய எழுத்து களின் எண்ணிக்கை. மின்காந்த ஊட கம் ஒன்றில் எவ்வளவு நெருக்கமாக தகவல்கள் பதிவுசெய்யப்பட்டுள் ளன என்ற அளவுமுறை. பொதுவாக ஒரு அங்குலத்துக்கு இத்தனை எட்டி யல்கள் என்ற முறையில் கணக்கிடப் படுகிறது. பதிவுத்திண்மை அதி கரிக்க அதிகரிக்க சேமிப்புக் கருவி யின் திறன் கூடுகிறது.

departmental computing : துறைக் கணிப்பு : ஒரு துறையின் தகவல்களை அதன் சொந்தக் கணினி அமை வினைக் கொண்டே செய்முறைப் படுத்துதல்.

dependency : சார்புநிலை ; சார்பு : மற்றொரு பணியைத் தொடங்குமுன் ஏற்கனவே தொடங்கப்பட்ட பணி ஒன்றை நிறைவேற்றும் உறவு நிலை.

dependent segment : சார்புக்கூறு : தகவல் மேலாண்மையில், தகவல் தனது முழுப்பொருளுக்காகவும் ஓர் உயர்நிலைத் தகவலை நம்பியிருக் கும் நிலை.

dependent variable : சார்பு மாறியல் மதிப்புரு : ஓர் உருமாதிரியின் வெளிப் பாடு. இது, உட்பாடுகளை நம்பி யிருப்பதால் இப்பெயர் பெற்றது.

dependability : நம்பகமான ; நம்பத் தகுந்த.

deposit : வைப்பீடு : எந்திரப் பதி வேட்டில் அல்லது நினைவுப் பதிப்பி

யின் அமைவிடத்தில் தகவல்களைச் சேமித்து வைத்தல்.

depth queuing : முப்பரிமாணத்தோற்றமிடல் : இருபரிமாணப் பொருளை முப்பரிமாணத் தோற்றமுடையதாக மாற்றப் பயன்படுத்தும் 'ஷேடிங்' (Shading) போன்ற தொழில்நுட்பம்.

deque : டிகியூ ; இருமுனைப் பட்டியல் : Double Ended Queue என் பதன் குறும்பெயருமாகும். பட்டியலின் இரண்டு முனைகளிலும் நீக்கவும், சேர்க்கவும் அனுமதிக்கும் இருபுறமும் உள்ள வரிசை.

descender : கீழிறங்கி ; இறங்கி : மற்ற எழுத்துகளின் அடிக்கோட்டுக்கு கீழே இறங்கும் g போன்ற சிறிய எழுத்துகளின் பகுதி. Kern என்றும் அழைக்கப்படுகிறது.

descending order : இறங்குமுக வரிசை : அகர வரிசையிலோ அல்லது எண்முறையிலோ அதிக அளவிலிருந்து குறைந்த அளவுக்கு இறங்கி வரும் வரிசை.

descriptive statistics : விவரிப்பு புள்ளியல் : மாற்ற விகிதம், சகவிகிதங்களின் விகிதம், திட்ட அளவு பிழைபாடு, கணித நடு எண், வரிசை போன்ற எண்ணளவிலான தகவல் தொகுதி ஒன்றின் முக்கியத் தன்மைகளைக் குறிப்பிடும் எண் மதிப்புகள்.

descriptor : விளக்கச்சொல் ; வர்ணிப்பி : விவரிப்புச் சொல் தகவலைப் பட்டியலிடவோ அல்லது வகை வாரியாகப் பிரிக்கவோ உதவும் முக்கிய சொல். விசைச்சொல் என்றும் சில சமயம் அழைக்கப்படும்.

deserialize : தொடர்வரிசை நீக்கம் : ஒரு தொடர்வரிசைத் துண்மிக் கற்றையை ஒருபோகு துண்மிக் கற்றையாக மாற்றுதல்.

desh symbol : கீற்று குழூஉக்குறி.

design aids : வடிவமைப்பு உதவிகள் : கணினி அமைப்பைச் செயல்படுத்த உதவும் நோக்கமுள்ள கணினி ஆணைத்தொடர் அல்லது வன்பொருள் உறுப்புகள்.

design automation : வடிவமைப்பு தன்னியக்கம் : மின்சுற்று வடிவங்கள், புதிய கணினி மற்றும் பிற மின்னணுச் சாதனங்களின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் கணினியைப் பயன் படுத்துதல்.

design costs : வடிவமைப்புச் செலவுகள் : அமைப்புகளின் வடிவமைப்பு, ஆணைத்தொடர் பயிற்சி, மாற்றல், சோதனை செய்தல், ஆவணப்படுத்துதல் போன்றவற்றுடன் தொடர்புள்ள செலவு.

design cycle : வடிவமைப்புச் சுழற்சி : ஒரு வன்பொருள் அமைப்பில், இயக்க அமைப்பை உருவாக்குவதற்கான முழுத் திட்டம். இதில் சிக்கலை விவரித்தல், அல்கோரித நெறிமுறை ஏற்படுத்தல், ஒடுபடக்குறியீடு அமைத்தல், ஆணைத் தொடர் பிழை நீக்கம், ஆவணப்படுத்தல் ஆகியவை அடங்கும்.

design engineer : வடிவமைப்புப் பொறியாளர் : வட்டு அலகு, நுண்செயலி அல்லது சிப்பு போன்ற ஒரு வன்பொருள் வடிவமைப்புடன் தொடர்புள்ள நபர்.

design heuristics : வடிவமைப்பு கண்டுணர்தல் : ஒரு பெரிய சிக்கல் அல்லது ஆணைத்தொடரை மிகச் சிறியதான எளிதில் சமாளிக்கக்கூடிய 'மாடுல்' (module) கூறுகளாகப் பிரிப்பதற்குக் கடைபிடிக்கப்படும் வழிகாட்டுதல்கள்.

design language : வடிவமைப்பு மொழி : வடிவமைப்புப் பணியில்

அதன் சொற்றொடர்களையும், இலக் கணங்களையும் பயன்படுத்தக் கூடிய ஆணைத்தொடர் மொழி.

design phase : வடிவமைப்பு நிலை : முன்பே நிர்ணயிக்கப்பட்ட வடி வமைப்புத் தேவைகளைப் பொறுத்து ஒரு தகவல் அமைப்பை உருவாக்கும் செயல்.

design specifications : வடிவமைப்பு வரன்முறைகள்; வடிவமைப்புக் குறி யீடுகள் : ஒரு நிறுவனத்தின் குறிப் பிட்ட பிரிவின் தகவல் தேவைகளை ஆராய்ந்ததன் விளைவு. உள்ளீடு, செயலாக்கம், வெளியீடு போன்ற வற்றிற்கான வரன்முறைகள்.

design walkthrough : வடிவமைப்பு மேல்நோக்கு : பயன்படுத்துவோர், செயல்முறையாளர்கள், ஆலோசகர் கள் ஆகியோர் ஒரு பொறியமை வினை மேலிருந்து நோக்குதல்.

desk accessories : மேசை தேவைகள்: வரைபட முறைகளைச்சார்ந்த அமைப் பில், பிற ஆவணங்களைப் பயன் படுத்துவதற்குத் தேவைப்படும் பணி யாற்றும் கருவிகள்.

desk scanner : மேசை நுண்ணாய்வுக் கருவி : மேசை நுண்ணாய்வுக் கருவி யின் சுருக்கப்பெயர். இரு உருக் காட்சிகளை நுண்ணாய்வு செய்யப் பயன்படுகிறது. இந்த உருக்காட்சி களைப் பின்னர் ஒரு மேசை வெளி யீட்டு அல்லது வரைகலை மென் பொருள் உருவாக்கிய ஓர் ஆவணத் தில் பதிவு செய்யலாம். நுண்ணாய்வு செய்த உருக்காட்சிகளை விருப்பம் போல் வெட்டலாம், ஒட்டலாம். கையால் இயக்கும் நுண்ணாய்வுக் கருவிகளும், தட்டைப் படுகை நுண் ணாய்வுக் கருவிகளும் கிடைக் கின்றன.

desk checking : மேசை சோதனை : ஆணைத்தொடர் அட்டவையில் பிழை களைச் சோதிக்கும் மாதிரி தகவல் பொருள்களைக் கொண்டு சோதித் தல். கணினியில் செயல்படுத்து வதற்கு முன்பு இத்தகைய சோதனை செய்யப்படுகிறது.

desktop : மேசைப் பதிப்பு தொழில் நுட்பம் : ஆவணங்கள், காகிதங்கள் மற்றும் துணைப் பொருள்களைக் கொண்ட திரையில் காட்டப்படும் காட்சி.

desktop computer : மேசைக் கணினி : நுண்செயலகம், உள்ளீடு, வெளியீடு, சேமிப்புச் சாதனங்களை ஒன்றாக, கணினி அமைப்பாக உருவாக்கி மேசைமேல் வைக்கக்கூடிய சிறு கணினி.

வீட்டுக் கணினி (Home Computer) , நுண் கணினி (Micro Computer) , தனி முறைக் கணினி (Personal Computer) எனப் பலவகை உண்டு.

desktop publishing (DTP) : மேசைப் பதிப்பு வெளியீடு (டிடிபி) ; மேசைப் பதிப்புத் தொழில்நுட்பம் : வெளியீட் டாளர்களும், அச்சகங்களும் பயன் படுத்துவதற்கு, ஒளிப்பதிவு செய்வ தற்கு ஆயத்தமான நிலையில் ஆவ ணங்களைத் தயாரிக்கும் கணினி இயக்கப் பொறியமைவு.

desktop publishing package : மேசை வெளியீட்டுத் தொகுதி: உருவமைப்பு வரைபடங்கள், படங்கள் ஆகிய வற்றை வாசகர்கள், தலைப்புகள் ஆகியவற்றுடன் பயன்படுத்து வதற்கு அனுமதிக்கக் கூடிய வாசக மும், வரைகலை நுட்பங்களும் இணைந்த மென்பொருள். எடுத்துக் காட்டு: பக்க வடிவமைப்பி (பேஜ் மேக்கர்), வெஞ்சுரா, குவார்க் எக்ஸ்பிரஸ்.

desktop publishing system : மேசை வெளியீட்டுப் பொறியமைவு : படங்கள், பல்வேறு எழுத்து முகப்புகளுடன் அச்சிட்ட வாசகங்கள் ஆகியவற்றுடன் கவர்ச்சிகரமான பக்க வடிவமைப்புகளை உருவாக்கக் கூடிய புறநிலைச் சாதனங்கள் கணினியுடன் இணைக்கப்பட்ட ஒரு பொறியமைவு.

desktop system : மேசைப் பொறியமைவு : ஓர் அலுவலக மேசையில் முழுமையாகப் பொருந்தக்கூடிய ஒரு கணினி.

destination : சேருமிடம் ; இலக்கு : ஒரு தகவல் மாற்றல் இயக்கத்தின் போது தகவல்களைப் பெறுகின்ற சாதனம் அல்லது முகவரி.

destination disk : இலக்கு வட்டு.

destructive memory : அழிவுறு நினைவுப் பதிப்பி : படித்தவுடன் உள்ளடக்கத்தை இழந்துவிடுகிற நினைவுப் பதிப்பி. படித்தவுடன், இதன் துண்மிகளுக்கு மின்சுற்று வழியாக உயிரூட்டவேண்டும்.

destructor : அழிப்பி ; சிதைப்பு : பொருள் சார்ந்த செயல்முறைப்படுத்துதலில், ஒரு பொருளின் நிலையை விடுவிக்கிற அல்லது அந்தப் பொருளையே அழித்துவிடுகிற ஒரு செயற்பாடு.

detachable keyboard : பிரிக்கக்கூடிய விசைப்பலகை : ஒளிக் காட்சித் திரை அல்லது வட்டு அலகு போல ஒரே அமைப்பில் சேர்த்து உருவாக்கப்படாத விசைப்பலகை. ஒரு கம்பியின் மூலம் கணினியுடன் இணைக்கப்பட்டு காட்சித்திரையை வைப்பதில் அதிக வசதியைத் தருகிறது.

detail : விவரம் : பெரியகோப்பு அல்லது வரைபடத்தின் சிறிய பிரிவு.

detail diagram : விவர வரைபடம் : ஹிப்போவின் (HIPO) ஒரு மாடுலில் (module) பயன்படுத்தப்படும் தகவல் பொருள்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட பணியைக் குறிப்பிடும் வரைபடம்.

detail file : விவரக் கோப்பு : தற்காலிகத் தகவலைக்கொண்ட கோப்பு. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடைபெற்ற மாற்றங்களைக் கொண்ட பதிவேடுகள் போன்றவை, தற்காலிக தகவலாகக் கொள்ளப்படுகின்றன.

detail flow chart : விவர வரைபடம் : ஒரு குறிப்பிட்ட ஆணைத் தொடருக்குள் தேவைப்படும் செயலாக்க நிலைகளை குறிப்பிடும் வரைபடம்.

detail line : விவர வரி : செய்முறைப் படுத்தப்படும் ஒவ்வொரு பதிவேட்டையும் கண்காட்சியாகக் காட்டுகிற வரி.

detail printing : விவர அச்சிடல் : கணினிக்குள் படித்து அனுப்பப் படும் ஒவ்வொரு பதிவுக்கும் ஒருவரி அச்சிடப்படும் இயக்கம்.

detail report : நுணுக்க அறிக்கை : அச்சிட்ட அறிக்கை. இதில் ஒவ்வொரு வரியும் படித்து முடித்த உள்ளீட்டுப் பதிவேட்டை ஒட்டியே அமையும்.

detection : கண்டுபிடித்தல் : ஒரு சிக்கலைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் ஒரு நிகழ்வை அமைதியாகக் கண்காணிப்பது.

deterministic model : முடிவு செய்யும் கருவி ; உறுதியாக்கும் கருவி மாதிரி : நேரடியான காரண-விளைவு தொடர்புகளையும் தெரிந்த நிலையான மதிப்புகள் உள்ள தகவல்களைப் பற்றியும் ஆய்வு நடத்த உதவும் கணித மாதிரி.

developer's toolkit : உருவாக்கக் கருவித் தொகுதி : ஒரு பயன்பாட்டுச்

செயல்முறையை ஒரு குறிப்பிட்ட சூழலுடன் இணைப்பதற்கு செயல் முறைப்படுத்துவதில் பயன்படுத்தப் படும் மென்பொருள் வாலாயங் களின் தொகுதி.

development engine : மேம்பாட்டு எந் திரம் : தகவல் ஆதாரத்தை மேம்படுத் தவும், பேணிவரவும் தகவல் பொறி யாளருக்கும் மேலாண்மை வரம்புப் பொறியாளருக்கும் உதவுகிற எந்திரம்.

development support library : உரு வாக்க உதவி நூலகம் : பயன் பாட்டுத் தொகுப்புகளை உருவாக்குபவர் களுக்கு உதவும் மென்பொருள் ஆணைத் தொகுதிகள். ஆணைத் தொடர் அமைக்கும் நூலக அமைப்பு ஒன்று மூலக்கோடு மாற்றுதல், சோதனை தகவல் தொகுதிகள், விளக்க ஆவணங்கள் போன்ற ஆணைத்தொடர் வளர்ச்சி கோப்பு களை வைத்திருந்து மனிதர்களின் பங்கு இல்லாமல் தானியங்கியாக செயல்படும் வசதி. கணினி மற்றும் மனிதர் படிக்கும் வடிவத்தில் ஆணைத் தொடர்கள் மற்றும் சோதனைத் தகவல்களையும் புதுப்பித்து வைத் திருக்கிறது. எழுத்தர் முறை கணக்கு வைத்திருக்கும் இயக்கங்களிலிருந்து ஆணைத் தொடர் பணிகளைப் பிரித்து வைத்திருப்பது போன்று அலுவலக மற்றும் கணினி நடைமுறைகளின் தொகுதிக்கு ஏற்ப நூலகம் ஒன்றை வைத்திருக்கும் நூலக அமைப்பு.

development system : உருவாக்க அமைப்பு : ஒரு குறிப்பிட்ட நுண் செயலாக்கத்திற்கான திறன்மிக்க வன்பொருள் மற்றும் மென்பொருள் பயன்பாடுகளுக்குள் தேவையான சக்திகள்கொண்ட கணினி அமைப்பு. இதில் நுண் கணினி, முகப்பு, அச்சுப் பொறி, வட்டுச் சேமிப்பகம், ப்ராம் (Prom) ஆணைத் தொடர்பொறி மற்றும் மின் சுற்று உருவாக்கி போன் றவை இதில் அடங்கும்.

development time : உருவாக்க நேரம் : புதிய ஆணைத்தொடர் அல்லது மென்பொருளின் பிழையை நீக்கத் தேவைப்படும் நேரம்.

development tools : உருவாக்கக் கருவி கள் : உருவாக்க ஆணைத் தொடர்கள் மற்றும் / அல்லது வன்பொருள் அமைப்புகளில் பயன்படுத்துவதற் காக உருவாக்கப்பட்ட வன்பொருள் மற்றும் மென்பொருள் உதவிச் சாதனங்கள்.

device : சாதனம் ; கருவி : *1.* ஒரு குறிப் பிட்ட நோக்கத்துடன் உருவாக்கப் பட்ட எந்திர அல்லது மின்சார சாத னம். 2. கணினி மின் வெளிப் புறப்பொருள். 3. கணினிக்குள்ளே அல்லது அதனுடன் இணைக்கப் பட்டுள்ள கருவி.

device cluster : சாதனத் தொகுதி : தகவல் தொடர்பு கட்டுப்பாட்டுப் பொறியுடன் பங்கு கொள்ளும் முகப் புத் தொகுதி அல்லது பிற சாதனங் கள்.

device code : சாதனக் குறியீடு : ஒரு குறிப்பிட்ட உள்ளீடு அல்லது வெளி யீட்டுச் சாதனத்திற்கான எட்டு துண்மிக் குறியீடு.

device dependent : சாதனம் சார்ந்த : ஒரு ஆணைத்தொடர் அல்லது ஒரு குறிப்பிட்ட கணினியுடன் பயன் படுத்தப்பட வேண்டிய மொழி அல்லது அச்சுப்பொறி அல்லது மோடெம் போன்ற ஒரு குறிப்பிட்ட வெளிப்புறப் பொருள். உள்ளீடு அல்லது வெளியீட்டுடன் பயன் படுத்தப் படவில்லையென்றால் செயல்படாதது .

device driver : சாதன இயக்கி : ஒரு கணினியின் தவறுகை அடைவினை,

முக்கியமாக நினைவுப்பதிப்பி எவ்வாறு நிருவகிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து உயர்த்துவதற்கு அல்லது மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு மென்பொருள் பயன்பாட்டுச் செயல்முறை.

device flag : சாதனக் குறி : ஒரு சாதனத்தின் தற்போதைய தகுதியைப் பதிவு செய்யும் ஒரு துண்மிப் பதிவு.

device header : சாதனத் தலைப்பு : ஒரு DOS சாதன இயக்கி வாலாயத்தில், சாதனத்தை அடையாளங் காட்டுவதற்குள்ள தொடக்கப் பகுதி.

device independence : சாதன சுதந்திரம் : உள்ளீடு/வெளியீடு சாதனங்களின் தன்மைகளின்றி உள்ளீடு/வெளியீடு இயக்கத்தின் ஆணையை அளிக்கும் திறன்.

device interrupt handler : சாதன இடையீட்டுக் கைப்பிடி : ஒரு சாதன வாலாயத்தின் உடற்பகுதி. இது சாதன இயக்கிச் செயற்பணிகளைக் கொண்டு செல்கிற குறியீட்டினைப் பற்றி வைத்துக்கொள்கிறது.

device media control language : சாதனத் தகவல் தொடர்புக் கட்டுப்பாட்டு மொழி : ஒரு தகவல் தளத்தை ஒரு வட்டுச் சேமிப்புச் சாதனத்தின் மீது வரைவதற்குத் தகவல் தள நிர்வாகி பயன்படுத்தும் மொழி.

device name : சாதனப் பெயர் : ஐபிஎம் தனிமுறைக் கணினி (Personal computer) அல்லது 3840 மாடல் வட்டு அலகு போன்ற ஒரு வகையான சாதனத்தின் பொதுப்பெயர்.

device number : சாதன எண் : ஒரு குறிப்பிட்ட புறநிலைச் சாதனத்திற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள ஓர் எண். இது கணினியில் அச்சாதனத்தை அடையாளங்காணப் பயன்படுத்தப்படுகிறது.

device strategy : சாதன உத்தி : ஒரு சாதன இயக்கி வாலாயத்தின் ஒரு பகுதி. இது, இயக்கியை வேண்டுகோள் தலைப்புடன் இணைக்கிறது. இந்தத் தலைப்புத்தான், இயக்கியை நிருவகிப்பதற்கு DOS உருவாக்குகிற நிலையளவுருக்களின் தொகுதியாகும்.

diagnosis : குறைகண்டறிதல்; பழுதறிதல் : கணினி கருவியிலோ அல்லது ஆணைத் தொடர் மற்றும் அமைப்புகளிலோ உள்ள பிழை அல்லது கோளாறுகளைத் தனிமைப்படுத்தும் செயல் முறை.

diagnostic board : குறைகுறி பலகை; பழுதிற பலகை : குணங்குறி காண் சோதனைகளைத் தன்னுள்ளே கொண்டுள்ள விரிவாக்கப் பலகை. இது, தனது சொந்தப் படிப்பியின் வாயிலாக முடிவுகளை அறிவிக்கிறது. இதன் மூலம் கணினியின் தவறான செயற்பாட்டினைச் சோதனை செய்யலாம்.

diagnostic message : குறைகுறி காண் செய்தி ; பழுதறி செய்தி : முறையற்ற ஆணைகளை ஒரு செயல் முறையாளருக்குச் சுட்டிக் காட்டுகிற, கணினி உருவாக்கும் குறிப்புகள்.

diagnostic routine : குறை கண்டறியும் செயல்முறை ; பழுதறி செயல் முறை : மையச் செயலக அலகு அல்லது ஒரு வெளிப்புற சாதனத்தின் கோளாறினைக் கண்டுபிடிக்க வடிவமைக்கப்படும் வழக்கச் சொல்.

diagnostics : குறை அறிவிப்பு : ஒரு கணினி தானாகவே அச்சிட்டு அதனைப் பயன்படுத்துவோருக்கு அனுப்பும் செய்திகள், பிழைச் செய்திகள் எனப்படும் தவறான

ஆணைகளையும், அளவைப் பிழை களையும் இது குறிப்பிடுகிறது.

diagnostic tracks : குறை குறிகாண் தடங்கள்; பழுதறி தடங்கள் : சோதனை நோக்கங்களுக்காக இயக்கியினால் அல்லது கட்டுப்பாட்டாளரால் பயன் படுத்தப்படும், ஒரு வட்டு மீதான தனித்தடங்கள். நினைவுப் பதிப்பி, விசைப்பலகை, வட்டுகள் போன்ற வன்பொருள் அமைப்பிகளைச் சோதனை செய்வதற்கான மென் பொருள் வாலாயங்கள். சொந்தக் கணினிகளில் இவை படிப்பதற்கு மட்டுமான நினைவுப் பதிப்பியில் (ROM) சேமித்து வைக்கப்பட்டுத் தூண்டிவிடப்படுகின்றன.

diagram : வரைபடம் : இயக்கங்கள் அல்லது வழக்கச் செயல்களை வரிசை முறையில் குறிப்பிடல்.

dialect : கிளைமொழி ; பேச்சுமொழி : பேசிக் அல்லது பாஸ்கல் போன்ற சில அடிப்படை மொழிகளில் சிறு மாற்றங்கள் செய்து உருவாக்கப் பட்ட ஒரு கணினி மொழி. அதே மொழியில் இருந்து உருவாக்கப் பட்ட பிற பேச்சு மொழிகளிலிருந்து இது மாறுபட்டிருக்கும்.

dialing system : சுழல்வட்டு இயக்கு முறை.

dialog : உரையாடல் : ஒரு கணினிக் கும், மனிதனுக்கும் இடையே நடை பெறும் கேள்வி-பதில் நிகழ்ச்சி.

dialog box : உரையாடல் கட்டம்/ சட்டம் : பயனாளருக்கு பல்வேறு வினாக்களை அல்லது மாற்றுகளைக் கூறும் ஒரு பட்டியல். இந்தக் கேள்வி கள் அனைத்திற்கும் அல்லது அவற் றுள் சிலவற்றுக்குப் பயன்படுத்து பவர் பதிலளிப்பார். (இதனாலேயே 'உரையாடல்' என்ற சொல் பயன் படுத்தப்படுகிறது) பிறகு முக்கிய பட்டியலுக்கு அல்லது முந்திய / அடுத்த பணிக்குச் செல்கிறார்.

dials : சுட்டுமுகப்பு ; அளவு சுட்டு முகப்பு.

dial-up-network : தொலைபேசி வழி தொடர்பு கொள்ளும் இணையம் : அரசினால் முறைப்படுத்தப்பட்டு இணைய சேவையாளர்களால் நிரு வகிக்கப்படும் தொலைபேசி வழி தொடர்புபடுத்தும் இணையம்.

dial-up : தொலைபேசி இணைப்பி : செய்தி தகவல் தொடர்புகளில், தொலைபேசி இணைப்பி பயன் படுத்தி அல்லது அழுத்தும் பொத் தான் தொலை பேசியைப் பயன் படுத்தி ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு தொலைபேசி அழைப்பு ஏற்படுத்துவது.

dial-up-line : தொலைபேசி இணைப் புத் தொடர் ; அழைப்புவழி : செய்தி தகவல் தொடர்புகளை பரிமாற்றும் ஊடகமாகப் பயன்படுத்தப்படும் சாதாரண தொலைபேசிக் கம்பித் தொடர்.

diazo film : 'டியோசோ' சுருள் : நுண் சுருள் படிகள் எடுப்பதற்குப் பயன் படுத்தப்படும் படச்சுருள். இது, புறவூதா ஒளியில் மூலப்படச்சுருள் முன்காட்டப்பட்டு, ஒரு மாதிரியான படிகள் உருவாக்கப்படுகின்றன. படி யின் வண்ணம் ஊதா, ஊதா-கருப்பு அல்லது கருஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்.

dibit : இருதுண்மி ; டிபிட் : கீழ்வரும் இரும எண் வரிசை முறைகளில் ஏதா வது ஒன்று : *00, 01, 10* அல்லது *11.*

dichotomizing search : இருமையாக் கும் தேடல் :

dictionary : அகராதி ; அகரமுதலி : ஒரு செயல்முறையில் பயன்படுத்தப்

படும் முகப்புச்சீட்டுகள் அல்லது விடைக்குறிப்புகளையும், அவற்றின் தருக்க முறையான பொருள் விளக்கங்கள் பற்றிய ஒரு விவரிப்பினையும் கொண்டுள்ள ஒரு பட்டியல்.

dictionary programme : அகராதி ஆணைத்தொடர் : எழுத்துப்பிழை சோதனை செய்யும் ஆணைத் தொடர். சொல் செயலாக்க அமைவுகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

diddle : டிடில் ; தகவல்குலைப்பு : தகவல்களை மாற்றுதல்.

die : அச்சு : மின்மப்பெருக்கிகள் அல்லது ஒருங்கிணைந்து மின்சுற்றுகளை உருவாக்கும்போது துண்டாக்கப்படும் அல்லது அறுக்கப்படும் வட்டவடிவ அரைக்கடத்தி சிலிக்கான் தகட்டின் மிகச்சிறிய நாற்கோணத் துண்டு.

dielectric : மின்தாங்கு பொருள் : மின் விசையைக் கடத்தாமல், மின்விசை விளைவுகளை மட்டும் கடத்தக் கூடிய கண்ணாடி, ரப்பர், பிளாஸ்டிக் முதலிய பொருள்கள்.

difference : வேறுபாடு : ஒன்றைவிட மற்றொரு எண் அல்லது அளவு அதிகமாக அல்லது குறைவாக இருக்கும் அளவு.

difference engine : வேறுபாட்டு எந்திரம் : 1822இல் சார்லஸ் பாபேஜ் வடிவமைத்த எந்திரம். வேறுபாட்டு முறை என்னும் கணக்கிடும் செயலை இதில் எந்திரப்படுத்தினார்கள்.

DIF : டிஐஎப் : Data Interchange Format என்பதன் குறும்பெயர். தகவல் கோப்புகளுக்கான ஒரு குறிப்பிட்ட தர நிர்ணயம். எதிர்காலத்தை உரைக்கும் பல ஆணைத்தொடர்களில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு மென்பொருள் தொகுதியில் உருவாக்கிய கோப்புகளை முற்றிலும் வேறுபட்ட ஒரு நிறுவனம் உருவாக்கிய வேறு ஒரு மென்பொருளில் படிக்கப் படுவது.

differential analyzer : வேறுபாட்டளவையியல் பகுப்பாய்வுக் கருவி : வேறுபாட்டளவையியல் சமன்பாடுகளுக்குத் தீர்வுகாண வான்னேவார் புஷ் (MIT, 1930களில்) உருவாக்கிய ஒத்தியல்புக் கணிப்புச் சாதனம். இவை 12 எண்ணிக்கைக்குக் குறைவாகவே தயாரிக்கப்பட்டன. எனினும், இவை இரண்டாம் உலகப் போரின்போது ஏவுகணை அட்டவணைகளைக் கணிக்கத் திறம்படப் பயன்படுத்தப் பட்டன. இந்த எந்திரம் ஓர் அறை முழுவதையும் அடைத்துக்கொள்ளும் அளவுக்குப் பெரிதாக இருந்தது. முனைந்த பகுதியுள்ள சுற்றுருளை போன்ற பல்லிணைகள் மூலம் இது செயல்படுத்தப் பட்டிருந்தது.

differential configuration : வேறுபாட்டளவையியல் உருவமைதி : ஓசையினையும் குறுக்குப் பேச்சுகளையும் கேட்கமுடியாத அளவுக்கு ஒவ்வொரு மின்னியல் சைகைக்கும் கம்பியிணைகளைப் பயன்படுத்துதல். இது, ஒற்றை முனை உருவமைதியிலிருந்து (Single-ended configuration) வேறுபட்டது.

DIF files : டிஐஎஃப் கோப்புகள் : டிஐஎஃப் தரநிர்ணயத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட கோப்புகள். பல்வேறு எந்திரங்ளுக்கிடையே மாற்றிக் கொள்ளக்கூடிய கட்டு. கோப்புகள் ஏற்புடையனவாக இருந்தாலும், ஆப்பிள் டிஐஎஃப் கோப்பு வட்டினை நேரடியாக ஐபிஎம் எந்திரத்தில் படிக்க முடியாது. இந்த வட்டுகள் வெவ்வேறு எந்திரத்துக்காக

வெவ்வேறு முறையில் அமைக்கப் படுகின்றன.

diffusion : பரவச் செய்தல் : சிலிக்கான் மென்தகடு போன்ற ஒரு பொருளின் மீது தூய்மைக்குறைவு. அணுக்களைச் சேர்க்கும் அதிவெப்ப செயல்முறை. இவை சென்று சேரும் பொருளில் உள்ள அணுக்களை மாற்றி அதில் உள்ள பொருள்களின் தன்மையை, விரும்பும் வழிகளில் மாற்றிவிடும் நிலை சக்தி உள்ளவை. சிலிக்கானில் தூய்மைக்குறைவுகளைச் சேர்க்க 900 முதல் 1,200 டிகிரி செல்ஷியஸ் வெப்பத்தில் பரவச் செய்யப் படுகிறது.

digit : இலக்கம் ; எண்ணியல் : ஒரு அளவைக் குறிப்பிடப் பயன்படுத்தப் படும் எண் முறைக் குறியீடு. பதின்ம முறையில் 0 முதல் 9 வரை பத்து இலக்கங்கள் உள்ளன.

digit position : இலக்கு நிலை.

digit punch : இலக்கத் துளை : ஒரு 80-பத்தி அட்டையில் எந்த ஒரு வரிசை யிலும் '0' முதல் '9' வரையில் இலக் கத்திற்கு இடப்பட்ட துளையின் இடநிலை.

digital : எண்ணியல் ; எண்மம் ; இரு நிலை உரு ; இலக்க முறை ; இலக்க வகை : இயக்கம், நிறுத்தத்தினைக் குறிப்பிட 1 அல்லது 0-க்களாகத் துண்மி குறியீடு இட்டு தகவலைக் குறிப்பது பற்றியது. கணினி மற்றும் செய்தித் தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தில் மிகவும் இன்றியமை யாதது.

digital audio tape : இலக்க முறை ஒலிநாடா.

digital cassette : இலக்க ஒளிப் பேழை : தகவல் சேமிப்புச் சாதனத் தின் ஒரு குறிப்பிட்ட வகை.

digital circuit : இலக்கச் சுற்றுவழி : ஓர் ஒருங்கிணைந்த மின் சுற்றுவழி. இது, உயர்ந்த அல்லது தாழ்ந்த மின் அழுத் தங்கள் போன்ற சைகை அளவுகளின் குறிப்பிட்ட மதிப்பளவுகளில் இயங் குகிறது.

digital communications : இலக்க முறை தகவல் தொடர்புகள் : மின் னணு சமிக்ஞைகள் மூலம் குறியீடு அளித்து தகவலைப் பரிமாறுதல்.

digital computer : இலக்கமுறை கணினி : இலக்க முறை தகவல் களைக் கையாண்டு அந்தத் தகவல் களில் கணித மற்றும் அளவை இயக்கங்களைச் செய்யும் சாதனம்.

digital control : இலக்கமுறை கட்டுப் பாடு : இயக்கும் சூழ்நிலைகளில் மாற்றம் இருந்தாலும் விரும்பிய வகையில் இயக்க அமைப்புகளின் நிலையைக் கட்டுப்படுத்த இலக்க முறை தொழில் நுட்பத்தைப் பயன் படுத்துதல்.

digital darkroom : இலக்க இருட் டறை : கறுப்பு-வெள்ளை ஒளிப்படங் களின் நுட்பத்திறனை அதிகரிப்பதற் காக சிலிக்கன் பீச் மென்பொருள் தயாரிப்பு நிறுவனம் தயாரித்துள்ள மெக்கின்டோஷ் வரைகலைத் தொகுப்புச் செயல்முறை.

digital data : இலக்கமுறை தகவல் : தொடர் வடிவத்தில் ஒத்திசைவான முறையில் தகவல்களைக் குறிப்பிடு வதற்குத் தொடர்ச்சியில்லாத முறை யில் தனித்தனியாக தகவல்களைக் குறிப்பிடுதல்.

digital data service : இலக்க தகவல் பணி : பொது தகவல் தொடர்பு சேவையாளர்களால் இயக்கப்படும் ஒரு செய்தித் தொடர்பு இணையம் (எடுத்துக்காட்டு : டெலிகாம் ஆஸ்திரேலியா). இது, இலக்கத்

தகவல்களை அதிவேகத்தில் கொண்டு செல்கிறது. தகவல்கள் பெரும்பாலும் கணினிக்கும், கணினியிலிருந்து புறநிலைச் சாதனங்களுக்கும், சேய்மை உணர்விகள், தொலைமானிச் சாதனங்கள் போன்றவை மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. இதன் சுருக்கப்பெயர் 'DDS'. இதனைச் சிலசமயம் 'இலக்கத் தகவல் இணையம்' (Digital Data Network-DDN) என்றும் அழைக்கின்றனர்.

digital data transmission : இலக்கமுறை தகவல் அனுப்புதல் : கணினி சாதனம் உருவாக்கிய மூல மின்னணு சமிக்ஞையை அனுப்புதல். எல்லா வழித் தடங்களும் இலக்கமுறை திறன்கள் உடையவை அல்ல.

Digital Equipment Corporation ; DEC : டிஜிட்டல் எக்விப்மென்ட் கார்ப்பரேஷன் ; டிஇசி : சிறு கணினி அமைப்புகளைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் நிறுவனம்.

digital paper : இலக்கக் காகிதம் : அழித்திட முடியாத சேமிப்புப் பொருள். இதனை ICI மின்னணுவியல் நிறுவனம் தயாரித்துள்ளது. இது, நாடா மற்றும் வட்டு ஆவணக் காப்பகச் சேமிப்புப் பொருளாகப் பயன்படுகிறது. இது, ஒரு பிரதிபலிப்புப் படுகைப் பூச்சுடைய ஒரு பாலிஸ்டர் படலத்தைப் பயன்படுத்துகிறது. இதன் உச்சியில் அகச் சிவப்பு ஒளிக்குச் செயலுணர்வுடைய சாயப் பாலிமர் படலம் ஒட்டப்பட்டிருக்கும்.

digital PBX : இலக்க அஞ்சல் பெட்டி : ஒரு தனியார் கிளைப் பரிமாற் அமைவு. இது, மனிதர் உதவியில்லாமல், பல்லாயிரம் செய்தித் தொடர்பு வழிகளைத் தானாகவே கையாளக்கூடியது. தொலைபேசி இணைப்புகளில் ஒரே சமயத்தில், குரல் மற்றும் தகவல் அனுப்பீடுகள் செய்யலாம். உள்ளூர்த் தகவல் பரிமாற்றங்களுக்கு அதிர்விணக்கிகளும், அதிர்விணக்க நீக்கிகளும் (Modems) தேவையில்லை.

digital plotter : இலக்கமுறை வரைவி: வரைபடமுறைகள், வரி ஓவியங்கள் மற்றும் பிற படங்களை வரைவதற்கு மைபேனா அல்லது பேனாக்களைப் பயன்படுத்தும் வெளியீட்டுச் சாதனம்.

digital recording : இலக்கமுறை பதிவு செய்தல் : காந்தப் பதிவு ஊடகத்தில் நுட்பமான புள்ளிகளாக தகவலைப் பதிவு செய்யும் நுட்பம்.

digital repeater : இலக்கமுறை மீட்டுருவாக்கப் பொறி : இலக்க முறை துடிப்புகள் நீண்ட கடத்திகள் வழியாகச் செல்லும்போது பலவீனமடையும் என்பதற்காக அவற்றை மீண்டும் உருவாக்க செய்தி தகவல் தொடர்புகளின் பாதையில் அமைக்கப்படும் சாதனம்.

digital research : இலக்கமுறை ஆராய்ச்சி : (இலக்கமுறை ஆராய்ச்சி நிறுவனம், மான்டெரி, சிஏ) கேரி கில்டால் என்பவர் 1976இல் நிறுவிய மென்பொருள் நிறுவனம். இது தனது நுண்கணினிக் கட்டுப்பாட்டுச் செயல்முறை (CP/M) மூலம் நுண்கணினிப் புரட்சியில் முன்னணியில் திகழ்ந்தது. இந்த நிறுவனத்தின் தயாரிப்புகளில் GEM பலகணிச் சூழல், FlexOS இயல்புநேரச் செயற்பாட்டு முறை, DR DOS ஆகியவை முக்கியமானவை. இந்த நிறுவனத்தை 1991இல் நோவல் என்ற நிறுவனம் விலைக்கு வாங்கியது.

digital signal : இலக்கமுறை சமிக்ஞை: கணினி புரிந்து கொள்ளக்கூடிய

வகையில் இரும எண் தகவல்களாக (1,0) குறியீட்டை அனுப்பிவைக்கும் இரண்டு மின்சார நிலைகள். ஒவ்வொரு 1-ம் 0-வும் ஒரு துண்மி. 8 முதல் 10 துண்மிகள் சேர்ந்து ஒரு பைட் அல்லது ஒரு எட்டியல் எழுத்து உருவாகிறது. இலக்கமுறை சமிக்ஞையை அலைவு முறைக்கு மாற்றவும், அலைவு முறையிலிருந்து கணினி புரிந்து கொள்ளும் இலக்க முறைக்கு மாற்றவும் அதிர்விணக்கி (மோடெம்) பயன்படுத்தப்படுகிறது.

digital signal processing : இலக்க முறைக் குறிப்பு செயலாக்கம்.

digital sorting : இலக்கமுறை பகுத்தல்; இலக்க முறை வரிசையாக்கம்: பட்டியலிடும் எந்திரத்தில் பிரிப்பது போன்றதொரு பிரிக்கும் நுட்பம். விசைகளை வரிசைப்படுத்துவதிலும், தகவல்களின் மதிப்பாலும் இடைப்பட்ட காலத்திற்கு நேரடி விகிதமாக எழுத்துகளின் எண்ணிக்கை அமையும் முறை.

digital speech : இலக்கமுறைப் பேச்சு : பதிவான பேச்சை சிறு ஒலி அலகுகளாகப் பிரித்ததன் நிலை. ஒவ்வொரு அலகும் உரத்த ஓசை, பிட்ச், டிம்பர் போன்றவற்றை எண்களாகக் குறிப்பிடப்பட்டு பேச்சின் இலக்க முறைக் குறியீடாக மாற்றப்படும்.

digital to analog converter- D-A converter : இலக்கமுறையிலிருந்து அலைவு முறைக்கு மாற்றும் சாதனம் : நுட்பமான இலக்கமுறை எண்களை தொடரலைவான சமிக்ஞைகளாக மாற்றப் பயன்படுத்தப்படும் எந்திர அல்லது மின்னணுச் சாதனங்கள்.

digital tracer : இலக்க வரைபடக் கருவி : படங்களையும், வரைகலைகளையும், வரைபடம் எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தனிவகைக் கீலுடைய கரம். இது கணினிக்குத் தகவல்களை அனுப்புகிறது.

digital transmission : இலக்கமுறை அனுப்பீடு : ஈரிலக்க வடிவில் ('0' மற்றும் '1') தகவல்களை அனுப்புவதற்கான ஓர் அனுப்பீட்டு முறை. இது அலைவு வடிவிலிருந்து வேறுபட்டது. குறுகிய தொலைவுகளுக்கு மட்டு இலக்கமுறை அனுப்பீட்டு முறையைப் பயன்படுத்த முடியும். எடுத்துக்காட்டு : ஒரு உள்ளூர்ப் பகுதி இணையம்.

digitize : இலக்கமாக்கு : பட ஓவியம் போன்ற வரைபட முறைத் தோற்றத்தை இலக்கமுறை குறியீடு செய்து வரைமுறைப் படமாக மாற்றுதல்.

digitized type : இலக்கமாக்கிய எழுத்துரு : கணினி படிக்கத்தக்க வடிவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள எழுத்துரு. இது புள்ளிகளின் அல்லது கோடுகளின் ஒரு தொகுதியைக் கொண்டது.

digitizer : இலக்கமாக்கி : பேனா போன்ற எழுது கருவி மூலமோ அல்லது பிற சுட்டுவி (கர்சர்) மூலமோ இயக்குபவர் எழுத உதவும் தட்டையான பலகையைக் கொண்ட உள்ளீட்டுச் சாதனம். இயக்குபவர் எழுதும் வடிவங்கள் கணினி அமைப்பின் நினைவகத்தில் தானாகப் பதிவாகி செயலாக்கம் பெறும்.

digitizing : இலக்கமுறை ஆக்கல் : படங்கள், ஓவியங்கள் போன்றவற்றை, கணினி அமைப்பு செயலாக்கம் செய்யக்கூடிய இலக்க முறை தகவல்களாக மாற்றுதல்.

digitizing tablet : இலக்க முறையாக்கும் பலகை : வரைமுறை மற்றும் பட தகவல்களை கணினியில் பயன்படுத்தும் இருமை உள்ளீடுகளாக மாற்றும்

உள்ளீட்டுச்சாதனம். இதில் ஒரு மேற் தகடும் அதன் அடியில் மெல்லிய கம்பித் தொகுதிகளும் இருக்கும்.

digit place : இலக்க இடம் : ஒரு எண்ணைக் குறிப்பிடும் சொல் இடம் பெற்றுள்ள இலக்கத்தைக் குறிப் பிடும் இடக்குறிப்பு எண் அமைப்பு, அமைப்பில் 10-களின் இடம், ஒன்று களின் இடம் போன்றவை உள்ளன.

digit punching position : இலக்கம் துளையிடும் இடம் : 1,2,...... 9 என்ற வரிசையில் துளையினைக் குறிப் பிடும் பதின்ம இலக்கத்திற்காக துளையிட்ட அட்டையில் ஒதுக்கப் பட்ட இடம்.

dimension : பரிமாணம் : ஒரு வரிசை யில் உள்ள பொருள்களின் வரிசை யமைப்பின் அதிகபட்ச அளவு அல்லது எண்.

dimmed command : மங்கிய ஆணை : ஒரு பட்டியலில் மங்கலாக்கப்பட் டுள்ள ஆணை. தற்போதைக்கு விருப் பத்தேர்வு எதுவுமில்லை என்பதை ஒரு மங்கிய ஆணை சுட்டுகிறது. அந்தத் தேர்வினைச் செய்வதற்கு முன்னர் இன்னொரு செயற்பணி முடிக்கப்படவேண்டும் என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

dimmed icon : மங்கிய உருவம் : மங் கிய கருநிற உருவம். இது, அது குறித் துக்காட்டும் வட்டு, மடிதாள் அல் லது வட்டு ஆவணம் போன்ற பொருள் ஏற்கனவே திறக்கப்பட்டு விட்டது, அல்லது வட்டு இயக்கி யிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டது என்பதைக் குறிக்கிறது.

dingbats : டிங்பேட்ஸ் : எழுத்துரு வாக்க மற்றும் மேசை மோட்டு வெளியீட்டுக் குறியீடுகளின் தொகுதி. 'இன்டர்நேஷனல் டைப்ஃபேஸ் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனம் இதைத் தயாரித்துள்ளது. இதில், அம்புக்குறிகள், சுட்டுக் கைகள், நட்சத்திரக் குறிகள், வட்டமிட்ட இலக்கங்கள் அடங்கியிருக்கும். இவை "ITC Zapf Dingbats" என்று அழைக்கப்படுகின்றன.

dinousaurs : டினோசார்ஸ் : 'கம்மோ டோர்-64' என்ற இல்லக்கணினியில் பயன்படுத்துவதற்கான ஒரு மென் பொருள்.

diode : இருமுனையம் : ஒரு திசையில் மட்டும் மின் ஓட்டத்தைத் தடுத்து அடுத்த திசையில் மின்ஓட்டத்தை அனுமதிக்கும் மின்னணுச் சாதனம்.

DIP : டிஐபி : Dual Inline package என்பதன் குறும்பெயர்.

DIP switches : டிஐபி நிலைமாற்றிகள் பலகணினிகளிலும் வெளிப்புறப் பொருள்களிலும் காணப்படும் சிறிய நிலைமாற்றிகள். சாதனங்களை நிலை நிறுத்தவும், சரிசெய்யவும் பயன்படுகிறது.

direct access : நேரடி அணுகுமுறை நேர்வழிச் சேர்வு : சுற்றிலும் உள்ள தகவல்களைத் தொடாமல் நேரடி யாக, தேவையான தகவல்களை மட்டும் தேடி எடுக்கும் அல்லது த வல்களை சேமிக்கும் செயல்முறை. வரிசைமுறை அணுகு முறையில் ஒவ்வொரு கோப்பையும் படித்தே செல்லவேண்டியிருக்கும் என்பதால் இது விரைவான முறை.

direct access file : நேர்வழிக்கோப்பு.

direct access processing : நேரடி அணுகல் செயலாக்கம் : நேரடி செய லாக்கம் மற்றும் தற்செயல் செயலாக் கம் போன்றது.

direct access storage : நேர்வழிச் சேகரம்.

Direct Access Storage Device (DASD) : நேரடி அணுகல் சேமிப்புச் சாதனம் : தகவல் இருப்பிடங்களை நேரடியாக முகவரியிட அனுமதித்து தேவையான தகவலை நேரடியாக எந்திர முறையில் அணுக அனுமதிக் கும் சேமிப்பு ஊடகம்.

direct address : நேரடி முகவரி : ஒரு இயக்கப்படும் ஒரு பொருளின் இருப் பிடத்தைக் குறிப்பிடும் முகவரி.

direct connect modem : நேரடி இணைப்பு அதிர்விணக்கி (மோடெம்): தகவல் பரப்புதலுக்குப் பயன்படு வதற்காக தொலைபேசியுடன் நேரடி யாக இணைக்கப்படும் அதிர் விணக்கி (மோடெம்).

direct conversion : நேரடி மாற்றல் : ஒரு அமைப்பிலிருந்து மற்றொரு அமைப்புக்கு மாற்றி புதிய முறை யை மட்டும் செயல்படுத்தும் மாற் றல் முறை.

Direct Coupled Transister logic; DCTL : நேரடி இணைப்பு மின் பெருக்கி அளவை : மின்பெருக்கி களை மட்டுமே செயல்படும் பொருள்களாகக் கொண்ட மின் இணைப்பு முறைமை.

direct current : நேரடி மின்சக்தி : மின் கலத்திலிருந்து அளிப்பது போன்று ஒரு திசையில் மட்டும் மின்னணுக் களின் ஓட்டம்.

direct data entry : நேரடி தகவல் பதிவு : நேர்முக முகப்புகள் மூலமோ அல்லது எந்திரம் படிக்கக் கூடிய மூல ஆவணங்கள் மூலமோ கணினியில் நேரடியாக தகவல்களை பதிவு செய்தல்.

direct data organization : நேரடித் தகவல் அமைவாக்கம் : இயற்பியல் தகவல் ஊடகத்தினுள் தருக்க முறைத் தகவல் கூறுகள் குறிப்பின்றிப் பகிர் மானம் செய்யப்படுகிற ஒரு தகவல் அமைவாக்க முறை. எடுத்துக்காட்டு : தருக்கமுறைத் தகவல் மற்றும் பதி வேடுகளை ஒரு காந்த வட்டுக் கோப் பின் மேற்பரப்பில் குறிப்பின்றிப் பகிர்மானம் செய்தல். இதனை 'நேரடி அமைவாக்கம்' (Direct organization) என்றும் அழைப்பர்.

direct file organization : நேரடிக் கோப்பு அமைவாக்கம் : ஒவ்வொரு பதிவேடுகளையும் தனித்தனியே அணுகக் கூடிய அமைவாக்கம்.

direct file processing : நேரடிக் கோப் புச் செய்முறைப்படுத்துதல் : ஒரு பதி வேட்டு விடைக்குறிப்பினைப் பயன் படுத்தி, அப்பதிவேட்டினை நேரடி யாக அணுகுவதற்குப் பயனாளரை அனுமதிக்கிற செயல்முறை.

direct input/output : நேரடி உள்ளீடு/ வெளியீடு : ஒரு கணினிப் பொறி யமைவுக்குள் தகவல்கள் உள்ளிடு வதற்கு அல்லது கணினிப் பொறி யமைவிலிருந்து எந்திரம் படிக்கக் கூடிய ஊடகங்களைப் பயன்படுத் தாமல் வெளிப்படுத்துவதற்கான முனையங்கள் போன்ற சாதனங்கள்.

Direct Memory Access ; DMA : நேரடி நினைவக அணுகல் (டிஎம்ஏ) : மையச் செயலக அலகின் தலையீடு இல்லா மல் உட்புற நினைவகத்திலிருந்து வெளிப்புற சாதனங்களுக்கு தகவல் களை நேரடியாக மாற்றல் செய்யும் முறை.

direct mode : நேரடி முறை.

directory : விவரப்பட்டியல் ; தகவல் குவியல் ; அடைவு : 1. மென் பொருளை பல தனித்தனி கோப்பு களாகப் பிரித்து, அந்தக் கோப்பு களின் இருப்பிடத்தைக் கண்டுரைக்க தகவல் பட்டியலைக் கொண்டுள்ள

ஒரு சாதனம். 2. சேமிப்பு ஊடகத்தில் உள்ள அனைத்துப் பெயர்கள் மற்றும் இடங்களைக் கொண்ட, எல்லா கோப்புகளையும் உள்ளடக்கிய பட்டியல் கோப்பு.

directory management : விவரக் குறிப்பேட்டு மேலாண்மை : ஒரு வட்டில் விவரக்குறிப்பேடுகளைப் பேணிக் கட்டுப்படுத்துதல். இது பெரும்பாலும் பட்டியலிடும் மென்பொருளைக் குறிக்கிறது. இது, ஆணைகளைப் பதிவு செய்வதை விடப் பயன்பாட்டுக்கு எளிதானது.

directory structure : விவரக்குறிப்பேட்டுக்கட்டமைவு : துணைச் சேமிப்புச் சாதனங்களில் பல்வேறு விவரக் குறிப்பேடுகளைப் படியடுக்கு முறையில் வரிசைப்படுத்துதல், இந்த விவரக் குறிப்பேட்டுக் கட்டமைவு, விவரக் குறிப்பேடுகளுக்கிடையிலான உறவுநிலைகளைக் குறிக்கிறது. பல்வேறு மென்பொருளைப் பயன்பாடுகள் விவரக்குறிப்பேட்டுக் கட்டமைவினைத் திரையில் அச்சு நகலாகக் காட்டுகின்றன அல்லது வன்படியாகத் தருகிறது.

direct processing : நேரடி செயலாக்கம் : முன்னதாகவே பிரிக்காமல், நேரடி அணுகல் சேமிப்புச் சாதனங்களில் கோப்புகளைப் பயன்படுத்தும், தற்செயல் வரிசையில் தகவல்களைக் கையாளும் தொழில் நுட்பம்.

direct screen copy device : நேரடித் திரைப்படியெடுப்புச் சாதனம் : முனையத் திரையில் காண்பவற்றை அப்படியே படியெடுக்கும் ஒரு சாதனம்.

direct search index : நேர்வழித்தேடல் (அட்டவணை).

directory tree : விவரக்குறிப்பேட்டு மரம் : ஒரு வட்டினுள் பல்வேறு தகவல் குறிப்பேடுகளையும் துணைக் குறிப்பேடுகளையும் காட்டுகிற படிமுறை உருக்காட்சி.

dirty power : சீரற்ற மின்விசை : அழுத்த ஏற்றத்தாழ்வுகள், ஓசை, இறுக்கம், பெருக்கம் போன்ற சீரற்ற மாற்று மின்னோட்ட விசை. இது அலுவலகத்திலுள்ள மின் பயன்பாட்டு அல்லது மின்னணுவியல் சாதனத்தினால் உண்டாகிறது.

disable : செயலற்றதாக்கல் ; முடக்கமாதல் : இயல்பான திறனைத் தடுத்தல் அல்லது நீக்குதல். வெளிப்புற சாதனத்தின் இயக்கத்தை மேலும் தொடராமல் தடுக்கும் ஆணை ஒன்றைப் பயன்படுத்தல்.

disassembler : பிரிக்கும் ஆணைத் தொடர்; பிரிப்பி : எந்திர மொழிக் குறியீட்டை ஏற்று பொறி மொழிக் குறியீட்டை உருவாக்குதல்.

disaster dump : அபாய ஏற்பாடு : மென்பொருள் அல்லது வன்பொருளுக்கு ஏதாவது அபாயம் ஏற்படுமானால் அதற்கு மாற்றுச் செயல் திட்டம்.

disaster recovery : இடர் மீட்சி : ஓர் இடர்ப்பாட்டிலிருந்து முழுமையான செயற்பாட்டிற்கு மீள்வதற்கான மேலாண்மை உத்தி. (எடுத்துக்காட்டு: நெருப்பு அல்லது தளச் சேதம்). இது, அனைத்தையும் கூடுதல் படியெடுத்து வைத்துக்கொள்வதையும், வேறிடங்களில் சேமித்து வைப்பதையும் உள்ளடக்கும்.

disclaimer : ஒதுங்கல் ; உரிமைத் துறப்பு : அந்தப் பொருளைப்பயன்படுத்துவதனால் ஏற்படும் வணிக இழப்புகளுக்கு விற்பனையாளர் பொறுப்பல்ல என்று பல மென்பொருள்களுடன் வரும் நிபந்தனை.

discrete : தனியான : உதிரி எழுத்துகள் அல்லது துண்மிகளைப் போன்ற தனிப்பட்ட பொருட்களால் குறிப்பிடப்பட்ட அல்லது தனிப்பட்ட பொருள்கள் தொடர்பான.

discrete component : தனி உறுப்பு : ஒரே ஒரு செயலை மட்டும் செய்கின்ற மின்சாதனப் பொருள். ஒருங்கிணைந்த மின்சுற்றுக்கு மாறானது.

discrete cosine transform : பிரிநிலைக் கிடைகோண உருமாற்றம் : படக்கூறுகள் (Pixels) அலையுருவங்கள் போன்ற தகவல்களை அதிர்வெண் தொகுதியாக மாற்றுகிற படி நிலை நடைமுறை. இதில் முதல் அதிர்வெண்கள் மிகவும் பொருள் பொதிந்தவை. கடைசி அதிர்வெண்கள் மிகக் குறைந்த பொருள் கொண்டவை.

discrete device : பிரிநிலைச் சாதனம் : ஒரு கொண்மி அல்லது மின்பெருக்கி போன்ற மின்னியல் அமைப்பி.

discretionary hyphen : பிரிநிலை ஒட்டுக்குறி : ஒரு சொல்லில் இணைப்புக் குறியிடுதற்காகப் பயனாளர்குறித்துள்ள இடம். சொல், ஓரக் கோட்டுக்கும் மேலே செல்லுமானால், அது அந்த இடத்தில் பிளவு படும்.

disk : வட்டு ; மின்காந்தத் தட்டு : கணினியால் அணுகக்கூடிய தகவல் மற்றும் ஆணைத்தொடர்களை சேமிக்கும் மின்காந்த சாதனம். நிலைத்த வட்டு அல்லது வளையக் கூடிய செயற்கை இழை வட்டுகளின் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன.

disk access : வட்டு அணுகல் : வட்டில் எழுத/படிக்க உதவும் முனை தகவலை வட்டில் எழுதவோ படிக்கவோ அணுகுதல்.

disk access time : வட்டு அணுகல் நேரம் : வட்டில் குறிப்பிட்ட ஒன்றின் இருப்பிடம் அறிய தேவைப்படும் நேரம். தேடும் நேரம் என்றும் அழைக்கப்படும். மொத்த அணுகு நேரத்தில் ஒரு பகுதி.

disk array : வட்டு வரிசை : ஒரு சைகை அலகில், கூடுதல் திறம்பாடு, வேகம், தவறுகை தாங்கும் செயற்பாடு ஆகியவற்றுக்காக இணைந்துள்ள இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட வட்டு இயக்கிகள்.

disk back : வட்டுத் தொகுதி.

disk based : வட்டு அடிப்படை : வட்டுகளைச் சேமிப்பு ஊடகமாகப் பயன்படுத்துகிற கணினிப் பொறியமைவு. வட்டிலிருந்து தகவல்களை மீட்கிற பயன்பாடு. இது, 'நினைவுப் பதிப்பி அடிப்படை' யிலிருந்து மாறுபட்டது.

disk buffer : வட்டின் இடைநிலை நினைவகம் : வட்டில் எழுதப்படாத தகவலை ஒதுக்கி வைக்க கணினியின் நினைவகத்தில் உள்ள ஒரு பகுதி.

disk cache : வட்டுப் பொதியறை : வட்டிலிருந்து தகவல்களைப் படிப்பதற்கான ஒரு இடைநிலை. இது வட்டு அணுகுதலை விரைவுபடுத்த பயன்படுத்தப்படுகிறது.

disk cartridge : வட்டுப் பொதியுறை : தனியொரு நிலைவட்டினை அல்லது ஒரு செருகுவட்டினைக் கொண்டிருக்கிற அப்புறப்படுத்தத்தக்க வட்டுப் பொதிவுச் சாதனம்.

disk controller : வட்டுக் கட்டுப்பாட்டுக் கருவி : சைகைகளை மீட்டு, வட்டு இயக்கிக்கு அனுப்புகிற மின்சுற்று வழி. ஒரு சொந்தக் கணினியில், இது ஒரு விரிவாக்கப் பலகை. இது தாய்ப்பலகையிலுள்ள விரிவாக்கப் பள்ளத்தில் பொருந்தச் செய்கிறது.

ஒரு வட்டு இயக்கிக்கும் மையச் செயலகத்துக்கும் (CPU) இடையிலான இடைமுகப்பாக உள்ள மின்னணுவியல் சுற்றுநெறி.

disk controller card : வட்டுக் கட்டுப்பாடு அட்டை : வட்டு இயக்கியை கணினியுடனும் அதன் கட்டுப்பாட்டு இயக்கத்துடனும் இணைக்கும் வெளிப்புற மின்சுற்று அட்டை.

disk copy : வட்டுப் படி : ஒரு செருகு வட்டின் உள்ளடக்கங்களை இன்னொரு செருகுவட்டில் படியெடுப்பதற்கான DOS ஆணை. இதில், செருகு வட்டுகள் முழுவதையும் தடவாரியாகப் பயன்படுத்தப்படும் DOS, OS/2 பயன்பாடு.

disk copying : வட்டு நகலெடுத்தல் : ஒரு வட்டில் உள்ள அனைத்து உள்ளடக்கங்களையும் வேறொரு வட்டிற்கு மாற்றும் செயல்.

disk crash : வட்டுப் பழுது ; வட்டுக் கேடு : பயன்படுத்தமுடியாததாகிப் போன வட்டு அலகின் நிலை. வட்டு இயக்கியின் படிக்கும் /எழுதும் முனைக்கும் தட்டின் மேற்பகுதிக்கும் இடையில் தொடர்பு ஏற்பட்டதால் இது ஏற்படுவதுண்டு.

disk directory : வட்டு விவரக் குறிப்பேடு : கணினியின் ஒவ்வொரு கோப்பும் அல்லது செயல்முறையும் வட்டில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிற ஒரு பட்டியல். விவரக்குறிப்பேடு, பொதுவாக ஒரு வட்டின் தொடக்கத்தில் சில தடங்களில் பதிவு செய்கிறது.

disk doctor : வட்டுப் பொருளறி சாதனம் : ஒரு வட்டில் என்னென்ன சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பயனாளர் ஆராய்ந்தறிய உதவுகிற ஒரு செயல்முறை. ஒரு வட்டு சேதமடையுமானால், அதிலுள்ள மதிப்பு மிக்க தகவல்களை மீட்பதற்கு இது பயன்படுகிறது.

disk drive : வட்டு இயக்கி, வட்டு செலுத்தி : கணினி பயன்படுத்துவதற்காக, நினைவகத்தில் வட்டிலிருந்து தகவல்களைப் படிக்கும் சாதனம். கணினியின் நினைவகத்திலிருந்து சேமிப்பதற்காக தட்டில் எழுதவும் செய்யும்.



வட்டு செலுத்தி (Disk drive)
8.89 செ.மீ நெகிழ்வட்டு செலுத்தி

disk dump : வட்டுக் குவியல் : அறிக்கை உருவமைவாக்கம் இல்லாமல் வட்டின் உள்ளடக்கங்களை அச்சுப் படியாக எடுத்தல்.

disk duplication : வட்டு பிரதியெடுத்தல் ; வட்டு நகலாக்கம் : ஒரு காந்த வட்டில் பதியப்பட்டுள்ள தகவல் வேறொரு வட்டுக்கு மாற்றும் செயல்முறை.

disk emulator : வட்டு உருமாதிரி : ஒரு வட்டு இயக்கியின் திண்மநிலை உருப்படிவாக்கம். இது, மைய முறைகளுக்கும், முனையங்களுக்கும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

disk envelope : வட்டு உறை : செருகு வட்டுகளை கையாளும்போதும் சேமித்து வைக்கும்போதும் பயன்படுத்தும் காகித உறை. வட்டு இயக்கியில் வட்டை நுழைப்பதற்கு முன் வெளியே எடுக்கப்பட வேண்டும்.

diskette : டிஸ்கெட் ; செருகு வட்டு : நுண் கணினிகள், சிறுகணினிகளுக்கான குறைந்த விலை, அதிக சேமிப்பு தரும் சாதனம்.

diskette tray : டிஸ்கெட் தட்டு : செருகு வட்டுகளைச் சேமிக்கப் பயன்படும் கொள்ளகம். திறந்தோ மூடியோ இருக்கலாம்.

disk failure : வட்டுச் செயலறவு : ஒரு நிலைவட்டு அல்லது செருகுவட்டு இயக்கி அல்லது வட்டுங்கூடச் செயலற்றுப் போதல். இவை, மின் எந்திரச் சாதனங்கள் என்பதால், வட்டுகள், வட்டு இயக்கிகள் அனைத்தும் இறுதியில் செயலிழந்து போவது இயற்கையே. ஒரு நிலைவட்டின் சராசரிச் செயலறவு நேர்வு 20,000 மணிகள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

disk file : வட்டுக் கோப்பு : காந்த வட்டில் தங்கி இருக்கும் கோப்பு. ஒரு வட்டில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட தகவல் தொகுதி.

disk format : வட்டு உருவமைவு : ஒரு சேமிப்புச் சாதனத்தில் தடங்கள் மின்னியல் முறையில் அச்சிடப்படும் முறை குறித்த தகவல். ஒரு வட்டின் உருவமைவு, அதன் இயல்பான ஊடகம், உருவமைவுச் செயல்முறை மூலம் தீர்மானிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு : 5.25'' 360KB செருகு வட்டு (எ) 8.89 செ.மீ. 1.44 MB செருகுவட்டு.

disk jacket : வட்டு மேலணி : காகிதம் அல்லது செயற்கை இழையில் செய்யப்படும் வட்டுக்கான நிரந்தர பாதுகாப்பு முனை. வட்டு இயக்கியில் நுழைக்கும்போது உள்ளிட்ட எந்த சமயத்திலும் மேலணியிலிருந்து வட்டு எப்போதும் நீக்கப்படுவதில்லை.

diskless workstation : வட்டிலா வேலை நிலையம் : ஓர் இணையத்திலுள்ள வட்டுச் சேமிப்பி இல்லாத கணினி. அனைத்துச் செயல் முறைகளும், தகவல்களும் இணைய வட்டிலிருந்து மீட்கப்படுகின்றன.

disk library : வட்டு நூலகம் : சுற்றுப்புறக் கட்டுப்பாட்டு சூழ்நிலைகளில் பாதுகாப்பாக வட்டுத் தொகுதிகளை வைத்திருக்கும் தனி அறை அல்லது வட்டுகளின் கோப்பை வைப்பதற்கான இருப்பக வசதி.

disk management : வட்டு மேலாண்மை : ஒரு நிலை வட்டினைப் பேணிக் கட்டுப்படுத்துதல், உருவமைவு, படி, தன்மைக்குறி விவரக் குறிப்பேட்டு மேலாண்மை, கூறுபாட்டுத் தடுப்புச் செயற்பணிகள் போன்ற பல்வேறு பயன்பாடுகளை இது குறிக்கிறது. ஒரு வட்டில் தகவல்களைச் சேமித்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் அமைப்பாக்கக் கட்டமைவு.

disk memory : வட்டு நினைவகம் : சுழலும் வட்டுகளை தற்காலிக நினைவகமாக பயன்படுத்தும் சேமிப்பகம்.

disk mirroring : வட்டுப் பிரதிபலிப்பு : தவறுகை தாங்கும் செயற்பாட்டிற்காகத் தேவைக்கு அதிகமாகவுள்ள தகவல்களைப் பதிவு செய்தல். தகவல்கள் ஒரே வட்டில் இரு பகுதிகளில் அல்லது ஒரே பொறியமைவில் இரு தனித்தனி வட்டுகளில் இரு தனித்தனிக் கணினிப்பொறியமைவுகளில் எழுதப்படுகின்றன.

disk operating system : வட்டு இயக்க முறைமை : ஆணைத்தொடர்களை மின்காந்த வட்டுகளில் சேமித்து வைக்கும் இயக்க அமைப்பு. கோப்புகளின் இருப்பிடத்தை அறிதல், கோப்புகளைச் சேமித்துத் திரும்ப

எடுத்தல், சேமிப்பகத்தை ஒதுக்குதல், வட்டு சேமிப்பு தொடர்பான பிறகட்டுப்பாட்டுப் பணிகளை இந்த அமைப்பு செய்வது வழக்கம்.

disk optimiser : வட்டுச் சிக்கனம் : தகவல் கோப்புகள் சிதறுவதைக் கண்காணிக்கும் ஒரு பயனீட்டுச் செயல்முறை. இது, சிதறலைக் குறைக்கும் வகையில் கோப்புகளைப் படியெடுக்கிறது. வட்டுப் பரப்புகளை மறு ஒதுக்கீடு செய்கிறது.

disk pack : வட்டு அடுக்கு : ஒரே அலகாகக் கருதப்பட்டு ஒரு கம்பியில் ஏற்றப்படும் நிலை வட்டுகளின் வெளியே எடுக்கக்கூடிய தொகுதி.

disk partition : வட்டுப் பிரிவினை : வட்டில் உள்ள தகவல்களை சிறு பகுதிகளாகப் பிரித்து எளிதாகக் கையாள உதவும் அளவைப் பகுதி.

disk sector : வட்டுப் பிரிவு : வட்டின் மேல் தொடர்ச்சியான இரண்டு ஆரங்களுக்கு இடையிலுள்ள தகவல் சேமிப்பு இடப்பகுதியைக் குறிப்பிடுகிறது. ஒரு பட்டாணியைத் துண்டு போடுவது போன்ற முறையிலேயே வட்டின் பிரிவுகளை அமைக்க முடியும்.

disk space : வட்டுப் பரப்பு : ஒரு வட்டில் காலியான இடப்பரப்பினைத் தெரிவிக்கின்ற ஒரு செய்திக் குறிப்பு ஆதாரச் செயற்பணி.

disk striping : வட்டுச்செய்தி இடையிணைப்பு : பன்முக வட்டு இயக்கிகளுக்கு தகவல்களைப் பரவச்செய்தல். இயக்கிகளின் ஊடே எட்டியல்கள் அல்லது வட்டக்கூறுகள் மூலம் தகவல்கள் இடையிணைப்பு செய்யப்படுகின்றன.

disk unit enclosure : வட்டு அலகு அடைப்பி : ஒன்று அல்லது மேற்பட்ட வட்டு இயக்கிகளையும் மின் சக்திச் சாதனத்தையும் வைப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பெட்டி.

dispatch : அனுப்பு : அடுத்த வேலை என்ன என்று தேர்ந்தெடுத்து அதை செயலாக்கம் செய்ய தயாராக இருத்தல்.

dispatcher : விரைவுச் செயல்முறை : ஓர் இடையீடு ஏற்பட்ட பிறகு, நடப்பு இயக்கப்பணித் தொகுதியிலிருந்து நிறைவேற்றுவதற்காக அடுத்த பணியைத் தேர்ந்தெடுக்கிற கட்டுப்பாட்டுச் செயல்முறை.

dispatching : விரைவுச் செயலாக்கம் : உருத்தெளிவு, வண்ணம், வரைகலைத் திறம்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கு, கண்காட்சி அலகினை மின்னணுவியல் முறையில் கட்டுப்பாட்டுடன் இணைக்கிற ஒரு பலகை.

dispatching priority : அனுப்பும் முன்னுரிமை : பல பணிகளின் சூழ்நிலையில் மைய செயலக அலகில் பயன்படுத்துவதற்காக முன்னால் அனுப்பப்படுவனவற்றை முடிவு செய்யும், பணிகளுக்கு ஒதுக்கப்படும் எண்கள்.

dispersed data processing : பரவலான தகவல் செயலாக்கம் :

dispersed intelligence : பரவலாக்கப்பட்ட அறிவுத்திறன் : கணினி ஆற்றலை கட்டமைப்பு முழுவதும் பரவலாக்கப்பட்ட கட்டமைப்பு.

dispersion : பரப்பீடு : முரண்பாட்டு அளவை. பல்வேறு பரப்பீட்டு வடிவங்களைக் கண்டறிவதற்கு மாற்று வழிகள் உள்ளன.

displacement : இடமாற்றல் : அடிப்படை முகவரிக்கும் உண்மையான எந்திர மொழி முகவரிக்கும் இடையில் உள்ள வேறுபாடு.

display : காட்சி ; காட்சியகம் ; ஒளி எழுத்து ; கண் காட்சி : *1. திரையிலோ அல்லது காட்சியிலோ தகவல்களைக் குறிப்பிடல். 2. கணினி முகப்பில் உள்ள ஒளி அல்லது குறிப்பிகள். 3. வரைகலை தகவல்களை வெளியீட்டுச் சாதனத்தில் காட்சியாக உருவாக்கும் செயல்.*

display adapter : காட்சி ஏற்பி ; காட்சி அமைப்பு அட்டை : *கணினியை ஒரு காட்சித் திரையுடன் மின்னணு முறையில் இணைக்கும் ஏற்பி அட்டை. கணினித் திரையின் அளவு, நிறம் மற்றும் வரைகலை உண்டா இல்லையா என்பது போன்ற திறன்களை இது முடிவு செய்யும்.*

display background : காட்சிப் பின்னணி ; காட்சிப் பின்புலம் : *செயலாக்கம் செய்வதன் பகுதியாக இல்லாத, பயன்படுத்துவோரால் மாற்ற முடியாத வரைகலை தகவல்களில் திரையில் காட்டப்படும் பகுதி. காட்சி முன்னணி எனப்படும் காட்சியில் தோன்றும் தோற்றத்தை மேம்படுத்தப் பயன்படுகிறது.*

display composition : காட்சியக இணைப்பாக்கம் : *மேசை மோட்டு வெளியீட்டில், திண்மையாகவும், அலங்காரமாகவும் மாறுபட்ட எழுத்து முகப்புகளாகவும் உள்ள எழுத்துருக்களைக்கொண்ட வரிகள். இது கவனத்தை ஈர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.*

display console : காட்சி முகப்பு ; காட்சி முனையம் : *காட்சித்திரை மற்றும் உள்ளீட்டு விசைப் பலகையைக் கொண்ட உள்ளீட்டு / வெளியீட்டுச் சாதனம்.*

பணிநிலையம் என்றும் சில சமயம் அழைக்கப்படுகிறது.

display cycle : காட்சிச்சுழற்சி ; காட்சிச் சுழல் : *புலனாகும் காட்சித்திரை மீண்டும் புதிதாக மாற எடுக்கும் நேரம்.*

display device : காட்சிச் சாதனம் : *வரை கலை அச்சுப்பொறி, இலக்க முறை பலகை, ஒளிக்காட்சி முகப்பு போன்ற பார்க்கக்கூடிய வகையில் தகவல்களை உருவாக்கும் திறனுடைய சாதனம்.*

display element : காட்சியகக் கூறு : *வரைகலையில், பின்புலம், முன்புலம், வாசகம், வரைகலை உருக் காட்சி போன்ற அடிப்படை வரைகலை அமைப்பிகள். கணினி வரைகலையில் ஓர் உருக்காட்சியின் ஓர் அமைப்பி.*

display entity : காட்சி அலகு : *கணினி வரைகலையில் ஒளிக்காட்சிக் கூறுகளின் ஒரு தொகுதி. இதனை ஓர் அலகாகக் கொள்ளலாம்.*

display face : காட்சி முகப்பு : *ஓர் ஆவணத்தில் தலைப்புகள், பெயர்கள் ஆகியவற்றுக்குப் பொருத்தமான எழுத்து முகப்பு. பக்கத்திலுள்ள மற்ற வாசக எழுத்துகளிலிருந்து இது தனித்து முனைப்பாகத் தோன்றுகிறது.*

display foreground : காட்சி முன்புலம் : *பயனாளரால் மாற்றக்கூடிய காட்சிச் சாதனத்தில் காட்டப்படும் வரைகலை தகவல்களின் பகுதி.*

display frame : காட்சிச் சட்டகம் : *கணினி வரைகலையில் ஒரு தொடர்ச்சியான தூண்டுதல் சட்டகங்களிலுள்ள ஒரு தனிச் சட்டகம்.*

display highlighting : காட்சி அதிகரித்தல் ; காட்சி சிறப்புறல் : *மினுக்குதல், பெரிய எழுத்து, அதிகக் கருமை, தலைகீழ் ஒளி, அடிக்கோடிடல் மாறுபட்ட நிறங்கள் போன்ற முறைகளைப் பயன்படுத்தி காட்சித்திரை*

யில் தகவலை முக்கியப்படுத்தும் வழி.

display image : காட்சி உருவம் ; காட்சிப் படிமம் : காட்சிச் சாதனத்தில் அப்போது தெரியும் வரைகலை கோப்பின் காட்டப்பட்ட பகுதி.

display list processor : காட்சியக பட்டியல் செய்முறைப்படுத்தி : கணினி வரைகலையில், கோடுகள், வட்டங்கள் போன்றவற்றை வரைதல் போன்ற வரைகலை வடிவ கணித உருவங்களை, ஒளிக்காட்சிப் பட்டியலிலிருந்து மையச் செயலகத்தை (CPU) உருவாக்குகிற ஓர் எந்திரம்.

display list : காட்சியகப் பட்டியல் : கணினி வரைகலையில், அளவுரு வரைகலை உருவமைவில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிற ஓர் உருக்காட்சியை உருவாக்குகிற அளவுருக்களின் தொகுதி.

display menu : காட்சி வகைப் பட்டியல் : செயல்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைத் தொடரின் அடுத்த செயலை முடிவு செய்யப் பயனாளருக்கு வாய்ப்பு அளிக்கும் ஆணைத் தொடரில் உள்ள, திரையில் தெரியும் வாய்ப்புகள். காட்சித் திரையில் தெரிவதை அச்சிடுவது, வரைகலை காட்சியை வட்டில் சேமிப்பது போன்றவை வாய்ப்புகளில் சில.

Display PostScript (DPS) : காட்சிப் பின்குறிப்பு (டிபிஎஸ்) : ஆடோப் கழகம் தயாரித்துள்ள ஒரு காட்சியக மொழி. இது, ஒரு பயன்பாட்டுச் செயல்முறையிலுள்ள அடிப்படை ஆணைகளை திரையில் வரைகலை உருவங்களாகவும், வாசகங்களாகவும் காட்டுகிறது. பின்குறிப்பு அச்சடிப்பு மொழியின் திரை வடிவம்.

display postscript screen : காட்சியகப் பின்குறிப்புத் திரை : பின்குறிப்பு அச்சடிப்பி மொழியின் மறுபடிவம். இது, ஒரு பயன்பாட்டில் அடிப்படை ஆணைகளை, திரையில் வரைகலை உருவங்களாகவும் வாசகங்களாகவும் மாற்றிக் காட்டுகிறது. இது, ஒரு செந்திறமான, சாதனச் சார்பிலாத காட்சி மொழியை அளிப்பதற்கு ஒரு செயற்பாட்டுப் பொறியமைவில் சேர்க்க வடிவமைக்கப்படுகிறது.

display processor : காட்சிச் செய்முறைப்படுத்தி : ஒரு கோப்பின் உள்ளடக்கங்களை கணினித் திரை (Monitor) போன்ற ஒரு சாதனத்தில் காட்சியாகக் காட்டுகிற செயற்பாட்டுக்கான ஒரு செய்முறைப்படுத்தி.

display screen : காட்சித்திரை : மனிதர் பார்ப்பதற்காக வாசகங்களையும், வரைகலை உருவங்களையும் காட்டுவதற்கான ஒரு பரப்பு. இது, எதிர்மின்கதிர்க்குழல் அல்லது பட்டைச் சேணத் தொழில் நுட்பத்தில் அமைந்திருப்பது.

display surface : காட்சி மேற்பரப்பு : புலனாகும் காட்சித் திரை, அச்சுக் காகிதம், பலகைக் காகிதம் அல்லது திரைப்படம் போன்ற வரைகலை தகவல்களைக் காட்டக்கூடிய சாதனம்.

display terminal : காட்சி முகப்பு ; காட்சி முனையம் : வரைகலை தகவல்களைப் பார்க்கக்கூடிய வகையில் வெளியிடும் திறனுள்ள ஒரு வெளியீட்டுச் சாதனம்.

display tolerence : காட்சி சகிப்பு ; காட்சிப் பொறுதி : எவ்வளவு வரைகலை தகவல்களை எவ்வளவு துல்லியமாக வெளியிட முடியும் என்பதன் அளவு.

display type : காட்சி வகை : எதிர்மின்வாய் (காத்தோட்) கதிர்க்குழாய் (சிஆர்டி), ஒளி உமிழும் டையோடு

(எல்இடி), ஒளிப்படிகக் காட்சி (எல்சிடி) போன்ற காட்சித் தொழில் நுட்பம்.

display unit : காட்சி அலகு : தகவல்களைப் பார்க்கக்கூடிய வகையில் அளிக்கும் ஒரு சாதனம்.

display write : காட்சி எழுத்து : IBM காட்சி எழுத்துத் தொகுதியானது, அந்நிறுவனத்தின் சொல் பகுப்பி, காட்சி எழுது கருவியிலிருந்து உருவாக்கப்பட்டதாகும். பழைய முறை இப்போது வழக்கில் இல்லை.

distortion : சிதறல் ; திரிபு : அனுப்பும் சாதனம் உள்ளிட்ட மின்சுற்றுகளின் வழியாக அனுப்பப்படும் மின்சுற்றுகளின் அலை வடிவத்தில் ஏற்படும் விரும்பத்தகாத மாற்றம். ஒரு அளவுக்கு மேற்படாமல் சிதறல்களைக் கட்டுப்படுத்தி உள்ளீட்டு சமிக்ஞைகளை மாற்றுவதே மின்சுற்றுகளை வடிவமைப்பதில் உள்ள முக்கிய சிக்கல்.

distributed database : பகிர்மான தகவல் தளம் ; பரவிய தகவல் தளம் : ஒரு கட்டமைப்பில் கணினி அமைப்புகளின் மூலமாக பரவலாக்கப்பட்ட தகவல் தளம்.

distributed data processing : பகிர்மான தகவல் செயலாக்கம் : கணினி அமைப்பில் இயக்கங்களைச் செய்யும் கொள்கைகளில் ஒன்று. அதன்படி மையச் செயலக அலகுகளும், முகப்புகளும் பல்வேறு இடங்களில் பிரிந்திருந்தாலும் அவை தகவல் தொடர்பு கட்டமைப்புகளின் மூலம் செயல்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளன.

distributed design : பகிர்மான வடிவமைப்பு ; பரவிய வடிவமைப்பு : தனிப்பட்ட இயக்கும் அலகுகள் இருப்பதை அடையாளம் காணுவதுடன் மைய ஒருங்கிணைப்பு மற்றும் கட்டுப்பாட்டின் பலன்களையும் ஏற்கும் தகவல் அமைப்பு.

distributed file system : பகிர்மானக் கோப்பு முறை : பன்முக இணையங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கோப்புகளின் தடம் பற்றிச் செல்லும் மென்பொருள். கோப்புகள், அமைவிடத்தைப் பொறுத்து அல்லாமல், அவற்றின் பெயரால் அடையாளங் காணப்படுகின்றன.

distributed function : பகிர்மானச் செயற்பணி : அமைவனம் முழுவதிலும் செய்முறைப்படுத்தும் பணிகளைச் செய்தல்.

distributed information processing system : பகிர்மான தகவல் செயலாக்க அமைப்பு : பல்வேறு இடங்களில் அமைந்துள்ள தகவல் தளங்கள் அல்லது எதிர்வினை ஆற்றும் கணினி அமைவுகளின் தொகுதி.

distributed intelligence : பகிர்மான அறிவுத் திறன் : முனையங்களிலும், பிற புறநிலைச்சாதனங்களிலும் செய்முறைப்படுத்தும் திறம்பாட்டினை அமைத்தல். திரை உருவமைவு, தகவல் பதிவுச் செயல்மானம், பிற செய்முறைப்படுத்துதலுக்கு முந்திய நடவடிக்கைகளை அறிவுத் திறன் முனையங்கள் கையாள்கின்றன. வட்டு இயக்கிகள், பிற புறநிலைச் சாதனங்களில் அமைக்கப்படும் அறிவுத் திறன், மையக் கணினியை வாலாயப் பணிகளிலிருந்து விடுவிக்கிறது.

distributed network : பகிர்மான இணையம்; பகிர்மான கட்டமைப்பு : இடைப்பட்ட முனைகளின் வழியாக நேரடியாகவோ அல்லது மிதமிஞ்சிய பாதைகளின் வழியாகவோ எல்லா

முனை இணைகளும் இணைக்கப் பட்டுள்ள கட்டமைப்புத் தொகுதி.

distributive sort : பகிர்மானப் பிரிவு : ஒரு பட்டியலை பல பகுதிகளாகப் பிரித்து மீண்டும் வரிசையாக அடுக்கு வதனால் உருவாக்கப்படும் பிரிப்பு முறை.

disturbance : தடங்கல் : ஒரு சமிக் ஞையை அனுப்பும்போது அறிவு பரி மாற்றலில் எப்போதாவது ஏற்படும் குறுக்கீடு.

dithering : குழப்ப நிலை : 1. ஒரு புதிய நிறத்தை உருவாக்க பலநிறப் புள்ளி களை ஒன்று கலத்தல். புள்ளிகள் சிறி யதாகவும், குறைவான இடை வெளி யுடனும் அமைந்து அவை ஒன்றாக இருப்பது போல் கண்களைக் குழப் பும். 2. உருவம் மற்றும் சாதனத்தின் உருவாக்கல்திறன் ஒன்றாகும்போது காட்சியின் நெருக்கத்தை அதிகரிக்க உதவும் வரைகலை நுட்பம்.

division check : வகுத்தல் சரிபார்ப்பு ; பரிவு சோதனை : ஆரம்ப வகுத்த லுடன் பூஜ்யத்தை சமநிலைப்படுத் துவதைச் சோதிக்கும் பெருக்கல் சோதனை.

DMA : டிஎம்ஏ : Direcl Memory Access என்பதன் குறும்பெயர். நேரடி நினைவக அணுகு முறை.

DML : டிஎம்எல் : Data Manipulation language என்பதன் குறும்பெயர். தகவல் கையாளும் மொழி.

DNC : டிஎன்சி : Direct Numerical Control என்பதன் குறும்பெயர். நேரடி எண் கட்டுப்பாட்டுமுறை என்ற இந்த முறையில் கணினி கட்டுப் பாட்டில் தொடர்ச்சியாக எண்களை செயலாக்கம் செய்வதற்குப் பதில் தனித்தனி தகவல்களில் தானியங்கி எந்திரக் கருவிகள் மூலம் கட்டுப் பாடு செய்யப்படுகின்றன.

DOA : டிஓஏ : Dead On Arrival என்பதன் குறும்பெயர். உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளரிடமிருந்து வாங்கி எடுத்து வந்ததும் வேலை செய்யாத ஒரு பொருளைப் பற்றிக் குறிப்பிடுவது.

document : ஆவணம் : 1. கையால் எழுதப்பட்ட, தட்டச்சு செய்யப் பட்ட அல்லது அச்சிடப்பட்ட தகவல்கள் கொண்ட காகிதம். 2. தகவல் அல்லது உரைநடையின் தொகுதியைக் குறிப்பிடுதல் - அது மனிதர்கள் படிப்பதாக இருந்தாலும் அல்லது எந்திரம் படிப்பதாக இருந்தாலும்.

documentation : ஆவணப்படுத்தல் ; ஆவணமாக்கம் ; ஆவணச்சான்று : 1. அமைப்பு ஆய்வு மற்றும் ஆணைத் தொடர் அமைத்தலில், அமைப்பு, தயாரிக்கப்பட்ட ஆணைத்தொடர் கள் மற்றும் பின்னர் செய்ய வேண் டிய மாற்றங்கள் உள்ளிட்டவற்றை பற்றி விவரிக்கும் ஆவணங்கள். 2. குறிப்புகள், கருத்துரைகள் போன்ற வடிவில் உள்ளே அமைக்கப்படும் ஆவணப்படுத்தல்.

Document Content Architecture (DCA) : ஆவண உள்ளடக்க உரு வமைவு (டிசிஏ) : மாறுபட்ட உரு வமைவுகளுக்கிடையே தகவல்களை (வாசகங்கள்) மாற்றுவதற்குப் பயன் படும் ஒரு வாசகக் கோப்பு உரு வமைவு.

docuterm : ஆவண வாசகம் : ஆவணத் தின் உள்ளடக்கங்களை அடை யாளங் காண்பதற்கு ஒரு வாசக ஆவ ணத்தில் பயன்படுத்தப்படும் சொல் அல்லது சொற்றொடர்.

document file : ஆவணக்கோப்பு : ஒரு சொல் பகுப்பி மூலம் உருவாக்கப் பட்ட கோப்பு. இது, ஓரக் கோடுகள், உள்வரிகள், தலைப்புகள், அடிக்

குறிப்புகள் ஆகியவற்றுடன் உருவமைவு செய்யப்பட்டிருக்கும்.

document mark : ஆவணக் குறியீடு : நுண்வரைகலையில், நுண்படச்சுருளின் ஒவ்வொரு சட்டகத்திலுள்ள ஒரு சிறிய ஒளியியல் வடிவம். இது சட்டகங்களைத் தானாகவே எண்ணுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

document processing : ஆவணச்செய்முறைப்படுத்துதல் : சொல் பகுப்பியில் செய்வது போன்று, வாசக ஆவணங்களைச் செய்முறைப்படுத்துதல். ஆவண உள்ளடக்கம் அடிப்படையிலான வாசக மீட்புக்கான அட்டவணைப்படுத்தும் முறைகளையும் உள்ளடக்கும்.

document reader : ஆவணப் படிப்புப் பொறி : ஒரு குறிப்பிட்ட அளவு தகவலைப் படிக்கும் ஓசிஆர் அல்லது ஓஎம்ஆர் கருவி.

documentation aids : ஆவணப்படுத்தல் உதவிப்பொருள்கள் : ஆவணப்படுத்தல் செயல்முறைகளைத் தானியங்கியாகச் செய்ய உதவும் பொருள்கள். ஆணைத்தொடர் வர்ணனை குறிப்புகள், ஓடு படங்கள், ஹிப்போ ஆணைத்தொடர் ஓட்டங்கள், போலி குறியீடுகள் போன்றவை.

documentor : ஆவணப்படுத்தி : ஆணைத் தொடர், ஓடுபடங்கள், உரைநடைப்பொருள் மற்றும் பிற பட்டியல் அல்லது வரைகலை தகவல்களை உருவாக்குதல், பராமரித்தலுக்காக தகவல் செயலாக்க முறைகளைப் பயன்படுத்தும் வடிவமைக்கப்பட்ட ஆணைத் தொடர்.

document retrieval : ஆவணம் திரும்பப் பெறல் : சேமிப்புச் சாதனங்களிலிருந்து தகவல்களைப் பெறும் செயல்முறை. தகவல்களைக் கையாளுதல் மற்றும் பின்னர் அறிக்கை தயாரித்தலும் இதில் அடங்கும்.

DOE : மின்னணுவியல் துறை : Department of Electronics என்பதன் குறும்பெயர். மின்னணுவியல் துறை என்று பொருள்படும்.

domain : செயற்களப்பகுதி : *1.* தொடர்புகளுடைய பொருள்கள் தமது மதிப்புகளைப் பெறும் தகவல் தொகுதி. 2. ஆர்வம் உள்ள எந்தச் சிக்கல் துறையும் இதில் அடங்கும்.

domain expert : செயற்கள வல்லுநர் : ஒரு நிபுணத்துவப் பொறியமைவை உருவாக்க உதவுகிற ஒரு மனித வல்லுநர்.

domain knowledge : கள அறிவு : பயன்பாட்டுச் சூழ்நிலையின் அறிவு.

domain tip : கள முனை : இலக்க முறை தகவலைச் சேமிக்க மெல்லிய திரைப்படங்களைப் பயன்படுத்தும் ஒரு வகை சேமிப்புச் சாதனம்.

dominant carrier : முனைப்புநிலை ஊர்தி : ஒரு குறிப்பிட்ட அங்காடியின் பெரும்பகுதி மீது கட்டுப்பாடு கொண்டுள்ள தொலைத் தொடர்புப் பணிக் கருவி.

door : கதவம் : ஒரு BBS கணினியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒரு பயன்பாட்டினை இயக்குவதற்கு ஒரு தொடுப்புப் பயனாளரை அனுமதிக்கும் ஒரு நுழைவாயில் அல்லது இடைமுகப்பு.

dopant : ஒட்டுப்பொருள் ; மாசுப் பொருள் : உள்ளியம் சார்ந்த அல்லது பாஸ்பரஸ் போன்று ஒட்டும்போது பயன்படுத்தும் ஒரு பொருள்.

dope vector : ஒட்டுச் சரம் : இணைப்புப் பட்டியலில் உள்ள ஒரு அணு, அந்தப் பட்டியலில் உள்ள பிற

அணுக்களின் உள்ளடக்கங்களைக் கூறும் ஒரு அளவுச் சரம் (வெக்டார்).

doping : ஒட்டல்; மாசு ஊட்டல் : அரைக்கடத்தியை உருவாக்கும் போது தூய சிலிக்கானின் படிக அமைப்பில் தூய்மையற்ற பொருள்களைச் சேர்க்கும் செயல் முறை.

DOS : டாஸ் : Disk Operating System என்பதன் குறும்பெயர். இது வட்டு இயக்க அமைப்பு ஆகும். வட்டத் தகட்டுச் செயற்பாட்டு முறை அல்லது வட்டுச் செயற்பாட்டு பொறியமைவுமாகும். பயன்படுத்துவோருக்கும் கணினியின் வட்டு இயக்கத்துக்கும் இடையில் எளிதாகப் பயன்படுத்திக் கொள்ளும் இணைப்பை ஏற்படுத்தும் வட்டு சார்ந்த ஒரு சிறப்பு ஆணைத்தொடர்.

dot addressable : புள்ளி முகவரியாக்கம் : தனித்தனிப் புள்ளி ஒவ்வொன்றையும், ஒரு ஒளிப்பேழைக் காட்சியில், புள்ளிக்குறி அச்சுவார்ப்புரு அச்சடிப்பியில் அல்லது லேசர் அச்சடிப்பியில் செயல்முறைப்படுத்தும் திறம்பாடு.

dot chart : புள்ளிக் குறி வரைபடம் : சிதறல் வரைபடம் போன்றது.

dot commands : புள்ளி ஆணைகள் ; புள்ளிக் கட்டளைகள் : வடிவமைப்பு ஆணைகளை அளித்து சொல் பகுப்பியில் பதிவேடுகளை தயார் செய்தல். அச்சிடும்போதுதான் அந்த ஆணைகள் செயல்படுத்தப்படும். வேர்டுஸ்டார் தொகுப்பில் இவை பயன்படுத்தப்படுகின்றன.

dot gain : புள்ளிக்குறி ஈட்டம் : ஒவ்வொரு மைப் புள்ளிக்குறியின் வடிவளவும், வெப்பநிலை, மை, காகிதத்தின் தரம் காரணமாக பெருக்கமடைதல்.

dot graphic : புள்ளிக் குறி வரைகலை : புள்ளிக் குறிகளின் உருவகைகளினால் உருவாக்கப்பட்ட ஒரு வரைகலை வடிவமைப்பு.

dot matrix : புள்ளி அச்சு முறை ; புள்ளி அணி ; புள்ளி அச்சு எந்திரம் ; குத்தூசி அச்சு எந்திரம் ; எழுத்துகளைக் குறிப்பிட புள்ளிகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை செவ்வக வடிவில் அச்சிடத் தயார் செய்யும் தொழில் நுட்பம்.

dot matrix character : புள்ளிக்குறி அச்சுவார்ப்புரு எழுத்து : புள்ளிக்குறி அச்சு வார்ப்புரு உருவமைப்பில் நெருக்கமாக அச்சடிக்கப்பட்ட எழுத்துகள். நெருக்கமாக அச்சடிக்கப்பட்டிருப்பதால், இது ஒரு திண்மத் தோற்றத்தைக் கொடுக்கும்.

dot matrix printer : புள்ளி வரிசை அச்சுப்பொறி ; புள்ளிக்குறி அச்சு வார்ப்புரு அச்சடிப்பி : நெருக்கமாக அமைக்கப்பட்ட தொடர்புள்ளிகளாக எழுத்துகள் மற்றும் வரைகலைகளை உருவாக்கும் அச்சுப் பொறி. அச்சிடும் தலை காகிதத்திற்கு நேராக வரும் சரியான நேரத்தில் சுத்தியால் அடிக்கும் ஊசி தொழில் நுட்பம்.

மலர்ச் (டெய்சி) சக்கர அச்சுப்பொறி தரத்தில் நுட்பமாக அழகிய அச்சுகளை சில பொறிகள் உருவாக்கும்.

dot pitch : புள்ளி இடைவெளி : ஒரு முகப்புத்திரையில் தனிப்பட்ட புள்ளிகளுக்கு இடையிலுள்ள இடைவெளி மில்லி மீட்டரில் கூறப்படுகிறது. புள்ளி இடைவெளி குறையக் குறைய, இடம் பெற வேண்டிய புள்ளிகள் அதிகமாகி படம் மேலும் தெளிவாகத் தெரியும்.

dot prompt : புள்ளிக்குறி நினைப்பூட்டல் : இது தகவல் தள நினை

லூட்டுதல். இது ஒரு புள்ளி ('.'). இதற்கு எதிராக தகவல் தள ஆணைகள் கொடுக்கப்பட வேண்டும். டிபேஸ் தொகுப்பில் இது பயன்படுத்தப்பட்டுள்ளது.

Dots Per Inch (DPI) : அங்குலவாரிப் புள்ளிக்குறி : ஓர் அங்குல நீளத்தில் ஓர் அச்சடிப்பி எத்தனை புள்ளிக் குறிகளை அச்சடிக்கும் என்பதை அளவிடுவதற்கான நீட்டலளவை. எடுத்துக்காட்டாக 300 DPI என்றால், ஒரு காகிதத்தில் ஒவ்வொரு கிடைமட்ட அல்லது செங்குத்து அங்குலத்திலும் 300 புள்ளிக்குறிகளை அச்சடிப்பி அச்சடிக்கும் என்று பொருள். இது எழுத்துகளை உருவாக்கப் புள்ளிக்குறி அச்சுவார்ப்புருக்களைப் பயன்படுத்தும் அச்சடிப்பிகளுக்கு மட்டுமே பொருந்தும். எடுத்துக்காட்டு : புள்ளிக்குறிஅச்சுவார்ப்புரு அச்சடிப்பிகள் ; லேசர் அச்சடிப்பி; அனல் அச்சடிப்பி.

double : இரட்டையளவு ; இரட்டிப்பளவு.

double buffering : இரட்டை இடைநிலைத் தாங்குதல் ; இரட்டை இடைநிலை வைப்பக முறை : கணினிக்கும் வெளிப்புறச் சாதனங்களுக்கும் இடையில் தகவலை மாற்றுவதற்கான வன்பொருள் அல்லது மென்பொருள் தொழில்நுட்பம். ஒரு தாங்கியில் உள்ள தகவலை கணினி செயலாக்கம் செய்யும்போது, அடுத்த ஒன்று, தகவலை வெளியே அனுப்பும் அல்லது உள்ளே வாங்கும்.

double-click : இரட்டை கிளிக்கி ; இரட்டை அமுக்க முறை : சுட்டுப் பொத்தானைப் பயன்படுத்தி ஆணை உருவாக்கும் முறை. காட்டி அல்லது கர்சரை காட்சித்திரையில் சரியான நிலையில் வைத்துக் கொண்டு வேகமாக அடுத்தடுத்து இரண்டுமுறை சுட்டுப்பொத்தானை அழுத்தினால் ஆணை செலுத்தப்படும்.

double-dabble : இரட்டை மாற்று முறை : ஈரிலக்க எண்களை அவற்றுக்கு நிகரான பதின்ம எண்களாக மாற்றுகிற ஒரு படிநிலை முறை.

double density : இரட்டை அடர்த்தி : வழக்கமான வட்டு அல்லது நாடாவின் சேமிப்புத் திறனைப்போல் இரண்டு மடங்கு திறன் உடையதாக இருத்தல். தனி அடர்த்தி வட்டு அல்லது நாடாவில் உள்ளது போன்ற இரண்டு மடங்கு சேமிக்கும் திறன்.

double precision : இரட்டைத் துல்லியம் ; இரட்டைச்சரிநுட்பம் : எண்கள் கூடுதல் துல்லியத்தைப் பெற கணினி சொற்களைப் பயன்படுத்துதல் பற்றியது.

double punch : இரட்டைத் துளை : ஒரு அட்டையின் பத்தி ஒன்றில் செய்யப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட எண் துளை.

double scan : இரட்டை நுண்ணாய்வு; இரட்டை வருடல் : வண்ண வரைகலைத் தகவமைவு (CGA) மென்பொருள் சுற்றுவழியில் வண்ண வரைகலைத் தகவமைவுத் திண்மத்தை அதிகரிக்கும் அமைவு.

double sided disk : இருபுற வட்டு : அதன் இரண்டு மேற்புறங்களிலும் தகவலை சேமிக்கும் திறனுடைய காந்த வட்டு.

double sided floppy disk : இரட்டைப் பக்க செருகுவட்டு.

double strike : இரட்டை அச்சடிப்பு : ஒவ்வொரு எழுத்தினையும் இருமுறை அச்சடிக்கும் ஒரு அச்சடிப்பு முறை. இரண்டாவது அச்சடிப்பு

முதலாவதற்குச் சற்றுக் கீழே இருக்கும்.

double surface : இரட்டை வட்டுப் பரப்பு.

double width : இரட்டை அகற்சி : ஒவ்வொரு எழுத்தும் இயல்பான எழுத்துகளைப் போல் இருமடங்கு அகலமாக இருக்கக்கூடிய அச்சு அகற்சி. இந்த இரட்டை அகற்சி முதலில் 'விரிவாக்க அகற்சி' என அழைக்கப்பட்டது.

double word : இரட்டைச் சொல் : இரண்டு சொற்கள் நீளமுள்ள சேமிப் பகப் பொருள்.

doubly linked list : இருமுனைத் தொகுப்புப் பட்டியல் ; இருவழி இணைப்புப் பட்டி : பட்டியலின் ஒவ் வொரு உறுப்பிலும் முந்தைய மற் றும் அடுத்துவரும் அணுவைப் பற்றிய தகவலைக் கொண்டுள்ள பட்டியல்.

do until : அதுவரை செய் : அமைக்கப் பட்ட ஆணைத்தொடரின் மாறுபாடு களில் ஒன்றான பழைய சுற்று அமைப்பு. ஒரு குறிப்பிட்ட பணி யைத் திரும்பத் திரும்பச் செய்வதற் காக, ஓர் ஆணைத் தொடரில் எழுதப் படும் கட்டளை அமைப்பு.

do while : அப்போதெல்லாம் செய்: அமைக்கப்பட்ட ஆணைத்தொடர் முறையின் மாறுபாடுகளில் ஒன்றான பழைய சுற்று முறை.

dow jones information service : டோ ஜோன்ஸ் தகவல் பணியம் : பங்கு விலைகள் போன்ற நடப்பு நிதியியல் செய்திகளைக் கொண்டிருக்கிற ஒரு கணினி தகவல் தளம். இதனை, சந்தாதாரர்கள், நுண்கணினிகள், மோடெம்கள் மூலம் அணுகலாம்.

down : செயலிழந்த நிலை : மென் பொருள் அமைப்பில் தவறு ஏற்படு வதால் அல்லது வன்பொருள் மின் சுற்றுகள் செயல்பட முடியாமல் போதலைக் குறிக்கும். ஒரு கணினி 'செயலிழந்த நிலை' என்றால் அது செயல்படவில்லை என்பதே பொருள்.

down line processor : துணை நிலைச் செயலகம் : செய்தித் தகவல் தொடர் புக் கட்டமைப்பின் முகப்பு முனை யில் அல்லது அதற்கு அருகில் இருந்து தகவல்களை அனுப்பி வைக்கும் செயலகம்.

down link : தரை இணைப்பு : பூமியி லுள்ள ஒரு நிலையத்துடன் ஒரு செயற்கைக்கோளிலிருந்து ஏற்படுத் தப்பட்டுள்ள செய்தித்தொடர்பு வழி. இது, 'வான்இணைப்பு' (Uplink) என் பதிலிருந்து வேறுபட்டது.

down load : கீழிறக்கு ; தகவல் இறக் கம் : தகவலை, பெரிய மைய கணினி அமைப்பிலிருந்து சிறிய, தொலை தூர கணினி அமைப்புக்கு மாற்றும் செயல்முறை.

down loading : தகவலிறக்கம் : ஒரு பெரிய கணினியிலிருந்து ஒரு சிறிய கணினிக்குத் தகவல்களை மாற்றும் செய்முறை. எடுத்துக்காட்டு : முதன் மைப் பொறியமைவிலிருந்து ஒரு சொந்தக் கணினிக்கு மாற்றம் செய் தல். ஒரு சொந்தக் கணினியிலிருந்து ஒரு புறநிலைச் சாதனத்திற்குத் தகவல் களை மாற்றுவதையும் இது குறிக் கும். எடுத்துக்காட்டு : லேசர் அச் சடிப்பிக்கு மாற்றம் செய்தல். 'தகவ லிறக்கம்' என்பது கணினியின் வடிவளவினைக் குறிப்பதில்லை. ஒரு கணினியிலிருந்து இன்னொரு கணினிக்குத் தகவல்களை மாற்று வதையே குறிக்கும். 'தகவலேற்றம்'

(uploading) என்பது இதற்கு எதிர் மாறானது.

down time : செயலற்ற நேரம் : தவறான செயற்பணி காரணமாக ஒரு கணினிப் பொறியமைவு செயல்புரியாதிருக்கும் இடையீட்டு நேரம்.

downward compatible : சூழ்நிலைப் பொருத்தமுடைய : முந்தைய தலைமுறையைச் சேர்ந்த அல்லது சிறிய கணினியுடன் ஏற்புடைய கணினி பற்றியது.

DPMA : டிபிஎம்ஏ : Data processing Management Association என்பதன் குறும்பெயர்.

DPMA certification : டிபிஎம்ஏ சான்றிதழ் : ஒருவர் தகவல் செயலாக்கத் துறையில் குறிப்பிட்ட அளவு திறனை அடைந்துவிட்டார் என்பதைக் குறிக்கும் வகையில் தகவல் செயலாக்க மேலாண்மைச் சங்கம் (DPMA) முன்பு அளித்துவந்த சான்றிதழ். ஆண்டுதோறும் நடத்தப்படும் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு இந்தச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இப்போது ஐ.சி.சி.பி. (Institute for Certification of Computer Professionals) இந்தச் சான்றிதழை வழங்குகிறது.

draft quality : வரைவு தரம் : அச்சிடப்பட்ட வெளியீடுகளின் தரத்தின் அளவு. அதிவேக அச்சிடும் முறையை இது குறிப்பிடுகிறது. அதிவேக அச்சிடல் என்பதால் எழுத்துகள் தெளிவாக இல்லாமல் இருக்கும். வேலை செய்யும் பிரதிகள் எடுக்க சரியாக இருக்கும். ஆனால், இறுதி நகலுக்கு ஏற்றதல்ல.

drag : இழு : பொத்தானைக் கீழே வைத்துப் பிடிக்கும்போது 'மௌஸ்' எனும் சுட்டியை (அம்புக்குறி) நகர்த்தும் செயல். கணினி காட்சித் திரையில் பொருள்களை கையாள அல்லது நகர்த்தப் பயன்படுத்தப்படுகிறது.

dragging : இழுத்துவரல் : காட்டப்படும் வரைகலைப் பொருள் சுட்டும் கருவியை (கர்சரை) பின்பற்றி வருமாறு செய்யும் தொழில்நுட்பம். சுட்டுக் கருவி பொத்தானைக் கீழிறக்கிப் பிடித்து சுட்டும் கருவியை நகர்த்தும் போது இவ்வாறு செய்யுமாறு சில கணினிகள் இயங்குகின்றன.

drain : சேரிடம் ; வடிகால் : களச் செயல்பாட்டு மின்மப் பெருக்கிகளுடன் இணைக்கும் முகப்புகளில் ஒன்று. மற்ற இரண்டும் மூல மற்றும் வாயில் மின்மப் பெருக்கி. சக்தி எடுத்து வருபவை நேர் மின்னாக இருந்தால், மின்சக்தி மூல இடத்திலிருந்து சேரிடத்திற்குப் போய்ச் சேரும்.

DRAM : டிராம் : Dynamic RAM என்பதன் குறும்பெயர்.

drawing : வரைதல் : ஒரு கணினியின் வரைகலை திறன்களைப் பயன்படுத்தி வரைகலை முறையில் வடிவங்களை உருவாக்குதல். கணினி வரைகலை அமைவினால் கோடுகளை உருவாக்குதல் அல்லது வடிவம் மற்றும் வண்ணம் அளிக்கும் ஆணைத் தொடர்களுடன் ஒரு துல்லியமான வரை படம் வரையமுடியும்.

draw perfect : முழுநிறைவு வரைபடம் : IBM இசைவுடைய நுண் கணினிகளுக்கான ஒரு வரைவுச் செயல் முறை. இந்த வரைபடச் செயல்முறை 256 வண்ணங்களைக் கொடுக்கிறது. இது, இருபரிமாண பட்டை, கலவை அச்சுப்படிவ, வரைபட படங்களை உருவாக்குகிறது.

dribbleware : முன்னோட்ட மென்பொருள் : விற்பனைக்கு வெளியிடப் படுவதற்கு முன்னதாகவே பகிரங்க

மாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுப் பொதுமக்களால் பார்க்கப்படும் மென்பொருள். இது, 'மறைமென் பொருள்' (vapourware) என்பதிலிருந்து ஒரு படி அப்பாற்பட்டது.

drift : விலகல் : ஒரு மின்சுற்றின் வெளி யீட்டில் ஏற்படும் மாற்றம். மெது வாக ஒரு குறிப்பிட்ட கால இடை வெளியில் ஏற்படும்.

drill down : துருவிச் செல்லுதல் : சுருக்கத் தகவல்களிலிருந்து அதை உருவாக்கிய விவரமான தகவல்களுக்கு ஆழமாகத் துருவிச் செல்லுதல்.

drill-and-practice programme : துருவிப் பழகும் செயல்முறை : பழைய பாடங்களை வலுப்படுத்தும் மென்பொருள்களைக் கற்பித்தல்.

drive : இயக்கி ; முடுக்கி : வட்டு அல்லது டிஸ்கில் தகவல்களை எழுதவும் அல்லது தகவல்களைப் படிக்கவும் தேவையான பருப்பொருள்.

drive bay : இயக்கித் தடம் : ஒரு கணினிப் பேழையில் வட்டு இயக்கிக்காக உள்ள துளை விளிம்பு.

drive door : இயக்கிக் கதவம் : ஓர் வட்டு இயக்கியில் ஒரு வட்டினைப் பூட்டி வைக்கப் பயன்படுத்தப்படும் சேணம், வாயில் அல்லது நெம்பு கோல். ஒரு 13.33 செ.மீ. செருகுவட்டு இயக்கியில் இந்தக் கதவம் ஒரு நெம்பு கோல். இது வட்டினைச் செருகிய பிறகு தடத்தின் மீது கீழ்நோக்கி திருப்பப்படுகிறது.

drive identified : இயக்கி அடையாளம் காட்டி.

drive number : இயக்கி எண் : கணினி அமைப்பில் உள்ள வட்டு இயக்கிகளில் ஒன்றுக்குக் கொடுக்கப்படும் எண் மதிப்பு.

driver : இயக்குபவர் : ஒரு குறிப்பிட்ட வெளிப்புறச் சாதனத்துக்கு அனுப்புவதற்காக தகவல்களை மறுவடிவப் படுத்துவதற்குக் கணினி பின்பற்றும் தொடர் ஆணைகள்.

drive specifier : இயக்கிக் குறியீடு : ஒரு வட்டு இயக்கியை A:, B: போன்ற வடிவில் பெயர் சுட்டுகிறது. ஓர் இரு-எட்டியல் சரம்.

drive Z : இயக்கி - Z : ஒரு IBM அல்லது IBM இசைவுடைய சொந்தக் கணினியின் மீதான கடைசித் தருக்கமுறை நிலைவட்டு இயக்கி வடிவமைப்பி. கோட்பாட்டு முறையில், ஒரு சொந்தக் கணினியில் அல்லது சொந்த இசைவுக் கணினியில், A முதல் Z வரையிலான 26 செருகு மற்றும் நிலை வட்டுகளைக் கொள்ள லாம்.

driving chains : இயக்கு சங்கிலி.

DRO : டிஆர்ஓ : Destructive Read Out என்பதன் குறும்பெயர்.

droid : மனித எந்திரம்; எந்திரன் : மனிதரைப் போன்ற தோற்றமுள்ள எந்திர மனிதன், ராய்டு ஆண் அல்லது கைனாய்டு பெண் உருவாக்கப் படுதல்.

drop : தொங்கட்டம் ; இணைப்பு முனை : ஓர் இணையத்தில் ஒரு சேய்மை முனைய அமைவிடம். ஒரு கணினி காகிதத்தின் உச்சிக்கும் அடிக்குமிடையிலுள்ள தொலைவு. இது மில்லி மீட்டரில் அல்லது அங்குலத்தில் அளவிடப்படுகிறது.

drop cap : தொங்கல் முகடு : அச்செழுத்துருவாக்கக் கலையில், முதல் வரிக்குக் கீழே தொங்கிநிற்கும் ஒரு பெரிய முதலெழுத்து.

drop dead halt : மீளா நிலை ; உயிரற்ற நிறுத்தம் விழுதல் : மீண்டும் சரி செய்ய முடியாதவாறு நிறுத்தப் படுதல்.

drop down menu : கீழ்தொங்குப் பட்டியல் : நிரந்தரமாக திரையில் தெரிந்து கொண்டிராத ஒரு பட்டியல். ஓர் உயர்நிலைப்பட்டியல் தூண்டப் படும்போது மட்டுமே ஒரு கீழ் தொங்கு பட்டியல் தோன்றுகிறது.

drop in : உரு பிழையுரு : ஒன்று அல்லது மேற்பட்ட துண்மிகளை வட்டு இயக்கி அல்லது நாடா இயக்கி, தவறாகச் சேமித்தல் அல்லது படித்தலின் விளைவாக, ஒரு கோப்பில் அல்லது ஒரு அச்சுவெளியீட்டில் அல்லது ஒரு காட்சித்திரையில் தோன்றும் பிழையான எழுத்துகள்.

drop out : விடுபிழையுரு : 1. தகவல் அனுப்புவதில், சமிக்ஞை திடீரென்று காணமால் போதல். இரைச்சல் அல்லது அமைப்பில் செயற் கோளாறு ஏற்படுவதன் காரணமாகவே இது ஏற்படுகிறது. 2. ஒன்று அல்லது மேற்பட்ட துண்மிகளை வட்டு இயக்கி அல்லது நாடா இயக்கி தவறாகப் படித்து அல்லது சேமித்ததன் விளைவாக, காட்சித் திரையில் அச்சு வெளியீடு அல்லது கோப்பில் இருந்து மறைந்துபோகும் எழுத்து.

drop shadow : தொங்கல் நிழல் : ஓர் உருக்காட்சிக்குப் பின்புறம், கிடைமட்டத்தில் சற்றே பக்கவாட்டிலும், செங்குத்தாகவும் விழும்படி செய்யப் பட்டுள்ள ஒரு நிழல். இது, உச்சியிலுள்ள உருக்காட்சியானது பக்கத்தின் மேற்பரப்பிலிருந்து உயர்த்தப்பட்டிருப்பது போன்ற முப்பரிமாண தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

dross : பயனற்ற வரி : மோசமான செயல்முறைப்படுத்துதல் /உத்தி அல்லது அடிக்கடி செய்த மாற்றமைவுகள் காரணமாக ஒரு செயல் முறையில் விட்டுவிடப்பட்டுள்ள தேவைக்கு மிகையான குறியீட்டு வரிகள்.

drouple : தொழில் முனைவர் : செயல் முறையாளர்கள், தகவல் செய் முறைப்படுத்தும் தொழில் முறை யாளர்களின் மத்தியில் நேரங்கழிக்க விரும்பும் ஆள்.

drum plotter : உருளை வரைவி : தானியங்கியாகக் கட்டுப்படுத்தப் படும் பேனாக்களைக்கொண்டு காகி தத்தில் வரைகலைகள், படங்கள், திட்டப் படங்கள் போன்றவற்றை வரைகின்ற வெளியீட்டுச் சாதனம். சிலிண்டர் வடிவ உருளையில் சுற்றப்பட்டுள்ள காகிதம் முன்னும், பின்னுமாக மாறுபடும் வேகங்களில் செல்ல, மேல் கீழாக நகரும் பேனாக் கள் காகிதத்தில் படங்களை வரைந்து கொண்டே செல்கின்றன.

drum printer : உருளை அச்சுப்பொறி : அகரவரிசை-எண் எழுத்துகளை உடைய உருளையைப் பயன்படுத் தும் அச்சிடும் சாதனம். ஒரு நிமிடத் தில் பல்லாயிரம் வரிகள் அச்சிடும் வரி அச்சுப்பொறி.

drum sorting : உருளை பிரிப்பு : பிரிக்கும்போது துணை சேமிப்பக மாக காந்த உருளைகளைப் பயன் படுத்தும் பிரிக்கும் ஆணைத்தொடர்.

dry plasma etching : உலர் பிளாஸ்மா செதுக்கல் ; உலர் மின்மப் பொறிப்பு : ஒரு மென்தகட்டின் மீது மேற்பகுதியை ஏற்படுத்துதல்.

dry run : உலர் ஓட்டம் : எழுதப்பட்ட ஆணைகளிலிருந்து ஆணைத்தொடர் அமைத்து, குறியீடு இடுதல், பின்னர் அதன் இயக்கத்தின் ஒவ்வொரு நிலையிலும் முடிவைச் சோதித்துப் பதிவு செய்தல். கணினியில் ஆணைத் தொடரை செயல்படுத்துவதற்கு முன்

செய்யப்படும், ஆணைத் தொடர் சோதிக்கும் தொழில் நுட்பம்.

DSL : டிஎஸ்எல் : Dynamic Simulation Language என்பதன் குறும்பெயர்.

DTL : டிடிஎல் : Diode Transistor Logic என்பதன் குறும்பெயர். அரைக் கடத்தி டையோடுகள் மற்றும் மின்மக் கடத்திகளுக்கு இடையிலான நுண் மின்னணு அளவைமுறை சார்ந்த இணைப்புகள்.

dual boot : இரட்டைச் செயல்பாடு : இரு மாறுபட்ட செயற்பாட்டுப் பொறியமைவுகளில் ஏதாவதொன்றுடன் தொடங்கப்படக்கூடிய கணினி.

dual channel controller : இரட்டை தடக் கட்டுப்பாட்டுப் பொறி : ஒரே நேரத்தில் ஒரு சாதனத்தில் இருந்து படித்தல், எழுதுதல் ஆகிய இரண்டையும் இயங்கச் செய்யும் கட்டுப்பாட்டுப் பொறி.

dual density : இரட்டை அடர்த்தி : 1. அடர்த்தியாக தகவல்களைப் பதிவு செய்ய உதவும் காட்சி வட்டின் நாடாக்களைக் குறிப்பிடுகிறது. 2. இருபுறமும், பதியக்கூடிய திறனுள்ள வட்டுத் (ஃபிளாப்பி) தட்டு.

dual in line package : DIP : இரட்டை வரிசைப் படிப்பொதிவுகள் : சிப்பு ஏற்றப்பட்டிருக்கும் புகழ்பெற்ற ஒருங்கிணைந்த மின்சுற்றுவகை. சிப்புவை மின்சுற்று அட்டையில் சொருகுவதற்கு வேண்டிய பின் இணைப்புகளையும் ஒருங்கிணைந்த மின்சுற்றுக்கான பாதுகாப்புக் கவசம்.

dual intensity : இரட்டை த்திறன் : வழக்கமான அல்லது தடித்த எழுத்துகளில் எழுத்துகளை வெளியிடும் திறனுள்ள அச்சுப்பொறிகள் அல்லது முனையங்கள்.

dual port memory : இருதிற நினைவுப் பதிப்பி : இரு மாறுபட்ட வழிகளில் ஒரே சமயத்தில் அணுகக்கூடிய நினைவுப் பதிப்பி.

dual processing : இரட்டைச் செயலகம் : ஒரு கணினி அமைப்புக்குள் இருந்து கொண்டு ஒரே நேரத்தில் வேலை செய்யும் திறனுடைய இரண்டு மையச் செயலக அலகுகள். இரண்டு நுண் செயலகங்களும் ஒரே நுண் கணினியில் இருந்துகொண்டு இரண்டு சிப்புகளிலுமே செயல்படு மாறு வடிவமைக்கப்பட்ட மென் பொருள்.

dual sided disk drives : இருபுற வட்டு இயக்கிகள் : வட்டின் மேல், கீழ் ஆகிய இருபுறங்களிலும் தகவல்களைச் சேமிக்கவும் திரும்பிப் பெறவும் இரண்டு படி/எழுது முனைகளைப் பயன்படுத்தும் வட்டு இயக்கிகள்.

duct : செல்வழி : அகற்றக்கூடிய பொதியுறையினையுடைய கம்பிகளுக்கான ஒரு செல்வழி.

dumb terminal : ஊமை முனையம் ; ஊமை முகப்பு : குறைந்த உள்ளீடு/வெளியீடு திறன்களும் செயலாக்கத் திறமைகள் எதுவுமின்றி வரும் ஒளிக் காட்சி முனையம்.

dummy : போலி ; வெற்று : குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காகவென்றே நுழைக்கப்படுகின்ற செயற்கை வாக்குவாத ஆணை, முகவரி அல்லது தகவல் பதிவேடு.

dummy argument : போலி வாக்குவாதம் ; வெற்று இணைப்புரு ; போலி வாத முறை : எந்த மதிப்புகளும் இல்லாத செயல் வாக்குவாதங்களாகப் பயன்படுத்தப்படும் மாறிகள்.

dummy instruction : போலி ஆணை ; வெற்று ஆணை : 1. ஆணையாக

செயல்படுத்தப்படுவதைத் தவிர வேறு ஒரு நோக்கத்திற்காக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள செயற்கை ஆணை அல்லது முகவரி. 2. ஒரு வழக்க ஆணையில் உள்ள ஆணை. தானாக அது எதையும் செய்யாது. ஆனால், ஒரு ஆணைத் தொடரினை முடித்து வைப்பதற்கு ஒரு முனையாக அமையும்.

dummy module : வெற்று அடுக்கு ; போலி மிச்சவகை (மாடுல்) : உண்மையான செயலாக்கம் இல்லாத நுழைதல் அல்லது வெளியேறு தலைக்கொண்ட மிச்ச வகையின் (மாடுலின்) மாதிரி. கீழ் நிலை, கீழ்ப் பணிகள் ஒருங்கிணைய தயாராக இல்லாத நிலையில் மேலிருந்து கீழாகச் சோதனை செய்வதற்கு இது குறிப்பாகப் பயன்படுகிறது.

dummy variables : வெற்று மாறியல் மதிப்புருக்கள் ; போலி மாறியல் மதிப்புருக்கள் : செயற்பணி வாதவுரைகளுக்கு குறித்தளிக்கப்படும் உறவு நிலைகளை ஏற்படுத்துகிற, DEFFN கட்டளையிலுள்ள மாறியல் மதிப்புருக்கள். ஒரு மாறியல் மதிப்புருவின் பெயராகப் பயன்படுத்த வேண்டிய ஓர் அமைவிடத்தில் பயன்படுத்தப்படும் ஒரு மாறியல் மதிப்புருவையும் இது குறிக்கும். ஆனால் அந்த மாறியல் மதிப்புருவின் உள்ளடக்கத்தினால் செயல்முறையில் எந்த விளைவும் ஏற்படுவதில்லை.

dump : சேமிப்பு ; திணி ; கொட்டு : திணிக்கும் செயலாக்கத்தின் விளைவாக ஏற்படும்-தகவல்கள் ஒரு சேமிப்பகச் சாதனத்திலிருந்து வேறொரு சேமிப்பகச் சாதனத்திற்கோ அல்லது அச்சுப் பொறிக்கோ உள்ளடக்கங்களை மாற்றி நகலெடுப்பதை இது குறிப்பிடுகிறது.

dumping : திணித்தல் ; கொட்டுதல் : சேமிப்பகத்தில் உள்ளவை முழுவதும் அல்லது பகுதியை நகலெடுத்தல். கணினியின் உள்சேமிப்பகத்திலிருந்து துணை சேமிப்பகத்திற்கோ அல்லது வரி அச்சுப்பொறிக்கோ மாற்றுவதை இவ்வாறு குறிக்கலாம்.

duodecimal : இரட்டைப் பதின்மம் : நிலைகள் அல்லது இலக்கங்களுக்கு உள்ள 12 மாறுபட்ட மதிப்பளவுகள் உள்ளன. இவற்றிலிருந்து தேவையானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

duplex : இருதிசை இயங்கு வழித்தடம் ; இருவழித்தடம் : ஒரே நேரத்தில் இரண்டு திசைகளிலும் தகவல் தொடர்பு அனுப்புவதை அனுமதிக்கும் தகவல் தொடர்பு வழித்தடம்.

duplexing : மாற்றமைத்தல் ; இரட்டை வழியாக்கம் : ஒரு கருவி செயலிழந்தால் மாற்று கருவியைக் கொண்டு கணினி தொடர்ந்து இயங்கச் செய்ய மின்சுற்று அல்லது கணினியின் வெளிப்புறக் கருவிகளுக்கு மாற்றுக் கருவியைப் பயன்படுத்துதல்.

duplex operation : இருமடிச் செயற்பாடு : தகவல்கள் இருதிசைகளிலும் செல்வதற்கு அனுமதிக்கும் ஓர் அனுப்பீட்டு முறை. இது, அச்சடித்த எழுத்தினைக் கணினிக்கு அனுப்புகிற அதே சமயத்தில் திரையிலும் காட்சியாகக் காட்டுகிறது. பாதி இருமடி என்பது இரு திசைகளிலும் செல்ல அனுமதிக்கிறது ; ஆனால் ஒரே சமயத்தில் அன்று.

duplex printing : இருமடி அச்சடிப்பு : ஒரு தாளின் இரு பக்கங்களிலும் ஓர் ஆவணத்தை அச்சடித்தல். இதனால், ஆவணம் கட்டுமானம் செய்யப்பட்ட பிறகு, இட, வலப் பக்கங்கள் ஒன்றையொன்று எதிர்நோக்கியவாறு இருக்கும்.

duplexed system : இருவழியாக்க பொறியமைவு ; இருமடியாக்கிய பொறியமைவு : செயற்பணியில் ஒரு படித்தாக இருக்கும் இரு பொறிய மைவுகள். அவை இரண்டும், ஒரே செயற்பணியைச் செய்யலாம் ; அல்லது மற்றொன்று செயலிழக்கும் போது ஒன்று செயற்பட ஆயத்தமாக இருக்கும்.

duplicate : நகலெடு : மூல வடிவம் போலவே பரு வடிவத்தில் முடிவுகள் ஒன்றாக இருக்கும் வண்ணம் நகல் எடுத்தல். மூல டிஸ்கெட்டில் உள்ள அதே வடிவமைப்பில், அதே தகவலைக் கொண்டதாக புதிய வட்டினை உருவாக்குதல்.

duplicate keys : இருமடி விடைக் குறிப்புகள் : ஒரு கோப்பிலுள்ள ஒரு படித்தான விடைக் குறிப்புகள். கணக்கு எண் போன்ற அடிப்படை விடைக் குறிப்புகளை இருமடியாக்கம் செய்ய முடியாது. ஏனென்றால், இரு வாடிக்கையாளர்களுக்கு அல்லது பணியாளர்களுக்கு ஒரே எண்ணைக் குறித்தளிக்க முடியாது. தேதி, பொருள், நகர் போன்ற துணை விடைக்குறிப்புகளை கோப்பில் அல்லது தகவல் தளத்தில் இரு படியாக்கம் செய்யலாம்.

duplication check : இரட்டிப்பாதல் சோதனை ; மறு சரிபார்ப்பு : ஒரே இயக்கத்தை இரண்டு முறை தனித்தனியாகச் செய்த போதிலும் அதன் விளைவுகள் ஒரே மாதிரியாக இருக்கும் என்பதற்கான சோதனை. வேறொரு கருவியில் ஒரே நேரத்தில் இதைச் செய்யலாம் அல்லது அதே கருவியில் வெவ்வேறு தடவைகளில் செய்யலாம்.

duration : கால நீட்சி : ஒரு பணியைச் செய்து முடிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும் செயற்பணி நேர அளவு.

dust cover : தூசு உறை ; தூசுகாப்புறை: நுண்கணினிகள், வட்டு இயக்கிகள், முகப்பு அச்சுப்பொறிகள் போன்றவற்றின் மோசமான எதிரிகளிடமிருந்து அவற்றைக் காப்பாற்றப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தூசு உறைகள்.

Dvorak keyboard : டிவிஓஆர்ஏகே விசைப்பலகை : ஆகஸ்ட் என்பவரால் உருவாக்கப்பட்ட விசைப் பலகை. அதிகமாகப் பயன்படுத்தப்படும் எழுத்துகளை விசைப்பலகையில் நடுவில் வைத்து வலுவான விரல்களால் அடிக்கச் செய்வதன் மூலம் பிழைகளைக் குறைத்து வேகத்தையும் வசதியையும் டிவிஓஆர்ஏகே விசைப்பலகை அளிக்கிறது. வழக்கமான கியூடபிள்யூஇஆர்டிஒய் (QWERTY)யைவிட இதில் விரல் அசைவுகள் 90 விழுக்காடு குறைகின்றன. 1936இல் இந்தமுறை பேடன்ட் செய்யப்பட்டாலும் 1982இல் அன்சியால் ஏற்கப்பட்ட பிறகே இது புகழ் பெற்றது. இந்த விசைப் பலகைதான் உயிரெழுத்துகளான AEIOU-க்களை ஒன்றாக அமைத்துள்ளது. மைய வரிசையில் இடது கையில் உயிரெழுத்துகளும், வலது கையில் DHTNS என்னும் அதிகமாக பயன்படுத்தப்படும் எழுத்துகளும் அமைந்துள்ளன.

dyadic : இருவினை ; இரட்டை : இரண்டு இயக்கிகளைப் பயன்படுத்தும் இயக்கமுறை பற்றியது.

dyadic two : இரட்டை இணை : இரு அமைப்பிகளைப் பயன்படுத்துவதைக் குறிக்கும் தொடர்.

dyadic operation : இருவினை ; இரட்டை இயக்கம் : இரண்டு இயக்கப் பொருளைக் கொண்ட இயக்கம்.

dye polymer recording : சாய மீச்சேர்மப் பதிவு : சாயமிட்ட பிளாஸ்டிக்

படுகைகளைப் பதிவு ஊடகமாகப் பயன்படுத்தும் ஒளியியல் பதிவு உத்தி. சில ஒரு முறை எழுதி பன் முறை படிக்கப்படும் WORM சாதனங் களில் ஒற்றைச் சாய மீச்சேர்மப் படுகை பயன்படுத்தப்படுகிறது. அழித்திடக்கூடிய ஒளியியல் வட்டு களில் உச்சி இருத்தி வைப்புப் படுகை, அடிநிலை விரிவாக்கப் படுகை என்ற இரு சாயமிட்ட பிளாஸ்டிக் படுகைகள் பயன் படுத்தப்படுகின்றன.

dynamic : இயங்குநிலை : *மாஸ் (MOS) தாங்கிகளில் தகவலை மின்சக்தியாக மாற்றும் மின்சுற்று. பொதுவாக நிலையற்ற தன்மையுடைய, இதை அடிக்கடி புதுப்பிக்க வேண்டும்.*

dynamic address translation (DAT) : இயங்குநிலை முகவரி மொழி பெயர்ப்பு (டாட்) : மெய்த்தோற்ற சேமிப்பு அமைப்புகளில், மெய்த் தோற்ற சேமிப்பு முகவரிகளை உண்மை சேமிப்பு முகவரிகளாக ஆணை இயக்கத்தின் மூலம் மாற்றுதல்.

dynamic binding : இயங்கு நிலை கட்டுமானம் : ஒரு கணநேரத்திலுள்ள நிலைமைகளின் அடிப்படையிலான ஓட்ட நேரத்தில் ஒரு வாலாயத்தை அல்லது பொருளை இணைத்தல்.

dynamic compression : இயங்கு நிலை இறுக்கிச் சுருக்கல் : இயல்பு நேரத்தில் தகவல்களை அழுத்தி வைப்பதற்கும் தளர்த்தி விடுவதற் குமான திறம்பாடு. எடுத்துக்காட்டு : வட்டில் எழுதுதல் அல்லது அதி லிருந்து படித்தல்.

dynamic data : விரைந்து மாறும் தகவல்.

dynamic data exchange : இயங்கு நிலை தகவல் பரிமாற்றம் : ஓர் எந்திரத் தில் அமைந்துள்ள பல்வேறு பயன் பாட்டுத் தொகுதிகளுக்கிடையே தகவல்களை மாற்றம் செய்வதற்கான திறம்பாடு. எடுத்துக்காட்டு : கணக் கீட்டு விரிதாள் தகவல்களை சொல் பகுப்பி மாற்றுதல். இவ்வாறு, ஓர் விரிதாளில் உள்ள தகவல்களைப் பயன்படுத்துகிற ஒரு சொல் பகுப்பி யிலுள்ள அறிக்கை, விரிதாள் இலக் கங்கள் மாற்றப்படும் போது தானாகவே நாளது தேதி வரையில் திருத்தியமைக்கப்படுகிறது.

dynamic dump : இயங்குநிலை திணித்தல் : ஒரு ஆணைத்தொடரைச் செயல்படுத்தும்போது நடைபெறும் திணித்தல்.

dynamic link : இயங்குநிலை இணைப்பு : ஓட்ட நேரத்தில் ஒரு செயல்முறையிலிருந்து இன்னொரு செயல்முறைக்கு ஏற்படுத்தப்படும் இணைப்பு.

dynamic link library : இயங்குநிலை இணைப்பு நூலகம் : ஓட்ட நேரத்தில் பயன்பாடுகளுக்குக் கிடைக்கக் கூடிய செயல்முறை வாலாயங்கள்.

dynamic memory : இயங்குநிலை நினைவகம் : பலவிதமான நினைவுப் பதிப்பி சிற்றங்கள் அனைத்தையும் சரியான முறையில் இயங்கும் வகை யில் அடிக்கடிப் புதுப்பிக்கப்படும் வகையில் அமைந்த நினைவுப் பதிப்பி அமைவு முறை.

dynamic network services : இயக்காற் றல் இணையப் பணிகள் : தகவமைவு வாலாயம், ஒரு மையமுனை சேர்க் கப்படுகிறபோது அல்லது நீக்கப்படு கிறபோது இணையத்துக்குத் தானா கவே மறு உருவங்கொடுத்தல் போன்ற இயல்புநேரத் திறம்பாடுகள்.

dynamic partitioning : இயங்குநிலை பிரி வினை : **மையச் செயலகத்தின்**

(CPU) நினைவுப் பதிப்பியை, பல்வேறு செயல் முறைகளைத் திறம்படச் சேமித்து வைக்கும் வகையில் பல்வேறு வடிவளவுகளைக் கொண்ட பகுதிகளாகப் பகுத்தல்.

dynamic RAM : இயங்குநிலை நேர் அணுகு நினைவகம் : அடிக்கடி புதுப்பிக்க வேண்டிய கணினி நினைவகம்.

dynamic range : இயங்குநிலை வரிசை : மிகப் பலவீனமானது முதல் மிக வலுவானது வரையிலான சைகைகளின் வரிசை.

dynamic relocation : வேறிடம் மாறுதல்; இயங்குநிலை இருப்பிட மாற்றம்: செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆணைத் தொடர் முழுமையும் அல்லது ஒரு பகுதியையும் சேமிப்பகத்தின் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றுதல். புதிய இடத்திலிருந்து ஆணைத்தொடர் தொடர்ந்து முறையாக இயங்குவதற்கு வசதியாக முகவரிக் குறிப்புகள் யாவும் சரி செய்யப்படும்.

dynamic scheduling : மாறும் வரிசைப் படுத்து முறை ; இயங்குநிலை நிலைப் படுத்தல்: சூழ்நிலைகளைப் பொறுத்து நொடிக்கு நொடி வேலையை வரிசைப்படுத்தும் கணினி.

dynamic simulation language (DSL) : இயங்குநிலை பாவனை மொழி ; டிஎஸ்எல் : உயர்நிலை ஆணைத் தொடர் மொழி, தொடர்முறையில் பொறியியல் மற்றும் அறிவியல் சிக்கல்களை போலி நிகழ்வாகச் செய்வதற்கு ஏற்ற மொழி. சாதாரண மாறுபாட்டுச் சமன்பாடுகளைத் தீர்க்கவும், நேரச் செயல்பாடு, மாறும் அமைப்புகளின் நிலையற்ற தன்மை ஆகியவற்றை ஆராய்வதற்கு மிகவும் ஏற்ற மொழி இதுவே.

dynamic spot : இயக்காற்றல் நிறுத்தம் : ஒரு செயல்முறை இயக்கப்படும் போது, இயக்குநரின் கவனத்தை ஏதாவதொரு அம்சத்திற்கு ஈர்ப்பது அவசியமாகிறது. ஓர் இயக்காற்றல் நிறுத்தமானது, அந்தச் செயல் முறையை ஒரே சமயத்தில் முடிவற்ற வளையத்திற்குள் கொண்டு செல்கிறது. எந்திரம் செய்முறைப்படுத்துவதை மீண்டும் தொடங்கிவிட்டது என்பதை இயக்கி சுட்டிக் காட்டுகிறது:

dynamic storage : இயங்கு நிலை சேமிப்பகம்: தகவல்களை இழக்காமல் காப்பாற்ற அடிக்கடி மின்சக்தி ஏற்ற வேண்டிய தேவையுள்ள நினைவகச் சாதனம். அதிவேக இயக்க சேமிப்பகம்.

dynamic storage allocation : இயங்கு நிலை சேமிப்பக ஒதுக்கீடு : ஒரு செயல்வரைவு அல்லது ஆணைத் தொடர் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது நினைவகத்தில் ஒதுக்கீடு செய்தல்.

dynamic tool display : இயங்கு நிலை கருவிக் காட்சி : எண்மானத்தால், கட்டுப்படுத்தப்படும் அறுவைக் கருவியின் உருவத்தை வரைகலை முறையில் காட்டுகிற ஒரு CAD/CAM அம்சம்.

dynamic variable : இயங்கு நிலை மாறியல் மதிப்புரு : பாஸ்கல் (Pascal) போன்ற செயல்முறைப்படுத்தும் மொழியிலுள்ள ஒரு மாறியல் மதிப்புரு. ஒரு ஆணைத்தொடர் செயல் பட்டுக் கொண்டிருக்கும்போது உருவாக்கப்படுகிறது. பொதுவாக மாறியல் மதிப்புருக்கள் ஆணைத்தொடர் எழுதப்படும்போதுதான் உருவாக்கப் படுகின்றன.

E

E : இ : மிதக்கும் புள்ளி. எண்முறையில் மடங்கு என்பதைக் குறிக்கும் குறியீடு. 17-E2 என்றால் 17-ன் அடுக்கு 2 என்பதைக் குறிக்கும். அதாவது 17^2.

EAM : இஏஎம் : மின்னணுக் கணிதப் பதிவுக் கருவி : Electronic Accounting Machine என்பதன் குறும்பெயர். வழக்கமாக அலகு பதிவுக் கருவியைக் குறிக்கும்.

early binding : தொடக்கக் கட்டுமானம் : தொகுப்பு நிலையில் அச்செழுத்துருக்களைக் குறித்தளித்தல்.

EAROM : இஏரோம் ; மின்னோட்டத்தால் மாற்றத்தக்க படிப்பு நினைவகம் : Electrically Alterable Read Only Memory என்பதன் குறும்பெயர். சேமிக்கப்பட்ட தகவல்களை அழிக்கத் தேவையில்லாமல் குறிப்பிட்டவற்றை மட்டும் மாற்றுகின்ற, படிக்க மட்டுமான (ரோம்) நினைவகம். அழிக்கத்தக்க செயல்முறையிலான, படிப்பதற்கான நினைவுப் பதிப்பி (EPROM) சாதனத்தில் எல்லாவற்றையும் அழித்துத்தான் புதியவற்றைச் சேர்க்க வேண்டும்.

earth station : தரை நிலையம் : செயற்கைக்கோள்செய்தித்தொடர்புகளுக்கான அனுப்பீட்டு/ஏற்பு நிலையம். இது, நுண்ணலை அனுப்பீட்டுக்காக ஒரு கிண்ண வடிவ வானலை வாங்கியைப் பயன்படுத்துகிறது.

easy colour paint : எளிய வண்ண மை: தொழில் முறை சாராதவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட "ஆப்பிள் மெக்கின்டோஷ்" வரைகலைச் செயல்முறை. பயன்படுத்துபவர் ஒரு வண்ணத்தையும், தோரணியையும் தேர்ந்தெடுத்துக் கொண்டு, ஒரு கருவியினால் வண்ணம் பூசத் தொடங்குகிறார்.

easy writer : ஈசி ரைட்டர் : சொல் தொகுத்தலில் பயன்படுத்தப்படும் பல மென்பொருள் தொகுதிகளில் ஒன்று.

eavesdropping : ஒற்றுக்கேட்டல் : தகவல்களை இரகசியமாகக் கேட்டல். செய்திகளை இடைத்தடுப்பு செய்து கேட்டறிதல். இவ்வாறு செய்வது பெரும்பாலும் யாரும் அறிய முடியாததாக இருக்கும்.

EBAM : ஈபாம் : Electron Beam Addressed Memory என்பதன் குறும்பெயர். உலோக ஆக்சைடு அரைக்கடத்தி மேற்பரப்பின்மேல் படிக்கவோ எழுதவோ செய்யும் ஒளிக்கற்றையைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் மின்னணு சேமிப்புச் சாதனம்.

EBCDIC : இபிசிடிக் : Extended Binary Coded Decimal Interchange Code என்பதன் குறும்பெயர். நவீன கணினிகளில் தகவல்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் 8 துண்மிக் குறியீடு. இபிசிடிக் மூலம் 256 தனி எழுத்துகளைக் குறிப்பிடலாம்.

ECAD : எக்காட் : 'மின்னணுவியல் கணினிசார் வடிவமைப்பு' என்று பொருள்படும் "Electronic Computer - aided Design" என்ற ஆங்கிலத் தொடரின் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

ECC : ஈசிசி (பிழைதிருத்தக் குறியீடு) : பிழை திருத்தத்திற்காக தகவல் தொகுதி முறையில் உள்ள குறியீடு.

ECF : இசிஎஃப் ; (உயர்தொடர்ப் பாட்டு வசதிகள்: முதன்மைப் பொறியமைவுகளிலிருந்து தகவல் குறிப்புகளைக் கேட்கவும், தகவலிறக்கம் செய்யவும், முதன்மைப் பொறியமைவு ஆணைகளைப் பிறப்பிக்கவும் DOS சொந்தக் கணினிகளை (PC) அனுமதிக்கிற IBM மென்பொருள்.

சொந்தக் கணினியிலிருந்து முதன்மைப் பொறியமைவுக்கு அச்சடிப்பி வெளிப்பாடுகளையும் இது அனுமதிக்கிறது.

echo : எதிரொலி ; எதிரளிப்பு ; மறு மொழி : 1. செய்தித் தகவல் பரிமாற் றங்களின்போது அனுப்பப்பட்ட சமிக்ஞை சற்று தமாதமாக வருவதன் மூலம் சமிக்ஞை பிரதிபலிப்பதைக் குறிப்பிடுதல். 2.கணினி வரைகலை களில், கணினி அமைப்பிற்கு வரை கலைகளை உள்ளீடு செய்யும்போது வடிவமைப்பவர் பெறும் பதில்கள்.

echo cancellation : எதிரொலி அழித் தறவு : முதன்மை அனுப்பீட்டுக் குறி யீட்டிலிருந்து ஏற்படும் எதிரொலி களினால் உண்டாகும் தேவையற்ற குறியீடுகளைத் தனிமைப்படுத்தி, வடிகட்டுவதற்கான மிகைவேக அதிர்விணக்க மற்றும் அதிர்விணக்க நீக்கத் தொழில்நுட்பம்.

echo check : எதிரொலி சோதனை ; மறுமொழிச் சோதனை : தகவல் இட மாற்றல் இயக்கத்தின்போது துல்லி யத்தைச் சோதித்தல். இம்முறையில் பெறப்பட்ட தகவல்களைத் தொடங் கிய இடத்திற்கு அனுப்பி மூல தகவல்களுடன் ஒப்பிடுதல்.

echo suppressor : எதிரொலி ஒடுக்கி : ஒரு தொலைபேசி இணைப்பில் எதிர்த்திசை அனுப்பீட்டுக்கு வழி செய்கிற செய்தித்தொடர்பு உத்தி. இதன் மூலம், மின்சுற்று வழியைத் திரும்பட ஒரு வழிச்சுற்றாக்க முடி கிறது. தொலைபேசி இணைப்பு களில், குறிப்பாகச் செயற்கைக்கோள் மின்சுற்று வழிகளில், இடையூறாக இருக்கும் எதிரொலி விளைவுகளைக் குறைக்க இது பயன்படுகிறது.

Eckert, J. Presper : எக்கர்ட், ஜே. பிரஸ்பெர் : ஜான் மவ்க்லியுடன் சேர்ந்து பென்சில்வேனியா பல் கலைக்கழகத்தின் மூர் மின்பொறி யியல் கல்லூரியில் 1943 முதல் 1946-க் குள் ஈனியாக் கணினியை உருவாக் கியவர். முழுவதுமான பேரளவு மின்னணு இலக்கமுறை கணினி இது தான். இன்று நாமறியும் கணினித் தொழிலை இதன் வளர்ச்சிதான் உரு வாக்கியது.

ECL : இசிஎல் : Emitter Coupled Logic என்பதன் குறும்பெயர். நடப்புமுறை அளவை என்றும் அழைக்கப்படு கிறது. டிடிஎல்-ஐவிட வேகமானது. அவ்வளவு புகழ்பெற்றதல்ல.

ECLIPSE : ஒளிமறைப்பு : 'டேட்டா ஜெனரல்' எனப்படும் அமைவனம் தயாரித்துள்ள 32 துண்மி நுண் கணினிகளின் வரிசை. தொடக்க 32 துண்மி உருவாக்கம்.

ECMA : எக்மா : 'ஐரோப்பியக் கணினி உற்பத்தியாளர் சங்கம்' என்று பொருள்படும் "European Computer Manufacturers' Association" என்ற ஆங்கிலத் தொடரின் தலைப்பெழுத் துச் சுருக்கம்.

ECOM : ஈக்காம் : மின்னணு கணினி வழி அஞ்சல் : Electronic Computer Originated Mail என்பதன் குறும் பெயர். தொலைத் தகவல் தொடர்பு வசதிகள் மூலம் இலக்க வடிவில் செய்திகளை அனுப்பிப் பெறும் செயல்முறை.

ED : ஈடி : மிகை உயர் செறிவு : Extra High Density என்பதன் குறும்பெயர் இது 2.88 MB / செருகு வட்டுகளைக் குறிக்கும்.

Edge : விளிம்பு : கணினி வரைகலை யில் ஒரு கனசதுரத்தின் விளிம்புகள் போன்ற இரு திடப்பொருள்களின் சமதள முகப்புகளின் குறுக்கு

வெட்டாக அமைந்துள்ள ஒரு நேர் கோட்டுக் கூறு.

edge card : விளிம்பு அட்டை : விளிம்பு இணைப்பியுடன் சேரும் வகையில் வடிவமைக்கப்பட்ட விளிம்பில் மட்டும் தொடரும் கோடுகள் உள்ள மின்சுற்று அட்டை.

edge connector : விளிம்பு இணைப்பி : தாய் அட்டை அல்லது அடிப்பகுதியுடன் மின்சுற்று அட்டையை இணைக்கும் துளை விளிம்பி (Slot) வடிவ மின்சாதனப் பொருத்தி.



விளிம்பு இணைப்பி
(Edge connector)
இருவகையான விளிம்பு இணைப்பிகள்

edge cutter/trimmer : விளிம்பு வெட்டி/ செதுக்கி : தொடர் வடிவ அச்சுக் காகிதத்தில் துண்டுப் பகுதிகளை வெட்டும் சாதனம்.

edge punched card : விளிம்பு துளையிடும் அட்டை : துளையிட்ட நாடாவில் பயன்படுத்துவதுபோன்ற மாதிரியில் ஒரு விளிம்பில் மட்டும் துளைகளை இட்டு தகவல்களைப் பதிவு செய்யும் அட்டை. ஐந்து, ஆறு, ஏழு அல்லது எட்டு வழித்தடங்களில் குறியிடப்பட்ட முறையில் துளைகள் இடப்படும் இருமைக்குறியீட்டு பதின்ம அமைப்பில் குறியீடு அமையும்.

edge sharpening : விளிம்புக் கூர்மையாக்கல் : இலக்கமாக்கப்பட்ட படத்தின் விளிம்புகளை செயல்முறை மூலம் அல்லது மின்னணுவியல் பேனாவின் மூலம் கூர்மையாக்கும் முறை.

EDI (Electronic Data Interchange) : ஈடிஐ : மின்னணுவியல் தகவல் மாறு கொள்ளல் : அமைவனங்களிடையிலான மின்னணுவியல் செய்தித் தொடர்பு நடவடிக்கைகள். எடுத்துக்காட்டு : அனுப்பாணைகள் ; உறுதியுரைகள் ; பற்றுச்சீட்டுகள். பயன்படுத்தப்படும் சாதனம் எவ்வாறிருப்பினும், மற்றொரு அமைவனத்தின் கணினி கட்டமைவுடன் பயனாளர் இடைத்தொடர்பு கொள்வதற்கு இயல்விக்கிற ஈடிஐ பணிகளை தனித் தனிப் பணியமைவனங்கள் அளிக்கின்றன.

edit : தொகு ; பதிப்பி ; உள்ளிடு : 1. தகவல்கள் சரியா என்று சோதித்தல். 2. சில எழுத்துகளைச் சேர்த்தும், நீக்கியும் தகவல்களின் வடிவத்தினை தேவையான அளவில் மாற்றல். ஆணைத்தொடரின் ஒரு பகுதியே அச்சிடுவதற்காக தகவல்களை தொகுக்கலாம். தேவையற்ற பூஜ்யங்களை நீக்கியும் சிறப்புக் குறியீடுகளைச் சேர்த்தும் தொகுக்கப்படும்.

editing : தொகுத்தல் : தகவல்கள் அல்லது ஒரு ஆணைத்தொடரில் மாற்றங்கள் செய்தல் அல்லது திருத்துதல்.

editing a file : பதிப்பித்தல்: ஒரு கோப்பில் மாற்றங்கள் செய்தல் அல்லது திருத்துதல்.

editing run : தொகுக்கும் ஓட்டம் ; தொகுப்போட்டம் : தொகுதிமுறை செயலாக்கத்தில், தொகுப்பு ஆணைத் தொடரானது தகவல்கள் செல்லத்தக் கவைதானா என்பதை ஆராயும். எண் களும், தகவல்களும் எதிர்பார்க்கப் பட்ட வரிசைகளில் இருக்கிறதா என்று பார்த்து, தனித்தனியாக நுழைக் கப்பட்ட அல்லது தொடர்முறை யிலான கூட்டல்களைச் சோதித்து சோதனை இலக்கங்களை நிரூபித்து திருத்துவதற்கும், மீண்டும் சமர்ப்பிப் பதற்கும் ஏற்ற பிழைகளை அடை யாளம் காணுதல்.

edit instruction : தொகுப்பு அறிவு றுத்தம் : திரைக்காட்சிக்காக அல்லது அச்சடிப்பதற்காக ஒரு களத்தை உரு வமைக்கிற கணினிக் கட்டளை. ஒரு தொகுப்பு முகமூடி மூலம் இது பதின்மப் புள்ளிகளையும், அரைப் புள்ளிகளையும் டாலர் குறியீடு களையும் தகவலுக்குள் புகுத்துகிறது.

edit key : தொகுப்பு விடைக் குறிப்பு : செயல்முறையை தொகுப்பு முறை யாக மாற்றுகிற விடைக் குறிப்பு இணைப்பு அல்லது செய்பணி விடைக் குறிப்பு.

edit line : தொகுப்பு வரி ; பதிப்பு வரி : விரிதாள் அல்லது சொல் தொகுப்பு ஆணைத்தொடர் பயன்படுத்தப் படும்போது திரையில் காட்டப்படும் நிலை அறிக்கை வரி. அடையாளம் சுட்டும் அம்புக்குறி அப்போது எங்கே இருக்கிறது என்றும், எவ்வளவு நினைவகம் மீதமுள்ளது என்றும், பயனில் உள்ள கோப்பின் பெயர் என்ன என்றும் பயனாளருக்கு இது கூறுகிறது. தகவலின் வகைகளில் ஒன்று அல்லது இரண்டினைக் கூற லாம். அடையாளம் காட்டும் அம்புக் குறி இடத்தில் உள்ள உள்ளடக்கம் அல்லது தகவல் திட்டத்தின் அமைப்பு போன்றவற்றை விரி தாளில் இது காட்டும்.

edit mask : தொகுப்பு முகமூடி : உரு வமைவுக் குறியீடுகளைக் குறிக்கிற எழுத்துகளின் தோரணி. இதன் வழி யாகத் தகவல்கள் திரைக்காட்சிக்காக அல்லது அச்சடிப்பதற்காக வடி கட்டப்படுகின்றன.

edit menu : பதிப்புக் கட்டளைப் பட்டியல்.

edit mode : தொகுக்கும் முறை ; பதிப்பு நிலை : பல ஆணைத்தொடர்களில் உள்ள முறை. முழுதகவல்களையும் மீண்டும் நுழைக்கத் தேவையின்றி தகவல் கட்ட உள்ளடக்கங்களை மட்டும் எளிதாக மாற்ற உதவுவது.

edit programme : தொகுப்புச் செயல் வரைவு : பயனாளரின் உட்பாட்டி னைச் செல்லுபடியாக்கி, கோப்பில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பதி வேடுகளில் சேமித்து வைக்கிற தகவல் பதிவுச் செயல்முறை. ஒரு கோப்பில் ஏற்கனவே இருக்கும் தகவலை மாற்றுவதற்கு அனுமதிக் கிற செயல்முறை.

editor : தொகுப்பி ; பதிப்பி : வாசகங் களையும் பிற செயல்முறை அறி வுறுத்தங்களையும் இடைத் தொடர்பு மூலம் மறு ஆய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு செயல் வரைவு.

edit routine : தொகுப்பு வாலாயம் : தகவலின் செல்லுந்தன்மையைச் சோதனை செய்கிற ஒரு செயல் வரைவிலுள்ள வாலாயம்.

editable post script : தொகுக்கத்தக்க பின்குறிப்பு : ஒரு சொல் பகுப்பி

அல்லது பிற வரைவு மூலம் தொகுக்கப்படத்தக்க பின் குறிப்பு ஆணைகளின் கோப்பு. ஆவணங்களை முதலில் உருவாக்கிய பயன்பாட்டினைப் பயன்படுத்தாமல் அந்த பின்குறிப்பு ஆவணங்களை மாற்றுவதற்கு இது அனுமதிக்கிறது.

edlin : எட்லின் : DOSஇல் பயன்படுத்தப்படும் பழைய வாசகத் தொகுப்பி.

EDP : ஈடிபி : Electronic Data Processing என்பதன் குறும்பெயர்.

EDS : ஈடிஎஸ் : Exchangeable Disk Store என்பதன் குறும்பெயர்.

EDSAC : Electronic Delayed Storage Automatic Computer என்பதன் குறும்பெயர். சேமிக்கப்பட்ட ஆணைத் தொடர் கோட்பாட்டை செயல்படுத்திய முதல் இலக்கமுறை கணினி. 1949இல் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டது.

edutainment : கல்வியேற்பு : கல்விச் சாதனங்களை ஏற்றுக்கொள்ளுதல். இது தொடர்பான மற்றொரு சொல் 'தகவல் ஏற்பு' (Infortainment).

EDVAC : எட்வாக் : Electronic Descrete Variable Automatic Computer என்பதன் குறும்பெயர். அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட சேமிக்கப்பட்ட ஆணைத் தொடர் கொண்ட முதல் கணினி. 1951இல் ஜான் நியூமென் என்பவரால் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் மூர் மின்பொறியியல் கல்லூரியில் உருவாக்கப்பட்டது.

EEPROM : ஈப்ரோம் : Electronically Erasable and Programmable Read Only Memory என்பதன் குறும்பெயர். மின்னோட்டத்தால் மாற்றத்தக்க படிப்பு நினைவகமாகும்.

EEROM : ஈரோம் : மின்சாரத்தால் அழுத்தி மீண்டும் ஆணைத்தொடர் அமைக்கக் கூடிய சேமிப்புச் சாதனம்.

effective address : செயல்படும் முகவரி : ஒரு குறிப்பிட்ட முகவரியில் முகவரி மாற்றல் இயக்கத்தைச் செய்வதன் மூலம் கிடைக்கும் முகவரி.

effectiveness : செயல்திறம் : விரும்பிய நோக்கத்திற்கேற்ப எந்த அளவுக்கு வெளியீடு சாதிக்கிறது என்பதைக் குறிப்பது.

effectors : அகவுணர்வி : உள்ளமைவுச் சூழல் மாற்றத்துடன் இடைத் தொடர்பு கொள்கிற சாதனங்கள்.

EFT : ஈஎப்டி (மின்னணுவியல் நிதிப் பரிமாற்றம்) : Electronic Funds Transfer என்பதன் சுருக்கம். காசோலை போன்ற காகித ஊடகம் மூலமாக இல்லாமல் மின்னணுச் சாதனம் மூலம் ஒரு கணக்கிலிருந்து இன்னொரு கணக்குக்கு மின்னணு நிதி மாற்றல் (EFT) மாற்றித் தருகிறது. அவ்வப்போது கட்டவேண்டிய பில்களுக்கு இம்முறை மிகவும் புகழடைந்து வருகிறது.

EGA : இஜிஏ (உயர் வரைகலைத் தகவமைவு) : Enhanced Graphics Adapter என்பதன் குறும்பெயர். IBM ஒளிப் பேழைக் காட்சி தர அளவு. இது, நடுத்தர உருசெறிவு வாசகத்தையும் வரைகலையையும் அளிக்கிறது. இது முந்திய காட்சி முறைகளை ஆதரிக்கிறது. இதற்கு ஓர் இலக்க RGB தேவை.

egoless programming : ஆணவமற்ற ஆணைத்தொடர் அமைத்தல் : ஆணைத்தொடர் அமைப்பதை ஏற்பாடு செய்யும் ஒரு கோட்பாடு. இம்முறையில் வெற்றிக்கான பெருமை அல்லது தோல்விக்கான பழி ஒரு

வருக்கே போய்ச் சேராமல் பலர் பங்கிட்டுக் கொள்கின்றனர். அமைப்பு நடையோட்டம் மற்றும் பல தொழில் நுட்பங்களை இது பயன்படுத்துகிறது.

EIA : இஐஏ : Electronic Industries Association என்பதன் குறும்பெயர்.

EIA interface : இஐஏ இடைமுகம் : நுண்கணினிகளுக்கும் வெளிப்புற உறுப்புகளுக்கும் இடையிலும், மோடெம்களுக்கும் முகப்புகளுக்கும் இடையிலும் உள்ள தரமான இடை முகம்.

eight bit chip : எட்டுத் துண்மிச் சிப்பு : தகவல்களை ஒரு நேரத்தில் எட்டுத் துண்மிகள் என்ற வகையில் செயலாக்கம் செய்யும் மையச் செயலகச் சிப்பு.

elastic banding : நெகிழ்வுக் கட்டமைவு : கணினி வரைகலையில், திரையில் ஒரு குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இன்னொரு புள்ளிக்கு வரையப்படும் ஒரு கோட்டின் இயக்கம். இரண்டாவது புள்ளியை, ஒரு நுண்பொறியைப் பயன்படுத்தித் திரையில் நகர்த்தலாம். அந்தக் கோடு நெகிழ்வுப் பொருளால் செய்யப்பட்டது போன்று, கோட்டின் நீளத்தை நீட்டலாம் அல்லது சுருக்கலாம். இது கணினி அடிப்படையிலான வடிவமைப்புச் செயல்முறைகளில் பயன்படுத்தப்படுகிறது. இதனை 'ரப்பர் கட்டமைவு' (Rubber banding) என்றும் கூறுவர்.

elastic buffer : நெகிழ்வு இடைத்தடுப்பு : மாறுபடத்தக்க தகவல் அளவினை, ஒரு குறிப்பிட்ட நேரத்தின் தேவைக்கேற்ப இருத்தி வைத்துக் கொள்கிற ஓர் இடைத் தடுப்பு.

electric bulb : மின்குமிழ்.

electrical accounting machine : மின்னியல் கணக்கு வைப்பு எந்திரம்: நிரந்தரமாக மின் எந்திர முறையில் இயங்குகிற தகவல் செய்முறைப் படுத்தும் சாதனம்.

electrical communications : மின் தகவல் தொடர்புகள் : ஒரு ஆரம்ப இடத்திலிருந்து தோன்றிய தகவலை மின்சக்தியாக அல்லது புலங்களாக மாற்றி, மின்கட்டமைப்புகள் மூலம் வேறு ஒரு இடத்துக்கு அனுப்பப் பட்டு, பெறுகின்ற பொருளில் விளங்குவதற்கு ஏற்ற வகையில் மீண்டும் மாற்றும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முறை.

electrical schematic : மின்சார திட்ட முறை : வன்பொருள் மின்சுற்று அல்லது அமைப்பின் தருக்க முறை வரிசையை வழக்கமான குறியீடுகளைக் கொண்டு குறிப்பிடும் வரைபடம். கணினி உதவிடும் வடிவமைப்பிலும் இதை அமைக்க முடியும்.

electroluminescent : மின்சுடரொளி : செறிவான, தெளிவான உருக்காட்சியையும் அகன்ற பார்வைக் கோணத்தையும் அளிக்கிற தட்டையான சேணக் காட்சி. இது, ஓர் x அச்சு மற்றும் y அச்சுச் சேணத்திற்கிடையே ஒரு மெல்லிய பாஸ்வரப் படலத்தைக் கொண்டிருக்கிறது. x - y ஆயங்களில் மின்னேற்றப்பட்டதும், அதனையொட்டிய பகுதியிலுள்ள பாஸ்வரம், கணினியில் காணக்கூடிய ஒளியை உமிழ்கிறது. பாஸ்வரம் பொதுவாக பழுப்பு நிறமாக இருக்கும். பச்சைப் பாஸ்வரமும் பயன்படுத்தப்படுகிறது.

electromagnet : மின்காந்தம் : மின்விசை மூலம் ஆற்றலூட்டப்பட்ட காந்தம். இதில், ஒரு கம்பிச்சுருள், ஓர் இரும்புத் தண்டின் மீது சுற்றப்படுகிறது. கம்பியில் மின்விசை பாயும்

போது இரும்புத்தண்டு காந்தத் தன்மை பெறுகிறது.

electromagnetic delay line : மின்காந்த சுணக்கச் சுற்று : தொடக்கக்கால கணினிகளில் பயன்படுத்தப்பட்டது. தாங்கிகளின் மூலம் மின்காந்த அலை களைப் பரப்புவதனால் இயக்கப் படும் சுணக்கச் சுற்று.

electro magnetic radiation : மின் காந்தக் கதிர்வீச்சு : மனிதர் உட்பட அனைத்துப் பொருள்களிலும் இருந்துவரும் ஆற்றல். இது மின் காந்த நுண்ணலைகள், காமாக்கதிர் கள், எக்ஸ்- கதிர்கள், புறஊதா ஒளி, கண்காணும் ஒளி, அகச்சிவப்பு ஒளி, ராடார் போன்றவற்றைத் தன்மயமாக் கிக் கொள்கிறது.

electromagnetic spectrum : மின்காந்த நிறமாலை: மின்காந்தக் கதிர்வீச்சு உருவடிவம்.

electromechanical : மின்எந்திர முறை யிலான : மின்சாரமுறை, எந்திரமுறை ஆகிய இரண்டு கொள்கைகளின் அடிப்படைகளைப் பயன்படுத்தி தகவல்களைச் செயலாக்கம் செய்யும் சாதனம் அல்லது அமைப்பு பற்றியது.

electro mechanical relay : மின் எந்திர வியல் அஞ்சல் : அசையும் உறுப்பு கள் இறுதியில் தேய்ந்து போவதற் காக வடிவமைக்கப்பட்டுள்ள, காந்த விசையால் இயக்கக் கூடிய எந்திரப் பொறியமைவு.

electromotive force : மின்னியக்க விசை : ஒரு மின்சுற்று வழியிலுள்ள அழுத்தம். இது 'ஓல்ட்' (Volts) அலகு களில் அளவிடப்படுகிறது.

electron : மின்னணு (எதிர்மின்னணு) எதிர்மின்மம் : ஓர் அணுவின் உட்கரு வில் வட்டமிடுகிற அடிப்படைத் துகள்கள். எலெக்ட்ரான், எதிர்மின் னேற்றம் செய்யப்பட்டதெனக் கருதப்படுகிறது.

electron beam : மின்னணுக் கற்றை : ஓர் ஏற்புப் பொருள் மீது செலுத்தப் படுகிற எலெக்ட்ரான் அல்லது மின்னணுக் கற்றை.

electron beam deflection system : மின்னணு ஒளிக்கற்றை/விலகல் அமைப்பு : மின்சார அல்லது காந்தப் புலத்தின் தாக்கத்தினால் அதே திசை யில் மின்னணுக்கள் குறுகிய பாதை யில் நகர்வது.

electron beam lithography : மின் னணுக் கற்றை கற்பாள அச்சுமுறை : எலெக்ட்ரான் கற்றைகளைப் பயன் படுத்தி மின் சுற்றுவழிகளை உண் டாக்குகிற ஓர் உத்தி.

electron gun : மின்னணுத் துப்பாக்கி எலெக்ட்ரான்களின் ஒரு நுண்ணிய கற்றையை உண்டாக்குகிற சாதனம். இந்தக் கற்றை ஓர் எதிர்மின் கதிர்ச் குழலில் பாஸ்வரத் திரைமீது விழச் செய்யப்படுகிறது.

electronic : மின்னணு சார்ந்த : சாதாரண கடத்திகள் மூலம் மின் சாரம் தாராளமாக ஓடுவதற்கு மாறாக அரைக்கடத்திகள், வால்வுகள், வடி கட்டிகளின் வழியாக மின்சாரம் ஓடுவது தொடர்பானது. மிகவேக மாக இயங்கும் மின்னணுப் பொத் தான்கள் மூலம் மின்சாரத்தை ஓடவோ அல்லது நிறுத்தவோ செய் யும் மின்னணுச் சாதனங்கள் தேர்வு முறையிலும் கூட்டாகவும் பயன் படுத்துவதில்தான் கணினி தொழில் நுட்பத்தின் சாராம்சமே உள்ளது.

electronic accounting machine (EAM) : மின்னணு கணக்கு வைப்புப் பொறி (இஏஎம்) : விசைத்துளை,

எந்திரப் பிரிப்பி, பட்டியலிடுவான் அல்லது சேர்ப்பி போன்ற பெருமளவில் மின் எந்திரத்தன்மையுள்ள கணக்கீட்டுக் கருவி.

electronic calculators : மின்னணுக் கணிப்பான்; மின்னணுக் கணிப்பிகள்.

elelctronic circuit : மின்னணுவியல் சுற்றுவழி : ஒருங்கிணைந்த மின்னணுவியல் அமைப்பிகளின் வரிசை. ஒரு பணியைச் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட தோரணியில் மின்விசை செலுத்தப்படுகிற ஒரு வழி இது வாகும். இலக்கமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்படும் மின்னணுவியல் சுற்றுவழிகள், வெவ்வேறு ஈரிலக்க எண்களைக் கையாளுகின்றன. வானொலி, தொலைக்காட்சி போன்ற ஒத்தியல்புச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் மின்னணுவியல் சுற்றுவழிகள், மின்னியல் அதிர்வுகளைக் (அலைவெண்கள்) கையாளுகின்றன.

electronically programmable : மின்னணு முறையில் ஆணைத்தொடரமைக்கக் கூடிய : 'ப்ராம்' ஆணைத்தொடர் அமைப்புக் கருவியைப் பயன்படுத்தி இருமைக் குறியீட்டு முறையில் 1,0 வடிவங்களில் தகவல்களை மின்னணு முறையில் சேர்க்கக் கூடிய இலக்கமுறைச் சாதனம் அல்லது ஆணைத்தொடர் அமைக்கும் ராம் பற்றியது.

electronic bulletin board : மின்னணு செய்திப் பலகை : செய்திகளின் பட்டியலை வைத்திருக்கும் மின்னணு அமைப்பு. தங்களது கணினி அமைப்புகளில் இருந்து இந்தப் பலகையுடன் தொடர்பு கொண்டு செய்திகளை பெற முடியும் அஞ்சல் செய்ய முடியும் அல்லது அங்கே இருக்கும் செய்திகளைப் படிக்க முடியும்.

electronic circuits : மின்னணுச் சுற்று வழிகள்; மின்சுற்று வழிகள்.

electronic cottage : மின்னணுக் குடிசை; மின்னணுக் குடில் : மைய அலுவலகத்துடன் தங்களது வீட்டிலிருந்தே கணினி மூலம் தொடர்பு கொண்டு வேலைகளைச் செய்யும் தொழிலாளர் பற்றிய கோட்பாடு.

electronic computer : மின்னணுக் கணினி.

electronic data interchange (EDI) : மின்னணுவியல் தகவல் இடைப் பரிமாற்றம் (இடிஐ) : பற்றுச்சீட்டுகள், அனுப்பாணைகள் போன்ற வடிவங்கள் தொடர்பான தகவல்களை, நாடாப் பரிமாற்றம் அல்லது தொலைபேசி இணைப்புகள், மின்னணுவியல் அஞ்சல், கணினிகள் மூலமாக வழங்குகிற பொறியமைவு. ஒரு வணிக நடவடிக்கையை முடிவு செய்வதற்கு முன்பு கொள்வினையாளர்களும் பொருள் வழங்குவோரும் பல ஆவணங்களை முடிவுறுத்த வேண்டியிருக்கிறது. பன்னாட்டு வணிகத்தில், நாடுகளிடையிலான சுங்கவரி முனையங்கள் வணிக நடவடிக்கையைத் தாமதப்படுத்துகின்றன. இத் தாமதங்களை இந்த முறை தவிர்க்கிறது.

electronic data processing (EDP) : மின்னணு தகவல் செயலாக்கம் (இடிபி) : 'இடிபி' என்பது Electronic Data Processing என்பதன் குறும்பெயராகும். மின்னணு இலக்கமுறை கணினி போன்ற மின்னணுக் கருவியினால் பெருமளவு செய்யப்படும் தகவல் செயலாக்கம்.

electronic data processing system : மின்னணுதகவல்செயலாக்கஅமைப்பு: மின்னணு வேகத்தில் மின்னணு மின் சுற்றுகளைப் பயன்படுத்தும் எந்திரங்

களைக்கொண்டு தகவல் செயலாக்கம் செய்யும் அமைப்பு. மின்காந்தக் கருவிக்கு மாறானது.

electronic device : மின்னணுச்சாதனம்; மின்னணுக்கருவி.

electronic filing : மின்னணு கோப்பு அமைத்தல் : வட்டுகள் அல்லது நாடாக்களின் மீது மின்னணு முறையில் தகவலை எவ்வாறு கணினி அமைப்புகள் சேமிக்கின்றன என்பதைக் குறிப்பிடுவது.

electronic funds transfer (EFT) : இஎஃப்டி என்பது Electronic Funds Transfer என்பதன் குறும்பெயர். மின்னணு நிதி மாற்றல் (இஎஃப்டி) : ரொக்கம் இல்லாத முறையில் சரக்குகள் அல்லது சேவைகளுக்குப் பணம் செலுத்துவது, பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு நபர்களுடைய கணக்குகளை மின்னணு முறையில் கணினிகளைப் பயன்படுத்தி சரி செய்யப்படுகிறது. இன்சூரன்ஸ் பிரிமியம் போன்று அடிக்கடி கட்டப்பட வேண்டியவற்றைக் கட்டுவதற்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

electronic industries association : மின்னணுத்தொழில்கள் சங்கம்; இஐஏ: இஐஏ (EIA) என்பது Electronic Industries Association என்பதன் குறும்பெயர். தகவலை வழங்குதலில் தர நிர்ணயம் உருவாக்கி, தகவலை வழங்கி, அரசுடன் தொடர்பு கொண்டு மக்கள் தொடர்பை கவனித்து வருகிற மின்னணு உற்பத்தியாளர்கள் சங்கம்.

electronic journal : மின்னணு இதழ் : ஒரு கணினி அமைப்பு செய்கின்ற பணிகளை நேர்வரிசையில் தொகுக்கின்ற மின்னணுக் கோப்பு.

electronic magazine : மின்னணு இதழ் : 1. ஒளிநாடா அல்லது ஒளி வட்டு வடிவத்தில் வெளியிடப்படும் பருவ இதழ். 2. ஒருவகை மின்னணு பதிவு முறை.

electronic mail : மின்னணு அஞ்சல்; மின்னஞ்சல் : தொலைத் தகவல் தொடர்பு வசதிகளைப் பயன்படுத்தி இலக்கமுறை வடிவத்தில் செய்திகளை அனுப்பும் செயல் முறை. E-mail என்றும் அழைக்கப்படுகிறது.

electronic market place : மின்னணு வியல் அங்காடிக் கூடம் : தகவல் பணியங்கள், ஒளிப்பேழை வாசகப் பணியங்கள் வாயிலாகக் கொள்வினை, விற்பனை செய்தல். எடுத்துக்காட்டு: ஆதாரம், கணினிப் பணியம்; அருந்திறல் பணி.

electronic messaging : மின்னணுவியல் செய்தியனுப்பீடு : இது, மின்னணுவியல் அஞ்சல் போன்றதேயாகும்.

electronic music : மின்னணு இசை; மின் இசை : மின்னணு முறையில் ஒலிகள் உருவாக்கப்படுகின்ற இசை.

electronic numeric integrator and calculator (ENIAC) : மின்னணு எண்மான ஒருங்கிணைப்பி மற்றும் கணிப்பி.

electronic office : மின்னணு அலுவலகம் : கணினி மற்றும் செய்தி தகவல் தொடர்பு தொழில் நுணுக்கங்களைச் சார்ந்து செயல்படுகின்ற அலுவலகம்.

electronic pen : மின்னணு எழுது கோல்: ஆணைத்தொடர் கட்டுப்பாட்டில் கத்தோட் கதிர்க் குழாயுடன் சேர்ந்து தகவலை உள்ளிடும் அல்லது மாற்றும் பேனா போன்ற ஒரு எழுது பொருள். ஒளிப்பேனா என்றும் அழைக்கப்படுகிறது.

electronic power supply : மின்னணு மின் வழங்கல் : குழாய்கள் மற்றும் அரைக்கடத்திச் சாதனங்களில் உள்ள மின்னணு மின்சுற்றின்போது மின் சார வோல்டேஜ்களில் அலைகளின் இயக்கத்துக்குத் தேவையான மின் சக்தியை வழங்கும் வேலையில் பயன்படுத்தப்பட்டுள்ள மின் சக்தியின் மூலாதாரம்.

electronic printer : மின்னணுவியல் அச்சடிப்பி : அச்சிடும் செயல் முறையைக் கட்டுப்படுத்துவதற்கு லேசர் அச்சடிப்பி, வரிவாரி அச்சடிப்பி போன்ற மின்னணுவியல் சாதனங்களைப் பயன்படுத்தும் அச்சடிப்பி.

electronic publishing : மின்னணு பதிப்பு முறை : அச்சிடுதல் தவிர பிற வகையில் எளிதில் தொகுக்கவும் கூடுதல் வசதி பெறவும் ஏற்ற வகையில் தகவலை அனுப்ப அல்லது சேமிக்கத் தேவையான பலவகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய தொழில்நுட்பம். கல்வி மென்பொருள் வட்டுகள், கல்வி மென்பொருள் பேழைகள், நேர்முக தகவல் தளங்கள், மின்னணு அஞ்சல் ஒளிச் செய்தி, தொலைச் செய்தி, ஒளிநாடா பேழைகள், ஒளி வட்டுகள் போன்ற பல முறைகளில் தகவல் சேமித்து அனுப்பப்படுகிறது.

electronics : மின்னணுவியல் : வாயுக்கள் அல்லது வெற்றிடம் அல்லது அரைக் கடத்திப் பொருட்கள் மூலமாகச் செல்லும் மின்சக்தியைக் கட்டுப்படுத்தி இயக்குதல் தொடர்பான அறிவியல், தொழில் நுட்பப் பிரிவு.

electronic smoke trails : மின்னணு வியல் புகைத் தடங்கள் : ஒரு தாரை விமானம் வானத்தில் விரைவாகச் செல்லும்போது விட்டுச் செல்லும் புகைத் தடங்கள்.

electronic spreadsheet : மின்னணு விரிதாள் : கணினி முகப்பை ஒரு பெரிய பேரேட்டின்தாளாக மாற்றும் கணினி ஆணைத்தொடர். தொகுப்புப் பயனாளர் குறிப்பிடும் விதிகளின்படி பெரிய நிரல்கள், நிரைகளில் எண்கள் மாறுவதை அனுமதிக்கிறது. ஒரு உள்ளீடு மாறும் போது மொத்த எண்களும் மாறும். கலவையான கணிப்புகளும் எண்முறை எதிர்பார்ப்புகளும் சோர்வடைய வைக்கும் மனித கணக்கீடுகள் இல்லாமல் செய்ய வைக்கும் முறை.

electronic station : மின்னணுவியல் நிலையம் : மின்னணுவியல் பரிசோதனைகளையும் ஆராய்ச்சிகளையும் நடத்துவதற்கான ஒரு பணி நிலையம்.

electronic switch : மின்னணுவியல் விசை : மின்னோட்டத்தின் மூலம் தூண்டிவிடப்படும் தொகுப்பு/விடுப்பு விசை.

electronic tablet : மின்னணுப் பலகை.

electronic text manipulation : மின்னணுவியல் வாசகக் கைத்திறன் : ஒரு சொல் பகுப்பியில் ஒரு வாசகத்தை அச்சிடுவதற்கு முன்பு அந்த வாசகத்தை உருவாக்கவும், பார்வையிடவும் பதிப்பிக்கவும் கையாளவும் உள்ள வசதிகள்.

electronics funds transfer (EFT) : மின்னணுவியல் நிதிய மாற்றம் : இஎஃப்டி (EFT) என்பது Electronic Funds Transfer என்பதன் குறும்பெயர். சரக்குகளுக்கும், பணியங்களுக்கும் பணமில்லாமலே பணம் செலுத்துவதற்கான அணுகுமுறையைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல். வணிக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் கணக்குகளில் சரியமைவு செய்வதற்கு

கணினிகளுக்கிடையே மின்னணு வியல் சைகைகள் பயன்படுத்தப்படு கின்றன.

electro photographing : மின்னியல் ஒளிப்படக்கலை : இது படியெடுப்பு எந்திர மற்றும் லேசர் அச்சடிப்பி அச்சடிப்பு உத்தியினைக் குறிக்கிறது. ஒளிப்புள்ளிக் குறிகளினாலான மறி நிலை உருக்காட்சி ஓர் ஒளியுணர் வுடைய வட்டுருளையில் அல்லது மின்னேற்றம் செய்யப்பட்ட பட்டை யில் வண்ணம் பூசப்படுகிறது. ஒரு லேசரிலிருந்து அல்லது திரவப் படிகங்களிலிருந்து ஒளி வருகிறது. வட்டுருளையில் ஒளிபடும் இடத் தில் எல்லாம் மின்னேற்றம் நீக்கப் படுகிறது. ஓர் உலர் மையைப் பூசு வதன் மூலம் வட்டுருளையில் மின் னேற்றமடைந்த பகுதிகளை அது ஒட்டிச் செல்கிறது. உலர் மையை வட்டுருளை காகிதத்திற்கு மாற்றிய பின்னர் அந்த மையினையும் காகிதத் தினையும் அழுத்தமும் வெப்பமும் நிரந்தரமாக இணைக்கின்றன.

electrostatic plotter : நிலைமின்னியல் வரைவி : மின்வாய்களின் ஒரு வரிசை மேற் செல்லும்போது மின்னேற்ற மடைகிற ஒரு தனி வகைக் காகிதத் தைப் பயன்படுத்துகிற வரைவான். மின்னேற்றமடைந்த காகிதத்தில் உலர் மை பூசப்படுகிறது. இதில் உருமாதிரிகளில் கறுப்பு- வெள்ளை யில் அல்லது வண்ணத்தில் அச்சடிக் கப்படுகின்றன. சில வரைவான்கள், 6 அடிவரை அகலமுள்ள காகிதத் தைப் பயன்படுத்துகின்றன.

elegant programme : நுட்பநயச் செயல் வரைவு : எளிய வடிவமைப்புடன் மிகக்குறைந்த அளவு நினைவாற் றலைப் பயன்படுத்தி, மிகவேகமாக இயங்கக்கூடிய செயல் வரைவு.

electro tube : மின் குழாய் : மின்மப் பெருக்கிகள் உருவாக்கப்படுவதற்கு முன்பு கணினிகளில் பயன்படுத்தப் பட்டு வந்த முக்கிய மின்னணுப் பொருள்.

electrosensitive paper : மின் உணர் வுத் தாள் : அலுமினியம் போன்ற கடத்திப்பொருள் மெலிதாகப் பூசப் பட்ட அச்சிடும் காகிதம். கடத்தும் பரப்பில் மின்சக்தி ஓடுவதற்கு அச்சு முனை உதவுவதன் மூலம் அங்கு இருளடைந்து அச்சிடப்பட்டது தெளிவாகத் தெரிகின்றது.

electrosensitive printer : மின் உணர்வு அச்சுப்பொறி : சிறப்பாகத் தயாரிக்கப் பட்ட காகிதத்தில் மின் சக்தி மூலம் எழுத்துகள் அமைப்பதைப் பயன் படுத்துகின்ற அழுத்து முறை அல்லாத அச்சுப்பொறி.

electrostatic plotter : நிலைமின் வரைவி : நிலைமின்சக்தியைப் பயன் படுத்தி வரைகலை விவரங்களைக் காகிதத்தில் வரைகின்றன வெளி யீட்டுச் சாதனம். மற்ற வரைவிகளை விட வேகமானது.

electrostatic printer : நிலைமின் அச்சுப்பொறி : வேதியியல் முறையில் பதப்படுத்தப்பட்ட காகிதத்தில் எழுத்துகளை ஏற்படுத்துகின்ற அதி வேக அழுத்தமற்ற அச்சுப் பொறி.

electrothermal printer : மின் வெப்ப அச்சுப்பொறி : வெப்ப உணர் காகிதத் தில் சிறுபுள்ளிகள் வடிவால் எழுத்து களை உருவாக்கும் வெப்பப் பொருள்களைப் பயன்படுத்தும் அதிவேக அச்சுப்பொறி.

element : உறுப்பு : ஒருவரிசை அல் லது சதுரத்தில் உள்ள தகவல் வகை.

elementary diagram : தொடக்க நிலை வரைபடம் : ஒரு மின் அமைப்பின்

கம்பியிழுக்கும் வரைபடம். மின் சக்தி வரும் வழிகளை செங்குத்துக் கோடுகளுக்கிடையில் குறிப்பிட்ட எல்லா சாதனங்களும் வரையப்படும். செய்தி, கம்பிக்கட்டமைப்பு, அள வைப் பொருள் போன்ற அனைத்தை யும் உள்ளடக்கியது. CAD அமைப் பில் எளிதில் உருவாக்கமுடியும்.

elementary perciever and memories : தொடக்க உணர்வி மற்றும் நினைவுப் பதிப்பிகள் : எட் ஃபெய்கென்பாம் என்ற அமைவனம் 1960இல் உரு வாக்கிய செயற்கை நுண்ணறிவு (AI) கல்விப் பொறியமைவு.

elements of a microcomputer : ஒரு நுண்கணினியின் உறுப்புகள் : நுண் செயலகம், ஆணைத்தொடர் நினை வகம் (ரோம்), ஆணைத்தொடர் மற்றும் தகவல் சேமிப்பகம் (ராம்), உள்ளீடு / வெளியீடு மின்சுற்று, மற்றும் நேரத் துடிப்பு உருவாக்கி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நுண் கணினியின் பாகங்கள்.

eleven -punch : பதினோராவது துளை: ஹோலரித் துளையிடப்பட்ட அட்டையின் மேற்பகுதியின் இரண் டாவது வரிசையில் போடப்படும் துளை.

elite type : எலைட் டைப் : பன் னிரண்டு எழுத்துகளும் ஒரு அங்குல அச்செழுத்தில் பொருந்துவது போன்ற அளவுள்ள அச்செழுத்து. 'பிகா' (Pica) வுக்கு மாறானது.

ELIZA : எலைசா (ஒரு மென்சாதனம்): ஒரு உளவியல் முறை மருத்துவரைப் போன்று செயல்படும், ஆரம்ப கால இயற்கை மொழியைப் புரிந்து கொள் ளும் ஆணைத்தொடர்.

ellipse : நீள்வட்டம் : நேர்க்கோடு ஆக் கப்பட்ட வட்டம் போன்ற வரை கணித உருவம். எல்லா கணினி வரை கலை அமைப்புகளிலும் நீள வட்டத்தை உருவாக்குவது ஒரு தானியங்கி செயல்முறையாகும்.

else : மற்று : பல செயல்முறைப்படுத் தும் மொழிகளிலும், அறிவுறுத்தங் களிலும் நிபந்தனையைச் சரி பார்த்து முடிவெடுக்கும் கட்டளை அமைப்பில் பயன்படும் சொல். IF .... THEN ..... ELSE .... ENDIF

EM : எம் : அச்செழுத்துருக் கலையில், ஓர் அச்செழுத்தின் அலகு. இது, 'M' என்ற ஆங்கிலத் தலைப்பெழுத்தின் அகலத்திற்குச் சமமானது.

E-mail : மின் அஞ்சல் : 'Electronic Mail' என்பதன் குறும்பெயர். கணினி பயன்படுத்துபவர்களுக்கான தகவல் தொடர்பு சேவை. இம்முறையில் ஒரு மையக் கணினி அமைப்புக்கோ அல்லது மின்னணு அஞ்சல் பெட்டிக் கோ செய்திகள் அனுப்பப்பட்டு பின் னர் முகவரியிடப்பட்டவர் அதைப் பெற்றுக்கொள்வார்.

embedded : உள்ளிடப்பட்ட விதைத்த, மறைத்த.

embedded command : உள்ளிடப் பட்ட ஆணை; உட்பொதிந்த ஆணை: சொல் பகுப்பியில் ஒன்று அல்லது மேற்பட்ட எழுத்துகள் உரைநடை யில் உள்ளே சேர்க்கப்படும். ஆனால் அவை, அச்சிடப்படுவதில்லை. பக்கத்தை முடி அல்லது ஒரு வரிசையை விட்டுச் செல் என்பது போன்ற சில பணிகளைச் செய்யு மாறு அச்சுப் பொறிக்கோ அல்லது சொல் பகுப்பு ஆணைத்தொட ருக்கோ ஆணையிடும்.

embedded system : உள்ளிடப்பட்ட அமைவு ; பதிக்கப்பெற்ற பொறி யமைவு; உட்பொதிந்த அமைப்பு : ஒரு சாதனத்தைக் கட்டுப்படுத்துவதற் காகப் பயன்படுத்தப்படும் தனி

வகைக் கணினி. உந்துஊர்திகள், கருவிகள், வானூர்தி, விண்வெளிக் கலங்கள் ஆகியவற்றில் இது பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. செயற்பாட்டு முறை, பயன்பாட்டுச் செயற்பணிகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கிற மென்பொருள்.

embedding : உள்ளிடல் ; உட்பொதித்தல் : உரைநடையின் உள்ளேயே ஆணைகளாக சிறப்பு அச்சிடும் ஆணைகளைச் சேர்த்தல்.

emergency : அவசர நிலை.

emitter : உமிழி : ஒரு இணைப்பு மின்மப் பெருக்கியில் உள்ள எலெக்ட்ரோடு.

emmitter coupled logic (ECL) : ஒளிர்வு இணைவுத் தருக்கமுறை : இசிஎல் (ECL) என்பது Emmitter Coupled Logic' என்பதன் குறும்பெயர். அதிவேகக் கணினிகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஒருவகைத் தருக்க முறைச் சுற்று வழி.

emphasized : இரட்டை அச்சிடும் முறை : ஒவ்வொரு புள்ளிக்குறியும் இருமுறை அச்சிடப்படும் அச்சு முறை. இதில் , இரண்டாவது அழுத்தம் முதலாவது அழுத்தத்திற்கு சற்று வலப்புறமாக இருக்கும்.

empty string : காலியான சரம் ; வெற்றுச் சரம் : எழுத்துகள் எதுவும் இல்லாத சரம். இல்லாச் சரம் என்றும் அழைக் கப்படும்.

emulate : போலச்செய் : 1. மின்னணு இணைப்பின் மூலம் ஒரு வன்பொருள் அமைப்பைப் போல இன்னொன்று செயல்படுத்தல். இதில் போலச் செய்யும் அமைப்பு அதே தகவல்களை ஏற்றுக்கொண்டு அதே ஆணைத் தொடர்களைச்செயல்படுத்தி மூல அமைப்பில் கிடைத்தது போன்ற அதே முடிவுகளையே கொண்டு வரும். 2. மற்றொரு மென்பொருள் அல்லது வன்பொருள் செயலைப் போலச் செய்யும் ஆணைத்தொடர் அமைத்தல்.

emulation : போன்மம் ; போலச் செய்தல்.

emulation mode : முன்மாதிரி முறை; போன்ம முறை : ஒரு கணினி ஓர் அயல் செயல் முறையை முன்மாதிரியாக இயக்கும்போது ஏற்படும் செயற்பாட்டு நிலை.

emulator : பின்தொடர்பவர் ; போன்மி : ஒருவகையான கணினி அமைப்புக்காக எழுதப்பட்ட ஆணைத் தொடர் வேறு ஒரு வகையான கணினியில் செயல்பட அனுமதிக்கும் சாதனம் அல்லது ஆணைத்தொடர்.

EN : என் : அச்செழுத்துருக்கலையில், 'எம்' என்ற எழுத்தின் அகலத்தில் பாதியளவுக்குச் சமமான ஓர் அலகு. ஓர் 'என்' என்பது , ஓர் எண்ணிலக்கத்தின் அகலமாகும்.

enable : இயலச் செய் ; இயலுமைப் படுத்து : ஒரு கணினி சாதனம் அல்லது வசதியை இயக்குவதற்கு ஒரு பொத்தானை அழுத்துதல்.

encapsulated postscript : பொதிவுப் பின்குறிப்பு : ஆவணங்களுக்கும் ஒளியியல் முன்னோக்கு உருக்காட்சிகளுக்குமான பின்குறிப்புக் குறியீட்டில் அடங்கியுள்ள பின்குறிப்புக் கோப்பு உருவமைவு. பின்குறிப்புக் குறியீடு, ஒரு குறிப்பு அச்சடிப்பானை நேரடியாக இயக்குகிறது. முன்னோக்கு உருவமைவுகள், திரையில் உருக்காட்சிகளைக் கையாள உதவுகின்றன. DOS, OS/2 கோப்புகள் இதனைப் பயன்படுத்துகின்றன.

encapsulation : பொதிவுறையாக்கம் : பொருள்சார்ந்த செயல் வரைவுகளில்

தகவல்களையும், செயல் கூறுகளையும் ஒரு பொருளுக்குள் தனிமையாக்குதல். இது, செயல்முறையில் வேறெங்கும் சிக்கல் ஏற்படாதவாறு மாற்றமைவு செய்ய அனுமதிக்கிறது. செய்தித் தொடர்பில், சட்டகத் தலைப்பினையும் தகவல்களையும் ஓர் உயர் நிலைப்படியிலிருந்து, ஒரு தாழ்நிலைப்படியின் தகவல் சட்டகத்தினுள் நுழைத்தல் இதற்கு எடுத்துக் காட்டு.

encipher : மாற்று : பழைய மாற்றல்களைச் சரிசெய்யாவிட்டால் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தகவல்களை மாற்றுதல்.

enclosure : தங்குமிடம் ; கூடு : உறை: மின்சார அல்லது மின்னணுச் சாதனங்கள் வைக்கப்படும் இடம்.

encode : குறியீடு அடை : குறியீடாக்கல் : கணினிக் கருவிக்கு ஏற்கும் வண்ணம் தகவல்களை ஒரு குறியீட்டு வடிவத்தில் மாற்றல்.

encoder : குறியீட்டுப்பொறி ; குறியீடு ஆக்கி : மனிதர் இயக்கும் விசைப் பலகை மூலமோ அல்லது வேறு குறியீட்டில் பதிந்துள்ள தகவல்களிலிருந்தோ காகித நாடா போன்ற எந்திரம் படித்தறியும் வெளியீட்டு வடிவில் உருவாக்கித் தரும் சாதனம்.

encrypted message : உருமறைந்த தகவல் ; மெய்யுரு மாற்றிய தகவல்.

encryption : இரகசியக் குறியீடு அமைத்தல் ; மறைக்குறியீடாக்கல் ; உருமாற்றியமைத்தல் : மீண்டும் மாற்றியமைக்கும் விசையால் மாற்றினால் ஒழிய புரியாத வகையில் தகவல்களைக் குறியீடாக அமைத்தல்.

encryption key : உருமாற்றுத் திறவுகோல்.

encryption process : உருமாற்று முறை.

end : முடிவு : ஒரு செயல்முறையின் முடிவில் நிறைவேற்றப்படவேண்டிய, அறிக்கைகளின் முடிவினைக் குறிக்கிற ஒரு கட்டளைச் சொல்.

end around carry : தொகு எண் சுற்றிய முனை : மிக முக்கிய இலக்கத்தின் இடத்திலிருந்து, மிகக்குறைந்த முக்கியத்துவமுடைய இலக்க இடத்திற்குக் கொண்டு செல்லுதல்.

endif : என்டிஃப் : நிபந்தனையைச் சரிபார்த்து முடிவெடுக்கும் கட்டளை அமைப்பில் இடம்பெறும் இறுதிச் சொல். IF ... THEN .... ELSE ..... ENDIF

endless loop : முடிவற்ற வளையம் ; முடிவிலாக் கணினி : இடையறாது திரும்பத்திரும்ப நிறைவேற்றப்படுகிற அறிவுறுத்தங்களின் வரிசை. இது, செயல்முறையில் ஒரு பிழையினால் உண்டாகலாம் அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்படலாம்.

end effector : 'முடிவு' உருவமைவுச் சாதனம் : எந்திர மனிதனைக் கையாளும் சாதனத்துடன் இணைந்த கரம். இது 'முடிவு' உருவமைப்புச் சாதனம் அல்லது கைப்பிடி என்று அழைக்கப்படுகிறது.

end mark : முடிவு அடையாளம் ; முடிவுக் குறி : தகவல் அலகு ஒன்றின் முடிவைக் காட்டும் குறியீடு அல்லது சமிக்ஞை.

end key : 'முடிவு' விரற்கட்டை அல்லது விசை : ஒரு சறுக்குச் சட்டத்தைக் கோட்டின் முடிவுக்கு சில செயல் முறைகள் மூலம் திரையின் அல்லது கோப்பின் அடிப்பகுதிக்கு அல்லது அடுத்த சொல்லுக்கு நகர்த்துவதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் விசைப் பலகையிலுள்ள விசை.

end-of-block (EOB) : தொகுதி முடிவு : ஒரு தொகுதியாக உள்ள தகவல் அல்லது ஆணைத்தொடர் முடிதல். இஓபி (EOB) என்ற குறும்பெயராலும் அழைக்கப்படும்.

end -of -file : கோப்பு முடிவு : ஒரு குறிப் பிட்ட அளவு தகவல்கள் முடிதல் அல்லது முடியும் இடம். மின்காந்தக் கோப்புகளில் இத்தகைய இடத்தைக் குறிப்பிட கோப்பின் முடிவு குறியீடு கள் பயன்படுத்தப்படுகின்றன.

end-of-file mark : கோப்பு முடிவுக் குறி : Ctrl மற்றும் Z விசைளகளை ஒரு சேர அழுத்துவதன் மூலம் பெறப் படும் 'Z' எழுத்து. DOS இதனை எதிர் நோக்கும்போது அதன் பிறகு ஒரு தகவல் கோப்பில் வேறெதையும் படிப்பதில்லை. MS-DOSஇன் கீழ் பணியாற்றும்போது. F6-ஐ அழுத்து வதன் மூலம் இந்த எழுத்து உண்டாக் கப்படுகிறது.

end-of-job (EOJ) : பணி முடிவு ; வேலை முடிவு : ஒரு பணி முடிந்து விட்டது என்பதைச் செயல்முறைக்குத் தெரி வித்து, மற்றொரு நடவடிக்கையைத் தொடங்கும்படி கூறும் ஒரு நிலை.

end-of-message (EOM) : செய்தி முடிவு (இஓஎம்) : ஒரு செய்தியின் முடிவுறுத் தம்.

end-of-page halt : பக்கமுடிவில் நிறுத் தம் : வெளிப்பாட்டின் முடிவுற்ற ஒவ் வொரு பக்கத்தின் முடிவிலும் அச் சடிப்பியை நிறுத்தி, மற்றொரு தாளைச் செருகுவதற்கு அனுமதிக் கிற ஓர் அம்சம்.

end-of-run : இயக்கம் முடிவுறல்.

end-of-tape marker : நாடா முடிவுக் குறி ; நாடா முடிவுக் குறியீடு : அனு மதிக்கப்பட்ட ஒத்திசைவுப் பகுதி யின் முடிவினைப் பயன்படுத்து பவருக்குக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு காந்த நாடா விலுள்ள குறியீடு.

end-of-text : உரைநடையின் முடிவு ; உரை முடிவு ; வாசக முடிவு : செய்தி யின் கடைசி எழுத்து இதற்கு முந் தைய எழுத்துதான் என்று பெறுகின்ற வன்பொருளுக்கு உணர்த்தும் அனுப்புதல் கட்டுப்பாட்டு எழுத்து.

end-of-transmission : அனுப்பீட்டு முடிவு ; செலுத்தல் முடிவு : ஓர் அனுப் பீடு முடிவுற்றுவிட்டது என்பதைக் குறித்துக்காட்டுவதற்குப் பயன்படுத் தப்படும் ஒரு கட்டுப்பாட்டு எழுத்து.

end of transmission block : அனுப் பீட்டுத் தொகுதி முடிவு : ஒரு தகவல் தொகுதியின் முடிவினைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு செய்தித் தொடர்புக் கட்டுப்பாட்டு எழுத்து.

end points : முடிவு முனைகள் ; நுழை விடங்கள் : வரைகலையில், ஒரு கோட்டின் இரு முனைகள். இரு பரிமாண வரைகலையில், முடிவு முனை ஒவ்வொன்றும் x,y அச்சுக ளின் மீதான ஆயத்தொலைவுகளைக் குறிக்கும் இரு எண்கள். முப்பரி மாண வரைகலையில் முடிவு முனை ஒவ்வொன்றும் x,y,z அச்சுகளின் மீதான ஆயத்தொலைவுகளைக் குறிக் கும் மூன்று எண்களினாலானது.

end statement : முடிவுறுத்தல் கட்டளை.

end user : இறுதிப் பயனாளர் : கணினி அமைப்பையோ அதன் வெளி யீட்டையோ பயன்படுத்தும் ஒரு நபர்.

engine : எந்திரம் : ஒரு தகவல் ஆதாரத் தைச் செயற்படுத்துகிற ஓர் ஊர்தியின் இயக்குவிசையாக விளங்கும் ஒரு செய்முறைப்படுத்தியின் மற்றொரு

பெயர். வரைகலைச் செய்முறைப் படுத்தி போன்ற தனிவகைச் செய் முறைப்படுத்தி. எடுத்துக்காட்டு: தகவல் தள எந்திரம். வரைகலை எந்திரம். செய்முறைப்படுத்தியின் கொச்சை வழக்கு.

engineering units : பொறியியல் அலகுகள் : மாறிலி செயல்முறைக் குப் பயன்படுத்தப்படும் அளவை முறை அலகுகள்.

enhanced keyboard : உயர்த்திய விசைப்பலகை : 101 விரற்விசைகள் உள்ள IBM விசைப் பலகை. இது, PC,AT விசைப் பலகைக்கு பதிலாக உருவாக்கப்பட்டது . இதில் முதலிலி ருந்து எண்மான/சறுக்குச்சட்ட விசை திண்டுக்கும் எழுத்து விசைகளுக்கு மிடையில் விசைத் தொகுதி ஒன்று அமைந்திருக்கும். மேலும் f11, f12 என்ற இரு செயற்பணி விசைகள் கூடு தலாக இருக்கும்.

முன்னேற்றங்கள், கூடுதல்கள், அல்லது புதுப்பித்தல்கள் செய்தல்.

ENIAC : ஈனியாக் : Electronic Numerical Integrator and Calculator : என்பதன் குறும்பெயர். முழுவதும் மின்னணு மயமான முதல் பேரளவு கணினி. 1946இல் பென்சில்வேனியாவில் ஜான் மாக்லியும் ப்ரெஸ்பர் எக்கர் டும் உருவாக்கியது. 15,000 சதுர அடி அகலமாகவும், 30 டன் எடையுட னும், 18,000 வெற்றிடக்குழாய்களு டனும் இருந்த இதற்கு 130 கிலோ வாட் மின்சாரம் தேவைப்பட்டது. ஈனியாக் ஒரு நொடிக்கு 5,000 கட்ட ளைகளைச் செய்தது. தானியங்கி கணினி வளர்ச்சியில் முன்னோடி யாகக் கருதப்பட்ட ஈனியாக் 9 ஆண்டு இயக்கத்துக்குப் பின் 1955 இல் ஓய்வுபெற்றது.

E notation : E எண்முறை : மிகப் பெரிய மற்றும் மிகச்சிறிய எண்



(Enhanced keyboard) உயர்த்திய விசைப் பலகை

enchancements : மேம்படுத்தல்கள் ; மேம்பாடுகள் : கணினி அல்லது மென்பொருள் அமைப்பிற்கு வன் பொருள் அல்லது மென்பொருள்

களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் எண்முறை. ஒரு மான்டிசா மற்றும் மடங்காக்கல் ஆகிய இரண்டு பகுதி கள் கொண்டது.

enquiry character : விசாரணை எழுத்து: செய்தித்தொடர்புகளில் உள்ள ஒரு கட்டுப்பாட்டு எழுத்து. இது ஏற்பு நிலையத்திலிருந்து ஒரு பதிலை வேண்டுகிறது.

enter key : நுழைவு விசை ; நுழைவு சாவி ; உள்ளீட்டு பொத்தான் ; நுழைவு (செலுத்து) விறற்கட்டை : சில விசைப் பலகைகளில் உள்ள சிறப்பு விசை. இதனை அழுத்தினால் ஒரு ஆணையைச் செயல்படுத்துவது என்று பொருள். சில விசைப்பலகைகளில் உள்ள Return விசை போன்றது. Carriage Return உடன் மாற்றாக இதைப் பயன்படுத்தலாம்.

enternal sort : புறநிலைப்பகுப்பி : குழுமம் முழுவதும் மிகப்பெரிதாக இருக்கும்போது, பகுக்கப்பட்ட இனங்களின் இடைநிலைக் குழுமங்களைச் சேமித்துவைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு புறச்சேமிப்புச் சாதனம் உள்ள ஒரு பகுப்பி.

enterprise data : தொழில்முனைவுத் தகவல்: அமைவனம் முழுவதிலுமுள்ள பல பயனாளர்கள் பகிர்ந்து கொள்ளும் மையப்படுத்திய தகவல்கள்.

entity : உட்பொருள் : ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டுக்கு உட்பொருளைக் கொண்டுள்ள ஒரு பொருள்.

entity type : உட்பொருள் வகை : ஒரு தகவல் தளத்தில், உள்ள ஒரு வகைக் கோப்பு. எடுத்துக்காட்டு: வாடிக்கையாளர் கோப்பு ; உற்பத்திப் பொருள் கோப்பு.

entropy : செறிவளவு : தகவல் செறிவாக்கத்தில், ஒரு பொருளிலுள்ள மிகையில்லாத, செறிவாக்கம் செய்ய முடியாத தகவல்களின் அளவு.

entry : நுழைவு ; உள்ளிடு : மின்னணு விரிதாளில், ஒரு குறிப்பிட்ட அறையில் உள்ள தகவல் அல்லது மதிப்பு.

entry point : நுழைவுப் பகுதி ; நுழைவிடம் : ஒரு வழக்கச் செயலின் பகுதி. வேறொரு வழக்கச் செயலில் இருந்து இதற்கு கட்டுப்பாடு அனுப்பப்படும். மாற்றல் முகவரி என்றும் குறிப்பிடப்படும். ஆணைத்தொடரில் முதலில் செயல்படுத்தப்படும் ஆணை.

enumerate : கணக்கீடு : ஒன்றன்பின் ஒன்றாகக் கணக்கிடுதல் அல்லது பட்டியலிடுதல். கணக்கிட்ட தகவல் வகையானது, ஒரு மாறியல் மதிப்புருவின் நிகழ்தகவு மதிப்பளவுகள் அனைத்தின் ஒரு பட்டியலை வரையறுக்கிறது.

enumeration : கணக்கிடுதல் : முறையாக உருவாக்கிய ஒரு பட்டியல்.

envelope : உறையீடு : ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டின் அதிர்வெண்களின் வீச்செல்லை. தனியொரு அலகாகத் தொகுக்கப்பட்டுக் கையாளப்படும் துணுக்குகளின் அல்லது இனங்களின் குழுமம்.

environment : சூழ்நிலை ; சூழல் : கணினிப் பின்னணியில் நேரப்பங்கீட்டுச் சூழ்நிலை போன்ற இயக்க முறையைக் குறிப்பிடுகிறது. வெப்பநிலை, ஈரப்பதம் போன்றவற்றை இது அவ்வளவாகக் குறிப்பிடுவதில்லை. ஆனால், இரண்டு வகையான சூழ்நிலையும் கணினி இயக்கத்தின் திறனைப் பாதிக்கக்கூடியவை.

environment division : சூழல் பகுதி : கோபால் ஆணைத் தொடரின் நான்கு பகுதிகளில் இரண்டாவது பகுதி.

environment variable : சூழல் மாறியல் மதிப்புரு : DOS சூழல் இடைவெளியிலுள்ள எழுத்துகளின் ஒரு குழுமம்.

இதற்கு ஒரு மதிப்பளவு குறித் தளிக்கப்படுகிறது.

EOB : இஓபி : End of Block என்பதன் குறும்பெயர்.

EOF : இஓஎப் : End Of File என்பதன் குறும்பெயர். ஒரு கோப்பில் உள்ள எல்லா பதிவேடுகளும் செயலாக்கம் செய்யப்பட்டுவிட்டபின், கோப்பின் இறுதி நிலையை கணினி அடைந்து விட்டதாகப் பொருள்.

EOJ : இஓஜே : End of Job என்பதன் குறும்பெயர்.

EOLN : இஓஎல்என் : End of line என்பதன் குறும்பெயர். ஒருவரியில் உள்ள தகவல்கள் முடிவதைக் குறிப் பிடும் கொடி. EOL என்றும் சில சமயம் சுருக்கப்படும்.

EOM : இஓஎம் : end of message என்பதன் குறும்பெயர்.

EOT : இஓடி : End of Transmission என்பதன் குறும்பெயர்.

EPO : இபிஓ (அவசர மின் துண்டிப்பு) : Emergency Power off என்பதன் குறும் பெயர். அவசரநிலையில் மின்சுற்றும் அதனை இயக்கும் பொத்தான்களும் முழு கணினியையும் நிறுத்திவிடக் கூடும். ஒரு பெரிய கணினி அமைப் பில் இருபதுவரையிலான இபிஓ பித் தான்கள் இருக்கக்கூடும்.

EPROM : இப்ரோம்: அழித்தெழுது படிப்பு நினைவகம் : Erasable Programmable Read Only Memory என்பதன் குறும்பெயர். அதிக அடர்த்தி யுள்ள அல்ட்ராவயலட் ஒளியில் அழித்து மீண்டும் ஆணைத்தொடர் அமைக் கக் கூடிய சிறப்பு புரோம் (PROM)

EPROM eraser : இப்ரோம் அழிப்பி : எழுதிப் படிப்பதற்கு மட்டுமேயான நினைவுப் பதிப்பியில் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒரு செயல்முறையை அழிப்பதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு ROM சிப்புகள் ஏற்றிவைக்கப்பட்டுள்ள ஒரு சாதனம்.

EPROM programmer : இப்ரோம் ஆணைத்தொடர் : இப்ராம் (EPROM) சிப்புகளுக்கு ஆணைத்தொடர் அளிக் கப் பயன்படும் சிறப்பு எந்திரம்.

EPSILON : இப்சிலான் : ஒன்றின் சிறிய அளவு.

EPSON : இப்சன் : வரைகலையையும் வாசகங்களையும் அச்சிடக்கூடிய ஒரு புகழ்பெற்ற தயாரிப்பு நிறுவனம் அச்சடிப்பி.

EPSON printer : இப்சன் அச்சடிப்பி : ஜப்பானிலுள்ள இப்சன் கழகம் என்ற அமைவனம் தயாரிக்கும் உலகப் புகழ்பெற்ற அச்சடிப்பி வகை. இது புள்ளிக்குறி வார்ப்புரு அச்சடிப்பி களையும், மைதூவு அச்சடிப்பி களையும் லேசர் அச்சடிப்பிகளையும் தயாரிக்கிறது.

epson emulation : இப்சன் முன்மாதிரி : ஒத்தியல்பு இப்சன் புள்ளிக்குறி வார்ப் புரு அச்சடிப்பிகள். இப்சன் Mx, Rx, Fx, அச்சடிப்பிகளிலுள்ள ஆணைத் தொகுதி, ஒரு தொழில் துறைத் தர அளவாக உருவாகியுள்ளது.

equality : சமம் ; சமத்துவ நிலை : சமன் பாடு குறியீட்டினால் உணர்த்தும் கருத்து. பல ஆணைத்தொடர் மொழி களிலும், வடிவமைப்புகளிலும் பயன் படுத்தப்படுவது. மாற்றாக அமைக் கப்படும் குறியீடாகவும் சமன்பாடு குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

equalization : சரிநிகராக்கம் : உருத்திரி பினைக் குறைத்து, நெடுந்தொலைவு களில் சைகை இழப்பீட்டை ஈடுசெய் வதற்குப் பயன்படுத்தப்படும் உத்தி கள்.

equation : சமன்பாடு : ஒரே எண்ணைக் குறிப்பிடும் இரண்டு கணித வெளியீடுகளுக்கிடையில் சமன்பாடு குறியீட்டைப் பயன்படுத்தும் கணிதச் சொற்றொடர். A யுடன் 10 சேர்த்தால் 6 என்ற சமன்பாட்டில் A யின் மதிப்பு 4 ஆகும்.

equal priority : சம முன்னுரிமை.

equipment : கருவி : ஒரு கணினி அமைப்பின் பகுதி.

equipment bay : கருவி இருப்பிடம் : மின்னணுக் கருவி பொருத்தப்படுகின்ற பெட்டி அல்லது அலமாரி.

erasable : அழிக்கவல்ல.

erasable storage : அழிக்கக்கூடிய சேமிப்பகம் ; அழிக்கக்கூடிய தேக்ககம் : அழித்து மீண்டும் பயன்படுத்தக் கூடிய சேமிப்பு ஊடகம். காந்த வட்டு, உருளை, நாடா போன்ற ஊடகங்களை அழித்து மீண்டும் பயன்படுத்தலாம். துளையிடப்பட்ட அட்டைகள் அல்லது காகித நாடாக்களை இவ்வாறு செய்யமுடியாது.

erase : அழி : மீண்டும் வேறொன்றை வைக்காமல் தகவல்களை சேமிப்பகத்திலிருந்து நீக்குதல்.

erase head : அழிக்கும் முனை : வீட்டு உபயோக, நாடாப்பதிவு கருவியில் புதிய செய்தியினைப் பதிவு செய்யும் முன்பு நாடாவில் ஏற்கனவே பதிவு செய்ததை அழிக்கும் முனை. மையம் இல்லாத காந்த மயப்பட்ட பெரிக் அமில மேற்பரப்புகளான நாடா, அட்டை அல்லது வட்டில் அழிக்கும் முனையானது எழுதும் முனை அத்தகைய செயலைச் செய்யும் முன்பு அழித்துவிடும்.

ergonomics : சூழலியல் : மனிதர்களுக்கும் அவர்களது பணிச் சூழலுக்கும் இடையிலுள்ள பருப்பொருள் உறவை ஆராய்தல். அதிகத்திறன், நல்ல உடல்நலம் போன்ற பொது நலனுக்காக இயக்குபவர்களின் வசதிக்காக எந்திரங்களை மாற்றுதல். விசைப்பலகைகளில் உள்ள எண் விசைகள் பிரிக்கக்கூடிய விசைப்பலகைகள், தலைப்பு காட்டும் திரை போன்றவை இது தொடர்பான நல்ல முடிவுகள்.

erlang : எர்லாங்க் : ஓர் தொலைபேசிப் பொறியமைவில் மொத்தத் திறம் பாட்டினை அல்லது சராசரிப் பயன்பாட்டினை குறித்துரைக்கிற போக்குவரத்துப் பயன்பாட்டு அலகு. ஓர் 'எர்லாங்க்' என்பது ஒரு தொலைபேசி இணைப்பின் தொடர்ச்சியான பயன்பாட்டுக்குச் சமம். அனைத்து இணைப்புகளின் இயங்கு நேரங்களின் கூட்டுத் தொகையினை அளவீட்டுக் கால அளவினால் வகுத்துக் கிடைக்கும் ஈவுதான் எர்லாங்க் அலகுகளின் போக்குவரத்து அலகாகும்.

EROM : இரோம் : Erasable Read Only Memory என்பதன் குறும்பெயர்.

error : பிழை ; தவறு : கணினி அல்லது சரியானதை அளந்த தன்மை அல்லது உண்மை மதிப்பிலிருந்து விலகிச் செல்வது. fault, malfuncion, mistake இவைகளுடன் வேறுபடுத்துக.

error analysis : பிழை ஆய்வு ; பிழை பகுப்பாய்வு : எண்முறை ஆய்வு நடைமுறைகளில் பிழையின் பங்கை ஆராயும் எண் ஆய்வு தொடர்பான துறை. கணிப்பு கணிதத்தின் விநோதத் தன்மை காரணமாக கணிப்பில் ஏற்படும் பிழைகளை ஆராய்வதையும் குறிப்பிடுகிறது.

error checking : பிழை சோதித்தல் : 1. தகவல்களின் செல்லத்தக்க நிலையைச் சோதிப்பதற்கான பல்வேறு

தொழில் நுட்பங்கள். 2. தொலைத் தகவல் தொடர்பு கொள்ளும் இரண்டு கணினிகள் தாங்கள் பெற்ற தகவல், பிழை இல்லாதது என்று சோதித்துக் கொள்ளும் செயல் முறை.

error control : பிழைக் கட்டுப்பாடு : செய்தித் தகவல் தொடர்பு அமைப்பில் ஏற்படும் பிழைகளைக் கண்டு பிடிக்கவோ அல்லது திருத்தவோ மென்பொருள் அல்லது வன்பொருள் அமலாக்கப்படும் திட்டம்.

error-correcting code : பிழைத் திருத்தக் குறியீடு ; பிழை திருத்தும் குறிமுறை : ஒரு துணுக்கின் ஈட்டத்தினால் அல்லது இழப்பீட்டினால் ஏற்படும் தடைசெய்யப்பட்ட துடிப்புகளின் இணைப்பிலுள்ள குறியீடு. இது எது தவறானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

error - detecting code : பிழையறியும் குறியீடு ; பிழையறியும் குறிமுறை : ஒவ்வொரு தொடரும் குறிப்பிட்ட கட்டுமான விதிகளுக்கு இணங்க இருக்குமாறு செய்கிற குறியீடு.

error correction : பிழை திருத்தம் : தகவல் அனுப்பப்படும் கருவிகளில் பிழைகள் ஏற்பட்டால் தானாகவே கண்டுபிடித்து திருத்தம் செய்யும் உள்ளார்ந்த அமைப்பு.

error file : பிழைக் கோப்பு : கணினியால் கண்டுபிடிக்கப்பட்ட பிழையை நிறுத்திவைக்க செயலாக்கத்தின் மீது உருவாக்கப்படும் கோப்பு.

error-free channel : பிழையிலா வழி : புறநிலைக் குறுக்கீடுகளுக்கு உள்ளாகாதிருக்கிற சாதனங்களுக்கிடையிலான கம்பி, கம்பிவடம் போன்ற இடைமுகப்பு.

error guessing : பிழை ஊகித்தல் : சோதனை தகவல் தேர்வு தொழில் நுட்பம். பிழைகள் ஏற்படுத்தக்கூடிய மதிப்புகளைக் கண்டுபிடிப்பதே தேர்வு விதிமுறை.

error handling : பிழை கையாளல் : விசைப்பலகை இயக்குபவர் தவறான விசையை அழுத்திவிட்டால் ஏற்படும் பிழையைக் குறைக்கும் ஆணைத் தொடரின் செயல்.

error message : பிழைச் சுட்டும் ; தவறு சுட்டும் செய்தி : கணினி ஒரு பிழையையோ அல்லது எந்திரக் கோளாறையோ கண்டுபிடித்துவிட்டது என்பதைக் குறிப்பிடும் அச்சிட்ட அல்லது காட்டப்பட்ட சொற்றொடர்.

error rate : பிழை விகிதம் ; பிழை வீதம் : செய்தித் தகவல் தொடர்புகளில், மின்சுற்றுக் கருவியின் தரத்தின் ஒரு அளவு. ஒரு மாதிரி பகுதியில் உள்ள பிழையான துண்மிகள் அல்லது எழுத்துகள்.

error ratio : பிழை விகிதம் : மொத்த தகவல் அலகுகளில் பிழையான தகவல் அலகுகளின் விகிதம்.

error transmission : பிழை அனுப்புதல் ; பிழை பரவல் : அனுப்பும் செயலின்போது தகவல்களில் ஏற்படும் மாற்றம். உள்ளே விழுதல் அல்லது வெளியே விழுதல்.

escape character : இடர்பிழைப்பு எழுத்து : முந்திய எழுத்துகளிலிருந்து மாறுபட்டுப் பொருள் கொள்ள இடமளிக்கும் ஓர் எழுத்து. கட்டுப்பாட்டு எழுத்து. பெரும்பாலும் பிற குறியீடுகளுடன் பயன்படுத்தப்படுகிறது.

escape key : விடுபடு விசை ; விடுபடு சாவி : பெரும்பாலான கணினி விசைப்பலகைகளில் உள்ள கட்டுப்பாட்டு விசை. ஒரு ஆணைத்தொடரை

நிறுத்தவோ, குறிப்பிட்ட ஆணைத் தொடரிலிருந்து விடுவித்து கணினி கட்டுப்பாட்டை அதிலிருந்து மாற்றி அமைக்கவோ பயன்படுகிறது.

escape sequence : இடர் பிழைப்பு வரிசை : இடர்பிழைப்பு எழுத்துடன் தொடங்கும் எந்திர ஆணை.

ESD : இஎஸ்டி : 1. நிலைமின்னியல் போக்கு. ஒரு மின்னேற்றம் செய்யப் பட்ட பொருளிலிருந்து ஓர் அணுகு மின்கடத்து பொருளுக்குத் தாவுகிற சுடர் (எலெக்ட்ரான்கள்) 2. மின்னணு வியல் மென்பொருள் பகிர்மானம். மென்பொருள்களை ஓர் இணையத் தின் வாயிலாக சேர வேண்டிய எந் திரங்களுக்கு அனுப்புவதன் மூலம் மென்பொருள்களை நிறுவுதல்.

ESDI (Enhanced Small Device Interface) : இஎஸ்டிஐ (உயர்த்திய சிறுசாதன இடைமுகப்பு) : வினாடி ஒன்றுக்கு முப்பது இலட்சம் எட்டியல்/ வீச் செல்லையில் தகவல்களை மாற்றம் செய்கிற வன்வட்டு இடை முகப்பு. சிறு கணினிகளுக்கு ஈஎஸ் டிஐ எப்போதும் உயர்தரமான, அதி வேகமுடைய இடைமுகப்பு ஆகும்.

ESF : இஎஸ்எஃப் : 1. (விரிவாக்கிய மீச்சட்டகம்) : இயல்பான செயற் பாட்டின்போது ஒரு இணைப்பினை கண்காணிக்க அனுமதிக்கிற உயர்த் திய T1 உருவமைவு. 2. (புறநிலை ஆதார உருவமைவு) : IBM இன் CSP/ AD பயனீட்டு உருவாக்கியில் வரை யறுக்கப்படுவதற்கான தனிக்குறி யீட்டு மொழி.

ESP : இஎஸ்பி : 1. (E டெக் விரைவு மரபுக்குறிப்பு) : Eடெக் ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிர்விணக்க மற்றும் அதிர்விணக்க நீக்கிகளில் பயன்படுத் தப்படும் வணிக உரிமையுடைய மரபுக் குறிப்பு. 2. (மின்னணுவியல் இயங்கா ஒளிப்படக்கலை) தொலை பேசி இணைப்பில் உருக்காட்சிகளை இலக்கமாக்கி அனுப்புதல். 3. (எமுலெக்ஸ் SCSI செய்முறைப் படுத்தி. எமுலக்ஸ் SCSI வட்டுக் கட்டுப்பாட்டுக் கருவியில் பயன் படுத்தப்படும் வணிக உரிமை யுடைய சிப்பு.

ESS : இஎஸ்எஸ் : மின்னணுவியல் விசைப் பொறியமைவு. : ஒரு மைய அலுவலகத்தில் தொலைபேசி உரை யாடல்களுக்குக் கம்பியிணைப்புக் கொடுப்பதற்குப் பயன்படுத்தப் படும் பேரளவுக் கணினி.

ETB : இடீபி : 'அனுப்பீட்டுத் தொகுதி முடிவு' என்று பொருள்படும் "End of Transmission Block" என்பதன் தலைப் பெழுத்துச் சுருக்கம்.

ETE : business solution : வணிகத் தீர்வு : விரைவாக விரிவடைந்து வரும் கணினி மென்பொருள் சாதனம் உருவாக்கும் அமைவனம்.

ethernet : கணிப்பொறி உள் வளாக இணைப்பு : கணினி தகவல்களுடன் ஒலி, ஒளி தகவலும் அனுமதிக்கப் படும் கட்டமைப்பு வகை.

ether talk : ஈதர் உரையாடல் : 'Apple' நிறுவனம் உருவாக்கிய மெக்கின் டோஷ் மென்பொருள். இதன் 'ஈதர் நெட் இன்டர் பேஸ்' NB அட்டை யுடன் சேர்த்து அனுப்பப்படும். இது ஈதர்னெட் இணையங்களுக்கு MAC தன்னை தகவமைவு செய்து கொள்ள உதவுகிறது.

ETX : இடீஎக்ஸ் : End of Text என்பதன் குறும்பெயர்.

European Article Number (EAN) : ஐரோப்பியப் பொருள் எண் : சில்லறை விற்பனைக் கடைகளுக்கும், பேரங் காடிகளுக்குமான ஒரு பட்டைக் குறியீடு.

evaluation : மதிப்பிடல் : புதியதாக உருவாக்கப்பட்ட கணினி அமைப்பு எதற்காக வடிவமைக்கப்பட்டதோ அதை உண்மையிலேயே செய்கிறதா என்பதைக் கண்டறியும் செயல் முறை.

evelyn wood dynamic reader : ஈவ்லின் உட் இயக்கப் படிப்பி : 'கமோ டோர் -64' என்ற வீட்டுக் கணினியில் படிப்புச் செறிவு மற்றும் இருத்தி வைப்புத் திறனை மேம்படுத்துவதற் காகப் பயன்படும் ஒரு மென் பொருள்.

even parity check : இரட்டைப்படை சரிபார்ப்பு ; இலக்க முறைத் தகவல் தொடர்பில், துண்மி எண்ணிக்கை யில் இரட்டைப்படை சரிபார்க்கும் முறை.

event : நிகழ்வு : எந்தஒரு நடப்பு அல்லது நிகழ்ச்சியையும் குறிப்பிடும் மைல்கல் முனை என்றும் அழைக்கப் படும். கால எல்லை எதுவும் இல்லை. நடவடிக்கைகளை தொடங்குதல் அல்லது முடித்தல் மற்றும் ஒன்றுடன் ஒன்றாக அவை தொடர்புபடுத்தலை இது குறிப்பிடுகிறது.

event driven : நிகழ்வு இயக்கம் : பயனாளரின் உட்பாட்டுக்கு அல்லது ஒழுங்குபடுத்தப்படாத நேரங்களில் பிற பயன்பாட்டுக்குப் பதிலளிக்கிற பயன்பாடு. இது பயனாளரின் தெளிவுகளினால் இயங்குகிறது. (தெரிந்தெடுத்த பட்டியல்; அழுத் தும் பொத்தான் முதலியன).

excel : எக்செல் : ''மைக்ரோசாஃப்ட் கார்ப்பரேஷன்'' என்ற அமைவனம் உருவாக்கிய மின்னணு விரிதாள் மென் பொருள். இது IBM PC, மெக்கின்டோஷ் கணினி இரண்டுக் கும் உரியது.

exception : விதிவிலக்கு.

exception report : விதிவிலக்கு அறிக்கை : இயல்பு கடந்த இனங் களை அல்லது குறிப்பிட்ட வீச் செல்லைக்கு அப்பாற்பட்ட இனங் களைப் பட்டியலிடுதல்.

exception reporting : விதிவிலக்கு அறிக்கையளித்தல் ; விதிவிலக்கு அறிவித்தல் : காட்சிக்கோ அல்லது அச்சிடவோ கணினிமய தகவல் அதிக அளவில் திரையிடும் நுட்பம். வழக்கமான எல்லைக்கு அப்பால் உள்ளவற்றையே அறிவிக்கும். விதி விலக்கு முறை நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

excess three code : கூடுதல் மூன்று குறியீடு : இருமைக்குறியீடு இடப் பட்ட பதின்ம எண்முறை. இதில் ஒவ் வொரு பதின்ம x இலக்கத்தையும் இருமை x உடன் 3-ஐ கூட்டும் எண்ணால் குறிப்பிடப்படும்.

exchangeable disk store : மாற்றிக் கொள்ளக்கூடிய வட்டு சேமிப்பு : வட்டுகள் மூடிய வடிவில் பின் ஆதார மாக வரும் வட்டு இருப்பகம். ஒவ்வொரு மூடியிலும் பல வட்டுகள் இருக்கும். கணினியின் இயக்கத் தின்போது வட்டுமூடிகளை தேவைப் படும்வரை கணினி மாற்றிக் கொண்டேயிருக்கும். 'டிஸ்க் பேக்' என்றும் இது அழைக்கப்படுகிறது.

exchange buffering : மாற்று தாங் கல் : உள்சேமிப்பகத்தில் தகவல்களை மாற்றும் தேவை இல்லாமல் தகவல் கள் சங்கிலியாக அமைக்கும் தொழில் நுட்பம்.

exclusive OR (XOR) : தனியான அல் லது (எக்ஸார்) ; விலக்கிய அல்லது : ஏதேனும் ஒன்று : உண்மைப்பட்டிய லின் அடிப்படையில் இயங்கும் ஒரு பூலியன் இயக்கி. இதில் இணையும் மாறிலிகளில் ஒன்று உண்மையாக

இருந்தால்தான் மதிப்பு உண்மை என்று வரும். உண்மைப்பட்டியல் இரண்டு மாறிலிகளும் உண்மையாக இருந்தால், அதன் மதிப்பு பொய்.

executable : நிறைவேற்றத்தக்க: ஒரு குறிப்பிட்ட கணினிச் சூழலில் இயங்குவதற்கு ஆயத்தமாகவுள்ள எந்திர மொழியிலுள்ள செயல் முறை.

executable programmes : நிறைவேற்றத்தக்க செயல்முறைகள்; இயக்க நிரல்கள்.

executable statement : செயல்படுத்தக் கூடிய சொற்றொடர் ; செயல்பாட்டுச் சொற்றொடர் : உடனடியாக செய்யப் படவேண்டிய கணித செயல்பாடு களையோ அல்லது ஆணை களையோ தரும் ஆணைத்தொடரின் சொற்றொடர். Assignment Statement. இதற்கு ஒரு சான்று.

execute : நிறைவேற்று.

execute cycle : செயற்படுத்தும் சுழற்சி ; செயற்சுற்று : குறிப்பிட்ட ஒன்றின் மீது எந்திர ஆணை புரிந்து கொள்ளப் பட்டு எந்திர ஆணை இயங்கும் நேரம்.

execution : செயற்படுத்தல் ; செயற் படுத்தம் : ஒரு ஆணைத்தொடரை உண்மையாகவே செயல்படுத்தும் போது, நடைபெறும் செயல்களின் சுழற்சி.

executive : நிர்வாகி ; மேலாளர் : மற்ற ஆணைத்தொடர்கள் இயக்கப் படுவதைக் கண்காணிக்கும் மேலாண்மை ஆணைத்தொடர். Monitor, Supervisory system, Operation system ஆகியனவும் இதே பொருளில் குறிப்பிடப்படும்.

executive routine : செயலாட்சி வாலாயம் : ஒரு செயற்பாட்டு முறையில், மற்றச் செயல்முறைகளை நிறைவேற்றுவதைக் கட்டுப்படுத்து கிற, ஒரு முதன்மைச் செயல் முறை. இதனை மேற்பார்வையாளர் அல்லது உருவாக்க மையம் என்றும் கூறுவர்.

executive workstation : செயலாட்சிப் பணி நிலையம் : தட்டச்சு செய்ய விரும்பாத, பணி அதிகமுள்ளவர் களுக்காக வடிவமைக்கப்பட்ட தனி வகை மேசைமோட்டுக் கணினி சார்ந்த அலகுகள். இதில் தனிவகைச் செயற்பணி விசைகள் இருக்கும். ஒரு நுண்பொறி அல்லது ஒரு தொடுதிரை மூலம் இது உட்பாட்டினை ஏற்றுக் கொள்ளும். இவை, சொல்/ தகவல் செய்முறைப்படுத்துதலைச் செய்ய வும், தகவல் தளங்களை நிருவகிக் கவும், வரைகலைகளை உருவாக் கவும், வேறு பல நடவடிக்கை களுக்கு உதவவும் வல்லவை.

exerciser : செயல்படுத்தி : மனிதர்கள் மூலம் வன்பொருள் பயன்படுத்தல் மற்றும் ஆணைத்தொடர்களை உரு வாக்குதல், பிழைநீக்கல் ஆகியவை வற்றைச் செய்ய உதவும் சாதனம்.

exit : வெளியேறு, வெளியேற்றம் : ஆணைத்தொடர் அல்லது அல்கோரி தத்திலிருந்து கட்டுப்பாட்டை வேறி டத்திற்கு மாற்றும் இடம்.

expand : விரிவாக்கம் : கோப்பு மே லாண்மையில், விவரக்குறிப்பேட்டு மரத்தில் மறைவான கிளைக் குறிப் பேடுகளைக் காட்டுவதற்கு, தனி யொரு விவரக் குறிப்பேட்டினை யோ, ஒரு விவரக்குறிப்பேட்டு மரத் தின் ஒரு கிளையையோ அல்லது அனைத்துக் கிளைகளையுமோ ஒரே சமயத்தில் விரிவாக்கம் செய்யலாம்.

expandable : விரிவாக்கத்தக்க : கூடுத லான முதன்மை நினைவுப் பதிப்பி

அல்லது வட்டு இயக்கிகள் மூலம் சேமிப்புத் திறம்பாட்டினை அதிகரிக் கக்கூடியவாறு ஒரு கணினியை வடிவமைத்தல்.

expandablility : விரிதிறன் : சாதனங் கள் அல்லது மாடுல்களைச் சேர்த்து கணினியின் செயல்திறனை அதிகரிக் கும் திறன்.

expanded memory : விரிவுபடுத்திய நினைவகம் : AT நுண்கணினிக் குடும் பத்தில், நுண் செயலி மூலம் நேரடி யாக அணுக முடியாதவாறு அமைக் கப்பட்டுள்ள கூடுதல் நினைவகம். மையச் செயலகத்தினால் நேரடியாக அணுகமுடியாதிருக்கிற நினைவக தொகுதிகள். செய்முறைப்படுத்தி யின் முகவரி அமைவிடத்திலுள்ள இடைத் தடுப்புகளுக்குள் அல்லது பக்கச் சட்டங்களுக்குள் மாற்றி வைக்கப்பட்டுள்ள ஒருவகை நினை வக விரிவாக்கம். மரபு நினைவகத் தில் போதிய இடம் இல்லாத போது, தகவல்களை இது இருத்தி வைத்துக்கொள்கிறது.

expanded memory emulator : வரிவு படுத்திய நினைவகம் முன்மாதிரி : 386களுக்கான நினைவகப் பதிப்பி மேலாளர்.

expanded memory manager : விரிவு படுத்திய நினைவக மேலாளர் : விரிவு படுத்திய நினைவகத்தை பயன் படுத்துவதற்குப் பயன்பாட்டுச் செயல் முறையை இயல்விக்கிற செயற் பணிகளை வழங்கும் மென்பொருள் இயக்கி. Lotus - Intel Microsoft Expanded Memory Standard (LIM-EMS) என்ற தர அளவுகளுக்கிணங்க ஒரு சாதன இயக்கி மூலம் மேலாண்மை செய்யப்படும் நினைவகம்.

expanded storage : விரிவுபடுத்திய சேமிப்பகம் : IBM முதன்மைப் பொறி யமைவுகளிலுள்ள துணை நினைவ கம். இதில், தகவல்கள் வழக்கமாக விரிவுபடுத்திய சேமிப்பகத்திலிருந்து மையச்சேமிப்பகத்து (முதன்மை நினைவகம்) 4 K பாளங்களில் மாற்றப்படுகின்றன.

Expanded notation : விரிவாக்கிய குறிமானம்.

expansion bus : விரிவாக்கப் பாட்டை: விரிவாக்கப் பலகைகள் ஒளிப் பேழைக் காட்சி, வட்டு இயக்கி போன்றவை செருகக்கூடிய கொள் கலங்களின் அல்லது வரிப்பள்ளங் களின் ஒரு தொடர்வரிசையைக் கொண்டுள்ள கணினிப் பாட்டை.

expansion card : விரிவாக்க அட்டை: கணினி அமைப்பின் திறனை அதி கரிப்பதற்குக் கூடுதல் சிப்புகள் அல் லது மின்சுற்றுகளை அதில் ஏற்றும் நோக்கத்திற்காக கணினியில் சேர்க் கப்படும் அட்டை.

expansion interface : விரிவாக்க இடை முகம் ; விரிவாக்க இடைவெளி : ஆதார கணினியுடன் வட்டு இயக்கிகள் கூடுதல் நினைவகம் மற்றும் பிற வெளிப்புறப் பொருள்களைச் சேர்க்க உதவும் மின்சுற்று அட்டை.

expansion port : விரிவாக்கத் துளை வாய் : ஒரு கணினியிலுள்ள துணை. இது, கூடுதல் சுற்றுவழிப் பலகை யை அல்லது சாதனத்தை இணைப்ப தற்கு அனுமதிக்கிறது.

expansion slots : விரிவாக்க இடங் கள் : விரிவாக்கத் துளைகள் : ஆதார கணினிக்குக் கூடுதலாக புதிய விரி வாக்க அட்டைகளைச் சேர்க்கப் பயன்படுத்தும் கணினி மின்சுற்று அட்டையின் கூடுதல் இடங்கள். சான் றாக, கணினியின் முதன்மை நினை வகத்துடன் கூடுதல் நினைவக

அட்டைகள் சேர்க்கப்படுதல். எளிமையாக மாற்றங்கள் செய்ய வசதியாக அட்டைகளை வைக்க பெரும்பான்மையான கணினிகளில் விரிவாக்க இடங்கள் உள்ளன.

expansion board : விரிவாக்கப் பலகை: ஒரு விரிவாக்க வரிப்பள்ளத் திற்குள் செருகக்கூடிய அச்சிட்ட மின் சுற்றுப் பலகை.

ஆதரிக்கக்கூடிய செயல்முறை தகவல் ஆதாரத்தை உருவாக்க, இது ஒரு மேம்பாட்டுக்கருவி வடிவத்தை எடுத்துக்கொள்கிறது. தகவல் தளங் கள், சொல் பகுப்பிகள் போன்ற பிற ஆதாரங்களிலிருந்து விதியாதாரத் திற்குச் தகவல்களையேற்றலாம்.

expert support system : வல்லுநர் உதவி அமைப்பு ; வல்லுநர் துணை



விரிவாக்கப் பலகை (Expansion board)

expansion unit : விரிவாக்க அலகு : கூடுதல் அச்சிட்ட மின்சுற்று அட்டை கள் பொருத்தப்படுவதற்காக கூடுதல் பொத்தான்களுடன் கணினியில் இணைக்கப்படும் சாதனம்.

exper logo : 'எக்ஸ்பர்' செயல் முறை மொழி : 'எக்ஸ்பர்' டெலி ஜென்ஸ் என்ற அமைவனம் தயாரித்துள்ள செயல்முறை மொழியின் மெக்கின் டோஷ் பதிப்பு. இது பெரும் பாலான செயல்முறை மொழிப் பதிப்புகளை விட அதிகமான செயற் பணிகளைக் கொண்டது. LISP மொழி போன்றது.

expert shell : நிபுணத்துவப் பொதிவு : நிபுணத்துவப்பொறியமைவில் அல் லது KBS இல் உள்ள விதி ஆதாரத்தை

அமைப்பு : வல்லுநர் அமைப்பு போன்றது. பெரும்பாலும் முடி வெடுக்க உதவும் அமைப்புடன் சேர்த்தே பயன்படுத்தப்படுவது. முறையான விதிகளுக்குப் பதிலாக உணர்ந்தறி காரணிகளை ஆய்ந்து சிக் கல்களைத் தீர்க்க உதவுவது.

expert system : வல்லுநர் அமைப்பு ; நிபுணத்துவப் பொறியமைவு : சிறப் பான சிக்கல் தீர்க்கும் நிபுணத்துவத் துடன் உள்ள மனித/ எந்திர அமைப்புகளை உருவாக்குவதற்கான முறைகளும், தொழில்நுட்பங்களும் செயற்கை நுண்ணறிவின் இந்தப் பகுதியைத் தொடர்வதனால் மனித நிபுணத்துவத்திற்கு முக்கியத்துவ

மும், துறை கருதாத சிக்கல் தீர்க்கும் முறையினைக்குறைப்பதுமானஅறிவு முறை வலியுறுத்தப்படுகிறது. சிக்கல்களைத் தீர்ப்பதற்காக நிபுணருக்கு உதவவும் அவருக்கு பதிலாக செயல்படவும் செய்கிறது.

expert system building tools : நிபுணத்துவப் பொறியமைவுக் கட்டுமானக் கருவிகள் : நிபுணத்துவப் பொறியமைவினை உருவாக்கிப் பேணிவருவதற்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஒரு மென்பொருள்.

expert system expireware : நிபுணத்துவப் பொறியமைவு முடிவுறு மென்பொருள் : தேதி அல்லது பயன்பாடுகளின் எண்ணிக்கை உள்ளுக்குள்ளேயே முடிவுறு தேதியைக் கொண்டுள்ள மென்பொருள்.

explicit address : தெளிவான முகவரி ; வெளிப்படையான முகவரி : மூல மொழி ஆணைத்தொடரில் தெளிவாகச் சொல்லப்பட்ட சேமிப்பகத்தின் முகவரி. Symbolic Address -க்கு எதிர்ச்சொல்.

exploded view : வெடித்த கருத்து ; தெறிப்புத் தோற்றம் : ஒரு முழுமையைப் பகுதிகளாகப் பிரித்து அம்முழுமைக்கும் பிற பகுதிகளுக்கும் உள்ள உறவுகளைக் காட்டும் திட கட்டமைப்பின் வரைபடம்.

exponent : அடுக்குக் குறி ; அடுக்குக் குறிமானம் : 1. ஒரு குறியீடு அல்லது எண்ணின் வலது புற மேற்பகுதியில் எழுதப்படும் குறியீடு. அந்தக் குறியீட்டின்காரணியாக எத்தனை முறை அது பயன்படுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகிறது. 10-ஐ அடிப்படையாகக் கொண்ட எண்ணில் பத்துப் பத்துகள் என்பதைக் குறிப்பிட 10^2 என்று எழுதும் சுருக்க முறை. ஆதார எண்ணைக் காரணியாக்கி எத்தனை முறை பயன்படுத்தப்படுகிறது என்பதை அடுக்குக் குறியீடு குறிப்பிடுகிறது. 2. பதின்மப் புள்ளி எண்முறையில் E என்ற எழுத்தின் மூலம் அடுக்குக் குறியீடு குறிப்பிடப்படுகிறது. 10 E2 என்றால் 10இன் அடுக்குக் குறி 2 என்று பொருள்

exponential notation : அடுக்குக் குறியீடு.

exponential smoothing : அடுக்கு முறை சரியாக்கல் ; அடுக்குமுறை சீர்மையாக்கம் : தர மதிப்பு இட்டு நகரும் சராசரி முறையில் வருவது உரைத்தல். இம்முறையில் முந்தைய கூற்றுகளை வயதின் அடிப்படையில் கழித்தல். அண்மை தகவல்களுக்கு அதிக மதிப்பு கொடுக்கப்படும். அவற்றை வயதின் அடுக்கு முறை பணியின் மூலம் தகவல்கள் தர மதிப்பிடுவதால் இந்த சரியாக் கலை அடுக்கு முறை சரியாக்கல் என்று கூறப்படுகிறது.

exponentiation : அடுக்குமுறையாக்கல் ; அடுக்குப்பெருக்கல் ; அடுக்கேற்றம் : ஒரு எண்ணின் அடுக்கை பயன்படுத்துபவர் கணக்கிட்டுச் சொல்ல உதவும் செயல்முறை அல்லது பணி. எடுத்துக்காட்டாக 9 என்ற எண்ணை 5 முறை அதன் பெருக்குத் தொகையாலேயே பெருக்குவதற்குப் பதிலாக ஒரே தடவையில் கணக்கிடுதல்.

export : ஏற்றுமதி : ஒரு தகவல் தள அமைப்புக்காக மற்ற ஆணைத் தொடர்களில் பயன்படுத்தக்கூடிய வகையில் தகவல்களை எழுதுதல் (பொதுவாக வட்டு கோப்பில்). பல தகவல் தள செயல்வரைவாளர்கள் தங்கள் தகவல்களை ஏதாவது ஒரு குறியீட்டு வடிவத்தில் அமைப்பார்கள். ஆனால், சாதாரண சொல் தொகுப்பில் படிக்கக்கூடிய வகை

யில், அஸ்கி கோப்புகளுக்கு ஏற்று மதி செய்யும் வகையில் உருவாக்கு வார்கள்.

expression : சொற்றொடர் ;கோவை ; வெளிப்பாடு ; எண்ணுருக் கோவை ; தொனிபாவக்குறிகள் : செயற்பாட்டுக் குறியீடுகள், மாறியல் மதிப்புருக்கள் இவற்றின் இணைப்புகள் ஆகியவற்றைக் கொண்ட எண்களைக் குறிக்கும் பொதுச் சொல். செயல்முறைப்படுத்துவதில் தகவல்களையும் செய்முறைப்படுத்துதலையும் விவரிக்கும் ஒரு கட்டளைத் தொடர்.

extended addressing : நீட்டிப்பு முகவரியாக்கம் : நினைவகத்தில் பல இடங்களை எட்டக் கூடிய முகவரிக் குறியீடு. இதற்கு, நினைவகத்தில் தகவல்களின் இடத்தைக் கண்டறிய ஒன்றுக்கு மேற்பட்ட எட்டியல் தேவை.

extended board : நீட்டிப்பு அட்டை ; நீட்டிப்புப் பலகை : மின்சுற்று அட்டைகளை வசதியாகக் கண் காணிக்க உதவும் பிழைநீக்குச் சாதனம்.

extended maintenance : நீட்டிப்புப் படுத்திய பேணுகை : அடிப்படைப் பேணுகைக் கால அளவுக்குக் கூடுதலான கால அளவுகளுக்கு வேண்டப்படும் நேரடி அழைப்புப் பணியம்.

extended memory : நீட்டிப்பு நினைவகம் : 1 MB-க்கு மேற்பட்ட நினைவகம். இதனை 24 மற்றும் 32 துண்மி நுண் செய்முறைப்படுத்திகளினால் அணுகலாம். இன்டெல் - 286- களுக்கும் அதற்கு மேற்பட்டும், ஒரு மீமிகு எட்டியலுக்கு மேற்பட்ட செந்நிற நினைவகம். RAM வட்டுகளுக்கும், வட்டுப்பொதிவுகளுக்கும், DOS விரிவாக்கிகளைப் பயன்படுத்தும் பயன்பாடுகளுக்கும் இது உதவுகிறது.

extended partition : நீட்டிப்பு ; பிரிவினை : தனியொரு இயற்பியல் சாதனத்தைப் பிரிவினை செய்தல். எடுத்துக்காட்டு: ஒரு நிலைவட்டினை பல்வேறு தருக்கமுறைப் பகுதிகளாகப் பகுத்தல்.

extensible language : விரிவாக்கக் கூடிய மொழி ; நீட்டிப்பு மொழி : ஒரு ஆணைத்தொடர் மொழியில் இருப்பதை மாற்றும் புதிய தன்மைகளைப் பயனாளர் சேர்க்கின்ற கோட்பாடு.

extension : நீட்சி ; நீட்டிப்பு : வழக்கமான தர அமைப்பில் உள்ளதற்கு மேலாக கணினி அமைப்பிலோ அல்லது ஆணைத்தொடர் மொழியிலோ சேர்க்கப்படும் கூடுதல் தன்மை.

extension name : நீட்சிப் பெயர்.

extent : அளவு : ஒரு துணை சேமிப் பகத்தில் தொடர்ச்சியாக உள்ள பருப் பொருள் பதிவுகளின் தொகுதி.

external buffer : புற இடைநிலை நினைவகம்: ஒரு கணினிக்கும் மற்றொரு சாதனத்திற்குமிடையே செல்லும் தகவல்களுக்கான ஒரு தற்காலிக தகவல் சேமிப்புப் பகுதி.

external access protection : புற அணுகல் பாதுகாப்பு .

external command : புறநிலை ஆணை; புறக்கட்டளை : வட்டில் சேமித்து வைக்கப்பட்டுள்ள உள்முக நினைவகத்தில் (RAM) நிரந்தரமாக ஏற்றி வைக்கப்பட்டிராத ஒரு தனி வகைக் கோப்பினை நிறைவேற்றுவதன் மூலம் இயக்குகிற ஒரு DOS ஆணை.

external data file : வெளிப்புற தகவல் கோப்பு ; புறத் தகவல் கோப்பு : செயலாக்கம் செய்யும் ஆணைத்தொடரிலிருந்து தனியாக சேமிக்கப்படும் தகவல்கள்.

external device : புறநிலைச் சாதனம் : ஒரு கணினியின் உள்ளிணைந்த அங்கமாக அமைந்திராமல், கம்பி வடச் செயல்முறை மூலம் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு சாதனம்.

external interrupt : புறநிலை இடையீடு அல்லது குறுக்கீடு : கணினி இயக்கி, புறநிலை உணர்வி, கண் காணிப்புச் சாதனம், மற்றொரு கணினி போன்ற புறநிலை ஆதாரத்தின் மூலம் உண்டாகும் இடையீடு.

external label : வெளிப்புற அடையாளச் சீட்டு : ஒரு கோப்பு ஊடகத்துக்கு வெளியே அந்த கோப்பை அடையாளம் காண இணைக்கப்படும் அடையாளச் சீட்டு.
காந்த மின்வட்டு அல்லது நாடாவைத்துள்ள உறையில் இணைக்கப்படும் காகிதச் சீட்டு அல்லது ஒட்டி.

external memory : வெளி நினைவகம் ; புற நினைவகம்.

external modem : புறநிலை மோடெம்: ஒரு கணினியின் தொடர்வழிப் புழையுடன் இணைக்கப்படக்கூடிய 'மோடெம்'. இது, ஒரு சுவர் வெளிவாயில் மூலம் தனது விசையைப் பெறுகிறது. இது, 'உள்முக மோடெம்' என்பதிலிருந்து வேறுபட்டது.

external reference : வெளிப்புற குறிப்பு ; புற மேற்கோள் : ஒரு குறியீட்டை வேறு ஒரு வழக்கச் செயலில் வரையறுத்துள்ள குறிப்பு.

external report : புறநிலை அறிக்கை : ஏற்கனவே அச்சிடப்பட்ட வடிவத்தில் அல்லது வேறு வடிவில் அரசாங்கத்திற்கோ அல்லது வாடிக்கையாளர்களுக்கோ விநியோகிப்பதற்காக, ஒரு நிறுவனத்திற்கு வெளியில் பயன்படுத்த உருவாக்கப்படும் அறிக்கை.

external routine : புறநிலை வாலாயம் : 'பாஸ்கல்' செயல் முறைப்படுத்தும் மொழியில், செயல்முறைக்கு வெளியிலிருந்து வாலாயத்தை வரையறுப்பதற்கு வரவழைக்கக்கூடிய ஒரு நடைமுறை அல்லது செயற்பணி.

external scheme : புறநிலைத் திட்டம் : ஒரு குறிப்பிட்ட பயனாளரின் தகவல் தள நோக்கின் வரம்பெல்லை தொடர்பான ஒரு தகவல் தளத் துணைத் திட்டம்.

external sort : புறநிலைப் பிரிப்பு : பன்னோக்கு பிரிப்பு ஆணைத் தொடரில் இரண்டாம் நிலை. தகவல்களின் சரங்களை வரிசையாக ஒன்று சேர்த்து ஒரே சரமாக ஆகுமாறு செய்தல்.

external storage : புறநிலைச் சேமிப்பகம் : துணை சேமிப்பகம் போன்றது.

external symbol : புறநிலைக் குறியீடு : 1. கட்டுப்பாடு பிரிவின் பெயர். நுழைவு இடத்தின் பெயர் அல்லது வெளிப்புறக் குறிப்பு. 2. வெளிப்புறக் குறியீடு அகரமுதலியில் உள்ள குறியீடு.

external symbol dictionary : புறநிலைக் குறியீட்டு அகரமுதலி : ஒரு ஆணைத் தொடரில் உள்ள புறநிலைக் குறியீடுகளை அடையாளம் காணுதல் தொடர்பான கட்டுப்பாட்டு தகவல்.

extract : வெளியே எடு : ஒரு வடிகட்டி அல்லது மேற்பகுதி மூடிவு செய்யும் ஒரு கணினி கோப்பில் இருந்து குறிப்பிட்ட தகவலை வெளியே எடுத்தல்.

F

F : எஃப் : 'Frequency' என்பதன் சுருக்கம். இது அலைவெண் அல்லது அதிர்வெண் குறியீடாகும்.

fabricated language : உருவாக்கப் பட்ட மொழி ; புனைவு மொழி : சங்கேத மொழி போன்றது.

fabrication : உருவாக்கம் ; புனைவு : விரும்பும் விதிமுறைகளுக்கேற்ப பொருள்களை உற்பத்தி செய்யும் செயல்முறை.

face : முகம் ; முகப்பு : கணினி வரை கலைகளில், கூம்பு அல்லது பிரமிட் போன்ற பன்முக வடிவப்பொருள். பல பக்கங்கள் சேர்ந்து உருவாகும் இத்திடப்பொருள் 'திடப்பொருளின் முகங்கள்' என்று அழைக்கப்படும். சான்றாக, ஒரு கூம்புக்கு ஆறு முகங்கள்.

FACE : ஃபேஸ் : 'Field Alterable Control Element' என்பதன் குறும்பெயர்.

facilities : வசதிகள் : கணினி மற்றும் தகவல் தொடர்பு மையங்களில் பயன்படுத்தப்படும் பருப்பொருள் கருவிகள், மின்சக்தி, தகவல் தொடர்புக் கம்பிகள், மற்றும் பிற வகை யறாக்களைக் குறிப்பிடும் பொது வான தொடர்.

facilities management : வசதிகள் மேலாண்மை : ஒரு தகவல் செயலாக்க அமைப்பினை மேற்பார்வையிட்டு இயக்க, ஒரு தனிப்பட்ட சேவை நிறுவனத்தைப் பயன்படுத்தல்.

facility : வசதி : 1. கணினி அமைப்பின் உற்பத்தித்திறனை முடிவு செய்ய கணினியை எளிதாகப் பயன்படுத்த முடிவதை ஒரு அளவுகோலாக எடுத் துக்கொள்ளுதல். 2. இரண்டு முனை களுக்கிடையில் மின்சாரப் பரிமாற லுக்கான வழித் தடம்.

facing pages : எதிர்ப் பக்கங்கள் : ஒரு கட்டுமானம் செய்யப்பட்ட ஆவணத் தில், ஆவணத்தைத் திறக்கும்போது ஒன்றையொன்று எதிர்நோக்கியவாறு உள்ள இரு பக்கங்கள். இரட்டை எண்ணுடைய பக்கம் இடப்பக்கத் திலும், ஒற்றை எண் பக்கம் வலப் புறத்திலும் இருக்கும்.

facsimile : தொலைநகலி : 1. படங் கள், நிலப்படங்கள், வரைபடங்கள் ஆகியவற்றை அனுப்புதல். உருக் களை அனுப்பும் கருவி மாற்றி அனுப்ப, அவற்றைப் பெறும் நிலை யத்தில் மீண்டும் உருவாக்கி ஒரு வகையான காகிதத்தில் நகலெடுத் தல். தொலை நகலெடுத்தல் என்றும் அழைக்கப்படும். 2. மூல வண் ணத்தை உள்ளது உள்ளபடி நகலெ டுத்தல். 3. உண்மை நகல் மறு ஆக் கம். Fax என்று சுருக்கி அழைக்கப் படுகிறது.

facsimile transceiver : தொலை நகல் போக்கு வருவி : உருவங்களை மின் னணு அனுப்பு முறையில் அனுப்ப வும் பெறவும் பயன்படுத்தும் அலகு.

factor : காரணி : கணித முறைப்படி செயற்படக்கூடிய ஒரு தகவல் கூறு அல்லது மாறுவகை மதிப்புரு.

factor analysis : காரணி ஆய்வு : முக்கியத்துவத்தின் தன்மையையும், மிக முக்கிய காரணிகளையும் முடிவு செய்ய பல காரணிகளின் இடைச் செயலை ஆய்வு செய்யும் கணிதத் தொழில்நுட்பம்.

factorial : படிவரிசைப் பெருக்கப் பேரெண் : 1-லிருந்து குறிப்பிட்ட எண் ணுக்கு எல்லா முழுஎண்களையும் (Integer) பெருக்குவதன் மூலம் கணித்து காரணிகளை உருவாக்கு தல். காரணியத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. சான்றாக 41 என்பது 1 x 2 x 3 x 4 -க்கு சமமானது ;

n1 என்பது 1 x 2 x 3 x 4 x .... (n - 1) x n -க்குச் சமமானது.

facts : பொருண்மைகள் : சிறிய /நடுத் தர வணிகத்திற்கு வசதிகள் (பொதுப் பேரேடு, வரவுக்கணக்குகள், செலுத் தக் கணக்குகள்) உடைய நிதியியல் கணக்கீட்டுப் பொறியமைவு.

fail - safe system : பழுது தடுப்பு அமைப்பு : பெரும் சேதம் ஏற்படு வதைத் தடுக்க உருவாக்கப்படும் அமைப்பு. இதனால் சில வசதிக் குறைவும் ஏற்படலாம். சான்றாக, கணினி கட்டுப்பாட்டு சாலை விளக்கு அமைப்பில், ஒரு தவறு ஏற்பட்டால், விளக்குகளை நிறுத்துவதற்குப் பதி லாக, பழுது தடுப்பு அமைப்பின்படி, சாலை விளக்குகள் யாவும் சிகப்பு நிறத்தைக் காட்டும். மின்சக்தி நிலைய இயக்கத்தில், வெப்பம் அள வுக்கதிகமாகும்போது மின் வழங்கு தல் துண்டிக்கப்படும்.

fail - soft system : பழுதாயினும் பணி யாற்றும் அமைப்பு : ஒரு கணினி அமைப்பின் சில பகுதிகள் மட்டும் செயல்படவில்லையென்றாலும் தக வல் செயலாக்கம் தொடரும் அமைப்பு. வழக்கமாக, அதைத் தொடர்ந்து செயல்திறனும் சீர்கேடு அடையும். பழுது தடுப்பு அமைப் பில் சொல்லப்பட்ட அதே எடுத்துக் காட்டைப் பயன்படுத்திக் கூறுவ தென்றால் கோளாறு ஏற்படும் போது சாலை விளக்குகள் மஞ்சள் ஒளி வீசும், வெப்பம் அதிகமாகும்போது இந்த அமைப்பின்படி, மின் சக்தி வரும் ஆரம்ப பகுதியை நிறுத்தி விட்டு, அவசர சாதனமாகிய மாற்று மின்கலம் மூலம் மின்சக்தி வழங்கு வது தொடரும்.

failure prediction : பழுது முன்னறி வித்தல் : குறிப்பிட்ட துணை பாகங் கள் அல்லது கருவிகள் பழுதடையப் போவதை முன்னதாகவே மதிப் பிட்டு அவற்றை நீக்கி வேறு ஒன்றை அந்த இடத்தில் பொருத்தி பழுது ஏற்படும் முன்பு சரி செய்து முடித்தல்.

Fairchild : ஃபேர்சைல்ட் : 1974இல் F-8 என்ற நுண்சிப்புவினை உருவாக்கிய ஒரு நிறுவனம். அந்தச் சமயத்தில் இந்தச் சிப்பு பெருமளவில் விற் பனையாகியது.

fairness : உறுதி ; நயமை : ஒரு குறிப் பிட்ட காலத்துக்குப்பின் ஒரு கணினி அமைப்பில் தேவைப்படும் அனைத் துச் செயல்களும் உத்திரவாதமளிக் கப்படும் நிலை.

fair pointer : நடுநிலைச் சுட்டுமுள் : இன்டெல் 80 x 86 கூறிடப்பட்ட முக வரி எண்ணில், கூறு, மாற்றச்சு இரண் டையும் உள்ளடக்கியுள்ள ஒரு நினை வக முகவரி எண்.

falcon : ஃபால்க்கன் : சேமித்து வைக் கப்பட்ட செயல்முறை நினைவுப் பதிப்பானாக அல்லது தறியாகச் செயற்படும் காகித நாடா.

fall back : சார்ந்து நிற்றல் : அவசர சூழ் நிலையில் மாற்று ஏற்பாட்டைப் பயன்படுத்துதல். காலமுறை அமைப்பில் கோளாறு கண்டு பிடிக்கப்பட்டால், மாற்று ஆணைத் தொடர், தகவல் தளம் உடனடியாக செயல்படுத்தப்படல்.

fallout : விழுந்துவிடல் ; சிதறல் : மின் னணு பாகங்கள் பழுது அடைதல். புதிய கருவியை எரியவைக்கும் போது சில சமயங்களில் இது ஏற்படு கிறது.

family of computers : கணினிக் குடும்பம் : ஒரு அளவை முறை வடி வமைப்பில் உள்ள வேகம் மற்றும்

முதன்மை நினைவகத் திறன்களில் மட்டும் மாறுபடுகிற மையச் செயலக அலகுகளின் தொடர். குறைந்த செலவுள்ள மெதுவாகச் செல்லும் மையச் செயலகத்தில் இருந்து துவங்கி கணினி அமைப்பின் மற்ற பகுதிகளை மாற்றாமல் வேகமாக இயங்கும் மையச் செயலகங்களை மட்டும் வேலைப்பளுவிற்கேற்ப மாற்றிக் கொள்ளுதல்.

FAMOS : ஃபமாஸ் : Floating Gate Avalanche injection-MOS என்பதன் சுருக்கம். PROM போன்ற மின்சக்தி மூலம் சேமிப்பகச் சாதனங்களை உருவாக்கும் தொழில் நுட்பம்.

fanfold paper : விசிறி மடிப்புத் தாள் : ஒவ்வொரு பக்கத்தையும் குறிக்க விசிறி போன்று மடித்து, தொடர்ந்து இடைவெளிகளில் துளைகள் இடப்பட்ட ஒரு நீண்ட தொடர் காகிதத் தாள்.

fan - in : உள்வீச்சு : ஒரு இலக்கமுறை உறுப்புக்கு உள்ளீடு செய்யப்படும் சமிக்ஞைகள்.

fan - out : வெளிவீச்சு : 1. மோசமான நிலையிலும், டீடீஎல் (TTL) சாதன வெளியீடு ஏற்றக்கூடிய டீடீஎல் அலகுகள். 2. ஒரு வடிவமைக்கப்பட்ட ஆணைத் தொடரில் ஒரு குறிப்பிட்ட மாடுலின் கீழ் அமைக்கப்படும் ஆணைத் தொடர் கூறுகளின் (Modules) எண்ணிக்கை.

farad : ஃபராடு : தாங்கும் தன்மை அளவின் அலகு. 1 வோல்ட் திறன் அதனுள் அனுப்பப்படும்போது 1 கூலும் மின் ஆற்றல் அலகு சக்தியை அது சேமிக்குமானால் ஒரு தாங்கியின் தாங்கும் திறன் 1 ஃபராட் என்று மதிப்பிடப்படுகிறது.

FAST : ஃபாஸ்ட் : "மென்பொருள் திருட்டு எதிர்ப்பு கூட்டமைப்பி" என்று பொருள்படும் "Federation Against Software Theft" என்பதன் தலைப் பெழுத்துச்சுருக்கம். இது ஓர் அமெரிக்க மென்பொருள் தொழிற் கழகம். இது கோப்புகளை மிக விரைவாக அனுப்புவதற்கு உதவுகிறது. கோப்பு முழுவதும் அனுப்பப்பட்டதும் பிழைதிருத்தம் நடை பெறுகிறது.

fast core : விரைவு உள்ளமையம் : ஒரே செய்முறைப்படுத்தியில் செயல்முறைச் சேமிப்பகத்துக்குப் பயன்படுத்தப்படும் சாதனங்களைவிடக் குறைந்த அணுகு நேரம் கொண்ட ஒருவகை உள்மையச் சேமிப்பகம்.

fast fourier transform : விரைவு "ஃபூரியர்" உருமாற்றி : சிக்கலான குறியீடுகளை அடிப்படை அமைப்பான்களாகப் பகுக்கக்கூடிய இலக்கமுறைக் குறியீட்டுச் செய்முறைப் படுத்துதலில் பயன்படுத்தப்படும் ஒரு படிநிலை நடைமுறை.

fast line : விரைவு அனுப்பீட்டுத் தொடர்பு : தகவல்களை அனுப்பீடு செய்யும் வீதம் பெரும்பாலும் 'பாட்' (Baud) என்ற அலகுகளில் குறிப்பிடப்படுகிது. 'பிரஸ்டெல்' முறையில் பயன்படுத்துபவருக்கு 1,200 பாட் வேகத்தில் அனுப்பீடு செய்யப்படுகிறது. ஆனால், தொலைபேசித் தொடர்புகளில் அதைவிட அதிக வேகத்தில் தகவல்கள் இழுக்கப்படுகின்றன. "பிரிட்டிஷ் டெலிகாம்" என்ற அமைவனம் தயாரித்துள்ள தனிவகை நேரடித் தொடர்புகள், தகவல்களை 48,000 அல்லது 96,000 பாட் வேகத்தில் அனுப்ப வல்லவை. இவை விரைவு அனுப்பீட்டுத் தொடர்புகள் என அழைக்கப்படுகின்றன.

fastCAD : ஃபாஸ்ட் கேட் : நன்கு வடிவமைக்கப்பட்ட பயனாளர் இடை

முகப்பு தயாரிப்பில் புகழ் பெற்ற "எவலூஷன் கம்ப்யூட்டர்ஸ்" என்ற அமைவனம் தயாரிக்கும் முழு அம்சங்களையும் கொண்ட PC CAD செயல்முறை. இதற்கு ஒரு கணித இணைச் செய்முறைப்படுத்தி தேவை.

FAT : ஃபேட் : "கோப்பு ஒதுக்கீட்டு அட்டவணை" என்று பொருள்படும் "File Allocation Table" என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

fatal error : முடிவான பிழை : ஒரு ஆணைத்தொடர் இயக்கப்படும் போது ஏற்படும் எதிர்பாராத பழுது அல்லது பிற சிக்கல்களினால் கணினியானது தொடர்ந்து செயல்பட முடியாமல் போவது. முடிவான பிழை இல்லை எனில் சரியான முறையில் இல்லையென்றாலும் ஆணைத் தொடர் சென்று கொண்டிருக்கும். ஆணைத்தொடர் நின்று போகுமாறு செய்கின்ற ஒரு இயக்காளரின் தவறு அல்லது "ராம்" நினைவகத்தில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்கள் அழிந்து போதல் போன்றவை முடிவான பிழைகளாகும்.

Terminal Error என்றும் அழைக்கப்படுகிறது.

fat bits : பருமனான துண்மிகள் : தனிப்பட்ட திரை உறுப்புகளை மாற்றும் வகையில் திரையின் ஒரு பகுதியைப் பெரிதாக ஆக்குகிறது. வண்ணமிடும் ஓவிய ஆணைத்தொடரின் தேர்ந்தெடுக்கும் முறை. எழுத்து அமைப்பு உருவாக்குவதில் பயனுள்ளது.

father file : 'தந்தை கோப்பு' : மூலப் பதிவேட்டின் ஒரு நகலையும் வைத்துக்கொண்டு திருத்தப்பட்ட பதிப்பையும் தருகின்ற வகையில் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் அமைப்பு. ஒரு கோப்பினைப் புதுப்பிக்கும் பணி நடைபெறும்போது பழைய மூல கோப்பை 'தந்தை கோப்பு' என்கிறோம். தந்தை கோப்பை உருவாக்கும் கோப்பு 'தாத்தா கோப்பு'. வட்டு அல்லது நாடா போன்ற மின்காந்த ஊடகத்தில் வைக்கப்பட்டுள்ள கோப்புகளுக்கு இத்தொழில்நுட்பம் மிகவும் பொருத்தமானது.

fault : கோளாறு ; பழுது : வடிவமைக்கப்பட்ட விதிமுறைகளின்படி செயல்பட முடியாமல் தடுக்கும் நிலை. பிரிந்தகம் அல்லது அரை மின்சுற்று போன்றவை ஒரு துணை பாகத்திலோ, கணினியிலோ அல்லது வெளிப்புற உறுப்பிலோ செயல்பட முடியாமையை ஏற்படுத்தல்.

Error and Mistake என்பதற்கு எதிர்ச் சொல்.

fault tolerance : பழுது தாங்கு திறன் : வன்பொருள் அல்லது மென்பொருள் கோளாறுகள் இருந்தபோதும் வடிவமைப்பு விதிமுறைகளின்படி ஒரு கணினி அமைப்பு தன் பணிகளைச் செய்யும் திறன். கோளாறின் போது இயங்கி அதே வேளையில் சரிவர செயல்படவில்லையென்றால் பாதி அல்லது ஓரளவு கோளாறு தாங்கும் திறனுடையது என்று சொல்லலாம். கூடுதல் வன்பொருள், மென்பொருள் அல்லது இந்த இரண்டின் இணைப்பின் மூலம் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படுகிறது.

fault-tolerant computer systems : பழுது சகிப்புக் கணினிப் பொறியமைவு : பன்முக மையச் செய்முறைப்படுத்தி, பொறியமைவு மென்பொருள் ஆகியவையுடைய கணினிகள். இவை, ஒரு முக்கியமான வன்பொருள் அல்லது மென்பொருள் செயலிழந்தாலுங்கூட செயற்பாடு

கள் தொடர்ந்து நடைபெறுமாறு செய்கின்றன.

FAX : ஃபேக்ஸ் ; தொலைநகலி : *1.* ஃபேக்சிமிலி (Facsimile) என்ற சொல்லின் பேச்சு வழக்கு. *2.* ஒரு பொதுவான எடுத்துச் செல்லும் கட்டமைப்பின் மூலம் படங்களை ஒரு இடத்திலிருந்து வேறிடத்திற்கு அனுப்ப வசதியளிக்கும் கருவி.

fax board : தொலைநகலிப் பலகை : ஒரு விரிவாக்கப் பலகையிலுள்ள தொலைநகலி அனுப்பீடு. இது, வட்டுக்கோப்புகளிலிருந்து அல்லது திரையிலிருந்து தொலைநகலி குறியீடுகளை நேரடியாக உண்டாக்கும் மென்பொருள்களைப் பயன்படுத்திக் கொள்கிறது. மேலும், தனது உருக்காட்சியை நுண்ணாய்வு மூலம் பெறுகிற ஒரு தொலைநகலி எந்திரத்தை விடச் செறிவான உருக்காட்சியை அனுப்புகிறது. வந்து சேரும் தொலைநகல், கணினியின் அச்சடிப்பானில் அச்சடிக்கப்படுகிறது.

fax switch : தொலைநகல் விசை : ஒரு தொலை நகல் குறியீட்டுக்காக ஒரு தொலைபேசிக் கம்பியினை சோதனை செய்து, தொலைநகல் எந்திரத்துக்கு அழைப்பினைச் செலுத்துகிற சாதனம். ஒரு தொலைநகல் எந்திரம் ஓர் எண்ணைச் சுழற்றி', அதற்கு அந்த இணைப்பு பதிலளிக்கும்போது, அது தன்னை அடையாளங் காட்டுவதற்கு ஒரு தொனியை வெளிப்படுத்துகிறது. சில சாதனங்களில், குரல் தொலை நகல் தகவல் வகையைக் கையாள்கின்றன. இதனை மாற்றுவதற்கு ஒரு விரிவாக்க எண்ணில் விசை இயக்கம் தேவைப்படும்.

fax machine : தொலைநகல் எந்திரம் : தொலைபேசிக் கம்பிகளைப் பயன்படுத்தி மின்னணுவியல் செய்தித் தொடர்புகள் மூலமாக வாசகங்களையும், வரைகலைகளையும், உருக்காட்சிகளையும் அனுப்புவதற்கான ஓர் எந்திரம்.



தொலைநகல் எந்திரம் (Fax machine)

FCB : எஃப்சிபி : ''கோப்புக் கட்டுப்பாட்டுத் தொகுதி'' என்று பொருள்படும் "File Control Block" என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

FCC : எஃப்சிசி : Federal Communications Commission என்பதன் சுருக்கம். அமெரிக்க அரசின் நிறுவனமாகிய இது மாநிலங்களுக்கிடையிலான தகவல் தொடர்புகளையும், பொதுத் தகவல் போக்குவரத்து வழித்தடங்களையும், ஒலிபரப்பு ஊடகங்களையும் (Media) ஒழுங்குபடுத்தும் பொறுப்பேற்றுள்ளது.

FE : எஃப் இ : Field Engineer என்பதன் குறும்பெயர்.

fax/modem : தொலைநகலி /மோடெம்: ஒரு புறநிலை அலகாக அல்லது தகவல் மோடெமாக இருக்கக் கூடிய



தொலைநகலி மோடெம் (Fax modem)

தொலைநகல் தகவல் மோடெம் இரண்டின் இணைப்பு. இதில், அழைப்பினை தொலைநகலிக்கு அல்லது தகவல் மோடெமுக்கு வழிச் செலுத்துகிற ஒரு தொலைநகல் செய்தி விசையினை உள்ளடக்கி யிருக்கிறது.

feasibility study : சாத்தியக் கூறு; இயலுமை ஆய்வு : மாற்றுத் தீர்வுகள், செயல்முறை பரிந்துரைகள், செயல் திட்டத்துடன் ஒரு தகவல் செயலாக் கச் சிக்கலை வரையறுத்து கணினி அமைப்பை வடிவமைத்து நிறுவுவது பற்றிய ஆய்வு.

'Preliminary Study', 'Systems Study' என்றும் அழைக்கப்படுகிறது.

feathering : இறகிணைப்பு : ஒரு பக்கத்தில் அல்லது பத்தியிலுள்ள ஒவ்வொரு கோட்டுக்கிடையிலும் செங்குத்து வரிச்சரியமைவினை ஏற் படுத்துவதற்காகச் சரிநிகரான இடை வெளியைச் சேர்த்தல்.

feature : தன்மை ; பண்புக்கூறு : ஒரு சொல்பகுப்பி ஆணைத்தொடரில் வலது பக்க இடைவெளி அமைப் பது போன்று ஒரு ஆணைத்தொடரில் அல்லது வன்பொருளில் சிறப்பாக ஏதாவது செய்தல்.

feature extraction : தன்மை கண்டறி தல்; பண்புக்கூறறிதல்: அமைப்புகண் டறிதலுக்காக மேலோங்கும் தன்மை கள் தேர்ந்தெடுத்தல். கணினி கட்டுப்பாடு ஒளிப்படக் கருவி யில் (வீடியோ) வடிவங்கள் மற்றும் முனைகள் போன்ற தன்மைகளைக் கொண்டு பொருள்களை அறியும் திறன்.

Federal Privacy Act : ஐக்கிய தனிமைச் சட்டம் : அரசாங்க அமைப்புகள் மற்றும் ஒப் பந்தக்காரர்கள் தனிநபர் பற்றிய இரக சியக் கோப்புகளை வைத்திருப் பதைத் தடுக்கும் ஐக்கியச் சட்டம். அனைத்து அரசாங்க அமைப்புகளி லும் அவர்களது ஒப்பந்தக்காரர்களி டம் தங்களைப் பற்றிய எத்தகைய தகவல், கோப்பில் உள்ளது என்று தனி நபர்கள் அறிந்து கொள்ள இது அனுமதியளிக்கிறது.

Private Act of 1974 என்றும் அறியப் படுகிறது.

feed : செலுத்து : காகித அல்லது மின் காந்த நாடா, வரி அச்சுப்பொறி காகிதம் அல்லது அச்சுப்பொறி நாடா போன்ற நீளமான பொருள்கள் இயக் கப்படும் நிலைக்கு நகர்த்துகின்ற எந்திரச் செயல்முறை.

feedback : பதில்பெறுதல்; நிலையறி தல் : 1. ஒரு செயலாக்கத்தில் உண்மை நிலையை அளந்து அதை மாற்றக் கூடிய உள்ளீடு அனுப்பும் செயலை கட்டுப்பாட்டு அமைப்பு செய்ய வகைசெய்யும் தானியங்கிக் கட்டுப் பாட்டு முறைகள். 2. தகவல் செய லாக்கத்தில், செயலாக்கத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையில் உருவாகும் தகவல், அடுத்துவரும் தகவல் செய லாக்கத்தைப் பாதிக்கும் வகையில் பதில்பெறக்கூடும். சான்றாக சேமிப்

பகம் நிரம்பிவிட்டது என்ற பதில் பெற்றால் மேலும் தகவல்களை ஏற்றுக்கொள்வதைத் தாமதப்படுத்தலாம் அல்லது வேறு சேமிப்பகத்துக்கு அனுப்பலாம். 3. வரிசை முறை செயல் வெளியீடு அடுத்து வரும் செயலை மாற்றுகின்ற செயலாக்க முறை.

feedback circuit : நிலையறியும் மின் சுற்று : ஒரு மின்னணு மின்சுற்று அல்லது கட்டுப்பாட்டு அமைப்பின் வெளியீட்டுச் சமிக்ஞைகளில் ஒரு பகுதியை அந்த அமைப்பு அல்லது மின்சுற்றின் உள்ளீட்டுப்பகுதிக்கு அனுப்புகின்ற மின்சுற்று.

feed holes : செலுத்து துளைகள் : ஸ்ப்ராக்கெட் சக்கரத்தில் செலுத்த வசதியாக காகித நாடாவில் இடப்படும் துளைகள்.

feep : ஃபீப் : பயன்படுத்துபவரின் கவனத்தை இழுக்க முகப்புகள் செய்யும். 'பீப்' பின் மற்றொரு பெயர்.

Felt Dorr : ஃபெல்ட் டார் : பரிசோதனை முறையில் 1885இல் ஒரு பன்முறை விசை இயக்கும் கணக்கிடும் எந்திரத்தை உருவாக்கினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், காம்ப்டோ மீட்டர் என்னும் பயன்படுத்தக்கூடிய காட்டும், பட்டியலிடும் எந்திரத்தை உருவாக்கினார்.

femto : ஃபெம்ட்டோ : மில்லியனில் அல்லது ஒரு குவாட்ரில்லியனில் ஒரு பகுதி என்பதன் முன்சொல், 10^{-5}.

femtosecond : ஃபெம்ட்டோ நொடி : ஒரு நொடியின் குவாட்ரில்லியனில் ஒன்று. 30 மில்லியன் ஆண்டுகளுக்கு எத்தனை நொடிகள் உண்டோ அத்தனை ஒரு நொடிக்கும் உண்டு. 1 -ஐ அடுத்து வரும் 15 பூஜ்யங்கள். 1,000,000,000,000,000. இரண்டு நொடிகளில் ஒளி பூமியில் இருந்து நிலவைக் கடந்து செல்கிறது. 12 ஃபெம்ட்டோ நொடிகளில், அது ஐந்து மைக்ரான்கள் மட்டுமே நகர்கிறது. ஒரு மனித முடியின் அகலத்தில் பத்தில் ஒரு பங்கு. FS என்று சுருக்கி அழைக்கப்படுகிறது.

female connector : துளை இணைப்பி : இணைப்பி சாதனத்தில் வேறொரு பகுதி சேரக்கூடிய எஞ்சியுள்ள பகுதி. Male connector-க்கு எதிர்ச் சொல்.

துளை இணைப்பி (Femal connector)

ferric oxide (F₂O3) : அய ஆக்சைடு (F₂O3) : மின்காந்த வட்டுகளிலும் நாடாக்களிலுமுள்ள பூச்சுகளில் பயன்படுத்தப்படும் இரும்பின் ஆக்சிகரணி.

ferric core : அய உட்புரி : வளைய வடிவிலுள்ள காந்தத் துண்டு. இது ஓர் ஊசித்தலையின் அளவுக்கு அல்லது அதற்குச் சிறிதாக இருக்கும். ஒரு இரும்புச் சலாகைக்கு வடமுனை-தென்முனை அல்லது தென்முனை-வடமுனை என்று காந்தமேற்றுதல் போன்று ஒரு வளையத்திற்கும் வலஞ்சுழியாக அல்லது இடஞ்சுழியாகக் காந்தமேற்றலாம். இது ஈரிலக்க '0'-களையும் '1' - களையும் சேமித்து வைக்க உதவுகிறது. ஒரு கணினியின் உள்மையச் சேமிப்

பியை உருவாக்குவதற்கு இத்தகைய உட்புரிகள் அமைக்கப்படுகின்றன.

ferromagnetic : அயக்காந்தம்: அயம், நிக்கல் போன்ற ஒரு பொருள். மிக உயர்ந்த காந்த மேற்பரப்புத் திறன்.

ferrous oxide : ஃபெர்ரஸ் ஆக்சைடு : பதிவு செய்யும் வட்டுகள் மற்றும் நாடாக்களுக்கு பூசும் பொருள். இதை மின்காந்தப்படுத்த முடிவதால், மின்காந்த முறையில் தகவலைப் பதிவு செய்ய முடிகிறது.

FET : எஃப்இடீ : Field Effect Transistor என்பதன் குறும்பெயர்.

fetch : கொண்டு வா ; கொணர் ; எடு : ஒரு சேமிப்பகத்திலிருந்து ஆணை அல்லது தகவல்களைக் கண்டு பிடித்து ஏற்றுதல்.

fetcher daemon : நேர்த்திச் செயல்முறை : முதன்மைச் செயல்முறையிலிருந்து வேண்டுகோள்களைக் கேட்டறிந்து, பிறகு முதன்மைச் செயல்முறையின் சார்பாக ஒரு வேண்டுகோளை விடுக்கிற ஒரு பெரிய செயல் முறையின் பகுதியாக இருக்கிற ஒரு சிறிய செயல்முறை. இந்தச் செயல்முறைகள் சிறிதாக இருப்பதால் இவற்றை மிகநேர்த்தியாகத் தனிப்பண்புடையதாக்கி, மிகத் திறம்படச் செயல்புரியும்படி செய்யலாம்.

FF : எஃப்எஃப் : Form Feed என்பதன் குறும்பெயர்.

fiber channel : ஒளியிழைத்தடம் : அதிவேகமாகச் செயற்படும் கணினிக்காக உருவாக்கப்பட்டு வரும் எதிர்கால ANSI செந்தரம் (தர அளவு). இதில், IPI, SCSI, HIPPI ஆணைத் தொகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. இதன் வேகம் வினாடிக்கு 12.5 முதல் 100 MBytes வரை இருக்கும்.

fiber optics : ஒளி இழைகள் : ஒளியின் வேகத்தில் அதிக எண்ணிக்கைகளில் தகவல்களை அனுப்பக்கூடிய கண்ணாடி அல்லது செயற்கை நுண் இழைகளின் ஊடக தகவல் அனுப்பல் முறை.

fiber - optic cable : ஒளியிழைத் தொகுப்பு: பெருமளவுத் தகவல்களை ஒளியின் வேகத்தில் கொண்டு செல்லக்கூடிய, நுண்ணிய கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் இழைகளினாலான தகவல் அனுப்பீட்டு ஊடகம்.

fibonacci numbers : ஃபைபோான் ACCI எண்கள் : முந்திய இரு எண்களின் கூட்டுத்தொகையாக (1,1,2,3, 5,8,13 என்று இருக்கும் வகையில்) ஒவ்வொரு எண்ணும் இருக்கிற முழு எண்களின் வரிசை. தேடுதலை இருகிழின எண்களாகப் பகுக்கிற ஈரிலக்கத் தேடுதல்களை இது விரைவு படுத்துகிறது.

fibonacci search : ஃபைபோன் ACCI தேடுதல் : ஃபைபோன் ACCI எண்களைப் பயன்படுத்தும் ஒரு தேடுதல் படிநிலை வரிசை. இது ஈரிலக்கத் தேடுதலில் இரண்டின் வர்க்கங்களைப் பயன்படுத்துவது போன்றதாகும்.

fiche : படத் தாள் ; நுண்படத் தாள் : பல்வகை நுண்தோற்றங்களை உள்ளடக்கிய ஒளிப்படத் தாள்.

fidoNet : ஃபைடோனெட் : டாம் ஜென்னிங்ஸ் என்பவர் 1984இல் உருவாக்கிய ஃபைடோ BBS என்பதிலிருந்து தோன்றிய மின்னஞ்சல் மரபுத்தொகுதி. 10,000-க்கும் அதிகமான ஃபைடோனெட் மையமுனைகள் பயன்பாட்டில் உள்ளன.

field : புலம் : தகவல் தள மேலாண்மை அமைப்பு கையாளும் மிகச்சிறிய அலகாகிய தகவலின் ஒரு துண்டு. பணியாளர் கோப்பில், ஒரு நபரின்

பெயர், வயது ஆகிய இரண்டும் இரண்டு தனித்தனி புலங்களாகக் கருதப்படும். ஒன்று அல்லது மேற்பட்ட புலங்களைக் கொண்டதே பதிவேடு.

Field Alterable Control Element (FACE) : புலம் மாற்றக்கூடிய கட்டுப்பாட்டு அலகு : பயனாளர் நுண் ஆணைத் தொடர் எழுத வழி வகுக்கும் சில அமைப்புகளில் உள்ள சிப்பு.

field data : புல தகவல் குறியீடு : மாறுபடும் உற்பத்தியாளர் குறியீடுகளுக்கு இடைப்பட்ட ஏற்பாடாக அமெரிக்க இராணுவம் தகவல் செயல்பாடுகளில் பயன்படுத்தும் சரிசெய் குறியீடு.

field effect transistor (FET) : புல விளைவி மின்மப் பெருக்கி : மாறிலி சக்தியேற்கும் சேமிப்புப் பொருளாகச் செயல்படும் இறுதிப்பகுதி அரைக்கடத்திச் சாதனம்.

field emmission : புல அனுப்புதல்; புல வீச்சு; புல உமிழ்வு : வலுவான மின்சாரப் புலத்தின் தாக்கத்தினால் ஒரு உலோகம் அல்லது அரைக் கடத்தியிலிருந்து எலெக்ட்ரான்களை வெற்றிடத்திற்கு அனுப்புதல்.

field engineer : களப் பொறியாளர் : கணினி வன்பொருள் மற்றும் மென்பொருளின் களப் பராமரிப்புக்குப் பொறுப்பேற்றுள்ள தனிநபர். வாடிக்கையாளரின் பராமரிப்பு பொறியாளர் என்றும் அழைக்கப்படுவார்.

field name : புலப்பெயர் : ஒரு புலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பெயர். (பெயர், முகவரி, நகரம், மாநிலம் முதலியன). இது எல்லாப் பதிவேடுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும். இது புலத்தை அடையாளங்காட்டக் கூடியதேயன்றி, அதில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவலை அடையாளங்காட்டக் கூடியதன்று.

field of view : புலப் பார்வை ; காட்சிப் புலம் : கணினி வரைகலைகளில், உருவாக்கப்பட்ட ஒளிப்படக் கருவி பார்க்கும் திறனின் எல்லைகளைக் குறிப்பிடுகிறது. ஒளிப்படக் கருவியை மையமாகக் கொண்ட கிடைமட்டக் கோணத்தையே இது பெரும்பாலும் குறிப்பிடுகிறது. கணிப்புக்கு எளிமையாக்க, கணினி வரைகலையாளர்களின் அனுமானத்தின்படி, ஒளிப்படக்கருவி ஒரு பிரமிட்டிற்குள் உள்ளது ; கூம்புக்குள் அல்ல.

field separator : புலப் பிரிப்பி : ஒரு பதிவேட்டில் புலங்களைப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடு காற்புள்ளி, அரைப்புள்ளி அல்லது முக்காற் புள்ளியாக இருக்கலாம்.

field squeeze : புலப் பிழிவுக் கருவி : ஓர் அஞ்சல் இணைப்பியில், ஒரு தகவல் புலத்தில் கூடுதலான காலியிடங்களை அகற்றி, எழுத்து வாசகத்தினுள் துல்லியமாக அச்சிடும்படி செய்யும் ஒரு செயற் பணி.

field upgradable : களத்தில் மேம்படுத்தக்கூடிய வன்பொருள் : வழங்கப்பட்ட பிறகு கணினி கிடங்கிலோ அல்லது பழுதுபார்க்கும் மையத்திலோ அல்லது ஒருவரது அலுவலகத்திலோ, இத்தகைய களத்தில் மேம்படுத்தக் கூடியது.

FIFO : எஃப்ஐஎஃப்ஓ : First In First Out என்பதன் சுருக்கம். ஒரு பட்டியலில் பொருள்களைச் சேமிக்கவும் திரும்பப் பெறவுமான முறை. காத்திருப்போர் வரிசையில் (கியூவில்) முதலில் வந்தவர் முதலில் கவனிக்கப்பட்டு அனுப்பப்படுவார்

fifth generation computers : ஐந்தாம் தலைமுறைக் கணினிகள் : அடுத்த கணினி வளர்ச்சிநிலை, ஒலி உள்ளீடு /வெளியீடு செயற்கை நுண்ணறிவு, காரணகாரியமறிந்து, பகுத்தறிந்து, முடிவெடுக்கக்கூடிய எந்திரங்களை உருவாக்கும் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கொண்டதாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

figure shift : எண் மாற்றம் : விசைப் பலகையின் ஒரு விசை அல்லது விசை உருவாக்கும் குறியீடு, செய்தியில் 'மாற்று' வரும்வரை அடுத்து வரும் எழுத்துகளை எண்களாகக் கருதவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

file : கோப்பு ; தகவல் தொகுப்பு : ஒரு அடிப்படை சேமிப்பு அலகாகக் கருதப்படும், தொடர்புடைய பதிவுகளின் தொகுதி.

file access time : கோப்பு அணுகல் நேரம்: ஒரு கோப்பினைத் திறந்து தகவலைப் படிக்கத் தொடங்குவதற்கு கணினி எடுத்துக் கொள்ளும் நேரம்.

File Allocation Table (FAT) : கோப்பு ஒதுக்கீட்டு அட்டவணை : ஒரு வட்டிலுள்ள தகவல்களின் பதிவேடு. இதன் மூலம் ஒவ்வொரு கோப்பின் உள்ளடக்கங்களையும் அணுகலாம். ஒரு செருகு வட்டில் அல்லது நிலை வட்டில் உள்ள ஒரு தகவல் கோப்பு, அதில் எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு கோப்பின் அமைவிடம் பற்றிய தகவல்களைக் கொண்டிருக்கும். இது, ஒவ்வொரு கோப்பினையும் தேவைப்படும்போது கண்டறிந்து படிப்பதற்கு உதவுகிறது. இந்த அட்டவணை பெரும்பாலும் இருமடியாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும்.

file and record locking : கோப்பு மற்றும் பதிவேட்டுப் பூட்டு : பயனாளர் பன்முகச் சூழலில் தகவல் மேலாண்மை செய்வதற்கான உத்திகள். தகவல், வாசகம், அல்லது உருக் காட்சிக் கோப்பினை ஒருவர் அணுகுவதை இந்தக் கோப்புப் பூட்டு தடுக்கிறது. ஒரு தகவல் கோப்பினுள் தனியொரு பதிவேட்டினை அணுகுவதைப் பதிவேட்டுப் பூட்டு தடுக்கிறது.

file attribute : கோப்புப் பண்பியல்பு : ஒரு DOSகோப்பின் பண்பியல்புகள் தொடர்பான தகவல்கள். எடுத்துக் காட்டாக, அது மறைந்துள்ளதா, படிப்பதற்கு மட்டுமேயானதா, எழுதுவதற்கு மட்டுமேயானதா என்ற விவரங்கள். ஒரு கோப்பினைப் பாதுகாப்பாகக் கையாள்வதற்கு அனுமதிக்கிற கோப்பு அணுகு வகைப்பாடு. முக்கிய பண்பியல்புகள்: எழுதப் படிப்பதற்குரியது ; படிப்பதற்கு மட்டுமே உரியது ; மறைவானது.

file backup : கோப்பு மாற்று ஏற்பாடு ; மாற்றுக் கோப்புப்படி; கோப்புக் காப்பு: அழிக்கப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட தகவல் தளம் ஒன்றை மீண்டும் கொண்டு வரப் பயன்படுத்தப்படும் தகவல் கோப்புகளின் படிகள்.

file collection : கோப்புத் திரட்டு.

file control block method : கோப்புக் கட்டுப்பாட்டுத் தொகுதி முறை : கோப்புக் கட்டுப்பாட்டுத் தொகுதிகள் மூலமாக வட்டுக்கோப்புகளை அணுகுகிற DOS செயற்பணிகளின் ஒரு தொகுதி. இது இன்று வழக்கற்று விட்டது.

file conversion : கோப்பு மாற்றல் : கோப்பின் ஊடகம் அல்லது அமைப்பு முறையை மாற்றும் செயலாக்கம்.

file creation module : கோப்பு உருவாக்கத் தகவமைவு.

file descriptor : கோப்பு விவரிப்பி : BASIC போன்ற உயர்நிலை மொழிகளில், கோப்பு விவரிப்பி என்பது, கோப்பினைத் திறப்பதற்கான இடையக எண். எடுத்துக் காட்டு : as # 1 அல்லது # 3.

file directories : கோப்பு அட்டவணைத் தொகுப்பு.

file format : கோப்பு உருவமைவு : ஒரு கோப்பின் கட்டமைவு. தகவல் தளம், சொல் செய்முறைப்படுத்துதல், வரைகலை, கோப்புகள் ஆகியவற்றுக்கு வணிக முறை உருவமைவுகள் உள்ளன.

file gap : கோப்பு இடைவெளி : கோப்பு எங்கு முடிகிறது என்று கணினி அமைப்புக்கு உணர்த்தக் கூடிய, கோப்பின் இறுதியில் உள்ள இடைவெளி.

file handle : கோப்புக் கைப்பிடி : ஒரு கோப்பினை அணுகுவதற்குரிய தகவல்களை கொண்டுள்ள ஒரு மாறியல் மதிப்புரு. வட்டு அணுகுதலின் கோப்புக் கைப்பிடி முறையைப் பயன்படுத்தி ஒரு கோப்பினைத் திறக்கும்போது DOS மூலம் திருப்பியனுப்பப்படும் ஒரு குறியீட்டு எண். பின்வரும் வட்டுச்செயற்பாடுகள் அனைத்திலும் கோப்பினை அடையாளங் காண்பதற்கு இந்தக் குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

file handling routine : கோப்பு கையாளும் வாலாயச் செயல்முறை : ஒரு கோப்பில் உள்ள தகவல்களைப் படிக்கவோ அல்லது அதனுள் எழுதவோ செய்யக்கூடிய கணினி ஆணைத் தொடரின் ஒரு பகுதி.

file index : கோப்புக் குறிப்புப் பட்டியல்; கோப்பு அட்டவணை.

file label : கோப்பு அடையாளச் சீட்டு : ஒரு கோப்பினை அடையாளம் காட்டும் வெளிப்புற அடையாளச் சீட்டு.

file layout : கோப்பு அமைப்பு முறை ; கோப்பு இட அமைவி : அதன் வரிசை முறை மற்றும் உட்பொருள்களின் அளவுகள் உட்பட தகவல்களை வரிசைப்படுத்தி ஒரு கோப்பில் அமைத்தல்.

file level model : கோப்பு நிலை மாதிரி ; கோப்பு நிலைப் படிமம் : கேள்விகளுக்கோ அல்லது ஆணைத் தொடர்களுக்கோ தகவல் பயன்பாடுகளின் சிறந்த செயல்பாடுகள் தகவல் அமைப்புகளை வரையறுப்பதற்கான மாதிரி அமைப்பு.

file librarian : கோப்பு நூலகர் : அனைத்து கணினி கோப்புகளையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பொறுப்பேற்கும் நபர். வட்டுத் தொகுதிகளில் ஆணைத்தொடர் -தகவல் கோப்புகள், மின்காந்த நாடாக்கள், துளையிட்ட அட்டைகள், நுண் திரைப்படங்கள் போன்றவை இவரது பொறுப்பில் அடங்கும்.

File Maker II : கோப்பு உருவாக்கி II : 'க்ளோரிஸ்' என்ற அமைவனம் உருவாக்கியுள்ள மெக்கின்டோஷ் கோப்பு மேலாளர். இது பொதுவான தகவல் மேலாண்மைக்குப் புகழ் பெற்ற ஒரு செயல்முறை. இது பல்வேறு புள்ளியியல் செயற்பணிகளையும், விரைவுத் தேடுதல் திறம்பாடுகளையும், விரிவான செய்தியறிவிப்பு அம்சங்களையும் அளிக்கிறது.

file man : கோப்பாளர் : விண்டோவின் 'கோப்பு மேலாளர்' என்று பொருள்படும் File Managerஎன்பதற்கான கொச்சை வழக்குச் சொல். இது பொது எல்லை MUMPS மென்பொருள். MUMPS செயல்முறையாள

ருக்கான பல்வேறு பயனீடுகளின் ஒரு தொகுதியை உடையது.

file name extension : கோப்புப் பெயர் நீட்டம்; கோப்புத் துணைப்பெயர்.

file maintenance : கோப்புப் பேணுகை; கோப்புப் பேணல் : கோப்புகளில் ஆவணங்களை நாளது தேதி வரையில் புதுப்பித்தும், துல்லியமாகவும் பேணிவருவதற்கான நடவடிக்கைகளின் ஒட்டுமொத்தம். முதன்மைக் கோப்புகளைக் காலாந்திரங்களில் நாளது தேதிவரையில் புதுப்பித்தல். வட்டு இயக்கிகளைக் காலாந்திரங்களில் சீரமைவு செய்தல்.

file management system (FMS) : கோப்பு மேலாண்மைப் பொறியமைவு : தகவல்களை வரையறை செய்து, இந்த இனங்களைக் குறிப்பிட்ட பதிவேடுகளில் வைக்கவும், இந்தப் பதிவேடுகளை குறிப்பிட்ட கோப்புகளாக ஒருங்கிணைத்து, அவற்றைக் கையாளவும், பல்வேறு வழிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை மீட்கவும் பயன்படுகிற ஒரு மென்பொருள் தொகுதி.

file manager : கோப்பு மேலாளர் : எளிய கோப்புகள் மற்றும் பொருளடக்கங்களைப் பயன்படுத்தும் எளிய தகவல் தள மேலாண்மை ஆணைத் தொடர். தகவல் தள மேலாண்மை அமைப்பின் தம்பி அல்லது பதிவேடு மேலாளர் என்றும் அழைக்கப்படுவதுண்டு.

filename : கோப்புப் பெயர் : ஒரு குறிப்பிட்ட கோப்பை அடையாளம் காண உதவும் அகரவரிசை எண் முறை எழுத்துகள்.

filename extension : கோப்புப் பெயர் விரிவாக்கம்; கோப்புத் துணைப் பெயர் ; கோப்பு இனப்பெயர் : ஒரு கோப்புப் பெயரின் இரண்டாவது பகுதியாக அமையும் குறியீடு. ஒரு புள்ளியின் மூலம் கோப்பின் பெயரிலிருந்து பிரிக்கப்படுகிறது. கோப்பில் எத்தகைய தகவல்கள் உள்ளன என்பதைக் குறிப்பிடுகிறது.

file organization : கோப்பு ஒருங்கமைத்தல் ; கோப்பு அமைத்தல் ; கோப்புத் தொகுப்பு : பயன்பாட்டு ஆணைத் தொடர் அமைப்பவர் தகவல்களைப் பார்க்கும் முறை.

file pointer : கோப்புச் சுட்டு : DOS திறக்கிற கோப்பு ஒவ்வொன்றுக்கும் அது வைத்துவருகிற ஒரு மாறியல் மதிப்புரு. இந்தக் கோப்புச் சுட்டு, கோப்பில் படிப்பு/எழுத்து செயற்பாடு தொடங்குகிற அமைவிடத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

file processing : கோப்புச் செயல்பாடு; கோப்பு அலசல் : அடிப்படைக் கோப்புகளில் நடப்புத் தகவல்களின் மாற்றங்களுக்கேற்ப காலமுறைப்படி புதுப்பித்தல். அடிப்படை இருப்பு எடுப்புக் கோப்பில் மாதாந்திர இருப்பு எடுப்புக்கோப்பிலிருந்து மாற்றம் செய்தல் போன்ற பரிமாற்ற தகவல்களைக் கொண்டதாக இவை அமைந்திருக்கும். File Maintenence-க்கு எதிர்ச்சொல்.

file protection : கோப்புக் காப்பு ; கோப்புப் பாதுகாப்பு : ஒரு கோப்பிலிருந்து எதிர்பாராத விதமாக தகவல் அழிக்கப்படுவதைத் தடுக்கும் சாதனம் அல்லது தொழில்நுட்பம். மின்காந்த நாடா கோப்பு பராமரிப்பு வளையம் அல்லது செருகு வட்டினைப் பாதுகாக்க அதன் மேல் ஒட்டப்படும் பகுதி.

file - protect ring : கோப்புப் பாதுகாப்பு வளையம் : மின்காந்த நாடாவில் உள்ள தகவல்களைப் பாதுகாக்கப்

பயன்படுத்தப்படும் சாதனம். நாடா சுருணையிலிருந்து வளையத்தை நீக்குவதன் மூலம் நாடாவின் மீது தவறுதலாக எழுதுவது தவிர்க்கப்படுகிறது. write protect-க்கு இணைச் சொல்.

file recovery programme : கோப்பு மீட்புச் செயல்முறை : தற்செயலாக நீக்கப்பட்டு அல்லது சேதமடைந்து விட்ட வட்டுக்கோப்புகளை மீட்பதற்கான மென்பொருள்.

file server : கோப்புப் பரிமாறி; கோப்பு வழங்கி : ஒரு வளாகக் கணினிக் கட்டமைப்பிலுள்ள தலைமைக் கணினி. இது, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மற்ற அனைத்துப் பொறியமைவுகளும் அணுகக் கூடிய கோப்புகள் அனைத்தின் சேமிப்புத் தொகுதியாகும்.

file sharing protocol : கோப்புப் பகிர்வு மரபு முறை : ஓர் இணையத்தில் நிலையங்களிடையே கோப்பு வேண்டுகோள்களுக்கு (திற, படி, எழுது, மூடு முதலியன) ஒரு கட்டமைவை அளிக்கிற செய்தித் தொடர்பு மரபு முறை.

இது OSI உருமாதிரியின் படுகை - 7 - ஐக் குறிக்கிறது.

file size : கோப்பு அளவு : ஒரு கோப்பில் உள்ள தகவல்களின் அளவை 'பைட்டு' எண்ணிக்கையில் குறிப்பிடுவது.

file spec (file specification) : கோப்புக் குறியீடு : ஒரு வட்டின் மீதுள்ள ஒரு கோப்பின் அமைவிடத்தைக் குறித்தல். இதில் வட்டு இயக்கி, தகவல் குறிப்பேட்டுப் பெயர், கோப்புப் பெயர் போன்றவை அடங்கும்.

file storage : கோப்பு சேமிப்பகம் : மின் காந்த வட்டு, நாடா, அட்டை அலகுகள் போன்ற கணினி அமைப்புக்குள் ஏராளமான தகவல்களை வைத்திருக்கும் திறனுள்ள சாதனங்கள்.

file structure : கோப்பு வடிவ அமைப்பு; கோப்புக் கட்டமைப்பு : ஒரு தகவல் பதிவுக்குள் புலங்களின் அமைப்பு முறை. சான்றாக, ஒரு பதிவின் முதல் புலம் பெயர்ப்பகுதியாகவும், அதன் இரண்டாவது எண் புலம் விலைப் பகுதியாகவும் அடுத்து மூன்றாவது என்று தொடர்ந்து சென்று கோப்பின் வடிவ அமைப்பினைக் கூறுகிறது.

file system : கோப்பு முறை ; கோப்பமைவு முறை : ஒரு கணினிப் பொறியமைவில் கோப்புகளைப் பட்டியலிடும் முறை. தனித்தனிக்கோப்புகளை மேலாண்மை செய்கிற தகவல் செய்முறைப்படுத்தும் பயன்பாடு. இதில் பழக்கப்பட்ட செயல்முறைப் படுத்துதல் மூலம் கோப்புகள் தொடர்புபடுத்தப்படுகின்றன. இது, தொடர்முறைச் செய்தித் தகவல் தளத்திலிருந்து (Relational Database) வேறுபட்டது.

file transfer : கோப்பு மாற்றல் ; கோப்புப் பெயர்வு : ஒரு இடத்திலிருந்து வேறோர் இடத்திற்கோ அல்லது ஒரு சேமிப்பு ஊடகத்திலிருந்து வேறொன்றுக்கோ கோப்பினை மாற்றுதல்.

file transfer protocol : கோப்புப் பெயர்வு வரைமுறை ; கோப்புப் பரிமாற்று வரைமுறை.

file viewer : கோப்புப் பார்வையாளர் : ஒரு கோப்பின் உள்ளடக்கத்தைக் கண்காட்சியாகக் காட்டுகிற மென் பொருள். இது, பொதுவாக உருவமைவுகளின் ஒருவகையைக் கண் காட்சியாகக் காட்டும் திறனுடையது.

file virus : கோப்பு நச்சுநிரல்.

fill : நிரப்பு : ஓர் ஓவியச் செயல் முறையில், கரையிட்ட பகுதியில் வண்ணத்தை மாற்றுதல். ஓர் அகல் தட்டில் பொதுவான அல்லது மடி நிலை மதிப்பளவுகளை சிற்றங்களின் ஒரு குழுமமாகப் பதிவு செய்தல்.

fill area : நிரப்புப் பகுதி : முனைகளைக் குறித்துரைத்து ஒரு மூடிய பலகோணக்கட்டத்தை வரைந்து, பின்னர் அதன் உட்பகுதியை நிரப்புகிற ஒரு வசதி.

fill character : நிரப்பு எழுத்து : ஒரு சேமிப்புச் சாதனத்தில் பயன்படாத இடப்பரப்புகளில் எழுதப்படும் ஓர் எழுத்து.

filling : நிரப்புதல் : கணினி வரைகலையில், வரையறுக்கப்பட்ட பகுதியின் உட்புறத்தில் நிறம், சாயல் அல்லது இயக்குபவர் விரும்புகின்றவற்றை இட்டு நிரப்பப் பயன்படும் ஒரு மென்பொருள் செயல்பாடு.

fill pattern : நிரப்புத் தோரணி : ஓர் உருக்காட்சியின் பரப்புப் பகுதியை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்படும் வண்ணம், வண்ணச்சாயல் அல்லது தோரணி. ஒரு LAN நிலையம் தகவல்களை பெறாதிருக்கிறபோது அல்லது அனுப்பாதிருக்கிறபோது ஒருங்கிணைப்பைப் பேணுவதற்காக அந்த நிலையத்தினால் அனுப்பப்படும் குறியீடுகள்.

fill in screen : நிரப்புத் திரை : ஒரு தகவல் பதிவுத் திரை. இதில் தகவல் பதிவு முனைகளாகப் பல பெட்டிகள் அல்லது கம்பித் தொடர்கள் அமைந்திருக்கும். ஒவ்வொரு தகவல் முனையும் ஒரு தருக்க முறைப்படி அமைந்து, எந்த தகவல் இனம் எங்கே செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கும் முகப்புச் சீட்டையும் கொண்டிருக்கும். இந்த வகை நிரப்புத்திரை பெரும்பாலும் விமான பயணச்சீட்டு முன்பதிவுகளில் பயன்படுத்தப்படுகிறது. இதனைத் "தகவல் பதிவுத் திரை" (Data Entry Screen) என்றும் கூறுவர்.

film developer : படச்சுருள் துலக்கல் : கோம் (COM) சாதனங்களுக்காக நுண் திரைப்படத்தினை மாற்றி அமைக்கும் கருவி.

film recorder : படச்சுருள் பதிப்பி : ஒரு CAD, வண்ண அல்லது வணிக வரைகலைத் தொகுதி மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஒரு வரைகலைக் கோப்பிலிருந்து ஒரு 35மி.மீ. பட வில்லையைத் தயாரிக்கிற சாதனம். இது, 2,000 முதல் 4,000 வரையிலான வரிகளைக் கொண்ட உயர்செறிவுப் படங்களை உருவாக்குகிறது. படச்சுருள் பதிப்பியுடன் இணைக்கப் பட்டுள்ள ஒரு கட்டுப்பாட்டுப் பலகையில் செருகுவதன் மூலம் சொந்தக் கணினிகளுடன் படச்சுருள் பதிப்பிகளை இணைக்கலாம்.

FILO : ஃபைலோ : First In Last Out என்பதன் குறும்பெயர். ஒரு பட்டியல், மேசை அல்லது அடுக்கிலிருந்து வகையறாக்களைத் திரும்ப எடுப்பதற்கோ அல்லது அவற்றில் சேமிப்பதற்கோ கடைப்பிடிக்கப்படும் முறை. முதலில் சேமிக்கப்படும் பொருளைக் கடைசியில்தான் வெளியில் எடுக்க முடியும்.

filter : வடிகட்டி : ஒரு தகவலை, வாசகத்தை அல்லது வரைகலை உருவமைவை மற்றொன்றாக மாற்றுகிற செய்முறை. இதில், தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல் மட்டுமே செல்லக் கூடிய, தோரணி அல்லது திரை பயன்படுத்தப்படுகிறது. தகவல் தளத்திலிருந்து தகவல் இனங்களை வரவழைக்கிற மென்பொருள் ஆணை.

final value : இறுதி மதிப்பளவை.

financial information systems : நிதியியல் தகவல் பொறியமைவு : ஒரு வணிகத்திற்கு நிதியுதவி செய்வதிலும், நிதியியல் ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதிலும், கட்டுப்படுத்துவதிலும் நிதியியல் மேலாளர்களுக்கு உதவுகிற தகவல் பொறியமைவு. பண மற்றும் பிணைய ஆவண மேலாண்மை, மூலதன வரவு செலவுத் திட்டம் வரைதல், நிதியியல் முன்னறிவிப்பு, நிதியியல் திட்டமிடல் ஆகியவை இதில் அடங்கும்.

financial planning language : நிதியியல் திட்டமிடல் மொழி : தகவல் உரு மாதிரிகளை உருவாக்கவும், ஒரு நிதியியல் திட்டமிடல் பொறியமைவுக்கு ஆணையிடவும் பயன்படுத்தப் படும் மொழி.

financial planning system : நிதியியல் திட்டமிடல் பொறியமைவு : மாற்று முறைகளைக் கணித்தறிவதற்குப் பயனாளருக்கு உதவிபுரிகிற மென்பொருள். இது, ஒரு தகவல் உரு மாதிரியை உருவாக்க அனுமதிக்கிறது. இந்த உருமாதிரி, சமன்பாட்டு வடிவில் தகவல் கூறுகளின் ஒரு தொடர் வரிசையாக அமைந்திருக்கும். எடுத்துக்காட்டு : மொத்த ஆதாயம் ; மொத்த விற்பனை ; விற்பனைச் சரக்குகளின் அடக்கவிலை. பல்வேறு மதிப்பளவுகளைச் செலுத்தி, பல்வேறு விருப்பத்தேர்வுகளைப் பெறலாம்.

find : கண்டுபிடிப்பு : குறிப்பிட்ட கோப்புகளில் ஒரு சரத்தைத் தேடுவதற்கான ஒரு DOS ஆணை.

find and replace : தேடி மாற்றிவை ; தேடி மாற்று.

finder : தேடி : ஆப்பிள் மெக்கின் டோஷ் இயக்கச் சூழ்நிலையின் மையப்பொருள். வட்டுகளில் சேமிக்கப்பட்ட கோப்புகளை ஒழுங்குபடுத்துவதும், காட்டுவதும் உள்ளிட்ட பல பணிகளைச் செய்யும் ஒரு ஆணைத்தொடர்.

finesse : நய நுட்பம் : 'உருவங்கள்' என்ற பட்டியல் திரையின் 'ஜெம்' சூழலைப் பயன்படுத்துகிற ஒரு DTP மென்பொருள்.

fingerprint reader : கைரேகை படிப்பி: பாதுகாப்பு நோக்கங்களுக்காக ஒருவரின் கைரேகையை அடையாளம் காணப் பயன்படுத்தப்படுகிற நுண்ணாய்வுக் கருவி. ஒரு கைரேகை முன் மாதிரி எடுக்கப்பட்ட பின்பு, ஏற்கனவே சேமித்துவைக்கப்பட்டுள்ள கைரேகைகளுடன் அது ஒத்திருக்குமானால், ஒரு கணினியை அல்லது பிற பொறியமைவை அணுகுவதற்கு அனுமதியளிக்கப்படுகிறது.

finite : முடிவான ; அறுதியான ; வரையறைக்குட்பட்ட : வரையறைகளுக் குட்பட்டது. ஒரு முடிவு அல்லது ஒரு கடைசி எண். Infinite-க்கு எதிர்ச் சொல்.

finite element method : அறுதி பொருள் முறை : பல்வேறு பொறியியல் துறைகளில் களப்பகுதியின் சிக்கல்களைத் தீர்க்க உதவும் தொழில்நுட்பம்.

FIPS : ஃபிப்ஸ் : ''கூட்டரசுத் தகவல் செய்முறைப்படுத்தும் செந்தரம்'' எனப் பொருள்படும் "Federal Information Processing Standard" என்பதன் தலைப்பெழுத்துக் குறும்பெயர்.

firewall : நெருப்புச் சுவர் ; தீச்சுவர் : ஓர் உள்முக இணையத்திலுள்ள கணினிகளை புறமுக அணுகுதல்களிலிருந்து பாதுகாப்பதற்கான ஒரு பாதுகாப்பு நடவடிக்கை. இது, இணையத்திற்

கும் புற உலகிற்குமிடையில் ஒற்றை வாயில் ஏற்படுத்துவதன் மூலம் அமைக்கப்படுகிறது. இந்த வாயில் வழியாக மட்டுமே எல்லாத் தொகுதிகளும் செல்ல முடியும். பிறகு இந்த வாயில் வழியே குறிப்பிட்ட சில அணுகுதல்கள் மட்டுமே அனுமதிக்கப்படுமாறு அமைக்கப்படுகிறது.

firmware : நிலைச்சாதனம் : வட்டு அல்லது நாடா போன்ற கணினியின் வெளிப்புறத்தில் வைக்கப்படும் வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆணைத்தொடர் அல்லாத ரோம் எனப்படும் வன்பொருள் சிப்புவினுள் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ள ஆணைத்தொடர்.

firmware programmes : அசையாப் பொருள் செயல்முறைகள் ; நிலைச் சாதன செயல்முறைகள் : இவை படிப்பதற்கு மட்டுமேயான நினைவுப் பதிப்பிகளில் (ROM) மட்டுமே அமைக்கப்படுகின்றன. இவற்றை மிக விரைவாக அணுகலாம். எந்திரத்தை நிறுத்தும்போது இவை இழக்கப்படுவதில்லை. எனவே, இவை எந்திரத்தில் நிரந்தரமாக இருந்து வரும் என்பதால் இவற்றைக் கணினியில் மீண்டும் ஏற்றவேண்டியதில்லை.

first generation computers : முதல் தலைமுறைக் கணினிகள் : 1951இல் யூனிவாக்கில் (UNIVAC) அறிமுகப்படுத்தப்பட்டு, 1959இல், முழுவதும் மின்மப் பெருக்கிகளால் ஆன கணினிகளாக வளர்ச்சி பெற்றதில் முடிகின்ற, வணிக முறையில் கிடைத்த முதல் கணினிகள். வெற்றிடக் குழாய்களைக் கொண்டிருந்த இவை இப்போது காட்சிப் பொருள்களாக மட்டுமே உள்ளன.

first computer programmer : முதலாம் கணினி செயல் வரைவாளர் ; நிரலர்: ஆங்கிலக் கவிஞர் பைரனின் மகளான லேடி அடா லவ்லேஸ் இந்த சிறப்புத் தகுதியைப் பெற்றுள்ளார்.

first fit : முதல் பொருத்திடம் : திறம்பாடு தேவையான அளவைவிட அதிகமாகக் கொண்டுள்ள முதல் தொகுதிக்கு நுண்ணாய்வு மூலம் சேமிப்புப் பகுதியினைத் தேர்ந்தெடுக்கிற ஒரு முறை.

first generation computer languages : முதல் தலைமுறை கணினி மொழிகள் : ஈரிலக்கக் குறியீட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள அறிவுறுத்தங்களின் ஒரு தொகுதி. இது முதல் தலைமுறை மொழி எனப்படும். இதில், '0' களும், '1'களும் அடங்கியிருக்கும். இதனை 'எந்திர மொழி' என்றும் கூறுவர். இதனைக் கணினி புரிந்து கொள்ளும். இந்தத் தலைமுறையைச் சேர்ந்த மொழியை மட்டுமே கணினி நேரடியாகப் புரிந்து கொள்கிறது. கணினியால் செய்முறைப்படுத்துதல் தொடங்கப்படுவதற்கு முன்பு, பயன்படுத்துபவரின் அறிவுறுத்தங்கள் அனைத்தும் முதலில் இந்த மொழியில் மாற்றம் செய்யப்படுகின்றன. இதனை "ஈரிலக்க மொழி" (Binary Language) என்றும் கூறுவர்.

first order predicate logic : முதல் நிலை பயனிலை தருக்க முறை : ஒரு கோட்பாட்டில் உள்ள மாறிலிகளில் செய்யப்படவேண்டிய நியமங்களை இது அனுமதிக்கிறது. புரோலாக் (Prolog) கணினி மொழியில் இத்தகைய தருக்க முறை பயன்படுத்தப்படுகிறது.

fitting : பொருத்துதல் : தகவல்களின் தொகுதி மற்றும் வடிவமைப்பு விதிமுறைகளில் துல்லியமாகப் பொருத்துவதற்காக கோடுகள், மேற்பரப்பு

அல்லது வளைவுகளைப் பற்றிய கணக்கீடுகளை கணினி வரைகலை முறையில் செய்வது.

fixed : நிலையான; மாறாத; குறிப்பிட்ட : ஒரு தகவல் பதிவேட்டில் எப்போதும் நிலையாக இருக்கின்ற புலம் பற்றியது.

fixed area : குறிப்பிட்ட பரப்பு : குறிப்பிட்ட ஆணைத்தொடர் அல்லது தகவல் பகுதிகளுக்கென ஒதுக்கப்பட்ட உட்புற சேமிப்பகத்தின் பகுதி.

fixed disk : நிலை வட்டு : வட்டுத் தொகுதி நிரந்தரமாக ஏற்றிவைக்கப் பட்டுள்ள ஒரு வட்டு இயக்கி. பெரும்பாலான சொந்தக் கணினிகளில் உள்ள அகற்ற முடியாத வன் வட்டுகள் இவ்வகையைச் சேர்ந்தவை.

fixed head disk unit : பொருத்தப்பட்ட படிமுனை வட்டு அலகு : இருமை தகவல்களைக் குறிப்பிட காந்தப் புள்ளிகள் வடிவில் தகவல்களைத் தன் மேற்பரப்பில் காந்தமயக் குறியீடுகள் செய்யப்பட்டுள்ள ஒன்று அல்லது மேற்பட்ட வட்டுகளைக் கொண்ட சேமிப்புச் சாதனம். வட்டுகளைச் சுற்றி வட்டப்பாதைகளில் தகவல்களை வரிசைப்படுத்தியிருப்பார்கள். படி/எழுது முனைகள் ஒரு வழித் தடத்திற்கு ஒன்றாக செய்திகளைப் படிக்கவும் எழுதவும் செய்யும். படி/எழுது முனைகளின் மேலோ அல்லது கீழோ வட்டு சுழலும்போது ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் உள்ள தகவல்களைப் படிக்கவோ / எழுதவோ முடியும். Movable head disk unit - க்கு மாறானது.

fixed length field : நிலை நீளப் புலம் : புலத்தின் நிலையான வடிவளவு. எடுத்துக்காட்டு : 25 எட்டியல் (byte) புலம், ஒவ்வொரு பதிவேட்டிலும் 25 எட்டியல்களை எடுத்துக்கொள்கிறது. இது, செயல்முறைப்படுத்துவதற்கும், படிப்பதற்கும் எளிதானது. ஆனால், வட்டு இடப்பரப்பை வீணாக்கி, கோப்பு வடிவமைப்பைக் கட்டுப்படுத்துகிறது. இது, மாறியல் நீளப்புலம் (variable length field) என்பதிலிருந்து மாறுபட்டது.

fixed length files : நிலைநீளக் கோப்புகள் : பயன்பாட்டுச் செயல்முறை கோப்புகளை, மற்றப் பதிவேடுகளின் துணையின்றி நேரடியாக அணுகக்கூடிய வகையில் பதிவேடுகளைச் சேமித்து வைத்துள்ள கோப்புகள்.

fixed length record : நிலையான நீளப் பதிவேடு : எப்போதும் ஒரே எண்ணிக்கையில் எழுத்துகளைக் கொண்ட பதிவேடு. Variable length record-க்கு எதிர்ச்சொல்.

fixed point : நிலையான புள்ளி ; மாறாப்புள்ளி : ஒரு வகையான எண் முறை. ஒவ்வொரு எண்ணின் மதிப்பும் பல இலக்கங்களின் தொகுதியால் குறிப்பிடப்படுகிறது. இதில் பின்னணிப்புள்ளியின் (radix point) இடம் எது என்பது எண்களைப் பயன்படுத்தும் முறையைக் கொண்டு முடிவு செய்யப்படுகிறது. Floating Point-க்கு எதிர்ச்சொல்.

fixed-point arithmatic : நிலைப் புள்ளிக் கணக்கீடு : ஒவ்வொரு எண்ணின் பதின்மப்புள்ளியினையும் சரியான இடத்தில் கொண்டிருக்கிற அமைப்பு முறை. எனினும், இதில் இடநிலையினைக் கணிப்புக்கு முன்பே குறித்து விடலாம். இது கணினி விரைவாகக் கணிப்பதற்கு அனுமதிக்கிறது; எனினும் எண்களின் வடிவளவைக் கட்டுப்படுத்துகிறது.

fixed scale : நிலையான அளவு கோல் ; நிலை அளவு கோல்.

fixed size records : நிலையான அளவுப் பதிவேடுகள் : ஒரே அளவிலான சொற்கள், எழுத்துகள், எட்டியல்கள், துண்மிகள், புலங்கள் போன்றவற்றைக் கொண்ட கோப்புத் தன்மைகள்.

fixed spacing : நிலையான இடை வெளிவிடுதல் ; மாறா இடைவெளி : ஒரு பக்கத்தில் குறுக்குவாட்டில் நிலையான இடைவெளி விட்டு எழுத்துகளை அச்சிடுதல்.

fixed storage : நிலையான சேமிப்பகம் : படிக்க மட்டுமான சேமிப்பகம். கணினி ஆணைகள் மூலம் உள்ளடக்கங்களை மாற்ற முடியாத சேமிப்பகம்.

fixed word length : நிலையான சொல் நீளம் ; மாறா சொல் நீளம் : எப்போதும் ஒரே எண்ணிக்கையில் துண்மிகள், எட்டியல்கள், எழுத்துகளைக் கொண்ட எந்திரச் சொல் அல்லது இயக்கி பற்றியது.

Variable word length என்பதற்கு எதிர்ச்சொல்.

Fkey (Function Key) : எஃப் விசை (செயற்பணி விசை) : ஆணை, புடைபெயர்வு, விருப்பத் தேர்வு விசை இணைப்புகளைப் பயன்படுத்துகிற மெக்கின்டோஷ் ஆணை வரிசை. எடுத்துக்காட்டு : எஃப் விசை 1 (ஆணை - புடைபெயர்வு 1), உள்முக நெகிழ் வட்டினை வெளியேற்றுகிறது.

flag : அடையாளக் குறியீடு : 1. முன்பு நடந்ததைக் கொண்டு, சொல் அல்லது நிரம்பி வழிகிறது போன்ற சில நிலைகளை ஆணைத்தொடரின் பிற்பகுதிக்கு உணர்த்தப் பயன்படுத்துவது. 2. சிறப்பு கவனத்திற்காக ஒரு பதிவேட்டைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் குறியீடு. சான்று: ஒரு ஆணைத் தொடரை வரிசைப்படுத்தும்போது பிழை ஏற்படும் வாக்கியங்களுக்கு அடையாளக் குறியீட்டை அமைத்து ஆணைத்தொடர் எழுதுபவரின் கவனத்தைக் கவரலாம். 3. குறுக்கீடு போன்ற சிறப்புச் சூழ்நிலைகளைக் குறிப்பிடுவது.

flag character : அடையாளக்குறி ; சுட்டுக்குறி.

flame : உணர்வெழுச்சி : மின்னஞ்சல் வழியாக உணர்வு பூர்வமாக அல்லது அதீதமாகச் செய்தித் தொடர்பு கொள்வதைக் குறிக்கும் கொச்சை வழக்கு.

flash memory : மின்வெட்டு நினைவகம் : விசையின்றித் தனது உள்ளடக்கத்தை இருத்திவைத்துக் கொள்கிற நினைவகச் சிப்பு. ஆனால், இது மொத்தமாக அழித்துவிடப்படுதல் வேண்டும். மின்வெட்டு நேரத்தில் அழித்து விடக்கூடிய இதன் தன்மையிலிருந்து இதற்கு இந்தப் பெயர் வந்தது. இந்தச் சிப்புகளின் விலை குறைவு. அதே சமயம் இவை அதிகத் துணுக்குச் செறிவுகள் உடையவை. இது இன்றைய, படிப்பதற்கு மட்டுமேயான நினைவகத்திற்கு மாற்றாக அமையக்கூடும்.

flashing : மின்வெட்டு : ஒரு காட்சித் திரையில் எழுத்துகள் மின் வெட்டுப் போல் தோன்றி மறைதல். திரையில் காட்டப்படும் ஒன்றின் மீது கவனத்தை ஈர்ப்பதற்கு இது பயன்படுகிறது.

flat address space : தட்டை முகவரியெண் இடப்பரப்பு : இது ஒருவகை நினைவக முகவரியிடும் முறை. இதில் ஒவ்வொரு எட்டியலும், '0' - விருந்து தொடங்கும் வெவ்வேறு

வரிசை எண் மூலம் குறிக்கப்படு கிறது. இது, 'கூறுபடுத்திய முகவரி யெண் இடப்பரப்பு' (Segmented address space) என்பதிலிருந்து வேறு பட்டது.

flatbed plotter : கிடைமட்ட படுகை வரைவி ; சமதளப்படுகை வரைவி : தட்டையான மேற்பரப்பில் செங் குத்து மற்றும் குறுக்குவாட்ட திசை களில் நகரும் முனைகளைப் பயன் படுத்தும் இலக்கமுறை வரைவி. Drum Plotter - க்கு எதிர்ச்சொல்.

flatbed type : தட்டைப் படுகை வகை.

flat file : தட்டைக் கோப்பு : மற்ற கோப்புகளுடன் தொடர்பு கொண்டி ராத தகவல் கோப்பு. இரு தட்டைக் கோப்பு களுக்கிடையிலான தொடர்பு எதுவும் தருக்க முறையிலானதாகும். எடுத்துக்காட்டு : இணை யொத்த கணக்கு எண் கள். தொடர்புத் திறம் பாடு இல்லாத கோப்பு மேலாளர்களை இது குறிக்கிறது.

flat shading : தட்டை வண்ணச்செயல்: கணினி வரைகலையில் ஒரு வண்ணச் சாய லிட்ட மேற்பரப்பினை எளிய ஒளி விடும்படி தூண்டுகிற ஒரு கணினி உத்தி.

flat pack : தட்டைப் பெட்டி ; சமதளப் பொதிவு : ஒரு முகப்பு அல்லது ஒரு அச்சிடப்படும் மின்சுற்று அட்டை யில் பற்றவைக்கக்கூடிய அல்லது ஒட்டவைக்கக்கூடிய சிறிய, எளிய, தட்டையான ஒருங்கிணைந்த மின் சுற்று அட்டை. இணைப்பிகள் கீழ் நோக்கி இறக்கிவிடப்படுவதற்குப் பதிலாக வெளிப்பக்கம் விரிந்து செல்லும்.

flat panel display terminal : தட்டை யான காட்சி முகப்புப் பலகை ; தட் டைப் பலகைக் காட்சியகம் : மின்ம (Plasma) காட்சிப்பலகை போன்று தகவலை காட்டக்கூடிய சிறிய திரை யுள்ள வெளிப்புறச் சாதனம்.

flat screen : தட்டையான திரை ; தட் டைத் திரை : தட்டையான காட்சிப் பலகையில் உள்ளது போன்ற சிறிய திரைப் பலகை.

flatted scanner : தட்டை நுண்ணாய்வு (வருடி)க் கருவி : நுண்ணாய்வு செய் யப்பட வேண்டிய பொருள் வைக்கப் படுவதற்கான ஒரு கண்ணாடி மேற் பரப்பினையுடைய நுண்ணாய்வுக் கருவி. நுண்ணாய்வின்போது மூலப் படி நகராமலிருப்பதால், தகடு ஊட்ட நுண்ணாய்வுக் கருவிகளை விட தட்டை நுண்ணாய்வுக் கருவி கள் அதிகத் துல்லியமான பலன் களை உண்டாக்குகின்றன. ஒரு நுண்ணாய்வுக் கருவியினால் ஒரு முழுப்பக்க வரைகலை யை அல்லது ஒரு பக்க வாசகத்தை ஓர் இலக்க முறைக் கோப்பாக மாற்ற முடியும்.



தட்டை நுண்ணாய்வுக் கருவி (வருடி)
(Flatted scanner)

flexible array : நெகிழ்வு வரிசை : *பரிமாணத்தை விரிவாக்கவோ சுருக்கவோ கூடியதாகவுள்ள ஓர் அணி வரிசை.*

flexible disk cartridge : நெகிழ்வு வட்டுப் பொதியுறை : *பன்னாட்டுத் தர அளவுகளின்படி ஒரு நெகிழ் வட்டின் பெயர்.*

flexi-disk : நெகிழ் வட்டு : *மென் வட்டு என்பதன் இன்னொரு பெயர்.*

flexowriter : ஃபிளக்சோரைட்டர் : *காகித நாடா உள்ளீட்டை ஏற்றுக் கொள்ளக்கூடிய தட்டச்சுப் படிவம். பல பழைய கணினிகளில் உள்ளீடு / வெளியீடு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டது.*

flicker : மினுக்கி : *வேகமான தொடர்ச்சி மற்றும் போதாக் குறையான புத்தளிப்பு விகிதத்தின் காரணமாக திரையில் காட்டப்படும் விரும்பத்தகாத நிலையற்ற ஒளி, திரையில் காட்டப்பட வேண்டிய இயற்கையான வெளிச்சத்திற்கு ஈடு கட்டும் வகையில் உள்ளிருந்து வரும் வெளிச்சம் போதுமானதாக இல்லாதபோது இது நிகழ்கிறது.*

flight computer : பறக்கும் கணினி : *விண்கலம், விமானம் அல்லது ஏவுகணையில் அமைக்கப்பட்ட கணினி.*

flight simulator : பறத்தல் போன்ற நிகழ்வு : *புதிய விமானத்தில் விமான ஓட்டிகளுக்குப் பயிற்சி அளிக்க விமான நிறுவனங்கள் பயன்படுத்தும் கணினி கட்டுப்பாட்டு போலி நிகழ்வு. விமானி உரிமம் புதுப்பித்தலின்போது பயிற்சி பெற வேண்டிய போலி விமானப் பயண நிகழ்வு. அதை இயக்கும்போது உண்மையில் வானத்தில் பறப்பது போலவே இருக்கும்.*

flip-flop : ஏற்ற இறக்கம் : *குறிப்பிட்ட நேரத்தில் நிலையான இரண்டு நிலைகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ளக் கூடிய இயங்கும் பொருள் கொண்ட சாதனம் அல்லது மின்சுற்று.* Toggle *-க்கு உடன்பாட்டுச் சொல்.*

flippy : ஃபிளிப்பி : *ஃபிளாப்பி வட்டுக்கு சமமான சொல். நெகிழ் வட்டுக்கு இன்னொரு பெயர்.*

flippy board : இருபக்கப் பலகை : *AT மற்றும் நுண் வழித் தடங்கள் இரண்டையும் இணைக்கிற சொந்தக் கணினி (PC) பலகை. இந்தப் பலகையின் ஒரு பக்கத்தில் AT இணைப்பிகளும், மற்றொரு பக்கத்தில் MCA இணைப்பிகளும் இருக்கும்.*

flippy-floppy : இருபக்க நெகிழ் வட்டு : *இருபக்கப் பயன்பாட்டுக்காக மாற்றப்பட்டுள்ள ஒற்றைப் பக்க 13.33 செ.மீ. (5.25 அங்) நெகிழ்வட்டு. இந்த வட்டின் மீது இரண்டாவது தடம் ஒன்றை வெட்டுவதன் மூலம் இந்த மாற்றம் செய்யப்படுகிறது. இதில் வட்டின் சுழற்சி மாறிமாறி வருவதால், இது பரிந்துரைக்கப்படுவதில்லை.*

float : மிதவை : *ஒரு பணி அல்லது செயல்முடிந்த பிறகு அடுத்த பணி தொடங்குவதற்கு இடையில் இருக்கக்கூடிய காலம்.* Slack Time *என்றும் அழைக்கப்படுகிறது.*

floating point : மிதக்கும் புள்ளி ; மிதவைப் புள்ளி : *ஆதார எண்ணின் மடங்கினால் பெருக்கப்படும் மான்டிசா என்ற எண்ணைப் பிரதிபலிக்கும் அளவுகளுள்ள எண் வடிவம்.* Fixed Point - *க்கு எதிர்ச்சொல்.*

floating point arithmatic : மிதவைப் புள்ளிக் கணக்கீடு : *அடிப்படை எண்ணாகிய* (Radix Point) *ரேடிக்ஸ்*

பின்னப் புள்ளியின் இருப்பிடத்தினை தானாகவே கணக்கிடும் கணக்கு முறை.

Fixed Point Arithmatic என்பதற்கு எதிர்ச்சொல்.

floating - point BASIC : மிதக்கும் புள்ளி பேசிக் : பதின்ம எண்களைப் பயன்படுத்த அனுமதிக்கும் பேசிக் மொழியின் வகை.

floating - point constant : மிதக்கும் புள்ளி நிலையெண்; மிதவைப் புள்ளி மாறிலி : இரண்டு பகுதிகள் உடைய எண். இதில் ஒரு பகுதியானது அந்த எண்ணின் பதின்மப்பகுதியைக் குறிக்கும். மற்றொரு பகுதி அந்த எண்ணின் பின்ன (ரேடிக்ஸ்) அடிப்படையைக் குறிக்கும்.

real constant என்றும் அழைக்கப்படுகிறது.

floating point notation : மிதவை முனைக் குறிமானம்; மிதவைப் புள்ளிக் குறிமானம் ; மிதக்கும் புள்ளி முறை : மிகச்சிறிய எண்களையும், மிகப்பெரிய எண்களையும் வசதியாகக் குறிப்பதற்கு இயல்விக்கும் பதின்ம எண்களின் குறியீடு.

floating - point operation : மிதக்கும் புள்ளி இயக்கம் ; மிதவைப் புள்ளி கணக்கீடு : மிதக்கும் புள்ளிக் கணக்கைக் கொண்டு செய்யப்படும் இயக்கம்.

floating - point processor : மிதவை முனைச் செயலி : மிதவை முனைச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள கணித அலகு. இது, ஒரு சொந்தக் கணினியில் ஒரு இணைச் செய்முறைப்படுத்தியாக இருக்கலாம். இதனை, முதன்மைக் கணினியுடன் இணைக்கப்படுகிற ஒரு வரிசைச் செய்முறைப்படுத்தி என்றும் அழைப்பர்.

floating - point routine : மிதக்கும் புள்ளி வழக்கச் செயல் ; மிதவைப் புள்ளி வாலாயம் : வழக்கச் செயல்களின் தொகுதி. மிதக்கும் புள்ளி வன்பொருள் இல்லாமல் செய்யப்படும் கணினியில், மிதக்கும் புள்ளி இயக்கத்தைச் செய்ய வல்லது.

FLOP : ஃப்ளாப் : Floating Point Operation என்பதன் குறும்பெயர்.

floppy disk : நெகிழ் வட்டு ; மென் வட்டு; செருகு வட்டு: வளையக்கூடிய வட்டு. காகித அல்லது பிளாஸ் டிக் உறைகளில் வைக்கப்படும் ஆக்சைடு பூசப்பட்ட வட்ட மைலார் வட்டு. உறையோடு வட்டு இயக்கியில் உள்ளே நுழைக்கப்படும். சிறு கணினி, நுண்கணினிகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுவது. குறைந்த சேமிப்புத்திறனும், குறைந்த விலையும் அதே அளவு குறைந்த தகவல் பரிமாற்ற விகிதமும் உள்ளது. வழக்கமான ஃபிளாப்பி வட்டுகள் 20.32 செ.மீ. குறுக்களவுள்ளன. சிறு ஃபிளாப்பி வட்டுகள். 13.3. செ.மீ (5¼ அங்) குறுக்களவுள்ளவை. நுண் ஃபிளாப்பிகள் 9. செ.மீ (3½ அங்.) -க்கும் குறைவான குறுக்களவுடன் வருகின்றன. பார்க்க magnetic disk, diskete. hard disk - க்கு எதிர்ச் சொல்.

floppy disk case : நெகிழ் வட்டுப் பெட்டி ; மென் வட்டு உறை : ஃபிளாப்பி வட்டுகளைப் பாதுகாத்து வைக்கும் பெட்டி. பொதுவாக பிளாஸ்டிக்கினால் செய்யப்படும்.

floppy disk controller : நெகிழ் வட்டு கட்டுப்பாட்டுப் பொறி; மென்வட்டுக் கட்டுப்படுத்தி : மென் வட்டு இயக்கியைக் கட்டுப்படுத்தும் மின் சுற்று அட்டை அல்லது சிப்பு.

floppy disk drive : நெகிழ் வட்டு இயக்கி : ஒரு நெகிழ் வட்டின் மீது எழுதவும் படிக்கவும் செய்கிற ஒரு மின்னியல்- எந்திரவியல் சாதனம். வட்டு இயக்கியில் ஒரு படிக்கும்/ எழுதும் முனை இருக்கும்; இது, வட்டின் மீதுள்ள தகவல் கோப்பு களை அணுகுகிறது. தேவைப் பட்டால் அவற்றை நாளது தேதி வரைப் புதுப்பிக்கிறது. வட்டு இயக்கி, வட்டின் உள்முகக் காந்த ஊடகத்தை நிமிடத்திற்கு 360 சுழற்சி வேகத்தில் சுழலச் செய்கிறது. இதனால், வட்டில் எழுதும் / படிக்கும் முனையின் கீழுள்ள அனைத்துப் பகுதிகளும் குறைந்த இடைவெளிகளில் தோன்றுகின்றன.

பெயர்ச்சுருக்கம் : FDD

floppy disk unit : நெகிழ் வட்டு அலகு : காந்தப்படுத்தப்பட்ட நெகிழ் வட்டுகளில் தகவல்கள் பதிவு செய்யப்படும் புறச் சேமிப்புச் சாதனம்.

FLOPS : ஃபிளாப்ஸ் (மிதவை முனைச் செயற்பாடுகள் / வினாடி) : Floating Point Operation Per Second என்பதன் குறும்பெயர். மிதவை முனைக் கணிப்புகளை அளவிடும் அலகு. எடுத்துக்காட்டு : 100 மெகாஃபிளாப்ஸ் என்பது, ஒரு வினாடி 10 கோடி மிதவை முனைச் செயற்பாடுகளாகும்.

floptical disk : நெகிழ் ஒளியியல் வட்டு; நெகிழ் ஒளி வட்டு : ஒளியியல் உத்திகளும், காந்த உத்திகளும் ஒருங்கிணைந்த ஒருவகை நெகிழ்வட்டு. இவை மிக அடர்த்தியான தகவல் சேமிப்புத் தடங்களை உடையவை. இதனால் மிக உயர்ந்த சேமிப்புத் திறன் கொண்டவை. இது புதிய தொழில்நுட்பமாகையால், ஒளியியல் நெகிழ் வட்டுகள் இன்னும் அதிகமாக பயன்பாட்டுக்கு வரவில்லை.

floptical : நெகிழ் ஒளியியல் : தகவல்களைக் காந்தவியல் முறையில் பதிவு செய்கிற நெகிழ்வட்டு.

flow chart : தொடர் வரைபடம் : குறியீடுகள் மற்றும் ஒன்றோடொன்று இணைக்கும் வரிகளைக் கொண்டு வரையப்படும் வரைபடம். இப்படத்தில் பின்வருவன இடம்பெறலாம். 1. குறிப்பிட்ட ஆணைத்தொடர் இயக்கத்தின் தருக்கமுறை மற்றும் தொடர்ச்சியைக் குறிப்பிடலாம். (ஆணைத்தொடர் ஓடுபடம்) அல்லது 2. நோக்க அமைப்பு. ஒரு படத்தினை உருவாக்கும் செயலாக்க அமைப்பையும் குறிப்பிடலாம்.

கட்ட வரைபடம் (block diagram) என்றும் சிலசமயம் கூறப்படும். ஒப்பிடுக. Structured flow chart.

flow charter : ஓடுபட உருவாக்கி ; தொடர் வரைபடம் வரைவி : புலன் காட்சித்திரை இலக்கமுறை வரைவி அல்லது அச்சுப்பொறியைக் கொண்டு தானாகவே ஓடுபடங்களை உருவாக்கும் கணினி ஆணைத் தொடர்.

flow charting symbol : ஓடுபட அமைப்புக் குறியீடு ; தொடர் வரை படக் குழூஉக்குறி : ஓடுபடத்தில் கருவிகள், தகவல் ஓட்டம் மற்றும் இயக்கங்களைக் குறிப்பிடும் குறியீடு.

flow chart template : ஓடுபட அட்டை ; ஓட்டப்பட படிம அச்சு : ஓடு படக் குறியீடுகளைக் கொண்டு வெளிப்புற வடிவங்களைக் கொண்ட பிளாஸ்டிக் வழிகாட்டி. ஓடுபடம் தயாரிப்பதில் பயன்படுவது.

flow chart text : ஓடுபடச் சொற்கள் ; ஓட்டப்படக் குறிப்பு : ஓடுபடக் குறி

யீடுகளுடன் தொடர்புள்ள வர்ணனைத் தகவல்.

flow control : தொடர்வரிசைக் கட்டுப்பாடு : செய்தித் தொடர்புகளில் தகவல் அனுப்பீட்டினைக் கட்டுப்படுத்துதல். இது, அடுத்த தொகுதி அனுப்பப்படுவதற்கு முன்பு, தகவல்களை ஏற்பு நிலையம் செய்முறைப் படுத்தும்படி செய்கிறது. செயல்முறைப்படுத்தும் ஆணைத் தொடர்களில் தருக்க முறையாக அமையும் ''என்றால்'' (If) ''பிறகு'' (Then), வளையம் போன்ற கட்டளை அமைப்புகளை குறிக்கிறது.

flowline : ஓடு வரி ; பாய்வுக் கோடு : ஓடு படத்தில் ஓடு படக்குறியீடுகளை இணைக்கும் பாதையைக் குறிப்பிடும் வரி. சாதாரணமாக அதன் ஓடும் போக்கு கீழ்நோக்கியும் பக்கவாட்டிலும் இருக்கும். ஓடு கோடுகள் மேல் நோக்கியோ அல்லது இடது பக்கமாகவோ இருக்கும்போது அம்புத்தலை முறையில் அவற்றின் திசைகள் குறிப்பிடப்படும்.

flush center : வெளியேற்று மையம் : அச்சுக்கலையில், வாசகத்தை இடது, வலது ஓரங்களிடையே ஒரே சீராக மையப்படுத்துவதைக் குறிக்கிறது.

flush left : வெளியேற்று இடச்சீர்மை : அச்சுக்கலையில், வாசகங்கள் அனைத்தையும் ஒரே சீராக இடப்புற ஓரத்தில் வரிசைப்படுத்துதல். இடது ஓரத்தில் செங்குத்துக் கோட்டினை உருவாக்கும் வகையில் வாசகத்தை வரிசைப்படுத்தும் முறை. இது ஒரு பொதுவான அச்சிடும் உத்தியாகும்.

flush right : வலச்சீர்மை : அச்சுக் கலையில், வாசகங்கள் அனைத்தையும் வலது ஓரத்தில் வரிசைப்படுத்தும் முறை. இதில் இடப்புற ஓரம் ஒரே சீராக இராது.

flux : காந்தப்புலம் : ஒரு காந்தத்தினால் உருவாக்கப்பட்ட ஆற்றல் புலம்.

FM : எஃப்எம் : Frequency Modulation என்பதன் குறும்பெயர். சமிக்ஞைகளால் குறிப்பிடப்படும் மதிப்புகளை சமிக்ஞைகளின் நெருக்கத்தை ஒட்டி மாற்றுதல்.

focusing : துல்லியப்படுத்தல் ; குவித்தல் : காட்சித்திரையில் தெளிவற்ற உருவத்தைத் தெளிவாக்குதல்.

folder : மடிப்புச் சுவடி; கோப்புத் தொகுப்பு : ஒருவிவரக் குறிப்பேட்டின் மாற்றுப்பெயர். 'Apple' கணினிகள், Windows NT கணினிகள் போன்றவற்றில் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. மெக்கின்டோஷ் கணினியில், ஆவணங்களையும் (கோப்புகள்), பயன்பாடுகளையும் மற்ற மடிப்புச் சுவடிகளையும் இருத்தி வைத்துக் கொள்ளும் ஒரு மாற்றுக் கோப்புத் தொகுப்பு.

folio : புத்தகத்தாள் எண் : அச்சுக் கலையில் அச்சிட்ட பக்க எண். எடுத்துக்காட்டு : புத்தகத்தாள் எண் 3 என்பது, ஒரு நூலில் 27ஆம் பக்கத்தைக் குறிக்கும்.

folio VIEWS : ஃபோலியோ வியூஸ்; வாசக நோக்கி: ''ஃபோலியோ கார்ப்'' என்ற அமைவனம் தயாரித்துள்ள சொந்தக் கணினிகளுக்கான வாசக மேலாண்மை மென்பொருள், இது வாசகத் தகவல் தளங்களுக்கான சேமிப்பு, மீட்புத் திறம்பாடுகளை அளிக்கிறது. இது 40-க்கும் அதிகமான வாசக உருவமைவுகளிலிருந்து வாசகங்களை வரவழைக்க வல்லது.

font : எழுத்து அச்சு ; எழுத்துரு ; எழுத்து வடிவு ; எழுத்து வடிவிலான : ஒரு தொடர்ச்சியான தனித்த அச்சு

வடிவில் எழுத்துகளின் முழுத் தொகுதி.

font cartridge : எழுத்து உருவளவுப் பொதியுறை : ஓர் அச்சடிப்பி வரிப் பள்ளத்தினுள் செருகக் கூடிய ஒரு தகவமைவில் அடங்கியுள்ள ஒன்று, அதற்கு மேற்பட்ட அச்செழுத்து முகப்புகளுக்கான உருவளவுத் தொகுதி. இந்த உருவளவுகள் பொதி யுறைக்குள் ஒரு 'ROM' சிப்புடன் சேமித்து வைக்கப்பட்டிருக்கும்.

font editor : எழுத்து உருப் பதிப்பி : எழுத்து உருவளவுகளை வடி வமைத்து, மாற்றமைவு செய்வதற்கு அனுமதிக்கிற மென்பொருள்.

font family : எழுத்து உருக் குடும்பம் : ஒரே எழுத்து முகப்பிலுள்ள பல் வேறு வடிவளவு எழுத்துருக்களின் தொகுதி. இதில், சாய்வெழுத்துகள், தடித்த எழுத்துகள் போன்ற மாறு பட்ட எழுத்துருக்கள் அடங்கும்.

font group : எழுத்துருத் தொகுதி.

font generator : எழுத்துரு முகப்பு உருவாக்கி : எழுத்துரு முகப்பு வரை வினை ஒரு குறிப்பிட்ட எழுத்துரு முகப்புக்குத் தேவையான புள்ளிக் குறித் தோரணியாக மாற்றக் கூடிய மென்பொருள். எழுத்துரு முகப்பு உருவாக்கம் நீளவாக்கில் இருப்ப தில்லை. மாறாக, எழுத்து எந்த வடி வளவுக்கும் விரிவாக்கம் செய்யப் படுகிறது. எழுத்துரு முகப்பளவு பெரிதாக பெரிதாக அதனை கவர்ச்சி கரமாக்கும் வகையில் அதன் பண் பியல்புகளும் மாறுதலடைகின்றன.

font metric : எழுத்துரு முகப்பு அளவீடு : ஓர் எழுத்துரு முகப்பின் ஒவ்வொரு பண்பியல்புக்குமுரிய அச்சுக்கலைத் தகவல்கள் (அகலம், உயரம், உருவாக்க மையம்).

font scaler : எழுத்துரு முகப்பு மறு உருவாக்கம் : எழுத்துரு முகப்பு வரை வினை புள்ளிக்குறிகளாக மாற்றுகிற மென்பொருள். 'எழுத்துரு முகப்பு உருவாக்கி' என்பதும் இதுவும் ஒன்றே. ஆயினும் இது, பெரும் பாலும் எழுத்துரு முகப்புகளை மறு உருவாக்கம் செய்வதைக் குறிக் கிறது.

font style : எழுத்துரு முகப்புப் பணி : இது எழுத்துரு முகப் பினையே (Type face) குறிக்கிறது. பெரும்பாலும் செங்குத்தான அல்லது சாய்வான வாசகங்களைக் குறிக்கிறது.

font utility : எழுத்துரு முகப்புப் பயனீடு : எழுத்துரு முகப்புகளைப் பளு இறக்கம் செய்தல், நிறுவுதல், வடிவமைத்தல், மாற்றமைவு செய் தல் உட்பட எழுத்துரு முகப்புகளை மேலாண்மை செய்வதற்கான செயற் பணிகளை அளிக்கும் மென் பொருள்.

font weight : எழுத்துரு முகப்பு எடை : எழுத்துகளின் எடையளவு (நொய் மை, நடுத்தரம் அல்லது பருமன்).

fontware : எழுத்துரு முகப்புப் பொறி : சொந்தக் கணினிகளுக்காக "பிட்ஸ் டிரீம்" என்ற அமைவனம் தயாரித் துள்ள எழுத்துரு முகப்பு உருவாக்கப் பொறியமைவு. இது, எழுத்துரு முகப்பு வரைவு நூலகம் ஒன்றையும், ஒரு எழுத்துரு முகப்பு உருவாக்கி யையும் கொண்டிருக்கிறது. எழுத்துரு முகப்புத் தொகுதிகளில், இயல்பு, சாய்வு, பருமன், பருமச்சாய்வு எடை கள் அடங்கியுள்ளன.

footer : அடிப்பகுதி ; அடிக்குறிப்பு : பக்க எண்கள் போன்று ஒரு பக்கத் தின் அடிப்பகுதியில் அச்சிடப்படும் தகவல், பெரும்பாலான சொல் பகுப் பிகளில் ஆவணத்தின் ஒவ்வொரு

பக்கத்திலும் அடிப்பகுதி தானாகவே அச்சிடப்படும்.

foot note : அடிக் குறிப்பு : ஒரு பக்கத்தின் அடியில் விளக்கமாக அமைந்துள்ள வாசகம். இது பெரும்பாலும் தகவலுக்கான ஆதாரத்தைக் குறிக்கும். இவற்றை ஒன்று சேர்த்து ஓர் ஆவணத்தின் இறுதியில் அச்சிட்டால், இவை 'இறுதிக் குறிப்புகள்' (End notes) எனப்படும்.

foot print : கால்தடம் ; அடிச்சுவடு : ஒரு கருவிக்குத் தேவையான தரைப் பகுதியின் வடிவமும், பரப்பும்.

for : சார்பு : ஒரு ஆணைத்தொடரில் கட்டுப்பாட்டுக் கட்டமைவில், குறிப்பிட்ட கட்டளைகளின் தொகுதி எந்த அளவுக்குத் திரும்ப நிறைவேற்றப்படும் என்பதைக் குறித்துரைக்கிற முதல் அறிக்கை.

force : 1. கட்டாயப்படுத்து : ஒரு ஆணைத் தொடரின் நடுவில் மனிதர் தலையிட்டு தாண்டு ஆணையைச் செயல்படுத்துவது.

force : 2. விசை ; வலியச் செய் ; வல்லந்தமாக : 'சோஃப்கோ' என்ற அமைவனம் தயாரித்துள்ள தகவல்தளத் தொகுப்பி. இதில் "C" மற்றும் dBase கட்டமைவுகள் இணைந்துள்ளன. இது மிகச்சிறிய, நிறை வேற்றத்தக்க செயல் முறைகளை உருவாக்குவதற்குப் புகழ்பெற்றது.

forced page break : வலிந்த பக்கப் பிளவு : பயனாளர் வலிந்து புகுத்திய ஒரு பக்கப் பிளவு.

forecast : வருவதுரை ; முன் கணிப்பு : கடந்த காலத்தை ஒட்டி வருங்காலத்தினைக் கணித்துக் கூறல், அனுமானமாகச் சொல்லாமல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தாக்க சக்திகளையும், மாற்றங்களையும் உள்ளடக்கியவாறு எதிர்காலத்தை மதிப்பிட்டு தெளிவாகக் கணித்தல்.

foreground/background : முன்புறம்/பின்புறம் ; முன்புலம்/பின்புலம் ; முன்னணி/பின்னணி : ஒரு பன்முகப் பணிச் சூழலில் செயல்முறைகளை இயக்குவதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள முந்துரிமை. முன்புறச் செயல் முறைகள், மிக உயர்ந்த முந்துரிமையைக் கொண்டவை. பின்புறச் செயல் முறைகள், மிகக்குறைந்த முந்துரிமை கொண்டவை. ஒரு சொந்தக் கணினியில் முன்புறச் செயல்முறை என்பது, பயனாளர் தற்போது கையாளும் செயல்முறை ; பின்புறச் செயல் முறை என்பது, ஓர் அச்சு உருளை அல்லது செய்தித் தொடர்பு செயல் முறை.

foreground colour : முன்புற வண்ணம்; முன்புல வண்ணம் ; முன்னணி வண்ணம் : திரையில் எழுத்துகள் அல்லது வரைகலைகள் எழுதப்பட்டுள்ள வண்ணங்கள்.

foreground processing : முன்புறச் செய்முறைப்படுத்துதல் ; முன்னணிச் செயலாக்கம் ; முற்பகுதிச் செயலாக்கம்: கணிப்பு வசதிகளைப் பயன்படுத்தி முற்படு விளைகோள் பெறுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள கணினி செயல்முறைகளைத் தானாகவே நிறைவேற்றுதல். இது பின்புறச் செய்முறைப்படுத்தலுக்கு மாறுபட்டது. திரையில் உள்ள அச்சடிக்கப்பட்டுள்ள எழுத்துகள் அல்லது வரையப்பட்டுள்ள புள்ளிகள்.

foreground programme : முற்பகுதி ஆணைத்தொடர் ; முன்னணி ஆணைத் தொடர் : அதிக முன்னுரிமை உள்ள ஆணைத் தொடர். பல ஆணைத் தொடர் தொழில்நுட்பத்தினைப்

பயன்படுத்தும் கணினி அமைப்பில் ஒரே நேரத்தில் இயக்கப்படும் ஆணைத்தொடர்களில் முன்னதாக செயல்படுத்தப்பட வேண்டியது.

foregrounds : முன்புறங்கள் ; முன் புலங்கள் ; முன்னணிகள் : ஒரு பன் முகப் பணிப் பொறியமைவில், மிக உயர்ந்த முந்துரிமைச் செயல்முறை கள். பார்க்க : பின்புறப்பணி (Background task).

forest : வனம் ; காடு : மரங்களின் தொகுதி. தகவல் கட்டமைப்பில் (Data Structure) தொகுப்புப் பட்டியல் கள் (Linked liss) மூலம் உருவாக்கப் படும் ஒருவகைக் கட்டமைப்புக்கு tree என்று பெயர். வேர் எனப்படும் தலைமை உறுப்புடன் பட்டியலின் ஏனைய உறுப்புகள் கிளைகளாக தொகுக்கப்பட்டிருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட tree அமைப்புகள் இருப் பின் Forest என்கிறோம்.

forest & trees : காடு - மரங்கள் : 'சேனல் கணிப்பு' என்ற அமைவனம் தயாரித்துள்ள தகவல் பகுப்பாய்வுச் செயல்முறை. இதில், பல்வேறு பயன்பாடுகளிலிருந்து தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

form : படிவம் : 1. ஏற்கனவே அச்சிடப் பட்ட ஆவணம் கூடுதல் தகவலைச் சேர்த்து பொருள் உள்ளதாக ஆக்கப் படுகிறது. 2. ஆணைத்தொடர் வெளி யீட்டுப் படிவம்.

form design : படிவ வடிவமைப்பு : தகவல் உள்ளீட்டுப் படிவங்களை யும், மூல ஆவணங்களையும் உருவாக்குதல்.

formal language : முறையான மொழி ; முறைசார் மொழி : புரியாத கணிதப் பொருள்கள். கோபால் அல்லது பேசிக் போன்ற ஆணைத்தொடர் மொழிகள். ஆங்கிலம் அல்லது ஃபிரெஞ்சு போன்ற இயற்கை மொழிகளின் இலக்கணத்தைப் பின் பற்றிப் பயன்படுத்தப்படும்.

formal logic : முறையான தருக்க அளவை : ஒரு வாக்குவாதத்தின் போது பயன்படுத்தப்படும் சொற் களின் பொருளைவிட செல்லத்தக்க வாக்குவாதத்தின் அமைப்பு மற்றும் வடிவம் என்ன என்பதை ஆராய்தல்.

format : வடிவமைத்தல் ; உருவமைவு; வடிவம் : 1. தகவல்களைக் குறிப் பிட்ட முறையில் அமைத்தல். 2. வெளியீட்டுக்கு ஏற்ற வகையில் செய்திகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான ஆணைத்தொடர்.

formatted display : வடிவமைக்கப் பட்ட காட்சி ; வடிவுறு காட்சி : ஒன்று அல்லது மேற்பட்ட காட்சிப்புலங் களின் உள்ளடக்கம் அல்லது தன்மை களை, பயனாளர் வரையறுக்கும் திரைக்காட்சி.

format operation : உருவமைவுச் செயற்பாடு.

format specification : உருவமைவுக் குறிப்பீடுகள்; உருவமைவு வரையறை கள்:

formatter : வடிவமைப்பு ; வடிவூட்டி : செய்திகளை வடிவமைக்கும் சொல் பகுப்பி ஆணைத்தொடரின் பகுதி.

form factor : வடிவக் காரணி : ஒரு சாதனத்தின் இயற்பியல் வடிவளவு.

form feed (FF) : பக்கம் நகர்த்தி ; படிவ அளிப்பு : அடுத்த பக்கத்தின் உச்சிப் பகுதிக்குக் காகிதத்தை முன்னே நகர்த்துகிற ஒரு கட்டுப்பாட்டுக் குறியீடு மற்றும் பொத்தான்.

form feed character : பக்கம் நகர்த்தி எழுத்து : அடுத்த பக்கத்தின் அல்லது உருப்படிவத்தின் முதல் வரிக்கு நகர்த்துவதற்கு ஓர் அச்சடிப்பியைப்

பயன்படுத்துகிற ஓர் உருவமைவுத் தூண்டு சாதனம்.

form filling : படிவம் நிறைவு செய்தல்; படிவ நிறைவாக்கம்.

form letter programme : படிவ எழுத்து ஆணைத்தொடர் ; படிவ மடல் ஆணைத் தொடர் : படிவ எழுத்துகளை உருவாக்கும் ஆணைத்தொடர். சங்கம அச்சு ஆணைத் தொடர் என்றும் அழைக்கப்படுகிறது.

formal language : முறைசார் மொழி.

forms control : படிவக் கட்டுப்பாடு : தகவல் அளிக்க, சேகரிக்கப் பயன்படுத்தப்படும் ஆவணங்களைப் பயன்படுத்துவதில் வழிகாட்டுவதற்காக ஒரு நிறுவனம் ஏற்படுத்தும் நடப்புச் செயல்முறை.

formula : வாய்பாடு : ஒரு சமன்பாடாகக் கூறப்படும் விதி. சான்றாக ஒரு வட்டத்தின் வெளிச்சுற்றைக் கண்டு பிடிக்க $C = 2\pi r$ என்ற வாய்பாடு கூறப்படுகிறது. சில அளவுகளின் சம உறவைக் காட்டும் வழி. மற்ற அளவுகளைக் கொடுத்து ஒரு அளவைக் கணக்கிடுவதற்குப் பயன்படுவது.

formula translator : வாய்பாடு மொழி பெயர்ப்பி.

form view : உருப்படிவக் காட்சி : முன் அச்சிட்ட உருப்படிவம் போன்று வரிசைப்படுத்தப்பட்ட ஓர் இனத்தை அல்லது பதிவேட்டினைக் காட்டுகிற திரைக்காட்சி. இது, 'அட்டவணைக் காட்சி' (Table view) என்பதிலிருந்து வேறுபட்டது.

format effector : உருவமைவுத் தூண்டுச் சாதனம் :' பதிவு செய்யப்பட்ட அல்லது பொதுவாக ஒரு குறியீடு மூலம் காட்சியாகக் காட்டப்படுகிற, தகவல் அச்சடிப்பு உருவமைவினைச் சீரமைவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு கட்டுப்பாட்டு எழுத்து.

format programme : உருவமைவுச் செயல்முறை : ஒரு வட்டு வைத்துக் கொள்ளக்கூடிய சேமிப்புக் கூறு ஒவ்வொன்றின் மீதுள்ள கூறு அடையாளத்தைப் பதிவு செய்வதன் மூலம் ஒரு காலி வட்டினைத் தொடங்கி வைக்கிற மென்பொருள்.

format specification : உருவமைவுத் தனி வரையறை ; உருவமைவு வரையறை : செயல்முறை உட்பாட்டுக்கும் வெளிப்பாட்டுக்கும் இடையிலான தொடர்பினைக் குறித்துரைக்கும் முறைசார்ந்த தருக்க முறைமையினைப் பயன்படுத்துகிற தானியக்கச் செயல் முறைப்படுத்தும் உத்தி.

Forrester, Jay : ஃபாரஸ்டர், ஜே : அமைப்பு மாற்றத் துறையில் தலைவராகக் கருதப்படுபவர். 1951 முதல் 1965-க்குள் உருவான பெரும்பாலான கணினிகளில் உள் நினைவகமாகப் பயன்பட்டுவந்த காந்த மையத்தை உருவாக்கியவர். எம்.ஐ.டி-யில் ஒரு அணிக்குத் தலைமை வகித்தவர். இன்றைய வணிக எந்திரங்களின் வரிசையில் ஆரம்பக் கணினியால் செல்வாக்குப் பெற்ற விர்ல் வின்ட் கணினியை உருவாக்கியவர். காந்த மைய நினைவகமும் இணைவான ஒரே நேர முறையும் கணினியின் உள்ளே தகவலைக் கையாள்வதற்கு ஏற்றதென்று விர்ல் வின்ட் வடிவமைப்பாளர்கள்தாம் முதன்முதலில் மெய்ப்பித்துக் காட்டினர்.

for statement : தீர்மானித்து திரும்பச் செய் கட்டளை : ஓர் ஆணைத் தொடரில் சில குறிப்பிட்ட கட்டளைகளை, குறிப்பிட்ட தடவைகள் திரும்பத் திரும்ப நிறைவேற்றுகிற கட்டளை வாக்கியச் சொல். இது தனது சொந்தக்

கட்டுப்பாட்டுத் தகவல்களை உள்ளடக்கியிருக்கிற ஒரு வளையத்தை உண்டாக்குகிறது.

FORTH : ஃபோர்த் (கணிப்பொறி மொழிகளில் ஒன்று) : செயல்முறை ஆணைத்தொடர் அமைப்பதில் பயன்படுத்தப்படும் ஆணைத் தொடர் மொழி. உற்பத்தித்திறன், நம்பகத் தன்மை மற்றும் செயல்திறன்களில் பயன்படுத்த குறிப்பாக ஏற்றது. வடிவமைப்பு ஆணைத்தொடரமைத்தல், மேலிருந்து கீழ் வளர்ச்சி, மாய நினைவகம் ஆகியவற்றில் பயன்படுத்த ஏற்றது. மாய அடுக்கு நினைவகத்திற்கு ஏற்றதொரு பெரு மொழியாக கூறப்படுவது.

FORTRAN : ஃபோர்ட்ரான் (ஆணைத் தொடர் மொழி) : Formula Translator என்பதன் குறும்பெயர். பரவலாகப் பயன்படுத்தப்படும் உயர்நிலை ஆணைத்தொடர் மொழி. கணித, அறிவியல் மற்றும் பொறியியல் கணிப்புகளுக்குப் பயன்படுத்தப்படுவது. அமெரிக்கத் தரநிர்ணய ஆணைத் தொடர் மொழியாக இரண்டு பதிப்புகளில் -ஃபோர்ட்ரான், பேசிக் ஃபோர்ட்ரான் - ஏற்கப்பட்டது.

FORTRAN 77 : ஃபோர்ட்ரான் 77 : ஃபோர்ட்ரானின் ஒரு வடிவம். அன்சி 3.9.1978 தர நிர்ணயத்திற்கு ஏற்றது. நுண்கணினி சூழ்நிலைகளில் பயன்படுத்தும் கூடுதல் வசதி பெற்றது.

FORTRAN translation process : ஃபோர்ட்ரான் மொழிபெயர்ப்பு செயல்முறை : ஃபோர்ட்ரான் மொழியில் எழுதப்பட்ட ஆணைத்தொடரில் கணிப்பு முடிவுகளை உருவாக்கப் பயன்படும் செயல்முறை. கணினிகள் ஆணைத் தொடர்களைத் தொகுக்கவும் செயல் படுத்தவும் உதவுவது.

forward chaining : முன்னோக்கி சங்கிலியிடல்; முன்னோக்குப் பிணைப்பு: தெரிந்த நிலைகளிலிருந்து விரும்பும் இலக்கை நோக்கிச் செல்லும் நிகழ்வு இயக்கும் காரண முறை. Backward chaining என்பதற்கு மாறானது.

forward compatible : முன்னோக்கு ஒத்திசைவு : 'மேல்நோக்கு ஒத்திசைவு' (Upward Compatible) என்பதும் இதுவும் ஒன்றே.

forward error correction : முன்னோக்குப் பிழைதிருத்தம் : ஏற்பு முனையில் தவறான தகவல்களைத் திருத்தக் கூடிய செய்தித் தொடர்பு உத்தி. அனுப்பீட்டுக்கு முன்பு, பிழை திருத்தத்திற்காக கூடுதல் துண்மிகளைச் சேர்க்கிற ஒரு படிநிலை முறை மூலமாகத் தகவல்கள் செய்முறைப்படுத்தப்படுகின்றன. அனுப்பப்படும் செய்தி பிழையுடனேயே வருமானால், அதைத் திருத்துவதற்குத் திருத்தத் துண்மிகள் பயன்படுத்தப் படுகின்றன.

forward pointer : முன்னோக்கிய குறிப்பி; முன்னோக்குச் சுட்டி : தகவல் அமைப்பில் அடுத்த பொருளின் இருப்பிடத்தைக் கூறும் குறிப்பி.-

FOSDIC : ஃபோஸ்டிக் : Film Optical Sensing Device for Input to Computers என்பதன் குறும்பெயர். நிரப்பப்பட்ட மக்கள் தொகை படிவ தகவல்களைக் கணினிக்குள் செலுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலகம் பயன்படுத்தும் உள்ளீட்டுச் சாதனம்.

four address instruction : நான்கு முகவரி ஆணை ; நான்கு முகவரி கட்டளை : முடிவுகளை வகைப்படுத்துவதற்கான முகவரி மற்றும் அடுத்து செயல்படுத்தவேண்டிய கட்டளைக்கான ஆணை மற்றும் பிற பட்டியல்

கள் போன்ற இரண்டு இயக்கிகளின் முகவரிகளை வழக்கமாகக் கொண்டிருக்கும் எந்திர ஆணை.

four out of eight code : எட்டில் நான்கு குறியீடு ; எட்டில் நான்கு குறிமுறை : பிழை கண்டுபிடிப்பதற்கான குறியீடு.

fourth generation computers : நான்காம் தலைமுறை கணினிகள் : மிகப் பேரளவு ஒருங்கிணைப்பு தொழில்நுட்பத்தினால் உருவாக்கப் பட்ட இப்போது புழக்கத்தில் உள்ள இலக்கமுறை கணினிகள். விஎல் எஸ்ஐ தொழில்நுட்ப கணினிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

fourth geneation language : நான்காம் தலைமுறை மொழி : பயனாளருக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் ஓர் உயர்நிலை மொழி. இதற்கு, மரபு முறையையும் சொற்றொடரியலையும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. பெயர்ச் சுருக்கம் : 4GL. வழக்கமான உயர் நிலை மரபு முறையையும் சொற்றொடரியலையும் விட மிக முன்னேறிய கணினி மொழி. எடுத்துக் காட்டாக தகவல் தளத்தில், ஆணைப் பட்டியல், ஒரு தகவல் கோப்பிலுள்ள அனைத்துப் பதிவேடுகளையும் காட்சியாகக் காட்டுகிறது. இரண்டாம், மூன்றாம் தலைமுறை மொழிகளில் ஒவ்வொரு ஏட்டினைப் படிக்கவும் கோப்பு முடிவைச் சோதிக்கவும், திரையில் ஒவ்வொரு தகவலையும் காட்டவும், செய்முறைப்படுத்தும் பதிவேடுகள் காலியாகும் அச்செயற் பாட்டினைத் திரும்பத் திரும்பச் செய்யவும் கட்டளைகள் எழுதப்பட வேண்டும். முதல் தலைமுறை மொழிகள் எந்திர மொழிகள் ; இரண்டாம் தலைமுறை மொழிகள் எந்திரம் சார்ந்த ஒருங்கிணைப்பு மொழிகள். Fortran, Cobol, Basic, Pascal, C போன்ற மூன்றாம் தலைமுறை மொழிகள் உயர்நிலைச் செயல்முறைப்படுத்தும் மொழிகள். dBASE, FoxBase, FoxPro போன்றவை நான்காம் தலைமுறைகள் என அழைக்கப்பட்டாலும், இவை உண்மையில் மூன்றாம், நான்காம் தலைமுறை மொழிகள் இணைந்தவை. dBASE list ஆணை என்பது நான்காம் தலைமுறை ஆணை. ஆனால் இதில் செயல் முறைப்படுத்தப்பட்டுள்ள பயன்பாடுகள் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவை. வினவு மொழியும், அறிக்கை எழுது கருவியுங்கூட நான்காம் தலைமுறையைச் சார்ந்தவை.

fox message : சாம்பல் பூத்த செய்தி : ஒவ்வொரு எழுத்தும் ஒரு முனையத்தினால் சரியாக அனுப்பப்படுமாறு சரிபார்ப்பதற்கான ஒரு வாக்கிய எழுத்துருக்கள்.

FPLA : எஃப்பிஎல்ஏ : Field Programmable Logic Array என்பதன் குறும்பெயர். இது பயனாளர் ஆணைத் தொடர் அமைக்கக்கூடிய பிஎல்ஏ. சாதாரண பிஎல்ஏவை அரைக் கடத்தி உற்பத்தித்தொழிற்சாலையில் தான் ஆணைத் தொடர் அமைத்து மாற்ற முடியும்.

fractals : ஃபிராக்டல்ஸ் : அண்மைக் காலத்தில் பெனோயிட் மண்டல் பிராட்டால், குறியீடு அமைக்கப் பட்ட கணிதத் துறையின் ஒரு பிரிவு. கணினி வரைகலையியல் பயன்பாடுகளில், சில தகவல் புள்ளிகளில் இருக்கும் சிக்கல்களில் இருந்து ஒற்றுமையைக் கொண்டுவரும் தொழில் நுட்பம் தொடர்பானது.

fragmentation : சிதறிக் கிடத்தல் ; துண்டாக்கல் : முதன்மை நினைவகத்

தின் அனைத்துப் பகுதிகளிலும் பயன் படுத்தப்படாத இடம் திட்டு, திட்டாக இருத்தல்.

frame : சட்டம் ; திரைக்காட்சி : *1.* ராஸ்டர் ஸ்கேன் காட்சி அலகில் ஒரு முழு ஸ்கேன் உருவாக்கும் ஒளிக் காட்சி (வீடியோ) தோற்றம். 2. முதல் பரப்பில் பதிவாகும் நிலை. காகிதம் அல்லது காந்த நாடா செங்குத்தாக நகரும்போது ஒரு முறை பதிவாகும் குறுக்குவெட்டு அகலம். ஒரு திரைக் காட்சியில் மாறுபட்ட பதிலிடு நிலைகளின் மூலம் பல துண்மி அல்லது துளையிடும் நிலைகளை உருவாக்க முடியும்.

frame base CAI : சட்டக ஆதார கணினி உதவிபெறு கட்டளை : செயல் முறைப் படுத்திய கட்டளைகளை அடிப் படையாகக் கொண்ட கணினி உதவி பெறு கட்டளை உத்தி.

frame-based knowledge : சட்டகம் சார்ந்த அறிவு : சட்டகங்களின் ஒரு படிநிலை அல்லது இணைய வடிவில் குறிக்கப்படுகிற தகவல்.

frame buffer : திரைத்தோற்றம் தாங்கி; சட்டக வைப்பகம் : கணினி வரை கலையில், ஒரு கணினி, படத்தை சேமிக்க ஏற்றுக் கொள்ளும் நினை வகத்தின் சிறிய பகுதி.

frame grabber : சட்டகப் பறிப்பி: கணினி வரைகலையில், ஒளிப் பேழை உருக்காட்சிகளை கணினி உருவாக்க உருக்காட்சிகளாக மாற்று கிற ஒரு சாதனம். இந்தச் சட்டகப் பறிப்பி, செந்நிறத் தொலைக் காட்சிக் குறியீடுகளைப் பெற்று, நடப்பு ஒளிப்பேழைச் சட்டகத்தை ஒரு கணினி வரைகலை உருக்காட்சி யாக இலக்க முறைப்படுத்துகிறது.

frame maker : சட்டக உருவாக்கி : "சட்டகத் தொழில் நுட்பக் கார்ப்ப ரேஷன்" என்ற அமைவனம் தயாரித்த மேசை மோட்டு வெளி யீட்டுச் செயல்முறை. இது யூனிக்ஸ், மெக்கின்டோஷ், விண்டோஸ்ஆகிய வற்றில் செயல்படுகிறது. கட்ட மைவு செய்யப்பட்ட ஆவணங்களுக் குப் பொருத்தமான இது, இதன் முழுமையாக ஒருங்கிணைந்த சொல் செய்முறைப் படுத்துதலுக்கும், வரை கலைத் திறம்பாடுகளுக்கும் புகழ் பெற்றது.

frame relay : சட்டக அஞ்சல் : x. 25-ஐ விட விரைவாக அனுப்பீடு செய் வதற்கு உதவுகிற அதிவேகப் பைய டக்க விசை. இது, குரலைவிட தகவல்களுக்கும் உருக்காட்சிகளுக் கும் பொருத்தமானது.

frame work : வரைச் சட்டம் : பொருள் சார் செயல்வரைவு அடிப்படையில், பயன்பாடுகளை உருவாக்குவதற் கான பொதுவானதொரு துணைப் பொறியமைவு வடிவமைப்பு. இது அருவ வகைப்பாடுகளையும், உருவ வகைப்பாடுகளையும் கொண்டது. பொருள் சார் செயல்வரைவு முறை மென்பொருள் மறுபயன்பாட்டுக்கு உதவுகிறது. வரைச்சட்டங்கள், வடி வமைப்பு மறுபயன்பாட்டுக்கு உதவு கிறது.

franz lisp : ஃபிரான்ஸ் லிஸ்ப் : பெர்க் கியிலுள்ள கலிஃபோர்னியாப் பல் கலைக்கழகம் தயாரித்துள்ள LISP-இன் ஒரு பதிப்பு.

freedom of information act : தகவல் சுதந்திரச் சட்டம் : (அமெரிக்க) ஐக்கிய அரசின் அமைப்புகள் தொகுக்கும் தகவல்களை சாதாரண மக்கள் பெறுவதற்கு அனுமதிக்கும் ஐக்கியச் சட்டம்.

free form : தாராள வடிவம் : தகவல் நுழைவு சமயத்தில் உள்ளீட்டுச் சாத

ஊங்களின் மூலம் நுழைக்கப்படும் குறியீடுகளால் கட்டுப்படுத்தப்படும் ஸ்கேனிங் இயக்கம்.

free-form database : வடிவற்ற தகவல் தளம் : நீளம் அல்லது ஒழுங்கமை வினைப் பொருட்படுத்தாமல் வாசகத்தைப் பதிவு செய்வதை அனுமதிக்கிற தகவல் தளப் பொறியமைவு. இது சொல் பகுப்பியை ஏற்றுக் கொண்டாலும், தேடுதல், மீட்பு, தகவல் சீரமைப்பு ஆகியவற்றுக்கு சிறந்த முறைகளை அளித்து வேறுபடுகிறது.

free-form language : வடிவற்ற மொழி : கட்டளைகள் ஒரு கோட்டில் அல்லது கோடுகளின் குறுக்கு வெட்டில் எங்கேயும் தங்கக்கூடிய மொழி. இது குறைந்த சொற்றொடரியல் கட்டமைவைக் குறிக்கவில்லை. மாறாக, கட்டளைகளை இருத்திவைப்பதில் அதிகச் சுதந்திரத் தைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டு : குறியீடுகளிடையே எத்தனை காலியிடங்களையும் விட்டுவைத்தல். பெரும்பாலான உயர்நிலை மொழிகள் வடிவற்ற மொழிகளாகும்.

freeHand : தாராளச் செயல்முறை : 'அல்டஸ் கார்ப்பரேஷன்' என்ற அமைவனம் தயாரித்துள்ள முழு அம்சங்களும் கொண்ட வரைபடச் செயல்முறை. இதில் பல்வேறு வரைவுக் கருவிகள் தனி உத்திகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

freeware : இலவசப் பொருள் : கட்டணம் இல்லாமல் விற்பனையாளர் கொடுக்கும் மென்பொருள்.

frequency : அதிர்வெண் : ஒலி அழுத்தம், மின்சக்தி தீவிரம் அல்லது பிற அளவுகளில் ஒரு அலை தனது சமநிலை அளவுகளில் இருந்து மாறி ஒரு சுழற்சி ஏற்படுவதற்கு அலகு நேரத்தில் எத்தனை தடவைகள் முடிகிறது என்பதைக் குறிப்பிடுகிறது. மிகவும் பொதுவான அதிர்வெண் அலை ஹெர்ட்ஸ் (Hz); 1Hz ஹெர்ட்ஸ் என்பது ஒரு நொடிக்கு ஒரு சுழற்சி.

frequency counter : அதிர்வெண் எண்ணி ; அலைவெண் காட்டி : குறிப்பிட்ட நேர இடைவெளியில் ஒரு மின் சமிக்ஞை எத்தனை சுழற்சி அடைகிறது என்பதை எண்ணும் மின்னணு சாதனம்.

frequency division multiplexing : அலைவெண் பிரிவினைப் பன்முகமாக்கம் : அனுப்பீட்டு ஊடகத்தின் கட்டுக்கம்பிகளில் அனுப்பப்படும் மின்காந்த அலைக் கற்றை, தருக்க முறைத் தடங்களாகப் பகுக்கப்பட்டிருக்கும் பன்முக வடிவம். இந்த வழிகளில் பன்முகச் செய்திகளை ஒரே சமயத்தில் அனுப்பலாம்.

frequency modulation : அலைவெண் மாறுபாடு : ஒரு குறியீட்டின் அலைவெண், ஈரிலக்க '1'-க்கும் '0'-க்கு மிடையில் பலவிதமாக மாற்றப்படுகிற ஏற்ற இறக்க உத்தி. குறைந்த அலைவெண் '0' ஆகும்.

frequency shift keying (FSK) : அதிர்வெண் மாற்றி விசையிடல் : தகவல் அனுப்பு முறை. இதில் அனுப்பப்படும் 'துண்மி'யின் நிலை கேட்கும் ஒலியால் உணர்த்தப்படும்.

frequency spectrum : அலைக்கற்றை: ஊர்தி மற்றும் அதிர்வெண் குறியீட்டு அலைவெண்களின் கூட்டுத் தொகை மேற்பக்க அலைவெண் எனப்படும். ஊர்திக்கும், அதிர்வெண் குறியீட்டு அலைவெண்களுக்குமிடையிலான வேறுபாடு, கீழ்ப்பக்க அலைவெண் எனப்படும்.

friction feed : உராய்வு அளிப்பு ; உராய்வு வழி ஊட்டல் : காகிதம்

அளிக்கும் அமைப்பு. இரண்டு உருளைகளுடன் இணைத்து காகிதத்தை அனுப்பும் முறை. உருளைகள் சுழலும்போது காகிதம் அச்சடிக்கப்படும் இடத்திற்கு இழுத்து வரப்படுகிறது. தட்டச்சுப் பொறிகள் மற்றும் பல அச்சுப்பொறிகள் இம்முறைகளைப் பயன்படுத்துகின்றன. தனி தாள் அளிப்பு முறைக்கு இது மிகவும் ஏற்றது. Tractor feed mechanism என்பதற்கு எதிர்ச்சொல்.

friendliness : தோழமை : ஒரு கணினி அல்லது ஆணைத் தொடருடன் சேர்ந்து இயங்குவது எவ்வளவு எளிமையானது என்பதைக் காட்டுகிறது. பயனாளர் - தோழமை ஆணைத் தொடரைக் கற்றுக் கொள்ள குறைந்த நேரமே போதுமானது ; பயன்படுத்த எளிதானது.

friendly interface : தோழமை பரிமாற்றம் ; தோழமை இடைமுகம் : முகப்புக் கருவி மற்றும் கணினி ஆணைத்தொடர் ஆகிய இரண்டையும் இணைத்து வடிவமைத்து, எப்போதாவது கணினியை இயக்குபவருக்கும் எளிமையாகச் செய்து தருவது.

frob : ஃப்ராப் : ஜாய்ஸ்டிக் அல்லது சுட்டுப்பொறி (மவுஸ்) போன்ற பிடிக்கும் சாதனத்துடன் விளையாடுவது.

front and end processor : தொடக்க மற்றும் இறுதிச் செயலகம் : புரவலர் கணினியின் தொடக்கம் / இறுதியில் உள்ள தனி தகவல் தொடர்பு கணினி. தகவல் தொடர்புக்கு வரிசை ஒதுக்குதல், தகவல் மாற்றல் பிழை ஆய்தல், செய்தி கையாளல் மற்றும் பிற விவர தகவல் தொடர்பு பணிகளைக் கையாண்டு புரவலர் கணினிக்கு இந்த வேலைகளைக் குறைக்கிறது.

front panel : முன் பலகை ; முகப்புப் பலகை : பொத்தான்கள், காட்டிகள் தொகுதி. இதன் மூலம் கணினியை இயக்குபவர் கணினி அமைப்பைக் கட்டுப்படுத்துவார்.

front end processor : முன்னணிச் செயலகம்.

fry : வறு : மிக அதிக வெப்பம் அல்லது மின்சாரம் செலுத்துவதன் மூலம் ஒரு மின்சுற்றினைப் பாழாக்குதல்.

fs : எஃப்எஸ் : femto second என்பதன் குறும்பெயர்.

FSK : எஃப் எஸ் கே : Frequency Shift Keying என்பதன் குறும்பெயர்.

full adder : முழுக்காட்டி ; முழுமைக் கூட்டி : மூன்று இருமை துண்மிகளை தனித் தனியே உள்ளீடாகப் பெற்று அவற்றைக் கூட்டும் திறனுடைய கணினி மின் சுற்று. அவற்றில் ஒன்று முன்பு கூட்டப்பட்டதில் மீதியைக் கொண்டு செல்லும்.

full frame : முழுமைச் சட்டகம்.

full screen : முழுத் திரை.

full duplex : முழு இருதிசை இயங்கி ; முழு இருவழிப் போக்கு : ஒரு தகவல் தொடர்பு இணைப்பில் இரு திசைகளிலும் தகவல்களைத் தனித்தனியாக ஒரே நேரத்தில் அனுப்புவது பற்றியது. half duplex மற்றும் simplex ஆகியவற்றுக்கு எதிர்ச்சொல்.

full featured : முழு வடிவம் : ஒரே வகையைச் சேர்ந்த மிக முன்னேறிய உருமாதிரிகளுடன் அல்லது செயல்முறைகளுடன் ஒப்பிடத்தக்க திறம்பாடுகளையும், செயற்பணிகளையும் கொண்ட வன்பொருள் அல்லது மென்பொருள்கள்.

full frame : முழுத் திரை : ஒரு காட்சித் திரையில் பார்க்கக்கூடிய முழுப்

பகுதியையும் பார்க்கும் அளவுக்கு ஒரு படத்தின் அளவை மாற்றும் செயல்முறை.

full-page display : முழுப்பக்கம் காட்டுதல் ; முழுப்பக்கக் காட்சி : திரையில் ஒரு நேரத்தில் 21 X 28 செ.மீ அளவுக்கு செய்தியைக் காட்டும் சொல் பகுப்பி அமைப்புகளில் பயன்படுத்தப்படும் முனையம்.

full path : முழுப் பாதை : இயக்கம், தொடக்கம், விவரக்குறிப்பேடு, துணை விவரக் குறிப்பேடுகள் ஆகியவற்றை உள்ளடக்கி, கோப்பின் அல்லது பொருளின் பெயருடன் முடிவடையும் பாதைப் பெயர்.

full project life cycle : முழுத் திட்ட ஆயுள் சுழற்சி : தொடக்கம் முதல் முடிவு வரையிலான திட்டம்.

fully populated : முழு இடவசதிப் பலகை : மிக அதிக எண்ணிக்கையிலான சிப்புகளைச் செருகுவதற்கு இடவசதி கொண்ட ஓர் அச்சிட்ட சுற்றுவழிப் பலகை.

full screen : முழுத் திரை : ஒளிக் காட்சித் (வீடியோ) திரையின் முழு முகமும் காட்சித் திரையாகப் பயன்படும் சூழ்நிலை.

full screen editing : முழுத் திரை தொகுப்பு ; முழுத் திரைப் பதிப்பு : சொற்களை மாற்றுவதற்காக திரை முழுவதும் சுட்டியை நகர்த்தும் திறன்.

full text searching : முழு சொல் பகுதி தேடுதல் ; முழுத் திரை தேடல் : கணினியின் துணை நினைவகத்தில் சேமிக்கப்பட்டுள்ள ஒரு கட்டுரை அல்லது நூலின் முழு சொற் பகுதியையும் தேடி குறிப்பிட்ட தகவலைக் கண்டறிதல்.

fully formed characters : முழுதாக உருவான எழுத்துகள் : தட்டச்சுப் பொறி அல்லது டெய்சி சக்கர அச்சுப் பொறியில் உள்ளது போன்ற அச்சிடப்பட்ட எழுத்துகள்.

function : பணி ; செயல்முறை; செயல் கூறு; சார்பு : 1. ஒரு மதிப்பினை உருவாக்கும் செயல்முறை. 2. செயலாக்கப்படும் வழக்கச் செயல். 3. ஒரு பெரிய செயல்திட்டத்துக்கு ஆணைத் தொடர் வரையும்போது, அச்செயல் திட்டத்தை சிறுசிறு பணிக்கூறுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பணிக் கூறுக்கும் தனித்தனியே ஆணைத் தொடர் அமைத்து, பின்பு ஒருங்கிணைத்து இயக்கலாம். ஒரு சிறிய பணிக்கூறு அல்லது செயல் கூறு ஃபங்ஷன் எனப்படுகிறது.

function call : செயற்பணி அழைப்பு : மையச் செயலகத்துக்கு (CPU) ஒரு செயற்பணியை ஏற்றி, நிறைவேற்று மாறு அறிவுறுத்துகிற ஒரு செயல் முறைக் குறியீடு. செயற்பணி அழைப்புடன் சேர்ந்து வாதங்கள் அல்லது நிலையளவுருக்களும் செல்லும்.

functional decomposition : செயற் பணிச் சிதைவு : ஒரு செய்முறையை செயற்பாடுகாளாகப் பகுத்தல்.

functional description : பணிமுறை விளக்கம் ; செயல் விவரிப்பு : ஒரு கணினி அமைப்பின் தேவைகளை அடையாளம் காணப் பயன்படுத்தப் படும் சொற்றொடர்.

functional design : பணிமுறை வடிவமைப்பு ; செயல்வடிவமைப்பு : ஒரு கணினி அமைப்பின் பல்வேறு பகுதிகளுக்கும் அவற்றின் இயல்பான செயல்களுக்கும் இடையிலான நடைமுறை உறவுகளை விளக்குதல்.

functional programming : பணிமுறை ஆணைத்தொடர் : பணி பயன்பாடு

களைக் கட்டுப்பாட்டு அமைப்பாகப் பயன்படுத்தும் ஆணைத்தொடர்.

functional specification : பணிமுறை வரையறுப்பு : ஒரு புதிய கணினி அமைப்பு என்ன செய்யும் என்று விளக்கும் உள்ளீடு, செயலாக்கம், வெளியீடு மற்றும் சேமிப்பகத் தேவைகளின் தொகுதி. ஒரு புதிய கணினி அமைப்பில் தருக்க முறை விளக்கத்தை விரிவாகக் கூறுவது.

functional units of a computer : ஒரு கணினியின் பணிமுறை அலகுகள் : இலக்க முறை கணினிகளில் கணித-தருக்க அலகு, சேமிப்பக அலகு, கட்டுப்பாட்டு அலகு, உள்ளீடு மற்றும் வெளியீட்டுச் சாதனங்கள்.

function codes : பணிமுறை குறியீடுகள் : வெளிப்புறச் சாதனங்களில் கட்டுப்பாட்டுப் பணிகளுக்கு உதவும் சிறப்புக் குறியீடுகள்.

காட்சித்திரையை காலி செய் என்பது ஒரு பணிக் குறியீடு.

function key : பணி விசை ; செயல்முறை விசை ; சார்புச் சாவி ; செயற்பணி விரற்கட்டடை ; இயக்கச் சாவி : சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விசை. இதை அழுத்தும்போது கணினியின் விசைப்பலகை, சொல் பகுப்பி அல்லது வரைகலை முதலியவற்றில் சில பணிகளைத் துவக்குகிறது.

function keys : அலுவல் பணி விரற்கட்டைகள்.

function library : செயற்பணி நூலகம் : செயல்முறை வாலாயங்களின் தொகுப்பு.

function subprogramme : பணி ஆணைத் தொடர் : ஒரு தனி மதிப்பு முடிவினைத் திருப்பி அனுப்பும் துணை ஆணைத்தொடர்.

funware : விளையாட்டுப் பொருள் : நிறுவனப்பொருளில் உள்ள விளையாட்டு ஆணைத்தொடர்.

fuse : உருகி : அளவுக்கு மேலான சுமை ஏற்றப்படும்போது ஒரு மின் சுற்றினைத் துண்டிக்கும் பாதுகாப்பு தற்காப்புச் சாதனம். உருகிக்கு மேலே உள்ள மின்னோட்டம் உருகியின் இணைப்பினை உருகவைத்து மின் சுற்றினைத் துண்டிக்கும். மின்சாரம் அளவுக்கு அதிகமாகப் போவதைத் தடுத்து கருவியைப் பாதுகாக்க பெரும்பாலான கணினி சாதனங்களில் இது பயன்படுத்தப்படுகிறது.

fused-on toner : உருக்கு விசை : ஓர் ஊர்தி உருமணி, ஒளிக்கடத்தி அல்லது வன்பொருள் போன்ற செய்முறைப்படுத்தும் பொருளுடன் இணைப்பதற்குத் தேவைப்படும் அளவுக்குச் சூடாக்கப்படும் உருக்கு விசை.

fush : ஃபுஷ் : 1. ஒரு இருப்பகத்தில் இருக்கும் உள்ளடக்கங்களில் ஒரு பகுதியைக் காலி செய்தல். 2. எழுத்துகளை வரி, வரியாக அமைக்கும் போது இடது பக்கமாகவோ அல்லது வலது பக்கமாகவோ அமைத்தல்.

fusible link : சங்கமிக்கும் இணைப்பு : பரவலாகப் பயன்படும் ஆணைத் தொடரமைப்புத் தொழில் நுட்பம். அதிக மின்சக்தியைப் பயன்படுத்தி ஒரு சேமிப்பகச் சாதனத்தில் உலோக இணைப்பைத் துண்டித்து '0'வை உருவாக்குவது. கடத்தும் பொருளை 1 ஆகக் கருதுவது.

fuzzy logic : மங்கல் : கணினி மூலம் ஒரு தகவலை 0, 1 களின் தொகுதியாக மாற்றும்போது சில வேளைகளில் தகவலின் துல்லியத்தன்மை கெட்டு விடுகிறது. துல்லியம் தேவைப்படுகின்ற தகவல்களை, 0-வுக்கும் 1-க்கும்

இடைப்பட்ட நிலைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, கணினி முறைக்கு மாற்றும் தருக்க முறை.

fuzzy search : மங்கல் தேடுதல் : தேவையான தகவல்களுக்கு மிக நெருக்கமான தகவல்களைத் தருகிற வகையில் தகவல்ககளைத் துல்லிய மின்றித் தேடுதல்.

fuzzy set : மங்கல் தொகுதி : ஒரு தொகுதித் தேற்றத்தில் அனைத்துக் கும் அல்லது எதற்கும் பதிலாக பல் வேறு அளவு தொகுதி உறுப்பாண் மைக்கு அனுமதிக்கிற ஒரு பொது முறை.

fuzzy theroy : மங்கல் தேற்றம் : கணினியில் செய்முறைப்படுத்து வதற்கு இடமளிக்கும் வகையில் தக வல்களையும், மனிதரின் பகுத்தறி வையும் குறிப்பாக குறிப்பதற்கு வடி வமைக்கப்பட்டுள்ள தருக்க முறை யின் ஒரு பிரிவு.

G

G : ஜி : "ஜிகா" என்பதன் குறியீடு. ஜிகா என்பது ஏறத்தாழ நூறு கோடி. கணினியில் இதன் மதிப்பு 1,073, 741,824, (230) ஆகும் ; வழக்கமான 1,000,000,000 அன்று. இது __ ஐ விட அதிகம் எனப் பொருள்படும் "Greater than" என்பதன் சுருக்கக் குறியீடு.

gage array : வழிவரிசை.

gain : ஆதாயம் ; பெருக்கம் : ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சமிக்ஞைகளை அனுப்பும்போது பெருக்கிகள் மூலம் மின்சக்தி அல்லது சமிக்ஞையின் சக்தி அதிகரித்தல். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் போகும் டெசிபல் முறையில் ஆதாயத்தின் அளவு கூறப்படும்.

gallium aresenide : கேலியம் ஆர் செனைடு : உயர்நிலை அரைக்கடத்திகளை உருவாக்கப் பயன்படும் படிகப்பொருள். சிலிக்கானை விட உயர்ந்தது. ஆனால் அதிகம் செலவாகக் கூடியது.

game pack : விளையாட்டுத் தொகுதி: ஒரு கணினியில் ஒரு குறிப்பிட்ட விளையாட்டினை இயக்குவதற்கான ஓர் ஆயத்தச் செயல்முறை.

games theory : விளையாட்டுத் தேற்றம் ; விளையாட்டுக் கொள்கை ; விளையாட்டுக் கோட்பாடு : நிகழ் தகவு (Probability) தொடர்பான கணிதவியலின் ஒரு பிரிவு. ஒரு விளையாட்டுத் தந்திரத்தைக் கொண்டிருக்கிற ஓர் எதிராளியை எதிர்கொள்வதற்குப் பெரிதும் உகந்த ஓர் தந்திரத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான கணிதச் செய்முறை. இந்தச் சொல்லை 1928இல் முதன்முதலாக ஜான் வான் நியூமென் பயன்படுத்தினார். கணினி வரைகலை யில் கண்ணுக்கு ஒரே மாதிரியாகப் புலனாகக் கூடிய பல்வேறு செறிவுகளைத் தரக்கூடிய ஒரு சூத்திரம்.

gamut : வண்ணக்களம் : கணினி காட்சித் திரையில் காட்டக்கூடிய மொத்த வண்ணங்களின் வரிசை.

gang punch : குழு துளை : துளையிடும் அட்டைகளின் குழுவில் உள்ள அனைத்து அட்டைகளுக்கும் ஒரே மாதிரியான அல்லது நிலையான தகவலைத் துளையிடுவது.

gantt chart : கேன்ட் வரைபடம் : பணிகள் அல்லது நடவடிக்கைகளின் ஆரம்பம் மற்றும் முடிவு முனைகளைக் குறிப்பிட நேர அடிப்படையில் பட்டைக் கோடு அல்லது அம்புக்குறி மூலம் குறிப்பிடும் வரைபடம். ஒரு திட்டத்தின் குறிப்பிட்ட காலக்கெடு அல்லது சாதனைகளைக் குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது.

gap : இடைவெளி : கோப்பு இடைவெளிபோல் அல்லாது இரண்டு பதிவேடுகள் அல்லது தகவல் தொகுதிகளுக்கு இடையிலுள்ள மின்காந்த நினைவக இடைவெளியைக் குறிப்பிடுவது.

gapless : இடைவெளியின்மை : ஒரு தொடர்ச்சியான விசையோட்டத்தில் இடைத்தடை இடைவெளிகள் இல்லாமல் பதிவு செய்யக்கூடிய காந்த நாடா.

garbage : குப்பை : 1. தகவல் நுழைவின் தவறுகள் அல்லது கணினி ஆணைத்தொடரின் பிழைகள் அல்லது எந்திரக் கோளாறு போன்றவற்றின் காரணமாக கணினி ஆணைத் தொடரின் மூலம் ஏற்படும் சரியல்லாத விடைகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் சொல். 2. இருப்பகத்திற்குக் கொண்டு செல்லப்படும் தேவையற்றதும், பொருளற்றதுமான தகவல்கள்.

garbage collection : குப்பை சேர்த்தல் ; குப்பை திரட்டல் : ஒரு கோப்பிலிருந்து செயலற்ற இருப்பிடங்களைத் துடைத்தெடுப்பதற்கு இவ்வாறு கூறுவார்கள்.

gas display : வாயு காட்சி ; வளிமத் திரைக்காட்சி : மின்சாரம் செலுத்தப்படும்போது ஒளி வீசுகின்ற வகையில் நிரப்பப்பட்ட காட்சித்திரை பலகையில் உள் செயலற்ற வாயு. ஒளி வீசும் வாயு மூலம் தேவைப்படும் இடங்களில் டாட் மேட்ரிக்ஸ் போன்ற முறையில் எழுத்துகள், படங்கள் ஆகிய வடிவில் மின்சாரம் செலுத்துவதன் மூலம் புள்ளிகளை உருவாக்க முடியும்.

garbage in garbage out : குப்பையிடக் குப்பை வரும் : மோசமான தகவலை உள்ளிடுவதையும், அதே போன்ற மோசமாக வெளிப்பாட்டை ஒரு முடிவாகப் பெறுவதையும் குறிக்கும் வழக்குச் சொல்.

gate : வாயில் ; கதவு : 1. ஒரு வெளியீட்டைக் கட்டுப்படுத்தும் இரண்டு அல்லது மேற்பட்ட உள்ளீடுகள் கொண்ட அளவை மின்சுற்று. 2. ஆரம்பத்திலிருந்து வடிந்து போகும் வரை மின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் புல விளைவு டிரான்சிஸ்டர்களைக் கட்டுப்படுத்தும் பொருள்.

gate array : வாயில் வரிசை : தொடர்பில்லாத தருக்க முறைக் கூறுகளைக் கொண்டிருக்கிற சிப்புவகை. கூறுகளிடையிலான பாதைகளின் மேற்பரப்பு உலோகப் படுகையினை அடியொற்றிச் செல்கிற முடிவுறுத்தப்பட்ட, வழக்குறுத்தப்பட்ட சிப்பு.

gateway : நுழைவாயில் ; நுழை வாயில் பாதை : இரண்டு வேறுபட்ட தகவல் தொடர்பு பிணையங்களை ஒன்றாகச் சேர்த்து இணைக்கும் கணினி. ஒரு உள்ளூர்ப் பிணைய கணினி அமைப்பு மற்றொரு உள்ளூர்ப் பிணைய கணினி அமைப்புடன் தகவல் தொடர்பு கொண்டு தகவல்களைப் பங்கிட்டுக் கொள்ளும் வகையில் இது பயன்படுத்தப்படுகிறது.

gather : வரிசை ஆணை : சில தகவல் மொழிகளில் பதிவேடுகளை ஒரு வரிசையில் படிப்பதற்கான ஒரு ஆணை.

gather write : விசை ஆணை எழுத்து : அடுத்தடுத்து, அமைந்திராத இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட நினைவக அமைவிடங்களிலிருந்து ஒரே எழுத்துச் செயல்பாடு மூலம் தகவல் வெளிப்பாடு செய்தல்.

gating circuit : வாயிலமைக்கும் மின்சுற்று ; வாயில் மின்சுற்று : தேர்ந்தெடுக்கும் பொத்தானாக இயங்கும் மின் சுற்று. குறிப்பிட்ட கால இடைவெளிகளின்போது அல்லது சமிக்ஞையின் அளவு குறிப்பிட்ட எல்லைகளுக்கிடையில் இருக்கும்போது மட்டும் மின்சாரம் கடத்தப்பட இந்த மின்சுற்று அனுமதிக்கும்.

gauss : காஸ் : காந்த ஆற்றலை அளவிடும் அலகு.

gaussian distribution : குறிப்பற்ற பகிர்மானம் : மணி வடிவ வளைகோட்டினை வரைகோடாக வரையப்படுகிற நிகழ்வுகளின் குறிப்பற்ற பகிர்மானம். இயல்பான அல்லது புள்ளிவிவர நிகழ்தகவு வெளிப்பாட்டினை குறிப்பிடுவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது.

gaussian noise : குறிப்பற்ற ஓசை : செய்தித்தொடர்புகளில், ஒரு கம்பியில் மின்விசையோட்டத்தின் மூலம் குறிப்பின்றி உருவாக்கப்படும்

இடையீடு. இதனை "வெண்மை ஓசை" (White noise) என்றும் கூறுவர்.

GB : ஜிபி : giga byte என்பதன் குறும் பெயர்.

GCR : ஜிசிஆர் : குழுக்குறியீட்டுப் பதிவு.

GE : ஜிஈ : ஒரு செய்முறையில் ஒரு தொடர்முறை இயக்கியாகப் பயன் படுத்தப்படுகிற ஒரு சுருக்கக் குறியீடு. இது, "___- ஐ விட அதிகம்" அல்லது " ____ க்குச் சமம்" என் பதைக் குறிக்கும்.

gear wheels : பல்லிணைச்சக்கரங்கள்.

geek : கற்றுக்குட்டித்தனம் : நாகரிக மற்ற முறையில் கணினியைப் பயன் படுத்துவது.

GEM : ஜிஇஎம் (வரைகலைச் சூழல் மேலாளர்) : Graphics Environment Manager என்பதன் முன்னெழுத்துச் சுருக்கம். "இலக்கமுறை ஆராய்ச்சி" எனப்படும் டிஜிட்டல் ரிசர்ச் அமை வனம், சொந்தக் கணினிகளுக்காகத் (PC) தயாரித்துள்ள வரைகலைப் பயன்படுத்துவோர் இடைமுகப்பு. "வெஞ்சுரா பப்ளிஷர்" என்ற அமை வனம், இதன் "இயக்க நேரப் பதிப்பு" ஒன்றைத் தயாரித்துள்ளது.

GEMISCH : கெமிஷ்ச் : மருத்துவப் பதிவு பயன்பாடுகளுக்காக உருவாக் கப்பட்ட ஆணைத்தொடர் மொழி.

genapp : ஜெனாப் : DCM தகவல் பொருள்களுக்கான ஒரு பொறி யமைவு. இது நான்காம் தலைமுறை பயன்பாட்டு மேம்பாட்டுப் பொறி யமைவு ஆகும்.

gender bender : பாலின மாற்றி : ஒரு மின்னியல் இணைப்பியின் பாலினத் தைத் தலைகீழாக மாற்றுகிற ஒரு சிறிய மின்னிய இணைப்பி. (ஆண் பெண் ; பெண் ஆண்).

genera : ஜெனரா : ஒரு மொழி உரு வமைவிலிருந்து இன்னொரு மொழிக்குத் தகவல்களை மாற்று வதற்குப் பயன்படுத்தப்படுகிற ஒரு தகவல் மாற்று மென்பொருள்.

general format : பொது உருவமைவு : "லோட்டஸ் 1-2-3" என்ற விரிதாள் செயல்முறையை உருவாக்குவதற் கான உருவமைவு.

generality : பொதுவான தன்மை ; பொதுமை : ஒரு பொதுவான தேவை உள்ள பல தரப்பட்ட பயனாளருக் குப் பயன்படும் வகையில் சிக்கல் களுக்குத் தீர்வளிக்கும் கணினி ஆணைத்தொடர் பற்றியது. சம்பளப் பட்டி ஆணைத்தொடர் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கணக்கிடப் பட்ட நிகர சம்பளம் குறிப்பிட்ட அள வுக்கு மேலே போனால் இதில் ஒரு எச்சரிக்கை சமிக்ஞை வரும். குறைந்த பொதுத்தன்மை கொண்ட ஆணைத்தொடர் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டிருக்கும். பொதுத் தன்மை உள்ள ஆணைத்தொடர் ஒவ் வொரு தனிப்பட்ட பயனாளரும் தனது எல்லை மதிப்பைக் குறிப்பிட வேண்டும் அல்லது எச்சரிக்கை தரும் முறையை மொத்தமாக நிறுத்திவிட வேண்டும்.

generalization : பொது வடிவ மாக்குதல்.

generalized programme : பொது மையாக்கிய செயல்முறை : ஒரு மாறு கிற சுழலுக்கு உதவிபுரிகிற மென் பொருள். இது, மாறியல் செய்திக் குறிப்புகளைப்புகுத்த அனுமதிப் பதன் மூலம், இந்தச் செயல்முறை, பல்வேறு பயனாளருக்காக அல்லது சூழ்நிலைகளுக்காக ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண்கிறது.

generalized routine : வாலாயமான பொதுச் செயல்முறை : ஒரு குறிப் பிட்ட வகையான பயன்பாட்டுக்குள் பரந்த எல்லையுடைய பணிகளைச் செய்யுமாறு வடிவமைக்கப்பட்ட வழக்கச் செயல்முறை.

general - purpose (GP) : பொதுநோக்கம் ; பொதுநோக்கு : மாற்றங்கள் செய்யத் தேவையின்றியே பலதரப்பட்ட பயன்பாடுகளுக்கு செயல்படக் கூடியது. Special Purpose மற்றும் dedicated என்பதற்கு எதிர்ச்சொல்.

general - purpose computer : பொது நோக்கக் கணினி : பல வகையான சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் உருவாக்கப்படும் கணினி. பெரும்பாலான இலக்கமுறை கணினிகள் இந்த வகையைச் சேர்ந்தவை. Special Purpose Computer என்பதற்கு எதிர்ச் சொல்.

general-purpose language : பொது நோக்க மொழி : பலவிதமான சிக்கல்களுக்கும் தீர்வு காண்பதற்காகப் பயன்படுத்தப்படும் செயல் வரைவு படுத்தும் மொழி. FORTRAN, COBOL, BASIC, PASCAL முதலிய பொதுச் செயல்வரைவு மொழிகள் அனைத்தும் இதற்கு எடுத்துக்காட்டுகள். இது, "தனிநோக்க மொழி" (Special Purpose Language) என்பதிலிருந்து வேறுபட்டது.

general purpose register (CPU) : பொது நோக்கப் பதிவேடு ; பொது நோக்குப் பதிவகம் : பட்டியலிடல், முகவரியிடல், கணித மற்றும் தருக்க முறை இயக்கங்களுக்குப் பயன்படும் மையச் செயலக அலகின் பதிவேடு.

generate : உருவாக்கு ; ஆக்கு : உருவாக்கி ஒன்றின் பயனுக்காக ஆணைத் தொடரைஅமைத்தல். அந்த ஆணைத் தொடர் சில வரையறைகளுக்குட் பட்டு குறிப்பிட்ட குறியீட்டுத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுத்து அமைக்கப்படும்.

generation : தலைமுறை : கணினி தொழில்நுட்ப முன்னேற்றத்தினைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் சொல். முதல் தலைமுறைக் கணினிகளில் வெற்றிடக் குழாய்கள் பயன் படுத்தப்பட்டன. இரண்டாம் தலைமுறைக் கணினிகளில் டிரான்சிஸ்டர்கள் பயன்படுத்தப்பட்டன. மூன்றாம் தலைமுறைக் கணினிகளில் ஒருங்கிணைந்த மின்சுற்றுகளும், நான்காம் தலைமுறைக் கணினிகளில் எல்எஸ்ஐ, விஎல்எஸ்ஐ மின்சுற்றுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

generator : ஆக்கி : குறிப்பிட்ட பணிகளைச் செய்து முடிக்க பல வழக்கச் செயல்முறைகளைக் கொண்டதாக அமைக்கப்படும் மென்பொருள் பொதி. இந்த வழக்கச் செயல் முறைகளில் உள்ளீட்டு அளவு கோலை ஏற்றுக்கொண்டு தேவைப்படும் அளவுகோலுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொடுக்கப்படும். அறிக்கை தயாரிப்பது போன்ற குறிப்பிட்ட தலைப்புகளில் பணிகளைச் செய்து முடிக்க இது உதவும். சாதாரணமாக, பணியை வரையறுத்து அளவுகோல் தொகுதிகளை நிரப்புவது பயனாளரின் பணியாக இருக்கும்.

generic : பொதுவாக : தொழில்பெயர் பற்றிய குறிப்பு இல்லாமல் அடுத்து வரப்போகும் பொருள் அல்லது சாதனம் பற்றியது.

generic model : பொதுவினைப் படிமம்.

genlock (generator lock) : ஜென்லாக் (உருவாக்கிப்பூட்டு) : ஒளிப்பேழைக் குறியீடுகளைக் கலவை செய்வதற்காக ஒருங்கிணைக்கிற சுற்றுநெறி.

சொந்தக் கணினிகளில், ஓர் உருவாக்கிப் பூட்டுக் காட்சித் தகவமைவு, திரைக்காட்சியை NTSC ஒளிப் பேழைக் குறியீடுகளாக மாற்றுகிறது. இந்தக் குறியீட்டினை இது ஒரு புறநிலை ஒளிப்பேழை ஆதாரத்துடன் ஒருங்கிணைக்கிறது.

geocoding : நிலக்குறியீடு ; நிலப் படக் குறிமுறை : ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதி தொடர்பான தகவல்களை வரைபடமுறையில் காட்சித் திரையில் வைப்பது.

geographic information system : புவியியல் தகவல் பொறியமைவு : புவியியல் தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மென்பொருள், வன்பொருள் இரண்டும் அடங்கிய ஒரு கணினிப் பொறியமைவு. எடுத்துக்காட்டு : இயற்கை வளப் பகிர்மானம் ; நிலப்பயன்பாட்டு முறைகள் ; மக்கள் தொகைப் பரவல் போக்குகள். ஒரு புவியியல் தகவல் பொறியமைவு (CIS) என்பது ஒரு நேரடிப் பொறியமைவாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இது பெரும்பாலும் புறநிலை மற்றும் துணைநிலை ஆதாரங்களிலிருந்து தகவல்களை எடுத்துக் கொள்கிறது. நாட்டுப்படம் வரைதல், காலவரிசைப் பகுப்பாய்வு, புள்ளியியல் தகவல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

geometry model : வடிவியல் படிமம்.

geometry : வடிவக் கணிதவியல் ; வடிவியல் : பொருள்களின் வடிவுகள், திடப்பொருள்களின் அளவுகள், தரைப் பரப்புகள், கோடுகள், கோணங்கள் ஆகியவைகளைப் பற்றிக்கூறும் கணிதப்பிரிவு. கணினி வரைபடவியலில் ஒரு குறிப்பிட்ட பொருளின் உருவத்தை உருவாக்கும் வகையில் அமைக்கப்படும் கோடுகளின் அமைப்பு முறையைக் குறிப்பிடுகிறது.

geosynchronous : புவியியல் இணைவமைவு : பூமியுடன் இணையமைவு செய்யப்பட்டிருத்தல். இது பூமத்திய ரேகையிலிருந்து 35,888 கி.மீ. உயரத்தில் நிலைநிறுத்தப்பட்டு, பூமியின் சுழற்சி வேகத்தில் பயணம் செய்கிற செய்தித் தொடர்புச் செயற்கைக் கோள்களைக் குறிக்கிறது. இந்தச் செயற்கைக் கோள்கள் பூமியிலிருந்து பார்க்கும்போது நிலைபெற்றுள்ளனவாகத் தோன்றும்.

geo works ensemble : புவியியல் பணித் தொகுதி : "ஜியோ ஒர்க்ஸ்" எனப்படும் அமைவனம் DOS-களுக்காகத் தயாரித்துள்ள வரைபடச் செயற்பாட்டுச் சூழல். எடுத்துக்காட்டு : சொல் செயலி : வரைதல் ; செய்தித் தொடர்புகள் ; அட்டைக்கோப்பு ; நாட்டுக்குறிப்புப் பயன்பாடுகள். இது முழுமையான DOS மேலாண்மையை அளிக்கிறது.

germanium : ஜெர்மானியம் : சிப்புகளை, உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படும் இரசாயன மூலகங்கள் (அணு எண் 32).

GERT : ஜெர்ட் : Graphical Evaluation and Review Technique என்பதன் குறும்பெயர். கட்டமைப்பு அணுகுமுறையைப் பயன்படுத்தும் கணினிகளை மதிப்பிட விதிமுறைகளை ஏற்படுத்தும் செயல்முறை.

get : எழு ; பெறு : உள்ளீட்டு கோப்பிலிருந்து ஒரு பதிவேட்டைப் பெறுதல். ஒற்று என்பதற்கு மற்றொரு பெயர்.

G flops : ஜி ஃபிளாப்ஸ் : ஒரு நொடிக்கு ஒரு பில்லியன் பதின்ம புள்ளி இயக்க முறைகள்.

ghost : நிழலுருவம் : 1. ஒரு கண் காட்சியில் அல்லது அச்சுப்பதிப்பில் அடிப்படை உருக்காட்சிக்கு நெருக்க மாகத் தோன்றுகிற மங்கலான இரண்டாவது உருக்காட்சி. கண் காட்சியில், இது பாஸ்ஃபோர் காரண மாக உண்டாகிறது. அனுப்பீட்டில், இரண்டாம் நிலைக் குறியீடுகளின் விளைவாக ஏற்படுகிறது. அச்சுப் படியில், காகிதம் நகரும்போது அச் சுக்கூறுகள் குறிப்பதால் உண்டாகிறது. 2. மங்கலான அச்செழுத்து முகப்பில், ஒரு பட்டியல் தெரிவினைக் காட்சி யாகக் காட்டுதல். இது தற்சமயத்தில் தேர்ந்தெடுக்கத் தக்கதன்று என்ப தைச் சுட்டிக்காட்டுகிறது.

gibberish : பயனிலாத் தகவல் ; தேவை யற்ற தகவல்.

GIF : ஜிஐஎஃப் (வரைகலைப் பரி மாற்ற உருவமைவு) : "கம்ப்யூ செர்வ்" எனப்படும் அமைவனம் உருவாக் கிய "ராஸ்டர்" வரைகலைக் கோப்பு உருவமைவு. இது, 8 துண்மி வண்ணங்களை (256 வண்ணங் களை) கையாளக்கூடியது. ஏறத்தாழ 1.5:1 அழுத்த விகிதங்களை 2:1 விகித அளவுக்குப் பெறுவதற்கு இது LZW முறையைப் பயன்படுத்துகிறது.

giga : கிகா 10^9 : 1 பில்லியன் அல்லது 10இன் 9 மடங்கு. ஜி என்று சுருக்கி அழைக்கப்படுகிறது.

gigabit : கிகா துண்மி : 1,000,000,000 துண்மிகள். இதனை Gb, Gbit, G-bit, என்றும் கூறுவர்.

gigabyte : கிகா எட்டியல் : 1,000,000,000 எட்டியல்கள். இன்னும் துல்லியமாகக் கூறுவதாயின் 1,073,741,824 எட்டியல்கள். இதனை GB என்றும் கூறுவர்

gigaflops : கிகாஃபிளாப்ஸ் (வினா டிக்கு கிகா மிதவைப் புள்ளிச் செயற் பாடுகள்) : ஒரு வினாடிக்கு 1,000,000,000 பதின்மப் புள்ளிச் செயற்பாடுகள்.

gigahertz : கிகா ஹெர்ட்ஸ் : ஒரு நொடியில் ஒரு பில்லியன் தடவை கள். GHz என்று சுருக்கி அழைக்கப் படுகிறது. மின்காந்த அலைகளின் வரிசையை அளக்கப் பயன்படுத்தப் படும் அலகு.

GIGO : (குப்பையிடக் குப்பை வரும்) : Garbage in Garbage out என்பதன் குறும்பெயர்.

glare : பிரதிபலிப்பு ; கூசுதல் ; கூசொளி: ஒரு காட்சித் திரையின் மேற்பரப்பி லிருந்து வரும் பிரதிபலிப்பு.

glare filter : கூசொளி வடிகட்டி : மேல் நிலை மற்றும் சுற்றுப்புற ஒளியின் கூசொளியைக் குறைப்பதற்கு CRT திரையின் மீது பொருத்தப்படும் ஒரு நுண்ணிய வலைப் பின்னல் திரை.

glitch : கோளாறு ; தடுமாற்றம் : வன் பொருளில் ஏற்படும் தற்காலிக அல்லது எதேச்சையான கோளாறு பற்றி குறிப்பிடும் பிரபல சொல். கூடுதல் மின்சக்தி மூலமும் இது ஏற்படுவதுண்டு. sang அல்லது snarl என்றும் அழைக்கப்படுவதுண்டு.

Error என்பதற்கு மாறானது.

global : உலகளாவிய ; முழுதளாவிய; முழுமையான : 1. உள்ளூர் அளவில் என்று சொல்வதற்கு மாறாக மிகப் பரந்த எல்லை என்பதைக் குறிக்கும் பொதுச்சொல். 2. முதன்மை ஆணைத் தொடர் மற்றும் அனைத்து துணைவாலாயங்களையும் அணுகக் கூடிய மாறியின் பெயர் பற்றியது.

global character : முழுதளாவிய எழுத்து ; முழுமையான எழுத்துரு : தேடும் வாலாயத்தில் எந்த எழுத் தினையும் சார்ந்து நிற்கும் எழுத்து

ஒரு குறிப்பிட்ட நீளமுள்ள எழுத்துச் சரங்களைத் தேட அதன் ஒருசில எழுத்துகளை மட்டும் பயன்படுத்தி உலகளாவிய எழுத்துகளை பிறவற்றுக்காக சார்ந்து நிற்றல்.

wild card என்றும் அழைக்கப்படும்.

global operation : முழுதளாவிய இயக்கம் ; முழுமையான எழுத்துரு : சொல் செயலியில் ஒரு கோப்பு முழுவதும் செய்யப்படும் இயக்கம்.

global search and replace : முழுதளாவிய தேடி மாற்று ; முழுமையான தேடலும் மாற்றலும் : சொல் செயலியில் ஒரு ஆவணத்தில் எங்கிருந்தாலும் ஒரு சரத்தினை தேடி அதற்குப் பதிலாக வேறொரு சரத்தினைப் பொருத்துதல்.

global varible : முழுதளாவிய மாறி : எங்கே அல்லது எந்த ஆணைத் தொடரில் பயன்படுத்தப்பட்டாலும் அதே மதிப்பைக் கொண்டிருக்கும் மாறியல் மதிப்புரு.

glue chip : ஒட்டுச் சிப்பு : ஒரு நுண் செயலியின் செயற்பணித்திறனை அதிகரிக்கிற துணைச் சிப்பு. எடுத்துக் காட்டு : I/O செய் செயலி அல்லது கூடுதல் நினைவகம்.

gnomon : நோமோன் : முப்பரிமாணப் பொருள் ஒன்றின் இருபரிமாண தோற்றத்தை விளக்க உதவும் வகையில் போக்கு மற்றும் பரிமாணத்தைக் குறிப்பிடும் பொருள்.

go bottom : அடித்தளம் செல்க : ஒரு தளத்தின் அடிப்பகுதிக்கு பதிவேட்டுச் சுட்டுமுனையை நகர்த்துகிற தகவல் தள ஆணை.

go down : நின்று போதல்.

go top : உச்சிக்குச் செல்க : பதிவேட்டுச் சுட்டுமுனையை ஒரு தகவல் தளத்தின் முதல் ஏட்டுக்கு நகர்த்துகிற தகவல் தள ஆணை.

goal seeking analysis : நோக்கம் நாடும் பகுப்பாய்வு : தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாறியல் மதிப்புரு ஓர் இலக்கு மதிப்பளவினை எட்டும் வரை தேர்ந்தெடுத்த மாறிகளில் திரும்பத் திரும்ப மாறுதல்கள் செய்தல்.

golfball printer : குழிப்பந்தாட்டப் பந்து அச்சடிப்பி : அச்செழுத்து முகப்பு எழுத்துகள் ஒரு கோளவடிவ ஊர்தியில் வார்த்தெடுக்கப்படுகிற ஒரு திண்ணிய எழுத்து முகப்பு அச்சடிப்பி.

gopher : கொறிப்பு அணுகுதல் : இணையத்தில் (Internet) பகிர்மானத் தகவல்களை அணுகுவதற்கான ஒரு வழிமுறை. இது "WEB"-க்கு முந்தியது.

goppa codes : 'கோப்பா' குறியீடுகள் : நீள்வரை பிழை திருத்தத் தொகுதிக் குறியீடுகளின் ஒரு குடும்பம்.

GOTO - less programming : 'கோட்டு' இல்லாச் செயல் வரைவு : 'கோட்டு' (Goto) என்ற கட்டளைகளைப் பயன் படுத்தாமல் ஒரு செயல் முறையை எழுதுதல். இது, கட்டமைப்பு செய்த செயல்வரைவுகளில் ஒரு முக்கியமான விதி முறையாகும். ''கோட்டு'' கட்டளையானது, திரும்பி வரும் என்ற உத்தரவாதமில்லாமல், செயல் முறையில் பல்வேறு பகுதிகளைச் சுட்டிக் காட்டுகிறது.

gouraud shading : 'கூராட்' நிழலடிப்பு : கணினி வரைகலையில், ஹென்றி கூராட் உருவாக்கிய ஓர் உத்தி. இது, பலகோண முகப்புகளில் வண்ணமும், ஒளிர்வும் கொண்ட ஒரு நிழலுரு மேற்பரப்பினை கணினியில் உருவாக்குகிறது.

GP : ஜி.பி : General - Purpose என்பதன் குறும்பெயர். Graphic Programming என்பதன் குறும்பெயராகவும் கொள்ளலாம்.

GPS : ஜிபிஎஸ் : General Problem Solver என்பதன் சுருக்கம். அறிவுத் துறையில் இருந்து தீர்வு காணும் முறைகளைப் பிரித்து பொதுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முதல் ஆணைத் தொடர்.

General Purpose Service என்பதன் குறும்பெயராகவும் கொள்ளலாம்.

GPSS : ஜிபிஎஸ்எஸ் : General Purpose System Simulation என்பதன் குறும்பெயர். கணினி அமைப்புகளை உருவாக்கப் பயன்படும் பிரச்சினை சார்ந்த மொழி.

grabber : பறிப்பி ; சுரண்டி ; ஈர்ப்பி ; கவர்வி : சோதனைக்கருவி கம்பியின் இறுதியில் உள்ள இணைப்புப் பொருள் ஒருங்கிணைந்த மின்சுற்று இணைப்பு டிரான்சிஸ்டர் மற்றும் பிறவற்றின் இணைப்புடன் இணைக்கப்பட்டுள்ள அளவைக் கருவியுடன் இணைக்குமாறு வடிவமைக்கப்பட்ட ஸ்பிரிங் மூலம் இயக்கப்படும் கொக்கி மற்றும் இடுக்கியைக் கொண்டது.

grabber hand : சுரண்டு கரம் : கை வடிவிலுள்ள சுட்டுமுனை. இது பொருள்களைச் "சுரண்டி" ஒரு திரையில் மறு இட அமைவு செய்வதற்கு ஒரு நுண்பொறி மூலம் நகர்த்தப்படுகிறது.

graceful degradation : கௌரவமான கீழிறக்கம் ; படிப்படியாகச் செயல் திறன் இழத்தல் : தோல்வி ஏற்படும் போது குரல்நிலை போன்ற குறைவான இயக்கம் மட்டும் தொடரும் வண்ணம் செய்யும் முறை.

grade : தரம் ; தரப்படி : குரல் தரம் போன்று குறிப்பிட்ட வழித்தடத்தில் அனுப்புவதற்காக கிடைக்கும் எல்லை அல்லது அகலம் அல்லது அலைவீச்சு பற்றியது.

grammer : இலக்கணம் ; வரையறுக்கப்பட்ட விதிமுறைத் தொகுப்பு : ஒரு மொழியின் பல்வேறு கூறுகளை எவ்வாறு இணைக்கலாம் என்பதற்கான விதிகள்.

grammer checker : இலக்கணச் சரிபார்ப்பு : ஒரு வாக்கியத்தின் இலக்கணத்தைச் சரிபார்க்கிற மென்பொருள். இது முடிவுறாத வாக்கியங்களையும், தவறான சொற்றொடர்களையும், பிழையான நிறுத்தக்குறிகளையும், மிகு சொல்லாட்சியினையும், இலக்கணப் பிழைகளையும் சரிபார்த்து எடுத்துரைக்கிறது.

grammatical error : இலக்கணப் பிழை : ஒரு ஆணைத்தொடர் மொழியின் அமைப்பு அல்லது விதிகள் பின்பற்றப்படாததன் விளைவாக ஏற்படும் பிழை.

Syntax error என்றும் அழைக்கப்படுகிறது.

grammatical mistake : இலக்கணத் தவறு.

grammatic : இலக்கணச் சரிபார்ப்புச் செயல்முறை : டாஸ், விண்டோஸ், மெக்கின்டோஷ், யூனிக்ஸ் போன்றவற்றுக்கு "Reference Software" என்ற அமைவனம் தயாரித்துள்ள "Grammatic" என்ற இலக்கணச் சரிபார்ப்பு செயல்முறை.

granularity : சிறுமணிச் செறிவு : ஒரு பொறியமைவின் அகவரிச் செறிவு- சிறுமணிச் செறிவு எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அந்தப் பொறியமைவு நெகிழ்திறனுடையதாக இருக்கும்.

graph : வரைபடம் : 1. இரண்டு அல்லது மேற்பட்ட மாறும் அளவுகளின் உறவினைக் காட்டும் படம். ஒரு கணித வரைபடத்தில் பொதுவாக இரண்டு அச்சுகளை வைத்து ஒரு வளைவு கோடு விவரங்களுக்கேற்ப வரையப்படும். 2. Chart என்றும் சொல்லப்படும்.

graphical terminal : வரைகலை முறை முகப்பு : ஓவியம் மற்றும் எழுத்துகள் வடிவ தகவலைக் காட்டும் வண்ணம் திரை அமைக்கப்பட்டுள்ள (வீடியோ) காட்சித் திரை முகப்பு.

graphical user interface (GUI) : வரைகலை பயன்படுத்துவோர் இடைமுகப்பு : வாசகத்துடன் அல்லாமல் உருவங்களுடனும் ஒரு நுண்பொறியுடனும் பயனாளர் பணிபுரிவதற்கு உதவுகிற ஒரு வசதி. இதனால், விசைப் பலகையை மிகக் குறைந்த அளவில் பயன்படுத்த முடிகிறது. சிலசமயம் இது WIMP (Window, Icon, Mouse, Procedure) சூழல் என்றும் அழைக்கப்படுகிறது. இது, பயனாளருக்கு ஒரு பழக்கப்பட்ட திரைக் காட்சியையும், நிலையான செயற்பாட்டு நடைமுறையினையும் அளிக்கிறது.

graphic character : வரைகலை எழுத்து: இலக்கங்கள், எழுத்துகள் உள்ளடங்கலாக அச்சிடத்தக்க குறியீடுகள்.

graphic controller : வரைகலைக் கட்டுப்படுத்தி : வரைகலைகளையும், வாசகங்களையும் உருவாக்கப் பயன்படுத்தப்படும் சாதனம். இதனை வரைகலை எந்திரம் என்றும் கூறுவர். ஒரு VGA அட்டை, வரைகலை எந்திரம் ஆகும். ஆனால், அது வரைகலைத் தகவமைவி அல்லது ஏற்பி என்று அழைக்கப்படுகிறது. MDA, CGA, EGA, VGA, MCGA, 8514/A ஆகியவை செந்திறமான IBM வரைகலை அட்டைகளாகும்.

graph theory : வரைவியல் கோட்பாடு.

graphic data structure : வரைகலை முறை தகவல் அமைப்பு ; வரைவியல் தகவல் கட்டமைப்பு : வரைபட முறை தகவல்களைக் குறிப்பிட இலக்க முறை தகவல்களை தருக்க முறையில் வரிசைப்படுத்தி வரைபட முறை காட்சிக்காக அளித்தல்.

graphic digitizer : வரைகலை முறை இலக்கமாக்கி : கணினியில் பயன்படுத்துவதற்காக வரைபடமுறை மற்றும் ஓவிய முறை தகவல்களை இருமை உள்ளீடுகளாக மாற்றித் தரும் உள்ளீட்டுச் சாதனம்.

graphic display mode : வரைகலைக் காட்சி முறைமை ; வரைவியல் காட்சி முறைமை : சிறப்பு வரைபடமுறை திரையில் வரைபடவடிவங்களை அச்சிட கணினியை அனுமதிக்கும் இயக்க முறை.

graphic display resolution : வரைகலை முறை காட்சித்தெளிவு ; வரைவியல் காட்சிப் பிரிதிறன் : ஒரு காட்சித் திரையில் ஒரு வரியில் எத்தனை எழுத்துகளையும் கோடுகளையும் காட்ட முடியும் என்பது.

graphic display terminal : வரைகலை முறை காட்சி முனையம் ; வரைவியல் காட்சி முனையம் : திரையில் தகவலைக் காட்டும் கணினி முனையம். காத்தோட் கதிர்க்குழாய், தொலைக் காட்சி முனையம் அல்லது காட்சி முனையம் போன்றவை இதில் அடங்கும்.

graphic display unit : வரைகலைக் காட்சி அலகு : வரைகலை உருக் காட்சிகளைத் திரையில் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் காட்சிச் சாதனம்.

graphic input device : வரைகலை முறை உள்ளீட்டுச் சாதனம் : உருவங்களை சேமித்து, மறு உருக்கொடுத்து, காட்சிக்கு வைத்து, மாற்றும் வசதி அளித்துக் கையாள்வதற்குக் கணினிக்கு புள்ளிகளை அளிக்கக்கூடிய இலக்கமாக்கி போன்ற சாதனம்.

graphic limits : வரைகலை முறை எல்லைகள் : இலக்கமுறை வரைவி போன்ற வரைபடமுறை சாதனத்தின் பிளாட்டிங் பகுதி. அதன் எந்திர எல்லைகள்-உருளையின் அளவு, பிளேட்டர் போன்றவை - வரையறுக்கப்படும்.

graphic output : வரைகலை முறை வெளியீடு : கணினி உருவாக்கும் வெளியீடு. புலனாகும் காட்சித்திரை அச்சுவெளியீடுகள் அல்லது பிளாட்டுகள் போன்ற வடிவத்தில் வெளியிடப்படும்.

graphic output device : வரை கலை முறை வெளியீட்டுச் சாதனம் : ஒரு உருவத்தைக் காட்டுவதற்கோ, அல்லது பதிவு செய்வதற்கோ பயன்படுத்தப்படும் சாதனம். மென்பிரதிக்கு காட்சித்திரை ஒரு வெளியீட்டுச்சாதனம். வன்பிரதிக்கு வெளியீட்டுச் சாதனங்கள் காகிதம், திரைப் படம் அல்லது டிரான்ஸ்பரன்சிகள் வடிவில் உருவத்தை வெளியிடுகின்றன.

graphics : வரைகலை முறையியல் ; வரைவு முறைகள் ; வரைகலையியல் ; வரைவியல் : திரை, காகிதம் அல்லது திரைப்படங்களில் வெளியிடப்படும் கணினி உற்பத்தி செய்யும் எந்த ஒரு படத்தையும் இவ்வாறு கூறப்படும். சாதாரண கோடு அல்லது பட்டைக் கோடுகள் முதல் வண்ணமிகு, விளக்கப் படங்கள் எனப்படும்.

graphic accelerator : வரைகலை முடுக்கி : வரைகலை பயனாளர் இடைமுகப்புக்கான உயர் செயல்திறன் வாய்ந்த ஒளிப்பேழைக் காட்சிப் பலகை. இதில், வன்பொருளுக்குள் அமைக்கப்பட்டுள்ள வரிவரைபடம் மற்றும் படக்கூறுத் தொகுதி இயக்கச் செயற்பணிகள் அடங்கியிருக்கும்.

graphic adapter : வரைகலை ஏற்பி; வரைகலைத் தகவமைவி : திரையில் வரைகலைகளைக் காட்சியாகக் காட்டுவதற்கு உதவுகிற கணினி வன்பொருள் அமைப்பி.

graphic card : வரைகலை அட்டை : 'ஒளிப்பேழைக் காட்சிப் பேழை' என்பதும் இதுவும் ஒன்றே.

graphics display : வரைகலை முறை காட்சி : ஒரு கணினி அமைப்பிலிருந்து எடுத்து வெளியீட்டுச் சாதனத்தால் காட்டப்படும் வரைபட முறை தகவல்கள்.

graphics engine : வரைகலை எந்திரம் : முதன்மை மையச் செயலகத்தை (CPU) நம்பியிராமல் சுதந்திரமாக வரைகலைச் செயல் வரைவுகளை செய்கிற தனிவகை வன்பொருள். இது பல்வேறு செயற்பணிகளில் எதனையும் செய்யும். எடுத்துக்காட்டு : வரைகலை வடிவகணித உருவாக்கம் ; புள்ளிக்குறிப்பெருக்கம் ; நினைவகத்திலிருந்து காட்சிக்கு விரைவாகத் தகவல்களை மாற்றுதல்.

graphics file : வரைகலைக் கோப்பு : வரைகலைத் தகவல்களை மட்டுமே கொண்டிருக்கிற கோப்பு. இது வாசகக்கோப்பு, ஈரிலக்கக் கோப்பு ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

graphics input hardware : வரைகலை முறை உள்ளீடு வன்பொருள் : வரைகலைமுறை தகவலை கணினியில் கொடுக்கப்படும் வெளிப்புறச் சாத

ஙங்கள், வரைபடமுறை வரைவு இலக்கமாக்கி (Tablet), சுட்டுக்கருவி மற்றும் ஒளிப்பேனா போன்றவற்றை இந்த வகையில் சேர்க்கலாம்.

graphics language : வரைகலை மொழி : ஓர் உயர்நிலை மொழியில் ஒரு வரைகலை உருக்காட்சியை ஒரு செயல்வரைவாளர் தெரிவிப்பதற்கு அனுமதிக்கிற கட்டளைகளின் தொகுதி. இந்த மொழி, மென்பொருள் அல்லது தனிவகை வன்பொருள் மூலம் வரைகலை உருக்காட்சிகளாக மாற்றப்படுகிறது.

graphics mode : வரைகலை முறை : வாசகங்களுடன் சேர்த்து உருக்காட்சிகளையும் பயன்பாடுகள் காட்சியாகக் காட்டுவதற்கு உதவுகிற முறை. பலகணிப் பயன்பாடுகள் எப்போதும் வரைகலை முறையில் இயங்குகின்றன. பலகணியில்லாப் பயன்பாடுகள் வரைகலை முறையில் அல்லது வாசக முறையில் இயங்கவல்லவை.

graphics output hardware : வரைகலைமுறை வெளியீடு வன்பொருள்: வரைகலை முறையில் கணினியில் காட்ட உதவும் வெளிப்புறப் பொருள்கள் வரைபடமுறை திரை, இலக்கமுறை வரைவி, அல்லது வரைகலைமுறை அச்சுப்பொறி போன்றவற்றை இந்த வகையில் சேர்க்கலாம்.

graphic package : வரைகலைத் தொகுப்பு: எண்மானத் தகவல்களைக் காட்சி உருவங்களாக மாற்றக்கூடிய மென்பொருள்.

graphics pen and tablet : வரைகலைப் பேனா மற்றும் பட்டயத்தகடு : அழுத்த உணர்வுடைய பட்டயத் தகட்டில் வைக்கப்படும் பொருளைப் படம் வரைவதற்கு அல்லது படியெடுப்பதற்கு உதவுகிற ஒரு சாதனம். இதனை இது இலக்கமாக்கி, கணினி தனது காட்சித்திரையில் காட்டுவதற்கு உதவுகிறது.

graphics port : வரைகலை வாயில் : *1.* ஒரு வரைகலைச் செய்தி அறிவிப்பியை இணைப்பதற்காகக் கணினியிலுள்ள குதை குழி.

graphic primitive : வரைகலை மூலம் : புள்ளி, வரி, வில் வளைவு போன்ற அடிப்படையான வரைகலைக் கட்டுமானத்தொகுதி. ஒரு திண்ம உரு மாதிரிப் பொறியமைவில், நீள் உருளை, கன சதுரம், கோளம் ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.

graphics printer : வரைகலை முறை அச்சுப்பொறி : சொற்கள், படங்கள், வரைபடமுறைகளை உருவாக்கக் கூடிய வெளியீட்டுச் சாதனம்.

graphics programme : வரைகலை முறை ஆணைத்தொடர் : வரைகலை முறைகளை உற்பத்தி செய்ய கணினியை அனுமதிக்கும் கணினி ஆணைத் தொடர்.

graphics resolution : வரைகலைத் துல்லியம் ; வரைபடமுறை பிரிதிறன் : வரைபடமுறையியல் படங்கள் வெளியீட்டு வன்பொருள் எத்தகைய துல்லியமாக வெளியிடுகிறது என்பதற்கான அளவுகோல். அதிக துல்லியம் உள்ள படங்களில் மிகவும் தெளிவாகப் பார்க்கலாம். குறைந்த துல்லியம் உள்ள படங்களைவிட நன்றாகக் காட்சி தரும்.

graphics screen : வரைகலை முறை திரை : வரைகலை முறை படங்களைக் காட்டும் திரை.

graphics tablet : வரைகலை முறை தகவல் இலக்கமாதல் : வரைகலை முறை மற்றும் படவடிவ தகவல்

களைகணினி பயன்படுத்துவதற்காக இருமை உள்ளீடுகளாக மாற்றும்



வரைகலை முறை தகவல் இயக்கமாதல் (Graphics tablet)

உள்ளீட்டுச் சாதனம். பொருளின் உருவங்களை கணினியில் சேமிக்கக் கூடிய தகவலாக மாற்றித் தருவதற்கு திறமையான முறை. பேனா போன்ற எழுத்தாணி மற்றும் பட்டையான வரைவிலக்கக் கருவியையும், பயன்படுத்தி வரைபடமுறை உள்ளீடு செய்யப்படுகிறது.

graphics terminal : வரைகலை முனையம் ; வரைவியல் முனையம் : படங்கள் மற்றும் ஓவியங்களைக் காட்டுகின்ற வெளியீட்டுச் சாதனம்.

graph theory : வரைகலை முறை கொள்கை : இடவியலில் ஒரு பகுதியும், இணைப்பு ஆய்வில் ஒரு பகுதியுமாகச் சேர்ந்து உருவான கணிதத் துறையின் ஒரு பிரிவு. மின்சார கட்டமைப்புக் கொள்கை, இயக்கங்கள், ஆராய்ச்சி, புள்ளி விவரம், எந்திரவியல், சமூகவியல் மற்றும் நடத்தையியல் ஆய்வு ஆகிய துறைகளில் பயன்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

graphic workstation : வரைகலைப் பணிநிலையம் ; வரைமுறைப் பணிப் பொறி : அது உண்மையில் கருவிகளின் ஒரு தொகுதியைக் குறிக்கும். இது, ஒருவர் வரைகலைப் பணிகளைச் செய்வதற்கு வசதி செய்து கொடுப்பதுடன், வரைகலைப் பயனாளருக்கான சூழலையும் உருவாக்கிக் கொடுக்கிறது.

grey code : சாம்பல் நிறக் குறியீடு ; சாம்பல் நிறக் குறிமுறை ; கிரே குறியீடு : அடுத்தடுத்த எண்கள் ஒரே ஒரு இலக்கத்தில் மட்டும் வேறுபடுவதான தன்மைகளைக் கொண்ட குறியீடு. ஒப்புமையிலிருந்து இலக்க முறை மாற்றல் கருவியில் செயல்படச் சிறந்தது. உள்ளீடு/வெளியீடு நோக்கங்களுக்காகவும், குறியீட்டு மதிப்புகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. கணித கணக்கீடுகளைச் செய்வதற்கு முன்பு இருமை எண் வகைக்கு மாற்றப்படவேண்டும்.

cycle code, reflected code என்றும் அழைக்கப்படுகிறது.

grey code - to - binary conversion : சாம்பல் நிறக் குறியீட்டிலிருந்து இருமைக்கு மாற்றல் : கிரே குறியீட்டு எண்ணில் இருமை (பைனரி)க்குச் சமமான மதிப்பு. இடது புறத்திலிருந்து வலது புறமாகப் படிக்கவேண்டும் என்ற விதியைக் கடைப்பிடித்து இந்த மாற்றம் செய்யப்படுகிறது. மிக முக்கிய இருமை இலக்கம் அதற்குச் சமமான கிரே குறியீட்டு இலக்கத்துடன் ஒப்பிடப்படுகிறது. கிரே குறியீட்டு இலக்கம் 1 என்றால் அடுத்த இருமை இலக்கும் மாறுகிறது. கிரே குறியீடு இலக்கம் பூஜ்யம் என்றால் அடுத்த இரும இலக்கம் மாறாது. சான்றாக, கிரே

குறியீட்டு மதிப்பு 110100110 அதற்குச் சமமான இருமை எண் 100111011.

grey scale : சாம்பல்நிற அளவுகோல் : கணினி வரைபடமுறை அமைப்பு களில் ஒரே நிறக் காட்சி முறையில் வெளிச்சத்தின் மாறுபாடுகளின் அளவு. பல்வேறு வடிவமைப்புப் பொருள்களுக்கிடையில் உள்ள கருமை நிறத்தை அதிகரிக்க கிரே அளவுகோல் பயன்படுகிறது.

greater than : அதைவிடப் பெரிய : இரண்டு மதிப்புகளுக்கிடையில் உள்ள வேறுபாட்டின் உறவு. அதை விடப் பெரிய எண் என்பது அதற் கான குறியீடு. 9 என்ற எண் 5 - ஐ விடப் பெரியது என்றால் அம்புக்குறி சிறியதை நோக்கி இருக்கும். மாற்றுச் செயலாக்க முறையை ஒப்பிட இதைப் பொதுவாக பயன்படுத்து வார்கள்.

greek : விளங்கா மொழி : உண்மை யான எழுத்துகள் விளங்கிக் கொள்ள முடியாத ஒருவகை வடிவத்தில் வாசகத்தைக் காட்சியாகக் காட்டு தல், எடுத்துக்காட்டு : மேசை மோட்டு வெளியீட்டில் முடிவுற்ற ஆவணத்தை முன்னதாகப் பார்க்கும் போது, செறிவினைக் கையாள் வதற்கு காட்சித்திரை போதிய அளவு பெரிதாக இல்லையெனில் அந்த வாசகம் விளங்கா மொழியில் உள்ளது எனப்படும்.

greeking : விளங்கா மொழியில் அமைத்தல் : வாசகங்களைப் போலி எழுத்துகளில் அல்லது பொருளற்ற குறியீடுகளில் உருப்படுத்திக் காட்டு தல்.

green book standard : பசுமை நூல் தர அளவு : 1987 ஜூன் மாதம் அறிவிக் கப்பட்ட CD-I முழுச் செயற்பணித் தனிக்குறிப்பீட்டுக்கான மாற்றுப் பெயர். இது, முதல் வரைவு வெளி யிடப்பட்டுச் சரியாக ஓராண்டுக்குப் பிறகு வெளியிடப்பட்டது.

grid : தொகுப்பு ; கட்டம் : 1. காட்சித் திரை அல்லது இலக்கமாக்கியில் காட்டப்படும் ஒரே மாதிரியான இடைவெளிப்புள்ளிகள் உள்ளகட்ட மைப்பு. ஒரு இடத்தைக் கண்டு பிடிக்கவும், ஒரு வடிவமைப்பு அல் லது துல்லியமான வரைபடங்களை உருவாக்கவும் பயன்படுத்தப்படு கிறது. 2. நிரல் நிரைகளாக மின்னணு விரிதாள் மாதிரிகளைக் காட்டுவது. 3. ஒரு புள்ளியின் மதிப்பைக் கண்டு பிடிக்கப் பயன்படும் ஒரு வரைபடத் திலுள்ள குறுக்குவாட்டு மற்றும் செங்குத்துக் கோடுகள். 4. வட்ட வரைபடத்தில், தொகுதி என்பது மையப்பகுதியிலிருந்து வட்டமாக வெளிப்புறம் சாய்ந்திருக்கும் கோடு களின் தொகுதி.

grid chart : தொகுப்பு வரைபடம் ; கட்ட வடிவ வரைபடம் : உள்ளீட்டுத் தக வலை அதன் பயன்பாட்டு ஆணைத் தொடர் பயன்பாடுகளுக்குத் தொடர்புபடுத்தும் பட்டியல்.

gridding : தொகுப்பமைத்தல் ; கட்ட மாக்கல் : முடிவுப்புள்ளிகள் யாவும் தொகுதிப் புள்ளிகளின் மீது விழு மாறு அமைக்கவேண்டிய வரைபட உருவ கட்டுமான சிக்கல்.

gridsheet : தொகுப்புத்தாள் ; கட்டத் தாள் : தொகுப்பு போன்றதுதான். விரி தாள் அல்லது பணித் தாளைக் குறிக்கும்.

grip : கிரிப் : வரைகலை இடை வினைச் செயல்முறைப்படுத்தும் மொழி.

ground current : தரை மின்னோட் டம் : ஒரு தரை இணைப்பில் காணப்

படும் மின்னோட்டம். இது சமநிலை யற்ற மின்னியல் ஆதாரங்களினால் ஏற்படலாம். எடுத்துக்காட்டு: இரு கணினிகளுக்கிடையிலான ஒரு செய்தித் தொடர்பு வழியில் தரை இணைப்பு, தனித்தனியே மின்விசை பெறுதல்.

ground fault : தரைக் குறைபாடு : ஒரு மின்னியல் அமைப்பியின் செய லிழப்பு அல்லது இடி, மின்னல், புயல் போன்ற புற நிலை மின்னியல் ஆதாரங்களிலிருந்தான இடையீடு காரணமாக தரை இணைப்பில் உண்டாகும் தற்காலிக மின்னோட் டம்.

grounding : தரை இணைப்பு : மனி தர்களுக்கும், கணினிகளுக்கு மின் சக்தி ஓட்டம் தீங்கு செய்யாத வண் ணம் அமைக்கும் செயல்முறை.

ground loop : தரை வளையம் : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற் பட்ட முறைகளில் தரையில் பதிக்கப் பட்டுள்ள இரு சாதனங்களுக்கிடை யில் முன்னும் பின்னுமாகப் பாய்கிற தேவையற்ற தரை மின்னோட்டம்.

ground mark : தொகுதிக் குறிமானம்.

ground noise injection : தரையோசை புகுத்தல் : ஒரு மின்விசை வழங்கீட் டுக் கருவி மூலம் தரை இணைப்புக் குள் தேவையற்ற ஓசையை வேண்டு மென்றே புகுத்துதல்.

group decision support system (GDSS) : குழு முடிவு ஆதார முறைமை : மக்கள் குழுமங்களி னால் முடிவெடுக்கப்படுவதற்கு உதவியாக இருக்கிற முடிவு ஆதாரப் பொறியமைவு.

group icon : குழும உருவம் : ஒரு செயல்முறை மேலாண்மைக் கருவி யில் குழுமப்பலகணி குறும அளவுக் குக் குறைக்கப்பட்டிருக்கும்போது, ஒரு குழுமத்தைக் குறிக்கிற உருவம். ஒரு குழுமத்தைத் திறப்பதற்கும், அதன் உள்ளடக்கத்தைப்பார்ப்பதற் கும் குழும உருவத்தைத் தேர்ந் தெடுத்துக்கொள்ள வேண்டும்.

group mark : குழு அடையாளம் : ஒரு சொல்லின் தொடக்கம் அல்லது முடிவு அல்லது விவர அலகு ஆகிய வற்றைக் காட்டும் காட்டி.

group printing : குழு அச்சிடல் ; தொகுதி அச்சிடல் : ஒரு கணக்கிடும் எந்திரத்தின் வழியாகச்செல்லும் ஒவ்வொரு தொகுதியின் முதல் அட்டையில் மட்டும் தகவலை அச்சிடும் செயல்முறை.

groupware : குழுமச் சாதனம் : பணிக் குழுமங்களின் உறுப்பினர்களின் பணி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கிற மென்பொருள் தொகுதிப் பொறியமைவு. இக்குழுமங்களின் பணிநிலையங்கள், ஓர் உள்முகப் பகுதி இணைவனத்தினால் ஒன்றுக் கொன்று இணைக்கப்பட்டிருக்கும்.

guard signal : காப்புச் சைகை : ஓர் இலக்கமாக்கியிலிருந்து வெளிப் பாட்டுச் சைகைகளைப் படிப்பதற் கான அனுமதியைச் சுட்டிக்காட்டு கிற ஒரு சைகை.

guarantee : உறுதிப்பாடு ; உத்திர வாதம்.

guest computer : விருந்தினர் கணினி ; கிளைக் கணினி : வேறொரு விருந் தினர் கணினியின் கட்டுப்பாட்டில் இயங்கும் கணினி.

GUIDE : கெய்ட் : Guidance of Users of Integrated Data Processing என்பதன் குறும்பெயர். பேரளவு ஐபிஎம். கணினிகளைப் பயன்படுத்தும் பய னாளரின் பன்னாட்டுச் சங்கம்.

guide edge : வழிகாட்டு விளிம்பு : *காகிதம், காந்த நாடா போன்ற ஒரு தகவல் ஊடகத்தின் விளிம்பு. இது நாடா இயக்கிக்குள் அல்லது நாடா படிப்பிக்குள் அதனை இட்டுச் செல்கிறது.*

gun : வீச்சுப்பொறி : *காத்தோட் கதிர்க் குழாயில் எலெக்ட்ரான் ஒளிக்கற்றையை உருவாக்கும் எலெக்ட்ரோடுகளின் குழு.*

gutter : வடிகால் : *பன்முகப்பத்தி உருவமைவில், பத்திகளிடையிலான இடைவெளி. இது நூல் வெளியீட்டில் பயன்படுகிறது. எடுத்துக்காட்டு :* DTP.

gynoid : ஜைனாய்ட் : *எந்திரப் பெண் போன்ற மனித வடிவம்.*

H

H : எச் (பதினாறிலக்கம்) : ஒரு பதினாறிலக்க எண்ணைக் குறிக்கும் குறியீடு. எடுத்துக்காட்டு : 09 என்பது '9' என்பதன் எண்மான மதிப்பளவு.

hacker : ஹாக்கர் ; ஆர்வலர் ; குறும்பர் : 1. கணினியைப் பயன்படுத்துவதில் அனுபவம் உள்ள, வித்தியாசமான சிக்கல்களை கணினி மூலம் தீர்ப்பதில் ஆர்வம் உள்ள, கணினி ஆர்வலர். குறைந்த திட்டமிடலுடன் ஆணைத் தொடர்களை உருவாக்குபவர். கணினி ஜங்கி என்றும் அழைக்கப்படுபவர். ஆர்வலருக்கு கணினிகள் மற்றும் ஆணைத் தொடர்களில் ஆர்வம் உண்டு. ஆனால் அறிவியல் கோட்பாடுகளில் கவனம் இருக்காது. 2. தீங்கு செய்ய வேண்டுமென்றோ அல்லாமலோ மற்றவரது கணினி அமைப்புகளில் வேண்டுமென்றே நுழைபவர்.

hal : ஹால் : ஆர்தர் கிளார்க்கின் '2001' என்ற நாவலில் வரும் கொல்லுதற்குரிய கணினியின் பெயர்.

half : பாதியளவு ; அரை : ஓர் இடையீடு, பிழை அல்லது அறிவுறுத்தத்தினால் உண்டாக்கப்படும் ஒரு செயல்முறையின் நிறைவேற்றத்தில் ஒரு முடிவு.

half adder : அரைக்கூட்டி : இரண்டு இரும துண்மிகளைக் கூட்டும் திறனுள்ள கணினி மின்சுற்று.

half duplex : பாதி இருவழி ; அரை இருவழிப்பாதை : இரண்டு திசைகளில் தகவல் தொடர்பை அனுப்பும் திறனுள்ளது. ஆனால் ஒரு நேரத்தில் ஒரு திசையில் மட்டுமே செலுத்தும்.

half height : பாதி உயரம் : ஒரு தாழ்ந்த உயர வட்டு இயக்கி. பழைய பாணி வட்டு இயக்கிகள் 8-10 செ.மீ. உயரம் உடையவை. பாதி உயர இயக்கிகள் 4-5 செ.மீ. உயரமானவை. முதல் தலைமுறை இயக்கிகளின் பாதியளவு செங்குத்து இடைவெளியைக் கொண்டவை. 5.2" வட்டு இயக்கி. இது 15/8" உயரமும் 5.75" அகலமும் உடையது.

half information : உதவித் தகவல்.

half instruction : பாதி கட்டளை ; நிறுத்தும் ஆணை : ஒரு செயல் முறையினை கையால் நிறுத்தும் வரை அதன் நிறைவேற்றத்தை நிறுத்தி வைக்கிற செயல்முறைக் கட்டளை.

half menu : துணைக் கட்டளைப் பட்டியல்.

halftoning : மங்கல் முறை : கறுப்பு-வெள்ளை காட்சிப் பின்னணியில் கிரே அளவுகளை உருவாக்க மாறும் அடர்த்தியில் புள்ளி அமைப்புகளைப் பயன்படுத்துதல்.

halfwood : ஹாஃப்வுட் : கணினி சொல்லின் பாதியாக உள்ளதும் ஒரு அலகாகக் கருதப்படுவனவுமான எழுத்துகள், எட்டியல்கள் மற்றும் துண்மிகளின் தொடர்ச்சி.

half word : அரைச்சொல்.

halting problem : நிறுத்துச் சிக்கல் : அல்கோரிதம் இல்லாத - தீர்வு காணத் திட்டம் இல்லாத - சிக்கல்.

hammer : சுத்தியல் : ஓர் அச்சடிப்பியில், தட்டச்சு முகப்பை நாடாவுக்கும் காகிதத்துக்குமிடையில் நகர்த்துகிற அல்லது காகிதத்தை நாடாவுக்கும் தட்டச்சு முகப்புக்கும் இடையில் தள்ளிவிடுகிற செயல்முறை.

hamming code : ஹாமிங் குறியீடு ; ஹாமிங் குறிமுறை ; ஹாமிங் சங்கேதம்: தானாகவே பிழை திருத்திக் கொள்ளும் ஏழு துண்மி பிழை திருத்தும் தகவல் குறியீடு.

hand calculator : கைக்கணிப்பி: கையில் வைத்துக் கொள்ளக் கூடிய கணிப்பி. சிக்கலான கணக்கீடுகள் உட்பட கணிதச் செயல்பாடுகளைச் செய்ய ஏற்றது.

handheld computer : கையடக்கக் கணினி : எடுத்துச்செல்லக்கூடிய,

கையடக்கக் கணினி
(Handheld computer)

பேட்டரியால் இயங்கும் கணினி. பேசிக் மொழி மூலம் ஆணைத் தொடர் அமைத்து பல வகையான பணிகளுக்குப் பயன்படுத்தலாம். Packet Computer என்றும் அழைக்கப் படுகிறது.

handler : கையாளி : ஒரு குறிப்பிட்ட உள்ளீடு, வெளியீடு, சேமிப்பகச்சாதனம். கோப்பு அல்லது நிறுத்தும் வசதியினைக் கட்டுப்படுத்துவதற் கென்றே உருவாக்கப்பட்ட ஆணைத் தொடர்.

hand pointer : கைச் சுட்டு முனை : விண்டோஸ் - 3.1 மற்றும் பிற விண் டோஸ் சார்ந்த, உள்ளுக்குள் நேரடி உதவிச் சாதனம் கொண்டுள்ள பொருள்களுடன் பணியாற்றுகை யில், தொடர்புடைய உதவித் தலைப்புகளுக்கிடையில் நீங்கள் தாவும் போது தோன்றும் சுட்டு முனை வடிவம்.

hand scanner : கை நுண்ணாய்வுக் கருவி : பிற கணினி மென்பொருள் களைக் கொண்டு உருவாக்கப்பட் டுள்ள ஆவணங்களுக்காக உருக் காட்சிகளை நுண்ணாய்வு செய்வதற் குப் பயன்படுத்தப்படும் ஒரு சாத னம். படங்களை வாசகத்துடன் இணைப்பதற்குப் பயன்படுத்தப் படுகிறது.

hand held scanner : கைப்பிடி நுண் ணாய்வுக் கருவி : ஓர் உருக்காட்சியை நுண்ணாய்வு செய்வதற்குக் கையி னால் இயக்கப்படும் ஓர் ஒளியியல் நுண்ணாய்வுக் கருவி. நுண்ணாய்வுத் தலைப்பின் அடியிலுள்ள சிறிய உருளைகள் கையசைவினை நெறிப் படுத்துகின்றன.

handle : கைப்பிடி : ஒரு கோப்பினை அணுகுவதற்கு இயல்விக்கிற ஒரு மதிப்பளவு (இது ஒரு மாறியில் சேமித்துவைக்கப்பட்டிருக்கும்). கணினி வரைகலையில், உருக்காட் சியை நகர்த்துவதில் அல்லது மறு உருவாக்கத்தில் ஓர் உருக் காட்சி யுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு நுண்ணிய சதுரம். ஒரு சறுக்குச் சட்டத்தை இதன் மீது நகர்த்தி, ஒரு விசையை அல்லது சுட்டுப் பொறி யினை அழுத்துவதன் மூலம் கைப் பிடி தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஒரு கோப்புக்குக் குறித்தளிக்கப்பட் டுள்ள ஒரு தற்காலிகப் பெயர்.

handset : ஒலியுறுப்பு : ஒலிபெருக்கி யும், ஒலி வாங்கியும் கொண்டிருக் கிற தொலைபேசியின் உறுப்பு.

handshaking : கைகுலுக்கல் ; கை குலுக்கல் முறை : தகவல் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள இரண்டு கணி னிகள் அல்லது ஒரு கணினியும் ஒரு வெளிப்புறச் சாதனமும் ஏற்படுத் திக்கொள்ளும் நடைமுறைகள்.

handsharing logic : கைகுலுக்கல் தருக்க முறை : நிறைவேற்றப்பட்டுள்ள இனங்கள் பற்றிக் கணினி பதில் சைகை அனுப்புகிற ஒரு வகைக் கணினி இடைமுகப்பு வடிவமைப்பு.

hands-on : கைகளால் ; கை வைத்த ; செயல் சார்பான : ஒரு கணினி அமைப்பை நேரடியாகப் பயன்படுத்துவது பற்றியது.

handwriting recognition : கையெழுத்துக் கண்டறிதல் ; கையெழுத்து அறிதல்: ஒரு கையெழுத்தைச் சோதிக்க அல்லது தகவல் உள்ளடக்கத்தைக் கண்டறிய கணினி கட்டுப்பாட்டு நுண்ணாய்வுச் சாதனம் (ஸ்கேனர்) மூலம் கையெழுத்தை நுண்ணாய்வு (ஸ்கேனிங்) செய்வது.

hang : தொங்கல் : விசைப் பலகை செயற்படாமல் கணினி திடீரென நின்றுவிடும்போது ஒரு பொறியமைவு தொங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் வெளிவருவதற்கான ஒரே வழி கணினியை நிறுத்திப் பின் திரும்ப இயக்குதல் (Boot) ஆகும்.

hanging indent : தொங்கல் வரிப் பத்தி : ஒரு பத்தியிடும் முறை. இதில், முழு அளவு முதல்வரியும், உள்ளடங்கிய அடுத்த வரிகளும் அடங்கியிருக்கும்.

hanging paragraph : தொங்கல் பத்தி : அச்சுக்கலையில் முதல்வரி இடது ஓரத்திலிருந்து தொடங்கி, இரண்டாவது வரியும், பின்வரும் வரிகளும் உள்ளடங்கியதாகவும் இருக்கும் வாசகப் பத்தி அமைப்பு.

hang - up : தொங்கவை ; தொங்கல் : ஒரு வாலாயமாக (ரொட்டீன்) ஆணைத்தொடர் அமைக்கப்படாத நிறுத்தம். சிக்கலைச் சரியாகக் குறியீடு செய்யாததாலோ, எந்திரக் கோளாறாலோ அல்லது சட்டவிரோதமான அல்லது இல்லாத குறியீட்டைப் பயன்படுத்துவதாலோ விரும்பத்தகாத அல்லது எதிர்பாராத ஒரு நிறுத்தம்.

hard card : வன் அட்டை : சொந்தக் கணினியில், ஒரு நிலை வட்டினைக் கொண்டிருக்கிற ஒரு செருகு அட்டை வடிவிலுள்ள துணைநிலை நினைவகம். ஒரு வன் அட்டை 20-40 MB திறம்பாடு உடையது. ஒரு கணினி நினைவகத்தில் விரைவாக விரிவாக்கம் பெறுவதற்கு இது பயனுள்ள வழி.

hard clip area : தாளின் வரை பரப்பு : ஒரு இலக்கவியல் வரைவியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் கோடு போகாத நிலை.

hard coded : நிலைக் குறியீடு : ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சாதனங்களை மட்டுமே கொண்டு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பணிகளைச் செய்கிற மென்பொருள். எடுத்துக்காட்டு : வேறு எந்தவகைகளையும் அனுமதிக்காமல், இரண்டு வகை அச்சடிப்பிகளால் மட்டுமே ஒரு செயல்முறையை எழுதுதல். சிக்கல்களுக்கான நிலைக்குறியீட்டுத் தீர்வுகள் பெரும்பாலும் துரிதமானவை. ஆனால், இவை எதிர்கால நெகிழ்திறனை அனுமதிப்பதில்லை.

hard contact : வன் தொடர்பு அச்சு முறை : தேவையான அழுத்தத்துடன் அழுத்தி தொடர்புமுறையில் அச்சிடுவது.

hard copy : உண்மை நகல் ; தாள் படி ; அச்சு நகல் : அறிக்கைகள், பட்டியல்கள், ஆவணங்கள் அல்லது குறிப்புரைகள் போன்ற படிக்கக்கூடிய

வடிவிலுள்ள எந்திர வெளியீட்டின் அச்சிடப்பட்ட பிரதி.

Soft Copy - க்கு எதிர்ச்சொல்.

hard disk : நிலை வட்டு : வேகமான துணைசேமிப்பகச் சாதனம். கணினியின் உள்ளே நிரந்தரமாக அமைக்கப்படும் அல்லது ஒரு தனிப் பெட்டியில் வைக்கப்படும். வரைவியைப்போன்று பல மில்லியன் எழுத்துகள் அல்லது எட்டியல்களைச் சேமிக்கும் திறன் ஒரு தனி நிலை வட்டுக்கு உள்ளது.

நிலைவட்டு
(Hard disk)

Floppy disk என்பதற்கு எதிர்ச்சொல்.

hard disk controller : நிலைவட்டுக் கட்டுப்படுத்தி : ஒரு நிலை வட்டு இயக்கிக்கு ஓர் இடை முகப்பினை அளித்து, அதனை மேற்பார்வையிடுகிற மின்னணுவியல் சுற்றுநெறி. சுருக்கம் : HDC இதில் பல வகைகள் பயன்பாட்டில் உள்ளன. எடுத்துக் காட்டு : ESDI, MFM, SCSI, ST 506.

hard disk drive : நிலைவட்டு இயக்கி : ஒரு நிலை வட்டுக்கு எழுத்து / படிப்புச் செயற்பாடுகளைச் செய்கிற ஒரு மின் -எந்திரவியல் சாதனம். இதில் குறைந்தது ஒரு எழுத்து/படிப்பு முனை இருக்கும். இது, வட்டிலுள்ள வட்டினை அணுகி, அதனை நாளது தேதி வரைப் புதுப்பிக்கிறது. வட்டு இயக்கியானது, வட்டின்தட்டினைநிமிடத்திற்கு 3,600 சுழற்சிகள் என்ற வேகத்தில் சுழற்றுகிறது. இதனால், வட்டின் எல்லாப் பகுதிகளும், துரித இடை வெளிகளில் எழுத்து/படிப்பு முனையின் கீழ் வருகின்றன. சுருக்கப் பெயர் : HDD.

hard disk measurements : நிலை வட்டு அளவைகள் : திறம்பாட்டளவு ஒரு வினாடிக்கு எத்தனை எட்டியல்கள் என்ற வீதத்திலும், மில்லி வினாடிகளிலும் அளவிடப்படுகின்றன. இது 'அணுகு நேரம்' (Access time) எனப்படும். அதிவேக சொந்தக் கணினி நிலை வட்டு அணுகு நேரங்கள் 12 முதல் 28 ms வரை வேறுபடும். மற்றக் கணினிகளில் வேகம் 1ms.

hard disk store : நிலைவட்டுச் சேமிப்பு: தன் அலகுக்குள் முத்திரையிடப்பட்டுள்ள ஒரு வட்டு. இந்த வட்டினை அகற்ற முடியாதாகையால் எழுத்து/படிப்பு முனை அதன் மேற்பரப்புக்கு மிக அருகில் இருக்கும்; தடங்களை அடர்த்தியாகச் செறிவாக்கம் செய்யலாம். துல்லியத் தொழில்நுட்பம் காரணமாக ஒரு படியெடுப்பு நெகிழ்வட்டினைவிட ஒரு நிலை வட்டு மிக அதிகத் திறம்பாடு கொண்டதாக இருக்கிறது. இது, நுண் சாதனங்களுக்கான 300 அல்லது அவற்றுக்கு மேற்பட்ட மெகா எட்டியல்களைக் கொண்டது. நெகிழ் வட்டுகளைப் போலவே, இதிலும் மென் பொருள் ஆணைகள் மூலம் செய்திக் குறிப்புகளையும், செயல் முறைகளையும் சேர்க்கலாம். நிலை

வட்டுகளை "வின்செஸ்டர் வட்டு இயக்கிகள்" (Windchester disk drives) என்றும் அழைப்பர்.

hard error : வன் பிழை ; கருவிப் பிழை : வன்பொருளில் ஏற்படும் கோளாறால் உண்டாகின்ற பிழை.

hard failure : கருவிப் பழுது ; கருவிக் கோளாறு : கருவியின் ஒரு பகுதியில் ஏற்படும் கோளாறு. அதை மீண்டும் பயன்படுத்த வேண்டுமானால் பழுது பார்க்கவேண்டும்.

hard hyphen : எந்திரக்கோடு ; வன் இணைகுறி ; கட்டாய ஒட்டுக் குறி : எழுத்துக்கூட்டும்போது போட வேண்டிய சிறிய இடைக்கோடு. 11 துளை போன்றவற்றில் இதைப்பயன் படுத்துவார்கள். எப்போதும் அச்சிடப்படும்.

Soft Hyphen - க்கு எதிர்ச்சொல்.

hard return : வன் மீள்வு; கட்டாய முறி : மீள்வு விசையை அழுத்தி ஒரு வாசக ஆவணத்தில் பதிவு செய்யப் படும் குறியீடு. DOS, OS/2 வாசகக் கோப்புகள் ஒரு CR/LF இணை யினைப் பயன்படுத்துகின்றன. இதனைத் திரையில் கண்ணுக்குப் புலனாகும் ஒரு மாறி குறியீடாகக் காட்டலாம். அல்லது கண்ணுக்குப் புலனாகாத குறியீடாகவும் இருக்க லாம். இது, "மென் மீள்வு" (soft return) என் பதிலிருந்து மாறுபட்டது.

hard sector : வன் பகுதி : நெகிழ் வட்டில், உற்பத்தி செய்யப்படும் போதே அமைக்கப்படும் ஆப்பு வடிவ சேமிப்புப் பிரிவு. பல்வேறு பதிவுகளைக் குறிப்பிட வட்டில் துளைகளிட்டு அடையாளப்படுத்தப் படுகிறது. soft sector - க்கு எதிர்ச் சொல்.

hard space : கட்டாய இடைவெளி ; வன் இடவெளி : சொல் பகுப்பானில் இந்த இடவெளி, வாசகத்தின் பொரு ளுக்கு மிக முக்கியமானதாகும். எடுத் துக்காட்டு : "திரு ரஜ்னி" என்ற பெயரை இரண்டுவரிகளாகப் பிரிப் பது தவறான முறையாகும். இரு சொற்களுக்குமிடையில் ஒரு கட் டாய இடவெளியைச் செருகுவதன் மூலம் இரு சொற்களையும் ஒரே சொல்லாகக் கருதமுடியும்.

hardvard mark - i : ஹார்ட்வர்ட் மார்க் I : "ஹார்ட்வர்ட்ஸ் ஹோ வர்ட்" (அய்க்கென்) என்ற அமை வனத்தின் கோட்பாட்டினை அடிப் படையாகக் கொண்டு தயாரிக்கப் பட்ட ஒரு மின் எந்திரவியல் கணினி.

hardware : வன் பொருள் ; வல்லி யல்பு ; வன் சாதனம் : உருப்பொருள், இயங்கு பொருள், செயல் உறுப்பு, மின்னணு, காந்த, மற்றும் எந்திரச் சாதனங்கள் போன்ற பருப்பொருள், Software - உடன் வேறுபடுத்திப் பார்க்க.

hardware configuration : வன்பொருள் அமைப்பு ; வன் சாதன உருவமைப்பு : கணினி அமைப்பை உருவாக்கும் பல்வேறு கருவிகளின் பகுதிகளை ஒழுங்குபடுத்துவதும் அவற்றுக் கிடையிலான உறவுகளும். இதில் கம்பிகளும், தகவல் தொடர்புப் பாதைகளும் அடங்கும்.

hardware description language : வன்பொருள் விவரிப்பு மொழி : இலக்க முறை கணினி அமைப்பு களுக்கு ஆவணப்படுத்தல், வடி வமைப்பு போல அமைத்தல் மற்றும் உற்பத்தி செய்தலுக்கு உதவும் மொழி மற்றும் எண்களமைப்பு.

hardware failure : வன்பொருள் செயல் நிறுத்தம் : மின்னணுவியல் சுற்றுவழி களில் அல்லது மின் - எந்திரவியல்

உறுப்புகளில் (வட்டுகள், நாடாக்கள்) அல்லது ஒரு கணினிப் பொறியமைவில் செயற் பணிகள் தவறாக நடைபெறுதல். இது "மென்பொருள் செயல் நிறுத்தம்" (software failure) என்பதிலிருந்து மாறுபட்டது.

hardware interrupt : வன்பொருள் குறுக்கீடு : வன்பொருள் செயற்பாட்டினால் ஏற்படும் இடைத் தடுப்பு. இது புறநிலைச் சாதனத்தால், ஆதாரச் சிப்புகளில் அல்லது மையச் செயலகத்தில் (CPU) ஏற்படலாம்.

hardware key : வன்பொருள் விசை ; வன் பொருள் சாவி : சட்ட விரோதமாக மென் பொருளைப் படியெடுத்துக்கொள்வதைத் தடுக்கும் வழி. ஒரு கணினியின் விரிவாக்கப்பகுதி அல்லது போர்ட்டில் பொருத்தி, ஆணைத்தொடர் களவுத் தடுப்பு மென்பொருளுடன் சேர்ந்து மட்டும் இயங்கக்கூடியது.

hardware monitor : வன்பொருள் திரையகம் : ஒரு கணினியின் செயல் திறனைப் பகுப்பாய்வு செய்வதற்காக அதனுடன் சுற்றுவழிகளுடன் இணைக்கப்பட்டுள்ள சாதனம்.

hardware reliability : வன் பொருள் நம்பகம் : வன்பொருள் தன் செயற்பணிகளை குறிப்பிட்ட கால அளவுகளுக்குச் செய்யும் திறம்பாடு உடையது எனக் கூறும் ஓர் அறிக்கை.

hardware resources : வன் பொருள் மூலாதாரங்கள் ; வன் பொருள் வளம் : மையச் செயலக நேரம், உள் சேமிப்பக இடம், நேரடி அணுகு இருப்பக இடம், உள்ளீடு, வெளியீடு சாதனங்கள் ஆகிய அனைத்தும் இருந்தால் தான் தகவல் செயலாக்கம் தானியங்கியாகவும், திறனுடையதாகவும் இருக்கும்.

hardware scrolling : வன் பொருள் சுருளாக்கம் : ஒளிப்பேழைச் செங்குத்துச் சுருளாக்க உத்தி. இது, தகவல் காட்சியாகக் காட்டும் ஒளிப்பேழை இடைத்தடுப்பில் உள்ளடக்கங்களை மாற்றுவதற்குப் பதிலாக, தொடக்க நிலையை மாற்றுவதன் மூலம் செயற்படுகிறது.

hardware security : வன்பொருள் பாதுகாப்பு : கணினிக்குப் பாதுகாப்பளிப்பதற்காக வரம்புகள், பதிவேடுகள், பூட்டுகள் போன்ற வன்பொருள்களைப் பயன்படுத்துதல்.

hardware specialist : வன்பொருள் வல்லுநர் : ஒரு கணினி அமைப்பின் கருவிகளைப் பராமரித்து, பழுதுகளைக் கண்டறிந்து சரிசெய்யும் நபர்.

hardware virtual memory : வன் பொருள் நடைமுறை நினைவகம் : ஒரு சிப்புவினுள் அமைக்கப்பட்டுள்ள நடைமுறை நினைவக மேலாண்மை. நடைமுறை நினைவகத்தை மென் பொருளினால் மட்டுமே இயக்க முடியுமாயினும் இதனை வன் பொருளால் செய்வது அதிகத் திறனுடையதாக இருக்கும்.

hardwired : கம்பிவழி ; கம்பி மூலம் : இரண்டு மின்னணுக் கருவிகளுக்கிடையில் கம்பி மூலம் இணைப்பு அளிப்பது குறித்தது.

hardwired logic : வன்கம்பியாக்கிய தருக்க முறை : ஒருங்கிணைந்த சுற்றுவழியில் (அல்லது சிப்புவில்) உற்பத்தியாளரினால் உள்முகமாக அமைக்கப்பட்டுள்ள தருக்க முறை. இது வாயில்களுக்கிடையிலும், வாயில்களிலும் அமைக்கப்பட்டுள்ள கம்பியிணைப்பினைக் குறிக்கிறது.

harmonic distortion : ஒத்திசைவுத் திரிபாக்கம் : செய்தித் தொடர்புகளில், அனுப்பீட்டுக் கம்பிகளில் சீர்கேடு

காரணமாக மூல அலைவெண்ணின் மடங்குகளாக உருவாக்கப்பட்ட அலைவெண்கள்.

harness : வடக்கம்பிக்கட்டு ; வடக் கம்பித் தொகுதி : தனிக் கம்பிகளை ஒன்றாக இணைத்த தொகுதி.

Harvard Graphics : ஹார்வார்ட் வரை கலை : "சாஃப்ட்வேர் பப்ளிஷிங் கார்ப்பரேஷன்" என்ற அமை வனம் உருவாக்கியுள்ள சொந்தக் கணினி வணிக வரைகலை. இது முதலில் தயாரான வணிக வரைகலைத் தொகுதிகளில் ஒன்றாகும். இது, வாசக வரைபடங்களிலிருந்து விடு பட்ட பத்தியை உருவாக்குகிறது.

HASCI : ஹஸ்கி : Human Applications Standard Computer Interface என்பதன் குறும்பெயர். இது ஒரு விசைப் பலகை அமைப்பு முறையாகும்.

hash : ஹாஷ் : திரையில் காட்சி அசை யாது நிற்றல்.

hashed random file organisation : கதம்பக் குறிப்பற்ற கோப்பு அமைப் பாக்கம் : தகவல்களைச் சேமிப்பதற் கான/மீட்பதற்கான ஒரு முறை.

hashing : அடையாள வழிகாட்டல் ; துண்டாடல் : முகவரி மாற்றலுக்கான விசை. இதில் தகவல்களில் இருப்பி டத்தை விசையே முடிவு செய்யும்.

Hash Coding என்றும் அழைக்கப் படும்.

hashing algorithm : தற்சார்பு முகவரி யாக்க படிநிலை முறை : 'k' என்ற ஒரு குறிப்பிட்ட விசைக்கு f(k) . என்ற செயற்பணிகளைக் கொடுக்கிற ஒரு படிநிலைமுறை.

hayes compatible : 'ஹேய்ஸ்' ஒத்தி யல்பு : ஹேய்ஸ் ஆணை மொழியி னால் கட்டுப்படுத்தப்படும் மோடெம்களைக் குறிக்கிறது.

hash totals : ஹாஸ் மொத்தங்கள் ; புல எண்ணிக்கைகள் : புலங்களை அடை யாளம் காணும் எண்களின் மொத்தங் கள். பிழை சோதிப்பதில் பயன் படுத்தப்படுகிறது.

hatching : வரிவேய்தல் : ஒரே திசை யில் இணைக்கோடுகளில் ஓர் ஓவி யத்தின் சில பகுதிக்கு மட்டும் நிழல டித்தல், ஒன்றின்மேல் வேறொரு நிறம் அடிப்பது பல குறுக்கு ஹாட்சிங் எனப்படும்.

hayes smart modem : ஹேய்ஸ் அறிவுத்திறன் மோடெம் : "ஹேய்ஸ் மைக்ரோகம்ப்யூட்டர் புராடக்ட்ஸ்" என்ற அமைவனம் தயாரித்துள்ள சொந்தக் கணினிகளுக்கான அறிவுத் திறன் மோடெம் குடும்பம். இதனை 1978இல் முதல் தலைமுறை சொந்தக் கணினிகளுக்காக ஹேய்ஸ் உருவாக் கினார். இதன் ஆணை மொழி, தொழில்துறைக்குரிய செந்திற மொழியாகியது. இது ஓர் ஆணை நிலையை உடையது ; இது அறி வுறுத்தங்களை ஏற்றுக்கொள்கிறது. நேரடி நிலையில் இது சுழற்றுகிறது, பதிலளிக்கிறது ; அனுப்புகிறது ; ஏற் கிறது.

hazard : இடர்ப்பாடு : உட்பாட்டு மாறி களின் நிலை மாறுகிறபோது ஒரு தருக்க முறைச் சுற்றுவழி தவறாகச் செயற்படுதல்.

HDBMS : எச்டிபிஎம்எஸ் : Hierarchical Database Management System என் பதன் குறும்பெயர்.

head : முனை ; தலைமுனை : 1. சிறிய மின்காந்த வட்டு, நாடா போன்ற சேமிப்பு ஊடகத்தில் தகவல்களை அழிக்கவும், பதிவுகளைப் படிக்க வும் பயன்படும் உறுப்பு. காந்தத் தட்டில் தகவல்களைப் படிக்கவும், எழுதவும், அழிக்கவும் பயன்படு

வது. 2. ஒரு பட்டியலின் ஆரம்பத்தை அடையாளம் காட்டும் சிறப்புத் தகவல்.

head cleaning device : முனை தூய்மைப்படுத்தும் சாதனம் : தூசு நீக்கும் பொருள். நாடா இயக்கி அல்லது ஒரு நெகிழ் வட்டு இயக்கியின் படி/எழுது முனையைத் தூய்மைப்படுத்த அனுமதிக்கிறது.

head crash : முனை மோதல் : ஒரு நிலைவட்டின் பதிவிடும் பரப்புடன் படி/எழுது முனையுடன் மோதுதல். சிறிய புகை அல்லது தூசு அல்லது விரல் படுவதுபோன்ற சிறிய பொருளால் வட்டு கெட்டுப்போதல்.

head-per-track disk : தடவாரித் தலைப்பு வட்டு : ஒவ்வொரு தடத்தின் மீது நிலைநிறுத்தப்பட்டுள்ள படி/எழுது முனையைக் கொண்டுள்ள வட்டு இயக்கி. இதன் மூலம், தடத்திலிருந்து தடத்திற்கு அணுகு கரம் நகர்வது ஒழிக்கப்படுகிறது.

head positioning : முனை சரியமர்த்துதல் : நேரடி அணுகு சேமிப்பகச் சாதனத்தில் தகவல்களைப் படி/எழுது முனையைப் பொருத்துதல். ஒரு நகரும் அணுகு கரத்தின் மூலம் செய்யப்படுகிறது.

header record : வழிகாட்டிப் பதிவேடு : தொடர்ந்து வரும் பதிவேடுகளின் தொகுதி பற்றிய நிலையான, பொதுவான அல்லது அடையாளம் காட்டும் தகவலைக்கொண்டுள்ள பதிவேடு.

head set : தலைத் தொகுதி : ஒலிச் சாதனங்கள் உண்டாக்கும் இசையை அல்லது ஒலியைக் கேட்பதற்கு தலையில் பொருத்திக்கொள்ளும் ஒலிச் சாதனம். இது கணினிகளுடனும், பிற மின்னணுவியல் சாதனங்களுடனும் சேர்த்துப் பயன்படுத்தப்படுகிறது.

head skew : தலைப்புக் கோட்டம் : தகட்டின் உச்சிப்பகுதியிலிருந்து அடிப்பகுதிக்குத் தலைப்பு மாறிக் கொள்ளும் வகையில் முந்திய தடத்தின் தொடக்கத்திலிருந்து மாறி புதிய தடத்தில் இருக்கும் தூரம்.

head slot : முனை இடம் ; தலைத் துணை : வட்டுப் பரப்பினை படி/எழுது முனைக்குக் காட்டும் நெகிழ் வட்டு உறையின் மீதுள்ள திறந்த இடம்.





முனை இடம் (Head Slot)
13½ செ.மீ. வட்டுப் பரப்பின் முனையிடம்
9 செ.மீ. வட்டுப் பரப்பின் முனையிடம்

head switching : முனை பொத்தானிடம் ; தலைநிலை மாற்றல் :

தகவல்களை நேரடி அணுகு சேமிப் பகச் சாதனத்தில் படிக்கும்போது படி/எழுது முனையை இயங்க வைத்தல்.

header : வழிகாட்டி ; தலைப்புச் செய்தி : *1.* ஒரு செய்தியை அது போய்ச்சேர வேண்டிய இடத்திற்கு வழிகாட்டுவதற்குரிய அனைத்து தகவல்களும் கொண்டுள்ள ஒரு செய்தியின் முதல் பகுதி. *2.* ஒரு பக்கத்தின் மேற்புற மூலை.

header card : வழிகாட்டி அட்டை ; தலைப்பு அட்டை : தொடர்ந்து வரும் அட்டைகளில் உள்ளதைப் பற்றிய தகவலைத் தரும் அட்டை.

header file : தலைப்புக் கோப்பு : ஒரு கோப்பு பற்றிய குறிப்புரையைக் கொண்டிருக்கும் செயல்முறைக்குள் அதன் உள்ளடக்கங்கள் ஒருங் கிணைக்கப்பட்டுள்ள ஒரு கோப்பு.

header label : தலைப்பு முகப்புச் சீட்டு : ஒரு காந்த நாடாவிலுள்ள ஒரு கோப்பின் தொடக்கத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒரு முகப்புச் சீட்டுப்பதிவு. இது, கோப்புப்பற்றிய விவரிப்புத் தகவல்களைக் கொண்டி ருக்கிறது.

heap : தொகுதி : கணிப்புக்காக ஒரு ஆணைத்தொடர் கடன் வாங்கி பின்னர் திருப்பியளிக்கிற சேமிப்பக இடங்களின் தொகுதி.

hearsay : கேள்வியறிவு : CMU தயாரித் துள்ள ஒரு செயற்கை நுண்ணறிவுத் திறன் (AI) செயல்முறை. இது, அடுத் தடுத்து இரண்டு செயல்முறை களைக் கொண்டிருக்கும்.

heatex : வெப்பக் குறைப்பி : பல்வேறு செய்முறைத் தொகுதிகளிடையே வெப்பத்தைப் பரிமாற்றிக் கொள் வதற்கு அனுமதிக்கிற, எரியாற்றல் தேவையைக் குறும அளவுக்குக் குறைக்கிற இணையத்தை உரு வாக்குவதில் உதவிபுரிகிற நிபுணத் துவப் பொறியமைவு.

heating elements : வெப்பமூட்டும் தனிமங்கள்.

heath/zenith : ஹீத் / ஜெனித் : நுண் கணினி கருவி மற்றும் மின்னணு பெட்டிகள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்பவர்.

heat sink : வெப்ப வடிகால் : சுற்றுப் புறச் சூழலுக்கு வெப்பத்தைச் சித றும்படி செய்கிற ஒரு மின்கடத்தாப் பொருளுடன் அல்லது அதன் பகுதி யுடன் இணைக்கப்படும் ஒரு கட்டமைவு. இது பொதுவாக உலோ கத்தில் அமைந்திருக்கும்.

வெப்ப வடிகால்



வெப்ப வடிகால (Heat sink)

hecto : ஹெக்டோ : எண்ணின் முன் பகுதியில் எப்போதாவது பயன் படுத்துவது. இதன் பொருள் 'நூறு'.

helical scan : திருகு சுழல் நுண்ணாய்வு (வருடல்): ஒளிப்பேழை நாடா விலும், இலக்கமுறை ஒலிப்பேழை நாடாவிலும் பயன்படுத்தப்படும் மூலை விட்டத் தடத்தொடர்பு. இது ஒருபோகு முறைகளில் சேமிப்புத் திறம்பாட்டினை அதிகரிக்கிறது.

help : உதவி : பலமுறைகளில் உட னடியாக கிடைக்கக்கூடிய செயல்.

முறைமை அல்லது ஆணைத் தொகுப்பு எப்படிச் செயல்படுகிறது என்பதைப்பற்றிய கூடுதல் தகவல் களைப் பயனாளருக்கு வழங்கு கிறது. சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் உதவுகிற விசை என்பதைப் பார்க்கவும்.

help controller : உதவித் தொகுப்பி: வாசகங்களையும், தொகுப்பி கட்ட ளைகளையும் ஒரு நேரடி உதவிப் பொறியமைவாக மொழிபெயர்க்கிற மென்பொருள்.

help menu : உதவிப்பட்டியல் : பயனா ளருக்கு உதவக்கூடிய தகவல்களை திரையில் நேரடிக் காட்சியாகக் காட்டுதல். மென்பொருள் பற்றிய கேள்விகளுக்கு கட்டளைக் கையேடு களின் துணையின்றி மென்பொருள் பயன்படுத்துவோர் பதிலளிப்பதற்கு இது உதவுகிறது. தனியொரு விசையை (பெரும்பாலும் F1) அழுத்துவதன் மூலம் உதவிப் பட்டியல்கள் வரவழைக்கப்படு கின்றன.

henry : ஹென்றி (மின் தூண்டல் அலகு) : மின் வலிமையை அளப் பதற்கான அலகு. ஒரு ஹென்றி என்பது, ஒரு இணைப்பில் உள்ள மின்சாரத்தினால் ஒரு வோல்ட் மின் இயக்க சக்தியைப் பெறுகிற மின் இணைப்பின் மின் வலிமை ஆகும். அம் மின்சக்தி ஒரு வினாடிக்கு ஒரு ஆம்பியர் என்ற அளவில் மாறுபடு கிறது.

hercules adapter : ஹெர்குலஸ் தகவமைவு : ஒரு நிறப்படச் செய்தி அறிவிப்பியில் உயர்ந்த செறிவளவு களில் வரைகலைகளைக் காட்சி யாகக் காட்டுகிற ஒரு மென்பொருள் பொறியமைவு.

hercules card : ஹெர்குலஸ் அட்டை : உயர்செறிவளவு ஒளிப்பேழை (செய்தி அறிவிப்பி) கட்டுப்படுத்தி அட்டை. இது பெரும்பாலும், உயர் செறிவளவு ஒரு நிறப்படக் காட்சி யில் பயன்படுத்தப்படுகிறது.

hercules graphics : ஹெர்குலஸ் வரை கலை : "ஹெர்குலஸ் கம்ப்யூட்டர் டெக்னாலஜி" என்ற அமைவனம் சொந்தக் கணினிகளுக்காகத் தயாரித் துள்ள ஒளிப்பேழைக் காட்சித் தர அளவு. இந்த அமைவனம், 720 x 348 படக்கூறுகள் கொண்ட செறிவள வுடன் நிறப்பட வரைகலைகளை யும், வாசகங்களையும் தயாரிக்கிறது.

hermaphroditic : இருபாற்கூறு களுடைய : நீட்டப்பகுதியும், செருகு பகுதியும் ஒருங்கேயுடைய இணைப்பி. இது ஆண் பகுதி தனியாகவும், பெண் பகுதி தனியாகவும் உள்ள இணைப்பி களிலிருந்து வேறுபட்டது.

hertz : ஹெர்ட்ஸ் (அதிர்வெண் அலகு) : ஒரு விநாடிக்கான மின்காந்த அலைச் சுற்றுகள் அல்லது சுழற்சிகள். சுருக்க மாக Hz என்று அழைக்கப்படுகிறது.

heruistic programme : தன் மேம் பாட்டுச் செயல்வரைவு : ஒரு செயல் முறை ஒவ்வொருமுறை ஓடும் போதும் தன் சொந்தச் செயல்களின் விளைவுகளிலிருந்து கற்றுக் கொண்டு, அடுத்த தடவை தனது பணியை மேம்படுத்துவதற்குத் தக்க மாற்றங் களைச் செய்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ள செயல்வரைவு.

heterogeneous environment : கதம்பச் சூழல் : பல்வேறு தயாரிப்பாளர்கள் தயாரித்துள்ள சாதனம்.

heuristic : பட்டறிவு சார்ந்த : பிரச் சினை ஒன்றுக்கு தீர்வு காண்பதற் கான ஆய்வு வழி. இம்முறையில் இறுதி முடிவுகளை அடைவதற்கான ஒவ்வொரு நடவடிக்கையையும்

படிப்படியாக மதிப்பிட்டு தீர்வு எட்டப்படுகிறது. கண்டுபிடிப்பு ஒன்றில் உதவும் பொதுவான அறிவின் பயன்பாடு பற்றியது. Algorithm என்பதற்கு எதிர் நிலையானது.

heuristic learning : பட்டறிவு வழி கற்றல் : அனுபவத்திலிருந்து கண்டு பிடிக்கும் வழி. தங்கள் தவறுகளில் இருந்து கணினிகள் கற்றுக்கொள்ளும் வழி. தங்கள் நடவடிக்கைகளில் இருந்து, வெற்றியைத் தராத, பயனைத் தராத நடவடிக்கைகளை நீக்குதல்.

Hewlett-Packard : ஹீவ்லெட் - பேக்கார்ட் : கலிபோர்னியாவிலுள்ள மின்னணுவியல் கருவிகள், கணிப்பிகள், கணினிகள் உற்பத்தியாளர்கள். பெயர்ச்சுருக்கம் : HP.

hexadecimal : பதினாறிலக்க முறை : '16' - ஐ ஆதாரமாகக் கொண்ட எண்மான முறை. இதனை "அறுபதின்மானம்" (Hexadecimal) என்றும் கூறுவர்.

hexadecimal point : அறுபதின்ம புள்ளி : அறுபதின்மக் கலவை எண் ஒன்றில் முழு எண்ணையும் பின்னப் பகுதிகளையும் பிரித்துக்காட்டும் மூலப்புள்ளி. அறுபதின்ம எண் 3F மற்றும் 6A7இல் அறுபதின்மப் புள்ளி எண்கள் 'F'-க்கும் 6-க்கும் இடையே உள்ளது.

hexadecimal notation : பதினாறிலக்கக் குறிமானம் : பத்துகளுக்குப்பதிலாக பதினாறுகளைக் கொண்ட குறிமானம். இதில், 0 முதல் 9 வரையிலான இலக்கங்கள் பயன்படுத்தப் படுகின்றன. A,B,C,D,E,F, என்ற எழுத்துகள் 10,11,12,13,14,15 என்ற எண்களைக் குறிக்கின்றன. பதின்மானக் குறிமானத்தில் ஒரு நான்கு இலக்க எண்ணில் ஒவ்வொரு இலக்கமும் ஆயிரங்கள், நூறுகள், பத்துகள், ஒன்றுகள் ஆகியவற்றைக் குறிக்கின்றன. பதினாறிலக்கக் குறிமானத்தில் ஒவ்வொரு இலக்கமும் 4096கள், 256கள், 16கள், ஒன்றுகள் ஆகியவற்றைக் குறிக்கின்றன.

இவ்வாறு

A60B = (10 x 163) + (6 x 162) + (0 x 161) + (11 x 160)
= (10 x 4096) + (6 x 256) + (0 x16) + (11 x 1)
= 40960 + 1536 + 0 + 11
= 42507 (பதின்மானம்)

கணினிகளில் பதினாறிலக்கமுறை பயன்படுத்தப்படுவதற்குக் காரணம், எண்களைச் சேமித்துவைக்கும் முறையாகும். ஈரிலக்க முறையில் 0 முதல் 9 வரையிலான இலக்கங்களைச் சேமிக்க 0000 முதல் 0101 வரையிலான 4 இலக்கங்கள் தேவை. இதனால் நமது இயல்பு எண்களுக்கு நான்கு ஈரிலக்க எண்களைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் நான்கு ஈரிலக்க இலக்கங்களைக் கொண்டு 0 முதல் 9 வரையில் மட்டுமின்றி 0 முதல் 15 வரையிலும் சேமிக்கலாம். அதாவது, 0000 முதல் 1111 வரைச் சேமிக்க முடியும். எனவே, பதினாறிலக்க முறையில், கணினியிலுள்ள சேமிப்புக் குறியீடுகள், அனைத்தையும் நாம் பயன்படுத்தலாம்.

hexadecimal number : அறுபதின்ம எண் : ஒற்றை இலக்கத்துக்கும் கூடுதலான எண். ஒரு மொத்தத் தொகையைக் குறிப்பது. அதில் ஒவ்வொரு எண்ணும் அளவை 16இன் மூலத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடப்படுகிறது. பயன்படுத்தப்படும் எண்கள். 0,1,2,3,4,5,6,7,8,9, A,B,C,D,E & F.

hidden codes : மறைநிலைக் குறியீடுகள் : நேரடித் திரை உருவமைவுச் செயல்முறை மூலம் ஓர் ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள மறைநிலை வாசக உருவமைவுக் குறியீடுகள்.

hidden file : மறைநிலைக் கோப்பு : ஒரு கோப்புப் பட்டியலில் பார்வைக்குக் காட்டப்படாத ஒரு கோப்பு. எடுத்துக்காட்டு MS-DOS ; VAX DIR ஆணை MS-DOSஇல் IO.SYS, DOS-SYS என்பவை மறைமுகக் கோப்புகள்.

hidden lines : மறைநிலை வரிகள் : ஒரு முப்பரிமாணப் பொருளை திரையில் காட்டும்போது, பொருளின் பொருண்மையினால் பார்வையாளரின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருக்கும் வரி. திரையில் பின்புல வண்ணங்களில் வரையப்படும் கோடுகள். அந்த வண்ணங்கள் மறையும்வரைக் கண்ணுக்குப் புலனாவதில்லை. ஒரு வரைபடத்தில் கண்ணுக்குப் புலனாகாத கோடுகள்.

hidden-line algorithm : மறை கோட்டு படிநிலை நடைமுறை : வரைபடம் வரைவதில், ஒரு முப்பரிமாணப் பரப்பு வரையப்படும்போது எந்தக் கோடுகள் கண்ணுக்குப் புலனாகக் கூடாது என்பதைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு படிநிலை நடைமுறை.

hidden line removal : மறைகோடு நீக்குதல் : திட முப்பரிமாணம் உடையதாக காட்சிக்கு வைக்கப்பட்ட ஒரு பொருளைக் காணும் பொழுது மறைக்கப்படக்கூடிய கோட்டுப் பகுதிகளை படத்திலிருந்து நீக்குதல். கணினி வரைபட மென்பொருள்களும், வன் பொருள்களும் அத்தகைய மறைந்துள்ள கோடுகளை தானாகவே நீக்கக்கூடிய திறனைப் பெற்றுள்ளன.

hidden objects : மறைபொருள்கள் : தெளிவான உருக்கொண்ட பொருள் திடப்பொருளாக வைக்கப்பட்டால் அவை மற்ற பொருள்களால் மறைக்கப்படலாம்.

hidden surface : மறைதளம் : வரைபடத்தில் முப்பரிமாண திடப்பொருளாகக் காட்டப்பட்டால் பார்வையிலிருந்து மறையக்கூடிய வெளிப் பகுதி அல்லது தளப்பகுதி.

hierarchical : படிநிலை முறை : ஒரு பெற்றோரின் வாயிலாக மட்டுமே பொருள்கள் அணுகத்தக்கவை என்பதை வலியுறுத்தும் கண்டிப்பான படிநிலை முறை. ஒரு நிறுமத்தில் அமைவன வரைபடம் போன்ற, பல்வேறு படிநிலைகளைக் கொண்ட கட்டமைவு, உயர்மட்டநிலைகள், கீழ்மட்ட நிலைகள் மீது கட்டுப்பாடு அல்லது ஆதிக்கம் கொண்டிருக்கும். செய்தித்தொடர்புகளில், படிநிலை என்பது, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து மைய முனைகள் மீதும் கட்டுப்பாடு கொண்டுள்ள தனியொரு கணினியைக் குறிக்கும்.

hierarchical communication : படிநிலைமுறைச் செய்தித் தொடர்புகள் : எல்லா இணைப்புகளையும் மேலாண்மை செய்யும் பொறுப்புடைய ஒரு தாய்க் கணினியினால் கட்டுப்படுத்தப்படும் இணையம். இது "சரியிணைச் செய்தித் தொடர்புகள்" (Peer-to Peer Communication) என்பதிலிருந்து மாறுபட்டது.

hierarchical database : படிநிலைத் தகவல் தளம் : பல்வேறு தகவல் கூறுகளிடையே ஒன்றுடன் ஒன்றின் தொடர்புகள், ஒரு மரத்தின் இலைகளுக்கும் மிலாறுகளுக்கும், கிளைகளுக்கும், பெரிய கிளைகளுக்கும், மரத்தின் தூருக்குமிடையிலானதும்,

மற்றக் கிளைகளுக்கும் இலைகள், மிலாறுகளுக்கிடையிலானதுமான தொடர்பினை ஒத்திருக்கும் தகவல் தளம்.

hierarchical database management system (HDBMS) : தொடர்வரிசை தகவல் தள நிர்வாக முறைமை : தலை கீழாகக் கவிழ்க்கப்பட்ட மரம் போல கிளைகளாகவும் இலைகளாகவும் தகவல் இணைக்கப்பட்ட தகவல் தளம் ஒன்றை, கணினியில் ஏற்றவும் அணுகவும் கட்டுப்படுத்தவும் உதவு கிற சம்பந்தப்பட்ட ஆணைத் தொகுப்புகளின் குழுமம். Network Database Management System மற்றும் Relational Database Management System - களுக்கு மாறுபட்டது.

hierarchical file system : படிநிலைக் கோப்பு முறை : மேலிருந்து கீழான அமைவாக்கக் கட்டமைவில் தகவல் களைச் சேமித்து வைக்கும் கோப்பு. அமைப்பாக்க முறை. செய்திக் குறிப்புகளை அணுகுதல் உச்சியில் தொடங்கி படிநிலைகள் அனைத்து வழியாகவும் செல்கிறது. DOS, OS/2 ஆகியவற்றில் மூலத் தகவல் தொடக்கநிலையாகும். மெக்கின் டோஷில் வட்டுப் பலகணி தொடக்க நிலையாகும்.

hierarchical model : தொடர்வரிசை மாதிரி : தகவல் தளம் மாதிரி இதில் ஒவ்வொரு பொருளும் ஒரு மர அமைப்பில் ஒரு குறிப்பிட்ட தொடர் முறையில் அமைந்திருக்கும்.

hierarchical network : தொடர்வரிசை இணையம் : கணினி இணையம். இதில் தகவல் வகைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஒவ்வொன்றுக்கும் என சிறப்பாக அமைக்கப்பட்ட கணினியால் நிறை வேற்றப்படுகின்றன.

hierarchical structure : தொடர்வரிசை வடிவமைப்பு; படிநிலைக் கட்ட மைப்பு: தகவல் தளம் ஒன்றின் நிர் வாக முறைமைகளில், மிகவும் எளி மையான கோப்பு அமைப்பு முறை, இதில் பல்வேறு நிலைகளில் உள்ள ஆவணங்கள் ஒன்றுக்கொன்று வழங் குகின்றனவாகவோ, சம்பந்தப்பட்ட வையாகவோ இருந்தால், இதனை மர அமைவு என்றும் கூறுவர்.

hierarchy : தொடர்முறை ; படிநிலை; வழிமுறை : 1. ஒரு சூத்திரம் அல்லது அறிக்கை ஒன்றில் எண்களின் செயல் கள் அமைகிற வரிசை முறை.

Order of Operations என்பதைப் பார்க்கவும்.

2. அடுக்குவரிசையில் அமைப்பு முறை.

hierarchy chart : படிநிலை வரை படம் : ஒரு செயல்முறை தகவமைவு கள் அமைப்பாக்கத்தினை வரைபட மாகச் சித்திரித்தல். இது, பெருந் திட்டமிடுதலிலும், ஆவணமாக்கத் திலும் படுகைகளாகவுள்ள செயல் முறைப் பணிகளை காட்டுகிறது. இதனை மேல்கீழ் வரை படம் என்றும் கூறுவர்.

hierarchy of operations : செயற் பாடுகளின் படிநிலை : கணிதச் செயற் பாடுகளை எந்த வரிசை முறையில் நிறைவேற்றவேண்டும் என்பதைக் காட்டும் விதிகளின் தொகுதி.

hierarchy plus input process output (HIPO) : தொடர் வரிசை மற்றும் உள்ளீட்டு வெளியீட்டு நடைமுறை (ஹிப்போ) : வடிவ மற்றும் ஆணைத் தொகுப்பு ஆவண முறை. அது செயல்முறை மற்றும் மூன்று வகை யான வரைபடங்களில் தகவல்கள் வெளியாவதைக் குறிப்பிடுகிறது. ஆணைத்தொகுப்பு கற்றைகளையும்

அவற்றின் தொடர் வரிசைமுறை களையும் பாதி காட்டுகிற உள்ளடக் கப்பட்டியல். தொடர் வரிசையில் உள்ள உறுப்பினர்களுக்கான உள் ளீட்டு வகைப்படுத்துதல் மற்றும் வழங்குதலை விவரிக்கிற வரைபடங் கள் மற்றும் விரிவான வரைபடங் கள். இவை மேலோட்டமான வரை படங்களை குறிப்பான உள்ளீடு, வகைப்படுத்துதல் மற்றும் வெளியீடு விவரங்களை, விளக்கத்துடன் வெளி யிடுகின்றன.

high colour : உயர் வண்ணம் : *32,768 வண்ணங்களை (15 துண்மிகள்) அல்லது 65,536 வண்ணங்களை (16 துண்மிகள்) உருவாக்கும் திறன். அதிக எண்ணிக்கையிலான வண் ணங்களை உருவாக்கும் திறன்.*

high density : மிகு அடர்த்தி; உயர் கொள்ளளவு : ஓர், ''உயர் அடர்த்தி'' நெகிழ்வட்டில், காந்தப் பூச்சின் அளவு (பரப்பு அடர்த்தி) ஒற்றை அல்லது இரட்டை அடர்த்திப் பூச்சி னைவிட அதிகமாக இருத்தல். இது, வட்டின் சேமிப்புத் திறனை அதிகரிக் கிறது. ஒற்றைப் பக்க 5.25'' வட்டு, 160 KB திறனுடையது ; இரட்டைப் பக்க உயர் அடர்த்தி வட்டு (DSHD) 1.2 MB அல்லது 1.6 MB திறன் கொண்டது.

high-level format : உய்நிலை உரு வமைவு ; மேல்நிலை உருவமைவு : ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டு முறைக் குத் தேவைப்படும் தகவல்கள் (பொருட்குறிப்பு அகராதிகள், அட்ட வணைகள் முதலியன) ஒரு வட்டில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

high-level language : உயர்நிலை மொழி ; மேல்நிலை மொழி : இது ஒரு வகைச் செயல் முறைப்படுத்தும் மொழி. இது, மனித மொழியை அல் லது கணித குறிமானத்தைப் பெரிதும் ஒத்திருக்கிற பேரளவு அறிவுறுத் தங்களையும் கட்டளைகளையும், தீர்க்கப்படவேண்டிய சிக்கல்களை அல்லது பயன்படுத்த வேண்டிய நடைமுறையை விவரிப்பதற்குப் பயன்படுத்துகிறது. இதனைத் தொகுப்பி மொழி, எந்திரம் சாராத செயல்முறைப்படுத்தும் மொழி என்றும் கூறுவர். எடுத்துக்காட்டுகள்: FORTRAN ; BASIC ; COBOL ; PASCAL ; C. இது தாழ்நிலை மொழிகளைப் போல் எந்திரத்தின் கட்டமைவில் கவ னம் செலுத்தாமல், தீர்க்கப்பட வேண் டிய சிக்கலின் தருக்க முறையில் கவனம் செலுத்த உதவுகிறது.

highlight : முனைப்பாக்கப் பகுதி : CRT இல் அமைப்பு, அடிக்கோடு, மறிநிலை ஒளிப்பேழை, செறிவாக் கம் போன்ற உத்திகள் மூலம் ஓர் உருக்காட்சியின் பகுதியை முனைப் பாகக் காட்டுதல்.

highlight bar : முனைப்பாக்கச் சட்டம்: ஒரு நேரடித் திரைப்பட்டியலில் மறி நிலை ஒளிப்பேழையில் அல்லது மாறுபட்ட வண்ணத்தில், தற்போ தைய தேர்வு/சறுக்கச் சட்ட நிலை யைக் குறியீடாகக் காட்டுவதற்கான வரி.

highlighting : முனைப்பாகக் காட்டுதல்: நேரடித் திரைவாசகத் தேர்வு மற்ற வாசகங்களிலிருந்து வேறுபட்டிருக் கும்போது, விசையை ஆணைகள் அல்லது நுண் பொறி மூலமாக அதனை முனைப்பாகக் காட்டுதல். தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகம், ஏதா வதொரு வழியில் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது. எடுத்துக் காட்டு : வாசகத்தின் வண்ணத்தை மாற்றிக் காட்டுதல்.

high memory : உயர்நிலை நினைவகம்: *1.* நினைவகத்தில் மிக உயர்ந்த

திறனளவு. 2. சொந்தக் கணினிகளில், 640 K-க்கும் 1 M அல்லது 64k-க்கு மிடையிலான பரப்பளவு. 1024-க்கும் 1088 k-க்கும் இடையிலான HMA பரப்பளவு.

high order : உயர்மதிப்பு நிலை : எண் ஒன்றின் கூடுதல் மதிப்பு அல்லது முக்கியத்துவம் உடைய இலக்கம் அல்லது இலக்கங்கள் தொடர்பானது. 7643215 என்ற எண்ணில் உயர் ஒழுங்கில் இருப்பது 7.

அடிநிலை ஒழுங்கு என்பதற்கு மாறானது. Most Significant Digit என்பதைப் பார்க்க.

high order bit : உயர்நிலைத் துண்மி : ஒரு கணினியின் அடிப்படைச் சேமிப்பு அலகில் (Word) இடது ஓரமாகவுள்ள துணுக்கு.

high order column : உயர் ஒழுங்கு நிரை ; உயர் மதிப்பு நிரை : துளையட்டையின் பரப்பில் இடது ஓரத்தில் உள்ள நிரை.

high persistence phosphor : கூடுதல் பாஸ்பரஸ் பூச்சு : கண்காணிப்புக் கருவியில் உள்ள திரைகளில் உள்ள பாஸ்பரஸ் பூச்சு, இயல்பான தொலைக்காட்சித் திரைகளில் உள்ள பூச்சுகளைவிடக் கூடுதலான நேரத்துக்கு உருவங்களை நிலைக்கச் செய்யக்கூடியது.

high punch : உயர்துளை : பன்னிரு துளை அல்லது ஒய் (Y) துளை போன்றது.

high resolution : உயர்நுணுக்கத் தெளிவு ; மிகைத் தெளிவு; அதி நுட்ப வரைமுறை : வெளியிடப்படும் விவரங்கள், துல்லியம் ஆகியவற்றின் அடிப்படையிலான தரம் தொடர்பானது. ஒரு படவரைவு ஒன்றுக்குள் எத்தனை உரு உணர்த்தும் அலகுகள் உள்ளன என்பதைப் பொறுத்து படத்தின் தரம் அமைகிறது. படம் உணர்த்தும் அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவு அதிகம் உள்ளதோ அத்தனைக்கு உயர் நுணுக்க விவரம் கூடுதலாக அமையும். உயர் துணுக்க விவரம் கூடுதலான படங்கள் உயர் துணுக்க விவரம் குறைந்த படங்களை விட தெளிவாக அமையும்.

high resolution graphics : உயர் செறிவு வரைகலை ; அதிநுட்ப வரைமுறை கலை : பெரும்பாலான நுண் கணினிகள், புள்ளிகளையும், கோடுகளையும் செயல்முறை மூலம் வரைவதற்குரிய ஒரு வகை வரைகலை முறைகளை அளிக்கின்றன. வரைகலைத் திரை, 'x' கிடைமட்ட அச்சு, 'y' செங் குத்து அச்சு என்று பகுக்கப்பட்டிருக்கும். பரப்பளவு முழுவதும் படக்கூறுகளால் அமைந்திருக்கும். ஏறத்தாழ 640 x 480 படக்கூறுகள் உயர் செறிவு என்றும் 320 x 240 படக்கூறுகள் தாழ்செறிவு என்றும் கருதப் படுகின்றன. அச்சடிப்பிக்கு அல் லது வரைவிக்கு படக்கூறு தகவல்களை அனுப்புவதற்கும், திரையில் படிப்பதற்கும் தனிவகை வரைகலைச் செறிவுகள் தேவை.

high sierra : உயர் சியரா : முதலாவது CD-ROM தர அளவு. டாஹூ ஏரியின் அருகிலுள்ள ஒரு பரப்புக்காக 1985-இல் இது வகுக்கப்பட்டது. அந்தப் பகுதியின் பெயரே இதற்குச் சூட்டப் பட்டது. பின்னர், இது ISO 9660 தர அளவாக உருவாக்கப்பட்டது.

high sierra group : உயர் சியரா குழுமம் : CD-ROM இல் தகவல் சேமிப்பதற்கான தர அளவு. இது, அமெரிக்காவில் நெவடாவில் டாஹூ ஏரி அருகிலுள்ள உயர் சியரா உணவகத்தில் 1985இல் நடைபெற்ற தொழில் துறைச் சார்பாளர்களின் கூட்டத்தில்

வகுக்கப்பட்டது. இப்போது, இது CD-ROMஇன் ஒரு பகுதியாகும்.

high speed networks : உயர்வேக கணினி இணையங்கள் : வினாடிக்கு இரண்டு கோடி துண்மிகளுக்கு (MBps) மேற்பட்ட வேகத்தில் அனுப்பீடு செய்யக்கூடிய வளாகக் கணினி இணையங்கள் (LAN).

high speed printer : மிகைவேக அச்சிடு கருவி ; அதிவேக அச்சுப் பொறி : ஒரு நிமிடத்தில் 300 முதல் 3,000 வரிகள் அச்சிடக்கூடிய கருவி.
Line printer என்பதைப் பார்க்கவும்.

high tech : உயர்தொழில் நுட்பம் : கணினிகளிலும், மின்னணுவியலிலும், சமூக-அரசியல் சூழல்களிலும் மிக அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும், நவீன எந்திரங்களினால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும் குறிக்கும் சொல்.

high storage : உயர்சேமிப்புத் திறன் : கணினி ஒன்றின் நினைவக மேல் முகவரி வரிசை. பெரும்பாலான எந்திரங்களில் அதில் இயக்க முறைமை அமைந்திருக்கும்.

high volatillity : உயர் மாறுதிறன் ; வேக அழிவு : கோப்பு ஒன்றில் குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படும் உயர்வேக மாறுதல்கள்.

highway : பெருவழி; நெடுந்தடம் : ஒரு கணினியமைவில், நினைவகம், பிற புறநிலைச் சாதனங்கள் ஆகியவற்றுக்கும், அவற்றிலிருந்தும் உட்பாட்டு/வெளிப்பாட்டு மாற்றங்களைக் கையாள்வதற்கான குறியீடுகளைக் கொண்ட வழி.

hints : நினைவுக் குறிப்புகள் : அச்செழுத்து வடிவளவின், குறிப்பாகச் சிறிய முகப்பு அளவுகளின் அடிப்படையில் இடைவெளியையும் மற்ற முகப்பு அம்சங்களையும் மாற்றும் படி உருவமைப்புச் சாதனத்திற்கு அறிவுறுத்துகிற பின்குறிப்பு எழுத்து முகப்புகளுக்கான தனிவகைக் கூடுதல் சேர்மானங்கள்.

HIPO : Hierarchy Plus Input-Output Process என்பதன் குறும்பெயர்.

hi-res graphics : : High resolution graphics என்பதன் குறும்பெயர்.'நெருடலற்ற உண்மையானது போன்று வெளியீட்டுத் திரையில் தோன்றும் படம். ஏராளமான பட உருவாக்கக் கூறுகளால் உருவாக்கப்படுகிறது.
Low-res graphics என்பதற்கு மாறானது.

HIS : : Hospital Information System என்பதற்கான குறும்பெயர். மருத்துவமனைத் தகவல் முறைமைக்கான ஆங்கிலக் குறும்பெயர்.

histogram : பட்டை வரைபடம் : செங்குத்தான குறுக்குப்பட்டியல் புள்ளி விவரத் தகவல்களை வரைபடமாக வழங்க அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. செங்குத்துக் களங்களுக்கான அகலம், இடைவெளி அளவு கூட்டெண்ணிக்கை ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

hit : கிடைத்தல் : இரண்டு வகையான தகவல்களை வெற்றிகரமாக ஒப்பிடல் ; இணைகளை ஒப்பிடல்.

hit rate : மறைவிட நினைவக விழுக்காடு : இது மறைவிட நினைவக மேலாண்மை தொடர்புடையது. மையச் செயலகத்துக்கு (CPU) தேவைப்படும் மறைவிட நினைவக விழுக்காட்டினை இது குறிக்கிறது. பெரும்பாலான மறைவிடக் கட்டுப்பாட்டாளர்கள் 90% வீதத்தை விரும்புவார்கள்.

hit ratio : வெற்றி விகிதம் : முதன்மை நினைவகத்தில் தகவல்கள் எத்தனை

முறை வெற்றிகரமாக இட அமைவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்கும், ஒரு குறிப்பிட்ட கால அளவின் போது மேற்கொண்ட முயற்சிகளின் மொத்த எண்ணிக்கைக்குமிடையிலான விகிதம்.

hi-tech : உயர்-தொழில்நுட்பம் : உயர் தொழில் நுட்பம் என்பதன் சுருக்கப் பெயர். அண்மைக்காலத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் எல்லா வகை வன்பொருள்களையும் இது குறிக்கிறது.

Hoff Ted : ஹோஃப் டெட் : 1971இல் இன்டர் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் பொறியாளரான ஹாஃப் முதல் குறும் நுண் செயலியை (4004) வடிவமைத்தார். அந்த ஒற்றைச் சில்லில் 2250 டிரான்ஸ்சிஸ்டர்கள் இருந்தன. ஒரு முழு மையச் செயலியின் எல்லாக் கருவிகளும் இருந்தன. இந்த குறுஞ்சில் கணினித் தொழிலையும் அதன் விநியோகிப்பாளர்களையும் கணினியின் எதிர்காலப் பங்கு குறித்து சிந்திக்க வைத்தது.

hog : பன்றிப் பண்பு : முதன்மை நினைவகம் போன்ற கிடைக்கக் கூடிய ஆதாரங்களை மிகப் பெருமளவில் அல்லது தன்னந்தனியாகப் பயன்படுத்துகிற ஒரு செயல் முறை.

hold variable : பிடிமான மாறி : ஒரு மதிப்பளவினை இருத்தி வைத்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு மாறி. எடுத்துக்காட்டு : கட்டுப்பாட்டுப் இடைமுறிவுத் தருக்க முறைக்காக முந்திய பதிவேட்டிலிருந்து மதிப்பளவினை இருத்தி வைத்தல்.

holding time : பிடிமான நேரம் : ஒரு செய்தியை அனுப்புவதற்கு ஒரு செய்தித் தொடர்புச் சாதனம் பயன்படுத்தப்படும் கால அளவு.

Hollerith card : ஹோலரித் அட்டை : 80 செங்குத்து நிரைகளைக் கொண்ட துளையிடப்பட்ட அட்டை. ஒவ்வொன்றும் மேலிருந்து கீழாக 12 துளையிடு நிலைகளைக் கொண்டது. 80 எழுத்து, எண் தகவல்களை ஏற்கக் கூடியது.

90 செங்குத்து நிரைகள் மற்றும் 96 செங்குத்து நிரைகளைக் கொண்ட அட்டைக்கு மாறானது.

Hollerith code : ஹோலிரித் குறியீடு : துளையிடப்பட்ட அட்டைகளில் எழுத்து மற்றும் எண்ணைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வகையான குறியீடு. ஹெர்மன் ஹோலிரித் என்பவரால் பெயரிடப்பட்டது. இவர் தான் துளையிடப்பட்ட அட்டை கணக்கீட்டு முறையை உருவாக்கியவர். ஒவ்வொரு அட்டை நிரையும் ஒரு எழுத்தைக் கொண்டது. ஒவ்வொரு பதின்ம எண்ணும் எழுத்தும், சிறப்பு எழுத்துகளும், ஒன்று இரண்டு, மூன்று துளைகளால் குறிப்பிடப்படுகின்றன. இவை நிரையின் குறிப்பிட்ட வரிசை நிரல்களில் அமைக்கப்படுகின்றன.

Hollerith, Herman (1860-1929) : ஹோலரித், ஹெர்மன் (1860-1929) : புள்ளி விவர வல்லுநர் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஊழியர் என்றவகையில், 1890ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்போது எளிமையான கூட்டல் மற்றும் வகைப்படுத்துதலுக்கு மின் எந்திரவியல் கருவிகள் மூலம் துளையிடப்பட்ட அட்டைகளைப் பயன்படுத்தும் முறையைப் பரிந்துரைத்தார். அவருடைய துளையிடப்பட்ட அட்டை கணக்கிடு கருவியை உற்பத்தி செய்ய அவர் அமைத்த நிறுவனம் ஐ.பி.எம். கார்ப்பரேஷன் நிறுவனத்தின் முன்னோடி ஆனது.

Hollerith machine : ஹோலரித் எந்திரம் : முதலாவது தானியங்கித் தகவல் பகுக்கும் சாதனம். இது 1890இல் அமெரிக்காவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குப் பயன் படுத்தப்பட்டது. இதனை ஹெர்மன் ஹோலரித் என்பவர் கண்டுபிடித்தார். இது, கையினால் துளையிடும் அட்டையினையும், எண்ணுவதற்கு ஓர் அட்டவணைப்படுத்தும் எந்திரத் தையும் பயன்படுத்தியது. 1890இல் 10 ஆண்டுகளில் செய்திருக்கக்கூடிய பணியை, ஹோலரித் எந்திரத்தின் மூலம் ஈராண்டுகளில் முடிக்க முடிந் தது. இதனால், 50 இலட்சம் டாலர் மிச்சமாகியது. ஹோலரித் பின்னர் ஒரு நிறுவனத்தைத் தொடங்கி தமது எந்திரத்தை உலகெங்கும் விற்பனை செய்தார். இந்நிறுவனம் 1911 இல் IBM நிறுவனமாக உருமாறியது.

hologram : முழுமைப் படிவம் : லேசர் கதிர்கள் ஒன்றுடன் ஒன்று வெட்டிக் கொள்வதால் மெல்லிய காற்றில் உருவாக்கப்படும் முப்பரிமாண உருவங்கள்.

holographic : முழுமைப் படிமச் சேமிப்பு : ஒரு படச்சுருளில் பெரு மளவுத் தகவல்களைச் சேமித்து வைத்தல்.

holographic store : முழுப் படிமச் சேமிப்பி : ஒளிப்பட முறையில் சேமித்து வைத்தல்.

holography : முழுமைப் படிமவியல் : ஒரு சேமிப்பு ஊடகத்தில் பன்முகப் பரிமாண ஒளிப்படங்கள் எடுப்பதன் மூலம் தகவல்களைச் சேமித்து வைக்கும் உத்தி.

home : இல்லம்; தொடக்கம்: முனை யத் திரை ஒன்றின் இடதுபுற மேல் மூலையில் உணர்த்து குறியீடு தோன் றும் துவக்க இடம்.

home address : இருப்பிட முகவரி : பன்முக வட்டு நினைவகத்தின் நேர்வுகளில், ஒவ்வொரு தடத்திலும் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒரு புலம். இதில், அந்தத் தடத்திலுள்ள தகவலை அணுகுவதற்குப் பயன் படுத்தப்படும் எழுத்து/படிப்பு முனைகளின் எண்ணும், நீள் உருளை யின் எண்ணும் அடங்கியிருக்கும்.

homebrew : சுய கணினி : பொழுது போக்குக்காகச் செயல்படுவோரால் தொடக்க காலத்தில் உருவாக்கப் பட்ட நுண் கணினி முறைமையைக் குறிக்கிறது. சுய கணினி, மக்கள் மத்தியில் பிரபலமாக வகை செய்தது.

home button : பிறப்பகக் குமிழ் : ஒரு கோப்பின் அல்லது ஒரு செயற் பாட்டுத் தொகுதியின் தொடக்கத் தைக் குறிக்கும் உருவப்படம்.

home computer : குறுங்கணினி : ஆட்டங்களை விளையாட இல்லங் களில் பயன்படுத்தப்படுகிறது. வீட் டுப் பயன்பாட்டுச் சாதனங்களைக் கையாளவும், மாணவர்களுக்கு வீட் டுப் பாடங்களைச் செய்யவும் வணிகக் கணக்குகளைப் போடவும் மேலும் பல வகையான பணிகளைச் செய்யவும் பயன்படுகிறது.

home-grown software : தாமே ஆக்கிய மென்பொருள் : கணினி முறைமை ஒன்றைப் பயன்படுத்துவோரால் எழுதப்பட்ட ஆணைத்தொகுப்பு.

home key : ஆரம்பச் சாவி : உணர்த்து குறியீட்டைத் தனது இல்ல நிலைத் திரையின் இடது மேல்மூலைக்குக் கொண்டு வருவதற்கான விசைப் பலகை இயக்கம்.

home management software : இல்ல மேலாண் மென்பொருள் : வீட்டைப் பராமரிக்கவும், திட்டமிட்ட வகை

யில் கண்காணிக்கவும் தயாரிக்கப் பட்ட ஆணைத் தொகுப்பு. எடுத்துக் காட்டாக சரிபார்த்தல், உணவுக் கோப்பு, இருப்புச் சரிபார்த்தல், கணக்கிடு ஆணைத் தொகுப்பு ஆகிய வற்றைக் கொண்டது.

homeostasis : சமநிலை : ஒரு பொறி யமைவில் உட்பாட்டு-வெளிப்பாட் டுத் தேவைகள் சரிநிகராக இருக்கும் போது ஏற்படும் சமநிலை.

home record : இல்ல ஆவணம் : நிறு வனம் ஒன்றின் இணைப்பு முறை யில் உள்ள ஆவணத் தொடரில் முதல் ஆவணம்.

home row : இல்ல வரிசை : விசை களை இயக்குவதற்கு இடையில் பயனாளர் தங்கள் விரல்களை ஓய் வாக வைக்கும் விசை வரிசை.

homunculus : மூளையியக்கப் படி வம் : எண்ணற்ற, மீள்வளைவுகளைக் கொண்ட மூளையின் மாதிரி. செயற்கை நுண்ணறிவு ஆய்வுகளில் பயன்படுத்தப்படுவது.

Honeywell : ஹானிவெல் : கணினி கருவிகளைத் தயாரிக்கும் பெரிய நிறு வனம்.

hook : கொக்கி : செயல் வரைவுகளில், எதிர்கால விரிவாக்கத்திற்கான தருக்க முறை இடையீடுகள். இந்தக் கொக்கி களை ஒருசில புறவாலாயங்களை அல்லது செயற்கூறு வரவழைக்க மாற்றலாம். அல்லது கூடுதல் செயல் விரைவுகள் சேர்க்கப்படும்போது சரி யான இடத்தில் அமைக்கலாம்.

hooked vector : கொக்கியிட்ட அளவுச் சரம் : ஒரு சொந்தக் கணினியிலுள்ள (PC) அகப்படுத்தப்பட்ட இடையீடு. இடையீட்டு அளவுச் சர அட்ட வணையில் ஒரு குறிப்பிட்ட இடை யீட்டுக்கான சுட்டு முனை, அந்த இடையீட்டினைச் சீர் செய்வதற்காக ஒரு புதிய வாலாயத்திற்குத் தாவு மாறு மாற்றமைவு செய்யப்படு கிறது.

hookemware : தடையற்ற மென் பொருள் : மென்பொருளின் அதிக விரிவான பதிப்பினை வாங்குவதற் குப் பயனாளரை ஈர்ப்பதற்காக வடி வமைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அம்சங்களைக் கொண்ட தங்குதடையற்ற மென் பொருள்.

Hopper, Grace : ஹோப்பர் கிராஸ் : கணித வல்லுநர், மார்க் -1 மற்றும் யுனிவாக் கணினிகளுக்கான ஆணைத்தொகுப்பை உருவாக்கி யவர். பின்னர் கணினி மொழியில் பேரும் புகழும் பெற்றார். முதல் நடைமுறையில் பயன்படும் compiler ஆணைத் தொகுப்பை உருவாக்கி னார். Cobol-ஐ உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தார்.

horizontal scrolling : இட, வல நகர்த் தல் ; கிடைமட்ட நகர்த்தல் : திரையில் ஒரு நேரத்தில் கொள்ளும் தகவல் களை விட கூடுதலான தகவல்களைப் பயனாளர் காணும் வகையில் கிடை நிலை தகவல்களை அல்லது உரை யை நகர்த்துதல்.

horizontal motion index : கிடைமட்ட இயக்கக் குறி ; கிடைமட்ட இயக்கக் குறி அட்டவணை : ஒரு கிடை மட்டத் திசையில் ஓர் அச்சுச் சுருள் முனை முன்னே நகர்த்தக்கூடிய பெருமத் தொலைவு. இது அச்சடிப் பான் சுழற்சியின் அளவீடாகும். பெயர்ச் சுருக்கம் : HMI.

horizontal resolution : கிடைமட்டத் தெளிவு : ஒரு கிடைமட்டக் கோட் டின் மீதுள்ள கூறுகளின், அல்லது புள்ளிக் குறிகளின் (ஒரு அச்சு

வார்ப்புருவிலுள்ள நிரைகளின்) எண்ணிக்கை. இது, செங்குத்துத் தெளிவிலிருந்து மாறுபட்டது.

horizontal scan frequency : கிடை நுண்ணாய்வு அலைவெண் : ஒளிப் பேழைத் திரையில் ஒரு வினாடி நேரத்தில் ஒளிர்வூட்டப்படும் வரி களின் எண்ணிக்கை. எடுத்துக் காட்டு : வினாடிக்கு 60 மடங்கு வலு வூட்டப்பட்ட 400 வரிகளின் தெளி வுக்கு 24KHz நுண்ணாய்வு விகிதம் தேவைப்படுகிறது. இது, தொலைக் காட்சியில் கிடைமட்ட ஒருங்கிசைவு அலைவெண் போன்றது. இது செங் குத்து நுண்ணாய்வு அலைவெண்ணி லிருந்து மாறுபட்டது.

host : ஓம்புநர் ; புரவலர் : ஓர் இணை யத்திலுள்ள ஒரு நுழைவாயில் கணினி. ஒரு விருந்தில் விருந்தளிப் பவரையும் குறிக்கிறது.

host adapter : ஓம்பு தகவமைப்பி : எந்த வடிவளவையும் கொண்ட ஒரு கணினியுடன் ஒரு புறநிலை அல கினை இணைக்கிற சாதனம். இதில் ஒரு கட்டுப்படுத்தியைவிடக் குறை வான மின்னணுவியல் அடங்கி யுள்ளது. எடுத்துக்காட்டு : IDE வட்டு, உள்ளமைந்த கட்டுப்படுத்தியைக் கொண்டிருக்கிறது. இது, ஒரு IDE அல்லாத ஆயத்தத் தாய்ப்பலகை யுடன் ஒரு IDE ஒப்பு தகவமைப்பி யின் மூலம் இணைக்கப்பட்டிருக் கிறது.

host based : ஓம்புநர் அடிப்படை : ஒரு பெரிய, மையக் கணினியமைவு மூலம் கட்டுப்படுத்தப்படுகிற செய் தித் தொடர்புப் பொறியமைவு.

host computer : புரவலர் கணினி; ஓம்பு கணினி : 1. தொலைவில் முனையங் களுக்கும் அதனுடன் இணைக்கப் பட்டுள்ள கருவிகளுக்கும் கணினித் திறனை வழங்குகிற மைய வகைப் படுத்தும் அலகு. 2. தொலைத் தகவல் தொடர்புக்கு அல்லது வளாக இணைய இணைப்புக்குப் பொறுப் பான கணினி. 3. கணினி இணையம் ஒன்றில் மையக் கட்டுப்பாட்டுக் கணினி.

host language : புரவலர் மொழி; ஓம்பு மொழி: மற்றொரு மொழி பொதிந் துள்ள அல்லது உள்ளடங்கிய ஆணைத் தொகுப்பு மொழி.

host mode : ஓம்பு முறை : மனிதர் உதவியின்றி வருகிற தொலைபேசி அழைப்புக்குப் பதிலளிக்கவும், தக வல்களைப் பெறவும் ஒரு கணி னியை அனுமதிக்கிற செய்தித் தொடர்பு முறை.

hotkey : தூண்டு விசை : கணினியில், தற்போது என்ன ஓடிக்கொண்டிருப் பினும் அதைப் பொருட்படுத்தாமல் ஒரு சில செயற்பணிகள் நிகழும்படி செய்கிற விசை அல்லது விசைகளின் கூட்டு இணைப்பு. இது பொதுவாக, நினைவகத்தில் அமைந்திருக்கும் ஒரு செயல் முறையைத் தூண்டி விடுகிறது.

hot link : நேர் இணைப்பு : செயல் முறைகளிடையே முன்னரே வரை யறுக்கப்பட்ட இணைப்பு. இதனால், ஒரு தகவல் தளத்தில் அல்லது கோப் பில் உள்ள தகவல்கள் மாற்றப்படும் போது, மற்ற தகவல் தளங்களிலும், கோப்புகளிலுமுள்ள தொடர்புற்ற தகவல்களும் புதுப்பிக்கப்படு கின்றன.

hot site : முழுத் தளம் : முழுமையான தயாரிப்புகளைக் கொண்ட கணினி மையம். நெருக்கடி நிலையின் போது பயன்படுத்தத் தயார் நிலை யில் இருப்பது.

hot spot : சுட்டு நுனி : சுட்டியைச் சொடுக்கும்போது பாதிக்கப்படுகிற ஒரு திரையின் மீது படக் கூறுகளின் துல்லியமான அமைவிடம். எடுத்துக் காட்டு : ஓர் அம்புச் சுட்டு முனையின் நுனிப்பகுதி. ஒரு விரல் சுட்டு முனையின் நுனி.

hot zone : வெம்மை மண்டலம் : சில சொல் பகுப்பிகளில் பயனாளர் வகைப்படுத்தும் பகுதி. பக்கத்தின் வலது விளிம்பில் தொடங்கி, பக்கத்தின் இடது பக்கத்தில் 7 இடைவெளிகள் வரை நீள்கிறது. அந்த வெப்பப் பகுதியில் ஒரு சொல் முடிவடைந்தால், அடுத்த எழுத்தை அடுத்த வரியின் தொடக்கத்தில் தானாகவே, முறைமை பொருத்துகிறது.

housekeeping : இல்லப் பராமரிப்பு; ஒழுங்கமைப்பு : விரும்பும் பயனைத் தர நேரடியாகப் பங்களிக்காத கணினியின் இயக்கச் செயல்கள். ஆனால் அவை ஆணைத்தொகுப்பு ஒன்றின் பகுதியாகும். செயல்முறையை தொடங்குதல் மற்றும், நூல் பராமரிப்பு எனும் இயக்கங்களை தூய்மைப்படுத்தும் செயல்கள் தேவையற்ற கோப்புகளை வட்டுச் சேமிப்பகத்திலிருந்து நீக்குதல் ஆகியவை இதற்கு எடுத் துக்காட்டுகளாகும்.

housekeeping tasks : துப்புரவுப் பணிகள் : ஒரு மென்பொருள் பயன்பாட்டினால் அல்லது செயற்பாட்டுப் பொறியமைவினால் செய்யப்படும் பின்னணிப் பணிகள். எடுத்துக்காட்டுகள் : தற்காலிகச் சேமிப்பு அமைவிடங்களுக்குத் தகவல்களைப் படித்தல் மற்றும் எழுதுதல்; கோப்புகளை உருவாக்குதல்; குறிப்பின்றி அணுகும் நினைவகத்தின் (RAM) பரப்புகளைத் துப்புரவாக்குதல்.

housing : உறை ; கூடு : காபினெட் அல்லது பிற மேல் உறை.

HSP : ஹெச்எஸ்பி (உயர்வேக அச்சிடு கருவி) : High Speed Printer என்பதன் குறும்பெயர்.

hub : குவியன் ; இணைப்பு மையம் : ஓர் நட்சத்தி அமைவிடத்தில் செய்தித் தொடர்பு இணைப்புகளுக்கான மைய விசையமைப்புச் சாதனம். இது, அனுப்பீட்டுக்கு உதவி புரியவோ, செய்திப் பரிமாற்ற நடவடிக்கைக்கு வலுவூட்டும் குறியீடுகளை மறு உருவாக்கம் செய்யவோ செய்யாது. இந்த குவியன்கள், ஒரு மின் இணைப்புத் தொகுதி அமைவிடங்களுடன் சேர்க்கப்படலாம். எடுத்துக் காட்டு : இடர்ப்பாடுகளை அகற்றும் திறனை அதிகரிப்பதற்காக ஓர் ஈதர்னெட் கணினி இணைப்பை ஓர் ஸ்டார் அமைப்பாக மாற்ற வல்லது.

hub ring : குவிய வளையம்; அச்சு மைய வளையம் : 5.25'' நெகிழ் வட்டின் துளையினுள் விறைப்புத் தன்மைக்காக அழுத்தி வைக்கப் படும் தட்டையான வளையம். இயக்கியின் பற்று வளையம், அச்சு மைய வளையத்தைக் கதிர் மீது அழுத்துகிறது.

hue : வண்ணச் சாயல் ; நிறம் : கணினி வரைகலையில், ஒரு குறிப்பிட்ட வண்ணத்தின் ஒரு குறிப்பிட்ட வண்ணச் சாயல்.

Huffmann coding : ஹஃப்மன் குறியீட்டு முறை : இடப்பரப்பு வடிவங்களில் செயற்படுகிற உருக்காட்சி அடர்த்திச் செய்முறை. இது JPEG படிநிலை நெறிமுறையின் ஒரு பகுதி. புள்ளியியல் அடர்த்தியாக்க முறை. இது மாறுகிற நீளத் துண்மிச் சரங்களாக எழுத்துகளை மாற்றுகிறது. அடிக்கடி வரும் எழுத்துகள்,

மிகக் குறுகிய துண்மிச் சரங்களாக மாற்றப்படுகின்றன. மிக அருகில் வரும் எழுத்துகள், மிக நீளமான சரங்களாக மாற்றப்படும். அடர்த்திச் செய்முறை இருவழிகளில் செயற் படுகிறது. முதல் வழியில் தகவல் தொகுதிப் பகுப்பாய்வு செய்யப்படு கின்றது. இது, அதன் உள்ளடக்கங் களின் அடிப்படையில் ஒரு மர உரு மாதிரியை உருவாக்குகிறது. இரண் டாவது வழியில், இந்த உருமாதிரி வழியாக தகவல்கள் அடர்த்தியாக் கம் செய்யப்படுகின்றன.

human biocomputer : மனித உயிரியல் கணினி : ஒரு கணினிபோல் செயற் படும் மனித மூளை. இதில் மூளை யின் முக்கிய பகுதி, ஒரு பகுத்தறிவு அல்லது உள்ளுணர்வு அறிவாற்ற லின் பல்வேறு கூறுகளுக்கு ஆதர வாகத் தனிப்பண்பாக்கம் செய்யப் படுகிறது.

human oriented language : மனிதர் சார்ந்த மொழி : ஒரு கணினிச் செயல் முறைப்படுத்தும் மொழி. இது, அன் றாடம் பேசப்படும் மொழியில் உள்ளது போன்ற சொற்களை உடை யது. எடுத்துக்காட்டு : Basic, Cobol.

Huffman tree : ஹஃப்மன் மரம் : குறைந்த பட்ச மதிப்பீடுகளைக் கொண்ட மரம். Minimal tree and optimal merge tree என்பதைப் பார்க்கவும்.

human/engineering : மாந்தப் பொறி யியல் : மனிதர்கள் எளிதாகவும் வசதி யாகவும் கையாளத் தக்க வகையில் பொருள்களை வடிவமைத்தல் தொடர்பான ஆய்வு. ergonomics என்றும் கூறுவர்.

human / machine interface : மாந்த-எந்திர இணைமுக எல்லை : எந்திரங் களுடன் மனிதர்கள் இணைந்து செயல்படும் எல்லை.

hung : தொங்கல் : கணினி செயற் படுவது திடீரென நின்று விடுவதைக் குறிக்கப் பயன்படும் சொல்.

hybrid computer system : கலப்பின கணினி முறைமை : அலைநிலை மற்றும் எண்ணியல் கருவிகளைப் பயன்படுத்தும் முறைமை.

hybrid microcircuit : கலப்பு நுண் மின்சுற்று வழி : பல்வேறு ஒருங் கிணைந்த மின்சுற்று வழிகளையும் தனிவேறு அமைப்பிகளையும் ஒரு மண்பலகை மீது ஏற்றி அமைக்கப் பட்டுள்ள மின்னணுவியல் மின் சுற்று வழி. இது, இராணுவ மற்றும் செய்தித்தொடர்புப் பயன்பாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

hybrid network : கலப்பு இணை யம் : செய்தித் தொடர்புகளில், பல் வேறு விற்பனையாளர்களிடமிருந்து வாங்கப்பட்ட சாதனங்களினாலான ஓர் இணையம்.

hybrids : கலப்பின வகை : பல்வேறு தொழில் நுணுக்க வல்லுநர்களின் சிறு இணைப்புகளை இணைத்து ஒரே தளத்தில் உருவாக்கப்பட்ட இணைப்புகள்.

ஓரின ஒருங்கிணைப்பு என்பதற்கு மாறானது.

hydra (Hybrid Document Reproduction Apparatus) : ஹைட்ரா (கலப்பு ஆவணப் படிப் பெருக்கக் கருவி) : ஒரே எந்திரத்தில் அமைந்துள்ள ஓர் அச்சடிப்பி, ஒளிப் படப் படி யெடுப்பி, நுண்ணாய்வுக் கருவி, தொலை நகல் ஆகியவற்றின் தொகுதி. இது ஒத்தியல்பான குறியீடு களை ISDN, BRI குறியீடுகளாக மாற்றுகிறது. ''ஆஸ்டின் மாக்

டெவலப்மென்ட் அசோசியேஷன்'' தயாரித்துள்ள இந்தச் சாதனம், மெக்கின்டோஷ் வரைகலை அட்டைப் பணித்திறனைச் சோதனை செய்கிறது.

hypercube topology : மிகைக் கன சதுர அமைவிடம் : பன்முக நுண் செயலிகளைப் பயன்படுத்தும் பேரளவு ஒருபோகு செய்முறைப்படுத்தும் மீமிகைக் கணினிகளுக்காக அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள கட்டமைவு.

hyper - access : மிகை அணுகுதல் : 'ஹில்கிரேவ்' என்ற அமைவனம் தயாரித்துள்ள சொந்தக் கணினி (PC) செய்தித்தொடர்புச் செயல்முறை. இது தகவல் செறிவாக்கத்தை அளிக்கிறது. தனக்கென ஒரு வரிவடிவ மொழியை உடையது. இது, ஏராளமான முனையங்களுக்கும், தகவல் தொடர்பு நெறிமுறைகளுக்கும் உதவுகிறது.

hyperCard : மிகைத் திறன் அட்டை : ''ஆப்பிள்'' (Apple) என்ற கணினி அமைவனம் தயாரித்துள்ள பயன்பாட்டு மேம்பாட்டுப் பொறியமைவு. இது, மெக்கின்டோஷ் மற்றும் ஆப்பிள் II GSஇல் செயல்படுகிறது. மிக முற்போக்கான ஒருங்கிணைந்த கூறுகளின் ஒரு தொகுதியை அளிக்கிறது. ஒரு தகவல் தளப் பொறியமைவு என்ற முறையில், தகவல்களையும், வாசகங்களையும், வரை கலைகளையும் இருத்தி வைத்துக் கொள்ளக்கூடிய அட்டை அடுக்குகளின் வடிவில் கோப்புகளை உருவாக்க இது பயனாளருக்கு உதவுகிறது. ஒரு கட்டுப்பாட்டுப் பொறியமைவு என்ற முறையில், பயன்பாடுகளைத் தொடங்குவதற்கான முதன்மைப் பட்டியலாக இது பயன்படுகிறது. CD ROM, ஒளிப் பேழை வட்டு போன்ற பன்முகச் செய்தித் தொடர்புச் சாதனங்களை இது கட்டுப்படுத்துகிறது. கல்விப் பயன்பாடுகள் உருவாக்கத்துக்கு உதவுகிறது.

hypercube : மிகைக் கனசதுரம் : சரிலக்கப் பன்முகக் கணினிகளினாலான (4,8,16 முதலியன) ஒருபோகு செய்முறைப்படுத்தும் கட்டமைவு. இதில் தகவல்கள் மிகக் குறைந்த அளவு பயணஞ்செய்கிற வகையில் கணினிகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டு : இரு 8-மைய முனைக் கனசதுரங்களில், கன சதுரத்திலுள்ள ஒவ்வொரு மைய முனையையும் மற்றொன்றிலுள்ள அதற்கு நேரிணையான மைய முனையுடன் இணைக்கலாம்.

hyper media : மிகைத் தொடர்பு ஊடகங்கள் : ஒரு மிகையுரை முறைமையில் தகவல், உரை, வரை கலை, ஒளிப்படம், நகல் படம், ஒலி ஆகியவற்றைக் கூறுகளாகப் பயன்படுத்துதல். பல்வேறு தகவல் வடிவங்கள் அனைத்தும், பயனாளர் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு எளிதாகச் சென்றிடும் வகையில் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.

hyperPAD : மிகைத் திண்டு : ''பிரைட்பில்-ராபர்ட்ஸ் - கம்பெனி'' என்ற அமைவனம் தயாரித்துள்ள சொந்தக் கணினிகளுக்கான (PC) பயன்பாட்டு மேம்பாட்டுப் பொறியமைவு. இது மிகை அட்டை போன்ற செயல்முறை. இது உரை வடிவமுறையில் செயற்படுகிறது. இதில், PAD உரை வரி வடிவ மொழி உள்ளடங்கியுள்ளது.

HyperScript : மிகை வரிவடிவம் : "WINGE" விரிதாள் தொகுப்புடன் வழங்கப்படும் ஒரு முன்னேறிய பெரும (வரிவடிவ) மொழி.

hypertalk : மிகைபேச்சு : மிகை உரை / மிகைச் சாதனம் எழுதுவதற்கு அல்லது மரபான செயல்முறைப் படுத்துதலுக்குப் பயன்படுத்தப் படும் மிகை அட்டைக்குரிய மொழி.

hypertape : மீதுயர் நாடா : மின்காந்த அலகு. நாடாப் பொதிந்த குடுவை யாகப் பயன்படுத்தப்படுகிறது. நாடாச் சுருளாகப் பயன்படுத்தப்படு வதில்லை. நாடாப்பொறி குடுவை யில் நாடாச்சுருளும் ஏற்பு நாடாச் சுருளும் உள்ளன.

hypertext : மிகையுரை; பிணைப்பு உரை : சொல் பகுப்பி பொறியமைவு களில் பயன்படுத்தப்படும் ஒரு சொல். மிகை உரை பற்றிய தகவல். எடுத்துக்காட்டு : ஒரு சொற்றொடரி லுள்ள ஒரு சொல்லைத் தேர்ந்தெடுப் பதன் மூலம், அந்தச் சொல் தொடர் பான தகவல் வேறு கோப்பில் இருக்குமானால் அது மீட்கப்படு கிறது ; அல்லது அந்தச் சொல்லின் அடுத்த நிகழ்வு கண்டறியப்படு கிறது. மனிதச் சிந்தனைக்குக் கணினி பதிலளிக்கும்படி செய்கிற ஒரு முறை யாக இந்தக் கோட்பாட்டினை டெட் நெல்சன் உருவாக்கினார்.

hyperware : மிகைச் சாதனம் : மிகை உரைத் தகவல் தொடர்புச் சாதனங் கள்.

hyphenation dictionary : இணைப்புக் குறியீட்டு அகராதி : முன்னரே வரை யறுத்த சொல்லிடை இணைப்புக் குறி அமைவிடங்களுடன் கூடிய சொற்கோப்பு.

hyphenation zone : இணைப்புக் குறியீட்டு மண்டலம் : வலது ஓர விளிம்பிலிருந்தான தொலைவு. இத னுள் ஒரு சொல்லுக்கு இணைப்புக் குறியிடலாம்.

hyphenation : இணைப்புக் குறி யிடல் : வலது ஓர விளிம்பைத் தாண்டி நீண்டுசெல்லும் சொற் களைப் பிளவு செய்து இணைப்புக் குறியிடுதல். சொற்களை ஒரு இணைப்புக் குறியீட்டு அகராதி அடிப்படையில் இணைத்து வைப் பதன் மூலம் அல்லது உள்ளமைந்த விதித்தொகுதிகள் அல்லது இரண் டின் மூலமாக மென்சாதனம் சொற் களுக்கு இணைப்புக் குறியிடுகிறது.

hysteresis : தயக்கம் : ஒரு விளைவு ஒன்றுக்கான மொழி. அந்த விளை வுக்கான காரணத்தின் பின்புலமாக உள்ளது. அதேபோல மின்காந்தப் பொருளை துருவ நெறிப்படுத்த மொழி இயலாததாக உள்ளது. மின் காந்தமயமாக்கும் சக்தி அதற்கு இல்லை.

hz : ஹெச்இஸட் : ஒரு வினாடிக்கான மின் காந்த அலைச்சுற்று என்பதைக் குறிக்கும் ஹெர்ட்ஸ் என்பதன் குறும் பெயர்.

I/O : ஐ/ஓ : (உள்ளீடு/வெளியீடு) உ/வெ என்பது input/output என்பதன் குறும்பெயர். மையச் செயலகத்தி லிருந்து வெளிப்புறச் சாதனங்களுக்கு தகவல்களை மாற்றுதல். ஒவ்வொரு மாற்றலும் ஒரு சாதனத்திற்கு வெளி யீடாகவும், இன்னொன்றுக்கு உள்ளீ டாகவும் அமைகிறது.

I/O area : உ/வெ பகுதி: உள்ளீட்டுச் சாதனத்திலிருந்து தகவல்களை ஏற்கவோ அல்லது வெளியீட்டுச் சாதனத்திற்கு அனுப்பவோ தகவல் களை சேர்த்து வைக்கவோ பயன் படுத்தப்படும் நினைவக தனிப் பிரிவு. டிபிஎம்எஸ்ஸிலோ அல்லது செயலாக்க ஆணைத் தொகையிலோ இயக்க அமைப்புப் பயன்பாட்டு ஆணைத்தொடரிலோ இது அமைக் கப்படும்.

I/O board : உ/வெ பலகை : கணினிக் கும் வெளிப்புறச் சாதனங்களுக்கும் இடையிலான உள்ளீட்டு மற்றும் வெளியீட்டுத் தகவல்களைக் கட்டுப் படுத்தும் மின்சுற்றுப் பலகை.

I/O bound : உ/வெ கட்டுப்பட்ட, சார்ந்த : அதிகநேர மையச் செயலக காத்திருக்கும் நேரம் ஏற்படும் வகை யில் பேரளவு உள்ளீடு/வெளியீடு இயக்கங்கள் தேவைப்படும் ஆணைத் தொடர்களை இது குறிப்பிடுகிறது.

I/O card : உ/வெ அட்டை : 1.உ/வெ கட்டுப்பாட்டு அல்லது விரிவாக்க அட்டை. 2. மோடெம், பேக்ஸ், லேன் அல்லது பிற ஐ/ஓ சாதனத் துடன் இணைக்கப்படும் பி.சி (PC) அட்டை.

I/O channel : உ/வெ வழித்தடம்; உ/வெ தடம்: ஒரு கணினியின் உள்ளீடு/ வெளியீடு அமைப்பின் பகுதி. உ/வெ ஆணைகளின் கட்டுப் பாட்டின் கீழ் உள் சேமிப்பகத்தி லிருந்து வெளிப்புறக் கருவிக்குத் தகவல் தொகுதிகளை மாற்றும் வழித்தடம்.

I/O interface : உ/வெ இடைமுகம் : மையச் செயலகம் மற்றும் ஒரு வெளிப்புறச் சாதனத்திற்கு இடை யில் உள்ள வழித்தடம் அல்லது பாதை.

Iocs : ஐயோக்ஸ்: உ/வெ கட்டுப் பாட்டு அமைப்பு.

IO divice : உ/வெ சாதனம்.

IO instruction : உ/வெ ஆணைகள் : உ/வெ கட்டளைகள்.

I/O port : உ/வெ வாயில்; முகப்பு : காட்சித் திரை முகப்புகள், தட்டச்சு கள், வரி அச்சுப் பொறிகள் மற்றும் காந்த வட்டு அலகுகள் போன்ற மையச் செயலகத்தின் தகவல் பாதை களுக்கும், வெளிப்புறச் சாதனங் களுக்கும் இடையில் மையச் செய லக அலகின் இணைப்பு.

I/O processor : உ/வெ செயலகம் : கணினிக்கும் வெளிப்புற உறுப்பு களுக்கும் இடையிலான உள்ளீடு/ வெளியீடு இயக்கங்களை மட்டும் கையாளும் மின்சுற்றுப் பலகை அல்லது சிப்பு.

I/O statement : உ/வெ கட்டளை : உ/வெயிடம் வேண்டுகோள் விடுக் கின்ற ஆணைத் தொடரமைப்பு ஆணைகள்.

IO symbal : உ/வெ குறியீடு.

IAL : அயோல் : International Algorithmic Language என்பதன் குறும்பெயர். ஆல்கால் 58 என்று பின்னர் அழைக் கப்பட்டு காலாவதியாகி விட்ட மொழியின் ஆரம்பப் பெயர்

I - beam pointer : ஐ பீம் சுட்டு : "I" பெரிய எழுத்தின் வடிவமுள்ள வரை

கலை பயனாளர் இடைமுகத்தில் உள்ள ஒரு சிறிய அடையாளக் குறி. செய்தித் தொகுப்பில் எந்த இடத்தில் சேர்க்கலாம் என்பதை இது குறிக் கிறது.

IBG : ஐபிஜி: Inter Block Gap என்பதற் கான குறும்பெயர்.

IBI: ஐபிஐ : InterGovernmental Bureau of Informatics என்பதன் குறும் பெயர். ஐ.நா. சபை, யுனெஸ்கோ அல்லது ஐ.நா. முகமை அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைப்பு. அறிவியல்பூர்வமான ஆய்வு, கணினிக் கல்வி மற்றும் பயிற்சி, வளர்ச்சியடைந்த நாடுகள் வளரும் நாடுகளுக்கிடையிலான தகவல் பரிமாற்றம், வளரும் நாடு களில் தகவல் பரிமாற்றத்தை ஊக்கு விப்பது ஆகியவை முக்கிய நோக்க மாகும்.

IBM corporation : ஐபிஎம் நிறுவனம்: உலகின் மிகப் பெரிய தகவல் சீரமைப்புக் கருவிகளைத் தயாரிக் கும் நிறுவனம்.

IBM personal computer : ஐபிஎம் தனியாள் கணினி : ஐபிஎம் நிறுவனத் தால் உருவாக்கப்பட்ட புகழ்பெற்ற குறுங்கணினி முறைமை.



ஐ பி எம் தனியாள் கணினி
(IBM personal computer)

IBM 360 series : ஐபிஎம் 360 வரிசை : மூன்றாம் தலைமுறை கணினிகளில் முன்னோடியாக விளங்கிய ஐபிஎம் 7,000 வரிசைகளுக்கு மாற்றாக 1964இல் ஐபிஎம் நிறுவனம் 360 வரிசை ஒருங்கிணைந்த மின்சுற்று அமைப்பை அறிவித்தது.

IBM mini computers : ஐபிஎம் சிறு கணினிகள் : ஐபிஎம் நிறுவனத்திட மிருந்து வந்த நடு வரிசை கணினிகள். 1969இல் அறிமுகப்படுத்தப்பட்ட சிஸ்டம் 3 முதல் இந்த வரிசை துவங்கியது.

IBIS : இபிஸ் : இந்தியாவின் இந்தியன் ஆர்கானிக் கார்ப்பரேஷன் மூலம் சோனட்டா உருவாக்கிய Integrated Business Management Information System என்பதன் சுருக்கம். விற்பனை, வாங்குதல், இருப்புக் கணக்கெடுப்பு மற்றும் நிதிக் கணக்கு (பெறவேண்டியது, தரவேண்டியது) உள்ளிட்ட அனைத்து வணிகப் பணி களையும் கணினி மயமாக்குவதற்கு உருவாக்கப்பட்டது.

IC : ஐ.சி. சில்லியல் : Integrated Circuit என்பதன் குறும்பெயர். ஒரு எளிமை யான பொருளில் -சாதாரணமாக ஒரு சிலிக்கன் சிப்புவில் அமைக்கப் பட்ட சிக்கலான மின்னணுவியல் இணைப்பு.

ICE : ஐசிஇ : In Circuit Emulator என்பதன் குறும்பெயர். இயங்கும் நேரத்திலேயே அமைப்பு மென் பொருளில் உள்ள பிழைகளை நீக்க வடிவமைப்புவரை அனுமதிக்கும் சிறப்பு வன்பொருள் மற்றும் மென் பொருள்.

ICCA : இக்கா : Independent Computer Consultants Association என்பதற்கான குறும்பெயர்.

ICCE : ஐசிசிஇ : International council for Computers in Education என்பதற்கான குறும்பெயர்.

ICCP : ஐசிசிபி : Institute for Certification of Computer Professionals என்பதற்கான குறும்பெயர்.

ICES : ஐசிஇஎஸ் : Integrated Civil Engineering System என்பதற்கான குறும்பெயர். பொறியியல் சிக்கல்களுக்குத் தீர்வு காண சிவில் பொறியாளர்களுக்கு உதவ உருவாக்கப்பட்ட முறைமை. பல பொறியியல் முறைமைகளும் ஆணைத் தொகுப்பு மொழிகளும் கொண்டது.

ICIM : ஐசிஐஎம் : International Computer India Manufacturer என்பதற்கான குறும்பெயர். உலகம் முழுவதும் 83 நாடுகளில் இயங்கும் ஐசிஐஎம் நிறுவனங்களின் தொகுதியில் ஒன்று.

ICL : ஐசிஎல் : International Computers Limited என்பதற்கான குறும்பெயர். ஒரு பிரிட்டிஷ் கணினி உற்பத்தியாளர்.

icon : சின்னம்; சிறுபடம் : ஒரு வெளியீடு ஒன்றில் ஒரு செய்தியை, ஒரு பொருளை, ஒரு கோப்பை, ஒரு கருத்தைக் குறிப்பிடும் ஒரு வரைபடம். ஒரு செயலைக் குறிப்பிட உதவும் கோட்டு வரைபடம். ஆணைத் தொகுப்பு ஆவணம் அல்லது செயல்பாடுகளில் ஒன்றைத் தேர்வு செய்ய உதவும் வரைபடம்.

iconic Interface : குறும்பட இடைமுகம்.

ICOT : ஐசிஓடி: Institute for New Generation Computer Technology என்பதற்கான குறும்பெயர். ஜப்பானின் ஐந்தாவது தலைமுறை ஆய்வை நடத்தும் நிறுவனம்.

ICPEM : ஐசிபிஇஎம்; Independent Computer Peripheral Equipment Manufacturers என்பதற்கான குறும்பெயர்.

ideas : ஐடியாஸ்; சிஎம்சி இந்தியா நிறுவனம் உருவாக்கிய ஒரு இந்திய செய்தி பொதிந்திருக்கும் அமைப்பு. உலகத் தரத்திற்கு தொகுக்கும் வசதியும், ஆவணப்படுத்தும் வசதியும் இதற்கு உண்டு. அதே வேலையில் புதிய இந்திய நிறுவனங்களின் சிறப்புத் தேவைகளை இது சமாளிக்கிறது. மோசமான தகவல் தொடர்புக் கம்பிகளுக்கிடையிலும் வெகு தொலைவில் உள்ள மாவட்ட நகரங்களுக்குச் செய்தி அனுப்ப இது உதவுகிறது.

identification division : அடையாளப் பகுதி : அடையாளம் காணும் பிரிவு : கோபால் ஆணைத் தொகுப்பின் நான்கு முக்கிய பகுதிகளில் முதலாம் பகுதி.

identifier : குறிப்பி : தகவல் தொகுப்பு ஒன்றினை அடையாளங் காட்டுகிற, சுட்டிக் காட்டுகிற, அல்லது அதன் பெயராக உள்ள குறியீடு.

idle characters : செயலற்ற எழுத்துகள்; முடங்கு உருக்கள் : தகவல் பரிமாற்றத்தில் ஒருங்கிணைக்கும் எழுத்துகள்.

idle time : செயலற்ற நேரம் : முடங்கு நேரம் : பயன்படுத்த கணினி ஒன்று கிடைக்கும் நேரம். ஆனால் உண்மையில் பயன்படுத்தப்படாத நேரம்.

IDP : ஐடிபி : Integrated Data Processing என்பதற்கான குறும்பெயர்.

IEEE : ஐஇஇஇ : Institute of Electrical and Electronics Engineers என்பதற்கான குறும்பெயர். கணினி முறைமைகளிலும் அவற்றின் பயன்களிலும் தீவிர ஆர்வங் கொண்ட ஒரு தொழில்முறை பொறியமைவு நிறுவனம்.

IEEECS : ஐஇஇஇசிஎஸ் : Institute of Electrical and Electronics Engineers Computer Society என்பதற்கான குறும் பெயர்.

IEEE-488 : ஐஇஇஇ 488 : பொதுவாக ஆய்வகக் கருவிகளையும் பிற அறிவியல்பூர்வமான கருவிகளையும் கணினியுடன் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக அல்லது கணினி தகவல்களைத் திரட்டுவதற்கான வழக்கமான இணைப்பு. ஒரு வகையான இணை இணைப்பு.

IEEE 696/S-100 : ஐஇஇஇ 696/S-100 : மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியாளர்கள் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தரம் ஒன்றினை அடையாளம் காணல், கணினி துணைக்கருவி அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் தரப்படுத்தப்பட்டது.

IFAC : ஐஎஃப்ஏசி : International federation of Automatic Control என்பதற்கான குறும்பெயர். கட்டுப்பாட்டுக்கான மிக முன்னேறிய அறிவியல் மற்றும் தொழில் நுணுக்கம் தொடர்பான ஒரு பன்னாட்டு நிறுவனம்.

IFIP : ஐஎஃப்ஐபி : International Federation for Information Processing என்பதற்கான குறும்பெயர்.

if-then-else : எனில்-இன்றேல் : வடிவமைக்கப்பட்ட ஆணைத் தொகுப்பு தயாரிப்பின் அடிப்படையான மூன்று கட்டளை அமைப்புகளில் ஒன்று. நிபந்தனை சரிபார்ப்பு அல்லது தீர்வு செய் கட்டளை என இது அழைக்கப்படும்.

Ignore character : புறக்கணிப்பு உரு :

IIL : ஐஐஎல் : Integrated Injection Logic என்பதற்கான குறும்பெயர். வருங்கால குறும் செயலிகள் மற்றும் அரைக்கடத்தி நினைவகங்களில் பயன்படுத்தப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் ஒரு வளரும் தொழில் நுணுக்கம். இச் சிப்புகள் ஏற்கனவே மின்னணுவியல் கைக்கடிகாரங்களில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பொருள்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் கணினி முறைமைகளின் கட்டுப்பாட்டுக் கருவிகளாக ஏற்கனவே கையாளப்படுகின்றன.

IIR : ஐஐஆர் : International Institute for Robotics என்பதற்கான குறும் பெயர்.

Illegal character : ஏற்பிலா எழுத்துரு : முறையான அல்லது தெரிந்த பிரதிநிதித்துவம் என்று கணினியால் ஏற்றுக் கொள்ளப்படாத எழுத்து அல்லது துண்மிகளின் தொகுப்பாகும்.

Illuminate : ஒளியுமிழ்: ஒளியூட்டும்: வெளிப்படு திரை ஒன்றில் காட்டப்படும் வரைபடம் ஒன்றின் ஒளி அளவை, பிரகாசத்தை அதிகரித்தல்.

IMACS : உருவங்கள் ; பட உருக்கள் : International Mathematics And Computers Simulation என்பதற்கான குறும் பெயர். வல்லுநர்கள், கட்டடம் கட்டுவோர் மற்றும் இணை முறை மற்றும் கலப்பினக் கணினி முறைமைகளில் ஆர்வங்கொண்ட பயனாளர் இடையே அறிவியல்பூர்வமான தகவல்களைப் பரிமாறிக் கொள்ள உதவும் தொழில் முறை நிறுவனம்.

Image : உருவப்படம் : வேறு ஊடகம் ஒன்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ள படம் ஒன்றின் துல்லியமான காரண காரியப்படியான பிரதி. கணினியைப் பயன்படுத்துவோர் நினைவில் இருப்பதன் உள்ளடக்கத்தை கணினித்

திரையில் வெளிப்படுத்தினால் நினைவில் இருப்பதன் படிவத்தைக் காணலாம். கணினி வரைபடத்தில், வரைபடக்கோப்பில் வரைந்திருப் பதைப் போன்ற வரைபடத் தகவல் களின் வெளிப்பாடு.

Image area : உருப்படப் பரப்பு.

Image converter : உருப்பட மாற்றி.

Image enhancement : உருப்பட மேம் பாடு : வரைபடம் ஒன்றின் எல்லாப் பாகங்களையும் அல்லது ஒரு பாகத்தை வண்ணமிடல், அல்லது நிழல்படியச் செய்தல், முக்கியத் துவம் அளித்தல், பெரிதுபடுத்துதல், தலைகீழாகப் படமாகக் காட்டல் அல்லது மினுக்கிடச் செய்தல்.

Image processing : உருப்பட செய லாக்கம் ; பட அலசல்; உருவ அலசல்; ஒரு கணினி வரைகலை உதவி தொழில் நுட்பம். பூமியைச் சுற்றும் செயற்கைக் கோள்கள் அனுப்புகின்ற தகவல்களை உருவங்களாக மாற்றி செயலாக்கம் புரிய வழி வகுக் கின்றன. தொழில் நுட்ப முறையில் நிறங்கள், நிழல்கள் அவற்றின் உறவுகளை ஆராய்வது. வானிலை நிலப்படங்களை உருவாக்கல், தடய (போரன்சிக்) அறிவியல் போன்ற துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

Image - oriented backup : உருவம் சார்ந்த பின்பலம் : கோப்புகள் தொடர் பின்றி வட்டில் கண்ணாடி உரு வத்தை உருவாக்கும் எந்த ஒரு பின் பல அமைப்பும் இத்தகைய அமைப் புடன், பின்பல ஊடகத்தின் கோப்பு கள் அணுக அனுமதித்து வட்டு முழு வதும் சுழல வேண்டும்.

Image setter : உருப்பட அமைப்பு: சொற்களையும், வரைகலைகளை யும் கையாளும் எழுத்தமைப்பு எந்திரம்.

Imaging model : உருவமைப்பு மாதிரி: உருவங்களைக் குறிப்பிடுவதற்கான விதிகளின் தொகுதி.

Immediate access : உடனடி அணுக் கம்; உடனடி ஏற்பு: தாமதமின்றி தகவல்களை உள்ளிடவும் திரும்பப் பெறவும் கணினிக்குள்ள திறன்.

Immediate access storage : உடனடி ஏற்புச் சேமிப்பு.

Immediate address : உடனடி செய லேற்பு ஆணை : ஒரு கட்டளை தொடர்பானது. அதன் முகவரிப் பகுதி செயல் பகுதியையும் உள்ளடக் கியதாக உள்ளது. அது முகவரியே அல்ல. கட்டளையின் ஒரு பகுதியாக வழங்கப்பட்ட செயல்பாடாகும்.

immediate-mode-commands: உடனடி செயல்நிலை ஆணை ; உடனடி முறைமைக் கட்டளைகள்: enter அல்லது return எனும் செயல் தொகுப்புக் கட்டுப்பாடு விசை அழுத்தப்பட்டதும் முறைமை மற்றும் தொகுப்பு ஆணைகள் நிறை வேற்றப்படும்.

Impact printer : அழுத்து அச்சுப் பொறி; தாக்க அச்சிடு கருவி : தகவல் அச்சிடு கருவி உயர்த்தப்பட்ட அழுத் தம் காரணமாக விரைந்து உடனடி யாக அச்சிடுகிறது. இதில் மையோ அல்லது நாடாவோ வண்ண ஊடக மாகப் பயன்படுத்தப்படுகிறது. Daisy wheel printer, Line printer, thimble printer ஆகியவைகளைப் பார்க்கவும் தாக்கமிலா அச்சிடு கருவிக்கு இது எதிரானது.

Impedance : மறிப்பு : ஓம்சில் அலகிடப்படும் குறிப்பிட்ட இடை வெளியில் பாயும் மாற்றுமுறை மின்சாரத்துக்கு ஒரு மின் இணைப் பில் ஏற்படும் மொத்த எதிர்ப்பு மற்றும் எதிர்வினை.

Implied address : மறைமுக முகவரி.

Implementation : அமல்; நடைமுறைப் படுத்தல்: கணினி முறைமை ஒன்றை நிறுவுவதில் கருவியைத் தேர்வு செய்தல், கருவியை நிறுவுதல், ஆட்களைப் பயிற்றுவித்தல், மற்றும் கணினி மையத்தின் இயக்கக் கொள் கைகளை ஏற்படுத்துதல் ஆகியவை சம்பந்தப்பட்டுள்ளன. 2. ஒரு குறிப் பிட்ட கணினி முறைமையில் ஒரு ஆணைத் தொகுப்பு மொழியின் பிரதிநிதித்துவம். 3. ஆணைத் தொகுப்பு ஒன்றை நிறுவுதல்.

IMPLE : இம்பிள் : Initial Micro Programme Load என்பதன் குறும்பெயர்.

Implode : உள்திணி : ஒரு பெரிய சேர்ப்பியில் பாகங்களை இணைப் பது. ஒரு குறிப்பிட்ட தொழில் நுட் பத்தைப் பயன்படுத்தி தகவல்களைச் சுருக்குவதையும் இது குறிப்பிடும்.

Import : இறக்குமதி : ஒரு தகவல் முறைமைக்குள் மற்றொரு ஆணைத் தொகுப்பில் உருவாக்கப்பட்ட கோப்பு ஒன்றைப் படித்தல். ஏற்று மதிக்கு எதிரானது.

IMS : ஐஎம்எஸ் : Information Management System என்பதன் குறும்பெயர். வரிசைப்படி அமைக்கப்பட்ட கோப்புகள் மற்றும் தகவல் தள அடிப்படைகளில் தகவல்களைச் சேமிக்கவும் அவற்றை மீண்டும் பெறவும் வாய்ப்பளிக்கும் தகவல் தள நிர்வாக முறைமை மற்றும் மென்பொருள் பொதி.

In-line coding : உள்ளமைக் கட்டளை.

In-line processing : உள்ளமைச் செயலாக்கம்.

Inactive : செயலற்ற நிலை : பரி மாற்றம் தொடர்பானது. கணினியின் நினைவில் ஏற்றப்பட்டு ஆனால் இன்னும் நிறைவேற்றப்படாத ஒன்று.

Inactive window : செயலற்ற சாளரம்: பயன்படுத்தப்படாத சாளரம்.



செயலாற்ற சாளரம் (Inactive Window)

Incidence Matrix : படு அணி : இரட்டைப் பரிமாண வரிசை. அது வரைபடம் ஒன்றின் ஓரங்களை வரையறை செய்கிறது. இணைப்புத் தளம் என்றும் அதனைக் கூறுவார்கள்.

Incident Light : படு வெளிச்சம் : ஒரு பொருள் ஒன்றின் மீது படுவது. வெளிச்சம் படு வெளிச்சத்தின் அலை வரிசைகளின் பிரதிபலிப்பு அல்லது ஈர்ப்புச் செயல்பாடு காரணமாக ஒரு பொருளின் வண்ணம் உணரப் படுகிறது.

Inclusive OR : அடங்கு அல்லது : உண்மையான பட்டியல் மதிப்பைத் தரும் பூலியன் செயல்பாடு. இதில் உண்மை மற்றும் அதனுடன் இணைந்துள்ள மாறுபாடுகள் உண்மை என்று தரப்படுகிறது. இப் பட்டியலில் அடங்கியுள்ளவை உண்மை இல்லை என்றால் மதிப்பு பொய்யானதாகி விடுகிறது. Exclusive OR compare NOR, NOR, NAND, AND,

and logical sum ஆகியவைகளுக்கு எதிரானது.

Increment : உயர்வு : 1. மதிப்பு ஒன்றுடன் அல்லது அதன் மாறுபாடு களுடன் சேர்க்கப்பட்ட அளவு. Decrement என்பதற்கு எதிரானது. 2. ஒரு வரைபட உள்ளீட்டு/ வெளியீட்டுக் கருவியில் தொடர்பு கொள்ளக் கூடிய அருகில் உள்ள இரு புள்ளி களுக்கு இடையில் உள்ள தூரம்.

Increment Back-up : கூட்டல் பின் பலம்; மேலேற்றுப் பின்பலம் ; அதி கரிப்பு பின்பலம் : கடைசி பின்பல இயக்கத்திற்குப்பின் மாறிய கோப்பு களை மட்டுமே புதுப்பிக்கும் ஒரு பின்பல செயல்முறை. நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு இது பயனுள்ளது.

Incremental plotter : வளர் புள்ளி வரை கருவி ; பதின்ம முறைப் புள்ளியிடு கருவி: இது வரைபட தகவல் களை புள்ளியிடு முனையின் தொடர் பற்ற தன்னிச்சையான இயக்கத்தின் மூலம் வெளிப்படுத்துகிறது.

Incremental spacing : நுண் இடை வெளியிடல்.

Indefinite iteration : நிச்சயமற்றுச் செய்தல்.

Indegree : உள்கோணம்; உட்புகு எண்: ஒரு முனையை நோக்கிய பல விளிம்புகள். வெளிக் கோணத்துக்கு எதிரானது.

Indent : உள்ளடக்கம்; உள் தள்ளு; ஓர் இடம் விடல்: பக்கத்தின் வலது அல்லது இடது ஓரத்திலிருந்து உள்ளே குறிப்பிட்ட இடவெளி விட்டுத்துவங்குதல் அல்லது ஆவண உரையை நகர்த்துதல்.

Indentation : பத்தி உள்ளடக்கம்; உள் தள்ளல்: ஆவண உரையின் முதல் வரி துவக்கத்தில் காணப்படும் காலி இடம். இது பத்தி ஒன்றின் துவக் கத்தைக் குறிப்பிடுகிறது.

Independent Computer Consultants Association : சுயேச்சையான கணினி ஆலோசகர்கள் சங்கம்: சுயேச்சையான கணினி ஆலோசகர்கள் சங்கத்தின் தேசிய இணைப்பு 1976இல் உருவாக் கப்பட்டது. தேசிய அமைப்பு மற் றும் உள்ளூர் பிரிவுகளின் உறுப்பினர் கள் மூலமாக கருத்துகள் பரிமாறப் பட்டுக் கணினி ஆலோசனைத் தொழிலில் ஒரு கூட்டுக் குரலாக மாறுகிறது.

Independent Computer Peripheral Equipment Manufacturers (ICPEM) : சுயேச்சையான கணினி புற இணைப்புச் சாதன தயாரிப்பாளர்கள் : கணினி சாதனங்களில் ஒன்றிரண்டு வகை களைத் தயாரிப்பதில் சிறப்புத் திறன் உள்ள தொழிற்சாலைகளைக் கொண்ட நிறுவனம்.

Independent Consultant : சுயேச்சை யான ஆலோசகர்: தகவல் சீரமைப்புத் துறையில் பயிற்சி உள்ளவர். வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தாற்காலிகமாகப் பணி புரிகிறவர்.

Index : கோப்பு அட்டவணை; சுட்டு; வரிசைக் குறியீடு : 1. ஒரே விதமான அலகுகள் கொண்ட வரிசையில் ஒரு குறிப்பிட்ட அளவைக் குறிக்க உத வும் குறியீடு அல்லது எண். எடுத்துக் காட்டாக X 5 என்பது X வரிசையில் 5வது உள்ள பொருளைக் குறிப்பிடு கிறது. 2. சில வரிசை முறை சேமிப் பில் உள்ள குறியீட்டுப் பட்டியல். அதனை அணுகி தகவல் தொகுப்பில் உள்ள பிற வகைகளின் முகவரி களைப் பெறலாம். எடுத்துக்

காட்டாக வரை படப் பட்டியலில் உள்ள வகைகள் அல்லது தகவல் கோப்பில் புள்ளி விவரங்கள்.

Indexed Address : சுட்டு முகவரி ; அட்டவணை முகவரி; குறியிடப் பட்ட முகவரி : கணினிக் கட்டளை ஒன்றை நிறைவேற்றும்பொழுதோ அதற்கு முந்தியோ குறியீட்டுப் பதிவேடு ஒன்றின் உள்ளடக்கத் தினால் மாற்றப்பட்ட முகவரி.

Index File : பட்டியல் கோப்பு : NDX அல்லது NTX என்ற விரிவாக்கங்கள் உள்ள கோப்புகள். ஒரு தகவல் தளத் தில் உள்ள பதிவேடுகளை ஒரு குறிப் பிட்ட முறையில் அணுகுவதற்கான தகவலை இது கொண்டுள்ளது.

Index hole sensor : பட்டியல் துளை உணர்வி.

Index hole : அட்டவணைத் துளை; குறியீட்டுத் துளை; குறியீட்டுப்



அட்டவணைத் துணை
(Index hole)

பட்டியல் துளை: மின் ஒளியியல் முறைமையால் அறியக்கூடிய துளை யிடப்பட்ட வட்டு. இயக்க முறை மையினால் தகட்டில் பூஜ்யபகுதி எங்கே துவங்குகிறது என்பதைத் துல்லியமாக அறியலாம்.

Index mark : பட்டியல் அடையாளம் ; அட்டவணைக் குறி : பருப்பொருள் துளை அல்லது நாட்ச் அல்லது பதிவான குறியீடு அல்லது அடை யாளம். வட்டில் உள்ள ஒவ்வொரு வழித்தடத்தி ஆரம்ப முனையையும் அடையாளம் காட்டுவது.

Index Sequential : அட்டவணை எண் வரிசை : வரிசை முறைப் பட்டியல் : ஒரு தகவல் ஒருங்கமைப்பு முறை. இதில் பதிவேடுகள் வரிசை முறைப் படி ஒழுங்குபடுத்தப்பட்டு ஒரு பட்டியல் மூலம் குறிப்பிடப்படும். நேரடி அணுகுக் கோப்புச் சாதனங் களில் பயன்படுத்தப்படும்போது, இதனை ISAM - Index Sequential Access Method என்று சொல்லலாம்.

Indexed Sequential Access Method (ISAM) : சுட்டு வரிசை அணுகு முறை ; குறியீட்டு வரிசைப்படுத்தப் பட்ட அணுகுமுறை : நேரடி அணுகு கருவியில் தகவல்களை வகைப் படுத்தும் வழிகள். தகவல் ஆவணங் கள் எங்கே சேமிக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்ட உதவும் ஒரு அகர முதலித் தொகுப்பு அல்லது குறியீட் டுப் பட்டியல். குறியீட்டுப் பட்டிய லின் உதவியுடன் விரும்பும் தகவல் ஆவணத்தைப் பெறலாம். ஆவணத் தின் சுமாரான இருப்பிடத்தைக் குறியீட்டுப் பட்டியல் காட்டுகிறது. அல்லது நேரடி அணுகு கருவியில் தகவல் துணுக்கின் இருப்பிடத்தைக் காட்டுகிறது. குறியீட்டுப் பட்டிய லில் குறிப்பிடும் இடத்தில் தேவை யான ஆவணத்தை அல்லது தகவல் துணுக்கை கண்டுபிடிக்கும் வரை கணினி தேடுகிறது.

Indexer : சுட்டு ஆக்க வரிசை ; குறி யீட்டு பட்டியல் தயாரிப்போர்: ஆவணம் ஒன்றுக்காக குறியீட்டுப்

பட்டியல் ஒன்றை உருவாக்கும் ஆணைத் தொகுப்பு.

Index hole : சுட்டுத் துளை.

Indexing : சுட்டிணைப்பு வரிசை முறை; குறியீட்டு வரிசைப் படுத்துதல்: ஆணைத் தொகுப்பு உத்தி, அதனால் கட்டளை ஒன்றை குறியீடு என்றழைக்கப்படும் அம்சத்தினால் திருத்தி அமைக்கலாம்.

Index register : அட்டவணைப் பதிவகம் ; குறியீட்டுப் பதிவேடு: ஆணை ஒன்றை நிறைவேற்றும் பொழுதோ அதற்கு முந்தியோ முகவரி ஒன்றிலிருந்து, பதிவேட்டின் உள்ளடக்கத் தோடு இன்னும் கூடுதலாகச் சேர்க்கலாம் அல்லது குறைக்கலாம்.

Index Variable : எண்ணும் மாறி; சுட்டி மாறி.

Indicator : சுட்டிக்காட்டி; காட்டி; அடையாளங்காட்டி : கணினி ஒன்றின் நிலையைப் பதிவு செய்யும் கருவி.

Indirect addressing : மறைமுக முகவரியாக்கம்; மறைமுக முகவரியிடல் : நேரடி முகவரி அல்லது மறைமுக முகவரியைக் கொண்ட இருப்பிடத்தை சேமிப்பில் குறிப்பிட முகவரி ஒன்றைப் பயன்படுத்துதல். இதனை பல அடுக்கு முகவரியிடல் என்றும் அழைப்பார்கள்.

Indirect mode : மறைமுக முறை.

Individual disks : தனித்தனி வட்டுகள்.

Indonet : இன்டோநெட்: 1986இல் சிஎம்சி நிறுவனம் இந்தியாவில் நிறுவிய பொதுத் தகவல் இணையம்.

Induce : தூண்டல் : தூண்டல் மூலம் ஒரு மின்சார ஓட்டம் அல்லது மின் வலிமையைத் தூண்டல். களப் பாதிப்பு மின்மயப் பெருக்கியின் வாயிலில் தூண்டப்படும் மின்னோட்டம். மின்னோட்டப் பாதையில் சமமான மின்னோட்டத்தைத் தூண்டுகிறது.

Inductance : தூண்டுநிலை : மின் இணைப்பில், ஏற்கனவே உள்ள மின் அளவு அலகில் ஏற்படும் மாற்றத்தை எதிர்க்கும் பண்பு ஹென்றி எனப்படும்.

Induction : தூண்டல்: மின்சார மற்றும் மின்காந்தப் பண்புகளைக் கொண்ட பொருள். நேரடித் தொடர்பில்லாமல் அருகில் உள்ள பொருள் ஒன்றில் மின்னேற்றத்தை அல்லது மின் காந்தப் புலத்தை உருவாக்குதல்.

Industrial espionage : தொழில் துறை கள்ளம் : வெளியிடப்படாத, உரிமை பெற்ற தகவலை தவறாகப் பயன் படுத்தும் நோக்கத்துடன் நகலெடுத்தல் அல்லது திருடுதல். புதிய செயல் முறைகள், பொருள் வடிவமைப்புகள், விற்பனைத் திட்டங்கள் ஆகிய வற்றையே பொதுவான இலக்காகத் திருடுகிறார்கள்.

Industrial data collection device : தொழில் தகவல் சேகரிப்புக் கருவி: ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்ய தொழிலாளி ஒருவர் எடுத்துக் கொள்ளும் நேரத்தை பதிவு செய்யும் உள்ளீட்டுக் கருவி. செய்யப்படும் வேலைகளுக்கான சம்பளத்தைக் கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது.

Industrial robot : தொழில் துறை எந்திர மனிதன் : தொழில் துறை எந்திரன்: புதிய ஆணைத் தொகுப்புக்கு இடமளிக்கிற, பல பணிகளைச் செய்யக் கூடியது. பொருள்களை, கருவிகளை, சிறப்பான கருவிகளை திட்டமிடப்பட்ட இயக்கங்கள் மூலம் பல்வேறு பணிகளைச் செய்யக் கூடியது. மற்ற வகையான தானியக் கங்களைப் போல அல்லாமல்

எந்திரன்கள் பல்வேறு வகையான பணிகளைச் செய்யும்படி ஆணைத் தொகுப்பை அளிக்கலாம். அதன் மூலம் அவற்றை இலகுவான தயாரிப்பு கருவிகளாக மாற்றலாம். ரோபோக்களுக்கான ஆணைத் தொகுப்புகளை மாற்ற முடியுமாத லால் பல சாதகமான பயன்கள் உண்டு. மிகக் குறைந்த துவக்கச் செலவு மற்றும், குறைந்த மாசு நீக்கும் செலவுகள் காரணமாக எண் பிக்கப்பட்ட வடிவமைப்பும், ஒட்டு மொத்த தயாரிப்புச் செலவைக் குறைக்கும் பண்பையும் எந்திரன் கொண்டிருப்பதால் ஒரு நிறுவனம் அதன் லாபத்தை அதிகரித்துக் கொள்ள முடிகிறது. மோட்டார் வாகனத் தொழில், விமானத் தொழில், வீட்டு உபயோக மின் அணுவியல் சாதனத் தயாரிப்பு, நுகர்வுப் பொருள்கள், சாலையில் செல்லாத வாகனங்கள் தயாரிப்பு ஆகியவற்றில் ஈடுபடும் பெரிய தொழில் நிறுவனங்கள் தொழில் துறை எந்திரன்களைப் பயன்படுத்து கின்றன. அண்மைக்கால வளர்ச்சி காரணமாக எந்திரன்கள் கூடுதல் அறிவுடன் இயங்குகின்றன. எந்திரப் பார்வை, தொடு உணர்வு, நகரும் திறன் காரணமாக பல வகை யான தொழில்களுக்கு ரோபோக்கள் பொருத்தமானவை. ஜவுளித் தொழில், உணவு பதப்படுத்துதல், மருந்துப் பொருள் தயாரிப்பு, மேஜை நாற்காலி வகைகள் தயாரிப்பு, கட்டு மானத் தொழில், சுகாதாரப் பரா மரிப்பு ஆகியவற்றில் மிக விரைவில் எந்திரன்கள் பெருமளவு பயன்படுத் தப்படும். உற்பத்தி, உற்பத்தித் திறன் தொகுப்புகளில் எந்திரன்கள் பெரு மளவு லாபம் தருவனவாக உள்ளன. அமெரிக்காவில் தொழில் நிறுவனங் களில் எந்திரன்களைப் பயன்படுத்து வதால் 20 முதல் 30 சதவீதம் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது என்பதை அமெரிக்க வரலாறு காட்டு கிறது. எந்திரன்களைப் பயன்படுத் தும் நிறுவனங்கள் தற்பொழுது பயன் படுத்தப்படும் எந்திரங்களுக்கான நிலுவையைச் செலுத்துவதைத் துரிதப்படுத்த இயலும். அதே சமயம் எந்திர முதலீட்டுத் தேவைகளைக் குறைத்துக் கொள்ள முடிகிறது. எடுத்துக்காட்டாக கூடுதலாக அழுத்த அச்சு எந்திரங்களையும் அல்லது எந்திரக் கருவிகளையும் வாங்குவதை விட எந்திரன்களை வாங்குவது 20 முதல் 30 சதவீத கூடுதல் உற்பத்தி தருவதாக உள்ளது. சமமான செலவில் அல்லது கூடுத லான செலவில் குறைவான உற்பத் தித் திறன் உள்ள ஒரு எந்திரத்தை வாங்குவதை விட எந்திரன் களை வாங்குவதால் 20 முதல் 30 சதவீதம் உற்பத்தி திறன் உயர்கிறது.

Inequality : சமமின்மை : சமம் இல்லாத இரண்டு மதிப்பீடுகளின் வெளிப்பாடு. 'பி' யை விட 'ஏ' பெரி யது, 'ஏ' யை விட 'பி' பெரியது என்று கூறும் சமமின்மையை வெளிப்படுத் தும் இரண்டு வழிகளாகும். ஏ-க்கு பி-சமம் இல்லை என்பது சம மின்மையின் வரிசை முறையை வெளிப்படுத்தாது சமமின்மையை மட்டும் காட்டுகிறது.

Inference : முடிவறிதல்; உய்த்துணர் தல்; அனுமானம் : அறிந்த உண்மை மதிப்பீடுகளையுடைய துவக்கநிலை அலகுகளில் இருந்து முடிவு ஒன்றைப் பெறும் முறை.

Inference programme : அனுமான ஆணைத்தொகுப்பு ; தரப்பட்ட உண்மைகளிலிருந்து முடிவு ஒன்றைப் பெறும் ஆணைத் தொகுப்பு.

Infinite loop : முடிவற்ற வளையம்; ஒரு ஆணைத் தொகுப்பு ஒன்றில் தொடர்ந்து வரும் ஆணைகளின் தொகுப்பு. வெளியேறும் நிபந்தனை யற்ற வளையம். முடிவற்ற வளை யம் என்றும் அழைக்கப்படும்.

Infinite rule : அனுமான விதிமுறை

Infix notation : உள் பொருத்தப்பட்ட குறியீடு ; பொதுவான கணிதச் சமன் பாடு. இதில் செயல்பாடுகள் பகுதி முறைகளில் அடங்கியுள்ளது. 5 -ஐ யும் 3-யும் கூட்டுதலை 5 + 3 என்று குறிப்பிடப்படுகிறது. இதில் முன்னி ணைப்புக் குறியீடோ, பின்னிணைப் புக் குறியீடோ கிடையாது.

Infoprenneur : தகவல் தொழில் முனை வர்: மின்னணு தகவலைத் திரட்டி பரப்பும் வணிகத்தில் உள்ள நபர்.

Informal design review : முறைசாரா வடிவமைப்பு மதிப்பியல் ; முறை மையால் வடிவமைக்கப்பட்ட ஆவணத்தை தேர்வு செய்யப்பட்ட நிர்வாகம் முறைமை ஆய்வு, மற்றும் ஆணைத் தொகுப்புரைகளைக் குறியீடு செய்யும்முன் தேவையான சேர்ப்பு, நீக்கம், திருத்தம் ஆகிய வைகளைச் செய்ய மதிப்பிடல்.

Informatics : தகவலியல் : தகவல் தொழில் நுணுக்கத்துக்கு சமமான தாகக் கையாளப்படும் சொல்.

Information : தகவல்; கணினி ஒன்றுக் குள் வழங்கப்பட்ட தகவல்களி லிருந்து பெறப்பட்ட பொருளுள்ள பயனுள்ள உண்மைகள். அறிந்த மரபுகளின்படி தகவல்களுக்கு வரை யறை செய்யப்பட்ட பொருள்.

Information Analysis : தகவல் ஆய்வு; செய்தி ஆய்தல்.

Informatics : தகவலியல்.

Information banks : தகவல் வங்கிகள்; குறிப்பிட்ட பயன்பாடுகள் தொடர் பான தகவல்களைச் சேமிக்கக்கூடிய பெரிய புள்ளிவிவர அடிப்படைகள்.

Information bits : தகவல் துண்மிகள்: தகவல் தொடர்பில் தகவல் ஆதாரங் களினால் இத்துண்மிகள் உருவாக்கப் படுகின்றன. இவற்றில் பிழையைக் கட்டுப்படுத்தும் துண்மிகள் சேர்க்கப் படவில்லை.

Information centre : தகவல் மையம் ; ஒரு நிறுவனத்தில் இறுதி பயனாள ராக இருப்பவருக்கான ஆதரவு வசதி. பயன்படுத்துபவர்கள் தங்களது சொந்தப் பயன்பாட்டு ஆணைத் தொடர்களை உருவாக்க கற்றுத் தருவதுடன் தங்களது சொந்த தகவல் செயலாக்க பணிகளுக்கும் உதவு கிறது.

Information engineering : தகவல் பொறியியல் ; ஒரு நிறுவனத்தில் தகவல் செயலாக்கத்தை உருவாக்க வும், வழிகாட்டவும் பயன்படுப் பொருள்கள் மற்றும் செய்முறை களின் ஒருங்கிணைந்த தொகுதி.

Information explosion : தகவல் பொருத்தம் : எல்லா வகையான தகவல்களின் உற்பத்திப் பெருக்கம் அவற்றின் விரிவு.

Information filtering : தகவல் வடி கட்டல் ; மனித மூளையில் தகவல் செயலாக்கப்படும்போது சில தூண் டல்களைத் திரையிட்டு தேர்ந்தெடுப் பதற்கு மனிதர்கள் பல வகையான கோட்பாட்டு அமைப்புகளைப் பயன்படுத்துதல்.

Information float : தகவல் மிதவை அனுப்புபவருக்கும், பெறுபவருக் கும் இடையில் பயணத்தில் உள்ள எழுதப்பட்ட கடிதம் அல்லது பிற ஆவணம். இந்த பயணத்தின்போது எந்த நடவடிக்கைக்கும் அல்லது பதில் தரவும் அது கிடைப்பதில்லை

Information hiding : தகவல் மறைப்பு: ஒரு வழக்கச் செயல் பற்றிய விவரங்களை தனிப்பட்டவருடையதாக வைத்திருத்தல். ஆணைத் தொடராளர்களுக்கு எந்த உள்ளீடு தேவைப்படுகிறது என்பதும் எந்த வெளியீடு வரக்கூடும் என்பதும் மட்டுமே தெரியும்.

Information Industry : தகவல் தொழில்: நேர்முகப் பணிகள் மூலமோ அல்லது வட்டுகள் மூலம் விநியோகிக்கப்பட்டோ அல்லது சிடி ரோம் மூலமோ தகவல் வழங்கும் நிறுவனங்கள். அனைத்து கணினிகள், தகவல் தொடர்புகள், மின்னணு தொடர்புள்ள நிறுவனங்கள், வன்பொருள், மென்பொருள் மற்றும் பணிகளும் இதில் அடங்கும்.

Information management : தகவல் மேலாண்மை : தகவலை ஒரு நிறுவனத்தின் மூலாதாரமாக ஆராயும் துறை. கணினியால் செயலாக்கப்பட்டாலும் இல்லையென்றாலும் ஒரு நிறுவனத்தில் உள்ள அனைத்து தகவல்கள் மற்றும் தகவல்கள் பற்றிய விளக்கங்கள், பயன்கள், மதிப்பு மற்றும் விநியோகமும் இதில் அடங்கும். ஒரு நிறுவனம் திறம்பட முன்னேறவும் செயல்படவும் எத்தகைய விவரங்கள் தகவல்கள் தேவைப்படுகின்றன என்பதை இது ஆராய்கிறது. கணினி தீர்வுகளை உருவாக்குவதற்கு முன் தேவைப்படும் தகவலை ஆராய்ந்து அறிய வேண்டும்.

Information networks : தகவல் பிணையம் : பூமியில் பல்வேறு பகுதிகளில் உள்ள நூலகங்கள் மற்றும் தகவல் மையங்களை, அவற்றின் தள முழுத் தகவல் ஆதாரங்களை மேலும் அதிகமான மக்களிடையே பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட தொலைத் தகவல்கள் மூலமான இணைப்பு.

Information processing : தகவல் வகை செய்தல்; தகவல் அலசல் : கணினி ஒன்றின் செயல்களின் முழுமை. மதிப்பீடு, ஆய்வு மற்றும் தகவல்களை வகைசெய்தல் ஆகியவற்றின் மூலம் பயனுள்ள தகவல்கள் தயாரிக்கப்படுகின்றன.

Information overload : தகவல் மிகைப்பளு : திறமுடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய அல்லது கையாளக்கூடிய அளவுக்குமேல் ஒரு நபரிடம் தகவல் போய்ச் சேர்ந்தால் இத்தகைய நிலை ஏற்படுகிறது. இதனால் குழப்பமும் தகவல் பெற்றவர் செயல்பட முடியாத நிலையும் ஏற்படுகிறது.

Information processing center : செய்தி வகைசெய்யும் மையம்; தகவல் அலசி ஆராயும் மையம் : Data Processing Center போன்றது.

Information processing curriculum : தகவல் வகை செய்யும் கல்வி : Data Processing Curriculum போன்றது.

Information providers : தகவல் அளிப்போர் ; கணினி பிணைய பிணைப்புக்கு கட்டணத்துக்காக தகவல்களை வழங்கும் பெரிய வணிக நிறுவனங்கள். எடுத்துக்காட்டு Source or CompuServe.

Information quality : தகவலின் தரம் ; ஒரு குறிப்பிட்ட பயனாளருக்குப் பயனளிக்கக்கூடிய வடிவம் உள்ளடக்கம் மற்றும் காலம் ஆகிய தன்மைகள் தகவலில் எந்த அளவு உள்ளது என்பதைக் குறிப்பிடுகிறது.

Information reporting system : தகவல் அறிவிக்கும் அமைப்பு ; குறிப்பிட்ட கால இடைவெளியிலோ அல்லது தேவையின் பேரிலோ தேவையான

அறிக்கைகள், காட்சிப் பொருள்கள், பதில்கள் ஆகியவற்றை அளிக்கும் மேலாண்மை தகவல் அமைப்பு.

Information resource management : செய்தி வள மேலாண்மை; தகவல் ஆதார நிர்வாகம் ; தொழிலாளி, மூல தனம் மற்றும் கச்சாப் பொருள் தகவல் ஆதாரங்களை நிர்வகிப்பதற்கான முறைமை.

Information retrieval : தகவல்பெறல்: தகவல் மீட்பு: 1. சேமிப்பு மற்றும் பெருமளவு தகவல்களில் தேடல் மற்றும் தேர்வு செய்யப்பட்ட தகவல்களைக் கிடைக்கச் செய்தல். தொடர்பான தொழில் நுணுக்கங்கள் சம்பந்தப்பட்ட கணினித் தொழில் நுணுக்கப் பிரிவு.

Information revolution : தகவல் புரட்சி : சமூகத்தில் கணினித் தொழில் நுணுக்கம் ஏற்படுத்திய பாதிப்பு காரணமாக தற்பொழுதைய ஊழிக்குத் தரப்பட்ட பெயர். தகவல் புரட்சி கணினிப் புரட்சி என்றும் சில நேரங்களில் அழைக்கப்படுகிறது.

Information science : தகவல் அறிவியல்; தகவலியல் : எல்லா வகையான தகவலையும் மக்கள் எப்படி உருவாக்குகிறார்கள், பயன்படுத்துகிறார்கள் மற்றும் மற்றவர்களுக்கு வழங்குகிறார்கள் என்பது பற்றிய ஆய்வு.

nformation services : தகவல் பணிகள்: விரிவான தகவல் அடிப்படை பல்வேறு வகையான பணிகளுக்கு வகை செய்கிறது. எடுத்துக்காட்டாக விமானப் பயணப்பதிவு, பங்குச்சந்தை விலை விவரங்கள்.

Information system : தகவல் முறைமை: தகவல் அமைப்பு : ஊழியர், நடைமுறைகள் மற்றும் கருவிகள் சேகரிப்பு, தகவல்களைச் சேகரிக்க, பதிவு செய்ய, வகைப்படுத்த, சேமிக்க, மீண்டும் பெற, வெளிக் காட்டவடிவமைக்கப்பட்டது, இயக் கப்படுகிறது மற்றும் பராமரிக்கப்படு கிறது.

Information system specialist : தகவல் அமைப்பு வல்லுநர் : கணினி தொழில் அல்லது கணினி பயன்படுத்தும் நிறுவனத்தில் கணினி சேவைகளைக் கொடுப்பது தொடர்பான தொழிலில் உள்ள நபர்.

Information technology : தகவல் தொழில் நுட்பம: தகவல்கள், ஒலி, படங்களைக் கொண்டு செல்லும் உயர்வேகத் தகவல் தொடர்பு இணைப்புகளையும் கணினி முறைமையையும் இணைத்தல்.

Information theory : தகவல் கொள்கை : தகவல் பரிமாற்றம், பிழைகள், சப்தம், திரிவு ஆகியவைகளுக்குட்பட்ட வகையில் சரியாக வழங்குதல் தொடர்பான கல்வி.

Information Thru' Speech (ITS) : பேச்சின் மூலம் தகவல் (ஐடிஎஸ்) : அமெரிக்காவின் மேரிலாண்ட் கம்ப்யூட்டர் சர்வீஸ் நிறுவனம் உருவாக்கிய நுண் கணினி.

Information utility : தகவல் பயன் பாட்டமைப்பு.

Inherent error : உள்ளார்ந்த பிழை : நிச்சயமற்ற அளவுகள், அப்பட்டமான தவறுகள், குறைவான பதின்ம நிலைகளினால் கரிக்கப்பட்ட மதிப்பீடு ஆகியவற்றின் பிழையான துவக்க மதிப்பீடுகளைக் கொண்ட கணினிப் பிழை.

Inheritance : வாரிசுரிமை: பொருள் சார்ந்த ஆணைத் தொடரமைத்தலின் முதலாவது வகுப்பின் உடன் பிறந்த தன்மைகளை வேறொரு வகுப்புப்

பொருள்கள் பெறும் திறன்.

In-house : வீட்டுக்குள்: தன்னுடைய சொந்த மூலாதாரங்களைக் கொண்டு ஒரு நிறுவனம் செய்து முடிக்கின்ற நடவடிக்கைகள்.

Initialize : தொடக்க மதிப்பளிப்பு: ஒரு தகடு ஒன்றைத் தயாரிப்பதற்கான கணக்கீட்டைத் துவங்குமுன் சரியான துவக்க மதிப்பீடுகளை அல்லது ஜன்னலை, மாறுபாடுகளை முன்னரே தீர்மானித்தல்.

Initial value : தொடக்க மதிப்பளவு.

Initiator terminator : துவக்கும் முகப்பு: உள்ளீடு / வெளியீடு சாதனங்களுக்கு ஒதுக்குவதற்கும் இயக்கப்படுவதற்கு ஆணையிடுவதற்கும் வெளியீட்டை அச்சிடுவதற்கும் வேலை ஒதுக்கீடு செய்யும் ஒரு வழமை.

Ink-Jet : மை-பீச்சு; மை வழங்கி: ஒரு அச்சுத் தொழில் நுட்பம். காகிதத்தில் மையினால் சிறிய புள்ளிகளை அமைப்பதன் மூலம் எழுத்துகளை உருவாக்குகிறது. 300 டி.பி.ஐ. 'அளவுள்ள லேசர் அச்சுப் பொறிகளைப் போன்று அதன் தோற்றம் இருப்பினும் அந்த அளவுக்கு வேகம் இருக்காது.

Ink Jet printer : மைபீச்சு அச்சுப் பொறி: தாளின் மீது மெல்லிய மை தெளிப்பின் மூலம் அச்சிடும் ஒரு வெளியீட்டுக் கருவி.

Inkey : உள்விசை: ஒரு டிபேஸ் ஆணை பயன்படுத்துவோர் ஒரு விசையை அழுத்தியவுடன் அதற்குரிய மதிப்பைக் காட்டுவது.

In line coding : உள்ளமை ஆணைகள்: ஒரு வடிமையின் முக்கிய பகுதியில் ஒரு இடத்திற்குக் குறியிடுதல்.

In line processing : உள்ளமை செயலாக்கம் : துவக்க நிலை சீர்செய் தல் அல்லது வகைப்படுத்தலுக்கு ஆட்படாமல் தன்னிச்சையான போக்கில் தகவல்களை வகைப்படுத்துதல்.

In line subroutine : உள்ளமை துணை வாலாயம்: முதன்மை நடவடிக்கையில் தேவையான எண்ணிக்கையில் இடையில் செருகப்பட்ட துணை நடவடிக்கைக் குறிப்பு.

Inner loop : உள்கொக்கி வளையம்:

Inoculate : நோயழிப்பு; நச்சழிப்பு: ஒரு ஆணைத்தொடரில் தெரியாத வைரஸ்கள் இருக்குமானால் கண்டு பிடித்து அதனைச் சேமித்து வைப்பது. கோப்புகளை மாற்றும்போது வைரஸ் புகுந்தாலும் இதில் கண்டு பிடித்து விடலாம்.

Input : உள்ளீடு : வெளியில் உள்ள சேமிப்பு ஊடகம் ஒன்றிலிருந்து தகவல்களை கணினியின் உள் சேமிப்புப் பிரிவுக்கு வழங்குதல். வெளியீட்டிலிருந்து மாறுபட்டது.

Input area : உள்ளீட்டுப் பகுதி : உள்ளீட்டுத் தகவல்களை சேமிக்க ஒதுக்கப்பட்ட பகுதி. வெளியீட்டுப் பகுதிக்கு எதிரானது.

Input data : உள்ளீட்டுத் தகவல் : சீர்செய்யப்படவேண்டிய தகவல்கள் வெளியீட்டுத் தகவல்களுக்கு எதிரானது.

Input device : உட்பாட்டுச் சாதனங்கள்; உள்ளீட்டுக் கருவி; உள்ளீட்டுச் சாதனங்கள் : மனிதர்கள் கையாளக் கூடிய சாதனங்களிலிருந்து மத்திய செயலகப் பகுதிக்கு தகவல்களைத் தரக்கூடிய கருவி. எடுத்துக்காட்டு : அட்டை வாசிப்பி, நாடாப்பதிவு, விசைப் பலகை முனையம், மின்காந்த நாடாப் பிரிவு.

Input media : உள்ளீட்டு ஊடகம் : தகவல்கள் பதிவு செய்யப்படுகிற

பகுப் பொருள்கள். எடுத்துக்காட்டு: சிறு தகடுகள், மின் காந்த நாடா, துளையிடப்பட்ட அட்டை, எம்ஐ சிஆர் ஆவணங்கள் மற்றும் ஓசிஆர் ஆவணங்கள், வெளியீட்டு ஊடகம் மற்றும் ஆதார ஊடகம் ஆகிய வற்றை ஒப்பிடவும்.

Input material : உட்பாட்டுப் பொருள்.

Input/Output (I/O) : உள்ளீடு/வெளியீடு : மனிதர்களுக்கும் எந்திரங்களுக்கும் இடையிலான தகவல் தொடர்பை அடைவதற்கான உத்தி, ஊடகம் மற்றும் கருவி.

Input/output bound : உள்ளீடு/வெளியீடு இறுக்கம் : உள்ளீட்டு/ வெளியீட்டு நடவடிக்கைகள் காரணமாக மத்திய சீர்படுத்தும் பிரிவின் நடவடிக்கைகள் தொய்வடையும் சூழ்நிலை தொடர்பானது. உள்ளீட்டு/வெளியீட்டு நடவடிக்கைகள் பொதுவாக மையச் செயலகப் பிரிவின் உள் சீர்படுத்தும் நடவடிக்கைகளுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் தாமதமாக உள்ளன.

Input/output channel : உள்ளீட்டு/ வெளி யீட்டு வழித்தடம் : உள்ளீட்டுத் தடம் தகவல்களை கணினியிலிருந்து வெளியீட்டு தகவல்களாக வழங்குகிற வழித் தடம்.

Input/Output Control System (IOCS) : உள்ளீட்டு/வெளியீட்டுக் கட்டுப் பாட்டு முறைமை : உள்ளீட்டு/வெளியீட்டு நடவடிக்கைகளின் விரிவான அம்சங்களைக் கட்டுப்படுத்துகிற, அந்நடவடிக்கைகளை துவக்குகிற வழமையான நடவடிக்கைகளின் தொகுப்பு.

Input/output device : உள்ளீட்டு/ வெளி யீட்டுக் கருவி : மனிதர்கள் கையாளும் சாதனத்திலிருந்து மத்திய சீர் செய்யும் பிரிவுக்கு தகவல்களைப் பெற்றுத் தரும் பிரிவு. மற்றும் கணினியின் உள் சேமிப்பிலிருந்து மற்றொரு சேமிப்புக்கு அல்லது வெளியீட்டுக் கருவிக்குத் தகவல் களை மாற்றுகிற கருவி. உள்ளீட்டுக் கருவி, வெளியீட்டுக் கருவி, புற வளைய கருவி ஆகியவற்றைப் பார்க்கவும்.

Input/output interface hardware : உள்ளீடு/வெளியீடு இடைமுக வன் பொருள் : உள்ளீடு / வெளியீடு துறைகள், (போர்ட்டுகள்) தடங்கள், தாங்கிகள், வழித்தடங்கள் மற்றும் கட்டுப் பாட்டு அலகுகள் போன்ற சாதனங் கள், உள்ளீடு / வெளியீடு வேலை ஒதுக்கீடுகளைச் செய்ய மையச் செயலகத்துக்கு உதவுகின்றவை. இந்த சாதனங்கள் மூலம் ஒரே நேரத்தில் உள்ளீடு, வெளியீடு மற்றும் செயலாக்கப் பணிகளை நவீன கணினிகளில் செய்ய முடிகிறது.

Input/output instructions : உள்ளீட்டு/ வெளியீட்டு ஆணைகள் : புறநிலைச் கருவிகள் மற்றும் முக்கிய சேமிட் புக்கு இடையே தகவல்களைப் பரிமாறுவதற்கான ஆணைகள். இவை மைச் செயலியுடன் இணைந்துள்ள புற நிலைக் கருவிகளைக் கட்டுட் படுத்த உதவுகின்றன.

Input/Output (I/O) Port : உள்ளீட்டு/ வெளியீட்டுத் துறை அல்லது வாயில் கணினியில் அமைக்கப்பட்டு தகவல் துண்மிகளைப் பெறவும், அனுப்ப வும் பயன்படும் ஒரு குறிப்பிட்ட சாதனத்துடன் இணைக்கப்பட்ட தனித்த முகவரியிடப்படும் இருட் பிடம்.

Input/output processor : உள்ளீட்டு/ வெளியீட்டு செயலி : துணை சீர் செயலி -உள்ளீட்டு/ வெளியீட்டு மாற்றங்களை கட்டுப்படுத்த உதவு கிறது. உள்ளீட்டு / வெளியீட்டுப்

பணிகளுக்காக மையச் செயலகப் பிரிவை விடுவிக்கிறது.

Input/output symbol : உள்ளீட்டு/வெளியீட்டு குறியீடு : இணை சதுர வடிவ தொடர் பட்டியல் குறியீடு. இது ஒரு நடைமுறைக்கான உள்ளீட்டு நடவடிக்கையைக் குறிப்பிடுகிறது அல்லது ஒரு நடைமுறை ஒன்றின் வெளியீட்டு நடவடிக்கையைக் குறிப்பிடுகிறது.

Input programme : உள்ளீட்டுஆணைத் தொடர் : Data Entry Programme போன்றது.

Input queue : உள்ளீட்டு வரிசை முறை: நினைவகம் அல்லது வட்டில் வந்துள்ள செய்திகளை வைத்துக் கொண்டிருக்கும் ஒதுக்கப்பட்ட பகுதி. செய்ய வேண்டிய வேலைகளைக் குறிக்கும் வேலைக் கட்டுப்பாட்டு வாக்கியம்.

Input statement : உட்பாட்டு அறிக்கை; உள்ளீட்டுக் கட்டளை.

Input stream : உள்ளீட்டுத் தொடர்: இயக்குவோரால் குறிப்பிட்ட நோக்கத்துக்காக செயல்முறைப்படுத்தப் பட்ட உள்ளீட்டுப் பிரிவுக்காக வரிசையாக அனுப்பப்படும் அறிக்கைகள் மற்றும் தகவல்கள். பணித் தொடர் போன்றது.

Inputting : உள்ளிடுதல் : கணினி முறைமை ஒன்றுக்கு தகவல்களை அனுப்பும் முறை.

Input unit : உள்ளீட்டகம் ; உள்ளிடு கருவி.

Inquire PAC : உசாவல் பிஏசி : கணினியில் கம்மோடர் 64இல் பயன்படுத்தப்படும் மென்பொருள். ஒழுங்குபடுத்தப்பட்ட தகவலைக் கொண்ட மின்னணுக் கோப்புப் பெட்டியை உருவாக்க இது உதவுகிறது.

Inquiry : உசாவல்; ஆய்வு: சேமிப்பிலிருந்து தகவல் ஒன்றினை பெறுவதற்கான வேண்டுகோள். எடுத்துக்காட்டு: விமான நிறுவனம் ஒன்றின் ஒதுக்கீட்டு முறைமையில் கிடைக்கக்கூடிய இருக்கை எவ்வளவு? என்பது போன்ற வேண்டுகோள்.

Inquiry processing : உசாவல் செயலாக்கம் : கோப்பு ஒன்றிலிருந்து ஒரு ஆவணத்தைத் தேர்வு செய்து அதன் உள்ளடக்கத்தை உடனடியாக வெளிப்படுத்தும் நடைமுறை.

Inquiry programme : உசாவல் ஆணைத்தொடர்.

Inquiry screen : உசாவல் திரை : திரை வடிவமைப்புக் கொள்கை. விரைவான தகவல் திரும்பப்பெறல் தேவைப்படுகையில், பயனாளர் கணினி அறிவுபெற்றவராக இல்லாத நிலை. பெரிய நூலகங்களில் தலைப்பு/பொருள்/ஆசிரியர் முறையில் நூல்களைக் கண்டுபிடிப்பதற்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

Inquiry station : ஆய்வு நிலையம் : ஆய்வு மேற்கொள்வதற்கான கருவி. அக்கருவி கணினியிலிருந்தோ கணினியின் விசை முனையத்திலிருந்தோ தொலைவில் இருக்கக்கூடும்.

Insertion : இடையிடல்; இடைச் செருகல்.

Insertion method : செருகு முறை.

Insertion mode : இடையீடு செய்யும் நிலை.

Insertion point : செருகு இடம் : ஆவணம் ஒன்றில் ஒரு குறிப்பிட்ட பகுதியை பதிவு செய்யும் இடம்.

INS Key (Insert key) : ஐஎன்எஸ் விசை: Insert key என்பதன் குறும்பெயர்.

உள்நுழைத்தல் மற்றும் மேலே முதல் முறைகளுக்கிடையிலோ தற் போதைய சுட்டி (கர்சர்) இருப்பிடத் தில் ஒரு பொருளை நுழைப்பதற்கு பயன்படுத்தும் விசை.

Insert mode : இடைச்செருகும் முறை: திரையில் நடப்பு சுட்டி (கர்சர்) இருப் பிடத்தில் வேறொன்றை நுழைக்க புதிய தகவல்களை தட்டச்சு செய்ய அனுமதிக்கும் தகவல் நுழைவு முறை.

Install : நிறுவு : புதிய ஆணைத் தொகுப்பு ஒன்றின் அம்சங்களை ஒரு குறிப்பிட்ட கணினி முறைக்கு, அதனைக் கையாள்வதற்காக பழக்கப் படுத்துதல். எடுத்துக்காட்டாக ஒரு குறிப்பிட்ட ஆணைத் தொகுப்பினை அச்சிடு கருவியுடன் உரையாட, மரபு வழி நடைமுறைகளை நிறுவுதல்.

Installable device driver : நிறுவக் கூடிய சாதன இயக்கி : பிழை நீக்கம் மற்றும் கட்டுப்பாட்டு வசதிகளைப் பயன்படுத்த இயக்க முறையுடன் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட சாதன இயக்கி.

Installation : நிறுவுதல் : ஒரு குறிப் பிட்ட கணினி முறைமைக்கு அது செய்கின்ற ஒட்டு மொத்தமான பணி, அதனை நிர்வகிக்கிற தனியாள்கள், அதனை இயக்குவோர், அதனைப் பயன்படுத்துவோர், அது தீர்வு காணும் பிரச்சனைகள், அதனால் விளையும் பயன்கள் அடிப்படையி லான பொதுப்பெயர்.

Installation spec : நிறுவு வரையறை: வெளிப்புறச் சூழ்நிலையில் ஒரு பொருளை எவ்வாறு சரியாக வைக்க முடியும் என்பதைக் கூறும் கருவி உற்பத்தியாளரின் விளக்கக் குறிப்பு.

Installation time : நிறுவு நேரம் : நிறுவு தல், சோதித்தல் மற்றும் தட்டச்சுப் பொறிபோல அந்த முறைமையைப் பயன்படுத்தி ஏற்றுக் கொள்வதற் கான நேரம்.

Instance : சான்று : பொருள்; உறுப் பினர் : பொருள் சார்ந்த ஆணைத் தொடரமைப்பில், ஒரு வகுப்பின் உறுப்பினர். சான்றாக 'நாய்'' என்ற வகுப்பிற்குச் சான்றாக பொமே ரியன், லேஸ்ஸி போன்றவைகளைக் கூறலாம். ஒரு சான்று உருவாக்கப் பட்டவுடன், அதன் ஆரம்ப மதிப்பு கள் அளிக்கப்படுகின்றன.

Instance variable : சான்று மாறி : ஒரு பொருளில் உள்ள தகவல். பொருள் சார்ந்த ஆணைத் தொடர் அமைப்பில் பயன்படுத்தப்படுவது.

Instantiate : சான்றாக்கல்; பொருள் உரு வாக்கம் : ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த பொருளை உருவாக்கல். பொருள் சார்ந்த ஆணைத் தொட ரமைப்பில் பயன்படுத்தப்படுவது.

Integer : முழு எண்.

Institute for Certification of Computer Professionals (ICCP : கணினி வல்லு நர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிறுவனம் : கணினியைப் பயன்படுத் தும் ஊழியர்களைச் சோதித்து அவர் களின் அறிவு மற்றும் திறன்களுக்குச் சான்றிதழ் வழங்கும் லாப நோக்கற்ற நிறுவனம். இதன் நோக்கம், குறிப் பிட்ட சமூகத்தில் உள்ள திறனாளி களை ஒருங்கு திரட்டுவதாகும். அதன் மூலம் தகவல்களை, செய லாக்கும் தொழிலின் முழுக்கவனத் தையும், தகுதியுள்ளவர்களை உரு வாக்கவும் மற்றும் தகுதி உள்ளவர் களை அங்கீகரிக்கவும் குவி முனைப் படுத்துவதாகும்.

Institute of Electrical and Electronics

Engineers Comptuers Society (ILEECS) : மின்னியல், மின்னணு வியல் பொறியாளர்கள் கணினிகள் கழகம் : மின்னியல் மற்றும் மின்னணு வியல் பொறியாளர்கள் நிறுவனத் தில் கணினி சிறப்புக் குழு கணினி விவரணம் மற்றும் செயல்பாடு மற்றும் தகவல் செயலாக்க தொழில் நுணுக்கத்தை முன்னெடுத்துச் செல் லும் முன்னோடித் தொழில் வல்லுநர் கள் சங்கம். மூன்று பரிமாற்றங்களை யும் மூன்று இதழ்களையும் வெளி யிடுகிறது. உலகின் பல பகுதிகளி லும் உள்ள அதன் 62,000 உறுப்பினர் களிடையே ஒத்துழைப்பையும் நவீனத் தகவல் பரிமாற்றத்தையும் ஊக்குவிக்கிறது.

Instruction : ஆணை; கட்டளை; அறி வுறுத்தம் : கணினி செய்ய வேண்டிய நடவடிக்கை ஒன்றை வரையறை செய்யும் சொல் அல்லது சொல் தொடர். வழக்கமாக இவை இயக் குக் குறியீடு மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயக்க ஆணை களைக் கொண்டதாக இருக்கும்.

Instruction code : ஆணைக் குறி முறை; கட்டளைக் குறியீடு : இயக்கக் குறியீடு போன்றது.

Instructional computing : கல்விக் கணினி ஆற்றுப்படுத்துதல் : கணினி அறிவியலின் பல்வேறு பகுதிகள் மற்றும் தகவல் செயலாக்கம் குறித்து தனிப்பட்டவர்களுக்கு கற்பிக்கும் நடைமுறை.

Instruction counter : ஆணைத்துறை : கட்டளைத்துறை : உணரப்பட வேண் டிய கணினிக் கட்டளையின் இருப் பிடத்தைச் சுட்டிக்காட்டும் துறை. ஆணைத் தொகுப்புத் துறை போன்றதே.

Instruction cycle : ஆணைச் சுழற்சி : கட்டளைச் சுழற்சி : கட்டளை ஒன்றை நெறிப்படுத்தத் தேவைப்படும் நேரம். உள் சேமிப்பிலிருந்து தேவைப்படும் கட்டளையைக் கொண்டுவருதல், கட்டளைக் குறி யீட்டை உணர்தல், கட்டளையை நிறைவேற்றுதல். கட்டளை நேரத் துடன் ஒப்பிடவும்.

Instruction format : ஆணைப் படிவம்: கட்டளை படிவு : கணினி கட்டளை ஒன்றின் அமைப்பு மற்றும் அமைப் புக் கிரய முறை.

Instruction length : ஆணை நீளம் : முதன்மை நினைவகத்தில் ஒரு ஆணையைச் சேமிக்கப் பயன்படுத் தப்படும் சொற்கள் அல்லது எட்டியல்கள் (பைட்டுகள்).

Instruction look / ahead : ஆணை பார்: ஒரு ஆணையை இயக்கும்போது வேறொரு ஆணையைக் கொண்டு ஐந்து குறியீடு மாற்றல்.

Instruction mix : ஆணைக் கலவை : ஒரு ஆணைத் தொடரில் ஆணை வகைகளைக் கலப்பது. பொதுவான தேர்வுக்குறி 'பெஞ்ச் மார்க்கு' களை எழுதுவதைக் குறிக்கிறது. உள்ளீடு / வெளியீடு செயலாக்கம், கணித ஆணைகள் போன்றவற்றை ஒன்றோ டொன்று கலப்பது எத்தகைய பயன் பாட்டுக்காக தேர்வுக் குறி 'பெஞ்ச் மார்க்' எழுதப்பட்டது என்பதை விளக்க உதவும்.

Instruction pointer : ஆணை காட்டி ஆணை சுட்டு : அடுத்து இயக்கப்பட வேண்டிய ஆணையை அணுக உதவும் மதிப்பினைக் கொண்டுள்ள பதிவகம்.

Instruction register : ஆணைப் பதிவகம் ; கட்டளைப் பதிவேடு : வன் பொருள் பதிவேடு. செயலுக்கான

கட்டளையை சேமிக்கிறது.

Instruction set : ஆணைத் தொகுதி : ஆணைத் தொகை ; கட்டளைத் தொகுப்பு: ஒரு குறிப்பிட்ட கணினி அல்லது கணினிக் குடும்பத்துக்கு விற்பனையாளரால் வழங்கப்பட்ட குறியீடுகள். Repertoire போன்றது.

Instruction time : ஆணை நேரம்; கட்டளை நேரம் : உள் சேமிப்பிலிருந்து கட்டுப்பாட்டுப் பிரிவினால் கட்டளை ஒன்றைப் பெறவும் அதனை உணரவும் தேவைப்படும் நேரம். இதனை I - time என்று பெரும்பாலும் கூறுவதுண்டு. Instruction cycle என்பதோடு ஒப்பிடவும்.

Instruction word : ஆணைச் சொல் ; கட்டளைச் சொல் : கட்டளையை உள்ளடக்கிய கணினிச் சொல்.

Instrument : கருவி : கோரிக்கையின் பேரில் தனிப்பட்டவர்களுக்கோ ஒரு நிறுவனத்துக்கோ தகவல்களை வழங்க, அவற்றைச் சேகரிக்க திட்டமிட்ட நடைமுறையில் பயன்படுத்துவதற்குப் படிவம், அறிக்கை, வினாத் தொகுப்பு, அல்லது வழிகாட்டி வடிவத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணம்.

Instrumental input : எந்திர உள்ளீடு: எந்திரங்களினால் சேகரிக்கப்பட்டு நேரடியாக கணினியில் பொதியப்பட்ட தகவல்கள்.

Instrumentation : கருவிகளைக் கையாளுதல் : அளத்தல், பதிவு செய்தல். இயற்பியல் பண்புகளை மற்றும் அசைவுகளை அளத்தலுக்குக் கருவிகளைக் கையாளுதல்.

Integer : முழு எண் : முழு எண்களையும் அவற்றின் எதிர் மறைகளையும் கொண்ட எண் தொகுப்பு. எடுத்துக் காட்டுகள் : -24, -1, 0, 1, 2, 13, 128.

Integer BASIC : முழு எண் அடிப்படை: முழுமையான எண்களை மட்டும் கையாளக்கூடிய அடிப்படை மொழி வகை எடுத்துக்காட்டு: 1-ஐ 3-ஆல் வகுத்தால் கிடைக்கும் விடை 0.33333-க்கு பதிலாக 0-ஆக இருக்கும்.

Insteger variable : முழு எண் மாறி; முழு எண் மாறியல் மதிப்புரு : எந்தவொரு முழுமையான எண்ணுக்கும் சமமான அளவு மற்றும் பல மதிப்பீடுகளை வழக்கமாக ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் (அது எல்லையற்றதாகவும் இருக்கலாம்) ஏற்கக் கூடியதாகவும் அமையும்.

Integrate : ஒருங்கிணை: ஒரு ஒருங்கிணைந்த கணினி முறைமையை உருவாக்க பல்வேறு உறுப்புகளை ஒன்றாக இணைக்கும் நடைமுறை.

Integrated banking system : ஒருங்கிணைந்த வங்கி அமைப்பு: சேமிப்பு மற்றும் நடப்பு கணக்கு போன்ற அன்றாட செயல்பாடுகளை தானியங்கியாக இயக்கும் இந்திய மென்பொருள்.

Integrated circuit-(IC) : ஒருங்கிணைந்த மின் சுற்று (ஐசி): ஒரு அரைக் கடத்தி சிப்பில் உருவாகும் குறு மின் சுற்று. தொகுப்பில் பொருத்தப்பட்டதும் இயக்கத்துக்கு தயாராக இருக்கும் சிப்பு. இது உதிரியாக உள்ள பாகங்களுக்கு எதிரானது.

Integrated computer package : ஒருங்கிணைந்த கணினித் தொகுப்பு: ஒருங்கிணைந்த ஆணைத் தொகுப்பு என்பதைப் பார்க்கவும்.

Integrated Data Processing - IDP : ஒருங்கிணைந்த தவல்களை முறைப்படுத்துதல் : ஐடிபி: தகவல்களை முறைப்படுத்தும் முறை. இதில் பெறப்பட்ட தகவல்கள் மற்ற நிலை

யில் உள்ள தகவல்களுடன் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த முறைமையாக உருவாக்குதல். எடுத்துக்காட்டு: வணிகத் தகவல்களை முறைப்படுத்தும் முறை. இதில் விற்பனைத் தகவல்கள் கொள்முதல் விபரங்களுடன் இணைக்கப்பட்டு அடுத்த கொள் முதலுக்கான ஆணைகளைத் தயாரிக்கவும் கணக்குகளைத் தயாரிக்கவும் பயன்படுகிறது.

Integrated Injection Logic (IIL) : ஒருங்கிணைந்த உட்செலுத்தி அளவை: நடுத்தரச் செயல்பாடும் குறைந்த மின்சக்தி நுகர்வும் பெற இரு துருவ மின்மப் பெருக்கிகளைப் பயன்படுத்தும் ஒரு மின் சுற்று வடிவமைப்பு.

Integrated programmes : ஒருங்கிணைந்த ஆணைத் தொகுப்புகள் : தங்களுக்குள் தகவல்களை சுதந்திரமாகப் பரிமாறிக் கொள்ளும் ஆணைத் தொகுப்புக் குழு. எ.கா. சொல் செயலி, தகவல் தள மேலாண்மை, மின்னணுவியல் விரிதாள் மற்றும் தகவல் தொடர்பு ஆணைத் தொகுப்பு ஆகியவற்றைக் கொண்ட மென்பொருள் சிமிழ். மின்னணுவியல் விரிதாளும் தகவல் மேலாளரும் தகவலை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளலாம். பயனாளர் சொல் முறைப்படுத்தும் ஆவணங்களையும் மின்னணுவியல் விரிதாளையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கையாளலாம்.

Integrated services digital network : ஒருங்கிணைந்த சேவைகளின் இலக்கமுறை பிணையம் : குரல், தகவல் மற்றும் ஒளி தகவல் தொடர்புகளை பிணைக்கும் பொதுவான தாங்கியை வழங்கும் சேவை. ஐ.எஸ்.டி.என். என்று சுருக்கி அழைக்கப்படுகிறது.

Integrated software package : ஒருங்கிணைந்த மென்பொருள் பணித்தொகுப்புகள்: பல பயன்பாடுகளை ஒரே ஆணைத் தொடரில் இணைக்கும் மென்பொருள். தகவல் தள மேலாண்மை, சொல் செயலி, விரிதாள், வணிக வரைகலை மற்றும் தகவல் தொடர்பு ஆகியவை இதில் அடங்கும். வெட்டி ஒட்டுதலையும் செய்ய முடியும். தனியாக நின்று செய்யும் பயன்பாடுகளின் திறன்களை எந்த ஒரு தொகுப்பும் தர முடியாது. சான்று பிரேம்வொர்க், ஆப்பிள் வொர்க் மற்றும் மைக்ரோ சாஃப்ட் வொர்க்.

Integration : ஒருங்கிணைப்பு: பல்வேறு விற்பனையாளர்களிடம் பெறப்பட்ட வேறுபட்ட வன்பொருள்களையும், மென்பொருள்களையும் ஒரு ஒருங்கிணைந்த முறைமையாக இணைத்தல்.

Integrated circuits (ICA) : ஒருங்கிணைந்த மின்சுற்று வழிகள் ; ஒருங்கிணைந்த சுற்று.

Integrated circuit chips : ஒருங்கிணைந்த மின்சுற்று வழிச் சிப்பு.

Integrity : ஒருங்கியைபு; ஒருங்கமைப்பு : இணக்கம் : ஆணைத் தொகுப்புகளை அல்லது தகவல்களை அவை உருவாக்கப்பட்ட நோக்கத்துக்காகப் பாதுகாத்தல்.

Intel corporation : இன்டெல் அமைவனம் : முதல் நுண் செயலியை 4 பிட் 4004-ஐ உருவாக்கிய நிறுவனம். இப்பொழுது பல்வேறு வகையான நுண் செயலிகளைத் தயாரிக்கிறது. அவை பெரும்பாலான புகழ் பெற்ற நுண் கணினிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

Intellect : அறிவார்ந்த; அறிவாற்றல்: செயற்கை அறிவுக் கார்ப்பரேஷன்

ஒன்றின் வணிக இலச்சினை. அந் நிறுவனம் இயற்கையான மொழியை வினா மொழியாக மாற்றக்கூடிய முறைமையை உரு வாக்கியதாகும். தினசரி வாழ்க்கை மொழியில் பயனாளர் முன் வைக் கும் கோரிக்கையை அது எந்த வகை யில் புரிந்து கொண்டது என்பதையும் தகவல்களைத் தொகுப்பிலிருந்து அதற்கான பதிலையும் அம் முறைமை வெளிப்படுத்துகிறது.

Intelligence : அறிவுச்கூர்மை; நுண் ணறிவு: செயலாக்கும் திறன், ஒவ் வொரு கணினியும் அறிவுக் கூர்மை உடையது.

Intelligent controller : அறிவுமிக்க கட்டுப்பாட்டாளர்: தன்னுடைய இயக் கங்களைக் கட்டுப்படுத்த உள்ளார்ந்த நுண் செயலகத்தைப் பயன்படுத்தும் வெளிப்புறக் கட்டுப்பாட்டு அலகு.

Intelligent database : அறிவார்ந்த தகவல் தளம்: தன்னுடைய தகவலின் உள்ளடக்கத்தைப்பற்றி அறிந்துள்ள தகவல் தளம். ஒவ்வொரு தகவல் புலத்திலும் மதிப்பளிக்கும் அளவு கோல்கள் சேமித்து வைக்கப்படும். அனைத்து நுழைவுகளின் பட்டியல் அல்லது குறைந்த மற்றும் அதிக மதிப்புகள் ஆகியவை இதில் குறிப் பிடப்படும்.

Intelligent form : அறிவார்ந்த படிவம்: சரியான தகவலை நுழைக்க உதவும் உதவி, திரைகள் மற்றும் குறைந்த அளவு செயற்கை நுண்ணறிவினை வழங்குகின்ற தகவல் நுழைவு பயன்பாடு.

Intelligent hub : அறிவார்ந்த குவியன்: இணையத்திலுள்ள சமிக்ஞைகளை மீட்டுருவாக்கல், இணைய மேலாண் மைக்கான அனுப்புதல்களைக் கண் காணித்தல், பல வகையான கேபிள் களுக்கு இணைப்புகளை அனுமதித் தல் மற்றும் வழியமைத்துத் தருதல் போன்ற பல்வகைப் பணிகளை இது ஆற்றுகிறது.

Intelligent language : அறிவார்ந்த மொழி: ஆணைத் தொகுப்பை உரு வாக்கியவர் அல்லது பயன்படுத்து கிறவர் மூலம் கற்றுக் கொள்ளக் கூடிய அல்லது மாற்றக் கூடிய ஆணைத் தொகுப்பு மொழி.

Intelligent modem : அறிவார்ந்த மோடெம் : நேர்முக அனுப்புதல் நடைபெறும் போதே புதிய ஆணை களை ஏற்று கட்டளைகளுக்கு இசை யும் மோடெத்தை, ஹேயஸ் என்பவர் முதலில் உருவாக்கினார்.

Intelligent robots : அறிவார்ந்த எந்திர மனிதர்கள் ; அறிவார்ந்த எந்திரன்கள்: அறிவார்ந்த எந்திர மனிதனுக்கு ஆணைத் தொடரமைக்கப் பயன் படுத்தப்படும் செயற்கை நுண் ணறிவு தொழில் நுட்பம், தன்னு டைய சூழ்நிலையை அறிந்து கொண்டு பல்வேறு வெளிப்புற சூழ் நிலைகளுக்கேற்ற அறிவார்ந்த செயல்களை எந்திர மனிதன் செய்ய இது உதவுகிறது.

Intelligent software development tools : அறிவார்ந்த மென்பொருள் வளர்ச்சிக் கருவிகள் : மென் பொருள் வளர்ச்சியின் பல்வேறு நிலைகளில் உற்பத்தித் திறனை அதிகரிக்க மென்பொருள் வளர்ச்சிக் கருவிகள் என்று அழைக்கப்படும் சிறப்பு ஆணைத் தொடர்களை ஆணைத் தொடர் அமைப்பவர்கள் பயன் படுத்துகிறார்கள்.

Intelligent terminal : அறிவார்ந்த முனையம் : உள்ளீட்டு/வெளியீட்டுக் கருவி. அதில் கணினி ஒன்றின் முறைப்படுத்தும் பண்புகள் பொருத்

தப்பட்டதாக அல்லது முனையப் பிரிவில் இணைக்கப் பட்டதாக இருக்கின்றன. Point of sale terminal, Local intelligence ஆகியவற்றைப் பார்க்கவும். Smart terminal என்ப தோடு ஒப்பிடவும். Dumb terminal என்பதற்கு எதிரானது.

Inter : இடை : எல்லைகளைக் கடத் தல். சான்று, Inter work என்றால் ஒரு கட்டமைப்பிலிருந்து வேறு ஒன் றுக்கு என்று பொருள்.

Intelsat : இன்டெல்சாட் : தகவல் தொடர்பு செயற்கை கோள்களை ஏவிய சர்வதேச நிறுவனம். சர்வதேச தகவல் தொடர்பில் பெரும்பாலான நீண்ட தூரத் தொடர்புகள் இவற்றின் மூலமாகவே சாத்தியமாகின்றன.

Intensity : திண்ணம் : வரைபட வெளிப்படுத்து கருவியில் வெளிப் படும் ஒளியின் அளவு. கத்தோட் கதிர்க் குழாய் வெளிப்படுத்தும் பிரகாசத்தின் அளவு. இதனை குமிழ் ஒன்றைப் பயன்படுத்திக் கட்டுப் படுத்தலாம்.

Interactive : இடைப்பரிமாற்ற; ஊட் டாடல் : உள்ளீட்டுக்கு உடனடியாக எதிர் வினை தருதல். பயனாளர் கணினி முறைமையுடன் நேரடியாக தொடர்ந்து தொடர்பு கொள்கிறார். இந்த வழித் தொடர்பில் இயக்கு வோர் ஒரு செயல் மூலம் ஆணைத் தொகுப்பை மாற்றியமைக்கலாம் அல்லது நுழைக்கலாம். முறைமை யிடமிருந்து எதிர் தகவல் மற்றும் வழிகாட்டுதலுக்காகவும் சரி பார்ப் புக்காகவும் பெறலாம்.

Interactive cable TV : இடைப்பரிமாற்ற கம்பிவட தொலைக்காட்சி 'கேபிள் டி.வி': பிரச்சினைகள் குறித்து கருத்து களைக் கூறி பார்வையாளர்கள் பங்கு பெறும் தொலைக்காட்சி நிகழ்ச்சி சேவை. வீடியோ டெக்ஸ்ட், டெலி டெக்ஸ்ட் போல் அல்லாது முழுதாக தொலைக்காட்சி பார்ப்பதை இது உணர்த்துகிறது. காலப் போக்கில் இந்த சேவைகள் எல்லாம் கேபிள் டி.வி. சேவைகள் மூலம் தர முடியும். டிகோடரும், விசைப் பலகையும் தேவைப்படும்.

Interactive graphics : இடைப்பரிமாற்ற வரைபடங்கள் : வரைபட முறை - இதில் பயனாளரும் கணினியும் தீவிர தகவல் பரிமாற்றத்தில் இருக்கும்.

Interactive input : இடைவினை உள்ளீடு.

Interactive graphics system : இடைப் பரிமாற்ற வரைபட முறைமை : கணினி வரைபட முறைமை - இதில் கணினி உதவியுடனான வரை படத் தைத் தயாரிப்பதில் எல்லா பணி நிலையங்களும் பயன்படுத்தப்படு கின்றன. எல்லாம் இயக்குவோரின் கட்டுப் பாட்டில் உள்ளன. உரைத் தயாரிப்பு, பட்டியல்கள் உருவாக்கு தல், வரை படங்கள், கணினி உதவி யுடனான பொறியியல் பணிகள், 35 மி.மீ அசையாத் தகடுகள், அல்லது செயல் படக்கூடிய படங்கள் ஆகிய வற்றை உருவாக்கலாம்.

Interactive menu : இடைப்பரிமாற்றப் பட்டியல் : ஒரு நேரத்தில் ஒன்று என்ற அடிப்படையில் கேள்வி கேட்கும் மெனு தத்துவம். ஒரு கேள்விக்கு பதில் வந்தவுடன் இரண்டாவது கேள்வி திரையில் வரும். வணிக தகவல் செயலாக்கத்தில் இது அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

Interactive processing : இடைப்பரி மாற்ற முறைப்படுத்துதல் : பயனாள ருக்கும் கணினிக்கும் இடையே இடையறாத தொடர்ந்த தகவல் தொடர்பு மூலம் தகவல்களை மாற்று

தல், கட்டளைகளை மாற்றுதல் ஆகியவை நிறைவேற்றப்படு கின்றன.

Conversational mode மற்றும் transaction oriented processing என்பதைப் பார்க்கவும்.

Interactive programme : இடைப் பரிமாற்ற ஆணைத்தொகுப்பு; இடை வினைச் செயல்படுத்துதல் : தகவல் கள் பதிவு செய்யப்பட அல்லது தகவல்கள் தொடர அல்லது ஆணைத் தொகுப்பை அதனை நிறைவேற்றும் போதே மாற்றி அமைக்க அனுமதிக் கும் கணினி ஆணைத் தொகுப்பு.

Interactive programming : இடைப் பரிமாற்றச் செயல் முறைப்படுத்தல்.

Interactive query : இடைப் பரிமாற்ற வினா; ஊடாடு உசாவல்: ஒரு குறிப் பிட்ட ஆவணத்தை அல்லது ஆவ ணங்களை உடனடியாகத் திரும்பப் பெற உதவும் நடவடிக்கை. இயல் பாகப் பயனாளரின் ஒவ்வொரு உள்ளீட்டுக்கும் முறைமையிட மிருந்து ஒரு எதிர் வினையைத் தரும் தொடர்பு.

Interactive session : இடைப்பரிமாற்ற நிகழ்ச்சி : பயன்படுத்துபவருக்கும் கணினிக்கும் இடையில் முன் பின் னான உரையாடல். Batch session என்பதன் எதிர்ச்சொல்.

Interactive system : இடைப்பரிமாற்ற முறைமை : பயனாளரோ , கணினி யின் சாதன சேவைப் பகுதியோ இயக்க ஆணைத் தொகுப்புடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும். பயனாளர் இதனை உரை யாடல் முறைமை என்று கூறு வார்கள்.

Interactive video : இடைப்பரிமாற்ற ஒளிக்காட்சி: ஊடாடு ஒளிக்காட்சி: சொற்கள், குரல், ஒளி பரிமாற்ற தொழில் நுட்பங்களுடன் உருவ செய லாக்கத்தை ஒருங்கிணைக்கும் கணினி சார்ந்த அமைப்பு. இடைப் பரிமாற்ற பல் ஊடக முறையில் வழங்குவதை இது சாத்தியமாக்கு கிறது. கணினி கட்டுப்பாட்டில் வீடியோ டிஸ்க் அல்லது சிடி ரோமை பயன்படுத்தி இடைப்பரிமாற்றக் கல்வி அல்லது பொழுது போக்கு நிகழ்ச்சிகளை அளிப்பது.

Interbase : இடைமுகம் : இடைமுகப்பு: போர்லாண்ட் நிறுவனத்தில் உறவு முறை டி.பி.எம்.எஸ். நேர்முக கலவை செயலாக்கங்களைக் (online complex processing) கையாள வடி வமைக்கப்பட்ட இது யூனிக்ஸ் பணி நிலையங்களிலும் லேக்ஸ்களிலும் இயக்கப்படுகிறது. பியர்-டு-பியர் மற்றும் கிளயன்ட்/ சேர்வர் அமைப்பு களாகவும் இது இருக்கலாம். எஸ்கியூஎல்-யும் மற்றும் அதனு டைய சொந்தத் தகவல் கையாளும் மொழியையும் இது பயன்படுத்து கிறது.

Inter Block Gap : (IBG) : தொகுப் பிடைத் தூரம் : மின்காந்த நாடா, வட்டு அல்லது உருளையில் ஒரு ஆவணத் தொகுப்பின் முடிவுக்கும் அடுத்த ஆவணத் தொகுப்புக்கும் இடையில் உள்ள தூரம். கோப்புத் தூரம் மற்றும் ஆவண இடைத் தூரத்திலிருந்து மாறுபட்டது.

Interconnection : இணைப்பு: பல விற் பனையாளர்கள் வழங்கிய சாதனங் களுக்கிடையிலான இணைப்பு.

Interaction : திரும்பச் செய்தல் : மறுபடி மறுபடி செய்தல்.

Interface : இடைமுகப்பு: ஒரு கணினி யும், வெளிப்புற பொருள் ஒன்றும் சந்திக்கும் இடம். அந்த வெளிப் புறப் பொருள் இயக்கியாகவோ,

வெளிப்புறச் சாதனமாகவோ அல்லது தகவல் தொடர்பு ஊடகமாகவோ இருக்கலாம். இணைப்பி போன்ற பருப்பொருளாகவோ அல்லது மென் பொருளை உள்ளடக்கிய அளவைப் பொருளாகவோ இருக்கலாம்.

Interface adapter : இடைமுக ஏற்பி : *கணினி அல்லது முகப்பை ஒரு கட்டமைப்புடன் இணைக்கும் சாதனம்.*

Interface card : இடைமுக அட்டை : *ஒரு வகையான விரிவாக்க அட்டை. தட்டு இடைமுக அட்டை, தொடர் இடைமுக அட்டை, இணை இடைமுக அட்டை போன்ற வெளிப் புறச் சாதனங்களை கணினிகளில் இணைக்க இது அனுமதிக்கிறது.*

Interfacial programme : இடைமுகப்புச் செயல்முறை.

Interference : குறுக்கீடு : *விரும்பும் சமிக்ஞைகளின் தரத்தினை சீர்கேடு அடையச் செய்யும் தேவையில்லாத சமிக்ஞைகள்.*

Interframe coding : இடை உருவ குறியீடமைத்தல்: *உருவங்களுக்கிடையிலான வேறுபாடுகளை மட்டும் குறியீடமைக்கும் வீடியோ சுருக்கும் முறை.*

Inter graph : இடைப் பரிமாற்ற வரைகலை : *கணினி அமைப்புகளில் இருந்த இடைப்பரிமாற்ற வரைகலைகளை உருவாக்கும் அமெரிக்க நிறுவனம்.*

Interlace : இடைப்பின்னல் : *அணுகு நேரத்தைக் குறைக்கும் வகையில் காந்த வட்டு அல்லது உருளையில் தனித்தனியாக உள்ள சேமிப்பக இருப்பிடங்களில் அடுத்தடுத்த முகவரிகளைக் கொடுப்பது.*

Interlacing : இடைப்பின்னியல்: *குறைவான செங்குத்து ஸ்கேன் விகிதங்களைக் கணினி வெளிப்படுத்தப்படும்போது லிக்கரின் (licker) அளவைக் குறைக்கும் முறை. ஒரே நேரத்தில் அடுத்த இரண்டாவது வரியையும் ஸ்கேன் செய்து இரண்டாவது முறை விட்டுப் போன வரிகளை ஸ்கேன் செய்தல்.*

Inter language conversion : மொழிகளுக்கிடையில் மாற்றம் : ஒரு மொழியில் இருந்து வேறொன்றுக்கு மாற்றுதல்

Interleaf : இடைத்தாள் : *ஐபிஎம் மின் உயர் பி.சிக்கள் மற்றும் 386 - களுக்கான முழு அம்சங்கள் உள்ள டி.டி.பி. மென்பொருள். உரை மற்றும் வரைகலை தொகுப்பு, தாராளகை ஓவியம் போன்றவற்றை உள்ளடக்கியதற்கு போஸ்ட் ஸ்கிரிப்ட் உதவியும் ஏஸ்/400 ஃபோல்டர்களுடன் இணைப்பும் கிடைக்கிறது.*

Interleaving : இடைவிடல் : *பல் ஆணைத்தொடரமைக்கும் தொழில் நுட்பம். ஒரு ஆணைத் தொடரின் பகுதிகள் வேறொரு ஆணைத் தொடரில் அமைத்து அதை வேறொரு ஆணைத் தொடரில் அமைப்பதுண்டு. இம்முறையில் ஆணைத் தொடர்களில் ஒன்றில் செயலாக்க தாமதம் ஏற்பட்டால் வேறொரு ஆணைத் தொடரின் பகுதிகள் செயலாக்கம் செய்யப்படலாம்.*

Interlock : இடைப்பூட்டு : *ஒரு சாதனம் அல்லது இயக்கம் வேறொன்றில் தலையிடா வண்ணம் பாதுகாக்கும் வசதி. கணிப்பொறியில் ஆணைத் தொடர் ஒன்று செயல்படுத்தப்பட்டு வரும்போது அதை நகர்த்துவதைத் தடைசெய்யும் முறையில் கட்டுப்பாடு முகப்பில் உள்ள பொத்தான்கள் பூட்டிக் கொள்வது ஒரு குறுக்கீடு எனலாம்.*

Interlude : இடைச்செயல் : ஆரம்பப் பராமரிப்பு.

Intermediate mode routing : இடை முறை வழியமைப்பு : பக்கத்தில் அல்லாத முனைகளுக்கு ஒரு செய்தியை அனுப்புதல். சான்றாக, அ - ஆ - இ என்ற மூன்று கணினிகளுக்கு இணைப்பு இருக்குமானால் 'அ' கணினியிலிருந்து 'இ' கணினிக்கு 'ஆ' கணினி மூலம் செய்தி அனுப்ப முடியும்.

Intermittent error : இடையிடையே வரும் பிழை : இடையிடையே அடிக்கடி வரும் பிழைகள். இதனால் பிழை திருத்தலும் மீண்டும் அதை உருவாக்குதலும் சிக்கலாகிறது.

Internal clock : உள்ளார்ந்த கடிகாரம் : அன்றாடம் நேரத்தைக் காட்ட கணினியின் உள்ளே அமைக்கப்படும் மின்னணு மின்சுற்று.

Internal command : உள்ளார்ந்த கட்டளை; அக ஆணை : எம்எஸ் டாசில் பொது கட்டளை செயலகத்தின் வழியான கட்டளை (command. com.) ஒன்று உள்ளது. இதற்காக எந்தக் கோப்பையும் ஏற்ற வேண்டியதில்லை.

Internal data representation : உள்ளே இருக்கும் தகவல் : கணினியின் உள்ளே அமைந்திருக்கும் பதிவுகள் சேமிப்பகம் மற்றும் பிற சாதனங்களில் உள்ள தகவல்கள்.

Internal documentation : உள்விவர ஆவணம்: அக ஆவணம் : 1. மூல மொழி ஆணைத் தொடரில் விளக்கக் குறிப்புகள், குறிப்புரைகளைச் சேர்த்தல். இதற்கு கணினி மூலம் எதுவும் செய்ய வேண்டியதில்லை. ஆணைத் தொடரின் பல்வேறு பகுதிகள் செய்யும் பணிகள் பற்றி தற்போதைய மற்றும் எதிர்கால ஆணைத் தொடர் அமைப்பவர்களுக்கு இது உணர்த்துகிறது. 2. ஒரு வணிக நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் ஆவணப் படுத்தல்.

Internal font : உள்ளார்ந்த எழுத்துரு: ஒரு அச்சுப்பொறியில் உருவாக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட எழுத்து முகம் கொண்ட எழுத்துகளின் தொகுதி.

Internal fragmentation : அகநிலைத் துண்டிப்பு.

Internal interrupt : உள்ளார்ந்த குறுக்கீடு: செயலாக்கம் மூலம் ஏற்படும் குறுக்கீடு. சான்று: உள்ளீடு அல்லது வெளியீடு அல்லது ஒரு கணித மிகு பிழைக்கான வேண்டுகோள். எதிர்ச் சொல் : external interrupt.

Internally generated data : உள் தோன்றும் தகவல்.

Internal memory : உள் நினைவகம் : Internal storage போன்றது.

Internal modem : உள்ளமைந்த மோடெம்: கணினியின் உள்ளே இருந்து கொண்டு நேரடியாக கணினி விரிவாக்க வாயிலில் பொருந்தக் கூடியது.

Internal report : உள்ளார்ந்த அறிக்கை: அக நிலை அறிக்கை : ஒரு நிறுவனத்தின் உள்ளே இருப்பவர்கள் தயாரிக்கும் நிறுவன அறிக்கை. இருப்புக் கணக்கெடுப்பு தரக்கட்டுப்பாடு, சம்பளப்பட்டி போன்றவை இதில் அடங்கும்.

Internal sort : உள்ளே வகைப்படுத்தல்; அக நிலை வரிசையாக்கல் : ஒரு மைய செயலக அலகுக்குள் இரண்டு அல்லது மேற்பட்ட பதிவுகளை வரிசைப்படுத்துதல். பல்வகைப் படுத்தும் ஆணைத் தொடரில் முதல் நிலை.

Internal storage : உள்ளார்ந்த சேமிப் பகம்: உள் தேக்ககம் : மையச் செயலக அலகு நேரடியாகக் கட்டுப்படுத்தும் முகவரியிடும் சேமிப்பகம். ஆணைத் தொடர் இயக்கப்படும் போதும் தகவல் செயலாக்கம் செய்யப்படும் போதும் ஆணைத் தொடர்களை சேமிக்கப் பயன்படுகிறது.

Internal timer : உள்ளார்ந்த காலங் காட்டி : முறையான இடைவெளி களில் பைபியசோ எலெக்ட்ரிக் படிகம் உருவாக்கும் துடிப்புகளைக் கட்டுப்படுத்தும் பதிவு.

International Council for Computers in Education (ICCE) : கல்வியில் கணினி களுக்கான பன்னாட்டுக் கழகம் (ஐ.சி.சி.இ) : கல்லூரிக்கு முந்தைய அளவில் கல்வித் துறையில் கணினி யைப் பயன்படுத்துவதில் ஆர்வ முள்ளவர்களைக் கொண்ட பன்னாட்டு நிறுவனம்.

International Business Machines Corporation (IBM) : பன்னாட்டு வாணிக எந்திரக் கழகம்.

International Directory of Software : பன்னாட்டு மென்பொருள் திரட்டு : கம்ப்யூட்டர் பப்ளிகேஷன்ஸ் லிமி டெட் நிறுவனத்தின் வெளியீடு.

International Federation for Information Processing (IFIP) : தகவல் செய லாக்கத்திற்கான பன்னாட்டுப் பேரவை (ஐஎஃப்ஐபி) : தகவல் செய லாக்கத் துறையில் தீவிரமாக ஈடு பட்டுள்ள தொழில் முறை மற்றும் கல்வி முறை சங்கங்களைச் சேர்ந்த வர்களைக் கொண்ட பன்னாட்டு நிறுவனம். மூன்று ஆண்டுகளுக் கொரு முறை உலகின் பல்வேறு பகுதிகளில் கூட்டம் நடத்துகிறது.

International Standard : பன்னாட்டுத் தரம்.

International Standard Book Number (ISBN) : பன்னாட்டு தர நூல் எண் : ஐஎஸ்பிஎன் என்று சுருக்கி அழைக் கப்படுகிறது. நூலகங்களில் பயன் படுத்தப்படும் பட்டைக் குறியீடு.

International Standard Organisation (ISO) : பன்னாட்டுத் தர நிறுவனம் (ஐஎஸ்ஓ) : அறிவியல் மற்றும் பொறி யியல் பொருள்கள், அமைப்புகளுக் கான பன்னாட்டு தர நிர்ணயங்களை வழங்க உருவாக்கப்பட்ட தன்னார்வ நிறுவனம்.

Internet address : இணைய முகவரி : இணையத்தைப் பயன்படுத்துபவர் களுக்கு செய்திகளை முகவரியிடு வதற்கான படிவம்.

Interframe coding : படங்களுக்கு இடையே குறியீடமைத்தல் : ஒரு வீடியோ படத்தின் உள்ளே இருக்கும் போது மீண்டும் வருகின்ற பகுதி களை சுருக்குதல்.

Internet router : இணைய வழிப் படுத்தி: ஆப்பிள் நிறுவனத்தின் மெக் கின்டோஷ் மென்பொருள். இதன் மூலம் இன்டர்நெட் இயக்கங்களை உள்ளூர் பேச்சு, ஈதர் பேச்சு, அடை யாளப் பேச்சு ஆகிய எதனுடனும் இணைத்து எந்த இணைய நிலையத் துடனும் இணைத்துத் தர முடியும். ஒவ்வொரு மீட்டரும் 8 இணையங் களுடன் இணைக்க முடியும். அதிக பட்சமாக 1.6 கோடி முனைகளிலும் 1,024 இணையங்களுடனும் சேரும்.

Internist : இன்டர்நிஸ்ட் : 1970 - களின் ஆரம்பத்தில் பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் மையர்ஸ் மற்றும் ஹாரி பீப்பிள் ஆகியோரால் உருவாக்கப் பட்டது.

Interoperable : இசைவு இயக்கத் தன்மை: வேறொரு கணினி அமைப்

புடன் சரிவர இயங்கக்கூடிய ஒரு அமைப்பின் திறன்.

Interpolation : இடைச் செருகல்; இடைக் கணிப்பு : இரண்டு தெரிந்த மதிப்புகளுக்கிடையிலான மதிப்பினைக் காணும் முறை. கணினி வரைகலையில் இந்தச் செயல் முறையை அடிக்கடி பயன்படுத்தி இரண்டு நேர் கோடுகளை இணைத்து வளைவு களையோ அல்லது இரண்டு குறிப்பிட்ட புள்ளிகளுக்கிடையில் மென்மையான வளைவுகளையோ வரையறுப்பது.

Interpretation : ஆணை மாற்றம்; விளக்கம் : உயர் நிலை மொழி ஆணைத் தொடர் வாக்கியங்களை எந்திரமொழி ஆணைகளாக மாற்றும் மொழி பெயர்ப்பு. ஒரு ஆணைத் தொடருக்கு விளக்கம் அளிக்கும் போது, ஒவ்வொரு வாக்கியத்தினையும் மொழி பெயர்த்து அடுத்த வாக்கியத்தைச் செயலாக்கம் செய்வதற்கு முன் செயல்படுத்தப்படும்.

Interpress : இன்டர்பிரஸ் : ஜெராக்ஸ் நிறுவனத்தின் பக்க விளக்க மொழி. 2,700 மற்றும் 9,700 பக்க அச்சுப் பொறிகளில் பயன்படுத்தப்படுகிறது. வென்ச்சுரா பதிப்பகம் இன்டர்பிரசுக்கான வெளியீடுகளை அளிக்கிறது.

Interpret : வரி மொழி மாற்றல் : ஒரு நேரத்தில் ஒரு வரி மட்டுமே செயல் படுத்தக் கூடிய ஆணைத் தொடர். மூலமொழியின் ஒவ்வொரு வரியும் எந்திர மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு இயக்கப்படுகிறது.

Interpreter : வரி மொழி மாற்றி; ஆணை மாற்றி: மூல மொழியில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் தொடர் எந்திர ஆணைகளாக மாற்றி அவற்றை இயக்கும் கணினி ஆணைத் தொடர்.

Inter record gap : பதிவேடு இடையில் உள்ள இடைவெளி : நாடாவில் தகவல்களின் தொகுதிகளுக்கிடையில் உருவாக்கப்பட்ட இடைவெளி. சுருணையினை ஆரம்பித்தல் மற்றும் நிறுத்து தலின் மூலம் உருவாக்கப் படுகிறது. IRG என்று சுருக்கி அழைக்கப்படுகிறது.

Interrogate : கேள்வி கேட்டல் : (1) ஒரு கோப்பில் உள்ள பதிவேடுகளைத் தேடுதல், தொகுத்தல் மற்றும் எண்ணுதல். (2) ஒரு முகப்பு அல்லது கணினி அமைப்புத் தகுதியை அல்லது நிலையைச் சோதித்தல்.

Interrupt : குறுக்கீடு ; இடையீடு : வழக்கமான ஆணைத்தொடர் செயல் படுவதை நிறுத்தி உள்சேமிப்பகத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு வன்பொருளின் ஆணைத்தொடர் கட்டுப்பாட்டினை மாற்றுவதற்கான சமிக்ஞை. குறுக்கீடு செயல்படுத்தப் பட்ட பிறகு, ஆணைத் தொடரின் கட்டுப்பாடு மீண்டும் குறுக்கிடப் பட்ட ஆணைத் தொடருக்கே திரும்பிவிடும்.

Interrupt-driven : குறுக்கீடு-இயக்கி ; இடை மறிப்புத் தூண்டல் : குறுக்கீடு களைப் பயன்படுத்தும் கணினி அல்லது தகவல் தொடர்பு கட்டமைப்பு.

Interrupt handler : குறுக்கீடு கையாள்பவர் : குறுக்கீடு ஏற்படும்போது தேவையான வேலைகளைச் செய்யும் ஆணைத்தொடரின் ஒரு பகுதி.

Interruption : குறுக்கிடுதல் : ஆணைகளை வழக்கம்போல் தொடர்ச்சியாக இயக்குவதில் ஏற்படும் தடை.

Interrupt mask : குறுக்கீட்டு மூடி; இடை மறிப்புத் திரை : ஒரு குறுக்கீட்டை செயலாக்கம் செய்யலாமா வேண்டாமா என்பதற்கான கட்டுப்

பாட்டை இயக்கும் உள்ளார்ந்த பொத்தான். ஆணைத் தொடரினால் அவ்வப் போது மூடி, திறக்கப்படும் ஒரு துண்மியே மூடியாகும்.

Interrupt priorities : குறுக்கீட்டு முன்னுரிமைகள்: குறுக்கீடுகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தின் வரிசை முறை. ஒரே நேரத்தில் இரண்டு குறுக்கீடுகள் ஏற்படுமானால், அதிக முன்னுரிமை உள்ள குறுக்கீடே முதலில் கவனிக்கப் படும். சில கணினிகளில் இரண்டுமே செய்யப்படும்.

Interrupt Request Line (IRL) : குறுக்கீட்டு வேண்டுகோள் வரி : குறுக்கீடு செய்ய வேண்டிய சமிக்ஞை தருவதற்கு ஒரு சாதனத்தினால் பயன் படுத்தப்படும் ஒரு வரி தகவல் கோடு.

Interrupt return : குறுக்கீடு திரும்ப வரல் : குறுக்கீட்டினால் தடை செய் யப்பட்டு மீண்டும் இயங்குமாறு செயலகத்திற்கு ஆணை தருகின்ற எந்திர ஆணை.

Interrupt service routine : குறுக்கீட்டு சேவை வாலாயம் : உடனடியாக இயக்கப்படும் ஆணைத்தொடர். மையச் செயலகம் தற்போது செய்யும் வேலையை ஐஎஸ்ஆர் சேமித்து, குறுக்கீடு செய்யப்பட்ட வேலையை முடித்து விட்டு, மீண்டும் விட்ட இடத்தில் இருந்து தொடரும்.

Interrupt vector : குறுக்கீட்டு நெறியம்: ஒரு பட்டியலின் தனித் தன்மை. குறுக்கீடு சேவையின் ஆரம்ப முக வரிகளைக் கொண்டது. இது இருப்பதனால் மையச் செயலகமானது குறுக் கீடு வரும்போது எங்கே குதிக்கலாம் என்று அறிந்து கொள்ள முடிகிறது.

Interrupt vector table : குறுக்கீட்டு நெறிய அட்டவணை : சேவை வழமைகளில் குறுக்கீடு செய்வதற் கான நெறிகளைக் (வெக்டார்கள்) கொண்டுள்ள ஒரு அட்டவணை.

Intersect : குறுக்கு வெட்டு : உறவு முறை தகவல் தளங்களில் இரண்டு கோப்புகளைப் பொருத்திப் பார்த்து இரண்டுக்கும் பொதுவாக உள்ள வற்றைக் கொண்டு ஒரு மூன்றாவது கோப்பை உருவாக்குவது.

Interval timer : இடைவேளை நேரம் காட்டி : ஒரு கணினி அமைப்பில் கடந்து போன நேரத்தைக் கண் காணிக்கும் எந்திர அமைப்பு.

Interview : நேர்முகம்; நேர்காணல் : 1. அமைப்பு வடிவமைப்பு மற்றும் ஆய்வில் உண்மை தேடும் முறை. 2. வேலை தரும் நபருக்கும் வேலைக்கு விண்ணப்பிப்பவருக்கும் இடையே நடைபெறும் உரையாடல். நேர் முகத்தின்போது ஒருவருக்கு தனது திறமைகள், கல்வி, மற்றும் கடந்த கால அனுபவத்தைப் பற்றியும் அந்த வேலையில் அவரிடம் என்ன எதிர் பார்க்கப்படுகிறது என்பதையும் விளக்க அவருக்கு வாய்ப்புக் கிடைக் கிறது.

Intra : அக இயக்கம் : ஒரு எல்லைக் குள் சான்றாக Intra office என்பது ஒரு அலுவலகத்துக்குள்ளேயே நடை பெறும் இயக்கங்கள்.

Intranet : உள் இணையம் : இணையத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத் தும் ஒரு நிறுவனப் பிணையம் .

Intuitive command : உள்ளுணர்வுக் கட்டளை : ஒரு கட்டளையின் வெளியீ டாக வருவதைக் குறிக்கக் கூடிய பெய ருடைய கட்டளை. சான்றாக, ஒரு கோப்பை சேமிப்பதற்கு Control - S என்பது ஒரு உள்ளுணர்வுக் கட்டளை. எப்படியென்றால் இக் கட்டளையின்

முடிவு 'S' என்னும் எழுத்துடன் ஆரம்பிக்கும். Control - X என்பது ஒரு பயன்பாட்டிலிருந்து வெளியேறு வது.

Invalid : முறைப்படியமையாத.

Inventory contorl : இருப்புக்கணக் கெடுப்பு கட்டுப்பாடு : இருப்பு கணக் கெடுப்பைக் கண்காணிக்க கணினி அமைப்பைப் பயன்படுத்துதல்.

Inventory control system : இருப்புக் கட்டுப்பாட்டுப் பொறியமைவு : கையிருப்புப் பொருள் முதன்மைக் கோப்பு.

Inventory management : இருப்புக் கணக்கெடுப்பு மேலாண்மை : இருப் புக் கணக்கெடுப்பு தொடர்பாக அன் றாடம் மற்றும் கால முறைக் கணக்கு வைத்துக் கொள்ளுதல். வகையறு மற்றும் வகையறா குழுக்களின் தேவைகளைக் கணித்தல்.

Inverse video : தலை கீழ் ஒளிக்காட்சி; எதிர் மறை ஒளித் தோற்றம் : காட்சித் திரையில் வெளிச்சப் பின்னணியில் இருட்டான சொற்களைக் காட்டும் செயல்முறை. வழக்கமாக இருட்டு பின்னணியில் வெளிச்சமுள்ள சொற் கள் காட்டப்படும்.

Invert : தலை கீழாக்கு : தலைகீழாகத் திருப்புதல். திரைக்காட்சி அல்லது அச்சு வெளியீட்டில் சொற்கள் அல் லது பொருள்களைத் தலைகீழாகக் காட்டுதல்.

Inverted file : தலை கீழாக்கிய கோப்பு : பதிவு விசைகளுக்குப் பதிலாக எழுத்துகளை அணுகும் வகையில் அமைக்கப்பட்ட கோப்பு.

Inverted structure : தலை கீழாக்கிய அமைப்பு : முன் குறிப்பிடப்படாத தகவலை தானாக வேகமாகத் தேட அனுமதிக்கும் கோப்பின் வடி வமைப்பு. குறிப்பிட்ட புலத்தில் மதிப்புகளின்படி பதிவு விசைகளை அணுகக்கூடிய வகையில் பராமரிக் கப்படும் சுயேச்சைப் பட்டியல்கள்.

Inverter : தலைகீழாக்கி : ஒரு இருமை 1 உள்ளீட்டிலிருந்து இருமை 0 வெளி யீட்டையோ அல்லது தலை கீழா கவோ செய்யும் மின் சுற்று.

Inverting circuit : தலைகீழாக்கும் மின் சுற்று : நேர் மின்சாரத்தை மாற்று மின்சாரத்தில் மின்சுற்றை மாற்றுதல். Adapter- க்கு எதிர்ச்சொல்.

Inverson notation : தலைகீழ் எண் முறை: ஏபிஎல்-ஸில் வாக்கியங் களை எழுதுவதற்காக கென்னத் இவர்சன் உருவாக்கிய குறியீடுகளின் தொகுதி.

Invisible refresh : புலனாகாத புதுப் பிப்பு : இயங்கும் நினைவகங்களைக் கணினியின் மற்ற பகுதிகள் தலை யிடாமல் புதுப்பிக்கும் திட்டம்.

Invoke : எழுப்புதல்; விளித்தல் : ஒரு ஆணைத் தொடர், வழமை, பணி அல்லது செயலாக்கத்தை இயக்கச் செய்தல்.

I/O : ஐ/ஓ : Input / Output என்பதன் குறும் பெயர்.

ION : இயான் : தன்னுடைய கூட்டில் ஒன்று அல்லது மேற்பட்ட இயான் களை சேர்த்ததால் அல்லது இழந்த தால் தன் மின்சக்தி நடுநிலைத் தன்மையை இழந்த ஒரு எதிர் மின்மம் எலெக்ட்ரான் அல்லது மூலக்கூறு 'மாலிக்யூல்'.

ion Deposition : இயான் டிப்போ சிஷன்: அதிவேக பக்க அச்சுப் பொறி களில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம். இது லேசர் பிரின்டிங் போன் றதே. ஆனால், உருளையில் ஒரு உரு வத்தை உண்டாக்க ஒளியைப் பயன்

படுத்துவதற்குப் பதிலாக அச்சிடும் முனையைப் பயன்படுத்தி அயான் களைச் செலுத்துகிறது. உருளையில் அயான்கள் சேர்க்கப்பட்டவுடன், காகிதம் நேரடியாக உருளைக்கு அனுப்பப்பட்டு டோனருடன் காகிதம் சேருகிறது. லேசர் அச்சுப் பொறி போன்ற தரம் கிடைக்கிறது.

IP (Internet Protocol) : ஐ.பி : Internet Protocol என்பதன் குறும்பெயர். இணையத்தில் ஒரு எந்திரத்தில் இருந்து மற்றொரு எந்திரத்துக்கு தகவல்களை மாற்றும் தர நிர்ணய விதிமுறை. மற்றவற்றை விட இதில் அதிக நம்பகத்தன்மை உள்ளது. ஆனால் இதற்கு அதிகச் செலவாகும். வேகமும் குறைவு.

IP address : ஐபி முகவரி : இன்டர் நெட்டில் ஒரு குறிப்பிட்ட கணினியை அடையாளம் காட்டும் எண்முறை முகவரி. இதில் நான்கு எண்கள் உள்ளன. தொலைபேசி எண்களைக் கொண்டு தொலைபேசி அழைப்புகளை நெறிப்படுத்துவது போல, ஐ.பி. முகவரியைப் பயன் படுத்தி இணையச் செய்திகளை ஒழுங்குபடுத்துகின்றார்கள்.

IPC : ஐபிசி : Internet Process Communication என்பதன் சுருக்கம். ஒரே கணினிக்குள்ளேயோ அல்லது ஒரு கட்டமைப்புக்குள்ளேயோ ஒரு ஆணைத் தொடரிலிருந்து இன்னொன்றுக்கு தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல். வேண்டுகோளுக்குப் பதில் பெறும் வகையில் உறுதியளிக்கப்படுகிறது. "க்ளிப் போர்டை"ப் பயன்படுத்தி ஒரு கோப்பிலிருந்து வேறொன்றுக்கு தகவல்களை வெட்டி ஒட்டவும் இதன் மூலம் முடியும்.

IPCS : ஐபிசிஎஸ் : Industrial Process Computer System என்பதன் குறும் பெயர். மும்பையில் உள்ள டைனலோக் மைக்ரோ சிஸ்டம் நிறுவனம் உருவாக்கியது.

IPDS : ஐபிடிஎஸ் : Intelligent Printer Data System என்பதன் குறும்பெயர். செய்தி அல்லது வரைகலைகளை முழுப் பக்க அளவில் பெருமுக அல்லது சிறு கணினியிலிருந்து லேசர் அச்சுப் பொறிக்கு அனுப்புவதற்கான ஐபிஎம் மின் படிவம்.

IPI : ஐபிஐ : Intelligent Peripheral Interface என்பதன் குறும்பெயர். சிறு மற்றும் பெருமுகக் கணினிகளுடன் பயன்படுத்தப்படும் அதிவேக நிலை வட்டு இடைமுகம். ஒரு நொடிக்கு 10 முதல் 25 மீமிகு எட்டியல்கள் (மெகாபைட்டுகள்) அளவில் தகவல்களை மாற்றி அனுப்புவது. ஐபிஐ-2 ஐபிஐ-3 என்பன அவை செயல் படுத்தும் கட்டளைகளில் உள்ள வேறுபாடுகளைக் குறிப்பன.

IPL-V : ஐபிஎல்-V : Information Processing Language V என்பதன் குறும் பெயர். எதிர்கால கணிப்புச் சிக்கல் களுக்கு அதிகம் பயன்படுத்தப்படும் ஒரு பட்டியல் செயலாக்க மொழி.

IPS (Inches Per Second) : ஐபிஎஸ் : Inches per second என்பதன் குறும் பெயர். ஒரு படி/எழுது முனையை நாடா கடந்து செல்வது அல்லது ஒரு வரைவானில் (பிளாட்டர்) காகிதம் கடந்து செல்வது ஆகியவற்றைக் குறிப்பிடுவது.

IRG : ஐஆர்ஜி : Inter Record Gap என்பதன் குறும்பெயர்.

IRM : ஐஆர்எம் : Information Rersource Manager என்பதன் குறும்பெயர். ஒரு நிறுவனத்தின் தலைமை கணினியை இயக்குவதற்குப் பொறுப்பேற்று அதைப் பயன்படுத்தும் ஊழியர் களைக் கண்காணித்து வரும் நபர்.

Iron oxide : இரும்பு/ஆக்சைடு: காந்த நாடாக்கள் மற்றும் குறை திறன் வட்டு களின் மேற்பரப்பில் பூசுவதற் குப் பயன்படுத்தப்படும் பொருள்.

IRQ : ஐஆர்கியூ : Interrupt Request என்பதன் குறும்பெயர். கணினி செயலகத்திற்கு ஒரு வன்பொருள் குறுக்கீட்டை உருவாக்குமாறு குறுக் கீடு கட்டுப்பாட்டுப் பொறிக்குக் கேட்க, உள்ளீடு/வெளியீடு ஏற்பி பயன்படுத்தும் 16 மின் இணைப்புத் தொகுதி வரிகளில் ஒன்று. 8 துண்மி எக்ஸ்டி மின் இணைப்புத் தொகுதி களில் 8 வரி ஆக இருக்கும்.

ISA : ஐஎஸ்ஏ : Industry Standard Archi tecture என்பதன் சுருக்கம். ஐபிஎம் பிசிஏடியுடன் அறிமுகப்படுத்தப் பட்ட 16 துண்மி மின் இணைப்புத் தொகுதி சார்ந்த தர நிர்ணயம்.

ISDN : ஐஎஸ்டிஎன் :தகவல் தொடர்பு கம்பியில் குரல், ஒளி மற்றும் தகவல் களை அனுப்புவதற்கான பன்னாட் டுத் தொலைத் தகவல் தொடர்பு தர நிர்ணயம். அலைக் கற்றை சமிக்ஞை முறையை இது பயன்படுத்துவத னால் கட்டுப்பாட்டு தகவலுக்கு தனி வழித்தடம் கிடைக்கும். அடிப் படை / ஆரம்ப விகித இடைமுக வடிவங்களில் இது கிடைக்கிறது. மோடெம் மூலம் தகவல் தொடர்பு கொள்ளும் பி.சி.களுக்கு நொடிக்கு 9,600 துண்மிகள் வேகமாயினும், ஐஎஸ்டிஎன்-னில் 64 கிலோ துண்மி கள் ஒரு நொடிக்கு என்ற வேகம் பெரிய ஊக்கத்தைக் கொடுத்தது.

ISIS : ஐஎஸ்ஐஎஸ் : சிஎம்யு மற்றும் வெஸ்டிங் ஹவுஸ் உருவாக்கிய ஆலை நேரம் அமைக்கும் ஏபிஐ திட்ட அமைப்பு. வேலைக்கான நேரப் பட்டியல்களை உருவாக்கு வதுடன் முரண்பட்ட காரணிகளை யும் மதிப்பீடு செய்கிறது.

Islands of Information : தகவல் தீவு கள்: ஒரு தகவல் ஜிஐஎஸ் எம்ஐஎஸ் அல்லது டிஎஸ்எஸ் போன்ற தகவல் சேமிப்பில் ஏற்புடைத் தன்மை இல் லாத ஒன்று. பெருமுக கணினி நாடாக்களின் தகவல் கோப்புகள் பி.சி. நெகிழ் வட்டுக்கள் போன்ற பருப் பொருளாகவோ அல்லது அஸ்கி, எப்சிடிக் போன்றவற்றில் எழுதப்பட்ட சில தகவல்கள் போன்ற மின் தொடர்பானதாகவோ இருக்கலாம். வேறொன்றில் மாற்றப் பட முடியாத தகவல் 'தகவல் தீவு' எனப்படுகிறது.

ISAM : ஐஎஸ்ஏஎம் : Indexed Sequen- tial Accessed Method என்பதன் குறும் பெயர்.

ISO-7 : ஐஎஸ்ஓ - 7 :ஒவ்வொரு எழுத் துக்கும் 7 துண்மிகள் கொண்டதாக உலக அளவில் ஏற்றுக்கொண்ட எழுத்துக் குறியீடு. (ஐஎஸ்ஓ 646 - 1973).

ISO : ஐஎஸ்ஓ : International Standards Organisation என்பதன் குறும்பெயர். தகவல் பரிமாற்றத்துக்கான தர நிர் ணயங்களை உருவாக்கப் பொறுப் பேற்றுள்ள ஒரு பன்னாட்டு நிறு வனம். அமெரிக்காவின் "அன்சி" போன்ற ஒரு பணியைச் செய்கிறது.

ISOC : ஐஎஸ்ஓசி: இணையச் சங்கம். இணையத்தை ஆராய்ச்சி மற்றும் அறி வார்ந்த தகவல் தொடர்பு கூட்டுறவுக்குப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் ஒரு பன்னாட்டு இலாப நோக்கற்ற உறுப்பினர் நிறுவனம்.

Isolation : தனிமைப்படுத்தல்: 1. ஒரு கணினி பாதுகாப்பு அமைப்பில், தக வலைப் பகுதி பகுதியாகப் பிரித்து தேவையின் அடிப்படையில் அணுகு தல். 2. தனியாகப் பிரித்திருத்தல்

அல்லது மற்றவற்றிலிருந்து தனிப் படுத்தல்.

ISO OSI : ஐஎஸ்ஓ ஓஎஸ்ஐ: International Standards Organisation Open Systems Interconnection என்பதன் குறும் பெயர். 1970-களில் உருவாக்கப்பட்ட இதன் மாதிரியைக் கொண்டு பல்வேறு உற்பத்தியாளர்கள் மற்றும் நிர் வாகங்களின் தகவல் பரப்பு அமைப்பு களை இணைப் பதற்கான விதிமுறைகள் வழங்கப் படுகின்றன. தகவல் பரப்புதலின் பல்வேறு நிலைகளை விளக்கும் எழுநிலை மாதிரியை ஓஎஸ்ஐ பயன் படுத்துகிறது.

Isochronous : ஐசோக்ரனஸ்: காலம் சார்ந்தது. உண்மை நேர குரல், ஒளி மற்றும் டெலிமெட்ரி போன்றவை ஐசோக்ரனஸ் தகவல்களுக்கு எடுத்துக்காட்டு.

Isometric view : ஐசோமெட்ரிக் கண்ணோட்டம் : கணினி வரைகலையில் மூன்று பரிமாணங்களையும் சம விகிதங்களில் காட்டும் முப்பரி மாணப் பொருளின் படம். ஐசோ மெட்ரிக் பார்வையில் உண்மையான தோற்றம் காட்டப்படுவதில்லை.

Isotropic : ஐசோட்ரோப்பிக் : பொருள்களின் தன்மையைக் குறிப்பிடுகிறது. அனுப்புதல் வேகம் போன்றவை எந்தத் திசையில் அளிக்கப்பட்டாலும் ஒன்றாகவே இருப்பது.

ISP : ஐஎஸ்பி: Internet Service Provider என்பதன் குறும்பெயர். இணைய இணைப்புகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் நிறுவனம். 14.4 கிலோ துண்மிகள் ஒரு நொடிக்கு என்ற வேகத்திலிருந்து முழு டி.ஐ. இணைப்புகள் வரை இணைப்பு களை ஐஎஸ்பிக்கள் வழங்கும்.

ISR : ஐஎஸ்ஆர்: Information storage and retrieval என்பதன் குறும்பெயர்.

Italic : சாய்வெழுத்து : சாய்வான எழுத்துகளைக் கொண்ட ஒரு எழுத் தச்சு அமைப்பு.

Item : உருப்படி.

Iterate : திரும்பச் செய்; பன்முறை செய்: ஆணைத்தொடர் கட்டுப்பாட்டில் தானியங்கியாக திரும்பச் செய் தல். ஒரு முடிவு செய்யப்பட்ட நிறுத் தம் அல்லது பிரிவு நிலை வரும்வரை அதே முறையில் செயலாக்க நிலை களைச் செய்தல்.

Iterative : பன்முறை செய்தல் : திரும்ப வருதல். விரும்பும் முடிவுக்கு நெருங்கி வரும் நடைமுறைக்காக அடுத்து வரும் வலியுறுத்தம் அல்லது திரும்ப வரும் சமயத்தில் பயன் படும்.

Iterative operation : திரும்பவரும் இயக்கம் : ஆணைகள் அல்லது செயல் முறைகளை அடுத்தடுத்து செய்ய வேண்டிவரும் இயக்கம்.

IZE : ஐஇசட்இ : பெர்சாஃப்ட் நிறுவனம் உருவாக்கிய பிசி (PC). சொல் மேலாண்மை அமைவு. முக்கிய சொற்களை நாமாக நுழைக்கலாம் அல்லது Dear என்ற எழுத்துக்கும் காற்புள்ளிக்கும் இடையில் ஒரு பெயரைச் சேர்ப்பது போன்று ஒரு பட்டியல் அல்லது சூழ்நிலையிலிருந்து உருவாக்கலாம்.

J

Jack : முளை : ஒரு கம்பி அல்லது மின்சுற்றின் கம்பிகள் இணைக்கப் பட்டுள்ள இணைக்கும் சாதனம். 'ஃபிளக்' பொருத்துவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டது. 'சாக்கெட்' என்றும் அழைக்கப்படுகிறது.

Jacquard loom : ஜேக்குவார்ட் எந்திரத் தறி : 19ஆம் நூற்றாண்டு நெசவுத் தொழிலையே மாற்றிய தானியங்கி நெசவு எந்திரம். எதிர் கால கணக் கீட்டுப் பட்டியலிடும் எந்திரங் களுக்கு வழிகாட்டி. ஃபிரெஞ்சுக்கார ரான பட்டு நெசவு செய்யும் ஜோசப் மேரி ஜேக்வார்டு (1752 - 1834) உருவாக்கிய இப்பொறி துளையிட்ட அட்டைகளைப் பயன்படுத்தி இயக் கங்களைக் கட்டுப்படுத்துகிறது. ஏற் கனவே இது புழக்கத்தில் இருந்தா லும், உடனடியாக சிக்கலான வடி வமைப்புகளை உருவாக்க ஜேக்கு வார்டின் விசைத்தறி மிகவும் உதவி யாக உள்ளது.

Jacket : உறை : நெகிழ்வட்டை (டிஸ்கெட்) வைத்துக் கொள்ளும் உறுதியான காகித உறை.

Jacquard Joseph Marrie : ஜேக்கு வார்ட் ஜோசப் மேரி: 'ஜேக்குவார்ட் லூம்' என்னும் நெசவு எந்திரத்தை உருவாக்கியவர். நெய்யப்படும் வடி வங்களை தானாகக் கட்டுப்படுத்த துளையிட்ட அட்டைகளின் வரிசை இதில் முதன் முறையாகப் பயன் படுத்தப்பட்டது.

Jaggies : பிசிறுகள் : கணினி வரை கலை காட்சித் திரையில் படிகளா கவோ அல்லது வட்டங்கள், வளைவு களில் வாள் பல்லாகவோ இருப்பது.

Jargon : குழூஉச் சொல்: ஒரு துறை யில் பணியாற்றுபவர்கள் அத்துறை யில் உள்ள பொருள்கள் /வேலை களை விவரிக்கப் பயன்படுத்தும் சொற்கள். மற்றவர்களுக்குப் புரி யாது.

Java : ஜாவா : 'சி ++' மொழியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட புதிய கணினி மொழி. சன் மைக்ரோ சிஸ்டம்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்த ஜாஸ்லிங் என்பவர் உருவாக்கியது. எந்தக் கணினியிலும் எந்த பணித் தளத்திலும் இயங்க வல்லது. இணை யப் பயன்பாடுகளுக்கு ஏற்றது. பிற கணினி அமைப்புகளுக்கு எந்தவித சேதமும் இல்லாமல் இயக்கங் களைச் செய்யக் கூடிய வகையில் கட்டுப்படுத்துவதால் இதை "பாது காப்பான மொழி" என்று கூறலாம்.

Javelin Plus : ஜாவ்லின் பிளஸ்: இன்ஃபர்மேஷன் ரிசோர்சஸ் நிறுவனம் உருவாக்கிய பிசி விரிதாள் ஆணைத்தொடர் வரிசை, பத்தி எண்களுக்குப் பதிலாக பெயர் களைப் பயன்படுத்தி அறைகளை அடையாளம் காணவும், தகவல் களைத் தொகுக்கவும் செய்கிறது.

JCL : ஜேசிஎல்: Job Control Language என்பதன் குறும் பெயர்.

JES : ஜேஇஎஸ்: Job Entry System என்பதன் குறும்பெயர். செய்து முடிப்பதற்காக வேலைகளையும் பட்டியல்களையும், ஏற்றுக் கொள் ளும் இயக்க அமைப்பில் ஒரு பங்கு.

Jet set willy : ஜெட் செட் வில்லி: ஸ்பெக்ட்ரம் ஹோம் கம்ப்யூட்டரில் பயன்படுத்தக்கூடிய ஒரு மென் பொருள் விளையாட்டு.

Jitter : தடுமாற்றம்: ஒரு சமிக்ஞையில் சிறு நிலையற்ற தன்மை. ஒளிக் (வீடியோ) காட்சித் திரையில் வரும் சமிக்ஞைகளுக்கு இஃது குறிப்பாக சொல்லப்படுகிறது.

JK technosoft : ஜேகே டெக்னோ சாஃப்ட் : ஒரு கணினி ஆலோசனை மற்றும் மென்பொருள் நிறுவனம். ஜேகே தொகுதியைச் சேர்ந்தது.

Job : முழுச் செயற்பாடு ; பணி: ஒரு கணினிக்கான வேலை அலகின் குறிப்பிட்ட பணிகளின் தொகுப்பு. ஒரு ஆணைத்தொடர் அல்லது தொடர்புள்ள ஆணைத் தொடர்களின் தொகுதி ஒரு அலகாகப் பயன்படுத்தப்படுகிறது.

Job class : வேலை பிரிவு: செயல் படும்போது தேவைப்படும் கணினி வசதிகளைக் குறிப்பிடும் வேலை பற்றிய விளக்கம்.

Job card : வேலை அட்டை : ஒரு வேலையின் ஆரம்பத்தைக் காட்டும் ஜே.சி.எல் JCL சொற்றொடர் உள்ள அட்டை.

Job control language : வேலைக் கட்டுப்பாட்டு மொழி : ஜேசிஎல்: கால அளவுகள் போன்ற வேலையின் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட கணினி அமைப்பின் வேலையை வரையறுக்கும் மொழி.

Job control programme : வேலைக் கட்டுப்பாட்டு ஆணைத் தொடர்: வேலையின் ஓட்டத்தைக் கட்டுப் படுத்தும் நிரல்களின் தொகுதியைக் கொண்ட ஆணைத் தொடர்.

Job control statement : வேலைக் கட்டுப்பாட்டுச் சொற்றொடர் : ஒரு வேலையின் ஒரு அம்சத்தை மட்டும் வரையறுக்கும் வேலைக் கட்டுப் பாட்டு மொழியில் எழுதப்பட்ட ஒரு சொற்றொடர்.

Job number : வேலை எண் : ஒரு வேலைக்குக் கொடுக்கப்பட்ட அடையாள எண்.

Job processing : வேலைச் செயலாக்கம் : கணினியில் வேலைகளைக் கையாண்டு செயலாக்கம் செய்தல்.

Job queue : வேலை வரிசை : கணினியில் அப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் தகவல் மற்றும் ஆணைத் தொடர்களின் தொகுதி. பெரும் பாலான இயக்க அமைப்புகளில், கணினியின் கட்டுப்பாட்டில் ஒவ்வொரு வேலையையும் வரிசைப் படுத்தி, அதில் மிகப் பழைய வேலையை அதன் முன்னுரிமைப் படி செய்யும். போதிய மூலாதாரங்கள் இல்லாததால் செயல்படுத்தப் படாத வேலைகள் தான் விதி விலக்கு.

Job scheduler : வேலை நிரல் படுத்துபவர்; வேலை முறைப்படுத்தி : ஒரு பெரிய கணினி நிறுவனத்தை நடத்துவதில் கணினி இயக்குபவர்களுக்கு உதவுபவர்.

Job stream : வேலை ஓட்டம்; வேலை ஓடை : இயக்க அமைப்புக்கு உள்ளீடு. ஒன்று அல்லது மேற்பட்ட வேலையாக இருக்கலாம்.

Joggle : குழை : குறிப்பிட்ட வரிசை முறையில் வரிசைப்படுத்துவதற்காக துளையிட்ட அட்டைகளைக் குழைத்தல்.

John McCarthy : ஜான் மெக்கார்த்தி: டார்ட்மவுத் மாநாடு நடத்தி 1956 இல் செயற்கை நுண்ணறிவு'Artificial Intelligence என்ற பெயரை உருவாக்கியவர்.

Join : இணை : உறவுடை தகவல் தள மேலாண்மையில், சில நிபந்தனைகளின் பேரில் ஒரு கோப்புடன் வேறொன்றை இணைத்து, இணைக்கப்பட்ட கோப்புகளில் இருந்து மூன்றாவது கோப்பை உருவாக்குதல். சான்றாக, ஒரு வாடிக்கையாளரின் கோப்புடன் ஆணை கோப்பை

இணைத்து, குறிப்பிட்ட பொருளை வாங்கிய அனைத்து வாடிக்கையாளர்களின் பதிவேடுகளைக் கொண்ட கோப்பினை உருவாக்க லாம்.

Jobs, Steve : ஜோப்ஸ் ஸ்டீவ்: ஆப்பிள் கணினி நிறுவனத்தினை உருவாக்கியவர்களில் ஒருவர். ஆப்பிள் மெக்கின்டோஷ் உள்ளிட்ட பல நுண் கணினி அமைப்புகளை உருவாக்கியவர்.

Job-to- Job transition : ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்கு மாற்றல் : ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்காகக் கணினியைத் தயார் செய்து ஒரு ஆணைத் தொடரையும் அதன் தொடர்பான கோப்புகளையும் கண்டுபிடிக்கும் செயல்முறை.

Job turn around : வேலை முடித்துத் தரல் : ஒரு வேலையைக் கணினி அமைப்பிடம் கொடுத்ததிலிருந்து அதன் அச்சிடப்பட்ட வெளியீடு அந்த வேலையைக் கொடுத்தவருக்குப் போய்ச் சேரும்வரை ஆகும் நேரம்.

Josephson junction : ஜோசப்சன் இணைப்பு : சூப்பர் குளிர் மின்சுற்றுகளின் பொருள்களைக் கொண்டு உருவாக்கப்படும் அதிகத் திறனுள்ள தகவல் சேமிப்பு அமைப்பு. க்ரையோ மின்னணு சேமிப்பு அமைப்பு ஆராய்ச்சி நிலையில் உள்ளது.

JOVIAL : ஜோவியல் (ஒரு கணினி மொழி) : Jules Own Version of the International Algorithmic Language என்பதன் குறும்பெயர். அறிவியல், கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு சிக்கல்களில் செயல்படுவதற்கென்றே உருவாக்கப்பட்ட ஆணைத் தொடர் மொழி. அமெரிக்க விமானப்படையில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

Joystick : இயக்கப்பிடி : மின்னியந்திர விசை. அதை இயக்கும் போது சுட்டியை (கர்சரை) நகர்த்துகிறது. ஒளிக்காட்சி விளையாட்டுக்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது. கணினியுடன் கம்பியால் இணைக்கப்படுகிறது.



இயக்கப்பிடி
(Joystick)

Joyswitch : நிலை மாற்றுப்பிடி : ஜாய்ஸ்டிக் போன்ற உள்ளீட்டு - வெளியீட்டுச் சாதனம். இதை எண் திசைகளில் மேல், கீழ், வலது, இடது மற்றும் நான்கு குறுக்குத் திசைகளிலும் எப்படி வேண்டுமானாலும் இயக்கலாம்.

JPEG : ஜேபெக் : Joint Phoptographic Experts Group என்பதன் குறும் பெயர். ஒளிக்காட்சி உருவங்களை காட்சி - காட்சியாகச் சுருக்குவதற்கான விதிகளை உருவாக்கியவர்கள். ஐ.எஸ்.ஓ /சிசிஐடிடி தரம். 20 முதல் 30 : 1 என்ற அளவில் இழப்பின்றி உருவங்களைச் சுருக்க உதவுகிறது. உருவத்தில் இழப்புகளை ஏற்றுக் கொள்வதனால் 50 : 2 முதல் 100:1 வரை அமைக்கலாம். வன்பொருள், மென் பொருள் இரண்டிலும் பயன் படுகிறது.

JUG : ஜக் : Joint Users Group என்பதன் குறும் பெயர். இலக்கமுறை கணினி பயன்படுத்துவோர் குழுக்களின் ஓர் அமைப்பு.

Juke boxes : ஜுக் பெட்டிகள் : நவீன ஜுக் பெட்டிகள் நுண் கணினி சார்ந்த அமைப்புகள். இதன் இசைத் தட்டை இயக்கும் அமைப்பின் கட்டுப்பாடு, தொலைவில் ஏற்றப்பட்டுள்ள நாணயம் மூலம் இயங்கும் சுவர் பெட்டிகளில் உள்ளது.

Julian number : ஜூலியன் எண் : கணினி அமைப்பின் உள்ளே இருக்கும் காலண்டரின் வடிவம். ஜூலியன் தகவல் அமைப்பில் ஆண்டையும் ஆண்டில் கடந்து போன நாட்களையும் குறிப்பிடும். 86 - 029 என்பது 1986ஆம் ஆண்டின் 29 -ஆம் நாள்.

Jump : குதி; தாண்டல்; தாவல் : ஒரு கணினியில் ஆணைகளை இயக்கும் வழக்கமான வரிசையிலிருந்து விலகுதல். branch and transfer என்பதற்கு உடன்பாட்டுச் சொல்.

Junction : சந்திப்பு; சந்தி : இரண்டு எதிரெதிர் மாதிரியான அரைக் கடத்திப் பொருள்கள் சேரும் டையோடு அல்லது டிரான்சிஸ்டரின் பகுதி.

Junk : குப்பைக் கிடங்கு; கூளம் : ஒரு தகவல் தொடர்புக் கம்பியில் வரும் குழப்பமான தகவல். தொலை அமைப்பில் சரியான தகவல் தொடர்புகள் ஏற்படுத்தப்படவில்லையென்றால், தாறுமாறான பொருளற்ற எழுத்துகள்தாம் திரையில் தோன்றும். பார்க்க - garbage.

Justification : ஒழுங்குபடுத்தல்; முறைப்படுத்தல்; நேர்ப்படுத்தல்; வரிசையாக்கல் : இடது அல்லது வலது பக்கமாக எழுத்துகளை வரிசைப்படுத்தி, சரிசெய்து, இடம் மாற்றி ஒரு குறிப்பிட்ட அமைப்பில் வைத்தல். செய்திகளை இடது அல்லது வலது புறத்தில் ஒழுங்குபடுத்தல்.

Justify : ஒழுங்குப்படுத்து; நேர்த்தியாக்கு : ஒரு புலத்தில் எழுத்துகளை வரிசைப்படுத்தல். வலது புறத்தில் ஒழுங்குபடுத்துவதனால் கடைசி எழுத்தை, கடைசி முக்கியத்துவ எழுத்தை வலதுபுறக் கடைசி புலத்தில் அமைக்க வேண்டும். அகர வரிசை பட்டியல்கள் பொதுவாக இடது புறம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.

jullian date : ஜூலியன் தேதி : ஜனவரி 1 முதல் துவங்கும் தொடர் எண்ணின் மூலம் மாதம், நாட்களைக் குறிப்பிடுதல். சான்றாக, பிப்ரவரி 1 என்பது ஜூலியன் 32 ஆகும்.

Jumper (Jump Lead) : ஜம்பர் : Jump Lead என்பதன் குறும்பெயர். இரண்டு அல்லது மேற்பட்ட வன் பொருள் இணைப்புகளை இணைக்கும் தற்காலிகக் கம்பி. கோளாறு கண்டறியவும் மாற்று வசதிகளை



ஜம்பர் (Jumper)

அளிக்கவும் இவற்றை பயன்படுத்துகிறார்கள். Jumper என்ற சொல் தகவல் தொடர்பு தொழிலில் இருந்து கடனாகப் பெறப்பட்டது.

K

K : கே : 1. கிலோ என்பதன் சுருக்கம். பதின்ம எண்ணில் 1000 என்பதைக் குறிப்பிடும். சான்றாக 100K ch/s என்றால் ஒரு நொடிக்கு 100,000 எழுத்துகள் அளவு படிக்கும் வேகம். 2. சேமிப்புத் திறனில் 2-ன் 10 மடங்கு என்பது பதின்ம எண் முறையில் 1024. 8K என்பது 8192 அதாவது 8 x 1024.

Kale : கேல் : கேல் கன்சல்டன்ஸ் நிறுவனம் இந்தியாவின் முன்னணி மென்பொருள் நிறுவனங்களில் ஒன்று.

Kansas city standard : கன்சாஸ் நகர தர நிருணயம் : குறைந்த வேக ஒளிப் பேழை (கேசட்) சேமிப்பு வடிவம்.

Karnaugh map : கார்னாக் வரைபடம்: உண்மைப் பட்டியலின் இரு பரிமாண அமைப்பு.

Kb : கேபி : kilo byte என்பதன் குறும் பெயர்.

Kbits/Sec (KiloBits per SECond : கேபிட்ஸ்/செக்: Kilobits per Second என்பதன் குறும்பெயர். ஒரு நொடிக்கு ஆயிரம் துண்மிகள்.

KBps, Kbps (KiloBytes per Second, KiloBits per Second : கேபிபிஎஸ் : Kilobytes per Second, Kilobits per Second என்பதன் குறும்பெயர்கள். ஒரு நொடிக்கு ஆயிரம் எட்டியல்கள், ஆயிரம் துண்மிகள்.

KBS : கேபிஎஸ் : ஒரு நொடிக்கு ஒரு கிலோ எட்டியல்கள் (1024 எட்டியல் கள்)

K-Byte (Kbyte or KB) : கே-எட்டியல் கள் : Kbyte or KB என்பது ஏறக்குறைய ஒரு ஆயிரம் எட்டியல்கள். துல்லிய மாக 2^{10} அல்லது 1,024 எட்டியல்கள்.

Kbytes/sec (Kilobytes per second) : கேபைட்ஸ்/செக் : Kilobytes per Second என்பதன் குறும் பெயர். ஏறக்குறைய ஒரு நொடிக்கு ஓராயிரம் எட்டியல் கள்.

Kc : கேசி : ஒரு நொடியில் ஆயிரம் எழுத்துகள். தகவல் மாற்றல் இயக் கங்களின் விகிதத்தைக் குறிப்பிடப் பயன்படுகிறது.

KCS : கேசிஎஸ் : ஒரு நொடிக்கு ஆயிரம் எழுத்துகள் அல்லது கிலோ எட்டியல்கள் என்பதன் சுருக்கம்.

KEE : கேஇஇ : Knowledge Engineering Environment என்பதன் குறும்பெயர்.

Keep-out areas : தவிர் பரப்புப் பகுதிகள் : அச்சிட்ட மின்சுற்று வெளி அமைப்பில் பயன்படுத்துவோர் குறிப்பிடும் பகுதிகள். இதில் உறுப்புகள் அல்லது மின்சுற்றுப் பாதைகள் குறிப்பிடக்கூடாது. காட்/காம் முறையிலும் இதைத் தவிர்க்க வேண்டும்.

Kelvin : கெல்வின் : செல்ஷியஸ் டிகிரியில் குறிப்பிடப்படும் எஸ்.ஐ. மெட்ரிக் அமைப்பின் வெப்ப நிலை அளக்கும் அலகு.

Kemeny John : கெம்னை ஜான் : 1964இல் டார்ட்மவுத் கல்லூரியில் தாமஸ் குர்ட்சுடன் சேர்ந்து 'பேசிக்' என்னும் கணினி மொழியை உருவாக்கினார். கற்பதற்கு எளியது. பயன்படுத்துவதற்கு எளியது. அல்ஜிப்ரா முறை ஆணைத் தொடர் மொழி பயன்படுத்த எளியது. டார்ட்மவுத் காலப் பங்கீட்டு அமைப் பையும் உருவாக்கினார்.

Kelvin, William Thomson (1824-1907): கெல்வின், வில்லியம் தாம்சன் (1824-1907) : ஸ்காட்லாந்து கணித மேதை. மாறுபாட்டு அலசலை எவ்வாறு உருவாக்குவது என்பதற் கான கொள்கைகளை 1875இல் விவரித்தவர்.

Kermit : கெர்மிட் : கணினிகளுக்கிடையில் கோப்புகளை மாற்றுவதற்கான அனுப்பல் விதிமுறை. பிழைகளைச் சோதித்தலும், பிழையானவற்றைத் திருப்பி அனுப்புதலும் இதில் அடங்கும். கொலம்பியா பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்டது. இரைச்சலான வழித்தடத்திலும் துல்லியமாக அமைப்பை ஏற்றது. சிறு மற்றும் பெரு கணிணிகளுக்குப் புகழ்பெற்றது. 7 பிட் அஸ்கி அமைப்புகளில் துண்மி சார்ந்த மாற்றல்களுக்கு புகழ் பெற்றது.

Kernel : கரு; உருவாக்க மையம் : கணினி பணிகளின் மிகப் பழைய வற்றைச் செயல்படுத்தும் இயக்க அமைப்பிலுள்ள ஆணைத்தொடர் தொகுதி.

Kerning : நெருக்கல் : குறிப்பிட்ட எழுத்துகளின் இணைகளுக்கு இடையே உள்ள கூடுதல் வெண்மை இடைவெளியைக் குறைப்பது.

KES : கேஇஎஸ் : Knowledge Engineering System என்பதன் குறும்பெயர்.

KET : கெட் : Kharagpur Expert Tool என்பதன் குறும்பெயர்.

Key : விசை; திறவு; விரற்கட்டை ; குமிழ்; சாவி : 1. ஒரு பதிவேட்டை அடையாளம் காட்டும் புலங்கள் அல்லது கட்டுப்பாட்டு புலம். பார்க்க Primary key. 2. வகைப்படுத் தப்பட்ட வரிசையில் ஒரு பதிவேட்டின் நிலையினை முடிவு செய்யும் புலம். பார்க்க Major sort key, Minor sort key. 3. தட்டச்சுப் பொறி அல்லது காட்சித் திரை விசைப் பலகை போன்ற கையால் இயக்கும் எந்திரங் களில் உள்ள விசை. 4. விசைப் பலகை மூலம் ஒரு கணினி அமைப்பில் தகவல்களை நுழைப்பது.

Keyboard : விசைப் பலகை;தட்டச்சுப் பலகை; விரற்கட்டைப் பட்டடை : கணினியின் சேமிப்பகத்திற்குள் தகவல்களையும், ஆணைத் தொடரையும் விசை மூலம் அனுப்பும் உள்ளீட்டுச் சாதனம்.

Key boarding : விசைப் பலகையிடல்: உள்ளீட்டு ஊடகத்திலோ அல்லது நேரடியாக கணினியிலோ விசைப் பலகையில் தட்டச்சு செய்வதன் மூலம் தகவல்களையும் ஆணைத் தொடர்களையும் நுழைக்கும் செயல் முறை. கணினி முனையம் அல்லது சொல் செயலிகளில் விசைப் பலகை களைப் பயன்படுத்துவது போன்றது.

Key board terminal : விசைப் பலகை முனையம் : ஒரு கணினி அமைப்புக் குள் தகவல்களை நுழைக்க அனு மதிக்கும் தட்டச்சு போன்ற விசைப் பலகை.

Key board to disk system : விசைப் பலகையிலிருந்து வட்டுக்கான அமைப்பு : விசைப்பலகையில் தகவலைத் தட்டச்சு செய்வதன் மூலம் தகவல்கள் நேரடியாக வட்டுக்குள் நுழையும் தகவல் நுழைவு அமைப்பு.

Key board to tape system : விசைப் பலகையிலிருந்து நாடாவுக்கான அமைப்பு : விசைப் பலகையில் தகவல்களைத் தட்டச்சு செய்து நேரடியாக நாடாவுக்குள் நுழைக்கும் தகவல் நுழைவு அமைப்பு.

Key bounce : விசை திரும்புதல் : சில மோசமாக வடிவமைக்கப்பட்ட விசைப்பலகையின் தன்மை. விசையை ஒவ்வொரு முறை அழுத் தும்போதும் எழுத்து இரண்டு தடவைகள் பதிவாகும்.

Key cap : விசை மூடி : விசைப் பலகை விசையின் மேல் பகுதி. மாற்றக்

கூடியது. பொதுவாகப் பயன்படுத் தப்படும் குறியீடுகளை அடையாளம் காண சிறப்பு விசை மூடிகளைக் கொண்டு மாற்றியமைக்கலாம்.

Key chord : விசைக் கயிறு : இரண்டு அல்லது மேற்பட்ட விசைகளை ஒரே நேரத்தில் அழுத்தி தனி நுண்ணாய் வுக் (ஸ்கேன்) குறியீட்டை உருவாக்கு தல்.

Key click : விசை (சொடுக்கு) ஓசை : ஒரு விசையை அழுத்தியவுடன் கேட்கக் கூடிய ஓசை. இதை மாற்றியமைக்கலாம்.

Key command : விசை ஆணை : கணினியில் கட்டளைகளாகப் பயன் படுத்தப்படும் விசைத் தொகுதி.

Key data entry device : விசைத் தகவல் நுழைவுச் சாதனம் : கணினி கருவி ஏற்றுக் கொள்ளும் வகையில் தகவல் களைத் தயார் செய்யப் பயன்படுத் தும் விசைத் துளை எந்திரங்கள், விசையிலிருந்து வட்டுக்கான அலகு கள், விசையிலிருந்து நாடாவுக்கான அலகுகள்.

Key entry : விசை நுழைவு : விசைப் பலகை மூலம் கைகளால் தகவல் களை அனுப்புவது.

Key field : விசைப்புலம் : ஒரு பதிவேட்டிலிருந்து மற்றொன்றுக்கு வேறுபாடு காட்டும் புலம்.

Key in : விசை நுழை : விசைப் பலகை யில் தட்டச்சு செய்வதன் மூலம் தகவல்களை நுழைத்தல்.

Key map : முக்கிய வரைபடம் : சில குறிப்பிட்ட மிடி (MIDI) செய்தி களுக்கு முக்கிய மதிப்புகளை மாற் றித் தரும் மிடி ஒட்டு வரைபட நுழைவு. சான்று: குறிப்பிட்ட ஆக்டேவில் மெலடி இசைக் கருவி அல்லது பெர்குஷன் கருவியை இசைக்கப் பயன்படுத்தப்படும் விசைகள்.

Key pad : விசை அட்டை; எண் தளம் : 0 - 9 வரையிலான பதின்ம இயக்க விசைகளையும், இரண்டு சிறப்புப் பணி விசைகளையும் பயன்படுத்தும் உள்ளீட்டுச் சாதனம். தனி சாதன மாகவும் பயன்படுகிறது அல்லது சிக்கனத்தின் விளைவான Qwerty விசைப்பலகையின் வலது புறத் திலும் இடம்பெறுகிறது.

Keypunch : விசைத்துளை; துளைப்பி: கணினி படிப்பியில் படிப்பதற்காக தகவல்களைக் குறிப்பிடும் துளை யிடும் அட்டைகளில் துளையிட்டுப் பயன்படுத்தப்படும் விசைப்பலகை இயக்கும் சாதனம்.

Key punch operator : விசைத்துளை இயக்குபவர் : KPO என்று சுருக்கி அழைக்கப்படும். விசைத்துளை எந்திரத்தை இயக்கும் நபர். கணினி யில் தகவல்களை நுழைக்கும் ஆரம்ப கால முறைகளில் இதுவும் ஒன்று. விசைத்துளை எந்திரம் தட்டச்சு செய்யப்பட்ட நுழைவுகளை காகித அட்டைகளில் தொடர்ச்சியாக குறியீடாக மாற்றியும் மின்-எந்திர அட்டை படிப்பியில் இது படிக்கப் படும். விசைத்துளை எந்திரங்கள் இப்போது அரிதாகவே பயன்படுத் தப்படுகின்றன. நுழைவுகளைச் செய்ய வேகமான ஊடகங்கள் வந்து விட்டன. என்றாலும், விசைத்துளை இயக்குபவர் என்ற பதம் நிலைத்து விட்டது.

Key punching : விசைத்துளையிடல் : மூல தகவல்களை துளையிடும் அட்டைகளில் பதிவு செய்யும் செயல் முறை. இயக்குபவர் மூல ஆவணங் களைப் படித்து விசைத்துளை எந்திரங்களில் விசையை அழுத்தி

மூல ஆவண தகவலை துளையிட்ட அட்டைகளாக மாற்றுகிறார்.

Key stations : முக்கிய நிலையங்கள் : பலர் பயன்படுத்தும் அமைப்புகளில் தகவல் உள்ளீட்டுக்குப் பயன் படுத்தப்படும் முனையங்கள்.

Key stroke : விசை அழுத்தம்; சாவிப் பதிவு : ஒரு விசைப்பலகையில் தனி விசை அல்லது விசைகளின் இணைப்பை அழுத்தும் செயல். பல தகவல் நுழைவு வேலைகளில் வேகத்தை அளிக்க ஒரு நிமிடத்திற்கு எத்தனை விசை அழுத்தம் என்ற அலகைப் பயன்படுத்துகிறார்கள்.

Key switch : விசைப் பொத்தான் : ஒரு விசைப் பலகையில் உள்ளீடு விசை யின் பொத்தான் பகுதி.

Key-to-address : விசையிலிருந்து முகவரிக்கு.

Key to address transformation : விசையிலிருந்து முகவரிக்கு மாற்றம் : விசைப் பலகையில் தகவல்களை தட்டச்சு செய்தால் அவை நேரடியாக வட்டில் பதிவு செய்யப்படுகின்ற - பெரும்பாலும் நெகிழ்வட்டில் நடைமுறையைக் குறிப்பிடும் சொல்.

Key-to-disk unit : விசையிலிருந்து வட்டுக்கு அலகு : வளையும் வட்டுக் குள் தகவல்களை நேரடியாக சேமிக் கப் பயன்படும் விசைப் பலகை அலகு.

Key-to-tape unit : விசையிலிருந்து நாடாவுக்கான அலகு : தகவல்களை காந்த நாடாவுக்குள் நேரடியாக சேமிக்கப் பயன்படும் விசைப் பலகை அலகு.

Key verification : விசை சோதித்தல்.

Key verify : விசை சோதிப்பு : துளை அட்டை எந்திரத்தை சோதிப்பவ ராகப் பயன்படுத்துல். துளை அட்டையில் துளையிட வேண்டிய தகவல் சரியாக துளையிடப்பட்டதா என்பதை சோதிக்க விசைப் பலகையை இந்த எந்திரம் பயன் படுத்துகிறது. துளையிட்ட அட்டை யும், அழுத்தும் விசையும் ஒத்துப் போகவில்லையென்றால் சரியாக உள்ளது என்பது பொருள்.

Key word : முக்கியச் சொல்;உயிர் நிலைச் சொல் : 1. ஒரு ஆவணத்தின் உள்ளடக்கத்தை விளக்கும் அதன் தலைப்பில் உள்ள முக்கிய சொற் களில் ஒன்று. 2. ஆணைத்தொடர் மொழி சொற்றொடரில் உள்ள ஆரம்ப உறுப்பு. சான்றாக, LET, GOTO, INPUT பேசிக் ஆணைத் தொடர் மொழியில் வருவது. 3. ஒரு கணினி ஆணைத்தொடரில் சிறப்புப் பொருள் உள்ள சொற்றொகுதி. சான்று, 'cat' என்ற ஆணை யூனிக்ஸில் ஒரு பட்டியலை உருவாக்கும்.

Key-word-in-context : சூழ்நிலையில் முதன் சொல் :

Keyb : கீபி : பயன்படுத்தப்படும் விசைப் பலகையைப் பற்றிய தகவலைக் கொண்ட டாஸ் (DOS) கட்டளை.

Keyboard buffer : விசைப் பலகை இடை நினைவகம் : நினைவகத்தில் உள்ள தற்காலிக சேமிப்புப் பகுதி. விசைகளைத் தட்டச்சு செய்தவுடன் அவற்றை உடனடியாக கணினி ஏற்காவிட்டாலும், தட்டச்சு செய்த விசைகளை கண்காணிக்க உதவு கிறது. 15 - எழுத்து வட்ட வரிசை யான இதில் உள்வரும் எழுத்துகளை விசைப் பலகை தடுக்கிறது. விசைப் பலகையிலிருந்து வரும் விசைகளை - ஆணைத் தொடர் அவற்றை ஏற்கும் வரை - வைத்திருக்கும் நினைவக

வங்கி அல்லது ஒதுக்கப்பட்ட நினைவுப்பரப்பு. இடைநினைவகம் நிறைந்து விட்டால் விசைப்பலகையில் 'பீப்' ஓசை வரும்.

Keyboard controller : விசைப்பலகை கட்டுப்பாட்டுப் பொறி : அடித்த விசைகளைக் கண்காணித்து அழுத்தப்படும் போது தகவல் துண்மிகளை உருவாக்கும் விசைப் பலகை.

Keyboard enhacer : விசைப்பலகை திறன் கூட்டி : எழுத்துகளின் சரத்தை நுழைத்து, சேமித்து பின்னர் சுருக்கப் பெயருடன் இவ்வெழுத்துகளை ஒன்று அல்லது இரண்டு விசை அடிப்புகளின் மூலம் மீண்டும் அழைக்கப்படுவதை அனுமதிக்கும் ஆணைத்தொடர்.

Keyboard initialisation : விசைப் பலகை ஆரம்பித்தல் : பல கணினிகளை இயக்கத் துவங்கும்போது செய்யப்படும் நடைமுறை. ரோம் பயாஸ் நினைவகம் இதைத் துவக்கி சரியான விசைப்பலகை மின்னிணைப்பு பெறப்பட்டதா , சரியான ஸ்கேன் குறியீடுகள் இணைக்கப் பட்டதா என்பதை சோதிக்கிறது. NUM LOCK LED வருமானால் சரியான விசைப்பலகை ஆரம்பிக்கப்பட்டதாகப் பொருள்.

Keyboard interrupt : விசைப்பலகை குறுக்கீடு : ஒரு விசையை அழுத்தும் போதோ அல்லது விடும்போது செய்யப்படும் வன்பொருள் குறுக்கீடு. விசைப்பலகை நுண் செயலகத்தில் இருந்து வரும் நுண்ணாய்வு (ஸ்கேன்)க் கோடுகளை ஆணைத் தொடர் பயன் படுத்தக்கூடிய குறியீடுகளாக மாற்றி விசைப்பலகை இடைநினைவகத்தில் இக்குறியீடுகளை நுழைக்கிறது.

Keyboard processor : விசைப் பலகைச் செயலகம் : விசை அடிப்புகளை பொருத்தமான எழுத்துக் குறியீடுகளாக மாற்றும் விசைப் பலகையின் மின் சுற்று.

Keyboard skills : விசைப்பலகை திறன்கள் : ஒரு கணினி விசைப் பலகையை திறமையாகவும், சிறப்பாகவும் பயன்படுத்தும் திறன். கணினி தொழில் புரிபவர்களுக்கு விசைப் பலகை திறன்கள் இன்றியமையாதவை என்று கருதப்படுகிறது. அன்றாட வாழ்க்கையிலும் இது தேவை என்பதால் ஒவ்வொருவருக்கும் இது வாழ்க்கைத் திறனாக தேவைப்படுகிறது.

Keyboard template : விசைப்பலகை படிம அச்சு அட்டை : கணினி விசைப் பலகையின் விசைகளில் பொருந்தும் ஒரு செயற்கை இழைப்படிவம். இதன் மூலம் குறிப்பிட்ட மென் பொருள் பயன்பாடுகளில் விசைப் பணிகளைச் செய்ய எளிதான, விரைவான குறிப்பு. விசைப்பலகை படிம அச்சு அட்டைகள் மென் பொருள் தொகுப்புகளின் பகுதியாக இப் போது அதிகமாக வழங்கப்படுகின்றன.

Keyboard, sys : விசைப்பலகை, சிஸ் : விசைப் பலகையின் இயக்கத் தைக் கட்டுப்படுத்தும் இயக்கிச் சாதனம்.

Keyboarder : விசைப்பலகை அமைப் பவர் : தட்டச்சு, சொல் செயலி அல்லது கணினி முகப்பின் விசைப் பலகையைப் பயன்படுத்துதல்.

Keyboarding : விசைப்பலகையமைத் தல் : விசைப் பலகையில் தட்டச்சு செய்வதன் மூலம் உள்ளீட்டு ஊடகத் திலோ அல்லது சொல் செயலியிலோ நேரடியாகக் கணினியிலோ தகவல்களையும், ஆணைத் தொடர் களையும் நுழைக்கும் செயல் முறை.

Key-driven : விசை - இயக்கம் : விசைகளை அழுத்துவதன் மூலம் இயக்கப்படும் சாதனம்.

Key field : குறிப்புப் புலம்.

Key frame : முக்கிய படம் : கணினி வரைகலை உயிர்ப்படத்தில் நகரும் ஒரு பொருளின் ஆரம்பம் அல்லது முடிவைக் குறிக்கிறது.

Keying error rate : விசையிடலில் பிழை விகிதம் : மொத்தமாக விசையிடப்பட்ட எழுத்துகளில் தவறாக விசையிடப்பட்டவற்றின் சதவிகித அளவு.

Keypad : விசை அட்டை : விசைகளின் தொகுதியைப் பயன்படுத்தும் உள்ளீட்டுச் சாதனம். Qwerty விசைப் பலகையின் வலது புறத்தில் இரண்டு சிறப்புப் பணி விசைகளும் பதின்ம எண்களும் அமைந்திருப்பது அல்லது தனி தகவல் நுழைவு அமைப்பாக விளங்குவது. ergonomics - ன் முடிவுகளில் ஒன்று.

Keypunch department : விசைத் துளைப் பிரிவு : data entry department போன்றது.

Keypunch machine : விசைத்துளை எந்திரம் : துளையிட்ட அட்டை தகவல் நுழைவு எந்திரம். வெற்று அட்டைகளின் தொகுதி ஹாப்பரில் வைக்கப்பட்டபின் இயக்குபவரின் கட்டளையின்படி துளையிடும் இடத்திற்கு ஒரு அட்டையை எந்திரம் அனுப்புகிறது. எழுத்துகள் தட்டச்சு செய்யப்பட்டவுடன், தொடர் எழுத்தச்சுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அட்டை பத்தியில் தேவையான இடங்களில் துளைகளை இடுகின்றன.

Key record : குமிழ் குறிப்பு.

Keysight : முக்கியப் பார்வை : ஒரு எந்திரம் மனிதனின் பார்வை அமைப்பு. GM அமைப்பு என்றும் சொல்லலாம்.

Keystore : விசை இருப்பு : ஒரு நிமிடத்திற்கு எத்தனை விசைகளை அடிக்கலாம் என்று பல தகவல் நுழைவுகளின் வேகத்தை அளப்பதற்காக ஒரு விசை அலகை அழுத்தும் செயல்.

Key-To-disk machine : விசை வட்டு எந்திரம் : கணினி நுழைவுக்காக காந்த வட்டின் மீது தகவல்களை சேமித்து வைக்கும் தனித்து நிற்கும் தகவல் நுழைவு எந்திரம்.

Keyword analysis : முதன்மைச் சொல் ஆய்வு : ஒரு சொற்றொடரின் உள்ளடக்கங்களை ஆராயும் எளிமையான ஆனால் மிகவும் மோசமான முறை. முக்கிய சொல் ஆய்வு என்று அமைப்பு இணைக்கும் நுட்பம் அழைக்கப்படுகிறது.

Khornerstones : திருப்புமுனைகள் : மையச் செயலகம் உள்ளீடு/ வெளியீடு மற்றும் மிதக்கும் புள்ளி செயல்பாட்டை சோதித்துத் தரமறியும் ஆணைத் தொடர்.

KH_z : கே எச் இஸட் : கிலோ ஹெர்ட்ஸ் என்பதன் குறும்பெயர். ஒரு நொடிக்கு ஓராயிரம் சுழற்சிகள்.

Kilby jack : கில்பி ஜேக் : *1958*இல் ஒருங்கிணைந்த மின்சுற்றை அறிமுகப்படுத்திய டெக்சாஸ் கருவிகள் நிறுவனத்தின் கண்டுபிடிப்பாளர். கையில் வைத்துக் கொள்ளக்கூடிய ஆரம்ப கால கணிப்பானையும் அவர் கண்டுபிடித்தார்.

Kill : கொல் : *1.* அதன் வழக்கமான முடிவை அடைவதற்குள் ஒரு செயலை நிறுத்துதல் அல்லது நீக்குதல். *2.* தகவலை அழிக்கும் முறை.

Kilo : கிலோ : மெட்ரிக் அளவு. ஒரு ஆயிரத்தைக் குறிப்பது. 10-ன் 3 மடங்கு. K என்று சுருக்கி அழைப்பது.

Kilobaud : கிலோ பாட் : ஒரு நொடிக்கு ஆயிரம் பாட். தகவல் தொடர்பு வேகங்களை அளக்கப் பயன்படுவது.

Kilobit : கிலோ துண்மிகள் : ஆயிரம் துண்மிகள்.

Kilobyte : கிலோ எட்டியல்கள் : 2-ன் 10 மடங்கு (2^{10}) அல்லது 1024 எட்டியல்களைக் குறிப்பிடுவது. பொதுவாக 1000 - என்று கருதப்பட்டு K என்று சுருக்கி அழைப்பது. 24 கே என்பது. 24 x 1024 அல்லது 24,576 எட்டியல் நினைவு அமைப்புக்குச் சமமானது. Kb என்றும் சில சமயம் சுருக்கி அழைக்கப்படும்.

Kilocycle : கிலோசைக்கிள் : ஆயிரம் சுழற்சிகள். ஒரு நொடிக்கு ஆயிரம் சுழற்சிகள் என்று முன்பு அழைக்கப்பட்டது. இப்போது கிலோ ஹெர்ட்ஸ்.

Kilo cycles per second : நொடிக்கு இத்தனை கிலோ சுழற்சிகள் : ஒரு நொடிக்கு ஆயிரம் சுழற்சிகள்.

Kilohertz : கிலோஹெர்ட்ஸ் : ஒரு நொடிக்கு ஓராயிரம் சுழற்சி. தகவல் அனுப்புதல் சுழற்சியை அளக்கப் பயன்படுகிறது.

Kilomegacycle : கிலோ மெகா சைக்கிள் : ஒரு நொடிக்கு ஒரு நூறாயிரம் கோடி சுழற்சிகள்.

Kinematics : இயக்க வடிவியல் : கணினி அமைப்பு வடிவமைக்கும் ஒரு அமைப்பு அல்லது ஒரு எந்திரத்தின் பகுதிகள் இயங்குவதை அசையூட்டம் (அனிமேஷன்) மூலம் காட்டுவது அல்லது வரைவி (பிளாட்டிங்) ஆகியவற்றில் கணினி உதவிடும் பொறியியல் செயல்முறை.

KIPS : கிப்ஸ் : எதிர்பார்க்கப்படுகின்ற ஐந்தாம் தலைமுறை கணினிக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்.

Kiudging : கியுட்ஜிங் : ஆணைத் தொடரின் நோக்கமாக இல்லையென்றாலும் தொழில் நுட்ப முறையில் முடியக்கூடிய ஏதாவது செய்வது.

'hacking' என்றும் அழைக்கப்படும்.

Kludge : ஒப்பேற்றல் : ஒரு கணினி அமைப்பில் பொருத்தப்பட்ட தவறான இணைப்புள்ள பாகங்களின் தொகுதி பற்றிய மாற்று அமைப்பு.

Knob : கைப்பிடி; குமிழ்க் கைப்பிடி.

Knockout : நாக் அவுட் : கம்மோடர் 64 வீட்டு கணினிக்கான மென் பொருள். பெட்டி வளையத்தைப் போலச் செய்து காட்டி இரண்டு பெட்டிகள் அதன் மீது வைக்கப்படுதல்.

Knowledge : ஆய்வறிவு; சால்பு.

Knowledge acquisition : அறிவு சேர்த்தல்; அறிவு ஈட்டல்.

Knowledge base : அறிவு ஆதாரம்; அறிவுத் தளம் : ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய அறிவின் தகவல் தளம். உண்மைகள், மதிப்பீடுகள், நடைமுறைகள் போன்ற சிக்கல் தீர்வுக்கான வழிமுறைகளைக் கொண்டது.

Knowledge based system : அறிவு சார்ந்த அமைப்பு : ஒரு பொருள் பற்றிய அறிவின் தகவல் தளத்தைப் பயன்படுத்தும் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு.

Knowledge build : அறிவுக் கட்டுமானம் : வேக்ஸ் சூப்பர் மென் பொருள் தொடர். பிசிஎஸ் நிறுவனத்

தின் புதிய தலைமுறை உற்பத்திக் கருவி.

Knowledge domain : அறிவுப்பகுதி : ஒரு வல்லுநர் அமைப்பில் குறிப் பிட்ட அறிவின் பகுதி.

Knowledge engineering : அறிவுப் பொறியியல் : சாதாரணமாக மனிதப் பட்டறிவில் உயர்நிலை தேவைப் படுகின்ற சிக்கல்களைத் தீர்க்க கணினி அமைப்புகளில் அறிவை ஒருங்கிணைக்கும் பொறியியல் பிரிவு.

Knowledge industries : அறிவுத் தொழில்கள் : தகவல் செயலாக்கம் செய்து தகவல் பொருட்கள் மற்றும் சேவைகளை அளிக்கும் தொழில்கள்.

Knowledge information : அறிவுத் தகவல்.

Knowledge link : அறிவு இணைப்பு : ஐபிஎம் நிறுவன கணினிகளுக்கும், துறைசார்ந்த வாக்ஸ் சூப்பர் பணி களுக்கும் இணைப்பு ஏற்படுத்த வடி வமைக்கப்பட்ட அறிவு இணைப்பு. இதன் மூலம் நிறுவனத்திற்கும், துறைக்குமான கணிப்புச் செயல்கள் சுமுகமாகச் செல்ல முடிகிறது.

Knowledge manager : அறிவு மேலாளர் : நுண் தகவல்தள கணினி அமைப்புகளிலிருந்து வரும் டிபிஎஸ் அமைப்பு. இதன் மூலம் எண்ணற்ற கோப்புகளைக் கையாள பயனா ளருக்கு அனுமதி கிடைக்கிறது.

Knowledge representation : அறிவு குறித்தல்; அறிவு குறிப்பிடு முறை : ஒரு சிக்கலுக்குத் தேவைப்படும் தகவலை வடிவமைத்து ஒருங்கு படுத்துதல்.

Knowledge work : அறிவு வேலை : தகவலைப் பெறுதல், செயலாக்கம் புகுதல் மற்றும் அனுப்புதல் உள்ளடக்கிய வேலைகள்.

Knowledge workers : அறிவுப் பணி யாளர்கள் : தகவலை உருவாக்கல், பயன்படுத்தல் மற்றும் விநியோ கித்தல் போன்றவற்றை முக்கிய வேலையாகக் கொண்டு பணியாற்று பவர்கள்.

KSR : கேஎஸ்ஆர் : Keyboard Send / Receive என்பதன் சுருக்கப் பெயர். விசைப்பலகை மற்றும் அச்சுப் பொறியைக் கொண்ட தொலைத் தட்டச்சுப் பொறி.

K & R C : கேஆர்சி : Kernighan and Ritchie C என்பதன் குறும்பெயர். அன்சி (Ansi) தர நிர்ணயத்திற்கு இருந்த 'சி' மொழியின் பதிப்பு. பிரியன் கெர்னிகன் மற்றும் டென்னிஸ் ரிச்சி உருவாக்கியது.

Kurtz Thomas : குர்ட்ஸ் தாமஸ் : 1964இல் டார்ட்மவுத் கல்லூரியில் ஜான் கெம்னியுடன் சேர்ந்து பேசிக் என்னும் கற்பதற்கு எளிய, அல்ஜிப்ரா கலந்த ஆணைத்தொடர் மொழியை உருவாக்கினார்.

KWIC : கேடபுள்யூஐசி : Key-Word-In Context என்பதன் சுருக்கம். சொற்கள் எந்தச் சூழ்நிலையில் பயன்படுத்தப் படுகின்றன என்பதை வைத்து சொற் கள் மற்றும் சொற்றொடர்களை முன்னதாக தேர்வு செய்து தகவலைப் பட்டியலிடும் ஒரு முறை.

L

label : அடையாளம்; குறி; முகப்புச் சீட்டு; முகப்பு : ஒரு ஆணையை விவரிக்க அல்லது அடையாளம் காண கணினி ஆணைத் தொடரில் பயன்படும் பெயர் அல்லது அடையாளம் காட்டி. வாக்கியச் செய்தி, தகவல் மதிப்பு, பதிவு, பொருள் அல்லது கோப்பு போன்றவைகள் இவ்வாறு பயன்படுத்தப்படும்.

label prefix : முகப்புச்சீட்டு முன்சொல்; முகப்புச் சீட்டு முன்னொட்டுச் சொல்: அகலத் தாளில் அரை நுழைவி ஆரம்பத்தில் தட்டச்சு செய்யப்படும் எழுத்து. சான்றாக 1-2-3இல் ஒற்றை மேற்கோள்குறி வருமானால் அரையில் இடது பக்கமாக ஒழுங்குபடுத்துமாறும், இரட்டை மேற்கோள்குறி வருமானால் வலதுபக்கம் ஒழுங்குபடுத்துமாறும் ஆணை ஏற்கப்படும்.

label record : சீட்டுப் பதிவேடு: காந்த நாடாவில் சேமிக்கப்படும் கோப்பைப் பற்றிய தகவலைக் கொண்டுள்ள காந்தப் பதிவேடு.

labeled common : பொதுவான சீட்டு: ஆணைத் தொடர் அலகுகளுக்குள் பகிர்ந்து கொள்ளப்படும் நினைவகப் பகுதி. அதற்கென்று தனியாகப் பெயர் கொடுக்கப்படும். Blank (unlabelled) Common என்பதற்கு எதிர்ச் சொல்.

lag : இடைவெளி;பிந்துதல்: இரண்டு நிகழ்வுகள், எந்திர அமைப்புகள் அல்லது நிலைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடு.

LAN : லேன் : Local Area Network என்பதன் குறும்பெயர். வன் பொருள், மென்பொருள், அமைப்புகள் ஆகியவைகள் குறிப்பிட்ட இடைவெளிக்குள் தகவல் தொடர்பு ஏற்படுத்துகின்றன.

land : பொருத்துப் பரப்பு : மின்னணு பொருட்களைப் பொருத்துவதற்கு அச்சிடப்பட்ட மின்சுற்று அட்டையில் உள்ள இடப்பகுதி.

language : மொழி : தகவலை வெளிப்படுத்தப் பயன்படும் விதிகள், குறியீடுகள், மரபுகளின் தொகுதி.

language description language : மொழி விவரிப்பு மொழி.

language processor : மொழி செயலாக்கி; மொழி அலசி : மனிதன் எழுதும் மூலமொழி ஆணைத் தொடர்களை கணினி இயக்கக்கூடிய வடிவில் மொழிபெயர்க்கும் ஆணைத்தொடர். பொதுவாக மொழி செயலாக்கிகள் மூன்று வகை. தொகுப்பிகள், சேர்ப்பிகள் மற்றும் மொழி பெயர்ப்பிகள்.

language prompt : மொழி உணர்த்தி.

language statement : மொழி விவர அறிவிப்பு : மொழி பெயர்ப்பு ஆணைத்தொடர், சேவை ஆணைத் தொடர் அல்லது கட்டுப்பாட்டு ஆணைத் தொடர் போன்ற செயலாக்க ஆணைத்தொடர்களுக்கு தகவலை அனுப்ப கணினி அமைப்பைப் பயன்படுத்தும் ஒருவர் குறியீடமைக்கும் சொற்றொடர். அது, செய்ய வேண்டிய ஒரு இயக்கத்தைக் குறிப்பிடலாம் அல்லது செயலாக்க ஆணைத் தொடருக்கு அனுப்ப வேண்டிய தகவல்களை மட்டுமே கொண்டதாக இருக்கலாம்.

language subset: மொழி துணைத் தொகுதி : ஒரு மொழியின் மற்ற பகுதியைச் சாராமல் சுயேச்சையாக இயங்கக்கூடிய, ஒரு மொழியின் பகுதி.

language translation : மொழி பெயர்ப்பு : பேசிக்கிலிருந்து ஃபோர்ட்ரானுக்கோ அல்லது ஃபோர்ட்ரானிலிருந்து பாஸ்கலுக்கோ மொழி

பெயர்ப்பு செய்வது போன்று ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குத் தகவலை மாற்றும் செயல்.

anguage translator programme : மொழி பெயர்ப்பு ஆணைத் தொடர் : பொருளை மாற்றாமல் ஒரு மொழி யிலிருந்து மற்றொரு மொழிக்கு சொற்றொடர்களை மாற்றும் ஆணைத் தொடர்.

.AN manager : லேன் மேலாளர் : மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் லேன்' இயக்க அமைப்பு. ஒரு பணியகத்தின் கீழ் ஓ/எஸ்2இல் பயன் பாடாக இயங்கி டாஸ் ஓ/எஸ்2 மற்றும் யூனிக்ஸ் வேலை நிலையங் களுக்கு உதவுகிறது. கோப்பு பங்கிடு வதில் நுண் மென் கோப்புப் பங்கீட்டு வரை முறையை மைக்ரோ சாஃப் ஃபைல் ஷேரிங் புரோட்டோ கால் பயன்படுத்துகிறது. போக்கு வரத்து நுட்பத்திற்கு நெட் பயாஸ் NET BIOS) வரைமுறையைப் பயன் படுத்துவதுடன் செயலாக்கத்திற் கிடையிலான தகவல் தொடர்புக்கு பெயரிடப்பட்ட குழாய்களைப் பயன்படுத்துகிறது.

.AN network manager : லேன் பிணைய மேலாளர் : பிணையத்தைக் கண்காணித்து கட்டுப்படுத்த பிணைய நிர்வாகிக்குப் பயன்படும் ஐபிஎம் மின் அடையாள பிணைய நிர்வாகம். லேன் பிணைய மேலாள ருக்குத் தேவையான தகவல்களைத் திரட்டித் தருகின்ற, பணி நிலைய சகாவாக லேன் நிலைய மேலா ளரைக் கூறலாம்.

LAN requester : லேன் வேண்டுபவர்: வேலை நிலையத்திலேயே தங்கி இருக்கின்ற லேன் பணியக மென் பொருள்.

LAN server : லேன் பணியகம் : லேன் மேலாளரின் ஐபிஎம் பதிப்பு.

LAN station : லேன் நிலையம் : குறு பரப்பு இணையக் கட்டமைப்பில் (லேன்) பணியகம்.

Land information system : பொருத்து பரப்பு தகவல் மையம் : தரை மேலாண்மை தகவலை ஆராயப் பயன்படுத்தும் ஒரு கணினி அமைப்பு (வன்பொருள் மற்றும் மென்பொருள்). இயற்கை மூலா தாரங்களின் விநியோகம் நிலைப் பயன்படுத்தும் முனைகள், சொத்து உரிமை, வாடகையிருப்பு மதிப்புகள் போன்றவைகள் இதற்குச் சான்று. தரை தகவல் மையம் ஒரு நேர்முக அமைப்பு அல்ல. வெளிப்புறத்தில் இருந்து அடிப்படைத் தகவல்களை விநாடிக்கு விநாடி பெறுகிறது. நிலப்படம் அமைத்தல், தகவல் மற்றும் தகவல் தளங்கள் இவற்றின் பணிகள்.

landing zone : தரையிறங்கும் பகுதி : படி /எழுது முனையை நிறுத்து வதற்கான வன்வட்டின் பகுதி. முந்தைய வன்வட்டு அமைப்பில் நிறுத்துவதற்கான ஆணை இடப்பட வேண்டும். ஆனால், இப்போது மின்சாரம் நிறுத்தப்படும்போது தானாகவே நடந்து விடுகிறது. அது நிறுத்தப்படும் இடம் விவரம் சேமிக் கப்படாத இடமாக இருக்கும். நிலை வட்டில் மிக அதிகமான எண் கொண்டுள்ள தடம்/உருளையாக இருக்கும்.

landmark : லேண்ட் மார்க் : அமெரிக் காவில் உருவாக்கப்பட்ட உரிமை யாளர் வன்பொருள்/மென் பொருள் மதிப்பீட்டமைப்பு.

landmark rating : லேண்ட் மார்க் விகிதாச்சாரம் : லேண்ட மார்க் ரிசர்ச்

இன்டர்நேஷனல் நிறுவனத்தின் பரவலாகப் பயன்படும் பி.சி. செயல் திறன் சோதனை. மையச் செயலக வேகம் கடிகாரத்திற்குத் தேவைப் படும் வேகமாக ஏடி - வகுப்பு எந்திரங்களில் இருக்கிறதா என்று மதிப்பீடு செய்வது. இதன் மூலம் சமமான செயல்திறன் தர முடியும்.

landscape : லேண்ட்ஸ்கேப்: அச்சுப் பிரதி உருவங்களை அமைப்பது குறித்தது. வேலையை ஒரு பக்கத்தில் நீளவாட்டத்தில் அச்சிட வைக்கிறது. பொதுவாக செங்குத்தாக அச்சிடுவதே வழக்கமாகும்.

landscape monitor : லேண்ட்ஸ்கேப் திரையகம் : எதிரெதிராகப் பார்க்கும் 2 செய்திப் பக்கங்களை அச்சிடும் திரையகம். உயரத்தை விட அகலம் அதிகமாக இருக்கும்.

landscapes : லேண்ட்ஸ்கேப்ஸ் : நுண் கணினிகளுக்கான மைக்ரோ-சாஃப்ட் நிறுவனத்தின் மென் பொருள். கான்டூர் (Contour) படங்கள் மற்றும் அவை பிரதிபலிக்கும் இடங்களின் உறவைக் குறிப்பது.

language access : மொழி அணுகல் : ஐ.பி.எம். நிறுவனத்தில் எஸ்ஏஏ ஏற்புடை கேள்வி மொழி. ஆங்கில மொழியில் கேட்கப்படும் கேள்வியை எஸ்கியூஎல் மொழியாக மாற்றி கியூ.எம்.எஃப் ஆக அளிக்கிறது. கியூ.எம்எஃப் தகவல்களைத் தேடித் தருகிறது.

LANtastic : லேண்டாஸ்டிக் : எளிதாக பயன்படுத்தக்கூடிய ஆர்ட்டி சாஃப்டின் பி.சி.க்களுக்கான புகழ்பெற்ற நேருக்கு நேர் லேன் இயக்க அமைப்பு. ஈத்தர்நெட், ஆர்க்நெட் மற்றும் டோக்கன் ரிங் ஏற்பிகளையும் அதனுடைய முறுக்கிய இணை ஏற்பிகளையும் ஒரு நொடிக்கு இரண்டு மெகாபிட் அளவில் இது ஆதரிக்கிறது. மின் அஞ்சல் (இ-மெயில்) மற்றும் சாட் பணிகளும் இதில் உள்ளடக்கி மீமிகு துண்மிகள் உள்ளது. குரல் அஞ்சல் மற்றும் உரையாடல் வசதியும் கூடுதலாகக் கிடைக்கும்.

LAP : லேப் : Line Access Protocol என்பதன் குறும்பெயர். இரண்டாம் நிலை (தகவல் இணைப்பு நிலை) வரைமுறை.

lap Computer : மடி கணினி : எடுத்துச் செல்லக்கூடிய பெட்டியளவு அல்லது நோட்டுப்புத்தக அளவு கணினி. பொதுவாக சுமார் 5 கிலோவுக்குக் குறைவான எடை உள்ளதாக இருக்கும்.

laplink : லேப்லிங்க் : டிராவலிங் சாஃப்ட்வேர் நிறுவனத்தின் பி.சி. கோப்பு மாற்றல் ஆணைத்தொடர். லேப்டாப் மற்றும் டி.டி.பி. கணினிகளுக்கிடையில் தகவல்களை இது மாற்றுகிறது. லேப்லிங்க் மேக், பி.சி.க்கும் மேக்-குக்கும் இடையில் கோப்புகளை மாற்றுகிறது.

laptop : மடிக் கணினி : தட்டையான திரையுள்ள, எடுத்துச் செல்லக்கூடிய கணினி. பொதுவாக ஒரு டஜன் பவுண்டுக்குக் குறைவான எடை உடையது. ஏசி மின்சக்தி/பேட்டரியைப் பயன்படுத்துகிறது. வெளிப்புற திரையகத்து இணைப்புகளால் இணைக்கப்பட்டு டி.டி.பி. கணினியாகவும் செயல்பட வல்லது. வெளிப்புற சி.ஆர்.டி. மற்றும் முழு அளவு விசைப் பலகையுடன் இணைக்கலாம். மவுஸ் போர்ட், டிராக்பால் ஆகியவை உள்ளே அமைக்கப்பட்டிருக்கும். நின்ற பிறகு மீண்டும் விட்ட இடத்தில் இருந்து தொடங்கக் கூடியது.

வி.ஜி.ஏ. கிரே அளவும், வண்ணமும் உடையது. பேட்டரியில் இயங்கக் கூடிய 386 எஸ் அல்லது ஏஎம் 386 எக்ஸ் எல் ஆகிய மையச் செயலகங்களைக் கொண்டிருக்கும்.

large main memories: பெரிய முதன்மை நினைவகம்; பெரிய முதன்மை நினைவுப் பதிப்பான்கள்.

Large Scale Integration: LSI : பேரளவு ஒருங்கிணைப்பு: எல்எஸ்ஐ : ஒரு சிலிக்கான் சிப்புவில் அதிக எண்ணிக்கையில் (பொதுவாக நூறுக்கு மேல்) ஒருங்கிணைந்த மின் சுற்றுக்களை வைக்கும் செயல்முறை.

Large Scale Integration Circuits - LCIC: பேரளவு ஒருங்கிணைந்த மின் சுற்று வழிகள்.

LASER : லேசர் (சீரொளி; ஒளி ஒழுங்கமைவு) : Light Amplification by Simulated Emission of Radiation என்பதன் குறும்பெயரே 'லேசர்'. மின்காந்த அலைகளை கதிர் வீச்சு வெளியிடுவது போன்ற செயல் மூலம் பெரிதாக்கும் கொள்கையைப் பயன்படுத்தும் தொழில் நுட்பம். அகச்சிவப்பு புலனாகும் அல்லது அல்ட்ராவய்லட் பகுதியில் இயங்கு கிறது.

laser disk memory : லேசர் வட்டு நினைவகம் : 12 அங்குல (294 மி.மீ) பிளாஸ்டிக் வட்டில் லேசரால் தகவல் பதியப்பட்டு, படிக்கப்படக் கூடிய வடிவில் உள்ள சேமிப்பக சாதனம். அண்மையில் உருவாக்கப் பட்டது.

laser printer : லேசர் அச்சுப்பொறி : ஒரு லேசர் கதிரைப் பயன்படுத்தி சுழலும் உருளையில் உருவங்களைப் பதிக்கும் அழுத்தம் தராத அச்சுப் பொறி. லேசர் தோன்றும் பகுதிகளில் மை தூளை உருளை எடுத்துக் கொள்கிறது. உருளையின் மேல் உள்ள இப்பகுதிகள் அழுத்தப்பட்டு காகிதத்தில் கலந்து எழுத்துகள் உருவாகின்றன.

laser storage : லேசர் சேமிப்பகம்; லேசர் தேக்ககம் : உலோக மேற்பரப்பின் மேல் லேசர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி குறியீடு அமைக்கும் துணை சேமிப்பகச் சாதனம்.

laser writer : லேசர் எழுது பொறி : ஆப்பிள் நிறுவனத்தின் லேசர் அச்சுப் பொறி. மோட்டோரோலா 68020 சில்லினால் இயக்கப்பட்டு 2 மீமிகு எட்டியல்களுடன் வருவது.

laser jet : லேசர் ஜெட் : எச்.பி. நிறுவனத்தின் டெஸ்க் டாப் லேசர் அச்சுப்பொறி குடும்பத்தைச் சேர்ந்தது. 1984இல் அறிமுகப் படுத்தப் பட்ட இது 300 டி.பி.ஐ. வரை அச்சிடும். 800 டி.பி.ஐ. வரை வேறொரு சாதனத்தினால் சக்தி கூட்டலாம். III வரிசையில் துல்லியம் அதிகமாகும். இதன் அச்சு கட்டளை மொழி பி.சி.எல். பிட்மேப்பிலான அச்செழுத்துகளை ஏற்றுக் கொள்கின்றன. அளவு கூடக் கூடிய அச்செழுத்துகள் சேர்க்கப்படுகின்றன. சிலவற்றை கார்ட்ரிஜ் மூலம் அமைக்கலாம். வரிசை II -ஐ பிசிஎல் 5-ன் மூலம் மேம்படுத்தலாம்.

LAT : லேட் : Local Area Transport என்பதன் குறும்பெயர். டெக் நெட் சூழ்நிலையில் முகப்பு போக்குவரத்தினைக் கட்டுப்படுத்த டிஜிட்டல் நிறுவனம் உருவாக்கிய தகவல் தொடர்பு வரைமுறை.

latch : லேட்ச் : புதிய தகவல் அளிக்கப்படும் வரை அதன் அளவை உள்ளடக்கத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு மின்னணு மின் சுற்று.

latch registers : லேட்ச் பதிவகங்கள்: ஒளிக்காட்சி தாங்கியில் உள்ள

குறிப்பிட்ட நினைவக முகவரியில் நான்கு எட்டியல்கள் அளவு தகவலை வைத்துக் கொள்ளும் ஒரு எட்டியல் லேட்ச் பதிவகங்கள் ஈ.ஜி.ஏ.வில் நான்கு உள்ளன. தாங்கி (Buffer)யில் இருந்து மையச் செயலகம் படிக்கும் போது, லேட்ச் பதிவகங்கள் நிரம்பு கின்றன. தாங்கியில் மையச் செயல கம் எழுதும்போது லேட்ச் உள்ளடக் கங்கள் அது தொடர்பான நினைவக இருப்பிடத்தில் திணிக்கப்படு கின்றன.

latch voltage : லேட்ச் வோல்ட்டேஜ்: அளவை நிலையை ஏற்றம்-இறக்கம் (flip-flop) மாற்றக்கூடிய உள்ளீடு மின்சக்தி.

late binding : தாமத ஒட்டு : ஓடும் போதே வாலாயங்களை (ரொட்டீன்) இணைப்பது.

latency : உள்ளுறை சுணக்கம் : தட்டு அல்லது உருளை போன்ற துணை சேமிப்பக சாதனத்தில் நேரடி அணுகு முறையில் ஒரு பதிவை எழுதவும், படிக்கவும் ஆகும் சுழற்சி தாமதம்.

latent image : தெரியாத உருவம் : மின்சக்தி மூலம் தோன்றும் புலனா காத உருவம். சான்றாக, நகல் எந்திரத்தில், ஒரு பக்கத்தின் தெரி யாத உருவத்தை ஒரு பலகையிலோ அல்லது உருளையிலோ மின்சக்தி வடிவில் உருவாக்கி வைக்கப்படும்.

latter quality : எழுத்துத் தரம்.

latter quality mode : எழுத்துத் தரமுறை.

latter quality printer : எழுத்துத் தர அச்சடிப்பான்.

lattice : லேட்டிஸ் : பூலியன் அல்ஜிப்ரா போன்ற அல்ஜிப்ரா அமைப்பு.

launch : துவக்கு : ஒரு ஆணைத் தொடரை ஏற்றி ஓடச் செய்வது.

layer : அடுக்கு : 1. வரைபடமுறை கோப்பில் அளவை முறையிலான தொடர்பில் தகவல்களின் துணைத் தொகுதி. 2. முப்பரிமாண வரிசை யில் மூன்றாவது பரிமாணம்.

layering : அடுக்கமைத்தல்; அடுக்கு: ஒரு தனி ஓவியத்திற்குள் வரைபட முறை தகவல்களின் துணைக் குழுக் களைத் தொடர்புபடுத்தும் அளவை முறைக் கோட்பாடு. மிகச் சிக்கலான கோப்பின் அனைத்துப் பகுதிகளை யும் பார்ப்பதன் மூலம் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்க்க, கணினியில் வேலை செய்யும் பகுதிகளை மட்டுமே பார்க்க இது அனுமதிக் கிறது.

layout : வெளிப்புற அமைப்பு; இட அமைவு : ஒட்டு மொத்த வடி வமைப்பு அல்லது திட்டம். கணினி அமைப்பு, ஓடு படம், திட்ட வரைபடங்கள், அச்சுப் பொறிக்கான வடிவமைப்பு, அட்டைபத்திகளின் வெளியீட்டு வடிவமைப்பு, ஒரு ஆவணம் அல்லது புத்தகத்தின் வெளி அமைப்பு போன்றது.

layout forms and screens : வடி வமைப்புப் படிவங்களும், திரை களும் : படிவங்கள் மற்றும் உள்ளீடு/ வெளியீடு ஊடக உள்ளடக்கம் மற்றும் முறைகளை உருவாக்குவதற் கான கருவிகள். காட்சித் திரைகள் மற்றும் அறிக்கைகள் இவற்றுக்கு சான்று.

layout setting : பக்கம் அளத்தல் : ஒரு அச்சிடப்படும் பக்கத்தை அமைப் பதற்கான மதிப்புகளை அளித்தல். ஓரங்கள், பத்தி அளவு, மேற்பகுதி, கீழ்ப்பகுதி, தலைப்புகள், பட்டியல்

கள் ஆகியவை இதற்கு எடுத்துக் காட்டுகள்.

layout sheet : வெளி அமைப்புத்தாள்; அமைவுத் தாள் : ஆணைத்தொடர் திட்டமிடலுக்காக காட்சித் திரையில் உள்ளதைக் காட்ட வடிவமைக்கப் பட்ட காகிதத் தொகுதி. வரைபட முறை எக்ஸ்-ஒய் ஒருங்கிணைப்பு கள் மூலம் அல்லது வரிசைகள், பத்திகள் முறையில் சொற்கள் வரை படங்களைக் காட்டுதல்.

LCD : எல்சிடி : Liquid Crystal Display என்பதன் குறும்பெயர். சிறப்பு படிகப் பொருளின் மீது ஒளியைப் பிரதிபலிப்பதன் மூலம் எழுத்துக் களும் எண்களும் தெரியும் அமைப்பு. அதிக ஒளி இருக்கும் போது மிக நன்றாகத் தெரியும். குறைந்த வெளிச்சத்தில் சரியாகப் பார்க்க முடியாது. அதன் குறைவான அளவின் காரணமாக, பாக்கெட் கணிப்பான்கள், கணினிகள், பெட்டி கணினிகள், விசைப் பலகைகள், கடிகாரங்கள் மற்றும் பல சாதனங் களில் அதிகம் பயன்படுத்தப்படு கிறது.

LCD panel : எல்.சி.டி. பேனல் : மேற் செலவு திட்டத்தில் ஓவர் ஹெட் புரொஜக்டரில் வைக்கக் கூடிய, உள்ளே தெரியும் படிகத் திரையில் காட்டுகின்ற கணினி வெளியீட்டை ஏற்றுக் கொள்ளும் தகவல் திட்டம்.

LCD printer : எல்சிடி. அச்சுப்பொறி : மின் புகைப்பட முறை அச்சுப் பொறி. அது திரவ படிக மூடிகள் இயக்குகின்ற தனி ஒளி மூலத்தைப் பயன்படுத்துகிறது.

LCD watch : எல்சிடி. கடிகாரம் : திரவ படிவ காட்சித் திரை கடிகாரம். வரி கட்டுப்பாடு வரையறுப்பது.

LDL : எல்டிஎல் : Language Description Language என்பதன் குறும்பெயர். ஒரு மொழியைப் பற்றி விவரிக்கும் பெருமொழி.

lead : லீட் : ஒரு மின்சுற்று அம்சத்தின் இணைப்பு.

leader : முன்னோடி; தலைப்பு : ஒரு சுருணை காந்த நாடா அல்லது காகித நாடாவில் ஆரம்பத்தில் உள்ள நாடாவின் வெற்றுப் பகுதி.

lead frame : முக்கியப் படம் : ஒரு ஐ.சி. யில் உள்ள லீடை வைத்துக் கொள் கின்ற லீட் அசெம்பிளியின் பகுதி. படம் எடுத்த பிறகு அது போய் விடும்.

leaded chip carrier : லீடட் சிப்பு இடை நிலைவகம் : நான்கு பக்கங்களிலும் இணைப்புகளைக் கொண்டுள்ள சதுர சில்லு. (டி.ஐ.பியை விட அதிக உ/வெ பாதைகளைத் தருவது).

leading : முன்பகுதி; வரி இடைவெளி: ஒரு வரி அச்சின் அதிகபட்ச கீழ் அளவுக்கும் அடுத்த வரியின் அதிக பட்ச மேல் அளவுக்கும் இடையில் உள்ள செங்குத்து இடைவெளி.

leading edge : முன்பக்க விளிம்பு; தலைப்பு முனை : 1. படிப்பானின் அட்டையில் முதலில் நுழையும் துளையிட்ட அட்டையின் விளிம்பு. Trailing edge-க்கு எதிர்ச்சொல். 2. ஒளி நுண்ணாய்வில், படி நிலையில் முதலில் நுழையும் ஆவணம் அல்லது பக்கத்தின் விளிம்பு. 3. தொழில் நுட்பத் தலைமையை உணர்த்தும் அடை மொழிச் சொல்.

leading zeros : முன்னுள்ள பூஜ்யங் கள்: தகவலின் எண் மதிப்பைக் கூட் டாத புலத்தை நிரப்பும் பூஜ்யங்கள். சான்றாக, 0001234 என்ற எண்ணில் உள்ள அனைத்து பூஜ்யங்களும் முன்னுள்ள பூஜ்யங்களாகும்.

leadless chip carrier : லீட்லஸ் சிப்பு இடை நிணைவகம் : நான்கு பக்கங்களிலும் இணைப்புகள் உள்ள தட்டையான சதுர சிப்பு இருக்கும் இடம்.

leaf : இலை : மர வரைபடத்தின் முனையப் பகுதி.

leaf nodes : இலை முனைகள் : பிள்ளைகள் இல்லாத ஒரு மரத்தில் உள்ள முனைகள். இணையத்துக்குத் தொடர்புள்ள இதனை இணைய மொழியில் சொல்வதானால் இணைப்புகள் இல்லாத ஆவணங்கள் எனலாம்.

leapfrog test : தாண்டும் சோதனை : சேமிப்பு ஊடகம் முழுவதும் தன்னை இரட்டித்துக் கொள்ளும் சேமிப்பகம் கண்டறியும் நிரல்.

learning curve : கற்கும் வளைவு : ஒரு குறிப்பிட்ட பணியில் தொடரும் பழக்கத்திற்கு அதன் விளைவாக ஏற்படும் திறமை, வேகம், துல்லியம் போன்றவற்றுக்கும் இடையில் உள்ள உறவைக் காட்டும் வரைபடம். அனுபவ வளைவு என்றும் சில சமயம் கூறப்படும். 'சுலபமாகக் கற்கும் வளைவு' அல்லது 'நீண்ட கற்கும் வளைவு' என்று மென்பொருளைப் பயன்படுத்துபவர்கள் பேசுவதுண்டு.

learning programme : கற்கும் ஆணைத் தொடர் : தகுதியுள்ள எதிர்ப்புகளுடன் பல போட்டிகளைச் சந்தித்து தன் திறமையை படிப்படியாக மேம்படுத்தும் கணினி நிரல்

lease : குத்தகை : கணினி முறைமை ஒன்றைப் பயன்படுத்தும் உரிமையைப் பெறும் வழி. குத்தகை ஒப்பந்தத்துக்கு முதலீடு எதுவும் தேவை இல்லை. வாடகைக்கு கணினி முறைமையை எடுப்பதை விட செலவு குறைவானது.

leased lines : குத்தகை இணைப்புகள் : பொதுவான அமைப்பு ஒன்றிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஒதுக்கப் பட்ட தகவல் தொடர்பு இணைப்புகள். துவக்கப்படாத இணைப்புகள் மற்றும் பிணைப்பு இணைப்புகள் என்று அழைக்கப்படும்.

leased line modem : குத்தகை இணைப்பு மோடெம் : தனியார் தொடர்புகளில் பயன்படுத்தும் அதிவேக மோடெம். டயல் செய்யும் இணைப்புகளுக்காக குறைந்த வேகத்தில் இயங்கும் மாற்று ஏற்பாடும் அதனிடம் இருக்கும்.

leasing companies : குத்தகை நிறுவனங்கள் : குத்தகைக்கு அளிக்கும் நிறுவனங்கள். கணினிச் சாதனங்களை தயாரிப்பாளர் ஒருவரிடமிருந்து வாங்கி குத்தகைக்கு தருவதை சிறப்பாகக் கையாளும் நிறுவனங்கள்.

least significant byte : (LSB) : சிறும மதிப்புள்ள எட்டியல்கள்: எழுத்துகள் வரிசையின் தொகுதி ஒன்றில், வலது பக்கத்தில் அதிக தூரத்தில் உள்ளதே குறைந்த முக்கியத்துவம் கொண்டது.

Least Significant Digit : (LSD) : குறைந்த முக்கியத்துவம் உடைய எண்: குறைந்த மதிப்பு அல்லது முக்கியத்துவம் உடைய எண். 58371 என்ற எண்ணில் குறைந்த முக்கியத்துவம் உடைய எண் 1.

LED : Light Emitting Diode என்பதன் குறும்பெயர். சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் ஆல்பா எண் வெளியீட்டு அலகு. குறிப்பிட்ட வோல்

டேஜ் உள்ள மின்சாரம் அனுப்பப் பட்டால் ஒளிரக் கூடியது.

LED display : எல்இடி. திரை: சில கணிப்பான்கள், இலக்க முறை கடிகாரங்கள் போன்றவற்றில் எண்கள் மற்றும் அகரவரிசை எழுத்துகளைக் காட்டும் சாதனம்.

left : இடது : ஒரு வாக்குவாத சரத்தின் இடது புறத்திலிருந்து எடுக்கப்பட்ட குறிப்பிட்ட நீளமுள்ள சரத்தை திருப்பி அனுப்புகின்ற பணி.

left justify : இடப்புற நேர்த்தியாக்கு.

left shift : இடப்புறம் மாற்று: இடது புறத்தில் குறிப்பிட்ட இடைவெளியில் ஒரு பதிவகத்தில் சேமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு துண்மியையும் மாற்றச் செய்தல்.

Leibniz : லீப்னிஷ் : கோர்டிஃபிரைடு வான் (1646-1716) ஜெர்மானிய கணித வல்லுநர். கணக்கிடும் எந்திரத்தை 1672இல் கண்டுபிடித்தார். அந்த எந்திரம் கூட்டல், கழித்தல், பெருக்கல் ஆகிய வேலைகளைச் செய்யக் கூடியது.

Leibniz's calculator : லீப்னீஷ் கணிப்பி: கோட்ஃபிரைடு வான் லீப்னீஷ் என்பவர் வடிவமைத்த கணக்கிடல் பொறி. பாஸ்கலின் கணிப்பி போல கூட்டல், கழித்தல் செய்ய வல்லது. கூடுதல் பற்சக்கரங்கள் சேர்க்கப்பட்டிருப்பதால் நேரடியாக பெருக்கல் வேலையையும் செய்யக் கூடியது.

Lempel Ziv : லெம்பல் சிவ் : ஏற்புடை சுருக்கும் நுட்பத்தினைப் பயன்படுத்தும் தகவல் சுருக்கும் அல்கோரிதம்.

len : லென் : ஒரு சரத்தின் நீளத்தைத் திருப்பி அனுப்பும் கட்டளை. LEN ('JUNE') என்ற கட்டளை 4 என்ற விடையைத் தரும்.

length : நீளம் : எழுத்துகளுக்கான எட்டியல்கள் எண்ணிக்கை அல்லது கணினி சொல் ஒன்றில் உள்ள துண்மிகள். ஒரு மாறும் சொல் பல எழுத்துகளால் ஆனது. ஆனால் சிறப்பு முடிவு எழுத்தைக் கொண்டது. நிலையான சொல் என்பது ஒரே எண்ணுள்ள துண்மிகளால், அல்லது எட்டியல்களால் அல்லது ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள எழுத்துகளால் ஆனது.

Leo : லியோ : லியோன்ஸ் எண்ணும் இங்கிலாந்து நிறுவனம் உருவாக்கிய லியோனின் மின்னணு அலுவலகம் என்பதன் சுருக்கம். 1947இல் துவக்கிய ஒரு திட்டத்தின்படி அவர்கள் அலுவலகத்தின் எழுத்தர்கள் செய்யும் வேலைகளை கணினி மூலம் செய்ய கணினியை உருவாக்கினார்கள்.

Leo - III : லியோ- III : அதன் காலத்திற்கு மிகவும் முன்னேறிய வணிக எந்திரமான முதல் தலைமுறை கணினி.

less than : விடக் குறைவு : குறைவாக, சமமற்ற இரு மதிப்பீடுகளுக்கிடையிலான உறவு. குறியீட்டின் முனைப் பகுதி சிறிய எண்ணைச் சுட்டுவதாக இருக்கும். 3 less than 8 என்றால் 3 எனும் எண் எட்டைவிடக் குறைவானது என்று பொருள். ஒப்பீட்டில் மாற்று வகைப்படுத்து தலைத் தீர்மானிக்க பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

letter quality : அச்சுத் தரம்; அச்சு நேர்த்தி; எழுத்துத் தரம் : அச்சிடப்பட்ட பிரதி ஒன்றின் உயர்தரம் தொடர்பானது. சிறந்த தட்டச்சுப் பொறி ஒன்றில் பெறப்பட்டதுடன் ஒப்பிடக் கூடியது.

letter quality mode : எழுத்துத் தர முறை.

letter quality printer : எழுத்துத் தர முள்ள அச்சுப்பொறி; எழுத்துத் தர அச்சடிப்பி : சாதாரண தாளில் தெளி வான பிசிறற்ற எழுத்துகளை உருவாக்கும் அச்சுப்பொறி. பொது வான அச்சுப்பொறி ஒன்று டெய்சி வடிவுள்ள சக்கரம் ஒன்றைப் பயன் படுத்துகிறது. அதில் எழுத்துகள் வளையக்கூடிய தண்டுகளின் முனை யில் உள்ளன. சக்கரம் உயர் வேகத் தில் சுழலும் பொழுது அச்சிடு முனை பக்கத்தின் மீது நகர்கிறது. சுத்தி ஒன்று பொருத்தமான எழுத்து களின் மீது அடிக்கிறது. அதன் மூலம் சிறந்த தட்டச்சுப் பொறியில் கிடைப் பதை விட தனித்தனியான நேர்த்தி யான எழுத்துகளைக் கொண்ட உரை கிடைக்கிறது. இந்த வகை அச்சடிப்பிகளில் சில டெய்சி சக்கர முறைக்குப் பதிலாக கோல்ப் பந்து அச்சிடும் பொறியமைப்பைப் பயன் படுத்துகின்றன.

letter shift : எழுத்து உயர்த்தி : விசைப் பலகை விசை அல்லது விசையினால் உருவாக்கப்படும் குறியீடு. இது அடுத்து வரும் வடிவங்களை மற் றொரு வடிவு உயர்த்தித் தோன்றும் வரை எழுத்துகளாகப் படிக்க வேண் டும் என்பதைக் குறிப்பிடுகிறது.

level : நிலை;படித்தளம்; படிநிலை; படிவம் : ஆதிக்க முறை ஒன்றில் அடி பணியும் அளவு. மரம் ஒன்றின் வேருக்கும் அதன் கணுவுக்கும் இடையே உள்ள இடைவெளி.

lex : லெக்ஸ் : ஒரு மொழி படிவத் திலிருந்து வேறொரு மொழிக்கு தகவல்களை மாற்றும் தகவல் மாற்றல் மென்பொருள்.

lexicon : பேரகராதி; பேரகரமுதலி : எல்லாச் சொற்களுக்கும் விளக்க மளிக்கும் நூல்.

lexical anaylsis : சொல்லாக்க ஆய்வு: ஒரு ஆணைத்தொடர் சொற்றொட ரின் பல்வேறு பகுதிகளைத் தொகுப்பி அடையாளம் காணும் செயல்முறை.

lexicographic sort : சொல்லாக்க வகைப்படுத்தல் : அகராதியைப் போன்று அகர வரிசையில் வரிசைப் படுத்துதல். அகர வரிசை சொற்களின் மூலம் எண்கள் அமைக்கப்படும்.

LF : எல் எஃப் : Line Feed என்பதன் குறும்பெயர்.

LHA : எல்எச்ஏ : விரைவான, திறன் மிக்க இலவசமாகக் கிடைக்கும் கோப்பு சுருக்கும் பயன்பாடு.

LHARO : லாரோ : ஹாருயாசு யோஷி சாகி உருவாக்கிய புகழ் பெற்ற இலவச சுருக்கும் ஆணைத் தொடர். LZW (LZ77) அகராதி முறையில் மாற்றம் செய்து பயன்படுத்தி ஹஃப் மேன் குறியீட்டு நிலையைத் தொடர் கிறது. பி.சி., யூனிக்ஸ் மற்றும் பிற தளங்களிலும் இது இயங்க முடி வதன் காரணம் இதன் மூலம் குறியீடு இலவசமாகக் கிடைக்கிறது.

librarian : நூலகர் : *1.* தொழில் நுணுக்க ஆவணங்களைப் பராமரிக் கும் பொறுப்பாளர்; ஆணைத் தொகுப்புகளை உருவாக்குவோர்; இயக்குவோர் மற்றும் பிற ஊழியர் கள் பயன்படுத்தும் விளக்கத் தொகுப் புகளைப் பராமரிப்பவர். 2. எல்லா கணினிக் கோப்புகள் அதாவது தகட்டுக் கற்றைகள் மின் காந்த நாடாக்களை பாதுகாப்பாக வைத் திருப்பவர். காப்பாளர், கோப்பு நூல கர், மென் பொருள் நூலகர், நாடா நூலகர் என்றும் அழைக்கப்படு கிறார்.

library : நூலகம் : வெளியான ஆணைத் தொகுப்புகள், வழக்கமான செயல்கள், எப்பொழுதாவது நிறை வேற்றப்படும் பணிகள் ஆகியவை கள் கணினியைப் பயன்படுத்தும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் இடம். ஆணைத் தொகுப்பு நூலகம் போன்றது.

library automation : நூலகத் தானியக்கம்: நூலக நடவடிக்கைகள் மற்றும் சேவைகளுக்கு கணினி மற்றும் பிற தொழில் நுணுக்கத்தைப் பயன் படுத்துதல்.

library manager : நூலக மேலாளர் : ஒரு இயக்க முறைமையில் சேமிக்கப் பட்ட ஆணைத் தொகுப்புகளைப் பராமரிக்கும் ஆணைத் தொகுப்பு.

library routine : நூலக வாலாயம் : ஆணைத் தொகுப்பு நூலகம் ஒன்றில் கையாளப்படும் சோதிக்கப்பட்ட வழமை அல்லது நிரல்.

license contrast : உரிம எதிர் மறை : மென்பொருள் ஒன்றைப் பயன் படுத்துவோர் அதனைத் தன்னுடைய கணினியில் பயன்படுத்த அங்கீகாரம் வழங்கும் சிறுதாள்.

lifo : லிஃஃபோ : Last in First out என்பதின் குறும்பெயர். இம்முறையில் தான் பெரும்பாலான நுண் வகைப் படுத்தி ஆணைத் தொகுப்பு முறைமைகள் செயல்படுகின்றன. கடைசியாக அனுப்பப்பட்ட தகவல் அல்லது கட்டளை ஆணைதான் முதலில் பெறப்படுகிறது.

life cycle : வாழ்க்கைச் சுழற்சி; ஆயுள் சுழற்சி : ஆணைத் தொகுப்பு அல்லது முறைமை ஒன்றின் தோற்ற வழி. துவக்கக் கருத்து, உருவாக்கம், அமல் மற்றும் மாற்று ஒன்று உருவாக்கப் படும்வரை அல்லது இனிமேல் பயன்படாது என்ற நிலை ஏற்படும் வரை பராமரிப்பு.

life testing : ஆயுள் சோதனை; வாழ்க்கைச் சோதனை : களத்தில் நம்பகத் தன்மையை உறுதி செய்ய மின்னணு பாகங்களை விரைந்து சோதித்தல்.

ligature : லிகாச்சர் : (உடலால் தொடக் கூடிய) தனி அலகாக வடிவமைக்கப் பட்ட இரண்டு அல்லது மேற்பட்ட தட்டச்சு முக எழுத்துகள்.

light emitting diode : ஒளியுமிழ் இரு முனையம் : அதற்கு மின்சக்தி அளிக்கப்படும்போது ஒளியை உமிழும்



ஒளியுமிழ் இரு முனையம்
(Light-emitting diode)

ஒரு மின்னணு சாதனம். "மின்சாரம் இயங்குகிறது" என்பதை உணர்த்தும் குறியீடுகளாக கணினிகளிலும் கணினி மென்பொருளிலும் பயன் படுத்தப்படுகின்றன.

light guide : ஒளி வழிகாட்டி; ஒளி வழிப்படுத்தி : ஒளி இழைக் கம்பி போன்ற ஒளியைக் கடத்த வடிவமைக்கப்பட்ட கம்பி.

light source : ஒளி மூலம் : கணினி வரைகலையில் வருவது. முப் பரிமாண பொருளின் மீது ஒளியின் விளைவை போலியாக உருவாக்க

பயன்படுத்தப்படுகிறது. சில ஆணைத் தொடர்களில் பல் ஒளி மூலங்களைக் கணிப்பிட முடியும்.

lighness : வெளிர்மை : ஒரு குறிப்பிட்ட வண்ணத்தில் உள்ள ஒளி அல்லது இருள்.

light pen : ஒளிப் பேனா : பேனாவைப் போன்ற வடிவுடைய மின்னணுக் கருவி. கத்தோடு கதிர்க்குழாய் ஒன்றின் திரையில் எழுதுவது அல்லது வரைவதன் மூலம் கணினி ஒன்றுக்கு உள்ளீடு வழங்கப் பயன்படுத்தலாம். வெளிப்படுத்தும் முனைய இயக்குநர்களுக்கான கருவி. கம்பி ஒன்றின் மூலம் கணினியுடன் இணைக்கப்பட்டது.

light sensitive screens : ஒளியுணர்வுத் திரைகள்.

lighted dots : ஒளிப்புள்ளிக் குறிகள்.

lightwave system : ஒளி அலை அமைப்பு : மிக அதிகவேகத்தில் ஒளி இழைகள் மூலம் ஒளித்துடிப்புகளை அனுப்பும் சாதனம் (நொடிக்கு ஜி-பிட் வரிசை). நகரங்களுக்கிடையிலான தொலைபேசி இணைப்புகள் ஒளி அலை அமைப்புகளாக மாற்றப்பட்டுள்ளன.

LILO : Last in Last out என்பதற்கான குறும்பெயர். வரிசைப் பட்டியல் அல்லது ஒன்றிலிருந்து கடைசியாக இடப்பட்டதை கடைசியாகப் பெறும் சேமிப்பு அல்லது பெறும் முறை.

limit check : வரம்புச் சோதனை : ஒரு குறிப்பிட்ட எல்லை வரம்புக்குள் மதிப்பீடுகள் அமைகின்றனவா என்பதை தகவல் களம் ஒன்றின் மதிப்பீட்டை சோதனை செய்யும் உள்ளீட்டுக் கட்டுப்பாட்டு உத்தி.

LIM-EMS : லிம்-இஎம்எஸ் : Lotus Intel Microsoft என்பதன் குறும்பெயர்.

limiting operation : வரம்பு இயக்கம் : முறைமை ஒன்றில் மிகச் சிறிய திறன் அல்லது மிகக் குறைவான வேகம் உள்ள செயல். மாற்று வழி எதுவும் இல்லாத நிலையில் குறைவான திறன் உள்ள செயல் உள்ள நடவடிக்கை காரணமாக அந்த முறைமையின் முழுத் திறனையும் மிகக் குறைவான திறன் உடைய வரம்பு இயக்கத்தின் திறனாக வகைப்படுத்தலாம். Bottle neck என்பதற்கு ஒத்தது. Bound என்பதைப் பார்க்கவும்.

LIMS : லிம்ஸ் : லிம்ஸ் எம்ஸ் வரையறைகளுடன் கூட்டுறவில் உருவான லோட்டஸ் இன்டெல் மைக்ரோசாஃப்ட்.

Linda : லின்டா : சி, சி++ போன்ற மொழிகளுடன் சேர்க்கப்படும் இணை செயலகப் பணிகளின் தொகுதி. செயலாக்கங்களுக்கிடையே தகவல்களை உருவாக்கி, மாற்றி அனுப்ப இது அனுமதிக்கிறது.

line : வரி; இணைப்பு : *1.* கணினி வரைபடம் ஒன்றில் முடிவு இல்லாமல் ஜியோமிதியில் இரு திசைகளில் நீளும் புள்ளிகள் அல்து கோடுகள். கணிதவியலில் வேறு வழியாகக் கூறப்படாதவரை இக் கோடுகள் நேர் கோடுகள் என்று கூறப்படும். 2. பெரும்பாலான ஆணைத் தொகுப்பு மொழிகளில் ஒரு கோடு கண்டறியக் கூடிய எண் ஒன்றில் ஒரு கோடு துவங்குகிறது. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட உரைகளைக் கொண்டதாக உள்ளது. சில நேரங்களில் ஒரு கட்டளைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கோடுகள் தேவைப்படுகின்றன. *3.* தகவல் தொடர்பில் எந்த ஒரு வகை

யான வழி குறிப்பாக தொலைபேசி இணைப்புகள்.

line adapter : கல்வி ஏற்பி: தகவல் தொடர்புகளில் பயன்படும் மோடெம் போன்ற ஒரு சாதனம். தகவல் தொடர்புக் கம்பியில் அனுப்புவதற்கேற்ற வடிவில் டிஜிட்டல் சமிக்ஞையை மாற்றுகிறது. இணை/தொடர் மாற்றுதலையும், குறிப்பேற்றம் மாடுலேஷன், குறிப்பிறக்கத்தையும் (டீ மாடு லேஷன்) மாற்ற உதவுகிறது.

line analyzer : கம்பி ஆய்வர் : ஒரு தகவல் தொடர்புக் கம்பி அனுப்புவதைக் கண்காணிக்கும் சாதனம்.

linear : நேரான; அடுத்தடுத்த : வரிசையான அல்லது ஒரு நேர்க்கோடான வரைபடத்தைக் கொண்டிருப்பது.

linear IC : நேர் வழி ஒருங்கிணைந்த சுற்று : டிஜிட்டல் ஒருங்கிணைந்த சுற்றுக்கு எதிரானது.

linear list : வரிசைப்பட்டி.

Linear Programming (L.P) : நீள் ஆணைத் தொகுப்பு தயாரிப்பு : ஒரு பிரச்சினைக்குத் தீர்வாகச் சிறந்த வழி இல்லாத நிலையில் மிகச் சிறந்த கலவை ஒன்றைக் கண்டுபிடிக்கும் உத்தி. இந்த உத்தி குறைந்த செலவில் சிறந்த சத்துள்ள மிக அதிகமான கலோரிகளைத் தரும் உணவுக் கலவையைத் தயாரிப்பது எப்படி என்பதற்குப் பயன்படும். மனிதர்களால் இதற்குத் தீர்வு காண்பதற்கு நீண்ட நேரம் ஆகும் என்பதால் இச் சமயங்களில் கணினி வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது.

linear search : நீள் தேடல் : முதல் மூலகத்தில் துவங்கும் தேடல்; பொருந்தக்கூடிய விசை ஒன்றைக் கண்டுபிடிக்கும்வரை அல்லது வரிசையின் இறுதியை அடையும் வரை ஒப்பிடல் தொடர்கிறது.

linear structure : வரிசை முறை அமைப்பு : 1. தகவல் தள நிர்வாக முறைமையில் ஒரு வகையான கோப்பு அமைப்பு முறை. இதில் ஒவ்வொரு முதன்மை ஆவணமும் ஒரு துணை ஆவணத்தைத்தான் பெற முடியும். முதன்மை ஆவணம், நிரம்பி வழியும் பொழுது கொள்கலனாக துணை ஆவணம் செயல்படுகிறது. 2. புள்ளி விவர ஆவணங்களை நிரல் நிறையாக வரிசைப் படுத்துதல்.

linear video : வரிசை முறை ஒளிக் காட்சி : ஒளிக்காட்சி நாடா அல்லது ஒளிக்காட்சி வட்டை தொடர்ந்து கீழிலிருந்து மேலாகச் சுற்றுவது.

line at a time printer : ஒரு வரி அச்சுப்பொறி : ஒரு நேரத்தில் ஒரு வரியை அச்சிடும் அச்சுப்பொறி.

line balancing : வரி சமன் செய்தல்; தடம் சமனாக்கல் : உற்பத்திச் சூழல்களில் பணிகள் கணினி வரைபட பணி நிலையங்களுக்கு சம அளவில் ஒதுக்கி அவற்றின் திறனை உயர்த்துகிற நிர்வாக உத்தி.

line chart : கோட்டு வரைபடம் : வணிகத் தகவல்களை X, Y அச்சுகளிடையே ஒரு கோடாகக் காட்டுதல்.

line circuit : வரிச்சுற்று : சுற்றின் இயற்பியல் வழி தகவல் தொடர்பு இணைப்பைப் போன்றது.

Line counter : வரி எண்ணி : அச்சிடப் பட்ட வரிகளின் எண்ணிக்கையைக் கூட்டி பக்கம் அச்சிட வேண்டிய இடத்தை முடிவு செய்யப் பயன் படுத்தப்படும் எண் மாறிலி.

line dot matrix printer : வரிப்புள்ளி அச்சுப்பொறி : டாட் மாட்ரிக்ஸ் முறையை பயன்படுத்தும் வரி அச்சுப்பொறி.

line drawing : வரை கோட்டுப்படம் : வடிவத்தின் புற விளிம்பை இடையீடற்ற கோட்டினால் குறிப்பதின் மூலம் பொருள்களை படமாக வரையும் முறை.

line driver : வரி இயக்கி : தனியார் கம்பிகள் வழியாக இணைக்கப்படும் முகப்புகளுக்கும் கணினிகளுக்கும் இடையில் உள்ள அனுப்பும் தொலைவை நீடிக்கப் பயன்படுத்தும் சாதனம். டிஜிட்டல் டிரான்ஸ்-மிஷனுக்குப் பயன்படுத்தப்படுவது. கம்பியின் ஒவ்வொரு முனையிலும் தேவைப்படுகிறது.

line editor : வரி தொகுப்பி : ஒரு நேரத்தில் ஒரு வரி செய்தியை உருவாக்கி மாற்ற அனுமதிக்கும் எளிமையான தொகுப்பு ஆணைத் தொடர்.

Line Feed (LF) : வரிசை உள்ளீடு; வரியூட்டம் : ஒவ்வொரு வரியாக அச்சாளரின் தாளை முன்நோக்கித் தள்ளும் செயல்.

line filter : வரி வடிகட்டி : மின்சாரக் கம்பியில் குறுக்கிடும் மின்காந்த இடையீடுகளை சரி செய்யும் கருவி.

line frequency : வரி அலை வரிசை : கம்பியின் மூலம் ஒரு நொடியில் அலை அல்லது சில சமிக்ஞைகளின் தொகுதி எத்தனை தடவைகள் அனுப்பப்படுகிறது என்பதைக் குறிப்பிடுவது.

line generator : வரிசை உருவாக்கி : தன்னிச்சையான ஒழுங்கு முறையில் கணினி வரைபட முறையில் வரிகளை உருவாக்கும் வன்பொருள் அல்லது மென்பொருள்.

line graph : கோட்டு வரைபடம் : ஒரு தகவல் விவரத் தொகுதியின் அனைத்துத் தகவல்களையும் இணைக்கும் அல்லது இணைக்க முயலும் வரை படம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் தகவல் தொகுதி ஒன்றின் போக்குகளைக் காட்ட கோட்டு வரை படம் பயன்படுத்தப்படலாம்.

line height : வரி உயரம் : ஒரு வரிசை அச்சுக்களின் உயரம். ஒரு அங்குல உயரத்துக்கு எத்தனை வரிசைகள் என்ற அலகில் கணக்கிடப்படுகிறது.

line hit : கம்பி பாதிப்பு : சமிக்ஞையில் தடை ஏற்பட்டு தகவல் தொடர்புக் கம்பியில் அனுப்பப்படும் தகவல்களில் பிழை ஏற்படுதல்.

line level : கம்பி நிலை : தகவல் தொடர்பு வழித்தடத்தில் சமிக்ஞையின் பலம். டெசிபல் அல்லது நெப்பர் முறையில் அனுப்பப் படுகிறது.

line number : வரிசை எண்; வரி எண்: பேசிக் போன்ற ஆணைத் தொகுப்பு மொழிகளில், அடையாளம் காணலுக்காக ஆதார ஆணைத் தொகுப்பின் ஒரு வரியின் துவக்கமாக அமைகிற எண், எண் அடையாள வில்லை.

line of code : குறியீட்டு வரி : ஆணைத் தொகுப்பு மொழி ஒன்றில் கட்டளை - வழமையாக ஒரு வரிக் குறியீட்டை ஆக்கிரமித்திருக்கும்.

line of sight : பார்க்கும் கம்பி : கம்பித் தொடர்பில்லாத நுண்ணலை (Micro-wave) தகவல் தொடர்பில் அனுப்பும், வானலை (ஆன்டெனா) வாங்கிக் கும் பெறும் வானலை (ஆன்டெனா) வாங்கிக்கும் இடையே தடையேதும் இல்லாமல் அமைப்பது.

line plot : வரி இடம் : தகவல் புள்ளிகள் வெளிப்படும் வரைபடம்

மற்றும் புள்ளிகளை இணைக்கும் கோடுகள்.

line printer : வரி அச்சடிப்பி; வரி அச்சுப்பொறி; வரிவாரி அச்சடிப்பி: ஒரே நேரத்தில் ஒரே வரியை வெளி யீடாக வழங்கும் புறநிலை அச்சிடு கருவி.

line printer control : வரி அச்சுக் கட்டுப் படுத்து கருவி : எழுத்து அச்சுகளை, புடைப்புகளை தானியங்கிக் கட்டுப் பாட்டை வழங்குகிற சாதனம் மற்றும் குறிப்பிட்ட அச்சுப் பொறிக் கான நேரத்தை நிர்ணயிப்பது.

line printing : வரி அச்சிடல் : ஒரு வரி யில் உள்ள எழுத்துகள் அனைத்தை யும் ஒரே அலகாக அச்சிடல்.

line-protocol (line discipline) : வரி மரபொழுங்கு : தகவல் தொடர்பு இணைப்பின் இரண்டு முனைகளும் தங்களுக்குள் புரிந்து கொள்கிற முறையில் தகவலை அனுப்புமாறு உறுதி செய்யும் துண்மி வரிசையின் தொகுதி.

line segment : வரித் துணுக்கு : நீண்ட வரி ஒன்றின் பகுதி அதன் இரு முனைப் புள்ளிகளால் வரையறுக்கப் படுகிறது.

line space : வரி இடைவெளி : அச்சுக் காகிதம் நகரும்போது வரிகளுக் கிடையில் ஏற்படும் இடைவெளி. தரமான வரி இடைவெளி 1/6 அங்குலம். ஆனால், மென்பொருள் கட்டளைகளின் மூலம் இதை மாற்றலாம்.

line speed : வரி வேகம் : ஒரு குறிப்பிட்ட வழியில் சமிக்ஞைகளை அனுப்பக் கூடிய உயர்ந்தபட்ச வேக விகிதம் வழமையாக செய்தி வேகம் (Baud) அல்லது விநாடிக்கு இத்தனை துண்மிகள் என்று கணக்கிடப் படுகிறது.

lines per minute (LPM) : நிமிடத் துக்கான வரிகள் : வரி அச்சுப்பொறி ஒன்றின் வேகத்தை நிமிடத்துக்கு இத்தனை வரிகள் என்று குறிப்பிடு வதுண்டு.

line squeeze : வரி சுருக்குதல் : அஞ்சல் சேர்த்தலில் பெயர், முகவரி களில் வெற்று வரி வரும்போது செய்தியில் செய்யப்படும் செங்குத் தான சரிப்படுத்தல்.

line style : வரிக் குறியீடு; கோட்டு வகை : கணினி வரைபடத்தில் வரை பட முறைமையில் ஒரு வரியை இடைக்கோடு, தடித்த கோடு அல்லது புள்ளிகளால் குறிப்பிடும் முறை.

line surge : மின்சார வெள்ளம்; மின் தொடர் எழுச்சி : திடீரென்று உயர்ந்த வோல்ட் மின்சாரம் பாயும் நிலை. உயர் வோல்ட் மின்சாரம் திடீரென்று குறுகிய காலத்திற்குப் பாய்வதால், தவறான பதிவு, தவறான செயல் பாடு, தகவல்கள் இழத்தல், சில சமயங்களில் கணினியில் மிகவும் நுண்ணிய இணைப்புகள், தகவல் உள்ளீட்டு முனையங்கள், தகவல் பரிமாற்ற சாதனங்களின் அழிவு முதலியன ஏற்படுவதுண்டு. திடீ ரென்று மின்சார டிரான்ஸ்பர்மர் களை இயக்குதல் பிற துணைக் கருவி கள் இயக்குதல் மின்னல் மற்றும் பிற காரணங்களால் ஏற்படுவதுண்டு. உயர் வோல்ட் மின்சாரம் திடீரென்று பாய்வதைத் தடுக்கும் சாதனங்களால் கருவிகளைப் பாதுகாக்கலாம்.

line voltage : மின் இணைப்பு அழுத் தம் : மாற்று மின்சார அழுத்தம். அவற்றில் உள்ள செருகு சாதனக் கருவியிலிருந்து வருவது.

line width : கோட்டின் பருமன் ; கோட்டுத் தடிப்பு : வரைபட முறை

மையில் ஒரு கோட்டின் இயற்பியல் பருமன்.

Link : இணைப்பு; தொடர்பு : தகவல் பரிமாற்றத்தில் ஒரு இடத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையிலான இயற்பியல் இணைப்பு. அதன் பணி தகவல்கள் மற்றும் செயற்கைகோள் தொடர்புகளை இணைத்தல்.

linkage : இணைப்பு : இரு தனித்தனி குறியீட்டு வாலாயங்களை இணைக்கும் குறியீட்டு முறைமை. ஆணைத் தொகுப்பு ஒன்றுடன், அதன் பயன் பாட்டின்போது கையாளப்படும் துணை வாலாயம் ஒன்றை இணைத்தல். calling sequence என்பதைப் பார்க்கவும்.

link edit : இணைப்புத் தொகுதி : ஒட்டுவதற்கான ஆணைத் தொடரை உருவாக்க இணைக்கும் தொகுப்பியைப் பயன்படுத்துவது.

linked list : தொகுப்புப் பட்டியல்; தொகுக்கப்பட்ட பட்டியல் : தகவல் மேலாண்மையில் பல வகையறாக்கள் பட்டியலிடப்பட்டு ஒவ்வொன்றும் அடுத்ததைக் காட்டுவதாக அமைக்கப்படும். தொடர்ந்து பரவாத சேமிப்பு இடங்களில் வரிசை முறையிலான தகவல் தொகுதிகளை தொகுக்க இது அனுமதிக்கிறது.

linkage editor : இணைப்பு தொகுப்பி; இணைப்புப் பதிப்பி : தனித் தனியாக தொகுக்கப்பட்ட ஆணைத் தொடர் பகுதிகள் பலவற்றை ஒன்றாக்கி ஒரு கூறை 'மாடுல்' உருவாக்கக்கூடிய ஆணைத் தொடர். ஆணைத்தொடர் மாடுல் கூறுகளிலும், துணை வாலாய (சப்ரொட்டீன்) நூலகங்களிலும் உள்ள குறிப்புகளை இது முறையாக ஒன்றுபடுத்துகிறது. இதன் வெளியீடு கணினியில் ஒட்டுவதற்குத் தயாரான ஏற்றும் கூறாகக் கிடைக்கும்.

linker : இணைப்பாளி; இணைப்பி : பிற ஆணைத் தொகுப்புகளை அல்லது ஆணைத் தொகுப்புகளின் பகுதிகளை இணைக்கும் ஆணைத் தொகுப்பு. தனித்தனியான ஆணைத் தொகுப்பு கற்றைகளை ஒரு செயல்படு ஆணத் தொகுப்பாக இணைக்கிறது.

linking loader : இணைப்பேற்றி : பல ஆணைத் தொகுப்புப் பகுதிகளை இணைக்கக்கூடிய நிர்வாக ஆணைத் தொகுப்பு. அதன் மூலம் அவை கணினியில் ஒரு அலகாகப் பயன்படுத்த முடியும். முக்கியப் பணிக்குத் துணைப் பணிகள் எளிதாகக் கிடைக்கக் கூடியதாக ஆக்கும் பயனுள்ள மென்பொருள் துணுக்கு.

link language : தொடர்பு மொழி.

link list : இணைப்புப் பட்டியல்.

link register : இணைப்புப் பதிவேடு; இணைப்புப் பதிவகம் : தொகுப்பியின் நீட்சியாகச் செயல்படும் ஒரு துண்ம பதிவேடு. இது சுழற்சி அல்லது பணி நிகழ்வின்போது பயன்படுகிறது. கைப்பதிவேடு என்றும் கூறுவார்கள்.

links : இணைப்புகள் : கணினி இணையம் ஒன்றில் தகவல் தொடர்பு வழிகள்.

link testing : இணைப்பு சோதித்தல் : ஒரு புதிய கணினி அமைப்பு ஏற்கனவே பயன்பட்டு வரும் ஒன்றுடன் சேருவதற்கு ஏற்றதா என்பதை ஆராயும் செயல்முறை.

linotronic : லைனோடிரானிக் : அமெரிக்காவின் லைனோடைப் கார்ப்பரேஷன் உருவாக்கி உற்பத்தி செய்யும் அச்செழுத்துக் கருவியின் உரிமை பெற்ற தர வகை. லைனோடிரானிக் 1200 - 2500 டிபிஐ அளவுக்கு மிக அதிக தெளிவு உள்ளது. வணிக

முறையில் அச்சிடும் இடங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

linpack : லின்பேக் : எண்முறை லீனியர் அல்ஜிப்ராவுக்கான ஃபோர்ட்ரான் ஆணைத் தொடர்களின் தொகுப்பு. கணினியின் மிதக்கும் புள்ளி செயல்பாட்டினை சோதனை செய்யப்படும் 'பெஞ்ச் மார்க்' ஆணைத் தொடர்களை உருவாக்க இது பயன்படுத்தப்படுகிறது.

linus : லைனஸ் : லைனஸ் டோர் வால்ட்ஸ் நிறுவனம் உருவாக்கிய x86 சிப்பு தொகுதிக்கான இலவசமாகக் கிடைக்கும் யூனிக்ஸ் இயக்க அமைப்பு.

Lips : லிப்ஸ் : Logical Inferences Per Second என்பதன் குறும்பெயர். 5வது தலைமுறை கணினியின் வேகத்தை அளப்பதற்கான அலகு.

Liquid Crystal Display : LCD : நீர்மப் படிகக் காட்சி: திரவப் படிகக்காட்சி : இரண்டு தாள் துருவமாக்கு பொருளை திரவப் படிகக் கரைசலின் மூலம் இணைத்துக் காட்டும் காட்சி வெளியீடு. மின்னோட்டம் காரணமாக திரவப்படிகள் இணைகின்றன. அதனால் அவற்றின் வழி ஒளி ஊடுருவுவதில்லை; படிமங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

Liquid Crystal Shutters : நீர்மப் படிக மூடிகள் : மின் ஒளிப்பட வரைபட அச்சுப்பொறியில் உருளைக்கு ஒளியை அனுப்பும் முறை. திரவ படிகப் புள்ளிகள் மூடிகளாகச் செயலிட்டு திறந்து மூடுகின்றன.

Lisa : லிசா: ஆப்பிள் கணினி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட வணிகத்துக்கான குறுங்கணினி.

LISP : லிஸ்ப் : List processing என்பதன் குறும்பெயர். மொழியியல் அலசல் பட்டியல்களைக் கொண்ட தகவல்களை வகை செய்வதை முதல் நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப் பட்ட உயர்நிலை ஆணைத்தொகுப்பு முறைமை. இது உரையைக் கையாளுவதற்கும் ஆய்வு செய்வதற்கும் சிறப்பாக அமெரிக்காவில் செயற்கைப் பகுத்தறிவுக்கான தேர்வு செய்யப்படும் ஆணைத் தொகுப்பு மொழி.

Lisp machine : லிஸ்ப் கணினி : செயற்கையான பகுத்தறிவுப் பயன் பாடுகளுக்காக குறிப்பாக வடிவமைக்கப்பட்ட கணினி. அதுவும் Lisp மென்பொருளைப் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டது.

list : பட்டி : 1. வரிசை முறைமையற்ற வழியில் தகவல்களைப் பெறுவதற்காக உள்ளடக்க பட்டியல், குறிப்பிட்டுக் காட்டிகளைப் பயன்படுத்தி தகவல்களைச் சேர்த்தல். 2. வரிசைப் படுத்தப்பட்ட குழு பொருள்கள். 3. உள்ளீட்டுத் தகவலின் ஒவ்வொரு சம்பந்தப்பட்ட பொருளையும் அச்சிடல். 4. ஆணைத் தொகுப்பு அறிவிக்கைகளை அச்சிடுவதற்கான கட்டளை. எடுத்துக்காட்டாக அடிப்படை மொழியில் உள்ள வரிசைக் கட்டளை ஆணைத்தொகுப்பை அச்சிடச் செய்யும். 5. வரிசைப்படுத்தப்பட்ட தொகுப்புப் பொருள்கள்.

listing : வரிசையிடு; பட்டியலிடல் : அச்சிடு கருவியில் உருவாக்கப்பட்ட பொதுவான ஏதாவதொரு அச்சிடப் பட்ட பொருள். ஆதார வரிசை என்பது தொகுப்பானால் வகைப் படுத்தப்பட்ட ஆதார ஆணைத் தொகுப்பு. ஒரு தவறான வரிசையிடல் என்பது எல்லா உள்ளீட்டுத் தகவல்களும் வகைப்படுத்தும் ஆணைத் தொகுப்பினால் பயனற்றவை என அறியும் நிலை.

list organization : பட்டியல் நிறுவனம் : பட்டியல்கள் வடிவில் தகவல்களைச் செயலாக்கும் முறை.

list processing : பட்டியல் வகைப் படுத்தல் : தகவல்களை பட்டியலாக வகைப்படுத்தும் முறை.

list processing language : பட்டியல் அஞ்சல் மொழி; பட்டியல் வகைப் படுத்தும் மொழிகள் : தகவல்களை IPL, LISP, POP-2, மற்றும் SAIL போன்ற வடிவங்களுக்கு மாற்றுவதற்கு வகை செய்யும் விதத்தில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மொழிகள்.

list structure : பட்டியல் வடிவமைப்புகள்: டி.பி.எம்.எஸ் அமைப்பில் தகவலைச் சேமிக்கும் முறை. இதில் காட்டிகள் மூலம் பதிவேடுகள் இணைக்கப்படுகின்றன.

literal : நிலையுரு : மாற்றமிலி என்பதற்கு மாற்றுப்பெயர். இக்குறியீடு தன் விளக்கம் உடையது.

litrary function : நூலகச் செயல் கூறுகள்; நூலகச் சார்பு; மொழியகச் சார்பலன் :

live data : நடப்புத் தகவல் : கணினி ஆணைத் தொகுப்பு ஒன்றினால் வகைப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள்.

liveware : உயிர்ப் பொருள் : கணினி மையம் ஒன்றில் உள்ளோர் அல்லது வன்பொருள் மற்றும் மென் பொருள் களைப் பயன்படுத்துவோர்.

load : ஏற்றி : 1. கணினி ஒன்றின் சேமிப்பிலிருந்து தகவல்களைப் படித்தல். 2. அட்டை வாசிப்பானில் அட்டைகளை இடல். காகித நாடா வாசிப்பானில் காகித நாடா ஒன்றை இடல் அல்லது வட்டத் தகடு இயக்கும் பிரிவில் வட்டத் தகட்டுத் தொகுப்பை இடல்.

load and go : ஏற்றி இயக்கு : ஆணைத் தொகுப்பு ஒன்றின் ஏற்றுதல் மற்றும் இயக்கப் பகுதிகளை ஒரே தொடர்ச்சியாக நிகழ்த்தும் இயக்க உத்தி.

loader : ஏற்றுவி : உள் சேமிப்பில் உள்ள ஆணைத் தொகுப்புகளை அவற்றை நிறைவேற்ற வகை செய்யும் தயாரிப்பாக படிக்க வகை செய்யும் விதத்தில் வடிவமைக்கப் பட்ட பணி நிரல்.

load high : மேலே ஏற்று : உயர் நினைவகத்தில் ஆணைத் தொடர்களை ஏற்றுதல்.

Load Module : ஏற்றும் கூறு : கணினி இணைப்பினால் உடனடியாக செயல்படுத்தப் பொருத்தமான வடிவில் உள்ள கணினி ஆணைத் தொகுப்பு.

load point : ஏற்றுப்புள்ளி : மின்காந்த நாடா ஒன்றில் பதிவு துவங்கும் புள்ளி.

load sharing : சுமைப் பகிர்வு : உயர் சுமை நேரங்களில் கூடுதல் வேலையை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கணினிகளைப் பயன்படுத்தும் உத்தி. உயர் சுமைக்கும் குறைவான பளு உள்ள நேரங்களில் ஒரு கணினியை மட்டுமே பயன்படுத்துதல் விரும்பத் தக்கது. பிறவற்றை நெருக்கடி நிலைக்கு உதவு கருவியாகப் பயன்படுத்தலாம்.

local. : உள்ளமை : 1. அதற்குரிய இடத்தில் உள்ள கணினி ஒன்றின் கருவி தொடர்பானது. 2. ஆணைத் தொகுப்பு ஒன்றின் வரையறுக்கப் பட்ட பகுதியில் பயன்படுத்தப்படும் பொருள்கள் தொடர்பானது.

Local Area Network : LAN : குறும் பரப்பு பிணையம்; சிறு பரப்பு பிணையம்; பகுதி வலைப்பின்னல்; வளாகப் பிணையம் : கட்டடம் ஒன்றில் உள்ள பல்வேறு வன்பொருள் சாதனக் கருவிகளை இணைக்கும் தகவல் தொடர்பு பிணையம். தொடர்ச்சியான கம்பியினால் பிணைக்கப் பட்டிருத்தல் அல்லது கட்டடத்தின் உள் பகுதிக்கான குரல் தகவல் தொலைபேசி முறைமையினால் பிணைக்கப்பட்டிருத்தல்.

local bus : உள்ளமை வழித்தடம் : செயலகத்திற்கும் முதன்மை நினைவகத்திற்கும் இடையே வேகமாகவும் அகலமாகவும், இணைப்பை ஏற்படுத்துவது அல்லது வீடியோ ஏற்பி.

local bypass : உள்ளமை துணைவழி: உள்ளூர் தொலைபேசி நிறுவனத்தைப் பயன்படுத்தாமல் இரண்டு வசதிகளுக்கிடையே இணைப்பை ஏற்படுத்துவது.

local intelligence : உள்ளமை நுண்ணறிவு; பகுதிப் பகுப்பாய்வு : முனையம் ஒன்றிலேயே அமைக்கப்பட்டுள்ள வகைப்படுத்தும் திறன் மற்றும் சேமிப்புத்திறன். அதனால் சில பணிகளைச் செய்ய கணினி ஒன்றுடன் இணைக்கத் தேவையில்லை.

local loop : உள்ளமை தனிச்சுற்று வழி:வாடிக்கையாளருக்கும் தொலைபேசி நிறுவனத்தின் மைய அலுவலகத்திற்கும் இடையேயான தகவல் தொடர்புப் பாதை.

local memory : உள்ளார்ந்த நினைவகம்: தனி மையச் செயலகத்தில் பயன்படுத்தப்படும் நினைவகம் அல்லது தனி ஆணைத் தொடருக்கோ அல்லது பணிக்கோ ஒதுக்கப்படுவது.

local store : பகுதி சேமிப்பகம்; உள்ளமைத் தேக்ககம் : உயர்வேக சேமிப்புத் திறனுள்ள குறைந்த எண்ணிக்கையிலான பொருள்கள். நேரடியாக கட்டளைகளை அவைகளுக்கு அனுப்ப இயலும்.

local terminal : உள்ளார்ந்த முனையம்: மையச் செயலகத்திற்கு அருகே உள்ள முகப்பு. ஆகவே, அதனை நேரடியாக இணைக்க முடியும்.

local variable : உள்ளார்ந்த மாறி : துணை வாலாயம் (சப்ரொட்டீன்) போன்ற ஒரு ஆணைத் தொடர் கூறு மாடுல் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய மதிப்பினைக் கொண்ட மாறிலி. முதன்மை நினைவகம் அல்லது பிற கூறுகளால் அணுகக்கூடியதாகவோ அல்லாததாகவோ இது இருக்கலாம்.

local talk : உள்ளமைப் பேச்சு : ஆப்பிள் நிறுவனத்தின் 'லேன்' அணுகு முறை. இது முறுக்கப்பட்ட இணைக்கம்பி களைப் பயன்படுத்தி ஒரு நொடிக்கு 2,30,400 துண்மிகளை அனுப்புகிறது. Apple Talkஇன் கீழ் இயங்கி டெய்சி சங்கிலி இடத்திய டோப்பாலஜியைப் பயன்படுத்துகிறது. 1,000 அடி தொலைவுவரை உள்ள 32 சாதனங்களை இது இணைக்கும். மூன்றாவது நபர் பொருள்களுடன் வழித்தடம், அமைதியான நட்சத்திரம் மற்றும் இயங்கும் நட்சத்திர இடத்தியல்களில் இயங்கும். ஆப்பிள் டாக் கட்டமைப்பிலும் இயங்க முடியும்.

location : இருப்பிடம்; அமைவிடம் : கணினி ஒன்றின் நினைவகத்தில் தகவல்களைச் சேமிப்பதற்கான பகுதி.

lock : பூட்டு : 1. கணினி ஆதாரத்தை ஒருவர் மட்டும் பயன்படுத்த உதவுதல். 2. மாற்றப்படுதல் அழித்தலி

லிருந்து வட்டினை அல்லது நாடாக் கோப்பைப் பாதுகாத்தல்.

lock code : பூட்டுக்குறியீடு : பயன் படுத்துவோரின் ஆணைத் தொகுப்பை அங்கீகாரமற்ற வகையில் காலப்பகிர்வு முறையில் பயன்படுத்தும் பிறரால் சிதைக்கப் படாமல் காக்க வழங்கப்படும் வரிசைப் படியான எழுத்துகள் மற்றும் எண்கள். பயனாளர் சரியான பூட்டுக் குறியீட்டைப் பயன்படுத்தாவிட்டால் பயனாளர் ஆணைத் தொகுப்பில் மாற்றங்களைச் செய்ய கணினி மறுக்கும்.

locked up keyboard : பூட்டப்பட்ட விசைப்பலகை : விசைகளின் இயக்கத்துக்கு கணினி இயங்க மறுக்கும் நிலைமை.

locking a disk : வட்டைப் பூட்டல் : வட்டு ஒன்றின் உரிமை பாதுகாக்கப் பட்டதாக இருந்தால் அந்த வட்டு பூட்டப்பட்டதாகும். கணினியின் பிற தகவல்களினால் வட்டின் உள்ளடக்கங்கள் திருத்தப்படாமல் பாதுகாப்பதை இந்நடவடிக்கை உறுதி செய்கிறது.

lockout : வெளித்தாழ்; அடைப்பு : 1. இடையீட்டை ஒடுக்குதல். 2. பல்முனை வகைப்படுத்து சூழலில் முக்கிய தகவல்களை ஒரே நேரத்தில் வகைப்படுத்தும் அலகுகள் பெற வகை செய்யும் ஆணைத் தொகுப்பு உத்தி.

lockup : பூட்டப்பட்ட; முடக்கம் : மேலும் எந்தச் செயலும் நடைபெற முடியாத சூழ்நிலை.

log : பதிவு; பதிவு செய்தல் : ஒவ்வொரு வேலை அல்லது ஓட்டம், அதற்குத் தேவைப்படும் நேரம், இயக்குபவர் செயல்கள் மற்றும் தொடர்பான தகவல்களைப் பட்டியலிடும் தகவல் செயலாக்கக் கருவியின் இயக்கங்களின் பதிவேடு.

log off : முடிப்பு; முடித்தல்.

log on : ஆரம்பம்; தொடங்குதல்.

log out : முடிவுறுதல்.

log-in name : தொடங்கு பெயர்.

logarithm : லோகரிதம்; மடக்கை : ஒரு குறிப்பிட்ட எண்ணை உருவாக்க ஒரு நிலையெண்ணை எத்தனை மடங்கு அதிகரிக்க வேண்டும் என்பதைத் குறிப்பிடுவர். அது பொதுவாக 10 அல்லது 0 ஆக இருக்கும். சான்றாக 2இன் 3 மடங்கு 8-க்குச் சமம் என்றால் 2இன் ஆதார எண்ணாகக் கொண்டு 8-ஐக் கொண்டுவர 3 லாகரிதம் ஆகும். இதன் பொருள் 2-ஐ அதன் மூன்றதாவது மதிப்புக்கு உயர்த்தினால் 8 வரும் என்பதாம்.

logarithm tables : மடக்கை அட்டவணை.

log book : பதிவுப் புத்தகம் : கணினி தொழிலுக்குக் கடன் வாங்கப்பட்ட கடல்துறை குழூஉக் குறி. வேலையில் இருக்கும் கணினி பணியாளர்களைப் பற்றியும் அவர்கள் செய்து முடித்த பணிகளைப் பற்றியும் பதிவேடு வைத்துக்கொள்ள இது உதவுகிறது. வன்பொருள் பராமரிப்பு நேர ஒதுக்கீடுகள் மற்றும் பழுதானவைகளைப் பற்றிய பதிவேடு வைத்திருக்கவும் இது உதவுகிறது.

logging-in : உள் நுழைத்தல்; தொடங்கல்; கணிப்பொறியினுட்புகும் செயற்பாடு : உரையாடல் முறையில் ஒப்பமிட்டு கணினியைப் பயன்படுத்தும் உரிமை பெற்றவரைச் சோதித்துக் கணினியுடன் தகவல் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் செயல் முறை.

logging off : முடித்தல்; வெளி வருதல்: கணினிக்கும் அதைப் பயன்படுத்து பவருக்கும் இடையே உள்ள தகவல் தொடர்பை முடித்து வைக்கும் செயல் முறை.

logic : தருக்கம்; அளவை; தருக்கப் பொருத்தம்; அளவைப் பொருத்தம் : 1. காரணமறிதல், கருத்து ஆகிய முறை யான கொள்கைகளை ஆராயும் அறிவியல். 2. தானியங்கி தகவல் செயலாக்க அமைப்பில் எண் முறைக் கணிப்புகள் செய்யும் அளவைப் பொருள்களுக்கிடையிலான இணைப்பு மற்றும் உண்மைப் பட்டியல்களைப் பயன்படுத்துவது பற்றிய அடிப் படைக் கொள்கைகள்.

logic gates : தருக்க வாயில்கள் : மின் இலக்க முறை மின் சுற்றில் உள்ள பொருள்கள்.

logic element : தருக்கப் பொருள்: ஒரு தருக்கப் பணியைச் செய்யும் சாதனம்.

logical add : தருக்கக் கூட்டல் : கணினி தருக்க இயக்கத்தில் ஒரு அளவை கூட்டல்.

logic board : தருக்கப் பலகை.

logic card : தருக்க அட்டை.

logic circuit : தருக்கச் சுற்றமைப்பு.

logical comparison : தருக்க முறை ஒப்பீடு:தகவல் அல்லது விளக்கங்கள் போன்ற இரண்டு வகையான தகவல்களை ஒப்பிட்டு அவை ஒரே மதிப்புகளைக் கொண்டவையா என்பதை முடிவு செய்யும் தருக்கம்.

logical data : தருக்க முறை தகவல்: உண்மை அல்லது பொய் என்று பட்டம் தரப்பட்ட இரண்டு மதிப்பு களில் ஒன்று.

logical data design : தருக்க முறை தகவல் வடிவமைப்பு.

logical data elements : தருக்க முறை தகவல் பொருள்கள் : எந்த பருப் பொருள் ஊடகத்தின் மீது பதியப் படுகிறது என்பதற்குத் தொடர் பில்லாத சுயேச்சையான தகவல் பொருள்கள்.

logical data group : தருக்க முறை தகவல் குழு : பல மூலாதாரங்களில் இருந்து எடுக்கப்படும் விவரம்.

logical data system : Design : தருக்க முறை தகவல் அமைப்பின் வடி வமைப்பு : தகவல்களுக்கிடையி லான உறவைக் காட்டும் வடி வமைப்பு. பயன்பாட்டு ஆணைத் தொடர்கள் அல்லது தனிப்பட்ட பயன்படுத்துபவர்கள் தகவல்களை எவ்வாறு பார்க்கிறார்கள் என்பது.

logical decision : தருக்க முறை முடிவு: இரண்டு வகையான செயல் முறை களில் எதைக் கடைப்பிடிக்கலாம் என்பது. மதிப்புகளை ஒருவாறு ஒப்பிடுதலை அடிப்படையாகக் கொண்டது.

logical design : தருக்கமுறை வடிவமைப்பு : குறியீட்டுத் தருக்க முறையில் ஒரு கணினி அமைப்பு பகுதிகளுக்குள் செயல் உறவு எப்படி இருக்கும் என்பதைக் குறிப்பது. வன்பொருள் இயக்கத்தின் தொடர் பின்றி அமைவது.

logic diagram : தருக்க வரைபடம்.

logical drive : தருக்க முறை இயக்கி : தனி அலகாக நிர்வகிக்கப் பட்டு பெயரிடப்படும் பருப்பொருள் இயக்கியில் ஒதுக்கப்பட்ட பகுதி.

logic element : தருக்க உறுப்பு.

logical error : தருக்க முறைப் பிழை: ஆணைத் தொடர் மொழி இலக்கணப்படி சரி என்றாலும்

தவறான செயல்முறை ஏற்படக் காரணமான ஆணைத் தொடரமைப்பு பிழை.

logical expression : தருக்க வெளிப்பாடு : உண்மை அல்லது பொய் என்பதை வெளிப்படுத்தும் வெளிப்பாடு.

logical field : தருக்கப் புலம் : ஆம்/இல்லை, உண்மை/பொய் ஆகியவைகளைக் கொண்டுள்ள தகவல் புலம்.

logical file : தருக்க முறைக்கோப்பு: ஒன்று அல்லது மேற்பட்ட தருக்க முறைப்பதிவேடுகளின் தொகுப்பு.

logical inference : தருக்க முடிவுகள்.

logical instruction : அளவை முறை ஆணை : குறியீட்டு தருக்க முறையில் வரையறுக்கப்பட்ட இயக்கத்தை கணினியைச் செய்ய வைக்கும் ஆணை.

logical lock : தருக்க முறைப் பூட்டு: தகவல்களைப் பயன்படுத்துவதிலிருந்து பயன்படுத்துபவரைத் தடுப்பது. மென் பொருள் பயன்படுத்துவதன் மூலம் கோப்பு அல்லது பதிவேட்டில் அடையாளமிட்டு இதைச் செய்யப்படுகிறது.

logical multiply : தருக்க முறை பெருக்கல் :

logical operation : தருக்க முறை இயக்கம் : குறியீட்டு அளவை முறையின் விதிகளுக்கேற்ப இரும எண்களில் செய்யப்படும் எண் கணக்கு அல்லாத இயக்கம்.

logical operations : தருக்க முறை இயக்கங்கள் : தருக்க முறை அடிப்படையில் அமைந்த கணினி இயக்கங்கள் தருக்க முறை முடிவுகள் போன்றது. முடிவு எடுக்கத் தேவையில்லாத தகவல் மாற்றல் இயக்கம் மற்றும் கணக்கீட்டு இயக்கம் ஆகியவைகளுக்கு மாறானது.

logical operator : தருக்க இயக்கி : AND, OR, NOT ஆகியவை கூட்டு நிலைகளை உருவாக்க தொடர்புடைய இணைப்புகளைப் பயன்படுத்த முடியும். பூலியன் தருக்க இயக்கிகளில் ஒன்று.

logical operations : தருக்க முறை வினைகள்.

logical product :தருக்க முறைப் பெருக்கற் பலன்.

logical reasoning : தருக்க முறை விளக்கச் செய்முறைகள்.

logical product : தருக்க முறைப் பொருள்: பல சொற்களின் AND பணிகள். அனைத்து சொற்களும் 1 ஆக இருக்கும் போது பொருள் 1 ஆக இருக்கும். அப்படி இல்லையென்றால் '0' ஆகி விடும்.

logical record : தருக்கப் பதிவேடு : அதன் பருப்பொருள் இருப்பிடத்திற்குத் தொடர்பில்லாமல் ஒரு தகவல் பதிவேட்டைக் குறிப்பிடுதல். இரண்டு அல்லது மேற்பட்ட இடங்களிலும் இதை சேமிக்க முடியும்.

logical rules : தருக்க முறைச் சட்டங்கள்.

logical representation : தருக்க முறைக் குறிப்பீடு : தருக்க முறை வாய்பாடுகளின் தொகுதியைக் கொண்ட அறிவுக் குறிப்பீடு.

logic seeking : தருக்க முறை தேடல்.

Logical sector number : தருக்க முறைப் பிரிவு எண் : தட்டு பிரிவுகளை பக்கம் எக்ஸ், வழித்தடம் எக்ஸ், பிரிவு எக்ஸ் என்று பிரிப்பதற்குப் பதிலாக, தருக்க முறை பிரிவு எண்கள் தட்டின் வெளிப்புற விளிம்

பிலிருந்து தொடங்கி எல்லா பிரிவு களையும் எண்ணி ஒரு பிரிவின் இடத்தைக் குறிப்பிடுகிறது.

logical sum : தருக்க முறைக் கூட்டுத் தொடர்; தருக்க முறைக் கூட்டல் : பல சொற்களின் உள் வாங்கும் or செயல். ஒன்று அல்லது எல்லா சொற்களும் 1 ஆக இருந்தால் தொகையும் 1 ஆக இருக்கும். எல்லாம் 0 ஆனால் அதுவும் 0 ஆகும்.

logical symbol : தருக்க முறைக் குறியீடு.

logic theorist : தருக்க முறை கோட்பாட்டு நிரல்.

logic theory : தருக்க முறைக் கோட்பாடு.

logical system design : தருக்க அமைப்பு வடிவமைப்பு : அடிப்படை தகவல் அமைப்பு பயன்படுத்து பவரின் தேவையை எந்த அளவு சமாளிக்கிறது என்பதற்கான பொது வான தருக்க முறைகளை உருவாக்கு தல்.

logical type field : தருக்க வகைப் புலம்.

logical unit number : தருக்க முறை அலகு எண் : ஒரு பருப்பொருளாக உள்ள வெளிப்புற சாதனத்துக்குக் கொடுக்கப்படும் எண்.

logical value : தருக்க முறை மதிப்பு: ஒரு குறிப்பிட்ட தருக்க முறை முடிவின் விளைவாக உண்மை அல்லது பொய் ஆக மாறும் மதிப்பு.

logic analyser : தருக்க ஆய்வர்: இலக்க முறை அமைப்புகளின் தருக்க நிலைகளைக் கண்காணித்து பின்னர் காட்டுவதற்காக முடிவுகளை சேமிக்கும் ஒரு மின்னணு கருவி.

logic array : தருக்க வரிசை: மின்னணு வாயில்களின் வரிசை. கணினியின் பல்வேறு பணிகளை வாடிக்கை யாளரின் சிறப்புத் தேவைக்கேற்ப செய்வதற்காக வரிசைப்படுத்தப் பட்டு அமைக்கப்படும் ஒருங் கிணைந்த மின்சுற்றுகள்.

logic bomb : தருக்க குண்டு : தகவல் களை அழிக்கும் ஆணைத் தொடர் நிரல். அது வன் தட்டை மறுவடி வமைத்து அல்லது தகவல் கோப்பு களில் தற்செயல் துண்மிகளை அமைத்து நாசம் செய்யலாம். பாழ் பட்ட வெளியில் கிடைக்கும் ஆணைத் தொடர்களை வாங்கி ஏற்று வதன் மூலம் இது பி.சி.யில் கொண்டு வரப்படலாம். ஒரு முறை இயக்கப்பட்டால் நேரடியாக இது பாழாக்குவதில்லை. ஆனால், வைரஸ் அழித்துக் கொண்டே இருக்கும்.

logic chip : தருக்க சிப்பு: செயலக அல்லது கட்டுப்பாட்டுச் சிப்பு.

logic card : தருக்க முறை அட்டை: ஒன்று அல்லது மேற்பட்ட தருக்கப் பணிகள் அல்லது இயக்கங்களைச் செய்யக்கூடிய உறுப்புகள் அல்லது கம்பியிணைப்புகளைக் கொண்ட மின்சுற்று அட்டை.

logic gate : தருக்க முறைக் கதவுகள்.

logic circuits : தருக்க மின்சுற்றுக்கள்: ஒரு கணினி அமைப்பின் குறிப் பிட்ட பகுதியின் உள்ளேயும் வெளி யேயும் மின் துடிப்புகளைச் செலுத் தும் ஏற்ற இறக்கத் தொடர்.

logic control statement : தருக்க முறைக் கட்டுப்பாட்டுக் கட்டளை அறிக்கை.

logic device : தருக்க சாதனம் : ஒரு சாதனத்தை அடையாளம் காட்டும் ஒரு பெயர் அல்லது அடையாளம்.

logic diagram : தருக்க வரைபடம் : தருக்க முறை வடிவமைப்பைக் குறிப்பிடும் வரைபடம். சில சமயங்களில் வன்பொருள் இயக்கத்தையும் இதில் குறிப்பிடுவதுண்டு.

logic drive : தருக்க இயக்கி : வன் வட்டு போன்ற பருப்பொருள் சேமிப்பு ஊடகம். இயக்க அமைப்பு இயக்க அமைப்பிலிருந்து பிரிக்கப்பட்டு தனியான சேமிப்பகங்களாக் கப்படுகிறது. ஒரு வன்தட்டு 42 மெகாபைட் மீமிகு எட்டியல் சேமிப்புத் திறன் உள்ளதாக இருக்கலாம். ஆனால் இயக்குவதற்கு வசதியாக 42 மீமிகு எட்டியலை இரண்டு "தருக்க இயக்கி"களாகப் பிரிக்கலாம். எம்.எஸ் - டாசில் (MS-DOS) இரண்டு இருப்பிடங்களும் சி மற்றும் டி இயக்கி எனப்படும். (ஏ, பி மென் வட்டு இயக்கிக்கு ஒதுக்கப்பட்டிருக்கும்). இங்கு சியும், டியும் பொதுவான சேமிப்பு ஊடகத்தைப் பங்கிட்டுக் கொள்ளும்.

Logic error : அளவை பிழை; தருக்க முறைப்பிழை : ஆணைத் தொடரில் ஏற்படும் பிழை. இதனால் ஆணைத்தொடர் ஓடுவது பாதிக்கப் படாது. ஆனால், வெளியீட்டில் பிழை ஏற்படலாம். அளவை பிழை உள்ள ஆணைத்தொடர்கள் முதலிலிருந்து கடைசி வாக்கியம் வரை ஓடும். ஆனால், தவறான விடையையோ அல்லது வெளியீட்டையோ தரும்.

logic expression : தருக்க முறை எண்ணுருக் கோவை.

logic family : தருக்க குடும்பம் : ஒரே உற்பத்தி தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்டு பல தருக்கப் பணிகளை வழங்கும் மின்னணு சாதனங்களின் வரிசை.

logic field : தருக்க முறைப்புலம்.

logic file : தருக்கக் கோப்பு : தட்டு அல்லது நாடாவில் உள்ள ஒரு கோப்பைக் குறிப்பிடும் பெயர் அல்லது அடையாளம்.

logic log on : தருக்க லாக்-ஆன்: ஒரு கணினி அமைப்புக்கு அதனை பயன்படுத்துபவர் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளும் செயல் முறை.

logic operation : தருக்க இயக்கம்: ஒன்று அல்லது மேற்பட்ட உள்ளீடுகளை ஆராய்ந்த விதிகளின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வெளியீட்டை உருவாக்கும் இயக்கம்.

logic operator : தருக்க இயக்கி: And, Or, Nand, Nor, Executive Or போன்ற பூலியன் இயக்கிகளில் ஒன்று.

logic probe : தருக்க ஆராய்ச்சி : மின்னணு சோதனைக் கருவிகளில் ஒன்று. இது தருக்க நிலைகளில் ஒன்றை - உண்மை (தருக்க 1), பொய் (தருக்க 0) - காட்டும் திறனுடையது.

logic programming : தருக்க ஆணைத் தொடரமைப்பு : சிக்கல்களை உரைக்கவும் தீர்க்கவும் தருக்கத்தையும், அனுமானத்தையும் பயன்படுத்தும் உடன் தொடர் புள்ள அறிவுக் குறிப்பீட்டு அணுகு முறை.

logic programming language : தருக்க ஆணைத் தொடர் மொழி : ஆணைத் தொடரமைப்பு மொழிகளில் ஒரு பிரிவு.

logic seeking : தருக்க தேடல் : இரு திசைகளிலும் செயல்படும் அச்சுப்பொறி சுருக்கமான அச்சிடும் பாதையைக் கண்டுபிடிக்கும் திறன்.

logic seeking printer : தருக்கம் தேடும் அச்சுப் பொறி : வரியின் உள்ளடக்கத்தைத் தேடி அதிவேகத்திலும் வெற்றி

டத்தைத் தாண்டிச் செல்லக்கூடிய அச்சுப்பொறி.

logic symbol : தருக்கக் குறியீடு : ஒரு தருக்கப் பொருளை வரைபட முறையில் குறிப்பிடும் குறியீடு.

logic theorist : தருக்கக் கொள்கையியலார் : கணிதக் கொள்கைகளை எண்பிக்கப் பயன்பட்ட ஆரம்ப கால தகவல் செயலாக்க ஆணைத் தொடர்.

logic theory : தருக்கக் கொள்கை: கணித இயக்கங்களின் அடிப்படையாகக் கொண்ட அளவை இயக்கங்களைப் பற்றிக் கூறும் அறிவியல்.

log in : உள் நுழைதல் : கணினியில் ஒப்பமிட்டுப் பணி துவங்குதல். Log on போன்றது.

log in name : உள் நுழையும் பெயர் : கணினி அமைப்பு ஒரு பயன்படுத்துபவரை அறிந்து கொள்ளும் பெயர். password- க்கு உடன்பாட்டுச் சொல் அல்ல.

logo : லோகோ : உயர்நிலை ஆணைத் தொடர் மொழி. வரைபடமுறை முகப்பு பயன்படுத்துவோரிடம் உள்ளது என்று அனுமானிப்பது. மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இளைஞர்கள் அதிகம் பயன்படுத்துவது. வணிகம் மற்றும் தொழில் துறைகளில் வரைபட முறை அறிக்கைகளை உருவாக்குவதற்கு அதிகம் பயன்படுவது. உரையாடல் முறையில் செயல்பட அனுமதிக்கும். இது திரையில் படங்கள் மற்றும் கணிதப் படங்களை வரைய எளிதில் கற்றுத் தருகிறது. செய்மோர் பாபர்ட் என்பவரால் எம்.ஐ.டியில் உருவாக்கப்பட்டது.

log off : முடி : கணினியுடனான தொடர்பை முடித்து வைப்பது.

logotron logo : லோகோட்ரான் லோகோ : மற்ற லோகோக்களுடன் ஏற்புடைத்தான இதில் 16 கிலோ எட்டியல் (பைட்) சிப்பு உள்ளது.

log on : துவங்குதல்; நுழை முறை : முகப்பு இயக்கத்தை ஒரு பயன்படுத்துபவர் துவங்குவது.

log off (log out) : லாக் ஆஃப் (லாக் அவுட்) : பயன்படுத்துபவர் ஒருவர் தன் வேலை நேரத்தை முடித்துக் கொள்வதை இது குறிப்பிடுகிறது.

log out : நிறுத்துதல்; வெளி வரு முறை : கணினியைப் பயன்படுத்துவதை நிறுத்துதல். log off போன்றது.

long : நீண்ட : ஆணைத் தொடரமைப்பில் பயன்படுவது. 'சி' மொழியில் நீண்ட என்பது 4 எட்டியல் (பைட்டு) கள். அதில் ஒப்பமிடலாம் (-2 ஜி முதல் +2ஜி) அல்லது ஒப்பமிடாமல் விடலாம் (4ஜி).

long card : நீண்ட அட்டை : பி.சி-க்களில், முழு நீள கட்டுப்பாட்டு அட்டை. அதனை விரிவாக்கத்துளைகளுடன் ஸ்லாட்டுடன் பொருத்த முடியும்.

long lines : நீண்ட கம்பிகள் : நீண்ட தொலைவுகளுக்கு தகவல்களை அனுப்புவதைக் கையாளும் திறனுடைய மின் சுற்றுகள்.

long-haul : லாங்-ஹால்: நீண்ட தொலைவுகளுக்குத் தகவல்களை அனுப்பக்கூடிய திறனுள்ள மோடெம்கள் அல்லது தகவல் தொடர்புச் சாதனங்கள்.

longitudinal redundancy check : நீள் தொலைவு திரும்பவரல் சோதனை: பிழை சோதிக்கும் தொழில் நுட்பம். விவரத் தகவல் தொடர்புகளில் பயன்படுவது. இணை சோதனை எழுத்தை ஒவ்வொரு தகவல் கட்டத்திற்குள்

உள்ள ஒவ்வொரு பத்தியின் துண்மி களிலும் அமைக்க முடியும்.

look alike : போலத் தோன்றுதல்; தோற்றப்போலி : 1. ஒரு ஆணைத் தொடரை இயக்குவதன் மூலம் மற்றொன்றையும் இயக்கும் முறை அறிதல். 2. ஒன்றிலிருந்து மற்றொன் றுக்கு படி எடுத்தல். போட்டியாளர் கள் ஒன்று போன்ற வேறொன்றை உருவாக்கி அளிப்பார்கள்.

loop : வட்டம்; சுற்று; மடக்கி; கொக்கி வளையம்: சில குறிப்பிட்ட நிபந் தனைகள் நிறை வேற்றப்படும் வரை மீண்டும் மீண்டும் செயல்படுத்தப் படும் ஆணைத் தொடரின் தொடர் ஆணைகள்.

loop carrier : சுற்றுப்பாதை தூக்கி : தொலைபேசி தகவல் தொடர்பு களில் பயன்படுவது. தொலைவில் உள்ள இறுதி நிலையத்திலிருந்து மைய அலுவலகத்திற்குச் செல்லும் ஒப்புமை (அனலாக்) அல்லது இயக்க முறை (டிஜிட்டல்) கம்பி களைக் கவனிக்கும் ஒரு அமைப்பு. தொலை நிலையத்தின் ஒப்புமைக் குரலை இயக்க முறையாக மாற்றித் தருகிறது. வாடிக்கையாளருக்கு ஐ.எஸ்.டி.என். சேவையை அளிக்க இதைப் பயன்படுத்தலாம்.

loop code : சுற்றுக் குறியீடு : ஒரு ஆணைத்தொடரின் சுற்றைப் பயன் படுத்தி ஆணைகளின் தொடர்ச்சியை மீண்டும் மீண்டும் செய்தல். நேர் வரிசைக் குறியீடு அமைப்பதை விட சுற்றுக் குறியீட்டில் அதிக செயல் நேரம் எடுக்கும். ஆனால், சேமிப் பகத்தில் மீதம் கிடைக்கும்.

loop counter : சுற்றுப்பாதை எண்ணு மிடம் : ஒவ்வொரு முறை ஒரு சுற்றுப் பாதை இயக்கப்படும்போதும் ஒரு எண் (வழக்கமாக 1) அதிகரிக்கும் அல்லது குறைக்கும் கணினி. எத்தனை முறைகள் இயக்கப்படு கிறது என்பதைக் கண்காணிக்க ஒரு ஆணைத் தொடர் மூலம் இது இயக்கப்படுகிறது.

loopback plug : லூப்பேக் பிளக்: கண்டறியும் இணைப்பி. அனுப்பும் கம்பியை மீண்டும் பெறும் கம்பிக்கு அனுப்பி சோதனை செய்யச் சொல்வது.

loophole : ஓட்டை : கணினி அமைப் பின் அணுகுக் கட்டுப்பாடுகளை மீறிச் செல்லும் வன்பொருள் அல்லது மென்பொருளின் தவறு அல்லது விட்டுப் போதல்.

looping : பன்முறை செய்தல்; கொக்கி வளையமாக்கல் : அதே ஆணை அல்லது ஆணைகளின் தொடர்ச் சியை மீண்டும் மீண்டும் செயல் படுத்துதல்.

loop structure : சுற்று அமைப்பு : வடிவமைக்கப்பட்ட ஓடு படத்தின் மூன்று அடிப்படை அமைப்புகளில் ஒன்று. ஒரு சூழ்நிலை ஏற்படும் வரை மீண்டும், மீண்டும் ஒரு பணியைச் செய்ய இது வழி செய்கிறது.

loop technology : சுற்று தொழில் நுட்பம் : ஒரு கணினி கட்டமைப்பில் எந்திரங்களை ஒன்றாக இணைத்து, தகவல் தொடர்பு கொள்ளும் முறை.

loopsely coupled : இலேசாக இணைக் கப்பட்டது : ஒரு கட்டமைப் பின் வழி யாக இணைக்கப்பட்டு தனியாக நிற்கும் கணினிகளைக் குறிப்பிடு கிறது. இலேசாக இணைக் கப்பட்ட கணினிகள் தாங்களாகவே செயலாக் கம் புரிந்து தேவைக்கேற்ப தகவல் களைப் பரிமாறிக் கொள்வன.

lossless compression : தளர்ச்சியில்லாத சுருக்கம் : தகவல்களை மூலத்தில் இருந்தது போன்று 100 விழுக்காடு பழையபடியே விரித்துக் கொண்டு வரும் சுருக்கத் தொழில் நுட்பம்.

lossy compression : தளர்ந்த சுருக்கம்: தகவல்களை மூலத்தில் இருந்தது போன்ற பழைய நிலை அளவுக்கு 100% மாற்றி அமைக்காத சுருக்கத் தொழில் நுட்பம். சுருக்கத்தைக் கூட்டுவதற்காக படங்கள் மற்றும் குரல் மாதிரிகளை தளர்ச்சியான துல்லியத்தில் வைத்திருக்க முடியும்.

lost cluster : தொலைந்த தொகுதி: ஒரு கோப்பின் பெயருடனான தங்களது அடையாளத்தைத் தொலைத்து விட்ட வட்டுப் பதிவேடுகள். ஒரு கோப்பினைச் சரியாக முடித்து வைக்காவிட்டால் இத்தகைய நிலை ஏற்படும். அதன் பயன்பாட்டிலிருந்து முறையாக வெளி வராமல் கணினியை நிறுத்தும்போது சில சமயம் இவ்வாறு ஏற்படுவதுண்டு.

lotus 1-2-3 : ஒரு மென் சாதனம் : அதன் பெயரே மூன்று பணிகளைக் குறிப்பிடும் ஒருங்கிணைந்த மென் பொருள் அமைப்பு. அகலத்தாள், தகவல் தளம், வரைபடமுறை ஆகியவைகளே இந்த 3 பணிகள். தகவல் தள மேலாண்மையுடன் மின்னஞ்சல் பணித்தாளை இணைக்கிறது. இத்துடன் உடனடியாக படங்களாலான தகவல் அல்லது வரைபட முறையை உருவாக்கும் திறனுடையது.

lotus add-in tool kit : லோட்டஸ் சேர்ப்பு கருவிப்பெட்டி : லோட்டசிடமிருந்து வரும் பாஸ்கல் போன்ற ஆணைத்தொடர் மொழி. லோட்டஸ் 1-2-3இன் மதிப்பு 3.0-வில் இயக்குவதற்காக உருவாக்க வேண்டிய தானியங்கிச் செயல் முறைகளை இது அனுமதிக்கிறது. இதில் ஒரு பதிப்பான் (எடிட்டர்), தொகுப்பி (கம்பைலர்), பிழை நீக்கி (டி-பக்கர்) ஆகியவை இருக்கும். சேர்க்கும் பொருள்களைச் செய்பவர்கள் அதை பதிப்பு 3.0-வுக்கு மாற்ற வசதி செய்து தருகிறது.

lotus manuscript : லோட்டஸ் கையெழுத்துப்படி : அறிக்கைகள் மற்றும் தொழில் நுட்ப ஆவணங்களை எழுத வடிவமைக்கப்பட்ட சொல் மற்றும் ஆவண செயலகம்.

lotus menu : லோட்டஸ் பட்டி : லோட்டஸ் 1-2-3-உடன் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் தர நிர்ணயமாக ஆன பட்டியல் 'மெனு'. அதில் சொற்களின் வரிசை இருக்கும். ஒவ்வொன்றிலும் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டு 'enter' பொத்தானையோ அல்லது சொல்லின் முதல் எழுத்தையோ அழுத்தி தேர்ந்தெடுக்க வசதி உள்ளது. சொல் வந்தவுடன், அதற்கான விளக்கமும் வரும்.

Lovelace, Ada Augusta : லவ்லேஸ், ஆடா அகஸ்டா : லவ்லேசின் சீமாட்டி ஆடா அகஸ்டின் ஆணைத் தொடர் அமைப்பதற்கான முக்கியச் சிந்தனைகளை உருவாக்கினார். சார்லஸ் பாபேஜின் நண்பரும் சிறந்த கணித மேதையுமான இவர் பகுப்பு எந்திரம் பற்றி எழுதியுள்ளார்.

low activity : குறைந்த நடவடிக்கை ; குறைந்த செயற்பாடு : புதுப்பிக்கும் பணியில் மொத்தப் பதிவேடுகளில் ஒரு சிறிய பகுதியே செயல்பட்ட நிலை.

lower : கீழ்நிலை; கீழ்த்தட்டு : டிபேஸ்/சி-யில் ஒரு செயல்முறை. அதன் வாக்குவாத சரத்திற்குச் சமமான

சிறிய எழுத்து சரத்தினைத் திருப்பி அனுப்புகிறது.

lower case : சிறிய எழுத்து ; கீழ்த்தட்டு எழுத்து : தலைப்பு எழுத்து இல்லாத அகர வரிசை எழுத்துகள். விடிடிஎஸ் (VDTS) இல் இதைப் பயன்படுத்த முடியாது.

lower level management : கீழ் மட்ட நிர்வாகம் : குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்கான இயக்கும் முடிவு களை எடுக்கும் முதல் வரிசை மேற் பார்வையாளர்கள்.

low frequency : குறைந்த அலை வரிசை : 30 முதல் 300,000 ஹெர்ட்ஸ் அளவில் சுழலும் மின்காந்த அலை.

low level format : கீழ்நிலை படிவம்: ஒருவன் தட்டின் அடிப்படை (ஆரம்ப) நிறுவுதல், வன்வட்டின் வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான் இது நடைபெறுகிறது. வன்வட்டு இயக்கியில் பிரிவு தலைப்புகளை அடையாளம் செய்யும் செயல் முறை. பல வட்டு மேலாண்மை பயன்பாடுகளில் 'முன்படிவம்' எனப்படும் கீழ்நிலை படிவ அமைப்பும் செய்ய முடியும்.

low level language : கீழ் நிலை மொழி; தாழ்நிலை மொழி : எந்திரம் சார்ந்த ஆணைத் தொடர் மொழியைத் தொகுப்பி மொழி பெயர்ப்பு செய்து தகவல் வடிவத்தில் எந்திரத்தில் தருகிறது. Assembly language போன்றது.

low order : கீழ் நிலை : குறைந்த பலம் அல்லது முக்கியத்துவம் உள்ள எண்ணின் இலக்கம் அல்லது இலக் கங்கள் பற்றியது 7643215 என்ற எண்ணில் கீழ்நிலை இலக்கம் 5.

low order column : கீழ்வரிசை பத்தி: துளை அட்டை புலத்தில் அதிக எண் ணுள்ள வலது மூல பத்தி.

low radiation : குறைந்த கதிர் வீச்சு : குறைந்த அலைவரிசையையும் மிகக் குறைந்த அலைவரிசையையும் வெளியிடுகின்ற ஒளிக்காட்சி முனை யங்களைக் (Video terminals) குறிப் பிடுவது. அலுவலக அறையைப் பிரிவினை செய்வதன் மூலம் இதைத் தடுக்க முடியாது. சி.ஆர்.டி.யி லிருந்து இதை நீக்க வேண்டும். இது குறித்த உடல்நல ஆராய்ச்சிகள் முடிந்த பாடில்லை என்பதுடன் சர்ச்சைக்குரியவைகளாகவும் உள்ளன.

low res graphics : லோ ரெஸ் கிராஃபிக்ஸ் : Low resolution graphics என்பதன் சுருக்கம். குறைவான படப் புள்ளிகளைக் கொண்டு உருவாக்கப் படும், காட்சித் திரையில் காணும் தடுமாறும் படம்.

low resolution : குறைந்த தெளிவு : வரைபடமுறை திரையில் காணும் தகவலின் தரம் மற்றும் துல்லியம் பற்றியது. தெளிவின் தரமானது உருவம் ஏற்படுத்தும் படப்புள்ளி களைச் சார்ந்தே உள்ளது. குறைந்த படப்புள்ளிகளைக் கொண்டு உரு வாக்கப்படும் படத் தெளிவுகள் அதிக தெளிவு படங்களைப் போல துல்லியமாகவும், தெளிவாகவும் இருக்கும்.

low-res graphics : குறைந்த பிரிதிறன் வரைவியல்.

low speed personnel Computer net-works : குறைவேக பி.சி. பிணைப்பு கள் : தனிநபர் கணினிகளையே இறுதி நிலை பயன்படுத்துபவர் களாகக் கொண்டுள்ள பிணைப்புகள்.

lower-level management : கீழ்நிலை மேலாண்மை.

low-order bit : கீழ்வரிசைத் துண்மி : கணினி சொல்லின் வலது ஓரத்தில் உள்ள துண்மி.

l.p. : எல்.பி. : linear programming மற்றும் line printer என்பதன் குறும் பெயர்.

LPI (Lines Per Inch) : எல்.பி.ஐ. (ஒரு அங்குலத்திற்கு இத்தனை வரிகள்) : ஒரு செங்குத்தான அங்குலத்திற்கு எத்தனை வரிகள் அச்சிடப்படுகிறது என்பது.

LPM : எல்.பி.எம். : Line Per Minute என்பதன் குறும் பெயர்.

LRC (Longitudinal Redundancy Check) : எல்.ஆர்.சி. : Longitudinal Redundancy Check என்பதன் சுருக்கம். அதன் நீள்பாதையில் ஒரு குறிப்பிட்ட துண்மி சரத்தில் இருந்து இணையான துண்மியை உருவாக்கி பிழை சோதிக்கும் முறை. காந்த நாடா போன்ற வரிசை. பத்தி படிவத்தில் வி.ஆர்.சி.யுடன் எல்.ஆர்.சி. பயன்படுத்தப்பட்டு ஒவ்வொரு எழுத்துக்கும் இணை எழுத்து உருவாக்கப்படுகிறது.

LSB : எல்.எஸ்.பி. : Least Significant Bit என்பதன் குறும் பெயர்.

LSC : எல்.எஸ்.சி. : Least Significant Character என்பதன் சுருக்கம்.

LSD : எல்.எஸ்.டி. : Least Significant Digit என்பதன் குறும்பெயர்.

LSI : எல்.எஸ்.ஐ. : Large Scale Integration என்பதன் குறும்பெயர்.

lumen : லூமென் : ஒளியின் ஓட்டத்தை அளக்கும் அலகு. ஒரு மெழுகுவர்த்தி 13 லூமென்களை உருவாக்குகிறது. 100 வாட் பல்பு 1,200 தருகிறது.

lumena : லூமனா : டைம் ஆர்ட்ஸ் நிறுவனத்தின் பி.சி. ஓவிய ஆணைத் தொடர். என்.டி.எஸ்.சி. ஒளிக்காட்சி (வீடியோ) வெளியீடுகளை அது ஏற்று உருவாக்குகிறது. அதற்கு ஒரு ஒளிக்காட்சி வரைகலை தேவை.

luminance : ஒளிர்வு : பிரகாசத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டு ஒளிக் குறிப்பின் பகுதி.

luminance decay : ஒளிர்வு மங்குதல்: காட்சித்திரை முகப்பில் நீண்ட நேரத்துக்குப் பிறகு ஏற்படும் திரை வெளிச்சத்தின் குறைவு.

luminosity : ஒளிர் திறன்.

M

M : எம் (மெகா) : Mega என்பதன் குறும்பெயர், பத்து இலட்சம் என்பது பொருள். சேமிப்புச் சாதனங்களின் திறனைக் குறிக்க அடிக்கடி பயன் படுத்தப்படும் பெயர்ச் சீட்டு.

Mac : மேக் : Apple Macintosh Computer என்பதன் சுருக்கம்.

MacDraw : மேக் டிரா: ஆப்பிள் மெக்கின்டோஷ் கணினியின் வரைபடப் பணித்தொகுப்பு. கலைஞர்கள், கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள், வரைபடக் கலைஞர்கள் மற்றும் வரைபடக் கலை தொடர்புடைய தொழில் நுணுக்கக் கலைஞர்கள் ஆகியோருக்காக வடிவமைக்கப் பட்டது.

MAC driver : மேக் டிரைவர் : Media Access Control Driver என்பதன் குறும்பெயர். மைக்ரோசாஃப்ட் என்.டி.ஐ.எஸ். தரநிர்ணயத்தை செயல்படுத்தும் கட்டமைப்பு ஏற்பி இயக்கி.

Mach : மேக் : கார்னஜி - மெல்லன் பல்கலைக்கழகம் உருவாக்கிய யூனிக்ஸ் போன்ற இயக்க அமைப்பு (ஆப்பரேட்டிங் சிஸ்டம்).

machine address : எந்திர முகவரி.

machine code : எந்திரக் குறியீடு; பொறிக் குறி முறை : ஒரு எந்திரம் புரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்ட இயக்கக் குறியீடு.

machine cycle : எந்திரச் சுழற்சி; பொறிச் சுழற்சி : குறிப்பிட்ட எண்ணுள்ள உள் நடவடிக்கைகளைச் செய்ய ஒரு கணிணி எடுத்துக் கொள்ளும் நேரம்.

machine dependent : எந்திரச் சார்பு; பொறி சார்ந்த : ஒரு குறிப்பிட்ட வகைக் கணினியில் மட்டும் செயல்படும் மொழி அல்லது ஆணைத் தொகுப்பு தொடர்பானது. வன்பொருள் சார்ந்தது என்பதோடு சமமானது. எந்திரம் சார்ந்தது என்பதற்கு எதிரானது.

machine error : எந்திரப் பிழை; பொறித் தவறு : கருவிக் கோளாறு காரணமாக தகவலில் சரியானதிலிருந்து ஏற்படும் திரிபு.

machine independent : எந்திரச் சார்பிலி; பொறி சாரா : 1. கணினி முறைமையின் பண்புகளைச் சார்ந்ததாக இல்லாமல் பெரிதும் மொழி அல்லது ஆணைத்தொகுப்பு தொடர்பானது. 2. பல தயாரிப்பாளர்கள் உருவாக்கிய கணினிகளில் அல்லது ஒரே தயாரிப்பாளர் உருவாக்கிய பல எந்திரங்களில் ஆணைத்தொகுப்பு ஒன்றை இயக்கும் திறன்.

எந்திரச் சார்பு என்பதற்கு மாறானது.

machine instruction : எந்திர ஆணை; பொறி ஆணை: ஒரு கணினி நேரடியாகப் புரிந்து கொண்டு நிறைவேற்றக்கூடிய ஆணை.

machine intelligence : பொறி செயற்கை நுண்ணறிவு.

machine language : எந்திர மொழி; பொறி மொழி : கணினி ஒன்றின் அடிப்படை மொழி. எந்திர மொழியில் எழுதப்பட்ட ஆணைத் தொகுப்பு. அதனை கணினி மேலும் மொழி மாற்றம் செய்யத் தேவையில்லை.

machine language subroutine : எந்திர மொழி துணை வாலாயம் : சேர்ப்பி மொழியில் எழுதப்பட்ட துணை வாலாயம் (சப்ரொட்டீன்). உயர் நிலை மொழியில் எழுதப்பட்ட ஆணைத் தொடருடன் சேர்க்கப்படுகிறது. இத்தகைய துணை வாலாயம்களை விரைவாகவும் திரும்பத்

திரும்பவும் செய்யப்படும் வேலைகளுக்கு அதிகம் பயன்படுத்துவார்கள். அத்தகைய ஆணைத் தொடர்கள் குறியீடு செய்யப்பட்டு நினைவகத்திலிருந்து வட்டுக்குத் தனியாக ஏற்றப்படும்.

machine learning : எந்திரம் கற்றல்; பொறியாய்வு : பழைய செயல்களை அடிப்படையாகக் கொண்டு தன் செயல் திறனை மேம்படுத்திக் கொள்ளும் பட்டறிவு சார் (ஹியரிச) முறை.

தகவல் : எந்திரம் ஒன்றினால் உணரக் கூடிய அல்லது படிக்கக் கூடிய வகையில் ஏதாவது ஊடகம் ஒன்றில் பதிவு செய்யப்பட்ட தகவல். எந்திரம் உணர்நிலை என்றும் கூறப்படுகிறது.

machine sensible information : பொறியுணர் தகவல்.

macintosh : மெக்கின்டோஷ் : ஆப்பிள் கம்ப்யூட்டர் தயாரித்த புகழ்பெற்ற நுண்கணினி முறைமை. விசைப்



மெகின்டோஷ் (Macintosh)

machine oriented language : எந்திரம் சார்ந்த மொழி; பொறி சார்ந்த மொழி: மனித மொழியைப் போலல்லாமல் எந்திர மொழியை பெரிதும் ஒத்திருக்கும் ஆணைத்தொகுப்பு மொழி.

machine readable information : எந்திரம் அறிந்துக் கொள்ளக் கூடிய செய்தி தகவல் ; பொறி அறியத்தக்க

பலகையுடன் முதன்மையான உள்ளீட்டுக் கருவியாக சுட்டியைப் (Mouse) பயன்படுத்துகிறது.

macintosh user interface : மெக்கின்டோஷ் பயன்படுத்துபவர் இடைமுகம் : ஜெராக்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு 1981இல் ஜெராக்ஸ் ஸ்டாரில் பயன்படுத்தப்பட்ட

மெக்கின்டோஷை இயக்கும் முறை. வரைகலையைப் பயன்படுத்தி ஐக்கான்கள் எனப்படும் சிறிய படங்களின் மூலம் ஆணைத் தொடர்கள், கோப்புகள், மடிப்புகள் மற்றும் வட்டுகளைக் குறிப்பிடுகிறது. சுட்டி பொத்தானை நகர்த்தும்போது திரையில் உள்ள குறும்படம் நகர்ந்து, க்ளிக் செய்ததும் விருப்பப்படுவதைத் தேர்ந்தெடுக்கிறது. இது விண்டோஸ் போன்ற பலவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

MacIRMA : மெசிர்மா : மெக்கின்டோஷுக்கான தகவல் தொடர்பு அட்டை. நுண் கணினியிலிருந்து பெருமுகக் கணினிக்கு மாற்றுவது. 3270 முனையத்தைக் கொண்டது.

Mac Lisp : ஆரம்ப கால எம்.ஐ.டீ. ஏ.பி.ஐ. திட்டத்தின் பெயர். Machine Aided Cognition என்பதை உணர்த்துகிறது.

MacPaint : மேக்பெய்ண்ட் : மெக்கின்டோஷ் கணினிக்கான நவீன வரைபட ஆணைத் தொகுப்பு. வரைபட வெளியீட்டுக்கான பல பயன்பாடுகளை உடைய கருவிகளை வழங்கும் ஆணைத் தொகுப்பு.

macro : பெரும; அதிக : ஒற்றைக் குறியீட்டு ஆணைத் தொகுப்பு மொழிக் கட்டளை. அதனை மொழி பெயர்க்கும்பொழுது பல வரிசையான எந்திர மொழி கட்டளைகளை உருவாக்குகின்றன.

macro assembler : பெரும ஆணைத் தொகுப்பி : பயன்படுத்துவோர் புதிய கணினி ஆணைகளை உருவாக்கவும் அனுமதிக்கிற இணைப்பு. அப்புதிய கணினி ஆணைகள் பெரும ஆணைகள் என்றழைக்கப்படுகின்றன.

macro expansion : பெரும விரிவாக்கம் : மூல ஆணைத் தொடரில் உள்ள நுண் ஆணைகளை எந்திர மொழியில் மாற்றும் செயல் முறை.

macro generator : பெரும ஆக்கி; ஜெனரேட்டர்:

macro instruction : பெரும ஆணை: 1. ஆதார மொழி ஆணைகள் - ஒரு குறிப்பிட்ட மொழி ஆணைகளுக்கு சமமானது. 2. பல குறு ஆணைகளால் உருவாக்கப்பட்ட எந்திர மொழி.

macro language : பெரும மொழி : பெரும செயலகம் பயன்படுத்துகின்ற கட்டளை. பெருமக் கட்டளைகளை பயன்படுத்துகிற சேர்ப்பி மொழி.

macro processor : பெரும செயலகம்: விசைப் பலகையிலிருந்து மேக்ரோக்களை உருவாக்கி செயல்படுத்துகின்ற மென்பொருள். மேக்ரோ அழைப்புகளுக்காக மேக்ரோ துணை வாலாயம்களை மாற்றித் தருகின்ற பொறி மொழியாக்கியின் பகுதி.

macro programming : பெரும செயலாக்கம் : குறும வகைப்படுத்தி ஒன்றுக்கான கட்டுப்பாட்டு ஆணைத் தொகுப்பு போன்ற பெரும ஆணைகளை ஆணைத் தொகுப்பாக்குதல்.

macro recorder : சுருக்க ஆணை: ஆணைச் சுருக்கி : பட்டியல் தேர்வுகள் மற்றும் விசை அடிப்புகளை பெரிதாக 'மேக்ரோ' மாற்றித் தரும் ஆணைத்தொடர் துணை வாலாயம். ஒருவர் பதிவியைத் திருப்பி, பதிவு செய்ய வேண்டிய செயல் முறைகளைச் செய்து பின்னர் பதிவியை நிறுத்தி பெரியதுக்கு முக்கிய கட்டளையைக் கொடுப்பார். விசைக் கட்டளையை அழுத்தியவுடன், தேர்வுகள் செய்யப்படும்.

MacWrite : மேக்ரைட் : சொல்லை வகைப்படுத்தும் செயல்முறை

ஆணைத் தொகுப்பு. மெக்கின் டோஷ் கணினிக்கானது.

MacWrite II : மேக்ரைட் II : கிளாரிஸ் கார்ப்பரேஷன் உருவாக்கிய அனைத்து அம்சங்களும் கொண்ட மெக்கின்டோஷின் சொல் செய லாக்க ஆணைத்தொடர். மேக் 128 மற்றும் 512 ஆகிய ஒவ்வொன்றுடன் ஒருங் கிணைத்து அனுப்பப்பட்டது.

mag : மேக் : Magnetic என்பதற்கான குறும்பெயர்.

Magazette : மேகசீட் : வட்டில் பதிவு செய்யப்படும் மேகசீன்.

mag card : மேக் அட்டை : ஐபிஎம் கார்ப்பரேஷன் உருவாக்கிய மின் காந்த அட்டை. காந்தப் பொருள் பூசப்பட்டது. அதில் தகவல் பதிவு செய்யப்படுகிறது. சொல் வகைப் படுத்து முறைமைகளில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது.

Magellan : மெகல்லன் : லோட்டசி லிருந்து பி.சி.க்களுக்கான வட்டு மேலாண்மை பயன்பாடு. கோப்புப் பெயர்கள் மற்றும் உள்ளடக்கங் களைத் தேட உதவுகிறது. கோப்பு நோக்கியை இது பிரபலப்படுத் தியது. பல்வேறு தகவல் கோப்பு களை, அவற்றை உருவாக்கிய வரைப்போல நீங்கள் பயன்படுத்து வதற்காகத் தேட உதவுகிறது.

magnet : காந்தம்; மின் காந்தம்.

magnetic : மின் காந்தம் : காந்தத்தை உருவாக்குகிற, அல்லது காந்தத்தால் உருவாக்கப்படுகிற, அல்லது காந்தத் தால் இயக்கப்படுகிற.

magnetic bubbles : காந்தக் குமிழ்கள்: தளத்துக்கு எதிரான மின்காந்தப் பண்புள்ள வட்டவடிவ மின்காந்தப் பரப்புகள். அவற்றைத் தூண்டல் கட்டுப்பாடுள்ள மின் முனைகளால் தளத்தில் இடம்விட்டு இடம் பெயரச்செய்யலாம். பொருத்தமான சிறிய வட்டவடிவப் பகுதிகள் அல்லது குமிழ்கள்.

magnetic bubble memory : காந்தக் குமிழ் நினைவகம் : நகரும் காந்தக் குமிழ்களைப் பயன்படுத்தும் நினைவு. குமிழ்கள் என்பது காந்த மேற்றப்பட்ட பகுதிகள். காந்தப் பொருளில் - அதாவது ஆர்த்தோ ஃபெரைட் போன்ற பொருளில் நகரக்கூடியது. காந்தப்பொருளின் உள்ளேயும் வெளியேயும் தோன்றும் காந்தக் குமிழ்களைக் கட்டுப்படுத்து வது. அதன் விளைவாக உயர்திறன் உள்ள நினைவை உருவாக்க முடியும். ஆண்ட்ரூ போபெக், ரிச்சர்டு ஹெர்வுட், அம்பெர்டோ ஜியானோலா, பெல் ஆய்வகத்தைச் சேர்ந்த வில்லியம் ஷாக்லி ஆகியோர் காந்தக் குமிழ் நினைவைக் கண்டு பிடித்தார்கள். ஒரு சதுர அங்குலத் துக்கு 50 இலட்சம் துண்மிகள் திறனைக் கொண்ட சேமிப்பகத்தை உருவாக்கினார்கள்.

magnetic card : காந்த அட்டை : தட்டு அல்லது காந்தப் பூச்சு உள்ள அட்டை களைக் கொண்ட சிறு பெட்டி. அட்டைகள் காந்த நாடாவைப் போன்ற பொருளால் உருவாக்கப் பட்டவை. காந்த நாடா சிறு துண்டு களாக வெட்டப்பட்டு ஒன்றின் அரு கில் பிளாஸ்டிக் அட்டை ஒன்றில் அடுக்கப்பட்டு சிறிய பெட்டியில் அடுக்கப்பட்டிருப்பதாக உருவகம் செய்யலாம்.

magnetic characters : காந்த எழுத்துரு: எழுத்துகளின் தொகுப்பு. காசோலை கள், காப்பீட்டுக் கட்டணங்கள், பயன்பாட்டு கட்டணச் சீட்டுகள், செலவுச் சீட்டுகள் மற்றும் பிறவற் றில் பயன்படுகிறது. அவை எழுத்து

களைப் படிக்கும் சாதனங்களான எம்ஐசிஆர் படிப்புக் கருவிகள் தாமாக எழுத்துகளைப் படிக்க இடமளிக்கின்றன.

magnetic core : காந்த அச்சு:காந்த உள்மையம்; காந்த வளையம் : குறும் கொட்டை வடிவிலான பொருள். காந்தமேற்றக் கூடியது. இரும இயக்கங்களை சேமிக்கும் திறனுடையது.

magnetic core memory : காந்த உள் மைய நினைவகம்.

magnetic core plane : காந்த வளைய நினைவுத் தளம்; காந்த அச்சுத் தளம் : காந்த அச்சு இணையம். ஒவ்வொரு அச்சும் ஒவ்வொரு சேமிப்பு இடத்துக்குப் பொதுவானது. பல காந்த அச்சுத் தளங்கள் ஒன்றாகச் சேர்க்கப் பட்டு காந்த அச்சு சேமிப்பு அலகை உருவாக்குகிறது.

magnetic core storage : காந்த அச்சு சேமிப்பகம் ; காந்த வளையத் தேக்ககம் : சேமிப்பு முறை. இதில் தகவல்கள் இரும எண் வடிவில் சேமிக்கப் படுகின்றன. குறு மின் காந்தப் புலன்களின் ஓட்ட வழியில் அவை சேமிக்கப்படுகின்றன. வளைந்த டவுட்நட் வடிவிலான காந்த அச்சுகள் மின் இழப்பின்போது தகவல்களைச் சேமித்து வைக்கின்றன. இவை பழைய கணினிகளில் பயன்படுத்தப் பட்டன. தகவல்களை இழக்கும் சேமிப்பகத்துக்கு எதிரானது.

magnetic disk : காந்த வட்டு; மின்காந்த மென்வட்டு: திண்மையான பொருளினால் ஆன தகடு அல்லது கனத்த மைலாரினால் ஆனது. வட்டின் தளப் பகுதி காந்த மேற்றப்பட்ட தகவல்களை கைக்கொள்கிறது. அவை வட்டில் எழுதப்படுகின்றன. வட்டு இயக்கியினால் வட்டிலிருந்து அவை பெறப்படுகின்றன.

magnetic disk unit : காந்த வட்டு அலகு; காந்த வட்டகம் : புற சேமிப்புக் கருவி. இதில் தகவல்கள் காந்த மேற்றக்கூடிய வட்டுத் தளப் பகுதியில் பதிவு செய்யப்படுகின்றன.

magnetic domain : காந்தப் பகுதி; காந்தக் களம்: குமிழ் நினைவில் தகவல்களைக் குறிப்பிடும் காந்த மேற்றப்பட்டப் பகுதி.

magnetic drum : காந்த உருளை; காந்தப் பீப்பாய் : புறச் சேமிப்பு கருவி. இது காந்தமேற்ற தளத்தைக் கொண்ட உருளையை உடையது. இந்தத் தளத்தில் தகவல்களைப் பதிவு செய்யலாம்.

magnetic field : காந்தப் புலம் : ஒரு காந்தத்தினால் உமிழப்படும் புலனாகாத சக்தி.

magnetic film storage : காந்த நாடாச் சேமிப்பகம் : சேமிப்புக் கருவி. இதில் 35 மி.மீ. காந்த பிலிம் ஒரு சுருணையில் சுற்றி வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சுருணையை பிலிம் கையாளும் அலகில் ஏற்ற முடியும்.

magnetic head : காந்தமுனை : காந்த நாடா தகடு அல்லது உருளை போன்ற சாதனங்களில் தகவல்களை எழுதவும் படிக்கவும் உதவுகிற கருவி.

magnetic ink : காந்த மை : காந்தப் பொருள்களைக் கொண்ட மை. அந்த காந்தப் பொருள்களை காந்த உணர் விழைகள் மூலம் அறியலாம்.

magnetic ink character devide : காந்த மை எழுத்துச் சாதனம்.

magnetic ink character reader : காந்த மை எழுத்து படிப்பி : காந்த மை எழுத்துகளால் அச்சிடப்பட்ட ஆவணங்களை படிக்கும் உள்ளீட்டுக்

கருவி. MICR reader என்றும் கூறு வார்கள்.

magnetic ink character recognition : காந்த மை எழுத்தறி சாதனம் (எம்ஐசிஆர்) : எந்திரங்களால் சிறப்புக்காட்டி மையினால் அச்சிடப் பட்ட எழுத்துகளை அறிதல். வங்கிக் கடன் அட்டையிலும் பொதுப் பயன் பாட்டுத் தொழில்களிலும் முக்கிய மாகப் பயன்படுத்தப்படுகிறது.

magnetic media : காந்த ஊடகம் : செருகு அட்டைகள், நாடாக்கள் மற்றும் பிற தகவல் சேமிப்புச் சாதனங்களுக்கான இடைப்பெயர். காந்தத்தூண்டல் வடிவில் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன.

magnetic materials : காந்தப் பொருள் கள்.

magnetic printer : காந்த அச்சிடு கருவி; காந்த அச்சுப் பொறி : தொடர் அச்சிடு கருவி. இதில் புள்ளித்தளக் கருவியினால் எழுதப்பட்ட மின் சாரம் ஏற்றப்பட்ட துகள்கள் பயன் படுத்தப்படுகின்றன.

magnetic recording : காந்தப் பதி வாக்கம் : வட்டுகளிலும் நாடாக்களி லும் எண் முறை தகவல்களைப் பதிவு செய்யப் பயன்படுத்தும் தொழில் நுட்பம். பதிவு செய்யும் மேற்பரப்பை மின்சக்தியைச் செலுத் தும் படி/எழுது முனை வழியாகக் கொண்டு செல்வதன் மூலம் எழுதப் படுகிறது/பதியப்படுகிறது. இதன் கோட்பாடு மிகவும் எளிமையானது. வட்டு அல்லது நாடா மேற்பரப்பில் பாசிட்டிவ் அல்லது நெகட்டிவ் துருவம் கொண்ட (0 அல்லது 1 துண்மி) ஒரு சிறிய புள்ளி உருவாக் கப்படுகிறது. நாடாக்களைப் பதியும் போது, அழிக்கும் முனை முதலில் மேற்பரப்பைத் தூய்மைப்படுத்து கிறது. வட்டுகளில் இருப்பது போல தகவல்களின் பகுதி. இதில் அள வுடன்பொருத்தப்படுவதில்லை. படி/ எழுது முனையை அதன் மீது செல்ல விடுவதன் மூலம் துண்மியின் துருவம் உணரப் படுகிறது.

குமிழ் நினைவகம் ஒரு வகையான காந்தப்பதிவு முறை. ஆனால் வட்டு கள், நாடாக்கள் போல் அல்லாது இதில் மேற்பரப்பு நகர்வதில்லை.

magnetic resonance : காந்த எதி ரொளிப்பு; காந்த ஒத்திசைவு : இம் முறையில் ஒரு துகள் அல்லது துகள் முறைகள் எதிரொலிப்பு முறையில் புறக் காந்தப்புலத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

magnetic sensing devices : காந்த உணர்வுச்சாதனங்கள்.

magnetic storage : காந்தச் சேமிப்பகம்; காந்தத் தேக்ககம் : நாடா அட்டைகள், உருளைகள், அச்சுகள் மற்றும் பிலிம் போன்ற சேமிப்பு ஊடகங்களில் பொருள்களின் காந்தப் பண்புகளைப் பயன்படுத்தி சேமிக்கும் முறைமை.

magnetic strip card : காந்த வரி அட்டை: காந்தப்பட்டை அட்டை: கடன் அட்டையைப் போன்ற சிறிய அட்டை; அதில் காந்தமேற்றப்பட்ட பொருள் பொருத்தப்பட்டிருக்கும். இந்த காந்தமேற்றப்பட்ட துண்டில் தகவல்களை எழுதலாம் அல்லது எழுதப்பட்டிருப்பதைப் படிக்கலாம்.

magnetic tape : காந்த நாடா : காந்த மேற்றப்பட்ட புள்ளிகளைக் கொண்ட குறியீட்டின் வடிவில் தகவலைச் சேமிப்பதற்கான காந்த மேற்பரப்பைக் கொண்ட பிளாஸ்டிக் நாடா. நாடாவில் 8 துண்மிகளைக் கொண்ட குறியீட்டு அமைப்பு மூலம் தகவல்களைச் சேமிக்கலாம். ஒரு நாடாச் சுருள் என்பது 750 மீட்டர்

(2,400 அடி) நீளமுடையது. இந்த நாடாவின் பரப்பில் தகவல் எழுதப் பட்டிருக்கும். இதில் உள்ளத் தகவல் களை நாடா இயக்கி மூலம் பெற லாம்.

magnetic tape cartridge : காந்த நாடாச் சுருணை; காந்த நாடாப் பேழை: காந்த நாடா உள்ள சுருணை. இச் சுருணை யில் நாடாச் சுருள் ஒன்று இருக்கும். இந்த நாடாச் சுருளை ஏற்கும் உருளை ஒன்றும் இருக்கும். மாற்றுச் சுழலிப் பொறி சுருணை போன்றது. ஆனால் வடிவமைப்பில் சற்று வேறுபாடானது.

magnetic tape cassette : காந்த நாடா பேழை : காந்த நாடா சேமிப்புக் கருவி. 1/8 அங்குல காந்த நாடா பிளாஸ்டிக் கொள்கலன் ஒன்றில் இருக்கும்.

magnetic tape cassette recorder : காந்த நாடாப் பேழை பதிவு கருவி : நாடாக்களை படிக்கிற மற்றும் அதில் எழுதுகிற, சேமிப்புக் கருவி. குறுங் கணினி முறைமைகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

magnetic tape code : காந்த நாடாக் குறியீடு; காந்த நாடா குறிமுறை : காந்த நாடாவில் காந்தமேற்றப்பட்ட வடிவங்களை பதிவு செய்யப் பயன் படுத்தப்படும் குறியீட்டு முறைமை. காந்தமேற்றப்பட்ட வடிவங்கள் ஆல்பா எண்ணியல் தகவல்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

magnetic tape deck : காந்த நாடாத் தொகுப்பு : காந்த நாடா அலகு போன்றது.

magnetic tape density : காந்த நாடாத் திணிவு; காந்த நாடா அடர்த்திப் பதிவு: 2.54 செ.மீ (1) காந்த நாடாவில் பதிவு செய்யக்கூடிய எழுத்துகளின் எண்ணிக்கை. பொதுவான திணிவுகள் 800 மற்றும் 1600 எழுத்துகள்/ஓர் அங்குலம் என்பதாகும். ஆனால் சில கருவிகள் ஓர் அங்குலத்துக்கு 6,250 எழுத்துகள் வரை படிக்கக் கூடியன வாகவும் எழுதக்கூடியவைகளாக வும் உள்ளன.

magnetic tape device : மின்காந்த நாடா கருவி.

magnetic tape drive : காந்த நாடா இயக்கி : நாடாவை ஒரு தலை முனை யின் மீது நகர்த்தும் கருவி. காந்த நாடாப் போக்குவரத்து கருவி போன்றது.

magnetic tape recorder : காந்த நாடா பதிவி.

magnetic tape reel : காந்த நாடாச் சுருள் : காந்த நாடாவின் இயற்பியல் பண்புகளைப் பாதுகாக்க உதவும் சுழலி. நாடா பொதுவாக 1.27 செ.மீ (1.2 அங்குலம்) அகலம் உடைய தாகும். 751.52 மீட்டர் (2,400அடி) நீள முடையதாகும்.

magnetic tapes and discs principle of recording : காந்த நாடாக்கள் மற்றும் வட்டுகளில் பதியும் கொள்கை: காந்த மேற்பரப்பில் தகவலைச் சேமிக்க பதிவு செய்யும் முறையைப் போன் றதே நாடாவிலும் வட்டுவிலும் பயன்படுத்தப்படுகிறது. இரண்டுக் கும் இடையிலான முக்கிய வேறு பாடு படி/எழுது மின் சுற்று மற்றும் பதிவு செய்யும் ஊடகம் ஆகியவற் றின் எந்திர ஏற்பாடுதான். 'எழுது முனை'யில் அதிக காந்தம் ஊடுருவக் கூடிய நடுப்பகுதியைக் கொண்ட பொருளினால் சுற்றப்படுகிறது. நடுப்பகுதியில் காந்தம் செல்வதற்கு காற்று இடைவெளியில் எழுதும் மின் சக்தி காந்த மேற்பரப்பில் செல்லும்போது அது காந்தப்படுத்

தப்படுகிறது. எழுதும் மின்சாரத்தை எதிர்த் திசையில் அனுப்பும்போது காந்த சக்தியும் தலை கீழாகி இரும எண் (பைனரி) அமைப்பு பதிவு செய்யப்படுகிறது.

magnetic tape sorting : காந்த நாடா வகைப்படுத்துதல்; காந்த நாடாவழி வரிசைப்படுத்தல் : வகைப்படுத்து தலின்போது துணை சேமிப்புக்காக காந்த நாடாக்களைப் பயன்படுத்து கிற வகைப்படுத்தும் ஆணைத் தொகுப்பு.

magnetic tape transport : காந்த நாடாப் போக்குவரத்து.

magnetic tape unit : காந்த நாடா அலகு : காந்த நாடா இயக்கியைக் கொண்ட கருவி. இத்துடன் எழுது முனை களும் படிக்கும் முனைகளும் அவற் றுடன் இணைந்த கட்டுப்பாடுகளும் உடையது.

magnetizing station : காந்தமேற்றும் நிலையம்; காந்தமூட்டு களம்.

magnetized spots : காந்தமேற்றிய புள்ளிகள்.

magnetism : காந்த விசை.

magnitizing station : காந்தமேற்றும் நிலையம்.

magneto-optic : காந்த-ஒளியிழையி லான : அதிக அடர்த்தியுள்ள, அழிக் கக்கூடிய தகவல் பதிவு செய்யும் முறை. இதிலும் தகவல்களை காந்த முறையில் தான் பதிவு செய்யப் படும். வட்டுகள் மற்றும் நாடாக் களில் செய்வது போல. ஆனால், துண்மிகள் மிகவும் சிறியதாக இருக் கும். ஏனென்றால் துண்மிகளைக் குறிப்பிட லேசர் பயன்படுத்தப்படு கிறது. 300 செல்ஷியஸ் வைப்பதில் துண்மிகளை வெப்பப்படுத்தி காந்தப்புலத்திற்கு ஏற்ப மறு வரிசைப்படுத்தப்படுகிறது. அதன் மேற்பரப்பில், புதிய துண்மிகளைப் பதிய வேண்டுமென்றால் இருக்கும் துண்மிகளை முதலில் ஏதாவது ஒரு திசையில் மாற்றி ஒழுங்குபடுத்த வேண்டும்.

magnitude : திறன் : 1. எண் ஒன்றின் முழுமையான மதிப்பு. 2. ஒன்றின் பரும அளவு.

magstripe : காந்தப்பட்டி : பெரும் பாலான முக்கிய அட்டைகள் மற்றும் கணினிக்கு இயையக் கூடிய பயணச் செலவு அட்டைகளிலும் முதுகுப் பகுதியில் காணப்படும் காந்த நீள் பட்டை. இதில் கணக்கு எண் மற்றும் அட்டைக்கு உரியவரின் பெயர் அல்லது நுழைவு மற்றும் வெளி யேற்றப் புள்ளிகள், மீதமுள்ள பயணத்தொகை முதலியன குறிக்கப் பட்டிருக்கும்.

magstripe card : காந்தப் பட்டை அட்டை : ஒரு சிறிய கைப் பை அளவு பிளாஸ்டிக் அட்டை. இதில் காந்த நாடாவின் மேற்பரப்பில் ஒரு பட்டை இருக்கும். வங்கிக் கடன் / செலுத்து அட்டைகளில் இதைப் பரவலாகப் பயன்படுத்துகிறார்கள்.

magtape : காந்த நாடா :

Mahon, Charles : (1753-1816) : மஹோான், சார்லஸ் (1753-1816): 1777இல் ஸ்டான்ஹோப் செயல் முறை விளக்கியைக் கண்டுபிடித்த ஸ்டான்ஹோப்பின் மூன்றாவது எர்ல். இந்தக் கருவிதான் பற்சக்கரங் களைக் கொண்ட முதல் கணக்கிடு எந்திரமாகும்.

mail box : அஞ்சல் பெட்டி : ஒரு சேமிப்புப் பகுதியில் உள்ள இருப் பிடங்களின் தொகுப்பு. குறிப்பிட்ட புறநிலைக் கருவிகள் அல்லது பிற

வகைப்படுத்திகளுக்கான தகவல் சேமிப்புப் பகுதிகள்.

mailing list : அஞ்சல் பட்டியல் : (சொல் செயலகப் பயன்பாடுகள் போன்று) அச்சிடப்பட்ட ஆவணங் களை விநியோகிக்கப் பயன்படுத்தப் படும் பெயர்கள் மற்றும் முகவரிகள் கொண்ட கணினி மய கோப்பு.

mailing list programme : அஞ்சல் முகவரி ஆணைத் தொகுப்பு : பெயர்கள் மற்றும் முகவரிகளையும் பிற தொடர்புடைய தகவல்களைப் பராமரிக்கிற ஆணைத் தொகுப்பு. இது அஞ்சல் மேலொட்டுச் சீட்டு களைத் தயாரிக்கிறது.

mail merging : அஞ்சல் இணைப்பு : அஞ்சல் பட்டியல் கோப்பில் உள்ள பெயர் மற்றும் முகவரிகளை குறிப் பிட்ட வடிவக் கடிதங்களில் தானாக அச்சிடும் நடைமுறை. அஞ்சல் இணைப்பு ஆணைத் தொகுப்பு ஒரு கோப்பில் உள்ள முகவரித் தகவல் களை மற்றொரு கோப்பில் உள்ள உரைத் தகவல்களுடன் இணைக் கிறது.

main control module : முதன்மைக் கட்டுப்பாடு மாடுல் : ஆணைத் தொடர் கூறு (மாடுல்)களின் வரிசைக் கிரமத் தில் மிக உயர்ந்த நிலை அதற்குக் கீழே உள்ள கூறு (மாடுல்) களை இது கட்டுப்படுத்துகிறது.

main distribution frames : முக்கிய விநியோகச் சட்டம் : தகவல் தொடர்பு முறையில் கம்பி மூலம் விநியோகிக் கும் அடுக்கு. பல மாடிக் கட்டிடங் களின் அடித்தளப் பகுதியிலேயே இது பெரும்பாலும் அமைக்கப் பட்டிருக்கும். உள்பகுதி மற்றும் வெளிப்பகுதி தகவல் தொடர்புக் கம்பிகள் இணையும் இடம் இதுவே. MDF என்று சுருக்கி அழைக்கப்படும்.

mainframe : பிரதம அச்சு; முதன்மைப் பொறியமைவு : பெரும் விலை யுயர்ந்த கணினி அமைப்பு. பொது வாக பெரும் வணிக நிறுவனங்கள், கல்லூரிகள், பிற நிறுவனங்களில் தகவல்களை வகைப்படுத்த உதவு கிறது. துவக்கத்தில் இந்தச் சொற் றொடர் துவக்க கால கணினிகளில் இருந்த பெரிய இரும்புச் சட்ட வரிசைகளையும், வரிசையான இழுப் பறைகளையும் அவற்றில் உள்ள ஆயிரக்கணக்கான வெற்றிடக் குழாய் களையும் குறிக்கும். பிரதம அச்சு அறை முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டு பெருமளவு தகவல்களைக் கையாளும் திறன் கொண்டதாக இருந்தன. குறுங்கணினி அல்லது சிறு கணினிகளை விட விலை உயர்ந்தவை. பிரதம அச்சுகள் தான் பெரிய, மிகவும் விரைவான விலை யுயர்ந்த கணினி வகைகளாகும். பிரதம அச்சுகளைக் கொண்ட சூப்பர் கணினிகள் பெரியவை, விரை வானவை மற்றும் விலை உயர்ந்தவை.

mainframe computer : முதன்மைக் கணினி.

mainframe system : முதன்மைப் பொறியமைவு.

mainline programme : முதன்மைச் செயல் முறை : முதன்மை இணைப்பு ஆணைத் தொகுப்பு. ஆணைத் தொகுப்பில் பிற முனையங்களின் இயக்க முறைமையைக் கட்டுப் படுத்தும் பகுதி.

main loop (main line) : முக்கிய கணினி (முக்கிய வரி) : ஒரு ஆணைத் தொட ரின் அடிப்படை அளவை. ஒவ் வொரு நிகழ்வு அல்லது பரிமாறல் முடிந்த பிறகு திரும்பச் சொல்லும் ஆணைகளைக் கொண்டது.

mainframe computer (mainframe) : முதன்மைப் பொறியமைவுக் கணினி: ஆரம்பத்தில் மையச் செயலகத்தை மட்டுமே குறிப்பிடுவதாக பெருமுகம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டது. 1960-களின் நடுவில் எல்லா கணினிகளும் பெருமுகங்கள் என்று அழைக்கப்பட்டன. ஏனென்றால், எல்லாவற்றிலும் மையச் செயலகம் உண்டல்லவா! இன்று மிகப்பெரிய கணினி அமைப்பையே இச்சொல் குறிக்கிறது. பல்லாயிரம் நேர்முக முகப்புகளைக் கையாளும் பெருமுகங்கள் பல உள்ளன. இவை நூற்றுக்கணக்கான மீமிகு எட்டியல் (மெகாபைட்) நினைவகங்களுடனும், பல நூறு கிகாபைட் வட்டு சேமிப்பகங்களுடனும் உள்ளன.

mainframe systems : முதன்மைப் பொறியமைவுகள்.

main memory : முதன்மை நினைவகம்; முகமை நினைவகம்; முதன்மை நினைவுப் பதிப்பி; தலைநிலை; நினைவுப்பதிப்பி.

main storage : முதன்மைச் சேமிப்பு: முதன்மைத் தேக்ககம் : மையச் செயலகத்தினால் நேரடியாகக் கட்டுப் படுத்தப்படுகிற நேரடியாக அணுகக் கூடிய சேமிப்பகம். ஆணைத் தொகுப்புகளை நிறைவேற்றும் பொழுதே அவற்றைச் சேமிக்க உதவுகிறது. தகவல்களை முறைப்படுத்தும் பொழுதே சேமிக்க உதவுகிறது.

maintainability : பராமரிப்பு இயைபு: பேணு திறன் : பழுது ஒன்றினைச் சீர் செய்தல் மற்றும் தனித்து விடலுடன் தொடர்புடைய பண்பு.

maintenance : பேணல்:பராமரிப்பு: தவறுகளைக் களைய அல்லது வன் பொருள் அல்லது ஆணைத் தொகுப்புகளை திருப்திகரமான பணிநிலைமையில் வைத்திருக்க மேற்கொள்ளப்படும் நடிவடிக்கைகள். இவற்றில் சோதனைகள், அளவில், மாற்றல், சீர் செய்தல் மற்றும் பழுது பார்த்தல் ஆகியவையும் அடங்கும்.

maintenance service : பராமரிப்புப் பணி; பேணுதல் பணி: ஒரு பொருளை நன்றாக இயங்கும் நிலையில் வைத்திருக்க அளிக்கப்படும் சேவை.

maintenance programmer : பராமரிப்பு ஆணையர்; பேணல் ஆணையர்: ஏற்கனவே தகவல் முறைமை ஒன்றில் சேர்க்கப்பட்ட ஆணைத் தொகுப்பு ஒன்றுடன் பணியாற்றுகிறவர். தேவையான மாற்றங்களை அவ்வப் போது செய்கிறவர்.

maintenance routine : பராமரிப்பு வழமை ; பேணல் முறைமை : கணினி முறைமை ஒன்றில் வழமையான தடுப்புப் பராமரிப்புப் பணிகளை வாடிக்கையாளரான பொறியாளர் ஒருவர் நிறைவேற்ற உதவும் வாடிக்கையான நடவடிக்கைகள்.

mait : மைட் : Manufacturer's Associaton of Information Technology, India என்பதன் குறும்பெயர்.

major sort key : முதன்மை வரிசையாக்க விசைத் திறவு: முக்கியமான வகைப்படுத்தும் விசை: தகவல்களைக் கொண்டுள்ள பகுதி (இறுதிப் பெயர் போன்றது) அதனைக் கொண்டு பெரும்பான்மையான தகவல் வகைகளை வேறுபடுத்துதல் மற்றும் வகைப்படுத்துதல் சாத்தியம். இக்களத்தில் இரட்டிப்பு நிகழும் பொழுது ஒரு கண்காணிப்பு வகைப் படுத்தும் விசை (முதல் பெயர் போன்றது) தேவையான வேறு பாட்டை வழங்க முடியும்.

make code : குறியீட்டை உருவாக்கு : ஒரு விசையை அழுத்தியவுடன் உருவாக்கப்படும் நுண்ணாய்வுக் (ஸ்கான்) குறியீடு. (பின்னர் விசை விடுவிக்கப்பட்டவுடன் தடைக் குறியீடு வருகிறது)

male connector : ஆண் இணைப்பி : மின் இணைப்புகளை உருவாக்க ஒரு

ஆண் இணைப்பி (Male Connector)

செருகியில் பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட செருகு இணைப்பி. Female connector-க்கு எதிரானது.

malfunction : பிழைச் செயல்; பிறழ் வினை: மையச் செயலகத்தில் அல்லது புறக் கருவியின் செயல் பாட்டில் ஏற்படும் பிழை. தவற்றின் விளைவு.

maltron keyboard : மால்ட்ரான் விசைப் பலகை : மேலும் விரைவாகப் பணி களை நடத்த உதவுகிற விசைப் பலகை வரிசை முறை. மரபு வழி யான விசைப்பலகை முறைமையை விட எளிதாகக் கற்றுக் கொள்ளலாம்.

MAN : எம்ஏஎன் மாநகர இணையம்: Metropolitan Area Network என்பதன் குறும்பெயர்

management graphics : மேலாண் வரைவியல்: நிர்வாக வரைபடம் : வணிகம் ஒன்றின் பெயர் மற்றும் கள முக்கியத்துவம் வாய்ந்த அம்சங் களை விளக்கும் பட்டியல், வரை படம் மற்றும் காட்சி வெளியீடுகள். வணிகத் தகவல்களை உணரவும் வெளியிடவும் உதவும் நோக்குடன் தயாரிக்கப்படுகிறது.

Management Information System : MIS : நிர்வாகத் தகவல் முறைமை மேலாண் தகவல் அமைவு: MIS : அமைப்பு மேலாளர்களுக்குத் திட்ட மிட, தொழிலாளர்களை அமைக்க, ஆணையிட மற்றும் நிறுவனத்தின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்த, தேவையான தகவல்களை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட தகவல் முறைமை.

management report : நிர்வாக அறிக்கை: மேலாண் அறிக்கை : மேலாளர் களும், முடிவுகளை எடுப்போரும் தங்கள் பணிகளைச் செய்ய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட அறிக்கை.

management science : நிர்வாக அறிவியல்: மேலாண்மை இயல் : வணிகம் ஒன்றின் ஆதாரங்களை வழமையாக கணினி ஒன்றின் உதவி யோடு நிர்வகிப்பது தொடர்பான கணிதவியல் அல்லது அளவீட்டு முறையிலான ஆய்வு.

manager : மேலாளர் : கணினி மையம், ஆணைத் தொகுப்புக் குழு, மென்பொருள் வளர்ச்சிக் குழு, சேவை நிறுவனம் மற்றும் பிற வற்றின் நடவடிக்கைகளை வழி காட்டுகிற பொறுப்புள்ள மனிதர்.

managerial end user : நிர்வாக இறுதிப் பயனாளர் : தகவல் அமைப்பைத் தனிப்பட்ட முறையில் பயன்படுத் தும் முதலாளி, மேலாளர் அல்லது மேலாளர் - நிலை தொழில் வல்லு நர். தகவல் அமைப்புகளைச் சார்ந் துள்ள துறை அல்லது நிறுவனப் பிரிவின் மேலாளர்.

Manchester code : மான்செஸ்டர் குறியீடு : தானே நேரம் அமைக்கும்

தகவல் குறியீட்டு அமைப்பு. துண் மியை வரையறுக்கத் தேவைப்படும் நேரத்தை இரண்டு சுழற்சிகளாக இது பிரிக்கிறது. முதல் சுழற்சி தகவல் மதிப்பினையும், (0 அல்லது 1) இரண்டாவது சுழற்சி எதிர் நிலைக்கு மாற்றி நேரத்தையும் அளிக்கிறது.

mancos : மான்கோஸ் : பி.சி.க்களுக் கான சக்தி மிக்க, முழுமையான மேலாண்மைக் கட்டுப்பாட்டு அமைப்பு. உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் தேவைகளை இது கவனிக்கிறது.

Maniac : மேனியாக் : வான் நியூ மென்னால் உருவாக்கப்பட்ட சொல். ஹைட்ரஜன் குண்டினை உருவாக்கு வதற்காக வடிவமைக்கப்பட்ட இராட்சத கணினி.

man-machine interface : மனித எந்திர இடையிணைப்பு.

manipulating : முனைப்படுத்துதல் ; கையாள்தல் : பயன்படுத்துவோருக்கு கூடுதல் பொருள் உள்ள வடிவில் தகவல்களைக் கையாளும் பணி.

manpower loading chart : மனித சக்தியை ஏற்றும் பட்டியல்; பணியாளர் பயன்பாட்டு வரைவு : கால அடிப் படையில் தொழிலாளர்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதைக் காட்டும் பட்டியல்.

mantissa : அடி எண் மடக்கையின் பதின்மக் கூறு : 0.64321 x 10^3 64321 இல் மிதவைப் புள்ளி எண்களைக் குறிப்பிடும் பகுதி எண்.

manual data processing : மனிதர் மூலமான தகவல் செயலாக்கம்: தொடர்ச்சியான மனித இயக்கமும் தலையீடும் தேவைப்படும் தகவல் செயலாக்கம். காகிதப் படிவங்கள், பென்சில்கள் நிரப்பும் பெட்டிகள் போன்ற எளிய தகவல் செயலாக்கக் கருவிகளை இது பயன்படுத்து கின்றது. தட்டச்சுப் பொறிகள், கணிப்பிகள் போன்றவற்றைப் பயன் படுத்தினாலும்கூட எல்லா தகவல் செயலாக்கங்களும் தானியங்கி யானவை என்று சொல்ல முடியாது.

manual : கை நூல்; செயல் விளக்க நூல்.

manual data processing : கை வழி தகவல் செயலாக்க முறை.

manual device : கையாள் இயக்கும் சாதனம்.

manual input : கைமுறை உள்ளீடு ; இயக்க உள்ளீடு: திருத்த, பணியைத் தொடர, கணினி ஆணைத் தொகுப்பு ஒன்றை வகைப்படுத்துவதைத் தொடரகணினியைக் கையாள்வோர் கையால் பதிவு செய்யும் தகவல்கள்.

manual operation : கை முறை இயக் கம் : ஒரு முறைமையில் நேரடி கை யால் இயக்கும் உத்திகளால் தகவல் களை வகைப்படுத்துதல்.

manufacturer's software : தயாரிப் பவரின் மென்பொருள்: கணினி ஒன்றில் கணினித் தயாரிப்பாளர் வழங்குகிற அல்லது கிடைக்கச் செய் கிற ஆணைத் தொகுப்பு துணைக் கருவிகள்.

manufacturing information system : உற்பத்திக்கான தகவல் அமைப்பு : உற்பத்தி செயல்பாடுகளுக்கான திட்டமிடல், கட்டுப்பாடு மற்றும் நிறைவேற்றுதலை செய்யும் தகவல் அமைப்புகள். கணினி ஒருங் கிணைந்த உற்பத்தி முறை (சிஐஎம்) மற்றும் கேட், கேம் (CAD-CAM) போன்ற தொழில் நுட்பங்களும் இதல் உள்ளடக்கம்.

map : படம்: ஆணைத்தொகுப்பு ஒன்றின் பல்வேறு அம்சங்களும் அதன் தகவல்களும் சேமிப்புப் பகுதியைச் சுட்டிக்காட்டும் பட்டியல். இதனைச் சேமிப்புப் படம் என்றும் கூறுவார்கள்.

mapping : பதிலிடல்; விவரணையாக்கம் : ஒரு ஒருங்கிணைப்பு முறையினை மற்றொரு ஒருங்கிணைப்பு முறைமையில் பயன்படக் கூடியதாக மாற்றியமைத்தல்.

mar : மார்: Memory Address Register என்பதன் குறும் பெயர்.

Margie : மார்கி : Memory Analysis and Response Generation in English என்பதன் குறும் பெயர்.

margin : விளிம்புக்கோடு ; ஓரம் இடம்: பக்கம் அல்லது சாளரம் ஒன்றின் வலது அல்லது இடது முனைக்கும் உரைத் தொகுப்பு துவங்கும் இடத்துக்கும் இடையே உள்ள தூரம்.

marginal checking : விளிம்புக்கோடு சோதனை : தடுப்புப் பராமரிப்பு நடைமுறை. இதில் சோதிக்கப்படும் அலகு அதன் இயல்பான மதிப்பீட்டிலிருந்து வேறுபட்டதாக அமைகிறது. விளிம்பு நிலையில் இயங்கும் உதிரிபாகங்களைக் கண்டறிவதும் அவற்றின் இருப்பிடத்தை உறுதி செய்யும் முயற்சியில் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

marginal test : விளிம்பு நிலை சோதனை : எதிர்பார்க்கப்படும் மதிப்புகளுக்கு மிகவும் அதிகமானதும் மிகவும் குறைவானதுமான மதிப்புகளை அறிமுகப்படுத்தும் அமைப்புச் சோதனை.

mark : குறியீடு : காலம் அல்லது இடத்தில் ஒரு நிகழ்வைச் சுட்டிக் காட்டுகிற அல்லது குறிப்பிடுகிற அடையாளம் அல்லது குறியீடு.

marker : சுட்டி ; அடையாளங் காட்டி; அடையாளக் குறி : வரிக்கோட்டுப் பட்டியலில் புள்ளி விவர முனைகளைக் குறிப்பிட உதவும் குறியீடு. இக்குறியீடு வடிவங்களில் வட்டங்களும், x, பெட்டிகள், நட்சத்திரங்கள், மற்றும் புள்ளிகளும் அடங்கும்.

mark sense card : குறியீட்டு உணர்வு அட்டை : கணினி படிக்கக்கூடிய அட்டை. மின்சாரம் கடத்தும் பென்சிலின் மூலம் இதை அடையாளப் படுத்தலாம்.

mark sensing : அடையாள உணர் திறன்; குறி உணர்தல் : அட்டைகள் அல்லது பக்கங்களை பென்சில் ஒன்றினால், அடையாளம் உணர் திறன் கருவி ஒன்றினால் கணினி நேரே படிக்கும் வகையில் குறிக்கும் திறன். காலம் வீணாவதையும், விசைகளைக் கையாளும்பொழுது ஏற்படும் தவறுகளையும் தவிர்க்க கையால் தகவல்களைப் பெறும், மிகவும் பயனுள்ள உத்தி.

maser : மாசர் : Microwave Amplification by the Stimulated Emission of Radiation என்பதன் குறும்பெயர். வானொலி அலை வரிசை. வெளியீட்டை மிகைப்படுத்தக்கூடிய ஒரு சாதனம். செயற்கைக் கோள் தகவல் தொடர்பு தரை நிலையங்களில் மாசர் பெருக்குக் கருவிகள் தகவல் தொடர்புச் செயற்கைக் கோள்களிலிருந்து பெறப்பட்ட மிகவும் வலுவிழந்த சமிக்ஞைகளை பெரிதுபடுத்த பயன் படுத்தப்படுகிறது.

mask : மூடி : 1. எந்திரச் சொல். இதில் துண்மிகள் அல்லது எட்டியல்கள் அல்லது எழுத்துகள், ஆணை ஒன்றைக் கட்டுப்படுத்துவதன்

மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டி யல்கள் அல்லது துண்மிகளை அல்லது எழுத்துகளை இருத்திக் கொள்ளுதல் அல்லது நீக்குதல் ஆகிய பணிகளைச் செய்கிறது. உற்பத்தி நடைமுறையில் பயன்படும் முறைமை ஒன்றில் உள்ள இணைப்பு ஒன்றின் இன்டியோகிராஃபிக் பிரதி நிதித்துவம்.

maskable interrupts : மூடக்கூடிய தலையீடுகள் : மென்பொருளால் செய்யக் கூடியதும், செய்யாமல் தடுக்கக் கூடியதுமான வன்பொருள் தலையீடுகள்.

masked : மூடப்பட்ட : முடக்கப்பட்ட அல்லது துண்டிக்கப்பட்ட நிலை.

Mask design : மூடி வடிவமைப்பு : ஒருங்கிணைந்த இணைப்பு வடிவத் தின் இறுதிக்கட்டம், அதன் மூலம் ஒருங்கிணைந்த இணைப்பு ஒன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்குகளுக்கு இணையான ஒன்றுக்கு மேற்பட்ட மூடிகள் பெறப்படுகின்றன. நடை முறை தொடர்பான கட்டுப்பாடுகள் அனைத்தையும் முகமூடி அமைப்பு முறை காட்ட வேண்டும். இணைப்பு இடம் பெறும் பரப்பளவைக் குறைக்க வேண்டும்.

massage : செய்தி : விவரம் : தகவல் களை வகை செய்ய.

mass storage : பெரும் சேமிப்பகம் ; பெரும் தேக்ககம் : நேர்முக ஆதரிப்புச் சேமிப்பக அமைப்பு. வழக்கமான துணை நிலை இருப்பகத்தை விட அதிக அளவுகளில் தகவல்களை சேமிக்கும் திறன் கொண்டது.

mass storage device : பெருஞ் சேமிப்புக் கருவி : பெருமளவு தகவல் களைச் சேமிக்க, சிக்கனமான சேமிப் பகங்களை வழங்குகிற கருவி. எடுத்துக்காட்டு: வன் வட்டுகள், ஒளி நாடாக்கள், குமிழ் நினைவு பெரும் காந்த வட்டு அமைப்புகள் மற்றும் பெருமளவு சேமிப்புச் சுருணை முறைமைகள். 500 பில்லியன் எழுத்துகளுக்கு மேல் ஏற்கக் கூடியது.

master : முதன்மையாளர் : ஒன்று அல்லது மேற்பட்ட பிற சாதனங் களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் சாதனம்.

master boot record : முதன்மை ஏற்றும் பதிவேடு : நிலை வட்டில் உள்ள ஏற் றும் பதிவேடு. பல்வேறு வட்டுப் பிரிவுகளைக் காட்டும், பிரிவினைப் பட்டியல் இதில் உள்ளது. ஒவ் வொரு பிரிவும் ஏற்றுப் பதிவேட் டுடன் துவங்குகிறது. இது துணை இயக்க அமைப்புகளை ஏற்றுவதைத் தொடங்கி வைக்கிறது.

master card : முதன்மை அட்டை: துளையிடப்பட்ட அட்டை படிவத் தில் மாஸ்டர் அட்டை.

master clear : முழுமையும் அழித்தல்: முற்றும் அழித்தல். சில கணினி முனையங்களை இயக்கி வைக்கும் சாதனம். அது சில நடைமுறைப் பதிவுகளை விலக்கி புதிய இயக் கத்துக்கு தயார் செய்யும்.

master clock : முதன்மைக் கடிகாரம் : கணினி ஒன்றின் அடிப்படையான நேரத் துடிப்பைக் கட்டுப்படுத்தும் சாதனம்.

master console : முதன்மை முகப்பு : கணினிக்கு ஆணையளிக்க கணினி இயக்குபவர் அல்லது அமைப்பிற்கு ஆணைத்தொடர் அமைப்பவர் பயன் படுத்தும் முதன்மை முகப்பு.

master data : முதன்மைத் தகவல் : அடிக்கடி மாற்றப்படும் தகவல்

தொகுப்பு. இது வகைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான அடிப்படைத் தகவல்களை வழங்குகிறது.

master file : முதன்மைக் கோப்பு; தலைமைக் கோப்பு : ஒப்பு நோக்கில் நிரந்தரமானதகவல்களைக் கொண்ட கோப்பு. உசாவலுக்கும் உரிய ஆதார மாக உள்ளது. பொதுவாக குறிப் பிட்ட கால இடைவெளியில் காலத் துக்கு ஏற்ற வகையில் மேம் படுத்தப்படுகிறது.

master file maintenance : முதன்மைக் கோப்பு பராமரிப்பு : காலத்துக்கேற்ற வகையில் மேம்படுத்துதல், மாற்று தல் அல்லது முதன்மைக் கோப்பு களை திருத்தி அமைத்தல்.

master link : முதன்மை இணைப்பு : மெக்டொனால்டு டக்ளஸ் உருவாக் கிய விநியோகிக்கப்பட்ட எண் முறைக் கட்டுப்பாட்டு அமைப்பு. துளையிட்ட அட்டையின் தொடர் பான பிரச்சினைகள் இன்றி வடி வமைப்பிலிருந்து பொருத்துவதற்கு நேரடியாக மின்னணு தகவல்களை வழங்குகிறது.

master menu : முதன்மைப் பட்டியல்: சிறு அல்லது நுண் கணினிகளில் பயன்படுத்தப்படும் எதிர்வினை யாற்றும் செயலாக்க அமைப்பு. காட்சித் திரையில் பட்டியலைக் காட்டும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. பல மாற்று வழமைகளில் விரும்பப்படும் நிரலைத் தேர்ந்தெடுக்க இது உதவுகிறது.

master record : முதன்மைப் பதி வேடு: வாடிக்கையாளர் பணியாளர் அல்லது விற்பனையாளர் போன்ற தனிப்பட்ட தலைப்புகளுக்கான தகவல்களின் தொகுதி.

master/slave computer system : தலைமை/அடிமை கணினி முறைமை: ஒரு தலைமைக் கணினியுடன் இணைக்கப்பட்ட ஒன்றுக்கு மேற் பட்ட அடிமைக் கணினிகளைக் கொண்ட கணினி முறைமை. தலை வர் கணினி இணைக்கப்பட்டுள்ள அடிமைக் கணினிக்குப் பட்டியல் பணிகளையும் பிற வேலைகளையும் வழங்குகிறது.

match : இணை: பொருத்தம் : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகை தகவல்களுக்கு இடையிலான பொருத்தத்தைச் சோதித்தல்.

matching : இணைவு பார்த்தல் : பொருத்தம் பார்த்தல் : இரண்டு கோப்புகளை அவற்றில் இணையான வகைத் தகவல் அல்லது தகவல்கள் இருக்கின்றனவா என்பதை உறுதி செய்ய சோதிக்கும் தகவல்களை வகைப்படுத்தும் நடைமுறை.

material requirements planning : பொருள் தேவையைத் திட்டமிடல்: சார்ந்து நிற்கும் பொருள் வகைகளுக் கான இருப்பறியும் கணினி சார்ந்த உத்திகள்.

Math coprocessor : கணித இணைச் செயலகம் : 386 ஆணைத் தொகுதிக் கும் அதற்கு முந்தையவற்றுக்கும் பயன்படுத்தக்கூடிய இணைச் சிப்பு. அமைப்பின் கணிப்புச் செயல் திறனைக் கூட்டுவதற்கும், ஆணை களுக்கும் இதைப் பயன் படுத்தலாம். தொகுதி கூட்டுச் செயலகங்கள் எத் தகைய பயன்பாடுகளுக்கு பலன் தர வல்லது என்பதில் மிகுந்த வாக்கு வாதங்கள் உள்ளன. அதைத் தன் னுடைய சிப்புவில் சேர்த்துக் கொள் வதன் மூலம் 486 செயலகங்கள் இக் கேள்வியை மழுங்கடித்து விட்டன.

mathematical functions : கணிதவியல் பணிகள் : பெரும்பாலான ஆணைத்

தொகுப்பு மொழிகளில் கிடைக்கக் கூடிய வாலாயமான கணிதத் தொகுப்பு. மொழியின் ஒரு பகுதியாக பொதுவாக வழங்கப்படுகிறது.

mathematical logic : கணித அளவையியல் : மொழி மற்றும் அதன் வகைப்படுத்தும் நடைமுறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்த கணிதவியல் குறியீடுகளைப் பயன்படுத்துதல். ஒரு அறிவிக்கை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அறிவிக்கை வரிசைகள் உண்மையானவையா? பொய்யானவையா? என்பதைத் தீர்மானிக்க கணித விதிகளுக்கு இயைந்த வகையில் இந்தக் குறியீடுகள் கையாளப்படுகின்றன.

mathematical model : கணிதவியல் மாதிரி: கணிதவியல் படிமம் : ஒரு குழுக் கணித வெளியீடுகள். இவை ஒரு முறைமை நடவடிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன அல்லது ஒரு கருவியின் செயல்பாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

mathematical symbols : கணிதக் குறியீடுகள் : சூத்திரங்கள், சமன்பாடுகள் மற்றும் பட்டியல் தொகுப்புகளில் பயன்படுத்தப்படும் குறியீடுகள்.

mathematics : கணிதம் : பொருள்களுக்கிடையிலான அல்லது அளவுகளுக்கிடையிலான உறவுகள் பற்றிய ஆய்வு. இதன் மூலம் தருக்க முறை வழிகளைப் பயன்படுத்தி சில உண்மைகளை நிருபிக்க அல்லது பெற இயலும்.

matrix : அடித்தளப் பரப்பு : வரிசை மற்றும் செங்குத்து வரிசைகளில் குறியீடுகளை ஒழுங்கமைத்தல். அடித்தளப் பரப்பை உருவாக்கும் குறியீடுகள், மூலகங்கள் அல்லது அடித்தளப் பரப்புகளுக்கான உள்ளீடுகள் என்றழைக்கப்படுகின்றன. ஒரு அடித்தளப் பரப்பில் ஓர் அம்சத்தின் நிலைகளை கிடைவரிசையமைவிலும் செங்குத்து வரிசையிலும் சுட்டிக் காட்ட தரவுகள் வழமையாகப் பயன்படுத்தப்படுகின்றன. சிக்கலான கணித அறிவிக்கைகளை வெளியிடுவதற்கான ஒரு வழியை அடித்தளப் பரப்புகள் வழங்குகின்றன. அடித்தளப் பரப்புகளுடனான வேலைகளில் கணினிகள் அடிக்கடி கையாளப்படுகின்றன.

matrix notation : அடித்தளப் பரப்புக் குறியீடு : *1858*இல் ஆர்தர் கெய்லி என்னும் ஆங்கிலேய கணிதவியலாளரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர் ஒரு குறுங்குறியீட்டு முறையை அதாவது ax என்பது b-க்குச் சமம் எனும் நீள் சமன்பாட்டு வெளியீட்டு முறைமைகளைப் பயன்படுத்தினார்.

matrix printer : அடித்தளப்பரப்பு அச்சிடு கருவி : எழுத்து அச்சிடு கருவி. இது புள்ளி அடித்தளப் பரப்பை அச்சிடும் எழுத்தின் வடிவத்தைப் பெறப் பயன்படுத்தினார்.

mature system : முதிர்ந்த முறைமை: என்னென்ன பணிகளைச் செய்ய வடிவமைக்கப்பட்டதோ அந்தப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றக் கூடிய, முழுமையாக இயங்கக் கூடிய முறைமை.

MAU : மாவ் : Multi-station Access Unit என்பதன் சுருக்கம். குறும் பரப்பு இணையத்தில் அடையாள வளையத்தின் மைய அச்சு.

Mauchly, John 1907-1980 : மக்லீ, ஜான்: 1907-1980 : இனியாக் கணினியின் கூட்டுக் கண்டுபிடிப்பாளர். இதுவே மின்னணுவியல் கணினிகளில் பெரியதாகும். பென்சில்வேனியாவில் உள்ள உர்சினஸ் கல்லூரியின்

இயற்பியல் துறைத் தலைவராக 1930ஆம் ஆண்டில் கணினி மற்றும் மின்னணுவியல் தொடர்பான சோதனைகளை மக்லீ துவக்கினார். பள்ளியில் எட்டாண்டுகள் இருந்த காலத்தில் பருவ நிலை ஆய்வுத் திட்டம் ஒன்றில் அவர் பணியாற்றினார். சிக்கலான சுற்றுச்சூழல் தொடர்பான கணக்குகளைச் செய்ய விரைவாகச் செயல்படக்கூடிய மின்னணுவியல் கருவி ஒன்று அவசியம் என்ற முடிவுக்கு வந்தார். 1941இல் அவர் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் உள்ள மின் பொறியியல் பள்ளியில் சேர்ந்தார். அங்கு 1943ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஜே. பிரெஸ்பெர் ஈக்கொர்ட்டைச் சந்தித்தார். இருவரும் சேர்ந்து இராணுவ ஆயுதப்படைப் பிரிவுக்கு மின்னணுவியல் கணினி ஒன்றைத் தயாரிப்பதற்கான திட்டத்தைத் தயாரித்தார். இராணுவத்தின் ஆயுதப் படைப் பிரிவு அவருக்கு அந்த எந்திரத்தைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்கியது. இராணுவத்துக்கு இரண்டாவது உலகப் போருக்காக புதிதாக உருவாக்கப் பட்ட பீரங்கிகளின் இலக்குகளை நிர்ணயிப்பதற்கான கணிதப் பட்டியல்களைத் தயாரிக்க வேண்டியிருந்தது. இத்தகைய பட்டியல்களை மூர் பள்ளி ஏற்கனவே பயன்படுத்தி வந்தது. 1943-க்கும் 1946-க்கும் இடைப்பட்ட காலத்தில் இவை மிகவும் மெதுவாக இயங்கின. ஈக்கொர்ட்டும், மக்லீயும் மின்னணுவியல் எண் ஒருங்கிணைப்பி மற்றும் கணினி ஒன்றை உருவாக்கினார்கள். எதிர்காலத்தில் பல கணினி வடிவமைப்புகளை உருவாக்குவதற்கான முன்னோடியாக இது அமைந்தது. ஈனியாக் உண்மையிலேயே ஒரு பெரிய ராட்சதன் ஆகும். அது 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிடக் குழாய்களைக் கொண்டது. அதன் எடை 30 டன்கள். அது மூன்று படுக்கையறைகளைக் கொண்ட ஒரு வீட்டின் பரப்பளவைக் கொண்ட அறையில் அமைக்கப்பட்டிருந்தது. ஈனியாக் உருவானதைத் தொடர்ந்து ஈக்கொர்ட்டும் மக்கிலீயும் தங்கள் சொந்தக் கம்பெனியை நிறுவினார்கள். அவர்கள் பினாக் என்ற பெயரில் தங்கள் இரும எண் தானியங்கிக் கணினியை அமைத்தார்கள். அது சோதனை முயற்சியாக அமைந்தது. பொது நோக்கங்களுக்கான உலகின் முதலாவது வணிகக் கணினி யுனிவாக், அமெரிக்காவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கழகத்தில் நிறுவப்பட்டது. ஈக்கொர்ட்டும் மக்லீயும் துவக்கிய நிறுவனம் இப்பொழுது ஸ்பெரி கார்ப்பரேஷனின் ஒரு அங்கமாக உள்ளது. இந்நிறுவனம் உலகின் மிகப் பெரிய கணினி சாதனங்களைத் தயாரிக்கும் நிறுவனமாக உள்ளது.

maximinicomputer : பெரிய குறுங் கணினி : *16 துணுக்குச் சொற்களைப் பயன்படுத்தும் பெரிய குறுங் கணினி.* Minimini computer, Midimini computer and Supermini computer *ஆகியவற்றுக்கு எதிரானது.*

mb : எம்பி : Megabyte *என்பதன் குறும் பெயர்.*

MCC : எம்சிசி : Microelectronics and Computer Technology Corporation *என்பதன் குறும்பெயர். மிக நவீன கணினி குறித்து ஆய்வு நடத்த 13 நிறுவனங்கள் இணைந்து உருவாக்கிய ஒரு அமெரிக்கக் கூட்டமைப்பு.*

McCarthy, John : மெக்கார்த்தி ஜான் : *LISP ஆணைத் தொகுப்பு மொழியை 1958இல் உருவாக்கியவர். மேலும் எதிர்வினைக் கணினி எனும் கருது*

கோளை எம்ஐடியில் பணி புரியும் பொழுது உருவாக்கியவர். செயற் கைப் புலனாய்வு எனும் சொற் றொடரை முதலில் உருவாக்கியவர். செயற்கைப் புலனாய்வு தொடர்பான தனது பணிகளுக்காக நன்கு அறியப் பட்டவர்.

means/ends analysis : வழி/விளைவு-பகுப்பாய்வு : துவக்கப் புள்ளியி லிருந்து முன்னும் பின்னும் இலக்கை நோக்கி ஆய்வு செய்கிற முறை. வேறுபாடுகளைக் களையும் முயற்சியின் அடிப்படையில் அமைந்தது.

mean time between failure : கோளாறு களுக்கு இடைப்பட்ட நேரம்: கருவி யின் கோளாறுகளுக்கு இடையில் ஆகும் நேரத்தின் அளவு. இயக்கும் நேரங்களின் எண்ணிக் கையில் குறிப் பிடப்படும். சான்றாக, ஒரு நிலை வட்டின் கோளாறுகளுக்கு இடைப் பட்ட நேரம் (MTBT) 20,000 மணி களாகும்.

measuring divices : அளவீட்டுச் சாதனங்கள்.

mechanical data processing : எந்திர வியல் தகவல் வகைப்படுத்துதல் : ஒப்பு நோக்கில் சிறிய பெரிய ஆணைத் தொகுப்புக்கு ஆட்படாத எந்திரவியல் சாதனங்களைக் கொண்ட தகவல்களை வகைப்படுத்தும் முறை.

mechanical mouse : எந்திர முறை (எலி வடிவ) சுட்டுக் கருவி : ரப்பர் பந்தைப் பயன்படுத்தும் (எலி வடிவ) சுட்டி. அலகின் உள்ளே இருக்கும் சக்கரங்களுக்கிடையே இது சுற்றுகிறது.

mechanical translation : எந்திரவியல் மொழி பெயர்ப்பு : கணினிகள் அல்லது அதே போன்ற சாதனங் களினால் செய்யப்படும் மொழி பெயர்ப்புக்கான வகைப் பெயர்.

mechanization : எந்திரமயமாக்கல் : மனிதர்களால் முன்பு செய்யப்பட்ட பணிகளை எளிமைப்படுத்த அல்லது எந்திரங்களுக்கு மாற்ற உதவும் எந்திரங்கள்.

media : தகவல் சாதனங்கள்; ஊடகம் : தகவல் சாதனங்களின் பன்மை.

media compatibility : ஊடக ஏற்புத் திறன்: வெற்று வட்டுகளாக ஒரே மாதிரியான வட்டுகளைப் பயன் படுத்தும் இரண்டு அல்லது மேற் பட்ட மாறுபட்ட முறை அலகுகளின் திறன். ஒன்று மற்றொன்று பதிவு செய்வதைப் படிக்க முடியலாம் அல்லது இயலாமற் போகலாம்.

media conversion : ஊடக மாற்றல் : ஒரு சேமிப்பு ஊடகத்திலிருந்து வேறொன்றுக்கு தகவலை மாற்றல். வட்டிலிருந்து நாடாவுக்கு அல்லது ஒரு வட்டுப் பெட்டியிலிருந்து இன்னொன்றுக்கு மாற்றுதல்.

media eraser : சாதனங்கள் அழிப்பி: ஊடக அழிப்பி: காந்த நாடாக்களை, குறுவட்டுகளை காந்தமிழக்கச் செய்ய வடிவமைக்கப்பட்ட சாதனம்.

media failure : ஊடகப் பழுது : பதிவு செய்யும் மேற்பரப்பில் உள்ள குறை காரணமாக வட்டிலிருந்து நாடா போன்ற ஒரு சேமிப்பகச் சாதனத்தி லிருந்து வேறொன்றுக்கு படிக்க வோ, எழுதவோ முடியாத நிலை.

media a interchangeability : ஊடக பரிமாற்றத் தன்மை : ஒரே மாதிரியான இயக்கி உள்ள வட்டுகளை ஒரே எந்திரத்தின் மீது பதிந்து வேறொன் றில் திரும்பப் பயன்படுத்தக்கூடிய அளவு.

median : மீடியன் : ஒரு தகவல் தொகுதியின் நடு அளவு. கீழ்க்கண்ட தகவல் தொகுதியில் மீடியன் மதிப்பு 4. இத்தொகுதியில் 19 வகையறாக் கள் இருப்பதால் இதன் மீடியன் நடு மதிப்பாகும். இரட்டைப்படை எண் தகவல்களின் மீடியன் இரண்டு நடு வகையறாக்களின் சராசரி எண் ணாகும். அந்த எண்கள்,

1,1,2,3,3,3,3,3,4,4,5,5,5,6,8,8,9,9,9.

media specialist : தகவல் சாதன வல்லுநர் : சேமிப்புச் சாதனங்களை வகைப்படுத்தவும், பராமரிக்கவும் பொறுப்பானவர். சிறு வட்டுகள், சிறு வட்டுத் தொகுப்பு, காந்த நாடாக்கள், மற்றும் தொடர்புடைய பொருள்கள்.

medium : ஊடகம் : பொதியுறை வட்டு, காந்த வட்டு, காகித நாடா, காந்த நாடா, துளை அட்டை மற்றும் காகிதம் போன்ற தகவல்களை பதிவு செய்கிற இயற்பியல் பொருள்.

medium scale integration : MSI : நடுத்தர அளவு ஒருங்கிணைப்பு : பெரும் ஒருங்கிணைப்புக்கும் சிறிய அளவிலான ஒருங்கிணைப்புக்கும் இடைப்பட்ட வகை ஒருங்கிணைப்பு வகை.

meg : மெக் : 'மெகாபைட்' என்பதற் கான விளிச்சொல்.

mega : மீமிகு : பத்து இலட்சத்தைக் குறிக்கும் முன்னிணைப்பு அல்லது 10^6. குறும்பெயர் M . Micro என்ப தற்கு எதிரானது - பத்து இலட்சத்தில் ஒரு பங்கு.

megabit : மீமிகு துண்மி : பொதுவாக ஒரு பத்து இலட்சம் துண்மிகள் அல்லது ஓராயிரம் கிலோ துண்மி கள். சரியாகச் சொன்னால் 10,48,576 துண்மிகள் அல்லது 1024 கிலோ துண்மிகள்.

Megabyte : மீமிகு எட்டியல் : குறிப் பாக 20^{20} அல்லது 10,48,576 எட்டியல் கள். 1024 கிலோ எட்டியல்கள். சரா சரியாக ஒரு பத்து இலட்சம் எட்டியல் கள் அல்லது ஓராயிரம் கிலோ எட்டியல்கள். குறும்பெயர் MB.

megacycle : மீமிகு சுழற்சி : ஒரு விநாடிக்குப் பத்து இலட்சம் சுழற்சி கள்.

megaflop : மீமிகு இறக்கம் :ஒரு விநாடிக்கு பத்து இலட்சம் பதின்மப் புள்ளி நடவடிக்கைகள். M flops என்றும் அழைக்கப்படுகிறது.

megahertz : மீமிகு மின் அலை வரிசை : மின் அலை வரிசை அலகு. ஒரு விநாடிக்கு பத்து இலட்சம் சுழற்சிகளுக்குச் சமமானது. ஒலி பரப்பு அலைவரிசை அலகு Mhz என்று குறுக்கி அழைக்கப்படுகிறது.

megapel display : மெகாபெல் காட்சி: கணினி வரைகலையில் ஒரு பத்து இலட்சம் அல்லது மேற்பட்ட படப் புள்ளிகளைக் கையாளும் காட்சி அமைப்பு. ஒரு முழு திரைக் காட்சியில் ஒரு பத்து இலட்சம் படப் புள்ளிகள் வரவேண்டுமென்றால் 1,000 வரிகளில் ஒவ்வொன்றிலும் 1,000 புள்ளிகள் இருக்கும்.

membrane keyboard : ஜவ்வு விசைப் பலகை : இரண்டு மெல்லிய பிளாஸ் டிக் தாள்களினால் அமைக்கப் பட்டது. மின்சாரத்தை கடத்தும் மசிப்பூச்சு உடையது. பல குறைந்த விலையுடைய நுண்கணினிகளில் பயன்படுத்தப்படும் சிக்கனமான சமதள விசைப் பலகை.

monochromatic : ஒரே வண்ணத்திரை.

memo field : குறிப்புப் புலம் : செய்தியில் மாறும் அளவினைக் கொண்டிருக்கும் தகவல் புலம். செய்தியை இணைகோப்பில் சேமிக்கலாம். ஆனால், அது தகவல் பதிவேட்டில் ஒரு பகுதி என்பது போல நடத்தப்படும்.

memory : நினைவகம்: நினைவுப் பதிப்பி: ஏராளமான தகவல்களை சேமிக்கும் திறன் கொண்ட கணினியின் சேமிப்பு வசதிகள்.

memory addresses : பதிப்பி முகவரிகள்.

memory access : நினைவு அணுகல்.

memory allocation : நினைவக ஒதுக்கீடு.

memory bank : நினைவக வங்கி. தகவல்களை வைத்திருக்கும் கணினி அமைப்பை பொதுவாகக் குறிப்பிடுகிறது.

memory based : நினைவகம் சார்ந்த: செயலாக்கம் செய்வதற்காக நினைவகத்தில் எல்லா தகவல்களையும் வைத்துக் கொள்ளும் ஆணைத் தொடர். ஏறக்குறைய எல்லா விரிதாள்களும் நினைவகம் சார்ந்தவை. விரிதாளில் ஒரு முனையில் செய்யப்படும் மாற்றம் உடனடியாக அடுத்த முனையில் பிரதிபலிக்கும். இதனால் அவற்றின் இயக்கம் கணிசமாக விரைவடையும்.

memory capacity : நினைவகக் கொள்திறன்.

memory board : நினைவுப் பலகை: கணினி முறையுடன் ராமை இணைக்கும் விரிவுப் பலகை. கூடுதல் தகவலைச் சேமிக்கவும் பயன்படுத்தவும் இதனால் சாத்தியமாகிறது.

memory card : நினைவக அட்டை: எடுத்துச் செல்லக்கூடிய கணினிகளில் வட்டுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் கடன்-அட்டை அளவுள்ள நினைவக (மாடுல்) ஐசி அட்டைகள், ரோம், ராம் அட்டைகள் என்றெல்லாம் அழைக்கப்படும். இவை பலவகையான சில்லுகளைப் பயன்படுத்துகின்றன. ராம் அட்டைகள் பேட்டரியைப் பயன்படுத்தி செல்களுக்கு மின்சக்தியை நினைவகம் அமைந்துள்ள அச்சிட்ட மின்சுற்று அட்டைகளுக்கு ஏற்றுகின்றன.

memory cell : நினைவக அறை; நினைவுப் பதிப்பி சிப்பு: நினைவகத்தின் ஒரு துண்மி. மாறும் ராம் நினைவகத்தில், ஒரு டிரான்சிஸ்டர் மற்றும் ஒரு கொள்திறனைக் கொண்டு ஒரு அறை அமைக்கப்படுகிறது. நிலை ராம் நினைவகத்தில் ஐந்து டிரான்சிஸ்டர்களைக் கொண்டு ஒரு அறை உருவாகிறது.

memory chip : நினைவகச் சிப்பு: மின்னேற்ற வடிவில் தகவலைச் சேமிக்கிற அரைக் கடத்திச் சாதனம். வழக்கமாக இவை நினைவகப் பலகைகள் அல்லது அமைப்புப் பலகைகளில் பொருத்தப்பட்டிருக்கும்.

memory control block : நினைவக கட்டுப்பாடு கட்டம் : நினைவகத்தின் ஒவ்வொரு கட்டத்தின் ஆரம்பத்திலும் டாசில் (DOS) அமைக்கப்பட்டுள்ள 16 எட்டியல் அளவுகோல் கட்டம். அதன் நினைவக ஒதுக்கீட்டுப் பணிகளின் மூலம் ஆணைத் தொடரை இது அமைக்கிறது.

memory cycle : நினைவுச் சுழற்சி: ஒரு எட்டியல் அல்லது தகவலின் ஒரு சொல்லை நினைவகத்தில் சேர்ப்பதற்கோ சேமிப்புக் கிடங்கு எனப்

படும் நினைவகத்திலிருந்து அகற்று வதற்கோ தேவையான நேரம்.

memory cycle time : நினைவக சுழற்சி நேரம் : ஒரு நினைவக சுழற்சியைச் செய்வதற்கு அது எடுக்கும் நேரம்.

memory data register (MDR) : நினை வகத் தகவல் பதிவகம் : தலைமை நினைவகத்திற்கு வந்து போகும் அனைத்துத் தகவல் ஆணை களை யும் தற்காலிகமாக வைத்திருக்கும் ஒரு சிறப்பு நினைவகம்.

memory fill : நினைவக நிரப்பி : ஒரு குறிப்பிட்ட மதிப்புக்கு நினைவகத் தின் ஒரு கட்டத்தில் தகவல்களைப் பொருத்துதல்.

memory interleaving : நினைவக இடை வெளியேற்றம் : நினைவக வேகத்தை அதிகரிக்கும் தொழில் நுட்பத்தின் ஒரு வகை. சான்றாக, ஒற்றைப்படை மற்றும் இரட்டைப் படை முகவரி களுக்கு தனித்தனி நினைவக வங்கியை அமைப்பதன் மூலம் நடப்பு எட்டியலைப் புதுப்பிக்கும் வேளையில் நினைவகத்தின் அடுத்த எட்டியலை அணுகலாம்.

memory management : நினைவுப் பராமரிப்பு : நினைவு ஆதாரங்களை மிகவும் திறனுடன் கட்டுப்படுத்து கிற அல்லது ஒதுக்கீடு செய்கிற உத்தி.

memory management unit : நினைவக மேலாண்மை அலகு : குறிப்பிட்ட நினைவக மேலாண்மை சேவை களைச் செய்கின்ற மையச் செயலகத் தின் ஒரு பகுதி அல்லது அதற்கு அடுத்தது. சான்றாக, இது மறைவிட நினைவக மேலாண்மையை அளிக்க லாம். MMU என்று சுருக்கி அழைக்கப் படுகிறது.

memory map : நினைவகப் படம் : தகவல் சேமிப்பகத்தில் உள்ள தோற்ற உரு வேறு இடத்தில் தோன் றுதல். எடுத்துக்காட்டாக நினைவகத் தில் உள்ள ஒவ்வொரு இடத்துக்கும் பொருத்தமான எழுத்து உரு வெளிப் படு திரையில் தோன்றுதல்.

memory mapped I/O : நினைவகப் பின்னணியிலான உ/வெ:வெளிப் புறச் சாதனம். இதன் உள்ளீடு அல்லது வெளியீட்டின் ஒவ்வொரு உறுப்புக்கும் ஏற்ற நினைவக இருப் பிடங்கள். சான்றாக, நினைவகப் பின்னணியிலான காட்சியமைப்பில் ஒவ்வொரு படப்புள்ளி அல்லது எழுத்தும் நினைவகத்தில் அதற்குரிய எட்டியலகளில் இருந்து தகவல் களைப் பெறுகின்றன. மென்பொரு ளால் நினைவகம் புதுப்பிக்கப்பட்ட வுடன், புதிய தகவலை திரை காட்டு கிறது.

memory mapping : நினைவகம் அமைத்தல் : முன் வரையறை செய் யப்பட்ட அல்கோரிதம்களுக்கு ஏற்ற வாறு மாய முகவரியை உண்மை யான முகவரியாக மாற்றும் முறை.

memory module : நினைவகக் கூறு (மாடுல்) : தலைமை நினைவகத்தின் 4 கிலோ எட்டியல் அல்லது மேற் பட்ட கூறுகளைக் கொண்ட தனிப் பட்ட மின் சுற்று அட்டை.

memory port : நினைவக இணைப்பி: தலைமை நினைவகத்திற்கும் மையச் செயலகத்திற்குமான இணைப்பின் ஆரம்ப நிலை.

memory protection : நினைவகப் பாது காப்பு : ஒரு ஆணைத்தொடரானது தவறுதலாக வேறொரு இயங்கும் ஆணைத்தொடருடன் மோதுவதைத் தடுக்கும் தொழில் நுட்பம். ஆணைத் தொடரைச் சுற்றி ஒரு பாதுகாப்பு எல்லைக்கோடு உருவாக்கப்படு கிறது. ஆணைத் தொடருக்குள்ளிருக்

கும் ஆணைகள் அதன் எல்லைக்கு வெளியே இருக்கும் ஆணைகளைத் தொட தடை செய்யப்படுகிறது.

memory resident : நினைவகத்தில் தங்கியுள்ள : எப்போதும் நினைவகத்தில் உள்ள ஆணைத் தொடர்.

memory resident package : நினைவகத்தில் தங்கியிருக்கும் பொட்டலம் : கணினியின் அடிப்படை சேமிப்பகத்தில் ஏற்றப்படும் மென்பொருள். நேரமெடுக்கும் அலுவலகப் பணிகளைச் செய்வதற்கு அழைக்கப்படும் வரை அது காத்திருக்கிறது.

memory sniffing : நினைவகச் சோதனைகள் : வகைப்படுத்தும் பணியின்போது சேமிப்பகத்தை தொடர்ந்து சோதனையிடல்.

memory space : நினைவக இடம்: மையச் செயலகம் அணுகக் கூடிய நினைவக முகவரிகளின் வரிசை. 8088 சிப்புவின் முகவரியிடம் ஏறக்குறைய பத்து இலட்சம் எட்டியல்களாகும்.

memory typewriter : நினைவகத் தட்டச்சுப் பொறி : அதன் நினைவகத்தில் சில பக்கங்கள் அளவு செய்திகளை வைத்துக்கொண்டு ஓரளவான சொல் செயலாக்க பணிகளையும் செய்யும் தட்டச்சு. ஒன்று அல்லது இரண்டு வரி திரையை வைத்துக் கொண்டு தொகுப்பது தொல்லை தருவதாகும்.

memory unit : நினைவக அலகு.

memotype field : குறிப்புரைத் தகவல் புலம்.

menu : பட்டியல்: பட்டி: ஆணைத் தொகுப்பு ஒன்றில் எப்பகுதியுடன் பயனாளர் செயல்படுவது என்பதைத் தீர்மானிக்க அனுமதிக்கும் தேர்வுப் பட்டியல். எந்த விதமான தொழில் நுணுக்க நடைமுறைகளையும் அறியாமலேயே ஆணைத் தொகுப்பினை, கணினியைப் பயன்படுத்துவோர் கையாள இது அனுமதிக்கிறது. வழக்கமாக ஆணைத் தொகுப்பு தேர்வுகளடங்கிய திரையில் வெளியாகும் பட்டியல்.

பட்டியல்



பட்டியல் (Menu)

menu bar : பட்டியல் பட்டை : திரையில் தோன்றும் பட்டியல் வாய்ப்புகளின் வரிசையடங்கிய பட்டை.

menu driven programme : பட்டியல் வழி செலுத்தும் ஆணைகள்.

menu driven software : செயல் பட்டியலை இயக்கும் மென்பொருள்: பட்டியலை விரிவாகப் பயன்படுத்த உதவும் கணினி ஆணைத்தொகுப்பு. இவ்வகை மென்பொருள் குறைந்த

அளவு கணினி அனுபவம் உள்ளவர் கள் கூடப் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டது. செய்ய வேண்டிய வேலைகளைத் தேர்வு செய்ய செயல்பட்டியல் வரிசை பயன்படுத்தப்படுகிறது.

menu item : பட்டியல் உருப்படி : செயல் பட்டியல் வரிசையில் உள்ள ஏதாவது ஒன்று.

merge : சேர்ப்பு;சேர்; இணைப்பு: பொருள் வரிசைகளை மாற்றாமல் பொருள்களை வரிசை முறையில் சிலவற்றை இணையாகவும் சேர்த்தல்.

merge print programme : இணைப்பு அச்சிடு ஆணைத் தொகுப்பு : கணினியைப் பயன்படுத்துவோர் தனக்கெனத் தேவையான கடிதங் களைத் தயாரிக்க உதவுகிற ஆணைத் தொகுப்பு.

merge purge : இணைப்பு - தூய்மை யாக்கு : இரண்டு அல்லது மேற்பட்ட பட்டியல்களை ஒன்றாக்கி தேவை யில்லாதவற்றை நீக்குதல். சான்றாக, ஒரு புதிய பெயர், முகவரிப் பட்டிய லுடன் பழைய பட்டியலைச் சேர்த்து குறிப்பிட்ட அளவுகோலுக்குட்பட்டு இரண்டாவது தடவையாக வரும் பெயர்களை நீக்குதல்.

MESFET : மெஸ்ஃபெட் : Metal Semi-conductors Field Effect Transistor என்பதன் குறும்பெயர். (உலோக அரைக்கடத்திகள் கள நிலை மின்மப் பெருக்கி) முக்கியமான செயலூக்க முள்ள சாதனமான கல்லியம் ஆர் சனைடு ஒருங்கிணைந்த இணைப்பு களில் பயன்படுத்தப்படுகிறது. இது மின்னேற்றத்திற்கும் மின் அகற்ற லுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

mesh : வலை கண்ணி : ஒரு வலைப் பின்னலில் உள்ள மூடப்பட்ட வழியை உருவாக்கும் கிளைகள்.

mesh network : வலை பிணையம்: வலைப் பின்னல். இதில் உள்ள முனையங்கள் மற்ற பல முனையங் களுடன் பிணைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தகவல்களைக் கடத்துவதற்கு ஏராளமான வழிகள் அனுமதிக்கப்படுகின்றன. Ring Net-work - க்கு எதிரானது.

message : செய்தி;தகவல்: ஒரு குழு என்கிற வகையில் பொருளைத் தரு கிற எழுத்துகள். இவை ஒரு குழு என்கிற வகையிலேயே கையாளப் படுகின்றன.

message format : செய்திவடிவமைப்பு: தகவலின் பகுதிகளை அதாவது தகவல் தலைப்பு, முகவரி , உரைப் பகுதி மற்றும் தகவலின் முடிவு ஆகியவற்றை வகைப்படுத்துதலுக் கான விதிகள்.

message header : செய்தித் தலைப்பு: தகவல் ஒன்றின் தலைப்புப் பகுதி. அது தகவல் தொடர்பான செய்தியை அதாவது தகவல் போய்ச் சேர வேண்டிய இடம் முன்னுரிமை மற்றும் தகவலின் வகைகள் பற்றிக் கூறுகிறது.

message queuing : செய்தி வரிசைப் படுத்துதல் : தகவல் தொடர்பு முறைமை ஒன்றில் தகவல்களைக் கையாளுவதைக் கட்டுப்படுத்தும் உத்தி. இது கணினி ஒன்றினால் அவற்றை ஏற்கச் செய்கிறது. அவை வகைப்படுத்தப்படும் வரை சேமிக் கப்படுகின்றன அல்லது மற்றொரு வழியில் அனுப்பப் படுகின்றன.

message retrieval : செய்தியை மீண்டும் பெறுதல் : தகவல் முறைமை ஒன்றில் சேர்க்கப்பட்ட தகவலை சில

நேரத்துக்குப் பிறகு மீண்டும் பெறும் திறன்.

message switching : தகவல் பணிக் குமிழ் : தகவல் ஒன்றைப் பெறும் உத்தி. சரியான வெளிச்செல் இணைப்பும் நிலையமும் கிடைக் கும் வரை அதனைச் சேமித்தல். பின்னர் அவற்றை இலக்குக் கணினி களுக்கு மீண்டும் அனுப்புதல். இக் கணினிகள் பணிக்குமிழின் வேலை களைச் செய்கின்றன.

message switching centre : செய்தி பணிக்குமிழ் மையம் : செய்திகளில் அடங்கியுள்ள செய்திகளுக்கேற்ப செய்திகளை அனுப்பும் மையம்.

meta-assembler : உயர் சேர்ப்பி; உயர்மட்ட பொறி மொழி: புரிந்து கொள்ள வேண்டிய சேர்ப்பி மொழி யின் வர்ணனையை ஏற்றுக் கொள் கின்ற சேர்ப்பி.

metacharacter : புறவெழுத்து : ஆணைத் தொகுப்பு மொழி முறை மைகளில், இந்த எழுத்துகள், அவை இணைந்துள்ள எழுத்துகள் விஷயத் தில் சில கட்டுப்படுத்தும் பங்கு வகிக்கின்றன.

metacompiler : உயர் மொழி தொகுப்பி: உயர் தொகுப்பி : எழுத்துப் பூர்வமான தொகுப்புகளுக்காக முதன்மையாகப் பயன்படுத்தப் படும் மொழிக்கான தொகுப்பி. இவை பெரும்பாலும் சொற்றொடர் களைத் தொகுப்பனவாக உள்ளன. ஒரு சிறப்பு முக்கியத்துவம் உடைய புறத் தொகுப்பி. சாதாரணமாக பொது வான ஆணைத் தொகுப்புகளை எழுதுவதில் பெரிதும் பயன்படுவ தில்லை.

meta-data : உயர்மட்ட தகவல்: தகவல் பற்றிய தகவல். ஒரு தகவல் தளத்தின் அமைப்பு, உறுப்புகள், இடை உறவு கள் மற்ற தன்மைகளையும் விவரிக் கும் விவரம்.

meta data, index : உயர்மட்ட தகவல், அட்டவணை.

metafile : உயர்மட்டக் கோப்பு : ஒரு வகையான தகவலுக்கு மேற் பட்டதை சேமித்து வரையறுக்கும் கோப்பு. சான்றாக, விண்டோஸ் மெட்டா ஃபைல் (WMF) வெக்டர் வரைகலையின் படங்களையும், பரவு வரைவியல் (rastar) வரைகலை படிவங்களையும், செய்திகளையும் வைத்துக் கொள்ள முடியும்.

meta language : உயர் மட்ட மொழி: மொழி ஒன்றினை விளக்கப் பயன் படுத்தப்படும் மொழி.

metallic oxide semiconductor (MOS) : உலோக ஆக்ஸைடு அரைக் கடத்தி: களப் பயன்பாட்டு மின்மப் பெருக்கி (டிரான்ஸிஸ்டர்). இதில் வாயில் மின்முனை வாயிலிலிருந்து ஆக்சைடு திரை ஒன்றினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. 2. திறன் கருவியில் அரைக் கடத்தியில் உள்ள ஒரு தகடு அலுமினியத்தால் ஆனது. மற்றொரு தகடு வேற்றுப் பொருளினால் ஆனது. ஆக்ஸைடு இரு துருவ முனையை உருவாக்கு கிறது.

metalanguage : உயர்மட்ட - உயர் மொழி : மொழி ஒன்றை விளக்கக் கையாளப்படும் மொழி.

method : முறை: செய்முறை : பொருள் சார்ந்த ஆணைத் தொடரமைப்பில், ஒரு பொருளின் நடத்தை மற்றும் செயல் தன்மையைக் கட்டுப்படுத் தும் அல்கோரிதம். ஒரு பொருளுக்கு செய்தி அனுப்பப்படும்போது, ஒரு முறை செயல்படுத்தப்படுகிறது.

தகவல் திருப்பி அனுப்பப்படலாம் அல்லது திருப்பாமல் போகலாம்.

methodology : முறையியல் : தகவல் களை ஒரு ஒழுங்கான முறையில் ஆய்வு செய்யப் பயன்படுத்தப்படும் உத்திகளைத் தொகுக்கும் நடை முறை. குறிப்பிட்ட பணி ஒன்றை நிறைவேற்றப்பயன்படுத்தப்படும் தரப்படுத்தப்பட்ட நடைமுறைகள், தொழில் நடைமுறைகள், பராமரிப்பு உத்திகள் மற்றும் ஆவணத் தயாரிப்பு உள்ளிட்டவை.

metropolitan area network : பெரு நகரப் பிணையம்.

metric system : பதின்ம முறைமை : பன்னாட்டு அளவில் கையாளப் படும் முறைமை அல்லது தற் பொழுது உலகெங்கும் பயன்படுத் தப்படும் பதின்ம முறைமையின் நவீனப் பிரதி. அது ஏழு அடிப்படை அலகுகளைக் கொண்டது. அவை மீட்டர் , கிலோகிராம், விநாடி, ஆம்பியர் கெல்வ், செல்சியஸ், கேண்டெலா மற்றும் மோல்.

M-flops : எம்- ஃபிளோப்ஸ்: விநாடிக்கு பத்து இலட்சம் பதின்ம புள்ளி எண் கணக்கீடுகள்.

MFT : எம்எஃப்டி: குறிப்பிட்ட பணி களுடன் பல ஆணைத் தொகுப்பைத் தயாரித்தலுக்கான குறும்பெயர். இங்கு பணிகள் என்பது ஆணைத் தொகுப்புகளாகும். எண்ணற்ற தொந்தரவுகளுடன் பல ஆணைத் தொகுப்பைத் தயாரித்தல் என்றும் நகைச் சுவையுடன் குறிப்பிடுவ துண்டு. MVT என்பதற்கு எதிரானது.

MH_z : எம்எச்இசட் : மெஹஹெர்ட்ஜ் என்பதன் குறும்பெயர். விநாடிக்கு பத்து இலட்சம் சுழற்சிகள்.

MICR : எம்ஐசிஆர்: 'காந்த மையெழுத் தேற்பு' எனப் பொருள்படும் "Magnetic Ink Character Recognition" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் முதலெ ழுத்துகளைத் தொகுத்து உருவாக் கப்பட்ட தலைப்பெழுத்துச் சொல்.

micro : நுண்மை: நுண்: 1. பத்து இலட் சத்தில் ஒரு பகுதியைச் குறிக்கும் சொல். நுண் வினாடி (மைக்ரோ செகண்ட்) என்பது, ஒரு வினாடியில் பத்து இலட்சத்தில் ஒரு பகுதி. 2. கணினியில், 'மிக நுண்ணிய' என்று பொருள்படும்; 'மைக்ரோ கம்ப் யூட்டர்' என்றால், ''நுண் கணினி'' என்று பொருள். 'மியூ' (μ) என்னும் கிரேக்க எழுத்து மிக நுண்ணிய ஒன்றைக் குறிக்கும். இது பத்து இலட்சம் என்ற பேரெண் ணுக்கு நேர் எதிரானது.

micro cassette : நுண்ஒளிச்சுருள்கை: நுண்ஒளிப் பேழை: ஒரு சிறிய காநத நாடாப் பெட்டி. பெயர்கள் போன்ற தகவல்களையும், ஆணைத் தொடர் களையும் சேமிக்கவும் சில மின் கணக்கீட்டு எந்திரங்களில் பயன் படுத்தப்படுகிறது.

micro chart : நுண்வரைபடம் : செயல் முறையின் (Programme) அல்லது பொறியமைவின் (System) வடி வமைப்பின் இறுதி தகவல்களைக் காட்டும் வரைபடம்.

microchip : நுண் சிப்பு: நுண் சிப்பு: மணற்சத்தில் பெரிதாகவுள்ள 'கன்மம்' (Silicon) என்ற தனிமத்தினா லான நுண்ணிய சிப்பு. இதன் மேற் பரப்பில் பல்லாயிரக்கணக்கான மின்னணுவியல் அமைப்பிகளும் (Components), மின்சுற்று வழித் தோரணிகளும் (Circuit patterns) பதிவு செய்யப்பட்டுள்ளன.

micro code : நுண் குறியீடு: கணினி யில் அமைக்கப்பட்டுள்ள அடிப்

படை துணை ஆணைகளின் அல்லது போலி ஆணைகளின் வரிசை முறை; கணினியிலுள்ள வன்பொருள்கள் (Hardware) இந்த ஆணைகளைப் பொதுவாக நிறைவேற்றும்; எனினும், ஒரு தனி வகை ஆயத்த நிலைக்கு மட்டுமான சேமிப்பு அலகில், இந்த ஆணைகள், நுண் செயல் முறை வகுத்திடத் தக்க கணிப் பொறியை இயக்குவதற்கான கட்டளைகளை வகுக்கின்றன.

micro coding : நுண் குறியீட்டு முறை: கூட்டல் பெருக்கல் போன்ற கணினி கட்டளைகளை அமைப்பதற்கு அடிப்படைத் தொடக்கச் செயற்பாடு களை அல்லது துணை ஆணைகளை ஒருங்கிணைத்திடும் கணினி கட்டளை வரைவு.

micro coding device : நுண் குறியீட்டுச் சாதனம் : மின் சுற்று வழிப் பலகை. இதில் திட்ட அளவுச் செயற் பணிகளை நுண் மின் சுற்று வழிகள் மூலமாகச் செய்விக்க ஆணைகள் நிலையான ஆணைகள் அமைந்திருக்கும். இதன் மூலம், செயல் முறைப்படுத்தும்போது இந்த ஆணைகளைக் குறியீட்டு முறைப்படுத்துவதற்கான தேவையைத் தவிர்க்கலாம்.

micro computer : நுண் கணினி: மிக நுண்ணிய கணினி அனைத்திலும் இதுதான் மிகவும் மலிவானது. இவை, முழுமையான செயற்பாட்டுக் கணினிகள். இவை நுண் செய்முறைப்படுத்திகளைப் பயன்படுத்துகின்றன. வீடுகளில் சொந்தக் கணினிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது, பள்ளிகளிலும், வாணிக நிறுவனங்களிலுங்கூடப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இது, உட்பாட்டுச் செய்முறைச் சேமிப்புப் பணியினையும், வெளிப்பாட்டுச் செயற்பாடுகளையும், ஓர் ஆணைத் தொகுதிக்கிணங்க மிகக் குறைந்த செலவில் செய்திடும் கணினியாகும்.

micro computer applications : நுண் கணினிப் பயன்பாடுகள்: வணிகம், தொழில் நுட்பம், தொழில் துறை, வீடுகள் ஆகியவற்றில் நுண் கணினிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒளிப்பேழை விளையாட்டு எந்திரங்கள், போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்புகள், விற்பனை முனையங்கள், அறிவியல் கருவிகள், குருதிப் பரிசோதனைக் கருவிகள், கடன்வசதி அட்டை மற்றும் சரிபார்க்கும் கருவிகள், உந்து ஊர்தி, எரியூட்டுக் கட்டுப்பாடு, பட்டியலிடும் சாதனங்கள் ஆகியவற்றிலும் நுண்கணினிகள் பயன்படுத்தப்படுகின்றன. தொழில் துறையில் நுண்கணினிகள் பயனாகின்றன. நுண்ணலை அடுப்புகள், தையல் எந்திரங்கள், எரி வாயு நிலையங்கள், வண்ணம் பூசும் கருவிகள், செய்முறைத் தகவல் அறிவிப்பி, தூய்மைக்கேடு தகவல் அறிவிப்பி ஆகியவற்றில் நுண் செயலிகள் பயன்படுகின்றன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்விச் சாதனங்களாகவும், வங்கிகளிலும் வணிக மையங்களிலும் பங்கு மாற்று அங்காடிகளிலும் கணினிகள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

micro computer chip : நுண் கணிப் பொறிச் சிப்பு : ஒரு சிப்பிலுள்ள நுண் கணினி. இது நுண் செயலியிலிருந்து வேறுபட்டது. இதில் மையச் செயலகம் (CPU) அடங்கியிருப்பதுடன் அதே கன்மத் துண்டில் (சிலிக்கன்), குறிப்பின்றி அணுகும் நினைவகம், எழுதிப் படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம் (ROM), உட்பாட்டு/வெளிப்பாட்டு மின்சுற்று நெறி ஆகியவையும் அடங்கியுள்ளன.

இதனைச் "சிப்பில் கணினி" என்றும் அழைப்பர்.

micro computer components : நுண் கணினி அமைப்பிகள் : ஒரு நுண் கணினியின் முக்கிய உறுப்புகள். இவை: நுண் செய்முறைப் படுத்தி உட்பாட்டு/வெளிப்பாட்டு மின் சுற்று நெறி; ஒரு நினைவகம் (எழுதிப் படிப்பதற்கு மட்டுமே யான நினைவகம் (RAM); செயல் முறை வகுத்திடத் தக்க, படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம் (PROM); அழித்திடக் கூடிய செயல்முறை வகுத்திடத் தக்க படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம் (EPROM).

micro computer development system: நுண் கணினி மேம்பாட்டுப் பொறி யமைவு: நுண் கணினி அடிப்படை யிலான மற்றப் பொறியமைவு களைச் சோதனை செய்வதற்கும் உரு வாக்குவதற்கும் பயன்படுத்தப்படும் முழுமையான நுண் கணினி அமைவு. இணைப்பி வசதிகள், வாசகத் தொகுப்பி, தவறு கண்டறி யும் வசதிகள், ஒரே மாதிரியாக அல்லாத இன்னொரு கணினிக்காக எழுதப் பட்ட எந்திரமொழிச் செயல் முறையை நிறைவேற்றத்தக்க வன் பொருள் திறம்பாடுகள், செயல் முறை வகுத்திடத் தக்க படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம் (PROM), செயல்முறைப்படுத்துவோர் செய்தி அறிவிப்பி, வட்டு, நாடா உள் பாட்டு/வெளிப்பாட்டுப் பொறி யமைவு போன்றவை இதில் அடங் கும்.

micro computer kit : நுண்கணினி கருவிப் பை: நுண் கணினி விற் பனையாளர்கள் இணைத்துக் காட்டு வதற்காக வைத்துள்ள கருவிகளின் தொகுதி அடங்கிய ஒரு பை.

micro computer system : நுண் கணினி அமைவு : ஒரு நுண் கணினி, புறநிலைச் சாதனங்கள், செயற் பாட்டுப் பொறியமைவு, பயன் பாட்டுச் செயல் முறைகள் அடங்கி யுள்ள பொறியமைவு.

micro controller : நுண் கட்டுப் படுத்தி: ஒரு குறுகிய பகுதிக்குள் மிக நுட்பமான உருக்காட்சியுடனான ஒரு செய்முறையைக் கட்டுப்படுத் தும் ஒரு சாதனம் அல்லது கருவி. ஒரு கட்டுப்பாட்டுச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் நுண் செயல் முறைப்படுத்திய எந்திரம் (நுண் கணினி அல்லது நுண் செயலி). இது, ஒரு செய்முறையில் அல்லது செயற் பாட்டில் மாறுதல்கள் செய்வதற்கு அறிவுறுத்துகிறது அல்லது மாறுதல் களைச் செய்கிறது. எடுத்துக்காட் டாக, தையல் எந்திரங்களை இயக்கு வதற்கு ஒரு நுண் கட்டுப்படுத்தியை யும் எழுதிப் படிப்பதற்கு மட்டுமே யான நினைவகத்தையும் (ROM) சிங்கர் நிறுவனம் பயன்படுத்து கிறது.

micro electronics : நுண் மின்னணு வியல் : ஒருங்கிணைந்த மின்சுற்று வழிகள், மென்சுருள் உத்திகள், திண்மத் தருக்க முறை தகவமை வுகள் போன்ற நுண்ம மின் சுற்று வழிகளை உருவாக்குவதற்கான உத்திகளைக் கையாளும் புலம்.

microgram : நுண் கிராம் : நுண் குறியீடு அல்லது நுண் ஆணைகள் என்று அழைக்கப்படுகின்ற அடிப் படைக் கட்டுப்பாட்டு ஆணைகளின் சிறிய தொகுதி.

micro fiche : நுண் சுருள் தகடு : நுண் சுருள் படலம்; 10 செ.மீ x 15 செ.மீ (4" x 6") அளவுடையது. இதில் கணினி யின் வெளிப்பாடுகளை (output)

பதிவு செய்யலாம். ஒரு நுண் சுருள் தகட்டில் 270 பக்கங்கள் வரை பதிவு செய்ய முடியும்.

micro film : நுண் சுருள்; நுண் படலம்: வரைகலைத் தகவல்களை நுண்ணிய வடிவளவில் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒளிப் படச் சுருள்.

micro floppy disk : நுண் நெகிழ் வட்டு: 9 செ.மீக்குக் குறைவான விட்டமுள்ள (3.5") நெகிழ்வட்டு.

micro form : நுண் படிவம்: நுண் சுருள் தகடு, நுண் சுருள் போன்ற நுண்மையாக்கம் செய்யப்பட்ட உருக்காட்சிகளைக் கொண்ட ஓர் ஊடகம்.

micro graphics : நுண் வரைகலை: வரைகலைத் தகவல்களைச் சுருக்கி , சேமித்து வைத்து, மீண்டும் வரவழைப்பதற்காக நுண்ம ஒளிப்படக் கலையைப் பயன்படுத்துதல். நுண் சுருள் தகடு , நுண் சுருள், கணினி வெளிப்பாட்டு நுண் சுருள் போன்ற எல்லா வகையான நுண்படிவங்களையும், நுண் உருக்காட்சிகளையும் பயன்படுத்துவதும் இதில் அடங்கும்.

micro instructions : நுண் அறிவுறுத்தங்கள்: கணினி பயன்படுத்து கைவசமுள்ள எந்திர மொழியில் பெரும் அறிவுறுத்தங்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் மிகக் குறைந்த அளவு அறிவுறுத்தங்கள்.

micro jacket : நுண் அட்டை : நுண் வரைகலையில், ஒன்றாக ஒட்டப்பட்ட உள்ளிருப்பது தெரிகின்ற இரண்டு பிளாஸ்டிக் தாள்கள். நுண் திரைப்படங்களுக்கான சுருள்களை நுழைத்து, சேமிக்கும் வழித்தடங்களை உருவாக்கப் பயன்படுகிறது.

micro justification : நுண் வரிச் சரியமைவு நுண் வரிச் சரியாக்கம்: சில சொல் செய் முறைப்படுத்தும் செயல் முறைகளில் சொற்களிடையிலும், சொற்களினுள்ள எழுத்துகளிடையிலும் சிறிய வெள்ளி எழுத்து இடை வெளிகளைச் சேர்த்திடுவதற்கான திறன். இது சாதாரணமாகச் சரிக் கட்டப்பட்ட பக்கங்களை விட எளிதாகப் படிக்க உதவுகிறது.

micro logic : நுண் தருக்க (அளவை) முறை: ஒரு நுண் செயல் முறையில் அறிவுறுத்தங்களை உருமாற்றம் செய்வதற்கு நிரந்தரமாகச் சேமிக்கப்பட்ட ஒரு செயல் முறையைப் பயன்படுத்துதல்.

micro mail : நுண் அஞ்சல்: ஏசிடி என்னும் இங்கிலாந்து கணினி நிறுவனம் உருவாக்கிய மின்னணு அஞ்சல் முறை.

micro mainframe : நுண் பெருமுகம்: பெருமுக அல்லது ஏறக்குறைய பெருமுகக் கணினியின் வேகமுள்ள தனிநபர் கணினி (பி.சி.).

micro miniature chip : நுண்ம நுணுக்கச் சிப்பு: கணினிச் சேமக்கலத்தில் (நினைவுப் பதிப்பி சிப்பு) அல்லது கட்டுப்பாட்டில் (நுண் செய்முறைப்படுத்தி சிப்பு) பயன்படுத்தப்படும் மிகப் பேரளவு ஒருங்கிணைப்புச் சிப்பு (VLSI chips) அல்லது பேரளவு ஒருங்கிணைந்த மின்சுற்று (LSI).

micro miniaturization : நுண்ம நுணுக்கமாக்கம் : நுணுக்கமாக்கத்தை விட ஒருபடி சிறியதான மிகச் சிறிய வடிவளவு.

micron : மைக்ரோன்: பதின்மான நீட்டளவை அலகில், ஒரு மீட்டரில் பத்து இலட்சத்தில் ஒரு பகுதி. ஏறத்தாழ ஓர் அங்குலத்தில் 1/25,000.

micro processor : நுண் செய்முறைப் படுத்தி : ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட மின்சுற்றுவழிச் சிப்பில் அடங்கியுள்ளவற்றைப் பொதுவாகச் செய்முறைப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைக் கணிதத் தருக்க முறையும் கட்டுப்பாட்டு மின்வாயும் ஆகும். நுண்கணினிகள், வீட்டுச் சாதனங்கள், வணிக எந்திரங் கள், கணிப்புச் சாதனங்கள் , பொம்மை விளையாட்டு ஒளிப் பேழை எந்திரங்கள், மற்றும் பல்லாயிரம் பிற சாதனங்களில் இரு பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

micro programme : நுண் ஆணைத் தொடர்; நுட்ப நிரல் : ஆரம்ப ஆணைகளின் வரிசை. இவற்றை நுண் செயலகத்தில் உள்ள நுண் அளவை துணை அமைப்பாக மாற்றப்படும்.

micro programmable computer : நுண் செயல்முறை வகுத்திடத் தக்க கணினி : அறிவுறுத்தங்களின் தொகுதி நிலைப்படுத்தியதாக இல்லாமல், படிப்பதற்கு மட்டுமேயான நினைவுப் பதிப்பி அல்லது பிற நினைவுப் பதிப்பி சாதனங்களைச் செயல் முறைப்படுத்துவதன் மூலம் தனித் தனித் தேவைகளுக்கேற்ப செயல் முறைகளை வகுத்தமைக்கக் கூடிய ஒரு கணினி. இதனால், ஒரு கணினியானது முதன்மைப் பொறியமைவாக அல்லது நுண் கணினியாக இருப்பினும் கோட்பாட்டு முறைப் படி அதனை நுண் செயல் முறைப் படுத்திட இயலும்.

micro programming : நுண் செயல் முறைப்படுத்துதல் : ஒரு கணினியின் கட்டுப்பாட்டுப் பகுதியை இயக்குவதற்கான முறை. இந்தப் பகுதியில் ஒவ்வொரு அறிவுறுத்தமும் பல சிறிய செயல்களாகப் (நுண் செயல்கள்) பகுக்கப்பட்டிருக்கும். இவை, ஒரு நுண் செயல் முறையின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

micro publishing : நுண் வெளியீடு: நுண் வரைகலையில் பயன்படும் சொல். விற்பனை அல்லது விநியோகத்திற்காக புதிய அல்லது மறு வடிவமைக்கப்பட்ட தகவலை நுண் திரைப்படத்தில் வெளியிடுவது.

micro second : நுண் வினாடி : ஒரு வினாடியின் பத்து இலட்சத்தில் ஒரு பகுதி. இதன் சுருக்க வடிவம் : µs அல்லது µsec.

Microsoft C : நுண் மென்பொருள் சி: நுண் மென்பொருளின் 'சி' தொகுப்பி. பல வகையான வணிக உற்பத்திப் பொருள்களை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. விண்டோஸ் ஆணைத் தொடரமைப்பதற்குத் தேவைப்படும் நுண் மென்பொருள் விண்டோஸ் மென்பொருள் வளர்ச்சி சாதனம். பி.சி. பயன்பாடு வளர்ச்சிக்காக பி.சி.யில் பயன்படுத்தப்படுவதற்கு 'சி' மொழியில் அதிகம் பயன்படுவது மைக்ரோ நுண் மென்பொருள் 'சி' மற்றும் போர்லேண் டில் டர்போ 'சி' ஆகிய இரண்டும் ஆகும்.

microsoft word : நுண் மென்பொருள் சொல் : மைக்ரோசாஃப்ட் நிறுவனம் மெக்கின்டோஷ் கணினி மற்றும் பி.சி.க்களுக்காக உருவாக்கிய எல்லா தன்மைகளும் நிறைந்த சொல் செயலாக்க ஆணைத்தொடர். டாஸ் பதிப்பு ஒரு ஆவணத்தில் வரைகலை மற்றும் சொற்பகுதி சார்ந்த இடைமுகங்களின் மூலம் பணியாற்ற உதவுகிறது. Word for windows என்று அழைக்கப்படும் விண்டோசுக்கான மைக்ரோசாஃப்ட் வேர்ட் மென்பொருள் நவீன வசதிகள் கொண்டதாக விண்டோஸ்களில் பணியாற்ற ஏற்றதாக உள்ளது.

microsoft works : நுண் மென் பொருள் பணிகள் : மெக்கின்டோஷ் மற்றும் பி.சி-க்களுக்கான ஒருங் கிணைந்த மென்பொருள் பொதி அல்லது தொகுப்பு. மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் உருவாக்கியது. உறவு போன்ற திறன்களுடன் கோப்பு மேலாண்மை சொல் செய லாக்கம், விரிதாள், வணிக வரை கலை மற்றும் தகவல் தொடர்பு திறன்கள் ஆகிய அனைத் தும் கொண்ட தொகுப்பாக இது கிடைக் கிறது.

micro spacing : நுண் எழுத்திடை வெளி அமைவு: அச்சுத் துறையில் மிகச்சிறிய தொலைவுகளுக்கு நகர்த்துவதற்கு அனுமதிக்கும் இடை வெளியமைவு. இது, நுண் வரிச் சரியமைவிலும், நிழல் அச்சுக் கலை யிலும் பயன்படுத்தப்படுகிறது. இதனை மிகைப்பாட்டு எழுத்திடை வெளியமைவு என்றும் கூறுவர்.

micro to mainframe linkage : நுண் ணிலிருந்து பெருமுக இணைப்பு: பயன்படுத்துபவரின் மேசையில் உள்ள பெருமுகக் கணினி அமைப் புக்கும் தனி நபர் கணினி அமைப்பு களுக்கும் இடையில் தகவல் தொடர்பு நடைபெற அனுமதிக்கும் வன்பொருள் /மென் பொருள்.

microwave : நுண்ணலை: சென்டி மீட்டர் அளவில் ஓர் அலைநீளம் கொண்டுள்ள மின்காந்த அலை. மின் காந்த நிறமாலையில் ஒரு பகுதியில் இந்த நுண்ணலை அமைந்துள்ளது. இதனைச் சுற்றி நீண்ட அலைவு நீளங் களின் பக்கத்தில் வானொலி அலை களும் சிற்றலை நீளங்களின் பக்கத் தில் அகச்சிவப்பு அலைகளும் சூழ்ந் துள்ளன. இது தகவல் தொடர்பு களில் பயன்படுத்தப்படுகிறது.

microwave hop : நுண்ணலைத் துள்ளல்; நுண்ணலைத் தாவல் : ஒன்றையொன்று நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ள இரு உட்குழிவு வானலை வாங்கிகளுக்கு நடுவி லுள்ள நுண்ணலை வானொலி அலைவரிசை.

microwave transmission lines : நுண்ணலை பரப்பீட்டுக் கம்பிகள்; நுண்ணலை பரப்புத் தொடர் : மின் காந்த ஆற்றலை நுண்ணலை அதிர் வெண்களில் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு அனுப்பு வதற்குப் பயன்படுத்தப்படும் கட்டமைவுகள்.

MICR reader : எம்ஐசிஆர் படிப்பி; காந்த மை எழுத்து ஏற்புப் படிப்பி: மின் காந்த மையெழுத்து ஏற்புப் படிப்பி (Magnetic Ink Character Reader). இது மின்காந்த மையெழுத்துகளில் அச் சடிக்கப்பட்டுள்ள ஆவணங்களைப் படித்துக் காட்டும் உட்பாட்டுச் சாதனம்.

midimini computer : நடுநுண்ணிய கணினி : நடுத்தர வடிவளவுடைய நுண்ணியக் கணினி. இது 16 துணுக்குச் சொற்களைப் பயன் படுத்துகிறது. இது நுண் நுண்ணியக் கணினி, பெரும நுண்ணியக் கணினி, மீநுண்ணிய கணினி ஆகியவற்றி லிருந்து மாறுபட்டது.

midi computer : நடு கணினி : சிறு கணினிக்கும், பெருமுகக் கணினிக் கும் இடைப்பட்ட செயல்திறன் உள்ள கணினி.

midrange computer : நடு வரிசை கணினி : சிறு கணினி போன்றதே. ஆனால் தனி -பயனாளர் சிறு கணினி பணி நிலையங்கள் இதில் இருப்ப தில்லை.

migration : இடப்பெயர்வு.

milestone : நிகழ்வு; மைல்கல்: ஒரு பணியை நிறைவேற்றுங்கால் நிகழும் ஒரு நிகழ்வு. ஓர் உட்பாட்டு/வெளிப்பாட்டுச் செயற்பாடு முடிவடைவது இதற்கு எடுத்துக்காட்டு.

milk disk : பால் வட்டு: ஒரு சிறிய கணினியிலிருந்து தகவல்களைத் திரட்டப் பயன்படுத்தப்படும் வட்டு. பின்னர், ஒரு பெரிய கணினியில் செயலாக்கம் செய்யப்படுவதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது.

mill : ஆலை: பகுப்பாய்வு எந்திரம் என அழைக்கப்பட்ட முதல் எந்திரக் கணினியை வடிவமைக்கும்போது சார்லஸ் பாபேஜ் பயன்படுத்திய செயலகத்திற்கு மற்றொரு பெயர்.

milli : மில்லி: ஆயிரத்தில் ஒரு பகுதி. ஒரு மில்லி வினாடி என்பது, ஒரு வினாடியில் ஆயிரத்தில் ஒரு பகுதியாகும்.

millimicrosecond : மில்லி நுண் வினாடி: இது நானோவினாடி (nanosecond) என்றும் அழைக்கப்படும். இது ஒரு வினாடியில் நூறு கோடியில் ஒரு பகுதி.

millisecond : மில்லி வினாடி: ஒரு வினாடியில் ஆயிரத்தில் ஒரு பகுதி; இதன் சுருக்க வடிவம் : ms அல்லது msec.

minemonic codes : நினைவூட்டுக் குறியீடுகள்:

mini : சிறிய; சிறு: நுண்ணிய கணினியின் சுருக்கப் பெயர்.

miniaturization : நுணுக்கமாக்கம்; சிற்றளவாக்கம் : ஒரு பொருளின் வடிவளவினை அதன் திறம்பாடு குறையாத வண்ணம், சிறியதாகக் குறைக்கும் செய்முறை. இதனை நுண்ம நுணுக்கமாக்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க.

mini computer : குறுங்கணினி; சிறு கணினி: எண்மானக் கணினி. இது ஒரு நுண்மக் கணினியிலிருந்து (Micro computer) வேறுபட்டது. இது அதிகச் செயல் திறனுடையது. அதிக ஆற்றல் வாய்ந்த ஆணைகளைக் கொண்டது. இதன் விலையும் அதிகம். இதில் அதிகச் செயல் முறைகளும், செயற்பாட்டுப் பொறியமைவுகள் உள்ளன. இது, சிறிய வடிவளவும் குறைந்த விலையும், குறைவான தகவல் கொள்திறனும் கொண்ட முதன்மைப் பொறியமைவிலிருந்து வேறுபட்டது. நுண்ணிய கணினி பொறியமைவு நான்கு செயற்பாட்டு வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன: (1) நடு நுண்ணிய கணினி; (2) பெரும நுண்ணிய கணினி; (3) மீப் பெருமக் கணினி; (4) மீநுண்ணிய கணினி.

mini floppy disk : சிறு நெகிழ் வட்டு: நுண் கணினியமைவுகளில் பயன்படுத்தப்படும் 13.3 செ.மீ. (5.25") விட்டமுடைய நுண் வட்டு.

minimal tree : குறும மரம்: இதன் முனையங்கள், இந்த மரத்தை பெரிதும் உகந்த அளவில் செயற்படுமாறு செய்யும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இது பெரும இணைப்பு மரத்திலிருந்து வேறுபட்டது.

minimax : குறுமப் பெருமம்; சிறுமப் பெருமம் : ஒரு செய்முறையில் பெருமப் பிழையினை குறும அளவுக்குக் குறைத்திடும் உத்தி.

minimini computer : குறுஞ்சிறு கணினி: நுண்ணிய கணிப்பொறியமைவுகளில் மிகச் சிறிய வகை. இதில், ஒரு குறிப்பிட்ட அளவு செயற்பாட்டு அம்சங்களே அமைந்திருக்கும். இது,நடு நுண்ணிய கணினி, பெரும நுண்ணிய கணினி, மீநுண்ணிய கணினி ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

minimize : சிறிதாக்கு : வரைகலை சூழ்நிலையில், ஒரு சன்னலை பிம்பம் அளவுக்குக் குறைப்பது.

minor key : துணை விசை: ஒரு பதி வேட்டை அடையாளம் காணப் பயன்படுத்தும் துணை விசை. சான் றாக, மாற்றங்களை கணக்கு எண் மற்றும் தேதி வாரியாக பிரித்தல். இதில் கணக்கு எண் பெரு விசை. தேதி துணை விசை.

mirror site : நகல் தளம்; கண்ணாடி தளம் : வேறொரு இடத்தின் உள் ளடக்கங்களை முழுவதும் நகல் எடுக்கும் ஒரு இடம். பிரபல இடத்தின் சுமையைக் குறைக்க பொதுவாக இதைச் செய்வார்கள். சான்றாக, ஜி.என்.என். பெறும் அதிக சுமையைக் குறைக்க டிஜிட்டல் எக்விப்மென்ட் கார்ப்பரேசன் நிறு வனம் ஓ ரெய்லியின் குளோபல் நெட்வொர்க் நேவிகேட்டரின் கண்ணாடியை அளிக்கிறது.

minor sort key : குறும வகைப் பாட்டுப் பகுதி: சிறு வரிசையாக்கத் துணைச் சாவி : பதிவேடுகளை வகைப்படுத்து வதற்கான இரண்டாம் நிலைப் பாகு பாட்டு ஆதாரங்களைக் கொண்ட தகவல் புலம். பெரும வகைப் பாட்டுப் பகுதியில் இருமடியாக்கங் கள் நடைபெறும்போது மட்டுமே இது பயன்படுத்தப்படுகிறது.

mips : மிப்ஸ் : Million Instructions Per Second என்பதன் குறும் பெயர். ஒரு வினாடிக்குப் பத்து இலட்சம் ஆணை கள். ஒரு பெரிய கணினியமைவு, ஒரு வினாடி நேரத்தில் நிறைவேற் றும் எந்திர மொழி ஆணைகளின் சராசரி எண்ணிக்கையைக் குறிக்க இது பயன்படுகிறது.

mirror image : ஆடி பிம்பம் ; கண்ணாடிப் பிம்பம்.

mirroring : கண்ணாடி உருக்காட்சி: ஓர் உருக்காட்சியைச் சித்திரித்துக் காட்டும் வரைகலைச் செய்திக் குறிப் பினை, அதன் நேர்தலை கீழ் பிம்ப மாகக் காட்டும் கண்காட்சி அல்லது உருவாக்கம். பல கணினி வரை கலைப் பொறியமைவுகள், காட்சித் திரையில், ஒரு வரைகலை உருக் காட்சியைத் தானாகவே தலை கீழாகப் பிரதிபலித்துக் காட்டு கின்றன.

MIS : எம்ஐஎஸ்: மேலாண்மைத் தகவல் பொறியமைவு என்று பொருள்படும் "Management Information System" என்ற ஆங்கிலத் தலைப்பெழுத்துச் சொல்.

mistake : பிழை; தவறு: மனிதர் செய் யும் சிறு பிழை. இதனால், தவறான கணிப்பு, தவறான கணினி ஆணை களைப் பயன்படுத்துதல், தவறான விசையை அழுத்துதல், கணினி செயல்முறையில் தவறான சூத்திரங் களைப் பயன்படுத்துதல் போன்ற கருதப்படாத விளைவுகள் ஏற்படக் கூடும்.

mixed number : கலப்பு எண் : முழு எண் பகுதியும் பின்னப் பகுதியும் கொண்ட ஓர் எண். எடுத்துக்காட்டு : 63.71; -18.006; 298.413.

mixed object : கலவைப் பொருள்: Compound document போன்றது.

ML : எம் எல்: 'வித்தகர் மொழி' என்று பொருள்படும் 'Manipulator Language" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சொல். இது, எந்திர மனிதர்களைக் கட்டுப்படுத்து வதற்கு IBM என்ற முதன்மைப் பொறி யமைவு நிறுவனம் பயன்படுத்தும் செயல் முறைப்படுத்தும் மொழி.

mnemonic : நினைவூட்டு வாசகம்; நினைவுபடுத்தி : மனிதர்0 எளிதில்

நினைவில் பதித்து வைத்துக் கொள்ளக் கூடிய வாசகங்கள்; நினைவில் இருத்தி வைத்துக் கொள்வதற்கான உத்திகள்.

mnemonic code : நினைவூட்டு வாசகக் குறியீடு; நினைவூட்டுக் குறியீடு : எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய இணைப்பு மொழிக் குறியீடு. எடுத்துக்காட்டு: பெருக்கல் (Multiply) என்பதற்கு 'MPY' என்ற சுருக்கெழுத்தைப் பயன்படுத்துதல்.

mnemonic language : நினைவூட்டு வாசக மொழி : எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய சைகைகளின் அடிப்படையில் அமைந்த செயல் முறைப்படுத்தும் மொழி. இந்தச் சைகைகளைக் கணினி மூலம் எந்திர மொழியாக இணைக்கலாம்.

mobile radio systems : நடமாடும் வானொலி அமைப்புகள்: எந்த நாட்டின் தொலைபேசி அமைப்புக்கும் பயனுள்ள விரிவாக்கமாக மேட்ஸ் (MTS) எனப்படும் நடமாடும் தானியங்கித் தொலைபேசி அமைப்பு விளங்கும். வழக்கமான கம்பிகளால் இணைக்கப்பட்ட தொலைபேசி போல ஒவ்வொரு நடமாடும் நிலையமும் ஒரு காரில் வானொலி தொலைபேசி இணைக்கப்பட்டு அதற்கு தனி எண் கொடுக்கப்படும். அதே நகரத்தில் உள்ள பிற இயங்கும் தொலை பேசிகளுடன் மட்டுமல்லாது மற்ற வழக்கமான தொலை பேசிகளுடன் உலகின் எந்தப் பகுதிக்கும் பேச முடியும்.

mobile robots : நடமாடும் எந்திர மனிதர்கள் (எந்திரன்) : மனிதர்களைப் போல , சில எந்திர மனிதர்களும் தாமாகவே ஓரிடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு நகரக்கூடியவை.

mobile users : நடமாடும் பயனாளர்கள்.

modal : படிமம்: மாதிரி: முறை சார்ந்தது. மாடல் இயக்கம் ஒரு முறையிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றித் தருகிறது.

mode : முறைமை; செயற்பாட்டு முறை: சொல் சார்ந்த, இடைப் பரிமாற்ற அல்லது வரைகலை முறை உள்ளிட்ட ஒளி மூலமான காட்சி. ஒரு அமைப்பு இயக்கப்படுகின்ற இயக்க நிலை. இரண்டு சூழ்நிலைகள் இதில் ஏற்படலாம். வன்பொருள் மென்பொருளுக்கு எண்ணற்ற முறைகள் உள்ளன.

model : உருப்படிவம்; படிமம் : அறிவியல் ஆராய்ச்சிகளுக்காக எடுத்துக் கொள்ளப்படும் ஒரு பொருளின் அல்லது அமைப்பின் இன்றியமையாத அம்சங்களைக் கொண்ட ஒரு முன் மாதிரி வடிவம். அறிவியல் உருப்படிவங்களில் சிக்கலான சூத்திரங்களும், பெருமளவு கணிதமும் பயன்படுத்தப்படுகின்றன. சமன்பாடுகளுக்குத் தீர்வு காணவும், தேவையான கணிப்புகளைச் செய்யவும் கணினியைப் பயன்படுத்தினால் அது 'கணினி வடிவாக்கம்' எனப்படும். அறிவியல், வணிகம், பொருளாதாரம் முதலிய பல்வேறு துறைகளில் உருப்படிவமும், வடிவாக்கமும் மிகவும் இன்றியமையாதவை.

model base : மாதிரி அடிப்படை : கோட்பாடு, கணக்கீடு மற்றும் அளவைமுறை மாதிரிகளின் ஒழுங்கு படுத்தப்பட்ட தொகுதி. வணிக உறவுகள், கணிப்பீடு நிரல்கள் அல்லது பகுப்பாய்வு நுட்பங்கள் போன்றவற்றை இவை விளக்குகின்றன. ஆணைத் தொடர்கள், துணை நிரல்

கள், கட்டளைகளைக் கோப்புகள் மற்றும் விரி தாள்கள் போன்ற வடிவங்களில் இத்தகைய மாதிரிகள் சேமிக்கப்படுகின்றன.

model-based expert system : மாதிரி-சார்ந்த வல்லுநர் அமைப்பு: ஒரு பொருளின் வடிவமைப்பு மற்றும் பணி பற்றிய அடிப்படை அறிவு சார்ந்த வல்லுநர் அமைப்பு. சான்றாக இத்தகைய அமைப்புகள் கருவியின் சிக்கல்களைக் கண்டறியப் பயன்படுத்தப்படுகின்றன.

Rule based expert system என்பதன் எதிர்ச்சொல்.

model geometric : வடிவ கணித உருப்படிவம் : ஒரு கணினி வரைகலைப் பொறியமைவில் வடிவமைக்கப்பட்டு தகவல் தளத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஓர் உருவத்தை, ஒரு பகுதியை அல்லது புவி வரைகலைப் பரப்பை, முழுமையான முப்பரிமாண அல்லது இருபரிமாணப் புவியியல் வடிவ கணித அமைப்பில் உருவாக்கிக் காட்டுதல்.

modeling : உருப்படிவாக்கம்: ஒரு பொறியமைவின் சில பகுதிகளைத் துல்லியமாக உருப்படுத்திக் காட்டும் செய்முறை.

modem : மோடம் (அதிர்விணக்க நீக்கி): Modulator - Demodulator என்ற இரண்டு சொற்களின் முதலெழுத்துகளைச் சேர்த்து இச்சொல் உருவாக்கப்பட்டது. குரல்-நிலை தகவல் தொடர்பு வசதிகளின் சமிக்ஞைகளை ஏற்றும், மாற்றியும் அனுப்பிப் பெறுகின்ற சாதனம். தொலைபேசிக் கம்பி இணைப்புக்கு கணினியையோ அல்லது முனையத்தையோ ஆற்றுப்படுத்துகின்ற சாதனம். பெறும் இடத்தில் கணினியில் இலக்க முறை துடிப்புகளை ஒலி அலை வரிசைகளாகவும் அவற்றை மீண்டும் துடிப்புகளாகவும் மாற்றித் தருகிறது. கணினியின் உள்ளேயும் மோடெத்தைப் பொறுத்து முடியும். வெளிப்பகுதியில் மோடெத்தை வைத்தால் 'போர்ட்' மூலம் அது கணினியில் சேர்கிறது. தொலைபேசியில் அழைப்பது, பதில் சொல்வது ஆகியவற்றை மோடெம் கையாள்கிறது. இவற்றை அனுப்பும் வேகம் ஒரு நொடிக்கு 300 முதல் 33,600 துண்மிகள் அல் லது அதற்கு மேற்பட்டதாகும். தொலைபேசி மூலம் அழைக்கும் மோடெத்தின் சராசரி வேகம் ஒரு நொடிக்கு 2,400 துண்மிகள். 33,600 துண்மிகள் திறனுள்ளது பிரபலமாகிறது. ஒரு நொடிக்கு 2,400 துண்மிகள் என்ற வேகத்தில் இயங்கும்போது 7 நொடிகளில் 2,000 எழுத்துகளைக் கொண்ட ஒரு திரையை நிரப்பும். எழுத்து விகிதமானது துண்மி விகிதத்தில் 10%. ஆகவே, 2,400 துண்மிகள் ஒரு நொடிக்கு என்பது 240 எழுத்துகள் ஒரு நொடிக்கு என்பதாகும். மோடெத்தில் பார்க்க வேண்டியது அதிவேகம், பிழை சோதித்தல் மற்றும் தகவல்களைச் சுருக்கல் ஆகியவையே. புதிய மோடெம்கள் தானாகவே பிற மோடெம்களின் வேகத்திற்கும், வன்பொருளின் விதிமுறைகளுக்கும் சரி செய்து கொள்கிறது.

modem eliminator : மோடெம் விலக்கி: நெருக்கமாக உள்ள இரண்டு கணினிகள் மோடெம் இல்லாமலேயே தொடர்பு கொள்ள அனுமதிக்கும் சாதனம். தனிநபர் கணினிகளுக்கு, இது தேவையான மென்பொருளைக் கொண்ட முழு மோடெம் போன்றதாகும். ஒத்திசைவு (சின்க்ரனஸ்) அமைப்பு

களில் ஒத்திசைவுக்கு அறிவுக் கூர்மையை அளிக்கிறது.

modify : திருத்தம் செய்தல் : 1. கணினி ஆணையின் ஒரு பகுதியை அதன் இயல்பான பொருள் விளக்கத்திலிருந்தும் நிறைவேற்றத்திலிருந்தும் மாறுபடும் வகையில் மாற்றியமைத்தல். இந்த மாற்றம், ஆணையை நிரந்தரமாக மாற்றி விடலாம், அல்லது அதில் மாற்றம் எதுவும் செய்யாமல் நடப்பு நிறை வேற்றத்தை மட்டுமே பாதிக்கலாம். 2. ஒரு குறிப்பிட்ட தேவைப்பாட்டுக் கேற்ப ஒரு செயல் முறையை மாற்றுதல்.

modify structure : வடிவமைப்பை மாற்று: ஒரு கோப்பின் வடிவ அமைப்பை மாற்றும் தகவல் தளக் கட்டளை. புல நீளங்களும், பெயர்களும் மாற்றப்படலாம். புலங்களைச் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம். பழைய தகவல் கோப்புகளை, புலங்கள் நீக்கப் பட்டாலொழிய புதிய அமைப்புகளாக தகவல் இழப்பின்றி மாற்றித் தரும்.

modula-2 (Modular language-2) : மாடுலா-2: பாஸ்கலை உருவாக்கிய சுவிட்சர்லாந்து பேராசிரியர் நிக்லாஸ்விர்த் 1979இல் அறிமுகப் படுத்திய பாஸ்கலின் மேம்பட்ட பதிப்பு. கூறு (மாடுல்) களை தனியாகத் தொகுக்க உதவுகிறது.

modular approach : கூறுநிலை அணுகு முறை : ஒரு திட்டத்தை வரிசைக் கிரமமான பிரிவுகளால் பிரித்தல். சிறிய அலகுகளாகப் பிரிப்பதனால் ஆய்வு, வடிவமைப்பு மற்றும் ஆணைத் தொடரமைப்பு முயற்சிகள் எளிமையாகும்.

moduar coding : தகவமைவு குறியீட்டு முறை : செயல்முறைப்படுத்தும் உத்தி; இதில், ஒரு செயல் முறையில் தருக்கமுறைப் பகுதிகள் பல்வேறு தனித்தனித் தகவமைவுகளாக அல்லது வாலாயங்களாகப் பகுக்கப் படுகின்றன; ஒவ்வொரு வாலாயமும் தனித்தனியே செயல் முறைப் படுத்தப்படும்.

modular constraint : தகவமைவு வரையறை : கணினி வரைகலையில், உருக்காட்சிகளின் சில அல்லது அனைத்துப் புள்ளிகளும், கண்ணுக்குப் புலனாகாத வலைச் சட்டத்தின் குறுக்கு வெட்டுப் புள்ளிகளில் அமைந்திருக்கும் வகையில், உருக் காட்சிகளின் இட அமைப்பில் ஏற்படுத்தப்படும் வரையறை.

modularity : தகவமைவுத் திறன்: கணினிகளை ஒரு தொகுப்புக் கட்டிடத்தில் வடிவமைப்பில் உருவாக்கும் கோட்பாடு. இது, சாதனத்தின் திறம்பாட்டை உயர்த்தவும், சிக்கன முறையான மேம்பாட்டுக்கும் உதவும்.

modular programming : தகவமைவுச் செயல் முறைப்படுத்துதல் : எளிதாக இடமாற்றம் செய்யக்கூடிய, சிறிய கணினி வாலாயங்களை உருவாக்குகிற செயல்முறைப்படுத்துதல். இது, தர அளவான இடைமுகப்புத் தேவைகளை நிறைவு செய்யும். செயல் முறையைச் செயற்பணிகளை முழுமையாகச் செய்யக்கூடிய வகையில், குறிப்பிட்ட பகுதிகளாகப் பகுத்து இது செய்யப்படுகிறது. மிகவும் சிக்கலான செயல்முறைகளையும் பொறியமைவுகளையும் உருவாக்குவதற்கு இது உதவுகிறது.

modulation : அதிர்விணக்கம் : செய்திக் குறிப்புகளை அனுப்புவதில், உயர் அதிர்வெண் ஊர்திக்கு குழூஉக் குறியின் சில பண்புகளை, தாழ் அதிர்வெண் தகவல் குழூஉக் குறிக்கு

இணங்கியவாறு மாற்றும் செயல் முறை.

கணினி சேர்முனையக் குழூஉக் குறிகளை செய்தித் தொடர்பு வசதிகளுக்கு ஏற்புடையதாக செய்வதற்குத் தகவல் தொகுதிகளில் இது பயன்படுகிறது.

modulator : குறிப்பேற்றி : அதிர் விணக்கி: தகவல் குறிப்புச் செயல் முறைப்படுத்தும் எந்திரத்திலிருந்து வரும் மின்னியல் துடிப்புகளை அல்லது துண்மிகளைப் பெற்றுக் கொண்டு அவற்றைச் செய்தித் தொடர்பு இணைப்பின் வழியாகச் செலுத்துவதற்கு ஏற்புடைய குழூஉக் குறிகளாக மாற்றுகிறது.

module : கூறு : தகவமைவு: ஒரு செயல்முறையில் தருக்க முறைப் பகுதிகளில் ஒன்று. ஒரு பெரிய செயல்முறையை தன்னடக்கமான பல தருக்க முறைத் தகவமைவுகளாகப் பகுக்கலாம். இந்தத் தகவமைவுகளைப் பல செயல் முறையாளர்கள் தனித்தனியே எழுதிச் சோதனை செய்யலாம். பிறகு இத்தகவமைவுகளை ஒன்றாக இணைத்து முழுச் செயல் முறையாக அமைத்து விடலாம்.

modulo : மீதி : வகுத்தல் தகவமைவுச் சார்பலன் : வகுத்தலில் மீதத்தைக் கொடுக்கும் ஒரு கணிதச் சார்பலன். 'x' என்ற எண்ணின் 'n' தகவமைவின் மூலம் x/n என்ற முழு எண் மீதம் கிடைக்கிறது. எடுத்துக்காட்டு: 1000-இன் 84 தகவமைவு 1000/84 அல்லது 76.

molecular beam epitaxy : மொலிக்யூலர் பீம் எபிடாக்சி: அடுக்குகளைப் பிரிப்பதனால் உருவாக்காமல் அணு-அளவு அடுக்குகளைச் சிப்புவில் 'வளர வைக்கும்' தொழில் நுட்பம்.

monadic : எதிர் இயக்கச் செயற்பாடு; ஒருறுப்பு: 'எதிர்' இயக்கி (NOT operated) போன்ற ஒரே இயக்கப்படு எண்ணை மட்டுமே பயன்படுத்துகிற ஒரு கணிதச் செயற்பாடு தொடர்பானது.

monitor : காட்சித்திரை; கணித்திரை; கண்காணிப்புத் திரை; திரையகம் : 1. கட்டுப்பாட்டுச் செயல் முறை அல்லது மேற்பார்வைச் சாதனம். 2. ஒளிப் பேழைக் காட்சித்திரை.

monitoring systems : கண்காணிப்பு முறைகள்.

monochrome : ஒரே நிறமுடைய: முன்னணியில் ஒரு நிறத்தையும் பின்புறத்தில் ஒரு நிறத்தையும் காட்டுவது. சான்றாக, வெண்மையின் மீது கறுப்பு, கறுப்பின் மீது வெண்மை, கறுப்பின் மீது பச்சை.

monochrome card : ஒரு நிறப்பட அட்டை : ஒரே நிற அட்டை : கணினியின் விரிவாக்கத் துளை விளிம்பில் பொருந்துகிற சுற்றுவழி அட்டை. இது ஒரே நிறக் குழூஉக் குறிகளை உண்டாக்கும். பயன்படுத்தப்படும் காட்சித் திரையைப் பொறுத்து இது, வெள்ளை/அம்பர்/பச்சை நிறச் சாயல்களை உண்டுபண்ணும்.

monochrome monitor : ஒரே நிறக் காட்சித்திரை; ஒரே நிறத் திரை: மாறுபட்டதொரு கறுப்பு வண்ணம் பின்னணியில் தனியொரு வண்ண (வெள்ளை, அம்பர், அல்லது பச்சை) எழுத்துகளைக் காட்சியாகக் காட்டும் ஒரு தனிவகைக் காட்சித்திரை. இதனால் மிகக் கூர்மை வாய்ந்த தெளிவான காட்சி உருவாகிறது. எனவே மிக எளிதாகப் படிக்க முடிகிறது. பெரும்பாலும் சொல் செயலி பயன்பாடுகள், வணிகப் பொறியமைவுகள் கல்விச் சாதனங்கள் போன்ற

கணினி சேர் முனையங்கள் பல மணி நேரம் தேவைப்படுகிற, ஆனால் பல வண்ணக் காட்சிகள் தேவைப்படாத பயன்பாடுகளில் இது பயன்படுத்தப் படுகிறது.

monolithic : தனிக் கன்ம அடுக்கு; ஒருங்கிணைந்த: தனியொரு கன்ம அடுக்கு தொடர்பானது. இதன் அடிப் படையில் ஓர் ஒருங்கிணைந்த மின் சுற்றுவழி உருவாக்கப்படுகிறது. தனியொரு கன்ம அடுக்குச் செயல் முறையில் பல்வேறு தனித்தனி தகவுச் செயல்முறைகளை இணைப் புத் தொகுப்பி மூலம் ஒருங்கிணைக்க லாம்.

monolithic integrated circuit : தனிக் கன்ம அடுக்கு ஒருங்கிணைப்பு மின் சுற்று வழி: ஒரு பொருளின் ஒரே பாளத்தில் அமைக்கப்படும் மின் சுற்று வழி. இது, கலப்பு மின்சுற்று வழியிலிருந்து மாறுபட்டது; இதில், தனித்தனிப் பாளங்களில் மின்சுற்று வழி அமைப்பிகள் அமைக்கப் பட்டிருக்கும்; அவை இறுதி மின் சுற்று வழியுடன் மின்னியல் முறை யில் இணைக்கப்பட்டிருக்கும்.

monophonic : ஒரே ஒலியுடைய: ஒரு தனி வழித்தடத்தைப் பயன்படுத்தி ஒலியை மீண்டும் ஏற்படுத்துதல்.

Monroe Jay R : மன்ரோ ஜே ஆர்: 1911இல், முன்பு ஃபிராங்க் பால்ட் வின் வடிவமைத்த வடிவமைப்பு களைப் பயன்படுத்தி, முதலாவது விசைப் பலகை சுழல் எந்திரத்தைக் கண்டுபிடித்து, வணிக முறையில் பெரும் வெற்றி கண்டவர்.

monospacing : ஒற்றை இடை வெளி விடல்: ஒரு அங்குலத்துக்கு 10எழுத்து கள் விடுவது போன்று ஒரே மாதிரி யான குறுக்கு வாட்ட இடை வெளி விடுதல்.

monte carlo method : மாண்டி கார்லோ முறை: ஒரு கணக்குக்குத் தீர்வுகாணத் திரும்பத் திரும்பக் கணிப்புகளைச் செய்திடும் முறை. ஒன்றுக்கொன்று இடைத் தொடர்புடைய ஏராளமான மாறியல் மதிப்புருக்கள் உள்ள சிக்க லான கணக்குகளுக்குத் தீர்வு காண இந்த முறை பயன்படுகிறது.

montissa : மடக்கையின் பதின்மக் கூறு.

more than : மேலும்.

Morlund Samuel (1625-1695) : மோர்லண்ட் சாமுவேல் (1625-1695): நேப்பியர் சட்டங்களை மேம்படுத்தி ஒரு பெருக்கல் கருவியைக் கண்டு பிடித்தவர். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய நான்கு கணிதச் செய்முறைகளையும் கணக் கிடுவதற்கு ஒரு கணித எந்திரத்தை 1666இல் கண்டு பிடித்தார்.

Morphing : உருமாற்றம்.

Morse code: மோர்ஸ் குறியீடு: பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சாமுவேல் மோர்ஸ் உருவாக்கிய புள்ளிகளும் கோடுகளும் கொண்ட தகவல் குறியீடு. ஒரு புள்ளி என்பது ஒரு வோல்டேஜ் கொண்டு செல்லும் அலை அல்லது ஒரு குறிப்பிட்ட நேரம் கொண்ட ஒளிக்கற்றை ஆக இருக்கலாம். தொலைபேசி வரு வதற்கு முன்பு தந்தி மூலம் செய்திகளை அனுப்ப இது பயன் பட்டது.

MOS : எம்ஓஎஸ் : உலோக ஆக்சைடு அரைக்கடத்தி திண்மப் பொருள் எனப் பொருள்படும் 'Metalic Oxide Semiconductor' என்ற ஆங்கிலப் பெயரின் தலைப்பெழுத்துச் சொல்.

MOS device : மோஸ் சாதனம்: 'போரன்' வகைப் பொருளில் தனி

வழித் தடத்தில் மின்சாரம் ஓட அனுமதிக்கும் சாதனம். வழித் தடப் பகுதியில் இன்சுலேட் செய்யப்பட்ட எலெக்ட்ரோடு மூலம் இது கட்டுப் படுத்தப்படுகிறது.

mosaic : மொசைக்: வைய விரிவலை, பிரபல மாவதற்கு முக்கிய காரண மான வரைகலை வலை மேலோடி. என்சிஎஸ்ஏவில் எழுதப்பட்டது.

MOSFET : மாஸ்ஃபெட்: 'உலோக ஆக்சைடு அரைக் கடத்தித் திண்மப் பொருள் புல விளைவு மின்மப் பெருக்கி' என்று பொருள்படும் 'Metallic Oxide Semiconductor Field Effect Transistor' என்ற ஆங்கிலப் பெயரின் தலைப்பெழுத்துச் சொல்.

MOS/LSI : எம்ஓஎஸ்/எல்எஸ்ஐ: பார்க்க : உலோக ஆக்சைடு அரைக் கடத்தித் திண்மப் பொருள் (Metallic Oxide Semiconductor); பேரளவு ஒருங்கிணைப்புத் தொழில் நுட்பம் (Large Scale Integration Technology).

Most Significant Digit (MSD) : மிக முக்கிய இலக்கம் : ஓர் எண்ணில் மிகப் பெரும் மதிப்பினை அல்லது முக்கியத்துவத்தைக் கொண்டுள்ள இலக்கம். எடுத்துக்காட்டாக 58371 என்ற எண்ணில் மிகப்பெரும் முக்கியத்துவம் வாய்ந்த இலக்கம் 5.

motif : மோட்டிஃப்: ஓப்பன் மென் பொருள் ஃபவுன்டேஷன் அங்கீ கரித்த வரைகலை பயனாளர் இடை முகம்.

motherboard : தாய்ப்பலகை; தாய் இணைப்புப் பலகை ;தாய் இணைப்பு: மின்சுற்றுவழி அட்டைகள் பலகை கள் அல்லது தகவமைவுகள் ஒன்றோ டொன்று பிணைக்கப்பட்டுள்ள இணைப்புப் பலகை. ஒரு நுண் கணிப்பொறியின் தலையாய மின் சுற்று வழிப்பலகை. இதனைப் பொறியமைவுப் பலகை. பின்தளப் பலகை என்றும் கூறுவர்.



தாய் இணைப்புப் பலகை (Mother board)

motion path : ஓடும் பாதை : உயிர்ப் படப் பொருள் ஒன்று பின்பற்ற வேண்டிய பாதை.

motor : விசைப்பொறி.

motorola : மோட்டோரோலா: நுண் செயலிகள் உட்பட மின்னணுவியல் சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனம்.

mouse : எலி வடிவச் சாதனம்; சுட்டு நுண்பொறி; சுட்டுக் கருவி; சுட்டி: காட்சித் திரையில் ஒரு சறுக்குச்

(எலி வடிவ) சுட்டுப் பொறி
(Mouse)

சட்டத்தை அல்லது வேறு பொருளை அங்கு மிங்கும் நகர்த்துவதற்குப் பயன்படும் சாதனம். ஒரு நுண் பொறியில் ஒரு சிறு பெட்டியின் உச்சியில் ஒரு தட்டையான பரப்பில் நகர்த்தக் கூடிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொத்தான்கள் அமைந்திருக்கும். இந்தப் பெட்டி ஒரு வால் போன்ற கட்டிழை மூலம் இணைக்கப்பட்டிருக்கும். நுண் பொறி நகரும்போது திரையில் சறுக் குச் சட்டம் இணையாக நகர்கிறது. குறிப்பிட்ட செயல்களுக்குக் குறிப் பிட்ட பொத்தான்கள் அழுத்தப்படு கின்றன. சறுக்குச் சட்டத்தைத் திரை யில் எந்தத் திசையிலும் மூலை விட்டக் கோட்டிலுங்கூட இந்த நுண் பொறியால் நகர்த்த முடியும். இது இச்சாதனத்தின் மிகப்பெரும் நன்மை யாகும்.

mouse button : சுட்டு நுண்பொறிப் பொத்தான் : கணினி ஆணைகளை அனுப்புவதற்கு சுட்டு நுண் பொறி யின் உச்சியிலுள்ள ஒரு விசை.

mouse pad : சுட்டி நகர்த்து அட்டை : சுட்டியை நகர்த்துவதற்காக மிருது வான மேற்பரப்பை அளிக்கின்ற ஏறக்குறைய 9 அங்குல சதுர அள வுள்ள துணி மூடிய ரப்பர் அட்டை.

mouse pointer : எலி வடிவ சுட்டிக் காட்டி: சுட்டியின் கட்டுப்பாட்டில் இயங்கும் திரையில் உள்ள பிம்பம் அல்லது சுட்டி (கர்சர்).

movable head disk unit : நகரும் முனையுடைய வட்டு அலகு; நகரும் முனை வட்டகம் : இது ஒரு சேமிப்புச் சாதனம் அல்லது பொறியமை. இதில் கவிந்த முறையில் முலாம் பூசிய வட்டுகள் அடங்கியுள்ளன. இந்த வட்டுகளால் பரப்பில் தகவல் இரும எண் தகவல் முறைப்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ள காந்தப் புள்ளிகளின் வடிவில் சேமித்து வைக்கப்படுகின்றன. தகவல், வட்டு களைச் சுற்றி வட்டப் பாதைகளில் அமைக்கப்படுகின்றன. வட்டுகளில் தேவையான வட்டப்பாதையில் எந் திர முறையில் நகர்த்தக்கூடிய தலைக் கரங்களை ஓட விட்டுப் படிக்கவும் எழுதவும் செய்யலாம்.

move : நகர்த்தல்; நகர்வு: *1.* சேமிப்புச் சாதனத்தில் படியெடுக்க வேண்டிய தகவலை ஓர் அமைவிடத்திலிருந்து இன்னோர் அமைவிடத்திற்கு நகர்த் துதல். 2. கணினி வரைகலையில் ஒரு வரைகலை ஓரினப் பொறியமைவில் தற்போதுள்ள இடநிலையை மாற்று தல்.

movement of arm : புயத்தின் இயக்கம்.

moving average : நகரும் சராசரி; மாறும் சராசரி : ஒரு தகவல் தொடர் வரிசையில் குறிப்பிலா மாற்றத்தின் ஏற்ற இறக்கச் சராசரியைக் கணித் திடும் முறை. இதன்படி தொடர் வரிசையில் மிக அண்மைக்குரிய வரலாற்றுத் தகவல்களே பயன்படுத் தப்படுகின்றன. தொடர் வரிசையில் தகவல்களில் ஏற்படும் மாற்றத்தை யொட்டி இது மாறுவதால் இந்தப் பெயர் ஏற்பட்டது. இந்தச் சராசரி சிறு சிறு ஏற்றத் தாழ்வுகளால் மறைந்து விடக்கூடிய போக்கு களைக் காட்டும்.

moving molecules : நகரும் மூலக்கூறு: இந்திய எஸ்.சி.எஸ். அல்லது பி.பி.சி. அக்காரன் கணினிக்கான கல்வி மென்பொருள். அழுத்தம் மற்றும் வானிலையின் மாற்றங்கள் எவ்வாறு மூலக்கூறுகளின் இயக் கத்தைப் பாதிக்கின்றன என்பதைக் காட்டும் யூனிக்கார்ன்.

mozilla : மோசில்லா: நெட்ஸ்கேப் நேவிகேட்டர் 'Read me' கோப்பின்

படி நெட்ஸ்கேப் என்ற சொல்லின் உச்சரிப்பு இப்படித்தான் அமையும்.

MP/M : எம்பி /எம்: நுண் கணினிகளுக்கான பன்முகச் செயலிக் கட்டுப்பாட்டுச் செயல்முறை, சிறிய கணினிகளுக்கான பல பயனாளர் செயற்பாட்டுப் பொறியமைவு ஆகியவற்றைக் குறிக்கும் தலைப்பெழுத்துச் சொல். நுண் செயலிகளுக்கான கட்டுப்பாட்டுச் செயல் முறை (CP/M) என்பதன் மாற்றுச் சொல், நுண் செயலிகளுக்கான பன்முகக் கட்டுப்பாட்டு செயல் முறை (MP/M) என்பதாகும்.

MPU : எம்பியூ: பன்முகச் செயலி அலகு எனப் பொருள்படும். 'Multiprocessing unit' என்ற ஆங்கிலப் பெயரின் தலைப்பெழுத்துச் சொல்.

ms : எம்எஸ்: மில்லி வினாடி (மில்லி செகண்ட்) என்பதன் சுருக்கம்.

MSD : எம்எஸ்டி: 'மிக முக்கிய இலக்கம்' எனப் பொருள்படும் "Most significant digit" என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கம்.

MS-DOS : எம்எஸ்-டாஸ்: மைக்ரோசாஃப்ட் வட்டுச் செயற்பாட்டுப் பொறியமைவு' எனப் பொருள்படும் "Microsoft Disk Operating System" என்ற ஆங்கிலப் பெயரின் தலைப்பெழுத்துச் சொல். இது "International Business Machines Corporation" (IBM) தயாரிக்கும் சொந்தக் கணினி (PC) களில் பயன்படுகிறது.

MSI : எம்எஸ்ஐ: Medicum Scale Integration என்பதன் குறும்பெயர். நடுத்தர அளவு ஒருங்கிணைப்பு (Medium scale integration) என்பதன் சுருக்கம்.

M68000 : எம் 68000: மோட்டோரோலா நிறுவனத்தால் தயாரிக்கப்படும் 16-துண்மி நுண்செய்முறைப்படுத்திச் சிப்பு. குறிப்பாக நுண் கணினிகளில் இது பயன்படுகிறது.

MSSG : எம்எஸ்எஸ்ஜி: ''செய்தி'' என்று பொருள்படும் "Message" என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கம்.

MSX : எம்எஸ்எக்ஸ் : மைக்ரோசாஃப்ட் கழகம் (Microsoft Corporation) வகுத்துள்ள திட்ட அளவு. வீட்டுக் கணினி அங்காடியை ஒருங்கிணைப்பதற்காக ஜப்பானியர் இதனைப் பயன்படுத்துகிறார்கள். ஜப்பான் முழுவதும் எம்எஸ்எக்ஸ் பயன்படுத்தப்படுகிறது.

MTBF : எம்டிபிஎஃப்: செயலறவுகளுக்கு இடையிலான சராசரி நேரத்தைக் குறிக்கும் "Mean time between failures" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சொல். ஒரு பொறியமைவு அல்லது அமைப்பு செயலிழக்காமல் எவ்வளவு நேரம் செயற்படும் என எதிர் பார்க்கப்படும் சராசரி கால நீட்சி.

MTTF : எம்டிடிஎஃப்: செயலறவுக்கான சராசரி நேரத்தைக் குறிக்கும் "Mean time to failures" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சொல். ஒரு பொறியமைவு அல்லது அமைப்பு குறைபாடின்றி செயற்படும் சராசரி கால நீட்சி.

MTTR : எம்டிடிஆர்: பழுது பார்த்தலுக்கான சராசரி நேரத்தைக் குறிக்கும் "Mean time to Repair" என்னும் ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச்சொல். ஒரு கணிதப் பொறியமைவில் ஏற்படும் கோளாறினைக் கண்டுபிடித்துச் சரிசெய்வதற்குத் தேவைப்படுமென எதிர்பார்க்கப்படும் சராசரி நேரம்.

mu : மியூ: 'μ' என்ற கிரேக்க எழுத்தின் பெயர். இது நுண்மையைக் குறிக்கும் முதலெழுத்துச் சின்னமாகப்

பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக் காட்டு: µs நுண் வினாடி (microp second).

µC : மியூசி: நுண்கணிப்பொறியைக் குறிக்கும் சுருக்கப் பெயர். 'µ' என்பது 'மியூ' என்ற கிரேக்க எழுத்து ஆகும்.

MUG : எம்யூஜி: மம்ப்ஸ் பயன்படுத்துவோர் குழுமம் எனப் பொருள்படும் "MUMPS Users Group" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சொல்.

multiaccess : பல்முனை அணுகல்; பன்முக அணுகல்.

multiaccess computer : பன்முக அணுகு கணினி; பல் பயன் கணினி: பல பயனாளர் ஒரே சமயத்தில் கணினித் தகவல் ஆதாரங்களைக் கையாளும் வகையில் அமைக்கப் பட்டுள்ள கணினியமைவு. இதில், இயக்கு வதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சேர் முனையங்களை இணைப் பதற்கு வசதி இருக்கும். இதில் உட் பாட்டு/வெளிப்பாட்டுச் சேர்முனை யங்களை மையச் செயலகத்தி லிருந்து வெகு தூரத்திலுள்ள இடங் களில் அமைக்கலாம். அப்போது இவை சேய்மைச் சேர் முனையங்கள் (Remote terminals) எனப்படும். இதனை ஒரே சமயத்தில் பலர் இயக்க லாம். இந்தப் பொறியமைவு, கணிப் பொறிகளையும், அதன் புறநிலைச் சாதனங்களையும் இயன்ற வரையில் மிகப் பெருமளவுக்குப் பயன் படுத்திக் கொள்கிறது.

multibus : பல்வேறு வழித்தடம்: இராணுவம், தொழில் துறை மற்றும் விண் வெளி பயன்பாடுகளில் பயன் படுத்தப்படும் மேம்பட்ட தடையக் கட்டுமான அமைப்பு. செய்தி அனுப்புதல், தானாக அமைத்துக் கொள்ளுதல் மற்றும் மென்பொருள் தலையீடுகள் உள்ளடக்கியது.

multi address : பன்முக முகவரி: ஒன்றுக்கு மேற்பட்ட முகவரிப்பகுதி அடங்கிய ஓர் அறிவுறுத்தப் படிவம்.

Multi computer system : பன்முகக் கணினியமைவு; பல் செயல் கணினி யமைப்பு: இரண்டு அல்லது அவற் றுக்கு மேற்பட்ட மையச் செயலகம் (CPU) அமைந்துள்ள கணினியமைவு.

multi cost : பலரறியப் பரப்புதல்; பல் பரப்பல்.

multics : மல்டிக்ஸ்: மேக் திட்டத்தில் வடிவமைக்கப்பட்ட பன்முக அணுகு இயக்க அமைப்பு மற்றும் டிரேட் மார்க்.

multidimensional array : பல் பரிமாண வரிசை: இரண்டு அல்லது மேற்பட்ட பரிமாணங்களைக் கொண்ட வரிசை.

multi frequency monitor : பல் அலை யெண் கணித்திரை: ஒரு எல்லையில் உள்ள அனைத்து அலை எண்களுக் கும் அனுசரித்துச் செல்லும் காட்சித் திரை அல்லது வி.ஜி.ஏ. மற்றும் சூப்பர் வி.ஜி.ஏ. போன்ற குறிப் பிட்ட அலை எண் தொகுதிகளுக்கும் ஏற்புடையது.

multidrop line : பன்முகப் படிவரி; பன்முனைத் தொடல் : பல் சேர் முனை யங்களை இயக்குவதற்கு ஒரேயொரு வழியை அல்லது வரியைப் பயன் படுத்தும் செய்தித் தொடர்புப் பொறி யமைவுத் தொகுதி. இதனை பன்முக முனை வரி என்றும் கூறுவர். இது 'வரிக்கு வரி' என்பதற்கு மாறு பட்டது.

multifile sorting : பன்முகக் கோப்பு வகைப்படுத்துதல்; பல் கோப்பு வரிசைப்படுத்தல்: ஒவ்வொரு கோப் புக்கும் தனித்தனி நிலையளவுருக்

களின் அடிப்படையில், இயக்குபவர் தலையீடின்றி இயக்கக்கூடிய, ஒன்றுக்கு மேற்பட்ட கோப்புகளை வகைப்படுத்தக்கூடிய தானியங்கு வரிசை முறை.

multi function board : பன்முகச் செயற்பணிப் பலகை: பல் செயற் பலகை: ஒரு கணினியமைவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட புதிய திறம் பாட்டினை அளிக்கக் கூடிய செருகி களைக் கொண்ட சாதனம். எடுத்துக் காட்டு : கடிகாரம் /நாட்காட்டி நினை வக விரிவாக்கப் பலகை அல்லது ஒருபோகு/தொடர் இடைமுகப்பு.

multi-hop transmission : பல் தாண்டு பரப்புதல் : மின்னணு மண்டலத்தின் செயற்போக்கு. அதன் வழியாக ஒரு வானொலி அலை பரப்பப்படும் போது, அலையில் அலையெண் ணைப் பொறுத்தே அது அமையும். குறைந்த அலையெண்களில், மின் னணு மண்டலம் அதிக மின் கடத்தி ஊடகமாகப் பயன்பட்டு குறைந்த ஒப்புடன் குறைந்த அளவில் உள்ள எந்த சமிக்ஞையையும் அனுப்பும். பூமியிலிருந்தும் மின்னணு மண்ட லத்தின் கீழ்ப்பகுதியிலிருந்தும் பிரதி பலித்து VLF அல்லது LF சமிக்ஞை களை நீண்ட தூரத்துக்கு பிரதிபலித் தல் மூலம் அனுப்ப முடியும்.

multijob operation : பன்முகப் பணிச் செயற்பாடு; பல்பணி செயற்பாடு : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற் பட்ட பணிகளை படிப்படியாக ஒரே சமயத்தில் நிறைவேற்றுதல். இது பன்முகச் செயல்முறைப்படுத்துத லுடன் ஒப்பிடத் தக்கது.

multihosting : பல்விருந்தோம்பல் : பல்முனை ஐ.பி. முகவரிகளுக்கு முகவரியிடப்பட்ட பொதிகளை கணினி ஏற்றுக்கொள்ளுமாறு கெஞ்சு வதில் ஒருமுறை. எந்த முகவரிக்குப் பொதி அனுப்பப்பட வேண்டியிருக் கிறது என்பதைக் கண்டுபிடித்த வுடன், ஒரு தனி எந்திரத்தின் மூலமே பல சர்வர்களின் செயல்களை மாய மாகச் செய்ய முடியும்.

multi layer : பன்முக அடுக்கு: பல் அடுக்கு : மின் முலாம் பூசிய துவாரங் களின் மூலம் இணைக்கப்பட்டுள்ள பல மின்சுற்று வழி அடுக்குகளைக் கொண்ட ஒரு முன் மாதிரியான அச்சிட்ட மின்சுற்று வழிப்பலகை.

multi level addressing : பன் முகநிலை முகவரியிடல்.

multiline : பல் கம்பி ; பல் ஒளியிழை: இரண்டு அல்லது மேற்பட்ட செய்தி அனுப்பும் பாதைகளைக் (கம்பிகள் அல்லது ஒளி இழைகள்) கொண் டுள்ள தடயம் அல்லது வழித்தடம் அல்லது குழாய்.

multiline function : பல்வரிச் சார்பு.

multilinked list : பன்முக தொடுப்புப் பட்டியல்: பல் இணைப்புப் பட்டி : ஒவ்வொரு அணுவும் குறைந்தது இரண்டு கூர் முனைகளைக் கொண்ட பட்டியல்.

multimedia : பல் ஊடகம் : ஒன்றுக்கு மேற்பட்ட படிவத்தில் தகவலைப் பரப்புதல். சொற்கள், ஒலி, வரை கலை, உயிர்ப்பட வரைகலை, முழு நீள ஒளிக்காட்சி ஆகியவற்றைப் பயன்படுத்துவது.

multimedia extensions : பல் ஊடக விரிவாக்கங்கள் : ஒலிப் பதிவு செய் தல், திரும்ப ஒலித்தல், உயிர்ப்பட திரும்பல், ஜாய்ஸ்டிக், மிடி, சிடி ரோமுக்கான எம்.சி.ஐ. இடைமுகங் கள், ஒளிக்காட்சி வட்டுகள், ஒளிக் காட்சி நாடாக்கள் போன்றவற்றுக்குப் பயனுள்ள விண்டோ வழமைகள்.

multipass : பன்முக ஓட்டம் : மிகவும் சிக்கலான ஒரு பணியை ஒரே ஓட்டத்தில் செய்ய முடியாதிருக்கும்போது, ஒரே தகவலை ஒன்றுக்கு மேற்பட்ட தடவை ஓடவிட்டு அதனை முழுமையாகச் செய்யும் முறை.

multipass sort : பன்முக ஓட்ட வகைப்படுத்தல்: பல ஓட்ட வரிசையாக்கம்: ஒரு மையக் கணினி இடை நிலைச் சேமிப்பியின் உள்முக நினைவகத்தில் அடங்கியுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்களை வகைப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட வகைப்படுத்தும் செயல் முறை.

multi-path propagation : பல்-பாதை பரப்புதல் : வான-அலை வானொலி இணைப்பின் இறுதியில் வந்து சேரும் வானொலி அலைகள், மின்னணு மண்டலத்தில் இரண்டு அல்லது மேற்பட்ட மாறுபட்ட பாதைகளைக் கடந்து வந்திருக்கும். ஒவ்வொரு அலையும் உருவாக்கும் மொத்த கள பலத்தை அது கொண்டிருக்கும். மின்னணு மண்டலம் அதன் அடர்த்தியை ஒட்டி தொடர்ச்சியான ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருக்கும் என்பதால் பாதை 1 மற்றும் 2-ன் நீளங்கள் மாறும். இந்த மாற்றம் பெறுமிடத்தில் மொத்த கள திறனை மாற்றும்.

multiple-access network : பன்முக அணுகு இணையம் : ஓர் இணையத்தின் ஒவ்வொரு நிலையத்தையும் எந்த நேரத்திலும் அணுகுவதற்கான வசதியுடைய பொறியமைவு. இதில், இரு கணினிகள் ஒரே சமயத்தில் செய்தியனுப்புவதற்கு முடிவு செய்யும்போது அதற்கான நேரங்களை நிருணயிப்பதற்கான வசதி அமைந்துள்ளது.

multiway branching : பல்வழிப் பிரிதல்.

multiplexer : ஒருங்கிணைப்பி; பல் பலன் தொகுப்பி.

multi user : பல் பயனாளர்.

multi tasking : பல் பணி முறை.

multiple-address instruction : பன்முக முகவரி ஆணை : ஒரே செயற்பாட்டுக் குறியீட்டையும் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட முகவரிகளையும் கொண்டுள்ள ஆணை. பொதுவாக, இரு முகவரி, மூன்று முகவரி, அல்லது நான்கு முகவரி ஆணை என்று குறிக்கப்பட்டிருக்கும். பார்க்க: இரு முகவரிக் கணினி; மூன்று முகவரிக் கணினி. இது, ஒரு முகவரி ஆணைக்கு மாறுபட்டது.

multiple-address message : பன்முக முகவரிச் செய்தி : ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அனுப்ப வேண்டிய செய்தி.

multiple assignment statement : பன்மதிப்பிருத்து கட்டளை.

multiple connector : பன்முக இணைப்பி : பல் வழி இணைப்பி : பல பாய்வு வரிகளை ஒரே வரிக்குள் அல்லது ஒரு பாய்வு வரியைப் பல பாய்வு வரிகளுக்குள் ஒருங்கிணைப்பதைக் குறிக்கும் இணைப்பி.

multiple-job processing : பன்முகப் பணிச் செய்முறைப்படுத்தல் : ஒன்றுக்கு மேற்பட்ட தகவல் செய்முறைப்படுத்தும் பணியை ஒரே சமயத்தில் செய்வதைக் கட்டுப்படுத்துதல்.

multiple-level control break : பல் நிலை கட்டுப்பாட்டுத் தடை : கட்டுப்பாட்டு தடைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுப்பாட்டுக் களத்தைப் பயன்படுத்துவது.

multiple-pass printing : பன்முக ஓட்ட அச்சடிப்பு ; பல் ஓட்ட அச்சிடல் : புள்ளி அச்சடிப்பிகளில் உயர்தரமான எழுத்துகளைப் பெறுவதற்குப் பயன் படுத்தப்படும் நுட்பம். அச்சுச் சுருள் முனை ஒரு முறை ஓடியதும், காகிதம் சற்றே நகர்கிறது; மற்றொரு ஓட்டம் நடைபெறுகிறது. இறுதியில் எளி தில் படித்திடக்கூடிய ஓர் அச் செழுத்து கிடைக்கிறது. இது நிழல் அச்சடிப்புக்கு மாறுபட்டது.

multiple punching : பன்முகத் துளை யிடல்: பல்துளையிடல்: ஓர் அட்டைப் பத்தியில் இரண்டு அல்லது அவற் றுக்கு மேற்பட்ட துளைகள் இடுதல்.

multiple regression : பன்முகப் பின்னிறக்கம்: பன்முகப் பின்னடை வியக்கம்: ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விளக்க அல்லது தற்சார்பு மாற்றம் சார்புடையதெனக் கருதப் படும். ஒரு சார்பு மாறியின் மதிப்பை ஊகித்தறிவதற்கான புள்ளி யியல் முறை.

multiple user system : பல் பயனாளர் பொறியமைவு : பல் பயனாளர் அமைவு : ஒரே சமயத்தில் பலர் பயன் படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ள கணிப் பொறியமைவு.

multiplex : பன்முகப் பயன்பாட்டுப் பொறியமைவு: பன்மையாக்கி : ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பயனாளர் பயன்படுத்துவதற்கு அனு மதியளிக்கும் பொறியமைவு.

multiplexor (MPX) : பன்முகக் கணினி; பல் பயன் தொகை: பன்மையாக்கி: ஒரு கணினித் தகவல் வழியினைப் பலர் பகிர்ந்து கொள்வதற்குப் பல செய்தித் தொடர்புப் பாதைகளை அனுமதிக்கும் சாதனம்.

multiplexor channel : பன்முகக் கணினி வழி: பன்மையாக்கத் தடம் : ஒரு தனி வகை உட்பாட்டு /வெளிப்பாட்டுக் கணினி வழி. இது, ஒரு கணினிக் கும், ஒரே சமயத்தில் செயற்படும் புறநிலையச் சாதனங்களுக்குயிடை யில் தகவல்களை அனுப்ப வல்லது. இது தேர்திறக் கணினி வழியிலிருந்து வேறுபட்டது.

multiplication time : பெருக்கல் நேரம்: ஓர் இரும எண்ணுக்கான பெருக் கலைச் செய்வதற்குத் தேவைப்படும் நேரம். இது, பெருக்கல் செயற்பாட் டில் அடங்கியுள்ள கூட்டல் நேரங் கள் அனைத்திற்கும் அகற்சி நேரம் அனைத்திற்கும் சமமானதாகும்.

multipoint line : பல்முனைக் கம்பி மூன்று அல்லது மேற்பட்ட சாதனங் களை ஒன்றோடொன்று இணைக் கும் ஒரு தனிக் கம்பி.

multiported memory : பல் இணைப்பு நினைவகம் : ஒன்றுக்கு மேற்பட்ட அணுகு பாதை மூலம் அதன் உள் ளடக்கங்களை அணுக அனுமதிக் கும் நினைவகம். அதே நினைவகப் பகுதியை ஒரே வேளையில் படிக்க வும் எழுதவும் அது அனுமதிக்கிறது

multiprecision arithmetic : பன்முக எண் கணக்கியல் : ஒவ்வொரு எண்ணையும் குறிப்பதற்கு இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட கணினிச் சொற்கள் பயன்படுத்தப் படும் கணித வடிவம்.

multiprocessing : பன்முகச் செய் முறைப்படுத்தல்: பன்மைச் செயலாக் கம் : பொதுவான கட்டுப்பாட்டின் கீழுள்ள பன்முக மையச் செயலகம் வாயிலாக இரண்டு அல்லது அவற் றுக்கு மேற்பட்ட ஆணை வரிசை களை ஒரே சமயத்தில் நிறை வேற்றுதல்.

multiprocessor : பன்முகச் செய் முறைப்படுத்தி; பன்மைச் செயலகம் :

ஒரே பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட மையச் செயலகங்களைக் கொண்ட கணினி இணைவனம்.

multiprocessor computer systems : பல்செயலக கணினி அமைப்புகள் : மையச் செயலக வடிவமைப்புக்கு பல்செயலக அமைப்பு முறையைப் பயன்படுத்தும் கணினி அமைப்பு கள். ஆதரவு நுண் செயலகங்கள் பல்லாணைச் செயலகங்கள் மற்றும் இணைச் செயலக வடிவமைப்புகள் ஆகியவைகளை உள்ளடக்கியது.

multiprogramming : பன்முகச் செயல் முறைப்படுத்தல் : ஒரே கணினியில் ஒரே சமயத்தில் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட செயல் முறைகளை இயங்கச் செய்தல். நினைவகத்தில் ஒவ்வொரு செயல் முறைக்கும் அதற்கெனத் தனியிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தனித் தனிப் புறநிலைச் சாதனங் களும் உள்ளன. இவை அனைத்தும் மையச் செயலக அலகைப் பகிர்ந்து கொள்கின்றன. மையச் செயலக அலகைவிடப் புற நிலைச் சாதனங் கள் மெதுவாகச் செயற்படுகின்றன. இதனால் இது சிக்கனமானது. பெரும்பாலான செயல் முறைகள், தங்கள் நேரத்தைக் கடைசி வரை உட்பாட்டுக்காக /வெளிப்பாட்டுக் காகக் காத்திருந்து கழிக்கின்றன. ஒரு செயல் முறை காத்திருக்கும்போது, இன்னொரு செயல் முறை, மையச் செயலக அலகைப் பயன்படுத்திக் கொள்கிறது.

multireel sorting : பன்முகச் சுருணை வகைப்படுத்தல் : ஒன்றுக்கு மேற் பட்ட உட்பாட்டு நாடாவைக் கொண் டுள்ள ஒரு கோப்பின் தானியங்கி வரிசை முறை.

multiscan monitor : பன்முக வருடு திரை; பன்முக நுண்ணாய்வு முகப்பு: ஒரு எல்லைக்குள் உள்ள அனைத்து அலைவரிசைகளுக்கும் அனுசரித்துப் போகும் காட்சித்திரை.

multistar network : பன்முக விண் மீன் பிணையம் : தகவல் செய்தித் தொடர்புகளின் பிணையம். இதில் பல தாய்க் கணினிகள் பிணைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாய்க் கணினியும் சிறிய கணினிகளின் நட்சத்திரத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கின்றன.

multiSync monitor : மல்டிசிங்க் காட்சித் திரை : என்.இ.சி. நிறுவனம் பிரபலப் படுத்திய மல்டிஸ்கேன் மானிட்டர்கள்.

multisystem network : பன்முகப் பொறியமைவு பிணையம்: பன்முறை பொறியமைப்புப் பிணையம் : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட தாய்க் கணினிகளைக் கொண்டிருக் கிற செய்தித் தொடர்புகள். இது, செய்தித் தொடர்பு கொள்வதற்கு எந்தக் கணினியைப் பயன்படுத்த ஒரு சேர்முனையம் விரும்புகிறதோ அந்தக் கணினியைத் தேர்ந்தெடுத் துக்கொள்ள இயல்விக்கிறது.

multitasking : பன்முகப் பணியாக்கம்: பன்முறைப் பணியாக்கம் : ஒரேசமயத் தில் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பணிகளைச் செய்வதற் கான ஒரு கணினியின் திறம்பாடு.

multitask operation : பன்முகப் பணிச் செயற்பாடு:பல்பணியாக்கம்: ஒரே கணினியில் ஒரே சமயத்தில் இயங் கும் ஒரு செயல் முறையினுள் உள்ள இரண்டு அல்லது அவற்றுக்கு மேற் பட்ட கூறுகள்.

multitasker : பல்செயலாற்றல் : பல ஆணைத் தொடர்களை ஒரே நேரத் தில் திறந்து இயங்க வைக்கும்

கட்டுப்பாட்டு ஆணைத் தொடர். ஆணைத் தொடர்களுக்கிடையே நீங்கள் மாறி செயல்படலாம். இயக்குபவரின் கவனம் தேவைப் படாதவை பின்னணியில் இயங் கிக்கொண்டிருக்க, முன்னணியில் திரையில் உள்ள ஆணைத் தொடரை நீங்கள் இயக்கலாம்.

multithreading : பல் நூலிழைத்தல்: ஒரு தனி ஆணைத் தொடருக்குள் பல் பணி ஆற்றுதல். ஒரே நேரத்தில் பரிமாற்றங்களையும் செய்திகளை யும் அது செயலாக்கம் செய்யும். ஒரே நேரத்தில் சேர்ந்தியங்கும் ஒலி ஒளி பயன்பாடுகளை உருவாக்கவும் இது தேவைப்படும். திரும்ப வரும் குறியீட்டு முறை இதற்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

multiuser : பல் பயனாளர்: இரண்டு அல்லது மேற்பட்ட பயனாளர்கள் சேர்ந்தியங்கும் கணினி.

multiuser DOS : பல் பயனாளர் டாஸ்: ஒரு தனி பி.சி.யிலிருந்து பல ஊமை முனையங்கள் இயங்க அனுமதிக் கும் டாஸ் - ஏற்புடை இயக்க அமைப்பு. டிஜிட்டல் ரிசர்ச் நிறுவனம் இப்பணியில் 10 முகப்பு கள்/ பி.சி.க்களைப் பயன்படுத்தி 386 எஸ் எக்ஸ் மையச் செயலகம் அல்லது உயர் எந்திரங்களை இயக்க முடியும். Concurrent DOS-ஐ நீக்கி இது ஏற்படுத்தப்பட்டது.

multiuser systems : பலர் பயன் படுத்தும் பொறியமைவுகள்.

multi variate : மல்டி வேரியேட் : பல மாறிகளை எதிர்காலமுரைக்கும் மாதிரியில் பயன்படுத்துவது.

multi view ports : பன்முகக் காட்சித் திரைகள் : இரண்டு அல்லது அவற் றுக்கு மேற்பட்ட காட்சித் திரை களைக் காட்டும் திரைக் காட்சி. இந்தக் காட்சித் திரைகள் அடுத் தடுத்து அமைந்திருக்கும். ஒன்றை யொன்று சார்ந்திருப்பதில்லை.

multi volume file : பல தொகுதிக் கோப்பு : மிகப்பெரிய கோப்பு. இதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டுத் தொகுதி, சுருணை, அல்லது காந்த நாடா தேவைப்படும்.

MUX : மக்ஸ்: 'Multiplexor' என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கம்.

my briefcase : என் கைப்பெட்டி: விண்டோஸ் 95 மற்றும் விண்டோஸ் என் டி 4.0-வுக்கு கோப்பு - ஒருங் கிணைப்பு பயன்பாடுகளைப் பயன் படுத்தும் மேசைக் கணினி பிம்பம்.

MUP : மியூபி : நுண் செயலி என்று பொருள்படும் 'Micro processor' என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கம். (μ என்பது மியூ என்ற கிரேக்க எழுத்து. இது நுண்மையைக் குறிக்கும் குறி யீடாகும்).

MUMPS : மம்ப்ஸ்: மசாசூசெட்ஸ் பொது மருத்துவமனைப் பயன் பாட்டுச் செயல் முறைப்படுத்திப் பொறியமைவு எனப் பொருள்படும் "Massachusetts General Hospital Utility Programming System" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் சுருக்கம். இது, குறிப்பாக மருத்துவ ஆவணங் களைக் கையாள்வதற்காக வடி வமைக்கப்பட்ட ஒரு கணினி மொழி. தகவல் மேலாண்மையிலும் வாசகங்களைக் கையாள்வதிலும் இந்த மொழி வெகுவாகப் பயனு டையது.

mus : மியூ எஸ் : நுண் வினாடி என்று பொருள்படும் 'μs' என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கம். 'μ' என்ற கிரேக்க எழுத்து நுண்மையைக் குறிக்கும்.

musical language : இசை மொழி : கணினி உட்பாட்டுக்குப் பொருத்த மான குறியீட்டில் இசைச் சுரங் களைக் குறிப்பதற்கான முறை.

musicomp : இசைச்செயல் முறை மொழி: இசையமைப்பு : இசையமைப் புச் செயல்முறை மொழி. இது மூல இசைச் சுரங்களை உருவாக்குவதற் கும் இசை ஒருங்கிணைப்புக்கும் வழி செய்யும் நுட்பங்களை அளிக் கிறது.

music synthesizer : இசை இணைப்பி: இசையைப் பதிவு செய்வதற்கும், ஒளி பரப்புவதற்கும் ஒரு கணினி யுடன் இணைக்கப்படும் சாதனம்.

MUX : எம்யூஎக்ஸ்: 'Multiplexer' என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கம்.

MVT : எம்விடி: ஒரு மாறியல் எண்ணிக்கைப் பணிகளுடன் கூடிய பன்முகச் செயல்முறைப்படுத்துதல் என்று பொருள்படும் "Multi programming with a variable number of tasks" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் சுருக்கம். இதனைப் ''பல தொல் லைச் செயல்படுத்துதல்'' என்றும் வேடிக்கையாகக் கூறுவர்.

mylar : மைலார்: காந்த நாடா போன்ற தகவல் ஊடகத்திற்கு ஓர் ஆதார மாகப் பயன்படுத்தப்படும் பாலிஸ் டர் படலத்தின் வணிகப் பெயர்.

N

N/C : என்/சி : National Computer Conferences என்பதன் குறும்பெயர், ஆண்டுதோறும் (அமெரிக்காவில்) நடைபெறும் ஒரு பெரிய கணினி வணிகக் கண்காட்சி.

naive user : கற்றுக்குட்டி.

NAK : நேக் : ஏற்காமை அறிவிப்பு : Negative Acknowledgement என்பதன் குறும்பெயர். ஒரு செய்தி பெறப் பட்டது அல்லது ஒரு முகப்பு அதை அனுப்ப விரும்பவில்லை என்ப தைக் குறிக்கும் தகவல் தொடர்புக் குறியீடு.

NAL : என்ஏஎல் : ஆப்பிள் National Aeronautical Laboratory என்பதன் குறும்பெயர். பெங்களூரில் உள்ள இந்திய அரசின் நிறுவனமான தேசிய விமானவியல் ஆய்வகம்.

name : பெயர் : ஆணைத்தொடர், கட்டுப்பாட்டுச் சொற்றொடர் வாக் கியம், தகவல் பகுதிகள் அல்லது பட்டியலிடப்பட்ட செயல்முறை போன்றவைகளை அடையாளம் காட்டும் எண்ணெழுத்துத் தொடர்.

name field: பெயர்ப் புலம்.

name server : பெயர் வழங்குபவர்: இணையத் தொடர்புப் பெயர்களை யும் எண் ஐ.பி. முகவரிகளையும் கவனிக்கின்ற டாசில் இயங்கும் கணினி. பெயரை ஒரு பருப்பொருள் முகவரியாக மாற்றும் மென் பொருள். பெயர்கள் என்பவை பய னாளர் பெயர்கள், கணினிகள், அச்சுப் பொறிகள், சேவைகள் அல்லது கோப்புகள் போன்ற எதுவாகவும் இருக்கலாம்.

named pipes : நேம்டு பைப்ஸ் : சிறு பரப்பு இணைய நிர்வாகி ஐ.பி.சி. சலுகை. ஒரு இணையத்தில் அல்லது ஒரே கணினிக்குள்ளே ஓடிக்கொண்டி ருக்கும் ஒரு பயன்பாட்டிலிருந்து மற் றொன்றுக்கு தகவல்களை மாற்ற அனுமதிப்பது. செயலாக்கங்களுக் கிடையிலான தகவல் தொடர்பு களுக்கு 'பைப்' (pipes) என்ற சொல்லை யூனிக்ஸ் உருவாக்கியது.

NAND : நந்த் : NOT-AND என்பதன் குறுக்கம். இது ஒரு அளவை இயக்கி. P ஒரு கூற்று; Q ஒரு கூற்று என்றால் P, Q வின் நந்த் உண்மையாக வேண்டு மானால் ஒரு கூற்றாவது பொய்யாக இருக்க வேண்டும் அல்லது எல்லா கூற்றுகளும் உண்மையாக இருந்தால் நந்த் பொய்யாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவது. NOT, AND இரண்டும் இணைந்தது.

nano : நானோ : ஒரு கோடியில் ஒன்று என்பதை உணர்த்தும் முன்னொட்டு.

nanoacre : நானோக்கர் : கணினியின் சிப்புப் பரப்பைக் குறிப்பிடும் அலகு. ஒரு ஏக்கரில் நூறு கோடியில் ஒன்று. ஒரு ஒருங்கிணைந்த மின் சுற்றின் பரப்பைக் குறிப்பிடுவது.

nanocomputer : நானோ கணினி : ஒரு நொடியில் நூறு கோடியில் ஒரு பங்கு நேரத்தில் செயலாக்கம் செய்யவல்ல கணினி.

nanosecond : நானோ நொடி: ஒரு நொடியில் பில்லியனில் ஒன்று. ஒரு நொடியில் ஆயிரம் மில்லியனில் ஒன்று. ns என்று சுருக்கப்படுவது. மில்லி, மைக்ரோ நொடி போன்றது. இப்போது உருவாக்கப்படும் கணினி கள் ஒரு நானோ நொடிக்கும் குறை வான நேரத்தில் ஆணையைச் செய்ய வல்லன. ஒரு நொடியில் ஒரு பில்லி யன் ஆணைகளைச் செய்யவல்லதாக கணினி உருவாகி உள்ளது.

Napier, John : 1550-1617 : ஜான் நேப்பியர் : (1550-1617) : கணக்கிடு தல் மற்றும் கணிதத்தில் பல சாதனை களைப் புரிந்த ஸ்காட்டிஷ் பிரபு.

மடக்கை (லாகரிதம்)யும் நேப்பியரின் கோல் என்னும் கணக்கிடும் சாதனத்தையும் உருவாக்கியவர்.

napiers bones : நேப்பியரின் கோல்கள்: நேப்பியர் குச்சிகள் : பெருக்கவும், வகுக்கவும், வர்க்க மூலம் கண்டுபிடிக்கவும் பயன்படும் எண் கம்பிகளைக் கொண்ட தொகுதி. 1614இல் ஜான் நேப்பியரால் கணக்கிடும் கம்பிகள் உருவாக்கப்பட்டன. ஸ்லைடு ரூலைக் கண்டுபிடிக்க 1630இல் வில்லியம் ஆட்ராட் இதைப் பயன்படுத்தினார்.

narrowband : குறுகிய கற்றை : குறைந்த அலைவரிசைகளில் குறைந்த அளவு தகவல்களைக் கையாளும் தகவல் தொடர்பு அமைப்புகளை இது குறிப்பிடுகிறது.

narrow bandwidth channels : குறுங்கற்றை வழித்தடங்கள் : தந்திர வழித் தடங்கள் போன்ற குறைந்த வேகங்களில் மட்டுமே தகவல்களை அனுப்பும் தகவல் தொடர்பு வழித் தடங்கள்.

NASA : நாசா : National Aeronautics and Space Administration என்பதன் குறும் பெயர்.

nass-schneidermann chart : நாஸ்-சினைடர்மேன் விளக்கப்படம் : 1970-களின் ஆரம்பத்தில் ஐசக் நாசி மற்றும் பென் சினைடர்மேன் உருவாக்கிய ஒருவகை ஓடு படம். பல்வேறு வடிவமுடைய பெட்டிகளையும் வடிவங்களையும் பயன்படுத்தி பொருள்களை உற்பத்தி செய்தல் அல்லது சேவைகளை அளித்தல் தொடர்பான பல செயல்களைக் குறிப்பிட வைத்தார். என்எஸ் (NS) வரைபடம் அல்லது என்எஸ் வடிவங்கள் என்று இவை அழைக்கப்படுகின்றன. கணினி ஆணைத் தொடர்களுக்கான ஓடு படங்களை அமைப்பதற்கும் என்எஸ் வரைபடங்கள் பயன்படுகின்றன.

NCC : என்சிசி : தேசிய கணினி மாநாடு எனப் பொருள்படும். 'National Computer Conference' என்பதன் குறும்பெயர். கணினி பயனாளர்கள், கல்வியாளர்கள், மென்பொருள் கருவி உருவாக்குபவர்கள் ஆகியோரைக்கொண்டு ஆண்டு தோறும் நடைபெறும் மாநாடு. அமெரிக்க தகவல் செயலாக்கச் சங்கங்களின் மாநாடு சார்பில் நடைபெறுகிறது.

NCR : என்சிஆர் : National Cash Register என்பதன் குறும் பெயர். ரொக்கப் பதிவேடுகளை உற்பத்தி செய்ய ஜான் ஹெச். பேட்டர்சன் உருவாக்கிய ஒரு அமெரிக்க நிறுவனம்.

NCIC : என்சிஐசி : 'தேசியக் குற்றத் தகவல் மையம்' எனப் பொருள்படும் 'National Crime Information Centre' என்பதன் குறும்பெயர். அமெரிக்கா முழுவதும் நடைபெறும் குற்றங்கள் தொடர்பான தகவல்களைக் கொண்ட அமெரிக்கப் புலனாய்வுத் துறையின் கணினி மய கட்டமைப்பு. சட்டத்தைப் பராமரிக்கும் அமைப்புகள். அரசின் எல்லா நிலைகளிலும் இதை அணுகலாம்.

NECC : என்இசிசி : 'தேசியக் கணினி கல்வி மாநாடு' எனும் பொருள்படும். 'National Educational Computing Conference' என்பதன் குறும் பெயர். கல்வியில் கணினிகளைப் பயன்படுத்துவதில் ஆர்வமுள்ள கல்வியாளர்களின் ஆண்டுக் கூட்டம்.

native compiler : தன்மொழி மாற்றி : உள்ளூர்த் தொகுப்பி: ஒரு குறிப்பிட்ட கணினியில் மட்டும் பயனாகக் கூடிய குறியீட்டை உருவாக்கும் தொகுப்பு.

native language : தன் மொழி : ஒரு உற்பத்தியாளரின் எந்திரங்களுக்கு மட்டுமே புரியும் மொழியைக் கொண்ட கணினி.

native user : தன்னார்வப் பயனாளர் : கணினியில் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசைப்படுபவர். ஆனால் அதற்கு ஆணைத்தொடர் அமைக்கும் பட்டறிவு இல்லாதவர்.

natural input-output devices : இயற்கை உட்பாட்டு - வெளிப் பாட்டுச் சாதனங்கள்.

natural language : இயல் மொழி; இயற்கை மொழி : ஆங்கிலம் போன்ற இயற்கையான மொழியில் ஆணைத் தொடர்களை உருவாக்க அனுமதிக்கும் மொழி.

native mode : உள்ளூர் முறை: ஒரு கணினியின் வழக்கமான ஓட்டும் முறை. அதன் உள்ளே அமைந்த ஆணைத் தொகுதியிலிருந்து ஆணைத் தொடரை இயக்குவது. 386 போன்ற உயர் நிலை கணினி பாதுகாக்கப் பட்ட முறையில் இயங்கும்.

natural : இயற்கையான; இயல்பான : மென்பொருள் ஏஜி (AG)யிடமிருந்து வரும் நான்காம் தலைமுறை மொழி. பெருமுகக் கணினியிலிருந்து நுண் கணினிவரையிலான பலவகைக் கணினிகளில் இயங்குவது.

natural video image : இயற்கையான ஒளிக்காட்சித் தோற்றம் : ஒளிக்காட்சி ஒளிப்படக் கருவி வி.சி.ஆர். அல்லது ஒளிக்காட்சி வட்டு இயக்கி போன்ற வற்றில் இருந்து எடுக்கப்பட்ட உருவம். உண்மையான பருப் பொருளிடமிருந்து பிரதிபலிக்கப்பட்டு தோன்றிய ஒளிக்கதிர்களைக் கொண்டது என்று எதிர்பார்க்கப்படுகிறது. கணினி உருவாக்கும் உருவங்களி லிருந்து மாறுபட்டது.

NAU : நாவ்: (1) Network Access Unit என்பதன் குறும் பெயர். கணினியை லேனுக்கு ஏற்றதாகச் செய்யும் இடைமுக அட்டை. (2) Network Addressable Unit என்பதன் குறும் பெயர். பெயர் மற்றும் முகவரியால் குறிக்கக்கூடிய எஸ்.என்.ஏ. அலகு.

NBCD : என்பிசிடி : Natural Binary Coded Decimal என்பதன் குறும் பெயர்.

NBS : என்பிஎஸ் : National Bureau of Standards என்பதன் குறும் பெயர். கணினி தொழிலுக்கு தர நிர்ணயங் களை உருவாக்கப் பொறுப்பேற் றுள்ள அரசு அமைப்பு.

NCB : என்சிபி : Network Control Block என்பதன் குறும் பெயர். நெட்பயாஸ் (NetBIOS) போக்குவரத்து விதிமுறை களில் பயன்படுத்தப்படும் பொதி அல்லது பொட்டல அமைவு.

NCGA : என்சிஜிஏ : National Computer Graphics Association என்பதன் குறும் பெயர்.

N-channel MOS (NMOS) : என்மாஸ்: எதிர்மறை சக்தி அளிக்கும் மின் னோட்ட முறையினைப் பயன்படுத் தும் மின்சுற்று. PMOS-ஐ விட இரண்டு மடங்கு வேகம் கொண்டது. ஆனால் குறைவான அடர்த்தி கொண்டது.

NCR corporation : என்சிஆர். அமை வனம் : கணினிக் கருவியைப் பெரு மளவில் உற்பத்தி செய்யும் அமைவனம்.

NCR paper : என்சிஆர். காகிதம் : No Carbon Required என்பதன் குறும் பெயர். கார்பன் காகிதத்தைப் பயன் படுத்தாத பல்-பகுதி காகிதம். முந் தைய தாளின் பின் பகுதியில் மை சேர்க்கப்பட்டிருக்கும்.

NCSA : என்சிஎஸ்ஏ: மொசைக்கை உருவாக்கிய National Center for Supercomputing Applications என்பதன் குறும்பெயர். இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தில் இருப்பது.

NDBMS : என்டிபிஎம்எஸ் : Network Database Management System என்பதன் குறும்பெயர்.

NDIS : என்டிஐஎஸ்: Network Driver Interface Specifications என்பதன் குறும்பெயர். தகவல் இணைப்புப் பகுதி இயக்கிகள் தொடர்பில்லாத வன்பொருள் எழுதும் மைக்ரோ சாஃப்ட்(Microsoft) விளக்கக் குறிப்பு. (ஊடக அணுகுமுறை அடுக்கு).

NDRO : என்டிஆர்ஓ: Non Destructive Readout என்பதன் குறும்பெயர்.

near letter quality : ஏறக்குறைய எழுத்துத் தரம் : சில அச்சுப் பொறிகள் உருவாக்கும் வெளியீடு பற்றியது. எழுத்துத் தர அச்சுப் பொறியில் கிடைப்பதுபோல் புள்ளியணி (dot matrix) அச்சுப் பொறியில் எழுத்துகள் படிப்பதற்கு அவ்வளவு எளிதாக இருக்காது.

near pointer : காட்டிக்கு அருகில்: இன்டெல் 80 x 86 பிரிக்கப்பட்ட முகவரியில் ஒரு தனி பிரிவுக்குள் (ஆஃப்செட்) உள்ள நினைவக முகவரி.

neat chipset : நீட்/சிப்செட்: Enhanedd AT chipset என்பதன் குறும்பெயர். சிப்ஸ் அண்டு டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் ஏடி (AT) வகுப்பு எந்திரங்களை உருவாக்கப் பயன்படும் சிப்புகளின் தொகுதி. ஏஎம்எஸ் திறன் சேர்க்கப்பட்டது. 286-சார்ந்த பி.சி.யின் அடிப்படை அளவை சிப்புகளாக சிபியு பயாஸ் மற்றும் நீட் (neat) சிப் செட்டுகளைக் கூறலாம்.

NEC : என்இசி: 1954ஆம் ஆண்டிலேயே கணினிகளை உருவாக்கத் துவங்கிய முன்னணி ஜப்பானிய கணினி உற்பத்தி நிறுவனம். முதல் ஐபிஎம் பெருமுகக் கணினியின் அறிமுகத்திற்கு இரண்டு ஆண்டுகள் கழிந்த உடனே இந்நிறுவனம் செயல்பட்டது.

negate : மறுதலி; எதிர்மறைவினை : NOTஎன்னும் அளவை இயக்கி செயல்படுதல்.

negative number : எதிர்மறை எண்.

negative true logic : எதிர்மறை உண்மை அளவை : அதிக மின் சக்தியானது '0' வையும் குறைந்த மின் சக்தி '1' ஐயும் குறிப்பிடும் அளவை அமைவு.

negative value : மறிநிலை மதிப் பளவு.

negotiation : பேரம்; ஒப்பந்தப் பேச்சு: ஒருவருக்கொருவர் நிறைவு தரும் ஒப்பந்த உறவை ஏற்றுக் கொள்ளும் முயற்சியில் சேவைகள் மற்றும் கடமைகளை பரிமாறிக் கொள்ளும் கலை.

NELIAC : நெலியாக் : Naval Electronics Laboratory International Algorithmic Compiler என்பதன் குறும்பெயர். அறிவியல் மற்றும் நிகழ் நேர கட்டுப்பாட்டு பிரச்சினைகளைத் தீர்க்க அதிகம் பயன்படும் உயர்நிலை ஆணைத்தொடர் மொழி.

nematic : நெமாட்டிக் : நூல் போன்ற அமைப்புடைய படிக நிலைக்கு முந்தைய, நீர்மை நிலைக்குப் பிந்தைய ஒரு பொருளின் நிலை. சான்றாக, திரவப் படிகம்.

neper : நேப்பர் : நேப்பியரின் மடக்கை எண் அடிப்படையிலான ஒரு அளவை அலகு. இரண்டு மதிப்பு

களுக்கு இடையிலான விகிதத்தை அது குறிப்பிடுகிறது.

nerd : ஆர்வலர்.

nest : உள்ளமை.

nested block : பின்னிய கட்டம்; உள்ளமைத் தொகுப்பு : ஒரு ஆணைத் தொடர் கட்டத்தின் உள்ளே அமைக் கப்படும் மற்றொரு ஆணைத் தொடர் கட்டம்.

nested loop : கூட்டுக் கொக்கி வளை யம்; பின்னிய வளையம்; உள்ளமை வளையம் : வேறொரு வளையத்தின் உள்ளே அமைந்துள்ள வளையம்.

nested programme : உள்ளமை ஆணைத்தொடர்; பின்னல் ஆணைத் தொடர் : வேறொரு பெரிய ஆணைத் தொடரின் ஒரு பகுதியாக உள்ள ஒரு ஆணைத் தொடர்.

nested subroutine : பின்னல் துணை வாலாயம்; உள்ளமைத் துணைச்சுற்று; பின்னிய துணை வழமை : ஒரு துணைச்சுற்றின் உள்ளே வேறொரு துணைச்சுற்றின் அழைப்புச் சொற் றொடர் மூலம் பெறக்கூடிய துணைச் சுற்று. பேசிக் மொழியில் உள்ள GOSUB இத்தகைய ஒன்று.

nesting : ஒன்றுள் ஒன்று; உள்ளமைவு: வேறொரு ஆணைத்தொடர் பிரிவு கள் அல்லது தகவல் கட்டங்களுக் குள் ஆணைத்தொடர் பிரிவுகள் அல்லது தகவல் கட்டங்களை அமைத்தல். அல்ஜிப்ரா முறை பின்னலில் தொகுக்கும் விளக்கத்தை அடைப்புக் குறிகளுக்குள் பின் வருமாறு குறிப்பிடலாம் (W*X*(A-B)).

NETROOM : பின்னலமைப்பகம்; இணையப்பகுதி: ஹெலிக்ஸ் மென் பொருள் நிறுவனம் உருவாக்கிய டாஸ் நினைவக மேலாளர். பெரிய கட்டமைப்பு இயக்கிகளை டாஸ் நினைவகத்தில் சுருக்குவதற்கு இது பயன்படுகிறது. அதனுடைய 'டிஸ்கவர்' பயன்பாடானது கணினி அமைப்பில் அப்போது உள்ள உறுப்புகளைப் பற்றி அறிவிக்கும்.

netscape : நெட்ஸ்கேப்: ஜிம் கிளார்க் மற்றும் மார்க் ஆண்டர்சென் உரு வாக்கிய ஒரு நிறுவனம். வணிகச் சந்தைக்காக பணியகங்களையும், மேலோடி(Browser)களையும் இந்நிறு வனம் உருவாக்கியது. அவற்றில் ஒன்றுதான் இப்போது மிகவும் புகழ்பெற்று விளங்கும் இணைய மேலோடியான "நெட்ஸ் கேப் நேவி கேட்டர்" - இதைப் பரவலாக 'நெட்ஸ் கேப்' என்றே அழைப்பர்.

netview : நெட்வியூ : எஸ்என்ஏ மற் றும் பிற எஸ்என்ஏ அல்லாத, ஐ.பி.எம் அல்லாத சாதனங்களுக்கான மைய முகவு மற்றும் கட்டுப்பாட்டினை வழங்கும் ஐ.பி.எம் எஸ்என்ஏ மேலாண்மை மென்பொருள். நெட் வியூவை டோக்கன் ரிங் லேன்கள், ரோம் சி.பி.எக்ஸ்கள் மற்றும் ஐ.பி.எம். அல்லாத மோடெம் களுடன் நெட்வியூ/பி.சி.யை இணைப்பதுடன் புரவலரிடம் கட்டுப்பாட்டையும் பராமரித்து வருகிறது.

netware : நெட்வேர் : நெட்வேர் இயக்க அமைப்பின் பயனாளர் குழு.

network : பிணையம் : கட்டமைப்பு : 1. ஒன்றோடொன்று பிணைந்த கணினி அமைப்புகள் மற்றும் முனை யங்கள். 2. தகவல் தொடர்பு வழித் தடங்களில் பிணைக்கப்பட்டுள்ள தொடர் முனைகள். 3. ஒரு திட்ட நட வடிக்கைகள் பணிகள் நிகழ்வுகளுக் கிடையே உள்ள அமைப்பு உறவு.

network adapter : பிணையப் பொருத்தி; பிணைய ஏற்பி : ஒரு பணி நிலையம்

அல்லது பணியகத்தைப் பிணைத்து ஒரு கட்டமைப்பில் தகவல் பரிமாறிக் கொள்ள உதவும் அச்சிடப் பட்ட மின்சுற்று அட்டை. ஈதர்நெட், டோக்கன் ரிங் மற்றும் லோக்கல் டாக் போன்ற அணுகுமுறை தகவல் பிணைப்பு நெறிமுறை (Protocol) யின் மின்னணுப் பணிகளை இது நிறைவேற்றுகிறது. அனுப்பும் ஊடகம் (முறுக்கிய பிணை கூட்டிணைப்பு அல்லது ஒளி இழைக் கம்பி) பிணையத்திலுள்ள அனைத்து பொருத்திகளுக்கிடையில் நேரடி பிணைப்பு ஏற்படுத்தும்.

network adminstrator : பிணைய நிர்வாகி : ஒரு தகவல் தொடர்பு பிணையத்தைப் பராமரித்து அதன் திறமையான இயக்கத்துக்குக் காரணமாக இருப்பவர். புதிய பயன்பாடுகளை நிறுவுதல் பிணைய நடவடிக்கையைக் கண்காணித்தல் உள்ளிட்ட பணிகள் செய்யப்படும்.

network analysis : பிணைய ஆய்வு; பிணையப் பகுப்பாய்வு : ஒரு திட்டக் கட்டமைப்பின் பகுதிகளைப் பட்டியலிடல். இதில் ஆரம்பம், முடிவு தேதிகள், ஓட்டம் மற்றும் சார்பு நெறிமுறைகளைக் குறிப்பிடலாம்.

network architecture : பிணையக் கட்டமைப்பு : ஒரு தகவல் தொடர்பு அமைப்பை வடிவமைத்தல். இதில் வன்பொருள், மென்பொருள், அணுகு முறைகள் மற்றும் பயன்படுத்தும் வரைமுறைகளும் உள்ளடங்கும். கணினிகள் சுயேச்சையாக இயங்கலாமா அல்லது பிணையத்தைக் கண்காணிக்கும் பிற கணினிகளால் கட்டுப்படுத்தப்படலாமா என்னும் அணுகு முறையை அது வரையறுக்கிறது. அயல் பிணையத்துடன் எதிர்கால அணுசரிப்பு மற்றும் பிணைப்புத் தன்மை ஆகியவற்றை இது முடிவு செய்கிறது.

network charts : பிணைய வரைபடங்கள் : கால மதிப்பீடுகள் மற்றும் நடவடிக்கை உறவுகளைக் கூறும் வரை படங்கள்.

network database management system (NDBMS) : பிணைய தகவல் தள மேலாண்மை அமைப்பு : தொடர்புள்ள ஆணைத் தொடர்களைத் தொகுத்து தகவல்தளத்தில் ஏற்றி, அணுகி, கட்டுப்படுத்தல். தகவல் பதிவேடுகளை குறியீடுகள் உள்ள கூட்டு அமைப்பில் பிணைத்து அடிக்கடி புதுப்பிக்கப்படும்.

network data structure : பிணையத்தகவல் அமைப்பு : தகவல்களை அமைக்கும் ஒரு அளவை அணுகுமுறை. திசை முறையில் பிணைய முனைகளை பிணைக்க இது அனுமதிக்கிறது. ஒவ்வொரு முனைக்கும் பல "சொந்தக்காரர்கள்" இருக்கலாம். மேலும் அதனை அடுத்து எத்தனை தகவல் அலகுகளும் இருக்கலாம்.

network database : பிணைய தகவல் தளம் : ஒரு பிணையத்தில் இயங்கும் தகவல் தளம். டிபிஎம்எஸ் (DBMS) ஒரு வாடிக்கையாளர் சேவைஅமைப்பின்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்பதே இதன் பொருள். ஒரு பிணையத்தில் பிற பயனாளர்களின் முகவரிகளைக் கொண்ட தகவல் தளம். ஒரு தனி தகவல் பொருள், பல் தகவல் பொருளைக் காட்டலாம். பிற தகவல் பொருள்கள் இதனைத் திருப்பிக் காட்டலாம்.

network drive : பிணைய இயக்கி : ஒரு பிணையத்தில் பல் பயனாளர்களுக்கும் கணினிகளுக்கும் கிடைக்கும் வட்டு இயக்கி. ஒரு பணிக்குழுவில்

உள்ள பலருக்கான தகவல் கோப்புகளை பெரும்பாலும் சேமிக்கிறது.

networking : இணைய அமைப்பாக்கம் : 1. தகவல் தொடர்பு வசதிகளின் மூலம் தகவல் செயலாக்கப் பணிகளை விநியோகிக்கும் தொழில் நுட்பம். 2. பிணையங்களை வடிவமைத்தல்.

network operating system : பிணைய இயக்க அமைப்பு : ஒரு வளாகக் கோப்பு சேவையில் தங்கும் கட்டுப்பாட்டு ஆணைத் தொடர். ஒரு பிணையத்தில் உள்ள பணிநிலையங்களில் இருந்து தகவலுக்காக வரும் வேண்டுதல்களை அது கையாள்கிறது.

network theory : பிணையக் கொள்கை: ஒரு மின் பிணையத்தின் உறுப்புகளின் உறுப்புகளை பொதுமைப் படுத்தி வகைமைப்படுத்தல்.

network topologies : பிணைய இடத்தியல்கள் : பயன்படுத்துபவர்களின் இருப்பிடங்கள் மற்றும் பயன்பாட்டுத் தேவைகளைப் பொறுத்து முனைகளையும் தகவல் தொடர்புகளையும் ஒன்றோடொன்று பிணைத்தல். நட்சத்திர பிணையம், வளைய பிணையம், பல்முனை பிணையம், மர பிணையம், பின்னல் பிணையம் போன்ற பல பிணையங்கள் உள்ளன.

neural net : நியூரால் பிணையம்; நரம்பணு பிணையம்: மனித மூளையின் அடிப்படை நினைவாற்றல் அலகு போன்று செயற்படக்கூடிய பல்வேறு செயற்பாடுகளைச் செய்ய வல்ல கணித மாதிரி வடிவம். நியூரான் என்பது அடிப்படை நரம்பு உயிரணு ஆகும். ஒரு புழுவின் மூளையில் இந்த உயிரணுக்கள் 1000 வரையில் இருக்கும். மனிதனிடம் 10,000 கோடி நரம்பு உயிரணுக்கள் உள்ளன. இந்த நியூரான் என்ற சொல்லிலிருந்தே இப்பெயர் வந்தது.

neutral network computers : நரம்பணு பிணையக் கணினிகள்; நியூரான் பிணையக் கணினிகள் : மின் சுற்றுக்கள் உள்ள பரிசோதனை எந்திரங்கள். மனித மூளையின் நியூரான்கள் அல்லது நரம்பு செல்களிடையே உள்ள இடை பிணைப்புகளை ஒட்டி வடிவமைக்கப்பட்டது.

neumann concept : நியூமன் கோட்பாடு.

new century schoolbook : புதிய நூற்றாண்டு பள்ளி நூல் : பாடநூல்கள் மற்றும் பருவ இதழ்களுக்காக உருவாக்கப்பட்டது. எளிதாகப் படிக்கக் கூடிய எழுத்தச்சின் முகம்.

newline : புதுவரி : ஆவணத்தில் தட்டச்சு, செய்யும்போது ஒரு வரி முடிந்து புதிய வரி தொடங்குகிறது என்பதை உணர்த்தும் குறியீடு. முந்தைய வரியின் இறுதியில் அமையும்.

Newton-Raphson : நியூட்டன்-ராஃப்சன் : சமன்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒன்றோடொன்று செயற்படக்கூடிய நடைமுறை.

new wave : புதிய அலை (நியூவேவ்): டாசுக்கும் விண்டோசுக்கும் இடையில் ஓடும் பி.சி. செயற்பாட்டுச் சூழ்நிலை. எச்.பி. உருவாக்கியது. அது தகவல்களை ஒருங்கிணைத்து பணிகளை இயக்கி அமைப்புக்குள் செயலாற்றும். பல்வேறு தகவல் பயன்பாடுகளைக் கலந்து ஒரு கூட்டு ஆவணத்தை உருவாக்கும் பொருள் மேலாண்மை வசதியை அனுமதிக்கும். ஏதாவதொரு மூலக் கோப்பில் தகவல் புதுப்பிக்கப்பட்டால், அகநிலை இணைப்புகள் ஆவணத்தைத்

தானாகவே மேம்படுத்தும். காலம் அல்லது நிகழ்வுகளால் இயக்கப் படும் உதவியாளர்களை உருவாக்க அனுமதிக்கும். புதிய அலைகளின் கீழ் இயங்க ஆணைத் தொடர்களை மாற்ற வேண்டும்.

next computer : நெக்ஸ்ட் கணினி : நெக்ஸ்ட்-இன் நிறுவனத்திடமிருந்து வரும் யூனிக்ஸ் ஏற்பு பணி நிலையக் குடும்பங்கள். 68040 மையச் செயலகத்தைப் பயன்படுத்தி 1120 x 832 பமுப்பு அளவு வண்ண வரைகலை டிஸ்ப்ளே போஸ்ட் ஸ்கிரிப்ட் ஆகியவை உள்ளடக்கியது. 2.88 மீமிகு எட்டியல் நெகிழ் வட்டும் சிடி தர ஓசைக்காக இலக்க முறை குறிப்பு செயலாக்க சிப்புவையும் கொண்டிருக்கும். உருவ செயலாக்கம் தகவல் சுருக்கம் மற்றும் குரல் ஏற்பு போன்றவையும் நெக்ஸ்ட் ஸ்டெப் ஜேபிஇஜி மென்பொருள் மூலம் வண்ண கறுப்பு- வெள்ளை உருவங்களை சுருக்கலாம். ஆப்பிளின் முன்னாள் தலைவரான ஸ்டீவன் ஜாப்ஸ் 1985இல் நெக்ஸ்ட்டை உருவாக்கினார்.

nibble : கொறியளவு ; தகை எட்டியல்: ஓர் எட்டியலின் (byte) பாதி. இது அடுத்தடுத்து நான்கு துண்மிகளை (bits)க் கொண்டது.

nickel hydride : நிக்கல் ஹைட்ரைட்: சக்தி ஏற்றக்கூடிய மின்கலங்களை உருவாக்கப் பயன்படும் பொருள். நிக்கல் மின்கலங்களை விட இது ஒரு கிலோவுக்கு அதிக சக்தியைத் தருகிறது. நினைவக விளைவை அவை காட்டுவதில்லை.

niladic : இயக்கப்படும் எண்கள் இல்லாத; உறுப்பிலா : இயக்கப்படும் எண்கள் (operands) எதுவும் குறித்துரைக்கப்படாத ஒரு செயற்பாடு தொடர்புடையது.

nil pointer : இன்மை சுட்டு: ஒரு பிணைப்புள்ள பட்டியலின் முடிவினைக் குறிக்கப் பயன்படும் சுட்டு.

nine's complement : ஒன்பதின் குறை நிரப்பு எண்: ஒவ்வொரு இலக்கத்தையும் ஒன்பதிலிருந்து கழித்துக் கிடைக்கும் ஒரு பதின்ம எண்ணின் குறை நிரப்பு எண். எடுத்துக்காட்டு : 567 என்ற எண் 432 என்ற எண்ணின் ஒன்பதின் குறைநிரப்பு எண். இது 999 என்ற எண்ணிலிருந்து 432-ஐக் கழிப்பதன் மூலம் கிடைக்கிறது. இது ஒன்றின் குறை நிரப்பு எண், இரண்டின் குறை நிரப்பு எண், பத்தின் குறை நிரப்பு எண் போன்றது.

ninety column card : தொண்ணூறு பத்தி அட்டை : அகல்விரி தானியங்கிக் கணினியில் (Universal Automatic Computer - UNIVAC) அட்டை கையாள்தல் சாதனத்தில் பயன்படுத்தப்படும் துளையிட்ட அட்டை. இது 90 பத்திகளைக் கொண்டது. ஒவ்வொரு பத்தியில் ஓர் எழுத்தினைத் துளையிடலாம். இது ஹோலரித் அட்டை தொண்ணூற்றாறு பத்தி அட்டை ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

ninetysix column card : தொண்ணூற்றாறு பத்தி அட்டை : அட்டை கையாள்தல் சாதனத்தில் பயன்படுத்தப்படும் துளையிட்ட அட்டை. இது 18 வரிசைகளையும் 36 பத்திகளையும் கொண்டது. ஒவ்வொரு பத்தியிலும் மூன்று எழுத்துகளைத் துளையிடலாம். இது ஹோலரித் அட்டை தொண்ணூறு பத்தி அட்டை ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது.

nixie tube : எண்காட்சிக் குழாய்; நிக்சி குழல்: தெளிவான எண்களைக் காட்சியாகக் காட்டுவதற்குப் பயன்படும் வெற்றிடக் குழாய்.

n-key rollover : என்-விசை சுற்றுதல் : வேக தட்டச்சுக்கான விசைப் பலகை மின் சுற்று வடிவமைப்பு. இதை சோதிக்க எந்த விசைகளில் இருந்தும் விரலை எடுக்காமல் நான்கு அடுத் தடுத்த விசைகளை அழுத்த வேண் டும். நான்கு எழுத்துகளும் திரையில் தோன்றினால் அந்த விசைப்பலகை யில் இந்த விசை இருக்கிறது என்று பொருள்.

NMOS : என்மோஸ்: 'N- அலைவரிசை மோஸ்' (N-channel MOS) என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

node : மைய முனை : 1. ஒரு கணினி இணையத்தில் ஒரு சேர்முனையம் அல்லது செய்தித் தொடர்புக் கணினி. 2. மரம் போன்ற அமைப்பில் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற் பட்ட கிளைகள் ஒன்றிணையும் மைய முனை. 3. அச்சிட்ட மின்சுற்று வழிப்பலகையில் பல்வேறு அமைப்பி கள் ஒன்றாக இணையும் இடம்.

noise : இரைச்சல் : 1. ஒரு சாதனத்தில் அல்லது பொறியமைவில் இயல் பான செயற்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும் விரும்பத்தகாத ஒலி. இது, அந்தச் சாதனத்தின் அமைப்பி களாலோ இயற்கையாகவோ அல் லது மனிதரின் குறுக்கீட்டினாலோ ஏற்படலாம். 2. பிழைகள் உண்டா வதற்குக் காரணமாக இருக்கக்கூடிய போலிக் குறியீடுகள் அல்லது விரும்பத்தகாத குறியீடுகள்.

noise immunity : இரைச்சல் ஏமக் காப்பு : தேவையான குறியீடுகளை மட்டும் ஏற்றுக் கொண்டு வேண்டாத குறியீடுகளை ஒதுக்கிவிடும் திறனு டைய சாதனம்.

noise pollution : ஒலித் தூய்மைக் கேடு :ஆக்கப்பணிகளிலிருந்து கவனத் தைச் சிதறடிக்கக்கூடிய ஓசை. குறிப் பாக அலுவலகங்களில் ஏற்படும் தேவையற்ற இரைச்சல். அச்சு எந் திரங்கள், தட்டச்சுப் பொறிகள், படி யெடுப்பு எந்திரங்கள் போன்றவற்றி லிருந்து எழும் ஓசைகள் இவ் வகையின.

non-blocking : தடுக்காத நிலை : தடை அல்லது தாமதம் இன்றி ஒரு சமிக்ஞை, அது போய்ச் சேர வேண் டிய இடத்தை அடைதல்.

non-breaking hyphen : பிரிக்காத ஒட்டுக்குறி (ஹைஃபன்) : சொல் செயலிகளில் பயன்படுத்தப்படும் சொல். இதில் ஒரு கோட்டின் இறுதி யில் வரும் (ஹைஃபன்) சேர்ந்த சொல்லைப் பிரிக்கக்கூடாது. சான் றாக ஃபிளிப்-ஃப்ளாப் என்ற சொல்லை இரண்டு வரிகளில் பிரித் தால் குழப்பம் ஏற்படும். பிரிக்காத சிறுகோட்டை நுழைத்தால் இரண்டு சொற்களை ஒன்றாகவே வைக்கும்.

non conductor : மின் கடத்தாப் பொருள் : மின்னோட்டம் பாய முடி யாத பொருள். இது மின் கடத்தி களிலிருந்து வேறுபட்டது.

non conducting : மின் கடத்தா திருத்தல்.

non conducting state : மின் கடத்தா நிலை.

non destructive read : அழித்திடாப் படிப்பு : சேமிப்புச் சாதனங்களின் உள் ளடக்கங்களை அழித்து விடாத படிப்புச் செயற்பாடு.

non document : வாசகமிலா ஆவணம்.

non document mode : ஆவணம் இல் லாத முறை : மூலமொழி ஆணைத் தொடர்கள் பிரிவு கோப்புகள் மற்றும் பொதுச் சொற்கோப்புகளையும் வேறு ஆணைத் தொடருக்கு மாற்று வதற்காக உருவாக்கும் சொல்

செயலாக்க முறை. உரிமையாளர் படிவக் குறியீடு இல்லாத சொற் பகுதியைக் கொண்ட கோப்பை உருவாக்குகிறது. நார்ட்டன் எடிட்டர், எக்ஸ் ஒய் ரைட் போன்ற சொல் செயலிகள் மற்றும் உரைத் தொகுப்பிகள் தானாகவே அஸ்கி சொற் கோப்புகளை உருவாக்கு கின்றன. அவற்றுக்கு இந்த வாய்ப் பளித்தல் தேவையில்லை.

non executable statement : நிறை வேற்ற முடியாத கட்டளை: ஒரு செயல் முறையை வகுத்து அந்தச் செயல் முறையில் அடங்கியுள்ள குறிப்பிட்ட நடவடிக்கை எதனையும் நிறைவேற் றும்படி கோராத கட்டளை. இது நிறைவேற்றத்தக்க கட்டளையி லிருந்து வேறுபட்டது.

non erasable storage : அழிக்க முடியாத சேமிப்பகம்.

non graphic character : வரைகலை யல்லாத எழுத்து; வரைவியல் சாராத உருக்காட்சி : அச்சடிப்பானுக்காக அல்லது காட்சித் திரைக்காக அமைக் கப்படும்போது அச்சடிக்கத்தக்க எழுத்து உருக்காட்சியை உண்டாக் காத எழுத்து. எடுத்துக்காட்டு: சகடக் கட்டுப்பாடு; தலைப்பெழுத்து.

non impact printer : தாக்குறவிலா அச்சடிப்பி : வெளிப்பாடுகளை அச் சடிப்பதற்காக மின்வெப்பம், லேசர் தொழில்நுட்பம், ஒளிப்பட உத்திகள் போன்றவற்றைப் பயன்படுத்தும் அச்சடிப்பி. இது தாக்குறவு அச்சடிப் பிலிருந்து வேறுபட்டது.

non-interlaced : இடைப்பின்னலற்ற: வரிகளை மேலிருந்து கீழாக வரிசை யாகக் காட்டி ஒரு சிஆர்டி ஒளி தரு தல். ஒரு திரையகத்தில் தானாகவே இடைப்பின்னல் உள்ளது இல்லா தது என்றாவதில்லை. இடைப் பின்னல் இல்லாத திரையகக் குறுக்கு வாட்ட ஒளிக்காட்சி கட்டுப்படுத்தி யிலிருந்து எடுத்துக் கையாளும் திறன் கொண்டிருக்கும்.

non linear function : நேரிலாப் பணி : ஒரு பணியை நேர் என்று சொல்வதா னால் அதன் ஒரு அளவு வேறொன்றி லிருந்து நேர் விகிதத்தில் மாறுபட் டிருக்கும். ஆகவே அதன் வரைபடம் செங்குத்துக் கோடாக இருக்கும்.

non linear programming : ஒரு படி யிலாச் செயல்முறைப்படுத்துதல் : ஒரு குறிப்பிட்ட சார்பலனின் மிகக் குறைந்த அல்லது மிக உயர்ந்த மதிப் பினைக் கண்டறிவதற்காகப் பயன் முறைக் கணிதத்தில் உள்ள பகுதி. வகுத்துரைக்கப்படும் மாறிகள் அனைத்தையும் இதனால் கண்டு பிடிக்கலாம். இது ஒரு படிச்செயல் முறைப்படுத்துதலிலிருந்து வேறு பட்டது.

non numeric programming : எண் களிலாச் செயல்முறைப்படுத்துதல் : எண்களை விடுத்து சைகைகளைக் கையாளும் செயல்முறைப்படுத்து தல். எண்மானக் கணிப்புகள் அல்லா மல் சொற்கள் போன்ற சைகைப் பொருள்களைக் கையாள்வதை இது குறிக்கிறது.

non-modal : முறை இல்லாத : முறை சார்ந்திராத தெளிவான முறை பொத் தான் அமைக்காமல் ஒரு சூழ்நிலை யில் இருந்து வேறொன்றுக்கு மாறுதல்.

no.op (NOP) : செயற்படா; செயலிலா: செயற்படாதிருத்தல் என்று பொருள் படும் no-Operation என்பதன் சுருக் கம். எடுத்துக்காட்டு: செயற் படா அறிவுறுத்தம்.

no operation instruction : செயலற்ற ஆணை.

non overlap processing : உடன் நிகழா செயலாக்கம் : படித்தல், எழுதுதல், உள்முகச் செய்முறைப்படுத்துதல் ஆகியவை ஒரு தொடர் வரிசை முறையில் மட்டுமே நடைபெறும் உத்தி. இது மேற்கவிந்த செய்முறைப் படுத்துதலிலிருந்து வேறுபட்டது.

non - preemptive multitasking : முற் படு பல் பணியாக்கம் : ஒரு பயன்பாடு இயங்கும்போது, மையச் செயலகத் தின் கட்டுப்பாட்டை வேறொரு பயன்பாட்டுக்குத் தருதல். சான்றாக பயனாளர் உள்ளீட்டை ஏற்றுக் கொள்ள அது தயாராதல். இந்த முறையில் ஒரு ஆணைத் தொடர் ஒரு எந்திரத்தை ஆட்டி வைக்க முடியும்.

non print : அச்சுத் தவிர்ப்பு; அச்சடிப் புத் தடைத் துடிப்பு : எந்திரக் கட்டுப் பாட்டின் கீழ் வரிவாரி அச்சடிப் பினைத் தடுக்கிற ஒரு துடிப்பு.

non procedural query language : நடைமுறைசாராக் கேள்வி மொழி : ஒரு தகவல் தளத்துடன் செய்திப் பரிமாற்றம் செய்வதற்கான கணினி மொழி. இது கணினியை பயன் படுத்துபவர் தகவலைப் பெறுவதற் குத் தேவையான நடவடிக்கை களைக் குறிப்பிடாமல் அவர் எதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார் என்பதைக் குறித்துரைக்கிறது. எடுத்துக்காட்டு: சில பொறியமைவு களில் பயனாளர் தேர்ந்தெடுத்த புலங் களில் வேண்டப்படும் மதிப்புகளின் அளவுகளை வெற்றுப் பதிவேடாக ஒரு காட்சித் திரையில் காட்டுதல்.

non reflective : பிரதிபலிக்காத மை : ஓர் ஒளி எழுத்துப் படிப்பிக்குப் புல னாகக் கூடிய மையின் வண்ணம் எதுவும். இதனை, 'படிப்பு மை' என்றும் கூறுவர்.

non return to zero : சுழி(பூஜ்யம்)க்குத் திரும்பாமை : காந்தப் பதிவு முறை காந்தமயத்தில் துருவத்தை மாற்று வதன் மூலம் இரும எண் 1-ஐ பதிவு செய்தல்.

non erasable storage : அழித்திட முடி யாத சேமிப்புச் சாதனம் : கணிப்பின் போது தன்னிடம் அடங்கியுள்ள தகவல்களை அழித்திட முடியாத சேமிப்புச் சாதனம். துளையிட்ட காகித நாடா, துளையிட்ட அட்டை கள், சில வகை அழிக்க முடியாத படிப்புக் காந்த நினைவகம் ஆகியவை இவ்வகைச் சாதனங்கள்.

non sequential computer : வரிசை முறையிலாக் கணினி : ஒவ்வொரு அறிவுறுத்தத்தின் அமைவிடத்திற் கும் இயக்கப்படவேண்டிய கணினி.

non-servo robots : பணியிலா எந்திரன் கள் : நெகிழ்விலா தன்மையினால் கட்டுப்படுத்தப்படும் அமைப்பைக் கொண்ட எந்திரன்கள்.

non stop : நிற்காத : டான்டெம் நிறு வனம் உருவாக்கிய பிழை தாங்கும் கணினி அமைப்புகளின் குடும்பம்.

non switched line : விசையிலா இணைப்பு; நிலைமாறா இணைப்பு : இரு முனைகளிடையே நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள செய்தித் தொடர்பு இணைப்பு. இதனைக் குத்தகை இணைப்பு என்றும் கூறுவர்.

non-system disk : முறைமையிலா வட்டு: ஏற்றும் தகவல் (அமைப்பு கோப்புகள்) கொண்டிராத ஒரு நெகிழ்வட்டு. அத்தகைய வட்டைக் கொண்டு கணினியை இயக்க முடியாது.

non-volatile memory : அழியா நினை வகம் : மின்சக்தி வருவது நின்று போனாலும் அதன் நினைவகத்தை

இழந்து விடாத தகவல் சேமிப்பகம். இரண்டாம் நிலை நினைவகத்தைக் குறிப்பிடவும் இச்சொல் பயன்படுத் தப்படுகிறது. எஸ்ராம் (SRAM) போன்ற அடிப்படை நினைவகத்தின் சில வடிவங்களும் மாறாதவை.

non volatile storage : அழியாவகை சேமிப்புச் சாதனம்; அழிவுறா சேமிப் பகம் : மின்விசை இல்லாதபோதும் தனது தகவல்களை இருத்தி வைத்துக் கொள்ளும் சேமிப்புச் சாதனம். காந்தக் குமிழ் நினைவகம். காந்த உள்மையச் சேமிப்புச் சாதனம் இந்த வகையின. இது அழியும் சேமிப்புச் சாதனத்திலிருந்து மாறுபட்டது.

no-operation instruction : செயற்படா ஆணை : ஆணை மேடைக்குச் சாதக மான விளைவை மட்டுமே உண்டாக் கக்கூடிய கணினி ஆணை. இயல் பான வரிசை முறையில் அடுத்த ஆணைக்குத் தானாக நகரும் வேலையை மட்டுமே இது செய்கிறது.

NOP instruction : வினையிலா ஆணை: கணினி இயக்கத்தில் எந்த வித மாற்றமும் ஏற்படுத்தாத கணினி ஆணை. ஆகவே இது 'நாப்' என்று அழைக்கப்படுகிறது.

nor : எதிர் அல்லது : Not-or என்பதன் சுருக்கம். தருக்க முறை இயக்கி யினால் இணைக்கப்பட்டுள்ள மாறி கள் இரண்டும் பொய்யானவையாக இருக்கும்போது மட்டும் உண்மை யின் ஒரு தருக்க முறை மதிப்பினை அளிக்கிற பூலியன் இயக்கி. இது, 'மற்றும்' , 'அல்லது' ஆகியவற் றுடன் ஒப்பிடத் தக்கது.

normal distribution : இயல்பான பகிர்வு ஆணை : ஒரு நடு மதிப் பினைச் சுற்றி ஒழுங்கு முறையாகத் தொகுக்கின்ற தன்மை அனைத்தும் இயற்கையாக ஏற்படும் சிறப்பியல்பு களுக்கும் உண்டு. ஒரு பள்ளியில் குறிப்பிட்ட வகுப்பில் படிக்கின்ற மாணவர்களின் உயரம், ஒரு குறிப் பிட்ட நிலை வட்டின் உழைக்கும் நாட்கள், மக்கள் தொகையில் ஒரு நபர், ஒரு ஆண்டுக்குப் பயன்படுத்து கின்ற பெட்ரோலின் அளவு ஆகிய வற்றை இதற்குச் சான்றாகச் சொல்ல லாம். இந்த போக்கே வழக்கமான விநியோகம் எனப்படுவதை உரு வாக்குகிறது. வரைபட அமைப்பில் ஒரு வழக்கமான விநியோகமானது மணி வடிவ வளைவை உருவாக்கும்.

normal form : இயல்பான வடிவம் : பதின்மப் புள்ளி எண்ணைக் குறிப் பிடுவது. இதில் பின்னப்பகுதியின் மிக முக்கிய இலக்கம் சுழி (பூஜ்ய) யாகவே இருக்கும்

normalize : இயல்பாக்குதல் : ஒரு மாறியல் எண்ணளவின் அடுக்குக் குறி எண்ணையும் பின்னத்தையும் சரியமைவு செய்தல். இதன்படி பின்னம் வகுத்துரைக்கப்படும் ஓர் அளவெல்லைக்குள் இருக்குமாறு செய்யப்படும்.

normal termination : இயல்பான முடிப்பு : End அல்லது stop போன்ற நிறுத்தும் சொல். ஒரு ஆணைத் தொடரை முடிக்கும் செயல்.

normal video : இயல்பான ஒளிக் காட்சி : கறுப்புப் பின்னணியில் வெள்ளை எழுத்துகளைக் காட்டும் முறை.

normal wear : இயல்பான தேய் மானம் : சராசரியான, அன்றாட பயன் பாட்டினால் ஒரு பொருளின் மீது இயற்கையான சக்திகள் ஏற்படுத்தும் சீர்கேடு.

normalization : இயல்பாதல் : தொடர்பு முறை தகவல் தள மேலாண்மையில்

திறமையான செயலாக்கத்திற்காக தகவல்களை பதிவேடு குழுக்களாகப் பிரிக்கும் செயல் முறை. இதில் ஆறு நிலைகள் உள்ளன. மூன்றாவது நிலையில் (மூன்றாவது வழக்கமான வடிவம்) பதிவேட்டிலுள்ள முக்கிய புலத்தினால் மட்டுமே தகவல் அடையாளம் காட்டப்படுகிறது. சான்றாக ஆணையிடம் தகவலை அடையாளம் காண்பது, ஆணை எண், வாடிக்கையாளர் தகவல், வாடிக்கையாளர் எண்.

norton commander : நார்ட்டன் கட்டளை : பி.சி.க்கான கூட்டு மேலாண்மைப் பயன்பாட்டு ஆணைத் தொடர்கள்.

norton editor : நார்ட்டன் தொகுப்பி : பீட்டர் நார்ட்டன் என்பவரால் பி.சி.க்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு உரைத் தொகுப்பி.

norton index : நார்ட்டன் அடைவு; நார்ட்டன் அட்டவணை : கணினி வன்பொருள்/மென்பொருள் செயலாக்க வேகத்தினை மதிப்பிடக் கூடிய பல முறைகளில் ஒன்று NI என்று சுருக்கி அழைக்கப் படுகிறது.

norton SI : நார்ட்டன் எஸ்.ஐ. : Norton System Information என்பதன் குறும்பெயர். கணினி செயல்பாட்டை அளக்கும் நார்ட்டன் பயன்பாடு. கணிப்பு அடைவு (சி.ஐ) மூலம் மையச் செயலக வேகத்தையும் வட்டு அடைவு (டி.ஐ) மூலம் வட்டின் வேகத்தையும் செயல்பாட்டு அடைவில் (பி.ஐ) சி.ஐ, டி.ஐ. ஆகிய இரண்டையும் கலந்தும் தரும். ஐ.பி.எம். எக்ஸ்.டி. இதற்கு ஒரு குறிப்பொருளாகப் பயன்படுத்தப் படுகிறது.

norton utilities : நார்ட்டன் பயன்பாடுகள் : சிமான்டிக் கார்ப்பரேஷன் உருவாக்கிய பி.சி., மெக்கின்டோஷ் களுக்கான வட்டு மேலாண்மை பயன்பாட்டு ஆணைத்தொடர்கள். கோப்புகளைத் தேடித் தொகுத்தல், கோப்புகளை நீக்காமை, சேதமான கோப்புகளை திரும்பப் பெறுதல் போன்றவற்றுக்கான ஆணைத் தொடர்கள் இதில் அடங்கும். பீட்டர் நார்ட்டன் கணிப்பி நிறுவனம் உருவாக்கிய இத்தகைய ஆணைத் தொடர்கள்தாம் பி.சி.க்கான வட்டு பயன்பாடுகளை புகழடையச் செய்தன. குறிப்பிட்ட பணிக்கேற்ற தேவையற்ற தன்மைகள் இல்லாத வேகமான பயன்பாடுகளின் தொகுதியே அவை.

NOS : நாஸ் : Network Operating System என்பதன் குறும்பெயர். ஒரு பிணையத்தில் அனுப்புவதைக் கட்டுப்படுத்தும் மென்பொருள்.

NOT : எதிர் : இது ஒரு தருக்க முறை இயக்கி. இதில் 'P' என்பது ஓர் அறிக்கை, எனில் 'P' பொய்யான தென்றால் 'P'-இன் 'எதிர்' உண்மையாகும்; 'P' உண்மையென்றால் அதன் 'எதிர்' பொய்யானதாகும்.

NOT boolean : நாட் பூலியன் : ஒரு உள்ளீட்டைத் தலைகீழாக்கும் அளவை இயக்கம். உள்ளீடு '0' என்றால் வெளியீடு '1' ஆகும் இதுவே தலைகீழாகும்.

notebook computer : குறிப்பேட்டுக் கணினி : ஒரு கைப்பெட்டிக்குள் அடக்கிவிடக்கூடிய வடிவளவுடைய ஒரு கணினி. இதில் ஒரு தட்டையான தகட்டுத் திரவப் படிகக் காட்சித் திரை பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு கையடக்கக் கணினியை விடப் பெரியது. ஆனால் ஒரு மேசைக் கணினியை விடச் சிறியது.

NOT gate : 'எதிர்' வாயில் : எதிராக்கம் செய்வதற்கான தருக்க முறைச் செயற் பாட்டுக்கு இணையான மின்சுற்று வழி.

notation : எண் அமைப்பு;குறிமானம்: எண்கள், சொற்றொடர்கள், சொற் கள் மற்றும் அளவுகள் எவ்வாறு எழுதப்படுகின்றன அல்லது எடுத் துரைக்கப்படுகின்றன என்பது. பதின்ம அல்லது இரும அமைப்பு போன்ற எண் அமைப்பில் எண்கள் அமையும் இடத்தைப் பொறுத்தே எண்களின் மதிப்பு முடிவு செய்யப் படும்.

NOTIS : நோட்டிஸ் : நார்வேயின் நார்ஸ்க் டேட்டா நிறுவனத்தின் அலு வலகத் தானியங்கித் தொகுப்பு. சொல் செயலாக்கம் மற்றும் விரி தாளுக்கு அப்பால் சென்று மின்னஞ் அஞ்சல் ஆவண சேமிப்பு வணிக வரைகலைகள் மற்றும் தொலையச்சு டெலக்ஸ் இடைமுகம் ஆகியவற்றை வழங்கக் கூடியது.

nova : நோவா : டேட்டா ஜெனரல் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் தயாரிக்கும் கணினிகளுக்கான வடி வமைப்பு.

novaNET : நோவாநெட் பிணையம் : இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்தின் கல்வி ஆராய்ச்சி ஆய்வுக் கூடம் உரு வாக்கிய கல்விச் சேவைகளுக்கான செயற்கைக் கோள் சார்ந்த பிணை யம். மூன்றாம் வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு வரை நூற்றுக்கணக்கான பாடங்களில் 10,000 மணிகளுக்கு மேலான பாடப் பொருள் இதில் உள்ளது.

novell network : நோவெல் பிணையம் : நோவலின் நெட்வொர்க் இயக்க அமைப்புகளில் ஒன்றினால் கட்டுப் படுத்தப்படும் குறும் பரப்புப் பிணையம் (LAN).

no wait state memory : காத்திருக்காத நிலை நினைவகம் : மையச் செய லகத்தின் தேவைகளைச் சமாளிக்கும் அளவுக்கு வேகமுள்ள நினைவகம். சோம்பலாய் காத்திருக்கும் நிலை களை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையில்லை.

Noyce Robert : நாய்ஸ், ராபர்ட் : கோளச் செய்முறையை ஜீன் ஹீர்னி என்பாருடன் சேர்ந்து உருவாக்கிய வர். இதில் மின்சுற்றுவழி அமைப்பி கள், சிலிக்கன் போன்ற மென் வட்டில் ஒளிச் செதுக்குச் செய்வதன் மூலம் இணைக்கப்படுகின்றன.

NRZ : என்ஆர்இசட் : சுழி (பூஜ்யம்)க் குத் திரும்பாதிருப்பதைக் குறிக்கும். 'Non-return to zero' என்ற ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சொல். எண்முறைத் தகவல்களைக் காந்த நாடாவில் குறியீடாகப் பதிவு செய்வதற்கான பல முறைகளில் ஒன்று.

NS : என்எஸ் : நானோ விநாடி (Nano-second) என்பதன் சுருக்கம். இது ஒரு விநாடியில் நூறு கோடியில் ஒரு பகுதியாகும்.

NST : என்எஸ்டி : ஒரு கட்டளையின் ஆரம்பத்துக்கும் முடிவுக்கும் இடை யில் வேறு ஒரு கட்டளையை உள்ளே நுழைத்தல்.

NSTL : என்எஸ்டிஎல் : National Software Testing Laboratory என்பதன் குறும் பெயர். ஒரு அமெரிக்க தனி யார் மென்பொருள் சோதனை மற் றும் மதிப்பீட்டு நிறுவனம்.

NT : என்டி (விண்டோஸ்) : மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் பிணைய இயக்க முறைமை. கிளையன்ட்/

செர்வர் தொழில் நுட்பத்தில் அமைந்த செர்வர் இயக்க முறைமை. விண்டோஸ் 95/98-ன் வரைகலைப் பணிச்சூழல் என்டியில் உண்டு. வருங்காலத்தில் 'விண்டோஸ் என்டி' என்பது 'விண்டோஸ் 2000' என்று பெயர் மாற்றம் பெறுகிறது. ஆல்பா செயலிகள் மிப்ஸ் (MIPS). தொழில்நுட்ப செயலிகள் மற்றும் இன்டெலின் 86 வரிசைச் செயலிகள் ஆகியவற்றிலும் என்.டி. (NT) இயங்கும்.

NTSC : என்டிஎஸ்சி : தேசியத் தொலைக் காட்சி அமைவனக்குழு (National Television System Committee) என்பதன் குறும் பெயர். இது ஒரு வண்ணத் தொலைக்காட்சித் தர நிருணய அளவு.

nuBus : நுபஸ் : ஈரோகார்டினால் (9U) வரையறுக்கப்பட்டு ஆரம்பத்தில் எம்ஐடியில் உருவாக்கப்பட்ட 32-துண்மி தடைய வடிவமைப்பு. தடையத்திற்கான உரிமைகளை டி.ஐ. மற்றும் வெஸ்டர்ன் டிஜிட்டல் நிறுவனங்கள் வாங்கி விட்டன. டி.ஐ. யிடமிருந்து ஆப்பிள் நிறுவனம் இதற்கான உரிமையைப் பெற்று இதன் மின்சார பருப்பொருள் வரையறைகளை மெக்கின்டோஷுக்காக மாற்றியது.

nucleus : உள்மையம்; உட்கரு : ஒரு கட்டுப்பாட்டுச் செயல்முறையின் பகுதி. இது உள்முகச் சேமிப்புச் சாதனத்தில் அமைந்திருக்க வேண்டும்.

NUI : என்யுஐ : Notebook User Interface என்பதன் குறும் பெயர். கோ கார்ப்பரேஷன் தனது பேனா மற்றும் பாயின்ட் பேனா சார்ந்த இடைமுகத்திற்காக உருவாக்கப்பட்ட சொல்.

null : பயனிலா மதிப்பு; வெற்று மதிப்பு: மிக அற்பமான அல்லது தகவல் எதுவும் தராத ஒரு மதிப்பு. இது ஒரு எண்மான மதிப்பு, சொற்களுக்கிடையிலான இடைவெளி போன்ற தகவல்களைக் குறிக்கும் ஒரு சுழி (பூஜ்யம்) அல்லது வெற்றிடத்திலிருந்து வேறுபட்டது.

null character : இல்லாத எழுத்து ; வெற்று எழுத்து : ஒரு சேமிப்பகச் சாதனத்தின் வெற்றிடத்தை நிரப்பப் பயன்படுத்தப்படும் எழுத்து. ஒரு வரிசை எழுத்துகளிலிருந்து அந்த வரிசையில் பொருள் மாறாமல் அந்த எழுத்தை சேர்க்கலாம் அல்லது நீக்கலாம்.

null cycle : பயனில் சுழற்சி; வெற்றுச் சுழற்சி : புதிய தகவல் எதனையும் தராமல் ஒரு முழுச் செயல்முறையும் சுழல்வதற்குத் தேவையான நேரம்.

null modem : வெற்று மோடெம் : அங்கே ஒரு மோடெம் இல்லாமலேயே தரமான மோடெம் குழாய்களைப் பயன்படுத்தி இரண்டு கணினிகளை இணைக்க அனுமதிக்கும் சாதனம். பெரிதாக்கல், குறிப்பேற்றம், குறிப்பிறக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தாமலேயே செய்யப்படும் தகவல் தொடர்பு இணைப்பு. குறைந்த தூரத்திற்கு மட்டுமே வெற்று மோடெம்கள் முறையைப் பயன்படுத்த முடியும். நேரடி இணைப்பைக் கருத்தில் கொண்ட மிகக் குறைந்த நீளமுள்ள நேரடி உலோக இணைப்பு தருவதாக சிலசமயம் வெற்று மோடெம்கள் குறிப்பிடப்படுகின்றன.

null modem cable : வெற்று மோடெம் குழாய் : மிக நெருக்கமாக உள்ள இரண்டு பர்சனல் கணினிகளை இணைக்கப் பயன்படுத்தப்படும் ஆர்எஸ்-232 -சி குழாய். தொடர் துறை(port)களை இணைப்பதுடன்



வெற்று மோடெம் குழாய்
(Null modem cable)

ஒரு முனையில் அனுப்பும் கம்பிகளையும் மறு முனையில் பெறும் கம்பிகளையும் கடக்கிறது.

null pointer : வெற்றுச்சுட்டு : சுழியை (பூஜ்யத்தை) ஆணைத் தொடரில் குறிப்பிடும் முறை. வெற்றி பெறாத, தேடும் பணியின் பதில்களாக இருக்கலாம்.

num lock : எண் பூட்டு : விசைப் பலகையில் எண் அட்டையில் உள்ள ஒரு விசை. எண் அட்டையில் இலக்கங்களை தட்டச்சு செய்யும் போது மாற்று விசையை (Shift) அழைத்தும் தேவையின்றி இதை அழுத்தினால் போதுமானது.

null string : வெற்றுச் சரம் : எழுத்து எதுவும் இல்லாத ஒரு சரம்.

number : எண் வரிசை : 1. ஒரு குறிப்பிட்ட எண்மான முறையில் ஒரு மதிப்பினைக் குறிக்கும் குறியீடு அல்லது குறியீடுகள். 2. இது ஓர் இலக்கத்தையும் குறிக்கும்.

number cruncher : எண் உழல்; பெருங் கணிப்பி : ஏராளமான கணிப்புகளையும் பிற எண்மானக் கணக்குகளையும் செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட செயல்முறை அல்லது கணினி.

number lock : எண் பூட்டு.

number representation : எண்மானக் குறியீடு : ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விதிமுறைகளுக்கிணங்க, ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள குறியீடுகளில் எண்களைக் குறிப்பிடுதல்.

number system : எண்மான முறை : எண்களைக் குறிப்பிடுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள குறியீடுகளும், விதிமுறைகளும் எண்மான முறை எனப்படும்.

numeral : எண்; எண்மானம் : ஓர் எண்ணைக் குறிப்பதற்கு மரபு முறைப் படி பயன்படுத்தப்படும் குறியீடு. 6, VI, 110 என்பவை ஒரே எண்ணை வேறு வேறு எண்மான முறைகளில் குறிக்கும் குறியீடுகள் ஆகும்.

numeralization : எண் முறையாக்கம் : அகர வரிசைத் தகவல்களை எண்களில் குறிப்பிடுதல்.

numeral system : எண் முறை; எண் அமைப்பு ; எண்மான முறை : எண்களைக் குறித்திடும் முறை. பொதுவாக பதின்ம அல்லது பதின்மான இலக்க முறை பயன்படுத்தப்படுகிறது. இது தவிர பல்வேறு இலக்க முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஈரெண் முறை, பதினாறெண் முறை, எட்டெண் முறை ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

numerator : பகுதி.

numerical expression : எண்மானக் கோவை.

numeric : எண் சார்ந்த : எண்கள் அல்லது எண் குறியீடுகள் தொடர்புடைய.

numeric data : எண் தகவல் : கணக்கீடுகளைச் செய்யும்போது பயன்படுத்தப்படும் பண அளவுகள்

மற்றும் பொருள் எண்ணிக்கைகளைக் குறிப்பிடுகிறது.

numeric field : எண் புலம் ; எண்ணியல் படிவம் : கணக்கிடப்பட வேண்டிய எண்களை மட்டுமே கொண்டுள்ள தகவல் புலம்.

numeric type field : எண் வகைப் புலம்.

numerical analysis : எண் முறைப் பகுப்பாய்வு : கணக்குகளுக்கு விடை காண்பதற்கான ஆக்க முறை நடைமுறைகளை ஆராய்ந்து கண்டு பிடித்தல் தொடர்பான கணிதப் பிரிவு.

numerical control : எண் முறைக் கட்டுப்பாடு : வரிசையான இலக்கங்களை உட்செலுத்தி குறிப்பாகக் காகித நாடாவில் செலுத்தி, எந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு பொறியமைவு.

numerical control (NC) : எண் கட்டுப்பாடு (என்.சி) : தொடர்ச்சியான எண்களை அனுப்பி பெரும்பாலும் காகித நாடாவில் எந்திரங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு அமைப்பு.

numerical indicator tube : எண் முறைக் குறியீட்டுக் குழாய் : இலக்கங்களைக் காட்சியாகக் காட்டக் கூடிய ஓர் மின்னணு குழாய்.

numeric character : எண் எழுத்து : இலக்கத்தைக் குறிக்கிறது.

numeric coding : எண் குறியீட்டு முறை : தகவல்களையும் அறிவுறுத்தங்களையும் குறிப்பதற்கு எண்களை மட்டுமே பயன்படுத்தும் குறியீட்டு முறை.

numeric constant : எண் மாறிலி : முழு எண்களை அல்லது மெய்ம்மை எண்களை மட்டுமே பயன்படுத்தும் செய்திக் குறிப்பு.

numeric data : எண் முறைத் தகவல்: எண்களை மட்டுமே முழுமையாகக் கொண்ட தகவல்.

numeric keypad : எண்ணியல் விசைத் திண்டு.



எண்ணியல் விசைத் திண்டு
(Numeric Keypad)

numeric pad : எண் பலகை: சில முகப்புகள் கூட்டல் எந்திரங்கள் அல்லது விசை துளைப்பிகள் ஆகியவற்றில் உள்ள எண் விசைகளின் தொகுதி. ஒரு வரியிலோ அல்லது செவ்வகக் கட்டமாகவோ இல்லாமல் ஒரு குழு அமைப்பில் கொடுக்கப்பட்டிருப்பதால் எண் தகவல்களை மிகவும் திறமையாக உள்ளீடு செய்யலாம்.

numeric variables : எண் மாறிகள்.

numeric type variables : எண்வகை மாறிகள்.

numeric portion : எண்ணியல் பகுதி.

numeric width : எண்ணியல் அகற்சி.

O

Oasis : பாலைச்சோலை : பல நுண் கணினியமைவுகளில் பயன்படுத்தப் படும் பல பயனாளர் செயற்பாட்டுப் பொறியமைவு.

obey : பணிந்திணங்கு; கீழ்படி: ஒரு கணினி, தற்போது நிறைவேற்றப் படும் செயல்முறையினை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணை மூலம் குறித்துரைக்கப்படும் ஒரு செயற்பாட்டினை நிறைவேற்றுகிற செய்முறை.

object:பொருள்; இலக்கு; தகவமைவு: உருவாக்குபவருக்கு ஆணைத் தொடர் பொருள்கள் திரும்பப் பயன்படுத்தக் கூடிய குறியீட்டுப் பிரிவுகள். சக்கரத் தினை ஒவ்வொரு முறையும் திரும்பக் கண்டுபிடிக்க வேண்டிய தேவையில்லாததுபோல் முந்தைய வேலையின் புதிய பயன்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவு கின்றவை. இறுதிப் பயனாளருக்கு அவை திரைப் பொருள்கள் (ஐக்கான் கள், கோப்புப் பெயர்கள், விரிதாள் வரிசைகள், சொற்கட்டங்கள் போன் றவை. இவைகளை பொருள்களைப் போன்று கையாள முடியும். சான் றாக ஒரு கோப்பின் பெயரை அச்சுப் பொறி ஐகானுக்கு இழுத்து வந்தால் அக்கோப்பு அச்சிடப்படும்.

object code : இலக்குக் குறியீடு; இயக்கு ஆணை; இலக்குச் சங்கேதம்; இலக்கு நிரல் : ஒரு தொகுப்பானி லிருந்து அல்லது இணைப்பானி லிருந்து வரும் வெளிப்பாடு. இது வும் நிறைவேற்றத்தக்க ஒரு எந்திரக் குறியீடாக அல்லது நிறைவேற்றத் தக்க எந்திரக் குறியீட்டினை மேலும் செய்முறைப்படுத்துவதற்குத் தக்க தாக அமைந்திருக்கும். இதனை 'இலக்குச் செயல்முறை' (object programme) என்றும் கூறுவர்.

object computer : இலக்குக் கணினி : ஓர் இலக்குச் செயல் முறையை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத் தப்படும் கணினி.

object deck : இலக்கு அடுக்கு; இலக்குக் காட்டு : ஓர் ஆதார அடுக்குக்கு இணையான எந்திர மொழியினைக் குறிக்கின்ற துளை யிட்ட அட்டைகளின் தொகுதி.

object desk : பொருள் மேசை : எந்திர மொழியைக் குறிப்பிடும் துளை யிட்ட அட்டைகளின் தொகுதி. ஆதார மேசைக்குச் சமமானது.

object file : இலக்குக் கோப்பு : எந்திரக் குறியீடு அல்லது செயல் படுத்தக்கூடிய கோப்புடன் இணைக் கப்படக்கூடிய குறியீட்டு வரிகள்.

object language (Target Language) : இலக்கு மொழி : ஒரு மொழி பெயர்ப் புச் செய்முறையின் வெளிப்பாடு. பொதுவாக, இலக்குமொழி என்ப தும் எந்திர மொழி என்பதும் ஒன்று தான். இது 'ஆதார மொழி' என்பதற்கு மாறுபட்டது.

object language programming : இலக்கு மொழிச் செயல்முறைப் படுத்துதல்; இலக்கு மொழிச் செயல் முறையாக்கம் : ஒரு குறிப்பிட்ட கணினியில் நிறைவேற்றப்படத்தக்க ஓர் எந்திர மொழியின் செயல் முறை வரைவு.

object machine : பொருள் எந்திரம் : குறிப்பிட்ட பொருள் ஆணைத் தொடரை திரும்பத் திரும்ப செய்யப் பயன்படுத்தப்படும் கணினி.

object modules : காட்சிப் பொருள் தகவமைவு : எந்திர மொழி ஆணைத் தொடர் அல்லது அத்தகைய ஆணைத் தொடரின் ஒரு பகுதி. இது ஒரு சேர்ப்பி அல்லது தொகுப்பியி லிருந்து வெளியீடாக வந்து, செயல்

படுத்தப்படும் முன்பு இணைப்பு தொகுப்பாளரால் செயலாக்கப் படுவது.

object oriented : பொருள் சார்ந்த ; பொருள் பொருட்டு.

object oriented language : பொருள் நோக்கம் சார்ந்த மொழி : பொருள் நோக்கம் சார்ந்த ஆணைத் தொடர் மொழி. தகவல் செயலாக்கப் பணி களுக்குப்பொருள்களை உருவாக்கிப் பயன்படுத்தும் ஆணைத்தொடர் மொழி.

object oriented programming : பொருள்சார்ந்த செயல்முறை வரைவு : தகவல் பொருள்களின் ஒரு தொகுதியை மையமாகக் கொண் டுள்ள செயல்முறைப்படுத்தும் அணுகு முறை. இது, தகவலுக்கும் குறியீட்டுக்கும் வெவ்வேறு அணுகு முறையைக் கையாளும்.

object programme : இலக்குச் செயல் முறை : கணினியில் இயங்குவதற்கு ஆயத்தமாக, கணினியிலிருந்து அல்லது இணைப்பானிலிருந்து வெளிப்படும் ஆணைகள். இதனை இலக்குக் குறியீடு என்றும் கூறுவர். இது ஆதாரச் செயல் முறைக்கு மாறுபட்டது.

objective-C : இயக்கு-சி : பி.சி.க் களிலும் பிரபல பணி நிலையங் களிலும் இயங்கும் ஸ்டெப்ஸ்டோன் கார்ப்பரேஷன் உருவாக்கிய நோக் கம் சார்ந்த சி-ஆணைத்தொடர் மொழி. சி மொழியின் முதல் வணிக நோக்கிலான பொருள் சார்ந்த விரி வாக்கம் இதுதான்.

objectives : இலக்குகள் : ஒரு அமைப்பு சாதிக்க வேண்டிய செயல் திட்டங்கள்.

object-oriented analysis : பொருள் சார்ந்த ஆய்வு : ஒரு பிரச்சினையை ஒன்றோடொன்று தொடர்புடைய பொருள்களின் குழுவாக மாதிரி அமைத்து சோதனை செய்தல். ஒரு பொருளை அதன் வகுப்பு தகவல், பொருள்கள் மற்றும் நடத்தையை வைத்து வரையறை செய்யப்படும்.

object-oriented database : பொருள் சார்ந்த தகவல் தளம் : தெளிவற்ற தகவல் வகைகளை (பொருள்கள்) வைத்திருக்கின்ற தகவல் தளம். ஒரு பொருள் சார்ந்த ஆணைத் தொடர் மொழியிலிருந்து பொருள்களை அது நேரடியாக சேமிக்க முடியும். எந்த வகையான தகவலும் சேமிக்கப்பட லாம். தகவல்களை செயலாக்கம் செய்வதற்கான விதிகள் அப்பொருளி லேயே சேர்க்கப்பட்டிருக்கும் - என்ப தால் பொருள் சார்பு தகவல்தளங்கள் தகவல், சொற்கள், படங்கள், குரல் போன்ற எண்ணற்ற வகைப் பொருள் களை வைத்திருந்து அவற்றை எந்த வடிவிலும் மாற்றித்தர வல்லது.

object-oriented DBMS : பொருள் சார்ந்த டி.பி.எம்.எஸ் : பொருள் சார்ந்த தகவல் தளத்தினை சமாளிக்கும் டி.பி.எம்.எஸ். தொடர்புடைய தகவல் தள ஆணைத்தொடர்களில் செய்வதற்கு அரிதான, பொருள் களைப் பற்றிய சிக்கலான கேள்வி களையும் இது எளிதாகக் கையாளும்.

object-oriented design : பொருள் சார்ந்த வடிவமைப்பு : பொருள் சார்ந்த மாதிரி ஒன்றை அதனை உருவாக்கும் அமைப்புக்குத் தேவையான விளக் கக் குறிப்புகள் கொண்டதாக மாற்று தல். நோக்கம்-சார்ந்த ஆய்விலிருந்து பொருள் சார்ந்த வடிவமைப்புக்கு மாறுவது, அந்த மாதிரியமைப்பை விரிவாக்கி மேலும் மேலும் விவரம் சேர்ப்பதன் மூலம் செய்து முடிக்கப் படுகிறது.

object-oriented graphics : பொருள் சார்ந்த வரைகலை.

object-oriented interface : பொருள்-சார்ந்த இடைமுகம் : ஐக்கான்கள், சுட்டி போன்றவற்றைப் பயன் படுத்துகின்ற வரைகலை இடை முகம். மெக்கின்டோஷ், விண்டோஸ் போன்ற பணிச் சூழல்களை இவ்வாறு கூறலாம்.

object-oriented technology : பொருள் -சார்ந்த தொழில் நுட்பம் : உலக நடைமுறைகளாகப் பார்க்காமல் பொருள்களாகப் பார்க்கின்ற வாய் பாடு.

object vision : ஆப்ஜெக்ட் விஷன்; இலக்குப் பார்வை : விண்டோஸ் பயன்பாடுகளுக்காக போர்லேண்ட் நிறுவனம் உருவாக்கும் பயன்பாட்டு வளர்ச்சி அமைப்பு. பயனாளர் இடைமுக வடிவமைப்புக்காகவும் ஆணைத்தொடர் அளவைக்காகவும் ஒளி நுட்பத்தைப் பயன்படுத்து கிறது. விரிதாள்கள் மற்றும் தகவல் தளங்களுக்கு இணைப்புகளை ஏற்படுத்தித் தருகிறது.

object windows : ஆப்ஜெக்ட் விண் டோஸ்; இலக்கச் சாளரம்: விண் டோஸ் பொருள்களின் வகுப்பு நூலகம். போர் லேண்ட் நிறுவனம் உருவாக்கிய இது, விண்டோஸ் பயன்பாடுகளை உருவாக்க உதவு கிறது. போர்லேண்ட் மற்றும் நோக்க மேலாண்மைக் குழு உருவாக்கிய திறந்த தர நிருணய முறை.

obsolescence : பயனற்றது; காலம் கடந்தது : வன்பொருள் அல்லது மென்பொருள்களை உரிய காலத் துக்கு முன்னதாகவே மாற்றுவதைக் குறிப்பது. வழக்கமாகப் பயன் படுத்தி தேய்ந்து பழுதாவதைக் குறிப் பதல்ல. தொழில் நுட்ப முன்னேற் றங்களின் விளைவாக சமீபத்திய பொருள்கள் வருவதால் இவற்றை மாற்ற வேண்டியதாகியுள்ளது.

occam : ஓசிசிஏஎம் : ஒரே நேரத்திய இயக்கங்களைக் கையாளப் பயன் படுத்தப்படும் இணை செயலாக்க மொழி.

OCR : ஓசிஆர் : 'ஒளியியல் எழுத் தேற்பு' என்று பொருள்படும் "Optical Character Recognition என்ற ஆங்கிலச் சொற்றொடரின் குறும்பெயர்.

octal dump : எட்டியல் சேமிப்பு.

octal number systems : எட்டியல் எண்மான முறை.

octal numeral : எட்டியல் இலக்கம்; எண்ம இலக்கம்; எண்ம உரு : ஒரு தொகையினைக் குறிக்கின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இலக்கங் கள் கொண்ட எண். இதில் ஒவ் வொரு இலக்கமும் குறிப்பிடும் எண்ணளவு '8' என்னும் மூலத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். எட்டியல் எண்களில் பயன்படுத்தப் படும் இலக்கங்கள், *0, 1, 2, 3, 4, 5, 6, 7.*

octal: எட்டியல்; எண்ம; எண்ணிலை; எட்டு என்னும் இலக்கத்தை அடிப் படையாகக் கொண்ட ஒரு எண்மான முறை. இந்த எட்டியல் இலக்கங்கள் பெரும்பாலும் ஈரிலக்க எண்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இதில், ஒவ்வொரு எட்டியல் இலக்க மும் மூன்று ஈரிலக்க இலக்கங்களின் (துண்மிகள்) ஒரு தொகுதியைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டு: *111000010001101* என்னும் ஈரிலக்க எண்ணை, *70215* என்னும் எட்டியல் எண்ணாகக் குறித்துக் காட்டலாம். ஈரிலக்க எண்ணை எட்டியல் எண்ணாக மாற்றலாம்.

octal point : எட்டியல் புள்ளி ; எண்மப் புள்ளி : ஒரு கலப்பு எட்டியல்

எண்ணில் முழு எண் பகுதியைப் பின்னப் பகுதியிலிருந்து பிரித்துக் காட்டும் மூலப்புள்ளி. 72.24 என்ற எட்டியல் எண்ணில் எட்டியல் புள்ளி இரு எண்களுக்குமிடையில் உள்ளது.

octet : எட்டியல் : எட்டுத் துண்மி களைக் (bits) கொண்ட எட்டில்.

odd pariy check : ஒற்றைப்படைச் சரிபார்க்கும் முறை.

odometer : ஓடோ மீட்டர் : தூர இடை வெளியைப் பதிவு செய்யும் ஒரு கருவி. சைக்கிள் மோட்டார் வாகனங் களில் பயன்படுவது.

OEM : ஓஇஎம் : 'மூலச் சாதனத் தயாரிப்பாளர்' என்று பொருள்படும் "Original Equipment Manufacturer" நிறுவனத்தின் குறும் பெயர். இந்த அமைவனம் பொருள்களிலும் சாத னங்களிலும் அமைப்பிகளாகப் பயன் படுத்துவதற்காகக் கணினிகளையும், புறநிலைச் சாதனங்களையும் வாங்கி, அவற்றைத் தனது வாடிக்கையாளர் களுக்கு விற்பனை செய்கிறது.

off : விடுப்பு; நிறுத்து.

office automation : அலுவலகத் தானி யக்கம்; அலுவலகத் தன்னியக்கம் : எழுத்தர் மற்றும் மேலாண்மை அலுவலகப் பணியாளர்களின் ஆக்கத் திறனை மேம்படுத்துவதற் குக் கணினிகளையும் செய்தித் தொடர்புத் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துதல்.

office computer: அலுவலகக் கணினி: ஓர் அலுவலகத்தில் பயன்படுத்து வதற்கான ஒரு நுண் கணினியமைவு. குறிப்பிட்ட அலுவலகப் பணிகளுக் காகத் தயாரிக்கப்பட்டுள்ள வட்டு அலகுகள், அச்சடிப்பி, மென் பொருள் போன்றவை இதில் உள்ளடங்கும்.

off-hook : கொக்கிக்கு வெளியே : சுழற்றி, வெளியே பேசக்கூடிய தொலைபேசிக் கம்பியின் நிலை. உள்ளே வரும் தொலைபேசி அழைப் பை ஏற்று பதில் பேச தடை செய்கிறது. தொலைபேசி உருவான காலத்தில் கைக்கருவியை கொக்கியி லிருந்து வெளியே எடுத்து பேசிய தைக் கொண்டு இச்சொல் உரு வானது. on-hook என்பதற்கு எதிர்ச் சொல்.

office information system : அலுவல கத்தகவல் பொறியமைவு; அலுவலகத் தகவல் அமைப்பு: சொல் செய் முறைப்படுத்திகள் வரை கலை முனைய அச்சடிப்பிகள். கணினி யமைவு போன்ற பல்வேறு தகவல் குறிப்புப் பதிவு முனையங்கள் உள்ளடங்கிய பொறியமைவு.

office of the future : வருங்கால அலு வலகம் : கணினி தகவல் செய்தித் தொடர்பு முறைகள் பிற மின்னணு வியல் தொழில் நுட்பங்கள் ஆகிய வற்றைப் பெருமளவில் பயன்படுத் தும் எதிர்கால அலுவலகம். இத் தகைய அலுவலகத்தில் பெரும் பாலான எழுத்தர் செயலக செய்தித் தொடர்புப் பணிகள் தானியக்க முறையில் நடைபெறும்.

office support systems : அலுவலக ஆதரவு அமைப்புகள் : பலதரப்பட்ட கணினி ஆதரவு சேவைகளை ஒருங் கிணைக்கும் அலுவலக தானியங்கி அமைப்புகள். மேசை அச்சு இணைப் புகள் மின்னணு அஞ்சல் மற்றும் மின்னணு பணி மேலாண்மை ஆகிய வற்றை உள்ளடக்கியது.

office vision : ஆஃபீஸ் விஷன்; அலு வலகப் பார்வை : எல்லா ஐ.பி.எம். குடும்பக் கணினிகளிலும் செயல்படு கின்ற ஒருங்கிணைந்த அலுவலக தானியங்கிப் பயன்பாடுகள்.

எஸ்ஏஏ. வினை பேரளவில் அமல் படுத்துவதில் அதுவே முதல் முயற்சி. பிரசன்டேஷன் மேனேஜரை அது உள்ளடக்கியது. 1989இல் அறிமுகப் படுத்தப்பட்ட இதில் மின்-அஞ்சல், பட்டியலிடல், ஆவண உருவாக்கம் மற்றும் விநியோகம் ஆகியவற் றுடன் முடிவெடுக்க ஆதரவு, வரை கலை பயன்பாடுகளும் அனைத்துப் பயனாளருக்கும் கிடைக்கும்.

offline : மறைமுகமாக; நேர் தொடர் பிலா ; உடனடியற்ற முறை ; பின் தொடர் : ஒரு கணினியின் மையச் செயல்முறை அலகுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிராத கருவிகள், சாதனங்கள், ஆட்கள் பற்றியது. கணினியுடன் இணைக்கப்பட்டிராத சாதனம் பற்றியதுமாகும். இது 'நேரடியாக' (on-line) என்பதற்கு மறுதலை.

offline processing : பின் தொடரும் செயலாக்கம்.

offline storage : மறைமுக சேமிப்பி; இணையா சேமிப்பகம் : மையச் செயலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்காத சேமிப்பி.

offload : பளு இறக்கம்; இறக்குதல் : 1. ஒரு கணினியமைவின் பணிகளைச் சற்றுக் குறைந்த வேலைப் பளுவுள்ள மற்றொரு கணினிக்கு மாற்றுதல். 2. வெளிப்பாட்டுத் தகவல்களை ஒரு புறநிலைச் சாதனத்திற்கு மாற்றுதல்.

offpage connector : மறுபக்க இணைப்பி; பக்க இணைப்பி : ஒரு தட வரிசை விளக்கப் படத்தில் ஒரு பக்கத்திலிருந்து மாறுபட்ட மற் றொரு பக்கத்திற்கு ஒரு தொடர் வரிசையை இணைப்பதற்குப் பயன் படுத்தப்படும் ஐங்கோணக் குறியீடு.

off screen formatting : திரையில் முறைப்படுத்துதல்.

offset : எதிரீடு / குறை நிரப்பீடு; விலக்கம் : தேவைப்படும் மதிப்பு அல்லது நிலைமைக்கும், உள்ளபடி யாக மதிப்பு அல்லது நிலைமைக்கும் இடையிலான வேறுபாடு.

off state : விடுப்பு நிலை.

off-the-shelf : ஆயத்தப் பொருள்கள்; உடன் பயன் பொருள்கள்; ஆயத்த : விற்பனையாளர்களிடமிருந்து எளி தாகக் கிடைக்கக் கூடிய, மிகப் பெரு மளவில் தயாரிக்கப்பட்ட கணினி வன்பொருள் அல்லது மென் பொருள்கள் பற்றியது.

ohnosecond : ஓனோநொடி : தவறான ஆணையைக் கொடுப்பதற்கும், அந்த ஆணையினால் படுமோசமான விளைவுகள் ஏற்படும் என்று உணர் வதற்கும் இடையில் கழியும் நேரம். மிக மிகக் குறைவான நேரம்.

omni directional : பல திசையிலான : எல்லா திசைகளிலும் சான்றாக, பல திசையிலான வானலை வாங்கி (antenna) எல்லா திசைகளில் இருந்தும் சமிக்ஞைகளை ஏற்றுக் கொள்ளும்.

Omni Page : ஆம்னி பேஜ் : கேயர் கார்ப்பரேஷனிடமிருந்து பி.சி. மற்றும் மெக்கின்டோஷுக்காக உரு வாக்கப்பட்ட எழுத்து உணர் மென் பொருள். சொற்பகுதியிலிருந்து வரைகலையைப் பிரித்துப் பார்க்க வும் பலவகையான அச்செழுத்து களை சொற்பகுதியாக மாற்றித் தர வும் திறனுள்ள முதல் பி.சி. மென் பொருள்.

OMR : ஓஎம்ஆர்: ஒளி வழிக் குறி உணர்விப்பி : Optical Mark Reader என்பதன் குறும்பெயர்.

on-board computer : ஊர்திக் கணினி: விண்வெளிக்கலம், உந்து ஊர்தி,

கப்பல், விமானம் போன்ற ஓர் ஊர்தி யில் நிறுவப்பட்டுள்ள கணினி.

on-board regulation : பலகை ஒழுங்கு முறை; பலகைச் சீராக்கம் : ஒவ்வொரு பலகையிலும் தனி மின் வலியளவு ஒழுங்கியக்கியைக் கொண்டுள்ள அமைப்பு முறை.

one-address computer : ஒரு முகவரிக் கணினி : தனது ஆணைப் படிவமைப் பில் ஒரேயொரு முகவரியை மட்டுமே பயன்படுத்தும் கணினி. எடுத்துக்காட்டு: 'ADD x' என்பதில் அறிவுறுத்தத்திலுள்ள முகவரியை 'x' குறிக்கிறது. இது இருமுகவரிக் கணினி, மூன்று முகவரிக் கணினி ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது. இதனை நான்கு முகவரிக் கணினி யுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

one-address instruction : ஒரு முகவரி அறிவுறுத்தம் : ஒரு ஆணையும் ஒரே யொரு முகவரியையும் கொண்டுள்ள ஆணை. சில தனி நேர்வுகளில், ஓர் ஒற்றை முகவரிக் கணினியின் ஆணைக் குறியீடானது, சுழி (பூஜ் யம்), பன்முக முகவரி ஆணைகள் இரண்டையும் கொண்டிருக்கும். இன்றுள்ள கணினிகளில் பெரும் பாலானவை ஒரு முகவரி ஆணை யைக் கொண்டவை.

one-chip computer : ஒரு சிப்புக் கணினி : ஒரேயொரு சிப்பில் இயக் கப்படுகிற முழுமையான நுண் கணினி. இது 'சிப்பு இயக்கக் கணினி' என்றும் அழைக்கப்படு கிறது.

one-dimensional array : ஒற்றைப் பரிமாண வரிசை : மின்வாய்க் கம்பி களின் ஒற்றை வரிசையை அல்லது பத்தியைக் கொண்ட வரிசை முறை.

one for-one : ஒன்றுக்கு ஒன்று : சேர்ப் பியுடன் பெரும்பாலும் இணைத்துக் கூறும் சொற்றொடர். ஒரு மூல மொழி சொற்றொடர் வேறொரு எந்திரமொழி ஆணையாக மாற்றப் படும். கடிதப் போக்குவரத்தில் அதிகமாகப் பயன்படும் வகை.

one-level memory : ஒரு நிலை நினை வகம் : ஒரே மாதிரியான செயல் முறை மூலம் சேமித்து வைக்கப் பட்டுள்ள இனங்கள் அனைத்தையும் அணுகக்கூடிய நினைவகம்.

one line function : ஒரு வரிச் செயல்கூறு.

one-out-of-ten-code : 'பத்தில் ஒன்று' குறியீடு : இந்தக் குறியீட்டு முறை யில், ஒரு பதின்ம இலக்கமானது 10 இரும இலக்கங்களால் குறிக்கப் படுகிறது; இவற்றில் 10 இரும இலக்கங்களில் ஒரேயொரு இலக்கம் மட்டுமே 'ஒன்று' இலக்கமாக இருக்கும்.

one-pass compiler : ஒற்றை ஓட்டத் தொகுப்பி : ஒரே சமயத்தில் ஓர் ஆதார மொழிச் செயல் முறையில் ஓடி, ஓர் இலக்குத் தகவமைவை உண்டாக் கும் மொழிச் செயல் முறைப்படுத்தி.

one's complement : ஒன்றின் குறை நிரப்பு எண் : ஒரு குறிப்பிட்ட மதிப் பின் மறிநிலை எண்ணைக் குறிக்கும் இலக்கம். ஒன்றின் குறை நிரப்பு எண் என்பது ஓர் இரும இலக்கமாகும். இது அந்த இலக்கத்திலுள்ள ஒவ் வொரு துணுக்கின் துணுக்கு வரிசை முறையை மாற்றுவதன் மூலம் பெறப்படுகிறது. எடுத்துக் காட்டு: 01100101 என்பது 10011010 என்ற ஈரிலக்கத்தின் ஒன்றின் குறைநிரப்பு எண். இரண்டின் குறை நிரப்பு எண், ஒன்பதின் குறை நிரப்பு எண், பத்தின் குறைநிரப்பு எண் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்திடுக.

ongoing activity: நடப்பு/நடவடிக்கை.

online : நேரடியாக; உடனடி முறை; உடன் நிகழ்வு : ஒரு கணினியின் மையச் செயலகத்துடன் நேரடித் தொடர்புடைய கருவிகள் , சாதனங்கள், ஆட்கள் பற்றியது. கணினியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள சாதனம் பற்றியதாகும். இது ''மறைமுகமாக'' (offline) என்பதற்கு மறுதலை.

online application : நேரடிப் பயன்பாடுகள்.

online database : நேரடித் தகவல் தளம்; உடன் நிகழ் தகவல் தளம் : ஒரு முனையத்தில் பெரும்பாலும் ஒரு காட்சிச் சாதனத்தில் - ஒரு பயனாளர் நேரடியாக அணுகக் கூடிய தகவல் தளம்.

online fault-tolerant system : நேரடிப் பிழைதாங்கு பொறியமைவு; உடனடி பிழை பொறுதி அமைப்பு : மென்பொருள் பிழைகள் இருந்த போதிலும் சரியாகச் செயற்படுகிறவாறு வடிவமைக்கப்பட்ட கணினியமைவு.

online help : நேர்முக உதவி : திரையில் வரும் ஆணை. ஆணைத் தொடரின் உள்ளே இருந்து உடனடியாக வருவது.

online problem solving : நேரடிச் சிக்கல் தீர்வு ; உடனடிச் சிக்கல் தீர்வு : ஒரு கணினியமைவினைப் பல பயனாளர் சேய்மை முனையங்களிலிருந்து ஒரே சமயத்தில் பயன்படுத்துகையில் சிக்கல்களை நேரடியாகத் தீர்ப்பதற்கான தொலைச் செய்முறைப் பயன்பாடு. இத்தகைய பயன்பாட்டில் ஒரு சேய்மை முனையத்தில் பயன்படுத்துவோருக்கும் ஒரு மையக் கணினியமைவுக்கும் உள்ள ஒரு செயல்முறைக்குமிடையில் ஒரு பரிமாற்றம் அல்லது உரையாடல் நடைபெறுகிறது.

online processing : உடன் நிகழ் செயலாக்கம்.

online storage : நேரடிச் சேமிப்பகம்: மையச் செயலகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சேமிப்பகம்.

online service : உடன் நிகழ் பணி.

on the fly : பறந்து கொண்டே : தேவைப்படும் போதெல்லாம் பெரும்பாலும் பயனாளர் தலையிடாமல் பணி செய்வது. பணியினை முடிப்பதிலான செயல்திறனில் எந்த வித பின்னடைவும் இருக்காது என்பதை உணர்த்துவது.

on-board : தன்னமைவு : 'தரமான' கணினி மாதிரியின் ஒரு பகுதியாக ஒரு குறிப்பிட்ட வன்பொருள் சாதனத்தைச் சேர்ப்பதைக் குறிப்பிடுவது. சான்றாக, ''ஐபிஎம் ராம்-ஆன் போர்டு'' என்றால் இந்த அளவு ராம் குறிப்பிட்ட மாடல் கணினியில் தரமானதாக சேர்க்கப்பட்டுள்ளது என்று பொருள். 'ஆன்-போர்டு' என்ற சொல் ஒரு குறிப்பிட்ட மின்சுற்று தாய் அட்டையில் உள்ளது என்பதையும் குறிப்பிடுகிறது.

on-hook : கொக்கி மீது : வருகின்ற தொலைபேசி அழைப்புகளைப் பெறுகின்ற ஒரு தொலைபேசிக் கம்பி. off-hook என்பதற்கு மாறானது.

onion diagram : வெங்காய வரைபடம்: ஒரு அமைப்பினை வரைபட முறையில் குறிப்பிடுவது. குழி வட்டங்களாகக் காட்டப்படுகிறது. வட்டத்தின் உள்ளே வட்டங்களாக அமைத்து, இறுதி உள் வட்டமே மையமாகும். மற்ற வெளி வட்டங்கள் அதைச் சார்ந்து இருப்பவை.

on-screen pasteup : திரையில் ஒட்டு: கணினி முகப்பின் அமைப்புப் படம்.

on state : தொகுப்பு நிலை.

ontime application : நேரடிப் பயன்பாடு.

on screening promotting : திரையில் முறைப்படுத்தல்.

OP : ஓபி : operation code இயக்கம். "செயற்பாடு" என்று பொருள்படும் "operation" என்னும் ஆங்கிலச் சொல்லின் குறும்பெயர்.

opacity : ஒளிபுகாத் தன்மை : ஒரு காகிதப் பரப்பின் வழியே ஒளி ஊடுருவி அதில் உருக்காட்சி கடக்காத நிலை.

Opel, John : ஓப்பல், ஜான் : 'பன்னாட்டு வணிக எந்திரக் கழகம்' (International Machines Corporation - IBM) என்ற அமைவனத்தை, 1981இல் நுண்கணினி வணிக அமைவனமாக மாற்றியவர். இவருடைய தலைமையில், இந்த அமைவனம் 'IBM சொந்தக் கணினி' (IBM Personal Computer) என்ற நுண்கணினியை உருவாக்கியது.

open : திறப்பு நிலை ; தொடங்கு நிலை: ஒரு கோப்பில் அல்லது ஆவணத்தில் பணிபுரியத் தொடங்குவதற்கான செய்முறை.

open access : திறந்த அணுகு முறை : 'சாஃப்வேர் புராடக்ட்ஸ் இன்டர் நேஷனல்' நிறுவனத்தின் டிரேட் மார்க்.

open architecture : வெளிப்படை கட்டமைப்பு ; திறந்த கட்டமைப்பு : ஒரு அமைப்பின் விளக்கக் குறிப்புகள் வெளிப்படையாகக் குறிப்பிடப் படுவது. தனியார் விற்பனையாளர்கள் கூடுதல் பொருள்களை உருவாக்க இதன் மூலம் ஊக்குவிக்கப்படுகிறது.

open ended : திறந்த நிலையான ; திறந்த முனையுடைய : மூலப் பொறியமைவைப் பாதிக்காமல் புதிய செயல்முறைகள், ஆணைகள், துணை வாலாயங்கள், மாற்றமைவுகள், வகைப்பாடுகள், வரையீடுகள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலை.

open file : திறந்தநிலைக் கோப்பு; திறந்த கோப்பு : படிப்பதற்கு எழுதுவதற்கு அல்லது இரண்டுக்கும் அணுகத் தக்க கோப்பு. இது மூடிய கோப்பிலிருந்து (closed file) வேறுபட்டது.

opening menu : திறப்புக் கட்டளைப் பட்டியல்.

open loop : திறந்த வட்டம்; திறந்த வளையம் : செயலாக்கக் கட்டுப்பாடு அல்லது வழங்கு எந்திர அமைப்பில் மூத்த அல்லது கட்டுப்பாட்டுக் கருவியின் வேண்டுகோளுக்கு ஏற்ப ஒரு செய்தியைக் கணினி அச்சிடும் அமைப்பு.

open plan : வெளிப்படை திட்டம் : தனி அலுவலகங்களாக உருவாக்குகின்ற உட்பகுதிச் சுவர்கள் அதிகம் இல்லாமல் உருவாக்கப்படுகின்ற அலுவலக வடிவமைப்பு. தடுப்புகள் மற்றும் அலுவலக ஃபர்னிச்சர்களைப் பயன்படுத்தி பணி இடங்கள் உருவாக்கம்.

open shop : திறந்த நிலைக் களம் : ஒரு கணினி வசதியின் செயற்பாடு. இதில் பெரும்பாலான ஆக்கமுறைச் சிக்கல் செயல்முறைப்படுத்துதல்களும் ஒவ்வொரு செயல்முறைப் படுத்தும் வல்லுநர் குழுமத்தினால் அல்லாமல் ஒவ்வொரு சிக்கல் ஒழுங்கியக்குநரால் செய்யப்படு

கிறது. இது 'முடிவுற்ற களம்' (closed shop) என்பதற்கு மாறுபட்டது.

open subroutine : திறந்த நிலைத் துணை வாலாயம், திறந்த துணை வழமை : ஒரு வாலாயத்தில் அது பயன்படுத்தப்படும் ஒவ்வொரு இடத்திலும் புகுத்தப்படும் துணை வாலாயம். இது முடிவுற்ற வாலாயத் திலிருந்து (closed routine) வேறு பட்டது.

open system : திறந்த அமைப்பு : பல தரப்பட்ட பொருள்களுடன் இடை யிணைக்கப்படுகின்ற வகையில் வடி வமைக்கப்படும் விற்பனையாளர் தொடர்பில்லாத அமைவு. ஒன்று அல்லது இரண்டு விற்பனையாளருக் காக அல்லாமல் ஆர்வமுள்ளவர்கள் ஒருமித்து தர நிருணயங்கள் உருவாக் கப்படுகின்றன.

operand : இயக்கப்படும் எண் ; செயப் படு பொருள்; செயலேற்பி : செயற் பாட்டுக்குள்ளாகும் தகவல் அல்லது சாதன இனம். இது, ஓர் கட்டளை யில் ஒரு முகவர் மூலம் அடையாளங் காணப்படுகிறது. எடுத்துக்காட்டு: ADD 100 to 400 என்பதில், "100", "400" இரண்டும் இயக்கப்படு எண்கள்.

operand addresses : இயக்கப்படு எண் முகவரிகள்.

operate : செய்முறையை இயக்கு ; இயக்கு.

operating environment package : செயற்பாட்டுச் சூழ்நிலை இயக்கம் : இறுதிப் பயனாளர்கள் இயக்க அமைப்பு மற்றும் அவற்றின் பயன் பாட்டு ஆணைத் தொடர்களுக்கிடை யில் வரைகலை சார்ந்த இடை முகத்தை உருவாக்கும் மென் பொருள் பொதிவுகள் அல்லது பல் பணியாற்றும் திறனும் அளிக்கப் படும்.

operating ratio : இயங்கு நேர விகிதம்.

operating system : (OS) : செயற்படு பொறியமைவு ; இயக்க முறைமை; செயலாக்க ஆணைத் தொகை; இயக்கக் கட்டளை அமைப்பு : கணினிச் செயல் முறைகளை நிறைவேற்றுகிற மென் பொருள். இதில் அட்டவணைப் படுத்துதல், தவறு கண்டறிதல், உட்பாட்டு, வெளிப்பாட்டுக் கட்டுப் பாடு, கணக்கீடு, தொகுப்பீடு, சேமிப் பகம் குறித்தளிப்பு, தகவல் மேலாண்மை போன்ற பணிகள் அடங்கும்.

operation : செயற்பாடு; செய்முறை செயலாக்கம் ; செயற்பாடு; இயக்கம் : 1. வரையறுக்கப்பட்ட ஒரு நட வடிக்கை. 2. தனியொரு கணினி ஆணை அல்லது உயர்நிலை மொழி கட்டளை மூலமாகக் குறித்துரைக் கப்படும் நடவடிக்கை. சுருக்கம் ஒபி (op).

operation analysis : செயற்பாட்டுப் பகுப்பாய்வு.

operation center : செயற்பாட்டு மையம்; செயலாக்கப் பகுப்பாய்வு : ஒரு கணினி வாயிலாகத் தகவல் களைச் செய்முறைப்படுத்துவதற் கும் தேவையான வெளிப்பாட் டினைக் கொணர்வதற்கும் தேவைப் படும் ஆட்களையும் சாதன வசதி களையும் கொண்டிருக்கிற இடப் பரப்பு.

operation code : செயற்பாட்டுக் குறியீடு : ஒரு கணினி நிறைவேற்ற வேண்டிய செயற்பாட்டினைக் குறித் துரைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆணைக் குறியீடு.

operational feasibility : இயக்க வாய்ப் பறிதல் : உருவாக்கப்படும் (கணினி)

அமைப்பை ஆதரித்து பயன்படுத்தி இயக்கும் விற்பனையாளர்களின் திறம் மற்றும் நிர்வாகம், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரின் விருப்பமும் திறனும்.

operation personal : செயலாக்கக் குழுமம்.

operation research : செயற்பாட்டு ஆய்வியல்.

operational management : செயற்பாட்டு மேலாண்மை : விவரங்களைச் செயற்படுத்துவதற்குப் பொறுப்பான மேற்பார்வையாளர்கள் அல்லது தலைவர்கள் மற்றும் அவற்றைச் செய்கிற அலுவலர்கள்.

operation on data : தகவல் செயலாக்கம்.

operations analysis : செயற்பாட்டுப் பகுப்பாய்வு : செயற்பாட்டு ஆராய்ச்சி.

operations information system : செயலாக்கங்களின் செய்தித் தகவல் அமைப்பு : ஒரு நிறுவனத்தின் செயலாக்க அமைப்புகள் உருவாக்கும் செய்தி தகவல்களைத் திரட்டி செயலாக்கி சேமிக்கும் செய்தி தகவல் அமைப்பு. மேலாண்மை செய்தி தகவல் அமைப்புக்காகவோ அல்லது ஒரு செயலாக்க அமைப்புக்காகவோ தகவலை உள்ளீடு செய்தல்.

operations personnel : செயற்பாட்டாளர்கள் : கணினி மையத்தில் கணினிச் சாதனத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள். இவர்கள் பொறியமைவுகளுக்கு விசையூட்டுகிறவர்கள்; செயல்முறைகளை ஏற்றுகிறார்கள்; செயல்முறைகளை இயக்குகிறார்கள்; சாதனங்களின் தவறான செயற்பணிகளை அறிவிக்கிறார்கள்.

operations research : செயற்பாட்டு ஆராய்ச்சி : சிக்கலான செயற்பாடுகளை பெரும அளவுத் திறம்பாட்டுடன் நிறைவேற்றுவதற்கு வழி செய்யும் கணித அறிவியல். ஒருபடிச் செயல்முறைப்படுத்துதல், நிகழ்தகவுக் கோட்பாடு, தகவல் கோட்பாடு, விளையாட்டுக் கோட்பாடு, மான்டிகார்லோ முறை, வரிசை முறைக் கோட்பாடு போன்ற அறிவியல் உத்திகள் இதில் அடங்கும்.

operator : இயக்கர் ; செய்முறைக்குறி: 1. இயக்கப்படும் எண்களின் மீது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையைக் குறித்துக் காட்டுகிற ஒரு செய்முறை. 2. ஓர் எந்திரத்தை இயக்குகிற ஆள்.

optacon : ஆப்டாக்கோன் : கண் பார்வையற்றவர்கள் "படிப்பதற்கு" உதவும் ஒரு சாதனத்தின் வணிகப் பெயர். இது ஓர் ஒளிக்கற்றையிலிருந்து வரும் துடிப்புகளை எழுத்துகளின் வடிவங்களாக மாற்றுகிறது. பார்வையற்றவர்கள் எழுத்துகளைத் தடவிப் பார்த்துப் படிக்கலாம்.

optical character : ஒளியியல் எழுத்து; ஒளியியல் உரு : ஓர் ஒளியியல் எழுத்துப் படிப்பி மூலம் படிக்கக் கூடிய ஒரு தனி வகை எழுத்து.

optical character recognition : ஒளியியல் எழுத்தேற்பு : தகவல் செய்முறைப்படுத்தும் தொழில் நுட்பம். இது மனிதர் படிக்கக்கூடிய தகவலை ஒரு தனிவகை ஒளியியல் எழுத்தேற்பியிலுள்ள மற்றொரு ஊடகத்தில் கணினி உட்பாட்டுக்காக மாற்றுகிறது. எழுத்துகளிலிருந்து பிரதிபலிக்கும் ஒளியை ஒளியியல் எழுத்தேற்புச் சாதனம் அடையாளங் கண்டு கொள்கிறது.

optical character reader : ஒளியியல் எழுத்துப் படிப்பி; ஒளியியல் உரு

படிப்பி : அச்சிட்ட ஆவணத்தை உட்பாடாக ஏற்றுக்கொண்டு அவற்றின் உருவமைப்பைக் கொண்டு எழுத்துகளை அடையாளங்காட்டக் கூடிய உட்பாட்டுச் சாதனம்.

optical communication : ஒளியியல் செய்தித் தொடர்புகள்; ஒளியியல் தொடர்புகள் : தகவல்கள், படங்கள், உரைகள், பிற செய்திகள் ஆகியவற்றை ஒளி மூலம் அனுப்புதல். அனுப்பீட்டுக் கருவியிலிருந்து புறப்படும் ஒளியலைக் குறியீட்டினைத் தாங்கிச் செல்லும் ஒரு தகவல், ஓர் ஒளியியல் கால்வழியே சென்று, ஓர் அலை வாங்கியில் நுழைகிறது. அந்த அலை வாங்கி, மூலத் தகவலை மறு கட்டமைப்புச் செய்கிறது. ஒளியியல் இழைகள், லேசர்கள் ஆகியவை இந்தத் தொழில் நுட்பத்தில் அடங்கியுள்ளன. இவை தகவல் அனுப்பீட்டுத் திறம்பாட்டினை பெரும் அளவுக்கு உயர்த்த உதவுகின்றன.

optical computer : ஒளிக் கணினி : செய்திகளைச் செயலாக்க கம்பிகளுக்குப் பதிலாக லேசர் ஒளிக் கற்றைகளைப் பயன்படுத்தும் ஒரு வகைக் கணினி. இன்னும் இது பரிசோதனையில் மட்டுமே உள்ளது. மரபு வழியிலான கம்பியிணைப்பு கணினிகளை விட இது மிகவும் வேகமாக வேலை செய்கிறது.

optical disk : ஒளியியல் வட்டு: ஒளி வட்டு.

optical fiber : ஒளியியல் இழை; ஒளியிழை : மின்னியல் அனுப்பீட்டு கம்பி வடம். இது மிக உயர்ந்த அளவு ஒளி ஊடுருவக் கூடிய கண்ணாடி இழையினால் ஆனது. இருமக் குறியீடுகளின் ஒரு கற்றையைக் கொண்டு செல்லும் வகையில் இதற்கு மிக விரைவான துடிப்பூட்டம் அளிக்கப்பட்டிருக்கும். இந்த ஒளியியல் இழைகள் மிகப் பெருமளவு தகவல்களைக் கொண்டு செல்ல வல்லவை; அத்துடன், மரபு இழைகளைச் சீர்குலைக்கக் கூடிய மின்னியல் குறுக்கீடுகளையும் தடுக்கிறது. கணினிச் செய்தித் தொடர்புகளில் ஒளியியல் இழைகளின் பயன்பாடு இப்போது மிகவும் பெருகியுள்ளது.

optical mark reader : ஒளியியல் குறியெழுத்துப் படிப்பி : அட்டைகளில் அல்லது பக்கங்களில் உள்ள வரைகலைக் குறியெழுத்துகளைப் படிக்கக் கூடிய உட்பாட்டுச் சாதனம்.

optical laser disk : லேசர் ஒளி வட்டு.

optical mark recognition (OMR) : ஒளியியல் குறியெழுத்தேற்பு ; ஒளியியல் குறியறிதல்; (ஓஎம்ஆர்) : ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒரு குறியெழுத்தை இருத்தி வைப்பதன் மூலம் கணினிப் பொறி உட்பாட்டுக்காகத் தகவல்களை இன்னொரு ஊடகமாக மாற்றுவதற்குரிய தகவல் செய்முறைப் படுத்தும் தொழில் நுட்பம். இந்த நிலை ஒவ்வொன்றும் கணினிப் பொறிக்குத் தெரிந்திருக்கிற ஒரு மதிப்பினைக் கொண்டிருக்கும். அந்த மதிப்பு மனிதரால் அறியக் கூடியதாகவோ அல்லது அறிய முடியாததாகவோ இருக்கலாம். இது ஒளியியல் எழுத்தறிதலுடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது.

optical mouse : ஒளிச்சுட்டி; எலிவடிவ ஒளிக்கருவி : அதன் அசைவுகளுக்கு ஒளியைப் பயன்படுத்தும் எலி வடிவக் கருவி. இது ஒரு சிறிய மேசை மேல் உள்ள அட்டையின் மேற் பகுதியில் நகர்த்தப்படுகிறது. ஒரு ரெஃப்ளெக்டிவ் கிரிட் உள்ளது. எலி வடிவக் கருவி ஒரு ஒளியை வெளியிட்டு அது நகரும்போது

ஏற்படும் மாற்றங்களைக் கண்டு பிடிக்கிறது.

optical page reader : ஒளியியல் பக்கப் படிப்பி : வாசகம் அச்சிடப்பட்ட ஒரு பக்கத்தை படித்தறிகிற உட்பாட்டுச் சாதனம்.

optical printer : ஒளியியல் அச்சுப் பொறி.

optical reader : ஒளியியல் படிப்பி.

optical reader wand : ஒளியியல் படிப்பி கோல் : பட்டைக் குறியீடு களைப் படித்து கணினிக்குள் உரிய தகவல்களைச் செலுத்துகிற சாதனம்.

optical recognition device : ஒளியியல் ஏற்புச் சாதனம்; ஒளியியல் அறியும் கருவி : காகித ஆவணங்களில் குறி யீடிடப்பட்டுள்ள குறியீடுகளை அல் லது குறியெழுத்துகளைப் படிக்கக் கூடிய சாதனம். இது அந்தக் குறியீடு களை அல்லது குறியெழுத்துகளை மின்னியல் துடிப்புகளாக மாற்று கிறது.

optical scanner : ஒளியியல் வருடி; ஒளியியல் நுண்ணாய்வுக் கருவி.

optical scanning : ஒளியியல் நுண் ணாய்வு; ஒளியியல் வருடல் : எந்திரச் செய்முறைப் படுத்துதலுக்காகச் செய்திகளை மாற்றம் செய்கிற ஓர் உட்பாட்டு முறை. செய்தி எந்தப் பின்னணியில் தோன்றுகிறதோ அந்தப் பின்னணியின் பிரதிபலிப்பு அளவினை மதிப்பீடு செய்வதன் மூலம் இது செய்யப்படுகிறது.

optical merge tree : உகந்த இணைப்பு மரம்; உகப்பு இணைவு மரம் : இயக்கச் செயற்பாடுகள் மிகக் குறும எண் ணிக்கையில் நிகழும் வகையில் சரங் களை இணைக்கிற வரிசை முறை யினை மரவடிவில் உருப்படுத்திக் காட்டுதல்.

optimization : உகந்த அளவாக்கம் ; செயற்பாட்டு ஆணைத் தொடர் : ஒரு முடிவினை ஒரு வடிவமைப்பினை அல்லது ஒரு பொறியமைவினை இயன்ற வரையில் முழுமையான தாக அல்லது செயற்படத் தக்கதாக உருவாக்குகின்ற முயற்சிகள் மற்றும் செய்முறைகள்.

optimization analysis : உகந்த ஆய்வு: குறிப்பிட்ட தடைகளுக்கிடையில் கணித முன் மாதிரியின் தேர்ந்தெடுக் கப்பட்ட மாறிகளின் மதிப்புகளுக் கிடையில் ஒரு உகப்புநிலை மதிப்புக் கண்டறிதல்.

optimising compiler : உகப்பாக்கு மொழி மாற்றி.

optimize : உகந்த அளவாக்கு; உகப் பாக்கு : சில நிலையளவுருக்களின் - குறிப்பாக செலவு சேமிப்பளவு கால அளவு-மதிப்பினைக் குறுமப்படுத்து கிற அல்லது பெருமப்படுத்துகிற வகையின் ஒரு செயல்முறையை எழுதுதல் அல்லது ஒரு பொறியமை வினை வடிவமைத்தல்.

optimizing compiler : உகந்த அளவாக் கும் தொகுப்பி : ஒரு செயல் முறை யின் தருக்க முறையில் ஏற்படும் குறைபாடுகளைச் சீர் செய்து நிறை வேற்றக் கால அளவு முதன்மைச் சேமிப்புத் தேவைப்பாடுகள் போன்ற வற்றை மேம்படுத்த முயலும் தொகுப்பி.

optimum : உகந்த அளவு : ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வகைப்பாடு களின் நோக்கில் மிகச் சிறந்ததும் மிகவும் விரும்பத் தக்கதுமான அளவு.

optimum quantity : உகந்த அளவு.

optimum programming : உகந்த அளவுச் செயல்முறைப்படுத்துதல் ;

உகந்த செயல்முறை நிரல் : ஒரு வகைப்பாட்டினைப் பொறுத்த அளவில் திறம்பாட்டினை பெரும் அளவுக்கு உயர்த்தும் செயல்முறைப் படுத்துதல். மிகக் குறைந்த அளவு சேமிப்பியின் பயன்பாடு, மிகக் குறைந்த அளவு புறநிலைச் சாதனப் பயன்பாடு, மிகக் குறைந்த அளவுக் கணிப்புக் காலம் போன்றவை இதில் அடங்கும்.

optimum tree search : உகந்த அளவு மர தேடல் : பல்வேறு மாற்று முறைகளில் மிகச் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுப்பதை நோக்கமாகக் கொண்ட மர தேடல் முறை.

option key : விருப்பத் தேர்வு; தேடல் விசை : சில விசைப் பலகைகளிலுள்ள திருத்தம் செய்வதற்கான விசை. இதனை அழுத்தும்போது அடுத்துத் தட்டச்சு செய்யப்பட்டுள்ள எழுத்துகளுக்கு வேறுவிதமான பொருள் விளக்கம் அளிக்கிறது.

opto-electronics : ஒளி மின்னணுவியல் : ஒளியியலையும் மின்னணுவியலையும் ஒருங்கிணைக்கும் தொழில்நுட்பம்.

oracle (software package) : ஆரக்கிள் (மென்பொருள் பொதிவு) : பெருமுகம், சிறு மற்றும் நுண் கணினிகள் போன்ற அனைத்து வகைக் கணினிகளுக்கும் பயன்படக்கூடிய பிரபல தொடர்புறவு தகவல்தள மேலாண்மைத் திட்டம்.

OR circuit : அல்லது மின்சுற்று.

order : வரிசை முறை; எண் வரிசை; வரிசை : 1. ஒரு குறிப்பிட்ட விதிகளின் தொகுதிக்கிணங்க இனங்களை வரிசை முறையில் அமைத்தல். 2. பெரும்பாலான விரிதாள் செயல்முறைகளில் காணப்படும் ஆணை. இது கணிப்பு வரிசை முறையைப் பயன்படுத்துவோர் தீர்மானித்துக் கொள்வதற்கு அனுமதிக்கிறது.

order of operations : செயற்பாடுகளின் வரிசைமுறை; இயக்க வரிசை: கணிதச் செயற்பாடுகளின் படிவரிசை முறை. இதன்படி மொத்தமாக்கம் முதலிடம் பெறுகிறது. அடுத்து அடுக்குப் பெருக்கல், வர்க்க மூலங்கள் காணல், பெருக்கல், வகுத்தல் இடம் பெறுகின்றன. பின்னர் கூட்டல், கழித்தல் வருகின்றன.

ordered list : ஒழுங்கமை வரிசை.

ordinal number : வரிசை முறை எண் : ஒரு பொருளின் வரிசையை அடையாளம் காணும் எண். சான்றாக, பதிவேடு 34.

ordinate : செங்குத்து ஆயம்; நெட்டாயம் : ஒரு வரைபடத்தில் செங்குத்தாக உள்ள Y-அச்சு. இது X-அச்சிலிருந்து (மட்டாயம்) வேறுபட்டது.

organization : சீர்மை சேமிப்பமைப்பு.

organizational control : அமைவனக் கட்டுப்பாடு : தகவல் பொறியமைவை ஊடுருவல், குறுக்கீடு, நாச வேலை போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்படும் அலுவலர் நிருவாக நடைமுறைகள்.

organization chart : அமைவன வரைபடம் : ஒரு வணிக நிறுவனத்திலுள்ள பொறுப்புகள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டும் அமைப்பு முறை விளக்க வரைபடம். அமைவனப் படிநிலை அமைப்பின் படவிளக்கம். இது ஓர் அமைவனத்தின் பணியாளர்களிடையிலான உறவு சார்ந்த நிலையைக் காட்டுகிறது.

OR gate : அல்லது வாயில்; அல்லது -வழி : உட்பாடுகள் இரண்டில் ஒன்று அல்லது இரண்டும் இருமமாக இருக்குமானால் உட்பாடு ஓர் இரும 1 ஆக இருக்கிற இரு விசைகளைக் கொண்ட கணினி மின் சுற்று வழி. இது ''அல்லது இயக்கியை'' (OR operator) இயக்குகிறது.

origin : தோற்றுவாய் ; தொடக்கம் : குறியீட்டு முறையில் ஒரு செயல் முறையின் அல்லது செயல்முறைப் பகுதியின் முதல் அமைவிடத்தின் முழுமையான நினைவக முகவரி.

original : மூலப்படி.

orginal data : தோற்றுவாய்த் தகவல்; மூலத் தகவல் : செய்முறைப்படுத்த வேண்டிய தகவல். இது, ''செப்ப மற்ற தகவல்'' (Raw data) என்றும் அழைக்கப்படும்.

original equipment manufacturer (OEM) : மூலச்சாதன உற்பத்தியாளர் : மற்ற விற்பனையாளர்களிடமிருந்து சாதனங்களை விலைக்கு வாங்கி தனியொரு பொறியமைவாக ஒருங் கிணைத்து மறு விற்பனை செய்யும் உற்பத்தியாளர்.

original message : மூலத் தகவல்.

originate answer: தொடங்கு/ மறு மொழிச் சாதனம் : செய்திகளை உண்டாக்கி மறுமொழியளிக்கக் கூடிய ஒரு சாதனம். பெரும்பாலான தொலைக் கணினிச் சாதனங்கள் மறு மொழி முறையில் அமைந்துள்ளன. எனவே பயன்படுத்துபவர் மறு மொழி முறையிலே இருத்தல் வேண்டும்.

OR operator : 'அல்லது' இயக்கி : தருக்க முறை இயக்கி என்பது ஓர் அறிக்கை, 'Q' என்பது இன்னொரு அறிக்கை என்றால், P+Q என்பதன் 'அல்லது' (OR) என்பது, குறைந்தது ஒன்று உண்மையாக - இருந்தால் மட்டுமே உண்மையானதாகும்; எல்லாம் பொய் எனில் பொய்யான தாகும் என்பதைத் தெரிவிக்கும் தன்மையுடையது.

orphan : அனாதை வரி ; தொடக்கத் தனி வரி : ஒரு வாசகத்தின் ஒரு பக்கத்தின் அடியில் தன்னந் தனியாக அமர்ந்திருக்கும் ஒரு பத்தியின் முதல் வரி. இது எல்லா அச்சு வடிவங் களிலும் விரும்பத்தகாததாகக் கருதப் படுகிறது.

orthoferrite : ஆர்த்தோஃபெரைட் : இது இயற்கையாகக் கிடைக்கும் ஒரு பொருள். இது எதிர் காந்தத் துருவ முனைப்பின் பாம்பு போன்று நெளிந்த மாற்றுப் புலங்களைக் கொண்டதாகும். இது காந்தக் குமிழ் நினைவகத்துக்குப் பயன்படுத்தப் படுகிறது.

orthographic : எழுத்துக்கூட்டு முறை: அச்சு விரிவமைப்பு ஓவியம் அல்லது நிலப்படத்தின் அச்செழுத்து முறை. இதில் முனை நீட்டிக் கொண்டிருக் கும் வரிகள் ஓவியம் அல்லது நிலப் படத்தின் தளப்பரப்புக்குச் செங்குத் தாக இருக்கும்.

OS : ஓஎஸ் ;இயக்க முறைமை: 'செயற்படு பொறியமைவு' எனப் பொருள்படும் 'Operating System' என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கம்.

oscillate : ஊசலாடு : மிகக் குறைந்த தற்கும், மிக அதிகமானதற்குமான மதிப்புகளுக்குமிடையில் வந்து வந்து போவது. ஊசலாடுவது என்பது ஒரு சுழற்சி. மாறும் அலைவு எண்ணின் ஒரு முழு அலை.

oscillating sort : ஊசல் வரிசை யமைவு: ஒரு நாடா இயக்கியின் திறம்பாட்டிற்கு முன்னும் பின்னும்

படிப்பதற்கான வசதியைக் கொடுக்கும் புறநாடா வரிசையமைவு.

oscillography : ஊசல் உருவாக்கம்; ஊசல் வரைவியல்: ஓர் எதிர் மின்வாய்க் கதிர்க்குழலின் முகப்பில் மின்னியல் குறியீடுகளின் ஒரு தோரணியை உருவாக்கிக் காட்டுதல்.

oscilloscope : ஊசல் உருவாக்கக் கருவி ; அலைவு நோக்கிக் கருவி : இருளில் ஒளிவிடும் ஒரு திரையில் சுடரொளி வீசுகின்ற ஒரு பரப்பிடத்தை உண்டாக்குகின்ற ஒரு மின்னணுவியல் சாதனம். இது இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட மாறிகளுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுகிறது. கணினி பராமரிப்புத் தொழில் நுட்பாளர்கள் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

OTPROM : ஓட்ப்ராம் : one time prom என்பதன் குறும் பெயர். ஒரே ஒரு முறை மட்டுமே ஆணைத் தொடரமைக்கக் கூடிய ப்ராம் சிப்பு.

Oughtred, William (1575-1660) : அவுட்ரெட், வில்லியம் (1575-1660): ஆங்கிலேயக் கணித மேதை; 1630இல் சறுக்கு விதியைக் கண்டு பிடித்தவர்.

outdegree : புறமுகப்போக்கு; வெளியாகு எண் : ஒரு மைய முனையை விட்டுச் செல்லுமாறு தூண்டப்பட்ட விளிம்புகளின் எண்ணிக்கை. இது உள்முகப்போக்கு (indegree) என்பதிலிருந்து வேறுபட்டது.

outdent : வெளி முகமாக்கம்; வெளியாக்கம் : ஒரு வாசகத்தின் ஒரே பத்தியில் மற்ற வரிகளிலிருந்து இடது பக்கம் அதிக தூரம் நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு வரியை உள்முகமாகச் செய்முறைப்படுத்துதல். இது 'விளிம்பு வெட்டுதல்' (indentation) என்பதற்கு எதிரானது.

outer loop : வெளிக் கொக்கி வளையம்.

outline font : வெளிக்கோடு அச்செழுத்து : ஒவ்வொரு எழுத்துகளின் அடிப்படை வெளிக்கோடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு வகை அச்செழுத்து. வெளிக்கோடுகளை உண்மையான எழுத்துகளாக அளவிட்ட (பிட்மேப்) அச்சேறுவதற்கு முன் அளிக்கப்படுகிறது.

outline processor : வெளிக்கோடு செயலகம் : பயனாளர் ஆலோசனைகளை ஏற்கும் ஒரு மென்பொருள் பொதிவு. அவைகளை பயனாளர் குறிப்பிடும் வகையில் மாற்றி திரும்பமைத்து அதே எண்ணங்களின் பண்பட்ட மாதிரியாக அளிக்கிறது.

out-of-line : முரணிய வரி; வெளியமை வரி : செயல் முறையின் முதன்மை வரிக்குள் அமைந்திராத அறிக்கைகள். எடுத்துக்காட்டு: முடிவற்ற துணை வாலாயங்கள்.

output : வெளிப்பாடு; வெளிப்படு பொருள்; வெளியீடு : 1. ஒரு கணினியின் உள்முகச் சேமிப்பு அலகிலிருந்து ஒரு சேமிப்பிக்கு அல்லது வெளிப்பாட்டுச் சாதனத்திற்கு மாற்றப்படும் தகவல். 2. கணினியினால் செய்முறைப்படுத்தப்பட்ட தகவலின் இறுதி முடிவு. இது உட்பாடு (input) என்பதற்கு வேறுபட்டது.

output area : வெளிப்பாட்டுப் பகுதி : வெளிப்பாட்டுத் தகவலுக்காக முதன்மைச் சேமிப்பியில் ஒதுக்கப்பட்டுள்ள பகுதி. இது 'உட்பாட்டுப் பகுதி'க்கு (input area) வேறுபட்டது.

output bound : வெளிப்பாடு கட்டுப்பட்ட : வெளிப்பாட்டுப் பணிகளினால் ஏற்படும் அதிக அளவு தாமதத் தன்மை. குறைவேக தகவல் தொடர்

புக் கம்பிகள் அல்லது அச்சுப் பொறி கள்.

output buffer : வெளிப்பாட்டு இடையிடம் ; வெளியீட்டு இடை நினைவகம்; வெளிப்பாட்டு நினைவறை : தகவலை ஒரு புறச் சாதனத்திற்கு மாற்றப் பயன்படுத்தப்படும் கிடைத் தடுப்பு நினைவகம்.

output channel : வெளிப்பாட்டுத் தடம் : புறநிலை அலகுகளையும் மையச் செயலகத்தையும் இணைக் கின்ற ஒரு இணைப்புத் தடம். இதன் வழியாக வெளிப்பாட்டுக்காக தகவல்களை அனுப்பலாம்.

output data : வெளிப்பாட்டுத் தகவல்: செய்முறைப்படுத்துதலுக்குப் பிறகு ஒரு சாதனத்திலிருந்து அல்லது செய் முறையிலிருந்து வழங்கப்படும் தகவல். இது உட்பாட்டுத் தகவலி லிருந்து வேறுபட்டது.

output device : வெளிப்பாட்டுச் சாத னம் : ஒரு கணினியிலிருந்து தகவல் மதிப்புகளை எடுத்துக் கொண்டு, அவற்றைப் பயன்படுத்துபவர் விரும் பும் வடிவத்தில் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் அலகு. எடுத்துக்காட்டு : கணினி வெளிப் பாட்டு நுண் சுருள் பதிப்பி; இலக்க வரைவி ; அச்சடிப்பி; ஒளிக்காட்சி முனையம். இது உட்பாட்டுச் சாதனத் திலிருந்து வேறுபட்டது.

output media : வெளிப்பாட்டு ஊடகம்: வெளிப்பாட்டுத் தகவல்களைப் பதிவு செய்வதற்கான இயற்பியல் பொருள். எடுத்துக்காட்டு: காகிதம், காந்த வட்டு, காந்த நாடா.

output primitives : வெளிப்பாட்டு அடிப்படைகள் : திரையில் படங் களை உருவாக்கப் பயன்படும் அடிப்படை உறுப்புகள்.

output statement : வெளிப்பாட்டுக் கட்டளை : விவரங்களை, விவரங் களின் அடிப்படையில் கணித்தறியப் பட்ட விடையை பயனாளருக்கு திரையிலோ, அச்சிலோ, வட்டுப் பதிவாகவோ தெரிவிக்கப் பயன் படுத்தப்படும் கணினி மொழி ஆணைத் தொடர்.

output stream : வெளிப்பாட்டுத் தாரை;வெளியீட்டு ஓடை : ஒரு வெளிப்பாட்டுச் சாதனத்திற்கு மாற்றப்பட வேண்டிய தகவல்களின் வரிசைத் தொகுதி.

outputting : வெளிப்பாடு செய்தல் : பயனுள்ள தகவல்களின் வெளிப் பாட்டினை உண்டாக்குகிற செய் முறை.

output unit : வெளியீட்டகம் ; வெளிப் பாட்டகம்.

outsourcing : வெளித்திறன் பெறல் : வெளிப்புற ஆலோசகர்கள், மென் பொருள் இல்லங்கள் அல்லது சேவை அலுவலகங்களுடன் ஒப்பந் தம் செய்து அமைப்பு ஆய்வு ஆணைத் தொடரமைத்தல் மற்றும் தகவல் மைய இயக்கங்களைச் செய்தல்.

overdrive : ஓவர்டிரைவ் : இன்டெல் லின் 486 மேம்படு மையச்செயலகம்.

overflow : ததும்பல் ; வழிதல்;மிகை மதிப்பு : ஒரு கணிதச்செயற்பாட்டில் பதிவேட்டில் அல்லது சேமிப்பு அமைவிடத்தில் அதன் கொள் திறனுக்கு மீறிய அளவில் ஓர் எண்ணளவினை உண்டாக்குதல்.

overflow error : பொங்கி வரும் பிழை: கணக்கிடப்பட்ட தகவல் ஒதுக்கப்பட்ட புலத்துக்குள் பொருந் தவில்லையென்றால் ஏற்படும் பிழை. முடிவு புலம் காலியாக விடப்

படும் அல்லது பிழை நிலையைக் காட்டும் சில குறியீடு செய்யப்படும்.

overhead : தாங்கா சுமை; மேற் செலவு: 1. ஒரு செயல் முறையை அல்லது சாதனத்தை அதன் உயர்ந்த அளவுத் திறம்பாட்டுக்குக் குறைவாகச் செயற் படும்படி செய்யும் மட்டு மீறிய காரணிகளைக் குறிக்கும் சொல். 2. செயற்பாட்டுப் பொறியமைவும் செயல்முறையும் ஆக்க முறையான பணிகளைவிட நிருவாகப் பணி களைச் செய்கிறபோது நடைபெறும் ஆக்க முறையல்லாத முயற்சி.

overlap : மேலழுந்துதல்; உடன் நிகழ் தல்: ஒரு செயலினைச் செய்து கொண் டிருக்கும் அதே சமயத்தில் வேறொரு செயலினையும் செய்யும்படி செய் தல். எடுத்துக்காட்டு: மையச் செயல கம் அலகு ஆணைகளை நிறை வேற்றிக் கொண்டிருக்கும்போது ஓர் உட்பாட்டுச் செயல்பாட்டினைச் செய்தல். ஒரே சமயத்தில் கணினி பல செயல் முறைகளை நிறைவேற்ற இம்முறை அனுமதிக் கிறது.

overlay card : மேலோட்ட அட்டை : கணினியில் காட்டுவதற்கான ஒளிக் காட்சி மூலத்திலிருந்து வரும் என்.டி. எஸ்.சி. சமிக்ஞைகளை இலக்கப் படுத்தும் கட்டுப்பாட்டுப் பொறி.

overlapping : மேலழுந்து நிலை : ஒரு திரைக்காட்சியில் சாளரங்கள் ஒன் றுக்கு மேல் ஒன்றாக அல்லது ஒவ் வொன்றின் எல்லைகளுக்குள் மேலழுந்தி இருக்கும் நிலை.

overlap processing : மேலழுந்து செய்முறைப்படுத்துதல் : ஒரு கணினி யில் உட்பாட்டினைச் செலுத்துதல், செய்முறைப்படுத்துதல், வெளிப் பாட்டு நடவடிக்கைகளைச் செய்தல் ஆகியவற்றை ஒரே சமயத்தில் நிறை வேற்றுதல். இது மேலழுந்தா செய் முறைப்படுத்துதலிலிருந்து வேறு பட்டது.

overlay : மேற்கவிதல் : ஒரு செயல் முறையின் கூறுகளை துணைச் சேமிப்பியிலிருந்து நிறைவேற்றத் தக்கதாக உள்முகச் சேமிப்பிக்கு மாற்றுதல். இதனால் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட கூறுகள் பல்வேறு சமயங்களில் ஒரே சேமிப்பு அமைவிடங்களை பிடித் துக் கொள்கின்றன. உள்முகச் சேமிப் பியில் தற்போது அணுகப்பட்டு வரும் செயல் முறையை அல்லது தகவல்களை மட்டுமே வைத்துக் கொண்டு எஞ்சியவற்றை ஒரு நேரடிச் சேமிப்புச் சாதனத்தில் (காந்த நாடா அலகு) தேவையான காலம் வரை வைத்து உள்முகச் சேமிப்பி யின் வடிவளவை அதிகரிப்பதற்கு இந்த உத்தி பயன்படுகிறது.

overloading : அதிகப்பளு ஏற்றல் : ஆணைத் தொடரமைப்பால் ஒரே பெயரை ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே கணிப்புக் குறியீட்டினை வேறு வேறு விவர இனங்களுக்குப் பயன் படுத்தும் திறன். இதனால் சூழ் நிலைக்கேற்ப அவற்றை வேறு படுத்த வேண்டியது தொகுப்பின் வேலையாகிறது.

overprint : மேலச்சு : எழுத்தின் தோற் றத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்காக ஒரே நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் அச்சிடும் செய்முறை.

overpunch : மேல் துளையிடல் ; கூடுதல் துளையிடல் : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துளைகளுடைய ஒரு அட்டையின் பத்தியில் மேலும் துளைகளையிடுதல்.

override : மேலாணை; மேலூர்தல் ; ஊர்ந்தியங்கல் : ஒரு செயல் முறைக் குப் பதிலாக்கம் செய்வதன் மூலம்

முன்னிருக்கும் மதிப்பினை மாற்றும் படி செய்தல்.

overrun : மேலோட்டம் ; மிகையோட்டம்; ஊர்ந்தியங்குதல் : ஒரே காலத்தில் இயங்கும் ஊடகத்தைக் கொண்ட இடைத்தடுப்பிலாக் கட்டுப்பாட்டு அலகிலிருந்து தகவல்களை மாற்றம் செய்யும்போதும் வழித்தடத்தின் திறம்பாட்டிற்கு மீறுகையாக நடவடிக்கையைச் செயல்முறை தூண்டும்போது ஏற்படும் நிலை.

overscan : மிகை நுண்ணாய்வு ; மிகை வருடல் : கணினி திரையில் ஒரு வரியின் முடிவில் வாசக இழப்பீடு முறையாகச் சரியாக்கப்படாத நிலை.

overseas : அயல்நாட்டு : தொலைத் தகவல் தொடர்புக் குழுமம்.

overstriking : மிகை அடிப்பு; மேலடிப்பு : அச்சுப்படியில் எடுப்பான முகப்பினைக் கொண்டு வருவதற்காக எழுத்துகளை ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அச்சடித்தல்.

overtype mode : மேலெழுது முறை : ஏற்கனவே உள்ள எழுத்துகளின் மீது அவையழிந்து புதிய எழுத்துகள் அவ்விடத்தில் பதியுமாறு தட்டச்சிடும் முறை. INSERT Mode-க்கு மாறானது.

overwrite : மேலெழுதுதல் : ஓர் அமைவிடத்தில் ஒரு தகவலைப் பதிவு செய்து, அந்த அமைவிடத்தில் முன்னரே அடங்கியுள்ள தகவலை அழித்தல் அல்லது சீர்குலைத்தல்.



மிகை வருடல் (Overscan)

P

PABX : பிஏபிஎக்ஸ : 'தனியார் தானியக்கக் கிளை இணைப்பகம்' என்று பொருள்படும் "Private Automated Branch Exchange" என்பதன் குறும் பெயர்

P-system : பி-அமைவு; முறைமை.

R-Register : பி-பதிவு.

pack : திரட்டிக்கட்டு ;பொதி : தகவல்களின் பல்வேறு குறுகிய அலகுகளை தனியொரு சேமிப்புச் சிற்றத்தினுள் செறிவாகத் திரட்டி வைத்தல். இதிலுள்ள தனித்தனி அலகுகளைப் பின்னர் மீட்டுக் கொள்ளலாம். எடுத்துக்காட்டு: இரண்டு 4 துண்மிக்கு இரும எண் குறியீட்டட பதின்ம (BCD) எண்களை ஒரே 8 துண்மிக்குச் சேமிப்பி அமைவிடத்தில் சேமித்து வைத்தல். இது 'கட்டவிழ்த்தல்' (unpack)என்பதற்கு மாறானது.

package : திரள் தொகுதி; பொதிவு; தொகுதி ; பொதி ; தொகுப்பு : ஒன்றுக்கு மேற்பட்ட வணிக நிறுவனங்களால் பயன்படுத்தப்படத்தக்க செயல்முறை அல்லது செயல்முறைகளின் தொகுதி.

packed binary : இரும எண் தொகுதி.

packaged software : திரள் தொகுதி மென்பொருள்; பொதி மென்பொருள்: ஒரு வன்பொருள் உற்பத்தியாளரினால் அல்லது ஒரு வன்பொருள் நிறுவனத்தினால் ஓர் உடன் பயன் தொகுதியாக விற்பனை செய்யப்படும் மென்பொருள். இதில், செயல்முறைகள், தொடர் வரிசை வரைபடங்கள் போன்ற ஆவணங்கள், பயனாளர் கையேடுகள், பரிசோதனைத் தகவல்கள் அடங்கியிருக்கும். இவை வாடிக்கையாளரின் கணினியில் செயல்முறை பொருத்தப்பட்ட பிறகு, அது சரிவர செயற்படுவதற்கு உதவி புரிகிறது.

packed decimal : பொதிந்த பதின்மம்: இரண்டு பதின்ம எண்களை ஒரு எட்டியலில் வைக்கக் கூடிய சேமிப்பு முறை. ஒவ்வொரு எண்ணும் நான்கு துண்மிகளில் இருக்கும். குறைந்த முக்கியத்துவ எட்டியலில் இந்தக் குறியீடு நான்கு துண்மிகளைப் பிடித்திருக்கும்.

packet : பொதிவு; பொட்டலம் : தகவல்களை அனுப்புவதற்கான தகவல் பொதிவு. வாலாயம், முகவரி, பிழைக்கட்டுப்பாடு போன்ற கட்டுப்பாட்டு செய்திகளையும், தகவல்களையும் இது உள்ளடக்கியிருக்கும்.

packet lossage : பொதிவு இழப்பு : ஒரு ஏற்புடைய நேரத்திற்குள் கிளம்பிய இடத்திலிருந்து போய்ச் சேர வேண்டிய இடத்திற்குத் தகவல்கள் போய்ச் சேராத நிலை ஒரு கட்டமைப்பில் தகவல்களுக்கு ஏற்படுதல். பாக்கெட்டுகள் தொலைந்து போனால் அவற்றை மீண்டும் அனுப்ப வேண்டும். இதனால் தகவல் தொடர்பு தாமதமாகிறது.

packet sniffing : பொதி முகர்தல் : ஒரு கட்டமைப்பில் உங்களுக்காக இல்லாத பொதிகளைப் படித்தல். ஈத்தர் நெட் புரோட்டோகால் வேலைகளினால் உங்கள் எந்திரத்தை பிறருக்கான பொதியை கவனிக்குமாறும் அதே குறும்பரப்புக் கட்டமைப்பில் உள்ள பிற கணினிகளைப் பார்க்குமாறும் அமைக்கலாம். இதன் மூலம் "in the clear" என்ற முறையில் அவர்கள் அனுப்புவதை கவனிக்கலாம். (அதாவது ஒரு பொதி முகரும் ஆணைத் தொடர் மற்றும் in the clearஇல் பயனாளர் அனுப்பும் பெயர் மற்றும் அனுமதிச் சொல்லைக் கவனிக்கலாம்).

packet switching : பொதி நிலை மாற்று : ஒரு தகவல் அனுப்பும் செயல்

முறை. பொதியை அனுப்பும் சமயத்தில் மட்டுமே அந்த வழித்தடம் அடைபட்டிருப்பது போன்று முகவரியிடப்பட்ட பொதிகளை இது அனுப்புகிறது.

packetized voice : பொதியப்பட்ட குரல் : நடப்பு நேர குரலை பொதி நிலை மாற்று கட்டமைப்பில் அனுப்புதல்.

packing : பொதிவாக்கம் ; பொதித்தல்: தனியொரு சேமிப்பாக எட்டியலில் இரு எண்களைச் சேமித்து வைக்கும் செய்முறை.

packing density : பொதிவாக்க அடர்த்தி; பொதியடர்த்தி : பரப்பிடத்தின் ஓர் அலகில் அல்லது நீளத்தில் அடக்கி வைக்கப்படும் பயனுள்ள சேமிப்புச் சிற்றங்களின் எண்ணிக்கை. இது, பதிவாக்க அடர்த்தி என்றும் அழைக்கப்படும். எடுத்துக்காட்டு : ஓர் அங்குலத்திலுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை.

pad : திண்டு ;அட்டை மேடை : 1. ஓர் அச்சிட்ட மின்சுற்று வழிப்பலகையில் அமைப்பாக வரித் தகடுகளைப் பற்றவைப்பதற்கான ஓர் இணைப்பினை ஏற்படுத்துகிற தகடாக்கிய செப்புப் பரப்பு. அதாவது அச்சிட்ட மின்சுற்று வழிப் பலகையின் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு மாறிச் செல்வதற்கான செப்பு வழி. 2. ஒரு தகவல் புலத்தை வெற்றிட அச்செழுத்துகளால் நிரப்புதல்.

pad character : திண்டு எழுத்து : ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்படும் இடைத்தடுப்பு எழுத்து.

padding : திண்டாக்கம் : ஒரு குறிப்பிட்ட நீளத் தகவல் பாளத்தினை போலி எழுத்துகள், சொற்கள், பதிவுகள், ஆகியவற்றினால் நிரப்புவதற்குப் பயன்படுத்தப்படும் உத்தி.

paddle : துடுப்பு ; மத்து : ஒரு காட்சி முனையச் சறுக்குச் சட்டத்தை நகரும்படி செய்வதற்காகக் கையாளப்படும் சாதனம். துடுப்பிலுள்ள ஒரு சுழல் வட்டினைச் சுழற்றுவதன் மூலம் சறுக்குச் சட்டத்தினை மேலும் கீழும் இடமும் வலமும் நகர்த்தலாம். இது கணிணியுடன் ஒரு கம்பி வடம் மூலம் இணைக்கப்பட்டிருக்கும். இது கணிணி வரைகலைகளிலும் ஒளிப்பேழை விளையாட்டுகளிலும் பயன்படுத்தப்படுகிறது.



துடுப்பு (Paddle)

page : பக்கம் : 1. ஒரு செயல் முறையின் அல்லது தகவலின் கூறு. இது பொதுவாக, குறிப்பிட்ட நீளமுடையதாக இருக்கும். இது ஒரு குறிப்பிட்ட முகவரியைக் கொண்டிருக்கும். எனினும், இதனைக் கணினியின் உள்முகச் சேமிப்பகத்தின் எந்தப் பகுதியிலும் இருத்தி வைக்கலாம். 2. திரையில் ஒரே சமயத்தில் காட்சியாகக் காட்டப்படும் வாசகம் அல்லது வரைகலை.

page break : பக்கம் நிறுத்தல் : மிகப் பல மென்பொருள் பயன்பாடுகளில் உள்ள ஒரு தன்மை. இதில் குறிப்பிடப்பட்ட பக்க (காகித) நீளத்திற்கு ஏற்ற வகையில் சொற்கள் கட்டங்களாக அனுப்பபபடும். அச்சிடு

தலில் பக்கத்தின் இறுதியைக் குறிப்பிடும் குறியீடு. வன் பக்க நிறுத்தத்தை பயனாளர் நுழைத்தால் பக்கமானது அந்த இடத்தில் நிறுத்தப்படும். அதாவது அந்தக் கட்டுரையின் இறுதியில் மென் பக்க நிறுத்தத்தை சொல் செயலாக்கம் அல்லது அறிக்கை ஆணைத் தொடரில் நடப்பு அமைப்புகளுக்கேற்ப உருவாக்கப்படும். மென் பக்கநிறுத்தங்கள் தகவல் சேர்க்கப்படும்போதோ அல்லது பக்க நீளம் மாறும்போதோ மாறக் கூடியது.

page composition programme : பக்க அமைப்பு செயல்முறை; பக்க அமைவு ஆணைத் தொடர் : தொழில் முறையாகத் தோன்றும் ஆவணங்களை உருவாக்கும் ஆணைத்தொடர். டி.டி.பி. ஆணைத் தொடர் என்றும் அழைக்கப்படும்.

page counter : பக்க எண்ணி : பக்க எண்களைக் கூட்டி ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியிலும் பக்க எண்ணை அச்சிடும் ஒரு எண் மாறி.

page description language : பக்க விளக்க மொழி : அச்சக வெளியீட்டை வரையறை செய்யும் உயர்நிலை மொழி. பக்க விளக்க மொழியில் ஒரு பயன்பாடானது வெளியீட்டை உருவாக்கினால், அந்த வெளியீடு அதனை ஆதரிக்கும் எந்த அச்சுப் பொறியிலும் அச்சிடப்படும். எழுத்து மற்றும் வரைகலை உருவாக்கங்களை பயனாளர் கணினியில் செய்வதற்குப் பதிலாக அச்சுப்பொறியே செய்து கொள்ளும்.

page fault : பக்கக் கோளாறு : மாய நினைவகக் குறுக்கீடு. அடுத்த ஆணை அல்லது தகவல் நினைவகத்தில் இல்லையென்றால் வட்டிலிருந்து தேவையான பக்கத்தை இது படித்தெடுக்கிறது.

page frame : பக்க அமைவிடம்; பக்கச் சட்டம் : ஆணைகளின் அல்லது தகவல்களின் ஒரு பக்கத்தை (பொதுவாக 2k அல்லது 4k சொற்கள்) சேமித்து வைக்கக் கூடிய கணினியின் பின்புலச் சேமிப்பகத்தின் அமைவிடம்.

page header : பக்கத் தலைப்பு : ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியில் அச்சிடப்படும் பொதுவான சொற்றொகுதி. அதில் பொதுவாகப் பக்க எண்ணும் ஒவ்வொரு பத்தியின் தலைப்புகளும் இருக்கும்.

page layout programme : பக்க வடிவமைப்பு ஆணைத்தொடர் : மேசை மேல் பதிப்பக முறையாக உள்ள ஒரு பயன்பாட்டு ஆணைத்தொடர். இது பல வகையான கோப்புகளில் இருந்து சொற்பகுதி மற்றும் வரைகலைகளை சேர்ப்பிக்கிறது. சரியான இடத்தில் வைத்தல், அளவெடுத்தல், கூட்டல் மட்டும் திரையில் குறிப்பிடப்படும் பக்க வடிவமைப்பிற்கேற்ப நறுக்குதல் போன்றவற்றை செய்யும். புகழ்பெற்ற பக்க வடிவமைப்பு ஆணைத் தொடர்களாக பேஜ் மேக்கர், குவார்க் எக்ஸ்பிரஸ் மற்றும் வென்ச்சுரா பப்ளிஷர்ஸ் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

page in : சேமிப்பக மாற்றம்; பக்கம் புகுத்தல் : வட்டுச் சேமிப்பகத்திலிருந்து முதன்மைச் சேமிப்பகத்து செயல்முறைகளை அல்லது தகவல்களைப் பரிமாற்றம் செய்வதற்கான செய்முறை.

Pagemaker : பேஜ்மேக்கர் : ஆல்டஸ் கார்ப்பரேஷன் பி.சி. மற்றும் மெக்கின்டோஷுக்காக உருவாக்கிய முழு தன்மைகள் கொண்ட மேசை மேல் பதிப்பக ஆணைத்தொடர். மெக்குக்காக (Mac) 1985இல் அறிமுகப்படுத்தப்பட்ட இதுதான் மேசை மேல் பதிப்

பக முறைக்கு தரநிருணயத்தை அமைத்தது. சொல்லப் போனால் ஆல்டஸ் நிறுவனத் தலைவரான பால் பிரெய்னியார்ட் என்பவர்தான் மேசை மேல் பதிப்பகம் (Desk Top Publishing) என்ற சொல் தொடரை உருவாக்கினார். இதன் பி.சி. பதிவு 1987இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

page makeup : பக்க உருவாக்கம் : ஒரு அச்சிடப்படும் பக்கத்தை அமைத்தல் (வடிவம் ஆக்கல்). இதில் தலைப்பு களை அமைத்தல், அடிப்பகுதிகள், பத்திகள், பக்க எண்கள், வரைகலை, விதிகள் மற்றும் எல்லைக் கோடுகள் ஆகியவற்றை வடிவமைப்பது அடங்கியுள்ளது.

page mode memory : பக்க முறை நினைவகம் : பொதுவான மாறும் ராம் சிப்பு வடிவமைப்பு. நினைவக துண்மிகள் வரிசை மற்றும் பத்தி ஒருங்கிணைப்புகளால் அணுகப் படும். இல்லையென்றால், ஒவ் வொரு பக்கமுறையும் அணுக தேர்ந் தெடுக்கப்படும் வரிகளில் உள்ள வரிசைகளையும், பத்திகளையும் நகர்த்தியாக வேண்டும். பக்க முறை யில் ஒரு வரிசையில் உள்ள துண்மி கள் அனைத்தும் ஒரே ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவதால், வேக மாக அணுக முடியும்.

page out : வட்டு மாற்றம்;பக்கம் வெளி யேற்றம் : கணினியின் முதன்மை நினைவகத்திலிருந்து வட்டுச் சேமிப் பிக்குச் செயல் முறைகளை அல்லது தகவல்களை மாற்றும் செய்முறை.

page preview : பக்க முன்காட்சி : சொல் செயலாக்க ஆணைத்தொடர்கள் மற்றும் பக்க வடிவமைப்புகள் பல வற்றில் காணப்படும் முறை. அச்சி டப்படும்போது ஒரு பக்கம் எவ் வாறு தோன்றும் என்று முழுப் பக்க அளவில் முன்னதாகவே காணலாம். இதில் தலைப்புகள், பகுதிகள் மற் றும் ஓரங்கள் போன்ற சேரும் தன்மை களும் காணப்படும்.

page printer : பக்க அச்சடிப்பி; பக்க அச்சுப் பொறி : எழுத்து வாசகம் அடங்கிய ஒரு முழுப் பக்கத்தையும் அச்சடிக்கும் அச்சடிப்பி. இது, நிமிடத்திற்கு 2,000 வரிகளை அச் சடிக்கக் கூடியது.

page reader : பக்கப் படிப்பி : தகவல் களின் பல வரிகளை நுண்ணாய்வு செய்யக்கூடிய ஒளியியல் நுண்ணாய் வுச் சாதனம். இதில் நுண்ணாய்வு முறையானது உட்பாட்டுத் தகவல்க ளுடன் இணைக்கப்பட்டுள்ள செயல் முறைக் கட்டுப்பாடு அல்லது கட்டுப் பாட்டுக் குறியீடு மூலம் தீர்மானிக் கப்படுகிறது.

page recognition : பக்கம் கண்டறிதல்: கணினியில் ஸ்கேன் செய்யப்படும் அச்சிட்ட பக்கத்தில் உள்ள உள்ளடக் கங்களைக் கண்டறியக் கூடிய மென் பொருள். ஒளி எழுத்து கண்டறி தலைப் பயன்படுத்தி அச்சிடப்படும் சொற்களை கணினி சொற்பகுதியாக மாற்றும். ஆனால் அதே வேளையில் ஒரு பக்கத்தில் உள்ள படங்கள் மற்றும் தலைப்புகளில் இருந்து சொற்பகுதி தானாகவே வேறு படுத்தப்பட்டு அறியப்படும்.

page set-up : பக்க அமைப்பு : காகிதத் தில் சொற்பகுதி வரைபடங்கள் எவ்வாறு அளிக்கப்படுகின்றது என்ப தையே இது குறிப்பிடுகிறது. பக்க அமைப்பில் இடம் பெறுவனவாக ஓரங்கள், தொடர் தலைப்புகள், பக்க எண்ணமைத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

page skip : பக்கத் தாவல் : நடப்புப் பக்கத்தின் எஞ்சிய பகுதியை தள்ளி

விட்டு அடுத்த பக்கத்தின் உச்சிப் பகுதிக்கு அச்சடிப்பி நகர்ந்து செல்லும்படி செய்யக்கூடிய கட்டுப்பாட்டு எழுத்து.

pagination : பக்க வரிசைப்பாடு; பக்கமாக்கல் : 1. ஒரு முழுப் பக்கத்தையும் வடிவமைக்கும் நோக்கத்திற்காக வரைகலைகளையும் அச்செழுத்துத் தொகுதிகளையும் மின்னணுவியல் முறையில் திறம்படக் கையாள்தல். 2. ஓர் அச்சிட்ட வாசகத்தைப் பக்கங்களுக்கு இணையான அலகுகளாகப் பகுத்தல். 3. பக்க எண் குறியீட்டு முறை.

paging : பக்கக் குறியீட்டு முறை; பக்கமாக்கம் : 1. இயல்புச் (முதன்மை) சேமிப்பகத்திலிருந்து உள்ளபடியான (துணை) சேமிப்பகத்துச் செயல்முறைகளை முன்னும் பின்னும் நகர்த்துவதற்கான உத்தி. 2. காட்சித் திரையில் காட்சியாக காட்டப்படும் பக்கத்திற்குப் பதிலாக அடுத்த அல்லது முந்திய பக்கத்தைக் காட்டுவதற்கான விசைப்பலகையிலுள்ள விசையின் செயற்பாடு.

paging rate : பக்கக் குறியீட்டு வீதம்; பக்கமாக்க வீதம் : உள்ளபடியான சேமிப்புப் பொறியமைவுகளில் ஒரு கால அலகின்போது நடைபெறும் சேமிப்பக மாற்றங்கள், வட்டு மாற்றங்கள் ஆகியவற்றின் சராசரி எண்ணிக்கை.

paint : படம்; வரைகலை : 1. கணினி வரைகலையில், திரையில் உண்மையாகவே ஓவியம் வரையப்படும். இதற்குப் பலகைக் குச்சி அல்லது சுட்டியைப் பயன்படுத்தி வண்ண புருசு போல இயக்கப்படும். 2. திரையில் ஏதாவது ஓரிடத்தில் தட்டச்சு செய்ததும் திரைவடிவம் ஏற்படுத்தல். திரையினை சொற்பகுதியில் வண்ணப்படுத்தல்.

paint brush : வண்ணத் தூரிகை : பல்வேறு கணினி வரைகலைப் பொறியமைவுகளில் பயனாளருக்குப் பல வகைத் தூரிகை வடிவங்களை அளிக்க அமைந்துள்ள திறம்பாடு. காட்சித் திரையில் சுட்டியின் முள்ளை நகர்த்துவதன் மூலம் இது பயன்படுத்தப்படுகிறது.

painting : வண்ணந்தீட்டல்; வண்ணப் பூச்சு : 1. ஒரு வரைகலை உட்பாட்டுச் சாதனத்தின் இயக்கப் பாதையினைக் காட்சியாகக் காட்டுதல். 2. கணினி வரைகலையில் தேர்ந்தெடுத்த பரப்பினை ஒரு திண்ணிய வண்ணத்தால் நிரப்புதல். 3. ஒரு காட்சித் திரையில் வரைகலைத் தகவல்களைக் காட்சியாகக் காட்டும் செய்முறை.

paint programme : வண்ணப்படுத்தும் ஆணைத்தொடர் : வரைகலைப் பலகை அல்லது சுட்டியைப் பயன்படுத்தித் திரையில் ஓவியம் வரைவதுபோலச்



வண்ணப்படுத்தும் ஆணைத்தொடர்
(Paint programme)

செய்யும் வரைகலை ஆணைத் தொடர். ராஸ்டர் கிராஃபிக் உருவங்

களை வண்ணப்படுத்தும் ஆணைத் தொடர் மூலம் உருவாக்கலாம்.

PAL : பிஏஎல் : 'நிலை மாற்ற வரி' எனப் பொருள்படும் "Phase Alter nation Line" என்ற ஆங்கிலச் சொல்லின் தலைப்பெழுத்துச் சுருக்கம். பெரும்பாலான கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தப்படும் வண்ணத் தொலைக்காட்சிப் பொறியமைவு.

palatino : வண்ணத்தட்டு: பல போஸ்ட் ஸ்கிரிப்ட் லேசர் அச்சுப்பொறிகளில் பயன்படுத்தப்படும் உள்ளமைந்த அச்செழுத்து.

palette : வண்ணத் தொகுதி; வண்ணத் தட்டு : ஒரு கணினி வரைகலைப் பொறியமைவில் அமைந்திருக்கக் கூடிய வண்ணங்களின் தொகுதி.

palette code : வண்ணத்தட்டு குறியீடு: கிடைத்துள்ள வண்ணத்தட்டிலிருந்து குறிப்பிட்ட நிறத்துடன் தொடர்புள்ள ஒரு எண்.

palette register : வண்ணத்தட்டு பதிவேடு :ஈஜிஏ (EGA) அல்லது பி.சி.ஜே.ஆரில் உள்ள 16 பதிவேடுகளில் ஒன்று. காட்சி நினைவகத்தில் வருகின்ற நிறத்திற்குத் தொடர்பான நிறத்தைத் திரையில் காட்டுகின்ற பதிவேடு.

palmtop : கையகக் கணினி; கையளவு: ஒரு கையால் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் இயக்கக்கூடிய அளவு சிறியதாக உள்ள கணினி. கையளவு சிறப்பு விசைப்பலகைகள் அல்லது விசை அட்டைகள் அமைக்கப்பட்டு தகவல் நுழைவு பயன்பாடுகள் செய்யப்படும். அல்லது குவெர்ட்டி (Qwerty) விசைப்பலகைகள் இருக்கும்.

PAM : பிஏஎம் : "துடிப்பு வீச்சு ஏற்ற இறக்கம்" என்று பொருள்படும் "Pulse Amplitude Modulation" என்ற ஆங்கிலச் சொல்லின் தலைப்பெழுத்துச் சுருக்கம். இதில் துடிப்பு வீச்சு ஏற்ற இறக்கச் சகடத்தின் மூலம் ஏற்ற இறக்க அலை உண்டாக்கப்படுகிறது.

pan : இடவல நகர்வு : ஒரு ஆவணம் அல்லது விரிதாளின் ஒரு பக்கத்திலிருந்து வேறொருப் பக்கத்திற்கு பக்கவாட்டாக நகர்வது. திரையை விட ஆவணம்/விரிதாள் கூடுதல் அகலமாக இருக்குமானால் இது மிகவும் பயனுள்ளதாகும்.

pane : சாளரப் பாளம் ; சாளரப் பிரிவு: தனியொரு சாளரத்தைப் பிரித்து உருவாக்கப்படும் பகுதிகள்.

panel : பலகைப் பாளம்.

panning : பக்கவாட்டு நகர்வு; இடவல நகர்வு : ஒரு காட்சித் திரையின் குறுக்கே காட்சியாகக் காட்டப்படும் வரைகலை தகவல்களின் கிடைமட்ட நகர்வு.

paper feed : காகித ஊட்டம்; தாள் ஊட்டம் : ஓர் அச்சடிப்பிக்குள் காகிதத்தைச் செலுத்தும் முறை.

paper jam : காகித அடைப்பு : அச்சுப் பொறி, தொலை நகல் அல்லது ஒளி நகல் பொறிகளில் காகிதம் மாட்டிக் கொள்ளுதல். காகித அடைப்பை தடுப்பது மற்றும் சமாளிப்பது பற்றிய ஆலோசனை விளக்கக் கையேட்டில் பொதுவாக இருக்கும்.

paperless office : காகிதமற்ற அலுவலகம் ; தாளிலா அலுவலகம் : காகிதமற்ற அலுவலகம் பற்றி நீண்ட காலமாகவே சொல்லப்பட்டு வந்தாலும் இப்போதும் ஒரு கட்டுக்கதையாகவே உள்ளது. சில நிறுவனங்களில் காகிதப் பயன் குறைந்தாலும் பலவற்றில் உண்மையாகவே கூடி

யிருக்கிறது. மேலும் காகித ஆவணமே இப்போதும் பரிமாற்றங்கள் மூலம் நிலை நாட்டப்பட்டு உள்ளது. சமயத்தில் அதிக சேமிப்பும் துல்லியத் திரைகளும் உள்ள கையகக் கணினிகள் பயணம் செய்யும் போது காகிதத்திற்கு மாற்றாக உள்ளன. ஒளி இழை கட்டமைப்புகள், தகவல், படம், குரல் மற்றும் காட்சியை விரைவாக அனுப்ப உதவுகின்றன. வண்ண லேசர் அச்சுப் பொறிகள் எங்கும் பரவி உள்ளதால், எத்தகைய சிக்கலானதாக இருந்தாலும், ஆவணத்தை மீண்டும் உருவாக்குவது எளிதானதே.

paper-out sensor : காகித வெளி உணர் கருவி : பிளேட்டனுக்குப் பின்னால் உள்ள ஒரு சிறிய பொத்தான். காகிதத்துடன் அதன் தொடர்பு விட்டுப் போகும்போது உடனடியாக சைகை தருகிறது. இந்த சைகை பொதுவாக, அச்சுப்பொறியினை நிறுத்துகிறது.

paper tape : காகித நாடா ; தாள் நாடா: கணினிகளில் பயன்படுத்தப்படும் முதலாவது உட்பாட்டுச் சாதனம். இது தொலையச்சு (Telex) எந்திரங்களில் பயன்படுத்தப்படுவது போன்ற ஒரு தொடர்ச்சியான பட்டைக் காகிதம் ஆகும். இந்தப்பட்டைக் காகிதத்தின் அகலத்தின் குறுக்கே, குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையிலான வரிசைகளிலும் (chemicals), காகிதப் பட்டையின் நீளவாக்கில் பத்திகளிலும் (frames) வட்டத் துளைகளைத் இடுவதன் மூலம் தகவல்கள் பதிவு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு வரிசையும் ஓர் எழுத்தினைப் பற்றி நிற்கின்றது. ஒருவரிசை பொதுவாக 8 அலைவரிசைகளாகப் பகுக்கப்பட்டிருக்கும். ஒரு தனிவகை விசையைப் பயன்படுத்தித் தகவல்கள் துளையிடப்படுகின்றன. இவை எழுத்துப் படிப்பி உதவியால் படிக்கப்படுகின்றன.

paper tape code : காகித நாடாக் குறியீடு ; தாள் நாடா குறி முறை : காகித நாடாவிலுள்ள துளைகளின் தோரணிகளை அவை குறிக்கும் ஆல்ஃபா எண்மான எழுத்துகளுடன் தொடர்பு படுத்தப் பயன்படுத்தப்படும் குறியீட்டு முறை.

paper tape punch : காகித நாடாத் துளையிடல்; தாள் நாடா துளையிடல்: குறியீட்டு உணர்வு வெளிப்பாட்டுச் சாதனம். இது கணினிக் குறியீட்டினை காகித நாடாவில் ஒரு புறக் குறியீடாக மாற்றுகிறது.

paper tape reader : காகித நாடாப் படிப்பி; தாள் நாடா வாசிப்பி : துளையிட்ட காகிதச் சுருளிலுள்ள துவாரங்களை எந்திரத்தின் மூலம் செய் முறைப்படுத்தக்கூடிய வடிவில் மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உட்பாட்டுச் சாதனம்.

parabola : நீள்வட்ட வடிவம்; பரவளையம் : வட்டக் கூம்பின் ஒரு பகுதியை ஊடு பொருள்களில் ஒன்றுக்கு இணையாகவுள்ள சமதளத்தினால் வெட்டுவதன் மூலம் கிடைக்கும் வரைகலை வளைவு. ஒரு குறிப்பிட்ட புள்ளியிலிருந்தும், ஒரு குறிப்பிட்ட காலக் கோட்டிலிருந்தும் சமதூரத்தில் இருந்துவரும் வகையில் நகர்ந்து செல்லும் ஒரு புள்ளியின் பாதை என்றும் இதனைக் கூறலாம்.

parabolic reflector : பரவளைய எதிரொளிர் : யு.எச்.எஃப் பேண்டுக்கு மேல் இறுதியிலும், எஸ்எச்எஃப் பேண்டிலும் உள்ள அலைவரிசைகளை ஒளிக்கற்றைகள் போலவே நடத்தலாம். பரவளைய எதிரொளிர்வைப் பயன்படுத்தி தேடு ஒளியை உருவாக்கும்போது சக்திமிக்க ஒளிக்

கற்றை பரவளைய எதிரொளிர்வு உள்ள இடங்களில் விழுவது போல் இதை (தட்டு என்று சொல்லப் படுவது) யும் பயன்படுத்தி இணைக் கற்றையில் தொகுக்கப்பட்டுள்ள வானொலி சக்தியுடன் கூடிய அதிகத் திறன் மிக்க அலைவாங்கியை அளிக்க முடியும். தட்டு குறுக்களவு வீட்டு தொலைக்காட்சி வாங்கிக்கு 20 செ.மீ. முதலாக செயற்கைக் கோள் களின் தரை நிலையங்களுக்கு 30 மீ. வரை கொண்டிருக்கும்.

paradise : பேரடைஸ் : வெஸ்டர்ன் டிஜிட்டல் கார்ப்பரேஷனின் பேர டைஸ் துணை நிறுவனம் உருவாக் கிய புகழ்பெற்ற காட்சி அட்டைகள்.

paradigm : கருத்தியல்.

paradox : பேரடாக்ஸ் : போர்லாண்ட் நிறுவனத்திலிருந்து வரும் பி.சிக் களுக்கான கட்டமைப்புக்குத் தயா ராக உள்ள, தொடர்பு முறை டி.பி. எம்.எஸ். பயன்படுத்த எளிதாகவும் எடுத்துக்காட்டு முறையில் கேள்வி கேட்கும் அமைப்பும் கொண்டது. அதனுடைய பால் (PAL)ஆணைத் தொடரமைப்பு மொழி தனித்தன்மை கொண்டது. பல பால் வாக்கியங்கள் பரிமாற்ற பேரடாக்ஸ் கட்டளை களைக் கொண்டது. இதனால் பேரடாக்ஸ் பயனாளர்கள் ஆணைத் தொடரமைப்பதை எளிதாகச் செய்ய முடியும். பேரபிக்ஸ் எந்திரம் (தக வல் தளப் பகுதி) தனியாகக் கிட்டும். 'சி' ஆணைத்தொடர்கள் மூலமும் இதை அணுக முடியும்.

paragraph : பத்தி : ஒரு தருக்க முறைச் செய்முறைத் தொகுதியாக அமைந் துள்ள ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட கோபால் மொழி (Common Business Oriented Language COBOL) வாக்கியங்களின் தொகுதி. இது ஒரு பெயரின் பத்தித் தலைப்புக்கு முந்தியதாக அமைந்திருக்கும்.

paragraph assembly : பத்தி இணைப்பு: ஒரு சொல் செயலியில் அல்லது வட்டுகளில் சேமித்து வைக்கப்பட் டுள்ள பத்தியிலிருந்து ஓர் ஆவ ணத்தை இணைக்கும் செய்முறை.

paragraph number : பத்தி எண் : நினை வகத்தில் உள்ள நிலையை வரை யறுக்கும் எண். 16 எட்டியல்களாக நினைவகத்தைக் குறிப்பிடுகிறது. சான்றாக பத்தி எண் 2 என்றால் இரண்டாவது 16 எட்டியல்கள் நினை வகத்தைக் குறிப்பிடுகிறது. இப்பத்தி யினை நோக்கி காட்டி திரும்பினால் நினைவகத்தின் 17 எட்டியலை அது காட்டுகிறது என்று பொருள்.

parallal error : நோக்கு மயக்கப் பிழை; விழிக் கோட்ட வழு.

parallel : ஒரு போகு; இணையான : 1. ஒரு சொல்லில் அல்லது செய்தி யிலுள்ள ஊடு பொருள்கள் அனைத் தையும் ஒரே சமயத்தில் கையாள்தல். 2. கணினி வரைகலையில் நேரிணை யான புள்ளி ஒவ்வொன்றிலிருந்தும் சமதூரத்தில் இருக்கின்ற ஒரு வரை கலைக் கோப்பில் உள்ள கோடுகளை அல்லது சம தளங்களை இது குறிக்கிறது.

parallel access : ஒரு போகு அணுகு தல்; இணை அணுகல் : ஒரு சேமிப் பியிலிருந்து தகவல்களைப் பெறு வதற்கு அல்லது அதில் தகவல் களைச் செலுத்துவதற்கு உதவும் செய் முறை. இதில் இத்தகைய அணுகு தலுக்குத் தேவையான நேரம் ஒரு குறிப்பிட்ட சேமிப்பு அமைவிடத் திலிருந்து ஒரு சொல்லின் ஊடு பொருள்கள் அனைத்தையும் ஒரே சமயத்தில் மாற்றுவதைப் பொறுத்த தாக இருக்கும்.

இது, தொடர்வரி அனுகுதலுக்கு மாறானது.

parallel adder : ஒரு போகு கூட்டல் கருவி; இணை கூட்டி : ஒவ்வொரு எண்ணளவிலுமுள்ள எல்லா எண் களையும் உள்ளே கொண்டு வந்து செயற்பாடுகளைச் செய்கிற கூட்டல் கருவி. இது தொடர்வரிசைக் கூட்டல் கருவியிலிருந்து வேறுபட்டது.

parallel arrays : இணை வரிசைகள் : ஒன்றோடொன்று தொடர்புள்ள இரண்டு அல்லது மேற்பட்ட வரிசைகள்.

parallel circuit : ஒருபோகு (மின்) சுற்றுவழி; இணைச் சுற்று : அமைப்பிகள் ஒவ்வொன்றின் இரு முனைகளும் ஒன்றுக்கொன்று இணையாக இணைக்கப்பட்டுள்ள மின் சுற்று வழி.

parallel computer : ஒருபோகு கணினி; இணைக் கணினி : எண்கள் அல்லது தகவல் வரிகள் கணினியின் தனித் தனி அலகுகளினால் ஒருங்கே செய்முறைப்படுத்தப்படக்கூடிய கணினி.

parallel conversion : ஒருபோகு மாற்றம்; இணை மாற்றம் : ஒரு குறிப்பிட்ட கால அளவின்போது பழைய மற்றும் புதிய பொறியமைவுகள் இரண்டையும் இயக்கும்படி செய்து ஒரு புதிய தகவல் செய்முறைப் படுத்தும் பொறியமைவுக்கு மாற்றக் கூடிய செய்முறை.

parallel input/output : ஒருபோகு உட்பாடு/வெளிப்பாடு; இணை உள்ளீடு/வெளியீடு : ஒவ்வொரு துண்மிக்கும் தனக்கெனச் சொந்தக் கம்பியைக் கொண்டிருக்கிற தகவல் அனுப்பீடு. அனைத்துத் துண்மிகளும் ஒரே சமயத்தில் அனுப்பப்படுகின்றன. இது, ஒரு சமயத்தில் ஒரேயொரு துண்மியை மட்டுமே அனுப்புவதிலிருந்து வேறுபட்டது. இது தொடர் உட்பாடு/வெளிப்பாடு என்பதற்கு மாறுபட்டது.

parallel interface : ஒருபோகு இடைமுகப்பு; இணை இடை முகம் : ஒரு பாதைத் தொகுதியின் வழியே ஒரே சமயத்தில் தகவல்களை மாற்றக் கூடிய சாதனத்தின் வரம்பெல்லை.

parallel operator : ஒருபோகு செயற்பாடு; இணை இயக்கம் : ஒரே தன்மையுடைய பல செயற்பாடுகளை அத்தகைய செயல் ஒவ்வொன்றுக் கும் தனித்தனியான ஒரே மாதிரியான அல்லது சரியொத்த சாதனங்களை அமைப்பதன் மூலம் ஒரே சமயத்தில் நிறைவேற்றுதல்.

parallel printing : இணை அச்சிடல்.

parallel port : இணை துறை : உ/வெ இணைப்பு. அச்சுப்பொறி அல்லது பிற இணை இடைமுக சாதனத்துடன் இணைக்கப் பயன்படுகிறது. பி.சி. யில் இது 25-பின் பெண் டிபி-25 இணைப்பி எனப்படும்.

parallel printer : ஒருபோகு அச்சடிப்பி; இணை அச்சுப்பொறி : ஒரே சமயத்தில் 8 கம்பிகளின் வழியே ஓர் எழுத்தினை (எழுத்து எண் முதலியன) கணினியிலிருந்து பெறுகின்ற அச்சடிப்பி.

parallel printing : ஒருபோகு அச்சடித்தல் ; இணை அச்சிடல் : ஒரே சமயத்தில் ஒரு வரிசை முழுவதையும் அச்சடித்தல்.

parallel processing : இணைச்செயல்பாடு; இணை அலசல் ; ஒருபோகு செயல்பாடு; இணைச் செயலாக்கம்; ஒருபோகு செய்முறைப்படுத்துதல் : பன்முகச் சாதனங்களில் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட செய்முறைகளை ஒருங்கே அல்லது ஒரே சமயத்தில் நிறைவேற்றுதல்.

parallel reading : ஒருபோகு படிப்பு ; இணை வாசிப்பு : ஒரு தகவல் அட்டையிலிருந்து வரிசை வரிசையாகப் படித்தல். இது தொடர் படிப்பிலிருந்து வேறுபட்டது.

parallel run : ஒருபோகு ஓட்டம்; இணையோட்டம் : ஒரு புதிய பொறியமைவினை அல்லது செயல் முறையினை பழைய பொறியமைவுக்கு இணையாக ஓட்டுதல். இது எளிதான அனுப்பீட்டுக்கும் பிழையின்றி மாற்றம் செய்வதற்கும் உதவுகிறது.

parallel transmission : ஒருபோகு அனுப்பீடு ; இணை செலுத்தம் : தகவல் தொடர்புகளில் தகவல் மாற்றத்திற்கான ஒரே முறை. இதில் ஒரு கணினியின் துண்மிகள் அனைத்தும் ஒரே சமயத்தில் பொருத்தப்படுகின்றன. இது, தொடர் அனுப்பீட்டிலிருந்து வேறுபட்டது.

parallelelizing : இணையாக்கல் : இணை செயலாக்கக் கணினிக்காக ஆணைகளை உருவாக்குதல்.

parameter : நிலையளவுரு : *1.* வரம்பற்ற மாறி; முக்கியமாக ஒரு குறிப்பிட்ட பொறியமைவின் ஒரு பண்பு அல்லது வரைநிலை அடை மொழி. *2.* ஒரு மாறியின் பண்புகளைத் தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளும் ஓர் இயற்கணித எண்ணுருக் கோவையிலுள்ள மாறி.

parametric : நிலையளவுருக்கள் சார்ந்த: ஒரு கோட்டு வளைவினை அல்லது இடப்பரப்பினை சில தற்காப்பு மாறிகளின் அடிப்படையில் வரையறுக்கிற உத்தி தொடர்பானது. கணினிவழி வடிவமைப்புப் பொறியமைவுகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

parameter block : அளவு கோல் கட்டம்: ஒரு சாதனம் அல்லது இயக்க அமைப்புப் பணியில் பயன்படுத்திய தகவலை நீடித்திருக்க நினைவகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாறிகளின் தொகுதி.

parent : தாய்க்கோப்பு : புதிய பதிவுருக்களை உருவாக்குவதற்குத் தேவைப்படுகிற, ஒரே தகவல் ஆதாரமாக இருக்கக்கூடிய உள்ளடக்கங்களைக் கொண்டது.

parent-child : பெற்றோர்-குழந்தை : தகவல் தள மேலாண்மையில் இரண்டு கோப்புகளுக்கு இடையிலான உறவுமுறை. பெற்றோர் கோப்பில் தொழிலாளர், வாடிக்கையாளர் போன்ற ஒரு பொருளைப் பற்றிய தேவையான தகவல் இருக்கின்றது. குழந்தை அதிலிருந்து உருவானது. சான்றாக, ஒரு நிறுவனக் கோப்பின் குழந்தை என்று அதன் தொழிலாளர் கோப்பினைக் குறிப்பிடலாம்.

parent/child relationship : தாய்/சேய் உறவு நிலை : செய்திகளை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லுதல். புதிய செய்தியை (சேய்) உருவாக்குவதற்குப் பழைய செய்தி (தாய்) இன்றியமையாததாகும்.

parent process : பெற்றோர் செயலாக்கம் : வேறொரு துணைப்பகுதி (அல்லது குழந்தை) செயலாக்கத்தை உருவாக்குகின்ற ஆணைத்தொடரின் (செயல் முறை) ஒரு பகுதி.

parent programme: பெற்றோர் ஆணைத் தொடர் : நினைவகத்தில் ஏற்றப்படும் முதல் அல்லது தலைமை அல்லது அடிப்படை ஆணைத் தொடர்.

parentheses : இடை முறிப்புக் குறிகள்; பிறை வளைவான : பிறை வடிவ வளை அடைப்புக் குறிகள். இவை ( ) என்று குறிக்கப்படும். கணிதக்

கணிப்புகளில் வளை அடைப்புக் குறிகளுக்குள் உள்ள செயற்பாடுகள் முதல் முந்துரிமை வாய்ந்த தனிச் செயற்பாடுகளாகக் கருதப்படு கின்றன.

parity : பொருத்தம் ; சமநிலை.

parity bit : சமநிலைத் துண்மி : எட்டியல்களின் ஒரு வரிசையுடன் பின்னிணைப்புச் செய்யப்படும் ஒரு சோதனைத் துண்மி. இதனால் இந்தத் தடுப்புத் துண்மிக்கு உட்பட்ட எட்டியல்கள் அனைத்தின் கூட்டுத் தொகையானது எப்போதும் ஒற்றைப்படையாக அல்லது எப்போ தும் இரட்டைப்படையாக இருக்கு மாறு செய்யப்படுகிறது.

parity checking : சமநிலைச் சோதனை; இணைச் சரிபார்ப்பு : தகவல் துண்மி களுடன் சேர்த்துச் சோதனைத் துண்மி களைப் பயன்படுத்தி தன்னியக்க மாகப் பிழைகளைக் கண்டறிதல்.

parity drive : சோதனை இயக்கி : ஒரு வட்டு வரிசையில் சோதனை துண்மி களை வைத்திருக்கும் தனி வட்டு இயக்கி.

parity error : சோதனை பிழை : ஒரு எழுத்தின் சோதனை துண்மியானது தவறாக இருக்குமானால் ஏற்படும் பிழை நிலை.

park : நிறுத்து : ஒரு படி/எழுது முனை நிலைவட்டினைத் தொடுமானால் அதனால் ஏற்படும் சேதத்தினைத் தடுக்க அந்த அலகை அதன் இருப் பிடத்திற்குக் கொண்டு வருமுன் படி/எழுது முனையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்ளல். மின்சாரம் நிறுத்தப்படும்போது பெரும்பா லான நவீன இயக்கிகள் இவ்வாறு நிறுத்திக் கொள்கின்றன.

Parkingson's Law : பார்க்கின்சன் விதி.

parser : பாகுபடுத்தி/ பகுப்பாய்வி : அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்து, அறிந்து கொள்கிற செயல் முறை அல்லது துணை வாலாயம்.

parse : அலகு : ஒரு சொற்பகுதி சரத் தினை அதன் பிரிவு பகுதிகளுக்கு கொண்டு செல்லுதல். டாஸ்(DOS) மூலம் கட்டளை வரி தகவலை அலகிட்டு கோப்பு அணுகு பணி களில் பயன்படுத்துவதற்காக திருத்தி அமைக்க முடியும்.

parsing : பாகுபடுத்தல் ; அலகிடல்: 1. அறிக்கைகளைச் சொற்றொடரியல் அலகுகளாகத் தனித்தனியாகப் பாகு படுத்தும் செயல் முறை. 2. ஒரு எழுத்துச் சரத்தினைப் பகுப்பாய்வு செய்து அதனை இன்னும் அதிக எளி தாகச் செய்முறைப்படுத்தும் அமைப் புக் குழுமங்களாகப் பகுத்தல்.

participatory media : பங்கேற்கும் தகவலகம்.

partition : பிரிவினை : நினைவகத்தில் ஒரு செயல் முறை நிறைவேற்றப் படும்போது அச்செயல் முறைக் கெனக் குறித்தொதுக்கப்படும் பகுதி.

partition table: பிரிவினைப் பட்டியல்: ஒரு நிலையான வட்டின் முதன்மைத் தொடக்கப் பதிவில் சேர்க்கப்பட் டுள்ள பட்டியல். ஒவ்வொரு பிரி வின் அளவு மற்றும் இருப்பிடம் பற்றிய தகவலை அது கொண்டிருக் கிறது.

partitioning : பிரிவினை செய்தல் ; பிரிப்பு : ஒரு கணினியின் சேமிப்புப் பகுதியைக் குறிப்பிட்ட பணிகளுக் காக அல்லது அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்ட சிறுசிறு அலகுகளாக உட்பகுப்பு செய்தல்.

parts explosion : உறுப்பு வரைதல் : ஓர் இணைப்பில் அடங்கியுள்ள அனைத்

துக் கூறுகளையும் வரைதல். இது இந்தக் கூறுகள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பினைக் காட்டும்.

parts list : உறுப்புப் பட்டியல் : உற்பத்தி செய்யப்பட்ட ஓர் இனத்தை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத் தப்பட்ட உறுப்புகள் அனைத்தின் அளவுகள், பெயர்கள், எண்ணிக்கை கள் அடங்கிய ஒரு தொகுப்பு. கணினி உதவி பெற்ற வடிவமைப்பு (computer aided design - CAD) பொறி யமைவுகளில் பெரும்பாலானவை இத்தகைய பட்டியல்களை ஒரு வடி வமைப்பு மற்றும் உற்பத்திச் செய் முறையின்போது தானாகவே புதுப் பித்துப் பேணிக் கொள்கின்றன.

parts programmer : உறுப்புச் செயல் முறையாளர் : எந்திர உறுப்புகளுக் கான இயற்பியல் விளக்கங்களைக் கணிதப் படிநிலைகளின் ஒரு தொடர் வரிசையாக மாற்றி அந்தப் படிநிலை களுக்குக் கணினிக் குறியீடுகளை வகுத்தமைக்கிற செயல்முறை யாளர்.

party line : தொகுப்புக் கம்பித்தொடர்; குழுமக் கம்பி : மையச் செயலகத்தி லிருந்து புறப்படும் தனியொரு கம்பி யுடன் இணைக்கப்பட்டுள்ள ஏராள மான சாதனங்களைக் குறிக்கும் சொல்.

Pascal : பாஸ்கல் (பாஸ்கல் எனும் கணினி மொழி) : கணினியுடன் தொடர்பு கொள்வதற்கும் சில கணிப்புகளைச் செய்யும்படி அறி வுறுத்துவதற்கும் பயன்படும் உயர் நிலைக் கணினி மொழிகளில் ஒன்று. இது பொது நோக்கத்திற்காக கட் டமைவு செய்யப்பட்ட செயல் முறைப்படுத்தும் மொழியாகும். இதனை சூரிச்சைச் சேர்ந்த நிக்லாஸ் விர்த் (Niklaus wirth) என்பவர் 1968 இல் கண்டுபிடித்தார். பிளைஸ் பாஸ்கல் (Blaise Pascal) என்ற ஃபிரெஞ்சுக் கணித மேதையின் நினைவாக இதற்கு இந்தப் பெயர் சூட்டப் பட்டது.

Pascal, Blaise (1623-1662) : பாஸ்கல், பிளைஸ் (1623-1662) ; ஃபிரெஞ்சுக் கணித மேதை; மேசைக் கணிப்பி வகையைச் சேர்ந்த முதலாவது கூட்டல் எந்திரத்தை 1642இல் கண்டு பிடித்தவர்.

Pascal's calculator : பாஸ்கல் கணிப்பி: பிளைஸ் பாஸ்கல் என்ற ஃபிரெஞ்சுக் கணித மேதை 1642இல் கண்டுபிடித்த முதலாவது கூட்டல் எந்திரம். இது மேசைக் கணிப்பி வகையைச் சேர்ந்தது. இது பல்லிணைகளைக் கொண்ட '0' முதல் '9' வரையிலான இலக்கங்களைக் கொண்டது. இது கூட்டல், கழித்தல் கணிப்புகளைச் செய்யக்கூடியது.

pascaline : பாஸ்கலைன் : 1642இல் ஃபிரெஞ்சு கணிதவியலார் பிளெய்ஸ் பாஸ்கல் உருவாக்கிய கணிப்பி எந் திரம். அதனால் கூட்டவும், கழிக்க வும் மட்டுமே முடியும். ஆனால் ஐரோப்பாவின் முக்கிய பகுதிகளில் அதன் 50 எந்திரங்கள் அமைக்கப் பட்டதால் அது மிகுந்த கவனத்தைப் பெற்றது.

pass : ஓட்டம் : 1. ஒரு கணினி செயல் முறையை நிறைவேற்றுவதில் ஒரு முழுமையான உட்பாட்டுச் செய் முறைப்படுத்தலையும் வெளிப் பாட்டுச் சுழற்சியையும் குறிக்கிறது. 2. ஓர் ஆதாரக் குறியீட்டினை ஒரு தொகுப்பி அல்லது இணைப்பி நுண்ணாய்வு செய்தல்.

passive device : ஓட்டச் சாதனம் : குறியீடுகளை மாற்றியமைக்காமல் ஓட விடுகிற சாதனம்.

passive graphics : ஓட்ட வரைகலை.

passive hub : அமைதியான முனை : இயங்கக்கூடிய மின்னனு எதுவு மில்லாத, அனுப்பப்படும் சமிக்ஞை களுடன் எதையும் சேர்க்கவியலாத கட்டமைப்பு முனை.

passive matrix LCD : இயங்காத எழுத்துரு எல்.சி.டி. : பொதுவான எல்.சி.டி. தொழில் நுட்பம். தேவை யான பத்தியிலும் வரிசையிலும் மின்சாரத்தை அனுப்புவதன் மூலம் ஒரு படப்புள்ளியில் வெளிச்சம் ஏற் படுத்துகிறது.

passive star : அசைவற்ற நட்சத்திரம்: கட்டமைப்பு அமைப்பு முறை. கூடு தல் செயலாக்கமின்றி பல முனை களின் கம்பிகளை இணைப்பது.

password : அனுமதிச் சொல்; உயிர் நிலைச் சொல் : கணினியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட செயல் முறைகளை அல்லது தகவல் கோப்புகளை அணுகுவதற்குப் பயன் படுத்தப்படும் ஒரு தனிச் சொல் குறியீடு அல்லது குழூஉக்குறி. ஒரு கணினியமைவில் அடையாளங் காண்பதற்காகவும், பாதுகாப்பு நோக்கத்திற்காகவும் இது பயன் படுகிறது. ஒவ்வொரு பயனாளருக் கும் ஒரு தனிச் சொல் ஒதுக்கப் பட்டிருக்கும்.

password protection : அனுமதிச் சொல் பாதுகாப்பு ; அணுகுதல் காலப் பாதுகாப்பு .

patch : வட்டப்பட்டை : 1. ஒரு பிழை யைத் திருத்துவதற்காக அல்லது ஒரு செயல்முறையை மாற்றுவதற்காக ஒரு செயல் முறைக்குள் செலுத்தப் படும் குறியீட்டு முறையின் ஒரு பகுதி. 2. தற்காலிக மின்னியல் இணைப்பு. 3. கணினி வரை கலை யில் ஒரு நீள்வளைவுப்பகுதி. இது மூன்று அல்லது நான்கு பக்கங் களைக் கொண்டிருக்கும். பரப்பு களின் முப்பரிமாணத்தை உருவாக் கும் வகையில் இவை அவற்றின் விளிம்புகளில் முதல் வரிசையுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒரு வட்டப்பட்டையின் இந்த விளிம்பு கள் பெரும்பாலும் முப்பரிமாணத் தொடர் உருவங்களை உருவாக்கும். இந்த வட்டப் பட்டைகளைக் கையாள்வது கடினம் எனினும் ஒரு வட்டப் பட்டை நூற்றுக்கணக்கான பலகோணக் கட்டங்களை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதால் தகவல் தளத்தின் வடிவளவு வெகு வாகக் குறைகிறது. 4. ஒரு செயல் முறையை அல்லது நிறைவேற்றத் தக்க கோப்பினை மாற்றமைவு செய்தல். இதனைப் பொதுவாக ஒரு வாடிக்கையாளர் பொறியாளர் செய் கிறார்.

patch panel : ஒட்டுப் பலகை : கம்பி அமைப்புப் பலகை. பல தரப்பட்ட இடை இணைப்புகளுக்கான வசதி யை நெட்டுளிகளின் வழியாக ஒட்டுப் பலகைகளுக்குப் பயன் படுத்துதல்.

patch string : ஒட்டுச்சரம் : தட்டு அணுகலின் கோப்பு கையாளும் முறையில் ஒரு கோப்பினை அடை யாளம் காணப் பயன்படுத்தும் சரம். டாஸ் இயக்க அமைப்பு (DOS) கட்டளை அளவில் தேவைப்படும் அதே வடிவம்தான் இது. சிறப்பு இயக்கியிலிருந்து தொடங்கி பின் சாய்வுக் கோட்டினால் பிரிக்கப்பட்ட துணைப்பட்டியல் எண்களைக் கொண்டதாக இருந்து அஸ்கி `0` எட்டியல் பின் தொடர முடியும். சர நீளத்தின் அதிக அளவு 63 எட்டி யல்கள்.

paste : ஒட்டு : ஓர் ஆவணத்திலிருந்து முன்னதாக வெட்டியெடுக்கப்பட்ட தகவலை ஒரு புதிய நிலையில் பொருத்துதல். சில கணினியமைவு களில் வாசகத்தின் அல்லது வரை கலையின் பரப்புகளை ஓர் ஆவணத் திலிருந்து வெட்டியெடுத்து பாது காத்து பின்னர் இன்னொரு ஆவணத் தில் ஒட்டலாம்.

patching : ஒட்டுதல் : 1. ஒரு செயல் முறையை மாற்றியமைப்பதற்காக அல்லது செயல்முறைப்படுத்தலின் பிழைகளைத் திருத்துவதற்காக அந்தச் செயல் முறையின் இலக்குக் குறியீட்டினை மாற்றுவதன் மூலம் மாற்றமைவு செய்வதற்கான தற் காலிக உத்தி. இது பெரும்பாலும் செயல்முறையின் மறுதொகுப் பினை அல்லது மறு இணைப் பினைத் தவிர்ப்பதற்காகச் செய்யப் படுகிறது. 2. வன்பொருளுக்கு தற் காலிக வட்டப்பட்டைகள் செய்தல்.

path : பாதை ; வழி : தற்போதைய விவரக் குறிப்பேடு அல்லாத பிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விவரக் குறிப்பேடுகளிலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறை வேற்றத்தக்க கோப்புகளைத் தேடி யெடுக்கும்படி செயற்பாட்டுப் பொறியமைவுக்கு அறிவுறுத்தப் பயன்படுத்தப்படும் ஓர் ஆணை.

path of excution : நிறைவேற்று வழி.

pattern : தோரணி; தினுசு.

pattern recognition : தோரணி அடை யாளம்; வடிவ அடையாளம் ; உரு வமைப்பு காணும் செய்முறைகள்; உருவ வகையறிதல் : வடிவங்கள், உருவங்கள், உருவரைகள் போன்ற வற்றைத் தானியக்க வழிமுறைகளின் படி அடையாளங் காணல்.

PAX : பேக்ஸ் : Private Automatic Exchange என்பதன் குறும்பெயர். அலுவலகத்திற்குள் உள்ள தொலை பேசி அமைவு. (இணை கட்டுமான விரிவாக்கம் கொண்ட) இணைச் செயலக சூழ்நிலையில் இன்டெல் லின் 860 ரிஸ்க் (Risc) சிப்பின் தரத்தை ஒட்டிய, யூனிக்ஸ் சிஸ்டம் V மற்றும் அல்லையன்ட் கணினியின் இணை மற்றும் முப்பரிமாண (3-D) வரை கலை தொழில் நுட்பங்கள் கொண்டது.

payware : பணப்பொருள் : பணத் திற்கு விற்கப்படும் மென்பொருள்.

PBX : பி.பி.எக்ஸ் : Private Branch Exchange என்பதன் குறும்பெயர். அலுவலகத்தின் உள்ளே தொலை பேசி அமைக்கும் திட்டம். அங்குள்ள ஒவ்வொரு தொலைபேசி இணைவு களுடன் இணைக்கப்படுவது மட்டு மல்லாது வெளிப்புற தொலைபேசி கட்டமைப்புடனும் இணைக்கப் படும். குறைந்த செலவில் வெளிப் புற அழைப்பை அனுப்புதல், அழைப்பை மேலனுப்புதல், மாநாட்டு அழைப்பு மற்றும் அழைப்பு கணக் கிடல் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது.

PC : பி.சி. : சொந்தக் கணினி (Personal Computer), சட்டைப்பைக் கணினி (Pocket Computer), கையடக்கக் கணினி (Portable Computer), அச் சிட்ட மின்சுற்றுவழி (Private Circuit), செயல் முறை மேடை (Programme Counter) ஆகியவற்றின் குறும்பெயர்.

PC bus: பி.சி. பாட்டை : முதல்தலை முறை பி.எம்,பி.சிக்களில் பயன் படுத்தப்பட்ட பாட்டை அமைப்பு முறை ஆரம்ப 8 துண்மி நடத்தையும், ஏ.டி. யுடன் அறிமுகப்படுத்தப்படும் 16 துண்மி விரிவாக்கத்தையும் உள் ளடக்கியது. 8 துண்மி அட்டைகள் 8 துண்மி மற்றும் 16 துண்மி அமைப்பு களுடன் சேரும். ஆனால் 26 துண்மி

அட்டைகள் 16 துண்மி பகுதியில் மட்டும்தான் சேரும். ஐ.எஸ்.ஏ. பாட்டை என்றும் அழைக்கப்படும்.

PCB : பிசிபி: அச்சிணைப்பு அட்டை: அச்சிட்ட மின்சுற்று வழிப்பலகை என்று பொருள்படும் "Printed Circuit Board" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சுருக்கம். இந்தப்பலகை, பிளாஸ்டிக்கினாலானது. இதில் கணினியின் பல்வேறு மின்னனுவியல் அமைப்பான்கள் பற்றவைத்து இணைக்கப்பட்டிருக்கும். இவை, இப்பலகையின் மேற்பரப்பில் பதிக்கப்பட்டுள்ள ஒன்றோடொன்று இணைந்த மெல்லிய கம்பிகள் மூலம் பிணைக்கப்பட்டிருக்கும்.

PC Card : பி.சி. அட்டை : நினைவக அட்டை அல்லது நினைவகம் மற்றும் உ/வெ அட்டை. பி.சி-க்கான விரிவாக்க அட்டை.

PC DOS : பிசி-டாஸ் : IBM சொந்தக் கணினியில் பயன்படுத்தப்படும் வட்டுச் செயற்பாட்டுப் பொறியமைவு. இது, எம்எஸ்-டாஸ் (Ms-Dos) என்ற செயற்பாட்டு முறையினைப் போன்றது.

P-Channel MOS: (PMOS) : பி-அலைவரிசை மாஸ் (பிஎம்ஓஎஸ்) : பேரளவு ஒருங்கிணைப்புச் சாதனங்களுக்கான (LSID) மிகப் பழைய உலோக ஆக்சைடு மின் அரைக் கடத்தித் தொழில் நுட்பம். இது, N-அலைவரிசை மாஸ் என்பதிலிருந்து வேறுபட்டது.

PC Keyboard : பி.சி. விசைப்பலகை : ஐ.பி.எம். பி.சி.யுடன் அறிமுகப்படுத்தப்பட்ட விசைப்பலகை, எண் நுழைவு மற்றும் சுட்டி நகர்த்தலுக்கான இரட்டைப்பணி விசைப் பலகையைத் தருகிறது. தரத்துக்கு அப்பாற்பட்டு மாற்று விசை அமைக்கப்பட்டது குறித்து கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இக்குறையை ஏ.டி. விசைப்பலகையில் சரிசெய்யப்பட்டது. விசை அமைப்புக்குத் தொடர்பின்றியும் ஐபிஎம் விசைப் பலகைகளை பயனாளர்கள் பெரும்பாலும் புகழ்கிறார்கள்.

PC LAN : பி.சி.லேன் : ஐ.பி.எம். கட்டமைப்பு அல்லது ஐ.பி.எம். ஏற்புடைய பி.சி-க்கள். தனிநபர் கணினிகளின் ஏந்தகையின் கட்டமைப்பு.

PCM : பிசிஎம் : "Plug Compatible Manufacturer" என்ற கணினிச் சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனத்தின் தலைப்பெழுத்துச் சுருக்கம். இதன் சாதனங்களை, தற்போதுள்ள கணினியமைவுகளில் செருகி, கூடுதலான வன்பொருள் அல்லது மென்பொருள் இடைமுகப்புகள் இல்லாமலேயே, அவற்றை இயக்கலாம்.

P-code : பி-குறியீடு : ஓர் ஆதாரக் குறியீட்டினை ஒரு தொகுப்பி மூலம் பி-குறியீடு எனப்படும் ஓர் இடையீட்டுக் குறியீடாக மாற்றக்கூடிய உத்தி. இது பிறகு ஒரு தாய் எந்திரத்தின் மீதுள்ள ஒரு தனிவகை பி- குறியீட்டு மொழிபெயர்ப்பி மூலமாக, நிறைவேற்றத்தக்க இலக்குக் குறியீட்டினைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. பாஸ்கல் மொழியின் பல்வேறு வடிவங்கள் இந்த பி-குறியீட்டினைப் பயன்படுத்துகின்றன.

PC Network : பி.சி. இணையம் : ஐ.பி.எம்.மின் கட்டமைவு மற்றும் ஐ.பி.எம். ஏற்புடை பி.சி-க்களுக்கான இணையம் எந்தவகையான தனிநபர் கணினிகளின் கட்டமைப்பு. ஐ.பி.எம். நிறுவனத்தின் முதல் பி.சி. லேன் 1984இல் அறிமுகப்படுத்தப்பட்டது. சி.எஸ்.எம்.ஏ/சி.டி என்

முறையைப் பயன்படுத்தி நெட் பயாஸ் இடைமுகத்தை அறிமுகப் படுத்தியது. அடையாள வளைய கட்டமைப்பு ஆதரவு பின்னர் சேர்க் கப்பட்டது. இதன் மைக்ரோசாஃப்ட் வடிவம் எம்.எஸ்-நெட் என்று அழைக்கப்படுகிறது.

PC Paintbrush : வண்ணத் தூரிகை : இசட் சாப்ட் கார்ப்பரேஷன் நிறு வனம் உருவாக்கிய பி.சி வண்ண மடிக்கும் ஆணைத் தொடர். பரவ லாகப் பயன்படுத்தப்பட்டது. வரை கலை படிவத்திற்கு துறையின் தர நிருணயத்தை உருவாக்கியது. அதன் பி.சி எக்ஸ் ராஸ்டர் வரைகலை வடிவம் பல வரைகலை அமைப்பு கள் சொல்செயலாக்க மற்றும் மேசை மேல் பதிப்பக ஆணைத் தொடர் களில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

PC tools deluxe : பிசி டூல்ஸ் டீலக்ஸ்: சென்ட்ரல் பாயின்ட் சாஃப்ட்வேர் நிறுவனத்தின் பி.சி.பயன்பாடுகளுக் கான ஒட்டுமொத்த பேக்கேஜ். டாஸ் ஷெல் மற்றும் கோப்புமேலாண்மை, தகவல் தொடர்புகள், வட்டு நினை வகப்படுத்தல், பின் ஆதரவு மற்றும் தகவல் நெருக்குப் பயன்பாடுகளைக் கொண்டது.

PC Compatible: பி.சி. ஏற்புடைய : ஐ.பி.எம்.பி.சி. மற்றும் பி.எஸ். 2 தர நிர்ணயங்களுக்கு ஏற்புடைய தனி நபர் கணினி.

PCL Printer Control Language : பி.சி.எல் : Printer Control Language என்பதன் சுருக்கம். எச்.பி.லேசர் ஜெட் பிரின்டர்களுக்கான கட்டளை மொழி. பல அச்சுப்பொறிகள், எழுத் தச்சு அமைப்பாளர்களுக்கு அதுவே நடைமுறை தர நிருணயமாக ஆகி விட்டது. 1990இல் லேசர் ஜெட் III உடன் அறிமுகப்படுத்தப்பட்ட பி.சி. எல். லெவல் 5 கம்ப்யூட்டர் கிராபிக் சின் புத்திசாலி அளவுமாறும் எழுத் தச்சுகளுக்கு ஆதரவு தருகிறது.

PCX : பி.சி.எக்ஸ் : இசட் சாஃப்ட் கார்ப்பரேசன் உருவாக்கிய பரவ லாகப் பயன்படுத்தப்படும் ராஸ்டர் வரைகலை சேர்ப்புப் படிவம். இது மோனோகிராம் மற்றும் வண்ண முகப்பின் 2 துண்மி, 4 துண்மி, 8 துண்மி மற்றும் 24 துண்மிகளைக் கையாள்வதுடன் 1:1:1 முதல் 1:5:1 வரையிலான சுருக்க விகிதத்தை எட்டுகிறது.

PDM : பிடிஎம் : 'துடிப்புக் கால ஏற்ற இறக்கம்' எனப் பொருள்படும் "Pulse Duration Modulation" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சுருக்கம். இந்தத் துடிப்புக் கால ஏற்ற இறக்கத்தில், ஒரு துடிப்பின் கால நீட்சியானது மாறுபடுகிறது.

இது 'பிஏஎம்' (Pam), 'பிபிஎம்' (PPM) என்பவற்றுக்கு வேறுபட்டது.

PDP : பிடிபி : ஒரு வகைக் கணினி. டிஜிட்டல் எக்யூப்மென்ட் கார்ப்ப-ரேஷன் (Digital Equipment Corporation) என்ற அமைவனம் தயாரிக்கும் கணினிகளின் பெயர்.

PEEK:கூர்நோக்கு:கணினியின் செயல் முறைப்படுத்தத்தக்க நினைவகத்தில் அமைவிடம் எதனையும் கூர்ந்து நோக்குவதற்குச் செயல்முறை யாளரை அனுமதிக்கிற கணினி மொழி ஆணை.

peek-a-boo system : துளை காண் முறை : அட்டைகளை ஒன்றன் மேல் ஒன்று அடுக்கிவைத்து அவற்றி லுள்ள ஒருபடித்தான அமைவிடங் களில் துளைகள் இருக்கின்றனவா, இல்லையா என்பதைச் சரிபார்க்கும் முறை.

peer: சக : தகவல் தொடர்புகளில் ஒரே வரைமுறை அளவில் உள்ள வேறொரு இயங்கும் அலகு.

peer-to-peer network : சகாவுக்கு சகா பிணையம் : அனைத்து பயனாளர் களும் அனைத்துப் பணி நிலையங் களில் தகவல்களை அனுப்ப அனும திக்கும் குறும் பரப்பு பிணையம். அர்ப்பண கோப்பு வழங்கிகள் தேவைப்படாது. ஆனால் பயன் படுத்தப்படலாம்.

pen-based computing : பேனா சார்ந்த கணிப்பு : கணினியில் கையெழுத்து மற்றும் அடையாளங்களை நுழைக்க பேனாவைப் பயன்படுத்துதல்.

Pen Carriage : பேனாச் சகடம்.

Pen Plotter : பேனா வரைவி : பார்க்க: வரைவி (Plotter), முரசு வரைவி (Drum Plotter). இது, நிலைமின்னியல் வரை விலிருந்து (Electrostatic Plotter) வேறு பட்டது.

peopleware : அலுவலாளர்கள்; மனித வளம் : செயல்முறைகளை வடி வமைத்தல், கணினிச் சாதனங்களை இயக்கிப் பேணிவருதல் போன்ற பணிகளைச் செய்கிற அலுவலர்கள்.

penpoint : பென் பாயின்ட் : கோ கார்ப்பரேஷன் உருவாக்கிய இயக்க அமைப்பு. கையால் எழுதும் உள்ளீ டுக்கு இடைமுகத்தை அறிவது. டாஸ் ஏற்புடை கோப்பு அமைப்பை அது பயன்படுத்துகிறது. ஆனால் டாஸ் பயன்பாடுகளை ஏற்ப தில்லை. எழுதுபவரின் பேனா வீச்சு களின் போக்கு, வேகம் மற்றும் ஒழுங்கு ஆகியவை ஆராய்ந்து ஏற்கப் படுகின்றன.

PEPPER board : மிளகு அட்டை : நெம்பர் நைன் கம்ப்யூட்டர் கார்ப்ப ரேசன் உருவாக்கிய பி.சி.-க்களுக் கான வரைகலை காட்சி அட்டை களின் குடும்பம். கேட் (CAD) மற்றும் உயர் வரைவு வரைகலை பயன்பாடு களுக்குத் தேவைப்படும் அதிகத் தெளிவான உருவங்களை வழங்கு கிறது.

perforator : துளையிடு விசை; துளைப்பி : காகித நாடாவில் துளை யிடுவதற்கான விசைச் சாதனம்.

perform : நிறைவேற்று; செயலாற்று : ஒரு கணினியில் ஆணைகளை நிறை வேற்றுதல்.

performance : நிறைவேற்றத் திறன்; செயலாற்றல் : ஒரு பொறியமைவின் மொத்த உற்பத்தித் திறனை அறுதி யிடுவதற்கான முக்கியக் காரணி. இது பெரும்பாலும், அணுகு வசதி, வெளிப்பாடு, நிறைவேற்றக் காலம் ஆகியவற்றின் மூலம் தீர்மானிக்கப் படுகிறது.

performance monitor : செயற்பாட்டு முகப்பு; நிறைவேற்ற அறிவிப்பி; செயலாற்றல் கண்காணிப்பி : ஒரு கணினியினால் நிறைவேற்றப்படும் பணிகளின் அளவுகளைக் கண் காணித்துக் காட்டும் செயல்முறை.

perfory : துளைப்பட்டை : விசிறி மடிப்புக் கணினிக் காகிதத்தின் இரு பக்கங்களிலும் உள்ள, பிரித்தெடுக் கத்தக்க துளையிட்ட பட்டைகள்.

perfs : துளைகள் : குண்டூசி ஊட்டு விளிம்புகளை அகற்றிவிட்டு தொடர் காகிதத்தை தனித்தனிப் பக்கங் களாகக் கிழித்தெடுப்பதற்கு உதவக் கூடிய துளைகள்.

periodic reports : காலமுறை அறிக்கை: பயன்படுத்துவோருக்கு ஒழுங்கான முறையில் தகவல்களை அளிக்கிற அறிக்கை.

Peripheral : வெளிப்புற; சுற்றப்பட்ட; வெளிப்பட்ட:கணினியுடன் இணைக்கப்படும் முகப்பு, விசைப் பலகை, அச்சுப்பொறி, பிளாட்டர், வட்டு அல்லது நாடா இயக்கி, வரைகலை டேப்லெட், ஸ்கேனர், ஜாய்ஸ் டிக், பேடில் மற்றும் சுட்டி எந்த ஒரு வன்பொருள் சாதனமும்.

Peripheral equipment : புறநிலைச் சாதனம் : ஒரு கணினியமைவில் மையச் செயலகத்திலிருந்து வேறுபட்டுள்ள புறநிலைச் செய்தித் தொடர்புக்கு வசதி செய்து கொடுக்கிற சாதனங்களின் ஓர் அலகு. மைய செயலகத்தின் புறப்பகுதியுடன் இணைக்கப்பட்டிருப்பதால் இவை 'புறிநிலைச் சாதனங்கள்' எனப்படுகின்றன. எடுத்துக்காட்டு: உட்பாட்டு/ வெளிப்பாட்டு அலகுகள்; துணைச்சேமிப்புஅலகுகள்;அட்டைப் படிப்பி தட்டச்சுப் பொறி; வட்டுச் சேமிப்பு அலகு.

peripheral device : வெளிப்புறச் சாதனம் : ஒரு கணினி அமைப்பால் மையச் செயலகத்தைத் தவிர்த்த வெளிப்புற தகவல் தொடர்பினை வழங்கும் எந்த ஒரு கருவி அலகும், மையச்செயலக அல்லது அமைப்புப் பெட்டியின் வெளிப்புறத்தில் இணைக்கப்படுவதால் அவற்றை வெளிப்புறச் சாதனங்கள் என்று அழைக்கிறோம்.

peripheral equipment operator : புறநிலைச் சாதன இயக்குநர் : சந்தடி மிகுந்த ஒரு கணினிக் கூடத்தில், கணினி இயக்குநருக்கு கணினியின் சேர்முனைப் (console) பொறுப்பு குறித்தளிக்கப்படுகிறது. அவர் அதை விட்டு மிக அரிதாகவே அப்பால் செல்கிறார். வட்டு அடுக்குகளை ஏற்றி இறக்கவும், நாடாக்களைப் பொருத்தவும், அட்டைகளை அடுக்கவும், வெளிப்பாடுகளுக்கு முத்திரையிடவும், பல்வேறு உட்பாட்டு/ வெளிப்பாட்டுச் சாதனங்களை இயக்கவும் கூடுதல் ஆட்கள் உதவுகிறார்கள். இவர்கள் பொதுவாகப் புறநிலைச் சாதன இயக்குநர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

peripherals : வெளிப்புறக் கருவிகள் : ஒரு கணினி அமைப்பின் உள்ளீடு/ வெளியீட்டுச் சாதனங்கள் மற்றும் துணை நிலை சேமிப்பு அலகுகள்.

Periphery : சுற்றுவரை.

Pheripheral Slots : புறநிலைத் துளை விளிம்புகள் : சில கணினிகளின் இல்லத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள வெற்றுத் துளை விளிம்புகள். இவற்றின் மூலம், வன்பொருள்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் திறம்பாடுகளைப் பெருக்குவதற்கு, அச்சிட்ட மின்சுற்றுவழி அட்டைகளைச் சேர்க்கலாம். மின்சுற்றுவழிப் பலகைகளைச் செருகுவதற்கான தாய்ப்பலகை குழிப்பள்ளங்கள்.

permanent font : நிலையான அச்செழுத்து : அச்சுப்பொறி நிறுத்தப்படும் வரை அச்சுப்பொறியின் நினைவகத்தில் தங்கியுள்ள அச்செழுத்து மென்பொருள்.

permanent storage : நிலைச்சேமிப்பி; நிலைத்தேக்கம்.

permutation : வரிசை மாற்ற வகை : ஒரு பெரிய தொகுதியில் உள்ள பொருள்களின் ஒருவகையான சேர்ப்பு முறை. சான்றாக, 1,2,3 என்னும் தொகுதி எண்களில் 6 வகையான பெர்முட்டேஷன்களைச் செய்ய முடியும். 12,21,13,31,23 மற்றும் 32.

Persistence : உறுதிப்பாட்டுத்திறன்; நீடிப்பாற்றல் : ஒரு செறிவற்ற எரியத்

தின் (Phosphor) ஒளியாற்றல் நீடிப்புத் திறன். ஓர் எரியத்திற்கு எலெக்ட்ரான் துப்பாக்கிகள் மூலம் கிளர்ச்சி யூட்டிய பிறகு அது மங்கத் தொடங்கு வதால், அது மிகவும் மெதுவாக மங்குவதற்கு ஒரு நீண்ட உறுதிப் பாட்டுத் திரை உதவுகிறது.

Personal computer : சொந்தக் கணிணி; தனிமுறைக் கணிணி : நியாயமான விலையில் கிடைக்கும் நுண் கணினி யமைவு. இது சொந்தப் பயன்பாட் டுக்கு உரியது. வணிகப் பயன் பாட்டுக்கு உரியதன்று.

Personal computing : சொந்தக் கணினி முறை : தகவல்களைப் பெறுதல் அல்லது பதிவு செய்தல் போன்ற பயன்பாடுகளுக்காகத் தனிநபர்கள், ஒரு சொந்தக் கணிணியை - பொது வாக ஒரு நுண்கணினியைப் பயன் படுத்துதல். இது பெரும்பாலும் தானியங்கி விரைவுக் காசாளர் எந்திரங்களுடன் (Automatic Teller Machines) பயன்படுத்தப்படுகிறது.

Personal Information Manager (PIM) : தனி நபர் தகவல் மேலாளர் (பிஐஎம்): சொற்பகுதி, எண் தகவல் ஆகிய வற்றை குறிப்புகள், பட்டியல்கள் குறிப்புரைகள் மற்றும் பலதரப்பட்ட பிறவகைகளில் இறுதிப்பயனாளர் கள் சேமித்து ஒழுங்குபடுத்தி, திரும் பப் பெறுவதற்கான மென்பொருள் தொகுப்பு.

Personal Identification Number : தனி யாள் அடையாள எண்.

Personalized form letter : உருப் படிவக் கடிதம் : ஒரு சொல் செய் முறைப்படுத்தும் பொறியமைவி னால் அல்லது ஓர் இணைப்பு அச் சடிப்புச் செயல் முறையினால் கணினி வழி உருவாக்கப்பட்ட படிவக் கடிதம்.

Personal Workstation : தனிநபர் பணி நிலையம் : தனிநபர் கணினி அல்லது பணி நிலையங்கள் போன்றதே.

PERT : பெர்ட் : திட்ட மேலாண் முறை : செயல்முறை மதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்தி என்று பொருள்படும் "Programme Evaluation and Review Technique" என்ற ஆங்கிலச் சொற் றொடரின் தலைப்பெழுத்துச் சுருக் கம். இது, ஒரு செய்முறையின் ஒவ் வொரு நடவடிக்கைக்கும் தேவைப் படும் காலவரம்பினையும், ஒவ் வொரு நடவடிக்கையின் முடிவுக் கும், அடுத்து வரும் நடவடிக்கை யின் செயலுக்குமிடையிலான தொடர்புகளையும் பகுப்பாய்வு செய்வதை உள்ளடக்கிய நீண்ட காலப் பேரளவுத் திட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு மேலாண்மை உத்தி.

PERT chart : பெர்ட் வரைபடம் : காலத் திற்கு எதிரான பணிக்கூறுகளின் கூட்டுச் சார்புடைமைகளைக் குறிக் கும் வரைபடம். இது வட்டங்களாக வும், இணைப்புக் கோடுகளாகவும் வரைகலை முறையில் காட்டப் பட்டிருக்கும்.

Petri nets : பெட்ரி வலைகள் : ஒரு போகு ஒருங்கிணைவுடன் கூடிய பொறியமைவுகளைக் குறிப்பதற் கான பயனுள்ள மாதிரி உருவம்.

PET computer : பெட் கணிணி : Personal Electronic Transaction Computer என்பதன் குறும்பெயர். 1977 இல் கம்மோடர் நிறுவனம் சிபி/எம் மற்றும் ஃபிளாஸ்டிக் சார்ந்த தனி நபர் கணினியை அறிமுகப்படுத் தியது. முதல் மூன்று தனிநபர் கணினிகளில் இதுவும் ஒன்று.

Phase change recording : நிலை மாற்றப் பதிவிடல் : ஒளிமுறை பதிவா

கும் தொழில் நுட்பம். உலோக மேற் பரப்பின் படிகப் பகுதியில் மாற்றிய மைப்பதன்மூலம் துண்மியை உரு வாக்க லேசர் பயன்படுத்தப்படு கிறது. படிக்கும்போது துண்மி ஒளியைப் பிரதிபலிக்கிறது அல்லது ஏற்றுக் கொள்கிறது.

Phased conversion : படிப்படி மாற்றம்: பழைய தகவல் அமைப்பிற்குப் பதிலாகப் புதிய அமைப்பினைப் படிப்படியாகப் புகுத்துவதற்கான பொறியமைவு நிறைவேற்ற முறை. இது நேரடி மாற்றத்திற்கு (direct conversion) மாறுபட்டது.

Phase locked : நிலைபூட்டிய: ஒரு மின்னணு மின் சுற்றில் ஒரே நேரத் திய தாக்குதலைப் பராமரிக்கும் தொழில் நுட்பம். உள்ளீட்டு சமிக் ஞைகளிடமிருந்து மின் சுற்றுகள் அவற்றின் நேரத்தை அமைத்துக் கொள்கின்றன. மேலும், ஒரே நேரத் தில் எல்லாம் இயங்குகின்றனவா என்பதற்கான பதில் பெறும் மின் சுற்றுகளையும் அவை வழங்கு கின்றன.

Phase modulation : நிலைக் குறிப் பேற்றம் : அனுப்பும் தொழில் நுட் பம் தகவல் சமிக்ஞையை அதனைக் கொண்டு செல்லும் அமைப்புடன் சேர்க்கிறது. கேரியரின் நிலையை மாற்றியமைப்பதன் மூலம் இதுச் செய்யப்படுகிறது.

phone connector : தொலைபேசி இணைப்பி : இரண்டு அல்லது மூன்று கம்பி கூட்டச்சுக் குழாய்க்கான செருகி மற்றும் துளை. நுண் தொலை பேசி மற்றும் தலை தொலைபேசி பெருக்கிகளில் பொருத்தப் பயன் படுத்தப்படுகிறது. பிளாக்கினது ¼" தடிமன் ஆணி போன்றது. பிராங் 1¼ அங்குல நீளமுள்ளது.

phone hawk : தொலைபேசிக் கொள்ளையன் : மோடெத்தின் மூலம் ஒரு கணினியை அமைத்து தகவல் களை நகலெடுப்பது அல்லது அழித் தலைச் செய்பவனைக் குறிப்பிடும் குழூஉச் சொல்.

Phonemes : ஒலியன்கள் : மனிதர் பேசும் முறையில் அடங்கியுள்ள மாறுபட்ட ஒலிகள். பேசும் சொற் களின் மிகச்சிறிய அலகுகள். எடுத்துக்காட்டு: க், ச், ஷ்.

Phonetic System : ஒலிப்பியல் முறை: குரல் தகவல் (ஒலியன்கள்) அடிப் படையிலான தகவல்களைப் பயன் படுத்திப் பேச்சு மொழி போன்ற ஒலி களை உண்டாக்கும் முறை.

phosphor : எரியம் : பூமியில் அரி தாகக் கிடைக்கும் பொருள். இது எதிர் மின்கதிர்க் குழலின் உள் முகப் பில் பூசுவதற்குப் பயன்படுகிறது. ஒரு செய்தி அறிவிப்பின் எலெக்ட்-ரான் துப்பாக்கிகள் உண்டாக்கும் ஒளியினை இது இருத்திவைத்துக் கொள்கிறது. திரையில் காணும் ஒவ்வொரு புள்ளியும் உண்மையில் ஒரு குறிப் பிட்ட நேரம் ஒளிரக்கூடிய ஓர் எரியமே ஆகும். புள்ளிகள் ஓர் உருக் காட்சியை உருவாக்கப் பயன் படுகின்றன.

photo composition : ஒளிப்பட அச்சுக் கோப்பு : அச்செழுத்துகளைக் கோப் பதற்கு மின்னணுவியல்செய்முறைப் படுத்துதலைப் பயன்படுத்துதல். அச் செழுத்துகளை வரையறுப்பதையும், அமைப்பதையும், அதனை ஒளிப் படச் செய்முறைப்படித் தயாரிப்ப தையும் இது உள்ளடக்கும்.

photoelectric devices : ஒளிப்பட மின்னியல் சாதனங்கள் :கண்ணுக்குப் புலனாகும் அகச்சிவப்பு அல்லது புறவூதாக் கதிர்வீச்சின் விளைவாக

ஒரு மின்னியல் சைகையினை உண்டாக்கும் சாதனங்கள்.

photolithography : ஃபோட்டோ லித்தோ கிராஃபி : ஒரு சிப்புவில் உள்ள மின்சுற்றுப்பாதைகள் மற்றும் மின் ஊணுப் பொருள்களின் வடிவமைப்பை தகடின் மேற்பரப்புக்கு மாற்றுகின்ற லித்தோகிரஃபி நுட்பம். சிப்புவின் ஒவ்வொரு அடுக்குக்கும் ஒரு ஒளிப்பட மூடி உருவாக்கப்படும். தகட்டின் மீது ஒளி உணர் திரைப்படப் பூச்சு அளிக்கப்பட்டு ஒளிப்பட மூடிமூலம் ஒளிரும் ஒலியில் காட்டப்படும். தகடினைச் சென்றடையும் ஒளி, படத்தை கடினப் படுத்துகிறது. தகட்டை அமிலத்தில் அல்லது வெப்ப கியாஸ்களில் நனைத்தால் கடினப் படுத்தப்படாத பகுதி செதுக்கி எறியப்படுகின்றன.

photomask : ஒளிப்பட மூடி : ஒளி புகக் கூடிய தகட்டின் தெளிவற்ற உருவம். ஒரு சாதனத்திலிருந்து வேறொன்றுக்கு ஒரு உருவத்தை மாற்ற வேண்டுமென்றால் ஒளி வடிகட்டி பயன்படுத்தப்படுகிறது.

photomicrography : ஒளிப்பட நுண்ணியல் : நுண்காட்டிப் படங்களை ஒளிப்படமெடுத்தல்.

photo-optic memory : ஒளிப்பட-ஒளியியல் நினைவகம்; ஒளி ஊடக நினைவகம் : சேமிப்புக்காக ஒளியியல் ஊடகத்தைப் பயன்படுத்தும் நினைவகம். எடுத்துக்காட்டு: ஒளிப்படச் சுருளில் பதிவுசெய்வதற்கு ஒரு லேசரைப் பயன்படுத்தலாம்.

photon : போட்டோன்; ஒளித் துகள் : ஒளியின் அடிப்படைப் பகுதிகள். அதன் மின்னணு இணைப்பகுதியை விட அது சிறியது. ஆகவே போட்டோனிக் மின் சுற்றுக்குள்ளேயே அதனால் அதிக அளவு சிற்றுருவாக்க முடியும்.

photonics : ஒளிப்படவியல் : மின் சாரத்திற்குப் பதிலாக ஒளியைப் பயன்படுத்தி எந்திர மின்சுற்றுகளை உருவாக்கிய அறிவியல்.

photo optic memory : ஒளிப்பட ஒளிவ நினைவகம் : ஒளிப்பட உணர் திரைப் படத்தில் தகவல்களைப் பதிவு செய்ய லேசர் ஒளிக்கற்றையைப் பயன்படுத்தும் சேமிப்பகச் சாதனம்.

photo pattern generation : ஒளிப்படத் தோரண உருவாக்கம் : ஒன்றன்மேல் ஒன்று படிந்துள்ள அல்லது அடுத்தடுத்துள்ள செவ்வகப் பரப்புகளின் ஒரு தோரணியில் ஒளிபடும்படி செய்து ஓர் ஒருங்கிணைந்த மின் சுற்றுவழித் திரையை உண்டாக்குதல்.

photo plotter : ஒளிப்பட வரைவி: அச்சிட்ட மின் சுற்றுவழிப் பலகை வடிவமைப்புக்கும், ஒருங்கிணைந்த மின்சுற்று வழித் திரைகளுக்கும் ஒளிப்பட முறைப்படி உயர்ந்த அளவு துல்லியமான கலைப் படைப்பு மாதிரிகளை உருவாக்குவதற்கான வெளிப்பாட்டுச் சாதனம்.

photoreallistic image synthesis : ஒளிப்பட நிகழ்வுணர் உருவப்பிரிவு : கணினி வரைகலையில், வரையறை செய்வதற்கானதொரு படிவம். உண்மையான உருவத்தை அது உள்ள படியே காட்டுகிறது. மேற்பரப்பு உள்ளமைப்பு, ஒளிமூலங்கள், இயக்கத் தடங்கள், பிரதிபலித்தல் போன்ற தன்மைகளை அது உள்ளடக்கியுள்ளது.

photoresist : ஒளித்தடுப்பு : செதுக்குருவ மின்கடத்தாச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் செய்முறை.

இதில், ஒரு சிலிக்கன் தகட்டு வில்லையில், இருக்க வேண்டிய பகுதியைத் திரையிட்டு மறைத்து, ஆக்சிகரமான பரப்பு அகற்றப்படுகிறது.

Photo sensitive : ஒளியுணர்வு.

photosensor : ஒளிப்பட உணர் கருவி: ஒளி உணர் சாதனம். ஒளிமுறை நுண்ணாய்வு எந்திரத்தில் பயன் படுத்தப்படுவது.

photo typesetter : ஒளிப்பட அச்சுக் கோப்பி; ஒளி அச்சுக் கோப்பி : வாசகங்களைத் தொழில் முறையான உயர்தர அச்செழுத்துகளாக மாற்றக்கூடிய கணினிக் கட்டுப் பாட்டுச் சாதனம். பெரும்பாலான நூல்கள், ஒளிப்பட அச்சுக் கோப்பி களில் அச்சுக் கோக்கப்படுகின்றன.

physical : பருப்பொருளான: மின்னணு அல்லது எந்திர நிலையிலான சாதனங்களைக் குறிப்பிடுகிறது.

physical design : வடிவமைப்பு ; பருப்பொருள் : சேமிப்புச் சாதனங்களில் தகவல்கள் எவ்வாறு வைத்து வரப்படுகின்றன என்பதையும் அவை எவ்வாறு அணுகப்படுகின்றன என்பதையும் குறிக்கும் சொல்.

physical address : பருப்பொருள் முகவரி : ஒரு பொருள் அல்லது சாதனத்தின் உண்மையான, எந்திர முகவரி.

physical coordinates : பருப்பொருள் ஒருங்கிணைப்புகள் : ஒளிக் காட்சியமைப்பின் ஒரு இடத்தின் ஒருங்கிணைப்புகள். இதுமேல் மூலையில் அளப்பதை ஒட்டி அளக்கப்படும். இது 0,0 என்று கூறப்படும்.

physical link : பருப்பொருள் இணைப்பு : இரண்டு சாதனங்களுக்கிடையிலான மின்னணு இணைப்பு.

தகவல் மேலாண்மையில், ஒரு பட்டியல் அல்லது பதிவகத்தில் உள்ள காட்டி வேறொரு கோப்பில் தகவல் எந்த இடத்தில் உள்ளது என்பதை அது குறிப்பிடும்.

physical lock : பருநிலைப் பூட்டு : தகவலை பயனாளர் அணுகுவதைத் தடுத்தல். பூட்டினைத் திறத்தல், மூடல், பொத்தான் அல்லது கோப்பு பாதுகாப்பு எந்திர அமைப்பு மூலம் வழங்கப்படுகிறது. நெகிழ்வட்டின் மேல் செய்வது போன்றது.

Physical parts: பருநிலை உறுப்புகள்.

Physical object: பருநிலைப் பொருட்கள்.

physical record : பருப்பொருள் பதிவேடு: உட்பாட்டுக்கான அல்லது வெளிப்பாட்டுக்கானதகவல் அலகு. துளை அட்டை, நாடா வட்டகை, ஒரு வட்டில் பதிவுசெய்தல் போன்றவை இவ்வகையின. ஓர் பருப் பொருள் பதிவுநூல் ஒன்று அல்லது மேற்பட்ட தருக்கமுறைப் பதிவுகள் அடங்கியிருக்கலாம்.

physical security : பருப்பொருள் பாதுகாப்பு : ஒரு கணினி மையத்தில் சாதனங்களை அணுகுவதைக் கட்டுப் படுத்துவதற்கான காப்புகள், சிறப்புக் குறியீடுகள், பூட்டுகள், மணியொலி அமைப்புகள் ஆகியவை.

Pi (pye - π) : பை : 'பை' என்ற ஒலிப்புடைய கிரேக்க எழுத்து. வட்டத்தின் விட்டத்திற்கும் சுற்று வரைக்கும் உள்ள வீதத்தினைக் குறிக்கும் அடையாள எழுத்து. இதன் மதிப்பு எட்டு பதின்மத் தானங்கள்வரைக் கணக் கிடப்பட்டுள்ளது. π:3.14159265

pica : பிக்கா; அச்செழுத்து அளவீடு : 1.ஓர் அங்குலத்தில் ஆறுவரிகள் அடுக்கக்கூடிய அளவுள்ள அச்சுருப் படிவம்.

picking device : பதிவுச் சாதனம்; பொறுக்குச் சாதனம் : ஒரு காட்சித் திரையில் தகவல்களைப் பதிவுசெய் வதற்குப் பயன்படுத்தப்படும் ஒளிப் பேனா, சுட்டிப்பொறி போன்ற உட் பாட்டுச் சாதனம்.

pico : பிக்கோ : நூறாயிரங் கோடியில் ஒரு பகுதி.

pico computer : பிக்கோ கணினி: ஒரு வினாடியின் நூறாயிரங்கோடியில் ஒரு பகுதி நேரத்தில் தகவல்களைச் செய்முறைப்படுத்தும் திறன் வாய்ந்த ஒரு கணினி.

pico second : பிக்கோ வினாடி : ஒரு வினாடியில் நூறாயிரங்கோடியில் ஒரு பகுதி.

picture element : படத்துகள்; படப் புள்ளி.

picture graph : படவரைவு : பட்டை களுக்குப் பதிலாகக் குறியீடுகளைப் பயன்படுத்தும் பட்டை வரைபடம்.

picture tube : படக்குழல் : எதிர்மின் கதிர்க் கொடியைத் திருப்பி ஒளி யியக்கத் திரைமீது விழச் செய்ய உதவும் அமைப்பு. இது தொலைக் காட்சிப் படக்குழலாகப் பயன் படுத்தப்படுகிறது.

picture processing: பட அலசல்.

pie chart : வட்ட வரைபடம் : தகவல் களைக் குறித்துக் காட்ட உதவும் வரைபடம். இதில் தகவல்கள் ஒரு வகை வட்ட வடிவில் வரிசைப்படுத் தப்படுகின்றன. இதனால் தகவலின் ஒவ்வொரு இனத்தையும் ஒருங் கிணைந்த தகவலாகக் கண்ணால் பார்க்கலாம்.

piezoelectric : மின் அழுக்கம் : மின்ன ழுத்தத்திற்கு உட்படும்போது எந்திர வியல் அழுத்தத்திற்கு உள்ளாகிற அல்லது எந்திரவியல் அழுத்தத்திற்கு உட்படும்போது மின்னழுத்தத்தை உண்டுபண்ணுகிற சில படிகங்களின் பண்பியல்பு.

piggyback board : குட்டி துணைப் பலகை; மின்சுற்றுவழிப் பலகை : ஒரு பெரிய மின்சுற்றுவழிப் பலகைக்குக் கூடுதல் ஆற்றல் சேர்ப்பதற்காக அந்தப் பெரிய மின் சுற்றுவழிப் பலகையில் பொருத்தப்படும் ஒரு சிறிய அச்சிட்ட மின்சுற்று வழி.

piggyback file : துணைக் கோப்பு; குட்டிப் பைக் கோப்பு : ஒரு கோப்பு முழுவதையும் படியெடுக்காமல் கோப்பின் முடிவில் கூடுதல் பதிவுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய கோப்பு.

PILOT : பைலட் (ஒரு கணினி மொழி): வாசகம் அடிப்படையிலான கணினி மொழி. முதலில், கணினி உதவியுட னான அறிவுறுத்தத்திற்கான ஓர் எழுத்தாளர் மொழியாக வடிவமைக் கப்பட்டது. தொடக்க மாணவர் களுக்கு கணினிச் செயல் முறைப் படுத்துதலைக் கற்பிக்கவும் பயன் படுகிறது. இதில், ஆற்றல் வாய்ந்த, சொற்றொடரியல் உரையாடல் செய் முறைப்படுத்தும் கட்டளைகள் அடங்கியுள்ளன.

pilot method : வெள்ளோட்ட முறை : விரிவான நடவடிக்கைப் பரப்பில் அல்லாமல், ஒரே பகுதியில் புதிய கணினியமைவினைக் கையாள முய லும் நடவடிக்கை. எடுத்துக் காட்டு: ஓர் அமைவனத்தில் புதியதொரு தகவல் பொறியமைவினைப் புகுத்தி, அது வெற்றிகரமாக இயங்குகிறது என்பதைக் கண்டறியும்வரை அதனை அந்த அமைவனத்தின் ஒரு பகுதி மட்டுமே பயன்படுத்துமாறு செய்தல்.

pin : பின் : "சொந்த அடையாள எண்" என்று பொருள்படும் "Personal Identification Number" என்ற ஆங்கிலச் சொல்லின் தலைப்பெழுத்துக் குறும் பெயர்.



பின் (இணைப்பு ஊசி)

pin compatible : மாற்றுச் சாதனங்கள்: ஒரே மாதிரியான செயற்பணிகளை ஆற்றும் சிப்புகள் மற்றும் சாதனங்கள் தொடர்புடையது. இவற்றை ஒன்றுக்கு மற்றொன்றை மாற்றிப் பொருத்தலாம். இந்தச் சாதனங்கள் ஒரே உட்பாட்டு/வெளிப்பாட்டுக் குறியீடுகளுக்கு ஒரே இணைப்புகளைப் பயன்படுத்துகின்றன.

pincushioning : பின்குஷனிங்: பக்கவாட்டில் சாய்கின்ற திரை தடுமாறல்கள்.

pinch roller : பிஞ்ச் ரோலர் : ஒரு நாடா இயக்கியில் உள்ள சிறிய தாராளமாகத் திரும்பும் சக்கரம் அதை நகர்த்



பிஞ்ச் ரோலர் (Pinch rolier)

துவதற்காக மோட்டாரால் இயங்கும் நாடாவை அது தள்ளுகிறது.

pingpong : ஒன்றாடப் பயன்பாடு; மாறி மாறி : உள்ளபடிக்கு கணக்கற்ற கோப்புத் தொகுதியில் செய்முறைப் படுத்துதல் தொடர்ந்து நடைபெறும்



குத்தூசி ஊட்டம் (Pin feed)
புள்ளி அச்சுப் பொறியில் குத்தூசி ஊட்டிகள்

வகையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சேமிப்புச் சாதனங்களை மாற்றி மாற்றிப் பயன்படுத்துதல்.

pinouts : ஊசி வெளியீடுகள் : பல் கம்பி இணைப்பியில் உள்ள ஒவ்வொரு இணைப்பியையும் பற்றிய விளக்கமும், நோக்கமும்.

pin feed : குத்தூசி ஊட்டம் : அச்சு எந்திரத்தில் காகிதத்தை வாங்கிக் கொள்ளும் உருளையில் குத்தூசி மூலம் காகிதத்தை விடுதல். இது உராய்வு ஊட்டத்திலிருந்து வேறுபட்டது.

pins : இணைப்பிகள் : ஓர் இரட்டை உட்பாட்டுத் தொகுதியில், ஒரு அச்சடிப்பி மின் சுற்றுவழிப் பலகையிலுள்ள குதை குழிகளில் செருகக் கூடிய சிறிய உலோக இணைப்பிகள்.



பின் DIP (மேலே) 5 பின் DIN (கீழே)

pipe : குழாய் : ஒரு ஆணைத் தொடரின் வெளியீட்டை வேறொன்றின் உள்ளீடாக ஏற்றுக்கொள்ள பங்கிடும் இடம். டாஸ் மற்றும் ஒஎஸ்/2இல் குழாய் ஆணையென்பது செங்குத்தான வரி 'சுர்' என்ற சொல்லாணை பட்டியலின் வெளியீட்டை வகைப்படுத்தும் பயன்பாட்டுக்கு அனுப்புகிறது.

pipeline : குழாய் இணைப்பு; தேக்க நீக்கம்; குழாய் தொடர் : ஒன்றன்மேல் ஒன்று அழுந்திச் செயற்படும் சுழல் செயற்பணி. கணினிகளின் வேகத்தை அதிகரிக்க இது பயன்படுத்தப் படுகிறது. ஒரு கணினி ஆணையை பல பகுதிகளாகப் பகுத்து, அவற்றை ஒரே சமயத்தில் நிறைவேற்ற இது உதவுகிறது.

piracy : கள்ளத்தனமான : தனிப் பட்ட அல்லது வணிகப் பயன் பாட்டுக்காக சட்டத்தை மீறி மென்பொருளை நகலெடுத்தல்.

pirate : திருட்டு; களவு : உரிமை பெற்ற மென்பொருளை திருடு கின்ற (அல்லது அனுமதியின்றி நகலெடுக் கின்ற) ஒரு நபர் அல்லது நிறுவனம். புதிய இந்தி 'எழுத்தச்சு' ஒன்றுக்கு 'Software Pirate' என்று பெயரிடப் பட்டுள்ளது.

Pitch : அச்சுச் செறிவு ; எழுத்தடர்வு : அச்சிட்ட வரியிலுள்ள எழுத்துகளின் செறிவரைவு. இது, பொதுவாக ஓர் அங்குலத் தில் எத்தனை எழுத்துகள் என்ற வீதத் தில் குறிக்கப்படுகிறது. எடுத்துக் காட்டு: 10 செறிவளவு என்பது ஒவ்வொரு அங்குலத்திலும் 10 எழுத்துகள் அடங்கியுள்ளன என்று பொருள்படும்.

PLA : பிஎல்ஏ : "செயல்முறை வகுத் திடத் தக்க தருக்க முறை வரிசை" என்று பொருள்படும் "Programmable Logic Array" என்ற ஆங்கிலச் சொல்லின் குறும்பெயர். இது, ஒரு குறிப்பிட்ட அலுவல் பணியை மட்டுமே செய்வதற்குச் செயல் முறைப்படுத்தப்பட்டுள்ள, ஒரு தரப்

படுத்திய தருக்கமுறை இணைவனத்தைப் பயன்படுத்துகிற, படிப்பதற்கு மட்டுமேயான நினைவகத்துக்கு (Rom) மாற்றாகப் பயன்படக்கூடியது.

pixel (picture element) : படக்கூறுகள்; படப்புள்ளி; படத்துணுக்கு; படத்துகள் : ஓர் எழுத்தினை அல்லது ஒரு வரைகலை உருக்காட்சியை உரு





படப்புள்ளி (Pixel)
படப்புள்ளிகளால் உருவாக்கப்பட்ட எழுத்து (மேலே)

வாக்கப் பயன்படுத்தப்படும் தனித்தனிப் புள்ளிகளில் ஒன்று. இது, காட்சித் திரையில் காணப்படும் உருக்காட்சியின் மிகச் சிறிய அலகு. இதனை, சேமித்துவைத்து, வரவழைத்து, காட்சியாகக் காட்டலாம்.

planar area : பிளேனர் பகுதி : கணினி வரைகலையில், எல்லைகள் உள்ள பொருள். சதுரம் அல்லது பல் கோணம் போன்றது.

plaintext : நேரடிவாசகம் : வழக்கமான செய்தியை அதன் மூலப் பொருள் வடிவில் குறிப்பிடுவதற்கு மறை மொழி வல்லுநர்கள் பயன்படுத்தும் சொல்.

planimeter : சமதளமானி : ஒரு சமதள உருவம், ஒரு எழுத்தாணியால் வரையப்படும்போது, அந்த உருவத்தின் மேற் பரப்பினை அளவிடுவதற்கான புறநிலைச் சாதனம்.

PLANIT : பிளானிட் : "பரிமாற்றுப் போதனையைச் செயல்முறைப்படுத்தும் மொழி" என்று பொருள்படும். "Programming Language for Interactive Teaching" என்ற ஆங்கிலச் சொல்லின் குறும்பெயர். கணினி வழி அறிவுறுத்தப் பொறியமைவுகளுடன் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப் பட்ட ஒரு மொழி.

plansheet : சமதளத் தகடு; விரிதாள் : அகல்தகட்டுப் பணிப்பாளம் போன்றது.

plasma display panel : படிகக் காட்சி முனையம்; மின்மக் காட்சித் திரை : பொறியமைவு செய்த நியோன் ஆர்கான் வாயுவைப் பயன்படுத்துகிற காட்சி முனைய வகை. காட்சிப் பரப்பில் அடங்கியுள்ள ஓர் அச்சு வார்ப்புருவில் புள்ளிகளைத் திருப்புவதன் மூலம் உருக்காட்சி உருவாக்கப்படுகிறது. உயர் ஆற்றல் உருக்காட்சி உறுதிப்பாடுடையது; நீண்ட நேரம் ஒளிரக் கூடியது; சுடர் நடுக்கம் இல்லாதது.

platform : மேடை : ஒரு குறிப்பிட்ட மாதிரி அல்லது கணினி குடும்பத்திற்கான வன்பொருள் கட்டுமான அமைப்பு. மென்பொருள் உருவாக்குபவர்கள் தங்கள் ஆணைத் தொடர்களை எழுதுவதற்கு இது ஒரு தர அமைவாகும். இயக்க அமைப்பையும் இச்சொல் குறிப்பிடுகிறது.

platen : தாள் அழுத்துத் தகடு; அழுத் துத் தட்டு; அழுந்துந்தகடு; அச்சு உருளை : அச்சகத்தில் அச்சுத் தாள் அழுத்தும் தகட்டுப் பாளம்.



தாள் அழுத்துத் தட்டு (Platten)

platter : வட்டத்தட்டு : நிலைவட்டு இயக்கியில் உள்ளபடிக்குத் தகவல் களைச் சேமித்துவைக்கும் பகுதி.



வட்டத் தட்டு (Platter)

இது வட்டமான தட்டை வடிவ உலோகத் தகடு. இதன் இருபரப்பு களிலும் பழுப்புநிற காந்தப்பொருள் பூசப்பட்டுள்ளது.

PLATO : பிளேட்டோ : 'தானியக்கப் போதனைச் செயற்பாடுகளுக்கான செயல்முறைப்படுத்திய தருக்க முறை' எனப் பொருள்படும் "Programmed Logic for Automatic Teaching Operations" என்ற ஆங்கிலச் சொற் றொடரின் குறும்பெயர். இது, கணினி அடிப்படையிலான அறி வுறுத்தப் பொறியமைவு. இது பெரிய கணினிகளிலும், படிகக் காட்சி முனையங்களிலும் பயன் படுத்தப்படுகிறது. இதில் கிண்டர் கார்டன் முதல் பட்டப்படிப்பு வரை யிலான மாணவர்களுக்கான பல்லா யிரம் பாடங்கள் அடங்கியுள்ளன.

plotter in a cartridge : பெட்டியில் நினைவகத் தட்டுப் பகுதி : சான்டியா கோவின் பசிஃபிக் டேட்டா புராடக்ட்ஸ் நிறுவனத்தின் லேசர் அச்சுப் பொறிகளுக்காக ஒரு பெட்டி யில் அமையும் எச்பிஜிஎல் போலச் செய்தது.

PL/C : பிஎல்/சி : PL/I என்ற செயல் முறைப்படுத்தும் மொழியின் ஒரு பதிப்பு. இது கல்வி நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகிறது.

PL/I : பிஎல்/I : "செயல்முறைப்படுத் தும் மொழி - I" (Programming Language - I) என்பதன் குறும்பெயர். இது பொதுநோக்கத்திற்கான உயர் நிலை செயல்முறைப்படுத்தும் மொழி. இது அறிவியல் மற்றும்

வணிகப்பயன்பாடுகளுக்காக வடிவமைக்கப்பட்டது. கோபால் (Cabol), ஃபோர்ட்ரான் (Fortran), ஆல்கால் (Algol) ஆகிய மொழிகளின் அம்சங்களை ஒருங்கிணைத்துள்ளது.

PL/M : பிஎல்/எம் : நுண்கணினிகளை செயல்முறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் செயல்முறைப் படுத்தும் மொழி. இதனை "இன்டெல் கார்ப்பொரேஷன்" (Intel Corporation) என்ற நிறுவனம் வடிவமைத்தது. இது நுண் கணினிகளை மிக விரைவாக இயக்குவதற்கு ஆணையிடுவதற்குரிய உயர்நிலை மொழி. இது PL/I என்ற பொது நோக்குச் செயல் முறைப்படுத்தும் மொழியிலிருந்து வடிவமைக்கப் பட்டதாகும்.

PL/Mplus : பிஎல்/எம்பிளஸ் : "பிஎல்/எம்" என்ற செயல் முறைப்படுத்தும் மொழியின் விரிவாக்கிய வடிவம். இதனை "நேஷனல் செமி கண்டக்டர்ஸ்" (National Semi Conductors) என்ற நிறுவனம் தனது நுண் செய்முறைப்படுத்திகளுக்காக வடி-வமைத்தது.

plot : வரைவு : ஒரு வரைவி மூலம் வரைபடம் அல்லது உருவப்படம் வரைதல்.

plotter : வரைவி; வரைவான் : தானியக்கக் கட்டுப்பாட்டுப் பேனாக்கள் மூலம் காகிதத்தில் படங்களையும் வரைகலைக் காட்சிகளையும் வரைகிற ஒரு வெளிப்பாட்டுச் சாதனம். வரைகலைகளிலும், கணினி உதவியால் உருவாக்கப்படும் வடிவமைப்புகளிலும் பயன்படுத்தப்படுகிறது. பொறியியல் துறையிலும், துணி நெசவுத்துறையிலும் பணிபுரியும் வடிவமைப்பாளர்களுக்கு இது பெரிதும் உதவுகிறது. இதில், காகிதம் ஒரு தட்டையான படுகை மீது ஏற்றப் பட்டிருக்கும். இதன்மீது வரைவதற்குரிய பேனா, X,Y அச்சுகளில் வரை படங்களை வரைகிறது. இதில் பல்வேறு வண்ணங்களில் வரைபடங்களைப் பெறுவதற்கு பல்வேறு வண்ணப் பேனாக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

plotting a curve : வளைகோடு வரைதல் : ஆயத்தொலைவுகளிலிருந்து புள்ளிகளை இடங்குறித்து, அந்தப் புள்ளிகளை இணைத்து வளைகோடாக வரைதல். இது, மாறிகளுக்கிடையிலான தொடர்பினைச் சித்தரிக்கும் உள்ளபடியான வளைகோட்டினை ஏறக்குறைய ஒத்திருக்கும்.

plotter software : வரைவி கணினிச் செயல்முறை; வரைவி மென்பொருள்.

plug : இணைப்பி ; செருகி : ஒரு கம்பி படத்திலுள்ள இணைப்பு. இது பொறியமைப்பின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும்.

plugboard : இணைப்பிப்பலகை; செருகுப்பலகை : அலகுப் பதிவுச் சாதனங்களின் செயற்பாட்டினைக் கட்டுப்படுத்தும் துளையிட்ட பலகை. இதனைக் கட்டுப்பாட்டுப் பலகை (Control Panel) என்றும் கூறுவர்.

plug compatible : மாற்று இணைப்பி; செருகுப் பொருத்தம் : இடைமுகப்பு மாற்றமைவு தேவைப்படாத புறநிலைச்சாதனம். இதனை மற்றொரு உற்பத்தியாளரின் பொறியமைவுடன் நேரடியாக இணைக்கலாம்.

plugs & sockets : செருகிகளும் துளைகளும் : எல்லா வகையான மின்னணுச் சாதனங்களையும் ஒன்றாக இணைக்கும் பருப்பொருள் இணைப்புகள்.

PMOS : பிஎம்ஓஎஸ் : "P-அலை வரிசை உலோக ஆக்சைடு மின்கடத்தாப் பொருள்கள்" (P - channel metallic oxide semi conductors) என்பதன் குறும்பெயர். இது உலோக ஆக்சைடு அரைக்கடத்தி பொருள் மின் சுற்று வழிகளில் மிகப் பழமை யானது. இதில் பாயும் மின்னோட்டத்தில் நேர் மின்னழுத்தம் பாய்கிறது. இது, N-அலைவரிசை உலோக ஆக்சைடு அரைக்கடத்தி பொருள்களிலிருந்து (N-channel MOS) வேறுபட்டது.

PN : பிஎன் : "போலந்துக் குறிமானம்" என்று பொருள்படும். "polish notation" என்னும் ஆங்கிலச் சொல்லின் குறும்பெயர்.

poaching : கரவு அணுகுதல்; ஊடுருவல் : ஒரு பயனாளர் தனக்கு உரிமையுடையதாக இல்லாத தகவல்களைத் தேடிக் கோப்புகளை அல்லது செயல்முறைப்பட்டியல்களை அணுகுதல்.

pocket computer : பையளவுக் கணினி: கையில் கொண்டு செல்லக் கூடிய கையடக்கக் கணினி. விண்டோஸ் சிஇ என்னும் இயக்க முறைமையில் செயல்படும் இக்கணினியில், மேசைமேல் கணினியில் செயல்படும் அனைத்துப் பயன்பாட்டுத் தொகுப்புகளையும் இயக்க முடியும்.

point : புள்ளி; சுட்டு : வரைகலைத் தகவலில் மிகச்சிறிய அலகு. இது ஆயத் தொலைவுமுறையில் தனியொரு அமைப்பிடத்தைக் குறிக்கிறது.

point and shoot : சுட்டுவும் பாய்வும்: சுட்டியை (கர்சர்) ஒரு வரியிலோ அல்லது ஒரு பொருளின் மீதோ நகர்த்துவதன் மூலம் ஒரு பட்டியல் தேர்வை தேர்ந்தெடுப்பது அல்லது ஒரு பயன்பாட்டை இயக்குவது திரும்பச் செல்லும் விசை அல்லது எலிவடிவச் சுட்டிப் பொத்தானை நகர்த்தியும் இவ்வாறு செய்யலாம்.

pointer : சுட்டு ; சுட்டுவான்; குறி; காட்டி; சுட்டி: *1.* தொடர்புடைய ஒரு பதிவின் முகவரியைக் கொண்டிருக்கிற ஒரு கோப்பு அட்டவணை, ஒரு பதிவேடு, அல்லது வேறு தகவல் தொகுதியுடன் தொடர்புடைய ஒரு தகவல் கூறு. *2.* சில கணினியமைவுகளில், நுண் பொறியின் அமைவிடத்தைக் குறிக்கிற காட்சித்திரையின் உருவமைப்பு.

point identification : புள்ளி அடையாளம் : ஆயத்தொலைவு அமைவிடம், அதன் தனிச்செய்முறைப்படுத்தல் அலுவற்பணிகள் உட்பட ஒரு வரைகலைப் புள்ளி பற்றிய முழு விவரிப்பு.

pointing devices : காட்டும் சாதனங்கள்; சுட்டிகள்; சுட்டிக்காட்டும் சாதனம் : இறுதிப் பயனாளர்கள் கட்டளைகளைச் செலுத்தவும், தேர்வுகளைச் செய்யவும் அனுமதிக்கும் சாதனங்கள். விசைப் பலகையைப் பயன்படுத்துவதற்கு மாற்றாக கணினி அமைப்பில் உள்ள எண்ணெழுத்து அல்லது தகவல்களை நேரடியாக நுழைக்க அனுமதிக்கும் சாதனங்கள். எலி வடிவ சுட்டி மற்றும் இயக்கப் பிடிகளைக் காட்டும் சாதனங்களாகும்.

point-of-sale (POS) terminal : விற்பனை முனை முகப்பு : *1.* உடனடியாக விற்பனையையும், இருப்பு பதிவேடுகளையும் ஒரு மையச் செயலகத்தில் புதுப்பித்து, *2.* அச்சிடப்பட்ட விற்பனை பரிமாற்ற இரசீதினைத் தருகின்ற திறனுடைய ஒரு உள்ளீட்டு/வெளியீட்டுச் சாதனம்.

point set curve : புள்ளித் தொகுதி வளைகோடு; புள்ளி இணைப்பு வளைவு : *புள்ளிகளிடையே குறுகிய கோடுகளின் ஒரு வரிசையை வரைவதன் மூலம் வரையப்படும் வளைகோடு.*

point to point : நேரடி இணைப்பு.

point to point line : நேரடித் தொடர் பிணைப்பு : *ஒரு தாய்க் கணினிக்கும் ஒரு சேய்மை முனையத்திற்குமிடையில் ஒரு நேரடித் தொடர்பினைக் கொண்டுள்ள செய்தித் தொடர்பு பொறியமைவு.*

poisson distribution : பாய்சான் விநியோகம் : *18ஆம் நூற்றாண்டு ஃபிரெஞ்சு கணிதவியலார் எஸ்.டி. பாய்சான் உருவாக்கிய புள்ளிவிவர முறை. நடக்கக் கூடிய நிகழ்வுத் தொடரின் விநியோகத்தைக் கண்டுரைக்க இது பயன்படுத்தப்படுகிறது. சான்றாக தகவல்தொடர்பு அமைப்பு ஒன்றின் சராசரி பரிமாற்றத்தின் அளவினை மதிப்பிடக்கூடு மென்றால், ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடைபெறக்கூடிய பரிமாற்றங்களின் அதிக அளவு அல்லது குறைந்த அளவு எண்ணிக்கையையும் மதிப்பிடலாம்.*

poisson theory : பாய்சான் கோட்பாடு: *தகவல் செய்தித் தொடர்புப் போக்குவரத்தின் ஒரு குறிப்பிட்ட அளவினைக் கையாள்வதற்குத் தேவைப்படும் இணைப்புக் கம்பிகளின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கான கணித உத்தி.*

POKE : ஒரு கணினி மொழி ஆணை : *கணினியின் செயல் முறைப்படுத்தத்தக்க நினைவுப் பதிப்பியில் இட அமைவு எதிலும் ஒரு மதிப்பளவினை நுழைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கணினி மொழி ஆணை.*

POL : பிஓஎல் : *இரும '1' ஒரு திசையில் பாயும் மின்னோட்டத்தினாலும் இரும '0' எதிர்த்திசை மின்னோட்டத்தினாலும் குறிக்கப்படுகிற ஒரு நிலை. இது, ஆக்க முறை உண்மைத் தருக்க முறைக்கு வேறுபட்டது.*

Polar : துருவ முனைப் போக்கு.

polar coordinates : துருவ ஆயத் தொலைவுகள்; முனை ஆயங்கள் : *ஒரு நிலையான புள்ளியிலிருந்து கோணத்தையும் தொலைவையும் பொறுத்து ஒரு புள்ளியின் அமைவிடத்தைக் குறித்துரைக்கின்ற வரைகலை முறை.*

polarity : காந்தப்போக்கு : *மின்சக்தி ஏறிய பகுதிகளின் போக்கு. ஒரு துண்மியின் இரும நிலையை இதுவே முடிவு செய்கிறது. நுண்வரைகலையில் படிகளை எடுக்கும் போது ஒரு தோற்றத்திலிருந்து மற்றொன்றுக்கான வெளிச்சத்திலிருந்து இருளுக்குள்ளான உறவு. பாசிட்டிவ் காந்தப்போக்கு என்றால் வெளிச்சப் பின்னணியில் கறுப்பு எழுத்துகள் இருக்கும். நெகட்டிவ் காந்தப் போக்கு என்றால் கறுப்புப் பின்னணியில் வெள்ளை எழுத்துகள் காணப்படும்.*

polarizing filter : ஒளி வடிகட்டி : *முனையத் திரைகளில் கண்ணை உறுத்தும் கூசொளியைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படும் துணைச் சாதனம்.*

polish notation (PN) : போலந்துக் குறிமானம் : *ஒரு தொடர் கணிதச் செயற்பாடுகளுக்கான தருக்க முறைக் குறிமானம். இதில் குழுமக் குறியீடு எதுவும் பயன்படுத்தப் படுவதில்லை. மாறாக போலந்து தருக்கவியலறிஞர் ஜான் லுக்கா சியேவீக்ஸ் 1926இல் உருவாக்கிய*

முன்னடைக் குறிமானம் பயன் படுத்தப்படுகிறது.

polling : சாதன நுண்ணாய்வு: சில கணினி முனையப் பொறிமைவு களில் பயன்படுத்தப்படும் செய்தித் தொடர்புக் கட்டுப்பாட்டு உத்தி. இதில் மையச் செயலகம், ஒவ் வொரு சாதனத்திற்கும் செய்முறைப் படுத்துவதற்கு நேரம் தேவையா என்பதைச் சரி பார்க்கிறது. தேவைப் படுமாயின் அந்த அலகு தொடர்ந்து மற்றச் சாதனங்களை நுண்ணாய்வு செய்கிறது. இதற்கு ஒவ்வொரு சாதனத்தையும் விரைவாக இடை விடாமல் நுண்ணாய்வு செய்திட வேண்டும்.

polygon : பாலிகன் : கணினி வரை கலையில் ஒரு தனிப் பொருளாக நகர்த்தக் கூடிய அல்லது வண்ணத் தில் நிரப்பக் கூடிய பல பக்கங்களை உடைய பொருள்.

Polyphase sort : பல கட்ட வரிசை யாக்கம்.

polyhedron : பல்தளப் பிழப்புரு : ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பக்கங் களுடைய பொருள். இணைக்கப் பட்ட பாலிகான்களின் ஒரு குழு.

polyline : பல்வரி : கணினி வரைகலை யில் இணைக்கபட்ட வரிகளின் ஒரு தொடராக அமைக்கப்படும் ஒரு தனிப்பொருள்.

polymorphic tweening : பாலிமார் ஃபிக் ட்வீனிங் : உயிர்ப்பட தொழில் நுட்பம். ஒரு பொருள் வேறு ஒன்றாக மாற்றும்போது இடைப்பட்ட உரு வங்களை ஆரம்ப மற்றும் முடிவு வடி வங்களை வைத்து உருவாக்குவது.

polymorphism : பல்லுருப் பெறல் : பல உருவங்கள் என்பது பொருள். பொருள் சார்ந்த ஆணைத் தொடர மைப்பில் அனுப்பப்படும் பொரு ளுக்கு மாறுபட்ட முடிவுகளைத் தரக் கூடிய ஒரு பொதுவான வேண்டு கோளை (செய்தி) அனுப்பும் திறன்.

polyphase sort : பன்முக நிலை வகைப்படுத்தி : புறநாடா வகைப் படுத்தி. இது ஆறு அல்லது அதற்குக் குறைவான நாடாக்களுக்குப் பயன் படுத்தப்படுகிறது.

polyvision : பல்காட்சி : அல்பைன் பாலிவிஷன் நிறுவனத்தின் தட்டை அட்டைக் காட்சி. செங்குத்தான மற் றும் கிடைமட்டமான மின்வாய்களுக் கிடையில் வரும் உலோக அயனிகளி னாலான பிளாஸ்டிக் திரைப் படத்தி னைப் பயன்படுத்துகிறது. இதில் மின் சாரம் குறுக்கிடும்போது உலோக அயனிகள் கறுப்பாகிவிடும்.

populate : பொரிவு; சோப்பு : ஒரு அச் சிடப்பட்ட மின்சுற்று அட்டையில் சில்லுகளையும் பொருள்களையும் பொருத்துதல். முழுதும் இனப் பெருக்கம் செய்த அட்டை என்பது, அதனுள் சேர்க்கக் கூடிய அனைத்துச் சாதனங்களையும் கொண்டிருக்கிறது என்றாகும்.

popup : மேல் மீட்பு : திரையில் உள்ள சொற்பகுதி அல்லது உருவத்தின் மேற்பகுதியில் அழைக்கப்பட்டு காட்டப்படுகின்ற ஒரு வகையான பட்டியல். தேவையான ஒன்றைத் தேர்ந்தெடுத்தபோது பட்டியல் மறை கிறது. திரை மீண்டும் வருகிறது.

Popup menu: மேல் மீட்பு பட்டியல்.

port address : துறை முகவரி : ஒரு துறைக்கு முகவரியிடும் 0 முதல் 65535-க்குள்ளான ஒரு எண். நினை வக முகவரிகளிடமிருந்து துறைமுக வரிகள் வேறுபட்டவை. அசெம்பிளி மொழியின் ஆணைகளும் பேசிக் மொழியின் ஆணைகளும் துறை களை அணுக உதவும்.

pooler : கூட்டிணைப்பி : முக்கிய நுழைவுத் தகவலை முதன்மை கணினிக்கு ஏற்புடைய வடிவத்தில் ஒருங்கிணைப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான சாதனம்.

pop : மீட்டல் இயக்கம்; மேல்மீட்பு : ஒரு செயல் முறை உந்தல் அடுக்கின் உச்சியிலிருந்து தகவல்களைத் தள்ளுதல் அல்லது மீட்டல். அடுக்கின் சுட்டு முள் கடைச் சொல்லை அடுக்கில் தள்ளி விடுவதற்கு முகவரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

pop instruction : ஒத்தியல்பு நெட்வேர்: மீட்பு செயற்பாட்டினை நிறைவேற்றுகிற கணினி ஆணை.

POP-2 : பாப்-2 : பட்டியல் செய்முறைப்படுத்தும் மொழி. இது, எடின்பரோ பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டது.

populated board : நெரிசல் பலகை: தனது மின்னணுவியல் அமைப்பிகள் அனைத்தையும் கொண்டுள்ள மின்சுற்று வழி. இது, 'நெரிசலற்ற பலகை' unpopulated board என்பதிலிருந்து வேறுபட்டது.

port : செய்தித் தொடர்புமுகம்; துறை: ஒரு கணினியின் எந்த பகுதிவழியாக ஒரு புறநிலைச் சாதனம் செய்தித் தொடர்பு கொள்கிறதோ அந்தப் பகுதி.

Portablity : பெயர்வு ஆற்றல்.

port expander : துறை விரிவாக்கி: கணினியில் உள்ள ஒரு துறையுடன் பல கம்பிகளை இணைக்கும் சாதனம். வன்பொருள் பொத்தான் அல்லது மென்பொருள் தேர்வின் மூலம் ஒரு கம்பி வழி துறையை அணுக முடியும்.

portable NetWare : ஒத்தியல்பு நெட்வேர் : நாவெலின் நெட்வேர் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் ஓ.இ.எம். பதிப்பு. குறிப்பிட்ட விற்பனையாளரின் எந்திரத்திற்காக அதைத் தொகுக்கலாம்.

portability : பெயர்வு ஆற்றல்; நகர்வுத் திறன்: ஒரு செயல் முறையினை ஒரு கணினி சூழலிலிருந்து மற்றொரு சூழலுக்கு எளிதாக மாற்றுவதற்குரிய வசதி.

portfolio management package: மேலாண்மை ஆவண வைப்பகத் தொகுப்பு : முதலீட்டு இருப்புகளின் மாறும் மதிப்பைத் தேடி ஆராயும் ஆணைத்தொடர். ஆவண வைப்பகத்தின் நடப்பு நிலைபற்றிய அறிக்கைகளை உருவாக்குவதன் மூலமும், (2) வாங்கும், விற்கும் விலைகள், முதலீட்டு வருமானம், செலவுகள், இலாபங்கள், இழப்புகள் ஆகியவற்றைக் காட்டும் துல்லியமான வரி பதிவேடுகளை வைத்திருப்பதன் மூலமும் இதனைச் செய்கிறது.

portable : கையடக்கமான: 1. ஓர் அமைவிடத்திலிருந்து இன்னோர் அமைவிடத்திற்குக் கையில் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு கணினி. 2. பல்வேறுபட்ட கணினிகளில் எளிதாக நிறைவேற்றத்தக்க ஒரு செயல் முறை.

portable computer : கையடக்கக் கணினி : ஓர் அமைவிடத்திலிருந்து இன்னோர் அமைவிடத்திற்கு எளிதாக கையில் எடுத்துச்செல்லக்கூடிய நுண்கணினியமைப்பு. இதன் வடிவமைப்பு, ஒரு சிறிய தட்டச்சின் அளவே இருக்கும்.

portable programme: ஒத்தியல்வுச் செயல்முறை : ஒத்தியல்வுக் கணினியமைவில் பயன்படுத்தக்கூடிய பொருள்.

portrait : உருவப்படம்; செங்குத்து வடிவம் : வன்படி உருவங்களைச் சார்ந்தது பற்றிய குறிப்பு புத்தகத்தில் இருப்பது போல ஒரு பக்கத்தின் குறும்பகுதியில் அந்த பணி அச்சிடப் படுகிறது என்பதை உருவப்படம் குறிப்பிடுகிறது. 'portrait' என்றசொல் ஓவிய உலகத்திலிருந்து எடுக்கப் பட்டது. அதில் உருவப்படங்கள் செங்குத்தாகவே அமைக்கப்படுகின் றன.

portrait mode : உருவப்பட முறை: செயல்படுத்தப்பட்ட தீர்வு அல்லது அமைப்பின் விளைவுகளை செயல் படுத்தப்பட்டபின் கண்காணித்து மதிப்பீடு செய்தல்.

POS : பி.ஓ.எஸ் : "விற்பனை முனை யம்" என்று பொருள்படும்"."Point of Sale Terminal "என்பதன் குறும் பெயர்.

positional notation : இடநிலைக் குறி மானம்; இடம் சார்ந்த குறியீடு; இட மதிப்புக் குறியீடு : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட எண்களைப் பயன்படுத்தி ஓர் எண்ணளவைக் குறிப்பிடும் முறை. இதில் வல மிருந்து இடமாக அடுத்தடுத்து வரும் எண்கள் அடிமூலத்தின் ஏறுமுக முழு எண்விசைப் பெருக்கமாகக் கொள் ளப்படும். எடுத்துக்காட்டு:634 என்ற எண்ணின் பதின்ம எண் விசைப் பெருக்கத்தின் (வர்க்கம்) அடிமூலம் 10; இதன் மதிப்பு $= 4x\ 10^0 + 3x10^1 + 6x10^2$.

positive logic : உடன்பாட்டு தருக்கம்: `0' துண்மிக்காக குறைந்த மின்னழுத் தத்தையும்,`1'துண்மிக்காக அதிக மின் னழுத்தத்தையும் பயன்படுத்தல். Negative Logic என்பதற்கு எதிர்ச் சொல்.

positive true logic : ஆக்கமுறை உண்மைத் தருக்க முறை : இந்தத் தருக்க முறையில் ஒரு குறைந்த அழுத்தம் '0' இன் ஒரு துண்மி மதிப் பளவைக் குறிக்கிறது; ஓர் உயர்ந்த அழுத்தம்,`1'-இன் ஒரு துண்மி மதிப் பளவைக் குறிக்கிறது.

post processor : பின் செயலகம்: தகவல்களை இறுதிச் செயலாக்கம் செய்வதற்கு அளிக்கப்படுகின்ற மென்பொருள். திரையில் காட்டல் அல்லது அச்சிடலுக்காக வடிவமைத் தல் போன்றது.

POST system : பதிவு பொறியமைப்பு: பண்டகசாலைகளும், பேரங்காடி களும் விற்பனை முனையப் பொறிய மைவுகளைப் பயன்படுத்தி வருகின் றன. இதிலுள்ள பணப்பதிவேடுகள், உண்மையில் ஒரு தனி நோக்கக் கணினி முனையமாகும். இது, வணிக நடவடிக்கைகளை அப்பண்டக சாலையின் தகவல் கோப்புகளில் நேரடியாகப் பதிவு செய்து, காட்சித் திரையில் காட்டுகிறது. இது, பட்டிய லிடுவதைக் கட்டுப்படுத்துகிறது; கடன் வசதி அட்டை செல்லத்தக்கது தானா என்று சரிபார்க்கிறது; பிற தகவல்களைக் கையாள கைப்பணி களைச் செய்கிறது.

post : பதிவு செய்தல் : ஒரு பதிவேட் டில் ஒரு தகவல் அலகினைப் பதிவு செய்தல்.

post edit : ஒட்டுத் தொகுப்பு; பின்னி லைச் செப்பம் : ஒரு முந்தையக் கணிப் பிலிருந்து வெளிப்பாட்டுத் தகவல் களைத் தொகுப்பித்தல்.

postfix notation : பின்னொட்டுக் குறி மானம்: ஒரு கணிதக் குறிமானமுறை. இதன் மூலம்,5,3 என்ற இயக்கப்படு எண்களின் கூட்டலை 53+என்று குறிப்பிட முடியும். மறுதலைப் போலந்துக் குறிமானம், இந்தக்

குறிமானத்தின் ஒரு வடிவமாகும். இது, முன்னொட்டுக் குறிமானத்தி லிருந்து வேறுபட்டது.

post implementation review : பின் நிறைவேற்ற மறுஆய்வு : பல மாதங் கள் பயன்பாட்டிலுள்ள ஒரு பொறிய மைவினை மதிப்பீடு செய்தல்.

post mortem : பின்னாய்வு : ஒரு செயற்பாடு நிறைவேற்றப்பட்ட பின்பு அதனைப் பகுப்பாய்வு செய் தல்.

post mortem dump : பின்னாய்வுச் சேமிப்பு : ஒரு செயல்முறையின் நிறைவேற்றத்தின் முடிவில் செய்யப் படும் சேமிப்புக் குவிப்பு. இது, நொடிப்புச் சேமிப்புக் குவிப்பி லிருந்து வேறுபட்டது.

potentiometer : மின்னழுத்த ஆற்றல் மானி; மின்னழுத்த அளவி: எந்திரவி யல் இயக்கத்திற்கு வீத அளவில் மின் னியல் வெளிப்பாட்டுக் குறியீடு களை உண்டாக்குவதற்குப் பயன் படும் சாதனம்.

power : வர்க்கம்; ஆற்றல் : எண்ணின் விசைப்பெருக்கத்தை (வர்க்கம்) குறிக்கும் குறியீடு. இதனை 'அடுக் குப் பெருக்கம்'என்பர். நான்கின் மூன்று வர்க்கம் என்றால் 4 x 4 x 4 என்பதாகும். இதனை 4^3என்று எழுதுவர்.

power amplifying circuit : மின் பெருக்க மின்சுற்றுவழி : ஓர் உட் பாட்டு மாற்று மின்னோட்ட (AC) மின்னழுத்தத்தை ஒரு வெளிப்பாட்டு நேர்மின்னோட்ட(DC) மின்னழுத்த மாக மாற்றக்கூடிய மின்னணுவியல் மின்சுற்றுவழி.

power down : விசை நிறுத்தம்: 1. ஒரு கணினியை அல்லது புறநிலைச் சாத னத்தை நிறுத்தி விடுதல். 2. மின் தடங்கல் ஏற்படும்போது அல்லது மின்விசை நிறுத்தப்படும்போது, கணினிக்கு அல்லது அதனுடன் இணைந்துள்ள புறநிலைச் சாதனங் கள் சேதமடைவதைத் தடுப்பதற் காக கணினி மேற்கொள்ளும் நடவடிக்கை.

power fail / restart : மின்தடங்கல்/ தொடங்கல் : மின்தடங்களுக்குப் பிறகு ஒரு கணினி தனது இயல்பான செயற்பாட்டினைத் தொடங்கு வதற்கு இயல்விக்கும் வசதி.

powerful : ஆற்றல்வாய்ந்த: வன் பொருள் விரைவாக இயங்குவனவா கவும், வடிவளவில் பெரிதாகவும், தம்மையொத்த எந்திரங்களை விட அதிகப் பணிகளைச் செய்யக் கூடிய னவாக இருப்பின் ஆற்றல் வாய்ந்த வை எனக் கருதப்படும். மென்பொ ருள் திறமையாகச் செயற்படுவனவா கவும், பெருமளவுப் பணிகளைச் செய்யக்கூடியவையாகவும் இருந் தால் அவை ஆற்றல் வாய்ந்தவை எனக் கருதப்படும்.

power on : மின்விசைத்தொடுப்பு : மின்விசையைத் 'தொடுப்பு' நிலை யில் வைத்து மின்னோட்டம் நடை பெறுவது அல்லது ஒரு சாதனத்திற்கு மின்னோட்டம் செல்லுமாறு செய் தல். இதனை `விசையேற்றம்'(Power up) என்றும் கூறுவர்.

power off : மின்னிணைப்புத் துண் டிப்பு.

Power Pc: பவர் பிசி : பிஎம் /ஆப்பி ளின் கூட்டு முயற்சிக்காக மோட்டோ ரோலா நிறுவனம் உருவாக்கும் `ரிஸ்க்' (RISC) சிப்பு.

power supply : மின்வழங்கி : மாற்று மின்னோட்ட (AC)மின்னழுத்தத்தை நேர்மின்னோட்ட(DC) மின்னழுத்த மாக மாற்றுகிற மின் சுற்றுவழி. ஒலித் துடிப்புகளும், மின்னழுத்த மாறுபாடு

களும் கணினியின் மின் சுற்றுவழி களைச் சீர்குலைக்காதவாறு ஒரு விசை வழங்கீட்டு வெளிப்பாடு கண்டிப்பாக ஒழுங்குமுறைப் படுத்தப்படுகிறது.

power surge : மின் எழுச்சி; மின்னெழுப்பி : மின்னோட்டம் பாய்தல் திடீரென அதிகரித்துச் சிறிது நேரம் நீடித்திருத்தல். இதனால், கணினிச் செயற்பாடு முறையாக இயங்குவதில் சில சிக்கல்கள் உண்டாகலாம்.

Power up : மின்னேற்றம் : மின்னிணைப்பு வழங்கல்: 1. ஒரு கணினியை அல்லது புற நிலைச் சாதனத்தை இயங்குவதற்கு முடுக்கிவிடுதல். 2. விசையோட்டம் செய்யப்படுகிற போது அல்லது மின்தடங்களுக்குப் பிறகு மீண்டும் விசையூட்டப்படுகிற போது ஒரு கணினிச் செய்முறைப் படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கை. இது,"விசை நிறுத்தம்" என்பதிலிருந்து வேறுபட்டது.

power user : சக்தி பயனாளர்: தனி நபர் கணினியில் மிகவும் திறமையுள்ள நபர். பலதரப்பட்ட மென் பொருள் பொதிகங்கள் பற்றிய அறிவுள்ளவர் என்பதைக் குறிப்பிடுகிறது.

Powerpoint : பவர்பாயின்ட் : மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் மற்றும் மெக்கின்டோஷ் அறிமுக பிரசென்டேஷன் ஆணைத் தொடர். மெக்கின்டோஷ் முதல் மேசைமேல் வழங்கும் ஆணைத்தொடரான இது, ஒட்டு மொத்தங்கள், கைவெளியீடுகள், பேசுபவர் குறிப்புகள் மற்றும் திரைப்பட பதிவிகளை வழங்குகிறது. ஜெனிகிராபிக் படவில்லைகளுக்கான வண்ணத் தொகுதி இதனுடன் சேர்ந்து வரும்.

pph : பிபிஎச்: `மணிக்கு இத்தனை பக்கங்கள்' என்று பொருள்படும் "Pages per hour" என்ற ஆங்கில சொற்றொடரின் குறும்பெயர்.

PPM : பிபிஎம்: "துடிப்பு இடநிலை ஏற்ற இறக்கம்","துடிப்பு நேர ஏற்ற இறக்கம்" என்று பொருள்படும் "Pulse Position Modulation", "Pulse Time Modulation" என்ற ஆங்கிலச் சொற்றொடர்களின் குறும் பெயர்.

Precaution : முன்னெச்சரிக்கை.

Pragmatics : செயல்துறை உறவு; நடைமுறையியல் : குறியீடுகளுக்கும், அந்தக் குறியீடுகளைப் பயன்படுத்துவோர்க்குமிடையிலான உறவு நிலையை ஆராய்தல்.

Precedence : முன் நிகழ்வு.

Precision : துல்லியம்; சரிநுட்பம்: ஒரு எண்ணளவினை குறித்திடும் துல்லியத்தின் அளவு. ஒரு கணிப்பு ஏறத்தாழத் துல்லியமாகச் செய்யப்படுகிறது. பை (π) என்பதன் உண்மையான மதிப்பு 3.14162 ஆகும். இது ஆறு எண்கள் வரைத் துல்லியமானது.

precompiler : முன்தொகுப்பி: இன்னொரு கணினி செயல்முறையின் ஆதாரக் குறியீடுகளை அந்தச் செயல்முறை தொகுக்கப்படுவதற்கு அடுத்து முந்திச் செய்முறைப்படுத்துகிற கணினிச் செயல்முறை. இது அந்தச் செயல் முறைக்குப் பின் வரும் திறம் பாடுகளை அளிக்கலாம்:

1. தொகுப்பிக்கு ஏற்புடையதல்லாத வசதியான சுருக்கங்களைப் பயன்படுத்துவதற்கான திறம்பாடு; 2. தொகுப்பிக்கு ஏற்புடையதாக இல்லாத, தர அளவுப்படுத்தாத செயல்முறைப்படுத்தும் கட்டளைகளைப் பயன்படுத்துவதற்கான திறம்பாடு; 3. ஒரு செயல்முறையாளர் எழுதும்

ஆதார கட்டளைத் தர நிலைப்படுத் தும் திறம்பாடு.

predefined function : முன்வரை யறுத்த செயற்பணி : பயன்படுத்து வோர் ஒரு செயல் முறையில் சேர்த் துக் கொள்வதற்கு உள்ள தர அளவுக் கணித நடைமுறை.

predefined process : முன்வரை யறுத்த செயல்முறை : 1.வேறெங் கேனும் வரையறுக்கப்பட்டு பெய ரால் மட்டுமே அடையாளங்காணக் கூடிய செய்முறை. 2.முடிவுறுத்திய துணை வாலாயம்.

predefined process symbol : முன் வரையறுத்த செய்முறைக் குறியீடு : ஒரு துணை வாலாயத்தினைக் குறிப் பதற்குப் பயன்படுத்தப்படும் செவ் வகப் பாய்வு வரைபடக் குறியீடு.

predicate : பயனிலை: ஆணைத் தொடரில் வரும் ஒரு சொற்றொடர். இது ஒரு வெளிப்பாட்டை மதிப்பீடு செய்து தகவலின் நிலைமையை அனுசரித்து உண்மை அல்லது பொய் என்ற பதிலைத் தரும்.

predictive reports : ஊக அறிக்கை கள்; முன் கணிப்பு அறிக்கை: திறமார்ந்த தந்திரமான முடிவுகள் எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் வணிக அறிக்கைகள்.

pre edit : முன்னிலைத் திருத்தம்.

prefix notation : முன்னொட்டுக் குறி மானம் : கணித எண்ணுருக் கோவை களை உருவாக்குவதற்கான முறை. இதில் ஒவ்வொரு இயக்கு எண்ணும் இயக்கப்படு எண்களுக்கு முன்னதாக வருகிறது. எடுத்துக்காட்டு: (x+y)xz என்னும் கோவையை 'xy+xz'என்று குறிக்கலாம். 5ஐயும் 3ஐயும் கூட்டு வதை +53 என்று போலந்துக் குறிமானத்தில் குறிக்கலாம்.

p-register : செயல்முறைப் பதிவேடு: செயல்முறை மேடைப் பதிவேடு. இதில் நடப்பு கட்டளைகளின் அமை விடம் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

Preliminary study : ஆரம்பநிலை ஆய்வு.

preloaded : முன்பதிய வைத்த.

prepress : முன் அச்சு : அச்சிடல் மற்றும் அச்செழுத்துக் கலையில், ஒளிப்படக் கருவிக்குத் தயாராகும் பொருள்களை அச்சு நிலைவரை தயாரித்தல். அச்சுக்கோப்பு மற்றும் பக்கமாக்குதல் இதில் அடங்கும்.

preprinted forms : முன் அச்சிட்ட படி வங்கள்: கணினி உருவாக்கிய வெளிப் பாட்டினைக் கொண்டிருக்கும் படி வங்கள். இவற்றில் ஏற்கெனவே அச்சிட்ட தலைப்புகளுடனும் அடை யாளத் தகவல்களுடனும் கூடிய ஒரு கணினியமைவு பதிவு செய்யப்பட்டி ருக்கும். இவை பெரும்பாலும் புற நிலை அறிக்கைகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

preprocessor : முன்செய்முறைப் படுத்தி; முன்னிலைச் செயலாக்கி : உட்பாட்டுத் தகவல்களில், மேற் கொண்டு செய்முறைப்படுத்து வதற்கு முன்பு, மாற்றம் செய்தல், படிவமாக்குதல், சுருக்கஞ் செய்தல் போன்ற செயற்பணிகளைச் செய்கிற செயல்முறை.

presentation graphics : அறிமுக வரைகலை; நிகழ்த்து வரைகலை: முன்வடிவுகள், திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் ஆகியவற்றை உயர்மேலாண்மைகளுக்கு அளிப் பதில் முக்கியக் குறிப்புகளை வலி யுறுத்திக் காட்டுவதற்குப் பயன்படுத் தப்படும் உயர்தர வணிக வரை கலைக் காட்சியுருக்கள்.

presentation manager : அறிமுக மேலாளர் : ஓஎஸ்/2இல் உள்ளமைக் கப்பட்ட விண்டோஸ் சூழ்நிலையில் உருவான வரை கலைப் பயனாளர் இடைமுகம் டாஸ¬க்கான சாளரத்தில் விண்டோஸில் உள்ளது போல இதுவும் ஒரு பயன்பாடு.

preset : முன் நிறுவுதல் : முதல் நிலைத் தகுநிலையை நிருணயித்தல். ஒரு வளைவின் கட்டுப்பாட்டு மதிப் பளவுகளை அறுதியிடுதல் அல்லது அட்டவணைகள், பதிவேடுகள் போன்றவற்றில் முதல் நிலை மதிப் பளவுகளை நிருணயித்தல் இதற்கு எடுத்துக்காட்டு.

prespecified reports : முன்வரையறுக்கப்பட்ட அறிக்கைகள் : வேண்டும்போதோ அல்லது விதி விலக்காகவோ மேலாளர்களுக்கு கால முறைப்படி தகவலை முன்னதாகவே வழங்குமாறு வடிவமைக் கப்பட்ட அறிக்கைகள்.

press : அழுத்து : ஒரு நுண்பொறியில் விசைப்பொத்தானை அழுத்தும் செயல்.

pressure sensitive keyboard : அழுத்த உணர்வு ; விசைப் பலகை : மின்கடத்தும் மையினாலான ஒரு மின்சுற்று வழி பொருத்தப்பட்ட, இரு மெல்லிய பிளாஸ்டிக் தகடுகளால் உருவாக்கப்பட்ட விசைப் பலகை. இது சிக்கனமானது; குட்டை வடிவமானது மலிவான பல நுண்கணினிகளில் பயன்படுத்தப்படுகிறது.

pressure sensitive pen : அழுத்த உணர்வுப் பேனா : ஓர் எண்ணாக்கியின் உதவியுடன் பயன்படுத்தப் படும் பேனா. இதில் ஒரு அழுத்த நுண்ணிடை இயக்கமானி அடங்கியுள்ளது. இது எழுதும் அழுத்தத்தை உணர்ந்தறிந்து z-அச்சுத் தகவலாக அனுப்புகிறது.

prestel : பிரெஸ்டெல் : இங்கிலாந்திலுள்ள வணிகமுறை ஒளிப்பேழை வாசகச் சேவை முறை.

preventive maintenance : தடுப்புப் பராமரிப்பு; தவிர்நிலை பேணல் : சாதனங்களைத் தொடர்ந்து செயற் பாட்டு நிலையில் வைத்து வருவதற்கு உதவ ஒரு கணினியில் பயன்படுத்தப் படும் செய்முறைகள். தவறுகள் நேர்வதற்கு முன்பு அவற்றைக் கண்டு பிடித்து, தனிமைப் படுத்தி, திருத்தம் செய்வதற்கு இவை உதவுகின்றன. சாதனங்களை இயல்பு நிலையிலும் பழுது நிலையிலும் துப்புரவு செய்தல், சரியமைவு செய்தல், சோதனை செய்தல் போன்றவை இதில் அடங்கும்.

primary data : அடிப்படைத் தகவல்: மூலாதாரத்திலிருந்து பெறப்பட்ட தகவல். வானிலை அறிவிப்புத் துறையில் பெறப்பட்ட பயனுள்ள தகவல் அடிப்படை தகவலுக்கு எடுத்துக் காட்டுகளில் ஒன்றாகும்.

primary cluster : அடிப்படைத் தொகுதி; முதன்மைத் தொகுதி : தனியொரு அட்டவணை அமைவிடத்தைச் சுற்றி அட்டவணை பதிவுகளைத் திரட்டுதல்.

primary colours : அடிப்படை வண்ணங்கள் : மற்ற வண்ணங்கள் அனைத்தையும் உருவாக்கக்கூடிய அடிப்படையான வண்ணங்களின் தொகுதி. சிவப்பு, பச்சை, நீலம் ஆகியவை அடிப்படை வண்ணங்கள். வண்ணம் பூசுபவர்கள் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகியவற்றை அடிப்படை வண்ணங்கள் என்பர். இந்த அடிப்படை வண்ணங்களை ஒன்றிலிருந்து ஒன்று உண்டாக்க முடியாது. ஆனால் இவற்றை

ஒன்றோடொன்று கலந்து வேறு வண்ணச் சாயல்களை உருவாக்கலாம்.

primary index : அடிப்படை அட்டவணை : ஒரு கோப்பின் நடப்புச் செயலாக்க வரிசை முறையைக் கட்டுப்படுத்தும் அட்டவணை.

primary key : அடிப்படைப் புதிர்க் குறிப்பு; முதன்மைத் திறவுகோல் : செய்முறைப்படுத்த பதிவேடுகளை வகைப்படுத்துவதற்கு அல்லது ஒரு கோப்பினுள் ஒரு குறிப்பிட்ட பதிவேட்டின் அமைவிடத்தைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வழிகாட்டுங் குறிப்பு.

primary memory : முதன்மை நினைவகம்; அடிப்படை நினைவகம் : இது மையச் செயலகத்துடன் நேரடியாகத் தொடர்புடைய கணினி நினைவகம் (ராம்) இது மின்சக்தி இல்லையென்றால் நினைவகத்தில் சேமித்தவற்றை வைத்துக் கொண்டிராது.

primer : முதன்மை ; ஆரம்ப: ஒரு ஆரம்ப விளக்கக் கையேடு.

prime shift : முதற்படி முறை மாற்றம்: ஓர் அமைவனத்தின் இயல்பான அலுவல் நேரத்துடன் ஒத்திருக்கிற வேலை முறைமாற்றம், முடிவு முறை மாற்றம் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

primitive : ஆதிநிலை; தொடக்க நிலை: 1. ஆதாரமான அல்லது அடிப்படையான அலகு. ஒரு எந்திர ஆணையின் மிக அடிமட்ட நிலையினை அல்லது ஒரு மொழி பெயர்ப்பின் மிகவும் கீழ்மட்ட அலகினைக் குறிக்கிறது. 2. கணினி வரைகலையில் புள்ளிகள், கோடுகள், கூறுகள், எழுத்துகள் போன்ற அடிப்படை வரைகலைக் கூறுகளைக் குறிக்கிறது.

primitive element : ஆதிநிலைக் கூறு; தொடக்க நிலைக்கூறு : கோடு, கூறு, புள்ளி போன்ற வரைகலைக் கூறு. சிக்கலான உருவங்களை அல்லது உருக்காட்சிகளை உருவாக்குவதற்கு இவற்றை வரவமைக்கலாம் அல்லது மற்ற ஆதி நிலைக் கூறுகளுடன் இணைக்கலாம்.

Principle of operation : செயற்பாட்டுத் தத்துவம்.

Print beffur : அச்சு இடைத்தடுப்பு.

print chart : அச்சு வரைபடம்; அச்சிட்ட படிவம் : ஓர் அச்சடிப்பிக்கு ஒரு வெளிப்பாட்டு அறிக்கையின் உருப்படிவத்தை வரைவதற்குப் பயன்படும் படிவம். இது அச்சடிப்பி இடப் பரப்பு வரை படம், அச்சடிப்பி வடிவமைப்புப் படிவம், அச்சுப் பக்க அமைப்புத் தகடு என்றும் அழைக்கப்படும்.

print column : அச்சுப் பத்தி: துணைக் கூட்டல் அல்லது கூட்டலிடப்படக் கூடிய வகையில் அச்சு அறிக்கையின் மீதுள்ள தகவல் பத்தி. அறிக்கை எழுதுபவரின் விளக்கக் குறியில் அச்சுப்பத்திகளே இன்றியமையாதவை.

print control character : அச்சுக் கட்டுப்பாட்டு எழுத்துரு : ஒரு வரி வாரி அச்சடிப்பியில் செயற்பாட்டுக்கான கட்டுப்பாட்டு எழுத்து. சகட மீட்சி, பக்க வெளியேற்றம், வரிஇட பரப்பு போன்றவை இதில் அடங்கும்.

print density : அச்சு அடர்த்தி : ஓர் அள வீட்டு அலகில் அடக்கக்கூடிய அச்செழுத்துகளின் எண்ணிக்கை. எடுத்துக்காட்டு: ஒரு பக்கத்தில் அடங்கியுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை.

printed circuit : (PC) : அச்சிட்ட மின் சுற்றுவழி (பி.சி) : மின்கடத்தாத ஒரு தட்டையான தகட்டில் அச்சிடப் பட்ட, வெற்றிடம் அடைவு செய்த மின்முலாம் பூசிய மின்னணுவியல் மின் சுற்றுவழி.

printed circuit board (PCB) : அச்சிட்ட மின்சுற்றுவழிப் பலகை : பலகையி லுள்ள மின்கடத்தும் பொருளின்



அச்சிட்ட மின்சுற்றுவழிப் பலகை
(Printed circuit board)

மூலம் மின்னியல் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ள மின்சுற்றுவழி. இதில் கம்பிகள் வாயிலாக இணைப் புகள் செய்யப்படவில்லை. ஒருங்கி ணைந்த மின்சுற்றுவழிச் சிப்புகள், எதிர்ப்பிகள், மின்பெருக்கிகள், விசைகள் ஆகியவை இந்தப் பலகை யில் ஏற்றப்படுகின்றன.

print element : அச்சுக் கூறு : உருக் காட்சியை உள்ளபடிக்குக் காகிதத் தில் பதிவு செய்கிற அச்சிட்ட பகுதி. தளமட்டச் சக்கரம், விரல் சிமிழ் ஆகியவை பெருமளவில் பயன்படுத் தப்படும்அச்சுக்கூறுகள். இதனை 'அச்சுத் தலைப்பு' என்றும் கூறுவர்.

Printed materials : அச்சுப்படிகள்

printer : அச்சுப்பொறி; அச்சடிப்பி : வன்படி வெளிப்பாட்டினை உரு வாக்குகிற வெளிப்பாட்டுச் சாதனம்.

printer buffer : அச்சடிப்பி இடை நினைவகம்.

printer format : அச்சடிப்பி உருப் படிவம் : அச்சுப் படிவம்: அச்சடிப்பு மண்டலங்களாகப் பகுக்கப்பட்ட அச்சுத்தாள். ஒவ்வொரு மண்டலத் திலும் ஒரு மதிப்பளவினை மட்டுமே அச்சடிக்க முடியும்

printer interface : அச்சு இடைப் பிணைப்பு.

printer stand : அச்சடிப்பி நிலை யடுக்கு : ஓர் அச்சடிப்பித் தாங்கி யிருப்பதற்காக வடிவமைக்கப்பட்ட மரத் தாலான நிலையான அடுக்கு விசிறி மடிப்பு. அச்சடிப்பி காகிதத் திற்காக உச்சிப்பகுதியில் ஒரு திறப் பினைக் கொண்டிருக்கும்.

print head: அச்சு முனை: புள்ளி அச்சுருவாக்கிய டாட்மாட்ரிக்ஸ்; இங்க் ஜெட், தெர்மல் அச்சுப் பொறி போன்றவற்றில் உள்ள அச்சு ஊடகத் தில் தோற்றத்தை ஏற்படுத்தும் அமைப்பு. அச்சு ஊடகத்தின் ஒரு பக்கத்திலிருந்து வேறொன்றுக்கு அச்சுமுனை மாறுவது வழக்கம்.

print image: அச்சு உருவம் : பேசிக் மொழியில் 'Print Using' சொற்றொட ரில் அச்சிட்ட வெளியீட்டை வடி வமைக்கப் பயன்படும் சரம்.

print layout sheet : அச்சு விரிவமைப் புத் தகடு; அச்சமைப்புத் தாள் : ஓர் அச்சிட்ட அறிக்கைக்குத் தேவை யான ஓர விளிம்புகளையும் இடை வெளிகளையும் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரைபடம்.

print medium : அச்சு ஊடகம்: அச் சிடப்பட்ட தோற்றம் வெளிவரக் கூடிய மேற்பரப்பு. பெரும்பாலான வற்றில் அச்சு ஊடகம், காகிதம் தான் ஆனால், நுண்படல அட்டைகள், ஊடுருவு ஒளிப்படம் போன்றவை யும் ஊடகமாக அமையும்.

printout : அச்சுப்படிவம் : கணினி யமைவு வெளிப்பாட்டின் படிவம்.

இது ஓர் அச்சடிப்பானால் ஒரு பக்கத்தில் அச்சிடப்படுகிறது.

print position: அச்சு நிலை.

print quality : அச்சுத் தரம் : ஓர் அச்சடிப்பியில் அச்சிடப்பட்ட ஓர் அச்சுப் படிவத்தின் தரம்.

print queue: அச்சு வரிசை : அச்சுப் பொறிக்காக ஒதுக்கப்பட்ட வெளியீட்டை அச்சுப்பொறி ஏற்கும் வரை வைத்திருக்கும் வட்டின் இடம்.

print screen : அச்சுத்திரை : திரையில் அப்போது உள்ள உருவத்தை அச்சிடும் திறன்.

printer service : அச்சுப்பொறி வழங்கி: ஒன்று அல்லது மேற்பட்ட அச்சுப் பொறிகளைக் கட்டுபடுத்தும் கட்டமைப்புள்ள ஒரு கணினி. அந்த அமைப்பின் அனைத்துப் பயனாளர்களிடமிருந்தும் வருகின்ற வெளியீட்டு அச்சுத் தோற்றத்தினைச் சேமித்து ஒரு நேரத்தில் ஒரு வேலை என்ற வகையில் அச்சுப் பொறிக்கு வழங்குவது. இப்பணியானது பிணைய (Network) இயக்க அமைப்பின் ஒரு பகுதியாகவோ அல்லது சேர்க்கப்பட்ட பயன்பாடாகவோ இருக்கலாம்.

print spooler : அச்சுச் சுருளி : முன்னணியில் மற்ற பணிகள் நடந்து கொண்டிருக்க பின்னணியில் அச்சிடுதல் நடைபெற அனுமதிக்கும் மென் பொருள்.

print to disk : அச்சிலிருந்து வட்டுக்கு: வழக்கமாக அச்சுப் பொறிக்கு அனுப்பப்படும் வெளியீட்டை வட்டை நோக்கி அனுப்புவது. உருவாக்கப்படும் கோப்பானது தேவையான வடிவமைப்பு அல்லது படிவம் குறியீடுகளை உள்ளடக்கியதாக இருக்கும். அதை உருவாக்கிய டி.டி.பி. ஆணைத் தொடர் அல்லது சொல் செயலகத்தின் தேவையின்றியே வேறு ஒரு சமயத்திலோ அல்லது தொலைவிலுள்ள ஒரு அச்சுப் பொறிக்கு அனுப்பியோ அச்சிட்டு கொள்ளலாம். பொதுவாக முதலில் வட்டுக் கோப்பினை உருவாக்கி, பின்னரே அச்சிடப்படுகிறது. ஆனால் அச்சிலிருந்து வட்டுக்கு என்ற செயல் முறையில் கோப்பினை அச்சிடும் வேலை விலக்கப்படுகிறது.

printed density : அச்சிடப்பட்ட அடர்த்தி: காகிதத்தில் எழுத்துகள் அல்லது வரைகலைகளை எவ்வளவு கறுப்பாக அச்சிடப்படுகிறது என்பதைக் குறிப்பிடுவது.

printer buffer : அச்சுப்பொறி இடைநினைவகம் : ஒன்று அல்லது மேற்பட்ட கணினிகளிடமிருந்து அச்சுப் பொறிக்கு அனுப்புகின்ற நினைவகச் சாதனம். ஒவ்வொரு பக்கமும் அச்சிடும்வரை காத்திராமல், முழு வெளியீட்டையும் கணினிக்கு உதவுவது. அச்சுப்பொறி இடை நினைவகம் மற்றும் தானியங்கிப் பொத்தானுடன் இரண்டுக்கு மேற்பட்ட கணினிகள் இணைக்கப்பட்டு வெளியீட்டை முதலில் வந்தது முதலில் வழங்கப்படுகிறது என்ற முறையில் ஏற்றுக் கொள்ளப்படும்.

printer cable: அச்சுப் பொறிக் கம்பி: ஒரு அச்சுப் பொறியைக் கணினியுடன் இணைக்கும் கம்பி. ஒரு பி.சி. யில் கேபிளிடம் 25 பின் டி.பி.25-ஆண் இணைவி கணினிக்காகவும் அச்சுப் பொறிக்காக 36 பின் சென்ட்ரானிக்ஸ் ஆண் இணைப்பியும் இருக்கும்.

printer driver: அச்சுப்பொறி இயக்கி : பல மென்பொருள் பயன்பாடுகளில் ஒரு பகுதியாக உள்ள கட்டளைக் கோப்பு. சான்றாக சொல்செயலாக்கி

போன்றவற்றில். அச்சுப் பொறி இயக்கியானது மென்பொருள் பயன்பாடுகளில் உள்ள தரப்படுத்தப்பட்ட கட்டளைகளை அச்சுப்பொறிக் கேற்ற கட்டளைகளாக மாற்றித் தரும். பெரும்பாலான அச்சுப்பொறிகள் மாறுபட்ட கட்டளை அமைப்பைப் பயன்படுத்துவதால் இவை தேவைப்படுகின்றன. அச்சுப்பொறியின் மேன்மையை ஒட்டி (வரைகலைகள் சொற்களை விட அதிக குறியீட்டை ஏற்கின்றன) அச்சுப்பொறி இயக்கியின் அளவு பெரிதாகும். சிறந்த முடிவுகளுக்கு சரியான அச்சுப் பொறி இயக்கியைப் பயன்படுத்துவது இன்றியமையாததாகும்.

printer engine : அச்சுப்பொறி எந்திரம்: உண்மையான அச்சு வேலையைச் செய்யும் அச்சுப் பொறியின் உள்ளே இருக்கின்ற அலகு.

printer file : அச்சுப்பொறி கோப்பு: அச்சிடப்பட தயாராக அச்சு உருவ வடிவத்தில் உள்ள ஆவணம்.

printer font : அச்சுப் பொறியின் எழுத்துரு : அச்சிடுவதற்குப் பயன்படும் அச்செழுத்து. அச்சுப் பொறியும் திரை எழுத்துகளும் ஒன்றல்ல. ஆகவே அச்சுப்பொறி வெளியிடும் எழுத்துகள் திரையில் சரிவரக் காட்டப்படமாட்டா.

printer interrupt : அச்சுப் பொறி குறுக்கீடு : "Not Pusy" சமிக்ஞையை அச்சுப்பொறி அனுப்பும்போது ஏற்படும் வன்பொருள் குறுக்கீடு. குறுக்கீடும் வாலாயமானது. பொதுவாக வெளியீட்டுத் தகவலின் எழுத்தை அச்சுப் பொறிக்கு அனுப்பிவிட்டு கட்டுப்பாட்டை மையச் செயலகத்துக்கு அனுப்பும். இந்த நடைமுறையானது அச்சுப் பொறியை இயக்கும் அதே வேளையில் கணினியை வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தும்.

printing station : அச்சிடும் நிலையம்.

print statement : அச்சிடு கட்டளை : பேசிக் மொழியில், ஒரு தகவலை திரையில் காட்டுவதற்கான கட்டளை.

printout : அச்சுப்படி.

print wheel : அச்சுச் சக்கரம்; அச்சுருளை : ஒரு சக்கர அச்சடிப்பியின் ஓர் அச்சடிப்பு இடநிலையில் எழுத்துகளின் தொகுதியை அடக்குகிற தனியொரு கூறு.

print zone : அச்சு மண்டலம்; அச்சுப் பகுதி : செயல்முறைப்படுத்தலில் ஒரு வெளிப்பாட்டுச் சாதனத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட நீளப்பகுதி. இதனுள் தகவல்கள் பத்திகளில் வரிசைப்படுத்தப்படுகின்றன.

priority interrupt : முந்துரிமை இடையீடு : பொறியமைவினுள் மற்ற இடையீடுகளுக்கு மேலாக முந்துரிமையளிக்கப்பட்டுள்ள ஓர் இடையீடு.

priority processing: முந்துரிமைச் செய்முறைப்படுத்துதல் : ஒரு பணியின் வரிசை முறையைக் குறித்தளிக்கப்பட்ட முந்துரிமைகளின் அடிப்படையில் செய்முறைப்படுத்துதல்.

private automatic branch exchange: PABX : தனியார் தானியக்கக் கிளை இணைப்பகம் : ஒரு வணிக அமைவனத்திற்குள் அல்லது தொழிற்சாலைக்குள் தொலைபேசித் தொடர்பினை ஏற்படுத்தி பொதுத் தொலைபேசி இணைப்பகத்திற்குச் செல்லும், அதிலிருந்துவரும் அழைப்புகளை அனுப்புவதைக் கட்டுப்படுத்துகிற தானியக்க தனியார் தொலைபேசி விசைப் பொறியமைவு.

private line : தனியார் இணைப்பு; தனியார் தடம்: ஒரு பயனாளருக்கு அவரது தனிப்பட்ட பயன்பாட்டுக் காக வழங்கப்பட்டுள்ள அலை வரிசை அல்லது சுற்று வழி.

private key encryption : சொந்தச் சாவியினாலான உருமாற்றம்.

privately leased line : தனியார் குத்தகைத் தடம் : தனியொரு வாடிக் கையாளரின் பயன்பாட்டுக்கான செய்தித் தொடர்பு இணைப்பு.

privileged instruction : சிறப்புரிமை ஆணை : பயனாளர் எழுதிய வழக்க மான செயல் முறைகளில் பயன் படுத்துவதற்குக் கிடைக்கத்தக்கதாக இராத கணினி ஆணை. இதனைச் செயற்பாட்டுப் பொறியமைவின் வாலாயங்களில் மட்டுமே பயன் படுத்த முடியும்.

probabilistic model : நிகழ்தகவு உருமாதிரி : நிகழ்தகவுக் கணிதத் தைப் பயன்படுத்துகிற உருமாதிரி. எந்தத் தகவல்களின் தனி மதிப்பளவு கள் அறியப்படாமலிருந்து, ஆனால் அவற்றின் நீள்வீச்செல்லை நடவடிக் கையை ஊகிக்க முடியுமோ அந்தத் தகவல்களைப் பகுப்பாய்வு செய் வதற்கு இது பயன்படுத்தப்படு கிறது.

probability : நிகழ்தகவு : ஒரு குறிப் பிட்ட நிகழ்ச்சி நிகழ்வதற்கான வாய்ப் புகளைக் கணக்கிடுதல். எடுத்துக் காட்டு: ஒரு நாணயத்தைச் சுண்டி விட்டால் தலைவிழுவதற்கான நிகழ் தகவு 1/2; பூ விழுவதற்கான நிகழ் தகவு1/2. 0-9 வரைக் குறியிடப்பட்ட 10 சிப்புகளை ஒன்று கலந்து மேசை யில் போட்டு ஆறுக்கு மேற்பட்ட எண்ணுடைய ஒரு சிப்பினை எடுப் பதற்கான நிகழ்தகவு 3/10 ஆகும்.

probability theory : நிகழ்தகவுக் கோட் பாடு : ஒரு தற்செயல் நிகழ்ச்சி நிகழ் வதற்கான வாய்ப்புகளின் அளவீடு. இது ஒரு குழுமத்தின் நடத்தை முறையை ஊகிப்பதற்குப் பயன் படுத்தப்படுகிறது.

probabilistic model : நிகழ்தகவு மாதிரி.

problem analysis : சிக்கல் பகுப் பாய்வு: ஒரு சிக்கலுக்குத் தீர்வுகாண ஒரு திட்டத்தைப் பயன்படுத்துதல். செயல் முறை உருவாக்கச் சுழற்சி யில் முதல் நடவடிக்கை.

problem defining : சிக்கல் வரை யறுத்தல்.

problem definition : சிக்கல் வரை யறை : 1. ஒரு சிக்கலை வரையறுத் துக் கூறப் பயன்படுத்தப்படும் தருக்க முறையை வகுத்தல். 2. செய்யப்பட வேண்டிய ஒரு பணியினை வரை யறுத்துக் கூறுதல்.

problem description : சிக்கல் விவரிப்பு : தகவல் செய்முறைப்படுத் தலில், ஒரு சிக்கலை உரைத்தல். இதில், தீர்வுமுறை பற்றிய விவரிப் பும் உள்ளடங்கியிருக்கலாம். இந்தத் தீர்வேகூட, தகவல், உருமாற்றம், நடைமுறைகள், தகவல்கள், தடை கள், சுற்றுச்சூழல் ஆகியவற்றுக் கிடையிலான உறவு நிலையாக இருக்கலாம்.

problem oriented language : (POL): சிக்கல் சார்ந்த மொழி : ஒரு குறிப் பிட்ட வகைச் சிக்கல்களை வசதி யாக எடுத்துரைப்பதற்காக வடி வமைக்கப்பட்ட செயல்முறைப் படுத்தும் மொழி. இது, இணைப்பு மொழி, எந்திர மொழி, நடைமுறை சார்ந்த மொழி ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

problem programme : சிக்கல் செயல் முறை : மையச் செய்முறைப்படுத்

தும் அலகு சிக்கலான நிலையில் இருக்கும்போது நிறைவேற்றப் படும் செயல்முறை; சிறப்புரிமை ஆணைகளைக் கொண்டிராத ஒரு செயல்முறை.

problem solving : சிக்கல் தீர்வு ; சிக்கல் தீர்த்தல் : ஒரு கணினியினால் தீர்க்கப் படக்கூடிய ஒரு சிக்கல். இதற்கு ஒரு துல்லியமான கணிதச் சமன்பாடு தேவைப்படுவதில்லை. எனினும், கணினி உணர்ந்து கொள்ளக்கூடிய சில விதிகளின் தொகுதி தேவைப் படும். இது ஆறு நடவடிக்கைகள் அடங்கிய ஒரு செய்முறையாகும்: (1) சிக்கலை அடையாளங் காணல் (2) தொடர்புடைய தகவல்களைச் சேகரித்து வகைப்படுத்துதல் (3) மாற்று உத்திகளை உருவாக்குதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் (4) செயல் முறைப்படுத்துதல் (5) செயல் முறையை நிறைவேற்றுதல் (6) தொடர் நடவடிக்கையினை மேற் கொள்ளுதல். அனுபவமும், உரிய சிக்கல் தீர்வு உத்திகளைக் கையாளு வதும் சிக்கல்களுக்குத் தீர்வு காண் பதை எளிதாக்கும்.

procedural language : நடைமுறை மொழி : கோபால், ஃபோர்ட்ரான், பேசிக், சி, பாஸ்கல் மற்றும் டிபேஸ் போன்ற ஆணைத்தொடரமைப்பு பிரிவு தேவைப்படும் ஆணைத் தொடரமைப்பு மொழி. ஆணைத் தொடராளர்கள் அத்தகைய மொழி களில் எழுதும்போது தகவல் செய லாக்கம் மற்றும் ஆணைத் தொடர மைத்தல் சார்ந்து சிக்கல்களை தீர்ப் பதற்குத் தேவையான நடவடிக்கை முறையினை உருவாக்குவார்கள்.

procedure : நடைமுறை; செயற்படு முறை : செயல் முறை : 1.ஒரு சிக்க லுக்குத் தீர்வு காண மேற் கொள்ளப் படும் நடவடிக்கையின் வரிசை முறை. 2.செயல் முறைக்குத் தேவை யான ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்கிற ஓர் உயர்நிலை மொழிச் செயல் முறையின் பகுதி. 3. ஒரு கணினிச் செயல்முறையின் மற் றொரு பெயர்.

procedure division : நடைமுறைப் பகுப்பு; செயல்முறைப் பகுப்பு: ஒரு 'கோபால்' செயல்முறையின் நான்கு முக்கிய பகுதிகளில் நான்காவது பகுதி.

procedure oriented : நடைமுறை சார்ந்த : படி 'ஏ 'விலிருந்து படி 'பி'-க் குப் போவதற்காக பயனாளர் பின் பற்றுகின்ற பயன்பாடு. தகவல் நுழைவு ஆணைத் தொடர்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

procedure oriented language : நடைமுறை சார்ந்த மொழி : விரிவான சிக்கல்களின் ஒரு தொகுதிக்குத் தீர்வு காண்பதில் பயன்படுத்தப்படும் நடைமுறைகளை வசதியாக எடுத்து ரைப்பதற்கு வடிவமைக்கப்பட் டுள்ள ஒரு செயல்முறைப் படுத்தும் மொழி. எந்திர மொழி, சிக்கல் சார்ந்த மொழி ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

process : செய்முறை ; செயற்பாங்கு; நடைமுறை : 1. ஒரு குறிப்பிட்ட பலனை விளைவிப்பதற்கான,திட்ட மிட்ட செயற்பாடுகளின் வரிசை முறை. 2.செப்பமற்ற தகவல்களை பயனுள்ள செய்திகளாக உருமாற் றுதல்.

process bound : வரம்புறு செய்முறை: செய்முறைப்படுத்தியின் வேகத் தினால் வரம்புறுத்தப்பட்டுள்ள கணினியமைவு.

process control : செய்முறைக் கட்டுப் பாடு : எண்ணெய்ச் சுத்திகரிப்பு, எஃகு உற்பத்தி போன்ற தொழில்

செய்முறைகளைக் கட்டுப்படுத்து வதற்குக் கணினியைப் பயன் படுத்துதல்

process control activity : செய்முறைக் கட்டுப்பாட்டு நடவடிக்கை.

process control computer : செய் முறைக் கட்டுப்பாட்டுக் கணினி: செய் முறைக் கட்டுபாட்டுப் பொறிய மைப்பில் பயன்படுத்தப்படும் எண் மானக் கணினி. இதில் பொதுவாக ஆணைத் திறம்பாடு, சொல் நீட்சி, துல்லியம் ஆகியவை வரம்புறுத்தப் பட்டிருக்கும். காற்றில்லாத சூழல் வசதிகளில் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது.

process conversion : செய்முறை மாற்றம் : கணினியமைவின் இயக்க முறையை மாற்றியமைத்தல்.

processing : செய்முறைப்படுத்தல் : ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்குத் தகவல் களைக் கணினி மூலம் பலவிதமாகத் திறம்படக் கையாள்தல்.

processing part : செயல்முறைப் பகுதி.

processing symbol: செய்முறைப் படுத்தல் குறியீடு : கணக்கிடுதல், நகரும் தகவல்களை முதல்நிலைப் படுத்தல் போன்ற செய்முறைப்படுத் தும் செயற்பாட்டினைக் குறிக்கப் பயன் படுத்தப்படுகிற செவ்வகத் தொடர் வரைபடக் குறியீடு.

processor : செயலி; செய்முறைப் படுத்தி; செயலாக்கம் : தகவல்களைக் கொண்டு செயற்பாடுகளைச் செய் யும் திறனுடைய சாதனம் அல்லது பொறியமைவு. எடுத்துக்காட்டு: மையச் செயலகம் (வன்பொருள்) அல்லது சொல் செயலி (மென் பொருள்). ஒரு கணினியைச் சில சமயம் மொழிச் (language processor) செய்முறைப்படுத்தி என்பர்.

processor bound : வரம்புறு செய் முறைப்படுத்தி : உள்ளபடியான செய் முறைப்படுத்துதலை அல்லது கணிப் புகளைச் செய்வதற்கு மையச் செய் முறைப்படுத்தும் அலகினைக் கொண்டு செல்வதற்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தினால் சுணக்கம் செய்யப்படுகிற பொறியமைவுச் செயற்பாடு. இது வரம்புறு கணினி போன்றது. இது வரம்புறு உட்பாடு/ வெளிப்பாடு என்பதிலிருந்து மாறு பட்டது.

processor control : செயலாக்கக் கட்டுப்பாடு : அதன் அடிப்படை, மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட் டுக்காக ஒரு செயலகத்தைப் பயன் படுத்தும் எந்த ஒரு சாதனமும். சான்றாக, தொலைபேசி அமைப்பு கள் மற்றும் கண்ணாடி செய்தல் போன்ற பல தொழில்துறை நடை முறைகள்.

processor load : செயலகச் சுமை : ஒரே நேரத்தில் ஒரு செயலகம் எத்தனை வேலைகளை எடுத்துச் செய்யும் என்பதற்கான அளவு . 1.0 சுமை என்பது ஒரு செயலகம் ஒரு கடிகாரத்தின் ஒவ்வொரு சுழற்சியின் போதும் ஒரு வேலையைச் செய்தது என்று பொருள். 1.0-க்குக் கீழான சுமை என்றால் செயலக நேரம் வீணாக்கப் படுகிறது என்பது பொருள். 1.0- வுக்கு மேல் செயலக சுமை என்றால் ஒரு செயலகம் அப்போது கையாளும் சுமையை விட அதிகமாகச் செல்ல முடியும் என்பது பொருள்.

procomm: புரோகாம்: டேட்டா ஸ்டோர்ம் டெக்னாலஜிஸ் நிறுவனத் தின் புகழ்பெற்ற பி.சி. பங்குப் பொருள் தகவல் தொடர்பு ஆணைத் தொடர். பலவகையான நடை முறைகள் மற்றும் முகப்புகளை அது

ஆதரிக்கும். புரோகாம் பிளஸ் என்பது கூடுதல் தன்மைகள் உள்ள வணிகத் தொகுப்பு.

production database : உற்பத்தித் தகவல் தளம் : ஒரு நிறுவனத்தின் முக்கிய கோப்புகள் மற்றும் அன்றாட பரிமாற்றக் கோப்புகளை கொண்ட மைய தகவல்தளம்.

production run : உற்பத்தி ஓட்டம்: வாலாயமாகத் தன் நோக்கத்தை நிறைவேற்றுகிற ஒரு செயல்முறை யில் தவறு நேரிடும்போது அச்செயல் முறையை நிறைவேற்றுதல். எடுத்துக்காட்டு: வாராந்திர சம்பளப் பட்டியல் தயாரிப்பதற்கு ஒரு சம்பளப் பட்டியல் செயல் முறையை இயக்குவது ஓர் உற்பத்தி ஓட்டம் ஆகும்.

production system : உற்பத்தி அமைப்பு : ஒரு நிறுவனத்தின் அன்றாட வேலையைச் செயலாக்கம் செய்யப் பயன்படுத்தும் கணினி அமைப்பு. வளர்ச்சி மற்றும் சோதனை அல்லது தற்காலிக கேள்வி களுக்கும் ஆய்வுக்கும் பயன்படும் அமைப்புகளுடன் இதனை மாறு படுத்திப் பார்க்க.

productivity : உற்பத்தித் திறன்: ஒரு மென்பொருள்/வன்பொருள் பொறி யமைவு செய்யும் பணியினை அள விடுதல். இது பெரும்பாலும் பொறி யமைவின் வசதிகளையும் செயல் திறனையும் பொறுத்தது.

professional write : தொழில்சார் எழுத்து : சாஃப்ட்வேர் பப்ளிஷிங் நிறுவனத்தின் டாஸ் மற்றும் விண்டோசுக்கான சொல் செயலாக்க ஆணைத் தொடர். பயன்படுத்த எளி தானது. குழப்பமில்லாத கடிதங்கள் மற்றும் குறிப்புகளை-எழுதுபவர் களின் தேவைகளை-அது சமாளிக் கிறது. PFS : Write என்று முதலில் அழைக்கப்பட்ட இது பி.சி. சொல் செயலகங்களில் ஆரம்பத்தில் தோன் றிய ஒன்று.

programme : செயல்முறை;கட்டளைத் தொடர்; நிகழ்ச்சி நிரல்; கட்டளை நிரல்; ஆணை நிரல் : ஒரு கணினி தகவல்களைச் செய்முறைப்படுத் தும்படி செய்வதற்கான தொடர் வரிசை ஆணைகள். இது, ஓர் உயர் நிலை ஆதாரவடிவில் இருக்கலாம்; இதில், இதனைக் கணினி நிறை வேற்றுவதற்கு முன்னர் ஓர் இடை நிலைச் செய்முறைப்படுத்துதல் தேவைப்படும்; அல்லது கணினி யால் நேரடியாக நிறைவேற்றக் கூடிய ஒரு பொருள் வடிவமாகவும் இருக்கலாம்.

programme card : செயல்முறை அட்டை : குறிப்பிட்ட குறியீட்டு முறைப்படி துளையிடப்பட்டு முக் கியத் துளையீடு மற்றும் சரி பார்த்தல் எந்திரங்களின் தானியக்கச் செயற் பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தபடும் அட்டை.

programme area : செயல்முறைப் பகுதி.

programme chaining : செயல்முறைப் பிணைப்பு: செயல்முறைகளை அல் லது செயல்முறைப்பகுதிகளை ஒன் றாகப் பிணைக்கும் செய்முறை. உள் முக நினைவகத்தை விட பெரிதாக வுள்ள செயல்முறைகளை வரிசை முறைப் பளுவேற்றம், அந்தச் செயல் முறையின் அடுத்தடுத்த பகுதிகளின் அல்லது தகவமைவுகளின் நிறை வேற்றம் வாயிலாக நிறைவேற்றப் படுவதற்கு அனுமதிக்கிறது.

programme coding : செயல்முறைக் குறியீடிடுதல் : அறிவுறுத்தங்களை ஒரு செயல்முறைப்படுத்தும் மொழி யில் எழுதும் செய்முறை.

programme control : செயல்முறைக் கட்டுப்பாடு : செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு ஒரு கணினி பயன்படுத்தப்படும் ஒரு பொறிய மைவின் விவரிப்பு.

programme counter : செயல்முறை எண்ணி : கணினியினால் நிறைவேற் றப்பட வேண்டிய அடுத்த செயல் முறை ஆணையின் அமைவிடத் தைக் குறித்துக் காட்டுகிற பதிவகம்.

programme deck : செயல்முறை அடுக்கு : ஒரு கணினி செயல் முறை யில் அடங்கியுள்ள ஆணைகளைக் கொண்ட துளையிட்ட அட்டை களின் தொகுதி.

programme development cycle : செயல்முறை மேம்பாட்டுச் சுழற்சி : ஒரு கணினிச் சிக்கல் பகுப்பாய்வின் உதவியுடன் ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண்பதில் அடங்கியுள்ள படிமுறை கள். பதின்ம முறை எண்மான மேம் பாட்டுக் குறியீட்டுச் செயல் முறைச் சோதனை, ஆவணமாக்கம், ஒப் படைவு ஆகியவை இதில் அடங் கும்.

programme file : செயல்முறைக் கோப்பு : கணினிச் செயல்முறைகள் அடங்கிய கோப்பு.

programme flowchart : செயல் முறைத் தொடர்வரிசை வரைபடம் : ஒரு சிக்கலுக்குத் தீர்வுகாணக் கணினியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய குறியீடு கள், அறிவுறுத்தக் கோடுகள், தகவல்கள் அடங்கிய வரைபடம். இது பொறியமைவுத் தொடர் வரிசை வரைபடத்திலிருந்து வேறுபட்டது.

programme graph : செயல்முறை வரைபடம் : ஒரு செய்முறையினை வரைபடமுறையில் உருவாக்கிக் காட்டுதல்.

programme identification ID : செயல் முறைஅடையாளம் :செயல்முறையை அடையாளங்கண்டு கொள்ளுதல்.

programming language : செயல் முறை மொழி.

programme library : செயல்முறை நூலகம் : கிடைக்கத்தக்க கணினிச் செயல்முறைகள், வாலாயங்கள், செயல்முறைகளின் பகுதிகள் ஆகிய வற்றின் தொகுதி. நூலகத்தின் தொடர்புகள் மறுபயன்பாட்டுக் காகச் சேமித்து வைக்கப்படுகின்றன. அவை முழுமையான செயல் முறை களாக இருப்பின், அவற்றை அப்படியே மறுபடியும் பயன்படுத்த லாம். வேலையைக் குறைப்பதற்காக செயல்முறைகளின் பகுதிகளை மற்றச் செயல் முறைகளாகப் படியெடுக்கலாம்.

programmable calculator : செயல் முறைப் படுத்தத்தக்க கணிப்பிகள்: கணினி போன்ற அம்சங்களைக் கொண்ட சில கணினிகளுடன் கூடிய கணிப்பி போன்ற சாதனம். பேசிக் மொழியில் எழுதப்பட்ட சேமித்து வைக்கப்பட்ட செயல் முறையை நிறைவேற்றக் கூடிய கணிப்பி இதற்கு எடுத்துக்காட்டு.

programable : மாற்றவல்ல.

programmable communication interface: செயல்முறைப்படுத்தத்தக்க செய்தித் தொடர்பு இடைமுகப்பு: செய்தித் தொடர்புக் கட்டுப்பாட்டுக் காகப் பயன்படுத்தப்படும் இடை முகப்புப் பலகை.

programmable function key: செயல் முறைப்படுத்தத்தக்க செயற் பணித் திறவுகோல் : கணினியிலுள்ள செயல் முறையோடு சேர்ந்து மாறுகிற செயற்பணியைக் கொண்ட விசைப் பலகை திறவு கோல்.

programmable logic array : செயல்முறைப்படுத்தத்தக்க தருக்க முறை வரிசை : ஒரு குறிப்பிட்ட உட்பாடுகளின் தொகுதிக்கு வெளிப்பாடுகளுடன் கூடிய ஒரு பகுதிப் பொருளின் கூட்டுத்தொகையைக் கொடுக்கும் சாதனம்.

programmable memory : செயல்முறைப்படுத்தத்தக்க நினைவகம்: பொதுவாக பெரும்பாலான கணினிச் செயல்முறைகளும் தகவல்களும் சேமித்து வைக்கப்படும் உள்ளடக்கத்தை மாற்றக்கூடிய நினைவகம். பெரும்பாலும் குறிப்பின்றி அணுகும் நினைவகம் (RAM) அல்லது செயல்முறைப்படுத்தத் தக்க படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம். (PROM)

programmable read only memory : செயல்முறைப்படுத்தத்தக்க படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம் : மின்னியல் துடிப்புகள் மூலம் செயல்முறைப் படுத்தக்கூடிய நினைவகம். ஒரு முறை செயல்முறைப்படுத்தியதும் அதனை படிக்க மட்டுமே செய்யலாம். செயல்முறைப்படுத்தத்தக்க படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம், நினைவகச் செயல்முறைப் படுத்தி எனப்படும் ஒரு தனிவகை எந்திரம் வெற்றுச் சிப்புகளில் புதிய செயல்முறையை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

programme maintenance : செயல்முறைப் பராமரிப்பு : செயல் முறைகளிலுள்ள பிழைகளைத் திருத்தி தேவைக்கேற்ற மாறுதல்களைச் செய்து, சாதன மாற்றங்களின் சாதகங்களை இணைத்துச் செயல் முறைகளில் மாற்றம் செய்து, செயல் முறைகளை நாளது தேதி வரையில் சீரமைப்புச் செய்யும் செய்முறை.

programme manager : ஆணைத் தொடர் மேலாளர் : விண்டோஸ் 3. X இயக்கத்தின் கட்டுப்பாட்டு மையம், பயன்பாடுகளைத் துவக்கவும் மேசை அச்சை நிர்வகிக்கவும் உதவுகிறது.

programmed check : செயல் முறைப்படுத்திய கட்டுப்பாடு : ஒரு சிக்கலுக்கான செயல் முறைப்படுத்திய அறிக்கையில் இடைச் செருகல் செய்யப்பட்டு கணினி ஆணைகளைப் பயன்படுத்தி நிறைவேற்றப் படும் ஒய்வுகள் அடங்கிய கட்டுப் பாடு.

programmed instruction : செயல் முறைப்படுத்திய ஆணை : ஒரு குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிப்பதற்கான குறிப்பிட்ட ஆணைகளின் வரிசை முறை. பல்வேறு கணினிச் செயல் முறைப்படுத்தும் பயிற்சி வகுப்புகள் உள்ளடங்களாக கல்வித்துறைகளில் செயல்முறைப்படுத்திய ஆணை உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் உள்ளார்ந்த பின்னூட்ட வசதி இருப்பதால் இது முக்கியமாகத் தற் கல்வி வகுப்புகளில் பயன்படுத்தப் படுகிறது.

programmed label : செயல் முறைப் படுத்திய அடையாளச் சீட்டு : வட்டு நாடாக்கோப்புகள் ஆகியவற்றை எளிதாக அடையாளங் கண்டுகொள் வதற்காகப் பெரும்பாலான செயல் முறைகளில் கோப்பின் தொடக்கத் தில் ஒரு அடையாளச் சீட்டுப் பதி வினை உருவாக்குகிற உள்ளார்ந்த வாலாயத்தைக் கொண்டிருக்கின் றன. இது புறநிலை அடையாளச் சீட்டிலிருந்து வேறுபட்டது.

programmer/analyst : செயல் முறை யாளர்/பகுப்பாய்வாளர் : பொறிய மைவுப் பகுப்பாய்வினையும் வடிவமைப்புச் செயற்பணிகளையும் செயல்முறைப்படுத்தும் நடவடிக்கை

களுடன் ஒருங்கிணைக்கும் முக்கிய பணியினைச் செய்யும் ஆள்.

programmer board : செயல்முறையாளர் பலகை: ஒரு பயனாளர் தனது கணினியமைவில் பயன்படுத்துவதற்காக எழுதிப் படிக்க மட்டுமேயான நினைவகத்தை (PROM) அல்லது அழித்து எழுதிப் படிக்க மட்டுமேயான நினைவகத்தை (EPROM) செயல்முறைப்படுத்துவதற்கு அனுமதிக்கிற பலகை.

programming : செயல்முறைப்படுத்தல்: ஒரு சிக்கலை அதன் இயற்பியல் சூழலிலிருந்து கணினி ஏற்றுக் கொண்டு, அடிபணியக் கூடிய ஒரு மொழியில் மொழிபெயர்ப்பதற்கான ஒரு செய்முறை. அதாவது ஒரு செயல்முறையை வடிவமைத்து எழுதி சோதித்துப் பார்த்தல்; ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கான நடைமுறையைத் திட்டமிடுதல். இதில் சிக்கலைப் பகுப்பாய்வு செய்தல், அச்சிடுதலுக்குக் குறியிடுதல், உட்பாட்டு/ வெளிப்பாட்டு உருவமைப்புகளை அறுதியிடுதல், நடைமுறைகளைச் சரிபார்த்தல், சேமிப்பு இடத்தை ஒதுக்கீடு செய்தல், கணினியில் செயல் முறையின் ஓட்டத்தை மேற்பார்வையிடுதல் ஆகியவை இதில் உள்ளடங்கும்.

programming aids: செயல் முறைப் படுத்தல் உதவிகள்: கணினி பயன் படுத்துவோருக்கு உதவுகிற கணினிச் செயல்முறைகள். எடுத்துக் காட்டு: தொகுப்பிகள்; தவறு கண்டறியும் சாதனங்கள்; பிணைப்புப் பதிப்பிகள்; கணிதத் துணை வாலாயங்கள்.

programming language: செயல் முறைப்படுத்தும் மொழி : கணினிச் செயல்முறைகளில் ஆணைகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப் படும் ஒரு மொழி. இது நூற்றுக் கணக்கில் உள்ள இவை முக்கியமாக மூன்று வகைப்படும். 1. எந்திர மொழிகள்; 2. இணைப்பு மொழிகள்; 3. உயர்நிலைமொழிகள்; எந்திர மொழிகளில் கணித- தருக்க முறை அலகு (ALU) கட்டுப்பாட்டு அலகு, நினைவக அலகு ஆகியவற்றின் வடிவளவைப் பொறுத்து ஆணைக் குறியீடுகளின் தொகுதி தீர்மானக்கப்படுகிறது. எனவே, இந்த மொழிகளை எந்திரச்சார்பு மொழிகள் (machine depended language) என்றும் அழைப்பர். இணைப்பு மொழிகளில் ஆணைகள், தகவல்கள், முகவரிகள் அனைத்தும், நினைவூட்டுவகங்களாகவும் குறியீடுகளாகவும் அடையாளச் சீட்டுகளாகவும் அளிக்கப்படுகின்றன. எந்திர மொழிகள், இணைப்பு மொழிகள் இரண்டும் தாழ்நிலை மொழிகள் (lowlevel language) எனப் படுகின்றன. உயர்நிலை மொழிகள் தாழ்நிலை மொழிகளைப் போல் எந்திரத்தை அடிப்படையாகக் கொண்டிராமல் சிக்கல் சார்புடையவனாக அமைந்துள்ளன. இதனால் சில குறிப்பிட்ட ஆங்கிலச் சொற்களையும் குறிமானங்களையும் பயன்படுத்தி ஆணைகளின் வரிசை முறையினை உயர்நிலை மொழிகளில் எழுத முடிகிறது. உயர்நிலை மொழிகளில் எழுதப்படும் செயல் முறைகள் அனைத்தும் கணினியால் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் எந்திர மொழியில் மொழி பெயர்க்கப் படுகின்றன.

programming librarian : செயல் முறைப்படுத்தும் நூலகர் : முதன்மைச் செயல்முறையாளர் குழுவைச் சேர்ந்த மூன்று தலையாய உறுப்பினர்களில் ஒருவர், உருவாக்க ஆதார நூலகத்தைப் பராமரித்து செயற்படுத்தி வருகிறார். குறியீடுகள் உருவாக்கம், கணினி விரைவோட்டத்

தைக் கட்டுப்படுத்துதல், வெளிப் பாடுகள் அனைத்தையும் கோப்பிடு தல் மற்றும் வகைப்படுத்துதல் ஆகியவை சிலரது பணிகளில் அடங் கும்.

programming linguistics: செயல் முறைப்படுத்தும் மொழியியல்: சொற் றொடரியல், சொற்பொருளியல், செய்தித் தொடர்பியல் என்னும் ஒன்றோடொன்று இணைவுடைய மூன்று கோட்பாடுகளை ஏதேனும் இரு பொறியமைவுகளிடையே செய்தித் தொடர்புக்கான மொழி களாக உருவாக்கப் பயன்படுத்துதல். எந்திரப் பொறியமைவு, மின்னியல் பொறியமைவு, மனிதர் தொகுதி ஆகிய மூன்றில் இரண்டிற்கிடையே செய் தித் தொடர்புக்கு இது பயன்படு கிறது.

programming team : செயல் முறைப் படுத்தும் குழு : ஒரு செயல்முறைப் படுத்தும் திட்டம் குறித்தளிக்கப் பட்டுள்ள தனியாட்களின் குழுமம்.

programme planning : ஆணைத் தொடர் திட்டமிடல் : குறியீட்டமைவுக் குத் தேவையான ஆணைத் தொடர் அளவையை உருவாக்குவது. ஒரு படம், பரம்பரைப்படம், போலி, குறியீடு அல்லது மற்ற திட்டமிடல் முறைகளினால் இது செய்யப்படு கிறது.

programme specifications : செயல் முறைக் குறியீடுகள் : ஒரு பொறி யமைவின் தகவல் தேவைப் பாடு கள், தேவைப்படும் கோப்புகள், உட்பாட்டு/வெளிப்பாட்டுக் குறிப் பீடுகள், செய்முறை தகவல்கள் ஆகியவற்றை அடையாளங் காட்டு கிற ஆவணம்.

programme stack : செயல் முறை அடுக்கு : தகவல்களையும் ஆணை களையும் குறிப்பாக ஓர் இடைத் தடுப்பின்போது தற்காலிகமாகச் சேமித்து வைப்பதற்குக் கணினி நினைவகங்களில் ஒதுக்கப்பட்டுள்ள பகுதி.

programme state : ஆணைத்தொடர் நிலை: பயன்பாட்டு ஆணைத்தொட ரில் ஆணைகளை நிறைவேற்று கின்ற கணினியின் இயக்கமுறை.

programme statement : ஆணைத் தொடர் அறிக்கை: உயர் நிலை ஆணைத் தொடரமைப்பு மொழியில் மரபுத் தொடர். ஆணைத்தொடர் தொகுக்கப்படும்போது ஆணைத் தொடரின் ஒரு சொற்றொடர் பல எந்திர ஆணைகளை உருவாக்கும்.

programme step : செயல்முறைப்படி நிலை : ஆணைத்தொடர் படி : எந்திர மொழி ஆணை அல்லது சேர்ப்பி மொழி ஆணை போன்ற ஆரம்ப ஆணை. Programme statement என்பதுடன் வேறுபடுத்துக.

programmable : ஆணைத் தொடர மைக்கக்கூடிய : ஆணைகளை ஏற்று நடக்கும் திறனுடைய மற்ற மின் னணுச் சாதனங்களுடன் கணினி யைத் தனிமைப்படுத்துவது எது என் றால் அதன் ஆணைத் தொடரமைப் புத் தன்மையே.

programmable calculator : செயல் முறையை மாற்றியமைக்கத்தக்க கணிப்பி : எண்களை மட்டுமே செயல் படுத்தக்கூடிய - எண்ணெழுத்துத் தகவல்களைக் கையாள இயலாத அளவான செயல்திறனுடைய கணினி.

programmed decision : முன்கூட்டி வரையறுக்கப்பட்ட தீர்வு : ஒரு குறிப் பிட்ட முடிவு தேவையென்றால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த முன்னரே வரையறுக்கப் பட்ட விதிகளின் அடிப்படையில்

தானியங்கியாக எடுக்கக்கூடிய முடிவு.

programmer : ஆணைத்தொடரமைப்பவர் : கணினி ஆணைத் தொடர்களை வடிவமைத்து எழுதி சோதனை செய்து தருகின்றவர்.

programme stop: செயல்முறை நிறுத்தம் : செயல்முறையினுள் அமைக்கப்பட்டுள்ள நிறுத்த ஆணை. இது சில நிலைகளில் ஒரு சிக்கலுக்குத் தீர்வு காணும் செய்முறை முடிவுற்றதும் கணினியின் இயக்கத்தைத் தானாகவே நிறுத்திவிடுகிறது.

programme storage : செயல் முறைச் சேமிப்பகம் : செயல்முறை வாலாயங்களையும் துணை வாலாயங்களையும் சேமித்து வைப்பதற்கு உள்முகச் சேமிப்பகத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பகுதி. பல பொறியமைவுகளில் உள்ளடக்கங்களைத் தவறுதலாக மாற்றி விடுவதைத் தடுப்பதற்குப் பாதுகாப்புச் சாதனங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

programme switch: செயல்முறை விசை: ஒரு செயல்முறைப்படுத்தும் வாலாயத்தில் இருவகை நடவடிக்கைப் போக்குகள் நடைபெறுவதை இயல்பிக்கும் முனை. இவற்றில் எது சரியானது என்பதை செயல் முறையில் வேறெங்கேனும் உள்ள ஒரு நிலை அல்லது பொறியமைவின் ஓர் உறுப்பு நிருணயிக்கிறது.

programme testing : செயல்முறைச் சோதனை : ஒரு செயல்முறை எதிர்பார்க்கும் செயற்பணிகளைச் செய்கிறது என்பதை அறிந்து கொள்வதற்காக ஒரு செயல்முறையை நிறைவேற்றுதல்.

progress reporting: முன்னேற்ற அறிக்கையளிப்பு : ஒரு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது படிப்படியான அதன் நிறைவேற்றம் பற்றிய அறிக்கை.

project control : திட்டக்கட்டுப்பாடு : ஒரு திட்ட மேலாண்மைச் சுழற்சியின் ஒரு நிலை இது. திட்டமிட்டுள்ள அட்டவணைப் பணியுடன், உள்ளபடி நிறைவேறிய பணியுடன், ஒப்பிட்டுப் பார்த்து, திட்டம் நிறைவேறுவதில் ஏற்படும் காலத்தாழ்வுகளைத் தவிர்ப்பதற்குத் தக்க திருத்த நடவடிக்கைகளை நிறைவேற்றுகிறது.

projecting: திட்டம் வரைதல் : ஒரு முப்பரிமாண காட்சியின் இருபரிமாண வரைகலைக் காட்சி உண்டாக்குதல்.

projection : திட்ட விரிவாக்கம்: கடந்த காலப் போக்குகளை வருங்காலத்திற்கு விரிவுபடுத்துதல். இது வணிக மேலாண்மை உத்தியாகும். இதற்குக் கணினி வழங்கும் தகவல்கள் அளவற்ற பயனுடையவை.

project library : திட்ட நூலகம்: திட்டங்கள், பணிகள், நடவடிக்கைகள் ஆகியவற்றின் தகவல்தளம். இதனை, புதிய திட்டங்களை வகுக்கும்போது மாற்றமைவு செய்து பயன்படுத்தலாம்.

project manager : திட்ட மேலாளர் : ஒரு திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள். இவரைச் சில சமயம் திட்டக்குழுமத் தலைவர் என்பர்.

projector : ஒளிதரும் அலகு: கண்ணாடிகளையும் லென்சுகளையும் கொண்டு ஒளியை ஒரு குறிப்பிட்ட திடகோணத்தில் செலுத்தி மிக அதிகமாக ஒளிரும் படத்தைத் தருவது.

project plan : திட்டநிலை : ஒரு திட்ட மேலாண்மைச் சுழற்சியில் ஒரு நிலை (கட்டம்). இதில், பணித்

திட்டத்தின் மேம்பாடு, அமைப்பு முறை அடங்கும்.

project schedule : திட்டக்கால அட்டவணை : ஒரு திட்டத்தின் ஒவ்வொரு பணியும் நடவடிக்கையும் தொடங்கும் நேரம் முடிவுறும் நேரம் பற்றிய தகவல்களைக் கொண்ட அட்டவணை.

prokey : புரோகீ : ரோஸ்சாஃப்ட் நிறுவனம் தயாரித்த பி.சி-க்களுக்கான விசைப்பலகை பெரு செயலகம். சொற்பகுதி வருதல் அல்லது கட்டளை வரிசையைப் பேரளவில் வரச்செய்து மீண்டும் மீண்டும் தட்டச்சு செய்வதை நீக்க உதவுவது.

PROLOG : புரோலாக் (ஒரு கணினி மொழி): "செயல்முறைப்படுத்தல் தருக்கமுறை" என்று பொருள்படும் programming logic என்ற ஆங்கிலச் சொற்றொடரின் குறும்பெயர். இது "செயற்கை நுண்ணறிவில்" (Artificial Intelligence) பயன்படுத்தப்படும் ஓர் உயர்நிலைச் செயல்முறைப்படுத்தும் மொழி. இது, ஜப்பானில் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

PROM : புரோம் : "செயல்முறைப் படுத்தத்தக்க படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம்" என்று பொருள்படும். "Programmable Read Only Memory" என்ற ஆங்கிலச் சொற்றொடரின் குறும்பெயர்.

PROM programmer : புரோம் செயல்முறைப்படுத்தி: செயல் முறை படுத்தத்தக்க படிப்பதற்கு மட்டுமேயான நினைவகங்களை செயல்முறைப் படுத்துவதற்கும், அழித்திடத்தக்க செயல்முறைப்படுத்தத்தக்க, படிப்பதற்கு மட்டுமேயான நினைவகங்களை மீண்டும் செயல்முறைப் படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் சாதனம். இது சில சமயம், "புரோம் தகளி "என்றும் அழைக்கப்படுகிறது.

prompt : நினைவுக்குறிப்பு ;தூண்டு எழுத்து; நினைவூட்டுத் தூண்டல் : கணினி, விசைப் பலகை உட்பாட்டினை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருப்பதைக் குறிப்பதற்கான எழுத்து அல்லது செய்தி. பொதுவாக எந்தத் தகவலைப் பதிவு செய்வது அல்லது எந்த நடவடிக்கையினை மேற்கொள்வது என்பதைப் பயன் படுத்துபவருக்குத் திரையில் காட்டுகிற எழுத்து.

proof : பிழைத்திருத்தப் படி: வெளியிடுவதற்குச் சரியாக இருக்கிறதா என்று சோதிக்கப் பயன்படும் ஒரு பக்கம் அல்லது வெளியீட்டின் சோதனை நகல்.

proofing programme : பிழைதிருத்தச் செயல்முறை : அகராதிச் செயல் முறை அல்லது எழுத்துப் பிழைத் திருத்தம் போன்றது.

proof reader's marks: பிழை திருத்துபவரின் குறியீடுகள் : ஒரு பிழைதிருத்தப்படியில் திருத்தங்கள் அல்லது பிழைகள் உள்ளன என்பதைக் குறிப்பிடும் குறியீடுகள். டி.டி.பி.யில் பயன்படுவது.

propagated error : பெருகிய பிழை : ஒரு செயற்பாட்டில் ஏற்பட்டு, பின்வரும் செயற்பாடுகளுக்கான தகவல்களைப் பாதிக்கிற பிழை அல்லது தவறு. இது செய்முறைப்படுத்திய தகவல் வாயிலாக பரவுகிறது.

propagation : பரவுதல் : ஓரிடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்குப் பரவுதல்.

propagation delay : பரப்புகைக் காலத் தாழ்வு; பரப்புகைச் சுணக்கம் : ஒரு செயற்கைக் கோள் செய்தித் தொடர்புப் பொறியமைவில் ஏற்படும் காலத் தாழ்வு.

proportion : வீத அளவு.

proportional printing : விகிதாச்சார அச்சில் : ஒவ்வொரு எழுத்துக்கும் இடைவெளி இடம் அதன் அகலத்தை ஒட்டிய விகிதத்தில் இருக்குமாறு அச்சிடுதல். பெரிய எழுத்து w-வானது சிறிய எழுத்து 'i' யைவிட அதிக இடத்தை எடுத்துக் கொள்ளும்.

proportional spacing : வீத அளவு இட வெளியிடல் : ஓர் அச்செழுத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடை நிலை இட வெளி, அந்த எழுத்தின் அகலத்திற்கொப்ப இருக்குமானால் இட வெளியிடல் வீத அளவில் இருப்பதாகக் கருதப்படும். இந்த நூலிலுள்ள அச்சுக்கோப்பு வீத அளவு இட வெளியிடல் அடிப்படையில் அமைந்திருப்பதால், "Write" என்ற சொல்லிலுள்ள 'W' என்னும் எழுத்து 'i' என்ற எழுத்தைவிட அதிக இடத்தை அடைத்துக் கொள்கிறது. இதற்கு மாறாக தர அளவுபடுத்திய தட்டச்சுப்பொறி முறையில், எல்லா எழுத்துகளுக்கும் சரிசமமான இட வெளியே ஒதுக்கப்படுகிறது.

proposition : முற்கோள் : தருக்க முறையில் ஒரு முன்மொழிவு. இது மெய்ம்மையாகவும் இருக்கலாம்; பொய்ம்மையாகவும் இருக்கலாம்.

proprietary software : தனியுரிமை மென்பொருள் : ஒரு தனிமனிதருக்கு அல்லது வணிக நிறுவனத்திற்குச் சொந்தமான செயல்முறை. இது பதிப்புரிமை கொண்டதாக அல்லது இன்னும் பொதுமக்களுக்கு வெளியிடப்படாததாக இருக்கும். இந்த மென்பொருளை அனுமதியின்றி எவரும் சட்டப்படிப் பயன்படுத்தவோ, படியெடுக்கவோ முடியாது. இது 'பொதுமுறை மென்பொருள் '(Public domain Software) என்பதிலிருந்து வேறுபட்டது .

protect : பாதுகாத்தல் : ஒரு கணினியமைவின் செயல் முறையை அனுமதி பெறாமல் அணுகுவதைத் தடுத்தல். தீங்கு ஏற்படுவதைத் தடுக்கக் காப்பிடுதல்.

protected memory : பாதுகாக்கப்பட்ட நினைவகம் : அழுத்தப்பட்ட நினைவகம் போன்றது. ஆனால் அதிலிருந்து வேறானது. கணித்தலில் யூனிக்ஸ் போன்ற இயக்க அமைப்புகள் வேறு செயலகங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கும்போது நினைவகத்தை அணுகுவதைத் தடுக்கின்றனர். வேறு ஒரு செயல்முறைபடுத்தும் நினைவக இடத்தை எந்த ஒரு செயல்முறையும் எழுத முடியாது. டாஸ் போன்றவற்றில் இந்தக் கட்டுப்பாடு அமைப்பு இல்லை. விண்டோஸ் 95இல் இந்தச் சிக்கல் இருக்காது.

protected mode : பாதுகாக்கப்பட்ட முறை : இன்டெல் 286-கள் மற்றும் பின்னர் வந்தவைகளில் உள்ள நினைவகத்தின் அனைத்துப் பகுதிகளையும் முகவரியிட கணினியை அனுமதிக்கும் ஒரு இயக்கநிலை. ஒரு ஆணைத்தொடர் மற்றொன்றின் நினைவக எல்லைக்குள் செல்லாமலும் இது தடுக்கிறது. இதனால் பல ஆணைத்தொடர்கள் பாதுகாக்கப்பட்ட சூழ்நிலையில் இயங்கமுடியும்.

protocol stack : நடைமுறை இருப்பு: ஒரு தகவல் தொடர்பு கட்டமைப்பில் பயன்படுத்தப்படும் மரபொழுங்கு விதிமுறைகள்.

protected storage : காப்பிட்ட சேமிப்பகம், தனிவகை நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சேமிப்பக அமைவிடங்கள். இது சேமிப்பதற்குப் பொருத்தமானது தானா என்பதை உறுதிசெய்யும் ஒரு நடை முறைக்கு உள்ளாகாமல் தகவல்களைச் சேமிக்க இயலாது.

protocol: மரபொழுங்கு; நெறிமுறை; முறையான நடைமுறைகள்; விதி முறைத் தொகுப்பு : கணினியமைவு களிடையே தகவல் பரிமாற்றம் பற்றிய விதிகளின் தொகுதி. எடுத்துக் காட்டு: ஐபிஎம் சொந்தக் கணினி; ஆப்பிள் மெக்கின்டோஷ் கணினி.

prototype : மூல முன்வடிவம்; முன் மூல அச்சு : ஒரு மென்பொருள் தொகுதியின் அல்லது கணினி வன் பொருள் சாதனத்தின் அல்லது பொறி யமைவின் முதல் பதிப்பு அல்லது முன் மாதிரி வடிவம். இது உற்பத் திக்கு முந்திய சோதனைக்குப் பயன் படுகிறது.

prototyping : மாதிரியமைத்தல்: இறுதி இயக்கமுறை அமைப்பின் இயங்கும் மாதிரி ஒன்றை உரு வாக்கி, மேம்படுத்தி, சீர்செய்தல்.

proving : மெய்ப்பித்தல்; நிறுவுதல் : ஓர் எந்திரம், திருத்தப் பராமரிப்புக் குப் பிறகு, குறைபாடுகள் இல்லா திருக்கிறது என்பதை மெய்ப்பிப் பதற்கான சோதனை.

proxy server : பதிலாள் பணியகம் : ஒரு வாடிக்கையாளர் நேரடியாகக் கேள்விகள் கேட்காமல் அவருக்காக ஒரு பணியகம் கேட்பது. நெருப்புச் சுவர் கட்டமைப்பு முறையில் இணைய பாதுகாப்பான உள் கட்ட மைப்பினுள் பதிலால் பணியகம் அமரும்போது இது ஏற்படுகிறது. உள்கட்டமைப்பில் உள்ள ஒரு பயனாளர் வெளிவுலகுக்கு நேரடி யாகக் கேள்விகள் கேட்க முடியாது. அவர் சார்பாக இது ஆவணங்களைக் கேட்கும்.

psec : பிசெக் : பிக்கோ வினாடி என்ப தன் குறும்பெயர். இது ஒரு வினாடி யின் நூறாயிரங்கோடியில் ஒரு பகுதி.

pseudocode : போலிக் குறியீடு: 1.இயக்கிகள், இயக்கப்படு எண்கள், செயற்பாடுகள், அட்டவணைப் பதி வேடுகளைக் குறிக்கப் பயன்படுத் தப்படும் கட்டுத்திட்டமற்ற குறியீடு களின் தொகுதி. 2.தொடர் வரிசை வரைபடங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் செயல்முறை வடிவமைப்பு முறை. இது, ஆங்கிலம் போன்ற கட்டளைகளை உருவரையாகப் பயன்படுத்துகிறது.

pseudocompiler : போலி தொகுப்பு : ஒரு போலி மொழியை அல்லது இடைப்பட்ட மொழியை உருவாக் கிய தொகுப்பு. இயக்கப்படுவதற்கு இது மேலும் தொகுக்கப்பட வேண் டும் அல்லது விளக்கப்பட வேண் டும்.

pseudocomputer : போலிக் கணினி : ஒரு மரபான நுண்செய்முறைப் படுத்தியின் தாயக எந்திர மொழியில் எழுதப்பட்டுள்ள மென்பொருள் மொழியாக்கச் செயல் முறை.

pseudolanguage : போலி மொழி : ஒரு கணினியினால் நேரடியாகப் புரிந்து கொள்ள முடியாத மொழி; இது கணினிச் செயல்முறைகளை எழுதப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு போலிச் செயல்முறையைப் பயன்படுத்து வதற்கு முன்பு, அது, கணினி அறிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழியில் (எந்திர மொழி), மொழி பெயர்க்கப் பட வேண்டும். இது "குறியீட்டு மொழி" (symbolic language) போன்றது.

pseudo-operation : போலிச் செயற் பாடு : கணினியின் செயற்பாட்டுத் தொகுதியாக வன்பொருளால் உணர்ந்தறியப்பட்டுள்ள தொகுதி யின் ஒரு பகுதியாக இல்லாத செயற் பாடு. எனவே, இது எந்திரச்செயற் பாடுகளின் தொகுதியின் ஒரு விரி வாக்கம் ஆகும்.

pseudo random : போலி முறையிலா.

pseudorandom number : தொடர்பிலாப் போலி எண் ; போலி முறையிலா எண் : ஒரு நியதி வாத முறைப்படி ஒரு கணினியினால் உருவாக்கப்படும் எண். இந்த எண்கள் குறிப்பின்றிச் செய்யப்படும் பல புள்ளியியல் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றன. பெரும்பாலான நடைமுறை நோக்கங்களுக்காக இதனை ஒரு குறிப்பிலா எண்ணாகப் பயன்படுத்தலாம்.

p-system : பி-பொறியமைவு: ஒரு நுண்கணினிச் செயற்பாட்டுப் பொறியமைவு. பல்வேறு எந்திரங்களில் பயன்படுத்தும் வகையில் இதில் செயல்முறைகளை எழுதலாம். இது, இந்தப் பொறியமைவின் முக்கிய நன்மையாகும். இது, பி-குறியீட்டினை ஒரு குறிப்பிட்ட கணினிக்குப் பொருத்தமான எந்திரமொழியில் மொழி பெயர்க்கிறது.

publication language : வெளியீட்டு மொழி : நூல் வெளியீடுகளுக்குப் பொருத்தமான நன்கு வரையறுக்கப்பட்டுள்ள ஒரு செயல்முறைப் படுத்தும் மொழி இன்றியமையாத தேவை. ஏனென்றால் சில மொழிகளில் பொதுவான எழுத்து முகப்புகளாக இல்லாத தனிவகை எழுத்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

public broadcasting : பொது ஒலி பரப்பு.

public domain software : பொது முறை மென்பொருள் : 1.பதிப்புரிமைச் சட்டங்களின் பாதுகாப்புக்கு உட்படாமலிருப்பதும் சட்ட வழக்குகள் தொடரப்படலாம் என்ற பயமின்றிச் சுதந்திரமாக எல்லோராலும் பயன்படுத்தப்படுவதுமான மென்பொருள். ஒரு செயல் முறையை உருவாக்கியவர் பொது மக்களுக்கு நன்கொடையாக வழங்கிய ஒரு கணினிச் செயல் முறை. 2. தொலைக் கணினிகளில் பயன்படுத்தப்படும் இலவசச் செயல் முறைகள். இது "தனியுரிமை மென் பொருள்" (Proprietary Software) என்பதிலிருந்து வேறுபட்டது.

public file : பொதுக் கோப்பு : ஒரு அமைப்பு அல்லது கட்டமைப் பின் அனைத்து பயனாளர்களுக்கும் கிடைக்கும் கோப்பு.

public network : பொதுப் பிணையம்: பொதுவாக ஒரு கட்டணம் செலுத்தி எல்லோரும் பயன்படுத்தக்கூடிய ஒரு செய்தித் தொடர்புச் சாதனம்.

publish and subscribers : வெளியீடும் சந்தாவும் : கோப்புகளுக்கிடையே வெப்ப இணைப்புகளை ஏற்படுத்தும் மெக்கின்டோஷ் சிஸ்டம் 7-ன் திறன். ஒரு கோப்பின் அனைத்து அல்லது ஒரு பகுதியை பதிப்புக் கோப்பு என்று பதித்து, சந்தாதாரர் கோப்பாக மாற்றலாம். எந்த ஒரு பதிவித்த கோப்பைப் புதுப்பித்தாலும், சந்தாதாரர் கோப்பும் புதுப்பிக்கப்படும்.

pull down menu : கீழ்விரி பட்டியல்; தலைவிரியும் பட்டியல் : சுட்டு நுண்பொறியின் சுட்டு முள்ளை ஒரு தலைப்புக்கு நகர்த்தி, பிறகு சுட்டு நுண்பொறிப் பொத்தானை அழுத்துவதன் மூலம் காட்சியாகக் காட்டத்தக்க விவரப் பட்டியல்.

pull instruction : மீட்பு ஆணை: செயல் முறை கீழ்த்தள்ளு அடுக்கின் உச்சியிலிருந்து தகவல்களை இழுக்கிற அல்லது மீட்கிற ஆணை. இது விரைவுத் தள்ளு ஆணை போன்றது.

pulse : துடிப்பு; துடிப்புக் குறியீடு; அதிர்வு : மின்னழுத்தத்தில் நேர் மின்னாகவோ எதிர்மின்னாகவோ திடீரென ஏற்படும் மாறுதல். இது மின்

சுற்று வழிக்குத் தகவலை அனுப்பு கிறது.

puck : கைவரை கலைச் சாதனம் : ஓர் ஆள் கையில் பிடித்துக்கொண்டு கையால் இயக்கும் வரைகலை உட்பாட்டுச் சாதனம். இது ஒரு வரை கலைத் தகட்டில் ஆயத் தொலைவு களைக் குறிப்பதற்குப் பயன்படு கிறது.



கைவரை கலைச்சாதனம் (Puck)

pulse code modulation : துடிப்புக் குறியீடு; துடிப்புக் குறிப்பேற்றம் : பிசிஎம் அமைப்பில் ஒப்புமை சமிக் ஞையைத் தொடர்ந்து இடை வேளை யில் மாதிரி எடுத்து ஒரு துடிப்பு அலைமாற்ற வீச்சு கலை மாற்ற (ஆம்ப்ளிட்டியூடு மாடுலேட்டர்) அலைவடிவை ஏற்படுத்தலாம். ஒரு சமிக்ஞையின் உயர்ந்த அலை வரிசை யின் இரட்டை மதிப்பை மாதிரி அள வாகக் கொண்டு ஒரு உவமச் சமிக் ஞையைத் தொடர்ந்து மாதிரியெடுத் தால் குரலை மீண்டும் உருவாக்குவது போதுமானது. மாதிரித் துடிப்பின் கால இடை வெளிக்கு மட்டும் திறக்குமாறு அமைக்கப்பட்டுள்ள வாயிலைக் கொண்ட மின் சுற்றில் ஒத்திசைவு உவமச் சமிக்ஞையை அனுப்பி மாதிரி எடுக்கப்படுகிறது. இதில் வெளியீடாக வருவது PAM சமிக்ஞை.

pulse modulation : துடிப்பு ஏற்ற-இறக்கம் : தகவல்களை அனுப்பு வதற்கு ஏற்ற இறக்கம் செய்யப் பட்டுள்ள அல்லது பண்பியல்புப் படுத்தப்பட்டுள்ள துடிப்புகளின் தொடர் வரிசையைப் பயன்படுத்து தல். PAM, PPM, PDM போன்றவை இந்த ஏற்ற இறக்க வகையைச் சேர்ந்தவை.

pulse regenerators : துடிப்பு மீட்டுருவாக்கிகள் : தொலை பேசிக் கம்பியின் பாதை நெடு கிலும் டிடிஎம் சமிக்ஞைகள் வலுப்பெறுகின்றன; பிரிகின் றன. பிழைகள் சேர்க்கப்பட வில்லையென்றால் ஒரு குறிப் பிட்ட சமயத்தில் துடிப்பு இருக்கிறதா இல்லையா என்று கூற முடியும். தேவைப்படும் துல்லியத்துக்குள் துடிப்பின் அலைவடிவத்தை வைத் திருக்க கம்பி நெடுகிலும் துடிப்பு மீட்டுருவாக்கிகள் அமைக்கப்பட் டுள்ளன. ஒவ்வொருமுறை துடிப்பு புதுப்பிக்கப்படும்போதும் ஒரு புதிய, சிதையாத துடிப்பு கம்பியில் அனுப்பப்படுகிறது. துடிப்பு இல்லை என்று கண்டுபிடிக்கப்படும்போது, துடிப்பு அனுப்பப்படுவதில்லை.

punched card : துளையிட்ட அட்டை: தகவல் செய்முறைப்படுத்தும் செயற் பாடுகளில் பயன்படுத்தப்படும் காகித அட்டை. இதில் நூற்றுக்கணக் கான தனித்தனி அமைவிடங்களில் நுண்ணிய செவ்வகத் துளைகள் இடப்படுகின்றன. இத்துளைகள் எண்ணியல் மதிப்பளவுகளையும் ஆல்பா எண்ணியல் குறியீடுகளை யும் குறிக்கின்றன.

punching position : துளையிடு இட நிலை : ஓர் அட்டைப் பத்தியின் பிரி வினைப் பகுதிகளில் ஒன்று. இதில் ஒரு துளையினை இடலாம்.

punching station : துளையிடும் நிலையம் : விரற்கட்டைத் துளையிடு எந்திரம், அட்டைத்துளையிடு எந்திரம், ஆகியவற்றில், துளையிடும் செய்முறைக்காக ஓர் அட்டையினைப் பொருத்துவதற்கான பகுதி.

pure procedure : தூய நடைமுறை : நிறைவேற்றத்தின்போது தனது எந்த பகுதியையும் மாற்றமைவு செய்து கொள்ளாத நடைமுறை.

purge : அழிப்பு : ஒரு கோப்பினை அழித்து விடுதல்.

push : தள்ளு : ஒரு செயல்முறை அடுக்கின் உச்சி அமைவிடத்தினுள் தகவலைத் தள்ளிச் செலுத்துதல். அடுக்கின் சுட்டுமுள், அடுக்கின் உச்சிக்கு வருகிற அடுத்த அமைவிடத்தைச் சுட்டிக் காட்டும் வகையில் தானாகவே உயர்ந்து விடுகிறது. இது "விரைவுத் தள்ளல்" (Pop)என்பதிலிருந்து வேறுபட்டது.

push/pull tractor : தள்ளு / இழு டிராக்டர் : அச்சிடும் தாள் இழுவை காகிதத்தை பிளேட்டனுக்குத் தள்ளுமாறும் பிளேட்டனில் இருந்து அதை வெளியே எடுக்குமாறும் பொத்தானிடக்கூடியது. தனித்தாள் தொடர் படிவங்களைத் தள்ளலாம். பெரும்பாலான பல்பகுதி படிவங்களும் வில்லைகளும் மோதிக் கொள்வதைத் தடுக்க இழுக்கப்பட வேண்டும்.

pushdown list : கீழ்த்தள்ளுப் பட்டியல் : கீழிருந்து மேல்நோக்கி எழுதப்படும் பட்டியல். இதில் ஒவ்வொரு புதிய பதிவும் பட்டியலின் உச்சியில் இடம் பெறும். பட்டியலின் உச்சியிலுள்ள இனம் முதலில் செய்முறைப்படுத்தப்படும்.

pushdown stack : கீழ்த்தள்ளு அடுக்கு: கணினியில் ஒரு கீழ்த் தள்ளுப் பட்டியலை நிறைவேற்றுகிற நினைவக அமைவிடங்களின் அல்லது பதிவேடுகளின் தொகுதி.

push instruction : தள்ளு ஆணை : தள்ளும் செயற்பாட்டினை நிறைவேற்றுகிற கணினி ஆணை.

push-pop stack : விரைவுக் கீழ்த் தள்ளு அடுக்கு : ஒரு செயல்முறை முகப்பிலிருந்து தகவல்களைப் பெற்று, ஆணைகளின் முகவரி அமைவிடங்களை "முதலில் கடைசி வெளிப்பாடு" அடிப்படையில் சேமித்து வைக்கிற பதிவேடு. இரு செயற்பாடுகளும் அடுக்குச் செய்முறைப்படுத்துதலில் அடங்கியவை. தள்ளுதல் என்பது பதிவேடுகளிலிருந்து அடுக்கினை நிரப்புவதைக் குறிக்கிறது. விரைவுத் தள்ளுதல் என்பது பதிவேடுகளிலிருந்து அடுக்கினை நிரப்புவதைக் குறிக்கிறது; விரைவுத் தள்ளுதல் என்பது பதிவேடுகளுக்கு மாற்றுவதற்காக அடுக்கினைக் காலி செய்வதைக் குறிக்கிறது.

pushup list : மேல் தள்ளுப் பட்டியல்: இனங்களின் பட்டியல். இதில் ஒவ்வொரு இனமும் பட்டியலின் இறுதியில் பதிவு செய்யப்படுகிறது. மற்ற இனங்கள் பட்டியலில் அவை இடம் பெற்றுள்ள இடத்தில் அப்படியே இருந்து விடும்.

put : புட் : ஆணைத்தொடரமைத்தலில் நடப்புப் பதிவேட்டை வெளியீட்டுக் கோப்பில் சேமிக்கு மாறு கேட்கும் ஒரு வேண்டுகோள்.

Q

quadbit : நான்மைத் துண்மி : குவாம் (QAM) குறிப்பேற்றத்தில் (modulation) பயன்படுத்தப்படும் நான்கு துண்மி களின் தொகுதி.

quad-density : மிகைச்செறிவு ; நான்கு மடங்கு அடர்த்தி : ஒரு கணினி வட்டுப் பொறியமைவின் தகவல் சேமிப்புச் செறிவினைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் படும் சொல். ஒற்றைச் செறிவு வட்டுகளில் சேமித்து வைக்கக் கூடிய தகவல்களைப் போல் நான்கு மடங்கு தகவல்களை இந்தப் பொறி யமைவுகளில் சேமித்து வைக்க லாம். இரட்டைப் பக்க இரட்டைச் செறிவு வட்டுகள் மிகைச் செறிவு வட்டுகள் ஆகும்.

quadratic quotient search : இரு விசைப்படி ஈவு ஆய்வு; இரு விசைப் படி ஈவு தேடல் : பிந்திய வரிசை அட்டவணை அமைவிடங்களை ஆராயும்போது இரு விசைப்படி எதிரீட்டினைப் பயன்படுத்தும் படி நிலை நடைமுறை.

quadrature : உருச்சதுரச் சரியீட் டளவு: பால் (PAL) தொலைக்காட்சி ஒளி பரப்பில் வண்ண சமிக்ஞை களை அளிக்க அதிர்வலைவீச்சு குறிப்பேற்றம் பயன்படுத்தப்படு கிறது.

quadrature amplitude modulation : உருச் சதுர சரியீட்டளவு அதிர் வலை வீச்சுக் குறிப்பேற்றம் : நடுநிலை அதிவேகக் குறிப்பேற்றங்களில் பயன்படுத்தப்படும் ஒரு செய்தி யனுப்பும் முறை.

quadrillion : ஆயிரம் கோடி கோடி : ஒரு இலட்சம் கோடியில் ஆயிரம் மடங்கு.

quad-type cable : குவாட் வகை கம்பிவடம் : ஒட்டப்பட்ட இணைக் கம்பிகளை அதனுள் வைத்து ஒரு கேபிளை உருவாக்கி இதை வசதி யாகச் செய்ய முடியும். நான்குகள் அல்லது குவாடுகளாக இதைச் செய்யலாம். ஒட்டும் பொருளின் நிறத்தை வைத்து ஒவ்வொரு கம்பி யும் அடையாளம் காணப்படுகிறது. இணைக் குழாய் அடையாளத்துக் குரிய தர நிறக் குறியீட்டின்படி இஃது செய்யப்படுகிறது.

quality : தரம்.

quality control : தரக் கட்டுப்பாடு; செய்முறைப்படுத்தப்படும் பொரு ளின் தரத்தை மதிப்பிட்டு அறியும் உத்தி. முன் அறுதியிட்ட தர அளவு களுடன் ஒப்பிட்டுப் பார்த்து இது செய்யப்படுகிறது. தர அளவு குறை பாட்டுடன் இருந்தால், அதனைச் சீர்செய்ய தக்க நடவடிக்கை எடுக்க இது உதவுகிறது.

quality engineering : தர அளவுப் பொறியியல்; தரப் பொறியியல் : பொருள்களின் தரத்தை வகுத்துரைப் பதும், தர அளவுகளை நடை முறை யில் செயற்படுத்துவதும், ஏற்றுக் கொள்ளப்பட்ட தரஅளவு வகைப் பாடுகளுக்கு இணங்கி நடக்குமாறு செய்வதும் இதில் அடங்கும்.

quantify : எண் அளவாக்குதல் : எண் ணியல் சாராத பொருள்களுக்கு எண்ணியல் மதிப்பளவுகளைக் குறித்தளித்தல்.

quantities: எண் அளவுகள்; பொருள் அளவுகள்.

quantity : எண்ணளவு : கணித முறை யில் நேர் அல்லது மறுதலை மெய்ம்மை எண்.

quantize : குவாண்டைஸ் : சோதனை களுக்காக ஒரு பொருளை விரும் பும் மதிப்புகளில் பிரித்தல்.

quantum : அளவை அலகு ; துளியம் : ஒரு பொறியமைவில் பயன்படுத்தப் படும் மிகச்சிறிய அளவை அலகு.

quartz crystal : பலவண்ணப் படிகம்: படிகக்கல்லை ஒரு குறிப்பிட்ட பருமனுக்குத் துண்டாக்குதல். இதில் மின்சாரம் பாய்ந்தவுடன் இது அதிர் கிறது. நுண்ணிய படிகம் ஒரு அங்குலத்தில் 1/20 முதல் 1/5 வரை யுள்ள கணினியின் இதயத் துடிப்பை உருவாக்குகிறது.

quasi language : மொழிப் போலி.

QUBE : தகவல் பயன்பாடு : உயர் அதிர்வெண் மின்கடத்தி வடத் தொலைக் காட்சியின் ஒரு பகுதி யாக இருக்கிற தகவல் பயன்பாடு. இது நேயர்கள் புதிய படங்கள் பார்க்க உதவுவது முதல் மருத்துவர் களுக்கும் வழக்குரைஞர்களுக்கும் தனிவகைத் தொழில்முறைத் தக வல்களை அளிப்பதுவரை எல்லா வகை வசதிகளையும் செய்து கொடுக் கிறது. இது தகவல் பரிமாற்ற வகையைச் சேர்ந்தது.

query : கேட்டறி; வினவுதல்; வினா; வினவல்: தகவல்களைக் கேட்டல். ஒரு தகவல்களைப் பொறியமைவி லிருந்து தகவல்களை வேண்டுதல்.

query answer : வினா-விடை.

query by example : எடுத்துக்காட்டு வழி கேட்டறிதல்; எடுத்துக்காட்டு வழி வினவுதல் : தேர்ந்தெடுத்த பதி வேடுகளுக்கான தகுதிப்பாடுகளை வரையறுத்துக் கூறி, ஒரு தகவல் தளப் பொறியமைவிலிருந்து தகவல் களைக் கேட்டறிதல். தகவல்களைக் காண ஒரு நடைமுறையை விவரிப் பதற்குப் பதிலாக இவ்வாறு செய்யப் படுகிறது.

query language : கேட்டறி மொழி; வினவல் மொழி ; வினவு மொழி : 1. ஒரு தகவல்தளப் பொறியமைவி லிருந்து குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த தகவல் எதனையும் வர வழைப்பதற்குப் பயன்படுத்தப் படும் ஆணைகளின் தொகுதி. இதனை "தகவல் கையாள் மொழி" (date manipulating language) என்றும் கூறுவர். இது "செயல்முறையற்ற வினவல் மொழி" (non-procedural query language) என்பதுடன் ஒப்பிடத் தக்கது. 2. மிக்க உயர்நிலை இயற்கை மொழி. பயனாளர், குறியீடுகள் அல் லது உயிர்நிலைச் சொற்கள் எதனை யும் அறிந்து கொள்ளா மலேயே, ஒரு கணினியமைவிடம் கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்கிறது. இதில், தனிவகை மென்பொருள்கள், பய னாளரின் வேண்டுகோளைப் பகுப் பாய்வு செய்து, அதன் பொருளை விளக்கிக் கூறி, காட்சித் திரையில் தக்க பதில்களைக் காட்டுகின்றன.

query programme : கேட்டறி ஆணைத் தொடர் : எண்ணி, காட்டி, ஒரு தக வல் தளத்திலிருந்து தேவையான பதிவேடுகளை எடுத்து வரும் மென் பொருள். ஒரு வாடிக்கையாளரிo கணக்கை திரையில் கொண்டு வருவது போன்று ஒன்று அல்லது இரண்டு தேடல்களை மட்டும் கொண்ட பெரிய பயன்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கலாம் அல்லது எந்தச் சூழ்நிலையிலும் தேடி, தேர்ந் தெடுக்கக்கூடிய கேள்வி மொழி யைக் குறிப்பிடுவதாகவும் இருக்க லாம்.

query response : வினவல் விடை ; வினாவுக்குரிய பதில் : இயக்குபவ ரின் குறிப்பிட்ட வேண்டுகோளுக் குப் பதிலாக ஒரு கணினி முனையம் அனுப்பும் செய்தி.

question answer : வினா விடை : கணினியுடன் செய்திப் பரிமாற்றம்

செய்து கொள்வதற்கான செய் முறை. பயனாளரிடம் கணினி ஒரு கேள்வியைக் கேட்கும்; அதற்குப் பயனாளர் பதிலளிப்பார்.

queue : வரிசை ; சாரை : கணினியின் செயற்பாட்டுக்கு உட்படுவதற்கு வரிசையில் காத்திருக்கும் இனங் களின் குழுமம். எடுத்துக்காட்டு: ஒரு தகவல் அனுப்பீட்டுப் பொறிய மைவில் அனுப்பப்பட இருக்கும் செய்திகள். இனங்களின் வரிசை முறையானது, செய்முறை முந்துரி மையை நிருணயிக்கிறது.

queued access method : வரிசை அணுகு முறை ; சாரை அணுகல் முறை : அணுகுமுறை, உட்பாட்டு/ வெளிப்பாட்டுச் சாதனங்கள் ஆகிய வற்றைப் பயன்படுத்தி, செயல் முறைகளுக்கிடையில் தகவல்களை மாற்றுவதைத் தானாகவே ஒருங்கி ணைக்கிற ஓர் அணுகுமுறை. இதன் மூலம், உட்பாட்டு/வெளிப்பாட்டுச் செயல்முறைகளில் காலத்தாழ்வு களைத் தவிர்க்கலாம்.

queuing : வரிசைமுறையாக்கம் ; சாரையாக்கம் : தகவல் செய்முறைப் படுத்தும் வரிசையைக் கட்டுப் படுத்தும் உத்தி.

queuing system : வரிசைமுறை அமைப்பு : ஏராளமான தொலை பேசி அழைப்புகளை பெறுகின்ற வணிக மற்றும் பெரிய நிறுவனங் கள் பயன்படுத்துகின்ற, செயலகம் கட்டுப்படுத்துகின்ற பொத்தானி டும் அமைப்பு. இரயில்வே விசா ரணை, விமான சேவை மற்றும் கேஸ் கம்பெனிகள் ஆகியவற்றை சான்றாகக் கூறலாம். வருகின்ற அழைப்புகளை வரிசைப்படுத்தி, மின்னணு முறையில் அழைத்தவர் களுக்கு ஒரு செய்தி அனுப்பப்படு கிறது. சான்றாக, இயக்குபவர்கள் இப்போது சுறுசுறுப்பாக இருக் கிறார்கள். இயக்குபவர் (ஆப்பரேட் டர்) கிடைத்தவுடன் உங்களுக்குப் பதில் கிடைக்கும். நீங்கள் வரிசை யில் உள்ளீர்கள் என்று பதில் வரும். ஒவ்வொரு அழைப்பும் அது வரும் வரிசையில் கவனிக்கப்பட்டு காலி யாக உள்ள முகப்புக்கு அனுப்பப் படுகிறது. முதலில் வருவது - முதலில் போக வேண்டும் என்ற கொள்கையின்படி வரிசைமுறை அமைப்பு வேலை செய்கிறது. இதன் படி காத்திருக்கும் நேரம் எல்லோருக்கும் ஒன்றாகவே இருக் கும். ஒவ்வொரு இயக்குநருக்கும் சமமான வேலை கிடைக்கவும் இது உதவுகிறது.

queuing theory : வரிசைமுறையாக்கக் கோட்பாடு; சாரைக் கோட்பாடு : பணி முனைகளில் ஏற்படும் தாமதங் களை அல்லது தேக்கங்களை ஆராய்ந் தறிவதற்கு உதவும் நிகழ் தகவுக் கோட்பாட்டின் ஒரு வடிவம். நக ரும் அலகுகளின் வரிசைமுறை களைத் திருத்துவது தொடர்பான ஆராய்ச்சி உத்தி. தகவல்களின் அல்லது முழுச் செய்திகளின் துணுக்குகளை வரிசைமுறையில் அமைப்பது இதில் உள்ளடங்கும்.

quibinary code : இரட்டுறு இரும எண் குறியீடு : பதின்ம எண்களைக் குறிப் பதற்குப் பயன்படுத்தப்படும் இரும எண் குறியீடிட்ட பதின்மக் குறியீடு. இதில் ஒவ்வொரு பதின்ம எண் ணும், ஏழு இரும எண்களினால் குறிக்கப்படும்.

quick disconnect : விரைவுத் தொடர்பு முறிவு ; விரைவுத் துண்டிப்பு : பொருத்து இணைப்பியை விரை வாகப் பூட்டவும், திறக்கவும் அனு மதிக்கும் மின்னியல் இணைப்பு வகை.

quickdraw : விரைவுவரை : மெக்கின் டோஷில் அமைக்கப்பட்டுள்ள வரை

கலைக் காட்சி முறை. பயன்பாட்டி லிருந்து கட்டளைகளை ஏற்று, அதற் கேற்ற பொருள்களை திரை யில் வரைகிறது. மென்பொருள் உரு வாக்குபவர்கள் பணியாற்றக் கூடிய ஒரு தொடர்ச்சியான இடை முகத்தை இது அளிக்கிறது.

quick format : உடனடிப் படிவம் : கோப்பு ஒதுக்கும் பட்டியல் மற்றும் ஒரு வட்டின் வேர் தகவல் பட்டி யலை விலக்கி காலியாகத் தோற்ற மளிக்க வைக்கும் ஒரு டாஸ் கட்டளை. ஆனால், இது வட்டின் மீதுள்ள கோப்பு தகவலை நீக்கவோ அல்லது மோசமான பகுதிகளை நுண்ணாய்வு செய்யவோ போவ தில்லை. ஏற்கனவே, படிவம் அமைக்கப்பட்ட வட்டை உடனடி யாகப் படிவம் அமைக்க இது விரை வான வழியைத் தருகிறது.

quicktime : உடனடி நேரம்; குவிக் டைம் : மெக்கின்டோஷ் அமைப்பு 7-க்கான பல் ஊடக விரிவாக்கங்கள். ஒலி, ஒளி திறன்களை அளிக்கிறது.

quickwin : குவிக் வின்; விரைவுப் பயன் : மைக்ரோ சாஃப்ட் நிறுவனத் தின் 'சி' மற்றும் ஃபோர்ட்ரான் வாலாயம்களின் நூலகம். டாஸ் பயன்பாடுகளை விண்டோஸ் சூழ் நிலையில் விரைவில் ஏற்ற அனு மதிக்கிறது. எழுத்து சார்ந்த பயன் பாடுகள் மீண்டும் அளவிடக் கூடிய விண்டோஸ்களில் ஓடுகின்றன.

quick sort : விரைவுத் தொகுப்பு: வேக வகைப்படுத்துதல்.

quinary : ஐந்து சார்ந்த : பிகுவினரி (biquinary) குறியீடாகப் பயன்படுத்து வது, இதில் பதின்ம எண் இணை எழுத்துகளாகவோ அல்லது எண் களாகவோ பயன்படுவது. இதில் a=o அல்லது b=o,1,2,3 அல்லது 4 ஆக மதிப்பிடப்படும். முதல் கணிப்பி யாகிய மணிச் சட்டம் இதைப் பயன்படுத்தியது.

quit : வெளியேறு ; போய்விடு : நடப்பு ஆணைத் தொடரிலிருந்து வெளியே வருவது, கணினியை நிறுத்துவதற்கு முன்பு ஆணைத் தொடரிலிருந்து வெளியேறுவது ஒரு நல்ல பழக்கம். சில ஆணைத் தொடர்கள் வெளியேறு ஆணை கொடுக்கப்படா விட்டால் எல்லா கோப்புகளையும் சரிவர மூடுவ தில்லை.

quiting: வெளியேறல்.

qwerty board : குவர்ட்டி பலகை : தரமான தட்டச்சுப் பொறியின் விசைப் பலகையைப் போலவே வடிவமைக்கப்பட்ட பி.சி (pc)யின் விசைப் பலகை. இரண்டாவது வரிசையின் இடது பக்கத்தில் உள்ள எழுத்துகள் QWERTY சரமாக அமையும்.

qwerty keyboard : குவர்ட்டி விசைப் பலகை : ஒரு சொந்தக் கணினியின் (pc) விசைப்பலகை பட்டடை. இது, ஒரு செந்திறப்படுத்திய தட்டச்சுப் பொறியின் விசைப்பலகை போன்றே வடிவமைக்கப்பட்டது. இந்த விசைப் பலகையின் உச்ச அகர வரிசை வரியிலுள்ள முதல் ஆறு எழுத்துகள் "Q,W,E,R,T,Y" என்பன வாகும். இதையொட்டி இந்த வடி வமைப்பு 'குவர்ட்டி' என்று பெயர் பெற்றது. இது நூறாண்டுகளுக்கு முன்பு வடிவமைக்கப்பட்டது. இப்போது, இது அவ்வளவாகத் திறன் பெற்றிருக்கவில்லை. பெரும் பாலான வணிக நிறுவனங்கள் இதனைக் கைவிட்டு வேறு திறன் வாய்ந்த அமைப்புகளைக் கை யாண்டு வருகின்றன. இது "மால்ட் ரான் விசைப்பலகை" யிலிருந்து வேறுபட்டது.

R

R : ஆர் : பதிவேடு (Register), வேண்டு கோள், மறு அமைவு (Reset) என்பன வற்றின் தலைப்பெழுத்துக் குறும் பெயர்.

race condition : போட்டி நிலை ; பந்தய நிலை : இரு கணினி ஆணைகள் ஒருங்கே செயற்படும்போது, எது முதலில் முடிவடையும் என்பதை அறிய முடியாத ஐயப்பாட்டுநிலை.

rack : அடிச்சட்டம் ; செருகும் சட்டம்: தொகுப்பிகள், அவற்றின் மின் வழங் கீட்டு அலகுகள் போன்ற மின்னியல், மின்னணுவியல் அல்லது பிற சாதனங்களை ஏற்றி வைக்கக்கூடிய உலோகச் சட்டம் அல்லது அடிச் சட்டம் அல்லது செருகுச் சட்டம்.

rack mounted : சட்டகச் சாதனம் : ஓர் உலோகச் சட்டகத்தில் பொருத்து வதற்காக அமைக்கப்பட்டுள்ள அமைப்பிகள். சோதனைச் சாதனம், நாடா இயக்கிகள், தொழில் துறைக் கணினிகள் போன்ற மின்னணுச் சாதனங்கள் பெரும்பாலும் சட்டகத் தில் ஏற்றிய அலகுகளாகவே அமைந் துள்ளன.

radially : ஆணைத்திக்கு.

radial lines : ஆரைக் கோடுகள்.

radian : ஆரைக்கோணம் : ஒரு வட்டத் தில், அந்த வட்டத்தின் ஆரத்திற்குச் சமமான நீளமுடைய ஒரு வில் மூலம் எதிர்வீழ்வாகும் மையக் கோணம். இவ்வாறு, ஒரு கோணத்தின் ஆரைக் கோண அளவு என்பது, அந்தக் கோணத்திற்கு எதிர்வீழ்வாகவுள்ள வில், அந்தக் கோணம் எந்த வட்டத் தின் மையக் கோணமாக இருக் கிறதோ அந்த வட்டத்தின் ஆரத்தின் வீத அளவில் இருக்கும்.

radiation patterns : கதிர்வீச்சுத் தோரணிகள் : ஒரு வானொலிச் செய்தித் தொடர்புப் பொறியமை வில், ஆதார அலைவரிசைச் சைகை யானது, ஏதேனுமொரு அதிர்விணக் கத்தினைப் (modulation) பயன்படுத்தி அலைவெண் நிறமாலை யின், ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிலைப்படுத் தப்படுகிறது. அதிர் விணக்கப்படுத் திய அலை பின்னர் ஓர் அனுப்பீட்டு வானலை வாங்கியின் அல்லது வான் கம்பியின் மூலம் ஒரு மின்காந்த அலை வடிவில் வாயுமண்டலத்தில் கதிர்வீச்சு செய்யப்படுகிறது.

radio butttons : வானொலிப் பொத் தான்கள் : ஒரேயொரு தேர்வினை மட்டுமே அனுமதிக்கக் கூடிய திரை மீதான பொத்தான்களின் வரிசை. ஒரு பொத்தான் தற்போது தேர்ந் தெடுக்கப்பட்டுவிட்டால், வேறொரு பொத்தான் தேர்ந்தெடுக்கப்படும் போது முதல் பொத்தான் தேர்வு நீக்கப்பட்டுவிடும்.



வானொலிப் பொத்தான்கள் (Radio buttons)

radio shack : மின்னணுவியல் கருவி உற்பத்தியாளர்: நுண்கணினியமைவு கள் உள்ளடங்களாக மின்னணுவியல் சாதனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்பவர்.

radiowave : மின்காந்த அலை.

radix : ஆதார எண்; அடிமான எண்; அடிப்படை எண் : ஓர் எண்மான முறையில் ஆதார எண். எடுத்துக்

காட்டு: இரும எண்மான முறையில் ஆதார எண் '2' . 'ஆதாரம்' (base) என்பதும் இதுவும் ஒன்றே.

radix complement : ஆதாரக் குறை நிரப்பு :

radix point : ஆதாரப் புள்ளி : ஓர் எண்மான முறையில், எழுத்து (ஒரு புள்ளி) அல்லது உட்கடை எழுத்து என்பது, ஒரு முழு எண்ணிலிருந்து பின்னப் பகுதியைப் பிரித்துக் காட்டும் புள்ளி ஆகும். சான்று: இருமப் புள்ளி (binary point); பதின்மப்புள்ளி (decimal point); பதினாறிலக்கப் பதின்மப் புள்ளி (hexadecimal point); எட்டிலக்கப்புள்ளி (octal point).

radix sorting : ஆதார வகைப்பாடு ; ஆதார எண் வரிசையாக்கம் : 'இலக்க முறை வகைப்பாடு' (digital sorting) என்பதும் இதுவும் ஒன்றே.

ragged left : சீர்மையிலா இடப்புறம்; சீரிலா இடப்புறம் : நேர்கோடான வலதுபக்க ஓர விளிம்புடனும், ஒழுங்கற்ற இடப்பக்க ஓர விளிம்பும் கொண்டு அச்சிடப்பட்டுள்ள வாசகம். இதனைச் சரிநேர் வலப்புறம் (flush right) என்றும் கூறுவர். இது இடது வரிச் சரியமை (left justify) என்பதிலிருந்து வேறுபட்டது.

ragged right : சீரிலா வலப்புறம்.

recognizing exceptions : விதி விலக்குக் காணும் செய்முறைகள்.

raised flooring : உயர்தளம் ; உயர்த்திய தளம் : கணினி அறைகளில் பயன்படுத்தப்படும் உயர்ந்த மேடைத் தளம். இதனால், இணைப்புக் கம்பி வடங்களை சாதன அலகுகளிடையே நேரடியாக அமைக்கலாம்.

RALU : ராலு : பதிவேடு (register), கணிதம் மற்றும் தருக்கமுறை அலகு (arithmatic and logic unit) என்பதன் தலைபெழுத்துச் சுருக்கம். கணித மற்றும் தருக்க முறைச் செயற்பாடுகள் நிறைவேற்றப்படும் ஒரு நுண் செயலியில் இது மிக முக்கிய பகுதியாகும்.

RAM : ஆர்ஏஎம்; ராம் ; நேரணுகு நினைவகம் ; குறிப்பிலா அணுகு நினைவுப் பதிப்பகம் : குறிப்பின்றி அணுகும் நினைவகம் (Random Access Memory) என்பதன் தலைப்பெழுத்துக் குறும் பெயர். இந்த நினைவகத்தில் தகவல்களையும் அறிவுறுத்தங்களையும் எழுதி பதிவு செய்யலாம்; கணினியின் செயல் முறை நினைவகத்திலிருந்து தகவல்களை வரவழைத்துப் படிக்கலாம்; இதனுள் வெளியிலிருந்து செயல் முறைகளைச் செலுத்தி, பின்னர் நிறைவேற்றலாம்.

remark : குறிப்பு வரி.

RAM card : ஆர்ஏஎம் அட்டை ; ராம் அட்டை : ஆர்ஏஎம் சிப்புகள் அடங்கிய அச்சிட்ட மின்சுற்றுவழிப் பலகை. இந்தப் பலகையை கணினிகளில் செருகி, அவற்றின் உள்முகச் சேமிப்புத்திறனை விரிவாக்கம் செய்யலாம்.

RAM chip : குறிப்பின்றி அணுகும் நினைவகச் சிப்பு : பல்லாயிரம் நினைவக முகவரிகளைக் கொண்ட ஓர் ஒருங்கிணைந்த சுற்றுவழி.

RAM cram : குறிப்பின்றி அணுகும் நினைவகச் செறிவு : பயன்பாடுகளை இயக்குவதற்கான பற்றாக்குறை நினைவுப்பதிப்பகம். குறிப்பாக 1MB நினைவுப் பதிவு வரம்புடைய DOS மற்றும் சொந்தக் கணினிகள்.

random : தற்செயலான; தாறுமாறான; குறிப்பற்ற; வரிசையிலா.

RAM DISK : ராம் வட்டு.

random access : குறிப்பின்றி அணுகுதல்; குறிப்பிலா அணுகல்; நேரடி அணுகு முறை : சேமிப்பு வரிசை முறையைச் சார்ந்திராதிருக்கிற ஒரு சேமிப்பக அமைவிடத்திலிருந்து தகவல்களைப் பெறுகிற அல்லது தகவல்களைச் செலுத்துகிற செய்முறை. நேரடி அணுகுதல் என்பது இதன் மற்றொரு பெயர். இது, வரிசைமுறை அணுகுதல் (sequential access) என்பதிலிருந்து வேறுபட்டது.

random access device : குறிப்பிலா அணுகு சாதனம்.

random access memory (RAM) : குறிப்பின்றி அணுகும் நினைவகம் (ஆர்ஏஎம்) ; குறிப்பிலா நினைவகம் : வேறெந்த நினைவுப் பதிப்பக அமைவிட உதவியின்றி, உள்ளடக்கங்களை நேரடியாகப் படிக்க அல்லது எழுதத் துணைபுரியும் நினைவுப் பதிப்பகம்.

random block : குறிப்பற்ற தொகுதி ; குறிப்பிலா தொகுதி : கோப்பினை அணுகுவதற்கான கோப்புக் கட்டுப்பாட்டுத் தொகுதி முறையில் தனியொரு குறிப்பற்ற கோப்புச் செயற்பாட்டின் மூலம் படிக்கப்படுகிற அல்லது எழுதப்படுகிற ஓர் ஆவணத் தொகுதி.

random file organisation : குறிப்பற்ற கோப்பு அமைப்பாக்கம் ; குறிப்பிலா கோப்பு அமைவனம்: ஆவணங்களை நேரடியாக அணுகும் வகையில் ஒரு கோப்பினை உருவாக்குதல்.

random files : குறிப்பிலாக் கோப்புகள்: எவ்வித வரிசை முறையிலும் அமைக்கப்படாத கோப்புகள். நேரடி அணுகுச் சாதனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பதிவுகளின் முகவரி அடிப்படையில் தகவல்கள் மீட்கப் படுகின்றன.

random logic design : குறிப்பிலாத் தருக்க முறை வடிவமைப்பு : வெவ்வேறு தருக்க முறை மின் சுற்று வழிகளைப் பயன்படுத்தி ஒரு பொறியமைவினை வடிவமைத்தல்.

random number : குறிப்பிலா எண் : இலக்கங்களின் தோரணியற்ற வரிசை முறை. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சோதனைகளில் குறிப்பின்மை மெய்ப்பிக்கப்படும். தற்செயலாக உண்டாக்கப்படும் ஊகிக்க முடியாத எண்.

random-number generator : குறிப்பிலா எண் உருவாக்கி : ஒரு போலிக் குறிப்பிலா எண்ணை அல்லது போலிக் குறிப்பிலா எண்களின் வரிசையை குறிப்பிட்ட வரம்புகளுக்குள் உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ள கணினி செயல்முறை அல்லது வன்பொருள்.

random processing : குறிப்பிலா செய்முறைப்படுத்துதல் ; குறிப்பிலா செயலாக்கம் : தகவல்களைக் குறிப்பின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்முறைப்படுத்துதல். இதுவும், 'நேரடி அணுகு செய்முறைப் படுத்துதல்' (direct access processing) என்பதும் ஒன்றே. இது வரிசை முறைச் செய்முறைப்படுத்துதல் (sequential processing) என்பதிலிருந்து வேறுபட்டது.

random READ : குறிப்பின்றிப் படித்தல்; குறிப்பிலா படிப்பு : ஒரு நேரடி அணுகு சேமிப்புச் சாதனத்தில், தொடர்புடைய ஆவண எண்மூலம் ஓர் ஆவணத்தைப் படிப்பதற்கான திறன்.

random record number : குறிப்பிலா ஆவண எண் : ஒரு கோப்புக் கட்டுப்பாட்டுத் தொகுதியின் குறிப்பற்ற ஆவணப் புலத்தினுள் பதிவு செய்யப்

படும் எண். பிந்திய கோப்புச் செயற் பாடுகள், இந்த எண்ணை, நடப்புத் தொகுதிக்குமாற்றி, அதன் நடப்பு ஆவண மதிப்பினையும் மாற்று கிறது.

random sampling : குறிப்பற்ற மாதிரி: ஓர் அளவாய்வில் அல்லது ஆய்வில் ஒருசார்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக, புள்ளியியல் பகுப் பாய்வில் பயன்படுத்தப்படும் ஓர் உத்தி. எடுத்துக்காட்டாக, ஒரு நாடா ளுமன்றத் தேர்தல் முடிவு பற்றிய ஒரு கருத்துக் கணிப்பு, இடத்துக்கு இடம், நகருக்கு நகர், நேரத்துக்கு நேரம் மாறுபடக்கூடும். தகவல் தளத் தில் மறைமுக ஒரு சார்பு, இயன்ற வரை இல்லாதவாறு குறிப் பற்ற மாதிரி பார்த்துக் கொள்கிறது.

random WRITE : குறிப்பின்றி எழுது தல்: ஒரு நேரடி அணுகு சேமிப்புச் சாதனத்தில், தொடர்புடைய ஆவண எண் மூலம் ஓர் ஆவணத்தை எழுது வதற்கான திறன்.

range : அளவெல்லை ; வீச்சு : ஒரு தனிமம் மேற்கொள்ளும் மதிப்பளவு களின் வீச்செல்லை.

range check : அளவெல்லைச் சரி பார்ப்பு ; வீச்சுச் சோதனை : ஒரு எண் மானத் தனிமம், ஒரு குறிப்பிட்ட அளவெல்லைக்குள் இருக்கிறதா என்பதைச் சரிபார்க்கும் முறை. எடுத்துக்காட்டு : மாதங்கள், 01-12 என்ற அளவெல்லைக்குள் இருக்கின் றனவா என்பதைச் சரிபார்த்தல்.

rank : படிவரிசை ; படிநிலை : 1. முக்கியத்துவத்திற்கேற்ப ஏறு வரிசை யில் அல்லது இறங்கு வரிசையில் அமைத்தல். 2. ஒரு குழுமத்தில் இட நிலையை அளவிடுதல். வரிசை அல்லது வகைப்பாட்டின் வரிசை முறை.

raster : பரவு வரிசை.

raster display : பரவல் காட்சி; விரி வாக்கக் காட்சி: ஒரு குறிப்பிட்ட தோரணி மூலம் ஒரு கற்றையினைப் பரவலாகக் காட்டும் ஒளிப் பேழைக் காட்சி. புள்ளிகளின் அச்சுவார்ப்புரு வுடன் ஒரு விரிவான உருக்காட்சியை உருவாக்கிக் காட்டுதல். 'கண்காட்சி' (Vector Display) என்பதிலிருந்து வேறு பட்டது.

raster fill : பரவல் நிரப்பல்; விரிவாக்க நிரப்பு: ஓர் ஒளிப்பேழைத் திரையி லுள்ள விரிவாக்கக் கோடுகளிடை யிலான இடைவெளிகளை நிரப்பு வதற்கு ஒரு வரைகலை ஒளிப்பதிவுக் கருவி பயன்படுத்தும் செய்முறை. இது திரையில் காணும் படத்திற்கு அதிகத் துல்லியமான தோற்றத்தை அளிக்கிறது.

raster graphics : பரவு வரைவியல் ; விரிவாக்க வரைகலை : தகவல்களை ஒரே சீரான கிடைமட்ட வரிசை களாகச் சேமித்து வைத்துக் காட்சி யாகக் காட்டுவதற்கான அல்லது ஒரு காட்சித் திரையினை வினாடிக்கு 30-60 மடங்கு உருப்பெருக்கித் தெளி வான உருக்காட்சிகளாகக் காட்டு வதற்கான ஒரு முறை. விரிவாக்கக் காட்சிச் சாதனங்கள் பொதுவாக நெறியக் குழல்களை (vector tabes) விட விரைவாகச் செயற்படுபவை; மலிவானவை.

rasterization of vectors : நெறியாக்க ராஸ்டராக்கம் : நெறியாக்கங்களா லான அல்லது கோட்டுக் கூறுகளா லான வரைகலைப் பொருள்களின் 'ராஸ்டர்' வரைகலைத் திரைகள், புள்ளிக்குறி அச்சு வார்ப்புரு, லேசர் அச்சடிப்பிகளுக்கான வெளிப்பாட் டுப் புள்ளிக்குறிகளாக மாற்றுதல். நெறியாக்க வரைகலை முனையங்

களையும் வரைவிகளையும் பயன் படுத்தினாலன்றி, பொருள்சார்ந்த வரைகலைகள் அனைத்தும், காட்சிக்காகவும் அச்சடிப்பதற்காகவும் ராஸ்டர் உருக்காட்சிகளாக மாற்றப் படுதல் வேண்டும்.

raster scan ; விரிவாக்க நுண்ணாய்வு; விரிவாக்க வருடல் : காட்சித் திரையில் காட்சிப் பகுதியை வரிவரியாக உருப்பெருக்கி உருக்காட்சியை உருவாக்குதல்.

rat's nest : எலிக் கூடு ; எலி வளை : அமைப்பிகளிடையிலான கணினி சார்ந்த இணைப்புகள் அனைத்தையும் பார்ப்பதற்கு அனுமதிக்கிற, அச்சிட்ட மின்சுற்றுவழி வடிவமைப்புப் பொறியமைவுகளிலுள்ள கூறுகள். குறியீட்டு வாலாயத்தை உகந்த அளவில் வைத்திருப்பதற்கு மேற்கொண்டு அமைப்பிகளை இணைப்பதும், மேம்படுத்துவதும் தேவைதானா என்பதை நிருணயிப்பதை இது எளிதாக்குகிறது.

raw data : செப்பமற்ற தகவல் ; மூலத் தகவல் : செய்முறைப்படுத்தப்படாத தகவல். இந்தத் தகவல் படிப்பதற்குரிய ஓர் எந்திரச் செய்தித் தொடர்புச் சாதனத்தில் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்; இதனை 'மூலத் தகவல்' (original data) என்றும் கூறுவர்.

RDBMS : ஆர்டிபிஎம்எஸ் : 'தொடர்புறு தகவல்தள மேலாண்மைப் பொறியமைவு' என்று பொருள்படும் 'Relational Database Management System' என்பதன் தலைப் பெழுத்துக் குறும்பெயர்.

read : படித்தல் : ஒரு உட்பாட்டு அல்லது கோப்புச் சேமிப்புச் சாதனத்திலிருந்து தகவல்களைப் பெறுதல். எடுத்துக் காட்டு: துளைகளின் தோரணியைக் கண்டறிந்து துளையிட்ட அட்டைகளைப் படித்தல்; காந்தத் தன்மையினை உணர்ந்தறிந்து ஒரு காந்த நாடா வட்டினைப் படித்தல். இது "எழுதுதல்" (write) என்பதிலிருந்து வேறுபட்டது.

reader : படிப்பி : ஓர் உட்பாட்டுச் சாதனத்திலிருந்து கிடைக்கும் தகவல்களை எழுதித் தரும் ஒரு சாதனம்.

read error : படிப்புப் பிழை : ஒரு சேமிப்பகத்தில் அல்லது நினைவகத்தில் உள்ள தகவல்களைப் படிக்கத் தவறுதல். இது வாலாயமான நிகழ்வு இல்லையெனினும், காந்த மற்றும் ஒளியியல் பதிவுப் பரப்புகள், தூசியினால் அல்லது அழுக்கினால் மாசுபடக் கூடும். அல்லது சேதமடையலாம். நினைவகச் சிப்புகளின் உயிரணுக்கள் சரிவர இயங்காமற் போகலாம்.

read head : படிப்பு முனை : செய்தித் தொடர்புச் சாதனங்களிலிருந்து தகவல்களைப் படிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட காந்தச் சுருள் முனை.

reading station : படிப்பு நிலையம் ; படிக்கும் நிலையம் : ஓர் உணர்ந்தறிச் செயல்முறை மூலம் படிப்பதற்காக பொருத்தப்பட்டுள்ள ஓர் அட்டைத் துளையின் - விசைத் துளையின் பகுதி.

reading wand : படிப்புக் கோல் : குறிகள், குறியீடுகளை ஒளியியல் முறையில் உணர்ந்தறிகிற சாதனம். எடுத்துக்காட்டு: ஒரு விற்பனை முனையத்தில் விலைச் சீட்டுகளைப் படித்தறியும் சாதனம்.

read only memory : **ROM** : படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம் (ஆர்ஓஎம்); படிப்பு நினைவகம்: அடிக்கடிப் பயன்

படுத்தப்படும் ஆணைகளின் ஒரு தொகுதி நிரந்தரமாகச் செயல் முறைப்படுத்தப்பட்டுள்ள ஒரு தனி வகைக் கணினி நினைவகம். இந்த நினைவகங்களில் சேமித்து வைக்கப் படும் தகவல்கள், மின் விசை நிறுத்தப்பட்ட பின்னரும் நீடித்திருக் கும். இவற்றில், ஒரு முறை செயல் முறைகளை உள்ளடக்கிவிட்டால், அந்தச் செயல் முறைகளில் மாறுதல் செய்யவோ, தவறுகள் நேர்ந்தால் திருத்தம் செய்யவோ இயலாது. காட்சித் திரை (monitor) வகுத்துத் தொகுப்பி (editor) பயனீட்டுச் செயல் முறைகள் ஆகியவை இந்த வகை நினைவகத்தைக் கொண்டவை. செயல்முறை வகுத்திடத் தக்க படிப் பதற்குமட்டுமேயான நினைவகம் (PROM), அழித்திடத்தக்க செயல் முறை வகுத்திடக் கூடிய படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம் (EPROM) ஆகியவை இதன் மாறுபட்ட பதிப்பு கள்.

read only : படிக்க மட்டும்.

ready made programme : உடன் பயன் செயல்முறைகள்.

readout : படித்துணர்த்தல் : ஒரு கணினி செய்முறைப்படுத்திய தக வல்களைத் தெரிவிக்கும் முறை. எடுத்துக்காட்டு: காட்சி; வரிவாரி அச்சடிப்பி; இலக்க முறை வரைவி.

read only storage : படிப்புத் தேக்கம்; படிப்புச் சேமிப்பகம்.

read/write head : படிப்பு எழுது முனை : ஒரு காந்தச் சேமிப்புச் சாதனத் தில் தகவல்களைப் படிக்க, எழுத அல்லது அழிக்கப் பயன்படுத்தப் படும் சிறிய மின்காந்தம். ஒரு வட் டின் அல்லது நாடா இயக்கியின் ஒரு பகுதியாக அமைந்துள்ள ஒரு மின்- எந்திரவியல் அமைப்பு. இது, தகவல் களைச் சேமிப்பு ஊடகத்துக்கு (வட்டு அல்லது நாடா) மாற்றுகிறது. காந்தச் சேமிப்பு ஊடகத்தில் சிறிய காந்த முத்திரைகளை உண்டாக்கி, அடை யாளங்காண்பதன் மூலம், இது இவ்வாறு செய்கிறது.

read-after-write procedure : படிப்புக் குப் பிறகு எழுதும் நடைமுறை : ஒரு வட்டில் அல்லது நாடாவில் தகவல் களை எழுதுதல், அதனை மீண்டும் படித்தல், துல்லியத்தைப் பதிவு செய்வதற்காக இரண்டையும் ஒப் பிட்டுப் பார்த்தல்.

reader : படிப்பி.

reader head : படிப்பு முனை.

reader station : படிப்பு நிலையம்.

readme file : 'என்னைப்படி' கோப்பு : மென்பொருள் பகிர்மான வட்டு களில் படியெடுக்கப்படும் வாசகக் கோப்பு. அதில், ஆவணமாக்கக் கையேட்டில் அச்சடிக்கப்பட்டிராத கடைசிநேரச் செய்திகள் அல்லது பிழைதிருத்தம் அடங்கியிருக்கும்.

read-only attribute : படிப்பதற்கு மட்டு மான பண்பு : ஒரு கோப்பு படிப் பதற்கு மட்டுமேயானது என்பதை யும், அது நேரம் வரை திருத்தம் செய்யப்படவில்லை அல்லது அழிக் கப்படவில்லை என்பதையும் குறிக் கின்ற கோப்புப் பண்பு.

readymade programms : உடன்பயன் செயல்முறைகள்.

readymade packages : உடன்பயன் செயல்முறைத் தொகுதிகள்.

real constant : மெய்ம்மை மாறிலி ; மெய் மாறிலி: ஒரு பதின்மப் புள்ளியை உடைய எண். எடுத்துக்காட்டு: *26.4; 349.0.* இது 'மிதவைப்புள்ளி மாறிலி' (floating point constant) என்றும் அழைக்கப்படுகிறது.

real number : மெய்யெண்; மெய்ம்மை எண்; உண்மை எண் : வேரளவை யில் லாத எண் அல்லது கூறுபடாத எண் (பகா எண்).

real storage : மெய்ம்மைச்; சேமிப்ப கம்; உண்மைச் சேமிப்பகம் : உள்ளபடி யான சேமிப்புப் பொறியமைவி லுள்ள உள்முகச் சேமிப்பகம்.

real time : இயல்பு நேரம் ; உண்மை நேரம் ; நிகழ் நேரம் : ஒரு வணிக அல்லது இயற்பியல் செயல்முறை நடை பெறுகிற உள்ளபடியான நேரத் தின்போது, தகவல் செயல்முறைப் படுத்துதல் எத்துணை விரைவாக நடைபெறுகிறதோ அந்த நேரம். இத்தகைய தகவல் செய்முறைப் படுத்துதலின் விளைவுகளை அந்தச் செய்முறையை வழிநடத்துவதற்குப் பயன்படுத்தலாம். உலகெங்குமுள்ள பயணச்சீட்டு முன்பதிவு அலுவல கங்கள் அனைத்தும் இதனைப் பயன் படுத்துகின்றன. வேதியியல் தொழி லிலும் இந்த இயல்பு நேரம் பெரிதும் பயன்படுகிறது.

real time applications : நிகழ் நேரப் பயன்பாடுகள்.

real time clock : நிகழ் நேரக் கடிகாரம் ; உண்மைக் காலங்காட்டும் கருவி : கணினியின் செயற்பாடுகளை, வெளியுலகில் நிகழும் நிகழ்வுகளு டன் ஒருங்கிணைப்பதற்காக குறிப் பிட்ட கால இடைவெளிகளில் செய் முறைப்படுத்தியை இடைத் தடுப்பு செய்கிற வன்பொருள். இது பெரும் பாலும், மனித/கணினி இடை வினையை உள்ளடக்கியதாகும்.

real time compression : இயல்பு நேரச் செறிவாக்கம் : தகவல்களை விரை வாகச் செறிவாக்கம் செய்தலும், செறிவைத் தளர்த்தலும். ஸ்டேக்கர், சூப்பர் ஸ்டோர், டிபிஎல்ஸ் (Dos 6.0) போன்ற சொந்தக் கணினிப் பொருள் கள், ஒரு செறிவு இயக்கியை உரு வாக்குவதற்கு ஓரளவு நிலைவட்டு இடப்பரப்பை ஒதுக்க அனுமதிக் கிறது. அந்த இயக்கியில் செயல் முறை எதனாலும் எழுதப்படும் தகவல் எதுவும், மீண்டும் படிக்கப் படும்போது செறிவாக்கம் செய்யப் பட்டு, செறிவுத் தளர்வு செய்யப்படு கிறது.

real time image generation : இயல்பு நேர உருக்காட்சி ; நிகழ் நேர உருவாக் கம் : வரிசைமுறை பார்வையாளருக் குச் சரியாகத் தோன்றும் வகையில், விரைவான வேகத்தில் ஓர் உருக் காட்சியை புதிய நிலைக்கு கொணர்ந்து முடிவுறுத்துவதற்குத் தேவைப்படும் கணிப்புகளைச் செய் தல். எடுத்துக் காட்டு: வினாடிக்கு 30-60 சுழற்சிகள் என்ற வேகத்திற்குள் பல்லாயிரம் கணிப்புகள் நடை பெறும் வகையில் வான் பயண வேகத்தினைத் தூண்டுதல்.

real time information system : இயல்பு நேரத் தகவல் பொறியமைவு : உரிய தலைமைக்கு கோப்புகளை உடனடி யாக நாளது தேதிக்குத் திருத்துவதன் மூலம் அல்லது ஒரு செயற்பாட் டினை அதன் வேண்டுறுத்தப்பட்ட வேகத்தில் இயக்குவதற்குப் போது மான வேகத்தில் ஒரு கால அளவுக் குள் ஒரு பதிலை உருவாக்குவதன் மூலம், நடவடிக்கைகளுக்குப் பதில ளிக்கிற கணினியமைவு.

real time operating system : இயல்பு நேரச் செயற்பாட்டுப் பொறியமைவு : உட்பாட்டுச் சைகைகளுக்கும் நட வடிக்கைகளுக்கும் உடனடியாகப் பதிலளிக்கக்கூடிய தலைமைக் கட்டுப்பாட்டுச் செயல்முறை.

real time operations : இயல்பு நேரச் செயற்பாடுகள் : கணினி செய்திடக்

கூடிய, எந்த நேரத்திலும் அல்லாமல், ஒரு குறிப்பிட்ட கணத்தில் நடைபெறுகிற செயல்முறைச் செயற்பாடுகள். திரை உயிரியக்கம், அபாய அறிவிப்புப்பணிகள், எந்திரன்கள் ஆகியவை இந்த இயல்பு நேரச் செயற்பாடுகளைப் பயன்படுத்துகின்றன.

real time processing : இயல்பு நேரச் செய்முறைப்படுத்துதல் : தகவல்களைச் செய்முறைப்படுத்துவதற்கான முறை. இதில் தகவல்கள், காலாந்தர முறையில் அல்லாமல் உடனடியாகச் செய்முறைப்படுத்தப்படுகின்றன. இது தொகுதிச் செய்முறைப்படுத்துதலிலிருந்து (batch processing) வேறுபட்டது. ஒரு தானியங்கி விரைவுக் காசாளர் பொறி (Automatic Teller Machine) இயல்பு நேரச் செய்முறைப்படுத்துதலைப் பயன்படுத்துகிறது. ஏனென்றால், இதில் பணப்பட்டுவாடா உடனடியாகச் செய்யப்படுதல் வேண்டும். இது போன்றே, விமானப் பயணச் சீட்டு முன்பதிவிலும் இயல்பு நேரம் பயன்படுத்தப்படுகிறது. இயல்பு நேரச் செய்முறைப்படுத்துதலை நேரடிச் செய்முறைப்படுத்துதல் என்றும் கூறுவர்.

real time processing record : நிகழ் நேரச்செயல்பாட்டு முறைப் பதிவேடு.

real time output : இயல்பு நேர வெளிப்பாடு : தேவையானபோது ஒரு பொறியமைவிலிருந்து வேறொரு பொறியமைவின் மூலம் அகற்றப்படும் வெளிப்பாட்டுத் தகவல்கள்.

real time systems : இயல்பு நேரப் பொறியமைவுகள் : ஏதேனும் செய்முறையின் நேர வரம்புக்குள் தனது பணிகளைச் செய்து முடிக்குமாறு அல்லது தான் உதவிபுரியும் பொறியமைவுடன் இணைந்து ஒரே சமயத்தில் தன் பணிகளை முடிக்குமாறு வேண்டுறுத்தப்படுகிற கணினியமைவு. பொதுவாக இந்தப் பொறியமைவுதான் உதவிபுரிகிற பொறியமைவைவிட வேகமாகச் செயற்படுதல் வேண்டும்.

reasonableness check : சரிநிலைச் சோதனை : பெரும்பிழை எதுவும் நிகழ்ந்துள்ளதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகச் செய்முறைப்படுத்திய தகவல்களில் சோதனைகள் நடத்துவதற்கான உத்தி. உள்ளிருக்கும் தகவல் கோடுகள் மேல்-கீழ் வரம்புகளைக் காட்டுகின்றனவா என்பதை செயல்முறைப்படுத்தும் ஆணைகள் சரிபார்க்கின்றன; தகவல்கள் நியாயமாக இல்லை என்றால் அதனைச் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றன.

reasonable test : சரிநிலைச் சோதனை: ஒரு மதிப்பளவு இயல்பான அல்லது தருக்க முறையான அளவெல்லைக்குள் இருக்கிறதா என்பதை தீர்மானிப்பதற்கான ஒரு வகைச் சோதனை. புற ஒலியையும் உட்பாட்டுப் பிழைகளையும் கண்டுபிடிப்பதற்கான மின்னணுச் சைகைகளின் மூலம் இது செய்யப்படுகிறது.

reboot : புத்தியக்கம்; மறு தொடக்கம்; மறு ஆரம்பம்: ஒரு கணினியில் வன்பொருள்/மென்பொருள் செயலிழப்பு ஏற்படும்போது, அதனை எக்கித்தள்ளி மீண்டும் செயற்படுமாறு செய்தல். இது பெரும்பாலும் மனிதர் தலையீட்டின் மூலம் நடைபெறுகிறது.

receive : செய்தி ஏற்பு : செய்தி அனுப்புபவர் அனுப்பும் செய்திகளை வாங்கிக் கொள்ளுதல்.

Receive Only (RO) : ஏற்பு மட்டும் : விசைப் பலகை இல்லாத முனையங்

கள் மற்றும் பிற சாதனங்களின் படிப் பதற்கு மட்டுமேயான திறம்பாடு களைக் குறிக்கும் சொல். இது 'அனுப்பமட்டும்' என்பதிலிருந்து வேறுபட்டது.

receiver : வாங்கி ; பெறுநர் : அனுப்பு பவரால் அனுப்பப்படும் செய்தியைப் பெறுபவர்.

recompile : மறுதொகுப்பு : தவறு கண்டறிந்த பிறகு அல்லது செயல் முறையை வேறொருவகைக் கணினியில் இயக்குவது அவசியமாகிற போது, ஒரு செயல்முறையை மீண்டும் தொகுத்தமைத்தல்.

reconstruction : மறுகட்டுமானம் ; மறு உருவாக்கம் : ஒரு தகவல் தளப் பொறியமைவில், தகவல்கள் சீர் குலைக்கப்பட்ட அல்லது அழிந்து போன பிறகு, அந்தப் பொறியமைவை மீண்டும் அதன் முந்திய நிலைக்குச் சீர்படுத்திக் கொண்டுவருதல்.

record : பதிவேடு ; குறிப்பேடு ; பதிவு; குறிப்பு; பதிவுக் குறிப்பு : ஒரே அலகாகக் கருதப்படும் தகவலின் தொடர்புடைய இனங்களின் தொகுதி. ஒரு தகவல் தளத்தின் ஒவ்வொரு இனத்தையும் பற்றிய விவரிப்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட புலங்களைக் கொண்ட ஒரு பதிவேட்டின் மூலம் குறிக்கப்படுகிறது. எடுத்துக் காட்டு: ஓர் அகராதியில் அல்லது தொலைபேசி விவரக் குறிப்பேட்டில் அன்றாடம் புதிய இனத்தைச் சேர்த்தல்.

record chain : ஆவணச் சங்கிலி : ஒரு கணினிக் கோப்பிலுள்ள ஓர் உள் முகப்பட்டியலாக ஒருங்கே அமைந்துள்ள ஆவணங்களின் ஒரு தொகுதி. இவை, சங்கிலி அல்லது சுட்டு முனை முகவரி எண்கள் மூலம் தருக்க முறையில் பிணைக்கப்பட்டுள்ளன.

record count : பதிவேடுகளின் எண்ணிக்கை : கணினி ஆவணங்களின் உட்பாடு அல்லது வெளிப்பாடு பற்றிய எண்ணிக்கையின் ஒரு கட்டுப்பாட்டு மொத்தம். ஒரு பதிவுக் கணக்கினை கணினியால் உருவாக்கப்பட்ட கணக்குடன் ஒப்பிட்டுப் பார்த்து தகவல்களை இழக்காமல் பாதுகாக்கலாம்.

recording density : செறிவுத்திறன் பதிவு செய்தல் ; பதிவு அடர்த்தி : ஒரு நீட்டளவை அல்லது பரப்பளவு அலகில் சேமிப்பதற்கு அடங்கியுள்ள பயனுள்ள சேமிப்பகச் சிற்றங்களின் எண்ணிக்கை. எடுத்துக்காட்டு: ஒரு காந்த நாடாவில் ஓர் அங்குல நீளத்தில் அடங்கியுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை; ஒருவட்டின் ஒற்றை இடைப்பரப்பில் ஓர் அங்குலத்தில் அடங்கியுள்ள துண்மிகளின் எண் ணிக்கை. பொதுவாகக் காந்தநாடாச் செறிவுத்திறன் அளவுகள்: ஓர் அங்குலத்திற்கு 800, 1600, 6250 (cpi).

record key : ஆவண விடைக் குறிப்பு: ஓர் ஆவணத்திலுள்ள அந்த ஆவணத்தைக் குறிப்பாக அடையாளங் காட்டுவதற்காகவுள்ள ஒரு கட்டுப்பாட்டுப் புலம். கோப்பின் அமைப்புக் காரணி.

record layout : பதிவேட்டுக் கட்டமைவு : அமைப்பிகளின் வடிவளவு, வரிசைமுறை உட்பட, ஒரு பதிவேட்டில் தகவல் கூறுகளை வரிசைப்படுத்திக் கட்டமைவு செய்தல்.

record length : பதிவேட்டு நீளம் : ஒரு பதிவேட்டின் வடிவளவின் அளவீடுகள். இவை பொதுவாகச் சொற்கள், எட்டியல்கள், எழுத்துகள் போன்ற அலகுகளில் குறித்துரைக்கப்பட்டிருக்கும்.

record manager : பதிவேட்டு மேலாளர் : 'கோப்பு மேலாளர்' (File Manager) என்பதற்கு இன்னொரு சொல்.

record mark : ஆவணக் குறி : ஓர் ஆவணத்தின் முடிவினைக் காட்டப் பயன்படுத்தப்படும் அடையாளக் குறி.

record number : பதிவேட்டு எண் : ஒவ்வொரு புதிய பதிவேடும் உருவாக்கப்படும்போது அதற்குத் தானாகவே குறித்தளிக்கப்படும் எண். எடுத்துக்காட்டு: சுட்டு எண். இதனைப் பயன்படுத்துபவர் அறிந்திருப்பார்.

recording density : பதிவு அடர்த்தி.

recording layout : பதிவு இட அமைப்பு.

records management : பதிவேட்டு மேலாண்மை : ஓர் அமைவனத்தின் ஆவணங்களை உருவாக்குதல், பேணிவருதல், காலாந்திர முறையில் அழித்துவிடுதல் போன்ற காப்புப் பணிகளைச் செய்தல்.

recover : மீட்பு : ஒரு செயலிழப்புக்குப் பிறகு செயல்முறையைத் தொடர்ந்து நிறைவேற்றுதல். ஒரு சிக்கலைச் சமாளித்தல்.

recoverable error : மீட்கத்தக்க பிழை: ஒரு செயல் முறையில் ஏற்படும் பிழையைக் கண்டறிந்து, திருத்தம் செய்து, செயல்முறைச் செயற்பாட்டினைத் தொடரக்கூடிய பிழை.

rectangular coordinate system : செவ்வக ஆயத்தொலைவுப் பொறியமைவு : ஒரு சமதளத்திலுள்ள ஒவ்வொரு புள்ளிக்கும், ஆயத் தொலைவுகள் எனப்படும் இரண்டு எண்களைக் கொடுத்து ஒரு முகவரியை அளிக்கின்ற பொறியமைவு. இதுவும், "கார்ட்டீசியன் ஆயத் தொலைவுப் பொறியமைவு" (Cartesian Coordinate system) என்பதும் ஒன்றே.

rectifier : மின்மாற்றி ; திருத்தி : மாற்றுமின்னோட்டத்தை நேர்மின்னோட்டமாக மாற்றுகிற மின்னியல் சாதனம்.

recurring costs : தொடர்செலவுகள்: அலுவலர் வழங்கீடு, சாதனங்கள் வாடகை, கணினியமைவுடன் தொடர்புடைய அலுவலகச் செலவுகள் போன்ற, ஒரே சமயத்தில் செய்யப்படாத, தொடர்ச்சியாகச் செய்யப்பட வேண்டிய செலவினங்கள்.

recursion : தொடர் செயற்பாடுகள் ; மீள்நிகழ்வு; மறு சுழற்சி : செயற்பாடுகளில் அல்லது கட்டளைகளில் ஒன்று, முழுத் தொகுதியின் பெயரில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் அல்லது செயல்முறை கட்டளைகளின் தொகுதி. ஒரே செயற்பாடுகளைத் தொடர்ந்து திரும்பத் திரும்பச் செய்தல்.

recursive : தொடர்நிகழ்வான ; மறுசுழற்சி : திரும்பத் திரும்ப நிகழ்வதற்கான உள்ளார்ந்த அமைவுடைய ஒரு செய்முறை. ஒவ்வொரு மறுநிகழ்வும், முந்திய மறுநிகழ்வின் விளைவினைப் பொறுத்து அமையும்.

recursive procedure : தொடர்நிகழ்வு; மறுசுழற்சி முறை : 'A'என்ற நடைமுறை தன்னை நிறைவேற்றும்போது தன்னையே அல்லது 'B'என்ற மற்றொரு நடைமுறையை அழைத்தல்; அந்த 'B' நடைமுறை, 'A'நடைமுறையை அழைத்தல்.

recursive subroutine : தொடர் நிகழ்வுத்துணைவாலாயம்; மறுசுழற்சி துணை வாலாயம் : தன்னையே அழைக்கிற அல்லது மற்றொரு துணைவாலாயத்தை அழைக்கிற

துணைவாலாயம். இரண்டாவது துணைவாலாயம், முதல் துணை வாலாயத்தை அழைக்கும்.

red-green-blue monitor : சிவப்பு-பச்சை - நீலத்திரையகம் : மிக உயர்ந்த வண்ணச் செறிவுடைய காட்சி அலகு.

redirection : திசை மாற்றம்; நெறி மாற்றம் : தகவல்களை அதன் இயல்பான இலக்கிலிருந்து இன்னொரு இலக்குக்கு நெறிமாற்றி அனுப்புதல். எடுத்துக்காட்டாக, அச்சடிப்பிக்குப் பதிலாக ஒரு வட்டுக்கோப்புக்கு அல்லது ஒரு உள்முக வட்டிலிருந்து ஒரு பணிய வட்டுக்கு மாற்றுதல்.

redirector : திசை மாற்றி; நெறிமாற்றி : ஓர் உள்முகப்பகுதி இணையத்தில் (LAN) தகவல்களைக் கேட்கும் பணி நிலையத்தின் வேண்டுகோளை ஒரு பணியத்துக்கு (server) அனுப்பி வைக்கிற மென்பொருள்.

reduced instruction set computer (RISC) : குறைந்த ஆணைத் தொகுதிக் கணினி : மரபு மையச் செயலக வடிவமைப்புகளைவிட, குறைந்த அளவு அடிப்படை எந்திர ஆணைகளைப் பயன்படுத்தி செய்முறைப்படுத்தும் வேகத்தை உகந்த அளவுக்கு அதிகரிக்கிற ஒரு மையச் செயலகக் கட்டமைவு.

reduction : குறைப்பு : பதிவேடுகளின் நீளத்தைக் குறைப்பதற்காகக் காலிப் புலங்களை ஒழித்தல் அல்லது தேவையற்ற தகவல்களை நீக்குதல் மூலம் கணினிச் சேமிப்பக அளவை மிச்சப்படுத்தும் செய்முறை.

redundance : மிகைமை; மிகையாக்கம் : 1. ஒரு பொறியமைவில் ஒரு கூறு தவறாக இயங்கும்போது, அந்தப் பொறியமைவு செயலிழந்து போவதைத் தடுப்பதற்காக ஒரு கூறினை இரட்டிப்பாக்குதல். 2. பல்வேறு கோப்புகளிடையே தகவல்களைத் திரும்ப இடம் பெறச் செய்தல். இது சில சமயம் தேவையாக இருக்கும், ஆனால், பெரும்பாலும் விரும்பத் தக்கதன்று.

redundancy check : மிகைமைச் சரிபார்ப்பு : ஒரு செய்தியைத் தெரிவிப்பதற்குத் தேவைப்படும் குறைந்த எண்ணிக்கையைவிட அதிக அளவில் துண்மிகளை அல்லது எழுத்துகளை மாற்றிச் சரிபார்த்தல். இந்தக் கூடுதல் துண்மிகள் அல்லது எழுத்துகள் சரிபார்க்கும் நோக்கங்களுக்காகத் திட்டமிட்டுச் செருகப்பட்டிருக்கும்.

redundant code : மிகைமைக் குறியீடு: கூடுதலான சரிபார்ப்புத் துண்மி கொண்டுள்ள இரும குறியீட்ட பதின்ம மதிப்பளவு.

redundant data : மிகைத் தகவல் : ஓர் அமைவனத்திற்கு இனிமேலும் தேவைப்படாதிருக்கிற தகவல் அல்லது அதைவிடத் துல்லியமான அல்லது புதுமையான தகவல்களினால் நீக்கம் செய்யப்பட்ட தகவல்கள்.

redundant information : மிகைச்செய்தி விவரம் : ஒரு தகவலின் சாரம் பல்வேறு வழிகளில் தெரியும் வகையில் தெரியப்படுத்தப்படும் செய்தி.

read relay : படிப்பு அஞ்சல் : ஒரு கம்பிச் சுருள் வழியாகப் பாயும் மின்னோட்டம் ஒருமின் காந்தத்தை உண்டாக்குகிறது என்பதையும், அந்தச் சுருளின் இருமுனைகளும் எதிரெதிர் காந்தத் துருவங்களைக் கொண்டிருக்கும் என்பதையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சாதனம்.

real-to -real tape : இயல்புக்கு இயல்பு நாடா : இது ஒருவகைத் துணை நிலை நினைவகம். இது பிளாஸ்டிக் சுருள்

களால் வைக்கப்பட்டுள்ள காந்த நாடாவைப் பயன்படுத்துகிறது. இந்த நாடா, முதன்மைப் பொறியமைவுக் கணினிகளில் தொடர் வரிசை அணுகு சாதனமாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த நாடாவின் அகலம் பொதுவாக 12 மி.மீ; நீளம் 600 மீ (2,400 அடி). ஒரு நாடாவின் தகவல் அடர்த்தி ஓர் அங்குலத்திற்கு இத்தனை எட்டியல்கள் (bytes) என்று அளவிடப்படுகிறது. எடுத்துக் காட்டு: 800 bpi; 1600 bpi.

reentrant : மறுபதிவு; மீள் நுழை : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட சுதந்திரமான செயல் முறைகளினால் ஒரே சமயத்தில் பயன்படுத்தப்படுகிற ஒரு வாலாயம் தொடர்புடையது.

reentrant code : மறுபதிவுக் குறியீடு: எத்தனை பயனாளர் விரும்பினாலும் அத்தனை பேரும் ஒரே சமயத் தில் பகிர்ந்துகொள்ளக் கூடிய, இணைப்பி உருவாக்கிய எந்திர மொழிச் செயல் முறைகள்.

reentrant subroutine : மறுபதிவுத் துணைவாலாயம் : ஒரு பன்முகச் செயல்முறைப்படுத்தும் பொறியமைவில், பல செயல்முறைகள் பகிர்ந்து கொள்கிற உள்முகச் சேமிப்பகத்தில் ஒரேயொரு படி மட்டுமே இருக்கிற ஒரு துணை வாலாயம்.

reference edge : பொருந்து முனை.

referential integrity : சுட்டுமுறை முழுமையாக்கம் : தொடர்புறு தகவல் தள மேலாண்மையில், ஒவ்வொரு அயல்விடைக்குறிப்பு ஒரு அடிப்படை விடைக்குறிப்பினைக் கொண்டிருக்கும் வகையில் உள்முகமாக அமைந்த பாதுகாப்பு.

reflectance : பிரதிபலிப்பி : ஒளியியல் நுண்ணாய்வில், ஓர் எழுத்துக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள மதிப்பளவு அல்லது பின்னணியுடன் ஒப்பிடுவதற்கான மையின் வண்ணம்.

reflectance ink : பிரதிபலிப்பி மை; எதிரொளிர்வு மை : ஒளியியல் நுண்ணாய்வில், ஒரு பிரதிபலிப்புத் திறனுடைய மை. இது, ஒரு குறிப்பிட்ட ஒளியியல் எழுத்துப்படிப்பிக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காகிதப் பிரதிபலிப்புத் திறனுக்கு ஏறத்தாழ நெருக்கமாக இருக்கும்.

reflected code : பிரதிபலிப்புக் குறியீடு: 'பழுப்புக் குறியீடு' (grey code) என்பதும் இதுவும் ஒன்றே.

refelection mapping : பிரதிபலிப்பு படிவரைவு : கணினி வரைகலைகளில் ஒரு பொருளின் மீது பிரதிபலிப்புகளைத் தூண்டுகிற ஓர் உத்தி.

reflective spot : பிரதிபலிப்புப் புள்ளி: ஒரு காந்த நாடாவின் இரு முனைகளிலும் வைக்கப்பட்டுள்ள உலோகத் தகடு. இதில் நாடாவில் ஏற்றப்பட்டுள்ள ஒளி, ஓர் ஒளியுணர்வியில் பிரதிபலித்து, நாடா முடிந்து விட்டதைக் குறிக்கிறது.

reformat : மறு அச்சுப்படிவாக்கம்; மறுபடிவ மாற்றம் : தகவலை ஒரு அச்சுப்படிவத்திலிருந்து இன்னொரு அச்சுப்படிவத்திற்கு மாற்றுதல்.

refraction : ஒளி விலகல் கோட்டம் : ஒளி, வெப்பம் அல்லது ஒலி வெவ்வேறு ஊடகங்களின் வழி பாயும் போது கோட்டமடைதல்.

refresh circuitry : புதுத் தூண்டல் மின்சுற்று நெறி : ஒரு காட்சித் திரையில் காட்டப்படும் தகவல்களையும், குறிப்பின்றி அணுகும் நினைவகத்தில் சேமித்துவைக்கப்பட்டு, படிப்படியாக மின்னேற்றத்தை இழந்து வரும் தகவல்களையும் மீட்டாக்கம்

செய்வதற்குத் தேவையான மின்னணுவியல் மின்சுற்று நெறி.

refresh display cycle : புதுத் தூண்டல் காட்சிச் சுழற்சி : ஓர் நெறியச் சாதனத்தில் காட்சியாகக் காட்டப்பட வேண்டிய நெறியங்களின் வழியாக அடுத்தடுத்து நுண்ணாய்வுகள் அல்லது கடவுகள் நடைபெறுவதற்கான நேரம். ஓர் எதிர்மின்கதிர்க் குழலின் முகத்திலுள்ள எரியங்கள், ஒவ்வொரு முறையும் அந்த எரியங்களிலிருந்து வரும் சுடரொளியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வை அகற்றுவதற்காகப் புதிதாகத் தூண்டிய விரைவு வேகத்தில் ஒவ்வொரு முறையும் நுழைவதன் விளைவாக ஒளிவிடுகின்றன. இதனால், உருக் காட்சி 1/30 அல்லது 1/60 வினாடி நேரத்தில் மறு உருவாக்கம் செய்யப்படுகின்றது.

refreshing : புதுத் தூண்டுதல் : பயன்படுத்தாமலிருக்கும்போது சிதைந்து போகும் அல்லது மறைந்து போகும் தகவல்களுக்குப் புத்துயிரூட்டுகிற அல்லது மீட்டாக்கம் செய்கிற செய்முறை. ஓர் எதிர்மின்கதிர்க் குழல் திரையிலுள்ள எரியங்கள், ஓர் எலெக்ட்ரான் கற்றையின் மூலம் இடைவிடாமல் தூண்டப்பட்டு ஒளிரும்படி செய்யப்பட வேண்டும். பொதுவாகச் சுடர்நடுக்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக 30-60Hz என்ற வீதத்தில் உருக்காட்சி மறுஉருவாக்கம் செய்யப்படவேண்டும். அதே போன்று, இயக்காற்றல் வாய்ந்த நினைவகக் கூறுகள், அவற்றின் உள்ளடக்கங்கள் மறைந்து விடாமலிருக்க, அடிக்கடி அணுகப்படுதல் வேண்டும்.

refresh memory : நினைவகத்தைப் புதுப்பித்தல் : ஒரு வரைகலை விரிவாக்கத்தில் ஒரு குறிப்பிட்ட புள்ளி இருக்கிறதா, அகன்றுவிட்டதா என்பதைக் குறித்துக் காட்டும் மதிப்பளவினைக் கொண்டிருக்கிற, கணினி நினைவகத்திலுள்ள பகுதி. ஒளிர்வு, வண்ணம் பற்றிய தகவல்களையும் இது கொண்டிருக்கும்.

refresh rate : புதுத் தூண்டல் வேக வீதம்; புதுவலுவூட்டுவீதம் : CRT அல்லது இயக்காற்றல் RAM சிப்பு போன்ற சாதனங்கள் வினாடிக்கு எத்தனை முறை புதுவலுவூட்டம் பெறுகின்றன என்ற அளவீடு. கணினி வரைகலைகளில், திரையில் ஓர் உருக்காட்சியை மறுவரைவு அல்லது காட்சியாகக் காட்ட அது எடுத்துக்கொள்ளும் நேரம்.

regenerate : மறு உருவாக்கம் : சேமிப்புச் சாதனங்களில், அழித்திடும் முறையில் பயன்படுத்தப்பட்டுள்ள தகவல்களை மறுபடியும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு எண்ணளவினைப் புதுப்பித்தல்.

regenerator : புத்துயிரூட்டு அமைவு : செய்தித் தொடர்புகளில் மறுஉருவாக்கி போன்றது. மின்னணுவியலில் ஒரு நினைவகத்துக்கு அல்லது காட்சிச் சாதனத்துக்கு, அது தனது மின்னேற்றத்தை இழக்கும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் மின்விசை வழங்குகிற ஒரு மின்சுற்று வழி.

region : வட்டாரம் ; மண்டலம் : மாறுபடலாகும் எண்ணிக்கையிலான பணிகளைக் கொண்ட பன்முகச் செயல்முறைப்படுத்தலில், ஒதுக்கப்பட்டுள்ள உள்முகச் சேமிப்பு இடப்பரப்பினைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்.

register (R) : பதிப்பி ; பதிவு ஏடு; பதிகம்; பதிவிடம் : சிறிதளவிலான தகவல்களை அல்லது செய்முறைப் படுத்தும்போது இடை விளைவு

களைத் தற்காலிகமாகச் சேமித்து வைப்பதற்காக ஒரு மையச் செயலகத்தில் பயன்படுத்தப்படும் உயர் வேகச் சாதனம்.

register level compatibility : பதிவு நிலை ஒத்தியல்பு : மற்றொரு சாதனத்துடன் 100% ஒத்தியல்பாகவுள்ள வன்பொருள் அமைப்பி. இது ஒரே வகையான வடிவளவும், பெயர்களும் உடைய பதிவேடுகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் குறிக்கிறது.

registration : பதிவு செய்தல் : ஒரு சுட்டுக் குறிப்பினைப் பொறுத்துத் துல்லியமாக இட அமைவு செய்தல்.

registration mark : பதிவுக் குறி : அச்சுத் தகடுகள் எடுக்கப்படும் படச் சுருள்களில் சரிநிகரான இடங்களில் அச்சிடப்படும் ஒரு குறி. வணிக முறை அச்சடிப்பாளர்கள் தங்கள் அச்சு எந்திரங்களின் சிறந்த தரத்தைப் பேணுவதற்காக இந்தக் குறிகளைப் பயன்படுத்துகிறார்கள். பல்வேறு வண்ணங்களைத் துல்லியமாக அச்சிடுவதற்கு இது பயன்படுகிறது.

regression analysis : பின்னோக்கப் பகுப்பாய்வு : இரு தகவல் தொகுதிகளிடையிலான தொடர்பினை அறுதியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு புள்ளியல் உத்தி. எடுத்துக்காட்டாக, தென்னிந்தியாவில், மழைப் பொழிவு அதிகமாக இருந்தால் அரிசி விலை குறைவாக இருக்கும். இது, தென்கடலோரம் நெடுகிலும் கடல் மட்ட வெப்ப நிலைகளிடையே ஒரு தொடர்பினைக் காட்டும். இந்தப் பகுப்பாய்வு, இந்தத் தொடர்புகளை எண்ணளவுப்படுத்தி, எதிர்கால நிகழ்வினை ஊகித்துக்கூற உதவுகிறது.

regression testing : பின்னோக்குச் சோதனை : முன்னதாகச் சரிபார்க்கப்பட்ட ஒரு செயல்முறை விரிவாக்கம் செய்யப்படும்போது அல்லது திருத்தப்படும்போது, அதில் மேற்கொள்ளப்படும் சோதனைகள்.

regression to the norm : உருமாதிரிப் பின்னிறக்கம் : ஒரு தகவல் தொகுதியில் ஒரு மைய மதிப்பளவினைச் சுற்றி இனங்களைச் செறிவாக்கம் செய்யும் போக்கு. இதில் மிக அதிகமான மதிப்பளவுகள் கிடைக்கும். ஆனால் நாளடைவில் தகவல் தொகுதி முழுவதும் அற்ப அளவாகச் சுருங்கிவிடும்.

re-inking : மறு மையிடுதல் : ஒரு துணிவகை அச்சடிப்பி நாடாவை, மீண்டும் பயன்படுத்தும் வகையில் மறுசீரமைத்தல்.

related files : தொடர்புறு கோப்புகள்: கணக்கு எண் அல்லது பெயர் போன்ற ஒரு பொதுவான அம்சத்தின் பேரில் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட தகவல் கோப்புகளை இணைத்தல்.

relation : தொடர்புநிலை ; உறவு நிலை : 1. ஒரு குறிப்பிட்ட வரிசை முறையிலுள்ள இருபொருள்கள் தொடர்புடையனவா இல்லையா என்பதைக் காட்டும் சமநிலை, ஏற்றத்தாழ்வு போன்ற ஒரு பண்பியல்பு. 2. தொடர்நிலை தகவல்தள உருமாதிரிகளில் தகவல் சேமிப்பகத்தின் அடிப்படை வடிவமான ஓர் அட்டவணை. 3. ஓர் இணைவன/படிமுறை உருமாதிரியில், இனங்களின் தொகுதிகளிடையே பெயர் குறித்திட்ட தொடர்புநிலை.

relational database : தொடர்புறு தகவல் தளம்.

relational database management system: RDBMS : தொடர்பு நிலைத்

தகவல் தள மேலாண்மைப் பொறியமைவு : பன்முக அட்டவணைகளை அந்த அட்டவணைகளுக்குள் அடங்கிய பொதுவான தகவல் இனங்கள் அல்லது புலங்கள் அடிப்படையில், ஒன்றுக்கொன்று இணைவுடையதாக அல்லது தொடர்புடையதாகச் செய்யக் கூடிய தகவல்தளம். எடுத்துக்காட்டு: ஒரு பெயர் மற்றும் முகவரிக் கோப்பில், தெருப்பெயர், நகரின் பெயர், மாநிலத்தின் பெயர், தொலைபேசி எண் ஆகியவற்றுக்கான புலங்களும் அடங்கியிருக்கலாம். ஒவ்வொரு புலத்தையும் நிறைவு செய்து ஓர் ஆள் பற்றிய ஒரு தகவல்ஆவணத்தை உருவாக்கலாம்.

relational data structure : தொடர்புறு தகவல் கட்டமைவு : தகவல் தளத்தினுள் தகவல் கூறுகள் அனைத்தும் எளிய அட்டவணைகளின் வடிவத்தில் சேமிக்கப்படுவதாகக் காட்டும் ஒரு தருக்கமுறைத் தகவல் கட்டமைவு. தொடர்புறு மாதிரியில் அமைந்த DBMS தொகுதிகள் பொதுவான தகவல் கூறுகளைக் கொண்ட பல்வேறு அட்டவணைகளிலிருந்து தகவல் அம்சங்களை இணைக்க வல்லவை.

relational expression : தொடர்பு நிலைக் கோவை : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயக்கங்களைக் கொண்ட கோவை.

relational operator : தொடர்புநிலை இயக்கி; உறவு இயக்கி; உறவுச்செயல்பாடு ; ஒப்பீட்டுக்குறியீடு : இரண்டு மதிப்பளவுகளை ஒப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடு. இது, மதிப்பளவு மெய்ம்மையானதாக அல்லது பொய்ம்மையானதாக இருப்பதற்கான நிபந்தனையைக் குறித்துரைக்கிறது.

relational structure : தொடர்பு நிலைக் கட்டமைவு : தகவல் இனங்கள் அனைத்தும் ஒரே கோப்பில், ஒரு தருக்க முறைச் சுட்டுகளின் தொகுதி மூலம் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள தகவல் தளப் படிவம். இந்தத் தகவல் இனங்களுக்கிடையிலான தொடர்பு நிலைகளை வேண்டியவாறு மாற்றிக் கொள்ளலாம்.

relative address : தொடர்பு முகவரி ; சார்பு முகவரி : ஒரு குறிப்பிட்ட சேமிப்பு அமைவிடத்தின் முழுமுகவரியுடன் சேர்ந்து அமையுமாறு ஓர் ஆதார முகவரியுடன் சேர்க்கப்பட வேண்டிய முகவரி.

relative coding : தொடர்புக் குறியீட்டு முறை : எந்திர ஆணைகளை முகவரிகளுடன் பயன்படுத்தும் குறியீட்டு முறை.

relative coordinate : தொடர்புறு ஆயத்தொலை : பயன்படுத்தப்படும் கடைசி ஆயத் தொலைவினைப் பொறுத்து நிருணயிக்கப்படும் ஓர் ஆயத்தொலை, (5,10) என்பது, வலப்பக்கம் 5 என்பதையும், மேல் நோக்கி 10 என்பதையும் குறிக்கிறது. (-5, -10) என்பது இடப்பக்கம் 5 என்பதையும், கீழ்நோக்கி 10 என்பதையும் குறிக்கிறது.

relative movement : தொடர்பு நகர்வு; சார்பு இயக்கம் : திரையில் ஒரு பொருள் அதன் கடைசி நிலையைப் பொறுத்துப் புதியதொரு நிலைக்கு நகருதல். இது 'O'-லிருந்து நகர்வதற்கு மாறானது. "நகர்வு 4,8" என்பது, வலப்புறமாக 4 அலகுகளும், கடைசி நிலையிலிருந்து மேலே 8 அலகுகளும் நகர்வதாகும். இது "முழு நகர்வு" (Absolute movement) என்பதிலிருந்து வேறுபட்டது.

relay : அஞ்சல் : முன்தனிமக் கணினி களில் பயன்படுத்தப்படும் காந்தத் தில் இயங்கும் விசை.

release version : வெளியீட்டுப் பதிப்பு : விலைக்கு வாங்குவதற்குத் தற்சமயம் கிடைக்கக்கூடிய ஒரு செயல்முறையின் பதிப்பு.

reliability : நம்பகம் ; நம்பகத் தன்மை: செயல்முறைப் பொறியமைவு அல்லது தனிப்பட்ட வன்பொருள் சாத னம் எவ்விதப் பழுதுமின்றி தடை யின்றி செயற்படுவதற்கான திறம் பாட்டின் அளவீடு.

relocatable addresses : மறுஇட அமைவு செய்யத் தக்க முகவரிகள் : உள்முகச் சேமிப்பகத்தில் எந்த இடத் திலும் அமைந்திடக்கூடிய ஒரு செயல்முறையில் பயன்படுத்தப் படும் முகவரிகள்.

relocatable code : மறுஇட அமைவுக் குறியீடு : நினைவகச் செயல்முறை கள் எங்குவேண்டுமானாலும் தங்கி யிருக்க அனுமதிக்கும் பொறிக் கட்ட மைவு, ஒரு தொடர்பு முகவரியாக் கத்தின்படி இது செய்யப்படுகிறது. இதில் வன்பொருள், பொறி அறிவு றுத்தங்களின் முகவரிகளை ஒட்ட நேரத்தில் உயர்த்திவிடுகிறது.

relocatable programme : மறுஇட அமைவு செய்யத்தக்க செயல்முறை: ஒரு கணினியின் உள்முகச் சேமிப் பகத்தில் கிடைக்கக்கூடி பகுதி எதிலும் ஏற்றி, நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கிற, ஒரு வடிவத்தில் அமைந்துள்ள செயல்முறை.

relocate : மறுஇடஅமைவு செய்தல்: கணினிச் சேமிப்பகத்தில் எந்த இடத் திலும் நிறைவேற்றக்கூடிய வகை யில் குறியீடிடப்பட்டுள்ள ஒரு செயல்முறையை நகர்த்துதல்.

relocation : மறுஇட அமைவு : டாஸ் (DOS) நிறைவேற்றும் ஒரு செய் முறை. ஒரு EXE செயல்முறை ஏற் றப்படும்போது டாஸ் தள முகவரி களை இழுக்கிறது. அதிலிருந்து மற்ற முகவரிகள் வெளிப்படுத்தப்படு கின்றன. இந்தத் தள முகவரிகளைச் செயல்முறை ஏற்றப்படும் வரை நிலை நிறுத்தமுடியாது. ஏனென் றால், நினைவகத்தில் செயல்முறை இடநிலை அதுவரைத் தெளிவாக இருப்பதில்லை. COM செயல் முறை களுக்கு மறு இட அமைவு தேவை யில்லை.

remarks : குறிப்புரைகள் : கணினிச் செய்முறைப்படுத்தும் நடவடிக்கை எதனையும் செய்யாமல், அதே சமயம் செயல்முறையினைப் புரிந்து கொள்ளுகிற அல்லது மாற்றுகிற முயற்சியில் எதிர்காலப் பயனா ளருக்கு உதவக்கூடிய ஓர் ஆதார மொழிச் செயல் முறையினுள் புகுத் தப்படும் வாய்மொழிச் செய்திகள். இது உள்முக ஆவணமாக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது.

remark statement : குறிப்புரை அறிக் கை.

remedial maintenance : பரிகாரப் பராமரிப்பு : பொருளின் தவறான செயற்பணியினால் தேவைப்படும் பழுதுபார்க்கும் பணி. இது 'தடுப்புப் பராமரிப்பு' (Preventive maintenance) என்பதிலிருந்து மாறுபட்டது.

remote : சேய்மை ; தொலைவு : ஒரு முனையம் அல்லது அச்சடிப்பி போன்ற ஓர் அணுக்கக் கணினியி லிருந்து மிகத் தொலைவு.

remote access : சேய்மை அணுகல் ; தொலை அணுகல் : கணினியி லிருந்து தொலைவிலுள்ள ஒரு நிலையம் அல்லது நிலையங்கள் மூலம் ஒரு

கணினி வசதியுடன் செய்தித் தொடர்பு கொள்ளுதல்.

remote batch processing : சேய்மைத் தொகுதி செயலாக்கம் : ஒரு சேய்மை அமைவிடத்தில், சிறிய கணினிய மைவினைப் பயன்படுத்தி, தகவல் களை அடுக்கு அடுக்காகச் செய் முறைப்படுத்துதல்.

remote computing services : சேய்மைக் கணிப்புச் சேவை : வாடிக் கையாளர்களுக்கு பணி மையங்கள் அளிக்கும் பணிகள். எடுத்துக்காட்டு: அடுக்குச் செய்முறைப்படுத்தல்; பரி மாற்றச் சிக்கல் தீர்வு (Interactive problem solving); ஆலோசனை (consulting).

remote control software : சேய்மைக் கட்டுப்பாட்டு மென்பொருள் : ஒரு கணினியைப் பயன்படுத்துபவர் இன்னொரு இடத்திலுள்ள ஒரு கணினியுடன், அந்தச் சேய்மைக் கணினி உள்முகப் பொறியாக இருப் பதுபோன்றே, தொடர்பு கொள் வதற்கு அனுமதிக்கிற மென் பொருள். செயல்முறையின் ஒரு பகுதி உள்பொறியிலும், மற்றொரு பகுதி சேய்மைப் பொறியிலும் அமைந்திருக்கும். இது பொதுவாக, பயனாளருக்கு உதவி புரிவதற்காகத் தொழில் நுட்பாளர்களினால் பயன் படுத்தப்படுகிறது. ஒரு சேய்மைப் பொறியில் ஒரு செயற்பணியை நிறைவேற்றுவதற்கும் இது பயன் படுத்தப்படுகிறது.

remote job entry : சேய்மைப் பணிப் பதிவு : சேய்மை முனையங்களி லிருந்து, செய்முறைப்படுத்தும் பணி களை வழங்கப் பயன்படுத்தப்படும் கணினிச் செயல்முறை.

remote processing : சேய்மைச் செய லாக்கம் : ஒரு கணிணியமைவுடன் சேய்மையில் இணைக்கப்பட்டுள்ள ஓர் உட்பாட்டு/வெளிப்பாட்டுச் சாதனத்தின் வாயிலாகக் கணினிச் செயல்முறையைச் செய்முறைப் படுத்துதல்.

remote site : சேய்மை வரையிடம் : பகிர்மானக் கணிணி இணையத்தி லுள்ள புறத்தொலைவிடம்.

remote station : சேய்மை நிலையம்.

remote terminal : சேய்மை முனையம்: தொலைவிலுள்ள கணினியிலிருந்து தனியாகப் பிரிந்துள்ள வரையிடங் களிலிருந்து ஒரு கணினியுடன் செய் தித் தொடர்பு கொள்வதற்கான சாத னம். இதற்கு, தொலைபேசிக் கம்பி கள் போன்ற செய்தித் தொடர்பு வசதிகள், நேரடிக் கம்பிவடங்களுக் குப் பதிலாகப் பயன்படுத்தப்படு கின்றன.

removable disk : அகற்றத்தக்க வட்டு: அதனதன் வட்டு இயக்கியில், படிப் பதற்காகவும், எழுதுவதற்காகவும் செருகக்கூடிய வட்டு அலகு. இத னைத் தேவையில்லாதபோது அகற்றி விடலாம். நெகிழ்வட்டுகள், வட்டுப் பொதியுறைகள் போன்றவை அகற்றத்தக்க வட்டுச் சாதனங் களாகும்.

removable media : அகற்றத்தக்க ஊடகம் : தகவல்களைப் படிக்கிற அல்லது தகவல்களை எழுதுகிற சாத னத்திலிருந்து அப்புறப்படுத்தக் கூடிய நிலைவட்டு உறைகள் அல்லது பேழைகள்.

render : வரைதல் : ஓர் இயல்புலகப் பொருளை அதன் உள்ளபடியான தோற்றத்தில் வரைதல்.

rendering : வரைவு : கணினி வரை கலையில் முப்பரிமாண உருக்காட்சி யை உருவாக்குதல். இதில், நிழல் கள், பிரதிபலிப்புகள் போன்ற ஒளி

வளைவுத் தூண்டுதல்கள் உள்ள டங்கியிருக்கும்.

reorder point : கையிருப்பு அளவு : ஓர் இனத்திற்கும் கூடுதலாக அனுப் பாணை அனுப்புவதற்கு முன்பு கை வசமுள்ள மிகக்குறைந்த கையிருப்பு அளவு. பட்டியல் கட்டுப்பாட்டில் இன்றியமையாத அம்சம்.

repagination : மறுபக்கமிடுதல் : ஒரு பலபக்க ஆவணத்தில் திருத்தம் செய்யும்போது, ஒரே சீரான பக்க நீளமும், தோற்றமும் ஏற்படும் வகை யில் ஒரு சொல் செயலி மூலம் சரியமைவு செய்யும் செய்முறை.

repaint : மறுவரைவு : நாளது தேதி வரையிலான வரைகலை அல்லது வாசகத் தகவல்களைப் பிரபலிக்கும் வகையில் ஒரு காட்சிச் சாதனத்தில் ஓர் உருக்காட்சியை மறுபடியும் வரைந்துகாட்டுதல். இது பல்வேறு வரைகலைப் பொறியமைவுகளில் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இது, காட்சித் திரையில் காட்டப் படும் வடிவமைப்பை தானாகவே மறுவரைவு செய்கிறது.

repeat counter : பன்முறைப் பதிவுச் சாதனம் : ஒரு செயல்முறையில் ஒரு நிகழ்வு எத்தனை முறை நிகழ்கிறது என்பதைப் பதிவு செய்யும் செயல் முறைப் பதிவுச் சாதனம். இது பின்னர் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குப் பயன்படுகிறது.

repeater: மறுவுருவாக்கி : செய்தித் தொடர்புகளில் அனுப்பீட்டுத் தொலைவினை நீட்டிப்பதற்காக தக வல் சைகைகளைப் பெரிதாக்குகிற அல்லது மறு உருவாக்கம் செய்கிற ஒரு சாதனம்.

repeating decimal number : பன் முறைத் பதின்ம இலக்கம் : முடிவு றாமல் திரும்பத் திரும்ப வரும் பதின்ம எண். எடுத்துக்காட்டு: .3333333...... அல்லது .31282828.......

repeating number : பன்முறை எண்.

repeat key : பன்முறை விசைப் பலகை: மீண்டும் அழுத்தாமல் திரும்பத் திரும்பத் தொடர்பு ஏற்படும் வகை யில் அழுத்திவைத் திருக்கக்கூடிய விசைப்பலகையின் விரற்கட்டை.

reperforater : மறுதுளையிடு கருவி : காகித நாடாத்துளை.

repertoire : அறிவுறுத்தத் தொகுதி : ஒரு குறிப்பிட்ட கணினிக்கு அல்லது கணினி குடும்பத்திற்குச் சொந்த மான ஆணைகளின் முழுத் தொகுதி. இதனை ஆணைத் தொகுதி என்றும் கூறுவர்.

repetition : மறுநிலை ஆணை : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணை களை குறிப்பிட்ட தடவைகள் நிறை வேற்றும்படி செய்கிற ஆணை.

replacement theory : பதிலமைவுக் கோட்பாடு : தேய்மானம், செயலழிவு பற்றிய கணிதம். இது பதிலமைவுச் செலவினை மதிப்பிடுவதற்கும், உகந்த அளவுப் பதிலமைவுக் கொள்கைகளைத் தீர்மானிப்பதற்கும் பயன்படுகிறது.

report : அறிக்கை : பொதுவாக, வெளிப்பாட்டுத் தகவல்களுடன் தொடர்புடையது. தொடர்புடைய செய்திகளைப் படிப்பவர்கள் எளி தில் புரிந்துகொள்ளும் வகையில் வரைபடமாக்குதல் இதில் அடங்கி யுள்ளது. பயனாளருக்குத் தகவல் களை வழங்குவதற்கான ஒரு பொது வான வழிமுறை. பெரும்பாலான அறிக்கைகள் திரைக்காட்சியில் அல்லது அச்சிட்டபட்டியல்களில் காட்டப்படும்.

report file : அறிக்கைக் கோப்பு : தகவலைச் செய்முறைப்படுத்தும் போது உருவாக்கப்படும் கோப்பு. இது தேவையான வெளிப்பாட்டினை அச்சடிப்பதற்கு அல்லது காட்சியாகக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

report format : அறிக்கை படிவம் : பக்கம், பத்தித் தலைப்புகள், பக்க எண்கள், கூட்டுத் தொகைகள் ஆகியவற்றைக் காட்டுகின்ற ஓர் அறிக்கையின் உருவமைவு.

report generation : அறிக்கை உருவாக்கம் : ஒரு தகவல் தளக் கோப்பு முழுவதிலிருந்து அல்லது அதன் பகுதியிலிருந்து திரைக் காட்சி அல்லது வன்படி ஆவணம் உருவாக்குவதற்காகத் தகவலைக் கையாள்தல்.

report generator : அறிக்கை உருவாக்கி : எந்திரம் படிக்கத் தக்க தகவலை ஒரு அச்சிட்ட அறிக்கையாக மாற்றக்கூடிய செயல்முறை. தகவல் தள மேலாண்மைப் பொறியமைவுத் தொகுதிகளின் ஓர் அம்சம். இது, ஒரு இறுதிப் பயனாளர், ஒரு தகவல்தளத்திலிருந்து மீட்கப்பட்ட தகவல்களைக் காட்சியாகக் காட்டுவதற்காக ஓர் அறிக்கை உருவமைவை உடனடியாகக் குறிப்பிடுவதற்கு அனுமதிக்கிறது.

Report Programme, Genertor (RPG) : அறிக்கைச் செயல்முறை உருவாக்கி : ஊகித்தறியக்கூடிய அறிக்கை எழுத்துச் செயற்பாடுகளை நிறைவேற்றக்கூடிய செயல்முறைகளை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட மென்பொருள்.

report writer : அறிக்கை எழுது கருவி: தகவல் கோப்புகளில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து செந்திறமான, வளமை அறிக்கைகளை உருவாக்கும் பயன்பாட்டுச் செயல்முறை.

reproduce : படிப்பெருக்கம் : ஒரே மாதிரியான ஊடகத்திலிருந்து தகவல்களின் பல படிகளை எடுத்தல். எடுத்துக்காட்டு: ஒரு குறிப்பிட்ட வட்டுத் தொகுதியிலிருந்து ஓர் இரட்டைப்படி வட்டுத் தொகுதியைப் பெறுதல்.

reproducing punch : படிப் பெருக்கத் துளையிடு கருவி : அட்டைகளின் அடுக்குகளை இரட்டைப் படியெடுப்பதற்கான சாதனம். ஒரு தலைமை அடுக்கின் துல்லியமான படியை அளிக்கவல்லது. அடுக்கின் ஒரு படியினை வேறுபட்ட வடிவமைப்பில் துளையிடவும் செய்யலாம்.

reprogramming : மறு செயல்முறைப் படுத்துதல்: ஒரு கணினிக்காக எழுதப்பட்ட ஒரு செயல் முறையை இன்னொரு கணினியில் இயக்கக் கூடிய வகையில் மாற்றுதல்.

reprographics : படிப்பெருக்க வரைகலை : ஆவணங்கள், எழுத்துப் படிகள், படங்கள், ஓவியங்கள், படச்சுருள்கள் ஆகியவற்றைப் படியெடுத்தல், இரட்டைப் படியெடுத்தல் உள்ளடங்கிய தொழில்நுட்பம். ஒளிப் படப் படி, மாற்று அச்சடிப்பு, நுண் படச்சுருளாக்கம், மாற்று இரட்டைப் படியாக்கம் போன்ற உத்திகளும் இதில் அடங்கும்.

Request For Proposal (RFP) : முன்மொழிவு வேண்டுகோள்: வன்பொருள்/மென்பொருள் விற்பனையாளர்களுக்கு, பொறியமைவுக் குறிப்பீடுகளுக்கிணங்கியவாறு சாதனங்களையும், மென்பொருள்களையும் முன்மொழியுமாறு வேண்டி அனுப்பப்படும் ஆவணம்.

Request For Quotation: RFQ : விலைப் புள்ளி வேண்டுகோள் : வன்பொருள்/ மென்பொருள் விற்பனையாளர் களுக்கு, சாதனங்களின் விலை களைக் குறிப்பிட்டு விலைப்புள்ளி அனுப்புமாறு வேண்டி அனுப்பப் படும் ஆவணம்.

request header : வேண்டுதல் தலைப்பு : ஒரு சாதன இயக்கியைக் கட்டுப்படுத்துவதற்கு டாஸ் (DOS) உருவாக்கியுள்ள ஒரு நிலையள வுருத் தொகுதி.

requirements : தேவைப்பாடுகள்.

requirement list : தேவைப் பட்டியல்: மென்பொருள் என்னென்ன செய்ய வேண்டும் அல்லது அது எவ்வாறு கட்டமைக்கப்பட வேண்டும் என்ப தைக் குறித்துரைக்கின்ற, முறையாக எழுதப்பட்ட அறிக்கை.

rerun : மறுஓட்டம் : ஒரு கணினியில் ஒரு செயல்முறையை அல்லது அதன் ஒரு பகுதியை மீண்டும் ஓட்டுதல். இது, பொதுவாக ஒரு திருத்தம் செய் வதற்காக, அல்லது ஒரு தவறான தொடக்கத்தின்போது அல்லது தடங் கலின்போது செய்யப்படுகிறது.

reserve accumulator : காப்புத் தொகுப்பி : ஒரு மையச் செயலகத் துடன் இணைக்கப்பட்டுள்ளதுணை சேமிப்புப் பதிவேடு.

reserved words : காப்புச் சொற்கள்; சிறப்புச் சொற்கள்: செயற்பாட்டுப் பொறியமைவுகள், மொழி பெயர்ப் பிகள் போன்றவற்றால் தங்கள் சொந் தப் பயன்பாட்டுக்காகச் சில சொற் கள் காப்பிடப்பட்டிருக்கும்; இச் சொற்களைப் பயன்பாடுகளிலும், செயல்முறைகளிலும் பயன் படுத்த முடியாது. இவை கணினிச் செயல் முறைப்படுத்தும் மொழிகளில் தனிப் பொருளை உடையவை. எடுத்துக் காட்டு: Read,FOR, LET, IF, GOTO, LPRINT.

reset (R) : மாற்றமைவு; திரும்ப அமை தல் : 1. கணினி அமைப்புகளை ஒரு குறிப்பிட்ட அசைவற்ற நிலைக்குத் திரும்பக் கொண்டு வருதல். 2. ஓர் இருமஎண் சிற்றத்தை சுழி (பூஜ்ய) நிலைக்குக் கொண்டு வருதல்.

reset button : மறு இயக்கப் பொத் தான்; ஒரு வன்பொருள்/மென் பொருள் செயலிழந்த பின் ஒரு கணினியை மறுபடியும் இயக்கு விக்கிற கணினிப் பொத்தான் அல்லது விடைக் குறிப்பு. எல்லா நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு விடும். நினைவகத்திலுள்ள தகவல் எல்லாம் இழக்கப்பட்டுவிடும். ஓர் அச்சுப் பொறியின் நினைவகத்தைத் துப்புரவு செய்து, கணினியிலிருந்து புதிய தகவலை அது ஏற்றுக் கொள் வதற்கு அதனை மறுஇயக்கப் பொத் தான் தயார் செய்கிறது.

reset key: மாற்றமைவு விசை: ஒரு விசைப்பலகையிலுள்ள விசை. இது பொதுவாக ஒரு கணினியின் பகுதி களை ஒரு செயல்முறை நிறைவேற் றப்படுவதற்கு முந்திய நிலைக்கு மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படு கிறது.

reside : நிலைநிறுத்தல்; நிலை யாகப் பதிவு செய்து வைத்தல். எடுத்துக் காட்டு: ஒரு செயல் முறையை ஒரு வட்டில் அல்லது நினைவுப் பதிப் பகத்தில் நிலை நிறுத்தி வைக்கலாம்.

resident font: உள்ளமை எழுத்துரு; அச்சுப் பொறியினுள் அமைக்கப்பட் டுள்ள ஓர் எழுத்துமுகப்பு. இதனை முன்னதாகக் கீழிறக்க வேண்டிய தேவையில்லை.

resident module: உள்ளமை தகவ மைவு: நினைவகத்தில் எல்லா இடங்

களிலும் இருக்க வேண்டிய ஒரு செயல்முறையின் பகுதி. நினைவகத்தில் இவ்வாறு தகவல்களையும், ஆணைகளையும் உடனடியாக அணுகலாம்.

resident programme: நிலைப்புலச் செயல்முறை; ஒரு கணினியின் முதன்மை நினைவகத்தில் (ROM அல்லது RAM) நிறைவேற்றத்திற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட இடப் பரப்பை நிலையாக ஆக்கிரமித்துக் கொள்ளும் செயல்முறை.

residual value : எஞ்சிய மதிப்பளவு; எச்ச மதிப்பு: ஒரு குத்தகைக் காலத்தின் முடிவில் ஒரு சாதனத்தின் மதிப்பளவு.

resilient: விரிவாற்றல்; பழுதுபட்ட பின்னரும் தொடர்ந்து நிறைவேற்றும் திறனுடைய ஒரு பொறியமைவு.

resistor: தடுப்பான்; தடுப்பி; மின் தடை: ஒரு தனிம மின்னியல் சுற்றுவழியின் அமைப்பி. இது மின்னோட்டப்பாய்வினைத் தடுக்கும்போது அல்லது எதிர்க்கும்போது வெப்பத்தை உண்டாக்குகிறது.

resizing: மறுவடிவாக்கம்; முன் தீர்மானித்த நிலையளவுருக்களுக்கிணங்க ஒரு உட்பொருளினை அளவிடும் செய்முறை.

resolution: தெளிவுத்திறன்; படிப்பாற்றல் : ஓர் ஒளிக்காட்சியில் மீண்டும் வரவழைக்கக்கூடிய தகவல்களின் அளவு. இது காட்சியில் படக்கூறுகளின்(Pixels)எண்ணிக்கையில் குறிக்கப்படுகிறது.560x720 படக்கூறுகள் கொண்ட ஒரு படம், 275x400 படக்கூறுகள் கொண்ட படத்தைவிட அதிகத் துல்லியமாக இருக்கும். உயர் தெளிவுத் திறன் ஒரு நேர்த்தியான உருக்காட்சியை உருவாக்குகிறது. கணினி வெளிப்பாட்டின் துல்லியத்தை அளவிடும் அலகு இது.

resolution of the terminal: முனையத்தின் ஆற்றல் பிரிவீடு.

resolution, plotter: வரைவி தெளிவுத் திறன்; வரையப்பட்ட உருக் காட்சியின் தரத்தின் அளவீடு. ஒரு எண்மான வரைவியிலுள்ள முகவரியிடக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை, தெளிவுத் திறனைத் தீர்மானிக்கிறது. புள்ளிகள் அதிகமிருந்தால் தெளிவுத் திறனும் அதிகமாக இருக்கும்.

resource: ஆதாரம் ; வளம் : ஒரு கணினி ஆதாரம். அமைப்பின் தொகுதியைச் சேர்ந்த ஓர் நினைவகம், அச்சுப்பொறி, வட்டுச் சேமிப்பு அலகு, காட்சித்திரை, மென் பொருள், பொருள்கள், செயற்பாட்டு ஆட்கள் இந்த ஆதாரத்தில் அடக்கம்.

resource allocation : ஆதார ஒதுக்கீடு; வள ஒதுக்கீடு : கணினி ஆதாரங்களைப் பல்வேறு பணிகள் அல்லது நடவடிக்கைகளுக்கிடையே பகிர்ந்தளித்தல்.

resource file: ஆதாரக் கோப்பு ; பயன்பாட்டுச் செயல்முறைகளினால் பயன்படுத்தப்படுவதற்கு வட்டில் அல்லது நாடாவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள செயல்முறைகள் அல்லது தகவல்கள்.

resource fork: ஆதாரக் கவடு ; ஒரு மெக்கின்டோஷ் கோப்பின் ஆதாரப் பகுதி. எடுத்துக்காட்டாக, ஒரு வாசக ஆவணத்தில், இது தகவல் வட்டிலுள்ள வாசகத்துக்குக் குறை நிரப்புகிற உருவமைவுக் குறியீடுகளைக் கொண்டிருக்கிறது. ஒரு செயல் முறையில், இது நிறைவேற்றத்தக்கக் குறியீடு, பட்டியல்கள், பலகணிகள், உரையாடல் பெட்டிகள், பொத்தான்

கள், எழுத்து முகப்புகள், உருவடி வங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

resource leveling : ஆதாரச் சமநிலையாக்கம்; ஆதாரங்களைப் பெரிதும் உகந்த அளவில் பயன்படுத்தும் வகையில் மிதவை நேரத்துடன் நடவடிக்கைகளை அட்டவணைப் படுத்துதல். இதன் மூலம், ஆதாரத் தேவைப்பாடுகளில் ஏற்படும் பெரும் ஏற்றத்தாழ்வுகள் தவிர்க்கப் படுகின்றன.

resource management : ஆதார மேலாண்மை; அடிப்படைச் சேமிப்பகம், துணை நிலைச் சேமிப்பகம், மையச் செயலகம், செய்முறைப் படுத்தும் நேரம், உட்பாட்டு/ வெளிப் பாட்டுச் சாதனங்கள் போன்ற கணினிப் பொறியமைவு ஆதாரங்களை, மற்றும் பொறியமைவு மென்பொருள்கள், பயன்பாட்டு மென்பொருள் தொகுதிகள் மூலமாகப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துகிற ஒரு செயற்பாட்டுப் பொறியமைவுச் செயற்பணி.

resource sharing : ஆதாரப் பங்கீடு ; ஒரு மையச் செயலகத்தை பல பயனாளர்களும், பல புறநிலைச் சாதனங்களும் பகிர்ந்து கொள்ளுதல்.

response: பதில்.

response position: பதிலீட்டு இடநிலை; ஒளியியல் நுண்ணாய்வில், ஓர் ஒளியியல் குறியேற்புப் படிவத்தில் தகவல்களைக் குறிப்பதற்காகக் குறிக்கப்பட்டுள்ள பகுதி.

response time : பதிலீட்டு நேரம்; ஒரு குறிப்பிட்ட உட்பாட்டுக்குக் கணினி அமைவு பதிலளிக்க எடுத்துக் கொள்ளும் நேரம். ஒரு நிகழ்வுக்கும் அந்த நிகழ்வுக்குப் பொறியமைவு அளிக்கும் பதிலுக்குமிடையிலான இடைவேளை.

restart: மறுதொடக்கம் : ஒரு செயல்முறை நிறைவேற்றத்தை மீண்டும் தொடங்குதல்.

restore statement : மீட்டாக்கக் கட்டளை.

restricted function: கட்டுப்படுத்திய செயற்பணி; ஒரு பயன்பாட்டுச் செயல்முறை வாயிலாகப் பயன்படுத்த முடியாத கணினி அல்லது செயற்பாட்டுப் பொறியமைவுச் செயற்பணி.

results: முடிவுகள் ; விடைகள் : கணினிச் செய்முறைப்படுத்தலின் விளைபயன்.

result processing module: தேர்வு முடிவுச் செய்முறைப்படுத்தும் தகவமைவு.

reticle: ஒளிநுண்வலை ; ஒருங்கிணைந்த சுற்றுவழித் திரையை உருவாக்குவதற்குப் பயன்படும் ஒளிப்படத் தகடு.

retrieval: மீட்பு; ஒரு தகவல் தளத்திலிருந்து அல்லது கோப்புகளிலிருந்து தகவல்களை மீள எடுத்தல்.

retrival of data : தகவல் மீட்பு.

retrieving: மீட்டாக்கம்: சேமித்து வைக்கப்பட்ட தகவல்களைத் தேவையான போது பெறுவதற்கான செய்முறை.

retrofit : புதுமையாக்கம்; மேம்பாட்டு உறுப்பிணைத்தல்: தற்போதுள்ள ஒரு பொறியமைவினை மேம்படுத்துவதற்காக அதனை நாளது தேதி வரைப் புதுப்பித்தல் அல்லது அதில் புதியன சேர்த்தல்.

return: மீள்வு ; திரும்பு : முதன்மைச் செயல்முறையில் உரிய இடத்திற்குக் கட்டுப்பாடு திரும்புவதற்கு அனு

மதிக்கிற ஒரு துணைவாலாயத்தின் முடிவிலுள்ள ஆணைகளின் தொகுதி.

RETURN key: மீள்வு விசை ; ஒரு கணினி விசைப்பலகையில், காட்சிச் சறுக்குச் சட்டம் அல்லது அச்சடிப்பி ஊர்தி அடுத்த வரியின் தொடக்க நிலைக்கு நகரும்படி செய்யப் பயன்படுத்தப்படும் விசை.

reusable : மறுபயனீடு; ஒரு வாலாயத்தின் ஒரே படியினை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளுக்குப் பயன்படுத்த அனுமதித்தல் ஒரு வாலாயத்தின் இயல்பு.

reusability: மறுபயன்பாட்டுத் திறன்; ஒரே செயல்முறைப்படுத்தும் ஆணைத் தொகுதியை அல்லது பொறியமைவு வடிவமைப்பினை இன்னொரு பயன்பாட்டுக்கு முழுவதுமாக அல்லது பகுதியாகப் பயன்படுத்துவதற்கான திறன்.

reverse engineer: மறிநிலையாக்கம்; ஒரு முழுமை பெற்ற பொறியமைவின் அமைப்பிகளைத் தனிமைப்படுத்துதல். ஒரு சிப்பு மறிநிலையாக்கம் செய்யப்படும்போது, அந்தச் சிப்புவில் அடங்கியுள்ள அனைத்துத் தனித்தனிச் சுற்று வழிகளும் அடையாளங் காணப்படுகின்றன.

reverse polish notation: மறிநிலைப் போலிஷ் குறிமானம் ; ஹேவெல்ட் பேக்கார்டு கணிப்பிகளில் பயன்படுத்தப்படும் பின்னொட்டுக் குறிமான வடிவம். இதில் இயக்கப்படு எண்கள் இயக்கிகளுக்கு முன்னர் பதிவு செய்யப்படுகின்றன. இதில் z = a(b+c) என்னும் கோவை bc+axz = என்று எழுதப்படுகிறது.

reverse text: மறிநிலை வாசகம்; காகிதம் எந்த நிறத்தில் உள்ளதோ அதே நிறத்தில், ஒரு மாறுபட்ட கறுப்பு அல்லது வண்ணப் பின்னணியில் தட்டச்சு செய்யப்பட்ட வாசகம்.

reverse video : மறிநிலை ஒளிக் காட்சி: கணினி பயன்படுத்துபவரின் கவனத்தை ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு ஈர்ப்பதற்குக் காட்சித் திரையில் பயன்படுத்தப்படும் ஓர் உத்தி. இதனை தலைகீழ் ஒளிக்காட்சி என்றும் கூறுவர்.

review : சீராய்வு; மீள் பார்வை : ஒரு புதிய பொறியமைவின் செயற்பாட்டுத் திறனை மதிப்பிட்டறிதல்.

rewind: மீள்சுற்று; ஒரு காந்த நாடாவை அதன் தொடக்க நிலைக்கு மீண்டும் கொண்டு வருதல்.

rewrite: மறு எழுத்து; ஒன்றை அழித்துவிட்டு மீண்டும் எழுதுதல்.

RF: ஆர் எஃப் ; 'வானொலி அதிர்வெண்' என்று பொருள்படும் 'Radio Frequency' என்ற சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சுருக்கம். இது பல்வேறு மின்காந்தக் கதிர் வீச்சுகளைக் குறிக்கிறது. இது வினாடிக்கு 10,000 முதல் 40,000 கோடி சுழற்சிகள் வரை மாறுபடும். இது பெரும்பாலும் செய்தித் தொடர்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

RF modulator: ஆர் எஃப் அதிர் விணக்கி; சாதாரண தொலைக் காட்சியில் படம் தெரியும்படி செய்வதற்கு ஒரு நுண்கணினியை அனுமதிக்கும் ஒரு சாதனம்.

RFP: ஆர் எஃப் பி: 'முன்மொழிவு வேண்டுகோள்' என்று பொருள்படும். 'Request For Proposal' என்னும் ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

RFQ : ஆர் எஃப் கியூ ; 'விலைப்புள்ளி வேண்டுகோள்' என்று பொருள்

படும். 'Request For Quotation' என்பதன் தலைப்பெழுத்துக் குறும்பெயர்.

RGB monitor: ஆர்ஜிபி காட்சித்திரை: மிக உயர்ந்த தரமான படத்தை உருவாக்குவதற்கு சிவப்பு, பச்சை, நீலம் வண்ணங்களுக்கு வண்ணத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தும் வண்ணக் காட்சித்திரை.

RGB video: ஆர்ஜிபி ஒளிக் காட்சி; ஒருவகை வண்ண ஒளிக் காட்சிக் குறியீடு (சிவப்பு, பச்சை, நீலம்); செந்திறமான தொலைக் காட்சிப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் கலவை வண்ண ஒளிக்காட்சியிலிருந்து வேறுபட்டது. இதனை ஒரு வண்ணக் காட்சித் திரையில் மட்டுமே காட்டலாம்; இதில் இந்த அடிப்படை வண்ணங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனித் துப்பாக்கிகள் அமைந்திருக்கும். சாதாரண வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளில் ஒரேயொரு துப்பாக்கி மட்டுமே இருக்கும். ஆர் ஜி பி திரைகள் துல்லியமும் பிரகாசமான வண்ணங்களும், உயர்ந்த தெளிவுத் திறனும் உடையவை.

ribbon: நாடா ; பல்வேறு தாக்குறவு மற்றும் தாக்குறவற்ற (எடுத்துக் காட்டு: அனல்) அச்சுப்பொறிகளில் மை யூட்டும் சாதனம். பெரும்பாலான நாடாக்கள், மையேற்றம் செய்யப்பட்ட செயற்கை இழைகளிலானவை. இவை இரு வகையின: ஒன்று, ஓரடி வகை; இதனை ஒரே முறைதான் பயன்படுத்தலாம், இன்னொன்று பன்முறை அடிவகை இதனைப் பலமுறை பயன்படுத்தலாம். பன்முறை அடிவகை நாடாக்களைவிட, ஓரடிவகை நாடாக்களைப் பயன்படுத்துவதற்குச் செலவு அதிகம் பிடிக்கும். எனினும் ஓரடி வகை நாடாவின் எழுத்துகள் அதிகத் தெளிவாக இருக்கும்.

ribbon cable: பட்டிகைக் கம்பிவடம்: ஒரு போகான கம்பிகள் தட்டையாக இணைக்கப்பட்ட கம்பிவடத்தின்

பட்டிகைக் கம்பிவடம்
(Ribbon-cable)

தொகுதி. இதில் ஏராளமான கம்பிகள் அருகருகே அமைக்கப்பட்டிருக்கும். இது பெரும்பாலும் கணினிகளைப் புறநிலைச் சாதனங்களுடன் இணைக்கப் பயன்படுத்தப் படுகிறது.

ribbon cartridge: பட்டிகை உறை ; நாடா பேழை : அச்சுப் பொறி நாடா வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் உறை.

ribbon spool: நாடா கண்டு.

right justified: புலச் சரியமைவு ; கடைசி எழுத்து (இலக்கம்) புலத்தின் கடைசி இடத்தில் ஒரு நிலைப் படுத்தப்படும் வகையில் அமைந்த பாட்டுப் புலத்தின் இணைப்பு முறை.

right justify: வலப்புற வரிச் சரியமைவு; கடைசி எழுத்து (இலக்கம்) புலத்தின் கடைசி இடத்தில் ஒரு நிலைப்படுத்தப்படும் வகையில் அமைந்த பாட்டுப் புலத்தின் இணைப்பு முறை.

right disk: விறைப்பு வட்டு ; நிலை வட்டு.

right or hard disks : விறைப்பு அல்லது நிலை வட்டுகள்; இது அலுமினியத்தினால் ஆனது; இதன் பதிவுப் பரப்பு, பெரும்பாலும் குரோமியம் ஆக்சைடினால் முலாம் பூசப்பட்டிருக்கும். முன்பு ஒவ்வொரு வட்டும் 2மீமிகு எட்டியல் திறன் கொண்டிருந்தது. பின்னர் வந்த வட்டுகள் 4 மீமிகு எட்டியலுக்கு மேற்பட்ட சேமிப்புத் திறனைக் கொண்டிருந்தன. செந்திற மான வட்டுகளில் தனித்தனித் தடங்கள் இருக்கும். சில மாதிரிகளில் நிலையான சுருள் முறை இருக்கும். இவை மிகக் குறைந்த அணுகு நேரம் உடையவை. மற்ற மாதிரிகளில் நகரும் சுருள் முனைகள் இருக்கும். இவற்றைச் சரியான தடத்தில் செலுத்த வேண்டும்.

ring network : வளைய பிணையம் ; ஒவ்வொரு கணினியும் மற்றக் கணினிகளுடன் இணைக்கப்பட்டுள்ள கணினி இணையம். புவியியல் முறையில் கணினிகள் நெருக்கத்தில் இருக்கும்போது இது பயன்படுகிறது.



வளைய பிணையம் (Ring network)

ring: வளையம் ; வட்ட முறை : தகவல் கூறுகளை சுழல் முறையில் அமைத்தல்.

RI/SME : ஆர் ஐ / எஸ் எம் ஐ ; பன்னாட்டு எந்திரன் உற்பத்திப் பொறியாளர் கழகம் (Robotics International of the Society of Manufacturing Engineers) என்ற அமைவனத்தின் தலைப்பெழுத்துச் சுருக்கம். இது எந்திரன்களை வடிவமைத்துப் பயன்படுத்தும் பொறியாளர்களின் அமைப்பாகும்.

RJE: ஆர்ஜேஇ: 'சேய்மைப் பணிப் பதிவு' என்று பொருள்படும். 'Remote Job' என்பதன் தலைப்பெழுத்துக் குறும்பெயர்.

RO : ஆர் ஓ : 'பெறுதல் மட்டும்' என்று பொருள்படும் 'Receiving Only' என்பதன் தலைப் பெழுத்துச் சுருக்கம்.

Roach : John : ரோச் ஜான்: 1977இல் 'டாண்டி கார்ப் பொரேஷன்' 'TRS 80' என்ற அமைவனத்தின் வானொலிப் பிரிவு என்ற நுண் கணினியை வெளியிட்டது. அப்போது அந்த அமைவனத்தின் துணைத் தலைவராக இருந்தவர் ஜான் ரோச். பெரும் புகழ் பெற்ற இந்த வகை நுண்கணினி உருவாக்கத்திற்கு வழி காட்டியாக இருந்தவர்.

roam : நகர்த்தல் : ஒரு காட்சித் திரையைச் சுற்றி ஒரு காட்சிப் பலகணியை நகர்த்துதல்.

robot : எந்திரன் ; எந்திர மனிதன் : கணினியின் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதனம். உட்பாடு, குறியீடுகள், சுற்றுச்சூழல் நிலைமைகள் போன்றவற்றை உணர்ந்தறிந்து முடிவுகளை எடுக்கும் சாதனங்களைக் கொண்டிருக்கும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு வழிகாட்டுச் செயல்முறையும் உடையது.

robot control language : எந்திரன் கட்டுப்பாட்டு மொழி; எந்திரன்களைக் கட்டுப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட செயல்முறைகளுக்கான மொழி. சான்று: Val: ML; ரோபோலான்.

Robotic Industries Association (RIA): எந்திர மனிதர் தொழிற் கழகம் ; எந்திரன் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்துப் பயன்படுத்துவதற்கான ஒரு தொழில் முறைக் கழகம்; 1974இல் நிறுவப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான எந்திரன் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் பயன்படுத்தும் கூட்டமைப்புகள், பணி நிறுவனங்கள், ஆலோசகர்கள், ஆராய்ச்சி நிலையங்கள் அங்கம் பெற்றுள்ளனர். இது எந்திர மனிதன் பற்றிய நடப்புத் தொழில் நுட்பம் பற்றிய தகவல்களையும், புள்ளி விவரங்களையும் சேகரித்து வெளியிடுகிறது.

robo stick : தன்னியக்கக் கோல் ;சறுக்குச் சட்டத்தைக் கையாள்வதற்கும் வரைகலைகளை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்படும் ஓர் உட்பாட்டுச் சாதனம்.

robotics : எந்திரனியல்: எந்திரன்கள் பற்றிய செயற்கை அறிவாற்றல் துறை. எந்திர மனிதர் வடிவமைப்பு, பயன்பாடு பற்றிய அறிவியல்.

ROBOTLAN : ரோபோலான் : எந்திரன்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் செயல்முறைப் படுத்தும் மொழி.

robustness : வீரியம்: தவறான தகவல்களைச் செலுத்துதல் போன்ற எதிர்பாராத சூழ்நிலைகளில் நிலைமையைச் சமாளிக்கக் கூடிய அல்லது குறைந்தது அபாயத்தைத் தவிர்க்கக் கூடிய திறன்வாய்ந்த மென்பொருள் செயல்முறையின் அல்லது செயல் முறைத் தொகுதியின் திறம்பாடு. எடுத்துக்காட்டு: உட்பாட்டில் பிழைகளை எதிர்பார்த்து, செய்முறையில் வேண்டுமென்றே ஒரு செயல் முறைத் தருக்கமுறையைச் சேர்த்தல்.

rocket : ராக்கெட் ; ஒரு உள்ளெரி அரையின் பின்புறத்திலுள்ள குழாய் முனை அல்லது தாரை வழியாக வெளியேறும் வாயுக்களின் மூலம் செயற்படும், தானாகவே முன் செலுத்தப்படும் சாதனம்.

rod memory : தண்டு நினைவுப் பதிப்பி ; தண்டு நினைவகம் : நிக்கல் அல்லது இரும்பு உலோகக் கலவை பூசப்பட்டு, கோல்களின் வடிவில் வெட்டப்பட்டுள்ள கணினிச் சேமிப்பகம்.

rollback : பின்னோட்டம் ; பின்னுருள்தல் : ஒரு பொறியமைவில் தவறு நேர்ந்த பிறகு செயல்முறையை மீண்டும் தொடங்குவதற்கான பொறியமைவு. தகவல்களும் செயல் முறைகளும் காலாந்திர இடைவெளிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். கடைசியாகப் பதிவான நொடிப் பொழுதிலிருந்து பொறியமைவு மீண்டும் இயங்கத் தொடங்கும்.

roller : உருளை.

roll out : வெளிக்கொணர்தல் ; வெளியேற்றல் : துணைச் சேமிப்பிகளி

லுள்ள உள்முகச் சேமிப்பியின் உள்ளடக்கங்களைப் பதிவு செய்தல்.

rollover: தற்காலிக நினைவுப் பதிப்பி; சுற்றிக் கொள்ளல் : தட்டச்சுச் செய்த எழுத்துகளையும் ஆணைகளையும் கணினியமைவு எத்துணை வேகமாகச் செய்முறைப்படுத்த கூடுமோ அதைவிட வேகமாக அவை பதிவு செய்யப்படும்போது அவற்றைச் சேமித்து வைக்கக்கூடிய இடைத் தடுப்பு நினைவகம்.

roll paper : சுருள் காகிதம் ; ஒரு கண்டில் தொடர்ச்சியாகச் சுற்றி வைக்கப்பட்டுள்ள அச்சுக் காகிதம். இது, 'விசிறி மடிப்புக் காகிதம்' (fanfold paper) என்பதிலிருந்து வேறுபட்டது.

ROM : ஆர் ஓ எம் ; படிக்கமட்டுமான நினைவகம் : 'படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம்' என்று பொருள்படும். 'Read Only Memory' என்பதன் தலைப்பெழுத்துக் குறும்பெயர். இது ஒருவகை ஒருங்கிணைந்த மின் சுற்றுவழி. இது, அடிப்படைத் தொடக்க வாலாயங்களை அளிக்கக் கூடியது. இதிலுள்ள சிப்புகள் உற்பத்தியாளர் பொருத்தியுள்ள மென்பொருள்களைச் சேமித்து வைக்கிறது. அச்சுப் பொறிகள், காட்சித் திரைகள் ஆகியவற்றில் எழுத்துகளை உருவாக்கவும் இது பயன்படுகிறது. இது ஒரு சிப்புவில் நிரந்தரமாக அல்லது உறுதிபடப் பொருத்தப் பட்டிருப்பதால், இதனை 'உறுதி நிலைப்பொருள்' (Firm ware) என்றும் கூறுவர். இது அழித்திடக் கூடிய செயல்முறை வகுத்திடத்தக்க, படிப்பதற்கு மட்டுமேயான நினைவகம் (Eprom) ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

ROM cartridge : ஆர்ஓஎம் உறை ; ஒரு விளையாட்டு, ஒரு கல்விச் செயல்முறை, ஒரு வணிகப் பொறியமைவு போன்ற செயல் முறைப்படுத்திய செயற்பணியைக் கொண்டிருக்கிற படிப்பதற்கு மட்டுமேயான தகவமைவு கணினிக்குள் செருகப் படுகிறது.

ROM chips : படிக்கமட்டுமான நினைவுப் பதிப்பி சிப்பு.

ROM simulator : ஆர் ஓ எம் மாற்றுரு; ஒரு பொறியமைவில் செயல்முறைச் சரிபார்ப்பின்போது Rom, PROM நினைவகங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொது நோக்குச் சாதனம். இது மின் சுற்று வழி மாற்றுருவாக்கத்தில் இயல்பு நேரத்தை (Real time) அளிக்கிறது. இது பொறியியல் உருமாதிரிகளில் அல்லது படிப்பெருக்க உருமாதிரிகளில் தவறுகளைத் திருத்துவதற்கான செயல்முறைகளில் அல்லது உற்பத்தி உருமாதிரிகளில் புதிய அம்சங்களைச் சேர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

root : வேர் ; மூலம் : ஒரு மர வரைபடத்தில் தலையாய கூறு அல்லது மைய முனை. இதிலிருந்து இலை முனைகளுக்கு கிளைகள் கிளைத்துச் செல்லும்.

root directory : மூலச் சேமிப்பகம்.

rotating memory : சுழல் நினைவகம்: காந்தத் தகவல் சேமிப்புச் சாதனம். இது ஒரு வட்டத் தகட்டுவடிவில் அமைந்திருக்கும். இது ஓர் ஒலிப் பதிவுத் தட்டுபோல் சுழலும்.

rotation : சுழற்சி ; கணினி வரைகலையில் ஒரு கணினி உருவாக்கிய உருவத்தை, அதன் மூலப் புள்ளியிலிருந்து ஒரு குறிப்பிட்ட கோணத்திற்குச் சுழற்றுதல். முப்பரிமாண வரை கலையில், உருவத்தை இடப்

பரப்பில் அச்சினைச் சுற்றிச் சுழற்றி, வேறு தோற்றங்களை உருவாக்க லாம்.

rotational delay : சுழற்சி காலத்தாழ்வு; சுழற்சிச் சுணக்க காலம் : ஒரு வட்டின் ஒரு பகுதியிலுள்ள ஒரு பதிவு, எழுது/படிப்பு முனையின் கீழ் சுழல் வதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம்.

RO terminal : ஆர் ஓ முனையம்: தகவல்களை ஏற்றுக் கொள்ள மட்டுமே செய்து, அனுப்பீடு செய் யாத செய்தித் தொடர்பு எந்திரம்.

rounding : முழு எண்ணாக்குதல்; தோராயமாக்கல் : ஓர் எண்ணில் மிகச் சொற்பமான பின்னப்பகுதியை விட்டுவிட்டு, அந்த எண்ணை அதற்கு மிக நெருக்கமான எண் ணுக்கு முழுமையாக்குதல்.

round robin : சுழற்சி அட்டவனை ; தொடர் சுழல் : சாதனம் அல்லது செய்முறை ஒவ்வொன்றின் முடிவில் ஒரு குறிப்பிட்ட சுழற்சி வருமாறு அட்டவணைப்படுத்தும் முறை.

router : வழிச்செலுத்தி; வழிப் படுத்தி: இணையப் (இன்டர்நெட்) போக்கு வரத்து தனது இலக்கினை அடை வதற்கு எந்தப்பாதையில் செல்ல வேண்டும் என்பதை முடிவு செய்யும் கணினி. ஒருவழிச் செலுத்தி, தனது உள்முக இணையத்தின் உள்ளே அல்லது வெளியே போக்குவரத் தினைக் கட்டுப்படுத்துவதற்கு, இணையத் தொகுதிகளை வடி கட்டிக் கொள்ளவும் முடியும்.

routine : வாலாயம் ; நிரல் ; வழமை: ஒரு குறிப்பிட்ட பணியைச் செய் வதற்கான ஒரு குறுகிய செயல் முறைக் குறியீட்டுத் தொகுதி. முக்கி யமாக இணைப்பு மொழிச் செயல் முறைகளில் பயன்படுத்தப்படு கிறது. சிலசமயம், செயல்முறையை (Programme)குறிக்கவும் பயன்படு கிறது.

routing : செல்வழிப்படுத்துதல் : ஒரு செய்தியை அளிப்பதற்காக ஒரு பாதையினைக் குறித்தளித்தல்.

row : வரிசை : 1. ஒரு வரிசையின் ஒரு வரியின் கிடைமட்ட எழுத்துகள். 2. துளையிட்ட அட்டையில் துளை யிட்ட நிலையிடங்களில் கிடை மட்ட வரிகளில் ஒன்று. 3. ஒரு மின் னணுவியல் விரிதாளில் செங்குத்துப் பகுதிகள்.

நெடு வரிசைகளும் (columns) கிடை வரிசைகளும் சேர்ந்து அதில் விரிதாள் அச்சுவார்ப்புருவாக அமைகின்றன.

royalty :புனைவுரிமைத் தொகை.

RPG : ஆர்பிஜி; 'அறிக்கைச் செயல் முறை உருவாக்கி' என்று பொருள் படும். 'Report Programme Generator' என்பதன் தலைப்பெழுத்துச் சொல். இது, வணிகம் சார்ந்த, பெரிதும் புகழ் பெற்ற செயல் முறைப்படுத்தும் மொழி. உயர்ந்த கட்டமைப்பு உடையது; எளிதில் கற்றுக் கொள்ளக் கூடியது. பல வணிகச் செயல் முறைப்படுத்தவும், அறிக்கைகள் தயாரிக்கவும் பயன் படுகிறது.

RPROM : ஆர்பிஆர்ஓஎம் : 'மறு செயல்முறை வகுத்திடத்தக்க படிப் பதற்கு மட்டுமேயான நினைவகம்' என்று பொருள்படும். 'Reprogrammable Read Only Memory' என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

RS-232C : ஆர்எஸ் - 232சி: அச்சடிப் பிகள், கணினிகள் போன்ற முனை யச் சாதனங்களுக்கும், அதிர் விணக்கி (Modulator), அதிர்விணக்கம் நீக்கி (Demodulator)போன்ற செய்தித் தொடர்புச் சாதனங்களுக்கு மிடை யில் தகவல் செய்தித் தொடர்புகளுக்

கான தரஅளவு. பெரும்பாலான நுண்கணினிகள் RS-232C இடைமுகப்புகளை அளிக்கின்றன.

RS-422 : ஆர்எஸ் -422: மிக உயர்ந்த வேகத் தொடர் இணைப்புவழிக்காக அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள தர அளவு.

rubber banding : ரப்பர் கட்டுக்கம்பி; ஒரு மின்னணுவியல் பேனா அல்லது நுண்பொறி மூலமாக காட்சித் திரையின் குறுக்கே, ஓர் அமைப்பானைத் தேவையான அமைவிடத்திற்குத் தடம் பெயர்க்க அனுமதிக்கும் கணினி உதவிபெற்ற வடிவமைப்பு (CAD) திறம்பாடு. இது ஒரே சமயத்தில், தொடர்புடைய இடை இணைப்புகள் அனைத்தும் குறியீடு தொடர்ந்து இருந்து வரும்படி செய்யும்.

rubout key : நீக்கவிடைக் குறிப்பு ; ஒரு முனையத்தில் பதிவு செய்யப்பட்ட கடைசி எழுத்தினை நீக்கம் செய்கிற விசைப் பலகை விடைக் குறிப்பு.

ruggedized computer: கடுஞ்சூழல் கணினி; ஒரு விண்வெளிக்கலம், ஓர் ஏவுகணை, ஒரு கப்பல், ஒரு நீர் மூழ்கிக் கப்பல், ஒரு பீரங்கி, ஓர் உழவுச்சாதனம் போன்ற தனிப்பட்ட சூழல்களில் அமைத்திடும் வகையில் வடிவமைக்கப்பட்ட கணினி.

rule : விதிமுறை ; விதி : ஒரு மெய்க் கோளின் வடிவத்தை உருவாக்கி, ஒரு முடிவினைச் செய்கிற அறிக்கைகள். இந்த முடிவுகள், 'என்றால்' (IF) என்ற நிபந்தனையும், 'பின்னர்' என்ற முடிவினையும் கொண்ட விதிமுறைகளாக இருக் கும்.

rule-based knowledge: விதிமுறை சார்ந்த தகவல்: விதிமுறைகள் வடிவிலும், செயலறிக்கைகளிலும் அமைந்துள்ள தகவல்.

ruler line : வரைகோல் கோடு ; வரை கோடு : வாசகத்தையும் வரை கலைகளையும் திட்டப்படுத்திக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் வரை கலை வரையுரு.

rules-based deduction: விதிதரு அனுமானம்: பொறியமைவுக்கும் பயன்படுத்துவோருக்குமிடையிலான உரையாடலை வழிச் செலுத்துகிற எளிய விதிகளின் தொகுதியான குறித்துரைக்கப்படும் தகவல்களிலிருந்து முடிவுகளைப் பெறுவதற்கான உத்தி.

run : ஓட்டுதல் ; இயக்குதல் : ஒரு கணினியில், குறிப்பிட்ட தகவல் தொகுதியினைக் கொண்டு, ஒரு செயல்முறையை ஒற்றையாக அல்லது தொடர்ச்சியாக நிறைவேற்றுதல்.

run around : சுற்றோட்டம் ; மேசை வெளியீட்டுத் தொகுதியில், ஒரு வரைகலை உருக்காட்சியைச் சுற்றி வாசகங்களை அமைத்தல்.

run commond : 'இயங்கு' ஆணை.

run manual : ஓட்டக் கையேடு ; ஒரு கணினி இயக்கத்துடன் தொடர்புடைய செய்முறைப்படுத்துதல், பொறியமைவுச் செயல்முறை, தருக்கமுறைக் கட்டுப்பாடுகள், செயல்முறை மாற்றங்கள், செயற்பாட்டு ஆணைகள் ஆகியவற்றை ஆவணமாக்கிய கையேடு அல்லது நூல்.

run on top of: உச்சி மேலோட்டம் ; ஒரு செயல்முறைக்குத் துணைமையாகவுள்ள துணைச் செயல்முறையினை அதன் கட்டுப்பாட்டுச் செயல்முறையாக ஓட்டுதல். இது 'கீழோட்டம்' (Run under)என்பதிலிருந்து வேறுபட்டது.

run time : ஓட்ட நேரம்: கட்டுப்பாட்டு அலகு தகவல்களைப் பெறுவதற்கும் கணிதத் தருக்கமுறை அலகில் உண்மையில் செய்முறைப்படுத்துவதற்கும் எடுத்துக் கொள்ளப்படும் நேரம். இதனை 'நிறைவேற்ற நேரம்' (Execution time) என்றும் கூறுவர். இது 'தொகுப்பு நேரம்' (Compilation time)என்பதிலிருந்து வேறுபட்டது.

run time array : ஓட்ட நேர வரிசை : RPGஇல் செயல்முறை ஓடத் தொடங்கிய பிறகு, உட்பாடு அல்லது கணிப்புக் குறிப்புரைகள் மூலம் ஏற்றப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஓர் வரிசை.

run-time error : ஓட்ட நேரப் பிழை : செயல்முறை நிறைவேற்றத்தின் போது ஏற்படும் ஒரு பிழை. இந்தப் பிழை செயல்முறை வளர்ச்சி நிலையில் அல்லது வன்பொருள் செயலிழத்தல் காரணமாக இயல்பு வாழ்வு வழக்காற்றில் ஏற்படக் கூடும். செயல்முறை வளர்ச்சி நிலையில், ஒரு தகவல் கோப்பு முன்பு முடிவுறுத்தப்படாமலிருந்து, அதனைத் திறந்திட முயலும்போது ஓட்ட நேரப்பிழைகள் ஏற்படலாம். இயல்பு - வாழ்வு வழக்காற்றில் எடுத்துக்காட்டாக, ஓர் அச்சடிப்பியில் காகிதம் அகற்றப்பட்டு தொடர்பு துண்டிக்கப்பட்ட பிறகு, அந்த அச்சடிப்பியை அணுக மென்பொருள் பயன்பாடு முயலும்போது இந்தப் பிழை ஏற்படும். துல்லியமான செயல்முறைப்படுத்தும் நுட்பங்களைக் கையாள்வதன் மூலம் இந்தப் பிழை ஏற்படாமல் தவிர்க்கலாம்.

run time version : ஓட்ட நேரப் பதிப்பு: ஒரு பெரிய மென்பொருள் பயன்பாட்டின் குறுகிய பதிப்பு. இது, மற்றொரு மென்பொருள் பயன்பாட்டுக்கு ஓர் இணைப்பினை அளிக்கிறது.

run under: கீழோட்டம் : ஓர் உயர் நிலைச் செயல்முறையின் கட்டுப்பாட்டின் கீழ் ஓடுதல். இது 'உச்சி மேலோட்டம்' (Run on top of) என்பதிலிருந்து வேறுபட்டது.

run unit : ஓட்ட அலகு ; ஒன்று சேர்த்து நிறைவேற்றப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருள் செயல்முறைகள். எடுத்துக்காட்டு : COBOL;PL/I

run user : ஓட்டப் பயனாளர்: தற்போது நிறைவேற்றிவரும் விரைவுப் பட்டியலிலுள்ள தோற்ற நிலைப் பொறி.

running head : ஓட்டத் தலைப்பு; ஓர் ஆவணத்தின் அல்லது நூலின் பக்கங்கள் அனைத்தின் உச்சியிலும் காணப்படுகிற வாசகம். இது, நிறுமத்தின் சின்னமாக அல்லது பக்க எண்ணாக இருக்கலாம்.

running time: ஓட்ட நேரம் ;ஓர் இலக்குச் செயல்முறையை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம்.

R/W : ஆர் / ட்பிள்யூ ; படி/எழுத்து நினைவகம்.

S

SAA (System Appplication Architecture) : எஸ்ஏஏ (பொறியமைவுப் பயன் பாட்டுக் கட்டிடக் கலை) : இது, ஒரு வகை IBM *தர அளவுகளின் தொகுதி. 1987இல் அறிமுகப்படுத்தப்பட்டது. நுண்கணினிமுதல் முதன்மைப் பொறியமைவுவரை* IBMஇன் *அனைத்துக் கணினிகளிடையிலும் தொடர்ச்சியான இடைமுகப்புகளை இது ஏற்படுத்துகிறது. பயன்படுத்து வோர் இடைமுகப்புகள், செயல் முறைப்படுத்தும் இடைமுகப்புகள், செய்தித் தொடர்பு மரபுகள் ஆகிய வற்றினாலானது.*

sabermetrician : புள்ளியியல்வாதி: *புள்ளிவிவர வல்லுநர்களைக் குறிக் கும் வழக்குச் சொல். இவர் விளை யாட்டு அணிகள் மற்றும் விளை யாட்டு வீரர்களின் எதிர்காலச் சாத னைகளை ஊகித்தறியக் கணினி களைப் பயன்படுத்துபவர்.*

sag : மின்னழுத்த வீழ்ச்சி : *மின்விசை ஆதாரத்திலிருந்து வரும் மின்னழுத் தம் தற்காலிகமாக வீழ்ச்சியடைதல். இது, மின்னழுத்தப் பெருக்கத்தி லிருந்து வேறுபட்டது.*

salami technique : சிறிதளவு கையா டல்செய்தல்; சலாமி கையாடல் உத்தி : *பெருமளவு ஆதாரங்களில் சிறிதளவு உடைமைகளைத் திருடுதல். ஒரே சமயத்தில் சிறு துணுக்கினை களவாடும் கையாடல் உத்தி எனப் படும். எடுத்துக்காட்டு: பல வங்கிக் கணக்குகளிலிருந்து சில காசுகளைத் திருடுதல்.*

sales forecasting model : விற்பனை முன்னறிவிப்பு உருமாதிரி; விற்பனை முன் மதிப்பீட்டு முன்மாதிரி ; விற் பனை முன்கணிப்பு மாதிரி : *ஒரு முன்னறிவிப்பின் ஒவ்வொரு கால அளவின்போதும் ஆண்டு விற்பனை யை அதிகரிப்பதற்காகப் பயன்படுத் தப்படும் உருமாதிரி. உட்பாட்டுக் காரணிகளில் அங்காடி அளவுகள், விற்பனை விலைகள், அங்காடி வளர்ச்சி வீதம், போட்டியாளர் நட வடிக்கைகளில் அங்காடி அளவு களின் பங்கு பிற காரணிகள் இதில் அடங்கும்.*

SAM : சாம் : *வரிசைமுறை அணுகு முறை என்று பொருள்படும்* "Sequential Access Method" *என்பதன் குறும் பெயர். இது, ஒரு வட்டுக் கோப்பில் தகவல்களைச் சேமிக்கவும், அதி லிருந்து தகவல்களை மீட்கவும் பயன்படும் முறை.*

samna : சாம்னா : *சொந்தக் கணினி களுக்கான முதலாவது செய்முறைப் படுத்திகளில் ஒன்று. இதனை 1983 -இல் சாம்னா நிறுவனம் தயாரித்தது. இப்போது இது, லோட்டசின் ஒரு பகுதி.*

sample data : மாதிரித் தகவல் : *ஒரு பாய்வு வரைபடம் தருக்க முறையில் இருக்கிறதா என்றும், ஒரு செயல் முறை செயற்படுகிறதா என்றும் அறிந்துகொள்வதற்குப் பயன்படுத் தப்படும் புனைவுகோள் தகவல் தொகுதி.*

sampling : மாதிரி எடுத்தல் : *ஒரு சீரான அல்லது இடையிடையிலான கால இடைவெளிகளில் ஒரு மாறியின் ஒரு மதிப்பினைப் பெறுதல்.*

sampling rate : மாதிரி வீதம் ; மாதிரி எடுப்பு வீதம் : *மாதிரி நிகழ்கிற அடுக்கு வீதம்.*

sampling ratio : மாதிரி விகிதம் : *கலைப் பொருள்களை அல்லது ஒளிப்படங்களை மின்னணு முறை யில் நுண்ணாய்வு செய்யும்போது, மூல உருக்காட்சியிலிருந்து பதிவு செய்யப்படும் படக்கூறுகளின் எண் ணிக்கை. நுண்ணாய்வு செய்பவர் 300*

டிபிஐ எனப் பதிவுசெய்திருக்கலாம். ஆனால் இறுதியில் 150 டிபிஐ மட்டுமே பதிவாகியிருக்கும். இந்த விகிதம் 2:1 ஆகும்.

sans serif : நுண்வரையிலா எழுத்துரு: நுண்வரைகள், அலங்காரமாக அகன்ற அடித்தளங்கள், உச்சிக் கொண்டைகள் இல்லாத எழுத்து முகப்புகள்.

sapphire : நீலமணி ; நீலக்கல் : சில வகை ஒருங்கிணைந்த சுற்றுவழிச் சிப்புகளுக்கான கீழடுக்காகப் பயன் படுத்தப்படும் பொருள்.

SAS : எஸ்ஏஎஸ் (புள்ளியியல் பகுப்பாய்வுப் பொறியமைவு) : இது எஸ்ஏஎஸ் இன்ஸ்டிடியூட் என்ற நிறுவனம் தயாரித்துள்ள ஒருங்கிணைந்த புள்ளியியல் தொகுதி. இதில், தகவல் நிருவாகம், விரிதாள், சிபிடி, (CBT) முன்னிடு வரைகலை, திட்ட நிருவாகம், நீட்சிமுறைச் செயல்முறைப் படுத்துதல், செயற்பாட்டு ஆராய்ச்சி, அட்டவணைப்படுத்துதல், புள்ளியியல் தரக் கட்டுப்பாடு, பொருளியல், நேரத் தொடர் பகுப்பாய்வு, கணிதப் பொறியியல், புள்ளியியல் பயன்பாடுகள் அடங்கியுள்ளன

SASI (Shugart Associates Systems Interface) : எஸ்ஏஎஸ் : (ஷுகார்ட் அசோசியேட்ஸ் சிஸ்டம்ஸ் இன்டர்ஃபேஸ்) : ஷிகார்ட் மற்றும் என்சிஆர் நிறுவனங்கள் 1981இல் தயாரித்த புறநிலை இடை முகப்புகள். இது 1986இல் ஏஎன்எஸ்ஐ மற்றும் எஸ்சிஎஸ்ஐ தரஅளவுகளுடன் உருவாக்கப்பட்டது.

SATAN (System Administrator's Tools for Analyzing Networks) : சாட்டன் : பிணையங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான பொறியமைவு நிருவாகியின் சாதனம். இது, பெரிதும் கவலையளிக்கும் ஒரு நிகழ்வுக்கான பாதுகாப்புச்சாதனம். இது இன்றும் பயன் படுகிறது.

satellite : செயற்கைக் கோள் ;துணைக் கோள் : செய்தித் தொடர்புச் சைகைகளை நெடுந்தூரம் அஞ்சல் செய்யக் கூடிய, பூமியைச் சுற்றிவரும் சாதனம்.

satellite channel : செயற்கைக்கோள் அலைவரிசை ; துணைக்கோள் அலைவரிசை : செயற்கைக்கோள் அனுப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படும் ஊர்தி அலைவெண்.

satellite communications : செயற்கைக்கோள் செய்தித் தொடர்பு; துணைக்கோள் செய்தித் தொடர்பு : உலகெங்கும் தகவல்களை அனுப்புவதற்காக சுழன்றுவரும் நுண்ணலை அஞ்சல்களைப் பயன்படுத்துதல்.

satellite computer : கிளைக் கணினி : துணைக்கோள் கணினி : 1. கூடுதல் கணினி. இது பொதுவாகச் சிறிய அளவில் இருக்கும். இது பெரிய கணினிப் பொறியமைவுக்கு உதவிகரமாக இருக்கும். இது கீழ் நிலை செயற் பணிகளைச் செய்தால், செய்முறைப்படுத்துதல் சிக்கனமாக இருக்கும். 2. ஒரு தொடர்பற்ற துணைக் கணினி.

satellite dish antennae : செயற்கைக் கோள் வட்டில் வானலை வாங்கி : இது ஒரு பிரதிபலிப்பி. இதன் மேற் பரப்பு ஒரு கோளம் போன்று உட் குழிவாக இருக்கும். இது செயற்கைக் கோள்களைக் கையாள்வதற்கு வட்டில் வானலை வாங்கியாகப் பயன்படுத்தப்படுகிறது.

satellite link : செயற்கைக்கோள் இணைப்பு : பூமியிலிருந்து ஒரு செய்தித் தொடர்புச் செயற்கைக் கோளுக்குச் சென்று மீண்டும் பூமிக்குத்

திரும்பி வரும் சைகை. இது, தரை வழி இணைப்புக்கு மாறுபட்டது.

satellite orbit : செயற்கைக்கோள் சுற்றுப்பாதை : செயற்கைக் கோள் சுற்றிவருகிற சுற்றுப்பாதை.

saturate : பூரிதமாக்குதல்; திகட்டுதல் : எந்த அளவு அதிகமாக ஈர்க்கும்படி செய்யமுடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக ஈர்க்கும்படி செய்தல். ஒரு வட்டில் அனைத்துத் தடங்களும் நிரப்பப்பட்டிருந்தால் அது பூரிதமாக்கப்பட்டுவிட்டது என்று பொருள்.

save : சேமி ; வேறிடச் சேமிப்பு : கணினியின் உள்முக நினைவகத்தில் அல்லாமல், ஒரு நாடா, வட்டு போன்ற வேறிடங்களில், மீண்டும் பயன்படுத்தும் வகையில் தகவல்களைச் சேமித்து வைத்தல்.

SBC : எஸ்பிசி : 'சிறிய வணிகக் கணினி ', ஒற்றை விசைப் பலகைக் கணினி என்று பொருள்படும். 'Small Business Computer ', 'Single Board Computer' என்ற ஆங்கிலத் தொடர்களின் குறும்பெயர்.

scalable : விரிவாக்கத்தக்க : வடிவளவிலும், தோற்றத்திலும் மாற்றம் செய்யத்தக்க.

scalability : தகடாகும் தன்மை : விரிவடையும் திறன் வளர்ச்சிக்கு உதவுவதற்கு நடப்பு நடைமுறைகளில் குறைந்த அளவு மாற்றத்தைக் குறிக்கிறது.

scalable font : விரிவாக்க எழுத்துரு: ஓர் ஆவணத்தைக் காட்சியில் காட்ட அல்லது அச்சிட வேண்டியிருக்கும் போது, தேவையான புள்ளி அளவுக்கு உருவாக்கப்படும் எழுத்து கணினியில் பல்வேறு எழுத்து உருக்களை சேமித்து வைப்பதை விரிவாக்க எழுத்து முகப்பு தவிர்க்கிறது.

scalable type face : விரிவாக்க எழுத்து முகம் : எந்த வடிவளவுக்கும் விரிவாக்கம் செய்யத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்ட எழுத்துகள், எண்கள், நிறுத்தற் குறிகள், குறியீடுகள் ஆகியவற்றின் ஒரு தொகுதி.

scalar processor : ஏறுமுகச் செய்முறைப்படுத்தி : ஒரே சமயத்தில் ஓர் இலக்கத்தில் கணிதக் கணிப்புகளைச் செய்யக் கூடிய கணினி. இது செயலகச் செய்முறைப்படுத்தியினின்றும் மாறுபட்டது.

scalar value : ஏறுமுக மதிப்பளவு : ஒரு செயல்முறைப்படுத்தும் மொழியில் ஏறுமுக மதிப்பளவு என அறிவிக்கப்பட்ட பகுபடா எண். இது ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் மதிப்பளவினைக் கொண்டிருக்கும். இது நெறியம் (vector) என்பதிலிருந்து வேறுபட்டது.

scalar variable : ஏறுமுக மாறி: செயல்முறைப்படுத்துவதில் ஒரேயொரு மதிப்பளவையுடைய ஒரு மாறியல் மதிப்புரு.

scale : அளவுகோல் : 1. இருக்கக் கூடிய சேமிப்பு அமைவிடத்திற்குள் பொருந்தும் வகையில் ஓர் எண்ணளவின் அளவினைச் சரியமைவு செய்தல். 2. ஒரு வரைகலைக் கோப்பினை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பொருந்தும்படி செய்வதற்காக அதன் வடிவளவை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மாற்றுதல். 3. வடிவளவு வரம்புகளுக்குள் பொருந்தும் வகையில் வரைகலைத் தகவல்களின் எண்ணளவைப் பெருக்குதல் அல்லது வகுத்தல்.

scale factor : அளவுகோல் காரணி; அளவு காரணி; அளவு மாற்றுக்காரணி: ஒரு கணக்கில் வரும் எண்ணளவுகளைப் பெருக்குவதற்கு அல்லது வகுப்பதற்கு, மற்றும் அவற்றை

வேண்டிய அளவுக்கு மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகள்.

scaling : அளவுமாற்றம் ; அளவிடல் : ஓர் உருக்காட்சியின் வடிவளவினை மாற்றும் செய்முறை. ஓர் உருக்காட்சியின் எல்லாப் பரிமாணங்களையும் நான்கு மடங்காக உருமாற்றம் செய்தல்.

scan : வருடு ; வருடல் ; நுண்ணாய்வு: 1. தருக்கமுறை வரிசை முறையில் புள்ளி புள்ளியாக ஆய்வு செய்தல். 2. ஒரு தகவல் கட்டமைப்பின் ஒவ்வொரு மைய முனையையும் பார்வையிடுவதற்கான அல்லது பட்டியலிடுவதற்கான பதின்முறை எண்மான நடைமுறை. 3. ஒரு கண்காட்சித் திரையில் ஓர் உருக்காட்சியை உருவாக்குவதற்குத் தேவையான செயற்பாடு.

scan area : வருடுப் பகுதி ; வருடல் பரப்பு ; நுண்ணாய்வுப் பகுதி : ஓர் ஒளியியல் எழுத்துப்படிப்பி மூலம் நுண்ணாய்வு செய்யப்படவிருக்கும் தகவல்களைக் கொண்டிருக்கிற ஓர் ஆவணப் படிவத்தின் பகுதி.

scan code : வருடல் குறியீடு ; நுண்ணாய்வுக் குறியீடு : விசைப் பலகையில் ஒரு குறிப்பிட்ட விசையை அழுத்தும்போது அல்லது விடுவிக்கும்போது, அதனால் உருவாக்கப்படும் எண்மானக் குறியீடு. இது 8048 விசைப் பலகை நுண்செய்முறைப் படுத்தியிலிருந்து 8255 புறநிலை இடைமுகப்புக்கு அனுப்பப்படும் ஒரு குறியீட்டு எண். இது, எந்த விசை அழுத்தப்பட்டிருக்கிறது அல்லது விடுவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கும். பிறகு, விசைப் பலகை நுண்ணாய்வுக் குறியீடுகளை ASCII குறியீடுகளாக மாற்றும்.

scan head : வருடல் தலைப்பு ; நுண்ணாய்வுத் தலைப்பு : இது நுண்ணாய்வு அல்லது தொலை நகலிச் செய்தியில் உள்ள ஒளியியல் உணர்வுச் சாதனம். இது நுண்ணாய்வு செய்யப்பட வேண்டிய உருக்காட்சியின் குறுக்கே நகர்த்தப்படும்.

scan line : வருடல் வரி ; நுண்ணாய்வு வரி : ஒரு வரைகலைச் சட்டகத்திலுள்ள பல இடை மட்ட வரிகளில் ஒன்று.

scanner : வருடி ; நுண்ணாய்வுக் கருவி ; சுட்டும் கருவி : குறிப்பிட்ட காட்சிச் சைகைகளை உணர்ந்தறியக் கூடிய ஓர் ஒளியியல் சாதனம்.

scanner channel : வருடி அலை வரிசை; வருடல் தடம்; நுண்ணாய்வு வழி : தனிவழிகளில் அனுப்பீடு செய்வதற்கான தகவல்கள் ஆயத்தமாக இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்கான சாதனம்.

scanning : வருடுதல் ; நுண்ணாய்வு செய்தல் : ஒரு கணினியின் தகவல் பட்டியல், ஒரு குறிப்பிட்ட நிபந்தனையை நிறைவேற்றியுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக அதிலுள்ள ஒவ்வொரு இனத்தையும் விரைவாக ஆய்வு செய்தல்.

scan path : வருடல் பாதை ; நுண்ணாய்வு வழி : ஒளியியல் நுண்ணாய்வில், படிக்கப்பட வேண்டிய தகவல்களை எங்கு கண்டறிய வேண்டுமோ அந்தத் தெளிவான பகுதி. நுண்ணாய்வு வழியின் அமைவிடமும், படிக்கவேண்டிய தகவல்களின் அளவும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் எந்திரத்தைப் பொறுத்திருக்கின்றன.

scan rate : வருடல் வீதம் ; நுண்ணாய்வு வீதம் : ஒரு நுண்ணாய்வுச் சாதனம் தனது காட்சிப் புலத்தில்,

ஒரு வினாடியில் எத்தனை தடவை மாதிரி எடுக்கிறது என்ற எண்ணிக்கை.

scanner scatter plot : வருடு பரவல் வரைவு; நுண்ணாய்வுப் பரவல் வரைவு: இரு தகவல் தொகுதிகளிடையிலான தோராய இடைத் தொடர்பினைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகை வரைபடம். தகவல் புள்ளிகள் வரைபடத்தில் தனித்தனிப் புள்ளிகளாகச் சிதறலாக அமைவதால் இது பரவல் வரைவு என்றும் அழைக்கப்படுகிறது. இவற்றின் உண்மையான அமைவிடங்கள் வரைபடத்தின் நிலையளவுருக்களினால் வரையறுக்கப்படுகிறது.

scatter diagram : பரவல் வரையுரு : சிதறல் வரையுரு : ஒவ்வொரு தகவல் புள்ளியிலும் புள்ளிகள் அல்லது வேறு குறியீடுகள் மூலம் வரையப்படும் வரை படம். இதனைச் சிதறல் வரைவு அல்லது புள்ளி வரைபடம் என்றும் கூறுவர்.

scatter plot : சிதறல் வரைவு ; பிரி புள்ளி : ஒவ்வொரு தகவல்முனையிலும் ஒரு புள்ளியை அல்லது சைகையினை வரைவதன் மூலம் இருமாறியல் அலைவெண் பகிர்மானத்தைக் காட்டுகிற வரைவு. சில சமயம், இரு அச்சுகளில் குறிக்கப்படும் மாறியல் மதிப்புருக்களுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு ஒரு வளைவு அல்லது ஒரு கோடு சேர்க்கப்படுகிறது. இதனைச் சிதறல் வரைபடம் என்றும் கூறுவர்.

scatter read/gather write : பிரித்துப் படி/சேர்த்து எழுது ; சிதறல் படிப்பு/சேகரித்து எழுது : ஓர் உட்பாட்டுப் பதிவேட்டிலிருந்து அண்டையில் இல்லாத சேமிப்புப் பகுதிகளில் வைப்பதை சிதறல் படிப்பு குறிக்கிறது. அண்டையில் அல்லாத சேமிப்புப் பகுதிகளிலிருந்து ஓர் ஒற்றை இயற்பியல் பதிவேட்டில் தகவல்களை வைப்பதைக் குறிக்கிறது.

SCDP : எஸ்சிடிபி : 'சான்றளிக்கப்பட்ட தகவல் செய்முறைப்படுத்துவோர் கழகம்' என்று பொருள்படும் 'Society of Certified Data' என்ற ஆங்கிலத் தொடரின் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

scheduling algorithm : அட்டவணை எண்மானம் ; திட்டமிடலும் நெறிமுறையும் : நிறைவேற்ற வேண்டிய பணிகளை அட்டவணைப்படுத்தும் முறை. இதில் முந்துரிமை, பணி வரிசையில் கால நீட்சி, கைவசமுள்ள வள ஆதாரங்கள் ஆகியவை இடம் பெற்றிருக்கும்.

scheduled report : காலமுறை அறிக்கை; குறிப்பிடப்பட்ட அறிக்கை; திட்டமிட்ட அறிக்கை : பயன்படுத்துவோருக்குச் சீரான கால இடை வெளிகளில் வாலாயத் தகவல்களை அளிப்பதற்காகத் தயாரிக்கப்படும் அறிக்கை.

scheduled maintenance : காலமுறைப் பராமரிப்பு ; திட்டமிட்ட பேணுதல் : கணினிப் பொறியமைவின் நம்பகத் தன்மையைப் பேணுவதற்காகக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அதனைப் பேணிவருதல்.

scheduler : பட்டியலிடுபவர் ; காலமுறைப்படுத்தி : செய்முறைப்படுத்துவதற்காகப் பணிகளைக் காலமுறைப்படுத்துகிற செயல்முறை.

scheduling : பட்டியலிடல்; காலமுறைப்படுத்தல் : 1. ஒரு பன்முகச் செயல் முறைப்படுத்தும் கணினிமையத்தில் அடுத்துவரும் செயல் முறைகள் எவை என்பதைத் தீர்

மானிப்பதற்கான பணி. 2. பகிர்ந்து கொள்ள முடியாத ஆதாரங்களை ஒதுக்கீடு செய்தல். எடுத்துக்காட்டு: மையச் செயலகம் அல்லது ஒருங்கிணைந்த மின்சுற்று வழிச் சாதனத்தை ஒரு குறிப்பிட்ட மணிக்கு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒதுக்கீடு செய்தல்.

schema : அமைப்பு முறைகள் ; (தகவல் தள நிர்வாக மொழிகளில் ஒன்று): தகவல் தளத்தின் கட்டமைப்பினை வரையறுப்பதற்காக தகவல் தள நிருவாகியினால் பயன்படுத்தப்படும் உயர்நிலைக் கணினி மொழி.

schematic : திட்ட முறையிலான ; அமைப்புப் படம் ; திட்டமுறை வரைபடம் : அமைப்புகளின் தொடர்புகளையும் அடையாளத்தையும் காட்டுகிற ஒரு மின்னணுச் சுற்று வழியின் வரைபடம்.

schematic symbols : திட்டமுறைச் சைகைகள்; திட்டமுறைக் குறியீடுகள் ; அமைப்புக் குறியீடுகள்: திட்ட முறை வரைபடங்களில் பயன்படுத்தப் படும் குறியீடுகள்.

Scheutz, George : ஷியூட்ஸ், ஜார்ஜ் (1785-1873) : இவர் 1834இல், சார்லஸ் பாபாஜின் எந்திரம் போன்ற ஓர் எந்திரத்தை உருவாக்கத் தொடங்கினார். இந்த எந்திரம் செய்து முடிக்கப்பட்டு, கணித அட்டவணைகளை அச்சடிக்கப் பயன்படுத்தப்பட்டது.

Schickhardt, Wilhelm (1592-1635) : ஷிக்ஹார்ட், வில்ஹெலம் (1592-1635) : ஜெர்மன் கணிதப் பேராசிரியர். கணிப்பு எந்திரத்தை 1624இல் கண்டுபிடித்தவர்

scientific applications : அறிவியல் பயன்பாடுகள் : மரபாக எண்களை அடிப்படையாகக் கொண்ட, முன்னேறிய பொறியியல் கணித அல்லது அறிவியல் திறம்பாடுகள் தேவைப்படுகிற பணிகள். வணிகப் பயன்பாடுகளின் விரிவான கோப்புக் கையாளும் திறம்பாடுகள் அரிதாகத் தேவைப்படும்.

scientific computer : அறிவியல் கணினி : அதிவேகக் கணிதச் செய்முறைப்படுத்ததலுக்கான தனி வகைக் கணினி.

scientific language : அறிவியல் மொழி : கணிதச் செய்முறைப்படுத்தலுக்காக வடிவமைக்கப்பட்ட செயல் முறைப்படுத்தும் மொழி. ALGOL, FORTRAN, APL போன்றவை இவ்வகையின. செய்முறைப்படுத்தும் மொழிகள் அனைத்தும் இந்த வகைச் செய்முறைப்படுத்தலை அனுமதித்தாலும், ஓர் அறிவியல் மொழியிலுள்ள கட்டளைகள், இந்த நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதை எளிதாக்குகின்றன.

scientific method : அறிவியல் முறை: ஒருவகைப் பகுப்பாய்வு முறைமையியல். இதில், உணர்ந்தறியும் நிகழ்வு, அந்த நிகழ்வின் காரண காரியங்கள் பற்றிய ஒரு முற்கோளை (Hypothesis) வகுத்தமைத்தல், பரிசோதனை மூலம் அந்த முற்கோளைச் சோதனை செய்தல், அந்தப் பரிசோதனைகளின் முடிவுகளைக் கணித்தறிதல், அந்த முற்கோள் பற்றி முடிவுகள் எடுத்தல் ஆகியவை உள்ளடங்கும்.

scientific notation : அறிவியல் குறிமானம் ; அறிவியல் குறியீடு : எண்கள் ஒரு குறிப்பிட்ட இலக்குப் பகுதியாக அல்லது பொருத்தமான 10-இன் வர்க்கத்தின் அல்லது விசைக் குறி எண்ணின் மடக்கையின் பதின்மான மடங்குகளாக எழுதப்படுகிற குறிப்

பான முறை. எடுத்துக்காட்டு: 0.32619 x 10^7 அல்லது 0.32619E+07 = 32,61,900.

scissoring : கத்தரித்தல் : பயன் படுத்துவோரின் குறிப்பிட்ட எல்லை களில் அமைந்துள்ள காட்சிச் சாதனத் தில் ஒரு வடிவமைப்பின் பகுதி களைத் தானாகவே அழித்துவிடுதல் அல்லது வெட்டிவிடுதல்.

SCM : எஸ்சிஎம் : கணினி மருத்துவக் கழகம் எனப் பொருள்படும் Society for Computer Medicine என்ற ஆங்கிலத் தொடரின் குறும்பெயர். இந்தக் கழகம், மருத்துவப் பயன்பாடுகளில் தானியக்க முறையைப் பயன்படுத்து வதை வலியுறுத்துவதற்காக மருத்து வர்களையும் கணினி அறிவியலாளர் களையும் ஒருங்கிணைக்கிறது.

scope : காட்சிப் பரப்பு ; நோக் கெல்லை; செயல் எல்லை: ஒரு மென் பொருள் செயல்முறையின் கட்டுப் பாட்டுப் பரப்பெல்லை. 1. ஊசல் மானி, பொதுக் காட்சி முனையம் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் CRT வகைத் திரை. 2. செயல்முறைப் படுத்துவதில், ஒரு செயல்முறைக் குள் உள்ள மாறியல் உருக்களின் காட்சித்திறன். 3. தகவல் தளத்தில் "அடுத்த 50", "கோப்பு முடிவுவரை யிலான நடப்புப் பதிவு" என்பன போன்ற பல்வேறு பதிவுகள்.

SCO open desktop : ஸ்கோ திறந்த நிலை மேசைப் பொறியமைவு : 386-களுக்கான பலர் பயன்படுத்தும், உள்ளபடியான நினைவக வரைபடச் செயற்பாட்டுப் பொறியமைவு. UNIX, XENIX, DOS, X-பலகணிப் (விண்டோஸ்) பயன்பாடுகள் ஆகிய வற்றை இயக்கும் SCO-சிலிருந்து வெளியிடப்பட்டது.

SCR : எஸ்சிஆர் : சிலிக்கன் கட்டுப் பாட்டு மின்மாற்றுக் கருவி என்று பொருள்படும். 'Silicon Controlled Rectifier' என்ற ஆங்கிலத் தொடரின் தலைப்பெழுத்துச் சுருக்கம். இது பெருமளவு நேர்மின்னோட்டத்தை அல்லது மின் அழுத்தத்தைக் கட்டுப் படுத்தப் பயன்படும் ஒரு மின் கடத்தாச் சாதனம். இதன் இயல்பு கள், பழைய வெற்றிடக் குழல் தைராட்ரானைப் போன்றவை. என வே, இதனைச் சிலசமயம் "தைரிஸ் டர்" (thyristor) என அழைக்கின்றனர்.

scrambler : உந்தியேறு கருவி : பூட்டு விசைக்காகத் தகவல்களைக் குறியீடு களாக்குவதற்கான சாதனம் அல்லது மென்பொருள் செயல்முறை.

scrambling : உந்தி ஏறுதல் : மறை நீக்கம் செய்ய முடியாதவாறு தகவல் களைக் குறியீடாக்குதல்.

scrap book : ஒட்டுப் புத்தகம்; கிறுக் கும் நூல்;வரைவு நூல் : ஆவணங் களில் அடிக்கடிப் பயன்படுத்துவதற் காக வாசகங்களையும் படங்களை யும் சேமித்து வைக்கும் பணி.

scratch : கீறு : விரைவாக எழுது : நினைவகத்திலிருந்து தகவலை நீக்குதல்.

scratch file : நீக்கக் கோப்பு; கீறல் கோப்பு; விரைவெழுத்துக் கோப்பு : ஒரு துணைச்சேமிப்புச் சாதனத்தில் ஏற்றப்பட்டுள்ள தகவல்கள் முழு வதையும் அல்லது பகுதியை படி யெடுத்து தகவல்களின் கணிசமான கோப்புகளைச் செய்முறைப்படுத் தும்போது உருவாக்கப்படும் தற் காலிகக் கோப்பு.

scratchpad : குறிப்பு அட்டை; கீற்றுத் திண்டு; கீறல் பட்டை; விரைவெழுத் துக் களம் : சில கணினிகளில் பதி வேடுகளுக்குப் பதிலாகப் பயன் படுத்தப்படும் சிறிய துரிதச் சேமிப்

பகம். இதனைப் புதை நினைவகம் என்றும் கூறுவர்.

scratchpad storage : அழிப்புத் திண்டுச் சேமிப்பகம்; விரைவெழுத்து சேமிப்பகம் : தகவல்களைத் தற்காலிகமாகச் சேமித்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு நினைவக இடம். அழிப்புத்திண்டு நினைவகங்கள், அதிவேக ஒருங்கிணைந்த சுற்று வழிகள் ஆகும்.

scratch tape : அழிப்பு நாடா ; விரைவெழுத்து நாடா : அழித்துவிட்டு மீண்டும் பயன்படுத்தத்தக்க காந்த நாடா.

screen : திரை : தகவல்கள் காட்சியாகக் காட்டப்படும் பரப்பு. எடுத்துக் காட்டு: ஒளிப்பேழைக் காட்சித் திரை.

screen capture : திரைப் பிடிப்பு : தற்போதுள்ள நேரடித்திரை உருக் காட்சியை ஒரு வாசகத்திற்கு அல்லது வரைகலைக் கோப்புக்கு மாற்றுதல்.

screen dump : திரைச் சேமிப்பு ; திரைத் திணி : தற்போது ஒரு காட்சித் திரையில் தோன்றும் தகவலை ஒரு அச்சுப் பொறிக்கு அல்லது வேறு வன் படிச் சாதனத்திற்கு மாற்றுகிற செய்முறை.

screen editing : திரை திருத்தம்.

screen font : திரை எழுத்துரு : நேரடித் திரைக்காட்சியில் பயன்படுத்தப் படும் எழுத்து உரு. WYS/WYG பொறியமைவுகளில் அச்சடிப்பு எழுத்து உருக்களுக்கு இயன்றவரை நெருக்கமாக இருக்கவேண்டும். அச்சடிப்பு எழுத்து உருவுக்கு மாறுபட்டது.

screen generator : திரை உருவாக்கி : தனியாக உருவாக்கும் திரைக் காட்சியை ஏற்படுத்த பயன்படும் சிறப்புப் பயன்பாட்டு ஆணைத் தொடர்.

screen memory : திரை நினைவகம்.

screen overlay : திரைமேல் விரிப்பு : 1. காட்சித் திரையில் கூசொளியைக் குறைக்கின்ற தெளிவான நுண்ணிய வலைத்திரை. 2. திரையிலுள்ள காட்சிப் பொத்தான்களைத் தொடுவதன் மூலம் பயனாளர் கணினிக்கு ஆணையிடுவதற்கு அனுமதிக்கிற தெளிவான தொடுசேணம். 3. திரையில் காட்சியாகக் காட்டப்படும் தற்காலிகத் தகவல் பலகணி.

திரை மேல் விரிப்பை நீக்கியதும் மேல் விரிப்பு செய்யப்பட்ட திரையின் பகுதி மீட்கப்படுகிறது.

screen position : திரை இடநிலை : ஒரு காட்சித் திரையில் வரைகலைத் தகவல்களின் அமைவிடம்.

screen prompt : திரை நினைவூட்டு: பயனாளர் துல்லியமாகவும், முழுமையாகவும் தகவல்களை உட்பாடு செய்வதற்கு உதவுகிற ஒளிக் காட்சித் திரையின் மீது காட்சியாகக் காட்டப் படும் ஓர் அறிவுறுத்தம்.

screen saver : திரைக்காப்பு : பல கணினிகளில் ஒரு குறிப்பிட்ட நேர அளவுக்குச் சுட்டு நுண்பொறியை



திரைக் காப்பு (Screen saver)

நகர்த்தாமல் அல்லது ஒரு விசைப் பலகை விரற்கட்டையை அழுத்தாமல் இருக்கும்போது திரையில் தோன்றும் ஒரு நகரும் படம் அல்லது தோரணி.

screen size : திரை வடிவளவு ; திரை யளவு : ஓர் ஒளிப்பேழைக் காட்சித் திரை காட்டக் கூடிய தகவல்களின் அளவு. திரைகளைத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப்போல் மூலை விட்டமாகவோ, கிடைமட்ட மற்றும் கிடைமட்ட புள்ளிகளின் அல்லது எழுத்துகளின் எண்ணிக்கையாகவோ அளவிடலாம்.

screen update : திரைப் புத்தாக்கம் ; திரைப் புதுப்பி : புதிய தகவல்களைப் பிரதிபலிப்பதற்காகத் திரையின் உள்ளடக்கங்களை மாற்றும் செய்முறை.

scripsit : எழுத்து அடை : ரேடியோ ஷாக் TRS-80 நுண்கணினிப் பொறியமைவுகளில் சொற்களைச் செய்முறைப்படுத்துவதற்கெனப் பயன்படுத்தப்படும் மென்பொருள் தொகுதி.

scripts : எழுத்துகள் : நிகழ்வுகளின் வரிசை முறையினைக் குறிக்கும் ஸ்கீமா போன்ற கட்டமைப்பு.

scroll arrow : சுருள் அம்பு : மேலும், கீழும், இடமும் வலமும் நகர்த்திச் சுட்டிக்காட்டுகிற உருவம். இணையான திசையில் திரையைச் சுருட்டுவதற்காக இது இயக்கப்படுகிறது.

scroll : நகர்த்து ; உருட்டு.

scrollable field : சுருட்டத்தக்க புலம்: ஒரு சிறிய காட்சிப் பரப்பில் பெருமளவுத் தகவல்களைக் காட்சியாகக் காட்டுவதற்கு அல்லது தொகுப்பதற்கு அனுமதிப்பதற்காகச் சுருட்டக்கூடிய திரையிலுள்ள குறுகிய வரி.

scrolling : திரை சுழலல் ; சுருளாக்கம்; சுழற்றுதல் : ஓர் ஒளிப்பேழைக் காட்சியில் தகவல்களை நகர்த்துதல். வாசகத்தில் விரும்பிய இடம் வரும் வரையில் வாசகம் திரும்பத் திரும்ப நகர்த்தப்படுகிறது. சுருள் மேல் நோக்கி நகர்ந்தால், திரையின் அடிப்பகுதியில் ஒரு புதிய வரி தோன்றும்; உச்சிப்பகுதியில் பழைய வரி மறையும். தகவல்களை வலமிருந்து இடமும், இடமிருந்து வலமும் கீழ் நோக்கியும் நகர்த்தும் திறனையும் இது குறிக்கிறது.

scroll lock : திரைச்சுழல் பூட்டு.

SCS : எஸ்சிஎஸ் : 'கணினி தூண்டுதல் கழகம்' என்று பொருள்படும் 'Society for Simulation' என்ற ஆங்கிலத் தொடரின் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

S-curve : எஸ்-வளைவு : ஆட்களுக்கெதிராக நேரத்தை வரைகிற வளைவு. இது ஆதார ஒதுக்கீட்டினைச் சமனப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. ஆதாரங்களைச் சீரமைவு செய்வதற்கு ஆள்பலத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்கு இது உதவுகிறது.

scuzzy : ஸ்கஸ்ஸி ; SCSI-க்கு மற்றொரு பெயர்.

seamless integration: இடைவெளியற்ற ஒருங்கிணைப்பு ; தற்போதுள்ள பொறியமைவுடன் இழைவாகப் பணிபுரிகிற ஒரு புதிய பயன்பாடு, வாலாயம் அல்லது சாதனம். இதன் மூலம் புதிய அம்சங்களைத் தூண்டிவிடலாம்; சிக்கல்களைக் கண்டறியப் பயன்படுத்தலாம்.

search : தேடுதல் ;தேடு ;தேடல் : ஒரு குறிப்பிட்ட நேரம் அல்லது பகுதி எண் போன்ற விரும்பிய பண்பினை அல்லது முன் நிருணயித்த வகைப்பாட்டினைக் கொண்டிருக்கின்ற ஓர் இனத்தொகுதியை தேடிக் கண்டறிதல்.

search and replace : தேடுதல் மற்றும் மாற்றமைத்தல் ;தேடி மாற்றியமை;

தேடி மாற்று : ஒரு குறிப்பிட்ட எழுத்து வரிசை முறையைக் கண்டறிந்து அதற்குப் பதிலாக ஒரு புதிய வரிசை முறையை மாற்றுகிற மென்பொருள். இது சொல் செய்முறைப் படுத்தும் பயன்பாடுகளில் முக்கிய மானது.

search argument: தேடும் வாதமுறை; ஓர் அட்டவணைத் தேடுதலில் இணைப்பு செய்யக்கூடிய தகவல் இனம்.

search engine : தேடு பொறி: இணையத்தில் (Internet) நாம் விரும்பும் தகவலை தேடித் தரும் மென்பொருள்.

search key : தேடும் விசைப்பலகை விரற்கட்டை ; தேடும் விசை ; தேடு சாவி : ஒரு தேடுதலை நடத்தும் நோக்கத்திற்காக ஒவ்வொரு இனத்தின் குறிப்பிட்ட பகுதிகளுடன் ஒப்பிடப் படும் தகவல்கள்.

search memory: தேடல் நினைவகம்.

seasonally adjusted: பருவமுறைச் சரியமைவு ; முந்திய போக்குகளை மறைக்கிற அல்லது மாற்றமைவு செய்கிற பருவமுறைக் காரணிகளை அனுமதிப்பதற்குச் சரியமைவு செய்யப்பட்ட ஒரு தகவல் தொகுதியை விவரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடர் .

second: வினாடி; நொடி: மெட்ரிக் முறையில் கால அளவின் அடிப் படை அலகு. பழக்கமான ஆங்கில முறையில் பயன்படுத்தப்படுகிறது.

secondary channel: துணைநிலை அலைவரிசை ; செய்தித் தொடர்களில், முதன்மை அலைவரிசையிலிருந்து பெறப்பட்ட ஒரு துணை அலைவரிசை. இது, குறை கண்டறிய அல்லது மேற்பார்வை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இது தகவல் செய்திகளைக் கொண்டு செல்வதில்லை.

secondary data: துணைநிலைத் தகவல்: இது மற்றொரு நோக்கத்திற்காக ஏற்கெனவே சேகரிக்கப்பட்டது. இப்போது ஒரு தகவல் ஆதாரமாகப் பயன்படுத்தப்படுவது. கட்டுரைகள், செய்தியிதழ்ச் செய்திகள் போன்றவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் இதில் அடங்கும்

secondary index: துணைநிலை வரிசை முறை: ஒரு தகவல் கோப்புக்காக வைத்துவரப்படும் வரிசை முறை. ஆனால், கோப்பின் தற்போதைய செய்முறைப்படுத்தும் வரிசையைக் கட்டுப்படுத்த இது பயன்படுத்தப் படுவதில்லை.

secondary key: துணை விரற்கட்டை; இரண்டாம் நிலை விசை; துணைச் சாவி;ஒரு கோப்பிலுள்ள பதிவேடுகளை அணுகுவதற்குப் பயன்படுத்தப்படும் புலம். இது தனிச் சிறப்பானதாக இருக்க வேண்டியதில்லை.

secondary memory : துணைநிலை நினைவகம்.

secondary storage: துணைநிலைச் சேமிப்பு ; இரண்டாம் நிலை நினைவகம் : ஒரு கணினியின் அடிப்படை உள்முக நினைவகத்தின் குறையை நிரப்புகிற நினைவகச் சாதனம். இதனைத் துணைச் சேமிப்பு என்றும் கூறுவர். இது தலைநிலைச் சேமிப்பு என்பதற்கு மாறானது.

secondary storage device : துணை நிலைச்சேமிப்புச் சாதனம்.

second generation computers : இரண்டாம் தலைமுறைக் கணினிகள்; கணினிகளின் தொழில் நுட்ப வளர்ச்சியில் இரண்டாம் தலை

முறையைச் சேர்ந்த கணினிகள். இதில் வெற்றிடக் குழாய்க்குப் பதில் மின்மப் பெருக்கி (டிரான்சிஸ்டர்) பயன் படுத்தப்பட்டது. இவ்வகைக் கணினிகள் 1959 முதல் 1964 வரை ஆதிக்கம் பெற்றிருந்தன. பிறகு இவற்றுக்குப் பதில் ஒருங்கிணைந்த மின்சுற்று நெறியைப் பயன்படுத்தும் கணினிகள் பயனுக்கு வந்தன.

second source: துணை ஆதாரம் ; இரண்டாம் ஆதாரம்; இரண்டாம் மூலம் : மற்றொரு உற்பத்தியாளரின் உற்பத்திப் பொருளுடன் பரிமாற்றம் செய்து கொள்ளக்கூடிய ஒரு பொருளைத் தயாரிக்கும் உற்பத்தியாளர்.

secret codes: இரகசியக் குறியீடுகள்.

sector: வட்டக்கூறு ;பிரிவு; பகுதி : இருபுறமும் ஆன எல்லையுடைய வட்டக்கூறு. ஒரு வட்டு மேற்பரப்பு இத்தகைய வட்டக்கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.



வட்டப் பிரிவு (Sector)

sector interleave: வட்டக்கூறு இடை இணைப்பு ; ஒரு நிலைவட்டு வட்டக்கூறு இலக்கமிடுதல். ஒன்றுக்கு ஒன்று (1: 1) என்ற இடை இணைப்பு வரிசைமுறையில் அமைந்தது: 0, 1, 2, 3 முதலியன. இரண்டுக்கு ஒன்று (2:1) என்ற இடை இணைப்பு அடுத்த வட்டக்கூறு. ஒவ்வொன்றும் இரண்டாவதாக இருக்கும் வகையில் வட்டக்கூறுகளை மாறுபட அமைக்கிறது. 0,4,1,5,2,6,3,7. ஒன்றுக்கு ஒன்று (1:1) என்ற இடை இணைப்பில், வட்டக்கூறிலுள்ள தகவல் படிக்கப்பட்ட பிறகு, இரண்டாவது வட்டக்கூறினைப் படிக்கும் அளவுக்கு வட்டுக்கட்டுப்படுத்தி விரைவாக இயங்க வேண்டும். இல்லையெனில், இரண்டாம் வட்டக்கூறின் தொடக்கம், எழுது/படிப்பு முனையைக் கடந்து சென்று விடும்; மீண்டும் அது முனையின் கீழ் வருவதற்கு மறுபடியும் ஒரு சுற்று சுற்றிவர வேண்டும். அதுபோதிய வேகத்தில் இயங்காவிட்டால், ஒரு 2:1 அல்லது 3:1 இடை இணைப்பு, ஒரே சுழற்சியில் வட்டக் கூறுகள் அனைத்தையும் படிப்பதற்கு அதற்குக் கால அவகாசம் கொடுக்கிறது.

sector method : வட்டக் கூறுமுறை ; பிரிவு முறை: ஒரு வட்டின் மேற்பரப்பினைக் குவிய வட்டக் கூறுகளாகப் பகுக்கக் கூடிய, நெகிழ் வட்டுகளுடன் பயன்படுத்தப் படும் வட்டு முகவரியிடும் முறை.

secure kernel : காப்புக் கருமூலம் ; காப்புக் கரு : ஒரு பொறியமைவுச் செயல்முறையின் பாதுகாக்கப்பட்ட கூறு.

security : காப்புநிலை ; பாதுகாப்பு ; காப்புக் கட்டுப்பாடுகள் ; காப்பு : சேதமடைதல், திருட்டு அல்லது திரிபடைதலைத் தடுக்கும் வெற்றிகரமான முயற்சிகளின் விளைவாக, வன்பொருள், மென்பொருள்

அல்லது தகவல் மூலம் பெறப்படும் நிலை.

security control : காப்புக் கட்டுப்பாடு.

security files : காப்புக் கோப்புகள் ; பாதுகாப்புக் கோப்புகள் : முக்கியமானதும் இன்றியமையாததுமான தகவல்களுக்காக துணையாதரவுக் கோப்புகள்.

security monitor : பாதுகாப்புக் கண்காணிப்பி : ஒரு கணினிப் பொறியமைவின் பயன்பாட்டைக் கண்காணித்து, அதன் ஆதாரங்களை அனுமதியின்றி, மோசடியாக, அழிக்கும் வகையில் பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கும் ஒரு மென்பொருள் தொகுதி.

security programmes : காப்புச் செயல்முறை ; பாதுகாப்பு ஆணைத்தொடர் ; காப்புநிரல் : கோப்புகளிலுள்ள தகவல்களை அணுகுவதைக் கட்டுப்படுத்தி, முனையங்களையும், பிற சாதனங்களையும் பயன்படுத்த அனுமதியளிக்கிற செயல்முறை.

security specialist : காப்பளிப்பு வல்லுநர்; பாதுகாப்பு வல்லுநர் : கணினி மையத்தின் பாதுகாப்புக்கும், தகவல் ஆதாரங்களின் தருக்க முறைப் பாதுகாப்புக்கும் பொறுப்பானவர்கள்.

seed : வித்து; விதை; மூல எண்: போலிக் குறிப்பின்மை எண் உருவாக்கியைத் தொடங்குவதற்குப் பயன்படுத்தப்படும் மாறி. முதல் எண்ணை உருவாக்கப் பயன்படுகிறது. பின்வரும் எண்கள் அனைத்தும் முந்திய பலன்களை அடிப்படையாகக் கொண்டவை.

seek : தேடு; கண்டறி; நாடல்: ஒரு நேரடி அணுகுச் சாதனத்தை ஒரு குறிப்பிட்ட அமைவிடத்தில் நிலைப்படுத்துவதற்கான அணுகுச் செயல்முறை.

seek time: கண்டறியும் நேரம்; தேடு காலம்: ஒரு நேரடி அணுகு சேமிப்புச் சாதனத்தின் அணுகு செயல்முறையினை ஒரு குறிப்பிட்ட நிலையில் நிலைப்படுத்துவதற்குத் தேவைப்படும் நேரம். எடுத்துக்காட்டு : படிப்பு/எழுதுத் தலைப்பினை ஓர் இயக்கியை வட்டின் குறிப்பிட்ட தடத்தின் மீது நிலைப்படுத்துவதற்குத் தேவைப்படும் கால அளவு.

segment : வெட்டுக் கூறு ; பிரிவு ; பகுதி : 1. ஒரு செயல்முறையைப் பல கூறுகளாகப் பகுத்து, கூறுகள் உள்முகச் சேமிப்பிலும், மற்றக் கூறுகள் துணைச் சேமிப்பிலும் தங்கியிருக்கும்படி செய்தல். ஒவ்வொரு கூறிலும், மற்றொரு கூறுக்குத் தாவுவதற்கான அல்லது மற்றொரு கூறினை உள்முகச் சேமிப்புக்கு வரவழைப்பதற்கான ஆணைகள் அடங்கியிருக்கும். 2. ஒரு மேல்நிலைச் செயல்முறையை நிறைவேற்றும்போது ஒரு தருக்க முறை அலகாக ஏற்றக்கூடிய மிகச்சிறிய செயல்முறை அலகு. 3. தொலைத் தொடர்புக் களத்தைப் பொறுத்த வரையில், குறிப்பிட்ட அளவுள்ள இடைத்தடுப்பில் அடக்கக்கூடிய ஒரு செய்தியின் பகுதி.

segmentation: வெட்டுக் கூறாக்குதல்; பிரித்தல் ; பகுதியாக்கல் : கணினிச் செயல்முறையினைத் தருக்கமுறை மாறியல் நீட்சிப் பகுதிகளாகப் பகுப்பதற்கான உத்தி.

segmented address space : கூறுபாட்டு முகவரி இடவெளி : இது முகவரிப்படுத்தும் நினைவகம். இதில், ஒரு கூறுபாடு அல்லது ஆதாரம், எண் அதற்குச் சேர்க்கப்படும் ஒரு மாற்று மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு எட்டியலும் குறிக்கப்படுகிறது.

segmented bar charts : வெட்டுக் கூறாக்கிய பட்டை வரைபடம்; பிரிக் கப்பட்ட பட்டை வரைபடம் ; பகுதி யாக்கிய பட்டை வரைபடம் : ஓர் ஒட்டு மொத்தத்தின் கூறுகளைக் குறிப்பதற்கு ஒன்றன் மேல் ஒன்றாக நிலைப்படுத்திய இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட வெட்டுக் கூறுகளினாலான பட்டை வரை படம். இது குவிய வரைபடத்தைப் போன்றது. இதில் ஒட்டுமொத்தத் தையும் அதன் உறுப்புப் பகுதி களையும் ஒப்பீடு செய்வதற்கேற்ப பட்டைகள் பல்வேறு வடிவளவு களில் அமைந்திருக்கும்.

segment register : கூறுபாட்டுப் பதிவகம் : மையச் செயலகத்திலுள்ள நான்கு பதிவகங்களில் ஒன்று. இது, நினைவகக் கூறுபாட்டில், தொடக்க நிலைகளைச் சுட்டிக்காட்டுகிறது. பதிவகத்திலுள்ள மதிப்பளவினை இது தானாகவே 16 ஆல் பெருக்கி, 1 மீமிகு எட்டியல் மையச் செயலகத் தில் உள்ள 65535 16-எட்டியல் முகவரி இடைவெளி எல்லைகளில் ஒன் றினை சுட்டிக் காட்டுகிறது. கூறு பாட்டுப் பதிவகங்களின் பெயர்கள். குறியீட்டுக் கூறுபாடுகள் (CS); தகவல் கூறுபாடு (DS); அடுக்குக் கூறு பாடு (SS); மிகைக் கூறுபாடு (ES).

segment value : கூறுபாட்டு மதிப் பளவு : ஒரு நினைவகத்தில் 16-எட் டியல் அலகுகளிலுள்ள நினைவுப் பதிவினைக் குறிப்பதன் மூலம் ஒரு இடநிலையை வரையறுத்துக் கூறும் ஓர் எண். இது பத்தி எண் என்றும் கூறப்படும்.

sel (SELect) : எஸ்சிஎல் (செலெக்ட்): அச்சுப் பொறி மாற்றி மாற்றித் தொடு நிலைக்கும் விடுநிலைக்கும் எடுத்துச் செல்லும் அச்சுப் பொறி.

select : தெரிவு ; தேர்ந்தெடு ; தெரிவு செய் : பயனாளரின் குறிப்பிட்ட வரையளவுகளுக்கேற்ப தகவல் தளத் திலிருந்து பதிவேடுகளின் தொகுதி யைத் தெரிவு செய்தல். எடுத்துக் காட்டு: 1986-க்கு மேற்பட்ட ஆண்டுக் கான பதிவேடுகள் அனைத்தையும் தெரிவுசெய்தல்.

selection : தெரிவு செய்தல் ; தேர்வு : மாற்று முறைகளிலிருந்து தேர்ந் தெடுத்தல்.

selection sort : தெரிவுப் பிரிப்பி ; தேர்ந்து பிரித்தெடு ; தேர்வு வரிசை : ஒரு பட்டியலிலுள்ள மிகப் பெரிய அல்லது மிகச் சிறிய மதிப்பளவு களைத் தேர்வு செய்து பட்டியலைச் சுருக்குவதற்கான பிரிப்பி.

selection structure: தெரிவுக் கட்ட மைப்பு ; ஒரு கட்டமைப்புப் பாய்வு வரைபடத்தின் மூன்று அடிப்படைக் கட்டமைப்புகளில் ஒன்று. சில நிபந் தனைகளின் பேரில் இருமாற்று வழி களுக்கிடையே தேர்வு செய்ய உதவு கிறது. இதனை 'முடிவுக் கட்ட மைப்பு' என்றும் கூறுவர்.

selective calling: தெரிவுப் பணி ; செய்தித் தொடர்புகளில் இணையத் திலுள்ள எந்த நிலையம் செய்தி யைப் பெற வேண்டும் என்பதைத் தெரிவிப்பதற்கு அனுப்பீட்டு நிலை யத்திற்குள்ள திறன்.

selector channel: தெரிந்தெடுப்பு வழி; தேர்ந்தெடுக்கும் வழித்தடம்: தெரிவுத் தடம் : சில வகைக் கணினி பொறி யமைவுகளில் உள்ள உட்பாட்டு/ வெளிப்பாட்டு வழி. இதன் மூலம் தகவல்களை ஒரு புறநிலை சாதனத் தில் மட்டுமே ஒரே சமயத்தில் தகவல்களை ஏற்றவும் அதிலிருந்து மாற்றவும் செய்யலாம். இது 'பன்முக வழி' என்பதிலிருந்து வேறுபட்டது.

selector pen: தெரிவுப் பேனா ; ஒளிப் பேனா என்பதும் இதுவும் ஒன்று.

selectric typewriter: தெரிவுத் தட்டச்சு; 1961இல் புகுத்திய தட்டச்சுப் பொறி. இதில் முதன்முதலில் ஒரு கால்ஃப் பந்து அளவுக்கான அச்சுத் தலைப்பு பயன்படுத்தப்பட்டது. இது, காகித ஊர்தியை அச்சுப் பொறியின் குறுக்கே நகர்த்துவதற்குப் பதிலாக காகிதத்தின் குறுக்கே நகர்ந்தது. இது விரைவாக, உலகில் மிகவும் புகழ் பெற்ற தட்டச்சுப் பொறியாக விளங்கியது.

selenium : செலனியம் ;ஒரு மின் கடத் தாப் பொருள். இது சிலிக்கன் போன்ற பண்பியல்புகள் கொண்டது. எனினும், இதன் விசையியக்க வேகம் சிலிக்கனை விடக் குறைவு.

self adapting : தானே மாறும் ; தன் தகவமைவு; தன்வயத்தகவமைவு : சுற்றுச் சூழலுக்கேற்ப தனது செயல்முறைப் பண்புகளை மாற்றியமைத்துக் கொள்ளும் திறன் .

self - booting: தன் உந்தல் ; செயற் பாட்டுப் பொறியமைவினைத் தானாகவே இயக்குவிக்கும் செயல்.

self-checking code: சுயசோதனை குறியீடு ; தன் வயச் சரிபார்ப்புக் குறிமானம்.

self-clocking : தன் காலப் பதிவு; பதிவு செய்யப்பட்ட குறியீட்டின் ஒரு பகுதியாகக் கடிகாரத் துடிப்புகள் அமையும் வகையில் ஒரு காந்த ஊடகத்தில் எண்மானத் தகவல்களைப் பதிவு செய்தல். இதில், நேரக் கணிப்புக்குத் தனிக் கடிகாரம் தேவையில்லை. தன் காலப்பதிவு உத்தியில் பொதுவாக நிலைக்குறியீட்டு முறை பயன்படுத்தப்படுகிறது.

self compiling compiler: தானே தொகுக்கும் தொகுப்பு ; தன் வயத் தொகுப்பு : தொகுப்பானின் சொந்த ஆதார மொழியில் எழுதப்பட்டுள்ள, தானாகவே தொகுக்கும் திறனுள்ள ஒரு தொகுப்பி.

self complementing code : தானே குறைநிரப்புக் குறியீடு ; தானே ஈடு கட்டும் குறியீடு ; தன்வயத் திருத்துக் குறிமானம் : எடையேற்றிய இரும எண் ஒன்றின் குறைநிரப்பானது, பதின்மக் குறிமானத்தில் எண் ஒன்பதின் குறை நிரப்பாக இருக்கும் பண்பினைக் கொண்ட குறியீடு.

self correcting code : தானே திருத்தும் குறியீடு ; ஒரு எண்மானக் குறியீட்டு முறை. இதில் பிழைகள் மேற்செல்வது தானாகவே கண்டுபிடிக்கப் பட்டுத் திருத்தப்படுகின்றன. பிழை திருத்தும் குறியீடு என்பதும் இதுவும் ஒன்றே.

self documenting code: தன் ஆவணமாக்கக் குறியீடு ; செயல் முறை எழுதியவர் அல்லது இன்னொரு செயல்முறையாளர் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய செயல் முறை அறிக்கைகள். 'சி'-மொழியை விட 'கோபால்' அதிகத் தன் ஆவணக் குறியீடுகளை அளிக்கிறது.

self-extracting file : தன் விரிவாக்கக் கோப்பு: ஒரு நிறைவேற்றப்படத் தக்க செயல்முறையாக மாற்றப் பட்டுள்ள செறிவாக்கம் செய்யப் பட்ட ஒன்று, அல்லது அதற்கு மேற் பட்ட கோப்புகள். இது இயக்கப் படும்போது தன் உள்ளடக்கங்களை விரிவாக்கம் செய்கிறது.

self test: தன் சோதனை: அச்சுப் பொறி செயற்பாட்டினைச் சோதனை செய்யும் முறை. இந்தச் சோதனையில் அச்சுப்பொறி தனது எழுதப் படிக்க மட்டுமேயான நினைவகத்

தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள எழுத்துகளை அச்சடிக்கிறது.

self validating: தானே செல்லுபடியாக்கும் குறியீடு ; சுய மதிப்பீட்டுக் குறியீடு ; தன் வயச் செல்லுபடிக் குறிமானம்: தனது சொந்தப் பிழையின்மை யினைத் தீர்மானித்து, அதன்படி மேற்செல்கிற குறியீடு.

semantic error : சொற்பொருட்பிழை: செயல்முறைப்படுத்துவதில் செல்லத்தக்கதாக இராத தருக்க முறையில் எழுதுதல்.

semantic gap : சொற்பொருள் இடைவெளி; தகவல் அல்லது மொழிக் கட்டமைப்புக்கும் இயல்பு உலகுக்குமிடையிலான வேறுபாடு.

semanting net: சொற்பொருள் வலை; மனித அறிவை ஒரு வலை போன்ற கட்டமைப்பாக அமைப்பாக்கம் செய்கிற ஓர் தகவல் உருவாக்க முறை. இதில் மையமுனைகள், பொருள்கள், கோட்பாடுகள், நிகழ்வு அடங்கியிருக்கும்; இவை இணைப்புகளின் தன்மையைக் குறிப்பிடுகிற இணைப்புகளால் இணைக்கப்பட்டிருக்கும்.

semantics : சொற்பொருளியல் ; மொழி வடிவங்களில் சொற்களின் பொருள் பற்றி ஆராயும் அறிவியல். சைகைகளுக்கும் அவை குறிப்பிடும் பொருள்களுக்கிடையிலான தொடர்புகள் பற்றி ஆய்வு செய்தல்.

semaphores: அணுகுமுறைக் குறிப்பு; ஒருங்கியல்பு வரையுருக்கள்: ஒரே சமயத்தில் இயங்கி தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட செயல்முறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒருங்கு நிகழ்வாக்க வரையுருக்கள்.

semiconductor : மின் கடத்தாப் பொருள் ; அரைக்கடத்தி ; குறை கடத்தி: தாழ் வெப்பநிலையிலும் தூயநிலையிலும் மின் கடத்தாத திண்மப் பொருள். ஜெர்மேனியம், சிலிக்கன் போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை. இதிலிருந்து ஒருங்கிணைந்த மின்சுற்று வழிகள் தயாரிக்கப்படுகின்றன.

semiconductor device: மின்கடத்தாச் சாதனம் ; அரைக்கடத்திச் சாதனம்; குறைகடத்திச் சாதனம் : சிலிக்கன், ஜெர்மேனியம் போன்ற தூயநிலையிலுள்ள படிகப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படும் மின்னியல் பொருள். இவை மின்னணு நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் அளவுக்கு கடத்திகளோ காப்புப் பொருள்களோ அல்ல. தூய உலோகத்தின் படிகக் கட்டமைவில் ஆர்செனிக் போன்ற மாசு அணுக்கள் உட்செல்லுமானால் மின்னியல் சமநிலை சீர்குலைகிறது. நேர் மின் அல்லது எதிர்மின்னேற்ற ஊர்திகள் உண்டாகின்றன. அப்போது டயோடுகளும் மின்மப் பெருக்கிகளும் புகுத்தப்படுகின்றன.

semiconductor field: அரைக்கடத்திப் புலம்.

semiconductor memory : அரைக் கடத்தி நினைவகம்.

semiconductor secondary storage (RAM disk) : அரைக் கடத்தி துணை நிலைச்சேமிப்பகம் (வட்டு): கணினியின் அரைக் கடத்திச் சேமிப்பகத்தின் பகுதியை ஒரு வட்டு இயக்கியாக இருந்தாற்போன்று செயற்படச் செய்கிற முதன்மைச் செய்முறைப் படுத்தியாகவும், செயற்பாட்டு பொறியமைவாக அமைக்கிற மென் பொருள் மற்றும் கட்டுபாட்டு சுற்று

நெறியைப் பயன்படுத்துகிற ஒரு முறை.

semiconductor storage : அரைக் கடத்திச் சேமிப்பகம் ; ஓர் ஒருங்கிணைந்த மின்சுற்றுவழிச் சிப்புவில் திடநிலை மின்னணு அமைப்பிகளாக அமைந்துள்ள சேமிப்புப் பொருள்களைக் கொண்டுள்ள நினைவகச் சாதனம்.

semi instructured decisions : அரை குறை முடிவுகள்; ஒரு பகுதி முன்னரே குறித்து வைக்கப்பட்டிருந்து, ஆனால் ஒரு திட்ட வட்டமான பரிந் துரைத்த முடிவுக்கு வழி செய்யாத நடைமுறைகள் அடங்கிய முடிவுகள்.

semirandom access : அரை தற்செயல் அணுகல் ; பகுதி நேரடி அணுகல் ; பாதி குறிப்பற்ற அணுகு முறை: விரும்பிய இனத்தைத் தேடுவதில் ஒருவகை நேரடி அணுகுமுறையை இணைக்கிற ஒரு சேமிப்பில் தகவல்களைக் கண்டறியும் முறை.

sendmail: அனுப்பு அஞ்சல்; செண்ட் மெயில்; மின்னணு அஞ்சலைக் (e-mail)கையாள்வதற்குரிய ஒரு தர அளவான UNIX செயல் முறை. இதனை நிறுவுவது கடினம். அப்படி நிறுவினாலும், பல பாதுகாப்பு அபாயங்களுக்கு இடந்தருகிறது. இதில் அடிக்கடித் தவறுகள் நிகழ்வதால் சேய்மைப் பொறிகளை அணுக இடமளித்துக் குழப்பம் உண்டாக்குகிறது.

sense : உணர்வுத்திறம் ; உணர் : 1. ஒரு வகைப்பாட்டின் குறிப்பிட்ட தொடர்பாட்டினை ஆராய்தல். 2. வன்பொருளின் சில கூறுகளின் தற்போதைய அமைப்புமுறையைத் தீர்மானித்தல். 3. ஓர் அட்டையில் அல்லது நாடாவில் துளையிடப் பட்ட துவாரங்களைப் படித்தல்.

sense probe : உணர்வு ஆய்வு ; உணர்வி: ஒரு காட்சித் திரையில் உணர்வுப் புள்ளிகளைத் தூண்டி விட்டு, அதன் மூலம் ஒரு கணினியில் உட்பாடு செய்கிற உட்பாட்டுச் செயல்முறை.

sense switch : உணர்வு விசை; உணர் பொத்தான்: கணினி இணைப்பு ஒரு செயல்முறை மூலம் வினவலாம். ஒரு பெரிய சிக்கலான செயல்முறையில் தவறு கண்டறியும்போது இது பெரிதும் பயனுடையதாக இருக்கும்.

sensitive devices: உணர்வுச் சாதனங்கள்.

sensitivity: உணர்வுத் திறன்;உள் வரும் சைகையில் ஏற்படும் மாறுதலுக்கு ஒரு கட்டுப்பாட்டின் உணர்திறன் அளவு.

sensitivity analysis: உணர்திறன் பகுப்பாய்வு ;ஒரு கணித உருமாதிரியில் தனியொரு மாறியில் அடிக்கடி செய்யப்படும் மாறுதல்கள் எவ்வாறு ஏனைய மாறிகளைப் பாதிக்கின்றன என்று கண்காணித்தல்.

sensors : உணர்விகள்; வெப்ப நிலை, அழுத்தம், இதயத்துடிப்பு, காற்றுத் திசை, நெருப்பு போன்ற இயற்பியல் மாறுதல்களைக் கண்டறிந்து அளவிடக்கூடிய சாதனம். இயற்பியல் தூண்டல்களை மின்னணுச் சைகைகளாக மாற்றுகின்றன. எடுத்துக் காட்டு: கணினிகளில் உட்பூட்டினைச் செலுத்துதல்

sequence: வரிசைமுறை: 1. ஒரு குறிப்பிட்ட விதிகளுக்கிணங்க இனங்களை வரிசைப்படுத்துதல். 2. எண்மான வரிசைமுறையில் ஏறுமுக வரிசை.

sequence check : வரிசைமுறைச் சரிபார்ப்பு ; வரிசைச் சோதனை : ஒரு

தகவல் தொகுதி ஏறுமுக வரிசையில் அல்லது இறங்குமுக வரிசையில் அமைந்திருக்கிறதா என்பதைச் சரி பார்க்கும் முறை.

sequence of members: எண் வரிசை முறை.

sequence structure : வரிசைமுறைக் கட்டமைப்பு ; வரிசை அமைவு : ஒரு கட்டமைவு பாய்வு வரைபடத்தின் அடிப்படையான மூன்று கட்டமைப்புகளில் ஒன்று. இதில் ஆணைகள் வரிசைமுறையில் நிறைவேற்றப் படுகின்றன.

sequential : வரிசைமுறையிலான; வரிசைமுறை சார்ந்த தொடர்வழி; வரிசைமுறை: காலமுறை வரிசையில் நிகழ்வுகள் நிகழ்வது தொடர்பானது. இதில் நிகழ்வுகள் ஒரே சமயத்தில் நடைபெறுவதோ ஒன்றின் மீதொன்று நிகழ்வதோ இல்லை.

sequential access : வரிசைமுறை அணுகுதல்; தொடர்வழிச் சேர்வு; வரிசை அணுகுமுறை: சேமிப்புக் கோப்பிலிருந்து தகவல்களை அவை சேமித்து வைக்கப்பட்டிருக்கும் வரிசைமுறையிலேயே பெறும் செய் முறை. இதற்குக் காந்தநாடா தேவை. இது காந்த வட்டுச் சேமிப்பகத்திலும் பயன்படுத்தப்படுகிறது. இதனைத் தொடர்வரிசை அணுகுதல் என்றும் கூறுவர். இது நேரடி அணுகுதல் என்பதற்கு மாறானது.

sequential access device: வரிசை முறை அணுசாதனங்கள்.

sequential access file: வரிசை அணுகுமுறைக் கோப்பு.

SAM (Sequential Access Memory) : வரிசைமுறை அணுகு நினைவகம்.

sequential computer : வரிசை முறைக் கணினி: காலமுறை வரிசையில் நிகழ்வுகள் நிகழ்கிற கணினி. இதில், நிகழ்வுகள் ஒரே சமயத்திலோ, ஒன்றின் மீது ஒன்றோ நிகழ்வதில்லை.

sequential data organization : வரிசை முறைத் தகவல் அமைப்பு முறை; குறித்துரைக்கப்பட்டுள்ள வரிசைமுறைப் படித் தருக்கமுறைத் தகவல் கூறுகளை அமைப்பாகச் செய்தல்.

sequential data set : வரிசைமுறைத் தகவல் தொகுதி; காந்தநாடாவில் அமைப்பது போன்று அடுத்தடுத்த நிலைகளில் அமைக்கப்பட்ட பதிவேடுகளில் உள்ள தகவல் தொகுதி.

sequential data structure : வரிசை முறைத் தகவல் கட்டமைப்பு; ஓர் அணு அதற்கு அடுத்துள்ள அணுவுக்கு அடுத்ததாகவுள்ள தகவல் கட்டமைப்பு. இதனைப் பக்கத் தகவல் கட்டமைப்பு என்றும் கூறுவர்.

sequential device: வரிசைமுறைச் சாதனம்;ஒருவகைப் புறநிலைச் சாதனம். இதிலிருந்து தகவல்களை வரிசைமுறையில் படிக்கலாம்; அல்லது இதில் தகவல்கள் வரிசை முறையில் எழுதப்பட்டிருக்கும். இதில் எதனையும் விட்டுவிட முடியாது.

sequential file: தொடர்வழிக் கோப்பு.

sequential file organization: வரிசை முறைக் கோப்பு அமைப்பாக்கம் ; வரிசைமுறைக் கோப்பு ஒழுங்கமைப்பு: ஒரு விறகட்டை அடிப் படையில் ஒரு குறிப்பிட்ட வரிசை முறையில் கோப்புகளை அமைத்து வைத்தல். வரிசைமுறைக் கோப்புகளிலுள்ள பதிவேடுகள் ஒன்றன்பின் ஒன்றாக செய்முறைப்படுத்தப்பட வேண்டும்.

sequential flow of control: வரிசை முறைக் கட்டுப்பாட்டுத் தொடர் வரிசை.

sequential list : வரிசை முறைப் பட்டியல் : பக்க அமைவிடங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பட்டியல். இதனைச் செறிவுப் பட்டியல், நீட்சி முறைப் பட்டியல் என்றும் கூறுவர்.

sequential logic : வரிசைமுறைத் தருக்கம் ; வரிசைமுறை அளவை : உட்பாட்டின் முந்திய நிலைமூலம் வெளிப்பாட்டு நிலை தீர்மானிக்கப் படுகிற சுற்றுவழி அமைப்பு முறை. இது இணைத் தருக்கம் என்பதிலிருந்து மாறுபட்டது.

sequential machine : வரிசைமுறை எந்திரம் : வரிசைமுறை விசைச் சுற்றுவழியின் ஒரு குறிப்பிட்ட வகையின் கணித உருமாதிரி.

sequential pattern of excution : வரிசைமுறை நிறைவேற்றம்.

sequential processing : வரிசைமுறை செயலாக்கம் ; வரிசைமுறை செய்முறைப்படுத்தல் : வரிசையின்படி எண்முறை அல்லது அகரவரிசை முறையின்படி கோப்புகள் இயக்குதல் direct access processing, random processing என்பதற்கு எதிர்ச்சொல்.

sequential storage : வரிசைமுறைச் சேமிப்பகம் ; தொடர் வழிச் சேகரம் : தகவல்கள் ஏறுமுக அல்லது இறங்கு முக எண் வரிசையில் அமைக்கப் பட்டுள்ள துணைநிலைச் சேமிப் பகம்.

serial : தொடர்வரிசை ; தொடர் ; தொடராக : *1.* தனியொரு சாதனத்தில் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற் பட்ட தொடர்புடைய நடவடிக்கை கள் வரிசை முறையில் நிகழ்தல். இது இணை நிகழ்விலிருந்து மாறு பட்டது.

serial access : தொடர்வரிசை அணுகுதல் ; வரிசை அணுகுமுறை: சேமிப் பகத்தில் அணுகு நேரத்திற்கும் தகவல் அமைவிடத்திற்குமிடையில் ஒரு வரிசைமுறைத் தொடர்பு இருக் கிற சேமிப்புச் சாதனத்தின் அல்லது ஊடகத்தின் விவரிப்பு. அதாவது, அணுகு நேரம், தகவல் அமைவிடத் தைப் பொறுத்து அமைந்திருத்தல். இதனை வரிசை முறை அணுகுதல் என்றும் கூறுவர். இது நேரடி அணுகுதலிலிருந்து வேறுபட்டது.

serial adder : தொடர்வரிசை கூட்டல் பொறி ; தொடர்வரிசைக் கூட்டி : தொடர்புடைய எண்ணளவுகள் ஒவ் வொன்றிலிருந்தும் ஒரே சமயத்தில் ஓர் இலக்கத்தைக் கொண்டு வரு வதன்மூலம் செயற்பாடுகளைச் செய் கிற கூட்டல் பொறி.

serial board : தொடர் நிலைத்தளம்.

serial computer : தொடர்வரிசைக் கணினி ; தொடர் நிலைக் கணினி : ஒவ் வொரு இலக்கமும் அல்லது ஒவ் வொரு தகவல் சொல்லும், கணினி யினால் தொடர்வரிசையில் செய் முறைப்படுத்தப்படுகிற கணினி. இது இணைவுக் கணினி என்பதி லிருந்து வேறுபட்டது.

serial data : தொடர்வரிசைத் தகவல்; தொடர் நிலைத் தகவல் : ஒரே சமயத் தில் ஒரு துண்மியாக வரிசை முறை யில் அனுப்பப்படும் தகவல்.

serial input/output : தொடர்வரிசை உட்பாடு/வெளிப்பாடு ; தொடர் நிலை உள்ளீடு/வெளியீடு : துண்மிகள் ஒன்றன்பின் ஒன்றாக ஒற்றைக் கம்பி மூலம் அனுப்பப்படுகிற தகவல் அனுப்பீடு. இது இணை உட்பாடு/ வெளிப்பாடு என்ப'திலிருந்து வேறு பட்டது.

serial interface : தொடர்வரிசை இடை முகப்பு ; தொடர்நிலை இடை முகம் :

தகவல்கள் அனைத்தும் துண்மி துண்மியாகத் தொடர்வரிசையில் நகர்கிற இடை முகப்பு. இது இணை இடைமுகப்பு என்பதிலிருந்து மாறு பட்டது.

serializability : தொடர்வரிசைப்படுத் தும் திறன் ; வரிசையாக்கப்படும் தன்மை : பல பயன்பாட்டாளர்கள் ஒரே சமயத்தில் தகவல்களை அணு கும்போது, அதன் பலன், அவர்கள் ஒரே சமயத்தில் ஒருவராக அணு கும்போது நிகழும் பலனுக்கு நிகராக இருத்தல் வேண்டும். இந்த விளைவு 'தொடர் வரிசைப்படுத்தும் திறன்' எனப்படுகிறது.

serialize : தொடர்புறுத்தல் : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எட்டி யல்களைக் கொண்ட ஒரு போகுக் குறியீட்டினை, ஒன்றன்பின் ஒன்றாக அனுப்புகிற குறியீடாக மாற்றுதல்.

serial operation : தொடர்வரிசைச் செயற்பாடு ; தொடர்நிலை இயக்கம் : ஒரு சொல்லின் இலக்கங்கள் அனைத் தும் ஒரே சமயத்தில் அல்லாமல் வரிசைமுறையில் கையாளப்படுகிற கணினிச் செயற்பாடு. இது இணைச் செயற்பாடு என்பதிலிருந்து வேறு பட்டது.

serial port : தொடர்வரிசைத் துறை ; தொடர்நிலைத் துறை; வரிசை ; இணைப்பு : ஒரே சமயத்தில் ஒரு துண்மி வீதம் தகவல்களை ஏற்கவும் அனுப்பவும் பயன்படுத்தப்படும் கணினியின் உட்பாட்டு/வெளிப் பாட்டுத் துறை. பெரும்பாலான சொந்தக் கணினிகளில், ஒரு Rs-232C தொடர்வரிசை இடைமுகப்புத் துறை மூலம் தொடர் வரிசைத் தகவல் செலுத்தப்படுகிறது.

serial printer : தொடர்வரிசை அச்சுப் பொறி; வரிசை அச்சுப் பொறி ; தொடர் நிலை அச்சுப் பொறி ; தொடர் அச்சு எந்திரம் : ஒற்றைக் கம்பி வழியாக ஒரு சமயத்தில் ஒரு துண்மி வீதம் கணினியிலிருந்து தகவல் களைப் பெறுகிற அச்சடிப்பி. (ஒரு எழுத்து, எட்டு துண்மிகளுக்குச் சமம்). கட்டுப் பாட்டுச் சைகைகளைப் பரிமாற்றிக் கொள்வதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூடுதல் கம்பிகள் தேவைப்படலாம். இது ஒரே சமயத் தில், 600cps வேகத்தில் ஒரு எழுத்தை அச்சடிக்கிறது. இது இணை அச் சடிப்பி என்பதிலிருந்து வேறு பட்டது.

serial processing : தொடர்வரிசைச் செய்முறைப்படுத்துதல் ; வரிசைச் செயலாக்கம் ; தொடர்நிலைச் செய லாக்கம் : ஒரு கோப்பில் பதிவேடு களை, அவை சேமித்து வைக்கப் பட்ட இயல்பான வரிசை முறையில் ஒன்றன்பின் ஒன்றாகப் படித்தல் மற் றும்/அல்லது எழுதுதல். இது இணை செய்முறைப்படுத்தல் என்பதி லிருந்து வேறுபட்டது.

serial reading : தொடர்வரிசைப் படிப்பு ; வரிசைமுறைப் படிப்பு ; தொடர்நிலைப் படிப்பு : துளையிட்ட அட்டையிலிருந்து பத்தி பத்தியாகப் படித்தல். இது இணையாகப் படித் தல் என்பதிலிருந்து வேறுபட்டது.

serial transmission : தொடர்வரிசை ; தொடர் நிலைச் செலுத்தம் : தகவல் களை மாற்றம் செய்வதற்கான ஒரு முறை. இதில், ஓர் எழுத்தினைக் கோக்கின்ற துண்மிகள் வரிசை முறையில் அனுப்பப்படுகின்றன. இது, இணை அனுப்பீடு என்பதி லிருந்து வேறுபட்டது.

serif : செரிஃப் : எழுத்துகளில் அலங் கார முடிவுகளைக் கொண்ட ஓர் எழுத்துரு. இது செரிஃப் எழுத்து முகப்பு ஆகும்.

server : புரவலா் ; பணியகம் ; தலைமைக் கணினி : ஓா் இணையத்திலுள்ள கணினி. இதனைப் பல பயன்பாட்டாளர்கள் பகிர்ந்து கொள்ளலாம்.

server application : புரவலா் கணினிப் பயன்பாடு : 1. ஒரு புரவலர் கணினியாகிய தலைமைக் கணினியில் ஓட்டுவதற்கு வடிவமைக்கப்பட்ட பயன்பாடு. 2. ஒரு தலைமைக் கணினியில் ஓட்டப்படும் ஏதேனுமொரு செயல்முறை.

server computer : புரவலா் கணினி.

server load : தலைமைக் கணினி பணியகச் சுமை : ஒரு பிணையத் தலைமைக் கணினி எத்தனை அணுகுதல்களைப் பெறுகிறது என்பதைக் கணக்கிடும் அளவுமுறை. இது பொதுவாக, வினாடிக்கு இத்தனை அழைப்புகள் என்ற கணக்கில் கணக்கிடப்படுகிறது.

service bureau : சேவைக் கழகம் ; பணி அலுவலகம் : மற்ற ஆட்களுக்கு அல்லது அமைவனங்களுக்குத் தகவல் செய்முறைப்படுத்துதல் சேவைகள் வழங்குகிற அமைவனம். இது சில சமயம் கணினிச் சேவை நிறுமம் எனக் கூறப்படுகிறது.

service contract : சேவை ஒப்பந்தம் ; பணி ஒப்பந்தம் : கணினி வணிகம், கணினிக்கடை, கணினி நிறுமம் போன்ற ஒரு கணினிப் பொறியமைவை உடனடியாகப் பழுது பார்த்துக் கொடுக்கிற அமைவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம்.

service programms : சேவைச் செயல்முறைகள் ; சேவை ஆணைத் தொடர்கள் : ஒரு செயற்பாட்டுப் பொறியமைவின் கட்டுப்பாட்டுச் செயல்முறைகளுக்குத் துணை செய்கிற செயல்முறைகள். மொழி பெயர்ப்பாளர், பயன்பாட்டு வாலாயம் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டு.

service provider : சேவை வழங்குநர் சேவையாளர்.

service window : சேவைப் பலகணி ; பணிச்சாளரம் : ஒரு பராமரிப்பு உடன்படிக்கையில் உள்ளடங்கிய பகல் அல்லது இரவின் போதான மணி நேரங்கள் "பலகணிக்கு" வெளியே அளிக்கப்படும் சேவை இந்த உடன்படிக்கையில் அடங்காது.

servo : செர்வோ ; செயற்பணி : மின் எந்திரவியல் சாதனம். இது, துல்லியமான தொடக்கத்தை அளிப்பதற்குப் பின்னூட்டினைப் பயன்படுத்துகிறது. நாடா இயக்கியிலுள்ள விசைப் பொறி இயக்கம், ஒரு வட்டிலுள்ள ஓர் அணுகுகரத்தின் இயக்கம் போன்ற செயற்பணிகளுக்காக நின்று கொள்கிறது.

servo mechanism : பணிச் செயல்முறை ; சேவை எந்திர அமைப்பு ; பணி இயக்கமைப்பு : பின்னூட்டுக் கட்டுப்பாட்டுப் பொறியமைவு.

session : அமர்வுநேரம் ; அமர்வு : ஒரு கணினிப் பொறியமைவு இயக்குநர், ஒரு அமர்வில் ஒருமுனையத்தில் பணிபுரிகிற கால அளவு.

set : பொருத்துதல் ; தொகுதி ; குழு : 1. ஓர் இருமச் சிற்றத்தை 1 நிலையில் வைத்தல்; 2. ஒரு சேமிப்புச் சாதனத்தை ஒரு குறிப்பிட்ட நிலையில் வைத்தல். இது பெரும்பாலும் சுழியாக இருக்கும். 3. தொடர்புடைய பொருள்களின் ஒரு தொகுதி. 4. ஒரு தொடர்புறு தகவல் ஆதாரத்தில், பொருள்களின் தொகுதி. 5. ஓர் இணையத்தில்/படிமுறைத் தகவல் தள உருமாதிரியில், ஒன்றும் பலவுமான தொடர்புகள். ஒரு பதிவு வகை

இன்னொன்றுடன் இணைக்கப்பட்டிருக்கும் வழி.

SETL : எஸ்இடிஎல் : தொகுதிகளும், தொடர்புடைய கட்டமைப்புகளும் உள்ளடங்கிய பதின்முறை எண்மானச் செயல்முறைப்படுத்துதலுக்கு வசதி செய்து கொடுக்க வடிவமைக்கப்பட்ட உயர்நிலை மொழி.

set of instructions : ஆணைகளின் தொகுதி.

set theory : கணக்கோட்பாடு : பொருள்களின் கணங்கள், அவற்றைக் கையாள்வதற்கான விதிகள் பற்றிய கணிதம் அல்லது தருக்க முறைப் பிரிவு. UNION, INTERSECT, COMPLEMENT ஆகியவை இதன் மூன்று அடிப்படைச் செயற்பாடுகள்.

setblock : கணத் தொகுதி : ஒரு செயல்முறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நினைவுப் பதிவுகளின் அளவைச் சுருக்கமும் விரிவாக்கமும் செய்யக் கூடிய ஒரு DOS செயற்பணி.

setup : அமைப்பு முறை ; அமைப்பு ; அமைவு : ஒரு குறிப்பிட்ட சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கான தகவல்களின் அல்லது சாதனங்களின் அமைப்பு முறை.

setup programme : நிலைகொள் செயல்முறை : ஒரு பொறியமைவினை ஒரு குறிப்பிட்ட சூழலுக்கேற்ப உருவாக்குகிற மென்பொருள். சொந்தக் கணினிகளில் ஒரு பெரிய சாதன மாற்றத்தைச் செயற்பாட்டுப் பொறியமைவுக்குத் தெரிவிப்பதற்கு இது பயன்படுத்தப்படுகிறது.

setup string : நிலைகொள் சரம் : அச்சடிப்பி போன்ற ஒரு சாதனத்தைத் தொடக்கி வைக்கிற ஆணைகளின் தொகுதி.

setup time : அமைப்பு முறைநேரம் ; அமைப்பு நேரம் ; நிறுவு நேரம் : மற்ற எந்திரச் செயற்பாடுகளைக் கணினி இயக்குவதற்கிடையிலான நேரம். அதாவது, வட்டுகள் நகரும் அட்டைகள், படிவங்கள், பிற பொருள்கள் ஆகியவற்றை சாதனத்திற்குள்ளேயும் வெளியேயும் மாற்றுவதற்கான நேரம்.

seven-segment display : ஏழுகூறுக் காட்சி : எண்மானக் கடிகாரங்களில் காணப்படும் பொதுவான காட்சி முறை. இது எட்டுகளின் ஒரு தொடர் போன்று தோன்றும் படிப்பு முறைகளையும் குறிக்கும். தனித்தனியாக முகவரியிடத்தக்க ஏழுபட்டைகள் வரையில் தெரிந்தெடுத்த ஒளிர்வு மூலம் ஒவ்வொரு எண் அல்லது எழுத்து அமைக்கப்படுகிறது.

sferics : ஸ்ஃபெரிக்ஸ் : வாயுமண்டல ஓசைகளைக் குறிக்கும் ஒரு சொல். செய்தித் தொடர்புக் கம்பியில் எந்த வகையான இடையீட்டையும் இது குறிக்கிறது.

shade : கருமைச் சாயல் ; நிழல் : கணினி வரைகலையில், தூயவண்ணத்துடன் கலக்கப்படும் கருமை நிறத்தின் அளவு.

shade of grey : சாம்பல் நிறச் சாயல்.

shading symbols : நிழல் குறியீடுகள்: தொகுதி வரைகலை எழுத்துகள். சில கணினி வரைகலைகளில் உள்ள மைந்த எழுத்துத் தொகுதிகளின் ஒரு பகுதி. இவை, வேறுபட்ட புள்ளிச் செறிவுகளை அளித்து மாறுபட்ட நிழற் சாயல்களின் தோற்றத்தைக் கொடுக்கிறது.

shadow mask : நிழல் முகமூடி : ஒரு வண்ண CRT-இன் பார்வைக் கண்ணாடியின் பின்னால் ஒட்டிக் கொண்டிருக்கிற துளைகள் கொண்ட

திரை. இந்தத் துளைகளின் வழியாக எலெக்ட்ரான் கற்றை பாஸ்ஃபோர் புள்ளிகளை நோக்கிப் பாய்ச்சப் படுகிறது.

shadow printing : நிழல் அச்சடிப்பு ; நிழல் அச்சு முறை : அச்சுத் தலைப் பினை அதன் முந்திய நிலையான 1/120 அங்குலத்திற்குள் அடக்கி பரும எழுத்தாக அச்சடித்தல். முதல் அச் சடிப்புக்கும் மேல் அச்சடிப்புக்கு மிடையில் சிறிதளவு பிழையான பதிவு மூலம் பரும எழுத்து உண்டா கிறது. இது பன்முக அச்சடிப்பி லிருந்து வேறுபட்டது.

shadow RAM : நிழல் ராம் : ராம் பொது வாக ROM சிப்புகளினால் கையாளப் படுகிற செயற்பணிகளை மேற் கொள்ளப்பயன்படுத்தப்படுகிற ஒரு RAM-இன் பகுதி. ROM-ஐ விட RAM விரைவாகச் செயற்படுவதால், செய் முறைப்படுத்தும் நேரத்தை மிச்சப் படுத்துகிறது. கட்டுப்பாட்டையும் மேம்படுத்துகிறது.

Shannon, Claude E. : ஷான்னோன், கிளாட் இ : பூலியன் இயற்கணிதம், குழூஉக்குறிக் கலை, கணினிச் சுற்று வழிகள் ஆகியவற்றுக்கும், செய்தித் தொடர்புகளுக்கும் தமது தகவல் கணிதக் கோட்பாட்டின் மூலம் அருந் தொண்டு புரிந்தவர்.

shape : வடிவம்.

share : பங்கமைப்பு ; பங்கு : நடுத்தர மற்றும் பேரளவு தகவல் செய் முறைப்படுத்தும் பொறியமைவு களைப் பயன்படுத்துவோரின் அமை வனம்.

shared DASD : பகிர்மான டிஏஎஸ்டி : தனியொரு தகவல் மையத்தினுள் உள்ள, இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட கணினிகள் மூலம் அணு கக் கூடிய வட்டு அமைப்பு முறை. சொந்தக் கணினி இணையங்களில் பகிர்ந்து கொள்ளப்படுகிற வட்டு கள், கோப்பு புரவலர்கள் அல்லது தகவல்தள புரவலர்கள் எனப்படும்.

shared file : பகிர்மானக் கோப்பு ; பங் கிடும் கோப்பு ; பகிர்கோப்பு : இரண்டு பொறியமைவுகளினால் ஒரே சமயத் தில் பயன்படுத்தப்படும் நேரடி அணுகுச் சாதனம். இது இரு கணினிப் பொறியமைவுகளை இணைக்கிறது.

shared logic : பகிர்மானத் தருக்க முறை ; பங்கிடும் அளவைமுறை : பல் வேறு பயன்பாட்டாளர்கள் தனி யொரு கணினியை ஒருங்கே பயன் படுத்துதல்.

shared resource : பகிர்மான ஆதாரம்; பங்கீட்டு மூலாதாரம் ; பகிர்வளம் : பல பயன்பாட்டாளர்களால் பகிர்ந்து பயன்படுத்தப்படும் கணினி ஆதாரங் கள்.

shareware : பகிர்மான மென்பொருள் : பொதுமக்களால் உருவாக்கப்பட்டு, இலவசமாக அல்லது குறைந்த கட் டணத்தில் விநியோகிக்கப்படும் மென்பொருள். சில பகிர்மானப் பொருள்களுக்கான திரைக்காட்சி ஆவணமாக்கம், மென்பொருள் எழுதுவோர்க்கு நன்கொடை வேண்டப்படுகிறது.

sharpness: கூர்மை: ஒரு காட்சிச் சாத னம் எண்மான வரைவி, அச்சுப் பொறி, சுருள்பதிப்பி போன்றவற் றில் உண்டாகும் உருக்காட்சிகளின் தெளிவும் தரமும்.

sheet feeder: தாள் ஊட்டி ; தாள் தள்ளி: ஓர் அச்சுப்பொறியுடன் இணைக்கப் படும் ஒரு சாதனம். இது, காகிதத் தாள்களை அல்லது உறைகளை ஒவ் வொன்றாக தானாகவே உட்செல் லும் வகையில் வடிவமைக்கப்பட்

டிருக்கும். இது பெரும்பாலும் அச்சுப்பொறியின் அழுத்தத் தகட்டுப் பாளத்தில் அமைந்திருக்கும். இதனை அச்சுப்பொறி எந்திரமுறை யிலோ மின்னியல் முறையிலோ இயக்குகிறது.

shelfware : மாடப் பொருள்கள் : ஒரு வணிகரின் காட்சி மாடத்தில் உள்ள அல்லது வாடிக்கையாளர் பயன் படுத்தாத பொருள்கள்.

shell : உறைபொதி: ஒரு செயல் முறையின் புற உறைபொதி. இது பயன்படுத்துவோர்க்கு இடைமுகப் பினை அல்லது கணினிக்கு ஆணை பிறப்பிப்பதற்கான வழிமுறையினை அளிக்கிறது. உறைபொதிகள் என் பவை யூனிக்ஸ், டோஸ் போன்ற ஆணையினால் செயற்படும் பொறி யமைவுகளுக்காக உருவாக்கப்பட்ட கூடுதல் செயல்முறைகள் ஆகும். இது பொறியமைவினை எளிதாக இயக்குவதற்கான ஆணைத் தொகு தியால் இயங்கும் இடைமுகப் பினை வழங்குகிறது. DOS4.0, 5.0 ஆகியவை சொந்த உறைபொதி களுடன் வருகின்றன.

shell out : உறைபொதி வெளிப்பாடு: ஒரு பயன்பாட்டினை தற்காலிகமாக வெளிப்படுத்தி செயல்முறைப் பொறியமைவினுள் மீண்டும் செலுத் துவதற்கு ஒரு செயற்பணியைச் செய்து முடித்துவிட்டு மீண்டும் பயன்பாட்டுக்குள் செலுத்திவிடுதல் வேண்டும்.

shell sort: ஷெல் பிரிப்பு ; வரிசைப் படுத்தும் முறை: எண்களை அல்லது ஆல்ஃபா எண்மானத் தகவல்களைப் பிரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் முறை. இந்த முறையைக் கண்டு பிடித்தவர் டோனால்ட் ஷெல் என் பவர். அவர் பெயரால் இந்தப் பெயர் பெற்றது. இது குமிழ் பிரிப்பைவிடத் திறமையானது.

shielding : காப்பிடல் ; கவசமிடல் : மின்னியல் அல்லது காந்தவியல் ஓசைகளுக்கு எதிராகக் காப்பிடுதல்.

shift : நகர்த்தி; நகர்த்தல் : ஓர் அலகி லுள்ள எழுத்துகளை அல்லது தகவல் களைப் பத்திவாரியாக இடமாக அல்லது வலமாக நகர்த்துவதற்கான கருவி.

shift - click : மாற்றி இயக்கு ; நகர்த்தி இயக்கு: விசைப் பலகையில் மாற்று விரற்கட்டையை அழுத்துகையில், நுண்பொறிப் பொத்தானை 'கிளிக்' செய்தல்.

shift key : மாற்று விசை; மாற்றுச் சாவி: கணினி விசைப்பலகை மேலுள்ள விரற்கட்டை விசை. இதை அழுத் தும்போது கீழ்வரிசை எழுத்துகளுக் குப் பதிலாக தலையெழுத்தை அழுத் துவதுடன் சில சிறப்பு எழுத்துகளை யும் அச்சிடும். பல விசைப் பலகை களில் மாற்றுப் பூட்டாகப் பயன்படு கிறது. கீழ் நிலை எழுத்துக்கு வர வேண்டுமென்றால் மீண்டும் அழுத்த வேண்டும்.

shift register : மாற்றுப் பணிப் பதி வகம்: இருமக் குறியீடுகளை (துண்மி கள்) சேமித்து வைக்கிற ஒன்றோ டொன்று இணைக்கப்பட்ட தொடர் களைக் கொண்ட ஒரு பதிவகம். இது துண்மிகளை இடமும் வலமும் மாற்றுவதற்கு உதவுகிறது. இரும மற்றும் தசம எண்மான முறைகள் இடநிலைக் குறியீட்டினை (இடது கோடி நிலை மிக உயர்ந்த மதிப்பு டையது) கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக 777123777 என் பதில் இடப் பக் கம் உள்ள ஏழு கள் வலப்பக்க ஏழுகளை விட அதிக மதிப்புடையவை. இரும எண் குறி

யீட்டில் வலப்பக்கம் நகர்வது இரண்டால் வகுப்பதற்கு இணையானது. பதின்ம எண்ணில் வலப்பக்கம் நகர்வது பத்தால் வகுப்பதாகும். இருமக் கணிதத்திற்கு மாற்றுப் பணிப் பதிவகத்தைச் செய்முறைப்படுத்துவோர் பயன்படுத்துகின்றனர்.

Shockley, William Bradford: ஷாக்கெலி வில்லியம் பிராட்ஃபோர்ட் : பெல் ஆய்வுக்கூட விஞ்ஞானி. இவர் வால்ட்டர் பிராட்டன், ஜான் பார்டீன் ஆகியோருடன் சேர்ந்து காந்தக்குமிழ் நினைவகத்தைக் கண்டுபிடிக்க உதவியாக இருந்த மின்மப்பெருக்கியைக் (டிரான்சிஸ்டர்) கண்டுபிடித்தார்.

short card : குறுகல் அட்டை : சொந்தக் கணினியில் செருகக்கூடிய அச்சிட்ட சுற்று வழிப் பலகை. இது முழு வடிவளவு பலகையைவிட பாதியளவு நீளமுடையதாகும்.





குறுகல் அட்டை
(Short card)
குறுகிய அட்டை (மேலே)
செந்தர நீளமுள்ள அட்டை (கீழே)

shortest operating time: குறுகிய செயற்பாட்டு நேரம்;மிகக் குறைந்த இயக்க நேரம் ; சிறும இயக்க நேரம்: கணினியில் மிகக் குறுகிய காலத்தை எடுத்துக் கொள்ளும் அட்டவணைப் படுத்திய பணிகளுக்கான திட்டமிட்ட நடைமுறை.

SHRDLU : எஸ் எச் ஆர் டி எல் யூ; ஸ்ரட்லு: முதலாவது இயற்கையான மொழிச் செயல்முறை. இது, சொற்றொடர்பு, சொற்பொருள் பகுப்பாய்வினை உலகியல் அறிவுடன் ஒருங்கிணைக்கிறது

short-haul modem : குறுகிய இழுவை மோடெம் : செய்தித் தொடர்களில், ஒரு மைல் தூரம்வரை சைகைகளை அனுப்புகிற சாதனம்.

shrink wrapped software : குறுக்கப் பொதிவு மென்பொருள்: சேமிப்பில் வாங்கிய மென்பொருள். பரவலாக ஆதரவு பெற்றுள்ள ஒரு தர அளவு மேடை.

SI : எஸ்ஐ: systems International என்பதன் குறும்பெயர். உலகளவில் பன்னாட்டு மெட்ரிக் முறையின் செந்தரம்.

sideband : பக்கக் கற்றை : செய்தித் தொடர்புகளில், ஓர் அலைக் கற்றையின் மேல் அல்லது கீழ்ப் பகுதி. இரு பக்கக் கற்றைகளும் பொதுவாக ஒன்றுக்கொன்று கண்ணாடி பிம்பங்கள் ஆகும். இவற்றில் ஒரு பாதியை, தகவல் கொண்டு செல்லும் திறனை அதிகரிப்பதற்கு

ஓர் இரண்டாம் அலைவரிசைக்குப் பயன்படுத்தலாம்.

sidebard: பக்கக் கவசம் : ஓர் ஆவணத்தின் முக்கிய வாசகப் பகுதியின் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரு வாசகத் தொகுதி அல்லது ஒரு வரைகலைப் பிம்பம்.

side effect : பக்க விளைவு: ஒரு நடைமுறையில் அடிப்படை விளைவுடன் கூட ஏற்படும் பக்கவிளைவு.

sidekick : சைடுகிக்: போர்லண்ட் தயாரித்துள்ள சொந்தக் கணினிக்கான மேசைப் பயன்பாட்டுச் செயல்முறை. 1984இல் புகுத்தப்பட்டது. இது, சொந்தக் கணினிக்கான முதலாவது "பாப்பப்" (TSR) செயல்முறையாகும். இதில் ஒரு கணிப்பி, வேர்ல்ட்ஸ்டார் இணக்கமுடைய குறிப்பேடு, நியமன நாட்குறிப்பு, தொலைபேசிச் சுழற்சி, ASCII அட்டவணை ஆகியவை அடங்கியுள்ளன.

slide rule : நழுவு நுண்ணளவு கோல்; நகரும் சட்டம்.

sift : சலி; மாற்று: பெருமளவுத் தகவல்களிலிருந்து வேண்டிய குறிப்பிட்ட இனத்தை வரவழைத்தல்.

இது தேர்ந்தெடுத்தல் என்பதிலிருந்து வேறுபட்டது.

sifting : சலித்தல்; உள்முகப் பிரிப்பு: மற்றப் பதிவேடுகளை உட்செலுத்துவதற்கு அனுமதிப்பதற்காகப் பதிவேடுகளை உள்முகமாகப் பிரிப்பதற்கான முறை.

SIG : எஸ் ஐ ஜி: தனிநலக்குழுமம் எனப்பொருள்படும் "Special Interest Group" என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்

sign : குறி ; அடையாளம் : ஓர் எண் நேர் எண்ணா அல்லது மறிநிலை எண்ணா என்பதைக் குறிக்கும் கணித் குறியீடு.

signal: சைகை ; சமிக்ஞை : செய்தித் தொடர்புக் கோட்பாட்டில், செய்தித் தொடர்புப் பொறியமைவில் ஒரு பன்னாட்டு இடையீடு. இது ஓசை என்பதிலிருந்து வேறுபட்டது.

signal converter: சைகை மாற்றி: ஒரு சைகையின் மின்னியல் அல்லது ஒளியியல் எழுத்துகளை மாற்றுகிற சாதனம்.

signalling in/out of band : உள்/வெளிக்கற்றைச் சைகை : செய்தித் தொடர்புகளில் உள்பட்டை என்பது, ஒரே அலைவீச்சினுள் தகவல் சைகையைப் போன்றே கட்டுப்பாட்டுச் சைகைகளை அனுப்புவதைக் குறிக்கிறது. "வெளிக்கற்றை" என்பதை அலை வீச்சுக்கு வெளியே கட்டுப்பாட்டுச் சைகைகளை அனுப்புவதைக் குறிக்கிறது.

signal-to-noise ratio: சைகை ஓசை விகிதம்; சமிக்ஞை இரைச்சல் விகிதம்: தகவல் தொடர்புகளில் தேவை யான சைகைக்கும் தேவையற்ற ஓசைக்கும் இடையிலான விகிதம்.

signaling rate : சைகை விகிதம்;சமிக்ஞையிடும் விகிதம்: ஒரு செய்தித் தொடர்பு இணைப்பில் சைகைகள் அனுப்பப்படும் விகிதம்.

signal processing : காலம் சார்ந்த தகவல் அலசல்.

signature : குறியீட்டு எண்: அடையாளங் காண்பதற்காகவும், படிப் பாதுகாப்புக்காகவும் வன்பொருளில் அல்லது மென்பொருளில் அமைக்கப்பட்டுள்ள தனி எண்.

sign bit: அடையாளத் துண்மி; அடையாள இருநிலைத் துண்மி.

sign digit: சைகை எண் ; அடையாள எண் ; குறி எண் ; குறி இலக்கம் : ஒரு சொல்லின் குறிநிலையிலுள்ள இலக்கம்.

signed : அடையாளமுள்ள.

sign extension : குறி விரிவாக்கம் ; அடையாள விரிவாக்கம் : ஒரு பதிவேட்டின் உயர்வரிசை நிலையிலுள்ள குறித் துண்மியின் இரட்டைப்படி நிலை. இது பொதுவாக ஒன்றின் குறைநிரப்பு அல்லது இரண்டின் குறைநிரப்பு இரும மதிப்புகளினால் நடைபெறுகிறது.

sign flag : குறிக்கொடி ; அடையாளக் கொடி : ஒரு செயற்பாட்டின் மிக முக்கியமான துண்மி 1 என்னும் மதிப்பளவினைக் கொண்டிருக்குமானால், 1இன் நிலைக்குச் செல்லும் கரணம்.

significant digit : முக்கிய இலக்கம் ; மதிப்புறு எண்; முதன்மை எண் : ஓர் எண்ணின் துல்லியத்துக்கு உதவி புரியும் ஓர் இலக்கம். முக்கிய இலக்கங்களின் எண்ணிக்கை மிக அதிக மதிப்பளவைக் கொடுக்கும் இலக்கத்திலிருந்து கணக்கிடப்படுகிறது. இது மிக அதிக முக்கிய இலக்கம் எனப்படும். மிகக் குறைந்த மதிப்பளவைக் கொடுக்கும் மதிப்பளவு மிகக் குறைந்த முக்கிய இலக்கம் எனப்படும்.

significant digits : முக்கிய இலக்கங்கள் : ஓர் எண்ணுக்கு அதிக மதிப்பினைக் கொடுக்கக் கூடிய, அந்த எண்ணிலுள்ள இலக்கங்கள். எடுத்துக்காட்டாக, 00001234 என்ற எண்ணில் 1234 என்பவை முக்கிய எண்கள்.

sign off : கலைப்பு ; அடையாளம் நிறுத்து ; இணைப்புத் துண்டிப்பு : 1. ஒரு நேரப் பகிர்மான கணினி இணையத்திலிருந்து தொடர்பறுக்கும் செய்முறை. 2. பயன்பாட்டாளர்/கணினி இடைமுகப்பு எதனையும் கலைத்தல்.

sign on : இணைத்தல்; அடையாளம் கொடு ; இணைப்புத் தொடங்குதல் : 1. ஒரு நேரப்பகிர்மானக் கணினி இணையத்தில் இணைப்புக் கொடுக்கும் செய்முறை. 2. பயன்பாட்டாளர்/கணினி இடைமுகப்பினை ஏற்படுத்துதல்.

sign position : குறியீட்டு நிலை ; அடையாள நிலை ; குறியிடம் : ஓர் எண்ணின் குறியீடு அமைந்துள்ள நிலை.

signal : குறி ; குறிப்பு; சமிக்ஞை; சைகை.

signal-to-noise ratio : குறிப்பு இரைச்சல் விகிதம்.

signaling rate : குறிப்பனுப்பு வீதம்.

silica gel : சிலிக்கா கூழ் : சிலிக்கன் டையாக்சைடின் மிகுந்த உறிஞ்சும் சக்தியுள்ள வடிவம். இது பெரும்பாலும் துளையுள்ள பைகளில் பொதியப்பட்டு, கப்பலில் செல்லும் போது, சேமித்து வைக்கும் போது ஈரத்தை உறிஞ்சுவதற்கான சாதனத்துடன் சிப்பம் செய்யப்பட்டிருக்கும்.

silicon : சிலிக்கன் : மின்மப் பெருக்கிகள், ஒருங்கிணைந்த மின் சுற்று வழிகள், சூரிய மின்கலங்கள் போன்றவற்றைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் அலோக வேதியியல் தனிமம். மணலிலும், களி மண்ணிலும் காணப்படும் வேதியியல் தனிமம். இதன் அணு எண் 14.

silicon chip : சிலிக்கன் சிப்பு : மேற்பரப்பில் பல்லாயிரம் மின்னணு அமைப்பிகளும் மின்சுற்றுவழித் தோரணிகளும் செதுக்கப்பட்டுள்ள

ஒரு சிலிக்கன் வில்லையின் ஒரு நுண்ணிய பகுதி.

silicon/compiler : சிலிக்கன் தொகுப்பி; சிலிக்கன் கட்டுப் படுத்தும் சரியாக்கி: ஒரு சிப்புவின் மின்னணு வடிவமைப்பை உறுப்புகளின் உண்மையான கட்டமைப்பாக மாற்றுகிற மென்பொருள்.

silicon controlled rectifier (SCR) : சிலிக்கன் கட்டுப்பாட்டு மின்மாற்றுக் கருவி ; எஸ்சிஆர் : இயல்பான நிலையில் எந்தத் திசையிலும் செலுத்தப்படும் மின் அழுத்தத்தைத் தடை செய்கிற மின்கடத்தாச் சாதனம்.

silicon dioxide (SiO2) : சிலிக்கன் டையாக்சைடு (SiO2) : பாறை, படிகக் கல், மணல், மணிக்கல் போன்ற அவற்றில் காணப்படும் கடினமான, பளபளப்பான கனிமம். (MOS) சிப்பு உருவாக்கத்தில், இது மேல் படுகையின் உலோக வழிகளுக்கும், கீழேயுள்ள சிலிக்கன் கூறுகளுக்குமிடையில் மின்காப்பினை ஏற்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

silicon disk : சிலிக்கன் வட்டு : நினைவகத்தில் நிரந்தரமாக மாற்றுருக் கொள்ளும் வட்டு இயக்கி. இது எடைக் குறைப்புக்காக "லேப்டாப்" களில் பயன்படுத்தப்படுகிறது. இதன் உள்ளடக்கங்களைப் பேணி வருவதற்கு ஒரு மின் கலத்திலிருந்து இதற்கு இடைவிடாது மின்விசையூட்டப்பட வேண்டும்.

silicon foundry : சிலிக்கன் வார்ப்படச்சாலை : வடிவமைப்பினை மட்டும் கொண்டு, உற்பத்தி செய்யும் வசதிகள் இல்லாத மற்ற நிறுமங்களுக்காகச் சிப்புகள் தயாரிக்கும் அமைவனம்.

silicon : சிலிக்கன் பள்ளத்தாக்கு : அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவுக்குத் தெற்கிலுள்ள ஒரு பகுதியின் பட்டப் பெயர். இங்கு ஏராளமான அரைக்கடத்திப் பொருள், கணினித் தயாரிப்பு நிறுவனங்கள் இருப்பதால் இப்பெயர் பெற்றது. இதனை சிலிக்கன் புழைவாயில் என்றும் கூறுவர்.

silicon wafer : சிலிக்கன் வில்லை ; சிலிக்கன் ஓடு ; சிலிக்கன் சீவல் : ஒருங்கிணைந்த சிப்புகள் உருவாக்கப் பயன்படும் சிலிக்கன் சிப்பு. உருவாக்கிய பின், இந்த வில்லை பல தனித் தனி சிப்புகளாக வெட்டப்பட்டு, கோட்டுத் தொகுதிகளில் இரட்டையாக ஏற்றப்படுகின்றன.

simplex : ஒரு வழி ; ஒற்றையான ; எளிய : தகவல்களை ஒரே திரையில் மட்டுமே அனுப்பக் கூடிய ஒரு செய்தித் தொடர்பு இணைப்பு. இது முழு டூப்ளெக்ஸ், அரைடூப்ளெக்ஸ் என்பவற்றிலிருந்து வேறுபட்டது.

simplex transmission : எளிய அனுப்பு வழி : செய்தித் தொடர்பினை முன்னரே நிருணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட திசையில் மட்டுமே அனுமதிக்கிற, ஒரு வழியின் ஊடே தகவல்கள் நகர்ந்து செல்லுதல்.

SIMSCRIPT : சிம்ஸ்கிரிப்ட் : தூண்டுதல் பயன்பாடுகளுக்காகக் குறிப்பாக வடிவமைக்கப்பட்ட உயர்நிலை செயல்முறைப்படுத்தும் மொழி.

simulation : தூண்டல் ; போலச் செய்தல் ; பாவனை ; நடிப்பு ; மற்றொன்றைப் போல் : மற்றொரு பொறியமைவின் செயல்முறையின் சில குறிப்பிட்ட அம்சங்களை உருவாக்கிக் காட்டுதல். இயற்பியல் நிகழ்வுகளை, ஒரு கணினியில் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளின் மூலமாக இன்னொரு கணினி மூலம் செயற்படுத்துதல்.

simulator : தூண்டு கருவி ; போலிச் செய் கருவி : ஓர் இயற்பியல் அல்லது அருவப் பொறியமைவின் செயல் முறையின் சில குறிப்பிட்ட அம்சங் களை உருவாக்கிக் காட்டுகிற சாத னம், கணினிச் செயல்முறை அல்லது பொறியமைவு.

simulataneous input/output : உடனி கழ் உட்பாடு/வெளிப்பாடு ; ஒருங் கியல் உட்பாடு/வெளிப்பாடு ; ஒரே நேர உள்ளீடு/வெளியீடு : சில தகவல் களை உட்பாடாகச் செலுத்தவும், வேறு சில தகவல்களை வெளிப்பா டாக அமையவும் அனுமதிக்கிற சில கணினிப் பொறியமைவுகளிலுள்ள செய்முறை.

simultaneous processing : ஒருங் கியல் செய்முறைப்படுத்துதல் ; ஒரே நேரச் செயலாக்கம் ; உடனிகழ் செய லாக்கம் : ஒரே நேரத்தில் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பணிகளைச் செய்தல். இது உடனி கழ்வுச் செய்முறைப்படுத்துதலி லிருந்து வேறுபட்டது.

single address : தனிமுகவரி ; ஒற்றை முகவரி.

single board computer : ஒற்றைப் பலகைக் கணினி ; ஒரே அட்டைக் கணினி : ஒரே பலகையில் CPU, ROM, RAM, புறநிலை இடைமுகப்புகள் உட்பட அனைத்து மின்சுற்று நெறி யையும் கொண்டுள்ள கணினி.

single density : ஒற்றைச் செறிவு ; தனி அடர்த்தி ; ஒற்றை அடர்த்தி : ஒரு நெகிழ்வட்டில் தகவல்களைச் சேமித்து வைக்கும் முறை.

single density disk : ஒற்றை அடர்த்தி வட்டு : முதல் தலைமுறை நெகிழ் வட்டு.

single numeric value : ஒற்றை எண் ணியல் மதிப்பளவு.

single path : ஒற்றைவழி : இது ஒரு போகு இடை முகப்புக்கு மாறு பட்டது.

single precision : ஒற்றைத் துல்லியம்; ஒற்றைச் சரிநுட்பம் ; ஒரு மடங்கு துல்லியம் : ஓர் எண்ணைக் குறிப் பதற்கு ஒரு கணினிச் சொல்லைப் பயன்படுத்துதல். இது, இரட்டைத் துல்லியம், மும்மைத் துல்லியம் என்பவற்றிலிருந்து வேறுபட்டது.

single precision number : ஒற்றைத் துல்லிய எண் : நினைவகத்தின் 4 எண்ணியல்களுக்கு மட்டுமே பொது வாக ஒதுக்கப்படும் ஒரு பதின்மப் புள்ளி எண்.

single precision variable : ஒற்றைத் துல்லிய மாறி.

single sided disk : ஒரு பக்க வட்டு ; ஒற்றைப் பக்கவட்டு : தகவல் படிக்க வும், எழுதவும் ஒரே ஒரு பக்கத்தை மட்டும் பயன்படுத்தும் வட்டு.

single step : ஒற்றை நடவடிக்கை; ஒரு நிலை ; ஒற்றை அடி : கணினி இயங்கத் தொடங்கியவுடன் ஓர் ஆணை மட்டுமே நிறைவேற்றப்படும் வகை யில் அமைந்த கணினிச் செயற்பாடு.

single threading : ஒற்றை இழை யூட்டம் : ஒரு நடவடிக்கையை முடித்து அடுத்த நடவடிக்கை யினைத் தொடங்குவதற்கு முன்பு ஒரு நடவடிக்கையைச் செய்முறைப் படுத்துதல். ஏதேனுமொன்றை ஏற்றுக் கொள்கிற சாதனம் அல்லது இடம்.

site : தளம் : தனிச்சுற்று வழியினைக் கேட்டு, தனியொரு HTTP சேவையர் மூலம் அளிக்கப்படும் சேவை. இந்தப் பொருள் வரையறையின்படி சுற்றுவழியில் உள்ள www.netgen.com ஒரு தளம் ஆகும்.

site licence : தள உரிமம் : கொள் முதல் செய்பவரின் வளாகத்தில் ஒரு குறிப்பிட்ட மென்பொருளைப் பயன்படுத்துவதற்கு ஒரு மென் பொருள் தயாரிப்பாளர் அல்லது அவரது முகவர் வழங்கும் ஓர் உரி மம். இந்த உரிமம், வளாகத்திலுள்ள ஒரு சில எந்திரங்களில் மட்டும் ஒரு மென்பொருளைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.

SI units : எஸ்ஐ அலகுகள் : பன் னாட்டு மெட்ரிக் முறையில் அளவு அலகுகள். இது பொறியியல் அலகு களிலிருந்து வேறுபட்டது.

sixteen-bit chip : பதினாறு துண்மிச் சிப்பு : ஒரே சமயத்தில் 16 துண்மி களாகத் தகவல்களைச் செய்முறைப் படுத்துகிற நுண்செய்முறைப்படுத் தும் சிப்பு. இது, எட்டுத் துண்மிச் சிப்பு, 32 துண்மிச் சிப்பு ஆகியவற்றி லிருந்து வேறுபட்டது.

size : வடிவளவு ; பரிமாணம்.

sketching : உருவரை தீட்டுதல் ; செதுக்குதல் ; வரைவு : கணினி வரை கலை உத்தி. இதில் சறுக்கியின் பாதை நெடுக கோடுகளின் ஒரு பட்டை வரையப்படுகிறது அல்லது தீட்டப்படுகிறது.

sketch pad : உருவரை திண்டு ;செதுக்கு அட்டை ; வரைவு அட்டை : காட்சித் திரையில் காட்டப்படும் செயல் முறைச் சேமிப்புப்பகுதி. இது, வரை கலையை அல்லது வாசகத் தகவல் களை நிரந்தரமாகச் சேமித்து வைப் பதற்கு முன்பு, இயக்குபவர் எளி தாகச் சேர்க்கவும் நீக்கவும் அனுமதிக் கிறது.

skew : சாய்வு : கணினி வரைகலை யிலும், ஒளியியல் நுண்ணாய்விலும் ஒரு எழுத்துவரி அல்லது மறு அச்சிடப்பட்ட குறியீடு இணை யாகவோ அல்லது முனைப்பு விளிம் புக்குச் செங்கோணத்திலோ இல்லா திருக்கிற நிலை.

skip : துள்ளல் ; தாண்டு ; தவிர் : ஆணை கள் ஒரு வரிசை முறையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணை களைப் புறக்கணித்து விடுதல்.

SLA : எஸ்எல்ஏ : சிறப்பு நூலகங்கள் சங்கம் என்று பொருள்படும் Special Libraries Association என்பதன் தலைப் பெழுத்துச் சுருக்கம்.

slab : சொல் ; சொற்பகுதி : ஒரு சொல் லின் பகுதி.

slace : ஸ்லேஸ் : மற்றொரு சாதனத் தினால் கட்டுப்படுத்தப்படும் சாத னம்.

slack time : ஓய்வு நேரம் ; தளர் நேரம்.

slave : அடிமை : வேறொரு சாதனத்தி னால் கட்டுப்படுத்தப்படும் சாதனம்.

slave tube : அடிமைக் குழாய் : இரு குழாய்களும் ஒரே மாதிரியாகச் செயல்படுகிற வகையில் ஒரு மின் வாய் மற்றொரு மின் வாயுடன் இணைக்கப்பட்டுள்ள மின்வாய்.

sleep : உறக்கம் : செயல்முறைப் படுத்துவதில் முடிவற்ற வளையம் அல்லது செயல்முறைப்படுத்திய கால தாமதம் காரணமாக ஏற்படும் செயலற்றநிலை. செயல் முறைப் படுத்தும் மொழியில் உறக்க கட்டளையானது, ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குக் காலத்தாழ்வினை உண்டாக்குகிறது.

sleeve : குழல் ; உறை ; காப்புறை : ஒரு நெகிழ்வட்டினைச் சேமித்து வைப் பதற்கான பாதுகாப்பு உறை.

slew : விசை ஊசல் ; நகர்த்து ; ஓட்டு ஓர் அச்சுப்பொறி ஊடே காகிதத்தை நகர்த்தல்.

slewing : விசை ஊசலாட்டம் ; நகர்த்துதல் ; ஓட்டம் : எண்மான முறையில் கட்டுப்படுத்தப்படும் எந்திர சாதனங்களை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு நகர்த்தும் வேகம்.

slice : துண்டம் ; நறுக்கு : சிப்பு கட்டமைவின் ஒரு தனிவகை. இது, சொல் துண்மிக்கு வடிவளவை அதிகரிப்பதற்குச் சாதனங்களை இடையிணைப்பு செய்வதற்கு அனுமதிக்கிறது.

slide : காட்சி வில்லை ; படவில்லை: வரிசையாகக் காட்டப்படும் திரைக் காட்சி நிகழ்ச்சியில் ஒரு படக்காட்சி.

slide rule : நகரும் சட்டகம் ; நழுவு நுண்ணளவு கோல்.

slide show : வில்லைக் காட்சி ; காட்சி வில்லைக் காட்சி : ஒளிப்பேழைக் காட்சித் திரையில் ஒரு கால வரிசைப் படி வரைகலை உருக்காட்சிகளைக் காட்டுகிற கணினி வரைகலை மென்பொருள்.

slide show package : காட்சிவில்லைக் காட்சித் தொகுதி ; வில்லைக் காட்சித் தொகுப்பு : ஒளிப்பேழைக் காட்சித் திரையில் இனங்களின் வரிசை முறையில் வரைகலைகளைக் காட்டுகிற கணினி வரைகலை மென்பொருள் தொகுதி. மைக்ரோசாஃப்டின் பவர் பாயின்ட் பணித் தொகுப்பில் இது போன்ற திரைக்காட்சிப் படைப்பை உருவாக்க முடியும்.

sliding window : சறுக்குப் பலகணி ; சறுக்குச் சாளரம் : ஒப்புகையளிப்பதற்கு முன்பு பன்முகத் தொகுதிகளை அனுப்புகிற செய்தித் தொடர்பு மரபுமுறை. அனுப்பப்பட்டு ஒப்புகையளிக்கப்பட்ட தொகுதிகளின் போக்கினை இருமுனைகளும் கண்காணிக்கின்றன. அனுப்பப்பட்டு ஒப்புகையளிக்கப்பட்டவை பலகணியின் இடப்புறமும், அனுப்பப்பட்டு ஒப்புகையளிக்கப்படாதவை பலகணியின் வலப்புறமும் காணப்படும்.

slipstream : சறுக்கு ஓட்டம்; மென்பொருளில் ஒரு நுண்ணிய அல்லது கூட்டல் அதிகரிப்புச் சாதனத்தைப் பொருத்துதல். ஒரு புதிய பதிப்பு எண்ணை உருவாக்குவதன் மூலம் இத்தகைய சேர்ப்பினை அடையாளங்காட்டாத வகையில் இது செய்யப்படுகிறது.

slope : சரிவு நிலை : ஒரு கிடைமட்ட அலகில் ஒரு வளைகோடு ஏறுகிற அல்லது இறங்குகிற விகிதம்.

slot : செருகுவாய் ; கொள்தடம் ; துளை விளிம்பு; பொருத்துமிடம் : கூடுதலான அச்சிட்ட சுற்றுவழிப் பலகைகளுக்கான கொள்தடம். வட்டினை அல்லது நாடாவைச் செருகுவதற்கும் எடுப்பதற்குமுரிய கொள்தடம். செய்தித் தொடர்புகளில், ஒரு குறுகிய அலை வரிசை.

slope : சார்வு ; சரிவு : கிடைமட்ட அலகிலிருந்து வளைவானது எழும் அல்லது விழும் விகிதம்.

SLSI : எஸ்எல்எஸ்ஐ ; சில்சி : மீப்பெரிய நிறைகோல் ஒருங்கிணைப்பு என்று பொருள்படும் Super Large Scale Integration என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

SLT : எஸ்எல்டி : திண்மத் தருக்க முறை உத்தி எனப்பொருள்படும் Solid Logic Technique என்பதன் தலைப்பெழுத்துச்சுருக்கம். இதனை IBM புனைந்தது. ஒரு சுற்றுவழித் தகவமைவினை உருவாக்குவதற்கான நுண்மின்னணுத் தொகுதி உத்தியைக் குறிக்கிறது.

slug : புடைப்பு ; பருங்குழை : காகிதத்தில் அச்சடிப்பதன் மூலம், அச்சடிக்கத்தக்க எழுத்து அச்சுகளின் உருக்காட்சியைக் கொண்டு செல்கிற உலோக மெத்தை.

small business computer : சிறுவணிகக் கணினி : வணிகப் பயன்பாடுகளைச் செய்முறைப்படுத்துவதற்கான கணினிப் பொறியமைவினைச் சுற்றி உருவாக்கப்பட்டுள்ள தனித்தியங்கும் தகவல் செய்முறைப்படுத்தும் பொறியமைவு. சம்பளப் பட்டியல், கணக்குக் கொடுக்கல் வாங்கல் ஆணைப் பதிவு, சரக்குப் பட்டியல், பொதுப் பேரேடு போன்ற பயன்பாடுகளுக்கு இது பயன்படுகிறது.

small scale integration : SSI : சிற்றளவு ஒருங்கிணைப்பு ; எஸ்எஸ்ஐ : ஒருங்கிணைந்த சுற்று வழிகளின் வகை. இதில், ஒரு சிப்புவில் மிகக் குறைந்த செயற்பணிகள் அடங்கியிருக்கும். இது, நடுத்தர ஒருங்கிணைப்பு, பேரளவு ஒருங்கிணைப்பு, மிகப் பேரளவு ஒருங்கிணைப்பு ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது.

SMALLTALK : ஸ்மால்டாக் ; கணினி மொழிகளில் ஒருவகை : சாதாரண மக்களும் கணினியை மிக எளிதாகப் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட மொழி மற்றும் மென்பொருள் பொறியமைவு. திரையில் உருவங்களின் படவடிவங்களில் இயன்றளவு செயற்பாட்டுத் தேர்வுகளுக்கு உதவுகிறது. மிக அதிக அளவு படப்பரிமாற்றங்களுக்குச் இப்பொறியமைவுகள் உதவுகின்றன.

smart : விரைவூக்கம் ; திறமையான ; சூட்டிகையான : தனக்கேயுரிய சில கணிப்புத்திறனைக் கொண்டிருத்தல். விரைவூக்கச் சாதனங்கள் பெரும்பாலும் சொந்த நுண்செயலிகளைக் கொண்டிருக்கின்றன.

smart card : விரைவூக்க அட்டை ; சாமர்த்திய அட்டை ; சூட்டிகை அட்டை : கணினியில் அமைக்கப்பட்டுள்ள கடன் அட்டை வசதி.

smartcom : விரைவூக்கச் செயல்முறை : ஹேய்ஸ் என்ற நிறுவனம் சொந்தக் கணினிகளுக்காகவும், 'மேக்' கணினிகளுக்காகவும் தயாரித்துள்ள செய்தித் தொடர்புச் செயல்முறைகளின் தொகுதி. இது பல முனையங்களுடன் பொருந்தத்தக்கது. இது பல்வேறு மரபு முறைகளுக்கு ஆதாரமாக இருக்கிறது.

smartdrive : விரைவூக்க இயக்கி : வட்டுப் புதைவுச் செயல்முறை. இது DOS4.0, விண்டோஸ் 3.0 ஆகியவற்றுடன் வருகிறது.

smart install programme : விரைவூக்க அமைவுச் செயல்முறை : தானாகவே உருக்கொடுத்துக் கொள்ளக்கூடிய விரைவூக்கச் செயல்முறை. இது, வன்பொருள் சூழலில் ஆதாரம் பெற்றிருக்கும்.

smart key : விரைவூக்க விசை : 'நோபிரெய்னர் சாஃப்ட் வேர்' என்ற நிறுவனம் தயாரித்துள்ள சொந்தக் கணினி விசைப் பலகைக்கான பேரளவு செய்முறைப்படுத்தி. இது திரும்பத் திரும்பத் தட்டச்சு செய்வதைத் தவிர்ப்பதற்கு உதவும் முதல் பேரளவுச் செய்முறைப்படுத்தியாகும். இது ஒரு வாசகம் அல்லது ஆணைத் தொகுதிகளின் நிகழ்வுக்கான பேரளவினை உருவாக்குகிறது.

smart machines : விரைவூக்க எந்திரங்கள் ; திறமையான எந்திரங்கள்; சூட்டிகை எந்திரங்கள் : கட்டுப்பாட்டுத் தனிமங்களாக நுண் செய்முறைப் படுத்துகிற எந்திரங்கள்.

smart produce : விரைவூக்கப் பொருள் : உள்ளேயே அமைக்கப் பட்டுள்ள நுண்கணினிகளை அல்லது நுண் செயலிகளைக் கொண்டிருக்கிற தொழில் துறை மற்றும் நுகர்வோர் உற்பத்திப் பொருள்கள். இவை, இத்தகைய பொருள்களின் செயல்திறனையும் திறம்பாடுகளையும் கணிசமாக அதிகரிக்கின்றன.

smart terminal : விரைவூக்க முனையம்; திறமையான முகப்பு; சூட்டிகையான முனையம் : அனுப்பப்படும் அல்லது பெறப்படும் தகவல்களைச் செய்முறைப்படுத்துவதற்கு ஓரளவுக்குத் திறம்பாடுகள் கொண்ட முனையம். இது ஓர் அறிவுத்திறன் முனையம் போன்று திறனுடையதன்று. இது "ஊமை முனையம்" என்பதிலிருந்து வேறுபட்டது.

smash : தகர் ; மோது : சேமிப்பியின் ஒரு பகுதியை, அதன் மேல் இன்னொரு செயல் முறையை எழுதுவதன்மூலம் அழித்தல்.

SMIS : எஸ் எம் ஐ எஸ் ; ஸ்மிஸ் : 'நிருவாகத் தகவல் பொறியமைவுக் கழகம்' என்று பொருள்படும். Society for Management Information System என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம். இது நிருவாகச் செயற்பாடுகளையும், தகவல் பரிமாற்றங்களையும் மேம்படுத்துவதற்கான ஒரு தொழில்முறை அமைவனம்.

smooth : சமனம் செய்தல் ; எளிதான; சீரான : தகவல்களில் விரைவான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கிற அல்லது ஒழிக்கிற நடைமுறை.

smooth scrolling : சமனச் சுருளாக்கம்; சுழற்றுதல் ; சீரான உருளல் : ஒரு வரியிலிருந்து இன்னொருவரிக்குச் சுரிப் பிழப்பின்றி வாசகங்களைச் சுருளாக்கம் செய்வதற்கான திறம்பாடு.

smoothed data : சமனத் தகவல் : புள்ளிவிவரத் தகவல்களில் வரைபடத்திலுள்ள வளைவுகளைச் சமனமாக்கும் வகையில் சராசரியாக்கம் செய்யப்பட்ட புள்ளி விவரத் தகவல்.

smoothing circuit : சமனச்சுற்றுவழி : நேர்மின்னோட்டத்திலுள்ள மின்னணு வடிகட்டும் சுற்றுவழி. இது மாற்று மின்னோட்ட விசையிலிருந்து அதிர்வலைகளை அகற்றுகிறது.

SNA : எஸ் என் ஏ ; ஸ்நா : (கணினி இணையக் கட்டமைப்பு) : பொறியமைவு இணையக் கட்டமைவு என்று பொருள்படும் Systems Network Architecture என்பதன் தலைப் பெழுத்துக் குறும்பெயர்.

snapshot : நொடிப்புச் சேமிப்பு : வன்பொருள் பதிவேடுகள், தகுநிலைக் குறியீடுகள் அனைத்தும் உட்பட நினைவகத்தின் உள்ளடக்கங்களைச் சேமித்துவைத்தல். செயற்பாடு நின்றுவிடும்போது பொறியமைவை மீண்டும் இயக்குவதற்கும், எங்கு எப்போது தவறு நேர்ந்தது என்பதைக் கண்டறியவும் இவ்வாறு காலமுறையில் செய்யப்படுகிறது.

snapshot dump : நொடிப்புக் குவியல்; தடாலடித் திணிப்பு : குறிப்பிட்ட சேமிப்பு அமைவிடங்களின் மற்றும்/அல்லது பதிவேடுகளின் உள்ளடக்கங்களின் செயல்முறை ஓடும் போது குறிப்பிட்ட புள்ளிகளில் அல்லது நேரங்களில் நிறைவேற்றுகிற பதிவேடுகளின் இயக்காற்றல் குவியல்.

snapshot programme : நொடிப்புச் சேமிப்புச் செயல்முறை : குறிப்பிட்ட அறிவுறுத்தங்கள் நிறைவேற்றப் படும்போது அல்லது சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்போது

நினைவகத்தில் தெரிந்தெடுத்த சேமிப்புகளை வழங்குகிற சிறு செயல்முறை.

SNOBOL : ஸ்னோபால் : சரம்சார்ந்த குறியீட்டு மொழி எனப்பொருள் படும் String Oriented Symbolic Language என்பதன் குறும்பெயர். இதனை பெல் ஆய்வுக்கூடம் உருவாக்கியது. செயல்முறைத் தொகுப்பாக்கம், குறியீட்டுச் சமன்பாடுகள் உருவாக்கம் ஆகியவற்றில் முக்கியமாகப் பயன்படுகிறது. சர எழுத்துக்களை கையாள்வதற்கு முழுவசதி செய்து கொடுக்கிறது

snow : பூம்பனி : காட்சித் திரையில் மினுமினுக்கும் வெள்ளைப் புள்ளித் தோரணிகள். இது மென்பொருளுக்கும் கணினித் திரைக்குமிடையில் ஏற்படும் சிறிதளவு இணக்கமின்மை காரணமாக உண்டாகிறது.

SO : எஸ்ஓ (அனுப்ப மட்டுமான) : "அனுப்புதல் மட்டும்" என்று பொருள்படும் "Send Only" என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம். இது அனுப்புவதற்கு மட்டுமான திறனுடைய சாதனத்தைக் குறிக்கிறது. இது "ஏற்பு மட்டும்" என்பதற்கு மாறானது.

society for computer simulation : SCS: கணினித் தூண்டுதல் கழகம் ; கணினி போலி நிகழ்வுச் சங்கம் : தூண்டுதல் மற்றும் அதன் தொடர்பான தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதற்காக முக்கியமாகப் பாடுபடும் ஒரே தொழில் நுட்பக் கழகம். முக்கியமாக, நிருவாகம், சமூக, அறிவியல், உயிரியல், சுற்றுச் சூழல் சிக்கல்களைக் கையாள்கிறது. இதற்கு உலகெங்கும் உறுப்பினர்கள் உள்ளனர்.

society of certified data processors; (SCDP) : சான்றளிக்கப்பட்ட தகவல் செய்முறைப்படுத்துநர் கழகம் ; சான்றிதழ் பெற்ற தகவல் செயலாக்கங்களின் சங்கம் : சான்றளிக்கப்பட்ட கணினித் தொழில்முறையாளர்களின் நலன்களுக்காகவும் விருப்பங்களுக்காகவும் பாடுபடும் அமைவனம். இது 1971இல் அமைக்கப்பட்டது. அந்த அமைவனத்தின் நிலைப்பாடுகளையும், நடவடிக்கைகளையும், நெறியுறுத்தங்களையும் உறுப்பினர்கள் கட்டுப்படுத்துகிறார்கள். ICCP சான்றுபெற்றோரின் நலன்களுக்குப் பாடுபடும் ஒரே நிறுவனம்.

socket : குதைகுழி ; துளை ; கோள் குழி: செருகியை பொருத்துவதற்குரிய கொள்குழி.

soft : மென்.

soft clip area : மென் பிடிப்புப் பகுதி; மென்பிடி பகுதி ; மென் வரைபரப்பு : தகவல்கள் ஒரு வரைவி சாதனத்தில் எந்தப் பகுதியில் அளிக்கப்படவேண்டுமோ அந்தப் பகுதிகள், வரம்புகள்.

soft copy : மென்படி ; மென் பிரதி ; மென் நகல் : ஒரு ஒளிப்பேழை உருவமைவில் ஓர் ஒளி உருக்காட்சியாக அல்லது வன்படியாக அல்லாத வேறேதேனும் வடிவில் வழங்கப்படும் தகவல்.

soft error : மென்பிழை : மீண்டும் அனுப்பிடத்தக்க திரிபடைந்த செய்தி போன்ற மீட்கத்தக்க சிறுபிழை. இது "வன்பிழை" என்பதிலிருந்து வேறுபட்டது.

soft fails : மென் தளர்வுகள் ; மென் தோல்வி ; மென் பிறழ்வுகள் : நுண் மின்னணுச் சுற்றுவழிகளில் மின்காந்த நுண்ணலைத் துகள்களினால் உண்டாகும் ஓசைப் பெருக்கம். இதனால் கணினி நினைவகங்களில்

சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களில் திடீர் மாற்றம் ஏற்படக் கூடும். இந்த மாற்றங்கள் மென் தளர்வுகள் எனப்படும். இது சுற்று வழிகளில் ஒருங்கிணைந்த நுண்மின் னணு அமைப்பிகளின் வடிவளவுகள் குறைந்து கொண்டே வருவதால் ஏற்படும் எதிர்பாராத விளைவுகளில் இதுவும் ஒன்று.

soft font : மென் எழுத்து : வன்பொரு ளிலிருந்து அல்லாமல் மென் பொருள் ஆணைகளின் கோரிக்கையி லிருந்து வரவழைக்கப்படும் ஒரு எழுத்துரு. இந்த எழுத்துருக்களைப் பொதியுறைகளை விட மலிவான விலையில் வாங்கலாம். பயனாள ரின் குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப இதனைத் தகவமைத்துக் கொள்ள லாம். மென்எழுத்துருக்களை பயன் படுத்துவதற்கு முன்பு அச்சுப் பொறிக்கு இறக்கம் செய்தல் வேண் டும். சொல் செயல்முறைப்படுத்தி கள், மேசை வெளியீட்டுத் தொகுதி கள் பெரும்பாலும் இதனைக் கொண் டிருக்கின்றன.

soft hyphen : மென் இடைக்கோடு ; மென் ஒட்டுக் குறி ; மென் சிறுகோடு : ஒருவரியின் இறுதியில் ஒரு சொல் லை அசைகளிடையே முறிப்பதற் காக மட்டும் அச்சிடப்படும் ஒட்டுக் குறி.

soft keys : மென்சாவிகள் ; மென் விரற் கட்டை ; மென்விசைகள் : பயன்பாட் டாளர் வரையறுத்த பொருளைக் கொண்டிருக்கும் விசைப் பலகை யிலுள்ள விரற்கட்டைகள். இதன் பொருள், பயன்பாட்டாளருக்கும், செயல்முறைக்கும் மாறுபடக் கூடி யது என்பதால் மென்விசை எனப் பெயர் பெற்றது.

soft patch : மென் பட்டை : நடப்பு நிகழ்வுக்கு மட்டுமே நீடிக்கக்கூடிய நினைவகத்தில் தற்போதுள்ள எந்திர மொழியில் பொருத்தப்படும் ஒரு விரைவுச் சாதனம்.

soft return : மென் மடக்கு ; மென் திருப்பம் : வரியின் இறுதியைக் குறிப் பதற்கு வாசக ஆவணத்தில் மென் பொருளினால் செருகப்படும் குறி யீடு. அதிகத் தகவல்கள் செலுத்தப் பட்டால், அதற்கேற்ப இந்த மடக்கு மாற்றப்பட்டு, வாசகம் திருத்த படு கிறது. அச்சடிக்கும்போது மென் மடக்கு, அச்சுப் பொறியால் வரி இறுதிக் குறியீடாக மாற்றப்படு கிறது.

soft sector : மென் வட்டக்கூறு ; மென் பிரிவு ; மென் பகுதி : ஒரு வட்டில் எழுதப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி அந்த வட்டின் மீது வட்டக் கூறுகளை அல்லது பகுதி களைக் குறிக்கும்முறை. வட்டி லுள்ள தகவல்களின் அமைவிடங் களை மென்பொருள் கணிப்புகள் மூலம் நிருணயிக்கும் முறை.

soft sectored disk : மென்கூறாக்கிய வட்டு : ஒரு குறிப்பீட்டுப் புள்ளியி லிருந்து மென்பொருள் படிமுறை வரிசையினால் கூறுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒருவட்டு. வன் கூறாக்கிய வட்டுகளின் கூறுகள், வன் பொருள் குறியீடுகளினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும். பெரும்பா லான வட்டுகள் மென் கூறாக்கத் தைப் பயன்படுத்துகின்றன.

software : மென்பொருள் ; மென் சாத னம் ; மெல்லியல்பு ; கணினி செயல் முறை : ஒரு கணினிப் பொறியமை விலுள்ள இரும்பு அல்லது வன் பொருளுக்கு மாறுபாடாக, செயல் முறைகளின் தொகுதியைக் குறிக்கும் சொல். இவை கணினிப் பொறி யமைவின் செயற்பாட்டையும், வன் பொருள்களின் இயக்கத்தையும்

கட்டுப்படுத்துகின்றன. ஒரு கணி னிப் பொறியமைவுக்கான மென் பொருள்கள், பயன்பாட்டுச் செயல் முறைகள் என்றும் பொறியமைவுச் செயல் முறைகள் என்றும் வகைப் படுத்தப்பட்டுள்ளன.

software application : மென்பொருள் பயன்பாடு : ஒரு மென்பொருள் அல்லது கணினி செயல்முறைக்கான பொதுப்படையான பெயர்.

software architecture : மென்பொருள் உருவாக்கக் கலை ; மென்பொருள் கட்டமைப்பு : பொறியமைவு மென் பொருள் பயன்பாட்டினை வடி வமைத்தல். இதில் மரபு முறை, மற்ற செயல்முறைகளுடன் இடைத் தொடர்பு கொள்வதற்கான இடை முகப்புகள், எதிர்கால நெகிழ்திறன், விரிவாக்கத்திற்கான வசதிகள் உள் ளடங்கியிருக்கும்.

software base : மென்பொருள் ஆதா ரம் ; மென்பொருள் அடிப்படை ; மென் பொருள் தளம் : ஒரு குறிப்பிட்ட கணினிப் பொறியமைவுக்கான மென் பொருள். மென்பொருள் ஆதாரம் எவ்வளவு விரிவாக உள்ளதோ அந்த அளவுக்கு கணினிப் பொறியமைவு திறம்பாடுடையதாக இருக்கும்.

software broker : மென்பொருள் தரகர்: மென்பொருள் தொகுதிகளை விற் பனை செய்வதில் தனிக்கவனம் செலுத்தும் ஆள்.

software company : மென்பொருள் நிறுவனம் : மென்பொருள் கூடம்.

software compatability : மென் பொருள் ஒத்தியல்புத்திறன் ; மென் பொருள் ஏற்புடைமை : ஒரு பொறி யமைவுக்காக எழுதப்பட்ட செயல் முறையினை மாற்றம் எதுவுமின்றி இன்னொரு செயல்முறையில் பயன் படுத்தும் திறன்.

software carousel : மென்பொருள் களரி : "சாஃப்ட் லாஜிக் சொலு ஷன்ஸ்" என்ற நிறுவனம் சொந்தக் கணினிகளுக்காகத் தயாரித்துள்ள பணிவிசைச் செயல்முறை. ஒரே சமயத்தில் 12 பயன்பாடுகளைக் கொண்டு, அவற்றுக்கிடையே முன் பின் செல்வதற்கு இது அனுமதிக் கிறது.

software development : மென் பொருள் மேம்பாடு ; மென்பொருள் உருவாக்கம் : ஒரு பயன்பாட்டாள ரின் தேவைப்பாடுகளை நிறைவு செய்கிற செயல் முறைகளின் தொகுதிகளை உருவாக்குதல்.

software documents : மென்பொருள் ஆவணங்கள் : கணினிச் சாதனத்துட னும் மென்பொருள் பொறியமைவு களுடனும் தொடர்புடைய எழுதப் பட்ட அல்லது அச்சிடப்பட்ட வாசகங்கள்.

software encryption : மென்பொருள் பூட்டுவிசை ; மென்பொருள் இரக சியக் குறியீடு ; மென்பொருள் மறை யீடு : கணினியாக்கம் செய்யப்பட்ட தகவல்களை, வன்பொருள் சாத னங்கள் மூலம் அல்லாமல், செயல் முறைப்படுத்தும் உத்திகள் மூலம் குறியீடாக்கவோ மறைவிடுப்பு செய்யவோ செய்தல்.

software engineering : மென்பொருள் பொறியியல் : உற்பத்தி உருமாதிரிக் கணினிகளின் அடிப்படையில் பேர ளவு மென்பொருள் பொறியமைவு களை உருவாக்கிச் செயற்படுத்து வதைக் குறிக்கும் சொல். இச் சொல்லை நேட்டோ அறிவியல் குழுவின் கணினி அறிவியல் ஆய்வுக் குழுமம் 1967இல் உருவாக்கியது. கட்டுப்படுத்திய வடிவமைப்புகள், உயர்தரக் கணினி மென்பொருள்

களை உருவாக்குதல், இயக்கமுறை முறைமைகளை வகுத் தல் போன்ற பல்வேறு தொழில் நுட்பங்கள் இதில் உள்ளடங்கும்.

software house : மென்பொருள் இல்லம் ; மென்பொருளகம் : பொது மென்பொருள் தொகுதிகள், குறிப் பிட்ட மென்பொருள் தொகுதிகள் இரண்டையும் கணினிப் பொறி யமைவு உரிமையாளர்களுக்கு விற்பனைக்கு வழங்கும் நிறுமம்.

software interrupt : மென்பொருள் இடையீடு : ஒரு மென்பொருள் INT அறிவுறுத்தத்தின் மூலம் ஏற்படுத்தப் படும் இடையீடு.

software librarian : மென்பொருள் நூலகர் : ஒரு நிறுமத்தில், வட்டுத் தொகுதிகள், நெகிழ் வட்டுகள், காந்த நாடாக்கள் போன்ற பெரு மளவு மென்பொருள் தொகுதிக்கு பொறுப்பாகவுள்ள ஆள்.

software license: மென்பொருள் உரிமம்: ஒரு மென்பொருளை கொள் வினை செய்பவர் கையெழுத்திட்டுக் கொடுக்கும் ஒப்பந்தம். இதன்படி, வாங்கும் மென்பொருள்களை மறு விற்பனை செய்வதில்லை என்று வாங்குபவர் உறுதிமொழியளிக் கிறார்.

software maintenance: மென் பொருள் பராமரிப்பு;மென்பொருள் பேணல் : தற்போதுள்ள செயல்முறைகளில் தவறுகளைக் கண்டு பிடிப்பதற்கும், நீக்குவதற்குமான செய்முறை. இது பராமரிப்புச் செயல்முறையாளர் களால் செய்யப்படுகிறது.

software monitor: மென்பொருள் கண்காணிப்பி;மென்பொருள் திரை யகம்: செயல்புரிவதை அளவிடும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படும் செயல்முறை.

software package: மென்பொருள் தொகுதி; மென்பொருள் தொகுப்பு; மென்பொருள் பொதி : தொடர் புடைய கணினிச் செயல்முறைகளின் தொகுதி. இதில் பெரும்பாலும் ஒரு சேமிப்புச் சாதனத்தில் (நெகிழ் வட்டு) சேமித்து வைக்கப்பட்டுள்ள செயல்முறைகள்.

software piracy: மென்பொருள் திருட்டு ; கணினி செயல்முறைத் திருட்டு;மென்பொருள்களவு: வணிக முறையிலான அல்லது காப்புரிமை யுள்ள மென்பொருள்களை, உரு வாக்கியவரின் அனுமதியின்றிப் படி யெடுத்தல்.

software portability: மென்பொருள் தகவமைத் திறன்; மென்பொருள் பெயர்வுத் திறன்; மென்பொருள் ஏற்புடைமை : ஒரு கணினிச் சூழலி லிருந்து இன்னொரு சூழலுக்கு ஒரு செயல் முறையை எளிதாக நகர்த்தும் திறன். கணினித் தொழிலில் மூன் றாம் தரப்பு மென்பொருள் அதிகம் பரவி விட்டதால், இந்தத் திறன் மென் பொருள்களுக்கு அதிகம் தேவைப்படுகிறது.

software product: மென்பொருள் விளைபொருள்: செயல்முறைகள்தக வல் ஆவணமாக்கும் சில சமயம் விற் பனையாளர் உதவி ஆகியவை அடங் கியுள்ள விற்பனையாளர் தொகுதி. இது செயல்முறைப்படுத்தும் பொருள் என்றும் அழைக்கப்படும்.

software protection: மென்பொருள் பாதுகாப்பு;மென்பொருள் காப்பு : மென்பொருள்களை அனுமதியின் றிப் படியெடுப்பதைத் தடுப்பதற் கான பாதுகாப்பு.

software publisher: மென்பொருள் வெளியீட்டாளர்;மென்பொருள் பதிப் பாளர் : மென்பொருள் தொகுதிகளை

வெளியிட்டு, விற்பனை செய்கிற வணிகம்.

software resources: மென்பொருள் ஆதாரம்;மென்பொருள் மூலம்; மென் பொருள் வளம் : *கணிப்புப் பொறி யமைவுடன் இணைவுடைய மென் பொருள்களைக் குறிக்கும் செயல் முறை மற்றும் தகவல் ஆதாரங்கள்.*

software science: மென்பொருள் அறிவியல்: *கணினிச் செயல்முறைகளின் அளவிடக்கூடிய பண்புகள் தொடர்பான ஆய்வுத்துறை.*

software stack: மென்பொருள் அடுக்கு: *நினைவகத்தில் அமைக்கப் பட்டுள்ள அடுக்கு.*

software system: மென்பொருள் பொறியமைவு; மென்பொருள் முறைமை : *ஒரு கணினிப் பொறியமைவில் பயன்படுத்தப்படும் கணினிச் செயல்முறைகள் அவற்றின் ஆவணமாக்கம் ஆகியவற்றின் முழுத் தொகுதி.*

software technology: மென்பொருள் தொழில்நுட்பம்; கணினி செயல் முறை தொழில் நுட்பம்.

software term: மென்பொருள் சொல்: *கணிப்பொறி அமைப்பைக் கட்டுப் படுத்தி வன்பொருளை இயக்குவது போல் அல்லாமல் மென்பொருள் தொகுதி ஆணைத்தொடரைக் குறிப் பிடும் மாற்றுச் சொல். கணினி அமைப்பின் மென்பொருள் பயன் பாடுகள், ஆணைத்தொடர்கள் மற் றும் அமைப்பு ஆணைத்தொடர் களாகப் பிரிக்கலாம்.*

software tool: மென்பொருள் கருவி: *மற்ற மென்பொருள் செயல் முறை களை உருவாக்குவதற்கு உதவும் செயல்முறை. இது, வடிவமைப்பு, குறியீடிடுதல், தொகுத்தல் போன்ற வற்றைச் செய்ய பயன்படுத்து வோருக்கு உதவுகிறது.*

software transportability : மென் பொருள் இடம் பெயர் திறன்; மென் பொருள் மாற்றத் திறன்; மென் பொருள்அனுப்பப்படும் தன்மை: *ஒரு கணினிக்காக எழுதப்பட்ட ஒரு செயல் முறையை மற்றொரு கணினி மாற்றி, மாற்றம் எதுவுமின்றி செயல் படுத்தும் திறன்.*

solar cell: சூரியச் சிற்றம்; சூரிய மின் கலம் : *வெப்பக்கதிர் வீச்சினை ஈர்த்து மாற்றும் செய்கிற மின்கடத்தா மின்னியல் சந்திப்புச் சாதனம். இதில் சூரிய ஒளியின் ஆற்றல் நேரடியாக வும் திறம்படவும் மின்னாற்றலாக மாற்றப்படுகிறது.*

solaris 2.0 : சோலாரிஸ் 2.0 : *சன் சாஃப்ட் நிறுவனம் தயாரித்துள்ள ஸ்பார்க் கணினிகள், சொந்தக் கணினி ஆகியவற்றுக்கான பன் முகப்பணிச் செயற்பாட்டுப் பொறி யமைவு. இது சோலாரிஸ் 1.0 (ஸ்பார்க் மட்டும்) உடன் இணைக் கக்கூடியது. இது பகிர்மான கணிப் புக்கு வடிவமைக்கப்பட்டது.*

TCP/IP *மரபுமுறை இதில் அடங்கும்.*

solder mask: பற்றாசு மூடி : *ஓர் அச் சடித்த சுற்றுவழிப் பலகையில், பற்றாசு செய்யவேண்டிய பகுதி களை மட்டும் மூடாமலிருக்கும் மின் காப்புத் தோரணி.*

solicitation: கோரிக்கை; அழைத்தல்: *மென்பொருள்கள் வன்பொருள்கள் அல்லது சேவைகளுக்கான ஏலங் களைப் பணிந்தனுப்பும்படி விற் பனையாளர்களிடம் கோருதல்.*

solid modeling: திடநிலை உரு மாதிரி: *திடப்பொருள்களின் உருக் காட் சியை உருவாக்குவதற்கான கணித*

உத்தி. இது வடிவத்திலிருந்து குறைந்த உருவமுடையது. கம்பிச் சட்டகம், மேற்பரப்பு உருமாதிரி போலன்றி திடநிலை உருமாதிரிப் பொறியமைவுகள் எல்லா மேற் பரப்புகளும் சந்திக்கும்படி செய்து, பொருள் வடிவ கணித அளவில் துல்லியமாக அமையுமாறு செய் கிறது. திடநிலை உருமாதிரியின் உள்ளடக்கங்களைப் புலப்படுத்து வதற்காக அதனைக் கூறிடலாம்.

solenoid: **சோலனோய்ட்:** ஒரு **மின்சுற்று வழியை மூடுகிற** காந்த

சோலனோய்ட்
(Solemoid)

விசை. இது பெரும்பாலும் இடை மாற்றீடாகப் பயன்படுகிறது.

solid state: திடநிலை;திடநிலை சாதனம்: ஒருங்கிணைந்த மின்சுற்று வழிகள், மின்மப் பெருக்கிகள் போன்ற திடப்பொருள்களில் மின் னியல் அல்லது காந்த நிகழ்வுகளைப் பொறுத்து அமைந்திருக்கும் மின்னணுவியல் அமைப்பிகள்.

solid state cartridge: திடநிலைப் பொதியுறை;திடநிலைப் பெட்டி;திட நிலைப் பேழை; திண்ம நிலைப் பேழை: பல நுண்கணினிப் பொறி யமைவுகளுடன் பயன்படுத்தப் படும் தகவமைவிலுள்ள செயல் முறைப்படுத்திய செருகி.

solid state device: திடநிலைச் சாத னம்;திண்ம நிலைக் கருவி: திடநிலை மின்னணுச் சுற்றுவழித் தனிமங்களி லிருந்து தயாரிக்கப்பட்ட சாதனம்.

solid state memory : திடநிலை நினைவகம் : எந்திர பாகங்கள் எதுவு மில்லாத ஒரு மின்மப் பெருக்கம் செய்யப்பட்ட மின்கடத்தி அல்லது மெல்லிய சுருள்.

solid state relay: திடநிலை அஞ்சல்: எந்திரபாகங்கள் இல்லாத அஞ்சல். இதிலுள்ள விசைச் செயல்முறைகள் அனைத்தும் மின்கடத்திகள் அல்லது மென்சுருள் அமைப்பிகள்.

solver: தீர்வு வழங்கி; விடை வழங்கி: உருவாக்கம் செய்வதற்கு விரிதாளை அனுமதிக்கிற கணிதச் செயல் முறைகள்.

S-100 bus: எஸ் - 100 ; மின் இணைப்பு தொகுதி; எஸ் - 100 வழித் தடம் : சில வகை நுண்கணினிகளுக்கும் புற நிலைச் சாதனங்களுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்தத் தக்க தர அளவுச் சாதனங்கள். இதில் 100 மின்னியல் இணைப்புகள் இருக்கும்.

son file: மகவுக் கோப்பு.

SOP: எஸ்ஓபி : சொந்தச் செயற் பாட்டு நடைமுறை என்று பொருள் படும். Standard Operating Procedure என்பதன் தலைப்பெழுத்துக் குறும் பெயர்.

sort: பிரிப்பு;பிரி; வரிசைப்படுத்தல்; இணக்கப்படுத்து; வகைப்படுத்து : 1. பதிவேடுகளை ஒரு தருக்க முறைப் படி அமைத்தல். ஒரு கணினியில், காந்தவட்டுகளை அல்லது நாடாக் களைப் பயன்படுத்திப் பெரும் பாலும் பிரிப்பு செய்யப்படுகிறது. 2. வட்டில் அல்லது நாடாவிலுள்ள பதிவேடுகளைப் பிரித்தமைக்கிற பயன்பாட்டுச் செயல்முறை.

sort algorithm: வகைப்பாட்டு எண் மானம்; வரிசை நெறிமுறை: தகவல் களை ஒரு புதிய வரிசை முறையில்

மறுபடியும் ஒழுங்குபடுத்துவதற்கான சூத்திரம்.

sort effort: பிரிப்பு முயற்சி; வரிசைப் படுத்தும் முயற்சி: ஒழுங்கற்ற பட்டியலை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவைப்படும் நிறுத்தங்களின் எண்ணிக்கை.

sort generator: பிரிப்பு உருவாக்கி; வகைப்படுத்தல் உருவாக்கி; வரிசையாக்கி : ஒட்டத்தை உண்டாக்குவதற்கான ஒரு பிரிப்புச் செயல் முறையை உருவாக்குகிற செயல் முறை.

sorting: பிரிப்பி; வரிசைப்படுத்தி: முன்பே தெரிந்தெடுத்த வரிசை முறைப்படி ஓர் அட்டைப் பதிவேடுகளின் தொகுதியைப் பிரித்தமைக்கும் சாதனம்.

sorting: பிரித்தல்;வரிசைப்படுத்தல்; வகைப்படுத்தல்; வகைமை: அளவை முறைப்படி தகவல்களை வரிசைப் படுத்தும் செயல்.

sort/merge programme: பிரி/ சேர் ஆணைத்தொடர்;வரிசைப்படுத்து/ சேர்ப்பு நிகழ்வு: வரையறுக்கப்பட்ட வரிசையில் பதிவேடுகளைப் பிரிக்கவோ சேர்க்கவோ பயன்படுத்தப் படும் பொதுவான செயல்முறை.

sort key: வகைப்பாட்டு விசை: கோப்பின் வரிசைமுறையினைக் கட்டுப்படுத்துகிற, ஒரு பதிவேட்டிலுள்ள புலம் அல்லது புலங்கள்.

SOS: எஸ்ஓஎஸ்;சாஸ் : "நீலமணிமீது சிலிக்கன்" என்று பொருள்படும். "Silicon on Saphire" என்பதன் தலைப் பெழுத்துச் சுருக்கம். சிலிக்கன் நீல மணிப் படுகைகளில் ஒருங்கிணைந்த சிப்புகளை உருவாக்கும் செய்முறை.

sound bandwidth: ஒலிக்கற்றை அகற்சி : ஒலி அலைவெண்களின் வீச்செல்லை. மனிதரின் காது ஏறத்தாழ 20 முதல் 20,000Hz ஒலி வீச்சைக் கேட்க முடியும். ஆனால் மனிதரின் குரலுக்கு வீச்செல்லை 3,000Hz மட்டுமே.

sound hood : ஒலிக் கவிகை; ஓசை மூடி; ஒலிக்கூடு : பயன்பாட்டின் போது ஓசையைக் குறைப்பதற்காக அச்சடிப்பி மீது பொருத்தப்படும் சாதனம். இதனை "ஓசை அடைப்பு" என்றும் கூறுவர்.

sound waves: ஒலி அலை.

source: ஆதாரம்;மூலம்; மூலாதாரம் : ஒரு கள விளைவு மின்மப் பெருக்கியின் மூன்று முனையங்களில் அல்லது மின்வாய்களில் ஒன்று. வடிகால் வாயிலுக்குப் பாய்கின்ற மின்விசை ஊர்திகளின் தோற்றுவாய்.

source code: ஆதார ஆணைத் தொடர்கள்; மூலக் குறிமானம்; ஆதாரக் குறிமுறை; மூல வரைவு : ஒரு கணினியால் செய்முறைப்படுத்துவதற்கு முன்புள்ள மூல வடிவிலுள்ள ஆணைத் தொகுதி. கணினியானது ஆதாரக் குறியீட்டினைக் கணினி புரிந்து கொள்ளக்கூடிய ஒரு குறியீடாகத் தானாகவே மாற்றுகிறது.

source computer: ஆதாரக் கணினி; மூலக் கணினி : ஆதாரச் செயல் முறையை ஓர் இலக்குச் செயல் முறையாக மொழிபெயர்க்கப் பயன் படும் கணினி.

source data automation: ஆதாரத் தகவல் தானியக்கம்;மூலத்தகவல் தானியங்கி : தகவல் பதிவுக்கான தானியங்கும் முறைகளைப் பயன் படுத்துதல். மரபுத்தகவல் பதிவு முறைகளில் தேவைப்படும் வேறு பல நடவடிக்கைகளையும், ஆட்களையும், தகவல் சாதனங்களையும்

குறைப்பதற்கு அல்லது தவிர்ப் பதற்கு இது உதவுகிறது.

source deck: ஆதார அடுக்கு; மூலப் பெட்டி : ஆதாரமொழியில் ஒரு கணி னிச் செயல்முறையைக் கொண்டிருக் கிற அட்டை அடுக்கு. இது "பொருள் அடுக்கு" என்பதிலிருந்து வேறு பட்டது.

source disk: ஆதார வட்டு; மூல வட்டு : தகவல்களில் எதிலிருந்து பெறப்படுகின்றனவோ அந்த வட்டு. இது இலக்குவட்டு என்பதிலிருந்து வேறுபட்டது.

source document: ஆதார ஆவணம் ; ஆதார மொழி; மூல ஆவணம் : ஆதாரத் தகவல்களை எதிலிருந்து எடுக்க முடியுமோ அந்த மூல ஆவணம். பற்றுச்சீட்டு, விற்பனைச் சீட்டு போன்றவை இதற்கு எடுத்துக் காட்டு.

source drive: ஆதார இயக்கி: தகவல் கள் எதிலிருந்து பெறப்படுகின் றனவோ அந்த வட்டு அல்லது நாடா இயக்கி. இது இலக்கு இயக்கி என்பதிலிருந்து வேறுபட்டது.

source file: ஆதாரக் கோப்பு: பொது வாக ஓர் உயர்நிலை மொழியில் எழுதப்பட்டுள்ள ஒரு செயல் முறை. இது, ஒரு மொழிபெயர்ப்பு அல்லது தொகுப்பு மூலம் பொருள் கோப் பினை உருவாக்கப் பயன்படுத்தப் படுகிறது.

source language: ஆதார மொழி ; மூல மொழி : ஓர் இணைப்பு மொழி போன்ற ஒரு தாழ்நிலை மொழி அல்லது பேசிக், ஃபோர்ட்ரான், கோபால் போன்ற ஆதாரச் செயல் முறை எழுதப்படுகின்ற ஓர் உயர் நிலைமொழி.

source media: ஆதார ஊடகம்; மூல ஊடகம்; ஆதாரச் சாதனம் : மூலத் தகவல் எடுக்கப்படுகிற ஆதார ஆவணங்கள்.

source programme: ஆதாரச்செயல் முறை;ஆதார நிகழ்வு; மூல ஆணைத் தொடர் : பேசிக், ஃபோர்ட்ரான், கோபால், பாஸ்கல் போன்ற ஆதார மொழியில் அல்லது இணைப்பு மொழியில் எழுதப்பட்டுள்ள கணி னிச் செயல்முறை. இது ஒரு மொழி பெயர்ப்புச் செய்முறைக்கு உட்பட வேண்டும்.

source register: ஆதாரப் பதிவேடு ; மூலப் பதிவு; மூலப் பதிவகம்: மாற்றம் செய்யப்படும் ஒரு தகவல் சொல் லில் அடங்கியுள்ள பதிவேடு.

source (the): மூலம்; சோர்ஸ் : "சோர்ஸ் தொலைத்தொடர்புக் கழகம்" என்ற அமைவனத்தினால் நடத்தப்படும் தகவல் பயன்பாட்டுப் பணி. சந்தாதாரர்களுக்கு இந்தச் சேவை கிடைக்கும். கணினி பயன் பாட்டாளர்கள், விளையாட்டுகள் ஆடவும், தகவல் ஆதாரங்களை அணுகவும், மின்னஞ்சல் அனுப்ப வும், பெறவும், செய்தியிதழ்கள் படிக்கவும் இன்னும் பல காரியங் களுக்கும் பயன்படுகிறது.

source statement: ஆதார அறிக்கை : ஒரு செயல்முறைப்படுத்தும் மொழி யில் (ஆதாரமொழி) உள்ள ஆணைச் சொற்றொடர்.

SPA: எஸ்பிஏ; ஸ்பா : 'பொறியமைவு கள் மற்றும் நடைமுறைகள் சங்கம்' என்று பொருள்படும். Systems and Procedures Association என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம். கருத் தரங்குகள் தொழில்முறைக்கல்வி, ஆராய்ச்சி ஆகியவை நடத்தி மேலாண்மைப் பொறியமைவுகளை

யும் நடைமுறைகளையும் மேம்படுத்துவது இதன் நோக்கம்.

space: எழுத்திடவெளி; இட வெளி : 1. எழுத்துகளிடையிலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெற்றெழுத்துகள். 2. இரும பூஜ்யத்துக்கு இணையான தொடர்பு வழிநிலை.

spacebar: இடவெளி விசை; இட வெளிப்பட்டை; இட வெளிச்சட்டம் : ஒரு விசைப் பலகையின் அடியிலுள்ள இட வெளிகளை உண்டாக்குவதற்கான நீண்ட குறுகிய விரற்கட்டை. இதனை ஒருமுறை அழுத்தினால், இது வாசகத்தில் செருகல் புள்ளியில் இடைவெளி உண்டாக்குகிறது.

spaghetti code: குழப்பக் குறியீடு; குழப்பக் குறிமுறை : ஒரு செயல்முறையை புரிந்துகொள்ள இயலாதவாறு அதனைத் தேவையின்றிக் குளறுபடிசெய்கிற ஒரு செயல்முறை இந்தப் பெயரில் அழைக்கப்படுகிறது.

span: வீச்சளவு : மதிப்பளவுகளின் வீச்சில் மிக உயர்ந்த மதிப்பளவுக்கும் மிகக்குறைந்த மதிப்பளவுக்குமிடையிலான வேறுபாடு.

spanning tree: வீச்சளவு மரம்: இருபண்புகளைக் கொண்ட ஒரு வரை படத்தில் உட்படம் (1) அது ஒருமரம்; (2) மூல வரைபடத்தின் அனைத்து மைய முனைகளையும் கொண்டிருக்கும்.

spare parts: உதிரி பாகங்கள்; மாற்றுக் கருவிகள்.

sparse array: அடர்த்தியற்ற வரிசை; அடர்விலா வரிசை: பெரும்பாலான பதிவுகள் பூஜ்யத்தின் மதிப்பளவைக் கொண்டுள்ள வரிசை.

spatial data management: இடத்தொடர் தகவல் நிருவாகம் ; தாராளத் தகவல் மேலாண்மை; இடம் சார்ந்த தகவல் மேலாண்மை : தகவல் ஆதாரங்கள், ஆவணக் கோப்புகள் அல்லது வேறு தகவல் வகை எதனையும் குறிக்கிற படங்களை காட்சித் திரையில் காட்டி தகவல்களை அணுகுவதற்கு உதவுகிற உத்தி.

spatial digitizer: இடத்தொடர்பு இலக்கமாக்கி;இடம் சார்ந்த எண்மானமாக்கி : கணினி வரைகலையில் முப்பரிமாணப் பொருள்களை உருவாக்கப் பயன்படுகிற சாதனம்.

spawn: கான்முளை: நடப்புச்செயல் முறையிலிருந்து மற்றொரு செயல் முறையைத் தொடங்குகிறது.

spec: ஸ்பெக்: `தனிக்குறிப்பீடு' எனப் பொருள்படும் `Specification' என்ற ஆங்கிலச் சொல்லின் சுருக்கம்.

special character: சிறப்பெழுத்து; சிறப்பு உரு: ஓர் எழுத்தாகவோ இலக்கமாகவோ, வெற்றிடமாகவோ இல்லாத வரைகலை எழுத்து. எடுத்துக் காட்டு: கூட்டல் குறியீடு, சமக் குறியீடு, உடுக்குறி, டாலர் குறியீடு, காற்புள்ளி முதலியன.

special function key: சிறப்புப்பணி விரற்கட்டை ;சிறப்புச் செயற்பாட்டு விசை : ஓர் எந்திரச் செயற்பணியைக் கட்டுப்படுத்துகிற விசைப் பலகையிலுள்ள ஒரு விரற் கட்டை. இது, ஒரு குறிப்பிட்ட கணினிச் செயற்பாட்டினைத் தொடங்கி வைக்கிறது.

special interest group (SIG): தனி நலக் குழுமம்; சிறப்பு ஆர்வக் குழு: ஓர் அமைவனத்தினுள் உள்ள ஒரு தனிக்குழுமம். இது ஒரு தனிப் பொருட்பாடு குறித்தக் கூட்டங்கள் நடத்தும்; கருத்தரங்குகளை நடத்தும்; ஆவணங்களை வெளியிடும். இந்தக் குழுமங்கள் தாங்களே தங்கள்

அலுவலர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன. தங்கள் பணிகளை வகுத்துக் கொள்கின்றன. தாங்களே நிதி திரட்டிக் கொள்கின்றன.

special key: சிறப்புச் சாவி.

special libraries association: SLA: சிறப்பு நூலகச் சங்கம் : நூலகங்கள் மற்றும் தகவல் வல்லுநர்களின் பன்னாட்டு அமைவனம். வங்கிகள் அருங்காட்சியகங்கள், சட்டநிறுவனங்கள் போன்ற பல்வேறு தனிநலக் குழுமங்களுக்கான ஆதார மையங்களை இது நிறுவுகிறது.

special purpose: சிறப்பு நோக்கம்: முக்கியமான மாறுதல்கள் ஏதுமில்லாமல், ஒரு குறிப்பிட்ட வகைப் பயன்பாடுகளுக்கான நோக்கம். இது பொதுநோக்கம் என்பதிலிருந்து வேறுபட்டது.

special purpose computer: சிறப்பு நோக்கக் கணினி : சில குறிப்பிட்ட வகைகளிலான எண்ணல் அல்லது தருக்க சிக்கல்களைத் தீர்ப்பதற்காக வென்றே உருவாக்கப்பட்ட கணினி. தானியங்கி ஒளிப்படக் கருவிமுதல் வீட்டுச் சாதனங்களிலிருந்து விண்கலங்களைக் கண்காணிப்பதுவரை பலவகையான பணிகளைச் செய்யத் தக்கது.

special purpose programming language: சிறப்பு நோக்க ஆணைத் தொடர் மொழி: ஒரு குறிப்பிட்ட வகையான சிக்கல் அல்லது பயன்பாட்டினை மட்டும் கையாளும் வகையில் உருவாக்கப்பட்ட ஆணைத்தொடர் மொழி.

specific fields: குறிப்பிட்டதுறைகள்.

specialists: வல்லுநர்கள்.

special symbol: சிறப்புக் குறியீடு.

specification: விளக்கக் குறிப்பு; விவரவரையறை; குறிப்பீடு : ஒரு சாதனம், செயல்முறை அல்லது உற்பத்திப் பொருளின் தேவைப்படும் தன்மைகள் பற்றிய விளக்கமான குறிப்பு.

specification sheet: விளக்கக் குறிப்பு தாள்; விவரவரையறைதாள் : ஆர்பிஜி (RPG) சொற்றொடர்களை குறியீடு செய்யப் பயன்படும் படிவம்.

specs: ஸ்பெக்ஸ் : specifications என்பதன் குறும்பெயர்.

spectral colour: பட்டை ஒளி வண்ணம் : கணினி வரைகலையில் ஒளியின் ஓர் ஒற்றை அலை நீளத்தின் வண்ணம். இந்த ஒளிப்பட்டையில் அடிப்பகுதியில் செங்கருநீல வண்ணத்தில் தொடங்கி மேல்நோக்கி நீலம், ஊதா, பச்சை, மஞ்சள், ஆரஞ்சு என்று சென்று சிவப்பு வண்ணத்தில் முடியும்.

spectral response : பட்டை ஒளிப் பதில் செயல் : பார்க்கும் ஒளியின் வண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒளியுணர்வுச் சாதனத்தின் மாறியல் வெளிப்பாடு.

speech recognition : பேச்சு கண்டறிதல் ; பேச்சறிதல் : நினைவகத்தில் உள்ள குரல் அமைப்புகளில் நுண் ஒலிபெருக்கியிலிருந்து வரும் சமிக்ஞைகளின் அமைப்புகளை ஒப்பிட்டு சேர்க்கும் கணினியின் திறன். இதன் மூலம் பேசவரும் சொற்களை அது அறிந்து கொள்கிறது.

speech synthesis: பேச்சு பிரித்தறிதல் ;பேச்சுருவாக்கம் : குறிப்பிடப்பட்ட பேச்சுப் பகுதிகளை உண்மையான சொற்கள், சொற்றொடர்களாகவும் ஒலியன்களை சொற்களாகவும் வரிசைப்படுத்தித் தருவது.

speech synthesizer: பேச்சு பிரிக்கும் பொறி; பேச்சுருவாக்கி : எண்முறைக்

குறியீட்டை புரிந்து கொள்ளக்கூடிய பேச்சாக மாற்றும் சாதனம். குறியீட்டை ஒலிபெருக்கி மூலம் அனுப்பி செயற்கை மனிதக்குரலாக பேச வைக்கிறது.

speed : செயல் வேகம்.

speed buffering: வேக இடையீடு : உட்பாட்டுக்கும் வெளிப்பாட்டுக்கும் இடையிலான வேக வேறுபாடுகளை ஈடுசெய்யக்கூடிய உத்தி. இடையீட்டில் தகவல்கள் அதிக வேகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, குறைந்த வேகத்தில் வெளியிடப்படுகிறது அல்லது குறைந்த வேகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதிவேகத்தில் வெளியிடப்படுகிறது.

speed of electricity / light: மின் விசை/ ஒளிவேகம் : ஏற்றத்தாழ வினாடிக்கு *2,99,311* கி.மீ. வேகம்.

speed of light: ஒளியின் வேகம்; ஒளி வேகம் : ஒளி பயணம் செய்யும் வேகம். ஒரு நொடிக்கு 2,99,768 கி.மீ. கள் என்பது கணினிகளுக்கும் வெளிப்புற உறுப்புகளுக்கும் இடையில் தகவல்களை அனுப்புவதற்கு ஆகும் நேரம்.

spelling checking: சொல் பிழை திருத்தம் : சொல் செயலகத்துடன் தொடர்புள்ள கணினி ஆணைத் தொடர். ஒரு சொற்பட்டியலுடன் தட்டச்சு செய்யப்பட்ட சொற்களை ஒப்பிட்டு எழுத்துப் பிழைகளைக் கூறுவது.

spider configuration: சிலந்தியுரு அமைப்பு : விநியோகிக்கப்பட்ட அமைவில் ஒரு வகை. இதில் பல்வேறு கட்டமைப்பு கணிப்பு அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒரு மையக் கணினி அமைவு கண்காணிக்கிறது.

spike: மின் துள்ளல் : குறுகிய உச்சமடையும் குறைந்த நேர வோல்டேஜ். திடீரென மின்சாரம் அதிகரிப்பது.

spindle: சுழல் முனை;சுழல் தண்டு : ஒரு வட்டு இயக்கியிலுள்ள சுழல் தண்டு. ஒரு நிலைவட்டில், தகடுகள் சுழல்முனையுடன் இணைக்கப்பட்டிருக்கும். அகற்றக்கூடிய ஒரு வட்டில், சுழல்முனை இயக்கியிலேயே இருக்கும்.

spindle motor: சுழல் தண்டு விசைப் பொறி.

spinwriter: சுழல் எழுது பொறி;சுழல் எழுதி: ஒரு குறிப்பிட்ட வகையான உயர்தர கணினி அச்சுப் பொறி.

spline: இசைவான வளைவு : கணினி வரைகலையில் வருவது. கணித முறையில் எளிதானதும் பிரிந்திருக்கும் தகவல் புள்ளிகளைச் சேர்ப்பதற்கு அழகிய வழி. தகவல் புள்ளிகளிடையே அழகிய விளைவுகளையும் பரப்புகளையும் உருவாக்கப் பயன்படுவது மட்டுமல்லாது அளவு கோல்களுக்கிடையே நகர்த்தவும் பயன்படுவது. உயிர்ப் படங்களில் முக்கிய பின்னணிகளை விளக்கப் பயன்படுவது.

split screen: பகு திரை.

spliting a window: பலகணிப் பகுப்பு; சாளரப் பகுப்பு : ஒரு பலகணியை இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட பாளங்களாகப் பகுத்தல்.

split window: பிரிந்த பலகணி; பகு சாளரம் : Split Screen போன்றது.

spool: சுருணை ; சுருள்: *1.* காந்த நாடா சுருணை. 2. காந்த நாடாவைச் சுருட்டுவது.

spooler: சுருளி: வேறு வேலைகளைச் செய்து கொண்டே அச்சுப்

பொறியில் வன்படியை உருவாக்க கணினியை அனுமதிக்கும் ஆணைத் தொடர் அல்லது வெளிப்புறச் சாதனம்.

spooling: சுருட்டல் : *1.* பல்வேறு உள்ளீடு/வெளியீடு சாதனங்கள் ஒரே நேரத்தில் இயங்க அனுமதிக்கும் செயல்முறை. தாங்கிகளின் மூலம் ஒரு கணினி அமைப்பு தகவல்களை அனுப்புதல் அல்லது பெறுதல். *2.* அமைப்பின் வேறொரு பகுதி அதை செயலாக்கத் தயாராகும் வரை நாடா கோப்பு அல்லது வட்டில் தகவல் களை தற்காலிகமாக சேமிக்க அனு மதிப்பது.

spread sheet : அகலத்தாள்; விரிதாள்: சிற்றறைக் கட்டங்களாக தகவல் அல்லது வாய்பாடுகளை வரிசை படுத்துகின்ற ஆணைத்தொடர்களில் ஒன்று. பலவகையான வணிகப் பயன்கள் கொண்டது. லோட்டஸ் *1-2-3*, எக்செல், சூப்பர்கால்க் போன் றவை வணிக விரி தாள்களில் புகழ் பெற்றவை.

spreadsheet package : விரிதாள் தொகுதி.

spread spectrum : அகல் ஒளிக் கற்றை: அனுப்பு மற்றும் ஏற்புச் சாதனங்கள் இரண்டிலும் உள்ள தனிவகைத் தோரணிக்கேற்ப ஊர்தி அலை வெண்ணைத் தொடர்ச்சியாக மாற்று கிற வானொலி அனுப்பீடு. ஒரே இடப்பரப்பில் பன்முகக் கம்பி யில்லா அனுப்பீடுகளை அனுமதிப் பதற்காகவும் பாதுகாப்புக்காகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

spreadsheet compiler : விரிதாள் தொகுப்பி : உருவாக்கிய விரிதாள் தொகுதியில்லாமல் இயங்குகிற விரி தாள்களை தனிநிலைச் செயல் முறை களாக மொழிபெயர்க்கிற மென் பொருள்.

sprites : வில் இழுப்பிசை : முகப்பில் உள்ள பிறசெய்திகள் அல்லது வரை படங்களோடு தொடர்பின்றி சுயேச் சையாக நகர்த்தக் கூடிய அதிக துல் லியம் உள்ள பொருள்கள். திரையில் உள்ள பொருள்களின் முன்பாக அல் லது பின்புறத்தில் நகர்ந்து தன்னு டைய அளவு மற்றும் நிறத்தை மாற்றிக் கொள்ளக் கூடியது. உயிர்ப் பட தொடர்களை உருவாக்க உதவு வது.

sprocket holes : வழிப்படுத்துத் துளைகள்: அச்சுப்பொறியில் காகிதத் தை அனுப்புவதற்காக தொடர் எழுது பொருளின் இரு பக்கங்களிலும் சம இடைவெளியில் துளைகளை இடுவது.

square root : எண் வர்க்க மூலம்.

square wave : சதுர அலை : அலை மானி மூலம் பார்க்கக் கூடிய எண் மானத்துடிப்பின் வரைகலை உருக் காட்சி. இது ஒரு குறிப்பிட்ட பரப்புவரை மிகவேகமாக எழுந்து, துடிப்பின் காலநீட்டிவரை மாறாமல் நின்று, துடிப்பின் முடிவில் வீழ்வ தால் சதுர வடிவமாகத் தோன்று கிறது.

squeezer : ஸ்குவீசர் : பேரளவு ஒருங் கிணைப்பு (எல்எஸ்ஐ) மின் சுற்றை அதன்மூல, பெரிய வடிவில் வடி வமைக்கும் நபர்.

SSI : எஸ்எஸ்ஐ : சிற்றளவு ஒருங் கிணைப்பு எனப்பொருள்படும் small scale integration என்பதன் குறும் பெயர்.

stack : அடுக்கு : அடுக்கில் உள்ள பொருள்களை அவற்றின் நினைவக இடத்திற்கு முகவரியிடுவதற்குப்

பதிலாக உள்நினைவகத்தில் சேமிக்கப்படும் வரிசைமுறை தகவல் பட்டியல். அடுக்கின் மேற்பகுதியில் இருந்தோ அல்லது அடியில் இருந்தோ தகவல்களை கணினி எடுக்கிறது.

stacked job processing : அடுக்கப்பட்ட பணி செயலாக்கம் : கணினி அமைப்புக்குத் தருவதற்காக பல்வேறு வேலைகளை அடுக்கி வைக்க அனுமதித்து, அவைகளை ஒவ்வொன்றாக செய்ய அனுமதிக்கும் தொழில்நுட்பம். இயக்கவேண்டிய வேலைகளின் வரிசை அட்டைபடிப்பிக்குத் தரப்படுகின்றது. வேலை கட்டுப்பாட்டு அட்டைகளின்படி ஒவ்வொரு வேலையும் செய்யப்படுகிறது.

stack pointer : அடுக்குச் சுட்டு; அடுக்குக் காட்டி : அடுக்கில் உள்ள இருப்பிடங்களைக் காட்டப் பயன்படும் சுட்டு. அடுக்கிலிருந்து ஒவ்வொரு புதிய தகவல் வெளியே எடுக்கப்படும்போது அல்லது உள்ளே அனுப்பப்படும்போது ஒவ்வொரு எண் கூடிக் கொண்டே போகும்.

stack overflow : அடுக்குத் ததும்பல்: அடுக்கில் புதிய இனங்களுக்கு இடமில்லாத வகையில் ஏற்படும் பிழை நிலை. ஓர் இனம் வரவழைக்கப்பட்டு, அடுக்குக் காலியாக இருக்கும்போது அந்த அடுக்கு பற்றாக் குறையாக இருக்கிறது எனக் கருதப்படுகிறது.

stocker : அடுக்கி.

stack segment : அடுக்குக் கூறு : அடுக்கினை வைத்திருப்பதற்கு ஒரு செயல்முறையினால் ஒதுக்கப்பட்டுள்ள நினைவகத்தின் பகுதி.

stackware : அடுக்குத் தகவல்; மிகை யட்டை அடுக்கு (தகவல்), மிகையட்டை அடுக்கு (தகவல்), மிகையுரைச் செயல்முறை ஆகியவற்றிலான மிகையட்டைப் பயன்பாடு.

stage analysis : நிலைப் பகுப்பாய்வு: ஒரு அமைப்பாக்கம் தேவைப்படும் தகவல் பொறியமைவில் ஒரு திட்டமிடும் செய்முறை. இது, அமைவனத்தின் வளர்ச்சிச் சுழற்சியில் நடப்புநிலை, அதன் தகவல் பொறியமைத் தொழில் நுட்பப் பயன்பாடு ஆகியவை பற்றிய பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டது.

stair stepping : படித் தாவல்; மாடி ஏறுதல் : செங்குத்தாகவோ அல்லது குறுக்கு வாட்டிலோ 45 டிகிரி தவிர வேறு கோணத்தில் போடப்படும் கோடுகளைக் குறிப்பிட ராஸ்டர் காட்சித் திரைகளில் பயன்படும் தொழில் நுட்பம்.

stale data : நாட்பட்ட தகவல்.

stand alone : தனியாக நிற்றல்; தனித்து இயங்கு; தனித்தக் கணினி : தொலைக் கணினி அமைப்புடன் இணைப்புப் பெற்று அதைச் சார்ந்திருக்காமல் தனியாக நின்று தன்னிறைவு பெற்ற கணினி அமைப்பை விளக்குவது. வேறு எந்தக் கருவியும் இல்லாமல், தனியாக நிற்கும் சாதனம் தானே இயங்கிக் கொள்ளும்.

stand alone computer : தனித்தியங்கும் கணினி : தன்னடக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட கணினி. இதில், மனநிறைவுடன் செயற்படுவதற்கு வேறெந்த வன்பொருளையும் அல்லது மென்பொருளையும் அணுக வேண்டிய தேவையில்லை. ஒரு சொந்தக் கணினி பொதுவாக ஒரு தனித்தியங்கும் கணினியாகும்.

stand alone graphics system : தனியாக நிற்கும் வரைகலை அமைப்பு: நுண் கணினி அல்லது சிறு கணினி, சேமிப்பகம், ஒளிக் காட்சித் திரை

முகப்பு மற்றும் உள்ளீடு/வெளியீடு சாதனங்களைக் கொண்டுள்ள வரை கலை அமைப்பு.

stand alone programme : தனித்தியங்கும் செயல்முறை : ஒரு செயல்பாட்டுப் பொறியமைவு அல்லாமல் இயக்குவதற்கு வேறெந்த மென்பொருளும் தேவைப்படாதிருக்கிற ஒரு கணினிச் செயல்முறை. தனித்தியங்காத செயல்முறைகளுக்குப் பொதுவாக வேறு மென்பொருள்களை ஏற்றுதல் அல்லது ஒரு மென்பொருள் வாலாய நூலக அணுகுதல் தேவைப்படும். பெரும்பாலான வணிகமுறை மென்பொருள் பயன்பாடுகளில் தனித்தியங்கும் செயல்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

standard : செந்தரம்.

stand alone system : தனியாக நிற்கும் அமைப்பு : வேறொரு கணினியுடன் இணையாமல், வேறொன்றின் கட்டுப்பாட்டில் இல்லாமல் சுயேச்சையாக இயங்கக்கூடிய தன்னிறைவு கணினி அமைப்பு.

standard : செந்தரம் ; திட்ட அளவு : *1.* ஒரே சீரான நடைமுறைகள் மற்றும் பொதுவான தொழில் நுட்பங்களை உருவாக்க உதவும் வழி காட்டி. 2. கணினி அமைப்பின் செயல்பாட்டை அளக்க உதவும் அளவுகோல். சட்ட முறையான அமைப்பு இதனை விதிக்கலாம் அல்லது பெரிய உற்பத்தியாளரின் நடைமுறையில் சாதாரணமாக உருவாக்கப்படலாம்.

standard cell : செந்தரச் சிற்றம் : சிப்பு உருவாக்கத்திற்கு ஆயத்தமாகவுள்ள மின்னணு செயற்பணியின் முடிவுறுத்தப்பட்ட வடிவமைப்பு. இது ஒரு கடிகாரச் சுற்றுவழி அளவுக்குச் சிறிதாக அல்லது பேரளவுச் செய்முறைப்படுத்திய அளவுக்குப் பெரிதாக இருக்கும். இது வழக்காற்று வடிவமைப்புச் சிப்புகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

standard form : பொது வடிவு.

standard deviation : செந்தரச் சாய்வு: ஒரு தகவல் தொகுதியினுள் உள்ள தகவல் இனங்களின் கோட்டமுறும் அளவு. தகவல்களின் பகிர்மானம் இயல்பாக இருக்குமானால், தகவல்களின் 68%, செந்தரச்சாய்வுக்கு ஒன்று கூடுதலாக அல்லது குறைவாக இருக்கும்; 95%, செந்தரச் சாய்வுக்கு மூன்றுக்குள் இருக்கும். ஆங்கிலச் சுருக்கம் : STDEV.

standard interface : செந்தர இடைமுகம் : மையச் செயலக அலகுடன் அனைத்து வெளிப்புறச் சாதனங்களும் இணைக்கப்படும் செந்தரமான பருப்பொருள் வழிமுறை.

standardization : தர அளவுப் பாடு.

standardist : செந்தரப்படுத்து : செந்தரங்களை உருவாக்குதல் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட செந்தரங்களுக்கு ஏற்றதாக்குதல்.

standard mode : செந்தரச் செயல்வகை : பலகணிச் செயற்பாட்டுச் செயல்வகை.

standardise : செந்தரப்படுத்தல்.

standards : செந்தர வரையேடுகள்.

stand lay button : மாற்றுப் பொத்தான்.

stand by equipment : மாற்றுச் சாதனம்.

standards enforcer : தரம் அமல்படுத்துபவர் ; செந்தர நடைமுறைப்படுத்தி : குறிப்பிட்ட ஆணைத் தொடரின் தரங்களும் நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டனவா என்று முடிவு செய்யப் பயன்படுத்தப்படும் கணினி ஆணைத் தொடர்.

standard output : திட்ட அளவு வெளிப்பாடு.

standard type : திட்ட அளவு.

standby equipment : மாற்று ஏற்பாட்டுக்கருவி ; மாற்றுச்சாதனம் : முக்கிய கருவி எழுப்புவது கோளாறினால் செயல்படாமல் போனால் மாற்று ஏற்பாடாகப் பயன்படக்கூடிய இரண்டாவது கருவி.

standby time : மாற்று ஏற்பாட்டு நேரம் ; காத்திரு நேரம் : 1. ஒரு கருவியிடம் கேள்வி கேட்டு அதனிடம் இருந்து பதில் பெறுவதற்கு இடையிலான நேரம். 2. ஒரு கருவியை நிறுவுவதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்கும் இடையிலான நேரம். 3. பயன்படுத்துவதற்குக் கருவி கிடைத்து பயன்படுத்தாத நேரம்.

standerdization : தரப் படுத்தல்.

STOP statement : நிறுத் தக்கட்டளை.

star : உடு உரு ; விண்மீன்: வரைகலைப் பயன்பாட்டாளர் இடை முகப்பினையும், மேசை உரு வகங்களையும் 1981இல் புகுத்திய ஜெராக்ஸ் பணி நிலையம். இது வெற்றி பெறவில்லை. எனினும் பிந்திய ஜெராக்ஸ் கணினிகளுக்கும், ஆப்பிள் லிசா, மெக்கின்டோஷ் போன்றவற்றுக்கும் தூண்டுதலாக இருந்தது.

start bit : துவக்கும் துண்மி: 1 ஒரு தகவல் சொல் துண்மி அடையாளப் படுத்தும் துண்மிகள் அல்லது துண்மி களின் தொகுதி. 2. ஒரே நேரத்தில் அல்லாத தொடர் செய்தி அனுப்புதலின் துவக்கத்தைக் குறிக்கும் துண்மி.

start line : தொடக்கக் கோடு : சறுக்கு உருக்காட்சி தொடங்குகிற நுண்ணாய்வுக் கோடு. எடுத்துக்காட்டாக, ஒரு நிறக் காட்சியில் ஒரு வாசகக் கோட்டில் 14 இடைநிலை நுண்ணாய்வுக் கோடுகள் அமைகின்றன. இவை 0-13 என்று இலக்கமிடப்படுகின்றன. ஓர் இயல்பான சறுக்குத் தொடக்கம் 12, உச்சிக் கோடு 13.

star network : நட்சத்திரப் பிணையம்: மையப் புரவலர் கணினியும் செயற்கைக் கோள்கள் போன்ற சுற்றிலுமுள்ள கணினிகளும் நட்சத்திர அமைப்பில் இணையும் கட்ட



நட்சத்திரப் பிணையம் (Star network)

மைப்பு. தொலைவில் உள்ள முகப்பு கள் நிலத்தளவில் பரவலாகப் பிரிந் திருக்கலாம்.

start/stop transmission : தொடக்க/ நிறுத்த அனுப்பீடு : *கால இசைவற்ற அனுப்பீடு என்பதும் இதுவும் ஒன்றே.*

starting cluster : தொடக்கத் தொகுதி: *ஒரு வட்டில் ஒரு கோப்பு எதிலிருந்து பதிவு செய்யப்படுகிறதோ அந்தத் தொகுதி. கோப்பின் விவரத் தொகு திப் பதிவு, தொடக்கத் தொகுதியைக் குறிக்கிறது. கோப்பு ஒதுக்கீட்டு அட்டவணை, கோப்பினால் பின்னர் பயன்படுத்தப்படும் தொகுதிகளைக் கூர்ந்து கண் காணித்து வருகிறது.*

startup : ஆரம்பித்தல் ; தொடங்கல் : *சரியான ஆரம்ப நிலைகளில் கணினி அமைவுச் சாதனங்களைத் துவங்கி பொருத்தமான மின் சக்தியை ஏற்று தல்.*

startup disk : ஆரம்பிக்கும் வட்டு : *கணினி அமைப்பைத் துவக்குவதற்கு வேண்டிய தகவலைக் கொண்டுள்ள வட்டு* (diskette).

startup routine : தொடக்க வாலாயம் : *கணினியின் பயன்பாடு ஏற்றப்படும் போது நிறைவேற்றப்படும் வாலா யம். இணைவுடைய மென்பொரு ளைச் சுற்றுச் சூழலுக்குப் பழக்கப் படுத்துவதற்காக இது பயன்படுத்தப் படுகிறது.*

stat : ஸ்டாட் : Statistical or Photostat *என்பதன் குறும்பெயர்.*

state : நிலை : *இரும எண்களைக் குறிப்பிடப் பயன்படும் இருநிலைச் சாதனங்களின் நிலை, சாதனங்கள் பொதுவாக இரண்டு நிலைகளில் மட்டும் இருக்க முடியும். ஒன்று இயங்கு அல்லது நிறுத்து.*

statement : கட்டளை : *செயல்முறைப் படுத்துவதில், ஓர் ஆதார மொழியி லுள்ள சொற்றொடர் அல்லது பொது முறையாக்கப்பட்ட ஆணை.*

statement label : அறிக்கை அடையா ளம் : *மூலமொழி ஆணைத்தொடரில் உள்ள சொற்றொடரின் வரி எண்.*

state-of-the-art : கலையின் நிலை : *மிக அண்மைய தகவல் தொழில் நுட்பம் தொடர்பான புதிய தொழில் நுட்பங்களை உள்ளடக்கியதென் பதைக் குறிக்கும் மரபுத் தொடர்.*

static : நிலையான ; மாறாத : *நகராத அல்லது முன்னேறாத, நிலைத்த, ஓய்வில் உள்ள.*

static analysis : நிலை ஆய்வு ; நிலை பகுப்பாய்வு : *செயல்படுத்தாமலேயே ஒரு ஆணைத் தொடரை ஆராய்தல்.*

static column memory : நிலைப் பத்தி நினைவகம் : *நினைவகத் துண்மி களை அணுகுவதற்கு மின்னணுத் துடிப்பு குறைவாகத் தேவைப்படும் ஒருவகைப் பக்கமுறை நினைவகம்.*

static dump : நிலை திணிப்பு : *எந்திர ஓட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத் தில் - பெரும்பாலும் ஓட்டம் முடி யும்போது - செய்யப்படும் சேமிப்பு திணிப்பு.*

static electricity : நிலை மின்விசை : *குறைந்த ஈரப்பதச் சூழல்களில் வேண்டுமென்றே மின்னேற்றம் செய்தல் அல்லது உராய்தல் காரண மாக உண்டாகும் நிலையான மின் னேற்றம்.*

staticizing : பதிவக ஏற்றம் : *கணினி சேமிப்பகத்திலிருந்து ஆணை பதி வேடுகளுக்கு ஆணையை மாற்றி இயக்கப்படுவதற்குத் தயாராக வைத்திருத்தல்.*

static memory : நிலை நினைவகம் : மின்சாரம் கிடைக்கும் வரை ஆணை யிடப்பட்ட நிலையிலேயே இருக் கும் நினைவகம். அதைப் புதுப்பிக்க வேண்டியதில்லை. அதற்கு ஒரு கடிகாரமும் தேவையில்லை.

static RAM : நிலை ராம் : இயங்கும் ராமில் (RAM) இருப்பது போல ஒரு நொடிக்குப் பல தடவைகள் புதுப் பிக்கப்படவேண்டிய தேவையில் லாத நினைவகம். கணினியில் மின் சக்தி இருக்கும்வரை அதன் உள்ளடக் கங்களை இழக்காது. நிலை நினை வக இருப்பிடத்திற்கு கணினி ஒரு மதிப்பை அளித்து விட்டால், அங்கேயே அது இருக்கும்.

static refresh : நிலை புதுப்பி : மையச் செயலாக்கக் கணினியில் அல்லாமல் தொலைதூர அறிவார்ந்த முகப்பில் தகவல்களைச் செயலாக்கும் முறை. தகவல்களை வேகமாகத் தொகுக்க அனுமதிக்கிறது. ஏனெனில், புரவ லர் கணினிக்கும் தொலைதூர முகப் புக்கும் இடையில் தகவல்களை அனுப்பிப் பெற வேண்டிய தேவை யில்லை.

static storage : நிலை இருப்பகம் ; நிலை சேமிப்பகம் ; நிலை தேக்ககம் : தொடர்ந்து புதுப்பிக்கும் சுழற்சி தேவைப்படாத குறிப்பிட்ட வகை யான அரைக்கடத்தி. ஒரு மின்னணு பொத்தானின் நிலையை மாற்று வதன் மூலம் தகவல்களை வைத் திருக்க முடிகிறது. ஒருங்கிணைந்த மின்சுற்றுகளில் உள்ள மின்மப் பெருக்கி (flip-flop) ஏற்ற-இறக்க முடையதாகும்.

station : நிலையம் : தகவல் செய்தித் தொடர்பு அமைப்பில் உள்ளீடு/ வெளியீடுகளில் ஒன்று. பணி நிலை யக் கணினி (workstation)-க்கு இணைச் சொல்.

statistics : புள்ளியியல் : தகவல்கள் நிகழ்வு, பகிர்மானம், பரப்பீடு எண் ணளவுகளில் அல்லது வேறுவிதமாக அளவிடும் அறிவியல். புள்ளியியல் பகுப்பாய்வுகளுக்குக் கணினிகள் பெருமளவில் பயன்படுத்தப்படு கின்றன. பல மென்பொருள் பயன் பாடுகள் குறிப்பாகப் புள்ளியியலுக் காகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. SPSS மினிடேப், சிஸ்டாட் போன் றவை இதற்கு எடுத்துக்காட்டு. பெரும்பாலான விரிதாள் தொகுதி கள் (20/20, லோட்டஸ் 1-2-3, மைக்ரோசாஃப்ட் எக்செல், போர் லாண்ட் குவாட்ரோ போன்றவை) பயனுள்ள புள்ளியியல் திறம்பாடு கள் கொண்டவை.

status : தகுதி ; தகுநிலை : ஒரு கணினி அமைப்பின் பாகத்தின் தற் போதைய நிலை.

status byte : தகுநிலை எட்டியல் : ஒரு சாதனத்தின் நடப்புத் தகுநிலையை விவரிக்கும் துணுக்குத் தோரணி யைக் கொண்டிருக்கும் நினைவக அமைவிடம்.

status line : தகுநிலைக்கோடு : நடப்பு நடவடிக்கையினைக் காட்டும் திரை யில் காட்டப்படும் தகவல் கோடு.

status message : தகுநிலைச் செய்தி: வன்பொருள் சாதனங்களினால் அவற்றின் நடப்புச் செயற்பாட்டுச் சூழலில் அளிக்கப்படும் பொது வாகக் கண்ணால் பார்க்கக்கூடிய ஒரு செய்தி. ஒரு அச்சுப்பொறியில் இத் தகைய செய்திகள், "ஆயத்தம்", "காகி தத்திற்கு வெளியே", "நேரடியாக" போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

status register : தகுநிலைப்பதிவகம்: ஒரு சாதனத்தின் நடப்புத் தகு நிலையை விவரிக்கிற ஒரு துண்மித்

தோரணியைக் கொண்டிருக்கும் ஓர் ஒருங்கிணைந்த மின்சுற்று வழி.

status report : தகுநிலை அறிக்கை; தகுதி அறிக்கை : திட்டச் செலவுகள் மற்றும் திட்டத்திற்கு ஆனநேரம் ஆகியவற்றை ஆராய்வது, மாறுபாடு களைக் கணக்கிட்டு காட்டப்படும்.

step : படி : *1.* கணினியை ஒரு ஆணை யைச் செய்ய வைப்பது. 2. கணினி வாலாயத்தில் ஒரு ஆணை.

step-by-step telephone exchange : படிப்படித் தொலைபேசி இணைப் பகம் : பொதுத் தொலைபேசி இணைப்பகங்களுக்காக முதன் முத லில் தயாரிக்கப்பட்ட தானியங்கிப் பொறியமைவு. இதில், ஒரு குறிப் பிட்ட இணைப்பினைத் தேர்ந் தெடுப்பது பத்துக்கு ஒன்று என்ற தேர்வு முறைப்படி நடைபெறு கிறது. *1,00,000* இணைப்புகளுக்கு அணுகுதல் ஏற்படுத்துவதற்கு, இறு தித் தேர்வுக் கருவிக்கு முன்னதாக ஒரு தேர்வுக் கருவிக் குழும நிலை அமைக்கப்படுகிறது.

stepped index multimode : படி நிலைக் குறியீட்டுப் பன்முக முறை : ஒரு படி நிலைக் குறியீட்டுப் பன்முக முறை ஒளியியல் இழையின் அடிப்படைக் கட்டமைவினையும், அதன் கதிர்க் கோட்டக் குறியீட்டுத் தோற்றத் தினையும் படத்தில் காணலாம். இழையின் கதிர்க்கோட்டக் குறியீட் டில் ஏற்படும் திடீர் மாற்றம் உள் மையப் பகுதி எல்லையில் உண்டா கிறது. 2r1அளவு உள் மைய விட்டம் பொதுவாக 50-60 um அளவுடையது; சிலசமயம் இது 200um அளவு கொண்டதாக இருக்கும். 2r2 உள் மையவிட்டம், இயன்ற போதெல் லாம் 125 um அளவில் தரப்படுத்தப் பட்டுள்ளது.

stepped motor : ஏற்றிய மோட்டார் : துடிப்பு வருகின்ற குறிப்பிட்ட நேரத் தில் எல்லாம் சுழலுகின்ற எந்திர சாதனம். தட்டு மற்றும் இலக்கண முறை வரைவிகளில் அதிகம் பயன் படுத்தப்படுவது.

stepper : காலடி : மரபு நிலைவட்டு இயக்கி என்பதன் ஒரு மாற்றுப் பெயர். படிப்பு/எழுதுத் தலைப் பினை ஒவ்வொரு தடத்தின் மீது மறைமுகமான காலடிகள் மூலம் நகர்த்துவதன் வாயிலாக ஒவ்வொரு தகவல் சேமிப்புத் தடத்துக்கும் இது அணுகும் வாய்ப்பை ஏற்படுத்து கிறது.

stepper motor : காலடி இயக்குபொறி: குறிப்பிட்ட சிறிய கால அளவுகளில் சுழல்கிற இயக்குபொறி. வட்டு இயக்கியில் அணுகுகரம் நகர்வதைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படு கிறது.

stereophonic : பலதிசை ஒலி : இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட வழி களைப் பயன்படுத்தி ஒலியை உண் டாக்குதல். இது, 'ஒரு திசை ஒலி' என்பதிலிருந்து வேறுபட்டது.

Stibitz, George : ஜார்ஜ் ஸ்டிபிட்ஸ் : தன்னுடைய பகுப்பு எந்திரத்தை வடி வமைக்கும்போது மனித கணி னியின் பணிகளாக எந்திரம் செய்ய வேண்டியவை நான்கு பணிகள் என்று சார்லஸ் பாபேஜ் கூறினார். அவை: கணக்கிடும் அலகு, நினை வகம், கணிக்கப்படும் வரிசையில் தானியங்கி வாய்ப்பு மற்றும் உள்ளீடு-வெளியீடு. *1946*இல் பெல் தொலைபேசி ஆய்வகத்தில் ஆராய்ச் சிக் கணித அறிஞராக இருந்த ஜார்ஜ் ஸ்டிபிட்ஸ் என்பவர் பாபேஜின் எண்ணங்களை உள்ளடக்கிய பல தொடர் கணிப்பிகளை வடிவமைத் தார்.

stick model : குச்சி முன் மாதிரி : கோடுகள் அல்லது வெக்டர்களால் ஆன படம். சான்றாக, உயிர் மருத்துவப் பயன்பாடுகளின் ஒரு நபர் அல்லது விலங்கின் உறுப்புகளைக் கோடுகளாக மாற்றி அதன் இயக்கத்தை ஒளி வடிவில் கவனித்து வரை படமாக அமைத்து ஆராய்தல்.

stochastic procedures : வாய்ப்பியல் நடைமுறைகள் : அல்காரிதமிக் நடைமுறைகளுக்குப் பதிலாக செய்து பார்த்து பிழை நீக்கும் முறை.

stochastic process : வாய்ப்பியல் செயல்முறை : நிகழ்வுக் கொள்கையால் மட்டுமின்றி வேறெந்த வகையிலும் துல்லியமாக விளக்க முடியாத காலம் அல்லது இடத்தினால் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சிகளைக் குறிக்கும் செயல்முறை.

stock : இருப்பு.

stock-screening package : ஏராளமான பொருளாதார தகவல்களை அலசி ஒரு குறிப்பிட்ட நபரின் விருப்பத்திற்கேற்ப நிறுவனங்களின் பங்குகளை மட்டும் அடையாளம் காட்டும் ஆணைத்தொடர்.

stop : நிறுத்து.

stop bit : நிறுத்தும் துண்மி : *1.* ஒரு தகவல் சொல்லின் இறுதியை அடையாளம் கண்டு தகவல் சொற்களின் இடையில் உள்ள இடைவெளியை விளக்கும் துண்மி அல்லது துண்மிகளின் தொகுதி. 2. ஒரே நேரத்தில் அல்லாத தொடர் அனுப்புதலின் இறுதியைக் குறிப்பிடும் துண்மி.

stop code : நிறுத்துக் குறியீடு : குறிப்பிட்ட கட்டுப்பாட்டு எழுத்து.

stop line : நிறுத்தக் கோடு : சுட்டி (cursor) உருவம் நிறுத்தும் தேடும் கோடு.

storage : சேமிப்பகம் ; தேக்ககம் ; சேமிப்புக் கொள்திறன் : தகவல்களை ஏற்றுக் கொண்டு தக்க வைத்து நினைவகம் விரும்பும் பின்னொரு நேரத்தில் வழங்கும் ஒரு சாதனம் அல்லது ஊடகத்தைக் குறிப்பிடுவது.

storage allocation : சேமிப்பக ஒதுக்கீடு ; தேக்கக ஒதுக்கீடு : கணினி சேமிப்பகத்தின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு தகவல்களின் தொகுப்பு மற்றும் குறிப்பிட்ட ஆணைத் தொடர் பகுதிகளை ஒதுக்கீடு செய்தல். நினைவக ஒதுக்கீடு (Memory allocation) என்றும் சில சமயம் அழைக்கப்படுகிறது.

storage block : சேமிப்புத் தொகுதி ; தேக்ககப் பகுதி : உள்சேமிப்பகத்தின் தொடர்ச்சிப் பகுதி.

storage capacity : சேமிப்புத் திறன் ; தேக்கக் கொள்ளளவு : ஒரு சேமிப்பக சாதனம் எத்தனை தகவல்களைச் சேமிக்கும் திறனுடையது என்பது பற்றியது. கணினி துண்மிகளாக -கிலோ துண்மி, - மெகா துண்மி, பெரும்பாலும் சொல்லப்படுகிறது. அல்லது 'சொல்' என்பார்கள்.

storage circuit : சேமிப்பக மின்சுற்று; தேக்கச் சுற்று : *0* அல்லது *1* ஆகிய இரண்டு நிலைகளில் ஒன்றாக பொத்தானிடப்படும் மின்சுற்று.

storage device : சேமிப்பகச் சாதனம் ; சேமிப்புச் சாதனம் : கணினி அமைப்புக்குள் தகவல்களை சேமிக்கப் பயன்படும் சாதனம். ஒருங்கிணைந்த மின்சுற்று சேமிப்பகம், காந்த வட்டு அலகு, காந்த நாடா அலகு, காந்த உருளை அலகு, நெகிழ்வட்டு மற்றும் நாடாப் பெட்டி போன்றவை இவ்வகையில் சேரும்.

storage dump : சேமிப்பகத் திணிப்பு: ஒரு கணினியின் உள்ளக சேமிப்பகத்தின் உள்ளடக்கங்களில் பகுதி

அல்லது முழு அச்சு வெளியீடு. பிழைகளைக் கண்டறியப் பயன்படுகிறது. நினைவகக் கொட்டல் (Memory Dump) என்றும் அழைக்கப்படுகிறது.

storage key : சேமிப்பக விசை; தேக்ககச் சாவி : சேமிப்பகக் கட்டம் அல்லது தொகுதிகளுடன் தொடர்புள்ள காட்டி. பொருத்தமான பாதுகாப்பு விசை அல்லது கட்டங்களைப் பயன்படுத்தினால் மட்டுமே பணிகள் செய்ய முடியும் என்பதே நியதி.

storage location : சேமிப்பக இருப்பிடம் ; தேக்கக அமைவிடம் : எழுத்து துண்மி அல்லது சொல் சேமிக்கப்படும் சேமிப்பகத்தின் இடம்.

storage map : சேமிப்பக வரைபடம் : கணினி அமைப்புகளின் சேமிப்பக அலகுகளில் ஆணைத்தொடர்களும் தகவல்களும் எங்கே சேமிக்கப்படுகின்றன என்பதைக் காட்டும் வரைபடம்.

storage media : சேமிப்பக ஊடகம் : வட்டுகள், நாடாக்கள் மற்றும் குமிழ் நினைவு பெட்டிகளைக் குறிக்கிறது.

storage pool : சேமிப்பகத் தொகுப்பு: வட்டு இயக்கிகள் போன்ற சேமிப்பகச் சாதனங்களைக் கணினி அமைப்புகளில் பொதுவாக வட்டுத் தொகுப்பு என்று அழைக்கப்படுகிறது.

stored programme control : சேமிக்கப்பட்ட ஆணைத்தொடர் கட்டுப்பாடு : வோன் நியூமென் என்ற கணினி விற்பன்னரால் உருவாக்கப்பட்ட கணினிக் கொள்கை. 1940களில் இருந்த கணினிகள் குறிப்பிட்ட வேலைக்காக உருவாக்கப்பட்டவை என்பதால் அவைகள் மாற்ற முடியாதவை என்பதை வோன் நியூமென் உணர்ந்தார். மாற்றக் கூடிய ஆணை களை சேமிக்கக் கூடியவைகளாக கணினியால் முடியும் என்பதால் பல்வகையான பணிகளைச் செய்ய கணினியால் முடியும் என்று அவர் விளக்கினார். கணினி மென் பொருளின் தோற்றம் இதுதான்.

storage protection : சேமிப்பகப் பாதுகாப்பு : சேமிப்பகச் சாதனங்களில் சில பகுதிகள் அல்லது முழுவதிலும் இருந்து அனுமதிபெறாமல் எழுதவோ அல்லது படிக்கவோ செய்வதற்கு எதிராக பாதுகாப்பு அளிப்பது. இயக்க அமைப்புடன் இணைந்து வன்பொருள் வசதிகளால் தானாகவே செயல்படுத்தப்படுகிறது. நினைவகப் பாதுகாப்பு (Memory Protection) என்றும் அழைக்கப்படுகிறது.

storage tube : சேமிப்பகக் குழாய் : தகவல் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் வேறொரு சமயத்தில் வெளியே எடுக்கப்படுகின்ற எலெக்ட்ரான் குழாய். முதல் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்டது.

store : கிடங்கு ; தேக்ககம் ; சேமிப்புப் பகுதி : *1.* சேமிப்பகத்தின் பெயர். *2.* சேமிப்பகத்தில் வைத்தல்.

store and forward : சேமித்து மேலே அனுப்பு ; தேக்கிச் செலுத்து : தகவல் செய்தித் தொடர்புகளில், செய்தி அனுப்பும் அமைப்புகளில் பயன்படுத்தப்படும் செயலாக்கம் கையாளும் செய்திகள்.

stored programme computer : ஆணைத்தொடர் சேமிக்கப்பட்ட கணினி : உள்ளார்ந்த சேமிப்பு ஆணைகளின் தொடர்களைச் செயல்படுத்தும் திறனுள்ள கணினி. ஆணைகளில் கூறியுள்ளபடி தகவல்களை மாற்றும் திறனுள்ளவை.

stored programme concept : சேமிக்கப்பட்ட ஆணைத்தொடர் கோட்பாடு; சேமிப்புச் செயல்முறைக் கோட்பாடு : கணினியின் உள்சேமிப்பகத்திற்குள் ஆணைகளும், தகவல் மதிப்புகளும் சேமிக்க வருவது பற்றிய ஆணைகளைத் தரும் கணினி. ஆணைகளை விரைவாக அணுகி விரைவாக மாற்றமுடியும். 1945இல் ஜான் வோன் நியூமென் இக்கோட்பாட்டை அறிமுகப்படுத்தினார். இலக்கவியல் கணினியின் முக்கிய தன்மை இதுவே.

stored programme machine : பதிவான ஆணைத் தொடர் எந்திரம். சேமிப்பு ஆணைத்தொடர் எந்திரம்.

straight line code : நேர்வரிக் குறியீடு: ஒரு ஆணைத்தொடர் வரிசையை ஒவ்வொரு தடவையும் திரும்ப வரும்போது தெளிவாக எழுதி திரும்பச் செய்யச் செய்தல். நேர்வரிக் குறியீடு அமைத்தால் குறைந்த இயக்க நேரமும் அதிக சேமிப்பக இடமும் (இதற்குச் சமமான லூப் குறியீடு அமைப்பதை விட) கிடைக்கும். தேவைப்படும் இடமும் ஒரு மாறியைத் திரும்பத் திரும்ப பல தடவைகள் குறியீடு அமைப்பதுமே இதனைச் செய்வதில் உள்ள தடைகள்.

strategic information systems: உத்திமிக்க தகவல் அமைப்புகள் : சந்தையால் மற்ற போட்டியாளர்களைவிட ஒரு நிறுவனத்திற்கு உத்தி மூலமான அனுகூலத்தை அளிக்கும் போட்டி பொருட்களையும் சேவைகளையும் அளிக்கும் தகவல் அமைப்புகள். வணிக முன்னோடித் தன்மை செயல்பாட்டுத்திறன் அதிகரிப்பு மற்றும் ஒரு நிறுவனத்தின் உத்திமிக்க தகவல் மூலாதாரங்களைப் பயன்படுத்துவதையும் இது குறிப்பிடுகிறது.

streamer: தொடரோட்டம் : ஒவ்வொரு தனித்தனி தகவல் தொகுதிகளுக்கும் இடையில் நின்று துவங்குவதற்குப்பதிலாக தொடர்ச்சியாக அதிக வேகத்தில் இயங்கும் நாடாப் பெட்டி.

streaming tape drive: நாடா இயக்கி ஓட்டம்: தொடர்நாடா இயக்கியைப் பிடித்துக் கொண்டிருக்கும் பெட்டி. நிலைதட்டு இயக்கிகளுக்கு மாற்று ஏற்பாடாகவே இது முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

stream - oriented file: சரம் சார்ந்த கோப்பு : தகவல் கோப்பைவிட மேலும் திறந்தமுறையில் வடிவமைக்கக்கூடிய சொல் ஆவணம் அல்லது இலக்க முறை குரல்கோப்பு போன்ற கோப்பு. சொல் மற்றும் குரல் ஆகியவை தொடர்ச்சியான எழுத்துச் சரங்கள். ஆனால் தகவல் தள பதிவேடுகள் நிலையான அல்லது ஓரளவு ஒழுங்கான படிவத்தில் திரும்பவரும் வடிவமைப்புகள்.

STRESS: ஸ்ட்ரெஸ் : Structural Engineering System Solar என்பதன் சுருக்கம். கட்டுமானப் பொறியியல் சிக்கல்களை தீர்க்க உதவும் ஒரு சிக்கல் சார்ந்த மொழி.

stress testing: அழுத்தம் சோதித்தல்;கிறுக்கச் சோதனை : தகவல்களில் துல்லியக் கோளாறுகள் மற்றும் அசாதாரண தகவல் தொகுதிகள் இருந்தாலும் கணினி அமைப்பு அல் லது ஆணைத்தொடர் தொடர்ந்து நம்பகமாக இயங்கும் என்பதை சோதனை இயக்கத்தின் மூலம் உறுதி செய்தல்.

strike through: உட்புகுந்து செல்லல் : ஒரு குறிப்பிட்ட சொற்பகுதி உள்ளே செல்லுமாறு வரையப்பட்ட கோடு. சொற்பகுதியில் இவ்வாறு

கோடிட்டுக் காட்டுவதன் பொருள் பின்னர் எப்போதாவது அப்பகுதி நீக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

string: தொடர்சரம் ; சரம் : ஒரு தனி தகவல் தொகுதியாகக் கருதப்படும் துண்மிகள் அல்லது எழுத்துகளின் தொடர் வரிசை.

string constant: சர மாறி எழுத்திலக்க மாறி.

string function : எழுத்திலக்கச் சார்பு.

string expression: சரக் கோவை.

string handling: சரம் கையாளல்: எழுத்துச் சரங்களில் இயங்கக் கூடிய திறனுள்ள ஆணைத் தொடர் மொழி.

string length: சர நீளம் : ஒரு சரத்தில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை.

string manipulation: சரம் கையாளு தல் : எழுத்துச் சரங்களைக் கையா ளும் தொழில்நுட்பம்.

string processing languages: சர செய லாக்க மொழிகள் : சர எழுத்துகளைச் செயலாக்க வடிவமைக்கப்பட்ட ஆணைத்தொடர் மொழிகள். சான் றாக கோமிட், ஸ்னோபால், ஆம்பிட் கன்வர்ட், ஆக்சில், பேனன் மற்றும் இடோல்.

string variable: சர மாறி; சர மாறியல் மதிப்புரு; எழுத்திலக்க மாறி: அகர வரிசை எண்ணெழுத்துச் சரங்களின் சரம்.

stringy floppy: சர நெகிழ்வட்டு : கணினி சேமிப்பகச் சாதனம். ஏடு (Wafer) எனப்படும் காந்த நாடாவைப் பிடித்துக் கொண்டிருப்பது. வழக்க மான நாடாப் பெட்டிகளை விட ஏடு நாடாக்கள் மென்மையானதும் வேக மாக இயங்குவதுமாகும்.

striping: நீட்டுதல் : வேகத்தினை அதிகரிக்க தகவல்களில் இடை வெளிவிடுதல் அல்லது பன்முகப் படுத்தல்.

stroke: அடி; தட்டல் : 1. விசையை அடித்தல். 2. கணினி வரைகலை அமைப்பில் அஸ்கி எழுத்துக் குறி யீடுகளாக அல்லது வரைபடப் பொருளாக சேமிக்கப்படும் சொற் களாலான தகவல்.

stroke weight: அடிக்கும் எடை : அடிக்கப்பட்ட எழுத்தின் அடர்த்தி, ஒளி, ஊடகம், கருமை போன்றவை களை அளப்பது. அச்செழுத்து வடி வமைப்பவர்கள் இச்சொல்லைப் பயன்படுத்துவார்கள்.

stroke writer: அடித்து எழுதுபவர் : தொடர் கோடுகளாக (வெக்டார்) திரையில் பொருள்களைப் பிரதி பலிக்கும் வெக்டார் வரைகலை முகப்பு.

structural design: கட்டுமான வடி வமைப்பு : செயலாக்கத்தின் கட்டு மான அளவை மற்றும் ஒட்டு மொத்த ஒருங்கமைவு.

structurad: ஒழுங்கமைந்த.

structure: கட்டமைப்பு; ஒழுங் கமைவு : ஒரு பொருளின் பகுதிகளை வரிசைப்படுத்தல் அல்லது ஒழுங்கு படுத்துதல்; ஆணைத் தொடர்கள் ஒழுங்குபடுத்தப்படும் முறை.

structure chart: அமைப்பு வரை படம்; கட்டமைப்பு வரைபடம் : ஒன்றுக் கொன்று தொடர்புடைய கட்டுப் பாடு அளவை ஆணைத் தொடர் கூறுகள் அல்லது நிறுவனம் ஆகிய வற்றை ஆவணப்படுத்தக் கூடிய வடிவமைப்புக் கருவி. மேலிருந்து கீழிறங்கும் ஆணைத் தொடர மைப்பை வரைபடமுறையில் வழங்குவது.

structured analysis: வடிவமைக்கப் பட்ட ஆய்வு : யுவர்டன், டெமார்க் கோ, கேன் மற்றும் சார்சன் ஆகி யோர் சேர்ந்து முறைமை பிரிப்பாய் வுக்கான முறையை அணுகுமுறை யாகப் பயன்படுத்த உருவாக்கிய தொழில் நுட்பம். தகவல் பாய்வு வரை படங்கள், தகவல் மாதிரி யமைவு மற்றும் அமல்படுத்து வதைச் சாராத ஆவணப்படுத்துவதற் கான வரைகலை எண்முறையைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

structured coding: கட்டுமானக் குறி யீடமைத்தல் : அதிக அளவிலான கட்டுமானம் உள்ளதாக ஆணைத் தொடர்களை எழுதும் முறை.

structured decisions: வடிவமைக்கப் பட்ட முடிவுகள்: முடிவு நடைமுறை கள் அல்லது அலைகளுக்காக உரு வாக்கப்பட்ட முடிவு விதிகளால் கட்டமைக்கப்பட்ட முடிவுகள். எங்கு முடிவு தேவைப்படுகிறது என்பதை முன்னதாகவே குறிப்பிடும் நடைமுறைகளைக் கொண்ட சூழ் நிலையில் அவை அமையும்.

structured design: கட்டுமான வடிவமைப்பு : மேலிருந்து கீழ் வழி யான பிரித்தளிப்பு மற்றும் தருக்கக் கட்டுபாட்டுக் கட்டுமானங்கள் மூல மாக ஆணைத்தொடர்களையும் குறி யீடுகளையும் வடிவமைக்கும் முறை.

structured English: கட்டுமான அமைப்பு ஆங்கிலம்; நெறிப்பட்ட ஆங்கிலம் : புரியக்கூடிய ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாகக் குறியீடு களை அமைப்பதன் அடிப்படை யிலான மொழி அணுகுமுறை.

structured flowchart: கட்டமைக்கப் பட்ட பாய்வு வரைபடம் : மூன்று ஒடுபட கட்டுமான அமைப்புகள் மூலம் சிக்கல் தீர்வுகளைக் குறிப் பிடும் முறை: வரிசைமுறை கட்டு மானம், தேர்வு கட்டுமானம் மற்றும் லூப் கட்ட மைப்பு.

structured programming: கட்டுமான ஆணைத்தொடரமைத்தல் ; மாற்றி அமைத்து குறியீடு அமைப்பதற்காக முக்கிய பணிகளை கீழ்நிலை பகுதி களாகப் பிரிக்க மேலிருந்து கீழ் மற்றும் சில அடிப்படை குறியீட்டுக் கட்டுமான கோட்பாடுகளைப் பயன் படுத்தி ஆணைத் தொடர் அமைக் கும் தொழில் நுட்பம். இதன் மூலம் சரியாகவும் தெளிவாகவும் தகவல் மற்றும் கட்டுப்பாட்டு கட்டுமானங் களை உருவாக்கி ஆணைத்தொடர் குறியீடுகளை சிறப்பாக அமைக்க முடி யும். நெறி முறையில் படிப்படி யாகப் போவதனால் ஆணைத் தொடரை மாற்றுவதிலும், பராமரிப் பதிலும் குறைந்த செலவும், மூலத்தை முன்னேற்றமடையச் செய்யும் வாய்ப்பும் உண்டு.

structured query language (SQL): வடிவமைக்கப்பட்ட வினவு மொழி : மேம்பட்ட தகவல் தள மேலாண்மை அமைப்பு தொகுப்புகளுக்கு தரமான தாகக் கருதப்படும் ஒரு கேள்வி மொழி.

structured walkthrough: கட்டமைக் கப்பட்ட; உலா: வடிவமைப்பு பிழை களைக் கண்டறியவும், கருத்துகள் மற்றும் அறிவைப் பரிமாறிக் கொள் ளவும் உருவாக்கப்பட்ட தொழில் நுட்ப மாநாடுகள் அல்லது விமர் சனங்கள். திட்டக்குழுவில் உள்ள அனைத்துத் தொழில்நுட்ப உறுப் பினர்களின் வேலைக்கான பொரு ளும் பிழை கண்டறிதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து தொழில் நுட்ப முறையில் விமர்சிக்கப்படும்.

STRUDL: ஸ்ட்ருடல்: Structural Design Languages என்பதன் குறும்பெயர். கட்டுமானங்களை வடிவமைத்து ஆராயும் ஆணைத்தொடர் மொழி.

stub: அடிநிலை : ஒரு ஆணைத் தொடர் கூறு இதற்குக் குறியீடு இன்னும் எழுதப்படவில்லை. அப்போதுள்ள நிலையிலேயே ஆணைத் தொடரை சோதிக்க வடிவமைக்கப் பட்டது.

stub testing: அடிநிலைச் சோதனை: மேலிருந்து கீழ் கூறுநிலைச் செயலாக்கம். ஒரு சிறிய பொம்மை ஆணைத்தொடரை பெரிய ஆணைத் தொடரின் உள்ளே வேறொரு வாலாயத்துக்காக நுழைத்துப் பயன்படுத்துவது. அடிநிலை (ஸ்டப்) என்பது ஒரு சொற்றொடர் அளவு எளிதாக இருக்கலாம் அல்லது ஒரு ஆணையாக இருக்கலாம். சான்று: (Return) திரும்பு.

stuffit : ஸ்டஃப்பிட் : அலாவுதீன் சிஸ்டம்ஸ், ஆப்டோஸ், கலிஃபோர்னியாவின் மெக்கின்டோஷ் பங்குப் பொருள் ஆணைத்தொடர். இது கோப்புகளை பலவகை நெகிழ் வட்டுகளாக சுருக்கித் தருகிறது.

style manual: நடை கையேடு : எந்த வகையான நூலையும் வெளியிடுவதற்கு முன்பு கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் மற்றும் மரபுகளைக்கூறும் பல நிறுவனங்கள் வெளியிடும் ஒரு புத்தகம். சிறந்த எழுத்தச்சுகள் மற்றும் அச்சிடும் பழக்கங்கள் ஆகியவைகளுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குவதுடன் வெளியிடுவதற்காகத் தகவல்களை உருவாக்குபவர்களுக்கும் இது ஒரு பயனுள்ள குறிப்பாக அமையும்.

style: பாணி : அச்சுப்பொறி வெளியீட்டுக்குப் பயன்படுத்தப்படும் எழுத்துகளைக் குறிப்பிடும் பொதுப் பெயர். பாணி என்பது சாய்வெழுத்து, தலைகீழாக்கல் - நிழல், வெளிக்கோடு போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

stylus: எழுத்தாணி;எழுது கருவி : வரைபட அமைப்பில் பயன்படுத்துவது போன்ற உள்ளீட்டுச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் எழுது கோல் வடிவக் கருவி.



எழுது கருவி (Stylus)

style sheet: நடை தாள் : ஒரு சொற்பகுதி கோப்பின் முழுமையும் அல்லது பகுதியில் பயன்படுத்தக் கூடிய பத்தி அல்லது எழுத்துத் தன்மைகளை அனுமதிக்கும் மென்பொருளின் பகுதி. சில சொல் செயலிகள் - சான்றாக: மைக்ரோ சாஃப்ட் வேர்டு, வேர்டுபர்ஃபக்ட், மற்றும் பேஜ்மேக்கர், வென்ச்சுரா போன்ற டி.டி.பி தொகுப்பு போன்றவற்றில் நடைதாள்கள் காணப்படுகின்றன. நடைதாள் என்பதில் பத்தியின் தன்மைகளின் அகலம், சாய்வெழுத்துகள், அடிக்கோடு பெரிய, சிறிய எழுத்து உள்தள்ளல்கள் போன்றவை அடங்கியுள்ளன. நடை தாளைப் பயன்படுத்துவதன் மூலம் வடிவத்தின் தொடர்ச்சியான, உடனடியான மாற்றங்களைச் செய்ய முடியும். வெளியீட்டில் சீரமைப்பைத் தருவ

தால் மென்பொருள் நிறுவனங்களிட மும், பெருநிறுவன பயனீட்டாளர் களிடமும் அவை பிரபலமாக உள்ளன.

sub : பகுப்புகள்.

subdirectory : உள் கோப்பகம் : வட்டில் ஒரு பெயரில் கோப்பகம் உருவாக்கப்பட்ட கோப்புகள் சேமித்து வைக்கப்படுகின்றன. கோப்பகத்தின் உள்பிரிவினையாக உள்கோப்பகம் உருவாக்கப்படு கிறது.

subfunction: துணைப் பணி : ஒரு செயலாக்க அமைப்பின் குறுக்கீடு செய்கின்ற பல பணிகளில் ஒன்று. ஒரு பணி எண் எப்போதும் எச் மீதே வைக்கப்படும் என்றாலும் துணைப் பணி எண்களைச் செயல்படுத்து வதற்குமுன் அவற்றை அல்லில் (AL) வைக்கப்படும்.

submarine cable: கடலடிக்கம்பிவடம்; நீர் மூழ்கிக் கம்பிகள் : கடல் அடியி லிருந்து எடுக்கப்படும் நீர்மூழ்கித் தகவல் தொடர்புக் கம்பிகள் மிகுந்த தொல்லை தருவன. ஆழ்நீரின் அழுத் தங்களைச் சமாளிக்கக் குழாய்கள் சீரமைப்புகளுக்கு (refit) அதிக தாங்கும் சக்தி தேவைப்படும். 19ஆம் நூற்றாண்டில் ஆழ்கடல் தந்திக் கம்பிகள் போட்டது போலவே ஆரம்பகால நீர்மூழ்கி தொலை பேசிக் கம்பிகளும் போடப்பட்டன. தேவையான பாதுகாப்பை அளிக்க கனமான இரும்புக் கவசக் கம்பிகள் ஒன்று அல்லது மேற்பட்ட அடுக்கு களாக தகவல் தொடர்புக் கம்பிகளின் மீது சேர்க்கப்பட்டன. மேம்பட்ட முறைகள் பின்னர் கடைப்பிடிக்கப் பட்டன.

submarining: நீர் மூழ்கி விடல் : மடிமேல் வைக்கும் கணினி போன்ற ஒரு மெதுவாகக் காட்டும் திரையில் சுட்டி (Cursor) நகர்வதைத் தற்காலிக மாகக் காண முடியாமல் போதல்.

submenu: துணைப்பட்டியல் : ஒரு பட்டியல் தேர்விற்குள் வாய்ப்பு களின் துணைப் பட்டியல். துணைப் பட்டிகளில் பல நிலைகள் இருக்க லாம்.

sub-notebook: சிறு கையேட்டுக் கணினி : குறைந்த எடையுள்ள கை யேட்டுக் கணினி. கணினிகள் இலே சாக ஆகும்போது, கையேட்டுக் கணினிகள் 1 முதல் 2 கிலோக்களும் கையேடு 3 முதல் 4 வரை எடை கொண்டிருக்கும்.

sub problems: உட் சிக்கல்கள்.

subprogramme: துணை ஆணைத் தொடர் : ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்யும் ஆணைத்தொடரின் ஒரு பகுதி. ஒரு குறிப்பிட்ட பணி துணை ஆணைத்தொடராகக் கையாளப் பட் டால் ஒரு இடத்திற்கு மேல் அது தேவைப்படும்போது ஆணைத் தொடரமைக்கும் நேரத்தைக் குறைக் கும். ஒரே ஒருமுறை அதற்குக் குறி யீடமைத்து ஆணைத்தொடர்களில் பல இடங்களில் அதைப் பயன் படுத்த முடியும். துணை ஆணைத் தொடர்களை அமைக்க துணை வாலாயம்களும், பணிகளும் பயன் படுத்தப்படலாம்.

subroutine: துணை வாலாயம்; உப செயல்முறை; துணை வழமை : அதற் குள்ளே ஆரம்ப இயக்கம். எப்போ தும் துவக்கப்படாத துணை வாலாயம். பிற ஆணைத்தொடர்கள். குறிப்பாக முதன்மை ஆணைத் தொடர் அழைக்கும்போது மட்டும் இயக்கப்படும்.

subroutine reentry: துணைவாலாயம் திரும்பவரல்; துணை மறு நுழை :

வேறொரு ஆணைத்தொடர் அதனை முடிக்கும் முன்பாக ஒரு ஆணைத் தொடரில், அதை ஆரம்பித்தல். கட்டுப்பாட்டு ஆணைத் தொடர் முன்னுரிமை குறிக்கீடுக்கு ஆளாகும் போது இது ஏற்படும்.

subschema: துணை அமைவு : ஒரு குறிப்பிட்ட ஆணைத்தொடருக்காக தேவைப்படும் தகவல் தருக்க முறையில் ஒழுங்குபடுத்துதல்.

subscript: அடியெண் கீழ் எழுத்து; அடிக்குறி : 1. ஒரு அணி அல்லது ஒரு வரிசையைக் கொண்ட சேமிப்பக உறுப்புகளை வரையறை செய்யும் மாறியின் பெயருடன் இணைக்கப் படும் முழு எண் மதிப்பு. 2. கணினி அல்லாத அச்செழுத்துகளில் அதே குறியீட்டின் மாறுபாடுகளிலிருந்து வேற்றுமைப்படுத்த ஒரு குறியீட்டின் வலது புறத்திலோ அல்லது கீழோ எழுதப்படும் ஒரு எழுத்து அல்லது இலக்கம். சான்று: θ_a θ_b (Superscript) மேலொட்டுக்கு எதிர்ச்சொல்.

subscripted variable: என் வரிசையிட்ட மாறி : சிறிய குறியீட்டைத் தொடர்ந்துவரும் வரிசையில் ஏற்படும் எண்மதிப்பின் மாற்றத்தைக் குறிப்பிடும் குறியீடு.

சான்று - சதுரங்கம் (2, 4) அல்லது A(7).

subscript mode: குறைத்தமைக்கும் முறை : எழுத்தின் இடத்தில் கீழ்ப் பகுதியால் வழக்கமான உயரத்தை விடக் குறைந்த உயரத்தில் மூன்றில் இரண்டு பங்கு அளவு எழுத்துகளை அச்சிடுகிறது.

subset : உட்கணம் ; துணைத் தொகுதி : ஒரு தொகுதியின் உள்ளே காணப்படும் வேறொரு தொகுதி.

substrate: அடித்தளம் : நுண் மின்னணுவியலில், எதன்மீது ஒரு மின் சுற்று உருவாக்கப்படுகின்றதோ அந்தப் பருப்பொருள்.

substring: துணைச்சரம்; பகுதிச்சரம்: ஒரு எழுத்துச் சரத்தின் பகுதி.

subsystem: துணை அமைப்பு : முதன்மை அமைப்பின் கீழ் இயங்கும் துணை அமைவு.

sub task: உட்பணி.

subtract: கழி : உறவுமுறை தகவல் தளத்தின் இரண்டாவது கோப்பில் இல்லாத ஒரு கோப்பில் இருக்கும் பதிவேடுகளைக்கொண்டு மூன்றாவது கோப்பினை உருவாக்குதல்.

suffix: பின்னொட்டு.

successive difference of expression: எண்ணுருக்கோவைகளில் தொடர் வேற்றுமை.

suite: கூட்டுத்தொகுப்பு: நெருங்கிய தொடர்புள்ள ஆணைத்தொடர்களின் தொகுதி அல்லது குழு.

sun (Sun Microsystems) : சன் (சன் மைக்ரோசிஸ்டம்ஸ்) : கட்டமைப்பு சார்ந்த, அதிகத் திறனுள்ள பணி நிலையங்களை உற்பத்தி செய்யும் 1982இல் நிறுவப்பட்ட நிறுவனம். தனியாக நிற்கும், கட்டமைப்புக்குட் பட்ட அமைப்புகள், வட்டில்லாத பணிநிலையங்கள், ஸ்பார்க், நுண் செயலகக் கட்டுமானம் கொண்ட கோப்பு வழங்கிகள் போன்றவற்றை இந்நிறுவனம் உற்பத்தி செய்கிறது. பிற விற்பனையாளர்களின் கணிப் பொறி அமைவுகளின் கட்டமைப்புகளின் பரிமாற்றம் செய்ய அனுமதிக்கும் திறந்த முறை மாதிரிகளை அது ஆதரிக்கிறது.

super computer: மீப்பெருங் கணினி; உயர் கணினி : கிடைக்கின்ற பெரு

முகக் கணினிகளில் மிகப்பெரிய, மிக வேகமான, மிகஅதிக விலையுள் ளது. அசாதாரண கணிப்பு சக்தி தேவைப்படும் நிறுவனங்கள் மற் றும் வணிக அமைப்புகளில் பயன் படுவது. எண் விழுங்கிகள் என்றும் சில சமயம் அழைக்கப்படுகிறது. ஏனென்றால் அவை ஒரு நொடிக்கு இலட்சக் கணக்கான இயக்கங்களைச் செய்கின்றன. சில புதிய கணினிகள் ஒரு நொடிக்கு கோடிக்கணக்கான இயக்கங்களைச் செய்கின்றன.

super conductor: மீக் கடத்தி : அதி வேக மின்னணு மின்சுற்று.

superconducting computers: மீக் கடத்திக் கணினிகள் : அதிகத் திற னுள்ள கணினிகள். சுழற்சி நேரத் தைக் குறைக்க ஜோசப்சன் விளை வையும் மீக் கடத்தும் தன்மை யையும் இவற்றின் மின் சுற்றுகள் பயன்படுத்துகின்றன.

super floppy: மீநெகிழ் வட்டு: பி.சி. யின் 3.5 வட்டு. அது 2.88 மீமிகு எட்டி யலை (MG) வைத்துக் கொள்ளக் கூடியது. 1.44 மீமிகு எட்டியல் மற்றும் 720 கிலோ எட்டியல் வடி வமைப்புகளுக்கு ஏற்றதாக உள்ளது. 20 மீமிகு எட்டியல் வரிசையில் அதிகத் திறனுடைய நெகிழ்வட்டு.

superalc: சூப்பர் கால்க் : கம்ப்யூட்டர் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் பி.சி. விரிதாள் ஆணைத் தொடர். விசிகால் சின் காலடித்தடங்களை சுற்றி 80-களில் அமைக்கப்பட்ட ஆரம்பகால விரிதாள்களில் ஒன்று. சூப்பர் கால்க் 5 (1988) முப்பரிமாண திறனை அளிப்பதுடன், மேம்பட்ட வரை கலை மற்றும் 256 விரிதாள்களோடு இணைக்கப்படுகிறது.

super Drive: மீ இயக்கி: அதன் அதிகபட்ச அடர்த்தி வடிவமைப்பில் 1.44 மீமிகு எட்டியல் தகவல்களைச் சேமிக்கும் மெக்கின்டோஷ் நெகிழ் வட்டு இயக்கி. முந்தை மேக் 400 மற்றும் 800 கிலோ எட்டியல் வட்டு களையும் அது பிடித்து எழுதும்.

superKey: மீ விசை : போர்லாண்ட் நிறுவனத்தின் பி.சி. விசைப்பலகை பெரு செயலகம் பயன்படுத்துபவர் கள் விசைப்பலகை. மேக்ரோவை உருவாக்கவும், விசைப் பலகையை மறு ஒழுங்குபடுத்தவும் தகவல்களை யும், ஆணைத்தொடர்களையும் இரக சியக்குறிப்பேற்றவும் இது பயனா ளர்களை அனுமதிக்கிறது.

super large scale integration: மீப்பெரு ஒருங்கிணைப்பு : ஒரு சிப்புக்கு பத்து இலட்சம் அல்லது கூடுதல் பாகங்களைக் கொண்ட மிக அதிக அடர்த்தி சிப்புகளைப் பயன் படுத்துதல்.

super market: பேரங்காடி.

supermini: மீக்குறு: பேரளவு சிறு கணினி. சிறிய பெருமுகக் கணினி களின் திறன் கொண்டவை.

supermini computer: மீக்குறு கணினி: 32 துண்மி சொற்களைப் பயன்படுத் தும் சிறுகணினி. அதிக சொல் நீளத் தின் மூலம் அதிக விளைவும் அதிக துல்லிய கணிப்பு, எளிய ஆணைத் தொடர் முன்னேற்றமும் ஏற்படும். மீக்குறு கணினியின் செயலாக்கத் திறன் ஒரு பேரளவு பெருமுகக் கணினியின் திறனுக்குச் சமமாக இருக்கும்.

Superscript: மேலொட்டு: ஒரு தொகுதியின் குறிப்பிட்ட பொருளை அடையாளம் காணவோ அல்லது எத்தனை மடங்கு என்பதைக் குறிப் பிடவோ ஒரு குறியீட்டின் வலது புற மாகவோ அல்லது மேலேயோ எழு தப்படும் எழுத்து அல்லது இலக்கம்.

superscript mode: மேலொட்டு முறைமை: எழுத்துகளுக்கான இடத்தின் மேற்பகுதியில் வழக்கமான உயரத்தைவிட மூன்றில் இரண்டு பங்கு உயரமுடைய எழுத்துகளை அச்சிடுகிறது.

super server: மீப் பணியகம் : பேரளவு ராம் மற்றும் வட்டு திறன் பல் செயலகம் மற்றும் அதிவேக பல் செயலாக்கம் (நுண் வழித்தடம், அய்சா போன்றவை) ஆகியவற்றைக் கொண்ட கட்டமைவுப் பணியகம்.

super twist: சூப்பர் ட்விஸ்ட் : முந்தைய டி.என். தொழில் நுட்பத்தில் படிகங்களை 180 டிகிரி அல்லது அதற்கும் மேலே திருப்பி மேம்படுத்தும் எல்.சி.டி. தொழில் நுட்பம். அகன்ற பார்க்கும் கோணமும் மேம்பட்ட கருமையும் அளிக்கிறது. அதன் மஞ்சள் மற்றும் பச்சை நீல நிறத்தினால் அதை அடையாளம் காணமுடிகிறது.

supervisor call: மேற்பார்வையாளர் அழைப்பு : பயன்பாட்டு ஆணைத் தொடரின் ஒரு ஆணை. அது கணினியைக் குறுக்கீடு செய்து அதன் மேற்பார்வை நிலையை மாற்றுகிறது. இயக்க அமைப்பு பின்னர் அந்த அழைப்பை ஆய்ந்து அதனைக் கையாளுமாறு சரியான வாலாயத்துக்கு ஆணையிடுகிறது.

supervisor control programme: மேற்பார்வையாளர் கட்டுப்பாட்டு ஆணைத் தொடர் : நினைவகத்தில் எப்போதும் இருக்கின்ற இயக்க அமைப்பின் ஒரு பகுதி கரு (Kernal) போன்றது.

supervisor state: மேற்பார்வையாளர் நிலை : செயலாக்க அமைப்பில் ஆணைகளை இயக்குகின்ற கணினியின் செயலாக்க முறை. இந்த முறையில் உள்ளீடு / வெளியீடு ஆணை போன்ற பயன்பாட்டு ஆணைத் தொடரில் இல்லாத சிறப்பு ஆணைகளை கணினி இயக்க முடியும். இச் சொற்கள் பெரிய கணினி எல்லா கணினிகளும் இந்த இரண்டு நிலைகளையும் வேறுபடுத்திப் பார்க்கக் கூடியவை.

supervisor: மேற்பார்வையாளர் : இயக்க அமைப்புப் போன்றது.

supervisory system: மேற்பார்வை அமைப்பு.

supply company: வழங்கும் நிறுவனம் : கணினி உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படாத அல்லது விநியோகிக்கப்படாத பொருள்களை வழங்கும் நிறுவனம். அச்சுக் காகிதம், அச்சுப்பொறி, நாடாக்கள், வட்டுகள் போன்றவை.

supply spool: வழங்கீட்டுக் கண்டு.

support: ஆதரவு: வாடிக்கையாளருக்கு விற்பனையாளர் அளிக்கும் உதவியும் வாய்மொழி ஆலோசனையும்.

support chip: ஆதரவு சிப்பு : மையச் செயலகத்தை கணினியின் பிற பகுதிகளுடனோ அல்லது வெளிப்புறச் சாதனங்களுடனோ இணைக்கும் பெரிய ஒருங்கிணைந்த சிப்பு.

support library: ஆதரவு நூலகம்: ஏற்கனவே உருவாக்கப்பட்டு சோதிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட முழு ஆணைத்தொடர்களையும் துணைவாலாயங்களையும்கொண்ட நூலகம்.

suppress: ஒடுக்கு : கணினி வெளியீட்டிலிருந்து முன்செல்லும் பூஜ்யங்கள் அல்லது பிற தேவையற்ற எழுத்துகளை நீக்குதல்.

suppression: ஒடுக்குதல்: ஒரு சமிக்ஞையின் தேவையற்ற பகுதிகளை நீக்குதல்.

surface: மேற்பரப்பு: CADஇல் ஒரு பொருளின் வெளிப்புற வடிவியல் மேற்பரப்புகள் எண் கட்டுப்பாடு மாதிரிகளுக்குத்தான் அதிகம் தேவைப்படும். கம்பிச்சட்டங்கள் மற்றும் திடப்பொருள்களுக்கு அது தேவைப்படுவதில்லை. டிபேசை உருவாக்கிய வாய்ன் ராட்ளிஃப் பயன்படுத்திய சொல். 'டேட்டா பேஸ்' எந்திரத்துடன் இடைப்படு மாற்றம் செய்யும் மொழியே டிபேஸ்.

surface modeling: மேற்பரப்பு மாதிரி யமைத்தல்: கேட் (Cad) முறையில், திடவடிவில் தோன்றும் பொருள் களைக் குறிப்பிடும் ஒரு கணிதத் தொழில் நுட்பம். கம்பிச் சட்ட மாதிரியமைப்பைவிட, மேற்பரப்பு மாதிரியமைத்தல் பொருள்களைக் குறிப்பிட்ட ஒரு முழுமையான முறையாகும். ஆனால், திட மாதிரி யமைத்தலைப் போன்ற மேன்மை யானதல்ல. திரையில் ஒன்றாகத் தோன்றினாலும் இவை வெவ் வேறானவை. திட மாதிரிகளைப் போல மேற்பரப்பு மாதிரிகளைத் துண்டுகளாக்க முடியாது. மேலும் மேற்பரப்பு மாதிரியில் பொரு ளானது வடிவியல் (ஜியாமட்ரி) முறையில் தவறாக இருக்கலாம். ஆனால் திடமாதிரியில் சரியாக இருக்க வேண்டும்.

surface mount: மேற்பரப்பு ஏற்றுதல்: மின்சுற்று அட்டை தொகுத்தளிக்கும் தொழில் நுட்பம். இதில் சிப்புகள் மற்றும் பிற பாகங்களில் உள்ள பின்களை பற்றவைக்கலாம். ஆனால் அவற்றின் மூலம் செய்ய முடியாது. அட்டைகள் சிறியதானாலும் வேக மாகக் கட்டப்படும். தாய் அட்டை களின் உற்பத்தி மற்றும் அசெம்பி ளியில் பயன்படுத்தப்படும் ஒரு வடிவமைப்பு தொழில் நுட்பம். இணைப்பு ஊசிகளைக் குறைவாகப் பயன்படுத்தும் மேலமைப்பு வாய்ப் புகள் மேம்பட்டவையாக உள்ளன.

surface mount technology: மேற்பரப் பில் ஏற்றும் தொழில்நுட்பம்: பட்டை களைத் தொகுத்து உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் ஒரு வடிவமைப்பு தொழில்நுட்பம். இணைப்பு ஊசி களைக் குறைவாகப் பயன் படுத்து வதன் மூலம் இது மேம்பட்ட வெளிக்கோடமைப்பு வாய்ப்புகளை அளிக்கிறது.

surface of resolution: சுழற்சி மேற் பரப்பு: ஒரு குறிப்பிட்ட கோணத்தில் ஒரு நிலையான அச்சைச்சுற்றி சுழ லும் ஒரு வளைகோட்டின் விளை வாக உருவாகும் உருவம்.

surge: எழுச்சி;வேகம் : மின்சக்தி திடீரென்று அதிகரித்தல்.

surge protector: வேகப் பாதுகாப்புப் பொறி; எழுச்சிக் காப்பு : திடீரென்று மின்சக்தி அதிகரித்து அதன் மூலம் மின் கருவிகள் பாழாவதைத் தடுக்க, அதை வடிகட்டி அனுப்பும் சாதனம். 110 வோல்ட் மின்சக்தி வெளியீடு உள்ள ஒரு பிளக்கில் வேகப் பாது காப்புப் பொறி பொருத்தப்பட்டு அதன் மூலம் கணினி அல்லது பிற சாதனங்களில் இணைக்கப்படும்.

surge suppressor: எழுச்சி ஒடுக்கி : பல கணினி மின்சக்தி மூலங்களில் பொருத்தப்பட்ட மின்னணு சாதனம். மின்சக்தி ஏற்ற, இறக்கம் ஆகி கணினியின் நுண்ணிய மின்னணு மின் சுற்றுக்களை சேதப்படுத்தா வண்ணம் தடுப்பது. லிஃப்ட் மோட் டார்கள், பற்றவைக்கும் சாதனங்கள் கம்ப்ரசர்கள் போன்ற பெரிய மின் சக்தி நுகரும் கருவி ஸ்பைக்குகளை

யும், சர்ஜ்களையும் உருவாக்கித் தரும்.

surging: வேகமாகப்பாய்தல்; எழுதல்: ஒரு மின்சுற்றின் மின்னோட்டம் அல்லது மின்சக்தி திடீரென்று தற்காலிகமாக மாறுதல் அடைவது.

suspend: தற்காலிக நிறுத்தம்; இடை நிறுத்தம் : ஒரு இயக்கத்தை மீண்டும் துவக்கும் வகையில் நிறுத்தல்.

swap file: இடமாற்றுக் கோப்பு : 386இன் மேம்பட்டமுறையில் சாளரத்துக்காகவே தனியாக ஒதுக்கப்பட்ட நிலைவட்டில் உள்ள ஒரு பகுதி. நினைவகத்திலிருந்து தற்காலிகமாக தகவலை இடமாற்றிக் கோப்புக்கு சாளரங்களை மாற்றித் தரும். இதனால் பிற தகவல்களுக்கு இடம் தாராளமாகக் கிடைக்கும். இட மாற்றிக் கோப்புகள் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ அமைக்கப்படும்.

swapping: இடமாற்று : 1. மெய்நிகர் சேமிப்பகத்தில் துணை சேமிப்பகத்திலிருந்து உள்சேமிப்பகத்திற்குக் கொண்டு வந்து இருக்கின்ற பக்கத்தை மாற்றுதல். 2. நேரப்பங்கீட்டு அமைப்பில் ஆணைத்தொடரை உள் சேமிப்பகத்திற்குக் கொண்டு வருதல் அல்லது சேமிப்பகத்தில் சேமித்தல். 3. உள்சேமிப்பகத்தில் இருப்பதை துணைசேமிப்பகத்துக்கு மாற்றும் அதே வேளையில் உள் நினைவகத்தில் இருப்பதை துணை சேமிப்பகத்துக்கு மாற்றுதல்.

swarm: பிழைத் தொகுதி : பல ஆணைத்தொடர் பிழைகள்.

swim : நீந்து : ஒளிக் (வீடியோ) காட்சித் திரையில் உள்ள உருவங்கள் வன்பொருள் அல்லது வேறு கோளாறுகளினால் தானாகவே நகர்தல். காட்சித் திரையில் விரும்பத்தகாத முறையில் படம் நகர்தல்.

switch : நிலைமாற்று : ஆணைத் தொடரமைத்தலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சொல்லப்பட்ட விதி முறைகளுக்கேற்ப ஒன்று அல்லது பல ஆணைத்தொடர் வாக்கியங்களாக மாறுதல். 2. ஒரு கருவி அல்லது சாதனத்தை இயக்கு/நிறுத்து போன்று வேறு நிலைக்கு மின்சாரம் மூலமாகவோ இயக்க முறையாலோ மாற்றுதல்.

switch more power supply : நிலை மாற்று மின்வழங்கி.

switched connection : இணைப்பித் தொடர்பு.

switched lines : நிலைமாற்றுக் கம்பிகள்: பல்வேறு இடங்களுக்கு தொலைபேசி பொத்தான் மையங்கள் மூலம் இணைக்கப்படும் தகவல் தொடர்புக் கம்பிகள்.

switched network : நிலைமாற்றுப் பிணையம் : பன்னாட்டு அழைப்பு தொலை பேசி அமைப்பு. செலுத்து (transmission) நேரத்தில் ஒரு முனையில் இருந்து வேறொன்றுக்கு ஏற்படுத்தப்படும் தற்காலிக இணைப்பினைக் கொண்ட கட்டமைப்பு.

switches : நிலைமாற்று விசைகள்.

switching algebra : நிலைமாற்று குறிக் கணக்கியல் : நிலைமாற்று கொள்கைக்கு செயல்படுத்தப்படும்போது பூலியன் குறிக் கணக்கியலுக்குத் தரப்படும் பெயர்.

switching circuit: நிலைமாற்று மின் சுற்று : இலக்க முறை மற்றும் நிலை மாற்று அமைப்புகளுடன் மின்சுற்று. இலக்கக் கணினிகள் தொலைபேசி அமைப்புகள் மற்றும் தானியங்கி

கணக்கெடுப்பு அமைப்புகள் இதற்குச் சான்றுகள்.

switching matrix: நிலைமாற்று அணி: குறுக்கு கம்பி, மீறும் அழுத்து கட்டை நிலைமாற்று ஆகிய இரண்டும் விசைப்படு அணியின் இயக்கத்தையே சார்ந்துள்ளன. இணைக்க வேண்டிய மின்சுற்றுகளை செங்குத்து மற்றும் கிடைமட்டக் கோடுகளின் சரியான கோணங்களில் வரிசைப்படுத்துவதற்கான கோட்பாடு என்று இதைக் கூறலாம். இந்தக் கோடுகள் விசையின் உள்ளீடு அல்லது வெளியீடாகும்.

switching theory: நிலைமாற்றுக் கொள்கை : இரண்டு அல்லது மேற்பட்ட தனிப்பட்ட நிலைகள் உள்ள மின்சுற்றுகளுக்குப் பயன்படுத்தப்படும் கொள்கை.

switch - to computer: கணினிக்கு நிலைமாற்று : குரல் தொலைபேசியுடன் தள அணுகுமுறையை ஒருங்கிணைப்பது. எடுத்துக்காட்டாக, வாடிக்கையாளர் சேவை பயன்பாடுகளில் தானியங்கி எண்காட்டி போன்ற தொலைபேசி சேவைகளைப் பயன்படுத்தினால் உள்ளே வரும் அழைப்பு திரும்பப்பெற்று வாடிக்கையாளர் கோப்பின் மூலம் அடுத்துள்ள மனிதப் பிரதிநிதியிடம் செல்லும்.

symbol: குறியீடு; குழுஉக்குறி : 1. எழுத்து, எண் அல்லது அடையாளம். ஒரு எண் இயக்கம் அல்லது உறவைக் குறிப்பிடுவது. 2. கணினியின் எழுத்துத் தொகுதியில் ஏதாவது ஒன்று.

symbolic address: குறியீட்டு முகவரி;குழுஉக்குறி முகவரி : குறியீடுகளின் மூலம் கூறப்படும் முகவரி. கணினியால் மொழி பெயர்க்கப்படுவதற்கு முன்பாக தொகுப்பியினால் முழு முகவரியாக மாற்றப்படுவது. ஆணைத்தொடர் அமைப்பவருக்கு எளியது.

symbol set: குறியீட்டுத் தொகுதி : அவற்றின் சிறப்புப் பயன்பாடுகளுக்காக அச்செழுத்து வடிவமைப்பாளர்களால் ஒன்றாகத் தொகுக்கப்படும் எழுத்துகளின் தொகுதி. சான்றாக, கணிதக் குறியீடு தொகுதி, பொறியியல் தொகுதி, நிதித் தொகுதி; பன்னாட்டு நாணயத் தொகுதி போன்றவை. குறியீடு தொகுதிகள் வழக்கமான சொல் செயலகம் அல்லது டி.டி.பி. தொகுப்பில் உள்ள எழுத்துகளில் இருப்பதில்லை. குறியீட்டுத் தொகுதிகளை அச்செழுத்துப் பெட்டிகளாக அல்லது மென் எழுத்துகளாக வாங்க வேண்டும்.

symbolic coding: அடையாளக் குறியீடமைத்தல்: எந்திரமொழியல்லாத குறியீட்டில் எழுதப்பட்ட ஆணைகளை குறியீட்டில் அமைத்தல். இயக்கக் குறியீடுகள் இயக்கிகளுக்காக குறியீட்டு எண்முறையே இதில் பயன்படுத்தப்படுகிறது.

symbolic device: குறியீட்டுச்சாதனம்: உள்ளீட்டு வெளியீட்டுக் கோப்பை குறிப்பிடப் பயன்படுத்தப்படும் பெயர். சான்று SYSDSK என்பது ஒரு காந்த வட்டு அலகைக் குறிப்பிடுகிறது.

symbolic editor: குறியீட்டுத் தொகுப்பி: மூலமொழியில் மாற்றங்களைச் செய்ய, தயாரிப்புகளுக்குக் கணினியை உபயோகிப்பவர்களுக்கு உதவும் அமைப்பு ஆணைத் தொடர். ஒரு செய்தி வரிகளைச் சேர்த்தோ மாற்றியோ அல்லது நீக்கியோ இதைச் செய்யலாம்.

symbolic I/O Assignment: குறியீட்டு உள்ளீட்டு/ வெளியீட்டு மதிப்பிருத்

தல் : ஒரு அட்டை படிப்பியைக் குறிப்பிட உள்ளீடு/வெளியீட்டைக் குறிப்பிடும் பெயர்.

symbolic language: குறியீட்டு மொழி: கணினி அமைப்பின் உள்ளீட்டு மொழியாக இல்லாத எழுத்துகள், எண்களால் உருவாக்கப்பட்ட போலி மொழி. புனைவு மொழி (Fabricated Language) என்றும் அழைக்கப்படும்.

symbolic logic: குறியீட்டுத் தருக்க முறை.

symbolic name: குறியீட்டுப் பெயர்.

symbolic programming: குறியீட்டு ஆணைத் தொடரமைத்தல் : கணினி ஆணைத்தொடர்களை உருவாக்க குறியீட்டு மொழியைப் பயன் படுத்தல்.

symbolic table: குறியீட்டுப் பட்டியல்; குறியீட்டு அட்டவணை : ஒரு குறியீட்டுத் தொகுதியை வேறொரு குறியீடுகள் அல்லது எண்களின் தொகுதியுடன் ஒப்பிடும் பட்டியல். சான்றாக சேர்ப்பி (Assembly)-யில் குறியீட்டுப் பட்டியலில் சேர்க்கப் பட்ட நோக்க ஆணைத்தொடர் முகவரியின் குறியீட்டு அடையாளம் இருக்கும்.

symbol string: குறியீட்டுச் சரம் : குறியீடுகளை மட்டுமே கொண்ட சரம்.

symmetric multiprocessing: செஞ்சீர் பல்செயலாக்கம் : எந்த மையச் செயலகத்துக்கும் பயன்பாட்டு ஆணை அளிக்கத்தக்க பல்செயலாக்க வடிவமைப்பு. ஒரு மையச் செயலகமாகவோ அல்லது நிரலமைப்பவராகவோ செயல்படும். இவ்வாறே கணினியை ஏற்றி அடுத்துள்ள மையச் செயலகத்துக்கு வேலையைப் பிரித்துக்கொடுத்து உள்ளீடு/வெளியீடு வேண்டுகோள்களைச் சமாளிக்கிறது.

symphony: ஒத்திசைவு : லோட்டஸ் நிறுவனத்தின் பி.சி.களுக்கான ஒருங்கிணைந்த மென்பொருள் தொகுப்பு. இதில் சொல், விரிதாள், வணிக வரை கலைகள், தகவல் தொடர்புகள் மற்றும் ஒரு பெரு மொழி ஆகியவை உள்ளடங்கும்

sync character: இசைவுரு : ஒரே நேரத்தில் தகவல் தொடர்புகளில் எழுத்துகளை ஒரே நேரத்தில் இயங்கச் செய்வதற்கு அனுப்பப்படும் எழுத்து.

synchronization : ஒரே நேரத்திய அமைப்பு ; ஒத்தியக்கம் : நிகழ்வுகளை காலமுறைப்படி ஒழுங்குபடுத்துதல். தற்செயலாக ஒரே நேரத்தில் ஏற்படுவதாகவோ அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில் ஏற்படுவதாகவோ அமைக்கப்படும்.

synchronization check : ஒரே நேரத்தில் நடைபெறும் சோதனை ; ஒத்தியக்கச் சரிபார்ப்பு : சரியான நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அல்லது சூழ்நிலை ஏற்படுகிறதா என்பதை முடிவு செய்ய நடைபெறும் சோதனை.

synchronous : ஒத்தியக்க ; சீராக ; சேர்ந்தாற்போல் : ஒவ்வொரு நிகழ்வு அல்லது ஒரு அடிப்படை இயக்கத்தின் செயல் ஆகியவற்றைத் துவங்கவும், அவற்றின் அடுத்த நிலைக்குப் போகவும் ஒரு நேரம் காட்டும் கடிகாரத்தின் சமிக்ஞைகளை ஒட்டி நடைபெறுவதைக் குறிப்பிடுகிறது.

synchronous communication : ஒரே நேரத்திய தகவல் தொடர்புகள்; ஒத்தியக்கச் செய்தித் தொடர்பு : கணினிகளுக்கிடையில் மிக அதிக வேகத்தில் தகவல்களைப் பரிமாறிக்

கொள்ளும் முறைகள். கவனமாக நேரம் அமைத்தலும், சிறப்பு கட்டுப் பாட்டுக் குறியீடுகளும் இதில் தேவை.

syncrhronous computer : ஒரேநேர கணினி ; ஒத்தியியக்கக் கணினி : ஒரு கடிகாரம் உருவாக்கும் சமிக்ஞை யின் விளைவாக இயக்கம் துவக்கப் படும் கணினி.

synchronous network : ஒரே நேரத்திய கட்டமைப்பு ; ஒத்தியக்கப் பிணை யம் : ஒரு பொது கடிகாரத்தின் துடிப் புக்கேற்ப ஒரே நேரத்தில் தகவல் தொடர்பு வழித்தடங்கள் செயல் படும் பிணையம்.

synchronous operation : ஒரே நேரத் திய இயக்கம் ; ஒத்தியக்கச் செயல் பாடு: கடிகாரத் துடிப்புகளின் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் ஒரு கணினி அமைப்பு.

synchronous protocol : ஒத்தியக்க வரைமுறை : பைசிங்க், எஸ்டிஎல்சி, எச்டிஎல்சி போன்ற ஒத்தியக்க செலுத்தியைக் கட்டுப்படுத்தும் தகவல் தொடர்பு வரைமுறை.

synchronous transmission : ஒரே நேரத்தில் தகவல் அனுப்புதல் ; ஒத் தியக்கச் செலுத்தம் : ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் துண்மிகள் அனுப்பப் படும் முறை. நேர ஒருங்கிணைப் புக்கு ஒரே கடிகார சமிக்ஞை களையே பயன்படுத்தி அனுப்பு தலும், பெறுதலும் செய்தல்.

synonym : மாற்றுப் பெயர் : ஆர்டிபி எம்எஸ் தகவல்தளத் தொகுப்பில் ஓர் அட்டவணைக்கு இன்னொரு மாற்றுப்பெயர் சூட்டி அதனையே கையாளலாம்.

syntax : இலக்கணம் ; தொடரியல் : ஒரு மொழி மற்றும் அதன் வெளிப் பாடுகளின் அமைப்பைக் குறித்த விதிகள். எல்லா தொகுப்பு நிலை மற்றும் உயர்நிலை மொழிகளும் ஒரு முறையான இலக்கணத்தைக் கொண்டவை.

syntax diagram or flowchart : இலக் கணத் தொடரியல் வரைபடம் அல்லது பாய்வு வரைபடம் : ஒரு குறிப்பிட்ட மென்பொருள் பயன்பாட்டின் இலக் கண விதிகளைக் காட்டும் பாய்வு வரைபடம். ஆணைத்தொடரமைப்பு மொழிகளில் பயன்படுத்தப்படு கிறது.

syntax error : இலக்கணப் பிழை : பயன்படுத்தப்படும் ஆணைத் தொடர் மொழியின் அமைப்பைக் குறித்த விதியை மீறுதல். READ என்பதற்குப் பதிலாக RIAD என்று தட்டச்சு செய்தால் அதற்குப் பொருள் என்ன என்று புரியாமல் கணினி தடு மாறும். இத்தகைய ஆணை தரப்படு மானால் உடனே கணினியிடமிருந்து 'பிழை' என்று பதில் வரும். சான் றாக, 110இல் பிழை வந்தால் ஆபத்தில்லை அல்லது ஆபத்தான பிழை என்று அது கூறும்.

syntax rules : இலக்கண விதி முறை கள்.

synthesizer : தொகுப்பி : ஒலியைத் தானாகவே உருவாக்கவோ அல்லது செயலாக்கவோ செய்யும் வெளியீட் டுச் சாதனத்தை தொகுப்பி என்று சொல்லலாம். சில தொகுப்பிகளில் நுண் செயலகங்கள் இருக்கும். கட்டுப்பாட்டுச் சாதனமாக அவை பயன்படுத்தப்படும். குரல் தொகுப் பிகள் தருகின்ற ஒலி, ஒரு நபர் பேசு வதற்காகவோ, இசைக் கருவிகளைப் போலவோ இருக்கும்.

SYSGEN : சிஸ்ஜென் : system generation என்பதன் குறும்பெயர்.

SYSOP : சிசாப் : system operator என்பதன் குறும்பெயர். ஒரு மின்னணு செய்திப் பலகையை இயக்குபவர்.

sysReq key : சிஸ்ரக் விசை : system request key என்பதன் குறும்பெயர். மையக் கணினியின் கவனத்தை ஈர்க்கப் பயன்படுத்தப்படும் முகப்பு விசைப்பலகையில் உள்ள விசை. பி.சி. விசைப்பலகைகளில் இந்த விசை உள்ளது. ஆனால், அபூர்வமாகவே பயன்படுத்தப்படுகிறது.

system : அமைப்பு; முறைமை : system என்பதை 'முறைமை' என்று கூறலாம். முறைகருவிகளின் திறன்கள், தொழில் நுட்பங்கள், மாற்றப்படக் கூடிய தகவல், ஒரு குறிப்பிட்ட மேலாண்மை நோக்கங்களை அடைவதில் இயக்கத்தை ஆதரித்தல் போன்றவற்றைக் கொண்டது. தொடர்புடைய வசதிகள், பொருள் சார்ந்த சேவைகள், ஆட்கள், தகவல் ஆகியவற்றைக் கொண்ட, விரும்பப் படும் இயக்கத்தைச் செய்வதற்குத் தேவையான தன்னிறைவுத் தன்மை கொண்டது.

system 7: சிஸ்டம் 7: மெக்கின்டோஷ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தின் முக்கிய மேம்பாட்டு நிலை (1992). இதில் மெய்நிகர் நினைவகம், கூடுதல் நினைவக முகவரியிடல், வெப்ப இணைப்புகள் (பதிப்பு கூட்டு சேர்), பல்பணியமைத்தல், உண்மை அச்சு எழுத்துகள் மற்றும் பயனாளர் இடைமுகத்துக்கான பலதரப்பட்ட மேம்பாடுகள் உள்ளன.

system analyser : அமைப்பு பகுப்பாய்வி : சிக்கலான கருவிகள் மற்றும் அமைப்புகளின் கள சேவையின் போது ஆபத்துக்கு பயன்படும் எடுத்துச் செல்லக் கூடிய சாதனம்.

system 2000 : சிஸ்டம் 2000 : சாஸ் நிறுவனத்தின் பரம்பரைமுறை, கட்டமைப்பு மற்றும் உறவுமுறை டிபிஎம்எஸ். இது ஐ.பி.எம், சி.டி.சி மற்றும் யூனிசிஸ் கணினிகளில் இயங்குகிறது. சாஸ் சிஸ்டத்துடன் இது ஒருங்கிணைக்கப்பட்டது.

system analysis : அமைப்புப் பகுப்பாய்வு ; அமைப்பு அலசல் : ஒரு கணினி அமைப்பின் பகுதிகள் மற்றும் தேவைகளை விவரமாக ஆய்தல். நிறுவனத்தின் தேவைகளையும் விரிவாக ஆராய்தல். தற்போது பயன்படுத்தப்படும் தகவல் அமைப்பு மற்றும் திட்டமிடப்பட்டுள்ள தகவல் அமைப்பு ஆகியவற்றை ஆராய்தல்.

system analyst : அமைப்பு பகுப்பாய்வாளர் ; அமைப்பு அலசர் : ஒரு நிறுவன அமைப்பின் நடவடிக்கைகள், முறைகள், நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களை ஆராய்ந்து எத்தகைய செயல்களைச் செய்ய வேண்டும், அவற்றை எப்படிச் செய்யவேண்டும் என்பதை முடிவு செய்யும் நபர். அமைப்பு ஆய்வைச் செய்யும் நபர்.

system approach : அமைப்பு அணுகுமுறை : அறிவியல் முறைசார்ந்த சிக்கல் தீர்க்கும் ஒழுங்குமுறையான செயலாக்கம். இது சிக்கல்களை வரையறை செய்து, முறைமைகளின் சூழ்நிலையில் வாய்ப்புகளை வரையறை செய்கிறது. சிக்கல் அல்லது வாய்ப்பை விவரித்து தகவல் தேடப்பட்டு மாற்றுத் தீர்வுகள் காணப்பட்டு மதிப்பிடப்படுகின்றன. பிறகு, சிறந்த தீர்வு தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. அதன் வெற்றி மதிப்பிடப்'படுகிறது.

system board : அமைப்பு அட்டை : நுண்கணினியின் முதன்மை மின்

சுற்றுப் பலகை. தாய்ப்பலகை, பின் தளம் (mother board, back plane) என்றும் அழைக்கப்படும்.

system chart : அமைப்பு வரைபடம்: வரைபடத்தின் வகைகளில் ஒன்று.

system clock : அமைப்பு கடிகாரம் : கணினியில் உள்ள அனைத்து மின் சுற்றுகளையும் இயக்கும் அடிப் படை துடிப்பினை வழங்குகின்ற படிகம். இதில் 8253 நேரம் காட்டும் சிப்பும் அடக்கம்.

system commands : அமைப்புக் கட்டளைகள்; பொறியமைவு ஆணை கள் : உரையாடல் நேரப் பங்கீட்டு முறையில் இயக்கும்போது தரப் படும் சிறப்பு ஆணைகள். ஆணைத் தொடர்களை செயல்படுத்தவும் (RUN) அவற்றை வரிசைப்படுத்தவும் (LIST) சேமிக்கவும் (SAVE) மற்றும் இத்தகைய இயக்கங்களைச் செய்ய வும் அவை கணினிக்கு ஆணையிடு கின்றன.

system component matrix : அமைப் புப் பகுதிகள் அச்சுரு அமைப்பு : வன் பொருள், மென்பொருள், மனிதர் கள், பயன்படுத்தப்படும் வேலை கள் மற்றும் ஒரு தகவல் அமைப்பில் உற்பத்தி செய்யப்படும் தகவல் பொருட்களை ஆவணப்படுத்தும் அச்சுரு அமைப்பு.

system context : அமைப்பு சூழ் நிலை: கணினி அமைப்புகள், துணை அமைப்புகள், கணினியின் பாகங்கள் ஆகியவைகளை குறிப்பிட்ட சூழ் நிலையில் கண்டறிந்து 'systemic view' என்றும் கூறப்படும்.

system design : அமைப்பு வடி வமைப்பு: இறுதிப் பயனாளரின் தகவல் தேவைகளை சமாளிக்கக் கூடிய ஒரு புதிய தகவல் அமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்று முடிவெடுத்தல். இதில் தருக்க மற்றும் பருப் பொருள் வடிவமைப்பு நடவடிக்கைகள், பயனாளர் இடை முகம், தகவல் செயலாக்க வடி வமைப்பு நடவடிக் கைகள் போன்ற முறைமை பிரிவாய்வு நிலையில் உருவாக்கப்பட்ட கணினி தேவை களுக்கு ஈடு கொடுக்கும் கணினி பாகங்கள் பற்றிய தகவல்கள் உள் ளடங்கி இருக்கும்.

system design standard : அமைப்பு வடிவமைப்பு; செந்தரம்; தரநிர்ணயங் கள் : பயனாளர் இடைமுகங்கள் ஆணைத்தொடரமைப்பு இடை முகங்கள், மற்றும் தகவல்தொடர்பு ஆதரவு போன்ற பொதுவான முறை மை தன்மைகளின் வடிவமைப்பை ஊக்குவிக்கின்ற தர நிருணயங்கள்.

system development cycle : அமைப்பு உருவாக்க சுழற்சி : பயனாளர் மற்றும் தொழில்நுட்ப அலுவலரின் பரஸ்பர முயற்சி தேவைப்படும் தகவல் முறைமை (பயன்பாடு) ஏற்படுத்து வது பற்றிய தொடர் நிகழ்வுகள். இந்த சுழற்சி முறைமை பகுப்பாய்வு மற்றும் வடிவமைப்பிலிருந்து தொடங்குகிறது. இதில் வாய்ப்பு ஆய்வு, பொது வடிவமைப்பு, மாதிரி அமைத்தல், விவர வடிவமைப்பு, செயல்பாட்டு விவரக் குறிப்பு ஆகியவை இடம் பெறும். ஆணைத் தொடரமைப்பில் வடிவமைப்பு, செயல்பாட்டு விவரக் குறிப்பு ஆகியவை இடம் பெறும். ஆணைத் தொடரமைப்பில் வடிவமைப்பு, குறியீடு சோதித்தல் மற்றும் செயல் படுத்துவதில் பயிற்சி, மாற்றல், நிறுவுதல் ஆகியவற்றையடுத்து இறுதியாக பயனாளர் ஏற்பு ஆகியவை அடங்கி உள்ளன.

system diagnostics : அமைப்பு குறை கண்டறிதல்கள் : ஒட்டு மொத்த

கணினி அமைப்பின் கோளாறு களைக் கண்டறிய பயன்படுத்தப் படும் ஆணைத்தொடர்கள்.

system engineering : அமைப்பு பொறியியல்.

system failure : அமைப்புக் கோளாறு வன்பொருள் அல்லது மென் பொருள் செயல்படாமை. செய லாக்க அமைப்பின் சிக்கலுடன் சேர்ந்த சிக்கலை இது குறிப்பிட லாம்.

system flowchart : அமைப்பு பாய்வு வரைபடம் : கணினி அமைப்பின் ஒரு பகுதி அல்லது முழுவதையும் வரை பட உருவில் குறிப்பிடுதல். ஒன்றோ டொன்று இணைந்துள்ள பாய்வு வரைபடக் குறியீட்டு முறையில் வரிசைப்படுத்தி குறியிட்ட பயன் பாட்டுக்கு ஏற்ப திட்டமிடல், கட்டுப்பாடு மற்றும் இயக்க வர்ணனைகளோடு கணினி இயக்கம் குறிப்பிடப்படும்.

system folder : அமைப்பு மடிப்பு : மெக்கன்டோஷில் உள்ள ஃபோல் டர். இதில் சிஸ்டம், ஃபைன்டர், மல்டி ஃபைன்டர், அச்சக இயக்கி களின் எழுத்துகள், மேசை துணைப் பொருள்கள், ஐ என் ஐ டி -க்கள் மற்றும் சிடேவ்ஸ் (cdeus) ஆகியவை உண்டு.

system followup : அமைப்பின் தொட ரல் : புதிர் நிறுவப்பட்ட கணினி இயக் கம் அதன் திட்டப்படி செயல்படு கிறதா என்பதைத் தொடர்ந்து மதிப் பீடு செய்து பரிசீலித்தல்.

system generation (SYSGEN) : அமைப்பு உருவாக்கம் (சிஸ்ஜெம்) : ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுவப் பட்டு, ஒரு அடிப்படை அமைப்பை துவக்கும் செயல். விற்பனையாளரி டமிருந்து பெறப்பட்ட பொதுவான செயலாக்க அமைப்பு முறையைத் தனிப்பட்ட பயனாளர் தேவைக் கேற்ப மாற்றுதல்.

system image : அமைப்பு உரு : செய லாக்க அமைப்பு, ஓடும் ஆணைத் தொடர்கள் உள்ளிட்ட நடப்புச் செய லாக்கம் சூழ்நிலையின் நினைவகப் பார்வை.

system implementation : அமைப்பு அமலாக்கம் : ஒரு புதிய (கணினி) அமைப்பை உருவாக்குவதில் இறுதி நிலை. இந்த நிலையில் அமைப்பில் உள்ள பிழை முழுவதும் நீக்கப்படு கிறது. இது பயன்படுத்துவோரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா என்றும் சரியாக இயங்குகிறதா என்றும் முடிவு செய்யப்படுகிறது.

system installation : அமைப்பு நிறுவு தல் : ஒரு புதிய அமைப்பை இயக்கத் துக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள்.

system interrupt : அமைப்புக் குறுக்கீடு: ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தப்பட்டாலும் மீண்டும் அந்த இடத்தில் இருந்து துவக்கப்படும் வகையில் ஆணைத்தொடர் அல்லது வாலாயத்தின் (ரொட்டீனின்) வழக்க மான இயக்கத்தை நிறுத்துதல்.

system investigation : அமைப்பு புலனாய்வு : ஒரு வணிகச் சிக்கலுக் காகத் திட்டமிடப்படும் தகவல் அமைப்பு தீர்வு குறித்த முதல் நிலை ஆய்வு மற்றும் திரையிடும் தேர்வு.

system level : அமைப்பு நிலை : செயலாக்க அமைப்பு முறை அல்லது வேறுசில கட்டுப்பாட்டு ஆணைத் தொடர் செய்கின்ற இயக்கம்.

system life cycle : அமைப்பு ஆயுள் சுழற்சி : ஒரு தகவல் அமைப்பின் பயனுள்ள வாழ்நாள். அதன் வாழ்

நாளானது வணிகத்தின் தன்மை மற்றும் ஒட்டம், அத்துடன் தகவல் தளம் மற்றும் பயன்பாடுகளை உருவாக்கப் பயன்படும் மென்பொருள் மேம்பாட்டுக் கருவிகளைப் பொறுத்தே அமையும்.

system loader : அமைப்பு ஏற்றி : அமைப்பு நூலகத்தில் உள்ள ஆணைத்தொடர்களைக் கண்டறியவும் கணினி அமைப்பின் உள்சேமிப்பகத்தில் அதை ஏற்றவும் பயன்படும் மேற்பார்வை ஆணைத்தொடர்.

system memory : அமைப்பு நினைவகம் : செயலாக்க அமைப்பைப் பயன்படுத்துகின்ற நினைவகம்.

system priorities : அமைப்பு முன்னுரிமைகள் : தகவல் அமைப்புத் திட்டங்களை எந்த வரிசையில் எடுத்துக்கொள்ளலாம் என்பதை முடிவு செய்யும் முன்னுரிமைகள்.

system programmer : அமைப்பு ஆணைத்தொடராளர் : 1. ஒரு கணினியின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில் அமைப்பின் பயன்பாட்டை திட்டமிட்டு, உருவாக்கி, கட்டுப்படுத்தி, பராமரித்துவரும் ஆணைத் தொடராளர். 2. ஆணைத் தொடரமைக்கும் அமைப்புகளை வடிவமைக்கும் ஆணைத் தொடராளர்.

system programming : அமைப்பு ஆணைத் தொடரமைத்தல் : செயலாக்க அமைப்பு மென்பொருளை உருவாக்கிப் பராமரித்தல்.

system prompt : அமைப்புத் தூண்டி: கட்டளைக்காக செயலாக்க அமைப்பு காத்திருக்கிறது என்பதை குறிப்பிடும் திரையின் மேலுள்ள குறியீடு.

system requirements : அமைப்புத் தேவைகள் : இறுதிப் பயனாளரின் தகவல் தேவைகளை ஈடுசெய்யத் தேவைப்படும் தகவல் அமைப்பின் திறன்கள். செயல் தேவைகள் Functional requirements என்றும் அழைக்கப்படும்.

system reset : அமைப்பை மீண்டும் சரிசெய்தல் : மீண்டும் அதைத் துவக்கியதாகவோ, நிறுத்தியதாகவோ கணினியை ஏமாற்றும்போது ஏற்படும் இயக்கம்.

systems design : அமைப்பு வடிவமைப்பு : ஒரு கணினி அமைப்பின் அனைத்துப் பகுதிகளும் அவற்றுக்கே உரிய செயல்களை ஒருங்கிணைத்து எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைக் கூறும் விளக்க முறைகள்.

system development tools : அமைப்பு உருவாக்கக் கருவிகள் : ஒரு தகவல் அமைப்பினை உருவாக்கல் அல்லது பயன்பாடுகளை உருவாக்கலுக்காக ஆய்ந்து, வடிவமைத்து ஆவணப்படுத்த உதவும் வரைகலை, சொற்பகுதி மற்றும் கணினி உதவி கருவிகள் மற்றும் தொழில்நுட்பம்.

systems disk : அமைப்புகள் வட்டு : அமைப்பு மென்பொருளுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட வட்டுப் பெட்டி அல்லது வட்டு இயக்கி. இதில் செயலாக்க அமைப்பு சேர்ப்பிகள், தொகுப்புகள் மற்றும் பிறபயன்பாடு-கட்டுப்பாடு ஆணைத் தொடர்கள் அடங்கி உள்ளன.

systems engineer : அமைப்புப் பொறியாளர் : அமைப்பு ஆய்வு, அமைப்பு வடிவமைப்பு மற்றும் அமைப்பு ஆணைத்தொடர் பணிகளைச் செய்யும் நபர்.

systems house : அமைப்புகளின் நிறுவனம் : பயனாளரின் தேவை

களுக்கேற்ப வன்பொருள், மென் பொருள் அமைப்புகளை உருவாக்கும் நிறுவனம்.

systems manual : அமைப்புக் கையேடு : ஒரு அமைப்பின் இயக்கத்தைக் குறித்த தகவலைக் கொண்டுள்ள ஆவணம். நிறுவனத்தின் தகவல் ஓட்டம் பயன்படுத்திய படிவங்கள், உருவாக்கிய அறிக்கைகள், செய்யப்பட்ட கட்டுப்பாடுகள் அவற்றை முடிவு செய்ய தேவையான விவரங்களை நிர்வாகத்துக்கு அளிப்பது. வேலையின் விளக்கங்களும் பொதுவாக அளிக்கப்படும்.

system maintenance : அமைப்பு பராமரிப்பு : விரும்பத்தக்க அல்லது தேவையான மேம்பாடுகளைச் செய்வதற்காக ஒரு அமைப்பை கண்காணித்து, மதிப்பிட்டு, மாற்றுதல்.

systems management : அமைப்பு மேலாண்மை : அமைப்பு உருவாக்கல் மேலாண்மை. இதில் அமைப்பு ஆய்வு மற்றும் வடிவமைப்பு, பயன்பாட்டு மேம்பாடு மற்றும் அமலாக்கம் ஆகியவை உள்ளன.

systems network architecture : அமைப்புகள் பிணையக் கட்டமைப்பு : கணினி கட்டமைப்புகளுக்கான ஐ.பி.எம் கட்டுமான அமைப்பின் வடிவமைப்பு.

system security : அமைப்பு பாதுகாப்பு : ஒரு நிறுவனம் மற்றும் அதன் வாடிக்கையாளர்களின் பதிவேடுகளின் இரகசியத்தைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் வன்பொருள் மற்றும் மென்பொருளின் தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளும், மேலாண்மை நடைமுறைகளும்.

system software : அமைப்பு மென்பொருள் : ஒரு கணினி அமைப்பின் இயக்கங்களுக்கு உதவி, கட்டுப்படுத்தும் ஆணைத்தொடர்கள். அமைப்பு மென்பொருள் என்பது செயலாக்க அமைப்பு போன்ற பல தரப்பட்ட ஆணைத்தொடர்களைக் குறிப்பது. தகவல்தள மேலாண்மை அமைப்பு, தகவல் தொடர்பு கட்டுப்பாடு ஆணைத்தொடர்கள், சேவை மற்றும் பயன்பாடு ஆணைத்தொடர்கள் மற்றும் ஆணைத் தொடர் மொழி பெயர்ப்பிகள் ஆகியவை இவ்வகையில் சேரும்.

system software packages : அமைப்பு மென்பொருள் தொகுப்பு : கணினியை இயக்கி, கட்டுப்படுத்தி அதன் செயலாக்கத் திறன்களை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட சிக்கலான ஆணைத் தொடர்களின் தொகுதி.

system specifications : அமைப்பு விளக்கக் குறிப்புகள் : அமைப்பு வடிவமைப்பு நிலையின் உற்பத்திப் பொருள். வன்பொருள், மென் பொருள், வசதிகள், ஆட்கள், தகவல் தளம் மற்றும் திட்டமிடப்பட்ட தகவல் அமைப்பின் பயனாளர் இடைமுகம் ஆகியவற்றைப் பற்றிய விளக்கக் குறிப்புகளை இது கொண்டுள்ளது.

systems programmer : அமைப்பு ஆணைத்தொடராளர் : ஒரு குறிப்பிட்ட கணினி அமைப்பின் அமைப்பு மென்பொருள் மற்றும் பயன்பாட்டு மென்பொருள் ஆகிய இரண்டுக்கும் இடையிலான செயல்களைப் புரிந்து கொள்பவர்.

systems programming : அமைப்பு ஆணைத் தொடரமைத்தல் : கணினியின் செயலாக்க அமைப்புகளாக அமையும் ஆணைத் தொடர்களை உருவாக்குதல். சேர்ப்பிகள், தொகுப்பிகளின் கட்டுப்பாடு ஆணைத்

தொடர்கள் மற்றும் உள்ளீடு/வெளி யீடுகளைக் கையாள்தல் போன்றவை இத்தகைய ஆணைத் தொடர்கள்.

systems programms : அமைப்பு ஆணைத்தொடர்கள் : கணினி அமைப்புகளின் உள் இயக்கங் களைக் கட்டுப்படுத்தும் ஆணைத் தொடர்கள். செயலாக்க அமைப்பு கள், தொகுப்பிகள், மொழி பெயர்ப் பிகள், சேர்ப்பிகள், வரைகலை ஆத ரவு ஆணைத் தொடர்கள் மற்றும் கணித வாலாயம்கள் போன்றவை இத்தகைய ஆணைத் தொடர் களாகும்.

systems resource : அமைப்பு மூலா தாரம் : செயலாக்க அமைப்புக் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் கணினி அமைப்பின் எந்த ஒரு மூலாதாரமும்.

systems software : அமைப்பு மென் பொருள் : செயலாக்க அமைப்புகளை ஒட்டி, செயல்பாட்டு ஆணைத் தொடராளருக்கு வேலையில் உதவி, கணினி அமைப்பை நடத்தும் ஆணைத் தொடர்கள். பொதுவாக, விற்பனையாளரால் உருவாக்கப் பட்டு கணினி பயன்படுத்துபவ ருக்கு விற்கப்படும். கணினியை விற் கும் அதே விற்பனையாளர் அல்லது வேறு தனி விற்பனையாளர் இதை விற்கலாம்.

systems study : அமைப்பு ஆய்வு : ஒரு வணிக அமைப்பை நிறுவவோ அல்லது மாற்றி அமைக்கவோ ஏற்றதா என்பதை முடிவு செய்யும் ஆய்வு.

system support programms : அமைப்பு உதவி ஆணைத் தொடர் கள் : ஒரு கணினி அமைப்புக்கு பல தரப்பட்ட உதவி சேவைகளை அளித்து அதன் இயக்கம், மேலாண்மை மற்றும் பயனாளர் களுக்கு உதவிடும் ஆணைத்தொடர் கள். அமைப்புப் பயன்பாடுகள் மற்றும் செயல்பாடு, காட்சித் திரை கள் இதற்குச் சான்றுகள்.

system support : அமைப்பு உதவி : அமல்படுத்தப்படும் ஒரு கணினி அமைப்பின் பயன் மற்றும் மேம் பாட்டுக்கான சேவைகள் மற்றும் பொருள்களைத் தொடர்ந்து வழங்கு தல்.

systems synthesis : அமைப்பைப் பிரித்தறிதல் : ஒரு சிக்கலைத் தீர்ப் பதற்கான நடைமுறைகளைத் திட்ட மிடுதல்.

systems testing : அமைப்புகளைச் சோதித்தல் : அமைப்பு ஆய்வாளர் விரும்பும் வண்ணம் உள்ளீடு/வெளி யீடு உள்ளிட்ட அனைத்து ஆணைத் தொடர்களும் தொடர்பு கொண் டுள்ளதா என்பதை வரிசையாக தொடர் ஆணைத் தொடர்கள் மூலம் சோதித்தல்.

system termination : அமைப்பு நிறுத்தம் : ஒரு கணினி அமைப்பில் உள்ள-அனைத்துச் செயலாக்கங் களும் நிறுத்தப்பட்ட நிலை.

system test : அமைப்புச் சோதனை : சோதனைக்காக ஒரு முழு கணினி அமைப்பினை ஓட்டுதல்.

system testing : அமைப்புச் சோதித் தல் : ஒரு அமைப்பில் இருக்கக் கூடிய அனைத்து ஆணைத் தொடர்களை யும் அவை இயக்கப்பட வேண்டிய வரிசையிலேயே சோதிக்கப்படல்.

system time/date : அமைப்பு நேரம்/ நாள் : கணினி நிறுத்தப்பட்டாலும் ஒரு மின்கலம் மூலம் நேரமும், நாளும் தொடர்ந்து ஓடிவருதல். புதி தாக உருவாக்கப்பட்ட அனைத்து கோப்புகளுக்கும் முத்திரையிடவும்,

நேரம் சார்ந்த செயல்களைச் செய்ய வும் இது தேவைப்படுகிறது.

system unit : அமைப்பு அலகு : நிலை வட்டு மற்றும் நெகிழ்வட்டு இயக்கி கள் போன்ற செயலாக்க அலகு மற் றும் சாதனங்களைக் கொண்ட கணினியின் ஒரு பகுதி. ஐ.பி.எம். பி.சி ஏற்புடைய அமைப்பு அலகில் நுண் செயலக சிப்பு, ரோம், ராம் மற்றும் உள்ளீடு/வெளியீடு வழித் தடம் ஆகியவை இருக்கும். ஒன்று, இரண்டு அல்லது பல தட்டு இயக்கி களும், வெளிப்புறப் பொருள்களைச் சேர்ப்பதற்கான விரிவாக்கப் பகுதி களும் அதில் இருக்கலாம்.

system user : அமைப்பு பயனாளர் : ஒரு அமைப்பின் வசதிக்காகப் பயன் படுத்தும் ஒரு நபர், சாதனம் அல்லது ஒரு அமைப்பு.

system utility programms : அமைப்பு பயன்பாட்டு ஆணைத்தொடர்கள் : சிக்கல்களுக்குத் தீர்வு காணும் போதோ அல்லது இயக்கத்தின் ஒட்டு மொத்த, திறனை மேம்படுத்தவோ அமைப்பு ஆணைத்தொடராளருக்கு உதவும் ஆணைத்தொடர்களின் தொகுதி.

system V release 4.0 : சிஸ்டம் V வெளியீடு 4.0 : 1989இல் வெளியிடப் பட்ட யூனிக்சின் ஒருங்கிணைக்கப் பட்ட பதிப்பு.

system application architecture : அமைப்பு பயன்பாட்டுக் கட்டமைப்பு: வன்பொருள்/மென்பொருள் ஏற் புடைத் தன்மைக்கான உரிமை பெற்ற (ஐ.பி.எம்) விளக்கக் குறிப்பு கள்.

systems development : அமைப்புகள் மேம்பாடு : ஒரு அமைப்பை எண்ணி வடிவமைத்து, அமல்படுத்துதல் புல னாய்வு, பகுப்பாய்வு, வடிவ மைப்பு, அமலாக்கம் மற்றும் பரா மரிப்பு ஆகிய செயல்முறைகளின் மூலம் ஒரு தகவல் அமைப்பை உருவாக்குதல். அமைப்பு உருவாக்க ஆயுள் 'சுழற்சி' தகவல் அமைப்பு உருவாக்கம் அல்லது பயன்பாடு உருவாக்கம் என்றும் கூறலாம்.

systems solution methodology : அமைப்பு தீர்வு வழிமுறை : சிக்கல் தீர்வுக்கான அமைப்பு அணுகு முறை. உண்மை வணிக சூழ்நிலைகள், மாதிரி ஆய்வுகளுக்காக இதை வழி முறையாக மாற்றிச் சொல்லப் படுகிறது.

T

tab : நிறுத்துநிலை; பட்டி அட்டவணை; அட்டவணைப் பத்தி தாவல் : Terminal Anchor Block என்பதன் குறும்பெயர்.

tabbing : நிறுத்தம் : ஒளிக் காட்சித் திரையிலோ அல்லது அச்சுப்பொறியின் அச்சிடும் முனையிலோ ஒரு குறிப்பிட்ட பத்தியில் சுட்டியை (கர்சரை) நகர்த்துதல்.

tab character : நிறுத்துநிலை எழுத்து: அடுத்த நிறுத்தத்திற்குப் போவதைக் குறிப்பிடும் ஒரு ஆவணத்தில் உள்ள கட்டுப்பாட்டு எழுத்து.

tab deimited : நிறுத்து நிலைக் குறியீடு: புலங்களுக்கிடையில் விலக்கிகளாக நிறுத்து-எழுத்துகளைப் பயன்படுத்தி அமைக்கப்படும் சொல் கோப்புப் படிவம். காற்புள்ளியால் வரையறை செய்யப்படும் கோப்புகளைப் போலல்லாது, எண்ணெழுத்துத் தகவல்களில் மேற்கோள் குறிகள் இருப்பதில்லை.

tab group : நிறுத்து குழு.

tab intervel : நிறுத்து இடைவெளி.

tab key : நிறுத்தல் விசை : அடுத்த நிறுத்துமிடத்திற்கு சுட்டியை நகர்த்தும் விசைப்பலகையின் விசை.

table : பட்டியல் ; அட்டவணை : உடனடி பார்வைக்குத் தயாரான வடிவில் தகவல்களைத் தொகுத்தல். தொடர்ச்சியான இருப்பகங்களில் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன. நெடுவரிசை, கிடைவரிசை வடிவில் எளிதில் நுழைப்பதற்கேற்ப எழுதப்படுகின்றன. ஒருகுறிப்பிட்ட தகவலைப் பெறக்கூடிய இடத்தைக் கண்டறிய நெடுவரிசை, கிடை வரிசைகளின் கலப்பு உதவுகிறது.

table file : அட்டவணைக் கோப்பு.

table look up : பட்டியல் பார்வை; அட்டவணை நோக்கல் : ஒரு பட்டியலில் தெரிந்த மதிப்புகளைக் கொண்டு தெரியாத மதிப்பைக் கண்டறியும் நடைமுறை.

tablet : வரைவு எண்ணாக்கி : கணினியில் பயன்படுத்துவதற்காக வரைகலைகளையும், படத் தகவல்களையும் மாற்றித்தரும் உள்ளீட்டுச் சாதனம்.

tabulation : அட்டவணையிடல் ; பட்டியலிடல்.

tabulation character : அட்டவணைப் படுத்தும் உரு.

tabulator : அட்டவணையாக்கி.

tabulator clear key : அட்டவணையாக்குத் திறவு.

tabulator key : அட்டவணையாக்குத் திறவு.

tabulator mechanism : அட்டவணை யாக்க முறைமை.

tabulator set key : அட்டவணை நிறுவுச்சாவி.

tabulator setting : அட்டவணை அமைப்பு.

tabulator stop : அட்டவணை நிறுத்தம்.

table view : பட்டியல் பார்வை : வரிசைகள், பதிவேடுகளையோ அல்லது பல வகைப்பட்ட பொருள்களையோ திரையில் நகர்த்துதல்.

tabular form : அட்டவணை வடிவம் : அச்சிடப்பட்ட வெளியீட்டுக்கு பட்டியல் பார்வை போன்றது.

tabulate : அட்டவணையிடு : 1. கூட்டல்களை அச்சிடு. 2.தகவல்களை பட்டியல் வடிவாக்கு.

tabulating Equipment : அட்டவணையிடும் கருவி : துளையிட்ட அட்டை தகவல் செயலாக்க எந்திரங்கள், விளக்கிகள், மறு படியெடுப்பிகள்,

கணிப்பிகள் மற்றும் பட்டியலிடுவி கள் போன்றவை இதில் அடங்கும்.

tabulator : அட்டவணையாக்கி : மொத்த எண்ணிக்கைகளைக் காட்டி, அச்சிடும், துளையிட்ட அட்டை கணக்கீட்டு எந்திரம்.

TAF: முனைய அறுக்க வசதி: Terminals Access Facility என்பதன் குறும்பெயர்.

tag : அடையாள ஒட்டு ; குறி ஒட்டு: ஆணையின் முகவரியைப் பாதிக்கும் பட்டியல் பதிவெண்ணைக் கொண்டு செல்லும் ஆணையின் பகுதி.

tag along sort : ஒட்டோடு கூடிய வரி சையாக்கம்.

tag field : ஒட்டுப் புலம்.

tag sort : அடையாள ஒட்டு : பிரிக்கும் நடைமுறை. சரியான வரிசையை உண்டாக்க முக்கிய புலங்கள் முதலில் பிரிக்கப்படும். பின்னர் தகவல் பதிவேடுகள் அந்த வரிசை யில் வைக்கப்படும்.

tail : வால் : ஒரு பட்டியலின் கடைசிப் பகுதியைக் கண்டுபிடிக்கும் சிறப்புத் தகவல் பொருள்.

tail form : வால் படிவம்.

tailing : இறுதி காணல்.

tailor made : சிறப்பாகச் செய்யப் பட்ட: ஒரு குறிப்பிட்ட பணி, வணிகம் அல்லது வகையான மக்களுக் காக எழுதப்பட்ட ஒரு ஆணைத் தொடரை இது குறிக்கிறது. ஒரு தனிப்பட்ட வாடிக்கையாளர் இத் தகைய ஆணைத்தொடரைக் கேட் பார் அல்லது யாருக்கு வேண்டு மானாலும் விற்கப்படலாம்.

take up spool : ஏற்புக் கண்டு.

take over : ஏற்றல் ; மேற்கொள்ளல்.

talking computer : பேசும் கணினி : பேச்சு பிரித்தறியும் கருவியைப் பயன்படுத்தி பேச்சை உருவாக்கும் கணினி அமைப்பு.

tandem computers : தொடர் இணைப் புக் கணினி : இரண்டு கணினிகள் இணைக்கப்பட்டு ஒரே நேரத்தில் ஒரே சிக்கலுக்காகப் பணியாற்றுவது.

tandem processors : தொடரிணைப் புச் செயலகங்கள் : ஒரு பல் செயலகச் சூழ்நிலையில் ஒன்றோடொன்று இணைந்துள்ள இரண்டு செயலகங் கள்.

tandy corporation : டேண்டி நிறுமம் : நுண்கணினி அமைப்புகளின் உற் பத்தியாளரான ரேடியோ ஷாக் நிறு வனத்தின் தாய் நிறுவனம்.

tangent : தொடுவரை.

tangent point : தொடுபுள்ளி.

tangible benefit : மதிப்பிடக்கூடிய மிகு பலன் : ஒரு குறிப்பிட்ட பண மதிப்பைக் கூறக்கூடிய மிகு பலன்.

tap : தட்டு : செய்தித் தொடர்புகளில், குறும் பரப்புப் பிணையத்தில் முக்கிய அனுப்பும் ஊடகத்துடன் ஏற் படுத்தப்படும் பிணைப்பு.

tape : நாடா : தகவல் உள்ளீட்டு சேமிப்பு அல்லது வெளியீட்டுக்குப் பயன்படுத்தப்படும் காந்த உணர் பொருள் பூசப்பட்ட அல்லது துளை யிடப்பட்ட நீளமான பொருள். படிக்க அல்லது எழுதுவதற்கேற்ற ஓட்டத்திற்கு வசதியாக வரிசைமுறை யில் நாடாவின் குறுக்கே பல வழித் தடங்களில் தகவல்கள் பதிவு செய்யப்படும்.

tape back-up unit : நாடா ஆதரவு அலகு : ஒருவகை இரண்டாம் நிலை சேமிப்பகம். நிலைவட்டின் உள் ளடக்கங்களின் தனிப்படி எடுத்து

வைக்கப் பயன்படும் நாடாப் பெட்டி.

tape cartridge : நாடாப் பேழை.



நாடாப் பேழை (Tape cartridge)

tape cassette : நாடாப்பெட்டி : *நுண் கணினி அமைப்புகளில் எண் முறை பதிவுக்காகப் பயன்படுத்தப்படும் வரிசைமுறை அணுகு சேமிப்பு ஊடகம்.*

tape code : நாடாப் பதிவு முறை.

tape deck : நாடா இயக்கி.

tape dump : நாடா திணி : *அறிக்கை வடிவில் அமைக்காமல் நாடா உள்ளடக்கங்களை அச்சு வடிவில் எடுப்பது.*

tape label : நாடா குறி.

tape leader : நாடா முன்பகுதி : *காந்த நாடாவின் முதல் சில மீட்டர்கள். அது அழிக்கப்படுவதற்கு வாய்ப்பு அதிகம் இருப்பதால் இவற்றைப் பயன்படுத்தி தகவல் சேமிப்பதில்லை.*

tape mark : நாடா அடையாளம் : *ஒரு நாடா கோப்பின் இறுதி முனையைக் காட்டும் கட்டுப்பாட்டுக் குறியீடு.*

tape label : நாடா வில்லை : *வழக்கமாக காந்த நாடா சுருணையில் உள்ள முதல் பதிவேடு. இதில் நாடாவில் எழுதப்பட்ட நாள், அடையாள எண் அல்லது பெயர் மற்றும் நாடாவில் உள்ள பதிவேடுகளின் எண் ஆகியவை இருக்கும்.*

tape librarian : நாடா நூலகர் : *கணினியில் அனைத்துக் கோப்புகளையும் பாதுகாப்பாக வைப்பதற்குப் பொறுப்பேற்றவர். காந்த நாடா வட்டுப் பெட்டிகளில் உள்ள ஆணைத் தொடர்கள் மற்றும் தகவல் கோப்புகள், நுண்திரைப்பட மற்றும் துளையிட்ட அட்டைகள் ஆகியவற்றை இவர் பாதுகாப்பார். கோப்பு நூலகர், தகவல் நூலகர் அல்லது பாதுகாவலர் என்றும் அழைக்கப்படுபவர்.*

tape library : நாடா நூலகம் : *காந்த நாடா கோப்பினை பாதுகாப்பான, சுற்றுப்புறக் கட்டுப்பாடுள்ள சூழ்நிலையில் வைத்திருக்கும் சிறப்பு அறை.*

tape mark : நாடா அடையாளம் : *ஒரு நாடாக் கோப்பின் இறுதியைச் சுட்டிக்காட்டப்பயன்படுத்தப்படும் சிறப்புக் குறியீடு.*

tape operating system (TOS) : நாடா இயக்கச் செயல்முறை : *காந்த நாடாவில் ஆணைத் தொடர்களைச் சேமித்து வைக்கும் இயக்கச் செயல்முறை.*

tape punch : நாடா துளைப்பி.

tape reader : நாடா படிப்பி.

tape reel : நாடாச் சுருள்.

tape reproducer : நாடா படியெடுப்பி.

tape resident system : நாடா அமைப்பு இயக்கமைவு.

tapes : நாடாக்கள் : *பாலியெஸ்டரை அடிப்பொருளாகக் கொண்டு ஃபெர்ரிக் அமிலத்தைப்பதிவு செய்யும்*

பரப்பாகக் கொண்டிருக்கும். நாடா சுருணைகள் 500 மீட்டர் நாடாக்களை வைத்திருக்கும். இதில் 100 மீமிகு எட்டியல் அல்லது மேற்பட்ட சேமிப்புத் திறனிருக்கும்.

tape spool : நாடாச் சுருள்; நாடா கண்டு.

tape station : நாடா இயக்ககம் ; நாடா நிலையம்.

tape to card converter : நாடாவிலிருந்து அட்டைக்கு மாற்றி : காகித நாடா அல்லது காந்த நாடாவிலிருந்து துளையிட்ட அட்டைகளுக்குத் தகவலை மாற்றி அனுப்பும் சாதனம். பொதுவாக இது அணைமுகமாகவே செயலாற்றும்.

tape transport : நாடா அனுப்புப் பொறி : நாடா இயக்கியின் எந்திரப் பகுதி.

tape unit : நாடா அலகு.

tape volume : நாடா தொகுதி.

tar : டார் : கோப்புகளை ஆவணப் படுத்தி பாதுகாப்பதற்கான யூனிக்ஸ் யூட்டிலிட்டி. 'compress' என்ற சொல்லுடன் சேர்த்துப் பயன்படுத்துகிறது.

targa : டார்கா : பரவு வரைகலை கோப்புப்படிவம். ட்ரூவிஷன் நிறுவனம் உருவாக்கியது. 16-, 24- மற்றும் 32- துண்மி வண்ணப் படங்களை இது கையாள்கிறது. அதிக துல்லிய ஒளிக்காட்சி வரைகலை அட்டைகளின் கோட்டுக்கு இது வணிகப் பெயராகும்.

target : இலக்கு : கோப்பு நகல் பணியில், இலக்கு என்பது நகலெடுத்தது. கோப்புகளை வாங்குகின்ற வட்டு, விவரப்பட்டியல் அல்லது நாடா.

target computer : இலக்கு கணினி : ஒரு ஆணைத் தொடர் ஏற்றப்பட்டு ஓட்டப்படும் கணினி.

target data set : இலக்குத் தகவல் அமைவு :

target directory : இலக்குத் தகைவுத் தொகுப்பு ; இலக்கு அடைவு : தகவல் அனுப்பப்படுகின்ற விவரப்பட்டியல்.

target disk : இலக்கு வட்டு : ஆணைத் தொடர் அல்லது வட்டு நகலெடுக்கப்படும் வட்டு.

target drive : இலக்கு இயக்கி : தகவல்கள் பதிவுசெய்யப்படும் வட்டு அல்லது நாடாவைக் கொண்ட இயக்கி.

target language : இலக்கு மொழி : வேறு ஒரு மொழியில் சரியாக மொழிபெயர்க்கப்பட வேண்டிய மொழி.

target path : இலக்கு வழி.

target statement : இலக்குக் கட்டளை.

tariff : கட்டண விகிதம்.

task : பணிக் கடமை; பணிப் பொறுப்பு: கணினி சேமிப்பகத்தில் ஏற்றுதல் அல்லது ஆணையமைத்தல் போன்ற குறிப்பிட்ட வேலையின் தன்மை.

task despatcher : பணிப்பொறுப்பு செலுத்தி.

task list : பணிக் கடமைப் பட்டியல்: ஒருவர் இயக்குகின்ற அனைத்து பயன்பாடுகளும் காட்டி, அவைகளுக்கிடையில் பிரித்தளிக்க உதவும் ஒரு "விண்டோ" பணிக்கடமை பட்டியலைத் திறக்க வேண்டுமென்றால் "switch to" என்பதை கட்டுப்பாட்டுப் பட்டியலிலிருந்து தேர்வுசெய்ய வேண்டும்.

task management : பணிமேலாண்மை: ஒரே நேரத்தில் கணினிக்குள் ஒன்று அல்லது மேற்பட்ட ஆணைத்தொடர்களை (பணிகளை) ஓட்டுவதைக்

கட்டுப்படுத்துகின்ற இயக்க அமைப் பின் பகுதி.

target programme : இலக்கு ஆணைத் தொடர்.

tariff : விலைப்பட்டியல்; கட்டண விகிதம் : செய்தித் தகவல் தொடர்பு களில் இடம்பெறுகின்ற வெளியிடப் பட்ட விலைப்பட்டியல். ஒரு குறிப் பிட்ட கருவி, வசதி அல்லது தகவல் தொடர்பு பொது அமைவின் பணி ஆகியவற்றுக்கு இவ்வாறு விலை குறிப்பிடப்படுகின்றது.

task queue : பணிவரிசை.

task swapping : பணிப்பொறுப்பு இடமாற்று : இரண்டு பயன்பாடு களுக்கிடையில் பிரித்தளித்தல். நடப் பிலுள்ள ஓடும் ஆணைத் தொடரில் இருந்து வட்டுக்கோ அல்லது பிற அதிவேக சேமிப்பக சாதனத்திற்கோ (துணை நினைவகம் ஈ.எம்.எஸ் போன்றவை) மாற்றிவிட்டு அந்த இடத்தில் வேறொரு ஆணைத் தொடரை ஏற்றுதல்.

task switching : பணி பிரித்தளித்தல்: தீவிரமான பயன்பாடுகளுக்கு இடையே பிரித்தளித்தல்.

TB : டி.பி : TeraByte என்பதன் குறும் பெயர்.

tear-off menu : கிழித்து வெளியேறும் பட்டி : அதன் முதன்மை இடத்தி லிருந்து வேறொரு பகுதிக்கு மாற்றி அனுப்பி நகர்த்தக் கூடிய திரை மீதுள்ள பட்டி அல்லது வண்ணத் தட்டு.

technical writer : தொழில்நுட்ப எழுத் தாளர் : கணினி கருவிவசதி அல்லது அது தொடர்பான பணிகள், மற்றும் மென்பொருள் அல்லது தொழில் நுட்பப் புலங்கள் தொடர்பான திட்டங்கள், பயிற்சிக் கையேடுகள், குறிப்புக் கையேடுகள், ஆணைத் தொடரமைப்புக் கையேட்டு நூல்கள் மற்றும் அறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரிப்பவர்.

technology : தொழில்நுட்பம் : ஒரு பொருள் உருவாக்குவதற்காக அறிவு மற்றும் முறைகளைப் பயன் படுத்துதல்.

technology transfer : தொழில்நுட்ப மாற்றல் : இருக்கின்ற தொழில் நுட்பத்தை நடப்பு சிக்கல் அல்லது சூழ்நிலைக்குப் பயன்படுத்துதல்.

tech writer : தொழில்நுட்ப எழுத் தாளர் : வன்பொருள் அல்லது மென் பொருளுக்கு ஆவண விவரம் எழுதுபவர்.

technical analysis package : தொழில் நுட்ப ஆய்வுத் தொகுப்பு : பங்குச் சந்தையில் வாங்கவும், விற்கவும் சிறந்த நேரம் எது என்பதை முதலீட் டாளர்கள் முடிவு செய்ய உதவும் ஆணைத்தொடர். மாறும் சராசரிகள் வரைபடமமைத்தும், கூட்டியும், வணிக அளவுப் போக்குகளை வரைந்தும் பிற ஆய்வுப் பணிகளைச் செய்தும் முதலீட்டாளர்க்கு உதவு கிறது.

technique : நுணுக்க முறை.

tele : தொலை : தொலைவிலிருந்தோ அல்லது தொலைபேசி மூலமோ செய்யப்படும் இயக்கம்.

tele autograph : தொலை எழுதல்.

telecine : தொலைத் திரைப்படம்.

tele-commerce : தொலை வணிகம்.

telecommunication : தொலைத்தகவல் தொடர்புகள் ; தொலைத் தொடர்பு : தகவல் தொடர்புக் கம்பிகளின் வழி யாக தகவல்களை மாற்றல்.

telecommunications channel : தொலைத் தகவல் தொடர்புத் தடம் : செய்தி அனுப்பும் இடத்தையும் பெறுபவரையும் இணைக்கும் தகவல் தொடர்புக் கட்டமைப்பின் பகுதி. தகவலை அனுப்பவும், பெற வும் ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு இணைக்கப் பயன்படும் கருவியும் இதில் அடக்கம்.

telecommunications control pro gramme: தொலைத் தகவல் தொடர்பு கட்டுப்பாடு ஆணைத் தொடர் : தொலைத் தகவல் தொடர்புக் கட்ட மைப்பில் கணினிகளுக்கும் முனை யங்களுக்கும் இடையில் கட்டுப் பாட்டினைக் கவனித்துக் கொள்ளும் கணினி ஆணைத் தொடர்.

telecommunications controller : தொலைத் தகவல் தொடர்புக் கட்டுப் படுத்தி : ஒரு விவர தகவல் தொடர்பு இடைமுகச்சாதனம். (சிறப்பு நோக்க சிறு அல்லது நுண் கணினி) பல முனையங்களைக் கொண்ட தொலைத் தகவல் தொடர்புக் கட்ட மைப்பை இது கட்டுப்படுத்தும்.

telecommuniting : தொலைத் தகவல் தொடர்பு கொள்ளுதல் : அலுவலகத் திலிருந்து வீட்டுக்குத் தொலைத் தகவல் தொடர்பு மூலம் வீட்டி லிருந்தே பணியாற்றுவது.

telecommunications monitors : தொலைத் தகவல் தொடர்பு திரை யகம்: ஒரு தொலைத் தகவல் தொடர்பு கட்டமைப்பின் கணினி களுக்கும், முனையங்களுக்கும் கட்டுப்பாட்டைக் கவனிக்கும் கணினி ஆணைத் தொடர்கள்.

telecommunications processors : தொலைத் தகவல் தொடர்பு செய லகங்கள் : பல முனையங்களிட மிருந்து ஒரே நேரத்தில் தகவல்களை தகவல் தொடர்பு வழித்தடங்களுக் குக் கொண்டு செல்ல அனுமதிக்கும் பன்மையாக்கிகள், ஒரு முகப்படுத்தி கள் மற்றும் தகவல் தொடர்புக் கட்டுப்படுத்திகள், கொத்துக் கட்டுப் படுத்திகள், பிழை கண்காணித்தல், சிக்கலறிதல், திருத்தல், குறிப்பேற் றம், குறிப்பேற்றமின்மை, தகவல் சுருக்குதல், விவரக் குறியிடல், செய்திகளை மறு குறியீடு அமைத் தல், துறை பூசல் (port contention (36-A)) இடைத்தடுப்பு (buffer storage) சேமிப்பகம் ஆகியவைகளுடன் செயற்கைக்கோள் மற்றும் பிற தகவல் தொடர்பு கட்டமைப்பு களுக்கு இடைமுகமாக இருத்தல் ஆகியவற்றையும் இவை செய்யும்.

telecommunications specialist : தொலைத் தகவல் தொடர்பு வல்லுநர்: தகவல் தொடர்பு கட்டமைப்புகளை வடிவமைப்பதற்குப் பொறுப்பேற் றுள்ளவர்.

telecommunity : தொலை சமுதாயம்: தொழில்நுட்ப ஏற்புடைத் தன்மை கள் இல்லாமல் தகவல் இலவசமாக அனுப்பி, பெறக்கூடிய சமுதாயம்.

teleconference : தொலை மாநாடு : தொலைத் தகவல் தொடர்பு மூலம் தொலைவான இடங்களில் உள்ள வர்களுடன் மின்னணு கூட்டம் நடத்துதல். நேருக்குநேர் சந்தித்தல் மற்றும் பயணத்திற்கு மாற்றாகக் கருதப்படும் இத்தொலை மாநாடு இருவழி ஒளி-ஒலி வசதியுடன் நடத்தப்படுகிறது. தகவல் மற்றும் தொலை நகலி செலுத்தம் ஆகியன வும் தேவைக்கேற்ப இடம் பெறும்.

telecopying : தொலைநகலெடுத்தல்: நீண்ட தூர நகலெடுத்தல்.

tele-education : தொலைக்கல்வி.

tele-entertainment : தொலை பொழுது போக்கு.

telegraph : தந்தி : ஏறக்குறைய ஒரு நொடிக்கு 150 துண்மிகள் வேகத்தில் அனுப்பும் குறைந்த வேக தகவல் தொடர்புச் சாதனம். மோர்ஸ் காலத்தில் இருந்து நீடித்து வருபவை - குரல் உரையாடலை அனுப்ப முடியாது.

telemanagement : தொலை மேலாண்மை : ஒரு நிறுவனத்தின் தொலைபேசி அமைப்புகளின் மேலாண்மை.

tele marketing : தொலைச் சந்தையமைப்பு : தொலைபேசி மூலம் விற்பனை செய்தல்.

telematics : டெலிமாட்டிக்ஸ் : தொலைத் தகவல் தொடர்புகள் மற்றும் தானியங்கி தகவல் செயலாக்கத்தின் சங்கமம்.

telemedicine : தொலை மருத்துவம் : குறிப்பாக தொலைத் தகவல் தொடர்புகள் தொலைக்காட்சியைப் பயன்படுத்தி ஊடுகதிர் (a) அல்லது ஒரு நோயாளியின் நேரடி உருவப்படங்களை தொலைவில் உள்ள வல்லுநருக்கு அனுப்புவது.

telemeter : தொலை அளவி.

telemetry : தொலை அளவி : தொலை அளவி கருவிகளை மின்சாரம் அல்லது வானொலி மூலம் தகவல்களை அனுப்புதல். நிலவைச் சுற்றிவரும் ஒரு விண்கலத்தின் மூலம் தரையில் உள்ள ஒரு நிலையத்திற்குத் தகவல்களை அளந்து அனுப்பலாம்.

telenet : தொலை இணைப்பு : பல வகையான பயனாளர் முனையங்கள் மற்றும் கணினிகளின் மூலம் தகவலைப் பரிமாறிக் கொள்ள உதவும் தகவல் தொடர்புக் கட்டமைப்பு.

telephone equipment : தொலைபேசிக் கருவி.

telephony : தொலைபேசி முறை : ஒலியை மின்சமிக்ஞைகளாக மாற்றி, குழாய்கள் அல்லது வானொலி மூலம் அனுப்பி அவற்றை ஒலியாக மீண்டும் மாற்றி அனுப்புதல்.

telephotography : தொலை ஒளிப் படவியல் : மின் தகவல் தொடர்பு வழித்தடங்களின் மூலம் ஒளிப் படங்களை அனுப்புதல். பொது தகவல் தொடர்பு அனுப்பும் நிறுவனங்கள் இவற்றை வழங்குகின்றன.

teleprinter : தொலை அச்சுப்பொறி ; தொலை அச்சு : தானியங்கி அச்சிடும் சாதனம்.

teleprocessing : தொலை செயலாக்கம் : தொலைவில் உள்ள இடங்களுக்கும் தகவல் செயலாக்க மையத்திற்கும் மற்றும் இரண்டு கணினி அமைப்புகளுக்கும் இடையில் தொலைபேசிக் கம்பிகள் மூலம் தகவல்களை அனுப்புதல். தகவல் தொடர்புகள் மற்றும் தகவல் செயலாக்கக் கருவிகளை இணைத்துப் பயன்படுத்துவது.

telesoftware : தொலை மென்பொருள்: தொலைபேசிக் கம்பி அல்லது தொலைக்காட்சி மூலம் தொலைச் சொற்பகுதி சமிக்ஞையில் கணினி ஆணைத் தொடர்களை அனுப்புதல்.

teletext : தொலைவுரை : ஒருவழி தகவல் தொடர்பு ஊடகம். சில வீடியோடெக்ஸ்ட் சேவைகளில் பயன்படுத்துவது. ஒரே திரையளவில் சிறப்பு சுருக்கிய அளவில் தொலைக் காட்சித் தகவல்களைத் தொடர்ச்சியாக அனுப்பப் பயன்படுத்துபவர்கள் தங்களது திரையில் எந்தப் படத்தை பார்க்க விரும்புகிறார்

களோ அதே படத்தை தங்கள் தொலைக்காட்சிப் பெட்டியில் மறு குறியீடமைத்துப் பெறலாம்.

teletype interface : தொலைத் தட்டச்சு இடைமுகம்.

teletype mode : தொலைத் தட்டச்சு முறை : தட்டச்சுப் பொறியில் தட்டச்சு செய்வது போல ஒரு நேரத்தில் ஒரு வரியில் வெளியீட்டை அனுப்புவது. இதன்பொருள் தகவல்கள் காட்டவோ, அச்சிடவோ செய்யும் போது ஒன்றையடுத்து இன்னொரு வரியாக தகவல் காட்டப்படும் அல்லது அச்சிடப்படும்.

teletypewriter (TTY) : தொலைத் தட்டச்சுப் பொறி : டி.டி.ஒய். தொலைத் தட்டச்சு அலகு.

television receiver (TR) : தொலைக் காட்சி பெறும் பொறி : ஒளிபரப்பப் படும் தொலைக்காட்சி சமிக்ஞை களை வானலை வாங்கி மூலம் பெறுகின்ற திறனுடைய வணிக தொலைக் காட்சிப் பெட்டி போன்ற ஒரு காட்சி சாதனம். வானொலி அலைவரிசை குறிப்பேற்றி (மாடுலேட்டர்)கள் இணைத்து காட்சிச் சாதனமாக பல நுண்கணினிகளில் பயன்படுத்தலாம்.

telex : தொலை எழுதி : மேற்கத்திய ஒன்றியத்தினால் அளிக்கப்படும் தந்திச் சேவை.

teller : வங்கிப் பணப் பொறுப்பாளர்.

telmet : தொலை இணைப்பு.

telpak : டெல்பாக் : இரண்டு அல்லது மேற்பட்ட இடங்களுக்குப் பொது தகவல் தொடர்புகளை எடுத்துச் செல்வதற்காக அகலப்பாட்டை வழித் தடங்களை வாடகைக்கு எடுத்து, அதன்மூலம் நடத்தப்படும் சேவை.

template : படிம அச்சு : 1. வடிவியல் (geometric) ஒட்டு வரைபடக் குறியீடுகளை வரையப் பயன்படுத்தப்படும் குழைம (plastic) வழிகாட்டி. 2. கணினி வரைகலையில், பொதுவாகப் பயன்படுத்தப்படும் வடிவமைப்பிகள் அல்லது வடிவமைப்பு உதவிகளின் பகுதிகள். ஒருமுறை உருவாக்கப்பட்டால், மீண்டும் வரைவதற்குப் பதிலாக, அதையே மீண்டும் தேடி எடுக்க முடியும். 3. மென்பொருள் மேம்பாட்டில் ஆணைத் தொடர்களின் தொகுதியின் மூலம் வட்டில் சேமிக்கப்பட்டதை கணினிக்கு ஆணையிட்டு விரிதாளில் உள்ள தகவல்கள் பற்றிய சில இயக்கங்களைச் செய்யுமாறு கூறுதல். சான்றாக, டெல்லிக்கு மேற்கே உள்ள வாடிக்கையாளர்களுக்கு 10 விழுக்காடு ரயில் கட்டணத்தைக் கூட்டுக என்பது.

temporary font : தற்காலிக எழுத்துரு: மென்பொருளாலோ அல்லது கையாலோ அச்சுப்பொறியில் மீண்டும் திருத்தி அமைக்கும்வரை அச்சுப்பொறியின் நினைவகத்தில் தங்கியிருக்கும் மென் அச்செழுத்து.

temporary storage : தற்காலிக சேமிப்பகம் : ஆணைத் தொடரமைத்தலில், இடைக்கால முடிவுகளை சேமித்து வைப்பதற்கான சேமிக்கும் இடங்கள்.

ten key pad : பத்து விசைப்பட்டை : எண்களை எளிதாக நுழைக்க உதவும் 0 முதல் 9 வரை எண்களை தனித் தொகுதியாகக் கொண்ட விசை. கணிப்பி விசை அட்டை போன்றது.

ten's complement : பத்தின் கூட்டெண் : ஒரு குறிப்பிட்ட மதிப்பின் எதிரெண்ணைக் குறிப்பிடப் பயன் படுத்தப்படும் எண். எல்லா எண்

களும் 9 ஆக உள்ள ஒவ்வொரு இலக்கத்திலிருந்தும் கழித்து அதனுடன் ஒன்றைச் சேர்த்து இந்த எண் கொண்டுவரப்படுகிறது. சான்றாக 654-ன் பத்தின் கூட்டெண்ணாக வருவது 346. 999 உடன் 346-ஐக் கழித்து அதனுடன் 1-ஐக் கூட்டி இந்த எண் கொண்டு வரப்படுகிறது.

tensile strength : இழுப்பு வலு.

tera : டெரா : ஒரு ட்ரில்லியனுக்கு மெட்ரிக் முன்னிணைப்புச் சொல். டி என்று சுருக்கி அழைக்கப்படுகிறது.

terabit : டெராபிட் ; டெரா துண்மி : ஒரு டிரில்லியன் துண்மிகள். டிபி, டிபிட் அல்லது டெராபிட் என்றெல்லாம் அழைக்கப்படும்.

terabit storage : டெராபிட் சேமிப்பு : 12 துண்மிகள் அளவில் 10 திறனுள்ள சேமிப்புச் சாதனங்களுக்குப் பயன்படுத்தப்படும் பொதுச்சொல்.

terabyte : டெராபைட் ; டெரா எட்டியல் : 2^{40} (2இன் 40 மடங்கு) அல்லது துல்லியமாக 1 009 511 627 776 எட்டியல்கள். அல்லது ஓராயிரம் மீமிகு எட்டியல்கள், ஒரு மில்லியன் மீமிகு எட்டியல்கள், ஒரு பில்லியன் கிலோ எட்டியல்கள் அல்லது ஒரு டிரில்லியன் எட்டியல்கள் என்று சொல்லலாம். ஒளிவட்டு பெரு சேமிப்பகச் சாதனங்களின் திறனை அளக்கப் பயன்படுகிறது.

terminal address card : முனைய முகவரி அட்டை.

terminal buffer : முனைய இடைநிலை நினைவகம்.

terminal component : முனைய அமைப்பி; முனையக் கூறு.

terminal configuration facility : முனைய உருவமைப்பு வசதி.

terminal : முனையம்; முகப்பு : விசைப் பலகை காட்சி அல்லது விசைப் பலகை/அச்சுப் பொறிச் சாதனம். கணினியில் தகவல்களையும், ஆணைத்தொடர்களையும் உள்ளீடு செய்யவும், வெளியீட்டைப் பெறவும் இது பயன்படுகிறது.



முனையம்
(Terminal)

terminal emulation : முகப்பு போலச் செய்யப்படல் ; முனையம் போன்ற : சில சிறப்புத் தயாரிப்பு கணினிகள் வேறொரு கணினியின் முகப்பு போலச் செயல்படும் சூழ்நிலை.

terminal emulator : முனைய முன் மாதிரி.

terminal entry : முனையப் பதிவு.

terminal error : முனையப் பிழை : ஆணைத்தொடர் தொடர முடியாத அளவுக்கு கணிசமான விளைவுகளை ஏற்படுத்தும் பிழை.

terminal interupt : முனையக் குறிக்கீடு.

terminal job : முனையப் பணி.

terminal mode : முனைய முறை : முனையத்தைப்போல நடக்குமாறு கணினியை செயல்படுத்தும் செயல்பாட்டு முறை. தட்டச்சு செய்யப்பட்ட விசைக் கோடுகளை அனுப்பவும், அனுப்பப்பட்ட தகவல்களைப் பெறவும் செய்கிறது.

terminal node : முனையக் கணு; முனையக் கரணை.

terminal port : முனையத் துறை.

terminal response : முனையப் பொறுப்புமுறை.

terminal server : முனையப் பணியகம்: ஒரு கட்டமைப்பு அல்லது புரவலர் கணினியுடன் பலதரப்பட்ட முனையங்கள் இணைக்கப் பயன்படுத்தப் படும் கணினிக் கட்டுப்படுத்தி.

terminal security : முனையக் காப்பு.

terminal session : முனைய அமர்வு : ஒரு முனையத்தில் ஒரு பயனாளர் செயலாற்றும் நேரம்.

terminal stand : முனைய நிறுத்தி ; முனையத் தாங்கி : கணினி முகப்பை தாங்குவதற்கேற்ப வடிவமைக்கப் படும் மர அல்லது உலோகக் கட்டை.

terminal strip : முனையப் பட்டை: கம்பிகள் இணைக்கப்படும் திருகாணியின் தொகுதியைக் கொண்ட ஒட்டப்பட்ட பட்டை.

terminal symbol : முகப்புக் குறியீடு : செவ்வக வடிவ படக்குறியீடு, ஒரு செயல்முறையில் ஆரம்ப நிலை மற்றும் முடிக்கும் நிலைகளைக் குறிப்பிடுகிறது.

terminal table : முனையப் பட்டிகை.

terminal transactions facility : முனையப் பரிமாற்று வசதி.

terminal user : முனையப் பயனளவு

ternary : மூன்றாலான ; மும்மை : 1. மூன்று வாய்ப்புகள் உள்ளவற்றில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை அல்லது தன்மை பற்றியது. 2. அடிப்படை எண் மூன்றின் எண் அமைப்பு பற்றியது.

terminate : முடிவுற்ற.

terminator : முடிப்பி : ஒரு தொடர் அல்லது கட்டமைப்பின் கடைசி முனையில் உள்ள வெளிப்புறச் சாத னத்துடன் இணைக்கப்பட்ட வன் பொருள் பகுதி.

terrestrial link : தரைவழி இணைப்பு: தரையிலோ அல்லது அதன் அருகி லோ அல்லது அதற்கு அடியிலோ செல்லும் தகவல் தொடர்புக் கம்பி.

test data : சோதனைத் தகவல் : ஒரு குறிப்பிட்ட ஆணைத்தொடரின் இயக்கத்தை சோதனை செய்வதற் காக உருவாக்கப்பட்ட தகவல். ஒன்று அல்லது இரண்டு கையால் கூட்டபட்ட முடிவுகள் அல்லது தெரிந்த முடிவுகளுடன் சோதனைத் தகவல் இணைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்ட ஆணைத் தொடர் செல்லத்தக்கதாக்கப்படும். சாதனைத் தகவலாகப் பயன்படுத் தப்பட்ட தகவல் செல்லாததாக இருக்கும்.

test driver : சோதனை இயக்கி : சோதனை தகவல் தொகுதிகளைத் திரட்டுவதில் வேறொரு ஆணைத் தொடரை இயக்கும் ஆணைத் தொடர்.

testing : சோதித்தல் ; சோதனை செய்தல் : ஒரு ஆணைத்தொடரின் நடத்தையை மாதிரி தகவல் தொகுதி யின் மீது இயக்கி சோதனை செய்தல். இதில் தவறான நடத்தைக்கான அனைத்து வாய்ப்புகளையும் கண்ட றியும் முயற்சியில், செல்லுகின்ற மற்றும் செல்லாத தகவல்களும் இதில் சேர்க்கப்படும்.

test plan : சோதனைத்திட்டம் : எத் தகைய சோதனை நடத்தப்படும் என்பதைப் பொதுவாகக் குறிப்பிடு

வது. இதில் சகிக்கப்படும் அளவு களின் வரையறையும் உள்ளடங்கி இருக்கிறது.

test run : சோதனையோட்டம் : ஒரு ஆணைத்தொடர் சரியாக இயக்கப் படுகிறதா என்பதை சோதிப்பதற் கான ஓட்டம். சோதனை ஓட்டத்தின் போது, வெளியாகும் முடிவுகள் ஏற்கனவே உருவாக்கப்பட்ட முடிவு களுடன் ஒப்பிடப்படும்.

text : உரை : சொல்லப்பட வேண்டிய தகவலை விளக்கும் எழுத்துகள், எண்கள் மற்றும் சொற்கள், கோடுகள் மற்றும் குறியீடுகளைக் கொண்டது. வரைகலை (Graphics)க்கு எதிர்ச் சொல்.

text attribute : உரைப்பான்மை.

text based : உரை சார்ந்த': எழுத்து சார்ந்த என்றும் சொல்லலாம். சொற் களையே மிகுதியாகக் கொண்ட, சில வரைகலை எழுத்துகளையும் கொண்ட திரைக் காட்சி. சான்றாக, 80 பத்திகளின் 25 வரிசைகள்.

text box : உரைப்பெட்டி : ஒரு வசனப் பெட்டியில் கட்டளையைச் செய் வதற்கு வேண்டிய தகவலைத் தட் டச்சு செய்யலாம். சொல் பெட்டி காலியாக இருக்கலாம் அல்லது வசனப்' பெட்டி திறக்கும்போது சொற்களைக் கொண்டிருக்கலாம்.

text compression : உரை ஒடுக்கம்.

text control : உரைக்கட்டுப்பாடு.

text curson : உரைச் சுட்டி.

text data : உரை தகவல் : ஆவணங் களில் பயன்படுத்தப்படும் சொல் தொடர்கள், வாக்கியங்கள், பத்திகள் மற்றும் பிற தகவல் தொடர்ப் படிவங்கள்.

text editing : உரை பதிப்பு : மின்னணு முறையில் சேமிக்கப்பட்ட பொரு ளைச் சேர்த்தல், மாற்றல் மற்றும் நீக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய பொதுச் சொல்.

text editor : உரைத் தொகுப்பி; ஏடு திருத்தி; நூல் திருத்தி;நூல் செப்ப மாக்கி; சொல் தொகுப்பி; சொல் பதிப்பி .

text field : உரைப்புலம் : எண்ணெ ழுத்து தகவல்களான பெயர் மற்றும் முகவரிகளைத் தாங்குகின்ற தகவல் கட்டுமான அமைப்பு உரைப்புலத் தில் அதிகமான அல்லது எல்லை யற்ற சொற்பகுதி தங்கியிருக்கு மானால், அது குறிப்புப் பகுதி என்று அழைக்கப்படலாம்.

text file : உரைக் கோப்பு : சொல் வடி வில் கூறப்பட்ட தகவலைக் கொண் டுள்ள கோப்பு.

textial design : நெசவுத் துணி உரு வரை.

text formating programme : உரைப் படிவ நிகழ்வு.

text line : உரை வரி.

text lock : உரைப் பூட்டு.

text management : உரைப்பகுதி மேலாண்மை : உரைப்பகுதியை உரு வாக்கி, சேமித்து, திரும்பப் பெறல். பலதரப்பட்ட அடிப்படையில் உரைப் பகுதிகளைத் தேடக்கூடிய, தேடிக் கொண்டு வரும் திறன்கள் என்பதை இது உணர்த்துகிறது. சொல் செயலகமும் உரைப் பகு தியை சமாளிக்கிறது என்றாலும் அதற்கு தேடிக் கொண்டு வரும் திறன் கள் குறைவாகவே இருக்கும்.

text processing : உரை செயலாக்கம்: ஆணைத்தொடர் கட்டுப்பாட்டின் கீழுள்ள அகரவரிசை தகவல்களைக் கையாளுதல்.

text processor : உரை செயலாக்கி.

text revision : உரை மாற்றமைவு.

text segment : உரைப் பகுதி.

text streame : உரை பாய்வு.

text suppression : உரை அமுக்கம்.

text system : உரைப்பகுதி அமைப்பு : சொற்பகுதி தகவலைக் கையாள வன் பொருளையும் சிறப்பாக எழுதப் பட்ட மென்பொருளையும் தொகுத் தல்.

text transfer : உரை மாற்றல் : முகப்பி லிருந்து தூர கணினிக்கு உரைக் கோப்புகளை மாற்றும் முறை.

text - to - speech : எழுத்து ஒலி வடிவு; எழுத்திலிருந்து ஒலி வடிவம்.

text transmission : உரை அனுப்பீடு.

text transparency : உரை ஒளிர்மை; சொல் புலப்பாடு.

texture : இழைவு; இழைமம் : கணினி வரைகலையில், இருபரிமாண அமைப்பினை முப்பரிமாண மேற் பரப்பின் சிக்கலான தோற்றத்தைத் தர பயன்படுத்துவது. இதில் கல வையை மாதிரியாக அமைத்தல், ஓவியங்கள் அல்லது எண்முறை ஒளிப்படங்களை அடிக்கடி பயன் படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக இல்லாமலேயே செய்யப்படுகிறது. முப்பரிமாண தகவல்தள அமைப்பு கள் செய்யமுடியாத கலவையை படத்துணுக்குகள் சேர்க்கின்றன. ஒரு கணினி படத்தில் (pixel) படப்புள்ளி களை இருப்பிடமான ஏற்பாட்டில் செய்யும் வேலையை துணி நெசவில் பாவு நூல் வார்ப்பு மற்றும் ஊடிழை களுடன் ஒப்பிடப்படுவதுண்டு. ஆகவேதான் இச்சொல் உருவானது.

textual scrolling information : சொல்லோட்டத் தகவல்.

texture mapping : இழைப்பு விவ ரணையாக்கம் : கணினி வரைகலை யில், ஒரு சிறப்பு மேற்பரப்பை உருவாக்குதல். இவற்றை நெறி முறையுடன் அமைக்க முடியும். ஒரு பொருளைச்சுற்றி துணை உருவத்தை மின்னணு முறையில் மேலமைப்பது.

text window : உரைச் சாளரம் : சில கணினி வரைகலை அமைப்புகளில் காட்சித்திரைகளில் காட்டப்படும் சொற்களின் பகுதி.

theorem : தேற்றம் : எண்ணாக்கப் படிக்கூடிய ஒரு சொற்றொடர். ஒரு செல்லக்கூடிய வாக்குவாதத்தின் முடிவு.

theorem prover : தேற்றம் நிறுவலர்: ஒரு இலக்குடன் துவங்கி அதன் விளைவுகளைத்தேடி அந்த இலக் குக்காக ஒன்று சேரும் முடிவுகளைக் கூறும் ஆணைத்தொடர். தேற்றம் எண்ணாக்கும் ஆணைத்தொடரில் உண்மைகளின் தொகுதியைக் கொண்ட தகவல் ஆதாரம் அதன் உயத்துணர் நுட்பம் இலக்கினை அடையும் நிறைவைத் தருகின்ற கண்டுபிடிப்புகளை உருவாக்கு கிறது.

theorem proving : தேற்றம் நிறுவல்: தானியங்கி அணுகுமுறைகளாக நிலைநாட்டல், தேடல் மற்றும் விளைவுகளைத் தேடல் ஆகியவற் றைக் கூறலாம். ஒரு குறிப்பிட்ட தேற் றத்திற்கான நிரூபணத்தைத் தேடு வதை நிலைநாட்டத் தேடும் ஆணைத் தொடர் செய்கிறது. விளைவு தேடும் ஆணைத்தொடர் விளைவுகள் ஏற் படுவதைக் கண்டறிகிறது. பிறகு சிறப்பான விளைவுகள் தேர்ந்தறியப் படுகிறது.

theory of numbers : எண்களின் கொள்கை; எண்களின் கோட்பாடு :

எண்களின் தன்மைகள் மற்றும் உறவுகள் பற்றிப் பொதுவாகக் கூறும் கணிதவியலின் பிரிவு.

thermal dye diffusion : வெப்பச்சாய பரவல் : வெப்ப மெழுகு மாற்றல் போன்ற அச்சிடும் செயல்முறை. இதில் மைக்குப் பதிலாக சாயம் பயன்படுத்தப்படும். அச்சு முனையானது நாடாவை சூடுபடுத்தி சாயத்தை திடவடிவில் மாற்றி திறவு காகிதத்தில் படிய வைக்கிறது. அதிக வெப்பம் இருந்தால் அச்சும் அடர்த்தியாக இருக்கும். ஒளிப்பட தரம் அருகில் வருவது போல தொடர் வண்ணம் உருவாக்கப்படலாம்.

thermal printer : மின் அச்சுப்பொறி; சூட்டு எந்திரம்; வெப்ப அச்சுப்பொறி: வெப்பம் உணரும் காகிதத்தில் வெளியீட்டைத் தரும் தொடாத அச்சுப்பொறி மெழுகுப் பகுதிகளை உருக்க வெப்பத்தைப் பயன்படுத்துவது. அதில் உள்ள மை காகிதத்திற்கு மாறுகிறது. நடுத்தரத்தில் மறுபிரதி தருகிற இது மெதுவான வேகத்தில் இயங்குகிறது. ஆனால், அந்தச் சாதனம் அதிக விலையில்லாதது, அமைதியான, நம்பக் கூடிய ஒன்று.

thermal stencil : வெப்பப் பதிவு முனை.

thermal wax transfer : வெப்ப மெழுகு மாற்றல் : மெழுகு போன்ற ஒரு மையை காகிதத்துக்கு மாற்றும் அச்சிடும் முறை, சான்றாக; வண்ண அச்சுப்பொறியில் பல நூறு திரும்ப வரும் தொகுதிகளான கறுப்பு, சியான், மெஜந்தா மற்றும் மஞ்சள் மைகொண்ட மைலார் நாடா பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு நிறத்திற்கு எதிராகவும் ஒரு காகிதத் தூளை அழுத்தி சூடாக்கும் பொருள்களைக் கொண்ட ஒரு கோட்டின் வழியாகச் செல்லும்போது புள்ளிகள் அல்லது படப்புள்ளிகளின் மை காகிதத்தில் மாற்றப்படுகிறது.

thesaurus : அகராதி; அகரமுதலி : பெரும்பாலான சொல் அகராதிகளில் உள்ள ஒரு தன்மை ஒரு குறிப்பிட்ட--அனேகமாக அதிகம் பயன்படுத்தப்பட்ட- சொல்லுக்கு மாற்றாக ஒரு சொல்லை கண்டுபிடிக்க உதவுகிறது. எந்த வகையான எழுத்துப் படைப்பை உருவாக்கினாலும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு மாற்றுச் சொற்கள் அல்லது மரபுத்தொடர்களை அது தருகிறது என்பதால் அகராதி என்பது மதிப்பு மிக்க குறிப்புதவிப் பொருளாகும்.

thick film : தடித்த படச்சுருள் : சிப்புவின் மேலுள்ள டிரான்சிஸ்டர்களாலான நுண்ணிய மேலடுக்குகளை விட தடிமனான உலோகப் பொருள், அரைக்கடத்தி அல்லது காந்தப் பொருள். சான்றாக, தடித்த உலோகத் திரைப்படங்களை உயரின நுண் மின் சுற்றுகளின் பீங்கான் அடிப்பகுதியில் மேல்பூச்சாகப் பயன்படுத்தப்படுகிறது.

thimple : சிமிழ் : சிமிழ் வடிவத்தில் உள்ள அச்சிடும் பொருள். எழுத்துத் தர அச்சிடுவதற்குப் பயன்படுகிறது. சிமிழைச் சுற்றி எழுத்து அச்சுகள் வட்டமாக வரிசைப் படுத்தப்படுகின்றன. அச்சிடப்பட வேண்டிய எழுத்தின் அச்சு சுழன்று சரியான இடத்தில் சுற்றிவரும்போது சுத்தியல் அதை முன்னோக்கி அழுத்தி காகிதத்தில் அச்சிடும்.

thimble printer : சிமிழ் அச்சுப்பொறி: சிமிழ் வடிவத்தில் அச்சு சக்கரத்தைப் பயன்படுத்தும் அச்சுப்பொறி. இதன் அடிக்கும் சாதனம் நாடாவுக்கு நேராக அடிக்கும் பகுதியைக்

கொண்டு வந்து காகிதத்தில் அச்சிடு கிறது.

thin film : மெல்லிய படச்சுருள்; மென் படலம் : ஒட்டவைத்த அடிப் பகுதி, பொதுவாக ஒரு தட்டையான பிளேட்டுகளாலான மெல்லிய புள்ளி களை வைத்து ஏற்படுத்தப்படும் கணினி சேமிப்பகம் அடிப்பகுதியும் சேர்க்கப்பட்ட கம்பிகளில் உள்ள மின் சக்தி மூலம் புள்ளிகள் காந்தப் படுத்தப்படுகின்றன.

thin film head : மெல்லிய படச்சுருள் முனை : அதிக அடர்த்தி உள்ள வட்டு களுக்கான படி/எழுதுமுனை நிக்கல்-இரும்பு மையத்தில் வைக்கப்பட்ட கடத்தும் படச்சுருளின் மெல்லிய அடுக்குகளால் இது அமைக்கப் படுகிறது.

thine film storage : மென் படலச் சேமிப்பகம்.

thin window display : மெல்லிய சாளரக் காட்சி : விசைப்பலகைகள், பாக்கெட் கணினிகள் போன்றவற் றில் பயன்படுத்தப்படும் ஒரு வரி காட்சித்திரை. எல் சி டி அல்லது எல் இ டி காட்சித்திரை.

third generation computers : மூன்றாம் தலைமுறை கணினிகள் : டிரான்சிஸ் டர்களுக்குப் பதிலாக பொருள்களை வாமனப்படுத்தி ஒருங்கிணைந்த மின் சுற்றுக்களைப் பயன்படுத்தும் கணினிகள், விலை குறைப்பு, வேக மான இயக்கம், கூடுதல் நம்பகத் தன்மை ஆகியவற்றை தரும் இவை 1964இல் அறிமுகப்படுத்தப்பட்டன. இன்னும் ஆதாரத் தொழில் நுட்ப மாக இவையே உள்ளன.

third generation language: மூன்றாம் தலைமுறை மொழி : உயர்நிலை மொழிகளின் இன்றைய தலைமுறை இதுவே. சான்று: பேசிக், சி மற்றும் பாஸ்கல். 3GL என சுருக்கி அழைக் கப்படுகிறது.

third-party lease : மூன்றாமவர் அட மானம் : ஒரு தனி நிறுவனம் உற்பத்தி யாளரிடமிருந்து வாங்கிய கருவியை தானாக வேறு ஒரு இறுதிப்பயனா ளருக்குத் தரும் ஒப்பந்தம்.

thirty-two-bit chip : முப்பத்திரண்டு துண்மிச் சிப்பு : ஒரே நேரத்தில் முப்பத்திரண்டு துண்மிகளைச் செய லாக்கம் செய்யும் மையச் செயலக சிப்பு.

Thomas Charles Xavier (Colmar, Thomas) : தாமஸ் சார்லஸ் சேவியர் (கால்மார், தாமஸ்) : 1820 இல் உரு வாக்கப்பட்ட கணக்கிடும் எந்திரம். நடைமுறை சாத்தியமான, பய னுள்ள வகையில் செயலாற்றிய முதல் கணிப்பி என்று இதைப் பற்றி கூறப்படுகிறது.

thrashing : அடித்தல்; புடைத்தல்; தாக்குதல் : மெய்நிகர் நினைவக அமைப்பில் நினைவக ஏற்றலுடன் தொடர்புள்ள மேற்பகுதி 'கடைதல்' (churning) என்றும் அழைக்கப் படுகிறது.

threaded : முறுக்கப்பட்ட : பல தனிப் பட்ட துணை ஆணைத் தொடர்களை அழைப்பதற்கேற்ற வசதியுள்ள ஒரு ஆணைத்தொடர்.

threaded tree : தொடுப்புறு மர அமைப்பு: மர மொத்த தகவல் அமைப்பை 'ஸ்கேன்' செய்வதற்கு உதவும் கூடுதல் சுட்டுகளைக் கொண்ட மர அமைப்பு.

threat : அச்சுறுத்தல்; மருட்டல்.

threat agent : அச்சுறுத்தி.

threat analysis : அச்சுறுத்தல் பகுப் பாய்வு.

three address computer : மூன்று முகவரி கணினி; மும்முகவரி கணினி: அதன் ஆணையிடல் முறையில் மூன்று முகவரிகளைப் பயன்படுத் தும் கணினி. சான்றாக, ADD A,B,C என்றஆணைகளில் A மற்றும் சார்ந் துள்ள மதிப்புகள் காட்டப்பட்டு C உடன் அதன் முடிவு சேர்க்கப்படு கிறது.

three dimentional (3-D) : முப்பரிமாண (3-D) மூவளவு : கணினி வரைகலை யில், ஒரு மாதிரியின் உயரம், அகலம் மற்றும் ஆழத்தின் ஒவ்வொரு புள்ளி யிலும் மூவிடப் பரிமாணங்கள் சேமிக்கப்படுகின்றன.

three dimentional array : முப்பரிமாண வரிசை : மூன்று மடிப்பு வகைகளை வரிசை, பத்தி, மடிப்பு - வழங்கும் வரிசை.

three point curve : முப்புள்ளி வளைவு.

three state logic element : மூன்று நிலை தருக்கப்பொருள் : மூன்று வெளியீட்டு நிலைகளை – நிறுத்தம், குறைந்த மின்சக்தி மற்றும் அதிக மின்சக்தி- தருகின்ற மின்னணு பொருள்.

throughput : முழுதும் செல்லல் : ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு கணினி அமைப்பு செய்யக்கூடிய பயனுள்ள செயலாக்கத்தின் மொத்த அமைப் பான அளவு.

thumbwheel : கட்டைவிரல் சக்கரம் : உள்ளீட்டுச் சுட்டியை நிலைக்க வைக்கும் சாதனம். ஒரு அச்சில் சுட்டியின் இயக்கத்தைக் கட்டுப் படுத்தும் சுழலும் சக்கரத்தைக் கொண்டது. விரல் சக்கரங்கள் இரட்டையாகவே இருக்கும். ஒன்று சுட்டியின் செங்குத்து இயக்கத்தை யும், மற்றொன்று பக்க வாட்டு இயக்கத்தையும் கட்டுப்படுத்தும்.

thyristor : தைரிஸ்டர் : மூன்று அல் லது மேற்பட்ட இணைப்புகளைக் கொண்ட இருநிலைச் சாதனம்.

TICCIT : டிக்கிட் : Time shared interactive computer controlled instructional television என்பதன் குறும்பெயர். சிறு கணினிகளையும் மாற்றம் செய்யப் பட்ட வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகளையும் ஒரே நேரத்தில் பல மாணவர்களுக்கு தனிப்பட்ட முறை யில் சொல்லித் தருவதற்குப் பயன் படுத்தும் கணினி உதவிடும் கல்வி அமைப்பு.

ticket : நெருக்க உரிமை.

ticket based access control : உரிமை யுடனான நெருக்கக் கட்டுப்பாடு.

ticket list : நெருக்க உரிமைப்பட்டி.

tie breaker : கட்டு பிரிப்பி : ஒரே நேரத்தில் இரண்டு செயலாக்க அலகு கள் ஒரே வெளிப்புறச் சாதனத் தினைப் பயன்படுத்த முயற்சிக்கும் போது ஏற்படும் மோதலைச் சமாளிக் கும் மின்சுற்று.

tie line : கட்டிய கம்பி : வாடகை தக வல் தொடர்பு வழித்தடம்.

tie mark : கட்டு அடையாளம் : ஒரு அளவில் மதிப்புகளைக் காட்டும் அடையாளம். கண்டறியப்பட்ட எண் மதிப்புகளுக்கிடையில் உள்ள புள்ளிகளைக் காட்ட பயன்படுத்தப் படுகிறது.

tightly coupled : இறுக்கமாக இணைக் கப்பட்ட : ஒன்றை ஒன்று சார்ந்திருக் கும் கணினிகளைப் பற்றியது.

tightly coupled multi processing : இறுக்க இணைவு பன்மைச் செய லாக்கம்.

tilde : டில்டே : அஸ்கி எழுத்து எண் 126(-) சில பெரிய ஆணைத்தொடர்

மொழிகளில் பயன்படுத்தப்படுவது. சான்றாக, லோட்டஸ் 1-2-3 ஒரு வரி திரும்ப வருவதைக் குறிப்பது.

tile : காட்சி வில்லை : வரைகலை ஓவியப்பொருளின் ஒரு பகுதி. சதுரம் அல்லது வைர வடிவமாக இருக்கலாம்.



காட்சிவில்லை (Tile)

tiled : அடுக்கப்பட்ட : பொருள்களை அடுத்தடுத்துக் காட்டுதல். சான்றாக, அடுக்கப்பட்ட சாளரங்களை ஒன்றின் மேல் ஒன்றாக வைக்கமுடியாது.

tiling : உழுதல் : வரைகலை காட்சிப் பகுதியில் ஒரு இடத்தின் தனி நிறத்தைக் கொண்டு நிரப்பாமல் ஒரு அமைப்பைக் கொண்டு நிரப்புதல். சாளரங்களை வரிசைப்படுத்தும் முறை. இதில் சாளரங்கள் ஒன்றின் மீது ஒன்று மேலேறி நிற்காமல் அனைத்துச் சாளரங்களும் தெரியும். ஒவ்வொரு சாளரமும் திரையில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்கிறது.

tiling screen : சாயும் திரை : எளிதாகப் பார்க்க வசதியாக, முன்பின்னாகவும், மேலிருந்து கீழாகவும் மாற்றிக் கோணம் அமைக்கக்கூடிய ஒளிக் காட்சித்திரை.

time : வேகம்; காலம்.

time division : நேரம் பிரிப்பி : தகவல் தொடர்பு வழித்தடத்தின் பரப்புத் திறனை மேம்படுத்த பயன்படுத்தப் படும் செலுத்து நுட்பம். துடிப்புக் குறியீட்டுக் குறிப்பேற்றம் என்றும் அழைக்கப்படுகிறது. இம்முறையில் ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்த ஒவ்வொரு தகவல் இணைப்புக்கும் ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டு அந்த நேரத்தில்தான் அது தகவல்களை அனுப்பிப் பெறும். அதன் அடுத்த நேரம் வரும் வரை அது அமைதியாக இருக்கும். அந்த நேரத்திற்குள் மற்ற தகவல் இணைப்புகள் செயலாற்றும். இதன்படி பல்வேறு, தொடர்பில்லாத பயனாளர்கள் ஒரே தகவல் தொடர்பு இணைப்பை ஒரே சமயத்தில் பயன்படுத்த முடியும்.

time division multiplexing (TDM) : காலப் பிரிவு பல்வழி தகவல் தரு முறை; காலப்பிரிவுப் பெருக்கம் : ஒரு பொது மின்சுற்றுப் பாதையில் பல வழித் தடங்கள் தகவலை அனுப்பும் முறை. இம்முறையில் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு முறை வைத்து ஒவ்வொரு வழித்தடத்திற்கும் பொது மின்சுற்றை ஒதுக்குவது.

time frame : காலவரையறை.

time out : நேரம் போனது ; காலங் கடந்தது : ஒரு குறிப்பிட்ட வெளிப்புறச் சாதனம் வேலை செய்யவில்லை என்பதைக் குறிப்பிட உள்ளீட்டு/ வெளியீட்டு இயக்கங்கள் பயன் படுத்தும் ஒரு சொல்.

time log : காலப் பதிவு : 24 மணிநேரம் போன்ற ஒரு குறிப்பிட்ட கால இடை வெளியில் கணினி அமைப்பு

எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பது.

time quantum : கால அளவு : நேரப் பங்கீட்டு அமைப்பால், ஒவ்வொரு அமைப்பாளருக்கும் ஒதுக்கப்படும் கால அலகு.

time scale : கால அளவுமுறை.

time series analysis : காலத் தொடர் ஆய்வு : ஒரு தகவல் தொகுதியின் நீண்ட காலப் போக்குக்கான காரணங்களைக் கண்டறிய பயன்படுத்தப்படும் ஒரு புள்ளி விவரமுறை. சான்றாக, கோதுமையின் விலை ஆண்டு முழுவதும் ஏறி, இறங்குகிறது; ஆண்டுக்காண்டு மாறுகிறது. காலத் தொடர்பு ஆய்வு இந்த ஏற்ற, இறக்கத்திற்குள் ஒரு ஒழுங்கைக் கண்டுபிடித்து பருவகாலம், போக்குகள் மற்றும் வறட்சி போன்ற சுழற்சி நிகழ்வுகளைக் கண்டுபிடித்தல்.

time share : காலப் பகிர்மானம்.

time sharing : காலப்பகிர்வு முறை.

timer : காலங்காட்டி : கணினியின் உட்பகுதியில் உள்ள கடிகாரம்.

time series : காலத் தொடர் : தகவல்களை நீண்ட கால அளவில் தொகுத்துக்கூறுதல். ஒரு குறிப்பிட்ட தகவல் தொகுதியின் முழுப்பகுதியும் தெரியவில்லை என்றாலும் அவற்றின் எதிர் காலம் மதிப்புகளும் தெரியவில்லை என்ற போதிலும் அத்தொகுதியின் பொதுவான நடத்தையை குறிப்பிடுவது.

time sharing : நேரப்பங்கிடல் ; காலப் பங்கீடு ; நேரப் பகிர்வு முறை : ஏறக்குறைய ஒரே நேரத்தில் கணினி வசதியைப் பல பயனாளர்கள் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் இயக்கமுறை. ஒவ்வொரு பயனாளரையும் தொடர்ச்சியாக அதன் வசதியைப் பயன்படுத்திக் கொள்ள கணினி அனுமதித்தாலும், எல்லா பயனாளர்களும் ஒரே நேரத்தில் பயன்படுத்திக் கொண்டதாகவே தோன்றும்.

time sharing priority : நேரப் பங்கீட்டு முன்னுரிமை

time slice : காலச் சிப்பு : ஒரே அலகு.

time slicing : காலக்கூறு ; நேரம் கூறிடல் : பல ஆணைத்தொடரமைப்பு அமைப்பில் ஏதாவது ஒரு ஆணைத் தொடரே மையச் செயலகத்தை ஆக்கிரமித்துக் கொள்வதைத் தடுக்க, செயலாக்கத்தை ஒவ்வொரு ஆணைத் தொடருக்கும் பிரித்து ஒதுக்கும் முறை.

time slot : கால ஒதுக்கீடு ; நேர ஒதுக்கீடு : இரண்டு சாதனங்கள் ஒன்றாக இணைக்கப்படும்போது இடைவெளிவிட்டு தொடர்ந்து திரும்பத் திரும்பவரும் நேரம்.

time-of-day count : நாளின் நேரத்தை எண்ணுதல் : பயாஸ் தகவல் பகுதியில் உள்ள ஒரு மாறி. நேர குறுக்கீட்டினால் தொடர்ந்து காட்டப்படுவது செயலாக்க முறை. அதனுடைய மதிப்பைப் பயன்படுத்தி நாளின் நேரத்தைக் கணக்கிடும்.

timer interrupt : நேரங்காட்டி குறுக்கீடு : 8253 நேரம்காட்டும் சிப்புவால் ஒரு நொடிக்கு 18.2 தடவைகள் காட்டுமாறு தூண்டப்படும் ஒரு குறுக்கீடு. ஒவ்வொரு தடவை அது இயங்கும்போதும் பயாஸ் (Bios) நாளின் நேரத்தைக் காட்டும் கணக்கில் ஒன்று கூட்டப்படுகிறது.

timing signals : நேர சமிக்ஞைகள் : கணினி இயக்கங்களை ஒரே நேரத்தில் ஒருங்கிணைக்க வெளிப்புறச் சாதனங்கள் அல்லது செயலகங்

களில் உருவாக்கப்படும் மின்துடிப்பு கள். முக்கிய நேர சமிக்ஞைகள் கணினியின் கடிகாரத்திலிருந்து வரு கிறது. பல மெதுவான சுழற்சிகளா கப் பிரிக்கப்படும் அலை வரிசை களை இந்த கடிகாரம் ஏற்படுத்து கிறது. நேரப்பங்கீடு அல்லது உண்மை நேர கடிகாரத்திடமிருந்து மற்ற நேரசமிக்ஞைகள் வருகின்றன. வட்டு இயக்கிகள், நேரசமிக்ஞைகள் செய்ய நினைவக வட்டுப் பகுதி ஒன்றில் துளைகள் அல்லது அடை யாளங்கள் செய்தோ அல்லது ஏற் கனவே பதிவுசெய்த எண் தகவல் களையோ பயன்படுத்தலாம்.

tiny BASIC : சின்னஞ்சிறு பேசிக் : முதல் தலைமுறை தனிநபர் கணினி களில் பயன்படுத்தப்பட்ட அளவான நினைவகத்தைக் கொண்ட பேசிக் மொழியின் ஒரு துணைப்பகுதி.

toggle : இருநிலை மாற்றி : இரண்டு நிலையான அமைப்புகளைக் கொண்ட ஒரு சாதனம்.

token : அடையாள வில்லை; அடை யாளி ; வில்லை : *1.* ஒரு ஆணைத் தொடரமைப்பு மொழியில் உள்ள ஒரு பெயர் அல்லது பொருளைக் குறிப்பிடுகின்ற குறியீடு. *2.* ஒரு குறிப்பிட்ட நிலையத்தில் இணைய சமிக்ஞை மூலம் குறிப்பிட சில வழித் தடங்களில் பயன்படுத்தப் படுவது. எட்டு *1*-கள் போன்ற துண்மிகளின் தொகுதி.

token passing : அடையாள வில்லை அனுப்புதல் : ஒரு தகவல் தொடர்பு வழித்தடத்தை ஒன்றுக்கு மேற்பட்ட வர் பிடித்துக் கொள்வதைத் தடுக்கும் ஒரு தொழில் நுட்பம். தகவல் தொடர்பு அமைப்பில் ஒரே ஒரு முறை மட்டும் வருமாறு குறியீடு இடப்பட்ட அடையாள வில்லை. ராமில் உள்ள அடையாள வில்லையை வைத்திருக்கும் ஒரே ஒரு கணினி மட்டுமே தகவல்களை அனுப்பிப் பெற முடியும். இர யில்வே சமிக்ஞை முறையிலிருந்து அடையாளவில்லையை அனுப்பிப் பெறும் முறை பெறப்பட்டது. இரண்டு ரயில்கள் ஒரே பாதையில் வந்து மோதிக் கொள்வதை தடுப் பதற்காக அடையாள வில்லை அல்லது பேட்டனை முன்னும், பின்னும் எடுத்துச் செல்வார்கள்.

token ring : அடையாளவில்லை வளையம் : *1980* ஆரம்பத்தில் உரு வாக்கப்பட்ட ஐ.பி.எம் கணினி கட்டமைப்பு வரைமுறைகளின் உரிமப்பொருள். IEEE 802-5 தர நிருணயத்தில் இது வரையறுக்கப் படுகிறது.

token ring network : அடையாள வில்லை வளைய பிணையம் : வரிசை முறையில் அடையாள வில்லையை அனுப்பும் நுட்பத்தைப் பயன் படுத்தும் தகவல் தொடர்பு பிணை யம். இதில் பிணையத்தின் ஒவ் வொரு நிலையமும் அடையாள வில்லையை அதற்கடுத்த நிலையத் திற்கு அனுப்பும்.

tolerance : இணக்கம் ; பொறுதி.

toll : சுங்கம்.

tone : நிறத்திண்மை : கணினி வரை கலையில் மென்னிறம் மற்றும் நிழல்.

toner : மை : நகலெடுக்கும் எந்திரங் களிலும், லேசர் அச்சுப்பொறிகளி லும் பயன்படுத்தப்படும் மின்சக்தி ஏற்றப்பட்ட/மை. கண்ணுக்குத் தெரி யாத உருவத்தினை எதிர் துருவத்தில் உள்ள பலகை, உருளை அல்லது காகிதத்தில் விழச் செய்யும்.

tool : கருவி : சில கணினி அமைப்புகளில் உள்ள ஒரு பயன்பாட்டு ஆணைத்தொடர்.

toolkit software : கருவிப்பெட்டி மென்பொருள் : முழு ஆணைத் தொடரையும் அவர்களே எழுதுவதற்குப் பதிலாக, பயனாளர்கள் தாங்களே தங்களது சிறப்புப் பயன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்கும் மென்பொருள் தொகுப்பு.

tool palette : கருவி வண்ணத்தட்டு: ஊடாடு வரைகலைத் தேர்வுக்காக 'பட்டியல்' அமைப்பில் திரை மீதுள்ள பணிகளின் தொகுதி - பெரும்பாலும் வரைகலை சார்ந்தது.

toolkit : கருவிப்பெட்டி : ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எழுதப்பட்டு, இயக்கப்படுவதற்கு அனுமதிக்கும் மென்பொருள் வாலாயங்களின் தொகுதி. பல்வேறு பணிகளைச் செய்வதற்காக பயன்பாட்டு ஆணைத் தொடர்கள் வாலாயங்களை அழைக்கும். சான்றாக, ஒரு பட்டியலைக் காட்டுதல் அல்லது வரைகலைக் கோடு ஒன்றை வரைதல்.

top down : மேல்-கீழ்.

top : உச்சி ; உச்சிப் பகுதி.

top-down design : மேல்-கீழ் வடிவமைப்பு : கட்டமைக்கப்பட்ட ஆணைத் தொடரமைப்பில் ஒரு செயல்முறை. இம்முறையில் ஒரு ஆணைத்தொடரை செயல்பாட்டுக் கூறுகளாக பிரித்தமைக்கப்படும். ஆணைத் தொடராளர் முதன்மைக் கூறை அமைப்பார்.

top down development : மேலிருந்து கீழ் மேம்பாடு : கணினி ஆணைத் தொடர் மேம்பாட்டுக்கான வடிவமைப்புக் கட்டுமான பிரிவு, மேம்பாட்டு செயலாக்கத்தின்போது உயர்நிலைப் பணிகள் யாவும் குறியீடு அமைக்கப்பட்டு வெளியமைப்பு வடிவத்தில் முன்னதாகவே சோதிக்கப் படும். கீழ்நிலை தகவல்கள் சேர்க்கப்பட்டு வரையறைகள் மற்றும் இடைமுகங்கள் மூலம் போகப் போக சோதிக்கப்படும். வேலைக் கட்டுப்பாட்டு மொழிகள் மற்றும் செயலாக்க முறைகள் போன்ற மேல் நிலைகளில் துவங்கி இதன் மொத்த அமைப்பு உருவாக்கப்படுகிறது. படிப்படியாக இது முன்னேறி ஆணைத்தொடர் கட்டுப்பாட்டுக் கூறுகள்வரை விரிந்து சென்று கீழ் நோக்கிய வரிசைமுறை அமைப்பில் ஆணைத்தொடர் கூறுகளின் மேலும் துல்லியமான நிலைகளுக்குக் கீழிறங்கி வருகிறது. இந்த அணுகுமுறை இரண்டுவகை விளைவுகளை ஏற்படுத்தும். முதலாவது, மேம்பாட்டினை ஒட்டி அதே வேளையில் கணினி அமைப்பு ஒருங்கிணைவது ஏற்படும். அடுத்ததாக, மேம்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போதே கூடுதல் திறனுடைய இயக்க அமைப்பு பயன்பட்டு வருகிறது.

top down programming : மேலிருந்து கீழ் ஆணைத்தொடரமைப்பு : ஒரு வகையான ஆணைத் தொடரமைப்பு முறை. ஆணைத் தொடர்பற்றிய பொதுவான விளக்கமும் பின்னர் அதைப் பலவாகப் பிரித்து, மேலும் கீழ் நிலையில் வாலாயங்களின் தொகுதியாக வரையறுத்தல்.

top of file : கோப்பின் மேற்பகுதி : ஒரு கோப்பின் ஆரம்பம். சொல் செயலாக்கக் கோப்பில் ஆவணத்தின் முதல் எழுத்து. தகவல் கோலில், அது கோப்பின் முதல் பதிவேடாகவோ அல்லது ஒரு பட்டியலில் முதல் பதிவேடாகவோ இருக்கலாம்.

top of page : பக்கத்தின் மேற்பகுதி : ஒரு பக்கத்தின் மேல்பகுதி எங்கே இருக்கவேண்டும் என்று அச்சுப் பொறிக்குக் கூறுகின்ற ஒரு ஏற்பாடு. இதனால் சரியான இடத்தில் அச்சு துவங்கி காகிதத்தில் சரியாக முன் னேறி காகிதப்படிவத்தைப் பெறு கின்றது.

top-down methodology : மேல்-கீழ் செயல்முறை : கலவையான தன்மையை ஒழுங்குபடுத்துவதற் கான கட்டுப்பாடான அணுகுமுறை. இதில் ஒரு அமைப்பின் மேல்நிலை பணிகள் அடையாளம் காணப்பட்டு பின்னர் இப்பணிகளை வரிசைக் கிரமமான புரியக்கூடிய கீழ்நிலை கூறுகளாகப் பிரிக்கப்படுகிறது.

top margin : மேல் ஓரம்.

topology : கட்டமைப்பியல்; வடி வியல்; இடத்தியல் : ஒரு கட்டமைப் பின் வடிவமைப்பில் உள்ள பல் வேறு தகவல் தொடர்பு வழித்தடங் கள், சாதனங்கள் ஆகியவை ஒன்றோ டொன்று இணைந்திருப்பதை வரை படமாகக் காட்டும் ஒரு கணினி கட்டமைப்பு.

total bypass : முழு ஒதுக்கல் : செயற்கைக்கோள் தகவல் தொடர்பு களைப் பயன்படுத்தி உள்ளூர் மற் றும் நீண்ட தொலைவு தொலை பேசிக் கம்பிகளை ஒதுக்குதல்.

touch screen : தொடுதிரை : கை விரல்களைப் பயன்படுத்தி திரையில் ஒரு குறிப்பிட்ட வாய்ப்பு அல்லது ஒரு பட்டியலின் பொருள் அல்லது இடைமுகத்தைத் தேர்ந்தெடுத்துக் காட்டப் பயன்படுத்தப்படுவது.

touch sensitive screen : தொடு உணர் திரை : 1. திரையில் குறிப்பிட்ட இடத் தில் விரலாலோ அல்லது வேறு பொருளாலோ தொடுவதன் மூலம் கட்டளைகளை அனுப்ப உதவும் காட்சித் திரை. 2. ஒரு ஒளிக்காட்சிக் குழாயின் முன்னால் தெளிவான குழைமத் தூளைச் (பிளாஸ்டிக்) சேர்த்துக் கொண்டுள்ள சிறப்பு வகை ஒளிக்காட்சி. எந்த இடத்தில் திரை யில் தொடப்படுகிறது என்பதை திரை தெளிவாகக் கண்டறிந்து குறிப் பிடப்பட்ட பணியைக் கணினி செய்கிறது.

tower : கோபுரம் : அகலத்தைவிட அதிகமான உயரம் உடைய-தரையில் நிற்கும் பெட்டி. மோட்டோரோலா



கோபுரம் (Tower)

68,000 குடும்ப மையச் செய லகங் களைப் பயன்படுத்தும் என்சிஆரின் யூனிக்ஸ் சார்ந்த தனி மற்றும் பல் செயலகக் கணினி அமைப்புகளின் கோபுர வரிசை. தனியாக நிற்கும் தரையில் வைக்கப்படும் பெட்டி யைப் பயன்படுத்தும் தனிநபர்

கணினிகளைப் பற்றிய ஒரு பொதுப் பெயர். மேசை இடத்தைக் குறைக்க இத்தகைய வடிவமைப்பு திட்டமிடப்பட்டது. முகப்பும், விசைப் பலகையும் மேசை மீது வைக்கப் படும்.

touch sensitive tablet : தொடு உணர் பலகை : வரைகலை மற்றும் பட வடிவில் உள்ள தகவல்களை எண் வடிவில் கணினி பயன்படுத்தும் வகையில் தரும் உள்ளீட்டுச் சாதனம். விரல் அல்லது எழுத்தாணி மூலம் பலகையைத் தொட்டால் வரை கலை தகவல்களை உருவாக்க முடியும்.

touch tone telephone : தொடு குரல் தொலைபேசி : அழுத்தும் பொத்தான் தொலைபேசி, தொலை செயலாக்க அமைப்புகளில் பயன்படுத்தப்படுவது.

TPI : டி.பி.ஐ : tracks per inch என்பதன் குறும்பெயர். காந்த வட்டுகளில் சேமிப்பின் அடர்த்தியை அளக்கப் பயன்படுத்தப்படுவது.

trace : தேடு ; சுவடு ; பதிவடையாளம்: 1. பரவு காட்சித் திரையில், ஒளிக் கற்றையின் பாதையை 'வருடல்' (scan) செய்வது. 2. மின்னணு பாகங்களை மின்சுற்று அட்டைகளில் இணைக்கும் மின்னோட்டப் பாதை.

tracing routine : தேடும் வாலாயம் : ஒரு ஆணைத்தொடரின் இயக்கத்தின்போது கணினி இயக்கப் பதிவகங்களில் அடங்கியிருப்பவற்றின் நேரப்படியான வரலாற்றைக் கூறும் வாலாயம். ஒரு முழுமையான தேடும் வாலாயம் மூலம் ஒவ்வொரு முறை ஆணை செயல்படுத்தப்படும் போதும் பாதிக்கப்படும் இருப்பிடங்கள் மற்றும் அனைத்துப் பதிவகங்களின் தகுதியைக் கண்டறிய முடியும்.

track address : தடவரிசை முகவரி.

track : ஓடுபாதை ; தட வரிசை ; தடம்: 1. காந்த நாடா அல்லது காந்தவட்டு போன்ற தொடர்ச்சியான அல்லது



ஓடுபாதை (Track)

சுழலும் ஊடகம் மீது தகவல்கள் செல்லும் பாதை. 2. ஒளிக்காட்சியில் காட்டப்படும் சுட்டி (கர்சர்), எழுத்தாணி, சுட்டுப்பொறி (மவுஸ்) அல்லது பிற உள்ளீட்டுச் சாதனத்தில் நகரும் நிலையைப் பதிவு செய்தல் அல்லது பின் தொடர்தல்.

track ball : தடக்கோளம்; கோளச்சுட்டி: ஒரு கணினி காட்சித் திரையில் சுட்டியைத் தேடப் பயன்படுத்தும் சாதனம். ஏற்றும் சாதனம், பொதுவாக



தடக் கோளம் (Track ball)

ஒரு பெட்டி, ஒரு பந்தில் அமைக்கப் படுகிறது. பயனாளர் அந்தப் பந்தைச் சுழற்றினால் சுட்டி அதே வேகத்தில் நகரும். பந்தின் திசையிலேயே அது நகரும்.

track density : தட அடர்வு.

track pitch : தட நெருக்கம்.

tracking : தேடல் : ஒளிப்பேனா, மின்னணு பேனா, கோளச் சுட்டி அல்லது சுட்டுப்பொறி ஆகியவற் றைக் கொண்டு காட்சித் திரையின் மேற்பகுதியில் சுட்டியையோ அல்லது வேறு குறியீட்டையோ நகர்த்துதல்.

tractor : தாள் இழுப்பி; இழுவைத் தாள் ஊட்டி : அச்சுப் பொறி மூலம் தொடர்ந்து அனுப்பப்படும் காகி தத்தை நகர்த்துகின்ற அச்சுப் பொறி யில் உள்ள ஒரு பகுதி.

tractor feed : இழுவைத்தாள் ஏற்பி: அச்சுப்பொறியின் பகுதியாக உள்ள ஒரு மின்னியந்திரச் சாதனம். இது தொடர்படிவ காகிதத்தை அச்சு எந்திரப்பகுதிக்கு அனுப்புகிறது. டிராக்டர் ஏற்புப் பகுதியில் உள்ள துளைகள் காகிதத்தை வாங்கி நகர்த்துகிறது.



இழுவைத்தாள் ஏற்பி (Tractor feed)

track recovery : தட மீட்பு.

track reverse : தடப் பின்னோட்டம்.

track sector : தடப் பிரிவு.

track selector : தடத் தேர்வுக் கருவி.

traid : டிரைட் : மூன்று துண்மிகள், எட்டியல்கள் அல்லது எழுத்துகள் போன்று மூன்றினைக்கொண்ட தொகுதி.

trailler label : முன்னோட்ட வில்லை: ஒரு கோப்பைப் பற்றிய அடை யாளத் தகவலைக் கொண்டிருக்கும் அதற்கு முந்தைய கோப்பின் கடைசிப் பதிவேடு.

trailer : முன்னோட்டம் : 1. தகவல் செயலாக்கத்தில், ஒரு கோப்பின் கடைசிப் பதிவேடு. அப்பதிவேட் டில் கோப்பில் உள்ள பதிவேடு களின் எண்ணிக்கையையும் இடை நிலை கூட்டல்களையும் கொண் டிருக்கும். 2. தகவல் தொடர்புகளில், ஒரு குறியீடு அல்லது குறி யீடுகளின் தொகுதி. அனுப்பப் பட்ட செய்தி யின் கடைசிப் பகுதி இதில் இருக்கும்.

train printer : தொடர் அச்சுப் பொறி: ஒரு தடத் தில் உள்ள குண்டு அச்சு களைப் பயன்படுத்தும் வரி அச்சுப் பொறி.

training : பயிற்சி : 1. ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய தகவல்களைக் கற்றுத்தரல். மென் பொருளைப் பொறுத்த வரை ஒரு பயன்பாட்டில் காணப்படும் அனைத்து கட்டளை களின் மீது விளக்கம் தரப்படும். 2. தகவல் தொடர்புகளில், இரண்டு

மோடெம்கள் தங்களுக்குள் சரியான வரைமுறை மற்றும் செலுத்து வேகத்தை முடிவு செய்தல். 3. குரல் அறியும் அமைப்புகளில், ஒரு குரலைக் கண்டறிவதற்காக ஒரு வரின் மாதிரிகளையும் அமைப்பு களையும் பதிவு செய்தல்.

transaction : பரிமாற்றம் ; செயல் பரி மாற்றம்; செயலாக்கம்; செய்வினை : நடவடிக்கை அல்லது வேண்டு கோள். ஆணைகள், வாங்கல்கள், மாற்றல்கள், சேர்த்தல்கள் மற்றும் நீக்கல்கள் ஆகியவை ஒரு வணிகச் சூழ்நிலையில் பதிவு செய்யப்படும் பரிமாற்றங்களின் சான்றுகள். கேள்விகளும் மற்ற வேண்டுகோள் களும் கூட கணினிக்குப் பரிமாற்றங் கள் என்றாலும் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பதிவு செய்யப்படுவதில்லை என்ப தால் அவை பரிமாற்றங்களாகக் கருதப்பட மாட்டாது. ஒரு கணினி அமைப்பின் வேகம் மற்றும் அளவை முடிவு செய்ய பரிமாற்ற அளவே பெரும் காரணியாகக் கருதப் படும்.

transaction code : பரிமாற்றக் குறியீடு.

transaction document : பரிமாற்ற ஆவணம் : வணிகப் பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஆவணம். சான்று - வாங்கும் ஆணை, சம்பளக் காசோலை, விற்பனைப் பற்றுச் சீட்டு அல்லது வாடிக்கை யாளர் சேவை.

transaction file : பரிமாற்றக் கோப்பு.

transaction journal : பரிமாற்ற இதழ்.

transaction oriented processing : பரி மாற்றம் தொடர்பான ஆய்வு.

transaction lock : செயலாக்கப்பூட்டு; செய்வினைப் பூட்டு.

transaction processing : பரிமாற்றச் செயலாக்கம்.

transaction terminal : பரிமாற்ற முனை யம் : வங்கிகள் சில்லரைக் கடைகள், ஆலைகள் மற்றும் பணியிடங்களில் பரிமாற்றத் தகவல்களை அவை ஆரம்பிக்கும் இடத்தில் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் முனையம். சான்று : விற்பனை இட (POS) முனை யங்கள் மற்றும் தானியங்கி டெல்லர் எந்திரங்கள் (ATMs).

transaction programme : பரிமாற்றச் செயல்பாடு.

transaction trailing : பரிமாற்றச் சுவடு.

transborder : எல்லை கடந்த.

transducer : விசைமுறை மாற்றமை வுக் கருவி : ஒரு உள்ளீட்டு சமிக் ஞையை வேறு ஒரு வடிவத்தில் வெளியீட்டு சமிக்ஞையாக மாற்றித் தரும் தன்மை அல்லது சாதனம்.

transcribe : புறச் சேமிப்பக படி யெடுப்பி.

transcript : எழுத்துப்படி.

transcription : படியெடுப்புக் கருவி.

transceiver : அனுப்பி வாங்கி : பல வடிவங்களில் வரும் உவம அல்லது துடிப்பு சமிக்ஞைகளை அனுப்பிப் பெறும் எந்திரம். சான்று : ஒரு கட்ட மைப்பு ஏற்பியில் உள்ள தகவல் தொடர்பு செயற்கைக்கோள்.

transfer : மாற்றல் : 1. ஒருபொருள் அல்லது தகவல்தொகுதியைப் படித் தல், படியெடுத்தல், அனுப்புதல் அல்லது சேமித்தல். 2. கட்டுப்பாட் டை மாற்றுதல்.

transfer address : மாற்றல் முகவரி.

transfer rate : மாற்றல் விகிதம் ; மாற் றல் வேகம் : அனுகப்பட்ட தகவல்

ஒரு சாதனத்திலிருந்து வேறு ஒன்றுக்கு எந்த வேகத்தில் நகர்த்தப்படுகிறது என்பது.

transform : உருமாற்று : அதன் பொருளை மாற்றாமல் தகவலின் வடிவத்தை மாற்றுதல்.

transform algorithm : மாற்றல் நெறிமுறை : ஒரு பதிவு விசையில் எண் மதிப்பீடுகளைச் செய்து அதன் முடிவை அந்தப் பதிவேட்டின் முகவரியாகப் பயன்படுத்துவது.

transformation : உருமாற்றம் : கணினி வரைகலையில், ஒரு திரை உருவத்தின் அளவு அல்லது இடத்தின் மீது செய்யப்பட்ட மாற்றல்களில் ஒன்று. மூன்று அடிப்படை மாறுதல்களாக மொழி பெயர்ப்பு, அளவிடல் மற்றும் சுழற்சி ஆகியவற்றைக் கூறலாம்.

transfer time : மாற்றல் நேரம் : ஒரு இடத்திலிருந்து வேறொன்றுக்கு தகவல்களை அனுப்ப எடுக்கும் நேரம். மாற்றலின் ஆரம்பத்திற்கும் முடிவுக்கும் இடையில் உள்ள நேரம்.

transformer : மின்மாற்றி ; உருமாற்றி: கணினி மின்வழங்கலில் 115 வோல்ட்டுகள், 60 ஹெட்சுகள் அதை விடக் குறைந்த ஆனால் கணினி கருவி பயன்படுத்தக் கூடிய பொருத்தமான மின்னழுத்தமாக மாற்றித் தருதல்.

transient : மாறுகின்ற ; நிலையிலா ; மாறுகுணம் : 1. மாற்றத்துக்குப் பிறகு சிறிது நேரம் அப்படியே இருக்கின்ற நிலையில் ஏற்படும் திடீர் மாற்றம் பற்றி ஆராய்வது. 2. மின்சக்தி அல்லது சமிக்ஞையில் திடீரென்று எழுச்சி ஏற்பட்டு அதனால் தவறான சமிக்ஞையும், பாகங்கள் கோளாறுகளும் ஏற்படுதல்.

transient error : மாறும்பிழை : ஏதாவது ஒருமுறை மட்டுமே ஏற்படுவது போன்றபிழை. அது மீண்டும் திரும்ப ஏற்படாது.

transient programme : மாறும் ஆணைத்தொடர் ; மாறுநிலை செயல்முறை : கணினி அமைப்பின் முதன்மை நினைவகத்தில் தங்காத ஆணைத் தொடர். தேவைப்படும் போது நாடா அல்லது வட்டிலிருந்து ஆணைத் தொடர்களை கணினி படிக்கும்.

transient state : மாறும்நிலை : ஒரு சாதனம் அதன் முறைகளை மாற்றும் சரியான நேரம். சான்று : 0 முதல் 1-க்கு அல்லது அனுப்புதலில் இருந்து பெறுதலுக்கு.

transient suppressors : மாறும் அழுத்திகள் ; மாறுநிலை ஒடுக்கி : சிறு வோல்டேஜ் பிழைகளை சமாளிக்கும் சாதனம். நிலையான மின்னோட்டத்தைத் தருகிறது. குறுகிய நேர உயர் வோல்டேஜ் சமயங்களில் கருவிகளை அழுத்திகள் பாதுகாக்கின்றன.

transit symbol : கடவுக் குழூஉக் குறி

transistor: transistor logic (TTL) : மின்மப் பொறி - மின்மத் தருக்க அளவை (டிடிஎல்) : இரு துருவ சாதனங்களின் மூலம் குறைந்த சக்திகளும் அதிவேக அளவை மின் சுற்றுகளால் உருவாக்கப்படும் ஒருங்கிணைந்த மின்சுற்று அளவை. பொதுவாக குறைந்த சக்தி செக்கோட்டி மின் சுற்றுகள் வேகமாக இயங்கினும் அதிக செலவாகும். ஏனென்றால் தங்கமுலாம் பூசிய செக்கோட்டி டயோடுகள் ஒவ்வொரு டிடிஎல் தட உள்ளீட்டுக்கும் தேவைப்படுகின்றன.

transit delay : இடங்கடப்புச் சுணக்கம்.

translate : மொழிபெயர் : பொருளை மாற்றாமல் ஒருவகையான வடிவத்திலிருந்து வேறு ஒரு வடிவத்துக்கு தகவல்களை மாற்றுதல்.

transistor : மின்மப் பெருக்கி; இரண்டு முகப்புகள், உமிழி, வாங்கி ஆகியவற்றுக்கிடையிலான மின்னோட்டத்தை மூன்றாவது முகப்பின் மூலம் கட்டுப்படுத்தும் அரைக்கடத்திச் சாதனம். வில்லியம் ஷாக்லி வால்டர் மற்றும் ஜான் பார்டீன் ஆகிய இருவரும் பெல் ஆய்வகத்திற்காக உருவாக்கியது.



பலவகையான மின்மப் பொறிகள்

translation : மொழிபெயர்ப்பு : 1. கணினி வரைகலையில், ஒரு ,உருவத்தை திரையில் ஒரு புதிய இடத்துக்கும் மாற்றுதல். மொழிபெயர்ப்பின்போது, உருவத்தின் ஒவ்வொரு புள்ளியும் அதே வேகத்திலேயே நகரும்.

translator : மொழிபெயர்ப்பி : ஒரு மொழி அல்லது குறியீட்டிலிருந்து வேறு ஒன்றுக்கு மொழி பெயர்ப்புகளைச் செய்யும் கணினி ஆணைத் தொடர்.

transmission : பரவுதல்; செலுத்துதல்; கடத்துதல்; அனுப்புதல்; அனுப்பீடு: ஓரிடத்திலிருந்து தகவல்களை அனுப்புதல் மற்றும் வேறு ஒரு இடத்திலிருந்து தகவல்களைப் பெறுதல். மூலத் தகவல்களை பெரும்பாலும் மாற்றாமல் அனுப்புவது.

transmission facility : பரப்பும் வசதி: தொலைமுகப்புகளுக்கும் கணினிகளுக்கும் இடையிலான தகவல் தொடர்புகளின் இணைப்பு. தகவல் தொடர்புக் கம்பிகள், நுண்ணலை பரப்பும் கம்பிகள், தகவல்தொடர்பு செயற்கைக் கோள்கள், லேசர் தொலைபேசிக் கம்பிகள், ஒளி இழைகள், அலைவழிகாட்டிகள் போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை.

transmission time : செலுத்து காலம்; அனுப்பீடு காலம்.

transmit : அனுப்பு; பரப்பு : ஓரிடத்திலிருந்து தகவல்களை அனுப்பு

அல்லது வேறு ஒரு இடத்திலிருந்து தகவல் பெறு.

transmitter : செய்தி பரப்பும் சாதனம்.

transmission time protection : செலுத்துகாலப் பாதுகாப்பு ; இணை வழியில் பாதுகாப்பு.

transmitting : அனுப்புகின்ற : ஒரு நபரிடமிருந்து வேறொரு நபருக்கோ அல்லது ஒரு கணினியிடமிருந்து வேறொரு கணினிக்கோ தகவல் களை அனுப்பும் செயல்முறை. தொலை வெளிப்புற உறுப்பில் இருந்து கணினிக்கு அனுப்புவது கூட இதில் சேரும்.

transparent : தெரியக்கூடிய : பயனா ளர்களுக்கு அல்லது பிற சாதனங் களுக்குப் பார்க்கமுடியாத ஒரு செயல் முறை. பயனாளர் தலை யீடின்றி செய்யக்கூடிய கணினி இயக் கத்தைப் பற்றிக் கூறுவதால் இது பயனாளருக்குத் தெரியக் கூடியது.

transponder : செலுத்து அஞ்சலகம் : ஒரு தரை நிலையத்திலிருந்து வரும் சமிக்ஞைகளைப் பெற்று அதை ஒரு பெறும் நிலையத்திற்குப் பிரதிபலிக் கக் கூடிய செயற்கைக் கோளில் உள்ள பெரிதாக்கி.

transportable computer : அனுப்பக் கூடிய கணினி : எடுத்துச் செல்லக் கூடிய சிறிய கணினி. பொதுவாக சுமார் 10 கிலோவுக்குக் குறைவாக எடை உடையது.

transport protocol : போக்குவரத்து நெறிமுறை : இணைப்பு ஏற்படுத்து வதற்கும் எல்லா தகவல்களும் பாது காப்பாக சென்று சேர்ந்து விட்டனவா என்று பார்ப்பதற்குமான தகவல் தொடர்பு விதிமுறை. ஓஎஸ்ஐ மாதிரி யின் 4-வது பகுதியில் இதுவரை யறுக்கப்பட்டுள்ளது.

transpose : இடைமாற்றம் : தகவல் களின் இரு பொருள்களை ஒன்றுக் கொன்று மாற்றிக் கொள்ளுதல்

transpose error : இடமாற்றப் பிழை

transreciver : பெற்றனுப்புச் சாதனம் ; பெற்றனுப்பி.

transversal : ஊடு வெட்டுக் கோடு : ஒரு ஆணைத் தொடரில் பிழை நீக்கு வதற்காக ஒவ்வொரு சொற்றொட ரையும் செயல்படுத்துதல்.

trap : பொறி : தெரிந்த இடத்திற்கு ஆணைத் தொடரின் நிபந்தனை யுடன் கூடிய தூண்டுதல். ஆணைத் தொடர் இயக்கப்படும்போது பொறி வைக்கப்பட்டுள்ள இடத்திற்குப் போனவுடன் இது தானாகவே செயல் படுத்தப்படும்.

trapdoor : பொறிக் கதவு : தகவலைப் பின்னர் பெறலாம் மாற்றலாம் அல்லது அழிக்கலாம் என்ற நோக்கத் தில் ஒரு தகவல் செயலாக்க அமைப் பில் வேண்டுமென்றே உருவாக்கப் படும் பிரிவு.

trapping : பொறிவைத்தல் : ஒரு குறிப் பிட்ட இடத்திற்கு மாற்றும் வழக்க மான ஆணைத்தொடர் ஓட்டத்தில் கட்டுப்பாடு வைத்துக் கொள்ளும் வன்பொருள் வசதி.

trash can : கழிவுக் கலம் : கோப்பு களையும், மடிப்புத் தாள்கள் மற்றும் பயன்பாடுகளையும் நீக்குவதற்கும் நெகிழ்வட்டுகளை வெளியேற்று வதற்கும் பயன்படும் மெக்கின் டோஷ் உருப்பொருள்.

TRC : டீஆர்சி : பட்டி தேடுகுறி: Terminal Reference Character என்பதன் குறும்பெயர்

tree : மரம் : சுழற்சிகள் இல்லாது இணைக்கப்பட்ட வரைபடம். மர

வரைபடம் என்றும் அழைக்கப்படு கிறது.

tree diagram : மர வரைபடம்.

tree sort : மர வகைப்படுத்தல் : ஒரு மரத்தின் முனைகளாகக் கருதப்படு பவற்றை மாற்றக்கூடிய வகைப் படுத்தும் முறை. ஒருபொருள் வேர் முனையை அடைந்தவுடன், கடைசி இலைமுனையுடன் அது பரிமாற்றிக் கொள்ளப்படுகின்றது.

tree network : மர பிணையம் ; மரக் கட்டமைப்பு : வரிசைமுறை முனை களில் கட்டுப்பாடு அமைக்கப்படும் கட்டமைப்பு. குடும்ப மரத்தின் தலைகீழ் வடிவ அமைப்பாக காகிதத் தில் தகவல் தொடர்பு குறிப்பிடப் படுகிறது. கட்டமைப்பின் உச்சம் அல்லது மரத்தின் மேற்பகுதியானது கட்டமைப்பின் அடிப்படைக் கட்டுப்பாட்டினைக் குறிப்பிடுகிறது. இடைப்பட்ட கிளைகளில் கீழ்ப் பகுதியில் சில நிலைகளில் கட்டுப் பாடு தரப்படலாம்.



மர பிணையம் (Tree network)

tree structure : மர அமைப்பு : தகவல் களை ஒருங்கமைப்பின் ஒரு வடிவ மான வரிசைமுறை வடிவமைப்பிற் கான வேறொரு பொருளின் பெயர்.

trend line : போக்குக்கோடு : தெரிந்த தகவலுக்கு அப்பால் போக்குகளைக் கண்டறிந்துரைப்பதற்காக தகவல் வரிசைகளைக் கணித்து விரிவாக்கல்.

triad : மும்மை.

trichromatic : மூவண்ணத் திறமான : மூவண்ணக் கலவை : கணினி வரை கலையில், மூவண்ணக் கலவை என் பது பொதுவாக மூன்று அடிப்படை நிறங்கள் (சிவப்பு, பச்சை மற்றும் நீலம்) ஒன்றாகச் சேர்ந்து மற்ற நிறங் களை உருவாக்குவதைக் குறிப்பிடு கிறது.

trigger : விசை வில் : ஒரு இயக்கப் பிடியின் மேலுள்ள பொத் தான். ஒரு நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்காக ஏவு கணையைச் சுருக்கி அல் லது ஒரு சங்கடத்தைத் தூண்டுதல் போன்றவற் றைச் செய்ய ஒளிக்காட்சி விளையாட்டுகளில் பயன் படுத்தப்படுவது.

trigonometry : கோண வியல்: முக்கோணங்களின் பக்கவாட்டுகள் மற்றும் கோணங்கள் ஆகியவற்றின் உறவுகள் மற்றும் இந்த உறவுகளுக்கான பல்வேறு குறிக் கணக்கியல் முறை பணிகள் ஆகிய வைப் பற்றி ஆராயும் கணிதவியலின் பிரிவு. சரியான முக்கோணத்தில் அடிப்படை உறவுகளை கோண வியல் பணிகள் என்று அழைக்கப் படுகின்றன. பல ஆணைத் தொட ரமைப்பு மொழிகளில் இவை நூலக வாலாயங்களாகக் குறிப்பிடப்படு கின்றன.

triple precision : மூன்று துல்லியம் ; மும்மை சரிநுட்பம் : கணினி வழக்க மாகப் பயன்படுத்துகின்ற, ஒரு

பொருளில் மூன்று மடங்கு எண் களைப் பயன்படுத்தி வைத்திருத் தல்.

triple twist : மும்முறுக்கு : மேம்பட்ட தெளிவுக்காக படிகங்களை 260 டிகிரி களில் முறுக்குகின்ற மீ முறுக்கு மாறுபாடு.

tristate logic : மூன்று நிலை தருக்கம்; முன்நிலை தருக்கமுறை : ஒருவகை சிறு மின்மப் பெருக்க தருக்க வடிவம். இதில் உள்ளீடு மற்றும் வெளியீடு வேலைகள் மூன்று நிலை களை எடுத்துக் கொள்ளலாம். இரண்டு வழக்கமான குறைந்த ஓட்டம் மற்றும் 1,0 நிலைகளை ஏற்றல். பல மூன்று நிலை தருக்க சாதனங்களுக்கு நேரப்பங்கீட்டு தடயக் கம்பிகளை இது அனுமதிக் கிறது.

tristimulus values : முத்தூண்டல் மதிப்புகள் : பிற நிறங்களை உருவாக் கக் கலக்கப்படும் மூன்று அடிப் படை நிறங்கள் ஒவ்வொன்றின் அளவுகள்.

trojan horse : டிரோஜன் குதிரை : கணினி கிருமி(virus)களில் ஒரு வகை. கணினி குற்றவாளி ஒருவர் வேறொருவரின் ஆணைத் தொடரில் ஆணையை விட்டு வைப்பார். ஆணைத்தொடர் வழக்கமானது போலவே செயல்பட்டு நாம் சேமித்து வைத்துள்ள கட்டளைத் தொடர்களையும் தகவல்களையும் பழுதாக்கிவிடக் கூடியது.

tron : டிரான் : புகழ்பெற்ற அதி நுட்ப முன் அடைச்சொல்.

troubleshoot : தவறு காணல் : கணினி ஆணைத்தொடரில் உள்ள ஒரு தவறு அல்லது வன்பொருள் அலகில் உள்ள ஒரு கோளாறைக் கண்டறிய முயலு தல்.

TRS (Tandy Radio Shack) : டிஆர்எஸ்: Tandy Radio Shack என்பதன் குறும் பெயர். டான்டியின் பி.சி.களுக்கு கூறப்பட்ட முதல் வணிகப் பெயர். 1977இல் முதன் முதலில் அறிமுகப் படுத்தப்பட்ட மூன்று கணினிகளில் ஒன்றாக டிஆர்எஸ் 800 இருந்தது. அதன் செயலாக்க அமைப்பின் பெயர் டிஆர்எஸ் டாஸ் (TRS. DOS)

TRS DOS : டிஆர்எஸ் டாஸ் : Tandy Radio Shack Disk Operating System என்பதன் சுருக்கப் பெயர். டிஆர்எஸ் 80 நுண்கணினிகளின் இயக்க முறைமை.

TRS 80 Microcomputer : டிஆர்எஸ் 80 நுண்கணினி : டான்டி கார்ப்ரேஷ னின் ஒரு பிரிவான ரேடியோ ஷாக் நிறுவனம் உற்பத்தி செய்த பல நுண் கணினி அமைப்புகளின் வணிகப் பெயர்.

true colour : உண்மை நிறம் : 1. 16,77,216 நிறங்களை (24 துண்மி நிறம்) உருவாக்கக் கூடிய திறன். 2. ஒளிப் படம் போன்று நிற உருவங் களை உருவாக்கும் திறன். (24 துண்மி நிறம் குறைந்த அளவு தேவைப் படும்).

true image : உண்மைத் தோற்றம் : நுண் மென்பொருளின் மேம்படுத்தப் பட்ட பிற்சேர்க்கை வரி மொழி மாற்றி. பிற்சேர்க்கை வகை 1 மற்றும் உண்மை வடிவ எழுத்துகளை இது அச்சிடுகிறது.

true Type : உண்மை வகை : ஆப்பிள் நிறுவனத்தின் அளவு மாறக்கூடிய அச்செழுத்து நுட்பம். ஒவ்வொரு அச்செழுத்தும் அதற்கென்று தனி யான நெறிமுறையைக் கொண்டு திரைக்கும் அச்சுப்பொறிக்கும் துண் மிப் படங்களை உருவாக்கும்

அமைப்பு. விண்டோஸ் மற்றும் ஓஎஸ்/2இல் இது பயன்படுகிறது.

trunk : நேர்பாதை.

tuple : ட்யூப்பிள் : உறவுமுறை தகவல் தள மேலாண்மையில் ஒரு பதிவேடு அல்லது ஒரு வரிசை.

true BASIC : ட்ரூ பேசிக் : பேசிக் ஆணைத்தொடரமைப்பு மொழியின் வடிவமைக்கப்பட்ட பதிப்பு.

true complement : உண்மை நிரப்பு எண் : உண்மை நிரப்பு பத்தின் நிரப்பு எண் மற்றும் இரண்டின் நிரப்பு எண்ணுக்கு உடன்பாட்டுச் சொல்.

truncate : துணிப்பு ; துணித்தல் : 1. துல்லியத்தை குறைத்து ஒரு எண்ணின் இறுதி எண்களை வெளியேற்றுதல். சான்றாக, 'பை' வரிசைகளை 3.14159 என்ற எண் துணிப்புச் செய்கிறது. எப்படியென்றால், இந்த எண்ணை எல்லையின்றி நீட்டிக்கலாம். 2. ஒதுக்கப்பட்ட இடத்தில் பொருந்தாத எழுத்துகளை வெட்டுதல். சான்றாக Rumplestrltskin என்ற பெயரை அச்சிட்ட அறிக்கையில் பத்து எழுத்துப் பெயர்ப் புலத்தில் பொருத்த வேண்டுமென்றால் அப்பெயரை rumplestil என்று சுருக்குதல்.

truncation error : சுருக்குவதில் பிழை; துணிப்புப் பிழை : சுருக்குவதனால் ஏற்படும்பிழை.

trunk : தொலை : இரண்டு தொலைபேசி பொத்தான் அமைப்பு மையங்களுக்கு இடையில் ஏற்படும் நேரடிக் கம்பி இணைப்பு.

truth table : உண்மைப் பட்டியல் ; மெய்நிலை அட்டவணை : ஒரு இருமை மின்சுற்று உருவாக்குகின்ற உள்ளீட்டு/வெளியீட்டுக் கூட்டல்களின் அனைத்து வாய்ப்புகளையும் முறையாகப் பட்டியலிடல்.

turbo : டர்போ : அதிவேக செயலாக்கம்/திறம்பட்ட இயக்கத்தைக் குறிப்பிடும் சொல். குறிப்பிட்ட பெயருடைய வன்பொருள், மென்பொருளைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பி.சி.யில் வேகமான கடிகார விகிதத்தைக் குறிப்பிடுகிறது. போர்லாண்ட் தன்னுடைய டர்போ சி மற்றும் டர்போ பாஸ்கல் ஆகியவற்றில் இதைப் பயன்படுத்தி பிரபலப்படுத்தியது.

turbo C : டர்போ சி : பலதரப்பட்ட வணிகப் பொருள்களை உருவாக்கப் பயன்படும் போர்லாண்ட் நிறுவனத்தின் 'சி' தொகுப்பி. அதன் மிக நன்றாக வடிவமைக்கப்பட்ட 'பிழை நீக்கி' மிகவும் புகழ்பெற்றது.

turbo mouse : டர்போ சுட்டி (மவுஸ்): கென்சிங்டன் மைக்ரோவேர் நிறுவனத்தின் மெக்கின்டோஷ் டிராக் -பால். பந்து மெதுவாக நகர்ந்தால், சுட்டி மெதுவாக நகரும். ஆனால் அது வேகமாக நகர்ந்தால் திரையில் சுட்டி அதிகதூரம் போகும். பி.சி.யில் அதற்கு இணையானது திறம்பட்ட சுட்டி (expert mouse).

turn around : சுழற்சி திரும்பவரும் : ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்ய எடுத்துக்கொள்ளும் நேரம். ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய ஆகும் நேரம். ஒரு வேலையைச் செயலாக்கத்திற்குக் கொடுப்பதற்கும், முடிந்த வெளியீடு பெறுவதற்கும் இடையில் ஆகும் நேரம்.

turnaround document : சுழற்சி ஆவணம் ; திரும்பி வரும் ஆவணம்: எந்திரம் படிக்கும் உள்ளீடாக ஒரு நிறுவனத்திற்குக் கணினி அமைப்பு அளிக்கும் வெளியீடு. (வாடிக்கையாளர் விலைமதிப்பீடு மற்றும் பட்டியல்கள்).

turnpike effect : டர்ன்பைக் விளைவு; வழிமறிப்புத் தடைவிளைவு : தகவல் தொடர்புகளில், அதிக போக்கு வரத்து நிலைகள் மற்றும் தடைகளி னால் ஏற்படும் நிறுத்தம்.

TTL : டி.டி.எல் : Transister Transistor Logic என்பதன் குறும்பெயர்.

TTY : டிடிஒய் : Tele Typewriter என்ப தன் குறும்பெயர்.

tunnel diode : ஒத்தியைவு இருமுனை யம் : அதிவேக கணினி மின்சுற்று அமைப்பு மற்றும் நினைவகங்களில் பயன்படுத்தப்படும் மின்னணுச் சாதனம். பில்லியன் நொடிகளின் பின்னங்களாலான பொத்தானிடும் வேகம்.

Turbo Pascal : டர்போ பாஸ்கல் : பெரும்பாலான நுண்கணினி அமைப்புகளில் உள்ள பாஸ்கல் ஆணைத் தொடரமைப்பு மொழி யின் புகழ்பெற்ற பதிப்பு.

Turing Alan M. : தூரிங் ஆலன் எம் (1912-1954) : ஆங்கில கணிதவி யாளர் மற்றும் தருக்கவியலார். இறப் பதற்குச் சற்று முன்பு உலகின் முதல் நவீன அதிகவேக எண்முறை கணினி களின் வடிவமைப்பை உருவாக் கியவர்.

Turing machine : தூரிங் எந்திரம் : ஒரு சாதனத்தின் கணித மாதிரியமைப்பு. ஒரு நீண்ட நாடாவின் தற்போதைய நிலையை ஒட்டி அதன் உள்ள மைப்பை மாற்றுதல், எழுதுதல், படித்தல் மற்றும் நகர்த்துதல் ஆகிய வற்றைச் செய்வது. ஆகவே கணினி போன்ற நடத்தையின் முன் மாதிரி ஆனது.

Turing : தூரிங் : 1982இல் ஆர்.சி. ஹோல்ட் மற்றும் ஜே.ஆர்.கார்டி ஆகிய இருவரும் டோரொன்டோ பல்கலைக்கழகத்தில் உருவாக்கிய ஆணைத்தொடரமைப்பு மொழி. பாஸ்கல் ஆணைத்தொடர் மொழி யில் உள்ள சில இயலாமைகளை நீக்குவதற்கென்றே இதன் அடிப் படை வடிவமைப்பு இலக்கினைக் கொண்டது. யூனிக்ஸ் இயக்க அமைப்பின் கீழும் இயங்குகிறது.

Turing's test : தூரங்கின் சோதனை : ஒரு கணினியிடம் அறிவுக் கூர்மை இருக்கிறதா என்பதை முடிவு செய்ய ஆங்கில கணிதவியலாரான ஆலன் தூரிங் உருவாக்கிய சோதனை. இதில் பங்குகொள்பவர்கள் ஒரு மனிதரும் ஒரு கணினியும். பதில் சொல்பவர் களில் யார் மனிதர், யார் கணினி என்பதை மூன்றாவது நபர் கண்டு பிடிப்பார். இந்தச் சோதனையின்படி, தேர்வாளரை கணினி எந்த அளவுக்கு ஏமாற்றுகிறது என்பதை வைத்து கணினியின் வெற்றியும், அதற்கு ஆதாரமாக அதன் திறமை, அறிவுக் கூர்மையும் கண்டறியப்படும்.

turnaround form : சுற்றித் திரும்பும் படிவம் : அடுத்துவரும் செயலாக்க நிலையின்போது வெளியீட்டுச் சாத னமே உள்ளீட்டு ஊடகமாகப் பயன் படும் நிலைமை.

turnaround time : சுழற்சி நேரம் ; சுற் றித் திரும்பும் நேரம் : 1. பயனாளரிட மிருந்து கணினி மையத்திற்குப் பய ணம் செய்ய ஒரு வேலைக்கு ஆகும் நேரம். கணினியில் இருந்து சென்று ஆணைத்தொடர் முடிவுகள் பய னாளருக்குத் திரும்ப வருவதும் இதில் கணக்கிடப்படும். 2. தகவல் பரப்புதலுக்கு இடையில் ஆகும் நேரம். 3. அரை டுப்ளே வழித்தடத் தைப் பயன்படுத்தி அனுப்புதல்.

turn key : திறவுகோல் திருப்பு ; சாவி திருப்பு.

turnkey system : முழுப்பணி அமைவு: ஏற்கெனவே தயாரான நிலையில் பயன்படுத்த உதவும் கணினி அமைப்பு. வன்பொருள், மென் பொருள், பயிற்சி, பராமரிப்பு உதவி போன்ற ஒரு பயன்பாட்டுக்குத் தேவையான எல்லாமும் அதில் அடங்கும்.

turn off : நிறுத்தி : ஒரு கணினி அமைப்பை நிறுத்தும் (மின்சக்தி நிறுத்தும்) செயல்.

turn on : துவக்கு : ஒரு கணினி அமைப் பைத் துவக்கும் (மின்சக்தி துவக்கும்) செயல்.

turtle : ஆமை : திரையில் காட்டப் படும் முக்கோண வடிவ சின்னம். லோகோ மொழியுடன் ஆமை வரை கலையைப் பயன்படுத்துவதன் மூலம் வரைகலையின் கோடுகளின் போக்கைக் கூறலாம். சான்று : தெற் காக நகர்த்து என்ற ஆணை வந்தால் ஆமை திரையின் அடிப்பகுதியை நோக்கி நகரும்.

turtle graphics : ஆமை வரைகலை : லோகோ மற்றும் பிற கணினி மொழி களில் சேர்க்கப்பட்டுள்ள 'ரோபோ' வைப் போலச் செய்யும் வரைகலை. சிறுவர்களுக்கு படக் கணிதம் மற்றும் கணினி வரைகலையைக் கற்றுத் தருவதற்குப் பயன்படுவது.

tutorial : பயிற்சி : வன்பொருள் அல்லது மென் பொருள் பயிற்சிக் கையேடு. அச்சிடப்பட்ட ஆவண மாகவோ அல்லது நாடா அல்லது தட்டின் மீது காந்த வடிவில் பதிவு செய்யப்பட்டதாகவோ இருக்க லாம்.

tutorial programme : பயிற்சி ஆணைத் தொடர் ; பயிற்சி செயல்முறை : புதிய பொருளை விளக்கி அதன் பிறகே பயனாளரிடம் வைத்திருக்கக்கூடிய வகையில் விளக்கும் கணினி ஆணைத்தொடர்.

TV : டி.வி ; தொலைக்காட்சி : Television என்பதன் குறும்பெயர்.

TVT : டி.வி.டி : Television Typewriter என்பதன் குறும்பெயர். தொலைக் காட்சிப் பெட்டியை கணினி முனை யமாக மாற்றுவதற்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விசைப்பலகை மற்றும் மின்னணுச் சாதனம். ஒளிக் காட்சி முனையம் (வீடியோ டெர் மினல்) .

TV Terminal : டி.வி.முகப்பு ; தொலைக் காட்சி முனையம் : கணினி வெளி யீட்டுச் சாதனமாகப் பயன்படும் பொது தொலைக்காட்சிப் பெட்டி.

tweak : நுண் இசைவிப்பு : ஒரு கருவி யின் பகுதியை மேம்படுத்தும் பொருட்டு சரிசெய்தல் அல்லது நன் றாக ஒத்தியயைவு (tune) செய்தல்.

twelve punch : பன்னிரண்டு துளை : ஹோலரித்தின் துளையிட்ட அட்டை யில் மேல் வரிசையில் உள்ள துளை.

twinaxial : இரட்டை அச்சு : கோ-ஆக்சியல் போன்ற குழாய். ஆனால், இதில் ஒன்றுக்குப் பதிலாக இரண்டு உள்கடத்திகள் இருக்கும்.

twin-cable : இரட்டைக் குழாய் : அதே இரண்டு இடங்களுக்கு இடையில் பல இரண்டு கம்பி இணைப்புகள் வேண்டுமென்றால், உள்ளே பல இரட்டைக் கம்பிகளைக் கொண்ட கேபிள் தரப்படும். இதில் இணை யாக கம்பிகள் முறுக்கேறும்.

twinkle box : மின்னும் பெட்டி : ஒளி உணர்கருவிகள், லென்ஸ் மற்றும் சுழல்வட்டு ஆகியவற்றைக் கொண்ட உள்ளீட்டுச் சாதனம். முப் பரிமாண நிலையில் உள்ள ஒளி

உமிழ் பொருளை அதன் கோண ஒளி அறியும் திறனைக் கொண்டு கண்டறிய முடியும்.

twisted pair : முறுக்கப்பட்ட இணை: 'யுடிபி' (Unshielded Twister pair) என்று அழைக்கப்படும் மெல்லிய (22 முதல் 26 கேஜ்) குறுக்குகளைக் கொண்ட தொலைபேசிக் கம்பிகளில் உள்ள மூடப்பட்ட கம்பி. மற்ற இணைக் கம்பிகளின் குறுக்கீட்டைக் குறைக்க கம்பிகள் ஒன்றோடொன்று முறுக் கப்பட்டிருக்கும். அச்சு இணை (coaxial cable) கம்பிகள் அல்லது ஒளி இழைகளைவிட முறுக்கப்பட்ட கம்பிகளுக்குக் குறைவான பட்டை அகலம் இருக்கும்.

twisted wire : முறுக்கிய கம்பி : தகவல் தொடர்பு ஊடகம். இணைக் கம்பி களை ஒன்றாக முக்கிய ஒரு கம்பி வடத்துடன் கட்டப்படுவதாகும்.

two address computer : இரு முகவரிக் கணினி : அதன் ஆணை படிவத்தில் இரண்டு முகவரிகளைப் பயன்படுத் தும் கணினி. சான்றாக, ADD A+B ஆணை என்றால் 'A' வின் மதிப்பு களுடன் 'B'ன் மதிப்புகளும் சேரக் கூடும். இது (B) -ன் பழைய மதிப்பை மாற்றுகிறது.

two dimensional : இரு பரிமாணம் (2D) : வரைகலை தகவலை புலனா கும் தன்மைகளுடன் வழங்குவது. உயரம் மற்றும் அகலம் எவ்வளவு என்று இரண்டு பருப்பொருள் தன்மையும் குறிப்பிடப்படும்.

two dimensional array : இரு பரிமாண வரிசை : பத்திகள் மற்றும் வரிசை களைக் கொண்ட ஏற்பாடு.

two pass : இரு முறை கடத்தல் : தகவல்களை இரண்டுமுறை மாற்ற வேண்டியுள்ள ஆணைத்தொடர் அல்லது இலக்கம் பற்றியது. முதல் முறை தகவல் மூலம் செல்லும் போது அதன் நோக்கத்தை ஓரளவே நிறைவேற்றுகிறது. இரண்டாவது முறை தகவலைக் கடக்கும்போது தான் முழுமையாக நிறைவேற்று கிறது.

two's complement : இரண்டின் நிரப்பு எண் : எதிர்மறை எண்களைக் குறிப் படும்முறை. உடன்பாடு அல்லது எதிர்மறை இருமை எண் ஒன்றை எதிர்க் குறியீடாக மாற்ற வேண்டு மானால் எல்லா '0' க்களையும் 1 ஆக வும் எல்லா 1-களையும் 0-வாகவும் மாற்றி பின்னர் 1-ஐக் காட்ட வேண்டும்.

two state devices : இரு நிலைச் சாதனங்கள்.

two way branching : இரு வழிப் பிரிதல்; இருவழி கிளைத்தல்.

two-wire cable : இரண்டு கம்பி குழாய் : ஒரு கம்பி வடத்தில் உள்ள கடத்திகள் ஒன்றையொன்று மின் சாரத்தால் தாக்காவண்ணம் பாதுகாக் கப்பட்டுள்ளன. மேலே மூடப்படும் கம்பி மின் பாதுகாப்பு உள்ளது. வெளிப்பக்க உறை பி.வி.சி. என்று அழைக்கப்படுகிறது. மின் தடுப்புச் செய்யப்பட்ட கம்பி வடத்தில் உள்ள இரண்டு கடத்திகளும் கம்பி வடம் நெடுகிலும் முறுக்கப்பட்டு 'இணை' என்று அழைக்கப்படுகின்றது.

two - wire line : இரண்டு கம்பி : வெற் றுக் கடத்திகளைப் பயன்படுத்தி தந்திக் கம்பிகளின் மேல் காப்புறை களை உருவாக்குதல். குறை மின் சுற்று ஆகி தகவல் தொடர்புத் தடை ஏற்படாமல் இருக்கும் கம்பிகள் ஒன்றையொன்று தொட அனுமதிக் கக் கூடாது.

type : வகை : 1. தகவல் அல்லது சொல் நுழைவில் விசைப்பலகை

யில் உள்ள விசைகளை அழுத்துதல். 2. ஆணைத் தொடரமைவில், அதனுள் சேமிக்கப்பட்ட தகவல்களினால் முடிவு செய்யப்படும் மாறி வகை. சான்றாக, முழு எண், மிதக்கும் புள்ளி, தருக்க சரம், தகவல், இருமை ஆகியவை பொது தகவல் வகைகளாக இருக்கும். 3. டாஸ் மற்றும் ஓஸ்/2 இல் சொல் தொகுப்புக் கோப்பின் உள்ளடக்கங்களைக் காட்டும் கட்டளை.

type ahead : மேலும் தட்டச்சு செய்; விரைவெழுதி : சொல் செயலாக்கத்தில் உள்ள ஒரு தன்மை. இதன்படி கணினி தன் திரையில் காட்டுவதை விட வேகமாக எழுத்துகளை இயக்குபவர் தட்டச்சு செய்யும்போது எழுத்துகள் மறைந்துவிடாதிருக்க உதவுகிறது.

type ball : தட்டச்சுப் பந்து ; அச்சுப் பந்து: பயன்படுத்தக்கூடிய எல்லா எழுத்துகளையும் கோல்ஃப் பந்து போலத் தோற்றமளிக்கச் செய்யும்



அச்சுப் பந்து

தட்டச்சு அடிக்கும் தன்மை. உயர்த்தப்பட்டுள்ள எழுத்துகளை சுற்றிலும் நகர்த்தக்கூடிய அச்சில் ஏற்றி வைக்கும். சுத்தியல்போல இயங்கி, காகிதத்தில் நாடாவை அழுத்தி எழுத்து உருவத்தை உருவாக்குகிறது.

typeface : எழுத்தச்சு முகம்; அச்சு முகம்: தனிப்பட்ட தோற்றத்தினைத் தரும் எழுத்துகள், எண்கள், குறியீடுகள் கொண்ட தொகுப்பு.

typeface family : அச்செழுத்துக் குடும்பம் : வடிவமைப்பில் ஒன்றையொன்று தொடர்புள்ள அச்செழுத்துகளை குழுவாக அமைத்தல்.

type font : அச்செழுத்து வகை.

typematic : தொடர் அச்சு: அழுத்திக் கொண்டிருக்கும்வரை திரும்பத் திரும்ப அடித்துக் கொண்டிருக்கும் விசைப்பலகை எழுத்து.

typematic rate : தொடரச்சு விகிதம் : தொடர்ச்சியாக கீழே இறக்கிய போது திரும்பத்திரும்ப விசைப் பலகை விசைகளை குறியீடு அனுப்பும் வேகம்.

type mismatch error : விவர இன ஒத்திசையாப் பிழை : இரு மாறிகளைக் கையாளும் ஒரு கணக்கீட்டில், இரண்டு மாறிகளும் வெவ்வேறு விவர இனத்தைச் சார்ந்திருந்தால் வரும் பிழை.

typeover : மேல் அழுத்து; மேல் அச்சிடல் : அச்சிடப்பட்ட பிரதியில் தடிமனான எழுத்து வரும் வகையில் ஒரு எழுத்தை ஒரு முறைக்கு மேல் அடிக்கும் அழுத்தும் அச்சுப் பொறியின் திறன்.

typeover mode : மேல் அச்சிடல் முறை : சொல் செயலாக்கம் மற்றும் தகவல் நுழைவில், விசைப்பலகை மூலம் தட்டச்சு செய்யப்படும் விசைகள் ஒன்றின் மேலே எழுதினாலோ அல்லது அப்போதைய சுட்டி இருப்பிடத்தினை மாற்றினாலோ இந்நிலை ஏற்படும்.

typesetting : அச்சுக்கோப்பு : தொழில் முறை தர எழுத்துகளை உற்பத்தி செய்யும் ஒளிப்பட மின் செயல் முறை. அச்சுக் கோப்பில் உள்ள

அங்குலத்திற்கு 1200-2400 எண்கள் உள்ள திரை இருக்கும். இதன் மூலம் ஏறக்குறைய முழுமையான எழுத்துகள் உருவாகும்.

typesize : எழுத்தச்சு அளவு; அச்சளவு: எழுத்தச்சு மற்றும் எழுத்தச்சின் அளவு புள்ளிகள் என்ற வகையில் அளக்கப்படுகிறது. ஒரு புள்ளி என்பது ஒரு அங்குலத்தின் 72இல் ஒரு பங்கு. அச்சு1இன் ஏறக்குறைந்த அளவாக புள்ளிகள் தரப்படுகின்றன.

typewriter : தட்டச்சுப் பொறி : கணினியுடன் இணைக்கப்பட்டு தகவல் தொடர்புக்காகப் பயன்படுத்தப் படும் திறனுள்ள உள்ளீட்டு/வெளியீட்டுச் சாதனம்.

T2L : டி2எல் : TTL என்பதற்கு மாற்றுப் பெயர்.

U

UA : யுஏ : எண்ணிக்கை தரப்படாத ஏற்பு.

UAE : யுஏஇ : Unintererruptible Application Error என்பதன் முதலெழுத்துக் குறும்பெயர். தடைவராத பயன் பாட்டுப்பிழை. விண்டோஸ் பதிப்பு 3.0 வில் உள்ள பயன்பாட்டு ஆணைத் தொடர்.

UART : யூஆர்ட் : Universal Asynchronous Receiver Transmitter என்பதன் குறும்பெயர்.

UCSD Pascal : யுசிஎஸ்டி பாஸ்கல் : சாண்டியாகோவில் உள்ள கலிஃ போர்னியா பல்கலைக்கழகம் உரு வாக்கிய பாஸ்கல் ஆணைத்தொடர் மொழியின் புகழ்பெற்ற பதிப்பு.

UCSD P-System : யுசிஎஸ்டி பி-அமைப்பு : சாண்டியாகோவின் கலி ஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் கென்னத் பவுல்ஸ் உருவாக்கிய ஆணைத்தொடர் உருவாக்கும் அமைப்பு. ஒரு செயல்பாட்டு அமைப்பு, சொல் தொகுப்பி மற்றும் ஃபோர்ட்ரான், மைக்ரோ சாஃப்ட் பேசிக் தொகுப்பிகள் ஆகியவை இதில் அடங்கும். 'P' என்பது pseudo computers என்னும் போலி கணினிகள் என்பதைக் குறிக்கும். இந்த அமைப்பின் தொகுப்பிகள் சரியான பி-குறியீட்டை உருவாக்கு கின்றன. இக்குறியீடு போலி கணினி களில் இயங்கக்கூடிய பி-அமைப் பில் ஓடும் கணினிகளுக்கு குறைந்த மொழிபெயர்ப்பு வசதி அளித்தால் போதும். பி-குறியீடு கணினிக்காக குறியீடுகளை மாற்றித் தருகின்றன.

ULSI : யுஎல்எஸ்ஐ (மிகப் பெரும் ஒருங்கிணைப்பு) : Ultra Large Scale Integration என்பதன் குறும்பெயர். super large scale integration போன் றதே இதுவும்.

ultrafiche : மீ நுண்படலம் : நூறு மடங்கு அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் உருவம் குறைக்கப்பட்ட நுண் படலம்.

ultrasonic : கேளா ஒலி : மனிதர்கள் கேட்கும் அளவுக்கு அதாவது 20 கிலோ ஹெர்ட்சுக்கு- மேற்பட்டது.

ultraviolet light : புறஊதா ஒளி : பார்க் கக்கூடிய ஒளியைவிட சிறியதான - ஆனால் எக்ஸ் கதிர்களை விட நீண்ட கதிர்களைக் கொண்ட ஒளி. அழிக்கக் கூடிய ப்ராமில் (Prom) எழுதப்பட்ட தகவல்கள் அல்லது ஆணைகளை அழிக்கப்பயன்படுத்தப்படுவது. ஈப்ராமை அழிப்பதற்கு, ப்ராம் ஆணைத்தொடர்கள் மூலம் மீண்டும் ஆணைத்தொடர் அமைக்க முடியும்.

ultra-violet radiations : புற ஊதாக் கதிர் வீச்சு.

unary : ஒரும.

unary operation : ஒருறுப்புச் செயல்.

unary operator : ஒருறுப்பு இயக்கி : எதிர்மறை போன்ற ஒரே ஒரு கூறி னைக் கொண்டுள்ள கணித இயக்கி.

unattended operation : ஆளில்லாத இயக்கம் : இயக்குபவர் இல்லாமல் தகவல் அனுப்புதல்/பெறுதல்.

unbundled : கட்டி அனுப்பாத : வன் பொருள் உற்பத்தியாளர்கள் கணினி வன்பொருள் விற்கும்போது தராமல் தனியாக விற்கும் மென்பொருள், பயிற்சி மற்றும் பணிகள் பற்றியது.

unbundling : கட்டப்படாத : வன் பொருள், மென்பொருள் மற்றும் பிற தொடர்புள்ள பணிகளைத் தனியாக விலை குறித்தல்.

uncommitted logic array : உறுதிப் படாத தருக்க வரிசை : ஒரு வகையான

ஆணைத் தொடரமைக்கக் கூடிய தருக்கப் பகுதி.

unconditional branch : நிபந்தனை யற்ற கிளை : ஆணைத் தொடரமைத்தலில், GOTO, BRANCH, JUMP போன்ற ஆணை. இந்த ஆணை, கட்டுப்பாட்டினை ஆணைத் தொடரின் வேறு ஒரு பகுதிக்கு அனுப்புகிறது.

unconditional branching : நிபந்தனையிலா கிளைத்தல் : நிபந்தனையின்றிப் பிரிதல்.

unconditional transfer : நிபந்தனை யற்ற மாற்றல் : ஆணைத் தொடர் கட்டுப்பாட்டின்போது வழக்கமான வரிசையில் இயக்கப்படாமல், அதிலிருந்து பிரிந்து போகச் செய்யும் ஒரு ஆணை.

uncontrolled loop : கட்டுப்படுத்தப் படாத கண்ணி : தருக்க இறுதியை அடையாத ஆணைத் தொடர் கணினி.

undefined : வரையறுக்கப்படாத : ஆணைத்தொடரில் பயன்படுத்தப் படுவதற்கு முன்பு தகவல் வகை அல்லது குறிப்பிட்ட நீளம் தரப் படாத நிலையெண் அல்லது மாறியைக் குறிப்பிடல்.

undefined variable : வரையறுக்கப் படாத மாறி.

undelete : அன்டிலெட்; மீட்டெடு : நீக்கப்பட்ட கோப்புகளை மீண்டும் கொண்டு வரும் டாஸ் (DOS) கட்டளை கோப்புகளை நீக்கிய பிறகு அதன் மீது எழுதப்படாவிட்டால் மட்டுமே இது செயல்படும்.

underflow : கீழோட்டம் ; தேக்க இயலா கீழ்நிலை : 1. கணினியின் சேமிக்கும் திறனைவிடக் குறைவான எண்ணிக்கையில் கணக்கிட்டு முடிவுகளைக் கணினி தருவதால் ஏற்படும் சூழ்நிலை. 2. மிதக்கும் புள்ளிக் கணக்கீட்டில் மடங்கின் கூட்டலுடன் எஞ்சியதைச் சேர்த்தால் மைனஸ் எண்வரும் சூழ் நிலை.

underlining : அடிக் கோடிடல்.

underpunch : கீழ்த்துளை : துளையிட்ட அட்டை பத்தியில் மூல தரக் குறியீட்டுத் துளைக்குக் கீழே போடப்பட்ட இரண்டாவது துளை.

underscan : அண்டர்ஸ்கேன் :காட்சித் திரையில் உள்ள வழக்கமான செவ்வக வடிவ பார்க்கும் பகுதியில் உள்ள ஒரு பகுதி.

undo : முன்செயல் நீக்கு : சொல் செயலாக்கக் கட்டளை. முந்தைய கட்டளைகளை செயலற்றதாக ஆக்கி சொற்பகுதியை மீண்டும் முன்பிருந்தது போலவே மாற்றுவது.

unerase : மீட்டெடு : முன்பே அழிக்கப்பட்ட கோப்புகளை மீண்டும் கொண்டுவர உதவும் சில பயன்பாட்டு மென்பொருள் ஆணை. கோப்பை அழிப்பது என்பது கோப்பு ஒதுக்கும் பட்டியல் நுழைவினை மட்டுமே அழிக்கிறது. தகவல்கள் பொதுவாக நீக்கப்படுவதில்லை.

unformat : வடிவமைப்பை மாற்று : ஒரு டாஸ் கட்டளை. தவறுதலாக வடிவமைக்கப்பட்ட தகவல்களை வட்டிலிருந்து எடுப்பதற்கு உதவும்.

unformatted I/O : வடிவமைக்கப்படாத உ/வெ : அமைப்புக் கட்டுப்பாடு செய்யப்படாமல் தகவல்களைப் படித்தல்/எழுதல்.

unibus : ஒற்றைப்பாட்டை : அதிவேக தகவல் தொடர்பு பாட்டை அமைப்பு. மையச் செயலகத்தின் உள்நினைவகத்திற்கும் வெளிப்புறப் பகுதி

களுக்கும் இடையில் பங்கிட்டுக் கொள்வது.

unicorn : யுனிகார்ன் : வீட்டு நுண் கணினி, கல்வி மற்றும் வீட்டு கணிப்புக்கு மிகவும் புகழ்பெற்றது. 64கே நினைவகத்துடன் வரும் 65028 நுண்மி சார்ந்தது. பி.பி. அக்கரன் (Acron)உடன் ஏற்புடையது. ஐபிஎம் பிசி மிகவும் புகழ் பெறவும், விலைகள் குறையவும் யூனிகார்னும் தன் புகழை இழந்தது.

unidirectional : ஒரேதிசையிலான : ஒரு வழித்தடத்தில் தகவல்கள் ஒரே ஒரு திசையில் மட்டும் அனுப்புவது.

unidirectional printing : ஒரே திசையிலான அச்சிடல் : ஒரே திசையில் மட்டும் அச்சிடல். இரு திசையில் அச்சிடுவதற்குப்பதிலாக துல்லியமாக செங்குத்து அமைப்பில் அச்சிடுகிறது.

unify : யூனிஃபை : ஒரு பொது நோக்கடிபிஎம்எஸ் பயன்பாட்டுப் பணித் தொகுப்பு. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மிகச் சிறந்ததைத் தேர்ந்தெடுக்கும் உள்ளமைக்கப்பட்ட ஆப்டிமைசரை (optimizer)அணுக பல முறைகளை வழங்குகிறது.

unigraphics : யூனிகிராஃபிக்ஸ் : மைக்டொனால் டக்ளஸ் சிஏ/காட்/காம் அமைப்பு. விரிவான வடிவமைப்பு, வரைவு, பொறியியல் ஆய்வு மற்றும் எண் கட்டுப்பாடு, தகவல் உருவாக்கம் போன்ற பயன்பாடுகளின் அடிப்படையை உருவாக்குகிறது.

uninitialized : ஆரம்பிக்கப்படாத : ஒரு பெறுமிடம், சேமிப்பிடம், மாறி மற்றும் இவை போன்றவற்றின் ஆரம்ப மதிப்பு தருதல்.

union : ஒன்றல் : உறவுமுறை தகவல் தளத்தில், இரண்டு கோப்புகளை ஒன்று சேர்த்தல்.

uninterruptable power supply (UPS) : தடையில்லா மின் விநியோகம் (யூபிஎஸ்); தடை செய்யவியலா மின் சக்தி : இருட்டடிப்பு போன்ற சமயத்தில் கணினிக்கு மின்சாரம் தருவதற்காக அமைக்கப்பட்ட மின் கலத்தால் இயங்கும் சாதனம்.

unipolar : ஒரு துருவம் : ஒரு துருவம் மட்டும் கொண்டது.

unit : அலகு : சிறப்புப் பணி உள்ள எந்த ஒரு சாதனமும், கணித தருக்க அலகு, மையச் செயலக அலகு அல்லது காந்த நாடா அலகு.

unit position : புல நிலை; ஒன்றின் நிலை : எண் புலத்தில் வலது இறுதி நிலை.

unit record : பதிவேடு அலகு : தகவல்களால் குறியீடு செய்யப்பட்டு கணினி உள்ளீடாகப் பயன்படுத்தப்படும் துளையிட்ட அட்டை.

unit record system : அலகு பதிவு அமைப்பு : தானியங்கி கணினிமய அமைப்புக்கு மாறாக தொழில் நுட்பாளர்கள் இயக்கும் பிரிப்பிகள், அடுக்கிகள் போன்ற மின்னியந்திர செயலாக்க எந்திரங்களைப் பயன்படுத்தும் தகவல் செயலாக்க அமைப்பு. அலகு பதிவு அமைப்புகளெல்லாம் நவீன கணினிக் கருவிகளால் மாற்றப்பட்டுவிட்டன.

UNIVAC I : யூனிவாக் I: 1951இல் செய்து முடிக்கப்பட்ட வணிக வகையிலான முதல் மின்னணு எண்முறைக் கணினி. 1950ஆம் ஆண்டின் (அமெரிக்க) மக்கள் தொகைக் கணக்குத் தொடர்பான தகவல்கள் சிலவற்றைத் தொகுக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலகம் இதைப் பயன்படுத்தியது. இத்தகைய கணினிகள் 48 செய்யப்பட்டன.

universal asynchronous receiver/ transmitter : யுனிவர்சல் அசிங்க்ரனஸ் ரிசீவர்/டிரான்ஸ்மிட்டர் : தொடர் தகவல்களைப் பெற்று அவற்றை அனுப்புவதற்கான இணை வடிவமாக மாற்றும் ஒருங்கிணைந்த மின்சுற்றுச் சாதனம். இது தலைகீழாகவும் செய்யப்படும்.

universal indentifier : உலக அடையாளம் காட்டி : ஒருவரது அடையாளத்தை சோதித்தறிவதற்காக ஒரு நபருக்குத் தரப்படும் பல்லுரிமை தர எண்.

universal language : உலக மொழி : பல கணினிகளில் கிடைக்கக்கூடிய ஃபோர்ட்ரான், கோபால் மற்றும் பேசிக் போன்ற ஏதாவதொரு ஆணைத் தொடரமைக்கும் மொழி. பொது மொழி போன்றது.

Universal Product Code (UPC) : உலக உற்பத்திக் குறியீடு : பேரங்காடித் தொழிலில் உருவாக்கப்படும் கணினி படிக்கக் கூடிய பத்து இலக்க கணினிக் குறியீடு. பொருள் மேலுள்ள வில்லையின் மூலம் உற்பத்தியாளர்களையும், பொருள்களையும் அடையாளம் காண உதவுவது. 10 இலக்கு இலக்கப் பட்டையை அச்சிடுவதற்கான அச்சுப் பொறிகளையும், பேரங்காடியிலிருந்து வெளியேறும்போது குறியீடுகளை படிப்பதற்கான வருடி ஒளிச்சாதனங்களையும் பலதரப்பட்ட உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கிறார்கள். இதில் 5 இலக்கம் உற்பத்தியாளரை அடையாளம் காணவும், 5 இலக்கம் உற்பத்திக் குறியீட்டு எண்ணாகவும் செயல்படுகிறது.

UNIX : யூனிக்ஸ்: செயல்பாட்டு ஆணை; இயக்க அமைப்பு வகையில் ஒன்று : ஏடி&டி பெல் ஆய்வுக் கூடங்களில் உருவாக்கப்பட்ட செயல்பாட்டு அமைப்பு. கணினிகளுக்கு என்று உருவாக்கப்பட்ட இது, பின்னர் நுண்கணினிகளில் ஏற்கப்பட்டது.

unlighted dot : ஒளியூட்டாத புள்ளிக் குறி.

unload : இறக்கு; நீக்கு : ஒரு ஆணைத் தொடரை நினைவகத்திலிருந்து நீக்குவது. நாடா அல்லது வட்டினை அதன் இயக்கியிலிருந்து நீக்குவது.

unmark : அடையாளம் நீக்கல்: ஒரு சொற்பகுதியினை அதன் முக்கியத்துவத்திலிருந்து நீக்குதல், ஒரு பொருளை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குச் சேர்க்கப்பட்ட ஒன்றின் அடையாளத்தை நீக்குதல்.

unpack : பிரி; அவிழ் : இதற்கு முன்பு கட்டப்பட்ட தகவல்களின் சிறு அலகைத் தனித்தனியாகப் பிரிப்பது.

unpopulated board : பெருக்கப்படாத அட்டை : வாங்குபவரால் கொடுக்கப்படக்கூடிய மின்சுற்று அட்டை.

unset : தனியாக்கு : ஒரு துண்மியின் அல்லது துண்மிகளின் தொகுதியின் மதிப்பை இருமை '0' ஆக மாற்றுதல்.

unsigned : அடையாளமற்ற.

up : மேலே : இயங்கிக் கொண்டிருக்கின்ற கணினி அமைப்பின் நிலை.

up-and-running : மேலேற்றி ஓட்டுதல்; மேலேயும், ஓடுவதும் : சரியாக இயங்கும் ஒரு கணினியைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட காலம் வேலை செய்யாமல் இருந்து இப்போது நன்றாக இயங்குகிறது என்பதைக் குறிப்பிடுகிறது.

UPC : யுபிசி (பொது விளைபொருள் குறிமுறை) : Universal Product Code என்பதன் குறும்பெயர்.

update : புதுப்பி; நிகழ்நிலைப்படுத்து; திருத்து; புதுநிலை : தகவல்களை மாற்றியோ அல்லது நீக்கியோ தகவல் கோப்புகளை நடப்பில் உள்ளதாக ஆக்கல்.

upgrade : மேம்படுத்து : ஒரு கணினி அமைப்பு போன்றவற்றின் கணிப்புத் திறனை அதிகரிக்க அதை மாற்றி அமைப்பது.

uplink : மேலிணை : தரைநிலையத்திலிருந்து செயற்கைக்கோளுக்கான தகவல் தொடர்பு வழித்தடம்.

upload : மேலேற்று : ஒரு பயன்படுத்துபவரின் அமைப்பில் இருந்து தொலைவில் உள்ள கணினி அமைப்புக்குத் தகவல்களை மாற்றுவது.

upper case : பெரிய எழுத்து : தலைப்பெழுத்துகள் எல்லா ஒளிக்காட்சி முகப்புகளிலும் அதைப் பயன்படுத்தும் திறன் இருக்கும்.

upper memory area : நினைவக மேற்பகுதி : வழக்கமான நினைவகமான 640 கே.வுக்கு அருகில் உள்ள 384கே. முகவரியிடம் இதை மொத்த நினைவகத்தின் ஒரு பகுதியாகக் கொள்வதில்லை. ஏனென்றால், இப்பகுதி பயன்பாடுகள் தங்களது தகவலை சேமிக்கமுடியாது. இப் பகுதி காட்சித்திரை போன்ற கணினியின் வன்பொருளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. 386இன் மேம்பட்ட முறையில் விண்டோஸ் இப்பகுதியில் பயன்படுத்தப்படாத இடங்களை அணுக முடியும்.

upper memory block (UMB) : நினைவக மேல்கட்டம்(யுஎம்பி) : 80386 அல்லது சிறந்த அமைப்பின் கீழ் இருக்கும் 1 மீமிகு எட்டியலுக்கும் 640 கிலோ எட்டியலுக்கும் இடையில் உள்ள நினைவகக் கட்டம். சாதன இயக்கிகளும் டிஎஸ்ஆர்-களும் யுஎம்பி-யில் ஏற்றப்படலாம். ஏனென்றால், பயன்பாடுகளுக்குத் தேவையான வழக்கமான நினைவகத்தில் அதிக இடம் விட்டுவிட்டு அடிப்படை நினைவகத்தின் மதிப்பு மிக்க இடத்தினை இவை எடுத்துக் கொள்ளாமல் இருக்க இது உதவும்.

uptime : மேல்நேரம் : நிற்காமல் ஒரு கருவி எவ்வளவு நேரம் வேலை செய்கிறது என்பதைக் குறிப்பிடும் கால அளவு.

upward compatible : மேல் நோக்கிய ஏற்புடைமை : இதற்கு முந்தைய மாதிரிகள் செய்யக்கூடிய அனைத்தையும் மேலும் கூடுதல் பணிகளைச் செய்யக்கூடிய கணினி அமைப்பு அல்லது வெளிப்புறச் சாதனம் என்பதைக் குறிப்பிடும் சொல்தொடர்.

usability : பயன்படுத்தக்கூடிய தன்மை: ஒரு கணினி அமைப்பைப் பயன்படுத்துபவர் அதன் தகுதி பற்றி மதிப்பீடு செய்தல்.

use : பயன் : தகவல்களை அணுகுவதற்கு தகவல் தளங்களைத் திறக்க டிபேஸ் III பிளஸ் மற்றும் ஃபாக்ஸ் பேஸ் போன்ற மொழிகளில் பயன்படுத்தப்படும் ஒரு கட்டளை. திறந்த தகவல், பயன்பாட்டில் உள்ளதாகக் கருதப்படும்.

user : பயனாளர் : 1. சிக்கல் தீர்த்தல் அல்லது தகவல் கையாளலுக்கு கணினியைப் பயன்படுத்துபவர் அல்லது சொந்தமாக வைத்திருப்பவர். 2. கணினி அமைப்பின் பணிகள் தேவைப்படுபவர்.

user-defined function : பயனாளர் வரையறுக்கும் பணி ; பயனாளர் வரையறைச் சார்பலன் : முன்வரையறை பணியைச் செய்வதற்கான ஆணைத்தொடரின் பகுதி அல்லது

கூறு ஆக அமையும் ஒரு தொகுதி அல்லது குழு ஆணைகள்.

user defined key : பயனாளர் வரையறுக்கும் விசை : கணினி விசைப் பலகையில் உள்ள ஒருவிசை. அதன் பணி முன்பே வரையறுக்கப்படுகிறது அல்லது கணினி இயங்கும் போது ஆணைத்தொடர் மூலம் மாற்றப்படுவது. அந்த விசையை அழுத்தும்போது குறிப்பிட்ட பணி செய்யப்படும்.

user-friendly : பயனாளர் தோழமையான : எளிதாகப் பயன்படுத்துவதற்கேற்ப வடிவமைக்கப்பட்ட மென்பொருள்/வன்பொருள் குறித்துப் பயன்படுத்தப்படும் சொல். சிக்கலான நடைமுறைகளைப் பயனாளர் நினைவு வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. பட்டறிவு இல்லாதவர்களும் பயன்படுத்த மிக எளிது.

user group : பயனாளர் குழு : ஒரு கணினி அல்லது ஒரு உற்பத்தியாளரின் ஒருவகைக் கணினிகளை பயன்படுத்தி ஆணைத்தொடர்களை அமைப்பவர்கள் தாங்கள் பெற்ற அறிவைப் பங்குகொள்ள அமைத்துக் கொண்ட குழு. தகவல் பரிமாற்றம், ஆணைத்தொடர்கள் மற்றும் வணிகக் கருவிகளைப் பங்கிடல், கணினியின் வன்பொருள், மென்பொருள் மற்றும் செயல்பாடுகளைக் குறித்து ஆலோசனையைத் தருதல்/பெறுதல் ஆகியவற்றுக்காக உருவாக்கப்பட்டது. ஒருவர் வாங்க விரும்பும் அல்லது பயன்படுத்த விரும்பும் ஒரு பொருள் பற்றி அதைப் பயன்படுத்தியவரிடம் பேசித் தெரிந்து கொள்ளலாம். செய்தி அறிக்கைகளும் பயனுள்ள தகவல்களைத் தருகின்றன.

user interface : பயனாளர் இடைமுகம்; பயனாளர் இடைப்பாடு: பயனாளர் கணினியுடன் சேர்ந்து செயல்பட உதவும் பட்டியல்கள், திரை வடிவமைப்பு, விசைப்பலகை கட்டளைகள், கட்டளைமொழி மற்றும் உதவித் திரைகள் போன்றவை. சுட்டி மற்றும் தொடுதிரை போன்றவையும் இதில் சேரும்.

user interface design : பயனாளர் இடைமுக வடிவமைப்பு : உள்ளீடு/வெளியீடு முறைகள் மற்றும் மனிதர் படிக்கக்கூடியவற்றுக்கும் எந்திரம் படிக்கக்கூடிய படிவங்களுக்கும் இடையிலானவை உள்ளிட்ட பயனாளர்களுக்கும், கணினி அமைப்புகளுக்கும் இடையிலான இடைச் செயல்களும் வடிவமைப்பும்.

user-defined characters : பயனாளர்-வரையறுக்கும் எழுத்துகள்: பயனாளரால் வரையறுக்கப்பட்டு சேமிக்கப்படும் எழுத்துகள்.

user-friendly software : பயனாளர் - தோழமை மென்பொருள் : அளவான கணினி பின்னணி கொண்டவர்களும் கற்பதற்கும், பயன்படுத்துவதற்கும் எளிதாக உள்ள ஆணைத் தொடர் மற்றும் அமைப்புகளைக் குறிப்பிட இத் தொடர் பயன்படுத்தப்படுகிறது.

user profile : பயனாளர் குறிப்பு ; பயனாளர் விவரம் : ஒரு பாதுகாப்பு அமைப்பின் பகுதியாகப் பயன்படுத்தப்படும் தகவல். சான்றாக, பயனாளரின் வேலை, அறிவுப் பகுதிகளின் பணி, அணுகு சலுகைகள் மற்றும் மேற்பார்வையாளர் ஆகியவற்றைக் கூறலாம்.

user programms : பயனாளர் செயல்முறை.

user terminal : பயனாளர் முனையம்.

user's manual : பயனாளரின் கையேடு: வன்பொருள் சாதனம், மென்

பொருள் உருவாக்கம் அல்லது ஒரு அமைப்பு ஆகியவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதனை விளக்கும் ஆவணம்.

utility : பயன்பாடு ; பயன்பாட்டு ஆணைத்தொடர் : ஒரு பயனாளர் பிற ஆணைத் தொடர்கள், ஆணைத் தொடர் மொழிகள், ஆணைத் தொடர் செயல்பாட்டு அமைப்புகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றை ஒட்ட, மேம்படுத்த, உருவாக்க அல்லது பகுத்தாய உதவும் ஆணைத் தொடர்.

utility function : பயன்பாட்டுப் பணி வட்டிலிருந்து நாடாவுக்குத் தகவல்களை நகலெடுத்தல் அல்லது கோப்புகளை வகைப்படுத்தல் அல்லது கலத்தல் போன்ற பணிகளைச் செய்யும் பயன்பாட்டு ஆணைத் தொடரின் பணி.

uiiity programms : பயன்பாட்டு ஆணைத்தொடர்கள் ; பயனீட்டுச் செயல்பாட்டு முறைகள் ; பயனீட்டுச் செயல் முறைகள் : ஒரு பட்டியல் ஊடகத்திலிருந்து வேறு ஒன்றுக்கு (வட்டிலிருந்து நாடா) தகவல்களை மாற்றுதல், எழுத்து மாற்றல் போன்ற பொதுவாகத் தேவைப்படும் பணிகளை வழங்கும் கணினி ஆணைத் தொடர்கள். பெரிய கணினி அமைப்புகளை விற்பவர்கள் அவற்றுடன் பலதரப்பட்ட பயன்பாடுகள் மற்றும் பயனாளர்களுக்குப் பயன் படும் பயன்பாடுகளையும் சேர்த்தே விற்பார்கள். நினைவகத் திணிப்பு ஆணைத் தொடர்கள், ஆணைத் தொடர் பிழை நீக்கும் உதவிகள், கோப்பு கையாளும் ஆணைத் தொடர்கள், கணித வாலாயங்கள், வகைப்படுத்தும் ஆணைத்தொடர்கள், சொல்தொகுதி தொகுப்பிகள் ஆகியவற்றை சான்றாகக் கூறலாம்.

utility routine : பயன்பாட்டு வாலாயம்: வகைப்படுத்தல், கலத்தல் போன்ற கணினி அமைப்பின் இயக்கத்திற்கு அடிக்கடி தேவைப்படுகின்ற செயல் முறைகளைச் செய்யப் பயன்படும் மென்பொருள்.

utilization statistics : பயன்பாட்டுப் புள்ளிவிவரங்கள் : காலத்தை ஒட்டிய கணினியின் செயல்பாடு பற்றிய அளவீடுகள்.

V

V : வோல்ட் : *மின்கலகுக் கூறு.*

VAB : விஏபி : குரல் மறுமொழி வங்கி: *'குரல் மறுமொழி வங்கி' என்று பொருள்படும்* "Voice Answer Bank" *என்பதன் தலைப்பெழுத்துசொல். இது ஒரு தொலைபேசி பிணையத்துடன் ஒரு கணினிப் பொறியமைவை பிணைக்கின்ற ஓர் ஒலி மறுமொழிச் சாதனம். இது தொலைபேசி நாடா முனையங்களிலிருந்து வரும் வினாக்களுக்குக் குரல்மூலம் விடையளிக்கிறது.*

vaccine : தடுப்பூசி : தடுப்பு: நோய்த் தடுப்பி : *ஒரு கணினி அமைப்பு அல்லது தகவல் வட்டுகளில் உள்ள நச்சு நிரல் (வைரஸ்)களை நீக்கப் பயன்படும் மென்பொருள்.*

vaccum chamber : வெற்றிட அறை.

vacuum tube : வெற்றிடக் குழாய் ; வெற்றிடக் குழல் : *மின்னோட்டம் பாய்வதைக் கட்டுப்படுத்துவதற்கான சாதனம்.*

வெற்றிடக் குழல்

மின் பெருக்கி கண்டுபிடிக்கப்படுவதற்குமுன்பு கணினிகளில் காணப்பட்ட தலையாய மின்னியல் சாதனம். வெற்றிடக் குழாயைப் பயன்படுத்தும் கணினிகள், முதல் தலைமுறைக் கணினிகள் எனப்படும்.

VAL : விஏஎல் : எந்திரன் இயக்கு மொழி : "Vicarm Arm Language" *என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம். இது, எந்திரமனிதர்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு கணினி மொழி.*

valid octal numbers : முறைப்படியான எட்டிலக்க எண்கள்

validation : செல்லுபடியாக்கம்; செல்லுபடி சோதனை; ஏற்புடைத் தாக்கல் : *உருவமைவு (எண் தோரணிகள், எழுத்திடைவெளி, எழுத்துகள்), வீச்செல்லைகள் (மேல் கீழ் மதிப்பளவு வரம்புகள்), சரிபார்க்கும் எண், ஒரு தலையாய கோப்பிலுள்ள சரிநிகர்ப்பதிவுகள் போன்ற சில வரிகளில் துல்லியத்திற்கான தகவல் ஆய்வு.*

value : மதிப்பளவு; மதிப்பு; மதிப்பீடு: *ஒரு கணினியின் நினைவகத்தில் சேமித்துவைக்கப்பட்டுள்ள நிலை எண் அல்லது எண்ணளவு.*

value added network : மதிப்புக் கூட்டிய பிணையம் : *ஒரு பொது ஊர்தியிலிருந்து செய்தித்தொடர்புக் கம்பிகளைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, அதில் மேம்பாடுகளைச் சேர்த்து அவற்றை மேம்படுத்துகிற பொறியமைவு. இது பிழை கண்டுபிடித்தல், விரைவான மறுமொழி நேரம் போன்றவற்றை எடுத்துக் கொண்டு, பின்னர் அவற்றை மற்றொரு தரப்புக்குக் குத்தகைக்கு விடுகிறது.*

value added service : மதிப்புக்கூட்டிய சேவை : தகவல் தொடர்புத் துறையில் பயன்படுத்தப்படும் ஒரு சொல். சாதாரணமாக அமைப்பில் அதற்கு முன்பு வழங்கப்பட்டதைவிட கூடுதலாக தகவல் தொடர்பு இணைப்பில் வழங்கப்படும் சேவைகள் அல்லது ஆரம்பங்களுக்கு இப்பெயர் வழங்கப்படுகிறது. பொது அமைப்பும் இதை வழங்கலாம் அல்லது பொது அமைப்பின் துணை ஒப்பந்தக்காரராக வேறொரு நிறுவனமும் இதை வழங்கலாம்.

vapourware : ஆவிப்பொருள் : ஒரு உற்பத்தியாளர் அல்லது உருவாக்குபவரிடமிருந்து நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும் வன்பொருள் அல்லது மென்பொருளைக் குறிப்பிடும் சொல். அது இருக்கிறது என்றே எவரும் நம்ப மாட்டார்கள் என்பதால் அதை ஆவி என்று கூறப்படுகிறது.

variable : மாறி; மாறியல்; மதிப்புரு ; மாறுவகை : ஒரு சேமிப்பக அமைவிடத்திற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள ஒரு குறியீட்டுப் பெயர். இது நிலை எண் என்பதற்கு எதிரானது. இதனை தகவல் வகை என்றும் கூறுவர்.

variable length record : மாறு நீளப் பதிவேடு : ஒரு கோப்பிலுள்ள பதிவேடு. இதிலுள்ள பதிவேடுகள் நீளத்தில் ஒரே மாதிரியாக இரா. இது நிலை நீட்சிப் பதிவேடு என்பதிலிருந்து மாறுபட்டது.

variable length field : மாறு நீளப் புலம் : பல்வேறு நீளங்களுடைய மதிப்புகளைக் கொண்டிருக்கும் புலம்.

variable name : மாறியின் பெயர் : ஒரு செயல்முறையில் ஒரு தகவல் மதிப்பளவை அடையாளங் காட்டும் எழுத்தெண் சொல். இது, மதிப்பளவுகளின் தொகுதியில் எந்த மதிப்பையும் எடுத்துக் கொள்ளலாம்.

variable word length : மாறியல் சொல் நீளம் : இது ஓர் எந்திரச் சொல் அல்லது இயக்கப்படு எண் தொடர் பானது. இதில், துணுக்குகள், எட்டியல்கள், எழுத்துகள் ஆகிய வற்றில் மாறியல் எண்ணிக்கை அடங்கியிருக்கும். இது நிலைச் சொல்நீட்சி என்பதிலிருந்து வேறுபட்டது.

variable register : மாறிப் பதிவகம்: ஒரு மாறியின் மதிப்பை இருத்தி வைக்கும் பதிவகம்.

variation : மாறுபாடு

varname (Variable name) : மாறிப் பெயர் : variable name என்பதன் குறும்பெயர். ஒரு மாறியின் பெயரைக் குறிப்பிடும் சுருக்கம்.

VAX : வாக்ஸ் : பெரிய நுண்கணினிப் பொறியமைவுகளுக்கான பெயர். இதனை எண்மானச் சாதனக் கழகம் தயாரிக்கிறது.

VCR : விசிஆர் : Video Cassettee Recorder என்பதன் குறும்பெயர். ஒளிக் காட்சி நாடாவில் பதிவு செய்து, திரும்ப இயக்கும் எந்திரம். விசிஆர்கள், அடிப்படையில் அனலாக் பதிவு எந்திரமாக இருந்தாலும் ஏற்பிகளின் மூலம் கணினிக்கு உதவ எண் தகவல்களை அதில் பதிவு செய்ய முடியும்.

VDE : விடிஈ : 'Video Display Editor' என்பதன் குறும்பெயர். எரிக் மேயர் எழுதிய வேர்டுஸ்டார், வேர்டு பர்ஃபெக்ட் ஏற்பு சேர் பொருள் சொல் செயலகம்.

VDI : விடிஐ : 'Virtual Device Interface என்பதன் குறும்பெயர். சாதன

இயக்கிகளை உருவாக்கும் அன்சி (ANSI) தர நிருணய படிவம்.

VDL : விடிஎல் (வியன்னா வரையறை மொழி) : வியன்னா வரையறை மொழி எனப்பொருள்படும் "Vienna Definition Language" என்பதன் தலைப்பெழுத்துச் சொல். இது சிலசமயம் செயல்முறைப்படுத்தும் மொழிகளின் சொற்றொடரியலை வரையறுக்கப் பயன்படுகிறது.

VDT : வி.டி.டி ; ஒளித்தோற்றக் காட்சி முனையம் : 'ஒளித் தோற்றக் காட்சி முனையம்' எனப் பொருள்படும் "Video Display Terminal" என்பதன் தலைப்பெழுத்துச்சுருக்கம். இது ஒரு காட்சித் திரையும், ஓர் உட்பாட்டு விசைப்பலகையும் கொண்டுள்ள ஓர் உட்பாட்டு / வெளிப்பாட்டுச் சாதனம். CRT முனையம் என்பதும் இதுவும் ஒன்றே.

VDU : விடியூ (காட்சி அலகு) : 'காட்சி அலகு' எனப் பொருள்படும் 'Virsual Display Unit' என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம். இது, சில வகைத் திரைகளில் தகவல்களைக் காட்டும் ஒருபுறநிலைச் சாதனம்.

vector : ஏவரை ; நெறியம் ; ஒரு அளவுச் சரம் : 1. ஒரே பத்தி அல்லது வரிசை போன்ற ஒரே கோட்டில் வெளிப்படுத்தப்படுகிற எண்கள் அனைத்தின் பட்டியல். 2. வைப்பு நிலையறுதியின்றி, அளவறுதியும் திசையறுதியும் உடைய அளவுரு. 3. கணினியியலில், தனியொரு குறியீட்டின் மூலம் எந்த இனத்தின் அமைவிடத்தையும் அனுமதிக்கிற ஒரு தகவல் கட்டமைவு. 4. வரைகலைத் தகவல்களைக் கோடுகளாக வரைந்து காட்டக்கூடிய எதிர்மின் கதிர்க் குழாய். 5. வரைவானில், இரு புள்ளிகளை இணைக்கும் ஒரு கோட்டின் கூறு.

vector display : நெறியக் காட்சி ; ஏவரைக் காட்சி : திரையில் உருவங்களை வரைவதற்காக எலெக்ட்ரான் கற்றையைக் குறிப்பின்றி நகர்த்துகிற எதிர்மின் கதிர்க்குழாய்.

vector font : நெறிய அச்செழுத்து : கோடுகளால் இணைக்கப்பட்ட புள்ளிகளின் வரிசையினால் உருவாக்கப்படும் அச்செழுத்து. இதைப் பல்வேறு அளவுகளில் கூட்டி, குறைக்கலாம். 'plotter fonts' என்றும் அழைக்கப்படும்.

vector graphics : நெறிய வரைகலை: துண்மி விவரணைப் புள்ளிகளாக இல்லாமல் சமன்பாடு வரிசைகளாக இவை வரையப்படும். துண்மி விவரணைகள் போல் அல்லாது தர இழப்பு இல்லாமல் அவற்றைப் பெரிதாக்கலாம்.

vector pair : நெறிய இணை ; ஏவரை இணை: ஓர் ஏவரையின் எதிர் முனைகளாக அமைந்துள்ள தகவல் புள்ளிகள்.

vector processing : சரச் செயலகம்.

vector processor : நெறியச் செயலகம் : ஒரே நேரத்தில் நெறியங்களின் (ஒரு பருமாண வரிசைகள்) மீது பல கணக்கீடுகளைச் செய்கின்ற ஆணைகளுடன் உருவாக்கப்பட்ட கணினி.

vectra : வெக்ட்ரா : எச்.பி. நிறுவனத்தின் பி.சி.. வரிசை. தாங்குவனவாகவும், நம்பகத்தன்மையுடையனவாகவும் வெக்டர் இருப்பதைக் காணலாம்.

vendee: வாங்குநர்: வன்பொருள் அல்லது மென்பொருள் பொறியமை வினை வாங்குகிற ஆள் அல்லது வணிக நிறுவனம்.

vendor : விற்குநர் : 1. கணினிப் புறநிலைச் சாதனங்கள், நேரப் பகிர்வுச்

சேவை, கணினிச் சேவைகள் ஆகிய வற்றை விற்பனை செய்கிற நிறுமம் அல்லது வணிக நிறுவனம். 2. ஒரு வாங்குநர் பொருள்களை வாங்கு வதற்கான ஒரு வழங்குநர்.

venn diagram : வென் வரைபடம் : தருக்க முறைத் தொடர்களின் வரை கலை உருவங்களை அளிப்பதற்காக வட்டங்களையும் நீள் வட்டங்களை யும் பயன்படுத்துகிற வரைபடம்.

ventura publisher : வெஞ்சுரா பதிப் பாளர்: பி.சி. மற்றும் மெக்கின் டோஷ்களுக்கான டி.டி.பி ஆணைத் தொடர். ஜெராக்ஸ் நிறுவனமான வெஞ்சுரா மென்பொருள் நிறுவனம் உருவாக்கியது. பெரிய ஆவணங் களுக்கு முழு அளவு பக்க அமைப்பு தருகிறது. மற்ற வரைகலை சொல் செயலாக்க ஆணைத் தொடர்களில் உருவாக்கப்பட்ட தகவல்களை ஏற்பது டாஸ் பதிப்பில் ஜெம் (GEM) இடை முகத்தில் வெஞ்சுரா வருகிறது.

verifier : சரிபார்ப்புச் சாதனம்; சரி பார்ப்பி: விரற்கட்டைத் துளையிடு வதில் ஏற்படும் தவறுகளைக் கண்டு பிடிக்கப் பயன்படும் சாதனம்.

verify : சரிபார் : 1. ஒரு தகவல் செய் முறைபடுத்தும் செயற்பாடு துல்லிய மாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று கண்டுபிடித்தல். 2. தகவலின் நேர்மைத் தகவினைச் சரிபார்த்தல்.

version : பதிப்பு : ஒரு குறிப்பிட்ட வன்பொருள் உருமாதிரியின் ஒரு குறிப்பிட்ட மென்பொருள் தயா ரிப்பு. இரு பொதுவாக ஏறுமுகமாக எண்ணிடப்படும். எடுத்துக்காட்டு: DOS 3.3 என்பது ஒரு வட்டுச் செயற் பாட்டுப் பொறியமைவின் பிந்திய பதிப்பு.

version control : பதிப்புக் கட்டுப் பாடு : பெரிய மென்பொருள் திட்டத் தில் மூலக்குறியீட்டை மேலாண்மை செய்தல். பதிப்புக் கட்டுப்பாடு மென்பொருள் தகவல் தளத்தை உரு வாக்கி அது தொடர்பான ஆணைத் தொடராளர்கள் உருவாக்கும் ஆணைத்தொடரின் மாற்றங்களை கண்காணிக்க உதவுகிறது.

version number : பதிப்பு எண் : ஒரு மென் பொருளின் வெளியீட்டுக்கான அடையாளம். 2.2 மற்றும் 2.3-க்கும் இடையிலான வேறுபாடு மிக அதிக மாகவும் இருக்கலாம். ஏனென்றால் புதிய வெளியீடுகள் புதிய தன்மை களை மட்டும் சேர்க்கவில்லை. தொல்லை தரும் பிழைகளையும் நீக்குகிறது. 3.1 அல்லது 3.11 என்பது முந்தைய பதிப்பில் உள்ள பிழை களை மட்டும் நீக்கியது. ஆனால் 3.1 மற்றும் 3.2 என்பதில் முந்தைய பொருளை மேம்படுத்தியதாகும்.

verso : வெர்சோ; இடப்பக்கம் : இடது கைப் பக்கம்.

vertex : கோண முனை : 1. ஒரு முக்கோணத்தின் இருபக்கங்களும் இணையும் புள்ளி. 2. ஒரு வரைபடக் கோட்டில் உச்ச அல்லது நீசப் புள்ளி.

vertical justification : செங்குத்தான வரியமைப்பு : மேலிருந்து கீழ்வரையி லான ஒரு முழுப் பக்கத்தின் பத்தி களில் இடத்தைச் சேர்ப்பது அல்லது நீக்குவது பற்றிய செயல்முறை.

vertical recording : செங்குத்துப் பதிவு : ஒரு வட்டில் தகவல்களின் காந்தத் துணுக்குகளை, அருகருகே அல்லாமல் செங்குத்தாக அமைக்கும் தொழில்நுட்பம். இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு வட்டில் பல கோடி தகவல் எட்டியல் களைச் சேமிக்கலாம்.

vertical redundancy check : செங்குத்தான தேவையற்றவை சோதனை : தகவல் தொடர்புகளில் உள்ள பிழை நீக்கும் நுட்பம். இதில் ஒரு தகவல் கட்டத்தில் உள்ள ஒவ்வொரு துண்மிகளின் வரிசையிலும் சோதனை கூடுதல் எழுத்து சேர்க்கப்படும். VRC என்றும் அழைக்கப்படும்.

vertical resolution : செங்குத்து பிரிதிறன் : கோடுகளின் எண் (மேட்ரிச்சில் உள்ள வரிசை).

vertical scan frequency : செங்குத்து வருடி (நுண்ணாய்வு) அலைவெண் : ஒரு நொடியில் முழு காட்சித் திரையும் எத்தனை தடவைகள் புதுப்பிக்கப்பட்டு அல்லது மாற்றி வரையப்படுகிறது என்பது. ஹெர்ட்ஸ் முறையில் அளக்கப்படுகிறது. காட்சி அமைப்புகள் 45 முதல் 200 ஹெர்ட்ஸ் வரையில் உள்ளன. சான்றாக அமெரிக்காவில் வி.ஜி.ஏ. என்பது 56 முதல் 60 ஹெர்ட்ஸ். ஐரோப்பாவில் 70 ஹெர்ட்சுக்கும் மேலே. டி.வி. யானது ஒரு நொடிக்கு 60 அரை படங்களாக புதுப்பிக்கப்படுகிறது. இவை ஒன்று கலந்து 30 முழுப்படம்/ நொடிக்கு வருகிறது.

vertical scan rate : செங்குத்து வருடி விகிதம்: ஒரு நொடியில் சிஆர்டி மின்னணு ஒளிக்கற்றையானது எத்தனை முறை சிஆர்டி திரையை முழுமையாக நிரப்புகிறது என்பது. காண முடியாத, மறுக்கத்தக்க மின் வீச்சுகளைத் தவிர்க்க வேண்டுமானால் இது 50 ஹெர்ட்சுகளை விட அதிகமாக இருக்க வேண்டும்.

vertical scrolling : செங்குத்துச் சுருளாக்கம் : ஒரு பக்கத்தின் வழியே தகவல்களை மேலும் கீழும் நகர்த்துவதற்கான அல்லது ஒளிப்பேழைத் திரையில் காட்டுவதற்கான ஒரு பொறியமைவின் திறன்.

very high speed integrated circuit programme : அதிவேக ஒருங்கிணை; மின்சுற்று செயல்முறை.

very large scale integration (VLSI) : மிகப் பேரளவு ஒருங்கிணைப்பு : மிகப் பெருமளவு (1000 முதல் 10,00,000 வரை) அமைப்பிகளை ஒரே சிப்புவில் வைப்பதற்கான செய்முறை. பார்க்க : நான்காம் தலைமுறைக் கணினி; சிற்றளவு ஒருங்கிணைப்பு; நடுத்தர அளவு ஒருங்கிணைப்பு; பேரளவு ஒருங்கிணைப்பு; மீமிகைப் பேரளவு ஒருங்கிணைப்பு.

vesicular film : வெசிக்குலர் ஃபிலிம்.

vetting : செப்பமாக்கல்; தணிக்கை செய்தல் : பாதுகாப்பு அபாயங்களைக் குறைப்பதற்காக ஓர் ஆளின் பின்னணி பற்றி ஆராய்ந்தறியும் செய்முறை.

VHSIC-programme : விஎச்எஸ்ஐசி-செயல்முறை : அதிவேக ஒருங்கிணைப்பு மின் சுற்றுவழிச் செயல்முறை. இது அரசு-தனியார் தொழில் கூட்டு முயற்சி. எதிர்கால ஆயுதங்களுக்கும் சாதனங்களுக்கும் பயன்படுத்த முற்போக்கான ஒருங்கிணைந்த மின் சுற்றுவழிகளை இராணுவத்துறைக்கு வழங்குவது இதன் நோக்கம்.

VLDB : விஎல்டிபி : 'மிகப் பெரிய தகவல் தளம்' என்று பொருள்படும் "Very Large DataBase" என்பதன் தலைப்பெழுத்துச் சொல். இது பன்முகக் கணினிகளிடையே பல்வேறு தகவல்தள நிருவாகப் பொறியமைவுகளுடன் பகிர்ந்தளிக்கப்படும் ஒரு தகவல் தளம்.

video : ஒளிக்காட்சி; ஒளித்தோற்றம்; நிகழ்படம்; ஒளி வடிவம் : குறிப்பாக ஒளிப்பேழைக் காட்சி முனையத்திலுள்ள காட்சி.

video adaptor : ஒளிக்காட்சி ஏற்பி : ஒரு முகப்பின் கட்டுப்பாட்டு மின் சுற்று. காட்சிக்கான சமிக்ஞைகளை அனுப்புவது இதுவே.

video bandwidth : ஒளிக்காட்சிக் கற்றை அகலம்.

video board : ஒளிக்காட்சிப் பலகை.

video buffer : ஒளிக்காட்சி இடைநிலை நினைவகம் : திரையில் காட்டப்படும் தகவலை வைத்துக்கொள்ள நினை வகத்தில் ஒதுக்கப்பட்ட பகுதி. சான் றாக, நிற வரைகலை அட்டை 16 கி. நினைவகத்தைப் பயன்படுத்துகிறது. ஒளிக்காட்சி மின்சுற்று இடைநிலை நினைவகத்தின் உள்ளடக்கங்களைப் பிரித்து திரையில் காட்டுகிறது.

video camera : நிகழ்படக்கருவி; ஒளிக் காட்சி படப்பிடிப்புக் கருவி : தொடர்ச் சியான படங்களை எடுத்துக்காட்டு வதற்கோ அல்லது பதிவு செய் வதற்கோ சமிக்ஞைகளை உருவாக் கும் படப்பிடிப்புக் கருவி, உருவங் களை தொடரான கோடுகளாக பிரித்து அது படங்களை பிடிக்கிறது. ஒவ்வொரு வரியும் ஒரு முறை நுண்ணாய்வு (ஸ்கேன்) செய்யப் பட்டு சிவப்பு, பச்சை மற்றும் நீல நிறங்களைக் கோடுகளிலிருந்து வடி கட்டி மாறும் சமிக்ஞைகளாக அனுப் பப்படுகிறது. பெரும்பாலான ஒளிக் காட்சி படப்பிடிப்புக் கருவிகள் ஒப்புமை (அனலாக்) தான். ஆனால் இலக்க முறை படப்பிடிப்புக் கருவி களும் உள்ளன.

video card : ஒளிக்காட்சி அட்டை : ஒரு ஒளித்திரைக்கான கட்டுப்பாட்டு இடைமுகம்.

video code : ஒளிக்காட்சிக் குறியீடு : என்.டி.எஸ்.சி ஒளிக்காட்சியை இலக்கக் முறை குறியீடாகவும், தலை கீழாகவும் மாற்றும் மின்சுற்று. சுருக்க நுட்பத்தை உள்ளடக்கி தகவல்களைக் குறைக்கிறது. முழு இயக்க ஒளிக்காட்சியாக இருக்க லாம் அல்லது இல்லாமற் போக லாம்.

video controller : ஒளிக்காட்சிக் கட்டுப்படுத்தி : சில வகையான ஒளிக் காட்சிப் பணிகளைக் கட்டுப்படுத் தும் சாதனம்.

video cassette : ஒளிக்காட்சிப் பேழை.

video digitizer : ஒளிக்காட்சி இலக்க மாக்கி: ஓர் ஒளிப்பேழை ஒளிப்பதி வுக் கருவியிலிருந்து வரும் சைகை யினை இலக்க வடிவமாக மாற்றி, கணினிச் சேமிப்பகத்தில் சேமித்து வைக்கிற உட்பாட்டுச் சாதனம். இந்தச் சைகையினை கணினி மூலம் பகுப்பாய்வு செய்யலாம்; மாற்ற மைவு செய்யலாம்.

video disk : ஒளிக்காட்சி வட்டு : ஓர் ஒளிப்படப் பதிவை ஒத்திருக்கிற பிளாஸ்டிக் தகடு. இது, காட்சித் திரையில் தோன்றுகிற காட்சிப் பொருள்களை சேமித்து வைப்பதற் குக் குறைந்த செறிவுள்ள லேசர் கற்றைகளைப் பயன்படுத்துகிறது. ஒரு கணினி மூலம் பல ஒளிக்காட்சி களைக் கட்டுப்படுத்தலாம்.

video display terminal (VDT) : ஒளிக் காட்சி முனையம் : ஒரு கணினிப் பொறியமைவில் தகவல்களைப் பதிவு செய்து, அவற்றைத் திரையில் காட்டுவதற்கான சாதனம். இதில், தகவல்களைப் பதிவு செய்யத் தட்டச்சுப் பொறியில் உள்ளது போன்ற விசைப்பலகை பயன்படுத் தப்படுகிறது.

video game : ஒளிக்காட்சி விளை யாட்டு: கணினித் திரையில் வரை கலையாகக் காட்டப்படும் நடவடிக் கையைத் திறமையுடன் கையாண்டு

ஆடும் ஆட்டம். சொந்தக் கணினி களிலும், கேளிக்கை விடுதிகளிலும் இது மிகுதியாக ஆடப்படுகிறது.

video game machine : ஒளிக்காட்சி விளையாட்டுப் பொறி : ஒரு ஒளிக் காட்சி விளையாட்டில் காட்சியைக் கட்டுப்படுத்தும் சைகைகளை உண் டாக்குகிற சாதனம்.

video gate array : ஒளிக்காட்சி வாயில் வரிசை : பி.சி.க்களின் ஒளிக்காட்சிக் கணினியில் உள்ள ஒரு சிப்பு. வண்ணத்தட்டுப் பதிவுகள் உள் ளிட்ட பல கட்டுப்பாட்டு மற்றும் நிலைப் பதிவேடுகளை அது கொண் டிருக்கிறது.

video generator : ஒளிக்காட்சி உரு வாக்கி : ஒளிக்காட்சியை உருவாக் கும் சாதனம்.

video graphics board : ஒளிக்காட்சி வரைகலைப் பலகை : வி.சி.ஆர் அல்லது படப்பிடிப்புக் கருவியில் இருந்து ஒளிக் காட்சியை ஏற்றுக் கொண்டு சொற்பகுதி மற்றும் வரை கலையை உருவாக்கும் ஒளிக்காட்சி அட்டை.

video input camera : ஒளிக்காட்சி உட் பாட்டு ஒளிப்பதிவுக்கருவி : ஒரு கணினியின் நினைவகத்தில், (ஒளிப் படங்கள், இயல்பு வாழ்க்கைச் சூழல் கள், ஓவியங்கள்) புள்ளி உருக் காட்சி களாக மாற்றுகிற ஒளிப்பேழை ஒளிப் பதிவுக் கருவி. இலக்கமாக்கப்பட்ட உருக்காட்சிகளை ஒரு காட்சித் திரை யில் காட்டலாம் அல்லது வரைகலை அச்சுப்பொறி மூலம் காகிதத்தில் அச்சடிக்கலாம்.

video monitor : ஒளிக்காட்சித் திரை : செயல்முறையில் ஒரு தொலைக் காட்சி போன்ற சாதனம். இதில் அலைவரிசைகளைத் தேர்ந்தெடுப் பதற்கான வசதி இல்லை. ஒளிக் காட்சி முனையை விசைப்பலகை போன்ற ஒரு புறநிலை ஆதாரத்தி லிருந்து இது பட சைகைகளைப் பெற்றுக் கொள்கிறது.

video overlay card : ஒளிக்காட்சி மேல் மூடி அட்டை : என்.டி.எஸ்.சி ஒளிக் காட்சியையும் கணினி உருவங் களையும் கலப்பதற்கு அனுமதிக்கும் வரைவியல் கட்டுப்படுத்தி.

video RAM : ஒளிக்காட்சி ராம் : கணினி காட்சித் திரையால் ஏகபோகமாகப் பயன்படுத்தப்படும் ராமின் பகுதி. மையச் செயலகத்திற்கு தேவைப்படு வது போன்று ஒளிக்காட்சி ராமைப் புதுப்பிக்கிறது. அதுபோல, திரை உருவங்களை ஒளிக்காட்சி ராம் புதுப் பிக்கிறது. ஒளிக்காட்சி ராமில் நேரடி அணுகல் சேர்ப்பி மொழி ஆணைத் தொடரின் மூலம் நடைபெறும்.

video signal : ஒளிக்காட்சி சைகை : ஒரு CRTஇல் ஒவ்வொரு புள்ளியின் அமைவிடத்தையும், ஒளித்திறனை யும் குறித்துக் காட்டுகிற தகவல்கள் அடங்கிய மின்னியல் சைகை. அத் துடன் ஒரு திரையில் உருக்காட்சி யைக் காட்டுவதற்கான நேரச் சைகை களையும் கொண்டிருக்கும்.

video terminal : ஒளிக்காட்சி முனை யம் : உள்ளீட்டுக்கு ஒரு விசைப் பலகையையும், வெளியீட்டுக்கு ஒரு காட்சித் திரையையும் பயன்படுத்தும் தகவல் நுழைவுச் சாதனம். காட்சித் திரை தொலைக்காட்சி போல தோன்றினாலும், தொலைக்காட்சி ஒளிக்காட்சி சமிக்ஞைகளை அது ஏற்பதில்லை.

videotext : ஒளிக்காட்சி வாசகம் : ஒன்றுக்கொன்று செயல்புரியும் மின்னணுத் தகவல் பொறியமைவு. இது தொலைவாசகம் போன்றது. இதில், தகவல்களைப் பொறியமை

வுக்கு மாற்றலாம். இதனைக் காட்சித் தகவல் என்றும் கூறுவர்.

videotex systems : வீடியோடெக்ஸ் அமைப்பு: மனிதர்களுக்கும், சேமிக்கப்பட்ட தகவல் தளங்களுக்கும் இடையில் பரிமாற்றங்களை அனுமதிக்கும் தனிநபர் கணிப்பு/தகவல் தொடர்பு கட்டமைப்புகளுக்கான பொதுவான பெயர்.

video window : ஒளிக்காட்சிச் சாளரம் : கணினி ஒரு தனிச் சாளரத்தில் காட்டப்படும் என்.டி.எஸ்.சி. ஒளிக் காட்சி (டி.வி).

vidicon : விடிக்கோன் : ஒரு தொலைக் காட்சி ஒளிப்பதிவுக் கருவியினுள் இருக்கும் குழாய். இது ஒரு காட்சியின் உருக்காட்சியை மின்னியல் சைகையாக மாற்றுகிறது.

view : காட்சி : ஒரு தகவல் தளத்தின் உள்ளடக்கங்களை பயன்பாட்டாளருக்கு வழங்குகின்ற முறை. இது, தகவல் தளத்தில் புலங்களும், பதிவுகளும் சேமித்து வைக்கப்பட்டுள்ள அதே முறையில் காட்சியில் காட்டப்பட வேண்டியதில்லை. பல்வேறு பயன்பாட்டாளர்களின் தேவைக்கேற்ப தனித்த முறையில் காட்டப்படுகிறது.

viewdata : காட்சித் தகவல் : மனைத் தகவல் வழங்கீட்டுப் பொறியமைவு. இதன் வழியாகப் பயன்பாட்டாளர்கள், ஒரு மையத் தகவல் தளத்தை தங்கள் உள்ளூர் தொலைக்காட்சிகளிலிருந்து அணுகலாம். பயன்பாட்டாளர் குறிப்பிட்ட தகவல் சட்டகங்களைக் கோரலாம். முக்கியமாக, தாங்கள் விரும்பும் தகவல்களை நேரடியாக அணுகலாம். இதனால் நேரம் மிச்சமாகிறது. இந்தப் பொறியமைவின் வாயிலாகப் பயன்பாட்டாளர் வேறு பயன்பாட்டாளர்களுடன் செய்தித் தொடர்பு கொள்ளலாம்.

viewport : காட்சித்துறை : ஒளிப் பேழைக் காட்சித்திரையில் தெரிந்தெடுத்த ஓர் அமைவிடத்தில் தெரிந்தெடுத்த படம் எதையும் பயன்பாட்டாளர் வைப்பதற்கு அனுமதிக்கிற செய்முறை.

virtual : தோற்றநிலை; உண்மை போன்ற; மெய்நிகர்: தோற்ற நிலைச் சேமிப்பகத்தில் உள்ளது போன்று இயல்பாகவுள்ள நிலையாக இல்லாமல் கண்ணுக்குத் தோன்றுகிற நிலை.

virtual address : தோற்றநிலை முகவரி: தோற்றநிலைச் சேமிப்புப் பொறியமைவுகளில் தோற்ற நிலைச் சேமிப்பைக் குறிக்கிற ஒரு முகவரி. எனவே, இது, பயன்படுத்தப்படும் போது, இயல்புச் சேமிப்பு முகவரியாக மாற்றப்பட வேண்டும்.

virtual drive : மெய்நிகர் வட்டகம் : ராம் வட்டகம் என்றும் கூறப்படும். வட்டு இயக்கியைப் போன்று நினைவகத்தின் ஒரு பகுதி பயன்படுத்தப்படும். வட்டைவிட நினைவகத்திலிருந்து கணினி வேகமாகப் படிக்க முடியும் என்பதால் மெய்நிகர் வட்டகங்கள் வேகமானவை. இருப்பினும், கணினியை நிறுத்தினாலோ அல்லது மீண்டும் துவக்கினாலோ ராம் வட்டகத்தில் உள்ள தகவல் மறைந்து போகும்.

virtualize : மாயபடுத்து; மெய்நிகராக்கு : மெய்நிகர் நினைவகத்தில் ஆணைத்தொடரை இயங்க வைத்தல்.

virtual machine : தோற்றநிலை எந்திரம்; மெய்நிகர் எந்திரம் : ஒரே சமயத்தில் ஓடும் தற்போதையக் கணினியின் பல படிகள் உள்ளதாகத் தோன்றும் பொய்த் தோற்றம்.

virtual memory : மெய்நிகர் நினைவகம்.

virtual monitor : மெய்நிகர் கணித்திரை : மெக்கின்டோஷில், எந்த வகையான முகப்பையும் சேர்த்து செயல்படுவது மற்றும் பலவகையான பல்முகப்புகளைப் பயன்படுத்துவது. இரண்டு அல்லது மேற்பட்ட திரைகளில் ஒரே பொருளைக் காட்டுவதும் இதில் அடங்கும்.

virtual peripheral : மெய்நிகர் புறச்சாதனம் : இயக்க அமைப்பினால் செய்து காட்டப்படும் வெளிப்புறச் சாதனம். சான்றாக, வட்டுக்கு அச்சிடும் செயல்முறை.

virtual processing : மெய்நிகர் செயலாக்கம் : ஒவ்வொரு தகவல் பொருளுக்கும் ஒரு செயலகம் இருப்பது போன்று காட்டப்படும் இணைச் செயலக நுட்பம். இருப்பதற்கு மேல் பல மெய்நிகர் செயலகங்கள் தகவல் பொருள்களுக்காக இது உருவாக்கும்.

virtual processor : மெய்நிகர் செயலகம் : மெய்நிகர் செயலாக்க அமைப்பில் உள்ள போலியாக அமைக்கப்பட்ட செயலகம்.

virtual reality : மெய்நிகர் நடப்பு; மெய்த்தோற்ற எதார்த்தம்.

virtual storage : தோற்றநிலைச் சேமிப்பு; மெய்நிகர் சேமிப்பு : ஒரு குறிப்பிட்ட அளவு உள்முகச் சேமிப்பையும், சற்று அதிக அளவு குறைந்த வேகச் சேமிப்பியிலிருந்து உள்முகச் சேமிப்பிக்கு மாற்ற உதவுகிறது.

virtual storage operating system : மெய்நிகர் நிலைச் சேமிப்புச் செயற்பாட்டுப் பொறியமைவு: ஒரு கணினிப் பொறியமைவின் தோற்ற நிலைச் சேமிப்புத்திறனைப் பயன்படுத்தும் செயற்பாட்டுப் பொறியமைவு.

virtual terminal : மெய்நிகர் முனையம்: அந்நிய கணினியை அணுக அனுமதிக்கும் முனையத்தின் முயற்சி. சிறு அல்லது பெருமுகக் கணினியை பி.சி மூலம் அணுகுவதைக் குறிப்பிடுகிறது.

virus :வைரஸ்; நச்சு நிரல்: இயக்க அமைப்பு மற்றும் தகவல் கோப்புகளின் ஒற்றுமையைப் பாதிக்கும் மென்பொருள். ஆணைத்தொடர் எந்திரத்தின் இயக்கத்தைத் தடுக்கவோ அல்லது தகவல்களை அழிக்கவோ இது முயற்சிக்கும். நச்சுநிரல் ஆணைத் தொடர்களைக் கண்டு பிடித்தவர் யார் என்பது தெரியவில்லையென்றாலும் உலகின் பல நாடுகளில் இது துவங்கியது. நச்சு நிரல்கள் தங்களைப் பெருக்கிக் கொள்ளக் கூடியவை. ஒரு நிறுவனத்தின் கணினி அமைப்பு முழுவதும் வேகமாகப் பரவும். நச்சு நிரலால் பாதிக்கப்பட்ட ஒரு வட்டை வேறொரு கணினியில் பயன்படுத்துவது போன்று வேண்டுமென்றே நச்சு நிரல் சேர்க்கலாம். நல்லவேளையாக நச்சுநிரல் தடுப்பு மென்பொருள் தற்போது பரவலாகக் கிடைப்பதால் இதை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

VLSI : விஎல்எஸ்ஐ : மிகப் பேரளவு ஒருங்கிணைப்பு என்று பொருள்படும் Very Large Scale Integration என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

VisiCalc : விசிக்கால்க் (மின்னணு விரிதாள் நிரல்) : பிரபலமான மின்னணு விரிதாள் செயல்முறை. ஒரு திரையில் தகவல்களை மின்னணுத் தாளாக அல்லது இணைப்பு அமைவிடங்களாகக் காட்டுகிறது. இணைப்பில் மாறியல் மதிப்புருக்

களின் அமைவிடங்களுக்கு ஒரு பிரிவினையைப் பயன்பாட்டாளர் பயன்படுத்துகிறார்.

vision recognition : காட்சி அடையாளம்; பார்த்தறிதல் : கணினி மூலம் படத் தகவல்களைச் செய்முறைப் படுத்தும் முறை. எடுத்துக்காட்டாக: கணினியிலுள்ள செயற்கை அறிவுத் திறன், ஒரு குதிரையின் தொலைக் காட்சி உருக்காட்சியை அடையாளங் கண்டு கொண்டு, அது குதிரை என்று கூறுகிறது. உருக்காட்சிகளை அடையாளங்காண்பது, எந்திரங்களுக்கு மிகச் சிக்கலான செய்முறை.

visual : புலனாதல் : ஒரு ஒளிப்படம், வரைபடம், ஓவியம், பட்டியல் அல்லது வரைகலையைப் பயன்படுத்தி தகவல் தொடர்பு கொள்ளுதல்.

visual basic : விசுவல் பேசிக் : விண்டோஸ் பயன்பாடுகளுக்காக உருவாக்கப்பட்ட மைக்ரோ சாஃப்ட் குவிக் பேசிக்கின் மேம்பட்ட பதிவு. விசுவல் பேசிக் கருவிப் பெட்டியில் இருந்து பயன்பாடுகளுக்குப் பொருள்களை இழுத்து வருவதன் மூலம் விண்டோஸ் பணித் தொகுப்புகள் உருவாக்கப்படுகின்றன.

visual display : காட்சித்திரை : ஒரு காட்சித் திரையில் படம் அல்லது வரைபடம் காட்டுதல் அல்லது ஒரு வரைவி மூலம் ஒரு வரைபடம் உருவாக்கிக் காட்டுதல் போன்று தகவல்களைக் காட்சியாக உருவாக்கிக் காட்டுதல்.

visual display terminal : புலன் காட்சி முனையம்: திரையில் விசையிடப்பட்ட உள்ளீடு மற்றும் செயலக வெளியீட்டைக் காட்டும் திறனுள்ள சாதனம்.

visualization : பார்க்கும் பொருளாக்கல்: கணினி வரைகலையில், எண் வடிவில் விளங்கிக் கொள்ள கடினமாக உள்ள போக்குகளை மனிதர்கள் கண்டுகொள்ள அனுமதிக்க எண் முறை தகவல்களை படவடிவமாக மாற்றுதல். கொள்கையளவிலும், நடைமுறையில் ஆராய்ச்சி சூழ் நிலைகளிலும் இது குறிப்பாக பயன் படுத்தப்படுகிறது.

visual page : காட்சிப் பக்கம்; காணும் பக்கம் : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சேமித்துவைக்கப்பட்ட திரைக் காட்சிக் கோப்புகள் அடங்கிய காட்சி உருவரை.

visual scanner : காட்சி வருடி.

visual table of contents : காணும் உள்ளடக்கப் பட்டியல் : ஒரு நிறுவனத்துக்கு உள்ளேயோ அல்லது ஒரு குறிப்பிட்ட ஆணைத்தொடரிலோ தகவல் ஓட்டத்தின் விளக்கங்களை வரைகலை வடிவில் காட்டும் ஒரு வரைபடம். வரைபடத்தின் மேற் பகுதியில் காட்டுவதைவிட அடிப் பகுதியில் அதிகமான தகவல்கள் காட்டப்படும். VTC என்று சுருக்கப் படும்.

vocabulary : சொற்களஞ்சியம்; சொல் வளம் : ஒரு குறிப்பிட்ட கணினிக்காக ஒரு செயல் முறையை எழுதுவதற் குப் பயன்படுத்தப்படும் குறியீடுகள் அல்லது ஆணைகள்.

voder : ஓடர் : பேச்சு ஒருங்கிணைப்பி.

voder-speech synthesizer : பேச்சுரு வாக்கியின் பெயர்.

voice channel : குரல் வழித்தடம் : மனிதக் குரலைக் கொண்டு செல்லும் துணை வழித்தடம் அல்லது ஒளி பரப்பு வழித்தடம்.

voice coil : குரல் சுருளை : வேகமாக அணுகவும் நிலை வட்டு இயக்கி படி/எழுது முனை நுட்பம். வழக்க

மான இயக்கிகளைவிட இது அதிகம் செலவாகக் கூடியது. ஒலிபெருக்கியில் உள்ளதைப் போன்ற தொழில் நுட்பமே இதிலும் பயன்படுத்தப்படுகிறது. கொடுக்கும் சமிக்ஞையின் சக்தியைப் பொறுத்து, அந்த சுருளை ஒரு குறிப்பிட்ட தூரம் நகர்ந்து தேவைப்படும் தகவல் சேமிப்பு வழித்தடத்தின் மேல் சரியாக நிற்கும்.

voice communications : குரல் செய்தித் தொடர்பு; பேச்சுத் தொடர்பு : மனிதரின் கேள்வி வீச்செல்லைக்குள் ஒலியை அனுப்புதல். குரல் அல்லது ஒலியை ஒரு ஒத்த சொல் அல்லது இலக்கச் சைகைகளாக அனுப்பலாம்.

voice frequencies : குரல் அலை வரிசைகள் : நாம் பேசும்போது, நமது குரல் நாண்கள் அதிர்ந்து ஓசையை உருவாக்கி ஒரே அளவில் வாய்க்கும், தொண்டைக்கும் மூக்குக்கும் தொண்டைக்குழி வழியாகப் போய்ச் சேர்கிறது. இதில் ஏற்படும் ஒலிகள் பேச விரும்பும் ஒலியின் தன்மைகளுக்கேற்ப ஒலி அலைகளை ஏற்படுத்துகின்றன. உயிரெழுத்துகளை ஒலிக்க அதிக சக்தி தேவைப்படுகிறது. மெய்யெழுத்துகளுக்கு உதடுகள், நாக்கு, பற்கள் செயல்படுவதால் குறைந்த சக்தியே போதுமானது என்பதுடன் அதிக அதிர்வுகளும் ஏற்படுத்துகின்றன. இதன் அலை வரிசைகள் 100 முதல் 2,000 ஹெர்ட்சுகளாகும். குரலின் தொனியானது குரல் நாண்களின் அடிப்படை அலை வரிசைகளைப் பொறுத்தது. இது பெண்களுக்கு 200 முதல் 1,000 ஹெர்ட்சுகளாகவும், ஆண்களுக்கு 100 முதல் 500 ஆகவும் இருக்கும்.

voice grade : குரல் தரம் : வழக்கமான தொலைக்காட்சி இணைப்புகளில் பயன்படுத்தப்படும் கம்பிகளை கணினி இணைப்புகளுக்குப் பயன்படுத்துதல். பெரும்பாலான தொலைத்தொடர்புகளுக்கு இது இன்றியமையாதது. இது 300 முதல் 3,000 வரையிலான அலை வரிசைகளில் தகவல்களை 9,600 இணைப்புகளில் அனுப்ப அனுமதிக்கிறது. இது, அகல் இணைப்பு, குறு இணைப்பு என்பவற்றிலிருந்து வேறுபட்டது.

voice input : குரல் உட்பாடு; குரல் உள்ளீடு; பேச்சாணை ; குரலாணை : ஒரு கணினியில் மனிதக் குரலை உட்பாடாகப் பயன்படுத்த அனுமதிக்கும் உட்பாட்டுச் சாதனம்.

voice mail : குரல் அஞ்சல்; பேச்சு அஞ்சல் : தொலைபேசியில் பேசப்படும் செய்திகள், இலக்க வடிவில் மாற்றப்பட்டு, கணினியின் நினைவகத்தில் சேமித்து வைக்கப்படுகின்றன. செய்திகள் வரவழைக்கப்படும்போது, அவை மீண்டும் குரல் வடிவுக்கு மாற்றப்படும்.

voice messaging : குரல் செய்தியளித்தல் : மின்னஞ்சலுக்கு மாற்றாக குரல் அஞ்சலைப் பயன்படுத்தல். பெறுபவர் இல்லை என்பதற்காக அல்லாமல் குரல் செய்திகள் வேண்டுமென்றே பதிவு செய்யப்படுகிறது.

voice output : குரல் வெளிப்பாடு : கணினி, பேசும் மொழி மூலம் வெளிப்பாட்டினை வழங்க அனுமதிக்கிற ஒலி மறுமொழிச் சாதனம். இது கணினி சார்ந்த ஆணை, தன் சேவை எரிவாயு நிலையங்கள் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கு உதவுகிறது.

voice processing : குரல் செயலாக்கம் : குரலைக் கணினி மூலம் கை

யாளுதல். இதில் குரல் சேமிப்பும் அனுப்புதலும், குரல் பதிலளிப்பு, குரல் கண்டறிதல் மற்றும் சொற் பகுதி முதல் பேச்சுத் தொழில் நுட்பம்வரை காணப்படும்.

voice recognition : குரல்கண்டறிதல்: மனிதக் குரலைக் கண்டு கொள்ள கணினி வன்பொருள்/மென்பொரு ளுக்குத் திறனளிக்கும் ஓரளவு புதிய தொழில்நுட்பம். கணினியில் சேர்ப் பதற்கேற்ற மின்னணு வடிவில் பேசப்படும்தகவல்களை நேரடியாக மாற்றுதல்.

voice recognition system : குரல் காண் பொறியமைவு ; குரலறி அமைப்பு : பயன்பாட்டாளரின் குரலையும் சொற்களையும் அடை யாளங்கண்டு புரிந்து கொள்ளக் கூடிய பொறியமைவு.

voice-grade channels : குரல்நிலை வழித்தடங்கள் : தொலைபேசி தக வல் தொடர்பு வசதியைப் பயன்படுத் தும் இடைப்பட்ட வேகம் கொண்ட ஒலிபரப்பு வழித்தடங்கள்.

voice recognition : குரல் ஆணை.

voice response : குரல் மறுமொழி : பேச்சு வடிவிலான கணினி வெளிப் பாடு.

voice synthesis : குரல் ஒருங் கிணைப்பு : கணினியின் நினைவகத் தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒலித் தோரணிகளை, ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பக்கூடிய சொற் களாக ஒருங்கிணைக்கும் கணினி யின் திறம்பாடு.

volatile : அழியக்கூடிய, மறையக் கூடிய.

volatile file : விரைவுக் கோப்பு; மாற்ற மிகு கோப்பு : புதிய புதிய பதிவேடு களைப் புகுத்துவதும், பழைய பதிவேடுகளை நீக்குவதும் அதி வேகத்தில் நடைபெறும் ஒரு கோப்பு. இதில் அணுகு நேரம் மாறக் கூடியது.

volatile memory : நிலையா நினை வகம்; அழியும் நினைவகம்; மறையும் நினைவறை : கணினியின் அடிப் படை நினைவகம். மின்சாரம் நிறுத் தப்பட்டால் தன்னுடைய தகவல் களை எல்லாம் கணினி இழந்து விடும் என்பதை உணர்த்தும் சொல் என்பதால் இச்சொல் சரியாகவே அமைந்துள்ளது.

volatile storage : நிலையா சேமிப்பு; விரைவுச் சேமிப்பகம் : பொறியமை விலிருந்து மின்விசை நீக்கப்பட்டால் உள்ளடக்கங்களை இழந்துவிடக் கூடிய சேமிப்புச் சாதனம். இது விரைவற்ற சேமிப்பகம் என்பதி லிருந்து வேறுபட்டது.

volatility : விரைவுத் திறன் : ஒரு கோப்பு செய்முறைப்படுத்தப்படும் போது, பதிவேடுகள் சேர்க்கப் படுகிற அல்லது நீக்கப்படுகிற வேக வீதம். ஒரு தகவல் தளத்தை வடி வமைப்பதில் இது முக்கியமான நிலையளவுரு ஆகும்.

voltage : மின்னழுத்தம் : மின் விசை யின் அழுத்தம். ஒரு கணினி மின் சுற்றுவழியில் உள்ள உயர் மின் னழுத்தம் 1 என்பதாலும், குறைந்த மின்னழுத்தம் '0' என்பதாலும் குறிக்கப்படுகிறது.

volume : கன அளவு : ஒரு வட்டுத் தொகுதி, நெகிழ் வட்டு, நாடாச் சுருள் போன்ற சேமிப்புச் சாதனத்தின் இயற்பியல் அலகு.

volume lable : வட்டுப் பெயர் : ஒரு வட்டுக்கு அளிக்கப்படும் பெயர் (பொதுவாக விரும்பினால் மட்டும்).

voltage regulator : மின்னழுத்த முறைப்படுத்தி : வெளிப்பாட்டு மின்னழுத்தத்தை முன் தீர்மானித்த ஓர் அளவில் வைத்திருக்கிற அல்லது முந்தையத் தீர்மானத்தின்படி மாற்று

மின்னழுத்த முறைப்படுத்தி
(Voltage regulator)

கிற மின்சுற்றுவழி. இயல்பான உட்பாட்டு மின்னழுத்த மாறுதல் எவ்வாறிருந்தாலும் இந்த மாற்றம் நடைபெறுகிறது.

volume table of contents : வட்டு உள்ளடக்கங்கள் :ஆப்பிள் டாசின் கீழ் நிலை வட்டுகளுக்கான கோப்பு ஒதுக்கும் பட்டியல்.

Von Neumann, John (1903-1957) : வான் நியூமன், ஜான் (1903-1957) : இந்நூற்றாண்டின் தலைசிறந்த கணித மேதைகளில் ஒருவர். முதலாவது மின்னணுக் கணினிகளில் ஒன்றை உருவாக்கியவர். இவர் சேமிப்புச் செயல்முறைக் கோட்பாட்டையும், விளையாட்டுக் கோட்பாட்டையும் உருவாக்கினார்.

von neumann bottleneck : வான் நியூமன் முட்டுக்கட்டை : வான் நியூமன் எந்திரத்தின் வேகத்தடைக்கான காரணங்களைக் குறிப்பிடுகிறது. அவை: 1. ஒரே வழித்தடத்தில் உள்ள மின்சுற்றுகள் அடிப்படை சேமிப்பகத்திலிருந்து கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு ஆணைகளை எடுத்துச் செல்கின்றன. 2. ஒரே தகவல் பாதையில் அடிப்படை சேமிப்பகத்திற்கும், கணித தருக்கப் பிரிவுக்கும் மின்சுற்றுகள் செயல்படுகின்றன.

von neumann machine : வான் நியூமன் எந்திரம் : வான் நியூமன் 1945இல் ஓர் அறிக்கையில் இந்த எந்திரம் பற்றி விவரித்துள்ளார். இது, ஒரு மின்னணுக் கணிப்புச் சாதனத்தின் தருக்க முறை வடிவமைப்பாகும். சேமிப்புச் செயல்முறைக் கோட்பாடு இந்த எந்திரன் சிறப்புக் கூறாகும்.

VPS : விபிஎஸ் : 'Vector Per Second' என்பதன் குறும்பெயர். நெறியம் (Vector) அல்லது வரிசை செயலகத்தின் வேகத்தை அளக்கப் பயன்படுத்தப்படுவது.

VRC : விஆர்சி : 'செங்குத்து மிகைச் சரி பார்ப்பு' என்று பொருள்படும் 'Vertical Redundancy Check' என்பதன் தலைப்பெழுத்துக் குறும்பெயர்.

VS : விஎஸ் : 'தோற்றநிலைச் சேமிப்பகம்' என்று பொருள்படும் 'Virtual Storage' என்பதன் தலைப்பெழுத்துக் குறும்பெயர்.

vulnerability : வடுப்படும் நிலை : பாதுகாப்பு இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கக் கூடியதாக ஒரு கணினியிலுள்ள பலவீனம்.

W

wafer : மென்தகட்டுச் சிப்பு; சீவல் : மூன்று அல்லது நான்கு அங்குலம் கணமுடைய வட்ட வடிவ தகடு. இதில் பல ஒருங்கிணைந்த மின் சுற்று வழிகள் உருவாக்கப்படுகின்றன. பின்னர் தனித்தனிச் சிப்புகளாகப் பகுக்கப்படுகின்றன.

wafer processing : மென்தகடு செயலாக்கம் : மெல்லிய தகடுகளாலான அரைக் கடத்திப் பொருளைச் செயலாக்கம் செய்து மின்சுற்றுகளை உருவாக்குவது. செயலாக்கத்திற்குப்பின் தகட்டினை வார்ப்புரு படிவம் (die) அல்லது சிப்புகள் என்று தனியாக்கப்படும்.

wafer sort : தகடு பிரிப்பு : ஒருமென் தகட்டில் எந்த 'டைஸ்' ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பதைச் சோதித்தறிதல்.

wait : காத்திரு : ஒரு டிபேஸ் கட்டளை. பயனாளர் விசையை அழுத்தினால் ஒழிய ஆணைத்தொடர் இயக்கப்படுவது தள்ளிப்போகச் செய்வது. அதன் விளைவான விசைப்பதிவை குறிப்பிட்ட மாறியில் எழுத்துச் சரமாக சேமிக்கப்படுகிறது.

wait state : காத்திருப்பு நிலை ; காத்திருக்கும் நிலை : மையச் செயலகம் ஆணைகளை நிறைவேற்றாமல், வாளாதிருக்கும் நிலை.

wait time : காத்திருப்பு நேரம் : மற்ற நடவடிக்கைகள் முடிவுறுவதற்காகக் காத்திருக்கும் ஒரு செயல் முறை அல்லது கணினி.

wall paper : சுவர் தாள் : சாளரச் (window) சொல்: சாளரத்துக்குப் பின்னுள்ள அமைப்பைக் குறிப்பிடுவது.

walk through : உலா; ஊடு நடை; உலா வருதல்.

WAMI : வாமி : உலக மருத்துவத் தகவலியல் சங்கம் என்று பொருள்படும் World Association for Medical Informatics என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

WAN : வான்; விரிபரப்புப் பிணையம் : 'Wide Area Net Work' என்பதன் முதலெழுத்துக் குறும்பெயர்.

wand : ஒளிக்கோல் ; மாத்திரைக் கோல் : குறியீட்டுத் திரைச் சீட்டுகள், பட்டடைக் குறியீடுகள், எழுத்துகள் ஆகியவற்றைப் படிக்கவும் அடையாளங்காணவும் கூடிய கைப்பிடி ஒளியியல் சாதனம்.

Wang Labor Tories : வேங் லேபர் டோரிஸ் : அமெரிக்காவில் கணினிகளை உற்பத்தி செய்யும் புகழ்பெற்ற ஒரு நிறுவனம்.

wang writer : வேங் ரைட்டர் : வேங் ஆய்வுக் கூடங்களில் உருவாக்கப்பட்ட சொல் செயலாக்கத் தொகுப்புகளில் ஒன்று.

wangnet : வேங்நெட் : வேங் நிறுவனத்தின் அகலத் தகவல் தொடர்பு வழித்தடம் கொண்ட குறும்பரப்புப் பிணையம் (LAN) . இது தகவல்கள், குரல் மற்றும் ஒளியையும் கையாள்கிறது.

warm boot : இதமான உயிரூட்டம் ; உடன் தொடங்கல் : கணினியில் மின் விசை ஓடிக்கொண்டிருக்கும் போதும், மின்விசை நிறுத்தப்பட்டு விட்டதாகக் கணினி கருதும்படி செய்து, மீண்டும் உயிரூட்டும் செயல் முறை.

warm link : இதமான இணைப்பு : இரண்டு தகவல் கோப்புகளுக்கு இடையிலான மென்பொருள் இணைப்பு. ஒரு கோப்பு புதுப்பிக்கப்படும்போது மற்றொன்றும் (தானாகவே) புதுப்பிக்கப்படும்.

warm start : இதமான தொடக்கம் ; உடன் தொடங்குதல் : இதமான உயிரூட்டம் என்பதும் இதுவும் ஒன்றே

warm-up time : ஆயத்த நேரம் : ஒரு சாதனத்திற்கு விசையேற்றுவதற்கும், அதன் வெளிப்பாட்டு எழுத்தாக்கப் பயன்பாடு தொடங்குவதற்குமிடையிலான இடைவேளை.

warnier- orrchart : வார்னியர் - ஆர் விளக்கப்படம் : பொதுவான செயலாக்கங்களை ஒரு புறத்திலும் (வழக்கமாக இடது புறத்தில்) மேலும் மேம்பட்ட தகவல்களை வலது புறத்திலும் காட்டும் விளக்கப்படம். வார்னியர்-ஆர் விளக்கப்படத்தினை 1970-களில் ஜீன் டொமினிக் வார்னியர் என்பவரும், கென் ஆர் என்பவரும் சேர்ந்து கண்டுபிடித்தார்கள். ஒரு குறிப்பிட்ட செயல்முறை அல்லது வகை வேறொன்றைச் சார்ந்திருப்பதைக் காட்டும் ஆணைத் தொடர் வடிவமைப்பில் இது பயன்படுத்தப்படுகிறது.

warnier-orr diagram : வார்னியர்-ஆர் வரைபடம் : அமைப்பு ஆய்வு மற்றும் வடிவமைப்புக்கு மென் பொருள் பொறியியல் துறையில் பயன்படுத்தப்படும் வரைகலை வரைபட தொழில்நுட்பம்.

warning box : எச்சரிக்கை பெட்டி : விண்டோஸ் ஆணைத்தொடரில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பெட்டி வடிவிலான எச்சரிக்கை செய்தி.

warning message : எச்சரிக்கைச் செய்தி : கடுமையல்லாத ஒரு பிழை குறித்தப் பயன்பாட்டாளருக்கு எச்சரிக்கை விடுப்பதற்கு ஒரு தொகுப்பி மூலம் உருவாக்கப்படும் பிழை சுட்டும் செய்தி.

watch point : கவனப் பகுதி : பிழை நீக்குவதற்காக ஒரு ஆணைத் தொடரில் நுழைக்கப்படும் ஒரு நிலை. கவனப் பகுதிகள் ஒரு குறிப்பிட்ட நினைவகப் பகுதியின் உள்ளடக்கங்களைக் காட்டும்.

WATFOR : வாட்ஃபார் : கனடாவில் ஒன்டாரியோவிலுள்ள வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட 'FORTRAN'-இன் பதிப்பு. 'வாட்ஃபிவ்' (watfiv) என்பது வாட்ஃபார் என்பதன் திருத்தப் பதிப்பு.

WATS : வாட்ஸ் : விரிபரப்பு தொலை பேசி எனப் பொருள்படும் "Wide Area Telephone" என்பதன் தலைப் பெழுத்துச் சுருக்கம்.

Watson, Thomas J. Jr : வாட்சன், தாமஸ் ஜே (இளையவர்) : கணினித் தொழிலில் IBM கழகத்தை முன்னணி நிலைக்குக் கொண்டுவந்தவர்.

Watson, Thomas J. Sr (1874-1956) : வாட்சன், தாமஸ் ஜே (மூத்தவர் ; 1874-1956) : IBM கழகத்தின் வழிகாட்டி. தலைசிறந்த விற்பனையாளர். 1952 வரை IBM தலைவராக இருந்தவர். சிந்தனை செய்வதே இவரது குறிக்கோளாக இருந்தது. எனினும் இலக்கமுறைக் கணினிகளுக்கு அதிகம் கிராக்கி இருக்கும் என்று இவர் கருதவில்லை.

wave : அலை : கதிரியக்க சக்தியின் வடிவம். அனைத்து வானொலி சமிக்ஞைகளும், ஒளிக்கதிர்கள், எக்ஸ்-கதிர்கள் மற்றும் அண்டக் கதிர்களும் தொடர் அலைபோன்ற ஒரு சக்தியைக் கதிரியக்கம் செய்கின்றன.

waveform : அலைவடிவம் : ஒப்புமை (அனலாக்) வடிவில் ஒரு குறிப்பிட்ட ஒலி அலை அல்லது மின்னணு சமிக்ஞையின் அமைப்பு.

WCCE : டபிள்யூசிசிஇ : கல்வியில் கணினிகள் பற்றிய உலக மாநாடு

என்று பொருள்படும் 'Word Conference on Computers in Education' என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

web press : வெப் அச்சகம் ; வலை அச்சகம் 'வெப்' எனப்படும் உருளையிலிருந்து காகிதத்தில் அச்சடிக்கும் அச்சகம்.

web server : வலைப் பணியகம்.

web site : வலைத் தளம்; வலை முகவரி.

weed : களை : ஒரு கோப்பிலிருந்து விரும்பத்தகாத அல்லது தேவையற்ற இனங்களை அகற்றுதல்.

weighted code : எடைக் குறியீடு : துண்மியின் இடைநிலை ஓர் எடையிட்ட மதிப்பளவைக் கொண்டிருக்கிற குறியீடு. 8-4-2-1 என்ற எடையிட்ட குறியீட்டுப் பொறியமைவில் 529 என்ற பதின்ம எண், 0101 0010 1001 என்று எழுதப்படும்.

weitek coprocessor : வெய்டெக் கூட்டுச் செயலகம் : வெய்டெக் கார்ப்பரேஷன் உருவாக்கிய நுண் மற்றும் சிறு கணினிகளுக்கான அதிக திறன் மிக்க கணினி கூட்டுச் செயலகம். 1981-முதல் இந்நிறுவனம் கேட் மற்றும் வரைகலை பணி நிலையங்களுக்கான கூட்டுச் செயலகங்களை உருவாக்கி வருகிறது. இதனைப் பயன்படுத்த மென்பொருளும் இதன் மீதே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

well behaved : நன்னடத்தையுள்ள : ஒரு தர அமைப்பிலிருந்து விலகிச் செல்லாத ஆணைத்தொடரைக் குறிப்பிடுகிறது.

west coast computer fair : மேற்குக் கரைக் கணினிக் காட்சி : அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் ஆண்டுதோறும் நடைபெறும் முக்கியமான நுண்கணினி வணிகக் கண்காட்சி.

wetware : வெட்வேர் : உயிரியல் அமைப்பு அல்லது அதைப் போலச் செய்ய முயலும் ஒன்று.

wetzel ; வெட்ஜெல் ; ஒரு எதிர்மின் கதிர்க்குழாயிலுள்ள உருக்காட்சியுடன் சேர்க்கப்படும் படக்கூறு. இது காட்சியின் தெளிவினை மேம்படுத்த உதவுகிறது.

what if? : விரிதாள் வினவல் ; காரண விளைவு அலசல் : பெரும்பாலான மின்னணு விரிதாள் செயல் முறைகள் செயற்படுகிற வளாகம். மற்ற மதிப்பளவுகளின் கூட்டு விளைவினை தீர்மானிக்க புதிய மதிப்பளவுகளைப் புதிதாக அமைக்கலாம்.

wheel printer : சக்கர அச்சுப்பொறி ; உருளை அச்சு : அச்சடிக்கும் எழுத்துகளை உலோகச் சக்கரங்களில் கொண்டிருக்கும் அச்சடிப்புச் செயல்முறை அமைந்துள்ள அச்சுப்பொறி.

whetstones : வெட்ஸ்டோன்ஸ் : பதின்மப் புள்ளி கணக்கீடுகளைச் சோதிக்கும் பெஞ்ச்மார்க் ஆணைத்தொடர். ஒரு நொடிக்கு எத்தனை வெட்ஸ்டோன்கள் என்ற அளவில் இதன் முடிவுகள் கூறப்படுகின்றன. வெட்ஸ்டோன் I-32 துண்மி, வெட்ஸ்டோன் II-64 துண்மி இயக்கங்களைச் சோதிக்கின்றன.

while loop : நிகழ்சுற்று.

white noise : வெள்ளை ஓசை; வெண்ணிரைச்சல் : அச்சுப்பொறிகள், விசைப்பலகைகள், காலடிகள் போன்ற அலுவலகச் சந்தடிகளின் இடைவெளிகளை நிரப்புவதற்காக கேட்கக் கூடிய எல்லா அலைவெண்களிலும் உண்டாக்கப்படும் தொடர் ஓசை.

white space character : வெள்ளை இட எழுத்து : திரையில் தோன்ற வேண்டி யிராத எழுத்து. சான்றாக, இடை வெளி, டேப், வரி திரும்புதல் போன் றவை. இந்த எழுத்துகளைப் பார்க் கவோ அல்லது பார்க்காமல் இருக் கவோ பல சொல் செயலகங்கள் வாய்ப்பளிக்கின்றன.

whole number : முழு எண் : பின்னப் பகுதிகள் இல்லாத நேர். எடுத்துக் காட்டு: 84 அல்லது 22.0 அல்லது 0.

wide area network : நாடளாவிய கணினி பிணையம்; விரிபரப்பு பிணை யம் : பல்லாயிரம் மைல் வட்டாரத் திற்குச் சேவை புரியக் கூடிய வகை யில் வடிவமைக்கப்பட்ட தகவல் செய்தித் தொடர்பு பிணையம்.

Wide Area Telephone Service (WATS) : விரிபரப்பு தொலைபேசி சேவை : 'வாட்ஸ்' தொடர்பு எனப் படும் அணுகு இணைப்பு மூலம், ஒரு குறிப்பிட்ட மண்டலத்தில் தகவல் தொடர்பு கொள்வதற்கு வாடிக்கை யாளரை அனுமதிக்கிற தொலை பேசி நிறுமங்கள் வழங்கும் சேவை. அமெரிக்கா ஆறு "வாட்ஸ்" மண்ட லங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுழற்சி அடிப்படையில் மாதக் கட்டணம் செலுத்தி இந்த வசதியை பயன்படுத்தலாம்.

wide band : அகல் அலைவரிசை; அகல் கற்றை : ஒரே பணியைத் திரும்பத் திரும்பச் செய்வதற்கான கணினி மொழிக் கட்டளை. தகவல் தொடர்பு களில், குரல்வகை அலைவரிசையை விட அலை அகற்சியில் அகலமாக உள்ள ஓர் அலைவரிசை.

widow : துணையிலி : ஒரு வாசகப் பக் கத்தின் உச்சியில் தன்னந்தனியாக இருக்கும் ஒருபத்தியின் கடைசிவரி. எல்லா வகை அச்சடிப்பிலும் இது விரும்பத்தகாதது எனக் கருதப் படுகிறது.

widow & orphan : துணையிலியும் அனாதையும் : அடுத்தபக்கத்தின் மேற்பகுதியில் தோன்றுகின்ற ஒரு பத்தியின் கடைசி வரியை துணையிலி (window) என்றும், ஒரு பக்கத்தின் கடைசிவரியில் வரும் ஒரு பத்தியின் முதல் வரியை அனாதை (orphan) என்றும் கூறுகிறோம்.

width of field : புல அகற்சி.

wiener : வைனர், நெர்பெர்ட் (1894-1964) : அமெரிக்க அறிவியலாளர். கணினியியல் எனப் பொருள்படும் cybernetics என்ற சொல்லைப் புனைந்து ஒரு புதிய அறிவியல் துறையை உருவாக்கியவர். மனித மூளையின் பல சிந்தனைச் செய் முறைகளைக் கணிதமுறையில் தீர் மானித்து, கணினிகளில் பயன்படுத் தலாம் எனக் கருதியவர். தானியக்கக் கோட்பாட்டின் முன்னோடி.

wild card : வரம்பிகந்த அட்டை; வரம்பிலா உரு : ஒரு செயற்பாட்டுப் பொறியமைவு ஆணையில் செருகப் படும் ஓர் எழுத்து. இது, பல்வேறு பொருள்படுவதாகக் கூறப்படும். இது கோப்புகளுக்குப் பெயரிடும் முறை.

Wilkes Maurice Vincent : வில்கஸ், மாரிஸ் வின்சென்ட் : கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் மின்னணு சேமிப்புத் தானியங்கிக் கணிப்பியை 1949இல் உருவாக்கிய குழுவின் தலைவராக இருந்தவர்.

winchester disks : வின்செஸ்டர் வட்டுகள்.

winchester disk drive : வின்செஸ்டர் வட்டு இயக்கி : அதிவேகத்துணை நிலைச் சேமிப்புச் சாதனம். இது ஒரு

வகை நிலைவட்டு. இது காற்றுப் புகாத கொள்கலத்தில் வைத்து முத்திரையிடப்பட்டிருக்கும்.

window : பலகணி; சாளரம் : ஒளிப் பேழைக் காட்சிப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் குறித் தமைக்கப்பட்டுள்ள ஒருபகுதி. திரையை பன்முகப் பலகணிகளாகப் பகுப்பதற்கு ஒரு தனிவகை மென் பொருள் அனுமதிக்கிறது. இந்தப் பலகணிகளை நகர்த்தலாம். பெரி தாகவோ சிறிதாகவோ ஆக்கலாம். இது பெரிய சொல் செய்முறைப் படுத்தும் ஆவணங்களுக்குப் பெரி தும் பயன்படுகிறது.

windowing : பலகணியாக்கம் ; சாளர மாக்கல் : திரையில் ஒரே சமயத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கோப்புகளை அல்லது ஒரு கோப் பின் பகுதிகளைக் காட்டுதல்.

width table : அகலப் பட்டியல் : ஒரு அச்செழுத்துத் தொகுதியில் உள்ள ஒவ்வொரு எழுத்தின் குறுக்கு வாட்ட அளவுப் பட்டியல். சொல் செயலாக்க மற்றும் டி.டி.பி ஆணைத் தொடர்களில் பயன்படுத்தப்படு கிறது.

winchester technology : வின்செஸ்டர் தொழில் நுட்பம் : கடின காந்த வட்டு சேமிப்பகங்களில் நிரந்தரமாக (அணுகு கரங்கள் மற்றும் படி/எழுது முனைகளுடன்) மூடப்பட்ட பாது காப்பான பெட்டிகளில் வைக்கப் படுபவைகளுக்குத் தரப்படும் பெயர். பல அளவுகளிலும், சேமிப் புத் திறன்களிலும் வின்செஸ்டர் வட்டு அமைப்புகள் வருகின்றன.

windows : சாளரம்; பலகணி.

windows environment : சாளரச் சூழ் நிலை : திரையில் பல்சாளரங்களை அளிக்கின்ற பயன்பாட்டு ஆணைத் தொடர் அல்லது விரிவாக்கம். டெஸ்க்வியூ, விண்டோஸ், பிஎம், மல்டி ஃபைன்டர், மற்றும் எக்ஸ் விண்டோ ஆகியவை இதற்குச் சான்றுகள். இப்போது செயலாக்க அமைப்பையே 'விண்டோஸ்' என்ற சொல் குறிப்பிடுகிறது.

windows metafile : விண்டோஸ் மெட்டாஃபைல்: 'மைக்ரோசாஃப்ட்' விண்டோஸ் நிறுவனம் பயன்படுத் தும் வரைகலைக் கோப்புப் படிவம். இதில் நெறிய (வெக்டார்) வரை கலை, பிட்மேப், சொற்பகுதி ஆகி யவை இடம்பெறும். சில சமயங் களில் மெட்டாஃபைல்களை தற் காலிக சேமிப்பகத்துக்கு பயன் படுத்துவார்கள். ஆனால், அதன் பயன்பாடுகள் பெரும்பாலும் மறு முறை பயன்படுத்துவதற்காகச் சேமித்து வைக்கப்படுகின்றன.

Windows NT : விண்டோஸ் என்டி : மைக்ரோசாஃப்ட் கார்ப்ரேஷனின் பல்பணி வாடிக்கையாளர், சேவை யாளர் இயக்கத் தொகுப்பு. 386 மற்றும் அதற்கு மேற்பட்டவை களுக்கான 32 துண்மி செயலாக்க அமைப்பு.

windows programme : விண்டோஸ் ஆணைத்தொடர் : இருக்கின்ற ஒரு இயக்கத் தொகுப்புக்கு விண்டோ ஸின் திறனைச் சேர்க்கின்ற மென் பொருள். விண்டோஸின் கீழே இயங்குவதற்காக எழுதப்பட்ட பயன்பாட்டு ஆணைத்தொடர்.

wire board : கம்பிப் பலகை.

wired programme computer : கம்பிச் செயல்முறைக் கணினி : நிறைவேற்ற செயற்பாடுகள், கம்பி அமைப்பு மற்றும் கம்பி இணைப்புகள் மூலம் குறிப்பிடப்படுகிற ஆணைகளைக் கொண்டுள்ள கணினி. இந்தக்

கம்பிகள், அகற்றக் கூடிய கட்டுப் பாட்டு தொடர் மூலம் பிணைக்கப் பட்டுள்ளன. இது செயற்பாட்டுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு நெகிழ் திறனை அளிக்கிறது.

wireframe modeling : கம்பிச் சட்ட மாதிரியமைப்பு : கேட் பயன்பாட்டில் முப்பரிமாணத்தைக் குறிப்பிடும் ஒரு நுட்பம். இதில் எல்லா கோடுகளும், எதிர்க்கோடுகளும் தெளிவாகக் காட்டப்படும். ஆனால், உட்புற உறுப்புகள் பார்வையிலிருந்து மறைக்கப்படும். மேற்பரப்பு மற்றும் திட மாதிரியமைப்பைவிட, கம்பிச் சட்ட மாதிரியமைப்பு முப்பரிமாண உருவங்களுக்கு எளிதானது.

wireless : கம்பியிலா.

wireless telephone : கம்பியிலா தொலைபேசி.

wire wrap : கம்பிப் பொதிவு ; கம்பிச் சுற்றமைவு : மின்சுற்றுவழிப் பலகை உருவாக்குவதில் ஒருவகை. இதில் மின் இணைப்புகள், உரிய உறுப்பு களின் இணைப்பு முனைகளுக்கு இணையான கம்பங்களுடன் இணைக்கப்பட்ட கம்பிகள் வழியாக ஏற்படுத்தப்படுகின்றன.

Wirth, Niklaus : விர்த், நிக்ளாஸ் : சுவிட்சர்லாந்தில் 1968 இல் பிளைஸ் பாஸ்கல் பெயரால் 'பாஸ்கல்' என்ற கணினி மொழியை உருவாக்கியவர். இது பிரபலமான உயர்நிலைச் செயல்முறைப்படுத்தும் மொழியா கும். இது, கட்டமைவுச் செயல் முறைப்படுத்தும் உத்திகளைக் கையாள உதவுகிறது.

wizard : வித்தகர் : மைக்ரோசாஃப்ட்.

word : சொல் : தகவல், துண்மிகளின், எழுத்துகளின் அல்லது எட்டியல் களின் தருக்க முறை அலகு. இது ஒரு தனி அலகாகக் கருதப்படுகிறது. இதனை ஒரே சேமிப்பு அமை விடத்தில் சேமித்துவைக்கலாம்.

word addressable : சொல் முகவரி யிடக் கூடிய : சொல் எல்லைகளுக்கு மட்டும் நினைவகத்திற்கு முகவரி யிடும் கணினி.

word coordinates : சொல் ஒருங் கிணைப்புகள் : எக்ஸ் மற்றும் ஒய் ஒருங்கிணைப்பு வரிசையைக் குறிப் பிடும் மென்பொருளால் அமைக்கப் பட்ட திரை ஒருங்கிணைப்பு அமைப்பு. இதில் எதிர்மறை எண்கள் இருக்கலாம் அல்லது இல்லாமல் போகலாம். சான்று, -100 மற்றும் +100 -க்கு இடது, வலது மதிப்புகள். இந்த ஒருங்கிணைப்புகளை திரையின் உருவ ஒருங்கிணைப்பு அமைப் புடன் அமைக்கப்படும். அதன்படி மேல் இடது மூலை எப்போதும் x=0 மற்றும் y=0 என்றே குறிப்பிடப் படும். இதில் உடன்பாட்டு எண்களே பயன்படுத்தப்படுகின்றது.

word length: சொல்நீட்சி ; சொல் நீளம்: ஒரு சொல்லிலுள்ள துண்மிகளின் எண்ணிக்கை. பொதுவாக, இது 4,8,16 அல்லது 32 என்ற எண்ணிக்கை களில் இருக்கும்.

word processing: WP : சொல் செய் முறைப்படுத்துதல் ; சொல் தொகுப்பு ஆணைத்தொடர் : ஒரு மின்னணு விசைப் பலகை, கணினி, அச்சுப் பொறி ஆகியவற்றைப் பயன்படுத்தி, மின்னணு முறையில் வாசகங்களைச் சேமிப்பதற்கும், எழுதுவதற்கும், கையாள்வதற்குமான உத்தி. வாசகம் பொதுவாக நெகிழ் வட்டு போன்ற ஒரு காந்தச் சாதனத்தில் பதிவு செய் யப்படுகிறது. இறுதி வெளிப்பாடு காகிதத்தில் பதிவாகிறது.

word processing centre : சொல் தொகுப்பி ; செய்முறைப்படுத்தும் மையம் : சொல் செய்முறைப்படுத்தும் சாதனங்களையும், ஓர் அமைவனத்திற்கு எழுதிய செய்திகளைத் தயாரிப்பதற்குரிய வசதிகளையும் உடைய ஒரு மையம்.

word processing machine : சொல் செயலாக்க எந்திரம் : சொல் செயலாக்கப் பணிகளுக்கு மட்டுமே சிறப்பாகப் பயன்படுத்தப்படும் கணினி.

word processing operator : சொல் செய்முறைப்படுத்தும் இயக்குநர் : சொல் செய்முறைப்படுத்தும் சாதனத்தை இயக்குகிற ஆள்.

word processing package : சொல் செயலாக்கத் தொகுப்பு : சொல் செயலாக்கப்பணிகளைச் செய்யும் மென்பொருள்.

word processing programme : சொல் செய்முறைப்படுத்தும் செயல்முறை : வாசகத்தை எழுதுவதிலும், பதிப்பிப்பதிலும் உருவமைப்பிலும் கணினி பொறியமைவுக்கு வழிகாட்டுகிற மென்பொருள். இதுவும் சொல் செய்முறைப்படுத்தி என்பதும் ஒன்றே.

word processing society (WPS) : சொல் செய்முறைப்படுத்தும் கழகம் : சொல் செய்முறைப்படுத்துவதை ஒரு தொழிலாக வளர்ப்பதற்காகப் பள்ளிகளில் சொல் செய்முறைப் படுத்தும் கல்விச் செயல்முறைகளை ஊக்குவிக்கிற அமைவனம்.

word processing system : சொல் செய்முறைப்படுத்தும் பொறியமைவு: தானியங்கும் கணினிமயமாக்கிய தட்டச்சு, படியெடுப்பு, கோப்பிடுதல், எழுதக்கூறுதல், ஆவணமீட்பு ஆகியவற்றை தொடர்புபடுத்துகிற தகவல் செய்முறைப்படுத்தும் பொறியமைவு. இக்கால அலுவலகங்களில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

word processor : சொல் செய்முறைப் படுத்தி ; சொல் செயலி; சொல் தொகுப்பி : வாசகங்களைக் கையாள்வதற்கு வசதி செய்துகொடுக்கும் கணினிச் செயல்முறை. இதனை, ஆவணங்களை எழுதுதல், சொற்கள், பத்திகள் அல்லது பக்கங்களைப் புகுத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு பயன்படுத்தலாம். ஆவணங்கள் அச்சடிக்கவும் பயன்படுகிறது.

word publishing : சொல் பதிப்பித்தல்: கலத்தல், காட்டுதல் மற்றும் சொல்-வரைகலை அச்சிடல் போன்ற டி.டி.பி தன்மைகளை வழங்கும் சொல் செயலாக்கம்.

word separator : சொல் பிரிப்பி : ஒரு சொல்லைப் பிரிக்கின்ற ஒரு அமைப்பு-வெற்றிடம், காற்புள்ளி, புள்ளி, கேள்விக்குறி, வியப்புக்குறி போன்றன.

Wordperfect : வேர்டுபர்ஃபெக்ட் : கோரல் நிறுவனம் வழங்குகின்ற முழுநீள சொல் செயலாக்கத்தில் அனைத்துத் தன்மைகளும் கொண்ட ஆணைத் தொடர். 1980இல் அறிமுகப்படுத்தப்பட்ட இது - ஐ.பி.எம் ஆப்பிள் II, மெக்கின்டோஷ், அமீகா, அட்டாசி போன்ற தனிநபர் கணினிகளில் பயன்படுகிறது. பதிப்பு 5.0 இல்... முன்பார்வை முறையும், பதிப்பு 6.0இல் வரைகலை முறையும் ஹைபேர் டெக்ஸ்ட் ஆவணங்களை உருவாக்கும் திறனும் பெற்றுள்ளது.

Wordstar : வேர்டுஸ்டார் : பெரும்பாலான நுண்கணினிப் பொறியமைவுகளில் உள்ள புகழ்பெற்ற சொல் செய்முறைப்படுத்தி. மைக்ரோ புரோ நிறுவனத்தின் தயாரிப்பு.

word wrap : சொற் பொதிவு ; சொல் மடிப்பு : ஒரு சொல், மூலவரிகளின் இறுதியில் பொருந்தவில்லையென் றால் அதனை தானாகவே அடுத்த வரியின் தொடக்கத்திற்கு நகர்த்தி விடுகிற சாதனம். இது சொல் செய் முறைப்படுத்தும் பொறியமைவு களில் காணப்படும்.

work area : பணி இடப் பரப்பு.

workbench : பணிமேசை ; பணி மேடை : வன்பொருள் மற்றும் மென் பொருள் இனங்களைப் பல பயன் பாட்டாளர்கள் பகிர்ந்து கொள்ள இடமளிக்கும் செயல்முறைப்படுத் தும் சூழல்.

work breakdown structure : பணி முறி வுக் கட்டமைவு ; பணிப் பகுப்புக் கட்ட மைவு : ஒரு குறிப்பிட்ட திட்டத்தை முடிப்பதற்குத் தேவைப்படும் பணிக் கூறுகளையும் சாதனங்களையும் விரி வான பட்டியலாகத் தயாரித்தல். திட்டமிடும் செய்முறையை விரைவு படுத்தத் திட்ட வரைவாளருக்குப் பயன்படும் சாதனம்.

work group : பணிக் குழு : கோப்பு களையும் தகவல் தளங்களையும் பங் கிட்டுக் கொள்ளும் இரண்டு அல்லது மேற்பட்ட தனி நபர்கள். பணிக் குழுவை ஒட்டி அமைக்கப்படும் 'லேனில்' மின்னஞ்சல் தகவல்களைப் பங்கிட்டுக் கொள்ள முடியும்.

work group computing : பணிக்குழு கணிப்பு : பணிக்குழு சூழ்நிலையில் இறுதிப் பயனாளர் கணிப்பிடல். இதில் தங்களது வன்பொருள் மென் பொருள் மற்றும் தகவல் தளங்களை குழுவின் வேலைகளுக்காக லேன் முறையில் பணிக்குழுவின் உறுப் பினர் எவரும் பயன்படுத்தமுடியும்.

working directory : பணியாற்றும் கோப்பகம் : தகவல் மாற்றல்களுக் காக நடப்பில் பயன்பட்டு வரும் விவரத் தொகுப்பு.

working storage : செயற்படு சேமிப்பகம் : தற்காலிகச் சேமிப்பகம் என்பதும் இதுவும் ஒன்றே.

worksheet : பணித்தாள்: விரிதாள், திட்டத்தாள் என்பனவும் இதுவும் ஒன்றே.

worksheet compiler : பணித்தாள் தொகுப்பு : spread sheet போன்றதே.

workspace : பணியிடம் : செயற்பாட் டுச் சேமிப்புக்காக ஒதுக்கப்பட் டுள்ள செயல்முறைகளுக்கும் தக வல்களுக்குமான உள்முக சேமிப்பு அளவினைக் குறிக்கும் சொல்.

workstation : பணி நிலையம் : ஒரே சமயத்தில் ஒருவரே பயன்படுத்து வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள கணினிச் சாதனங்களின் தொகுதி. இது, ஒரு கணினியுடன் இணைக் கப்பட்ட ஒரு முனையமாகவோ, உள்முகச் செய்முறைப்படுத்தும் திற னுள்ள தனித்தியங்கும் பொறியமை வாகவோ இருக்கலாம். எடுத்துக் காட்டு: தனித்தியங்கும் வரைகலைப் பொறியமைவு; சொல் செய்முறைப் படுத்தி; நேரப்பகிர்வு முனையம்.

work year : பணியாண்டு : ஓர் ஆள் ஓராண்டு செய்துள்ள முயற்சிகள். ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்து முடிக்க எத்தனை ஆட்கள் தேவைப் படும் என மதிப்பிடப் பயன்படுத்தப் படும் சொல்.

World Conference on Computer in Education (WCCE) : கல்வியியல் கணிப்பொறி பற்றிய உலக மாநாடு : பன்னாட்டுத் தகவல் செய்முறைப் படுத்தும் இணையமும், அமெரிக்கத் தகவல் செய்முறைப்படுத்தும் கழகங் களும் இணைந்து நடத்தும் பன்னாட்

டுக் கணினிக் கல்வி மாநாடு. இது வெவ்வேறு நாடுகளில் நான்காண்டு களுக்கு ஒரு முறை நடத்தப்படு கிறது.

world wide web : வைய விரிவலை; உலகளாவிய வலை.

worm : புழு : பெருக்கி: தன்னைத் தானே இரட்டிப்பாக்கிக் கொள்ளும் ஒரு ஆணைத்தொடர். முனையப் பெருக்கி மிகப் புகழ் பெற்றது. இணையத்தில் இது தன்னைப் பெருக்கிக் கொள் கிறது.

Wozniak, Stephen : ஒஸ்னி யாக், ஸ்டீபன் : ஆப்பிள் கணினிக் கழகம் என்ற அமைவனத்தின் கூட்டு நிறுவனர். Apple ILa, மெக்கின்டோஷ் போன்ற பல நுண்கணினிப் பொறி யமைவுகளை உருவாக் கியவர்.

WP : டபிள்யூ பி : சொல் செய்முறைப் படுத்துதல் என்று பொருள்படும் word processing என்பதன் தலைப்பெழுத்துச் சுருக் கம்.

WPM : டபிள்யூபிஎம் : வினாடிக்கு எத்தனை சொற் கள் என்று பொருள்படும் Word Per Minute என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம். தகவல் அனுப்பீட்டு வேகத்தின் அளவு.

WPS : டபிள்யூ பிஎஸ் : சொல் செய் முறைப்படுத்தும் கழகம் எனப் பொருள்படும் Word Processing Society என்பதன் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

wraparound : சுற்றுப்பொதிவு : மிகப் பெரிய முகவரியிடத்தக்க அமை விடத்திலிருந்து முதல் முகவரியிடத் தக்க அமைவிடத்துக்கு மாற்றுதல், காட்சிச் சறுக்கு நகர்வினை கடைசி எழுத்து நிலையிலிருந்து முதல் எழுத்து நிலைக்கு மாற்றுதல் போன்ற தொடர் செயற்பாடு.

wrist support : மணிக்கட்டு ஆதரவு: கைகளை மணிக்கட்டு நரம்பு நிலையில் வைத்துக் கொள்வதன் மூலம் கார்ப்பல் டன்னல் நோய்க் குறியைத் தடுத்துப் பாதுகாக்கும் பொருள்.



மணிக்கட்டு ஆதரவுக் கருவி (Wrist support)

wrist rest : மணிக்கட்டு தங்குமிடம்: தட்டச்சு செய்பவர்கள் தங்களது கை மணிக்கட்டினை உயர்த்தி விசைப் பலகை அளவுக்கு வைத்துக் கொள் ளும் மேடை.

write : எழுது : *1.* தகவல்களை கணினி யிலிருந்து ஒரு வெளிப்பாட்டுச்

சாதனத்திற்கு மாற்றும் செய்முறை. 2. உள்முகச் சேமிப்பகத் திலிருந்து துணைநிலைச் சேமிப்புச் சாதனங் களில் தகவல்களைப் படியெடுத்தல். இது 'படி' என்பதிலிருந்து மாறுபட் டது. 3. விண்டோஸ் 3.x தொகுப்பு களில் இணைக்கப்பட்டிருந்த ஒரு சொல் செயலி (Word Processor).

write back cache : திருப்பி எழுதும் விரைவி : எழுதுவதைக் கையாளும் வட்டு அல்லது நினைவக விரைவி. அதிவேக விரைவி நினைவகத்திற்கு மையச் செயலகத்தில் இருந்து எழுதப்பட்ட தகவல்கள், எந்திரம் வேலையின்றி இருக்கும் நேரத்தில் வட்டுக்கோ அல்லது நினைவகத் திற்கோ திருப்பி எழுதப்படுவது.

write enable ring : எழுத உதவும் வளையம் : ஒரு நாடாச் சுருளில் தகவல்களைப் பதிவு செய்வதற்கு முன்பு அந்த நாடாச்சுருளில் பொருத் தப்படும் பிளாஸ்டிக் வளையம்.

write error : எழுதும் பிழை : ஊடகத் தில் ஏதாவது ஒரு கோளாறின் காரண மாக தகவல்களை நினைவகம் அல்லது சேமிப்பகச் சாதனத்திற்கோ அல்லது அதிலிருந்தோ பதிய முடி யாத நிலை. நினைவகச் சாதனங் களில் மின்னணு சாதனங்களின் கோளாறுகளாலும் இவ்வாறு ஏற் படுவதுண்டு.

write head : எழுது முனை : சாதனங் களுக்குள் தகவல்களை எழுதுவதற் காக வடிவமைக்கப்பட்ட காந்த முனை. இது படிப்பு முனை என்பதி லிருந்து மாறுபட்டது.

write inhibit ring : எழுத்துத் தடுப்பு வளையம் ; எழுதவிடா வளையம் : ஒரு காந்தநாடாவில் தகவல்களை எழுது வதைத் தடுக்கப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் வளையம். இது படிப்புக் காப்பு வளையம் என்பதிலிருந்து வேறுபட்டது.

write protect : எழுதவிடா படிப்புக் காப்பு : ஒரு வட்டில் அல்லது நாடா வில் எழுதுவதைத் தடுப்பதற்கான நடைமுறை.

write protection : எழுதவிடாப் பாது காப்பு: முக்கிய தகவல்கள் மற்றும் செயலாக்க அமைப்பு போன்ற ஆணைத்தொடர்களில் தற்காலிக மாகவோ அல்லது வேண்டு மென்றோ மாற்றம்/நீக்கல் ஆவதைத் தடுக்கப் பயன்படுத்தும் நுட்பம். வன்பொருளில் எழுதவிடாப் பாது காப்பு அளிக்க முடியும். சான்று: நெகிழ்வட்டில் எழுதவிடாப் பாது காப்பு நாட்கள், இரகசியச் சொல் போன்றவற்றின் மூலம் மென் பொருளிலும் பாதுகாப்பு அளிக்க லாம். நிலைவட்டுகளில் கட்டுப் பாட்டு மின்சுற்று மூலம் மட்டுமே எழுதவிடாப் பாதுகாப்பு அளிக்க முடியும்.

write-protect notch : எழுதவிடாக் காப்புப் பிளவு : விரும்பத் தகாத தகவல்கள் நெகிழ்வட்டுகளில் (நுண் வட்டுகளில்) பதிவு செய்யப்படுவதி லிருந்து பாதுகாப்பதற்கான குறியீடு. இது, எழுதவிடாத் தடுப்புப் பிளவின் மீது ஒரு பசையிட்ட இழையினை ஒட்டுவதன் மூலம் செய்யப்படு கிறது.

write protect ring : எழுதவிடாக் காப்பு வளையம் : ஒரு நாடாச் சுருளில் ஒட் டப்பட்டுள்ள காப்பு வளையம். இது, நாடாவில் எழுதுவதைத் தடுக்கிறது. இதனை எழுதவிடாத் தடுப்பு வளை யம் என்றும் கூறுவர்.

write protect sensor : எழுதவிடாத் தடுப்புணர்வு.

write to : எழுது.

X

X axis : எக்ஸ்-அச்சு : ஓர் ஆயத் தொலைவுத் தளத்தில், கிடைமட்ட அச்சு. இது ஒய் அச்சு, இசட்-அச்சு என்பவற்றிலிருந்து வேறுபட்டது.

X-acto knife : எக்ஸ்-ஆக்டோ கத்தி : ஒட்டும் சமயத்தில் வெட்டவும், நக லெடுக்கவும், படங்களை ஒட்டவும் பயன்படும் கருவி.

X-address : எக்ஸ்-முகவரி : நினைவ கத்தின் சரியான வரிசை குறிப்பிடப் படும் ஒருங்கிணைப்பு.

Xbase : எக்ஸ்பேஸ் : கிளிப்பர், ஃபாக்ஸ்புரோ போன்ற டிபேசை ஒத்த மொழிகள். ஆரம்பத்தில் டிபேசைப் போன்றதாகவே இருந்தா லும், புதிய கட்டளைகளும், தன்மை களும் இதை டிபேசுக்கு ஏற்றவை யாக ஓரளவே ஆக்கி உள்ளன.

Xcopy : எக்ஸ் காப்பி : கோப்புகளை யும், துணை விவரத் தொகுப்புகளை யும் நகலெடுக்கின்ற டாஸ் மற்றும் ஓஎஸ்/2 பயன்பாடு.

X-datum line : எக்ஸ் விவர-வரி : துளையிட்ட அட்டையில் மேல் மூலையின் ஓரத்தில் உள்ளதாகப் பயன்படும் ஒரு கற்பனைக்கோடு. சான்றாக, ஹொலரித்தின் 12 துளை வரிசை ஓரத்தின் அருகே உள்ள கோடு.

XENIX : ஜெனிக்ஸ் : இது, யூனிக்ஸ் என்ற செயற்பாட்டுப் பொறிய மைவின் ஒரு திருத்திய பதிப்பு. இதனை நுண்கணினிகளில் பயன் படுத்துவதற்கு மைக்ரோ சாஃப்ட் கழகம் தயாரித்துள்ளது.

xerographic printer : மின்துகள் ஒளிப்பட அச்சுப்பொறி : காகிதத்தில் ஓர் ஒளியியல் உருக்காட்சியை அச் சடிப்பதற்கான சாதனம். இதில், காகிதத்தில் மின்நிலைப்பாட்டு முறைப்படி மின்னேற்றம் செய்யப் பட்டுள்ள பகுதிகளை ஒளி மற்றும் இருள் பகுதிகள் குறிக்கின்றன. காகி தத்தில் ஒரு பொடித்த மைத் துகளைப் பூசும் பொழுது மின்னே றிய பகுதிகளில் அந்தப் பொடி ஒட் டிக் கொள்கிறது. ஒட்டிய பொடியை வெப்பமூட்டுதல் மூலம் காகிதத்தில் உருகச் செய்யப்படுகிறது.

X-height : எக்ஸ்-உயரம் : ஏற்றம் அல்லது இறக்கம் இல்லாத சிறிய எழுத்தின் உயரம். தேர்ந்தெடுக்கப் பட்ட அச்செழுத்தில் எக்ஸ் எழுத் தின் உயரத்திற்குச் சமமானது.

XOR : எக்சோர் (விலக்கும் அல்லது): "Exclusive OR" என்ற ஆங்கிலப் பெய ரின் தலைப்பெழுத்துச் சுருக்கம்.

X protocol : எக்ஸ் விண்டோ அமைப் பின் நெறிமுறை.

X-punch : எக்ஸ்-துளை : ஒரு ஹொலரித் அட்டையில் 11 ஆவது துளையிடும் நிலையில் துளையி டுதல். இதனை 11ஆம் துளை என் றும் கூறுவர்.

x-ray lithography : எக்ஸ்-கதிர் லித்தோகிராஃபி : ஒரு நுண் மீட்டருக் கும் குறைவான கோடுகளைப் போட ஒருங்கிணைந்த மின்சுற்றைச் செயல் படுத்தும் ஒரு நுட்பம்.

X windows : எக்ஸ் விண்டோஸ் : டிஜிட்டலும், ஐபிஎம்மும் சேர்ந்து எம்ஐடி யில் உருவாக்கிய வரைகலை பணி நிலையத்துக்கான சாளர அமைப்புச் சூழ்நிலை. கட்டமைப் பில் உள்ள ஒரு கணினி அமைப்பில் உருவாக்கப்பட்ட வரைகலையை வேறொரு பணிநிலையத்தில் காட்டு வதற்கு வரைகலைக்காக வடி வமைக்கப்பட்டது. எக்ஸ் விண் டோஸ் எல்லா செயலாக்க அமைப் பிலும் ஓடுமாறு அமைக்கப்பட்டு

எல்லா பணிநிலைய விற்பனையாளர்களின் ஆதரவும் பெற்றது.

X-Y chart : எக்ஸ்-ஒய் வரைபடம் : ஒரு தகவல் தொடரை ஒரு நேர அச்சு இல்லாமல் இன்னொரு தகவல் தொடருக்கு எதிராக வரைவதற்கு அனுமதிக்கிற வடிவம். இது இரு தொடர்களுக்குமிடையில் இணைத் தொடர்பு இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கப் பயன்படுகிறது.

X-Y plotter : எக்ஸ்-ஒய் வரைவி : ஒரு காகிதத்தில், கணினி மூலம், எக்ஸ், ஒய் ஆயத்தொலைவுகள் அடிப்படையில் புள்ளிக் கோடுகளை அல்லது வளைகோடுகளை வரையும் வெளிப்பாட்டுச் சாதனம்.

Y

Y axis : ஒய்-அச்சு : ஓர் ஆயத் தொலைவுத் தளத்தில், செங்குத்து அச்சு. இது எக்ஸ்-அச்சு, இசட்-அச்சு என்பவற்றிலிருந்து வேறுபட்டது.

Y-edge leading : ஒய்-முனை முன்னணி : அதன் நீண்டவிளிம்பை முதலிலும் மேல் வரிசையை படிக்கும் நுட்பத்திலும் கொண்டுள்ள துளையிட்ட அட்டையைச் செலுத்தும் முறை. துளையிட்ட அட்டையின் மேல் வரிசை ஒய் (y) வரிசை ஆகும்.

Y modem : ஒய் மோடெம் : ஒரே நேரத்தில் கோப்பு மாற்றல் வரைமுறை எக்ஸ் மோடெம் 1 கே உடன் தொகுப்புக் கோப்பு மாற்றல் போன்றது. ஒய் மோடெம் ஒப்புதல் பெறாமல் அனுப்புகிறது. பிழை இருக்குமானால் ஒளிபரப்பு ரத்து செய்யப்படுகிறது.

Y-network : ஒய் பிணையம் : மூன்று கிளைகளைக் கொண்ட நட்சத்திரப் பிணையம்.

yoke : நுகம் : ஓர் ஒளிப்பேழைக் காட்சிக்கு முகவரியிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் மின்னணு (எலெக்ட்ரான்) கற்றைக் கோட்டப் பொறியமைவின் பகுதி.

yourdan loop : யூர்தான் லூப் : வெற்றுத் தகவல் லூப்புகள் அல்லது முடிவற்ற லூப்புகளை உருவாக்குவதைத் தடுக்கும் யூர்தான் லூப். எட் யூர்தான் இதை முதலில் அறிமுகப் படுத்தினார்.

Y-punch : ஒய்-துளை: ஒரு ஹொலரித் அட்டையில், 12ஆவது துளையிடும் நிலை. இதனை உயர் துளை, 12ஆம் துளை என்றும் கூறுவர்.

Y orientation : y திசை அமைவு.

Z

Z : இஸட் : தடையின் தன்மை. பூஜ்ய துண்மியைக் குறிப்பிடும் சொல்.

Z-80 : இசட்-80 : பிரபல 8 துண்மி நுண் செய்முறைப்படுத்திச் சிப்பு. இது நுண்கணினிகளில் தளமாகப் பயன்படுத்தப்படுகிறது.

Z-address : z-முகவரி : பெரு சேமிப் பக அமைப்பில், தனித்த சிற்றறை முகவரியின் தன்மை. ஒரு குறிப் பிட்ட சிற்றறைப் பெட்டி இருக்கும் சுவற்றை இது காட்டுகிறது.

zairia : ஜைரியா : ஆதி அரபுச் சோதிடர்கள் உருவாக்கிய சிந்திக்கும் எந்திரம்.

zap : அழி : *1.* தகவல்தள கோப்பி லுள்ள தகவல்கள் அனைத்தையும் மீட்க முடியாதவகையில் அழித்து விடுகிற ஆணை. இது பல தகவல்தள செயல்முறைகளில் உள்ளது.

zap disk : அழி வட்டு : விஎம் செய லாக்க அமைப்பில் உள்ள மெய்நிகர் வட்டு. விடாம் (VTAM) குறியீட்டில் பயனாளர் எழுதும் மாற்றங்களைக் கொண்டுள்ளன.

z-axis : z-அச்சு: ஓர் ஆயத்தொலை வுத் தளத்தில், ஆழத்தைக் குறிப் பிடும் அச்சு. இது, எக்ஸ்-அச்சு, ஒய்-அச்சு என்பவற்றிலிருந்து வேறு பட்டது.

z-buffer : z இடையகம்; z தாங்கி : அய்க்ஸ் AIX செயலாக்க அமைப்பில் இசட்-மதிப்புகளை சேமிக்கும் நினைவகத்தின் பகுதி. பார்வை யாளர் கண்ணுக்கும் படப்புள்ளிக் கும் இடையிலான தூரம் அல்லது ஆழத்தைக் கொடுக்கிறது.

z-disk : இசட்-வட்டு : சிஎம்எஸ் என்னும் உரையாடல் முகப்பு அமைப்பின் வட்டு விரிவாக்கம்.

zero : பூஜ்யம்; சுழி : பொதுவாக அளவின்மையைக் குறிப்பிடும் எண். பல கணினிகளில், நேர் மற்றும் எதிர் பூஜ்யங்களுக்குத் தெளிவான குறியீடு கள் உள்ளன.

zero address instruction : பூஜ்ய முகவரி ஆணை : முகவரி பகுதியே இல்லாத எந்திர ஆணை.

zero fill : பூஜ்ய நிரப்பல்; சுழி நிறைவு.

zero flag : பூஜ்யக் கொடி ; சுழிக் கொடி: ஓர் ஆணை பூஜ்ய மதிப்பளவைக் கொண்டிருக்கும் போது, தருக்க *1*-க்குச் செல்கிற ஏற்ற இறக்கத் துடிப்பு.

zeroize : பூஜ்யமாக்கல் : ஒரு செயல் முறையைப் பூஜ்யங்களுடன் தொடக் கம் செய்தல். நினைவகத்தில் இடை வெளிகளைப் பூஜ்யங்களால் நிரப்பு தல்.

z-force : இசட்-விசை : ஒரு தொடு திரையின் அழுத்தும் உணர்வு.

z-format : இசட்-வடிவமைப்பு : படப் புள்ளியின் வடிவமைப்பு. வருடியின் வரிசையில் படப்புள்ளி மதிப்பு களின் தொகுதியாக ஒருங்கிணைத் தல். AIX செயலாக்க அமைப்புடன் தொடர்புள்ளது.

zero matrix : பூஜ்ய மேட்ரிக்ஸ் : செல் லாத மேட்ரிக்சின் வேறொரு பெயர்.

zero mode : பூஜ்ய முறை : இலக்க முறை வரைவியை இயக்கும் முறை. இதில் ஒவ்வொரு உள்ளீட்டுக் கட்டளையும் ஏற்றத்தைக் குறிப்பிடு வதுடன் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு அச்சுகள் தொடர்பான வேக மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

zero phase filter : பூஜ்ய நிலை வடிகட்டி : இரட்டைப்படை எண் மாதிரிகளைப் பயன்படுத்தும் ஒரு வடிகட்டி. மாதிரியின் நடு உள்ளீட்

டைப் போன்ற அதே இடத்தில் உள்ள வெளியீட்டை அளிக்கிறது.

zero point : பூஜ்ய புள்ளி : வென்ச் சுராவின் செங்குத்து மற்றும் குறுக்கு வாட்டக் கோடுகளின் மீதுள்ள 'சி' விளக்கங்களின் குறுக்கிணைப்பு.

zero point intersection : பூஜ்ய புள்ளி குறுக்கிணைப்பு : வெளியீட்டு விண்டோவின் மேல் இடது மூலையில் குறுக்கே சந்திக்கின்ற கோடுகள்.

zero punch : பூஜ்ய துளை :ஹொலரித் துளை அட்டையின் மேலிருந்து மூன்றாம் வரிசையில் போடப்படும் துளை.

zero suppression : பூஜ்ய அமுக்கம்; சுழி ஒடுக்கம் : ஓர் எண்ணிலிருந்து முக்கியமற்ற பூஜ்யங்களை ஒடுக்கி விடுதல் (ஒழித்து விடுதல்). பொதுவாக, இது அச்சிடும் செயற்பாட்டுக்கு முன்பு அல்லது செயற்பாட்டின் போது செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டு: 00004763 என்ற இலக்கம் பூஜ்ய ஒடுக்கத்தின் பிறகு 4763 என்றாகிறது. பொதுவாக பக்க எண்ணிடுவதில் கையாளப்படுகிறது. தொடக்கப் பக்க எண்கள், 01, 02... அல்லது 001, 002 ... என்பதற்குப் பதிலாக 1,2 ... என்று எண்ணப்படுகிறது.

zero track : பூஜ்ய தடம் : சுழித் தடம்: 'பூட்' பதிவேட்டைக் கொண்ட வட்டின் முதல் தடம். மோசமான பூஜ்ய தடம் இருக்கும் வட்டைப் பயன்படுத்த முடியாது. பூஜ்ய தடம் உள்ள வட்டை சீரமைக்கும்போதோ அல்லது படிக்கும்போதோ மோசமான பூஜ்ய தடம், வட்டு பயனில்லை என்று டாஸ் காட்டும்.

zero transmission level reference point : பூஜ்ய அனுப்பு நிலை குறிப்புப் புள்ளி : ஒரு மின்சுற்றில் குத்து மதிப்பாகத் தேர்ந்த புள்ளி. அங்குதான் தொடர்புள்ள எல்லா அனுப்புதல்களும் குறிப்பிடப்படும்.

zero word : பூஜ்ய சொல் : குறியீட்டுக் கொள்கையில், பூஜ்ய இலக்கங்களை மட்டுமே கொண்ட ஒரு சொல். ஹம்மிங் இடத்தின் ஆரம்பத்தில் இது உள்ளது.

zero-complemented transition coding: பூஜ்ய கூட்டெண் மாறும் குறியீடு: தகவல் சரத்தின் ஒவ்வொரு 0 துண்மிக்கும் அனுப்பப்பட்ட சமிக்ஞையின் நிலையை தலை கீழாக்கி தகவல் குறியீடு அமைத்தல்.

zerofill : பூஜ்ய நிரப்பு : பூஜ்யத்தைக் குறிப்பிடும் எழுத்துகளால் பயன்படாத சேமிப்பு இடங்களை நிரப்புதல்.

zero-slot LAN : பூஜ்ய-இட லேன் : தொடர் அல்லது இணை 'போர்ட்' டில் கணினிகளுக்கு இடையில் அனுப்புவதைக் குறிப்பிடுகிறது. 'லேன்' அட்டைகள் பயன்படுத்தும் விரிவாக்க இடம் இதனால் விடுவிக்கப்படுகிறது.

z-fold paper : இசட்-மடிப்புத் தாள் : விசிறி மடிப்புக் காகிதம் அல்லது தொடர் எழுதுபொருளுக்கு மற்றொரு பெயர்.

zig-zag fold paper : சிக்-சாக் மடிப்புக் காகிதம் : விசிறி மடிப்புக் காகிதம் அல்லது தொடர் எழுதுபொருளின் வேறு பெயர்.

zilog : சிலாக் : உலகின் முதல் கணினி செயலகச் சிப்பான இசட்-80இன் உற்பத்தியாளர். இந்த சிப்புவால் அமைந்த கணினி சிபிஎம் செயலாக்க அமைப்பில் இயங்கியது. பின்னர் இதைவிட வேகமாகச் செயலாற்றும் இன்டெல் 8080 சிப்பு இதைப்

பிஃனுக்குத் தள்ளியது. அதற்கடுத்து ஐ.பி.எம் பி.சி.யில் பயன்படுத்தப் பட்ட 8088 சிப்பு கணினித் துறையில் புரட்சியையே ஏற்படுத்தியது.

zip : சிப் : பிகேசிப் (PKZIP) பைப் பயன்படுத்தி ஒரு கோப்பை சுருக்கு தல்.

zip files : சிப் கோப்புகள் : பிகேசிப் பைப் பயன்படுத்தி சுருக்கிய வடிவத் தில் உருவாக்கப்படும். ZIP விரி வாக்கம் உள்ள கோப்பு. இவற்றைப் பயன்படுத்த அவற்றை விரிக்க வேண்டும். PKUNZIP.EXE ஆணைத் தொடர் சுருக்கிய கோப்புகளை வழக்கமான அளவில் விரிக்கிறது. தகவல் பாதுகாப்பதற்கு வசதியான, சிக்கனமான வழி இதுவே.

zip mode : சிப் முறை : வரைவியின் இயக்க முறை. இதில் ஒவ்வொரு உள்ளீட்டுக் கட்டளையும் கூட்டிய மாறுபாட்டைக் குறிப்பிடும்.

zmodem : இசட் மோடம் : எக்ஸ் மோடத்தை விட திறமைமிக்க, ஒரே நேரமல்லாத கோப்பு மாற்றல் வரை முறை. கோப்பு பெயர், தகவல் மற்றும் அளவையை அது முதலில் அனுப்புகிறது. மாறும் கட்ட அளவு களை ஒட்டி மாறுகின்ற வரி நிலைக்கு ஏற்ப சமாளிக்கிறது. சிஆர்சி பிழை திருத்தத்தைப் பயன் படுத்துவதுடன் தாமதமாகும் செயற் கைக்கோள் அனுப்பும் முறைக்கும் ஏற்றது.

z-net : இசட்-நெட் : ஈதர்நெட் போன்ற குறும் பரப்புக் கட்டமைப்பு.

zombie process : சோம்பி செயல் முறை : அதன் நுழைவு செயலாக்கப் பகுதிக்கு வந்தபோதிலும், பயனாளர் அல்லது கெர்னல் இடம் ஒதுக்கப் படாத, முடிந்த செயல்முறை. AIX இல் பயன்படுவது.

zone bits : மண்டலத் துண்மிகள்; வட்டாரத் துண்மிகள் : ஆல்ஃபா எண்மான எழுத்துகளைக் குறிக்கும் எண்மானத் துண்மிகளுடன் சேர்த் துப் பயன்படுத்தப்படும் தனிவகைத் துண்மிகள்.

zone punch : மண்டலத் துளை; வட்டாரத்துளை : ஹொலரித் அட்டை யில் ஓ, எக்ஸ் அல்லது ஒய் வரிசை யிலுள்ள துளை.

zone : மண்டலம் ; வட்டாரம் : மீண் டும் பயன்படுத்தக்கூடிய வட்டின் பகுதியில் தங்குகின்ற வட்டுப் பதி வேடுகளில் ஒரு பகுதி.

zone portion : மண்டலப் பகுதி.

zone position : மண்டல நிலை.

zoned decimal : பிரிக்கப்பட்ட பதின்மம்: ஈ.பி.சி.டி.ஐ.சி-யில் குறி யீடு இடப்பட்ட எண்ணெழுத்து, ஒவ்வொரு பதின்ம இலக்கமும் ஒரு எட்டியல் சேமிப்பக அளவுள்ளது. இலக்கங்கள் 4 முதல் 7 வரையிலான துண்மிகளிலும், குறியீடுகள் 0 முதல் 3 வரையிலும், மற்றவை 1 களிலும் இருக்கும். சான்றாக, பிரிக்கப்பட்ட பதின்ம படிவத்தில் +123-ன் பதின்ம மதிப்பு 111 0001 1111 0010 1100 0011 என்று குறிப்பிடப்படும். கட்டப் படாத பதின்ம படிவம் என்றும் இது அழைக்கப்படும்.

zoo : ஜூ : இலவச சுருக்கும் ஆணைத் தொடர். மூலக் குறியீடு அடங்கியது. யூனிக்ஸ், டாஸ் மற்றும் பிற சூழ் நிலைகளில் பயன்படுவது.

zoom : பெரிதாக்கு : பல வரைகலை மற்றும் சில விரிதாள் தொகுதிகளில் காணப்படும் தன்மை. வரைகலைப் பொருளின் ஒரு குறிப்பிட்ட பகுதியை பெரிதுபடுத்திப் பார்க்க இது பயனாளரை அனுமதிக்கிறது.

ஒளிப்படக்கலையில் இருந்து இச் சொல் பெறப்பட்டது (ஜூம் லென்ஸ்).

zoom factor : பெரிதாக்குக் காரணி.

zoom in : அண்மையாக்கு; உள்ளிருப் பதைப் பெரிதாக்கு : பல் ஊடகப் பயன்பாடு அல்லது கணினி வரை கலையில் ஏற்படும் ஒளிப்பட மாற் றம், அது படமெடுக்கும் பொருளை நோக்கி ஒளிப்படக்கருவி நெருங்கி வருவதுபோல் தோன்றுவது. செய லாற்றும் பொருளின் நெருங்கிய பார்வை இதில் கிட்டுகிறது. விரி வாக செயலாற்ற இது மிகவும் உதவி கரமானது. 'இன்ஜூம்' முறையில் அளவு பெரிதாகும்.

zooming : மேற்செலுத்தம் ; பெரிதாக் கல் : தற்போது காட்சியில் தெரியும் படத்தின் அடுத்தடுத்த சிறிய பகுதி கள் மீது நகர்த்துவதன் மூலம் அல் லது முழுத்திரையினையும் விண்டோ மூடிக்கொள்ளும்வரை நகர்த்துவதன் மூலம் ஒரு வரைகலைக் காட்சியின் தோற்றத்தை மாற்றுதல். ஒரு காட்சித் திரையில் காட்டப்படும் ஓர் உரு வத்தை விரிவாக்குகிற அல்லது குறைக்கிற திறம்பாடு.

zoom out : சிறிதாக்கு ; சேய்மையாக்கு: கணினி வரைகலை அல்லது பல் ஊடகப் பயன்பாடுகளில், ஒளி முறை ஒளிப்படக்கருவியில் ஏற் படும் மாற்றம். இதில் கருவியானது அது படம்பிடிக்கும் பொருளில் இருந்து பின்னோக்கி வருவது போலத் தோன்றும். 'ஜூம் அவுட்' முறையில் அளவு சிறிதாகும்.

zoom pyramid : பிரமிடாக்கு : அதிகத் தெளிவான உருவமும், அதை யடுத்து அதன் பாதியளவே தெளி வான உருவமும் கொண்ட தொடர்ச் சியான இலக்க உருவங்கள். உயர் தெளிவுக்குத் தேவைப்படும் இடத் தில் மூன்றில் ஒரு பங்கே தேவைப் படும். எந்தவகையான தெளிவான உருவமும் விருப்பம் போல் பெற லாம். நேரடியாகவோ அல்லது ஒன் றில் ஒன்றை நுழைத்தோ பெறலாம்.

Z-parameter : இசட்-அளவுகோல் : நான்கு டிரான்சிஸ்டர்களின் தொகு திக்குச் சமமான மின்சுற்று அளவு கோல்களில் ஒன்று. ஓய் அளவு கோலின் தலைகீழ் அமைப்பு.

Zuse, Konrad : ஜூஸ், கோன்ராடு : கணினிச் சாதனங்களை உருவாக்கு வதில் முன்னோடியாக விளங்கிய ஜெர்மன் அறிஞர். இவர், 1941இல், வியக்கத்தக்க முன்னேறிய அம்சங் கள் கொண்ட ஜூஸ் இசட்-3 என்ற எந்திரத்தை உருவாக்கினார். இதன் வேகம் மார்க் I கம்ப்யூட்டரின் வேகத் துக்கு இணையானது.

MANAVAI MUSTAF

KANINI
KALAICHOL
KALANJIYA
AGARAATHI



PUBLISHED BY

MANAVAI
PUBLICATION
AE103,Annanagar
Chennai-600 040